முன்னுரை

எண்ணாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் மோசே. பஞ்சாகமத்தில், எண்ணாகமம் புஸ்தகம் மூன்றாவது புஸ்தகமாக கோர்க்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்பட்ட சம்பவம் இந்தப் புஸ்தகத்தில் பல வசனங்களில் சொல்லப்பட்டிருப்பதினால், இந்தப் புஸ்தகத்திற்கு எண்ணாகமம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் திரளாக பலுகிப் பெருகச் செய்வதாக வாக்குப்பண்ணினார். கர்த்தர் சொன்ன பிரகாரமாக, ஆபிரகாமின் சந்ததியார் திரளாய்ப் பலுகிப் பெருகியிருக்கிறார்கள் என்பதற்கு, இந்தப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கை ஓர் அடையாளமாகயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றும் சம்பவம் இரண்டு இடங்களில் நடைபெறுகிறது. ஒன்று சீனாய் மலையில் (எண்ணாகமம் 1-ஆவது அதிகாரம்). இந்த சம்பவம் நடைபெற்ற முப்பத்தொன்பது வருஷங்களுக்கு பின்பு மோவாபின் சமவெளியில், இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் எண்ணித் தொகையேற்றப்படுகிறார்கள் (எண்ணாகமம் 26-ஆவது அதிகாரம்).

எண்ணாகமம் புஸ்தகத்தில் இஸ்ரவேல் புத்திரருடைய சரித்திர சம்பவங்களும், கர்த்தர் அவர்களுக்கு சொன்ன பிரமாணங்களும் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்படுகிற சரித்திரமும், அவர்கள் வனாந்தரத்திலே பாளயமிறங்கியிருக்கிற விதமும் (எண் 1-4 ஆகிய அதிகாரங்கள்). பலிபீடமும், லேவியரும் பிரதிஷ்டைபண்ணப்படுகிற சம்பவம் (எண் 7,8 ஆகிய அதிகாரங்கள்). இஸ்ரவேல் புத்திரர் வரிசையாக அணிவகுத்து செல்லும் விதம் (எண் 9,10 ஆகிய அதிகாரங்கள்).

இஸ்ரவேல் புத்திரரின் அவிசுவாசமும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுப்பதும். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களினிமித்தமாக வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலைகிறார்கள் (எண் 11-14 ஆகிய அதிகாரங்கள்). கோராகுடைய புத்திரரின் கலகம் (எண் 16,17 ஆகிய அதிகாரங்கள்).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே சுற்றி அலைந்த நாற்பது வருஷங்களில், கடைசி வருஷத்தில் நடைபெற்ற சரித்திர சம்பவங்கள் (எண் 20-26 ஆகிய அதிகாரங்கள்).

மீதியானியர் மீது ஜெயமும், இஸ்ரவேலின் இரண்டரைக்கோத்திரத்தார் யோர்தானுக்கு அப்புறத்திலே குடியேறின சம்பவமும் (எண் 31,32 ஆகிய அதிகாரங்கள்). இஸ்ரவேல் புத்திரரின் பிரயாணம்.

நசரேய சம்பந்தமான பிரமாணங்கள் (எண் 5,6 ஆகிய அதிகாரங்கள்). ஆசாரியரின் படைவிடைகள் (எண் 18,19 ஆகிய அதிகாரங்கள்). பண்டிகைகள் (எண் 28,29 ஆகிய அதிகாரங்கள்). பொருத்தனைகள் (எண் 30-ஆவது அதிகாரம்). இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் குடியேறிய சம்பவம் (எண் 27,34-36 ஆகிய அதிகாரங்கள்).

எண்ணாகமம் புஸ்தகம் முழுவதிலும் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள், சங்கீதம் 95:10-ஆவது வசனத்தில், சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது.

"நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்" *(சங் 95:10,11).*

சங்கீதம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற சத்தியம், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள உபதேசமாயிருக்கிறது.

"ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" *(எபி 4:1).*

இந்தப் பிரபஞ்சத்தின் சரித்திரத்தில் ஏராளமான ராஜ்யங்கள் பேரரசாக விளங்கிற்று. மிகப்பெரிய பட்டணங்கள் அரணிப்பானவைகளாக இருந்திருக்கிறது. இவையெல்லாம் சரித்திர சம்பவங்கள். இக்காலத்தில் அந்த ராஜ்யங்களைப்பற்றியோ, பட்டணங்களைப்பற்றியோ யாரும் பேசுவதுமில்லை. அவை பற்றிய தெளிவான சரித்திர ஆதாரங்கள் எழுதப்படவுமில்லை.

இஸ்ரவேல் ஜனத்தாரோ ஆரம்பத்தில் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருந்தார்கள். அவர்கள் கூடாரங்களில் வாசம்பண்ணினார்கள். வனாந்தரத்திலே அலைந்து திரிந்தார்கள். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிய சரித்திரம் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரை யாரும் மறக்கவில்லை. அவர்களைப்பற்றி இன்றும் உலகம் முழுவதும் பேசிக்கொண்டிருக்கிறோம்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய விசேஷமான ஜனத்தார் ஆவார்கள். கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். ஆகையினால் அவர்கள் உடன்படிக்கையின் ஜனமாகயிருக்கிறார்கள். இதன் நிமித்தமாகவே இஸ்ரவேல் புத்திரர், இந்த உலகத்திலே மிகவும் விசேஷமானவர்களாகயிருக்கிறார்கள்.

அவர்கள் கர்த்தருடைய சுதந்தரமாக இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிள்ளைகளாக இருப்பதினால், அவர்களுக்கு இந்தப் பிரபஞ்சத்தில் அதிக முக்கியத்துவம் கிடைத்திருக்கிறது.

எரிகோவிற்கு அருகிலுள்ள யோர்தான் நதிக்கரையில் அமைந்திருந்த மோவாபின் சமவெளிகளில் எண்ணாகமம் புஸ்தகம் எழுதப்பட்டது *(எண் 36:13).* கானான் தேசத்திற்குள் இஸ்ரவேல் புத்திரர்கள் பிரவேசிப்பதற்கு முன்பதாக இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. யோர்தானுக்கு கிழக்குப் பகுதியிலுள்ள ஓக், சீகோன் ஆகிய ராஜ்யங்களை இஸ்ரவேல் புத்திரர் முறியடித்த நிகழ்ச்சிகள் இந்தப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது *(எண் 21:1-35).*

இஸ்ரவேலைச் சபிப்பதற்காகக் கிழக்கிலிருந்து வந்த பிலேயாமின் அனுபவமும் எண்ணாகமம் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது *(எண் 22:1-24:25)* இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக அவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்ட சமயத்தில் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர்கள் இரண்டு முறை எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள். எகிப்து தேசத்திலிருந்து வெளியேறி வந்த இரண்டாம் வருஷத்தில் முதல் முறையாகவும் *(எண் 1:1-10:36),* வனாந்தரத்தில் அலைந்து திரிந்து முடிந்து, கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக இரண்டாம் முறையாகவும் *(எண் 26:1-65)* இஸ்ரவேல் புத்திரர்கள் எண்ணித்தொகையேற்றப் படுகிறார்கள். இவ்விரண்டு எண்ணிக்கைக்கும் இடையில் 38 வருஷம் காலஇடைவெளி இருந்தது.

யாத்திராகமம் புஸ்தகத்தில், இஸ்ரவேல் புத்திரர்கள் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறி, வனாந்தரத்திற்கு வந்த வரலாறு கூறப்பட்டிருக்கிறது. எண்ணாகமம் புஸ்தகம் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரின் வரலாற்றைத் தொடர்ந்து கூறுகிறது.

எண்ணாகமம் - விரிவுரை
NUMBERS - COMMENTARY

காதேஸ்பர்னேயாவிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்திருக்க வேண்டும். தங்கள் அவிசுவாசத்தின் நிமித்தமாக அவர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு விசுவாசத்தோடு எந்தவித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்பட்ட மோசமான விளைவுகள் எண்ணாகமம் புஸ்தகத்தில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது (எண் 13:1-14:45)

எண்ணாகமம் புஸ்தகத்தின் எபிரெய பெயர் "பேமித்பார்" என்பதாகும். இதற்கு "வனாந்தரத்தில்" என்று பொருள் (எண் 1:1) இஸ்ரவேல் புத்திரருக்கு வனாந்தரத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் இந்தப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பல அனுபவங்கள் உண்டாயிற்று. அவர்கள் இரண்டு முறை எண்ணப்பட்டது அவர்களுடைய அனுபவங்களில் ஒன்றாகும்.

ஆதியாகமம் புஸ்தகம் ஆரம்பங்களின் புஸ்தகமாகும். இதில் சிருஷ்டிப்பும், மனுஷனுடைய வீழ்ச்சியும், விவரிக்கப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் புஸ்தகம் தேவனுடைய ஜனங்களின் மீட்பைப் பற்றி கூறுகிறது. லேவியராகமம் புஸ்தகம் ஆராதனையின் புஸ்தகம். தேவனோடு எவ்வாறு ஐக்கியமாக இருப்பது, நிவாரணபலிகளை எவ்வாறு செலுத்துவது ஆகிய காரியங்களை லேவியராகமம் புஸ்தகம் விரிவாகக் கூறுகிறது.

எண்ணாகமம் புஸ்தகத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு முன்பாக எவ்வாறு ஜீவிக்க வேண்டும், அவருக்கு எவ்வாறு ஊழியம் செய்ய வேண்டும் என்பதை விவரிக்கிறது. இந்தப் புஸ்தகத்தில் இஸ்ரவேலருக்கு மேலும் பல புதிய பிரமாணங்களும் கூறப்பட்டிருக்கிறது. கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு அவர்கள் ஆயத்தமாக இருந்தபடியினால், அதற்குரிய விசேஷித்த பிரமாணங்கள் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. (எண் 6,15,27,28, 29,30,31,35,36).

1 அதிகாரம்

இஸ்ரவேல் ஜனத்தார் ஒரு ராஜ்யமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே அவர்களுடைய ராஜாவாகயிருக்கிறார்.

"உங்கள் தேவனாகிய கர்த்தரே உங்களுக்கு ராஜாவாயிருந்தும், நீங்கள் என்னை நோக்கி: அப்படியல்ல, ஒரு ராஜா எங்கள்மேல் ஆளவேண்டும் என்றீர்கள்" (1சாமு 12:12).

இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஆளுகை நடைபெறுகிறது. மோசே கர்த்தருக்கு கீழே இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்கிறார்.

"மோசே நமக்கு ஒரு நியாயப்பிரமாணத்தைக் கற்பித்தான்; அது யாக்கோபின் சபைக்குச் சுதந்தரமாயிற்று. ஜனங்களின் தலைவரும் இஸ்ரவேலின் கோத்திரங்களும் கூட்டங்கூடினபோது அவர் யெஷுரனுக்கு ராஜாவாயிருந்தார்" (உபா 33:4,5).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரைக் கூட்டிச்சேர்த்து அவர்களை ஒரு ராஜ்யமாக ஸ்தாபிக்கிறார். அவர்களுக்கு தம்முடைய பிரமாணங்களை நியமனம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஒழுக்கமாகவும், முறையாகவும், கர்த்தருக்கு பிரியமானவர்களாகவும், பிரியமுள்ளவர்களாகவும் ஜீவிப்பதற்கு கர்த்தருடைய பிரமாணம் அவசியமாயிருக்கிறது.

கர்த்தருடைய ராஜ்யத்தில் அங்கம் வகிக்கிறவர்கள், அவருடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளவேண்டும். ஜனங்கள் ஒழுங்காகவும் கிரமமாகவும் இருக்கவேண்டுமென்றால், ஜனங்களைப்பற்றிய விவரம் சேகரிக்கப்படவேண்டும். அவர்கள் எண்ணித்தொகையேற்றப்படவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார் (எண் 1:1-4). இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட தலைவர்கள் (எண் 1:5-16).

ஒவ்வொரு கோத்திரத்திலும் எண்ணித்தொகையேற்றப்பட்டவர்கள் (எண் 1:17-43). இஸ்ரவேல் புத்திரருடைய வம்சத்திலே இருந்த மொத்த ஜனத்தொகை (எண் 1:44-46). லேவி கோத்திரத்தார் எண்ணித்தொகையேற்றப்படவில்லை (எண் 1:47-56).

எண்ணித் தொகையேற்றுங்கள் எண் 1:1-16

எண் 1:1 இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் முதல் தேதியில், கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலிருக்கிற ஆசரிப்புக் கூடாரத்திலே மோசேயை நோக்கி:

எண் 1:2 நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் முழுச் சபையாயிருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர்பேராக எண்ணித்தொகையேற்றுங்கள்.

எண் 1:3 இஸ்ரவேலிலே இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்துக்குப் புறப்படத்தக்கவர்கள் எல்லாரையும் அவர்கள் சேனைகளின்படி நீயும் ஆரோனும் எண்ணிப் பார்ப்பீர்களாக.

எண் 1:4 ஒவ்வொரு கோத்திரத்துக்கு ஒவ்வொரு மனிதன் உங்களோடே இருப்பானாக; அவன் தன் பிதாக்களின் வம்சத்துக்குத் தலைவனாயிருக்க வேண்டும்.

எண் 1:5 உங்களோடே நிற்கவேண்டிய மனிதருடைய நாமங்களாவன: ரூபன் கோத்திரத்தில் சேதேயூருடைய குமாரன் எலிசூர்.

எண் 1:6 சிமியோன் கோத்திரத்தில் சூரிஷதாயின் குமாரன் செலூமியேல்.

எண் 1:7 யூதா கோத்திரத்தில் அம்மினதாபின் குமாரன் நகசோன்.

எண் 1:8 இசக்கார் கோத்திரத்தில் சூவாரின் குமாரன் நெதனெயேல்.

எண் 1:9 செபுலோன் கோத்திரத்தில் ஏலோனின் குமாரன் எலியாப்.

எண் 1:10 யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீம் கோத்திரத்தில் அம்மியூதின் குமாரன் எலிஷாமா; மனாசே கோத்திரத்தில் பெதாசூரின் குமாரன் கமாலியேல்.

எண் 1:11 பென்யமீன் கோத்திரத்தில் கீதெயோனின் குமாரன் அபீதான்.

எண் 1:12 தாண் கோத்திரத்தில் அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர்.

எண் 1:13 ஆசேர் கோத்திரத்தில் ஓகிரானின் குமாரன் பாகியேல்.

எண் 1:14 காத் கோத்திரத்தில் தேகுவேலின் குமாரன் எலியாசாப்.

எண் 1:15 நப்தலி கோத்திரத்தில் ஏனானின் குமாரன் அகீரா.

எண் 1:16 இவர்களே சபையில் ஏற்படுத்தப்பட்டவர்களும், தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களில் பிரபுக்களும், இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவருமாயிருப்பவர்கள் என்றார்.

இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். மோசேயும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுகிறார். இந்த சம்பவம் நடைபெற்று பல வருஷங்களுக்கு பின்பு தாவீதும் இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுகிறார். ஆனால் அவர்களை எண்ணித்தொகையேற்றுமாறு கர்த்தர் தாவீதுக்கு கட்டளை கொடுக்கவில்லை.

கர்த்தருடைய கட்டளையில்லாமலேயே, தாவீது இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றியதினால் கர்த்தருடைய கோபம் தாவீதின்மீது வந்தது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு மோசேயினிடத்தில் சொன்ன காலம் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் முதல் தேதியில், கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலிருக்கிற ஆசரிப்புக் கூடாரத்திலே மோசேயை நோக்கி, "நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் முழுச் சபையாயிருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர்பேராக எண்ணித் தொகையேற்றுங்கள்" (எண் 1:1,2) என்று சொல்லுகிறார்.

எபிரெய பாஷையில் எண்ணாகமம் முதல் அதிகாரம் முதல் வசனம் " வாயிக்ரா" என்னும் வார்த்தையோடு ஆரம்பமாகிறது. இந்த வார்த்தைக்கு "மேலும்" என்று பொருள் சொல்லலாம். மோசேயின் பிரமாணத்தில் எண்ணாகமமும் ஒரு பகுதி என்பதை இந்த வார்த்தை வலியுறுத்துகிறது. பஞ்சாகமத்திலுள்ள ஐந்து புத்தகங்களும் சேர்ந்து "தோரா" என்று அழைக்கப்படுகிறது. ஐந்து புஸ்தகங்களும் தோராவின் ஐந்து பகுதிகளாகும்.

எண்ணாகமம் புஸ்தகத்தில் கர்த்தர் மோசேயோடும், மேலும் சிலரோடும் பேசின சம்பவங்கள் எழுதப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மோசேயிடம் மட்டும் (35 தடவைகள் - எண் 1:1,48; எண் 3:1,5,11,14,40,44; எண் 4:21; எண் 7:4,11; எண் 8:5,23; எண் 10:1; எண் 11:16,23,25; எண் 12:14; எண் 13:1; எண் 14:11; எண் 15:35; எண் 16:44; எண் 17:10; எண் 21:8,34; எண் 25:4,10,16; எண் 26:52; எண் 27:6,12,18; எண் 27:6; எண் 31:1,25; எண் 34:16)

2. மோசேயிடமும், ஆரோனிடமும் (7 தடவைகள் - எண் 2:1; எண் 4:1,17 ; எண் 14:26; எண் 16:20; எண் 20:12,23)

3. இஸ்ரவேலரிடம் பேசுமாறு மோசேயிடம் (15 தடவைகள் - எண் 5:1,5,11; எண் 6:1; எண் 9:1,9; எண் 15:1,17,37; எண் 17:1; எண் 28:1; எண் 33:50; எண் 34:1; எண் 35:1,9)

4. ஆரோனிடமும் அவனுடைய குமாரரிடமும் பேசுமாறு மோசேயிடம் (எண் 6:22)

5. ஆரோனிடம் பேசுமாறு மோசேயிடம் (எண் 8:1)

6. மோசேயிடமும், ஆரோனிடமும், மிரியாமிடமும் (எண் 12:4)

7. சபையாரிடம் பேசுமாறு மோசேயிடம் (எண் 16:23)

8. எலெயாசாரிடம் பேசுமாறு மோசேயிடம் (எண் 16:36)

9. ஆரோனிடம் (எண் 18:1,8)

10. லேவியரிடம் பேசுமாறு மோசேயிடம் (எண் 18:25)

11. இஸ்ரவேல் புத்திரரிடம் பேசுமாறு மோசேயிடமும், ஆரோனிடமும் (எண் 19:1)

12. கன்மலையினிடத்தில் பேசுமாறு மோசேயிடம் (எண் 20:7)

13. மோசேயிடமும், எலெயாசாரிடமும் (எண் 26:1)

14. பிலேயாமிடம் (எண் 23:5,16)

"வனாந்தரத்தில்" என்பதற்கான எபிரெய வார்த்தை "பெமித்பார்" என்பதாகும். எண்ணாகமம் புஸ்தகத்தின் எபிரெய பெயர் பெமித்பார். செப்துவஜிந்த் கிரேக்க மொழி பழைய ஏற்பாட்டில் இப்புஸ்தகத்திற்கு "நம்பர்ஸ்" என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது.

மூன்றாம் மாதத்தில் இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். (யாத் 19:1) இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதி வரையிலும் அவர்கள் அங்கு தங்கியிருந்தார்கள் (எண் 10:11).

மோசே இதுவரையிலும் சீனாய் மலையில் தேவனுடைய பிரமாணங்களை பெற்றுக்கொண்டார். இப்பொழுது ஆசரிப்புக் கூடாரத்திலே கர்த்தர் மோசேயோடு பேசுகிறார். (எண் 7:38; எண் 25:1; எண் 26:46; எண் 27:34; யாத் 24; யாத் 32; யாத் 34).

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்தில் சுமார் ஒரு வருஷக்காலம் தங்கியிருந்தார்கள். (எண் 1:1; யாத் 19:1). ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபனம் பண்ணப்பட்டு, ஒருமாதத்திற்குப் பின்பு, இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. (யாத் 40:17). சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்படுவதற்கு இருபது நாட்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரை எண்ணித் தொகையேற்றவேண்டிய கட்டளை கொடுக்கப்படுகிறது. (எண் 1:1-2,18; எண் 10:11-13). இந்நாளிலிருந்து ஆரோனின் மரணம் வரையிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எண்ணாகமம் புஸ்தகத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. (எண் 33:38) இவை சுமார் 38 வருஷங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளாகும்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் வனாந்தரத்திலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருக்கிறது. ஆசரிப்புக்கூடாரமே கர்த்தருடைய பரிசுத்த வாசஸ்தலம். கர்த்தர் தம்முடைய ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து, இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு கட்டளைகொடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அங்கிருந்து புறப்படப்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு இரண்டு வருஷங்களும், இரண்டு மாதங்களும் ஆயிற்று.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரை ஒரு ராஜ்யமாக கூட்டிச்சேர்த்து, அவர்களை இரண்டு வருஷங்களாக ராஜ்யபாரம்பண்ணி வருகிறார். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருக்கு ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம், முதல் மாதத்திலே, கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய பிரமாணங்களை சொன்னார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தர் இரண்டாம் வருஷம், இரண்டாம் மாதத்தின் ஆரம்பத்திலே, இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு கட்டளையிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை எவ்வாறு எண்ணித்தொகையேற்றவேண்டும் என்றும், யாரையெல்லாம் எண்ணித்தொகையேற்ற வேண்டும் என்றும் கர்த்தர் சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார்.

"இஸ்ரவேலிலே இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்துக்குப் புறப்படத்தக்கவர்கள் எல்லாரையும் அவர்கள் சேனைகளின்படி நீயும் ஆரோனும் எண்ணிப் பார்ப்பீர்களாக" (எண் 1:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யுத்தத்திற்கு புறப்படத்தக்க புருஷர்களை எண்ணித்தொகையேற்றுவது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் முழுச் சபையாயிருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர்பேராக எண்ணித் தொகையேற்றுங்கள் (எண் 1:2-3; யாத் 30:12-16).

2. இஸ்ரவேலிலே இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்துக்குப் புறப்படத்தக்கவர்கள் எல்லாரையும் அவர்கள் சேனைகளின் படி நீயும் ஆரோனும் எண்ணிப் பார்ப்பீர்களாக. (எண் 1:3)

3. ஒவ்வொரு கோத்திரத்துக்கு ஒவ்வொரு மனிதன் உங்களோடே இருப்பானாக; அவன்தன் பிதாக்களின் வம்சத்துக்குத் தலைவனாயிருக்கவேண்டும் (எண் 1:4)

இஸ்ரவேலின் புருஷர்களை மாத்திரம் எண்ணித் தொகையேற்றவேண்டும். அவர்களும் யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்களாயிருக்கவேண்டும். இருபது வயதிற்கு குறைவுள்ளவர்களை எண்ணக்கூடாது. இஸ்ரவேல் புத்திரரில் குருடு, முடம், கொடிய வியாதி போன்றவை உள்ளவர்களால் யுத்தம் பண்ண முடியாது. சரீரத்தில் அங்கவீனமாக இருக்கிறவர்களால் யுத்தத்திற்கு புறப்பட்டுப்போக முடியாது. அவர்களையெல்லாம் எண்ண வேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றும்போது, அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர் பேராக எண்ணித் தொகையேற்றவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரை இவ்வாறு எண்ணித் தொகையேற்றுவதினால், அவர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனை பேர் என்பதையும், அவர்களுடைய பெயர்கள் என்ன என்பதையும், அவர்கள் எந்தக் கோத்திரத்தையும், எந்தக் குடும்பத்தையும், எந்த வம்சங்களையும் சேர்ந்தவர்கள் என்பதையும் அறிந்துகொள்ள முடியும்.

இஸ்ரவேல் புத்திரரை இவ்வாறு எண்ணித் தொகையேற்றுவதினால், ஒவ்வொரு இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிய விவரத்தையும் தனித்தனியாகவும், பேர் பேராகவும் அறிந்துகொள்ள முடியும். யுத்தத்திற்கு புறப்பட்டுப்போகிற இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிய முழுமையான விவரங்கள் அவசியமாய்த் தேவைப்படுகிறது.

யுத்தம்பண்ணப்போகிற இஸ்ரவேல் புத்திரரும் தங்களைப்பற்றிய விவரங்களையும், தங்களோடு கூடயிருந்து சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்களைப்பற்றிய விவரங்களையும் அறிந்திருக்கவேண்டும். தாங்கள் எந்த படைப்பிரிவை சேர்ந்தவர்கள் என்பதையும், இஸ்ரவேல் புத்திரர் யுத்தத்திற்கு புறப்பட்டுப்போகும்போது, தாங்கள் எந்த அணியில் சேர்ந்திருக்கவேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்திருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் யுத்தத்திற்கு புறப்பட்டுப்போகும்போது அணியணியாக புறப்பட்டுப்போவார்கள். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் அவர்களுடைய அணிகளின் வரிசை கிரமம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வனாந்தரத்திலே பாளயமிறங்கும்போதும், கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக, ஒவ்வொரு கோத்திரத்தாரும், அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இடங்களில் பாளயமிறங்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு மோசேயினிடத்தில் சொல்லுகிற இந்த சம்பவத்திற்கு முன்பாகவே, அவர்கள் ஒருதரம் எண்ணப்பட்டிருக்கிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்கு காணிக்கைகளை சேகரிப்பதற்காக அவர்கள் எண்ணப்பட்டார்கள்.

“சபையில் எண்ணப்பட்டவர்கள் கொடுத்த வெள்ளி பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி நூறு தாலந்தும், ஆயிரத்தெழுநூற்று எழுபத்தைந்து சேக்கல் நிறையுமாய் இருந்தது. எண்ணப்பட்டவர்களின் தொகையில் சேர்ந்த இருபது வயது முதற்கொண்டு அதற்கு மேற்பட்ட ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேர்களில் ஒவ்வொரு தலைக்கு பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி அரைச்சேக்கலாகிய பெக்கா என்னும் விழுக்காடு சேர்ந்தது” *(யாத் 38:25,26)*.

இஸ்ரவேல் ஜனத்தார் இதற்கு முன்பு எண்ணப்பட்டபோது, அவர்கள் தங்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களின்படி எண்ணப்படவில்லை. இப்போதோ இஸ்ரவேல் புத்திரரின் முழுசபையாயிருக்கிற அவர்கள் எல்லோரும், தங்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களின் பிரகாரம் எண்ணப்படுகிறார்கள். அவர்களுடைய வம்சங்களிலுள்ள புருஷர்கள் எல்லாருடைய தலைகளும் பேர் பேராக எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரை எண்ணித் தொகையேற்றும் ஊழியத்தை கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கொடுக்கிறார். “நீயும் ஆரோனும் எண்ணிப்பார்ப்பீர்களாக” *(எண் 1:3)* என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரை எண்ணிப்பார்க்கும்போது, அவர்களுக்கு உதவி செய்கிறவர்களையும் கர்த்தர் நியமிக்கிறார். “ஒவ்வொரு கோத்திரத்துக்கு ஒவ்வொரு மனிதன் உங்களோடே இருப்பானாக; அவன் தன் பிதாக்களின் வம்சத்துக்குத் தலைவனாயிருக்க வேண்டும்” *(எண் 1:4)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பிதாக்களின் வம்சத்து தலைவர்கள், தங்கள் கோத்திரத்திற்கு தலைவர்களாயிருப்பார்கள். அவர்கள் தங்கள் வம்சத்தைப்பற்றியும், தங்கள் கோத்திரத்தைப்பற்றியும் நன்றாய் அறிந்து வைத்திருப்பார்கள்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரை எண்ணிப்பார்க்கும்போது, அவர்களோடு நிற்கவேண்டிய ஒவ்வொரு கோத்திரத்தின் தலைவனுடைய பெயரையும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

இஸ்ரவேலரை எண்ணித்தொகையேற்றுவதற்கு உதவிபுரியும் தலைவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ரூபன் கோத்திரத்தில் எலிசூர் *(எண் 1:5)*
2. சிமியோன் கோத்திரத்தில் செலூமியேல் *(எண் 1:6)*
3. யூதா கோத்திரத்தில் நகசோன் *(எண் 1:7)*
4. இசக்கார் கோத்திரத்தில் நெதனெயேல். *(எண் 1:8)*
5. செபுலோன் கோத்திரத்தில் எலியாப். *(எண் 1:9)*
6. எப்பிராயீம் கோத்திரத்தில் எலிஷாமா *(எண் 1:10)*
7. மனாசே கோத்திரத்தில் கமாலியேல். *(எண் 1:10)*
8. பென்யமீன் கோத்திரத்தில் அபீதான். *(எண் 1:11)*
9. தாண் கோத்திரத்தில் அகியேசேர். *(எண் 1:12)*

10. ஆசேர் கோத்திரத்தில் பாகியேல். (எண் 1:13)

11. காத் கோத்திரத்தில் எலியாசாப் (எண் 1:14)

12. நப்தலி கோத்திரத்தில் அகீரா (எண் 1:15)

கர்த்தர் மோசேயை நோக்கி, "உங்களோடே நிற்கவேண்டிய மனிதருடைய நாமங்களாவன: ரூபன் கோத்திரத்தில் சேதேயூருடைய குமாரன் எலிசூர். சிமியோன் கோத்திரத்தில் சூரிஷதாயின் குமாரன் செலூமியேல். யூதா கோத்திரத்தில் அம்மினதாபின் குமாரன் நகசோன் (எண் 1:5-7) என்று சொல்லுகிறார்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியில் நகசோன் சல்மோனின் தகப்பனாவான். சல்மோன் எரிகோவிலிருந்த ராகாபின் கணவன். சல்மோன் பெத்லகேமிலுள்ள போவாசின் முற்பிதா. போவாஸ் ரூத்தின் கணவன் (ரூத் 4:18-22; மத் 1:4-5; லூக்கா 3:32).

கர்த்தர் மோசேயை நோக்கி, இசக்கார் கோத்திரத்தில் சூவாரின் குமாரன் நெதனெயேல். செபுலோன் கோத்திரத்தில் ஏலோனின் குமாரன் எலியாப். யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீம் கோத்திரத்தில் அம்மியூதின் குமாரன் எலிஷாமா; மனாசே கோத்திரத்தில் பெதாசூரின் குமாரன் கமாலியேல் (எண் 1:8-10) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் பன்னிரண்டு கோத்திரங்களில் லேவி கோத்திரத்தை ஆசாரிய ஊழியம் செய்வதற்காகக் கர்த்தர் வேறுபிரிக்கிறார். யோசேப்பின் புத்திரராகிய எப்பிராயீம், மனாசே ஆகிய இரண்டு கோத்திரங்களும் சேர்ந்து மறுபடியும் இஸ்ரவேல் புத்திரரின் பன்னிரண்டு கோத்திரங்களாக ஆனார்கள் (எண் 3:12-13).

கர்த்தர் மோசேயை நோக்கி, பென்யமீன் கோத்திரத்தில் கீதெயோனின் குமாரன் அபீதான். தாண் கோத்திரத்தில் அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர். ஆசேர் கோத்திரத்தில் ஒகிரானின் குமாரன் பாகியேல். காத் கோத்திரத்தில் தேகுவேலின் குமாரன் எலியாசாப். நப்தலி கோத்திரத்தில் ஏனானின் குமாரன் அகீரா (எண் 1:11-15) என்றும்,

இவர்களே சபையில் ஏற்படுத்தப் பட்டவர்களும், தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களில் பிரபுக்களும், இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவருமாயிருப்பவர்கள் (எண் 1:16) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு சொல்லுவதற்கு தெய்வீக நோக்கங்களும், தெய்வீக காரணங்களும் உண்டு என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு:

கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை உறுதிபண்ண விரும்புகிறார். ஆபிரகாமின் சந்ததியார் வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் திரளாய்ப் பெருகியிருப்பார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணினார். கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்ன வாக்குத்தத்தை யாக்கோபுக்கும் புதுப்பித்துச் சொல்லியிருக்கிறார்.

கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறிற்று. இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள். அவர்களுடைய திரளான எண்ணிக்கை, கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறிற்று என்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

"உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும், பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 28:14).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் மேய்ப்பராயிருக்கிறார். "இஸ்ரவேலின் மேய்ப்பரே, யோசேப்பை ஆட்டுமந்தையைப்போல் நடத்துகிறவரே, செவிகொடும்" (சங் 80:1).

ஒரு மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை பாதுகாத்து பராமரிப்பதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பாதுகாத்து பராமரிக்கிறார். நல்ல மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளின் எண்ணிக்கையையும், அந்த ஆடுகளைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்திருப்பார். தன்னுடைய மந்தையிலுள்ள ஆடுகளெல்லாம் எண்ணிக்கை குறையாமலிருக்கிறதா, ஆடுகள் காணாமல் போய்விட்டதா என்பதையெல்லாம் அறிந்துகொள்வதற்கு மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை எண்ணிப்பார்ப்பார்.

பெரிய மேய்ப்பர்கள் தங்கள் மந்தையிலுள்ள ஆடுகளை, தங்களுக்கு கீழே பணிபுரியும் சின்ன மேய்ப்பர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, ஆடுகளை எண்ணி, அவர்களிடத்தில் ஒப்புவிப்பார்கள். சின்ன மேய்ப்பர்கள் தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஆடுகளுக்கு உத்திரவாதம் பண்ணவேண்டும். தங்களிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆடுகளின் எண்ணிக்கையையும், அவற்றின் விவரத்தையும் சின்ன மேய்ப்பர்களும் அறிந்திருக்கவேண்டும்.

இஸ்ரவேலின் மேய்ப்பராயிருக்கிற கர்த்தர் தம்முடைய ஆடுகளை எண்ணித்தொகையேற்றுகிறார். இஸ்ரவேலின் தலைவர்களாகிய கோத்திரப்பிதாக்களிடம் அவர்களை ஒப்புவிக்கும்போது, கர்த்தர் அவர்களை எண்ணி ஒப்புக்கொடுக்கிறார். கோத்திரப்பிதாக்கள் தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஜனத்திற்கு உத்திரவாதம் பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போது அவர்கள் மத்தியிலே இஸ்ரவேல் ஜனத்தாரில் பிறந்த இஸ்ரவேல் புத்திரரும் இருக்கிறார்கள், மேலும் அவர்களோடு கலப்பு ஜாதியாரும் இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கும் புறஜாதி ஜனத்தாருக்கும் பிறந்த கலப்பு இனத்தவர்கள். கர்த்தர் மெய்யான இஸ்ரவேல் ஜாதியாருக்கும், கலப்பு இஸ்ரவேல் ஜாதியாருக்கும் வித்தியாசம் பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மாத்திரம் எண்ணித்தொகையேற்றுமாறு மோசேயினிடத்தில் சொல்லுகிறார். "நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் முழுச் சபையாயிருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர்பேராக எண்ணித் தொகையேற்றுங்கள்" (எண் 1:2) என்பதே கர்த்தருடைய கட்டளை.

இஸ்ரவேல் ஜனத்தாரின் எண்ணிக்கை திரளாயிருக்கிறது. அவர்கள் எல்லோரும் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக வனாந்தரத்திலே பாளயமிறங்கவேண்டும். அவர்கள் கோத்திரம் கோத்திரமாக பிரிக்கப்பட்டு, கர்த்தர் நியமித்திருக்கிற வரிசைப்பிரகாரம் பாளயமிறங்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போது, அணியணியமாக பிரயாணம் பண்ணவேண்டும். யுத்தத்திற்கு புறப்பட்டுப்போகிறவர்கள் அணியணியாக புறப்பட்டுப்போவதுபோல, இஸ்ரவேல் ஜனத்தாரும் அணியணியாக பிரயாணம்பண்ணவேண்டும். அவர்கள் அணியணியாக போகவேண்டிய வரிசைகளையும் கர்த்தர் தீர்மானம் செய்திருக்கிறார். எந்தக் கோத்திரம் முதலில் போகவேண்டும் என்றும், எந்தக் கோத்திரம் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை சுமந்து செல்லவேண்டும் என்றும் கர்த்தர் தீர்மானம் செய்திருக்கிறார்.

கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருக்கு ராஜாவாகயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிப்பதற்காக கர்த்தர் அவர்கள் மத்தியிலே நியாயாதிபதிகளையும் நியமித்திருக்கிறார். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரின் வழக்குகளை விசாரிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரை சீராக வழிநடத்துவதற்கும், முறையாக ஆளுகை செய்வதற்கும், நீதியாக நியாயம் விசாரிப்பதற்கும், அவர்களை எண்ணித்தொகையேற்றுவது அவசியமாயிருக்கிறது. இப்படிப்பட்ட காரணங்களுக்காக, கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரரை எண்ணித் தொகையேற்றுமாறு மோசேக்கு கட்டளை கொடுத்திருக்கிறார்.

இஸ்ரவேலரின் சேனைகளை எண்ணித்தொகையேற்றிய ஆறு சம்பவங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. எகிப்து தேசத்தில் (யாத் 12:37)
2. கானானில் (யோசு 8:10; நியா 20:15-17; நியா 21:9)
3. சவுலின் ராஜ்யபாரத்தில் (1சாமு 11:8; 1சாமு 13:15; 1சாமு 14:17; 1சாமு 15:4)
4. தாவீதின் ராஜ்யபாரத்தில் (2சாமு 18:1; 2சாமு 24:9-15)
5. அமத்சியாவின் காலத்தில்(2நாளா 25:5)
6. செருபாபேலின் காலத்தில் (எஸ்றா 1:8).

இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றிய மூன்று சம்பவங்கள் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளின் ஒரு சம்பவம் யாத்திராகமம் புஸ்தகத்திலும், மற்ற இரண்டு சம்பவங்கள் எண்ணாகமம் புஸ்தகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஆசரிப்புக் கூடாரத்திற்குக் காணிக்கை சேகரிப்பதற்காக எண்ணித் தொகையேற்றிய சம்பவம். (யாத் 30:12-16)
2. இஸ்ரவேல் புத்திரரைச் சேனைகளின்படி எண்ணிப்பார்த்த முதலாவது சம்பவம். (எண் 1:2-46)
3. இஸ்ரவேல் புத்திரரைச் சேனைகளின்படி எண்ணிப்பார்த்த இரண்டாவது சம்பவம் (எண் 26)

யுத்தம் பண்ணுகிறவர்களுடைய சரீரம் திடமாக இருக்க வேண்டும். ஆகையினால் இருபது வயதுள்ளவர்கள் முதல் இஸ்ரவேலின் சேனையாக எண்ணப்படுகிறார்கள் (எண் 1:3,18,20,22,24,26,28,30,32,34,36, 38,40,42,45). இரண்டாம் முறையாக இஸ்ரவேல் புத்திரர்கள் சேனைகளின்படி எண்ணப்படும் போது, இதே வயதே கணக்கிடப்பட்டது (எண் 26:2,4).

மோசேயும், ஆரோனும் முதலாவது கணக்கெடுப்பில் எண்ணிப் பார்க்கிறார்கள். இரண்டாவது கணக்கெடுப்பில் மோசேயும், எலெயாசாரும் எண்ணிப் பார்க்கிறார்கள். (எண் 26:1).

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும், அவர்களுக்கு நியமிக்கப்பட்ட வரிசைகளின் பிரகாரமாக பாளயமிறங்குகிறார்கள். அவர்கள் கர்த்தர் சொன்ன வரிசையின் பிரகாரமாகவே அணியணியாக பிரமாணம் பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் கோத்திரத்தாருடைய வரிசைகளின் விவரம் வருமாறு :

1. லேயாளின் ஐந்து கோத்திரங்கள் (எண் 1:5-9)
2. ராகேலின் மூன்று கோத்திரங்கள் (எண் 1:10-11)
3. பில்காளின் ஒரு கோத்திரம் (எண் 1:12)
4. சில்பாளின் இரண்டு கோத்திரங்கள் (எண் 1:13-14)
5. பில்காளின் ஒரு கோத்திரம் (எண் 1:15; ஆதி 29:32-30:21)

இஸ்ரவேல் கோத்திரத்தாரின் எண்ணிக்கை
எண் 1:17-43

எண் 1:17 அப்படியே மோசேயும் ஆரோனும் பேர்பேராகக் குறிக்கப்பட்ட இந்த மனிதரைக் கூட்டிக்கொண்டு,

எண் 1:18 இரண்டாம் மாதம் முதல் தேதியில் சபையார் எல்லாரையும் கூடிவரச்செய்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தின்படிக்கும், பிதாக்களுடைய வம்சத்தின்படிக்கும், நாமத்தொகையின் படிக்கும், இருபது வயதுள்ளவர்கள் முதல் தலைதலையாகத் தங்கள் வம்ச உற்பத்தியைத் தெரிவித்தார்கள்.

எண் 1:19 இப்படிக் கர்த்தர் கட்டளையிட்டபடியே, மோசே அவர்களைச் சீனாய் வனாந்தரத்தில் எண்ணிப்பார்த்தான்.

எண் 1:20 இஸ்ரவேலின் மூத்தகுமாரனாகிய ரூபன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் தலைதலையாக எண்ணப்பட்டபோது,

எண் 1:21 ரூபன் கோத்திரத்தில் எண்ணப் பட்டவர்கள், நாற்பத்தாறாயிரத்து ஐந்நூறு பேர்.

எண் 1:22 சிமியோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் தலைதலையாக எண்ணப்பட்டபோது,

எண் 1:23 சிமியோன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்தொன்பதினாயிரத்து முந்நூறுபேர்.

எண் 1:24 காத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:25 காத் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பத்தையாயிரத்து அறுநூற்று ஐம்பதுபேர்.

எண் 1:26 யூதா புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள்முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:27 யூதா கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், எழுபத்து நாலாயிரத்து அறுநூறுபேர்.

எண் 1:28 இசக்கார் புத்திரருடைய பிதாக்களின் வீட்டுவம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள்முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:29 இசக்கார் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர்.

எண் 1:30 செபுலோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:31 செபுலோன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர்.

எண் 1:32 யோசேப்பின் குமாரரில் எப்பிராயீம் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:33 எப்பிராயீம் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.

எண் 1:34 மனாசே புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:35 மனாசே கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், முப்பத்தீராயிரத்து இருநூறுபேர்.

எண் 1:36 பென்யமீன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள்முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:37 பென்யமீன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், முப்பத்தையாயிரத்து நானூறு பேர்.

எண் 1:38 தாண் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:39 தாண் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், அறுபத்தீராயிரத்து எழுநூறுபேர்.

எண் 1:40 ஆசேர் புத்திரருடைய பிதாக்களின் வீட்டுவம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள்முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:41 ஆசேர் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர்.

எண் 1:42 நப்தலி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது,

எண் 1:43 நப்தலி கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேர்.

இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் முதல் தேதியில் கர்த்தர் மோசேயை நோக்கி, இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுங்கள் (எண் 1:1) என்று கட்டளை கொடுக்கிறார்.

மோசே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து அன்றையதினமே இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்ற ஆரம்பிக்கிறார். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவதில் மோசே காலதாமதம் எதுவும் பண்ணவில்லை. மோசேயும் ஆரோனும் இரண்டாம் மாதம் முதல் தேதியில் சபையார் எல்லாரையும் கூடிவரச்செய்கிறார்கள் (எண் 1:18).

அப்படியே மோசேயும் ஆரோனும் பேர்பேராகக் குறிக்கப்பட்ட இந்த மனிதரைக் கூட்டிக்கொண்டு, இரண்டாம் மாதம் முதல் தேதியில் சபையார் எல்லாரையும் கூடிவரச்செய்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தின்படிக்கும், பிதாக்களுடைய வம்சத்தின்படிக்கும், நாமத்தொகையின்படிக்கும், இருபது வயதுள்ளவர்கள் முதல் தலைதலையாகத் தங்கள் வம்ச உற்பத்தியைத் தெரிவித்தார்கள். இப்படிக் கர்த்தர் கட்டளையிட்டபடியே, மோசே அவர்களைச் சீனாய் வனாந்தரத்தில் எண்ணிப்பார்த்தார் (எண் 1:17-19).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் அனைவரையும் ஒன்று கூட்டிச்சேர்க்கிறார். ஆசரிப்புக் கூடாரத்தை ஸ்தாபனம்பண்ணி, ஆராதனை முறைமைகளை ஒழுங்குபண்ணுகிறார். தமது பிரமாணங்களை இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்து ஆசாரியரைப் பிரதிஷ்டை பண்ணுகிறார். இப்போது இஸ்ரவேல் சபையார் எல்லாரையும் கர்த்தர் கூடிவரச் செய்கிறார். இதற்கான காரணம் வருமாறு :

1. கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அந்தத் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு அவர்கள் ஒரு சேனையாக ஆகவேண்டும். (யாத் 12:51).

2. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்குக் கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை அவர் நிறைவேற்றியிருக்கிறார் என்பதை இஸ்ரவேல் புத்திரர் காணவேண்டும். (ஆதி 12:1-3).

3. ஆசரிப்புக் கூடாரத்தைப் பொறுத்தளவில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார்களும் குடும்பம் குடும்பமாக வரிசையாக ஒழுங்குபடுத்தப்படவேண்டும் (எண் 2:32).

4. ஒவ்வொரு கோத்திரத்தையும் அதன் ஒவ்வொரு குடும்பத்தையும் வேறுபிரிக்க வேண்டும். (எண் 2:34).

5. யுத்தம் பண்ணும்போது தங்களுடைய வலிமையை இஸ்ரவேல் புத்திரர்கள் அறிந்து கொள்ளவேண்டும். (எண் 2:32).

6. வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரிக்கும் போது, இஸ்ரவேல் புத்திரர் வரிசைக் கிரமமாக இருக்க வேண்டும். (யோசு 13:1-24:31).

"இரண்டாம் மாதம் முதல் தேதியில்" என்னும் வாக்கியம், இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து பன்னிரண்டரை மாதமாயிற்று என்பதைக் குறிக்கிறது (எண் 1:1,18; யாத் 33:3).

ஒவ்வொரு கோத்திரத்திற்கும் பிதாக்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்குக்கீழ் ஆயிரங்களுக்குத் தலைவர்களும், நூறுபேருக்குத் தலைவர்களும் இருக்கிறார்கள். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரரை ஒரே நாளில் எண்ணித் தொகையேற்றியிருக்க முடியும். (யாத் 12:51). சீனாய் வனாந்தரத்தில் முதன் முறையாக இஸ்ரவேல் புத்திரர் எண்ணிப்பார்க்கப்படுகிறார்கள். இரண்டாம் முறையாக மோவாபின் சமவெளிகளில் எண்ணிப் பார்க்கப்படுகிறார்கள் (எண் 26:1-65).

இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு கோத்திரமாக எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தின்படிக்கும், பிதாக்களுடைய வம்சத்தின்படிக்கும், நாமத்தொகையின் படிக்கும் எண்ணித் தொகையேற்றப்படுகிறார்கள். இஸ்ரவேல் சபையாரில் புருஷர்கள் மாத்திரம், இருபது வயதுள்ளவர்கள் முதல், தலைத்தலையாக தங்கள் வம்ச உற்பத்தின்படி எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள். கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே மோசே அவர்களை சீனாய் வனாந்தரத்தில் எண்ணிப்பார்க்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கை கோத்திரம் வாரியாக இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கோத்திரத்திலும் எண்ணித்தொகையேற்றப்பட்டவர்களின் விவரம் வருமாறு :

இஸ்ரவேலின் மூத்தகுமாரனாகிய ரூபன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் தலைதலையாக எண்ணப்பட்டபோது, ரூபன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பத்தாறாயிரத்து ஐந்நூறு பேர் (எண் 1:20,21).

புருஷர்கள் மட்டுமே எண்ணப்படுகிறார்கள். அதிலும் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் மட்டுமே தலைதலையாக எண்ணப்படுகிறார்கள்.

முதலாவது எண்ணிக்கையில் ரூபன் கோத்திரத்தார் ஏழாவது ஸ்தானத்தில் இருந்தார்கள். இரண்டாம் எண்ணிக்கையில் அவர்கள் ஒன்பதாம் ஸ்தானத்திற்கு வந்துவிடுகிறார்கள் (எண் 1:21= எண் 26:7). 38 வருஷ வனாந்தர பிரயாணத்தில் இவர்களுடைய யுத்த வீரர்களின் எண்ணிக்கையில் 2,770 பேர் குறைந்து போகிறார்கள்.

சிமியோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் தலைதலையாக எண்ணப்பட்டபோது, சிமியோன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்தொன்பதினாயிரத்து முந்நூறுபேர் (எண் 1:22,23).

முதலாவது கணக்கெடுப்பில் சிமியோன் கோத்திரத்தார் மூன்றாவது இடத்தில் இருந்தார்கள். 38 வருஷங்களுக்குப் பின்பு, இவர்களுடைய யுத்த வீரர்களின் எண்ணிக்கையில் 37,100 பேர் குறைந்து போகிறார்கள். (எண் 1:23 = எண் 26:14). வனாந்தரத்தில் ஏற்பட்ட வாதைகளில் சிமியோன் கோத்திரத்தார் அதிகமாக மரித்துப் போகிறார்கள். யாக்கோபு சிமியோன், லேவி ஆகியோரைக்குறித்து கூறிய தீர்க்கதரினம் நிறைவேறுகிறது (ஆதி 49:5-7).

காத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, காத் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பத்தையாயிரத்து அறுநூற்று ஐம்பதுபேர் (எண் 1:24,25).

முதலாம் கணக்கெடுப்பில் எட்டாவது ஸ்தானத்தில் இருந்தவர்கள் இரண்டாம் கணக்கெடுப்பில் பத்தாவது ஸ்தானத்திற்கு வருகிறார்கள். (எண் 1:25=எண் 26:18). இவர்களுடைய எண்ணிக்கையில் 5,150 பேர் குறைந்துபோகிறார்கள். வனாந்தரத்தில் உண்டான வாதைகளில் இந்தக் கோத்திரத்தாரும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

யூதா புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள்முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, யூதா கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், எழுபத்து நாலாயிரத்து அறுநூறுபேர் (எண் 1:26,27).

முதல் எண்ணிக்கையிலும், இரண்டாம் எண்ணிக்கையிலும் யூதா கோத்திரத்தாரே முதலாவது ஸ்தானத்தில் இருக்கிறார்கள். இரண்டாம் எண்ணிக்கையில் இவர்களுடைய தொகையில் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் 1,900 பேர் அதிகரிக்கிறார்கள். (எண் 1:27= எண் 26:22). இஸ்ரவேல் புத்திரர்கள் வனாந்தரத்தில் தங்களை உட்படுத்திக் கொண்ட பாவங்களில் யூதா கோத்திரத்தார் விலகியே இருந்தார்கள். யூதா யாக்கோபுக்கும், லேயாளுக்கும் பிறந்த நான்காவது குமாரன். (ஆதி 29:35). யூதா கோத்திரத்திலிருந்து மேசியா வந்திருக்கிறார். (ஆதி 49:10; மத் 1:1-3; வெளி 5:5) யூதா கோத்திரம் ஆளுகை செய்யும் கோத்திரம். யூதா கோத்திரத்திலிருந்து வந்த முதலாவது ராஜா தாவீது ஆவார்.

இசக்கார் புத்திரருடைய பிதாக்களின் வீட்டுவம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள்முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, இசக்கார் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர் (எண் 1:28,29).

இசக்கார் கோத்திரம் முதலாவது கணக்கெடுப்பில் ஐந்தாவது ஸ்தானத்தில் இருந்தது. இரண்டாவது கணக்கெடுப்பில் மூன்றாவது ஸ்தானத்திற்கு வருகிறது. 38 வருஷக்காலத்தில் 9,900 பேர் அதிகரித்திருக்கிறார்கள். (எண் 1:29= எண் 26:25). மற்ற கோத்திரத்தாரைப் போல இவர்கள் கலகக்காரர்கள் அல்ல. அமைதியானவர்கள். (ஆதி 49:14-15) இசக்கார் யாக்கோபுக்கும், லேயாளுக்கும் பிறந்த ஐந்தாவது குமாரன். (ஆதி 30:18). மற்ற பத்து கோத்திரங்களும் சிறையிருப்பிற்குச் சென்ற பின்பு, இசக்கார் யூதாவோடு சேர்ந்து கொண்டது (2நாளா 30:18).

செபுலோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, செபுலோன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர் (எண் 1:30,31).

முதலாவது கணக்கெடுப்பிலும், இரண்டாவது கணக்கெடுப்பிலும் செபுலோன் கோத்திரம் நான்காவது ஸ்தானத்தை வகித்தது (எண் 1:31=எண் 26:7). இந்தக் கோத்திரத்தில் 3,100 பேர் அதிகரித்தார்கள். செபுலோன் யாக்கோபுக்கும், லேயாளுக்கும் பிறந்த ஆறாவது குமாரன். (ஆதி 30:20; ஆதி 35:23; ஆதி 46:14).

யோசேப்பின் குமாரரில் எப்பிராயீம் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, எப்பிராயீம் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர் எண் 1:32,33).

எப்பிராயீமும், மனாசேயும், யோசேப்பின் குமாரர்கள். பன்னிரண்டு கோத்திரங்களில் இவர்கள் இரண்டு கோத்திரங்கள் ஆனார்கள் (எண் 1:32-35; ஆதி 48:5-22).

எப்பிராயீம் யோசேப்பின் ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். மனாசே லேவியின் ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். சாலொமோனின் மரணத்திற்குப் பின்பு, சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் பிளவுண்டபோது, எப்பிராயீம் கோத்திரம் அதிக வலுவுள்ளதாக இருந்தது. வடக்கு ராஜ்யத்தைக் குறிப்பதற்கு பல சமயங்களில் எப்பிராயீமின் பெயரே கூறப்பட்டது.

எப்பிராயீம் கோத்திரம் "யோசேப்பு" என்று (வெளி 7:8) அழைக்கப்பட்டிருக்கிறது. மற்ற கோத்திரத்தார்கள் பொறாமைப்படும் அளவிற்கு எப்பிராயீம் கோத்திரம் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. (ஏசா 11:13; எரே 7:15; எசே 37:16,19; ஓசி 13:1)

எப்பிராயீம் யோசேப்பின் இரண்டாவது குமாரனாக இருந்தபோதிலும் யாக்கோபின் முதன்மையான மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார். (ஆதி 48:5-22). எப்பிராயீம் கோத்திரம் பல காரியங்களில் தலைமை தாங்கியிருக்கிறது. கிதியோன் (நியா 8:1), யெப்தா (நியா 12:1), தாவீது (2சாமு 2:9), ரெகொபெயாம் (1இராஜா 12:25; 2நாளா 10:16).

முதலாவது கணக்கெடுப்பில் எப்பிராயீம் பத்தாவது இடத்திலும், இரண்டாவது கணக்கெடுப்பில் பதினொராவது இடத்திலும் வருகிறது. (எண் 1:33=எண் 26:37). இரண்டாவது கணக்கெடுப்பின் காலத்தில் எப்பிராயீம் கோத்திரத்தார் 8,000 போர்வீரர்களை இழந்துபோனார்கள்.

மனாசே புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, மனாசே கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், முப்பத்தீராயிரத்து இருநூறுபேர் (எண் 1:34,35).

மனாசே யோசேப்பிற்கும், ஆஸ்நாத்திற்கும் பிறந்த முதலாவது குமாரன். (ஆதி 41:50-51; ஆதி 46:20). எப்பிராயீம் வெளி 7:8 ஆவது வசனத்தில் யோசேப்பு என்று அழைக்கப்பட்டிருப்பதினால், இவர் லேவியின் ஸ்தானத்தை எடுத்திருக்க வேண்டும். மனாசேயின் சுதந்தரவீதம் யோர்தான் நதிக்கு இரண்டு புறங்களிலும் இருந்தன (எண் 32:33-42; யோசு 16:9; யோசு 17:5-11).

இஸ்ரவேலில் குழப்பம் உண்டாவதற்கு மனாசே கோத்திரமே மூலகாரணம். (யோசு 22). மீதியானியரோடு நடைபெற்ற யுத்தத்தில் மனாசே கோத்திரத்தார் கிதியோனோடு சேர்ந்து கொண்டார்கள். (நியா 6:34-35). மனாசே கோத்திரத்தாரில் மீதியானவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தார்கள்.

இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது பாலஸ்தீன தேசத்திலிருந்த யூதர்கள் இந்தக் கோத்திரத்தின் மூலமாக வந்தவர்கள் ஆவார்கள். (1நாளா 9:3). சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் பிளவு பட்ட போது, மனாசே யூதாவோடு சேர்ந்து கொண்டது. (2நாளா 15:9; 2நாளா 34:6-7).

முதலாவது கணக்கெடுப்பில் மனாசே கோத்திரம் கடைசி ஸ்தானத்தையும், இரண்டாவது கணக்கெடுப்பில் ஆறாவது ஸ்தானத்தையும் பெற்றிருந்தது. (எண் 1:35 =எண் 26:34). 20,500 போர்வீரர்கள் மனாசே கோத்திரத்தில் அதிகரித்தார்கள். வனாந்தரத்தில் இஸ்ரவேலரின் பாவங்களில் இவர்கள் பங்குபெறாமல் இருந்தார்கள்.

பென்யமீன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, பென்யமீன் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், முப்பத்தையாயிரத்து நானூறு பேர் (எண் 1:36,37).

பென்யமீன் யாக்கோபுக்கும், ராகேலுக்கும் பிறந்தவர். யோசேப்பின் சகோதரன். (ஆதி 35:18-19,24; ஆதி 46:19). சோதோமியரோடு நடைபெற்ற யுத்தத்தில் பென்யமீன் கோத்திரம் ஒரளவு முழுவதுமாகவே அழிந்து போயிற்று. (நியா 19-21) இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாகிய சவுல், பென்யமீன் கோத்திரத்தார். (1சாமு 9:1,17; 1சாமு 10:20-21) புறஜாதியாருக்கு அப்போஸ்தலனாகிய பவுலும் பென்யமீன் கோத்திரத்தார் (ரோமர் 11:1; பிலி 3:5). பென்யமீன் கோத்திரத்து போர்வீரர்கள் வில்வீரர்களாகவும், கவண்களை எறிவதில் வல்லவராகவும் இருந்தார்கள். (நியா 3:15; நியா 20:16; 1நாளா 8:40; 1நாளா 12:2).

முதலாவது கணக்கெடுப்பில் பென்யமீன் கோத்திரம் பதினொறாவது இடத்திலும், இரண்டாவது கணக்கெடுப்பில் ஏழாவது இடத்திலும் வருகிறது (எண் 1:37=எண் 26:41). இந்தக் கோத்திரத்தில் 10,200 போர்வீரர்கள் அதிகரிக்கிறார்கள். வனாந்தரத்தில் உண்டான வாதைகளிலிருந்து பென்யமீன் கோத்திரத்தார் அழிந்துபோகாமல் தப்பித்துக் கொள்கிறார்கள்.

தாண் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, தாண் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், அறுபத்தீராயிரத்து எழுநூறுபேர் (எண் 1:38,39).

தாண் யாக்கோபின் ஐந்தாவது குமாரன். இவருடைய தாயார் பில்காள். (ஆதி 30:6; ஆதி 35:25). தாண் கோத்திரத்தார் விக்கிரகாராதனை செய்வதில் மற்ற கோத்திரத்தாரைவிட முந்திக் கொண்டார்கள். (நியா 18:30). வெளி 7:1-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் 144,000 யூதர்களில் தாண் கோத்திரத்தார் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை இக்காலத்தில் தாண் கோத்திரத்தாரில் ஒருவரும் தேவனைச் சேவிக்காமல் இருந்திருக்கலாம்.

முதலாவது கணக்கெடுப்பிலும், இரண்டாவது கணக்கெடுப்பிலும் தாண் கோத்திரத்தார் இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றிருந்தார்கள். (எண் 1:39=எண் 26:43). இக்கோத்திரத்தில் 1,700 போர்வீரர்கள் அதிகரித்திருந்தார்கள்.

ஆசேர் புத்திரருடைய பிதாக்களின் வீட்டுவம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள்முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, ஆசேர் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர் (எண் 1:40,41).

ஆசேர் யாக்கோபின் எட்டாவது குமாரன். லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாளுக்குப் பிறந்த ஒரே குமாரன். (ஆதி 30:13; ஆதி 35:26; ஆதி 49:20).

முதலாவது கணக்கெடுப்பில் ஆசேர் கோத்திரத்தார் ஒன்பதாவது ஸ்தானத்திலும், இரண்டாவது கணக்கெடுப்பில் ஐந்தாவது இடத்திலும் வருகிறார்கள். (எண் 1:41= எண் 26:47). இந்தக் கோத்திரத்தில் 11,900 போர்வீரர்கள் அதிகரித்திருக்கிறார்கள்.

நப்தலி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தாரில் இருபது வயதுள்ளவர்கள் முதல் யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்கள் எல்லாரும் எண்ணப்பட்டபோது, நப்தலி கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேர் (எண் 1:42,43).

நப்தலி யாக்கோபின் ஆறாவது குமாரன். இவருடைய தாயார் பில்காள். இவள் ராகேலின் வேலைக்காரி (ஆதி 30:7-8; ஆதி 35:25).

முதலாவது கணக்கெடுப்பில் நப்தலி கோத்திரத்தார் ஆறாவது ஸ்தானத்திலும், இரண்டாவது கணக்கெடுப்பில் எட்டாவது ஸ்தானத்திலும் வருகிறார்கள். இந்தக் கோத்திரத்திதார் 8,000 போர்வீரர்களை இழந்துபோனார்கள்(எண் 1:43 =எண் 26:50).

இஸ்ரவேல் கோத்திரத்தாரின் எண்ணிக்கையைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இது பற்றி வேதபண்டிதர்கள் ஒரு சில விளக்கங்களை சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் கோத்திரத்தாரின் எண்ணிக்கை எண்களால் சொல்லப்படாமல், எழுத்துக்களால் சொல்லப்பட்டிருக்கிறது. எழுத்துக்களைப் பயன்படுத்தி எண்ணிக்கையை சொல்லுவது மிகவும் தெளிவாகயிருக்கும். எண்ணிக்கையின் வாக்கியம் நீளமாகயிருந்தாலும், அது மிகவும் முக்கியமானது என்பதினால், பரிசுத்த ஆவியானவர் இஸ்ரவேல் கோத்திரத்தாரின் எண்ணிக்கையை எண்களால் குறிப்பிடாமல், எழுத்துக்களால் குறிப்பிடுவதையே தெரிவு செய்திருக்கிறார்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் தனித்தனியாக எண்ணப்பட்டு தொகையேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தங்கள் குடும்பத்தின்படிக்கும், தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படிக்கும், தங்களுடைய நாமத்தொகையின் படிக்கும், இருபது வயதுள்ளவர்கள் முதல் தலை தலையாக தங்கள் வம்ச உற்பத்தியை மோசேயினிடத்திலும், ஆரோனிடத்திலும் தெரிவிக்கிறார்கள்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் இரண்டாம் மாதம் முதல் தேதியிலே கூடிவரச்செய்கிறார்கள். இந்த நாளில் இஸ்ரவேல் சபையார் எல்லாரும், ஒரு பண்டிகையை ஆசரிப்பதுபோல, கூடிவருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்படுவதினால், அவர்கள் ஒவ்வொருவரைப்பற்றிய விவரம், மற்ற இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியவருகிறது. தங்களுடைய உற்றார் உறவினர் யார், அவர்களுக்கும் தங்களுக்கும் என்ன உறவு, தங்களுக்கு அருகாமையிலிருக்கிறவர்கள் தங்களுக்கு எப்படிப்பட்ட உறவின் முறையிலிருக்கிறார்கள் என்னும் விவரங்களையெல்லாம் இஸ்ரவேல் புத்திரரால் அறிந்துகொள்ள முடிகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களை சொன்னபோது, அவர்களுடைய உறவின் முறையாரின் கடமைகளைப்பற்றியும் சில பிரமாணங்களை சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரின் காணியாட்சி நிலங்களை மீட்பதிலே, அவர்களுடைய உறவின் முறையாருக்கு முக்கிய பங்குள்ளது. ஆகையினால் அவர்கள் தங்கள் உறவு முறைகளைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது.

இஸ்ரவேல் கோத்திரத்தாரின் எண்ணிக்கையைப்பற்றிச் சொல்லும்போது, அவர்களுடைய எண்ணிக்கை பொதுவாக நூறு என்னும் இலக்கத்தில் முடிவு பெறுகிறது. காத் கோத்திரத்தாரின் எண்ணிக்கை மாத்திரம் ஐம்பது என்னும் இலக்கத்தில் இருக்கிறது. "காத் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், நாற்பத்தையாயிரத்து அறுநூற்று ஐம்பதுபேர்" (எண் 1:25).

எந்தக் கோத்திரத்தாரின் எண்ணிக்கையும், பத்து என்னும் இலக்கத்திலோ அல்லது ஐம்பது என்னும் இலக்கத்திற்கு கீழே உள்ள இலக்கத்திலோ சொல்லப்படவில்லை.

இஸ்ரவேல் கோத்திரத்தாரின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது யூதாகோத்திரத்தாரின் எண்ணிக்கையே மற்ற கோத்திரத்தாரின் எண்ணிக்கையைவிட அதிகமாயிருக்கிறது. "யூதா கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள், எழுபத்து நாலாயிரத்து அறுநூறுபேர்" (எண் 1:27).

பென்யமீன், மனாசே ஆகிய கோத்திரத்தாரின் எண்ணிக்கையைவிட, யூதாகோத்திரத்தாரின் எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகமாகும். பொதுவாக மற்ற எல்லா கோத்திரத்தாரையும்விட, யூதாகோத்திரத்தில் 12,000 பேர் அதிகமாயிருக்கிறார்கள்.

யூதாகோத்திரத்தார் கர்த்தரைத் துதிக்கிற கோத்திரத்தார். மேசியா யூதாகோத்திரத்திலிருந்து வருகிறார். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போது, யூதாகோத்திரத்தாரே எல்லா கோத்திரத்தாருக்கும் முன்பாக போகிறார்கள்.

மற்ற கோத்திரத்தாரைவிட யூதாகோத்திரத்தாரின் எண்ணிக்கையும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் மற்ற கோத்திரத்தாரைவிட அதிக பலமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்பட்ட இரண்டு சம்பவங்கள் எண்ணாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எண்ணித்தொகையேற்றப்பட்ட இவ்விரண்டு சம்பவங்களுக்கும் இடைப்பட்ட காலம் முப்பத்தெட்டு வருஷங்களாகும்.

எண்ணித்தொகையேற்றப்பட்ட இவ்விரண்டு சம்பவங்களிலும், ஒவ்வொரு கோத்திரத்தில் எண்ணிக்கையிலும் வித்தியாசமுள்ளது. அதன் விவரம் வருமாறு:

1. ரூபன் கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 46,500, இரண்டாவது எண்ணிக்கை 43,730 = வித்தியாசம் -2,700

2. சிமியோன் கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 59,300, இரண்டாவது எண்ணிக்கை 22,200 = வித்தியாசம் -37,100

3. காத் கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 45,650, இரண்டாவது எண்ணிக்கை 40,500 = வித்தியாசம் -5,150

4. யூதா கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 74,600, இரண்டாவது எண்ணிக்கை 76,500 = வித்தியாசம் +1,900

5. இசக்கார் கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 54,400, இரண்டாவது எண்ணிக்கை 64,300 = வித்தியாசம் +9,900

6. செபுலோன் கோத்திரம் - முதலாவது எணிக்கை 57,400, இரண்டாவது எண்ணிக்கை 60,500 = வித்தியாசம் +3,100

7. எப்பிராயீம் கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 40,500, இரண்டாவது எண்ணிக்கை 32,500 = வித்தியாசம் -8,000

8. மனாசே கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 32,200, இரண்டாவது எண்ணிக்கை 52,700 = வித்தியாசம் +20,500

9. பென்யமீன் கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 35,400, இரண்டாவது எண்ணிக்கை 45,600 = வித்தியாசம் +10,200

10. தாண் கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 62,700, இரண்டாவது எண்ணிக்கை 64,400 = வித்தியாசம் +1,700

11. ஆசேர் கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 41,500, இரண்டாவது எண்ணிக்கை 53,400 = வித்தியாசம் +11,900

12. நப்தலி கோத்திரம் - முதலாவது எண்ணிக்கை 53,400, இரண்டாவது எண்ணிக்கை 45,400 = வித்தியாசம் -8,000

மொத்தம் - முதலாவது எண்ணிக்கை 603,550, இரண்டாவது எண்ணிக்கை 601,730 = வித்தியாசம் -1,820

38 வருஷக்காலத்தில் ஐந்து கோத்திரங்களில் (ரூபன், சிமியோன், காத், எப்பிராயீம், நப்தலி) 61,020 சேனை வீரர்களுடைய எண்ணிக்கை குறைந்துபோகிறது. ஆயினும் மீதமுள்ள ஏழு கோத்திரங்களில் 59,200 பேர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

சிமியோன் கோத்திரத்தில் மட்டும் 37,100 பேர் குறைந்து போகிறார்கள். எண் 25:1-9 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வாதையில் 24,000 பேர் சிமியோன் கோத்திரத்தில் அழிந்துபோகிறார்கள். சிமியோன் புத்திரரின் தலைவனாகிய சிம்ரி என்பவன் தன்னுடைய கோத்திரத்தாரை இந்தப் பாவத்திற்கு வழிநடத்தினான் (எண் 25:14-15).

இதுதவிர, எண்ணாகமம் புஸ்தகத்தில் மட்டும் பத்து வெவ்வேறு வாதைகளைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இதிலும் ஏராளமானோர் மாண்டுபோனார்கள். ஒரு வாதையில் மட்டும் 14,700 பேர் மடிந்துபோனார்கள். (எண் 16:44-50) மற்றொரு வாதையில் 24,000 பேர் மாண்டுபோனார்கள் (எண் 25:9).

இஸ்ரவேலில் ஏற்பட்ட மூன்று வாதைகள் "பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரைப் பட்சித்தது" (எண் 11:1), கர்த்தர் ஜனங்களை மகாபெரிய வாதையாய் வாதித்தார் (எண் 11:33), கொடிய சர்ப்பங்களினால் இஸ்ரவேலில் அநேகர் மாண்டுபோனார்கள். (எண் 21:6) என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த ஐந்து வாதைகளில் மட்டும் சுமார் 82,800 பேர் மரித்துப்போயிருக்க வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்ட போது, யுத்த சன்னத்தாராக இருந்தவர்கள் 600,000 புருஷர்கள் (யாத் 12:37) முதலாவது கணக்கெடுப்பின்போது 603,550 புருஷர்கள் இருந்தார்கள். 12 மாதக்காலத்தில் 3,550 யுத்த வீரர்கள் அதிகரித்திருக்கிறார்கள்.

அடுத்த 40 வருஷக்காலத்தில் இஸ்ரவேலின் யுத்த வீரரெல்லாம் காலேபையும், யோசுவாவையும் தவிர மடிந்து போகிறார்கள். இரண்டாவது கணக்கெடுப்பின்போது எண்ணப்பட்டவர்கள் எல்லோருமே புதியவர்கள். அவர்களுடைய எண்ணிக்கை 601,730 வீரர்களாகும்.

இரண்டாம் எண்ணிக்கை 38 வருஷங்களுக்கு பின்பு நடைபெறுகிறது. அந்த எண்ணிக்கையில் ஒவ்வொரு கோத்திரத்தாரின் விவரம் வருமாறு :

லேயாளின் ஆறு குமாரர்கள் :

1. யூதா - 1,900 பேர் அதிகம்
2. இசக்கார் - 9,900 பேர் அதிகம்
3. செபுலோன் - 3,100 பேர் அதிகம்
4. லேவி - 1,000 பேர் அதிகம்
5. ரூபன் - 2,770 பேர் குறைவு
6. சிமியோன் - 37,100 பேர் குறைவு

லேயாளின் குமாரர்களில் லேவி கோத்திரத்தார் யுத்தத்திற்குப் போகும் மனுஷராக எண்ணப்படவில்லை.

ராகேலின் இரண்டு குமாரர்கள் :

1. பென்யமீன் - 10,200 பேர் அதிகம்
2. யோசேப்பு
   (1) மனாசே - 20,500பேர் அதிகம்
   (2) எப்பிராயீம் - 8,000பேர் குறைவு

சில்பாளின் இரண்டு குமாரர்கள் :

1. ஆசேர் - 11,900 பேர் அதிகம்
2. காத் - 5,150 பேர் குறைவு

பில்காளின் இரண்டு குமாரர்கள் :

1. தாண் - 1,700 பேர் அதிகம்
2. நப்தலி - 8,000 பேர் குறைவு

கிழக்கு பாளயத்தில் இருந்தவர்கள் யூதா, இசக்கார், செபுலோன், ஆகிய கோத்திரத்தார். இவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்தது. தெற்கு பாளயத்தில் இருந்தவர்கள் ரூபன், சிமியோன், காத் கோத்திரத்தார். இவர்களுடைய எண்ணிக்கை குறைந்துபோயிற்று. கோராகுவின் கூட்டத்தாருடைய கலகம் (எண் 16:1-35), சிம்ரியின் பாவம் (எண் 25:1-18) ஆகியவை இவர்களுடைய எண்ணிக்கை குறைந்து போவதற்குக் காரணமாகும்.

மேற்கு பாளயத்தில் இருந்தவர்கள் பென்யமீன், மனாசே ஆகிய கோத்திரத்தார். இவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்தது. எப்பிராயீம் கோத்திரத்தார் கலகக்காரருக்கு அருகில் பாளயம் இறங்கியிருந்த படியினால், அவர்களுடைய எண்ணிக்கையும் குறைந்து போயிற்று. வடக்கு பாளயத்தில் இருந்தவர்கள் தாண், ஆசேர், நப்தலி ஆகிய கோத்திரத்தார். இவர்களில் தாண், ஆசேர் ஆகியோருடைய எண்ணிக்கை அதிகரித்தது. நப்தலி கோத்திரத்தாரின் எண்ணிக்கை குறைந்து போயிற்று.

இஸ்ரவேலில் யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்கள் எண் 1:44-46

எண் 1:44 எண்ணப்பட்டவர்கள் இவர்களே; மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலுடைய பிதாக்களின் வம்சத்தில் ஒவ்வொரு வம்சத்துக்கு ஒவ்வொரு பிரபுவாகிய பன்னிரண்டுபேரும் எண்ணினார்கள்.

எண் 1:45 இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களின் வம்சத்தில் இருபது வயதுள்ளவர்கள்முதல், இஸ்ரவேலில் யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்களாகிய எண்ணப்பட்ட பேர்கள் எல்லாரும்,

எண் 1:46 ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேராயிருந்தார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் முழுச் சபையாயிருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர்பேராக எண்ணித் தொகையேற்றுங்கள்" (எண் 1:2) என்று சொன்னார்.

மோசே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து இஸ்ரவேல் புத்திரரை எண்ணித் தொகையேற்றுகிறார். இந்த ஊழியத்தில் ஆரோனும் மோசேக்கு உதவியாகயிருக்கிறார். இஸ்ரவேலுடைய பிதாக்களின் வம்சத்தில் ஒவ்வொரு வம்சத்திற்கு ஒவ்வொரு பிரபு வீதமாக, பன்னிரண்டு பிரபுக்களும், இஸ்ரவேல் புத்திரரை எண்ணுகிறார்கள் (எண் 1:45).

இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களின் வம்சத்தில் இருபது வயதுள்ளவர்கள்முதல், இஸ்ரவேலில் யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்களாகிய எண்ணப்பட்ட பேர்கள் எல்லாரும், ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேராயிருந்தார்கள் (எண் 1:45,46).

எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர்கள் வெளியேறிய போது, யுத்தத்திற்குப் புறப்படத்தக்க புருஷர்களின் எண்ணிக்கை 600,000 ஆகும். (யாத் 12:37). முதலாவது கணக்கெடுப்பின்போது அவர்களுடைய தொகை 603,550 ஆகும். இரண்டாவது கணக்கெடுப்பின்போது அவர்களுடைய தொகை 601,730 ஆகும். 38 வருஷக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் 1,820 போர்வீரர்களை இழந்துபோனார்கள். (எண் 1:46=எண் 26:51).

இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்பட்ட இந்த சம்பவத்திற்கு, ஒரு சில மாதங்களுக்கு முன்பாக அவர்கள் ஏற்கெனவே எண்ணப்பட்டிருந்தார்கள். அப்போதிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய எண்ணிக்கையும், இப்போதிருக்கிற அவர்களுடைய எண்ணிக்கையும் ஒன்றுபோலுள்ளது.

"எண்ணப்பட்டவர்களின் தொகையில் சேர்ந்த இருபது வயது முதற்கொண்டு அதற்கு மேற்பட்ட ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேர்களில் ஒவ்வொரு தலைக்கு பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின்படி அரைச்சேக்கலாகிய பெக்கா என்னும் விழுக்காடு சேர்ந்தது" (யாத் 38:26).

மோசே இப்போது இஸ்ரவேல் புத்திரரை எண்ணும்போது, லேவி கோத்திரத்தாரை எண்ணவில்லை. கர்த்தர் லேவிகோத்திரத்தாரை எண்ணச்சொல்லவில்லை. அவர்கள் யுத்தத்திற்கு புறப்படவேண்டிய கோத்திரத்தாரல்ல. கர்த்தர் லேவியரை தம்முடைய ஊழியத்திற்கென்று வேறுபிரித்திருக்கிறார்.

மோசே லேவியரை எண்ணாமல், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரை எண்ணும்போது, அவர்களுடைய மொத்த எண்ணிக்கை மாறாமல் அப்படியே இருக்கிறது. லேவி கோத்திரத்தார் எண்ணப்படாவிட்டாலும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருடைய மொத்த எண்ணிக்கை குறைவுபடவில்லை.

கர்த்தருடைய ஊழியத்திற்காக ஒரு கோத்திரத்தார் பிரித்தெடுக்கப்பட்டாலும், இஸ்ரவேல் புத்திரரின் மொத்த எண்ணிக்கை குறையவில்லை. இது விசுவாசிகளாகிய நமக்கு ஒரு ஆவிக்குரிய சத்தியத்தை விளக்குகிறது. நாம் கர்த்தருக்காக நம்முடைய பொருளையோ, சம்பத்தையோ, நம்மையோ, நம்முடைய குடும்பத்தாரையோ ஒப்புக்கொடுக்கும்போது, நமக்கு ஒன்றும் குறைந்துபோகாது.

நாம் கர்த்தருடைய ஊழியத்திற்காக கொடுப்பது நமக்கு ஒருபோதும் இழப்பாகயிருக்காது. நாம் இழந்துபோனதை கர்த்தர் ஏதாவது ஒரு வழியில் நமக்கு திரும்பக்கொடுப்பார்.

லேவி கோத்திரத்தார்
எண் 1:47-54

எண் 1:47 லேவியர் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின்படியே, மற்றவர்களுடனே எண்ணப்படவில்லை.

எண் 1:48 கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 1:49 நீ லேவி கோத்திரத்தாரை மாத்திரம் எண்ணாமலும், இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே அவர்கள் தொகையை ஏற்றாமலும்,

எண் 1:50 லேவியரைச் சாட்சியின் வாசஸ்தலத்திற்கும், அதினுடைய சகல பணிமுட்டுகளுக்கும், அதிலுள்ள சமஸ்த பொருள்களுக்கும் விசாரிப்புக்காரராக ஏற்படுத்து; அவர்கள் வாசஸ்தலத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் சுமப்பார்களாக; அதினிடத்தில் ஊழியம் செய்து, வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கக்கடவர்கள்.

எண் 1:51 வாசஸ்தலம் புறப்படும்போது, லேவியர் அதை இறக்கிவைத்து, அது ஸ்தாபனம் பண்ணப்படும்போது, லேவியர் அதை எடுத்து நிறுத்தக்கடவர்கள்; அந்நியன் அதற்குச் சமீபத்தில் வந்தால் கொலை செய்யப்படக்கடவன்.

எண் 1:52 இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தங்கள் பாளயத்தோடும், தங்கள் தங்கள் சேனையின் கொடியோடும் கூடாரம் போடக்கடவர்கள்.

எண் 1:53 இஸ்ரவேல் புத்திரராகிய சபையின்மேல் கடுங்கோபம் வராதபடிக்கு லேவியர் சாட்சியின் வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கி, லேவியர் சாட்சியின் வாசஸ்தலத்தைக் காவல்காப்பார்களாக என்றார்.

எண் 1:54 கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடி எல்லாவற்றையும் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்.

இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரிலிருந்து லேவிகோத்திரத்தார் தனியாக வேறுபிரிக்கப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பொன் கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதை ஆராதித்தபோது, லேவி கோத்திரத்தார் அந்த விக்கிரகாராதனையில் பங்குபெறவில்லை. அவர்கள் கர்த்தர்மீது பக்தி வைராக்கியமாயிருந்தார்கள்.

கர்த்தர் பட்சத்திலிருக்கிறவர்கள் தனியாகப் பிரிந்து தன்னிடத்தில் வரவேண்டுமென்று மோசே சொன்னபோது, லேவி கோத்திரத்தார் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரிலிருந்து பிரிந்து, மோசேயினிடத்தில் கூடிவந்தார்கள்.

"பாளயத்தின் வாசலில் நின்று: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள்" *(யாத் 32:26).*

விக்கிரகாராதனையிலிருந்து தங்களை வேறுபிரித்துக்கொண்ட லேவிகோத்திரத்தாரை, கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக வேறுபிரிக்கிறார். தம்மை கனம்பண்ணின லேவிகோத்திரத்தாரை கர்த்தர் கனம்பண்ணுகிறார். தம்மை சேவிக்க ஒப்புக்கொடுத்த லேவிகோத்திரத்தாருக்கு, கர்த்தர் இன்னும் அதிகமேன்மையான ஊழியங்களைக் கொடுக்கிறார்.

இஸ்ரவேலின் ஆவிக்குரிய காரியங்களுக்கு லேவிகோத்திரத்தார் பொறுப்பானவர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் தங்களுடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண புறப்பட்டுப்போகிறார்கள். அது மாம்சப்பிரகாரமான யுத்தம். அது உலகப்பிரகாரமான யுத்தம்.

லேவி கோத்திரத்தாரோ இஸ்ரவேல் புத்திரருக்காக ஆவிக்குரிய யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் விக்கிரகாராதனைக்கு விரோதமாகவும், சாத்தானுடைய அந்தகார சக்திகளுக்கு விரோதமாகவும் ஆவிக்குரிய யுத்தங்களை மேற்கொள்கிறார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தையும், அதன் பொக்கிஷங்களையும் பராமரிப்பது லேவியருடைய ஊழியமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பாளயமிறங்கியிருக்கும்போதும், அங்கே பிரயாணம் மேற்கொள்ளும்போதும், ஆசரிப்புக்கூடாரத்தையும், பரிசுத்த பணிமுட்டுக்களையும் பராமரிப்பதும் சுமப்பதும் லேவியருடைய ஊழியமாகும்.

மோசே யுத்தத்திற்கு புறப்படத்தக்க இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுகிறார். ஆனால் லேவியர் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின்படியே, மற்றவர்களுடனே எண்ணப்படவில்லை *(எண் 1:47).*

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ லேவி கோத்திரத்தாரை மாத்திரம் எண்ணாமலும், இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே அவர்கள் தொகையை ஏற்றாமலும், லேவியரைச் சாட்சியின் வாசஸ்தலத்திற்கும், அதினுடைய சகல பணிமுட்டுகளுக்கும், அதிலுள்ள சமஸ்த பொருள்களுக்கும் விசாரிப்புக்காரராக ஏற்படுத்து (எண் 1:48-50) என்று சொல்லுகிறார்.

லேவியர்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் ஊழியக்காரர்கள். ஆகையினால் தேசத்தில் அவர்களுக்கு சுதந்தரவீதமும் பிரித்துக் கொடுக்கப்படவில்லை (எண் 1:47-51). லேவியரின் எண்ணிக்கையைப் பற்றி எண் *3:15-39*; எண் *26:62* ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

லேவியரைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. லேவி கோத்திரத்தாரைமாத்திரம் எண்ணாமலும், இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே அவர்கள் தொகையை ஏற்றாமலும் இருப்பாயாக.
2. லேவியரைச் சாட்சியின் வாசஸ்தலத்திற்கும், அதினுடைய சகல பணிமுட்டுகளுக்கும், அதிலுள்ள சமஸ்த பொருள்களுக்கும் விசாரிப்புக்காரராக ஏற்படுத்து; (எண் 1:50).
3. அவர்கள் வாசஸ்தலத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் சுமப்பார்களாக;
4. அதினிடத்தில் ஊழியம் செய்து, வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கக் கடவர்கள்.
5. வாசஸ்தலம் புறப்படும்போது, லேவியர் அதை இறக்கிவைக்கக்கடவர்கள். (எண் 1:51).
6. அது ஸ்தாபனம் பண்ணப்பட்டபோது, லேவியர் அதை எடுத்து நிறுத்தக்கடவர்கள்.
7. அந்நியன் அதற்குச் சமீபத்தில் வந்தால் கொலை செய்யப்படக்கடவன்.

கர்த்தர் லேவிபுத்திரருக்கு ஆசரிப்புக்கூடார ஊழியத்தை கொடுக்கிறார். அவர்கள் வாசஸ்தலத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும் சுமக்கவேண்டும்; அவர்கள் அதினிடத்தில் ஊழியம் செய்து, வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கவேண்டும் (எண் 1:50).

வாசஸ்தலம் புறப்படும்போது, லேவியர் அதை இறக்கிவைத்து, அது ஸ்தாபனம் பண்ணப்படும்போது, லேவியர் அதை எடுத்து நிறுத்தவேண்டும். அந்நியன் அதற்குச் சமீபத்தில் வந்தால் கொலை செய்யப்படக்கடவன் (எண் 1:51) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் பரிசுத்தமான காரியங்களை கனம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் மாத்திரமே, பரிசுத்தமான பணிமுட்டுக்களை பார்ப்பதற்கோ, தொடுவதற்கோ அனுமதிக்கப்படுகிறார்கள். மற்றவர்களுக்கு அதிலே அனுமதியில்லை.

இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கும்போது, லேவி புத்திரர் வாசஸ்தலத்தை சுற்றிலும் பாளயமிறங்கவேண்டும். அவர்களே ஆசரிப்புக்கூடாரத்திற்கு அருகாமையில் பாளமிறங்கியிருக்கவேண்டும்.

"இஸ்ரவேல் புத்திரராகிய சபையின்மேல் கடுங்கோபம் வராதபடிக்கு லேவியர் சாட்சியின் வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கி, லேவியர் சாட்சியின் வாசஸ்தலத்தைக் காவல்காப்பார்களாக" (எண் 1:53) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

லேவியர் ஆசரிப்புக்கூடாரத்திற்கு அருகாமையில் பாளயமிறங்கி, பரிசுத்தஸ்தலத்திலே ஊழியம் செய்வதற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கவேண்டும். லேவியரே சாட்சியின் வாசஸ்தலத்தை காவல் காக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். ஆசரிப்புக்கூடாரத்திற்கு அருகாமையில் அந்நியர்கள் வரக்கூடாது. பரிசுத்த ஸ்தலத்தைப் பாதுகாப்பது ஆசாரியரின் ஊழியம். அந்நியர்கள் அதை தீட்டுப்படுத்திவிடாதவாறு லேவியர்கள் காவல் காக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தங்கள் பாளயத்தோடும் தங்கள் தங்கள் சேனையின் கொடியோடும் கூடாரம் போடுவார்கள். லேவியரோ சாட்சியின் வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயமிறங்குவார்கள் (எண் 1:52,53).

இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தாரும், ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பாளயங்களில் தங்களுடைய கொடிகளோடு கூடாரம் போடவேண்டும் (எண் 1:52-53). ஆசாரியருக்கும், லேவியருக்கும் அவர்களுக்குரிய கொடிகள் உள்ளன. (எண் 2:17).

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் பன்னிரண்டு வெவ்வேறு கொடிகள் இருந்தன. கொடி என்பதற்கான எபிரெய வார்த்தை "தேகேல்" என்பதாகும். இது "தாகால்" என்னும் எபிரெய வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது (சங் 20:5; உன் 6:4,10)

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பரிசுத்த ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை புறஜாதியாரிடத்திலிருந்து வேறுபிரித்து, அவர்களை தமக்கு பரிசுத்த ஜனமாக தெரிந்தெடுத்திருக்கிறார். புறஜாதியார் மத்தியிலே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷமானவர்கள்.

கர்த்தர் லேவியரை இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் விசேஷமாய்க் கனம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருக்கு பரிசுத்த ஜனமாகயிருந்தாலும், அவர்களில் லேவிகோத்திரத்தார் கர்த்தருக்கு மிகவும் விசேஷமானவர்களாகயிருக்கிறார்கள்.

அவர்கள் சாட்சியின் வாசஸ்தலத்திற்கும், அதினுடைய சகல பணிமுட்டுக்களுக்கும், அதிலுள்ள சமஸ்த பொருள்களுக்கும் விசாரிப்புக்காரராக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணும்போது, லேவியரே வாசஸ்தலத்தையும் அதின் சகல பணிமுட்டுக்களையும் சுமக்கிறார்கள். அவர்கள் பாளயமிறங்கும்போது, லேவியரே அதை இறக்கி வைத்து, ஆசரிப்புக்கூடாரத்தை நிறுத்தி வைத்து ஸ்தாபனம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் பாளயமிறங்கியிருக்கும்போது, லேவியரே சாட்சியின் வாசஸ்தலத்தை சுற்றிலும் பாளயமிறங்கி, அதைக் காவல் காக்கிறார்கள்.

லேவி கோத்திரத்தாரை எண்ணித்தொகையேற்றவேண்டாம் என்று கர்த்தர் மோசேக்கு சொன்னார். அதன் பிரகாரம் லேவியர் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின்படியே, மற்றவர்களுடனே எண்ணப்படவில்லை (எண் 1:47). ஆனாலும் லேவியர்கள் பிற்காலத்தில் தங்களைத் தாங்களே எண்ணித்தொகையேற்றிக்கொள்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டிருக்கிற ஊழியத்தை செய்வதற்கு அவர்கள் தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடி எல்லாவற்றையும் இஸ்ரவேல் புத்திரர் செய்கிறார்கள் (எண் 1:54).

2 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள். அதன் பின்பு அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக சுற்றிலும் பாளயமிறங்குகிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்தாரும் எந்த இடத்தில் பாளயமிறங்கவேண்டுமென்று கர்த்தர் இந்த அதிகாரத்தில் நியமனம் பண்ணுகிறார். இது கர்த்தருடைய தெய்வீக நியமனம்.

இஸ்ரவேல் புத்திரர் எவ்வாறு, எங்கே பாளயமிறங்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லும் பொதுவான கட்டளை (எண் 2:1,2). ஆசரிப்புக்கூடாரத்திற்கு நான்கு திசைகளிலும் இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கவேண்டும். அவர்கள் எல்லோரும் நான்கு பாளயங்களாக பிரிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு பாளயத்திலும் மூன்று கோத்திரத்தார் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்திற்கு கீழ்ப்புறத்திலே யூதா, இசக்கார், செபுலோன் ஆகிய மூன்று கோத்திரத்தாரும் பாளயமிறங்குகிறார்கள் (எண் 2:3-9). ஆசரிப்புக்கூடாரத்திற்கு தென்புறத்திலே ரூபன், சிமியோன், காத் ஆகிய மூன்றுகோத்திரத்தாரும் பாளயமிறங்குகிறார்கள் (எண் 2:10-16).

ஆசரிப்புக்கூடாரத்தின் மேற்புறத்திலே எப்பிராயீம், மனாசே, பென்யமீன் ஆகிய மூன்று கோத்திரத்தாரும் பாளயமிறங்குகிறார்கள் (எண் 2:18-24). ஆசரிப்புக்கூடாரத்தின் வடபுறத்திலே தாண், ஆசேர், நப்தலி ஆகிய மூன்று கோத்திரத்தாரும் பாளயமிறங்குகிறார்கள் (எண் 2:25-31).

ஆசரிப்புக்கூடாரம் பாளயங்களின் நடுவிலே இருக்கிறது (எண் 2:17). இஸ்ரவேல் கோத்திரத்தாரின் பாளயங்களைப்பற்றி கர்த்தர் சொல்லும் கட்டளையின் முடிவுரை (எண் 2:32-34).

இஸ்ரவேல் புத்திரரின் பாளயம் எண் 2:1,2

எண் 2:1. கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

எண் 2:2. இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின் விருதாகிய தங்கள் தங்கள் கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களைப் போட்டு, ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளயமிறங்கக்கடவர்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பாளயமிறங்கும்போதும், அவர்கள் பிரயாணப்பட்டுப்போகும்போதும், கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கிற வரிசைப்பிரகாரம் பாளயமிறங்கவேண்டும். அதன் பிரகாரமாகவே அவர்கள் அணியணியாக புறப்பட்டுப்போகவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் வனாந்தரத்திலே கூடாரங்களிலே தங்கியிருக்கிறார்கள். அவர்கள் பிரயாணப்பட்டுப்போகும்போது தங்களுடைய கூடாரங்களையும் தங்களோடு பேர்த்தெடுத்துக்கொண்டு போகவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்களுடைய வம்சத்தின் விருதாகிய தங்கள் தங்கள் கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களைப் போடவேண்டும். ஒரு குறிப்பிட்ட கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் தங்கள் கூடாரங்களைப் போட்டு பாளயமிறங்கவேண்டும்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின் விருதாகிய தங்கள் தங்கள் கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களைப் போட்டு, ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளயமிறங்கக்கடவர்கள்" (எண் 2:1,2) என்று சொல்லுகிறார்.

விருது என்னும் வார்த்தைக்கு அடையாளம் என்று பொருள். இதற்கான எபிரெய வார்த்தை "ஒத்" என்பதாகும். இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக சுற்றிலும் பாளயமிறங்குகிறார்கள். அவர்கள் எல்லோரும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு அருகிலேயே பாளயமிறங்கியிருக்கவேண்டும்.

ஒரே கோத்திரத்தைச் சேர்ந்த இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஒருவரையொருவர் நன்றாய் அறிந்து வைத்திருப்பார்கள். அவர்களுக்குள் இயற்கையாகவே அன்பும், பாசமும் ஐக்கியமும் அதிகமாயிருக்கும்.

விசுவாசிகளாகிய நமக்குள் இயல்பாகவே ஏற்பட்டிருக்கிற உறவும், பாசமும், நேசமும், நம்முடைய ஆவிக்குரிய ஐக்கியத்தைப் பெலப்படுத்தவேண்டும். இதன் மூலமாக கிறிஸ்தவ சகோதர சிநேகம் உறுதிப்படவேண்டும்.

இஸ்ரவேல் கோத்திரத்தாரில் ஒவ்வொருவரும், பாளயத்திலே தன்னுடைய கூடாரம் எங்கே போடப்பட்டிருக்கிறது என்பதை அறிந்திருக்கவேண்டும். அவரவர் தன் தன் கூடாரத்தைக் காத்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒரு கொடியை நியமனம் செய்திருக்கிறார். இது அவர்கள் பிதாக்களுடைய வம்சத்தின் விருது என்று அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு கொடியும் எவ்வாறு வித்தியாசமாகயிருக்கிறது என்பது தெளிவாக தெரியவில்லை. ஒவ்வொரு கோத்திரத்திற்கும் வெவ்வேறு நிறமான கொடி இருக்கும் என்றும், அந்தக் கொடியிலே அந்தக் கோத்திரத்தின் பெயர் எழுதப்பட்டிருக்கும் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

பிரதான ஆசாரியன் தன்னுடைய மார்பிலே ஏபோத்தை தரித்திருப்பார். அந்த ஏபோத்திலே இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்தித்தாருடைய பெயர்களும் எழுதப்பட்டிருக்கும். அந்தப் பெயர்கள் கோத்திரங்களுடைய கொடிகளின் பெயர்களிலும் எழுதப்பட்டிருக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கொடியிலே விருதின் சித்திரமும் வரையப்பட்டிருக்கலாம். யூதாவின் கொடியிலே சிங்கத்தின் உருவமும், ரூபன் கோத்திரத்தாரின் கொடியிலே மனுஷனுடைய உருவமும், யோசேப்பு கோத்திரத்தாரின் கொடியிலே எருதின் உருவமும், தாண் கோத்திரத்தாரின் கொடியிலே கழுகின் உருவமும் வரையப்பட்டிருக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்தக் கருத்து எசேக்கியேலின் தரிசனத்தை ஆதாரமாக வைத்து சொல்லப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொரு கோத்திரத்தாரும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக சுற்றிலும் பாளயமிறங்கவேண்டும். ஆசரிப்புக்கூடாரம் அவர்கள் நடுவிலே இருக்கவேண்டும்.

ஒரு சேனைக்கு நடுவிலே சேனைத்தளபதியின் கூடாரம் போடப்பட்டிருக்கும். அதுபோலவே இஸ்ரவேல் புத்திரருடைய பாளயங்களின் நடுவிலே ஆசரிப்புக்கூடாரம் போடப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே அவர்களுக்கு சேனையின் அதிபதியாகயிருக்கிறார்.

ஒரு சேனையில், போர்வீரர்கள் எல்லோரும் தங்கள் சேனாபதிக்கு பாதுகாப்பாயிருப்பார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் கூடாரம்போட்டு அதைக் காவல் காக்கிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்தின் நான்கு திசைகளிலும் லேவியர் கூடாரம் போட்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக சுற்றிலும் பாளயமிறங்கியிருந்தாலும், அவர்கள் ஆசரிப்புக்கூடாத்திற்கு அருகாமையில் கூடாரம் போடாமல், அதற்கு தூரத்திலே கூடாரம் போடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர்மீது பயபக்தியாயிருக்கிறார்கள். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்கிறார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்திற்கும், இஸ்ரவேல் புத்திரரின் கூடாரங்களுக்கும் இடையிலே சுமார் இரண்டாயிரம் முழம் தூரம் இருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இரண்டாயிரம் முழம் என்பது சுமார் ஆயிரம் மீட்டர் ஆகும். யோசு 3:4-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளை ஆதாரமாக வைத்து வேதபண்டிதர்கள் இந்தக் கருத்தை உறுதிபண்ணுகிறார்கள்.

"உங்களுக்கும் அதற்கும் இடையிலே இரண்டாயிரம் முழத் தூரமான இடம் இருக்க வேண்டும்; நீங்கள் நடக்கவேண்டிய வழியை அறியும்படிக்கு, அதற்குச் சமீபமாய் வராதிருப்பீர்களாக; இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோகவில்லை என்று சொல்லி கட்டளையிட்டார்கள்" (யோசு 3:4).

பாளயங்களின் விவரம் எண் 2:3-34

எண் 2:3. யூதாவின் பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயமிறங்கவேண்டும்; அம்மினதாபின் குமாரனாகிய நகசோன் யூதா சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:4. எண்ணப்பட்ட அவனுடைய சேனை எழுபத்து நாலாயிரத்து அறுநூறு பேர்.

எண் 2:5. அவன் அருகே இசக்கார் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; சூவாரின் குமாரன் நெதனெயேல் இசக்கார் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:6. எண்ணப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர்.

எண் 2:7. அவன் அருகே செபுலோன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; ஏலோனின் குமாரனாகிய எலியாப் செபுலோன் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:8. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர்.

எண் 2:9. எண்ணப்பட்ட யூதாவின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நானூறுபேர்; இவர்கள் பிரயாணத்திலே முதற்பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

எண் 2:10. ரூபனுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் தென்புறத்தில் பாளயமிறங்கவேண்டும்; சேதேயூரின் குமாரனாகிய எலிசூர் ரூபன் சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:11. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தாறாயிரத்து ஐந்நூறுபேர்.

எண் 2:12. அவன் அருகே சிமியோன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; சூரிஷதாயின் குமாரனாகிய செலூமியேல் சிமியோன் சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:13. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்தொன்பதினாயிரத்து முந்நூறுபேர்.

எண் 2:14. அவன் அருகே காத் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; தேகுவேலின் குமாரனாகிய எலியாசாப் காத் சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:15. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து அறுநூற்று ஐம்பதுபேர்.

எண் 2:16. எண்ணப்பட்ட ரூபனின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து நானூற்று ஐம்பதுபேர்; இவர்கள் பிரயாணத்தில் இரண்டாம் பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

எண் 2:17. பின்பு ஆசரிப்புக் கூடாரம் லேவியரின் சேனையோடே பாளயங்களின் நடுவே பிரயாணப்பட்டுப் போகவேண்டும்; எப்படிப் பாளயமிறங்குகிறார்களோ, அப்படியே அவரவர் தங்கள் வரிசையிலே தங்கள் கொடிகளோடே பிரயாணமாய்ப் போகக்கடவர்கள்.

எண் 2:18. எப்பிராயீமுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் மேல்புறத்தில் இறங்கவேண்டும், அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமா எப்பிராயீமின் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:19. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.

எண் 2:20. அவன் அருகே மனாசே கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; பெதாசூரின் குமாரனாகிய கமாலியேல் மனாசே சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:21. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் முப்பத்தீராயிரத்து இருநூறுபேர்.

எண் 2:22. அவன் அருகே பென்யமீன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; கிதெயோனின் குமாரனாகிய அபீதான் பென்யமீன் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:23. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் முப்பத்தையாயிரத்து நானூறுபேர்.

எண் 2:24. எண்ணப்பட்ட எப்பிராயீமின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து எண்ணாயிரத்து நூறு பேர்; இவர்கள் பிரயாணத்தில் மூன்றாம் பாளமாய்ப் போகக்கடவர்கள்.

எண் 2:25. தாணுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் வடபுறத்தில் இறங்கவேண்டும்; அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேர் தாண் வம்சத்திற்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:26. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் அறுபத்தீராயிரத்து எழுநூறுபேர்.

எண் 2:27. அவன் அருகே ஆசேர் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; ஓகிரானின் குமாரனாகிய பாகியேல் ஆசேர் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:28. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர்.

எண் 2:29. அவன் அருகே நப்தலி கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; ஏனானின் குமாரனாகிய அகீரா நப்தலி சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்.

எண் 2:30. அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேர்.

எண் 2:31. எண்ணப்பட்ட தாணின் பாளயத்தார் எல்லாரும் இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூறுபேர்; இவர்கள் தங்கள் கொடிகளோடே பின்பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

எண் 2:32. இவர்களே தங்கள் தங்கள் பிதாக்களின் வம்சத்தின்படி இஸ்ரவேல் புத்திரரில் எண்ணப்பட்டவர்கள் பாளயங்களிலே தங்கள் தங்கள் சேனைகளின்படியே எண்ணப்பட்டவர்கள் எல்லாரும் ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேராயிருந்தார்கள்.

எண் 2:33. லேவியரோ, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடி, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே எண்ணப்படவில்லை.

எண் 2:34. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்து, தங்கள் தங்கள் கொடிகளின்கீழ் பாளயமிறங்கி, தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படியே பிரயாணப்பட்டுப் போனார்கள்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டு தங்கள் கூடாரங்களைப் போட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பாளயத்திலும் மூன்று கோத்திரத்தார் சேர்ந்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பிரயாணப்பட்டுப்போகும்போது, ஒவ்வொரு பாளயத்திலுமுள்ள மூன்று கோத்திரத்தாரில், ஒரு கோத்திரத்தார் முன்பாகவும், மற்ற இரண்டு கோத்திரத்தாரும் அவர்களுக்கு பின்பாகவும் புறப்பட்டுப்போவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கூடாரங்களைப்போடவேண்டிய இடங்களை கர்த்தர் தாமே நியமனம் செய்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கசப்பான உணர்வோ, போட்டிகளோ, பொறாமைகளோ, வாக்குவாதங்களோ, சண்டைகளோ ஏற்படக்கூடாது. அவர்கள் பன்னிரண்டு கோத்திரங்களாக பிரிந்திருந்தாலும், அவர்கள் எல்லோருமே கர்த்தருடைய ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குள் ஒற்றுமையாயும் ஐக்கியமாயும் இருக்கவேண்டும்.

கர்த்தர் மற்ற விசுவாசிகளை நம்மைவிட அதிகமாக ஆசீர்வதிப்பார். நம்முடைய ஊழியங்களைவிட மற்றவர்களுடைய ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெறலாம். கர்த்தர் நம்மை உயர்த்துவதைவிட, வேறு சிலரை நம்மைவிட அதிகமாக உயர்த்தியிருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் மற்றவர்கள்மீது பொறாமைப்படக்கூடாது. கர்த்தர் நம்மை எந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறாரோ அந்த ஸ்தானத்தில் நாம் திருப்தியாயிருக்கவேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய கிரியைகளுக்கும் கீழ்ப்படியவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் எந்த இடத்திலே தங்கள் கூடாரங்களைப் போடவேண்டுமென்று கர்த்தர் தீர்மானம்பண்ணுகிறார். கர்த்தருடைய வார்த்தை ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து புறப்பட்டு வருகிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கும் கர்த்தர் ஒரு விசேஷித்த ஸ்தானத்தையும், ஊழியத்தையும் நியமித்திருக்கிறார். தாழ்மையான இடமே கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற இடம். மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதே கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியம்.

"ஒருவனால் கலியாணத்துக்கு நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே; உன்னிலும் கனமுள்ளவன் ஒருவேளை அவனால் அழைக்கப்பட்டிருப்பான். அப்பொழுது உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து: இவருக்கு இடங்கொடு என்பான்; அப்பொழுது நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற்குப் போகவேண்டியதாயிருக்கும். நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, போய், தாழ்ந்த இடத்தில் உட்காரு அப்பொழுது உன்னை அழைத்தவன் வந்து: சிநேகிதனே, உயர்ந்த இடத்தில் வாரும் என்று சொல்லும்போது, உன்னுடனே கூடப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனமுண்டாகும்" (லூக் 14:8-10).

"உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்" (மத் 20:26-28).

கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம் தாழ்மையான இடமே கனமுள்ள இடமாகயிருக்கிறது. மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதே கர்த்தருடைய பார்வையில் கனமுள்ள ஊழியமாயிருக்கிறது.

ஒவ்வொரு கோத்திரத்திற்கும் கர்த்தர் ஒருவனை சேனாபதியாக நியமித்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரை எண்ணித்தொகையேற்றும்போது ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒருவன் மோசே, ஆரோன் ஆகியோரோடு கூடயிருக்கவேண்டுமென்று கர்த்தர் சொன்னார். அவர்கள் தங்கள் தங்கள் பிதாக்களின் வம்சத்திற்கு தலைவராயிருக்க வேண்டும் என்றும் கர்த்தர் சொன்னார் (எண் 1:4-16). கர்த்தர் சொன்ன தலைவர்களே இப்போது, அந்தந்த கோத்திரத்தாருக்கு சேனாபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களில், பிரபுக்களாகவும், இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்கு தலைவர்களாகவும் இருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருடைய சேனாபதிகளின் பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அநேகருடைய பெயர்களில் "எல்" என்னும் வார்த்தை சேர்ந்திருக்கிறது. "எல்" என்னும் எபிரெய வார்த்தைக்கு "தேவன்" என்று பொருள்.

நெதனெயேல் என்னும் பெயருக்கு "தேவனுடைய ஈவு" என்று பொருள். எலியாப் என்னும் பெயருக்கு "என் தேவன் பிதாவாயிருக்கிறார்" என்று பொருள். எலிசூர் என்னும் பெயருக்கு "என் தேவன் கன்மலையாகயிருக்கிறார்" என்று பொருள். செலுமியேல் என்னும் பெயருக்கு "தேவன் என் சமாதானமாயிருக்கிறார்" என்று பொருள். எலியாசாப் என்னும் பெயருக்கு "தேவன் அதிகமாய்க் கொடுத்திருக்கிறார்" என்று பொருள். எலிஷாமா என்னும் பெயருக்கு "தேவன் என் விண்ணப்பத்தைக் கேட்டார்" என்று பொருள். கமாலியேல் என்னும் பெயருக்கு "தேவன் என் வெகுமதி" என்று பொருள். பாகியேல் என்னும் பெயருக்கு "தேவன் என்னை சந்தித்தார்" என்று பொருள்.

ஒரே கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களைப்போட்டவர்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவுக்காரராயிருக்கிறார்கள். யூதா, இசக்கார், செபுலோன் ஆகிய மூன்றுபேரும் லேயாளின் மூன்று இளைய குமாரர்கள். இவர்கள் எல்லோரும் ஒரே பாளயத்தில் தங்கள் கூடாரங்களைப் போட்டிருக்கிறார்கள்.

இசக்காரும் செபுலோனும் யூதாவின் கீழ் இருப்பதற்காக மனவேதனைப்படவில்லை. அவர்கள் யூதாவின் இளைய சகோதரர்களாயிருக்கிறார்கள். ரூபனும் சிமியோனும் யூதாவின் கீழ் இருக்க சம்மதிக்கமாட்டார்கள். ஆகையினால் யாக்கோபின் மூத்த குமாரனாகிய ரூபன் ஒரு பாளயத்திற்கு தலைவனாக நியமிக்கப்பட்டிருக்கிறான். சிமியோன் அவனுக்கு கீழே இருக்க சம்மதிப்பான்.

காத் லேயாளின் அடிமைப்பெண்ணாகிய சில்பாளின் குமாரன். இவன் லேவிக்கு பதிலாக ரூபனோடு சேர்க்கப்பட்டிருக்கிறான்.

எப்பிராயீம் மனாசே, பென்மீன் ஆகியோர் ராகேலின் பிள்ளைகள். தாண் பில்காளின் மூத்த குமாரன். இவன் அடிமைப்பெண்ணின் குமாரனாகயிருந்தாலும் ஒரு பாளயத்திற்கு தலைவனாக நியமிக்கப்பட்டிருக்கிறான். தாண் தன்னுடைய ஜனங்களை நியாயம் விசாரிப்பான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோரும் தங்களுக்குள் போட்டிகள், பொறாமைகள், வாக்குவாதங்கள், சண்டைகள் எதுவுமில்லாமல் சமாதானமாயும், ஒற்றுமையாயும், ஐக்கியமாயும் இருக்கவேண்டும் என்பதற்காக, கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, இஸ்ரவேல் கோத்திரத்தார் ஒவ்வொருவரும் தங்கள் கூடாரங்களைப்போட வேண்டிய இடங்களை தீர்மானம் செய்திருக்கிறார்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்குள்ளே, யூதாகோத்திரத்தாருக்கு கர்த்தர் அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்கிறார். மற்ற கோத்திரத்தாரைவிட யூதாகோத்திரத்தாரை அதிகமாய்க் கனம்பண்ணுகிறார். அவர்கள் சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயமிறங்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டுப்போகும்போது, யூதாகோத்திரத்தார் பிரயாணத்திலே முதற்பாளயமாக புறப்பட்டுப்போகிறார்கள்.

யூதாவின் பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயமிறங்கவேண்டும்; அம்மினதாபின் குமாரனாகிய நகசோன் யூதா சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். எண்ணப்பட்ட அவனுடைய சேனை எழுபத்து நாலாயிரத்து அறுநூறு பேர் (எண் 2:3,4).

எண்ணப்பட்ட யூதாவின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நானூறுபேர்; இவர்கள் பிரயாணத்திலே முதற்பாளயமாய்ப் போகக்கடவர்கள் (எண் 2:9).

யூதாவின் பாளயத்தில் மூன்று கோத்திரத்தார் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய பிரமாணம் வருமாறு :

1. யூதாவின் பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயமிறங்க வேண்டும் (எண் 2:3, எண் 10:14).

2. அம்மினதாபின் குமாரனாகிய நகசோன் யூதா சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:3-4).

3. யூதா கோத்திரத்துக்கு அருகே இசக்கார் கோத்திரத்தார் பாளயமிறங்க வேண்டும் (எண் 2:5; எண் 10:15).

4. நெதனெயேல் இசக்கார் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:5,6).

5. யூதா மற்றும் இசக்கார் கோத்திரத்துக்கு கிழக்குப்புறமாக செபுலோன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:7).

6. எலியாப் செபுலோன் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:7,8; எண் 10:16).

7. யூதாவின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நானூறுபேர் (எண் 2:9; எண் 10:14).

8. இவர்கள் பிரயாணத்திலே முதற் பாளயமாய்ப் போகக்கடவர்கள் (எண் 2:9).

யூதா கோத்திரத்தாருக்கு அவன் அருகே இசக்கார் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; சூவாரின் குமாரன் நெதனெயேல் இசக்கார் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். எண்ணப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர் (எண் 2:5,6).

இசக்கார் கோத்திரத்தாருக்கு அருகே செபுலோன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; ஏலோனின் குமாரனாகிய எலியாப் செபுலோன் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர் (எண் 2:7,8).

ரூபனுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் தென்புறத்தில் பாளயமிறங்கவேண்டும்; சேதேயூரின் குமாரனாகிய எலிசூர் ரூபன் சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தாறாயிரத்து ஐந்நூறுபேர் (எண் 2:10,11).

ரூபன் கோத்திரத்தாருக்கு அருகே சிமியோன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; சூரிஷதாயின் குமாரனாகிய செலூமியேல் சிமியோன் சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்தொன்பதினாயிரத்து முந்நூறுபேர் (எண் 2:12,13).

சிமியோன் கோத்திரத்தாருக்கு அவன் அருகே காத் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; தேகுவேலின் குமாரனாகிய எலியாசாப் காத் சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து அறுநூற்று ஐம்பதுபேர் (எண் 2:14,15).

எண்ணப்பட்ட ரூபனின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து நானூற்று ஐம்பதுபேர்; இவர்கள் பிரயாணத்தில் இரண்டாம் பாளயமாய்ப் போகக்கடவர்கள் (எண் 2:16).

ரூபனுடைய பாளயத்தில் மூன்று கோத்திரத்தார் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய பிரமாணம் வருமாறு :

1. ரூபனுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் தென்புறத்தில் பாளயமிறங்க வேண்டும் (எண் 2:10; எண் 10:18).

2. எலிசூர் ரூபன் சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:10-11).

3. ரூபன் கோத்திரத்தாருக்கு தென்புறமாக சிமியோன் கோத்திரத்தார் பாளயமிறங்க வேண்டும் (எண் 2:12; எண் 10:19).

4. செலூமியேல் சிமியோன் சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:12-13).

5. சிமியோன் கோத்திரத்தாருக்கு தென்புறமாக காத் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:14; எண் 10:20).

6. எலியாசாப் காத் சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:14,15).

7. ரூபனின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து நானூற்று ஐம்பதுபேர் (எண் 2:16).

8. இவர்கள் பிரயாணத்தில் இரண்டாம் பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

பின்பு ஆசரிப்புக் கூடாரம் லேவியரின் சேனையோடே பாளயங்களின் நடுவே பிரயாணப்பட்டுப் போகவேண்டும்; எப்படிப் பாளயமிறங்குகிறார்களோ, அப்படியே அவரவர் தங்கள் வரிசையிலே தங்கள் கொடிகளோடே பிரயாணமாய்ப் போகக்கடவர்கள் (எண் 2:17).

இஸ்ரவேல் புத்திரர் பிரயாணமாய்ப் போகவேண்டிய விவரம் வருமாறு :

1. ஆசரிப்புக் கூடாரம் லேவியரின் சேனையோடே பாளயங்களின் நடுவே பிரயாணப்பட்டுப் போகவேண்டும் (எண் 2:17; எண் 10:17)

2. எப்படிப் பாளயமிறங்குகிறார்களோ, அப்படியே அவரவர் தங்கள் வரிசையிலே தங்கள் கொடிகளோடே பிரயாணமாய்ப் போகக்கடவர்கள். (எண் 2:17; எண் 10:17)

லேவியரின் பல பாளயங்களில் அவர்களுக்குரிய கொடிகள் இருந்தன. (எண் 1:52)

எப்பிராயீமுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் மேல்புறத்தில் இறங்கவேண்டும், அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமா எப்பிராயீமின் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர் (எண் 2:18,19).

எப்பிராயீம் கோத்திரத்தாருக்கு அருகே மனாசே கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; பெதாசூரின் குமாரனாகிய கமாலியேல் மனாசே சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் முப்பத்தீராயிரத்து இருநூறுபேர் (எண் 2:20,21).

மனாசே கோத்திரத்தாருக்கு அருகே பென்யமீன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; கீதெயோனின் குமாரனாகிய அபீதான் பென்யமீன் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் முப்பத்தையாயிரத்து நானூறுபேர் (எண் 2:22,23).

எண்ணப்பட்ட எப்பிராயீமின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து எண்ணாயிரத்து நூறு பேர்; இவர்கள் பிரயாணத்தில் மூன்றாம் பாளயமாய்ப் போகக்கடவர்கள் (எண் 2:24).

எப்பிராயீமின் பாளயத்தில் மூன்று கோத்திரத்தார் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய பாளயங்களைப்பற்றிய பிரமாணம் வருமாறு :

1. எப்பிராயீமுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் மேல்புறத்தில் இறங்கவேண்டும் (எண் 2:18; எண் 10:22).

2. எலிஷாமா எப்பிராயீமின் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:18-19).

3. எப்பிராயீமுடைய பாளயத்துக்கு மேல்புறத்தில் மனாசே கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:20; எண் 10:23).

4. கமாலியேல் மனாசே சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:20-21).

5. மனாசே கோத்திரத்தாருடைய பாளயத்துக்கு மேல்புறத்தில் பென்யமீன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:22; எண் 10:23).

6. அபீதான் பென்யமீன் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:22-23).

7. எப்பிராயீமின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து எண்ணாயிரத்து நூறு பேர் (எண் 2:24).

8. இவர்கள் பிரயாணத்தில் மூன்றாம் பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

தாணுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் வடபுறத்தில் இறங்கவேண்டும்; அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேர் தாண் வம்சத்திற்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் அறுபத்திரண்டாயிரத்து எழுநூறுபேர் (எண் 2:25,26).

தாண் கோத்திரத்தாருக்கு அருகே ஆசேர் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; ஓகிரானின் குமாரனாகிய பாகியேல் ஆசேர் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர் (எண் 2:27,28).

ஆசேர் கோத்திரத்தாருக்கு அருகே நப்தலி கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; ஏனானின் குமாரனாகிய அகீரா நப்தலி சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேர் (எண் 2:29,30).

எண்ணப்பட்ட தாணின் பாளயத்தார் எல்லாரும் இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூறுபேர்; இவர்கள் தங்கள் கொடிகளோடே பின்பாளயமாய்ப் போகக்கடவர்கள் (எண் 2:31).

தாணுடைய பாளயத்தில் மூன்று கோத்திரத்தார் இருக்கிறார்கள். அவர்களுடைய பாளயங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. தாணுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் வடபுறத்தில் இறங்கவேண்டும் (எண் 2:25, 10:25).

2. அகியேசேர் தாண் வம்சத்திற்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:25-26).

3. தாண் கோத்திரத்தாரின் பாளயத்துக்கு வடபுறத்தில் ஆசேர் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:27; எண் 10:26).

4. பாகியேல் ஆசேர் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:27-28).

5. ஆசேர் கோத்திரத்தாரின் பாளயத்துக்கு அருகே நப்தலி கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:29; எண் 10:27).

6. அகீரா நப்தலி சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:29-30).

7. தாணின் பாளயத்தார் எல்லாரும் இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூறுபேர் (எண் 2:31).

8. இவர்கள் தங்கள் கொடிகளோடே பின்பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

இவர்களே தங்கள் தங்கள் பிதாக்களின் வம்சத்தின்படி இஸ்ரவேல் புத்திரரில் எண்ணப்பட்டவர்கள் பாளயங்களிலே தங்கள் தங்கள் சேனைகளின்படியே எண்ணப்பட்டவர்கள் எல்லாரும் ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேராயிருந்தார்கள் (எண் 2:32).

3. எப்பிராயீமுடைய பாளயத்துக்கு மேல்புறத்தில் மனாசே கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:20; எண் 10:23).

4. கமாலியேல் மனாசே சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:20-21).

5. மனாசே கோத்திரத்தாருடைய பாளயத்துக்கு மேல்புறத்தில் பென்யமீன் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:22; எண் 10:23).

6. அபீதான் பென்யமீன் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:22-23).

7. எப்பிராயீமின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே இலட்சத்து எண்ணாயிரத்து நூறு பேர் (எண் 2:24).

8. இவர்கள் பிரயாணத்தில் மூன்றாம் பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

தாணுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் வடபுறத்தில் இறங்கவேண்டும்; அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேர் தாண் வம்சத்திற்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் அறுபத்திரண்டாயிரத்து எழுநூறுபேர் (எண் 2:25,26).

தாண் கோத்திரத்தாருக்கு அருகே ஆசேர் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; ஒகிரானின் குமாரனாகிய பாகியேல் ஆசேர் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர் (எண் 2:27,28).

ஆசேர் கோத்திரத்தாருக்கு அருகே நப்தலி கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும்; ஏனானின் குமாரனாகிய அகீரா நப்தலி சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன். அவனுடைய சேனையில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேர் (எண் 2:29,30).

எண்ணப்பட்ட தாணின் பாளயத்தார் எல்லாரும் இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூறுபேர்; இவர்கள் தங்கள் கொடிகளோடே பின்பாளயமாய்ப் போகக்கடவர்கள் (எண் 2:31).

தாணுடைய பாளயத்தில் மூன்று கோத்திரத்தார் இருக்கிறார்கள். அவர்களுடைய பாளயங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. தாணுடைய பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் வடபுறத்தில் இறங்கவேண்டும் (எண் 2:25, 10:25).

2. அகியேசேர் தாண் வம்சத்திற்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:25-26).

3. தாண் கோத்திரத்தாரின் பாளயத்துக்கு வடபுறத்தில் ஆசேர் கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:27; எண் 10:26).

4. பாகியேல் ஆசேர் சந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:27-28).

5. ஆசேர் கோத்திரத்தாரின் பாளயத்துக்கு அருகே நப்தலி கோத்திரத்தார் பாளயமிறங்கவேண்டும் (எண் 2:29; எண் 10:27).

6. அகீரா நப்தலி சந்ததியாருக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன் (எண் 2:29-30).

7. தாணின் பாளயத்தார் எல்லாரும் இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூறுபேர் (எண் 2:31).

8. இவர்கள் தங்கள் கொடிகளோடே பின்பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

இவர்களே தங்கள் தங்கள் பிதாக்களின் வம்சத்தின்படி இஸ்ரவேல் புத்திரரில் எண்ணப்பட்டவர்கள் பாளயங்களிலே தங்கள் தங்கள் சேனைகளின்படியே எண்ணப்பட்டவர்கள் எல்லாரும் ஆறுலட்சத்து மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேராயிருந்தார்கள் (எண் 2:32).

லேவியரோ, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடி, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே எண்ணப்படவில்லை (எண் 2:33).

இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக சுற்றிலும் ஐந்து பிரதான பாளயங்களாக பாளயமிறங்கியிருக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. லேவியரின் பாளயத்தின் நான்கு பிரிவுகள் - ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலும் பாளயமிறங்க வேண்டும். (எண் 2:17) சூரியன் உதிக்கும் கீழ்புறத்திலே ஆசாரியரின் பாளயம் இருக்கவேண்டும் (எண் 3:38) கோகாத் புத்திரர் தென்புறமான பக்கத்திலும் (எண் 3:29-30), கெர்சோனியர் மேற்புறமான பக்கத்திலும் (எண் 3:23-24), மெராரியர் வடபுறமான பக்கத்திலும் (எண் 3:35) பாளயமிறங்கவேண்டும்.

2. யூதாவின் பாளயத்துக் கொடியையுடைய சேனைகள், ஆசாரியருக்கு அடுத்த படியாக, சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயமிறங்க வேண்டும்; இந்தப் பிரிவில் யூதா, இசக்கார், செபுலோன் ஆகிய கோத்திரத்தார் இருப்பார்கள் (எண் 2:3-9).

3. ரூபன் பாளயத்துக் கொடியையுடைய சேனைகள், கோகாத்தியருக்கு அடுத்த படியாக, தென்புறமான பக்கத்திலே பாளயமிறங்க வேண்டும்; இந்தப் பிரிவில் ரூபன், சிமியோன், காத் ஆகிய கோத்திரத்தார் இருப்பார்கள் (எண் 2:10-16).

4. எப்பிராயீம் பாளயத்துக் கொடியையுடைய சேனைகள், கெர்சோனியருக்கு அடுத்தபடியாக, மேற்புறமான பக்கத்திலே பாளயமிறங்க வேண்டும்; இந்தப் பிரிவில் எப்பிராயீம், மனாசே, பென்யமீன் ஆகிய கோத்திரத்தார் இருப்பார்கள் (எண் 2:18-24).

5. தாண் பாளயத்துக் கொடியையுடைய சேனைகள், மெராரியருக்கு அடுத்த படியாக, வடபுறமான பக்கத்திலே பாளயமிறங்கவேண்டும்; இந்தப் பிரிவில் தாண், ஆசேர், நப்தலி ஆகிய கோத்திரத்தார் இருப்பார்கள் (எண் 2:25-31).

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்து, தங்கள் தங்கள் கொடிகளின் கீழ் பாளயமிறங்கி, தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படியே பிரயாணப்பட்டுப் போகிறார்கள் (எண் 2:34).

கர்த்தர் யூதாகோத்திரத்தாரை அதிகமாய்க் கனம்பண்ணுகிறார். யூதாவின் பாளயத்துக் கொடியையுடைய சேனைகள் சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயமிறங்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள். யூதாவின் பாளயத்தார் எல்லாரும் பிரயாணத்திலே முதற்பாளயமாய் புறப்பட்டுப்போகிறார்கள்.

மற்ற கோத்திரத்தாரைவிட யூதாகோத்திரத்தார் அதிகமான எண்ணிக்கையிலிருக்கிறார்கள் என்பதற்காக கர்த்தர் அவர்களுக்கு விசேஷமான சிலாக்கியங்களைக் கொடுக்கவில்லை. கர்த்தர் எண்ணிக்கையின் அடிப்படையில் யாரையும் கனம்பண்ணுகிறவரல்ல.

யூதாகோத்திரத்திலிருந்து நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வந்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் நிமித்தமாகவே யூதாகோத்திரத்தாருக்கு கனமும், மேன்மையும் கிடைத்திருக்கிறது.

சமுதாயத்தில் நாம் உயர்ந்திருக்கிறோம் என்றால் அதற்கு நம்முடைய சுயபலமோ, சுயபுத்தியோ அல்லது நம்முடைய ஐசுவரியமோ காரணமல்ல. இயேசுகிறிஸ்துவினால் மாத்திரமே நமக்கு கனமும், உயர்வும், மேன்மையும் கிடைக்கிறது.

யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்களில் யூதாவே முதலாவதாக ஆசீர்வதிக்கப்படுகிறார். அவர் யாக்கோபின் மூத்த குமாரனல்ல. ஆனாலும் கர்த்தர் யூதாவை விசேஷமாய் ஆசீர்வதிக்கிறார். யூதாவே தெய்வீக ஆசீர்வாதங்களுக்கு முதன்மையானவராயிருக்கிறார்.

கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட யூதா, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு ஆசீர்வாதமாயிருக்கவேண்டும். அவர்களுக்கு முன்பாக நற்சாட்சியுள்ளவர்களாக ஜீவிக்கவேண்டும். யூதா அவர்களுக்கு முன்பாக புறப்பட்டுப்போகவேண்டும்.

லேவி கோத்திரத்தார் ஆசரிப்புக்கூடாரத்திற்கு அருகாமையில் பாளயமிறங்குகிறார்கள். கர்த்தருடைய ஆசரிப்புக் கூடாரம் லேவியரின் சேனையோடே பாளயங்களின் நடுவே பிரயாணப்பட்டுப் போகவேண்டும்; இஸ்ரவேல் கோத்திரத்தார் எப்படிப் பாளயமிறங்குகிறார்களோ, அப்படியே அவரவர் தங்கள் வரிசையிலே தங்கள் கொடிகளோடே பிரயாணமாய்ப் போகவேண்டும் (எண் 1:17).

லேவி கோத்திரத்தார் ஆசரிப்புக்கூடாரத்தைப் பாதுகாக்கவேண்டும். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் லேவிகோத்திரத்தாரை பாதுகாக்கவேண்டும். ஒருதேசத்தின் சட்ட திட்டங்கள், இயேசுகிறிஸ்துவின் ஊழியத்திற்கும், சபையின் ஆராதனைக்கும், ஆவிக்குரிய காரியங்களுக்கும் பாதுகாப்பாயிருக்க வேண்டும்.

தாண் கோத்திரத்தார் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வடபுறத்தில், பாளயமிறங்குகிறார்கள். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டுப்போகும்போது, தாண் கோத்திரத்தார் தங்கள் கொடிகளோடே பின்பாளயமாக புறப்பட்டுப்போகவேண்டும் (எண் 2:31).

இஸ்ரவேல் கோத்திரத்தாரில், யூதாகோத்திரத்தாரே அதிக எண்ணிக்கையுள்ளவர்களாயிருக்கிறார்கள். யூதாவுக்கு அடுத்தபடியாக தாண் கோத்திரத்தார் அதிக எண்ணிக்கையிலிருக்கிறார்கள். யூதாகோத்திரத்தார் முதற்பாளயமாக முன்னால் புறப்பட்டுப்போகிறார்கள். தாண் கோத்திரத்தார் பின்பாளயமாக, பின்னால் புறப்பட்டு வருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டுப்போகும்போது, முன்னால் போகிறவர்களும் பெலமுள்ளவர்களாகயிருக்கவேண்டும். பின்னால் வருகிறவர்களும் பெலமுள்ளவர்களாகயிருக்கவேண்டும். சத்துருக்கள் முன்னால் வந்து தாக்குவதற்கு வாய்ப்பு இருப்பதுபோலவே, அவர்கள் பின்புறமாக வந்து தாக்குவதற்கும் வாய்ப்புள்ளது. ஆகையினால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் முன்பாளயத்தையும் பின்பாளயத்தையும் பெலமுள்ளதாக வைத்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் பதினாறு பாளயங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஆசாரியரின் பாளயம் (எண் 3:38)

2. கோகாத் புத்திரரின் பாளயம் (எண் 3:29) = 8,600பேர்

3. கெர்சோனியரின் பாளயம் (எண் 3:23) = 7,500பேர்

4. யூதாவின் பாளயம் (எண் 3:35) = 6,200 பேர்

5. யூதாவின் பாளயம் (எண் 2:3-4) = 74,600 பேர்

6. இசக்காரின் பாளயம் (எண் 2:5-6) = 54,400 பேர்

7. செபுலோனின் பாளயம் (எண் 2:7-8) = 57,400 பேர்

8. ரூபனின் பாளயம் (எண் 2:10-11) = 46,500 பேர்

9. சிமியோனின் பாளயம் (எண் 2:12-13) = 59,300 பேர்

10. காத்தின் பாளயம் (எண் 2:14-15) = 45,650 பேர்

11. எப்பிராயீமின் பாளயம் (எண் 2:18-19) = 40,500 பேர்

12. மனாசேயின் பாளயம் (எண் 2:20-21) = 32,200 பேர்

13. பென்யமீனின் பாளயம் (எண் 2:22-23) = 35,400 பேர்

14. தாணின் பாளயம் (எண் 2:25-26) = 62,700 பேர்

15. ஆசேரின் பாளயம் (எண் 2:27-28) = 41,500 பேர்

16. நப்தலியின் பாளயம் (எண் 2:29-30) = 53,400 பேர்

மொத்தம் = 625,850 பேர்

லேவியரின் மொத்த எண்ணிக்கை 22,300 பேர். இவர்களில் கோகாத்புத்திரர் 8,600 பேர், கெர்சோனியர் 7,500 பேர், மெராரியர் 6,200 பேர். (எண் 3:22,28,34). இவர்களில் 300 பேர் ஆசாரியர்களாகவும், தலைவர்களாகவும் இருந்தார்கள். லேவியரை எண்ணும்போது, இருபது வயதும், அதற்கு மேற்பட்டவரும் என்று எண்ணுவதற்குப் பதிலாக ஒரு மாதமும், அதற்கு மேலும் என்று நியமித்து எண்ணினார்கள். மற்ற கோத்திரத்தார் யுத்தத்திற்குப் போக வேண்டியவர்கள். (எண் 1:3). லேவியரோ ஆசாரிய ஊழியம் செய்யவேண்டியவர்கள்.

இஸ்ரவேல் புத்திரர் நான்கு பாளயங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சேனையில் எண்ணப்பட்டவர்களின் விவரம் வருமாறு :

1. யூதாவின் பாளயம் (எண் 2:3-9) = 186,400 பேர்

2. ரூபனின் பாளயம் (எண் 2:10-16) = 151,450 பேர்

3. எப்பிராயீமுடைய பாளயம் (எண் 2:18-24) = 108,100 பேர்

4. தாணுடைய பாளயம் (எண் 2:25-31) = 157,600 பேர்

மொத்தம் = 603,550 பேர்

பரிசுத்த வேதாகமத்தில் இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் அட்டவணைகள் பல வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அட்டவணைகளின் விவரம் வருமாறு :

1. பிறப்பின் பிரகாரம் கோத்திரத்தலைவர்கள் (ஆதி 29:32-30:24).

2. யாக்கோபின் மனைவிகளின் பிரகாரம் கோத்திரத்தலைவர்கள் (ஆதி 35:23-26).

3. மனைவிகள், பிள்ளைகள், ஆகியவற்றின் பிரகாரம் கோத்திரத்தலைவர்கள் (ஆதி 46:8-24).

4. தீர்க்கதரிசனத்தின் பிரகாரம் கோத்திரத்தலைவர்களின் அட்டவணை (ஆதி 49:3-28).

5. எகிப்துதேசத்திற்கு யாக்கோபோடு போனவர்களின் அட்டவணை. (யாத் 1:1-6). யோசேப்பு ஏற்கெனவே எகிப்தில் இருந்தபடியினால், அவனுடைய பெயர் சேர்க்கப்படவில்லை. முதல் ஐந்து அட்டவணைகளில் லேவியின் பெயரும் சேர்க்கப்படவில்லை. பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு ஊழியம் செய்வதற்கு லேவியர் இன்னும் தெரிந்தெடுக்கப்பட வில்லை. அடுத்த நான்கு அட்டவணைகளிலும் லேவியருடைய பெயர் சேர்க்கப்படவில்லை. இக்காலத்தில் லேவியர் ஆசாரிய ஊழியம் செய்து வந்தார்கள்.

6. இஸ்ரவேல் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள புருஷர்களாகிய சகல தலைகளையும் பேர்பேராக எண்ணித் தொகையேற்றுவதற்கு உதவி புரிந்த பிதாக்களின் வம்சத்து தலைவர்களின் அட்டவணை (எண் 1:4-16).

7. கோத்திரத்தார் தலைதலையாக எண்ணப்பட்ட அட்டவணை. (எண் 1:20-46).

8. ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருந்த கோத்திரத்தாரின் அட்டவணை. (எண் 2:2-32).

9. பலிபீடம் பிரதிஷ்டை பண்ணப்பட்ட போது, காணிக்கை செலுத்திய கோத்திரத்தாரின் அட்டவணை (எண் 7:12-84).

10. இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணிய போது, கோத்திரத்தாரின் வரிசைக் கிரமமான அட்டவணை. (எண் 10:14-28). லேவியின் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரயாணம் பண்ணும்போது அவர்களுக்கும் இடம் கொடுக்கப் பட்டிருந்தது.

11. கானான் தேசத்தை வேவுபார்ப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் அட்டவணை. (எண் 13:3-17). லேவியின் பெயர் சேர்க்கப்படவில்லை.

12. மோவாபின் சமவெளியில் கோத்திரத்தார் எண்ணப்பட்டபோது கொடுக்கப் பட்டிருக்கும் அட்டவணை. (எண் 26:4-56). பன்னிரண்டு கோத்திரத்தாருக்குப் பின்பு லேவியின் எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலாவது எண்ணிக்கையின் போதும், லேவியரின் எண்ணிக்கை இவ்வாறே கூறப்பட்டிருக்கிறது. எண் 26:57-65= எண் 3:1-4:49).

13. கானான் தேசத்தைக் கோத்திரத்தாருக்குச் சுதந்தரவீதமாகப் பங்கு பிரித்துக் கொடுத்தவர்களுடைய அட்டவணை. (எண் 34:16-29). லேவியருக்குத் தேசத்தில் சுதந்தர வீதமில்லை. ஆகையினால் லேவியரின் பெயர் இங்கு சேர்க்கப்பட வில்லை.

14. கெர்சீம் மலையிலும், ஏபாலிலும் இஸ்ரவேல் புத்திரரின் ஸ்தானத்தின் படியான அட்டவணை (உபா 27:12-14). யாக்கோபின் பன்னிரண்டு குமாரருடைய பெயர்கள் இங்கு கூறப்பட்டிருக்கிறது. இதில் லேவியின் பெயரும், யோசேப்பின் பெயரும் அடங்கும். எப்பிராயீம், மனாசே ஆகிய கோத்திரத்தாருக்குப் பதிலாக லேவி, யோசேப்பு, ஆகியோரின் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லாக் கோத்திரங்களுக்கும் முற்பிதாக்கள் ஆவார்கள். ஆசாரிய ஊழியத்திற்கு லேவியர் தெரிந்தெடுக்கப்படுவதற்கு முன்பாக இந்த அட்டவணை கொடுக்கப்பட்டது.

15. தீர்க்கதரிசனத்தின் பிரகாரமாகவும், கோத்திரங்களின் ஆசீர்வாதங்களின் பிரகாரமாகவும் கூறப்பட்டிருக்கும் அட்டவணை. லேவியின் பெயர் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு காரணத்திற்காகச் சிமியோனின் பெயர் இந்த அட்டவணையில் சேர்க்கப்படவில்லை. (உபா 33:6-29).

16. வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தர வீதமாகப் பங்குபிரிக்கும்போது கூறப்பட்டிருக்கும் அட்டவணை. (யோசு 13:1-21:45). லேவியின் பெயரும்இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பன்னிரண்டு கோத்திரத்தாரோடு லேவியருக்குச் சுதந்தரவீதம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் மத்தியில் லேவியருக்கு ஒருசில பட்டணங்கள் கொடுக்கப்பட்டன.

17. வாக்குத்தத்த தேசத்தை முழுவதும் சுதந்தரிக்காமல் தோல்வியுற்றபோது, கூறப்பட்டிருக்கும் அட்டவணை. (நியா 1:1-36).

18. தெபோராள், பாராக் ஆகியோரோடு இஸ்ரவேல் புத்திரர் ஒத்துழைத்தபோது கூறப்பட்டிருக்கும் அட்டவணை. (நியா 5:14-18). யூதா, சிமியோன் ஆகியோரின் பெயர் இதில் கூறப்பட வில்லை. மற்ற கோத்திரத்தாரோடு இவர்கள் யுத்தத்தில் சேர்ந்து கொள்ளவில்லை. லேவியரும் ஆசாரிய ஊழியம் செய்தபடியினால், அவர்களுடைய பெயரும் சேர்க்கப்படவில்லை.

19. மனாசே, எப்பிராயீம் ஆகியோருக்கு முன்பாக இருந்த யாக்கோபின் குமாரருடைய அட்டவணை. (1நாளா 2:1-2).

20. யாக்கோபிலிருந்து தாவீது வரையிலும் கோத்திரத்தாரின் அட்டவணையும், அவர்களுடைய சந்ததியாரின் விவரமும். இதில் லேவியின் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது (1நாளா 2:3-9:44). செபுலோன், தாண் ஆகியோரின் பெயர் ஏதோ ஒரு காரணத்திற்காகச் சேர்க்கப்படவில்லை.

21. தாவீதிற்கு உதவி புரிவதற்காக எண்ணித் தொகையேற்றப்பட்ட கோத்திரத்தாரின் அட்டவணை. (1நாளா 12:1-40). லேவியரும் தாவீதிற்கு உதவி புரிந்ததினால் அவர்களுடைய பெயரும் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

22. இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதின்கீழ் இருந்த கோத்திரத்து தலைவர்களின் அட்டவணை (1நாளா 27:16-22). லேவியின் பெயர் கூறப்பட்டிருக்கிறது. காத், ஆசேர் ஆகியோரின் பெயர் கூறப்படவில்லை. மனாசே கோத்திரத்திற்கு இரண்டு தலைவர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மனாசேக்கு ஒரு தலைவரும், மேற்கு மனாசேக்கு ஒரு தலைவரும் இருந்தார்கள்.

23. நித்திய மீட்பிலும், வருங்காலத்திலும் தேவனுடைய தெரிந்தெடுப்பின் பிரகாரம் கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணை. (எசே 48). மேசியாவின்கீழ் நித்திய ராஜ்யத்தில் லேவியருக்கும் பங்குவீதம் இருக்கும். ஆகையினால், லேவியரின் பெயரும் இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது. தேவன் முடிவில், 13 கோத்திரங்களையும் அங்கிகரிக்கிறார்.

24. நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைப் பெற்று பாதுகாக்கப்பட்டவர்களின் அட்டவணை (வெளி 12:5 (வெளி 7:1-8; வெளி 14:1-5). தாண் கோத்திரத்தின் பெயர் இதில் சேர்க்கப்படவில்லை. லேவியின் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது

மேலே கூறப்பட்டிருக்கும் அட்டவணைகள் வெவ்வேறு நோக்கங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் கோத்திரங்களின் வரிசை மாற்றமடைந்துள்ளன (எண் 2:3; எண் 10:14; எண் 34:19; 1நாளா 2:3; வெளி 7:5). கோத்திரங்கள் பிரிந்த போது சிமியோனும், ரூபனும் தலைவர்களாக இருந்தார்கள். (உபா 27:12-13). எசே 48 ஆவது அதிகாரத்தில் தாண் கோத்திரம் தலைமையாக இருக்கிறது.

3 அதிகாரம்

இந்த அதிகாரத்திலும் இதற்கு அடுத்த அதிகாரத்திலும் லேவி கோத்திரத்தாரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திலே லேவி கோத்திரத்தார் பாளயமிறங்க வேண்டிய இடம், ஆசரிப்புக்கூடாரத்திலே அவர்களுடைய பணிவிடைகள் ஆகியவற்றைப்பற்றியும் இவ்விரண்டு அதிகாரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆரோனின் குமாரர் (எண் 3:1-4). அவர்களுடைய ஊழியம் (எண் 3:10). லேவியர் ஆரோனிடத்திலும் அவருடைய குமாரரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் (எண் 3:5-9). லேவி புத்திரர் அவர்களுடைய பிதாக்களின் வம்சங்களின்படியே எண்ணப்படுகிறார்கள் (எண் 3:14-16). லேவியரின் எண்ணிக்கை (எண் 3:39).

லேவியின் குமாரர் தங்கள் நாமங்களின்படியே கெர்சோன், கோகாத், மிராரி என்பவர்கள். லேவி புத்திரர் அவர்கள் பிதாக்களின் வம்சங்களின்படியே எண்ணப்படுகிறார்கள். அவர்கள் அதன் பிரகாரமாகவே ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கி, தங்களுக்கு நியமிக்கப்பட்ட பணிவிடைகளை செய்கிறார்கள்.

கெர்சோனுடைய குமாரர் (எண் 3:17-26). கோகாத்தின் குமாரர் (எண் 3:27-32). மெராரியின் குமாரர் (எண் 3:33-39).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரில் முதற்பேறானவற்றிற்கு பதிலாக லேவியரை எடுத்துக்கொள்கிறார் (எண் 3:11-13). இஸ்ரவேல் புத்திரரில் முதற்பேறான ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்படுகிறார்கள் (எண் 3:40-49).

இஸ்ரவேல் புத்திரருடைய முதற்பேறானவர்களில் லேவியரின் தொகைக்கு அதிகமாயிருக்கிறவர்கள் மீட்கப்படவேண்டியவர்கள். அவர்கள் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் மீட்கப்படும் திரவியத்தைக் கொடுக்கவேண்டும் (எண் 3:46-51).

ஆரோனுடைய குமாரர்
எண் 3:1-13

எண் 3:1. சீனாய் மலையில் கர்த்தர் மோசேயோடே பேசின நாளிலே, ஆரோன் மோசே என்பவர்களுடைய வம்சவரலாறாவது:

எண் 3:2. ஆரோனுடைய குமாரர், முதல் பிறந்தவனாகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்பவர்களே.

எண் 3:3. ஆசாரிய ஊழியம் செய்கிறதற்கு அவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டு அபிஷேகம்பெற்ற ஆசாரியரான ஆரோனுடைய குமாரரின் நாமங்கள் இவைகளே.

எண் 3:4. நாதாபும் அபியூவும் சீனாய் வனாந்தரத்தில் அந்நிய அக்கினியைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்தபோது, கர்த்தருடைய சந்நிதியில் மரித்துப்போனார்கள்; அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை; எலெயாசாரும் இத்தாமாருமே தங்கள் தகப்பனாகிய ஆரோனுக்கு முன்பாக ஆசாரிய ஊழியம் செய்தார்கள்.

எண் 3:5. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 3:6. நீ லேவிகோத்திரத்தாரைச் சேர்த்து, அவர்கள் ஆசாரியனாகிய ஆரோனுக்குப் பணிவிடை செய்யும்படி அவர்களை நிறுத்து.

எண் 3:7. அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக அவனுடைய காவலையும் எல்லாச் சபையின் காவலையும் காத்து, வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளைச் செய்யக்கடவர்கள்.

எண் 3:9. ஆகையால் லேவியரை ஆரோனிடத்திலும் அவன் குமாரரிடத்திலும் ஒப்புக் கொடுப்பாயாக; இஸ்ரவேல் புத்திரரில் இவர்கள் முற்றிலும் அவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

எண் 3:10. ஆரோனையும் அவன் குமாரரையுமோ, தங்கள் ஆசாரிய ஊழியத்தைச் செய்வதற்காக நியமிக்கக்கடவாய், அந்த ஊழியத்தைச் செய்யும்படி சேருகிற அந்நியன் கொலைசெய்யப்படக்கடவன் என்றார்.

எண் 3:11. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 3:12. இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக, நான் லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து எடுத்துக்கொண்டேன்; அவர்கள் என்னுடையவர்களாயிருக்கிறார்கள்.

எண் 3:13. முதற்பேறானவையெல்லாம் என்னுடையவை; நான் எகிப்துதேசத்தில் முதற்பேறான யாவையும் சங்கரித்த நாளில், இஸ்ரவேலின் மனிதர்முதல் மிருகஜீவன் மட்டுமுள்ள முதற்பேறான யாவையும் எனக்கென்று பரிசுத்தப்படுத்தினதினாலே, அவைகள் என்னுடையவைகளாயிருக்கும்; நான் கர்த்தர் என்றார்.

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியத்தை செய்வதற்காக நியமிக்கப்படுகிறார்கள். கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனையும் அவன் குமாரரையுமோ, தங்கள் ஆசாரிய ஊழியத்தைச் செய்வதற்காக நியமிக்கக் கடவாய், அந்த ஊழியத்தைச் செய்யும்படி சேருகிற அந்நியன் கொலைசெய்யப்படக் கடவன்" (எண் 3:10) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஏற்கெனவே ஆரோனையும் அவருடைய குமாரரையும் ஆசாரியராக நியமித்து அவர்களை பிரதிஷ்டை செய்திருக்கிறார். இப்போது கர்த்தர் அவர்களை ஆசாரிய ஊழியத்தை செய்வதற்காக நியமிக்கிறார்.

"ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்...... செய்யக்கடவன்" (ரோம 12:7). ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியம் செய்ததுபோல, கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியத்தை, நாம் உண்மையாயும், உத்தமமாயும், பரிசுத்தத்தோடும் செய்யவேண்டும்.

ஆசாரிய ஊழியம் கனமுள்ளது. அந்த ஊழியத்தை அவர்கள் மிகுந்த கவனத்தோடு செய்யவேண்டும். கர்த்தருடைய பரிசுத்த சமுகத்திலே ஊழியம் செய்கிறவர்கள், எப்போதும் அந்த ஊழியத்தில் நிலைத்திருக்கவேண்டும். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் காவலை விசாரிக்கவேண்டும்.

கர்த்தர் ஆசாரியருக்கு ஒரு சில விசேஷித்த சிலாக்கியங்களையும் மேன்மைகளையும் கொடுத்திருக்கிறார். ஆனாலும் ஆசாரிய ஊழியம் மிகுந்த கவனத்தோடும், பொறுப்போடும் செய்யவேண்டிய ஊழியமாயிருக்கிறது.

கர்த்தர் ஆரோனையும் அவருடைய குமாரரையும் மாத்திரமே ஆசாரிய ஊழியத்தைசெய்வதற்காக நியமித்திருக்கிறார். மற்றவர்கள் இந்த ஊழியத்தை செய்யக்கூடாது. அந்த ஊழியத்தை செய்யும்படி சேருகிற அந்நியன் கொலை செய்யப்படக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆசாரியருடைய ஊழியத்தை, ஆரோனும் அவருடைய குமாரரும் தவிர வேறு யாரும் செய்யவும் கூடாது, அவர்களுடைய ஊழியத்தில் தலையிடவும் கூடாது.

ஆரோனையும் அவருடைய குமாரரையும் தவிர மற்ற யாரும் ஆசாரிய ஊழியத்தை செய்வதற்காக பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையில் வரக்கூடாது. இந்த ஊழியம் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் மாத்திரமே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆரோனையும் அவருடைய குமாரரையும் தவிர மற்றவர்கள் எல்லோருமே, ஆசாரிய ஊழியத்தைப் பொறுத்தவரையில், அந்நியர்களாகவே பாவிக்கப்படுகிறார்கள்.

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசாரிப்புக்கூடாரத்தின் வாசலைக் காக்கவேண்டும். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி, ஆசாரியர்கள் மாத்திரமே, மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையில் பிரவேசிக்க முடியும். பிரதான ஆசாரியன் வருஷத்திற்கு ஒரு தரம் மாத்திரம் மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கலாம். அந்த ஸ்தலத்திலே மற்றவர்கள் யாரும் பிரவேசித்துவிடாதவாறு ஆசாரியர்கள் அதன் வாசலைக் காவல் காக்கவேண்டும்.

இந்த வசனப்பகுதியில் ஆரோனுடைய குடும்பத்தைப்பற்றி ஒரு சில செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய குடும்பத்தாரைப்பற்றி ஏற்கெனவே சொல்லப்பட்ட செய்திகள் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. எலெயாசாரும் இத்தாமாரும் ஆரோனுடைய இளைய குமாரர். அவர்கள் இருவரும் தங்கள் தகப்பனாகிய ஆரோனுக்கு முன்பாக ஆசாரிய ஊழியம் செய்கிறார்கள்.

இவர்கள் இருவரும் தங்கள் தகப்பனாகிய ஆரோனுடைய ஆலோசனையின் பிரகாரம் தங்கள் ஆசாரிய ஊழியத்தை செய்கிறார்கள். இவர்களுடைய ஊழியம் ஆரோனுடைய நேரடி மேற்பார்வையில் நடைபெறுகிறது.

ஆரோனுடைய மூத்த குமாரராகிய நாதாபும் அபியூவும், ஆரோனுக்கு முன்பாக ஆசாரிய ஊழியம் செய்யாமல், தங்களுடைய இஷ்டப்படி செய்தார்கள். அவர்கள் இருவரும் ஆரோனுடைய நேரடி மேற்பார்வையில் இல்லாதபோது, கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியை கொண்டு வந்திருக்கவேண்டும். இதனால் அவர்கள் இருவரும் மரித்துப்போனார்கள். இந்த சம்பவத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

சீனாய் மலையில் கர்த்தர் மோசேயோடே பேசின நாளிலே, ஆரோன் மோசே என்பவர்களுடைய வம்சவரலாறாவது: ஆரோனுடைய குமாரர், முதல் பிறந்தவனாகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்பவர்களே (எண் 3:1,2).

ஆசாரிய ஊழியம்செய்கிறதற்கு அவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டு அபிஷேகம்பெற்ற ஆசாரியரான ஆரோனுடைய குமாரரின் நாமங்கள் இவைகளே (எண் 3:3).

இந்த வசனப்பகுதியில் ஆரோன், மோசே என்பவர்களுடைய வம்சவரலாற்றைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில், இந்த வம்ச வரலாற்றைப்போல, மேலும் சில சந்ததியாரின் வம்சவரலாறும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஆதாம் (ஆதி 5:1-6:8)
2. நோவா (ஆதி 6:9-9:20)
3. நோவாவின் புத்திரர் (ஆதி 10:1-11:9)
4. சீகேம் (ஆதி 11:10-26)
5. தேராகு (ஆதி 11:27-25:11)
6. இஸ்மவேல் (ஆதி 25:12-18)
7. ஈசாக்கு (ஆதி 25:19-35:29)
8. ஏசா (ஆதி 36:1-8)
9. ஏசாவின் குமாரன் (ஆதி 36:9-43)
10. யாக்கோபு (ஆதி 37:1-50:26)
11. ஆரோனும், மோசேயும் (எண் 3:1-51)
12. பேரேஸ் (ரூத் 4:18-22)
13. இயேசுகிறிஸ்து (மத் 1:1-18; லூக்கா 3:23-38)

மோசேயின் புத்திரரைப் பற்றி இங்கு கூறப்படவில்லை. யாத் 2:22; யாத் 18:4; 1நாளா 23:15-17 ஆகிய வசனங்களில் அவர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. மோசே தன்னுடைய சொந்த குடும்பத்தாருக்கு ஊழியத்தில் எந்தவொரு ஒரு விசேஷித்த முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. தன்னுடைய வாழ்நாளில் தன் பிள்ளைகளுக்கு எந்தவொரு மேன்மையான சிலாக்கியங்களையோ, அதிகாரங்களையோ கொடுக்கவில்லை. தன் மரணத்திற்குப் பின்புகூட மோசே தன்னுடைய பிள்ளைகளுக்காக ஒன்றும் சேர்த்து வைத்ததாகத் தெரியவில்லை. மோசேயின் வம்ச வரலாற்றில் அவருடைய தந்தையாகிய அம்ராமைப் பற்றியும், கோகாத்தைப் பற்றியும் மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. (எண் 3:27; யாத் 6:16-27)

நாதாபும் அபியூவும் சீனாய் வனாந்தரத்தில் அந்நிய அக்கினியைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்தபோது, அவர்கள் இருவரும் கர்த்தருடைய சந்நிதியில் மரித்துப்போனார்கள்; அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை; இப்பொழுது எலெயாசாரும் இத்தாமாருமே தங்கள் தகப்பனாகிய ஆரோனுக்கு முன்பாக ஆசாரிய ஊழியம் செய்கிறார்கள் (எண் 3:4).

பரிசுத்த வேதாகமத்தில் இஸ்ரவேலின் ஆதி ஆசாரியர்களாக நான்குபேர் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. மோசே (யாத் 40:17-33; சங் 99:6)
2. ஆரோன் (யாத் 28:1-3; லேவி 8)
3. நாதாப் (எண் 3:2-4; லேவி 10:1-7)
4. அபியூ (எண் 3:2-4; லேவி 10:1-7)
5. எலெயாசார் (எண் 3:2-4)
6. இத்தாமார் (எண் 3:2-4)

ஆரோனைப் பிரதான ஆசாரியனாகப் பிரதிஷ்டை பண்ணிய பின்பு, மோசே தன்னுடைய ஆசாரிய ஊழியத்திலிருந்து விலகிக் கொள்கிறார். அதன்பின்பு, ஆரோனும் அவருடைய இரண்டு குமாரர்களாகிய எலெயாசாரும் இத்தாமாரும் ஆசாரிய ஊழியத்தைக் கவனத்தோடு செய்து வருகிறார்கள்.

ஆரோனும் அவருடைய குமாரரும் தங்கள் ஆசாரிய ஊழியத்தை செய்வதற்காக நியமிக்கப்படுகிறார்கள். இந்த ஊழியத்தில் லேவியர்கள் அவர்களுக்கு உதவி செய்வதற்காக நியமிக்கப்படுகிறார்கள். "ஆகையால் லேவியரை ஆரோனிடத்திலும் அவன் குமாரரிடத்திலும் ஒப்புக்கொடுப்பாயாக; இஸ்ரவேல் புத்திரரில் இவர்கள் முற்றிலும் அவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்" (எண் 3:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆரோனுக்கு விசேஷித்த மேன்மையையும், அதிகாரத்தையும் கொடுக்கிறார். லேவி கோத்திரத்திலுள்ள மற்ற எல்லாரையும்விட ஆரோனே மிகவும் விசேஷமானவர். இஸ்ரவேல் கோத்திரத்தாரின் பிரபுக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைவிட, ஆரோனுக்கு மேன்மையான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்துக்கு முன்பாக ஆரோனுடைய காவலையும் எல்லாச் சபையின் காவலையும் காத்து, வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளைச் செய்யவேண்டும் (எண் 3:7).

கர்த்தர் லேவி கோத்திரத்தாரை ஆரோனுக்கு பணிவிடை செய்யும்படி ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ லேவிகோத்திரத்தாரைச் சேர்த்து, அவர்கள் ஆசாரியனாகிய ஆரோனுக்குப் பணிவிடை செய்யும்படி அவர்களை நிறுத்து" (எண் 3:6) என்றும்,

லேவியரை ஆரோனிடத்திலும் அவன் குமாரரிடத்திலும் ஒப்புக்கொடுப்பாயாக; இஸ்ரவேல் புத்திரரில் இவர்கள் முற்றிலும் அவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் (எண் 3:9) என்றும் சொல்லுகிறார்.

லேவியர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் தட்டுமுட்டு முதலானவைகளையும், இஸ்ரவேல் புத்திரரின் காவலையும் காத்து, வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவேண்டும் (எண் 3:8).

பலிசெலுத்துவதற்காக கொண்டு வரப்படும் மிருகங்களை லேவியர்கள் கொல்லவேண்டும். அதன் பின்பு ஆசாரியர்கள் அந்த மிருகத்தின் இரத்தத்தை கர்த்தருடைய சந்நிதியில் தெளிப்பார்கள். அதன் பின்பு ஆசாரியர்கள் பலியிடப்பட்ட மிருகத்தின் கொழுப்பை தகனிப்பார்கள்.

ஆசாரியர்கள் தூபபீடம் ஏற்றும்போது, லேவியர்களே அந்தத் தூபத்தைக் கலக்கவேண்டும். தூபபீடம் காண்பிப்பதற்கான அனைத்து பணிவிடைகளையும் லேவியர்கள் செய்து முடித்து அதை ஆசாரியரின் கையிலே ஒப்புக்கொடுக்கவேண்டும். அதன் பின்பு ஆசாரியர்கள் தூபபீடத்திலே தூபம் ஏற்றுவார்கள்.

லேவி கோத்திரத்தார் ஆரோனுக்கு பணிவிடை செய்வது மாத்திரமல்ல, அவர்கள் வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளையும், இஸ்ரவேல் புத்திரரின் காவலையும் காக்கவேண்டும்.

இஸ்ரவேலில் முதற்பேர்களுக்கு பதிலாக கர்த்தர் லேவியரைத் தெரிந்துகொண்டார். ஆகையினால் லேவியர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கிறார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறான யாவுக்கும் பதிலாக, நான் லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து எடுத்துக்கொண்டேன்; அவர்கள் என்னுடையவர்களாயிருக்கிறார்கள்" (எண் 3:11,12) என்றும், "நான் கர்த்தர்" (எண் 3:13) என்றும் சொல்லுகிறார்.

முதற்பேறானவையெல்லாம் கர்த்தருடையவை; கர்த்தர் எகிப்துதேசத்தில் முதற்பேறான யாவையும் சங்கரித்த நாளில், இஸ்ரவேலின் மனிதர்முதல் மிருகஜீவன் மட்டுமுள்ள முதற்பேறான யாவையும் தமக்கென்று பரிசுத்தப்படுத்தினார். ஆகையினால், அவைகள் கர்த்தருடையவைகளாயிருக்கும் (எண் 3:13).

இஸ்ரவேலின் முதற்பேறுகள் அனைத்தும், கர்த்தருக்குரியவை. எகிப்தில் தலைச்சன் பிள்ளைகள் சங்காரம் பண்ணப்பட்ட வேளையிலிருந்து கர்த்தர் இஸ்ரவேலின் முதற்பேறுகளைத் தமக்குரியவைகளாக அறிவித்திருக்கிறார். (எண் 3:12-13= யாத் 13:2,12-16). இப்பொழுது இஸ்ரவேலரின் முதற்பேறுகளுக்குப் பதிலாகக் கர்த்தர் லேவியரைத் தெரிந்து கொள்கிறார். (எண் 3:14-43)

இஸ்ரவேலின் முதற்பேறுகள் எண்ணித்தொகையேற்றப்படுகின்றன. நரஜீவன்களுக்குப் பதிலாக நரஜீவன்களையும், மிருகஜீவன்களுக்குப் பதிலாக மிருக ஜீவன்களையும் கர்த்தர் எடுத்துக் கொண்டார். (எண் 3:44-45). லேவியரின் தொகைக்கு அதிகமாக இருந்த இஸ்ரவேல் புத்திரருடைய முதற்பேறுகள் மீட்கப்பட்டார்கள் (எண் 3:46-51).

மிருகஜீவன்களில் தலையீற்றுகளும் மீட்கப்பட்டன. கழுதைக்கு ஒரு ஆட்டுக்குட்டி மீட்பின் கிரயமாகச் செலுத்தப்பட்டது. அசுத்தமான மிருகஜீவன்கள் கிரயத்திற்கு விற்கப்பட்டு அதன் தொகை ஆசாரியருக்கும், லேவியருக்கும் அவர்களுடைய ஊழியத்திற்கு ஆதரவாகக் கொடுக்கப்பட்டது (யாத் 13:12-13; யாத் 34:19-20; லேவி 27:26-27; எண் 18:15-17).

லேவிபுத்திரர்
எண் 3:14-39

எண் 3:14. பின்னும் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி:

எண் 3:15. லேவிபுத்திரரை அவர்கள் பிதாக்களின் வம்சங்களின்படியே எண்ணுவாயாக; அவர்களில் ஒருமாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளையெல்லாம் எண்ணுவாயாக என்றார்.

எண் 3:16. அப்பொழுது கர்த்தருடைய வாக்கின்படி, மோசே தனக்குக் கற்பிக்கப்பட்டபிரகாரம் அவர்களை எண்ணினான்.

எண் 3:17. லேவியின் குமாரர் தங்கள் நாமங்களின்படியே, கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்கள்.

எண் 3:18. தங்கள் வம்சத்தின்படியே கெர்சோனுடைய குமாரரின் நாமங்கள், லிப்னீ, சீமேயி என்பவைகள்.

எண் 3:19. தங்கள் வம்சங்களின்படியே கோகாத்துடைய குமாரர், அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல் என்பவர்கள்.

எண் 3:20. தங்கள் வம்சங்களின்படியே மெராரியினுடைய குமாரர், மகேலி, மூசி என்பவர்கள்; இவர்களே லேவியருடைய பிதாக்களின் வம்சத்தார்.

எண் 3:21. கெர்சோனின் வழியாய் லிப்னீயரின் வம்சமும் சீமேயியர் வம்சமும் தோன்றின; இவைகளே கெர்சோனியரின் வம்சங்கள்.

எண் 3:22. அவர்களில் ஒரு மாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபோது, எண்ணப்பட்டவர்கள் ஏழாயிரத்து ஐந்நூறுபேராயிருந்தார்கள்.

எண் 3:23. கெர்சோனியரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் பின்புறத்தில் மேற்கே பாளயமிறங்கவேண்டும்.

எண் 3:24. கெர்சோனியருடைய தகப்பன் வம்சத்துக்குத் தலைவன் லாயேலின் குமாரனாகிய எலியாசாப் என்பவன்.

எண் 3:25. ஆசரிப்புக் கூடாரத்திலே கெர்சோன் புத்திரரின் காவலாவது: வாசஸ்தலமும், கூடாரமும், அதின் மூடியும், ஆசரிப்புக் கூடாரவாசல் மறைவும்,

எண் 3:26. வாசஸ்தலத்தண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் தொங்குதிரைகளும், பிரகாரவாசல் மூடுதிரையும், அவைகளின் வேலைகளுக்கெல்லாம் உரிய அவைகளின் கயிறுகளுமே.

எண் 3:27. கோகாத்தின் வழியாய் அம்ராமியரின் வம்சமும் இத்சேயாரின் வம்சமும் எப்ரோனியரின் வம்சமும் ஊசியேலரின் வம்சமும் தோன்றின; இவைகளே கோகாத்தியரின் வம்சங்கள்.

எண் 3:28. ஒரு மாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபோது, பரிசுத்த ஸ்தலத்துக்குரியவைகளைக் காப்பவர்கள், எண்ணாயிரத்து அறுநூறு பேராயிருந்தார்கள்.

எண் 3:29. கோகாத் புத்திரரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் தென்புறமான பக்கத்திலே பாளயமிறங்கவேண்டும்.

எண் 3:30. அவர்களின் தலைவன், ஊசியேலின் குமரனாகிய எல்சாபான்.

எண் 3:31. அவர்களுடைய காவலாவது: பெட்டியும், மேஜையும், குத்துவிளக்கும், பீடங்களும் ஆராதனைக்கேற்ற பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகளும், தொங்குதிரையும், அதினுடைய எல்லா வேலைகளுக்கும் ஏற்றவைகளுமே.

எண் 3:32. ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார் என்பவன் லேவியருடைய தலைவர்களுக்குத் தலைவனாய்ப் பரிசுத்த ஸ்தலத்தைக் காவல்காக்கிறவர்களுக்கு விசாரிப்புக்காரனாயிருக்க வேண்டும்.

எண் 3:33. மெராரியின் வழியாய் மகேலியரின் வம்சமும் மூசியரின் வம்சமும் தோன்றின; இவைகளே மெராரியின் வம்சங்கள்.

எண் 3:34. அவர்களில் ஒரு மாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண் பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபோது, எண்ணப்பட்டவர்கள் ஆறாயிரத்து இருநூறுபேராயிருந்தார்கள்.

எண் 3:35. அபியாயேலின் குமாரனாகிய சூரியேல் என்பவன் அவர்களுக்குத் தலைவனாயிருந்தான்; இவர்கள் வாசஸ்தலத்தின் வடபுறமான பக்கத்தில் பாளயமிறங்க வேண்டும்.

எண் 3:36. அவர்களுடைய காவல் விசாரிப்பாவது: வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்பாள்களும், தூண்களும், பாதங்களும், அதினுடைய எல்லாப் பணிமுட்டுகளும், அதற்கடுத்தவைகள் அனைத்தும்,

எண் 3:37. சுற்றுப்பிரகாரத்தின் தூண்களும், அவைகளின் பாதங்களும், முளைகளும், கயிறுகளுமே.

எண் 3:38. ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்துக்கு முன்பாக, சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் கூடாரங்களைப் போட்டு இறங்கி, இஸ்ரவேல் புத்திரரின் காவலுக்குப் பதிலாகப் பரிசுத்த ஸ்தலத்தைக் காவல் காக்கவேண்டும். வாசஸ்தலத்தில் சேருகிற அந்நியன் கொலைசெய்யப்படக்கடவன்.

எண் 3:39. மோசேயும் ஆரோனும், கர்த்தருடைய வாக்கின்படி, லேவியரில் ஒருமாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளையெல்லாம் அவர்களுடைய வம்சங்களின்படியே எண்ணினார்கள்; அவர்கள் இருபத்தீராயிரம்பேராயிருந்தார்கள்.

கர்த்தர் லேவியரை ஆரோனிடத்திலும், அவருடைய குமாரரிடத்திலும் ஒப்புக்கொடுக்கிறார். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாக ஆரோனுடைய காவலையும், இஸ்ரவேல் சபையார் எல்லாருடைய காவலையும் காக்கவேண்டும். அவர்கள் வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளையும் செய்யவேண்டும். மேலும் அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் தட்டுமுட்டுகள் முதலானவைகளையும் காக்கவேண்டும்.

கர்த்தர் லேவி கோத்திரத்தாரை ஆரோனிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஆரோன் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் லேவியருக்கு, ஆசரிப்புக்கூடாரத்திலே, பணிவிடைகளை பிரித்துக்கொடுக்க வேண்டும். ஆரோனும் அவருடைய குமாரரும் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஆசாரிய ஊழியத்திலே, லேவியரையும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் லேவி புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஏற்கெனவே எண்ணித்தொகையேற்றப்பட்டார்கள். அப்போது லேவி புத்திரர் எண்ணப்படவில்லை. இப்போதோ கர்த்தர் லேவி புத்திரரை எண்ணுமாறு சொல்லுகிறார்.

கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி, "லேவிபுத்திரரை அவர்கள் பிதாக்களின் வம்சங்களின்படியே எண்ணுவாயாக; அவர்களில் ஒருமாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளையெல்லாம் எண்ணுவாயாக" (எண் 3:14,15) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் எண்ணித்தொகையேற்றப்பட்டபோது, இஸ்ரவேலிலே இருபது வயதுள்ளவர்கள் முதல், யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்கள் மாத்திரம் எண்ணப்பட்டார்கள். அவர்களுடைய வம்சங்களிலுள்ள புருஷர்கள் மாத்திரம் பேர் பேராக எண்ணித் தொகையேற்றப்பட்டார்கள்.

இப்போதும் லேவி புத்திரரில் ஆண்பிள்ளைகள் மாத்திரம் எண்ணப்படுகிறார்கள். லேவி புத்திரரை எண்ணும்போது இருபது வயதுள்ளவர்கள் முதல், யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்கள் என்று கட்டுப்பாடு எதுவுமில்லை. லேவி புத்திரரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகள் எல்லோரும் எண்ணப்படுகிறார்கள். லேவி கோத்திரத்தாரில் சிறு பிள்ளைகளும், சரீரம் அங்கவீனமானவர்களும் எண்ணித் தொகையேற்றப்படுகிறார்கள்.

லேவியர்கள் யுத்தம்பண்ணப்போகமாட்டார்கள். அவர்கள் வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளை செய்வார்கள். ஆகையினால் யுத்தத்திற்கு போகத்தக்க சரீர பெலம் லேவியரிடத்தில் இருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. அவர்களுக்கு இருபது வயது ஆகியிருக்கவேண்டும் என்னும் தேவையும் இல்லாமல் போயிற்று.

கர்த்தர் லேவி புத்திரரை அவர்களுடைய பிதாக்களின் வம்சங்களின்படியே எண்ணுமாறு சொல்லுகிறார். ஒரு மாதம் உள்ள குழந்தையால் வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளை செய்யமுடியாது. லேவி கோத்திரத்தார் மறுபடியுமாக எண்ணப்படுகிறார்கள். அப்போது வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளை செய்யக்கூடியவர்கள் தனியாக எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள்.

"லேவியருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில் முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ளவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடை வேலைக்கும் சுமையின் வேலைக்கும் உட்படத்தக்கவர்களும், மோசேயினாலும் ஆரோனாலும் இஸ்ரவேலின் பிரபுக்களாலும் எண்ணப்பட்டவர்களும் ஆகிய எல்லாரும், எண்ணாயிரத்து ஐந்நூற்று எண்பது பேராயிருந்தார்கள்" (எண் 4:46-48).

லேவி கோத்திரத்தார் மூன்று வம்சங்களாக பிரிக்கப்படுகிறார்கள். லேவியின் குமாரர் தங்கள் நாமங்களின்படியே, கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்கள் (எண் 3:17). லேவியின் மூன்று குமாரருடைய வம்சத்தின்படியே, லேவி கோத்திரத்தார் மூன்று வம்சங்களாக பிரிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு வம்சத்தாரும் பல்வேறு குடும்பங்களாகவும் பிரிக்கப்படுகிறார்கள்.

தங்கள் வம்சத்தின்படியே கெர்சோனுடைய குமாரரின் நாமங்கள், லிப்னீ, சீமேயி என்பவைகள் (எண் 3:18).

தங்கள் வம்சங்களின்படியே கோகாத்துடைய குமாரர், அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல் என்பவர்கள் (எண் 3:19).

தங்கள் வம்சங்களின்படியே மெராரியினுடைய குமாரர், மகேலி, மூசி என்பவர்கள்; இவர்களே லேவியருடைய பிதாக்களின் வம்சத்தார் (எண் 3:20).

லேவியரின் மூன்று வம்சங்களைப்பற்றி இங்கு சொல்லப்பட்டிருக்கிறது அவர்களின் விவரம் வருமாறு :

1. கெர்சோன் புத்திரர் (எண் 3:17-18,21-26)

2. கோகாத்புத்திரர் (எண் 3:17,19,27-32)

3. மெராரி புத்திரர் (எண் 3:17,20,33-38)

லேவியருடைய மூன்று பிதாக்களின் வம்சத்தாரும் இந்த அதிகாரத்தில் தனித்தனியாக சொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பிதாக்களின் வம்சத்தாரைப்பற்றிச் சொல்லும்போது, அவர்களைப்பற்றி, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களும் சொல்லப்பட்டிருக்கிறது.

1. எண்ணிக்கை

2. வம்சங்கள்

3. பாளயமிறங்கும் இடம்

4. வம்சத்திற்கு தலைவன்

5. வாசஸ்தலத்தின் பணிவிடை

லேவி கோத்திரத்தாரில், மூன்று வம்சங்களின் பிரகாரம் அவர்களுடைய எண்ணிக்கைகளின் விவரம் வருமாறு :

1. கெர்சோனியரில் அவர்களில் ஒரு மாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபோது, எண்ணப்பட்டவர்கள் ஏழாயிரத்து ஐந்நூறுபேராயிருக்கிறார்கள் (எண் 3:22).

2. கோகாத்தியரில் ஒரு மாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபோது, பரிசுத்த ஸ்தலத்துக்குரியவைகளைக் காப்பவர்கள், எண்ணாயிரத்து அறுநூறுபேராயிருக்கிறார்கள் (எண் 3:28).

3. மெராரியில் ஒரு மாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண் பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபோது, எண்ணப்பட்டவர்கள் ஆறாயிரத்து இருநூறுபேராயிருக்கிறார்கள் (எண் 3:34).

லேவியரின் குடும்பத்தார் மூன்றாம் முறையாகவும், கடைசி முறையாகவும் இங்கு எண்ணப்படுகிறார்கள். இவர்களுடைய தொகை 22,300 பேர் (எண் 3:22,28,34).

லேவி கோத்திரத்தாரில், மூன்று வம்சங்களின் பிரகாரம் அவர்களுடைய வம்சங்களின் விவரம் வருமாறு :

1. கெர்சோனின் வழியாய் லிப்னீயரின் வம்சமும் சீமேயியர் வம்சமும் தோன்றின; இவைகளே கெர்சோனியரின் வம்சங்கள் (எண் 3:21).

2. கோகாத்தின் வழியாய் அம்ராமியரின் வம்சமும் இத்சேயாரின் வம்சமும் எப்ரோனியரின் வம்சமும் ஊசியேலரின் வம்சமும் தோன்றின; இவைகளே கோகாத்தியரின் வம்சங்கள் (எண் 3:27).

மோசே, ஆரோன் ஆகியோரின் தகப்பன் அம்ராம். இவன் லேவியின் குமாரனாகிய கோகாத்தின் குமாரன் (யாத் 6:16-27). கோகாத்திற்கு நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களின் பெயர் அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல் (எண் 3:27; யாத் 6:18) என்பனவாகும். கெர்சோனுக்கு லிப்னீ, சிமேயீ ஆகிய இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். (எண் 3:21; யாத் 6:17). கெர்சோன் புத்திரர் 7,500 பேர். கோகாத் புத்திரர் 8,600 பேர். (எண் 3:22= எண் 3:28).

மெராரிக்கு மகேலி, மூசி ஆகிய இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். (எண் 3:33; யாத் 6:19). மெராரியின் புத்திரர் 6,200 பேர். (எண் 3:34 =எண் 3:22). லேவியின் குமாரராகிய கோகாத்தின் குடும்பத்திலிருந்து முதலாவது ஆசாரியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் (எண் 3:1-4).

ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார் என்பவன் லேவியருடைய தலைவர்களுக்குத் தலைவனாய்ப் பரிசுத்த ஸ்தலத்தைக் காவல்காக்கிறவர்களுக்கு விசாரிப்புக்காரனாயிருக்க வேண்டும் (எண் 3:32).

எலெயாசார் கோகாத் புத்திரரின் தலைவன். ஆரோனின் குமாரன். (எண் 3:4) ஆரோன் அம்ராமின் குமாரன். அம்ராம் லேவியின் குமாரனாகிய கோகாத்தின் குமாரன். (யாத் 6:16-26). ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடைசெய்யும் எல்லா ஆசாரியர்களுக்கும் எலெயாசார் மேல் விசாரிப்புக்காரனாக இருக்கிறான்.

3. மெராரியின் வழியாய் மகேலியரின் வம்சமும் மூசியரின் வம்சமும் தோன்றின; இவைகளே மெராரியின் வம்சங்கள் (எண் 3:33).

லேவி கோத்திரத்தாரில், மூன்று வம்சங்களின் பிரகாரம் அவர்கள் பாளயமிறங்குகிற இடங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கெர்சோனியரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் பின்புறத்தில் மேற்கே பாளயமிறங்கவேண்டும் (எண் 3:23).

2. கோகாத் புத்திரரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் தென்புறமான பக்கத்திலே பாளயமிறங்கவேண்டும் (எண் 3:29).

3. மெராரி புத்திரர்கள் வாசஸ்தலத்தின் வடபுறமான பக்கத்தில் பாளயமிறங்க வேண்டும் (எண் 3:35).

4. ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்துக்கு முன்பாக, சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே மோசேயும் ஆரோனும் அவருடைய குமாரரும் கூடாரங்களைப் போட்டு பாளயமிறங்க வேண்டும் (எண் 3:38).

இந்தக்கூடாரங்களில் எத்தனைபேர் இருந்தார்கள் என்று தெரியவில்லை. மோசேயும், ஆரோனும் அவர்களுடைய குடும்பத்தாரும், எல்லா ஆசாரியர்களும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்குக் கிழக்குப் பக்கத்தில் கூடாரம் போட்டுத் தங்கியிருந்தார்கள். லேவியரில் 300 புருஷர்கள் இந்தக் கூடாரங்களில் தங்கியிருக்க வேண்டும்.

லேவி கோத்திரத்தாரில், மூன்று வம்சங்களின் பிரகாரம், அவர்களுடைய வம்சத்திற்கு தலைவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கெர்சோனின் வழியாய் லிப்னீயரின் வம்சமும் சீமேயியர் வம்சமும் தோன்றின; இவைகளே கெர்சோனியரின் வம்சங்கள் (எண் 3:21).

2. கோகாத்தியருடைய தகப்பன் வம்சத்திற்கு தலைவன், ஊசியேலின் குமரனாகிய எல்சாபான் (எண் 3:30)

3. மெராரியருடைய தகப்பன் வம்சத்திற்கு தலைவன் அபியாயேலின் குமாரனாகிய சூரியேல் என்பவன் (எண் 3:35).

லேவி கோத்திரத்தாரில், மூன்று வம்சங்களின் பிரகாரம், ஆசரிப்புக்கூடாரத்திலே அவர்களுடைய காவலின் விவரம் வருமாறு :

1. ஆசரிப்புக் கூடாரத்திலே கெர்சோன் புத்திரரின் காவலாவது: வாசஸ்தலமும், கூடாரமும், அதின் மூடியும், ஆசரிப்புக் கூடாரவாசல் மறைவும், வாசஸ்தலத்தண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் தொங்குதிரைகளும், பிரகாரவாசல் மூடுதிரையும், அவைகளின் வேலைகளுக்கெல்லாம் உரிய அவைகளின் கயிறுகளுமே (எண் 3:25,26).

கெர்சோன் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் மூடுதிரைகளையெல்லாம் கவனித்துக் கொள்ள வேண்டும். (எண் 4:25-28) ஆசரிப்புக் கூடாரத்தின் மெல்லிய நூலால் செய்த திரை, (யாத் 26:1-6), வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும்படி ஆட்டு மயிரால் செய்யப்பட்ட மூடுதிரைகள் (யாத் 26:7-13), சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலினால் கூடாரத்திற்குப் போடப்பட்ட மூடியும், அதன்மேல் போடப்பட்ட தகசுத்தோல் மூடியும் (யாத் 26:14) ஆகியவற்றையும் பராமரித்துக் கொள்ள வேண்டும்.

இவைதவிர, வெளிப்பிரகாரத்தின் தொங்குதிரைகள் (யாத் 27:9-15), வாசல்திரைகள் (யாத் 27:16-19), கயிறுகள் (யாத் 39:40) ஆகியவற்றையும் பராமரிக்க வேண்டும். இவை கெர்சோன் புத்திரரின் பணிவிடையாகும்.

2. ஆசரிப்புக்கூடாரத்திலே கோகாத் புத்திரரின் காவலாவது : பெட்டியும், மேஜையும், குத்துவிளக்கும், பீடங்களும் ஆராதனைக்கேற்ற பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகளும், தொங்குதிரையும், அதினுடைய எல்லா வேலைகளுக்கும் ஏற்றவைகளுமே (எண் 3:31).

ஒரு மாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் இந்தப் பணிவிடைகளைச் செய்தார்கள் என்று கூறமுடியாது. முப்பது வயது நிரம்பியவர்கள் மட்டுமே இந்தப் பணிவிடைகளைச் செய்ய வேண்டும் (எண் 4:47). முதிர் வயதுடையவர்கள் லேவியருக்கு உதவியாக ஆசரிப்புக் கூடாரங்களையும், தங்களுடைய கூடாரங்களையும் சுமப்பதற்கு உதவி புரிந்திருக்கலாம்.

3. ஆசரிப்புக்கூடாரத்திலே மெராரி புத்திரருடைய காவலாவது : அவர்களுடைய காவல் விசாரிப்பாவது: வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்பாள்களும், தூண்களும், பாதங்களும், அதினுடைய எல்லாப் பணிமுட்டுகளும், அதற்கடுத்தவைகள் அனைத்தும், சுற்றுப்பிரகாரத்தின் தூண்களும், அவைகளின் பாதங்களும், முளைகளும், கயிறுகளுமே (எண் 3:36,37).

கோகாத் லேவியின் இரண்டாவது குமாரர். ஆனாலும் கெர்சோன் புத்திரரைவிட, கோகாத் புத்திரருக்கு வாசஸ்தலத்தின் பணிவிடைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆரோனும், மற்ற ஆசாரியரும் கோகாத்தின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்.

லேவியரின் மூன்று வம்சங்களில் கோகாத் புத்திரரே அதிக எண்ணிக்கையுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு வாசஸ்தலத்தின் பணிவிடைகளில் முக்கியமான பொறுப்புக்களும்காவல்களும் கொடுக்கப்படுகிறது. மோசேயும் கோகாத்தின் வம்சத்தைச் சேர்ந்தவர். ஒருவேளை மோசேயின் நிமித்தமாக, கோகாத்தியருக்கு வாசஸ்தலத்தின் பணிவிடைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

மோசேயின் பின்சந்ததியார் யாரும் ஆசாரிய ஊழியத்திற்கு நியமிக்கப்படவில்லை. அவர்கள் மற்ற லேவியர்களைப்போல, ஆசாரியர்களுக்கு கீழே பணிவிடை செய்கிறார்கள்.

லேவியரின் மொத்த எண்ணிக்கை 22,000 பேர். மோசேயும் ஆரோனும், கர்த்தருடைய வாக்கின்படி, லேவியரில் ஒருமாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளையெல்லாம் அவர்களுடைய வம்சங்களின்படியே எண்ணுகிறார்கள்; அவர்கள் இருபத்தீராயிரம் பேராயிருக்கிறார்கள் (எண் 3:39).

லேவியரின் மொத்தத் தொகை 22,000. எண் 3:22,28, 34 ஆகிய வசனங்களில் லேவியரின் எண்ணிக்கை 22,300 என்று கூறப்பட்டிருக்கிறது. இவர்களில் கெர்சோனியர் 7,500, கோகாத்தியர் 8,600, மெராரியர் 6,200பேர்கள். லேவியரில் 300 புருஷர்கள் மோசேயோடும், ஆரோனோடும் ஆசாரிய ஊழியம் செய்து தலைவர்களாகப் பணிவிடை செய்கிறார்கள். இந்த 300 பேர் எந்தப் பாளயத்திலிருந்து வந்தவர்கள் என்று தெரியவில்லை. இந்த 300 பேர்கள் தவிர, லேவியரின் எண்ணிக்கை 22,000 ஆகும்.

இஸ்ரவேலின் மற்ற எல்லா கோத்திரத்தாரைவிட, லேவி கோத்திரத்தாரே சொற்ப எண்ணிக்கையுள்ள கோத்திரமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து நாற்பது வருஷ காலங்களாக வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணி, கானான் தேசத்திற்கு வருகிறார்கள். லேவியரின் பணிவிடை மிகவும் கடினமானதாக இருந்திருக்கும். ஆசரிப்புக் கூடாரம் முழுவதையும் பிரித்தெடுத்து, சுமந்து சென்று, மற்றொரு இடத்தில் ஸ்தாபனம்பண்ணுவது லேவியருடைய வேலை.

இத்துடன் இவர்கள் தங்களுடைய கூடாரங்களையும், தங்களுடைய வீட்டுப் பொருட்களையும் பராமரிக்க வேண்டும். லேவியருக்கு ஆறு கூண்டுவண்டில்கள் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டிருந்தன. கெர்சோன் புத்திரருக்கு இரண்டு வண்டிகளும், மெராரி புத்திரருக்கு நான்கு வண்டிகளும் கொடுக்கப்பட்டது. கோகாத்தியருக்கு ஒரு வண்டியும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் ஆசரிப்புக்கூடார பணிமுட்டுகளைத் தங்கள் தோள்களில் சுமக்க வேண்டும். (ஆதி 42:26; ஆதி 45:17-19,27; ஆதி 50:9, எண் 7:1-9).

முதற்பேறான ஆண்பிள்ளைகள் எண் 3:40-51

எண் 3:40. அதன்பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரில் ஒரு மாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதற்பேறான ஆண்பிள்ளைகளையெல்லாம் எண்ணி, அவர்கள் நாமங்களைத் தொகையேற்றி,

எண் 3:41. இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறான யாவுக்கும் பதிலாக லேவியரையும், இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களிலுள்ள தலையீற்றான யாவுக்கும் பதிலாக லேவியரின் மிருகஜீவன்களையும் எனக்கென்று பிரித்தெடு, நான் கர்த்தர் என்றார்.

எண் 3:42. அப்பொழுது மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறான யாவரையும் எண்ணினான்.

எண் 3:43. ஒருமாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதற்பேறான ஆண்பிள்ளைகளெல்லாரும் பேர்பேராக எண்ணப்பட்டபோது, இருபத்தீராயிரத்து இருநூற்று எழுபத்துமூன்று பேராயிருந்தார்கள்.

எண் 3:44. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 3:45. நீ இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறான யாவருக்கும் பதிலாக லேவியரையும், அவர்களுடைய மிருகஜீவன்களுக்குப் பதிலாக லேவியரின் மிருகஜீவன்களையும் பிரித்தெடு; லேவியர் என்னுடையவர்களாயிருப்பார்கள்; நான் கர்த்தர்.

எண் 3:46. இஸ்ரவேல் புத்திரருடைய முதற்பேறுகளில் லேவியரின் தொகைக்கு அதிகமாயிருந்து, மீட்கப்படவேண்டிய இருநூற்று எழுபத்துமூன்றுபேரிடத்திலும்,

எண் 3:47. நீ தலைக்கு ஐந்து சேக்கல் வீதமாகப் பரிசுத்த சேக்கல் கணக்கின்படி வாங்குவாயாக; அந்தச் சேக்கலானது இருபது கேரா.

எண் 3:48. லேவியருடைய தொகைக்கு அதிகமானவர்கள் மீட்கப்படும் திரவியத்தை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுப்பாயாக என்றார்.

எண் 3:49. அப்படியே லேவியரால் மீட்கப்பட்டவர்களின் தொகைக்கு அதிகமாயிருந்து, இன்னும் மீட்கப்படவேண்டியவர்களுக்கு ஈடாக மோசே இஸ்ரவேல் புத்திரருடைய முதற்பேறானவர்களிடத்தில்,

எண் 3:50. ஆயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து சேக்கலாகிய திரவியத்தை, பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி வாங்கி,

எண் 3:51. கர்த்தருடைய வாக்கின்படியே மீட்கப்பட்டவர்களின் கிரயத்தை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும், கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே கொடுத்தான்.

இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறான ஆண்பிள்ளைகளுக்கு பதிலாக, கர்த்தர் லேவியரை தம்முடையவர்களாக தெரிந்துகொள்கிறார். இதற்காக இஸ்ரவேலின் ஆண்பிள்ளைகளையெல்லாம் எண்ணித்தொகையேற்றுமாறு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரில் ஒரு மாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதற்பேறான ஆண்பிள்ளைகளையெல்லாம் எண்ணி, அவர்கள் நாமங்களைத் தொகையேற்றி, இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறான யாவுக்கும் பதிலாக லேவியரையும், இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களிலுள்ள தலையீற்றான யாவுக்கும் பதிலாக லேவியரின் மிருகஜீவன்களையும் எனக்கென்று பிரித்தெடு, நான் கர்த்தர்" (எண் 3:40,41) என்று சொல்லுகிறார்.

இவர்களுடைய எண்ணிக்கை 22,273 (எண் 3:43) எண் 3:39 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பதைவிட 273 பேர் அதிகம்.

கர்த்தர் லேவியரையும், லேவியருடைய மிருகஜீவனைப்பற்றியும் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறான யாவுக்கும் பதிலாக லேவியரை எனக்கென்று பிரித்தெடு (எண் 3:41,45).

2. இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களிலுள்ள தலையீற்றான யாவுக்கும் பதிலாக லேவியரின் மிருகஜீவன்களை எனக்கென்று பிரித்தெடு.

யாத் 13:2,12-13 ஆகிய வசனங்களின் பிரகாரம் இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களிலுள்ள தலையீற்றானவை அனைத்தும் கர்த்தருக்குரியது. பன்னிரண்டு கோத்திரத்தாரின் தலையீற்றுகளின் மொத்த தொகை லேவியரின் தலையீற்றுகளின் மொத்த தொகைக்கு ஓரளவு சமமாக இருக்கிறது. இஸ்ரவேலரின் தலையீற்றுகளைக் கிரயம் செலுத்தி மீட்க வேண்டும். அந்தக் கிரயம் ஆசாரியருக்கும், லேவியருக்கும் அவர்கள் செய்யும் பணிவிடைகளுக்காகக் கொடுக்கப்படும். (யாத் 12:13; யாத் 34:19-20).

யாத் 13:2,12-13 ஆகிய வசனங்களில் இந்தப் பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு இருந்த இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறானவர்களை பற்றி இங்கு கூறப்படவில்லை.

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் இஸ்ரவேல் புத்திரரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதற்பேறான ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்படுகிறார்கள். அவர்களுடைய நாமங்கள் எண்ணித் தொகையேற்றப்படுகிறது.

மோசே, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறான யாவரையும் எண்ணுகிறார். ஒருமாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதற்பேறான ஆண்பிள்ளைகளெல்லாரும் பேர்பேராக எண்ணப்படுகிறார்கள். அவர்களுடைய மொத்த எண்ணிக்கை, இருபத்தீராயிரத்து இருநூற்று எழுபத்துமூன்று ஆகும் (எண் *3:42,43*).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறியபோது, கர்த்தர் முதற்பேறான ஆண்பிள்ளைகளையெல்லாம் பரிசுத்தம்பண்ணுகிறார். ஆகையினால் அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறிய பின்பு பிறந்த ஆண்பிள்ளைகள் மாத்திரமே, இந்த எண்ணிக்கையில் எண்ணப்படுகிறார்கள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும் மிருகஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது" என்று சொல்லுகிறார் (யாத் *13:2*).

இஸ்ரவேல் புத்திரரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதற்பேறான ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை மாத்திரம் *22,000* பேராகயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இத்தனை ஆண்பிள்ளைகள் இருக்கும்போது, இந்த எண்ணிக்கைக்கு சமமாக பெண்பிள்ளைகளும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. இவர்கள் எல்லோரும், இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறி வந்த பின்பு, முதல் வருஷத்திலே பிறந்தவர்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் இத்தனை திரளான பிள்ளைகள் முதல் வருஷத்தில் பிறந்திருக்கவேண்டுமென்றால், அவர்கள் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்த கடைசி வருஷத்தில், அவர்கள் மத்தியிலே ஏராளமான விவாக சம்பந்தங்கள் நடைபெற்றிருக்கவேண்டும் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்த கடைசி அடிமை வருஷத்திலே, அவர்கள் அங்கு அநேக பாடுகளையும், அதிகமான வேதனைகளையும் அனுபவித்தார்கள். தங்களுடைய துன்பங்களுக்கும், உபத்திரவங்களுக்கும் மத்தியிலும், இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்குள்ளே விவாகம் செய்துகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைத்தனத்திலிருந்தபோது தங்களுடைய வேதனைகளுக்கும் உபத்திரவங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையின்மீதும், அவருடைய பலத்தின்மீதும் நம்பிக்கை வைக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் பலத்தினாலும் தங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார் என்னும் நம்பிக்கையோடிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையிலேயே இஸ்ரவேல் புத்திரர், எகிப்து தேசத்திலே தாங்கள் அனுபவித்த கடைசி வருஷ அடிமைத்தனத்தின்போது, தங்களுக்குள்ளே ஏராளமான விவாக சம்பந்தங்களைப்பண்ணுகிறார்கள்.

தங்களுடைய பிள்ளைகள் எகிப்தின் அடிமைத்தனத்திலே பிறந்தாலும், கர்த்தர் தங்களை இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பார் என்றும், தங்களுடைய பிள்ளைகள் தங்களோடுகூட விடுவிக்கப்பட்டு, சுதந்தரமாகயிருப்பார்கள் என்றும் இஸ்ரவேல் புத்திரர் நம்பிக்கையோடிருக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறார். அவர்களை வனாந்தரத்தின் பாதை வழியாக அழைத்துக்கொண்டு போகிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை வனாந்தரத்திலே பாதுகாத்து பராமரிக்கிறார். வனாந்தரத்திலே இஸ்ரவேல் ஜனங்களுடைய ஜீவன்கள் பாதுகாக்கப்படுவது மாத்திரமல்ல, அவர்கள் பலுகிப்பெருகவும் செய்கிறார்கள். வனாந்தரம் வறட்சியாகயிருந்தாலும், இஸ்ரவேல் ஜனத்தாருடைய ஸ்திரீகளின் கர்ப்பங்கள் வறட்சியாயில்லை. கர்த்தர் அவர்களுடைய கர்ப்பங்களை ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள முதற்பேறான ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை 22,273 பேராயிருக்கிறது. லேவியரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை 22,000 பேராகயிருக்கிறது. இரண்டு எண்ணிக்கைகளும் ஓரளவு சமீபமாயிருக்கிறது. லேவியரின் ஆண்பிள்ளைகளைவிட, இஸ்ரவேலின் முதற்பேறான ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கை 273 பேர் அதிகமாயிருக்கிறது.

இஸ்ரவேலின் முதற்பேறான ஆண்பிள்ளைகள் எல்லோரும் கர்த்தருக்குரியவர்கள். கர்த்தர் அவர்களுக்கு பதிலாக லேவி புத்திரரை தமக்கு சொந்தமாக நியமித்துக்கொள்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறான யாவருக்கும் பதிலாக லேவியரையும், அவர்களுடைய மிருகஜீவன்களுக்குப் பதிலாக லேவியரின் மிருகஜீவன்களையும் பிரித்தெடு; லேவியர் என்னுடையவர்களாயிருப்பார்கள்; நான் கர்த்தர்" (எண் 3:44,45) என்று சொல்லுகிறார்.

எண் 3:41 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் பிரமாணம் மறுபடியும் இங்கு கூறப்படுகிறது.

கர்த்தர் 22,000 லேவியரைக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரில் முதற்பேறான 22,000 பேரையும் மீட்டுக்கொள்கிறார். இஸ்ரவேல் புத்திரரில் இன்னும் மீட்கப்படவேண்டியவர்கள் 273 பேர் இருக்கிறார்கள். இவர்களை மீட்பதற்கு லேவியர்கள் இல்லை. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரரில் மீட்கப்படவேண்டியவர்களுக்காக, மீட்கப்படும் திரவியத்தை கர்த்தர் நியமனம் பண்ணுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரருடைய முதற்பேறுகளில் லேவியரின் தொகைக்கு அதிகமாயிருந்து, மீட்கப்படவேண்டிய இருநூற்று எழுபத்துமூன்றுபேரிடத்திலும், நீ தலைக்கு ஐந்து சேக்கல் வீதமாகப் பரிசுத்த சேக்கல் கணக்கின்படி வாங்குவாயாக; அந்தச் சேக்கலானது இருபது கேரா. லேவியருடைய தொகைக்கு அதிகமானவர்கள் மீட்கப்படும் திரவியத்தை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுப்பாயாக" (எண் 3:46-48) என்று சொல்லுகிறார்.

லேவியரின் தொகையைவிட இஸ்ரவேல் புத்திரருடைய முதற்பேறுகளின் தொகை அதிகமாக இருக்கிறது. 273 முதற்பேறுகள் அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள் தலைக்கு ஐந்து சேக்கல் வீதமாகப் பரிசுத்த சேக்கல் கணக்கின்படி மீட்கப்பட வேண்டும். (எண் 3:46-51).

முதற்பேறுகளை மீட்பது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. மீட்கப்படவேண்டிய இருநூற்று எழுபத்து மூன்று பேரிடத்திலும், தலைக்கு ஐந்து சேக்கல் வீதமாகப் பரிசுத்த சேக்கல் கணக்கின்படி வாங்க வேண்டும்.

2. இந்தத் திரவியத்தை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுக்க வேண்டும் (எண் 3:48).

மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக மீட்கப்படவேண்டியவர்களுக்கு ஈடாக, மீட்கப்படும் திரவியத்தை வாங்குகிறார். அந்த திரவியம் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் கொடுக்கப்படவேண்டிய திரவியமாகும். இஸ்ரவேல் புத்திரருடைய முதற்பேறுகளை மீட்பதற்கு, கர்த்தர் தலைக்கு ஐந்து சேக்கல் வீதமாக நியமிக்கிறார்.

மோசே கர்த்தருடைய கட்டளையின்படியே, லேவியரால் மீட்கப்பட்டவர்களின் தொகைக்கு அதிகமாயிருந்து, இன்னும் மீட்கப்படவேண்டியவர்களுக்கு ஈடாக மோசே இஸ்ரவேல் புத்திரருடைய முதற்பேறானவர்களிடத்தில், ஆயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து சேக்கலாகிய திரவியத்தை, பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி வாங்குகிறார். மோசே கர்த்தருடைய வாக்கின்படியே மீட்கப்பட்டவர்களின் கிரயத்தை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும், கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே கொடுக்கிறார் (எண் 3:49-51).

4 அதிகாரம்

இதற்கு முந்தின அதிகாரத்தில், லேவி கோத்திரத்தார் எண்ணித் தொகையேற்றப்பட்டபோது, அவர்களில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டார்கள் (எண் 3:15).

இந்த அதிகாரத்தில் லேவி கோத்திரத்தார் மறுபடியுமாக எண்ணப்படுகிறார்கள். அவர்கள் ஏற்கெனவே எண்ணப்பட்டதுபோல ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்படாமல், ஆசரிப்புக் கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ள எல்லாரும் எண்ணப்படுகிறார்கள் (எண் 4:3).

ஒரு மனுஷனுக்கு முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரையிலுமுள்ள காலம் நல்ல ஆரோக்கியமான காலமாகயிருக்கும். அவனுடைய சரீரம் திடகாத்திரமாகயிருக்கும். லேவியர் தங்கள் ஜீவியத்தின் பிரதானமான பகுதியிலே ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்யவேண்டும் என்று கர்த்தர் நியமனம்பண்ணுகிறார்.

கோகாத் புத்திரர் முதலாவதாக எண்ணப்படுகிறார்கள். அவர்களுக்கு ஆசரிப்புக்கூடாத்திலே பணிவிடை கொடுக்கப்படுகிறது (எண் 4:2-20).

கெர்சோன் புத்திரர் எண்ணப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை கொடுக்கப்படுகிறது (எண் 4:21-28).

மெராரிபுத்திரர் எண்ணப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை கொடுக்கப்படுகிறது (எண் 4:29-33).

லேவியருடைய மூன்று பிதாக்களின் வீட்டு வம்சங்களின்படி எண்ணப்பட்டவர்களின் எண்ணிக்கையும், லேவி புத்திரரின் மொத்த எண்ணிக்கையும் (எண் 4:34-49).

கோகாத் புத்திரர்
எண் 4:1-20

எண் 4:1. கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

எண் 4:2. லேவியின் புத்திரருக்குள்ளே இருக்கிற கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில்,

எண் 4:3. ஆசரிப்புக் கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகையிடுவாயாக.

எண் 4:4. ஆசரிப்புக் கூடாரத்திலே கோகாத் புத்திரரின் பணிவிடை மகா பரிசுத்தமானவைகளுக்குரியது.

எண் 4:5. பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் வந்து, மறைவின் திரைச்சீலையை இறக்கி, அதினாலே சாட்சியின் பெட்டியை மூடி,

எண் 4:6. அதின்மேல் தகசுத்தோல் மூடியைப் போட்டு, அதின்மேல் முற்றிலும் நீலமான துப்பட்டியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சி,

எண் 4:7. சமுகத்தப்ப மேஜையின்மேல் நீலத்துப்பட்டியை விரித்து, தட்டுகளையும் தூபக்கரண்டிகளையும் கிண்ணங்களையும் மூடுகிற தட்டுகளையும் அதின்மேல் வைப்பார்களாக; நித்திய அப்பமும் அதின்மேல் இருக்கக்கடவது.

எண் 4:8. அவைகளின்மேல் அவர்கள் சிவப்புத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சி,

எண் 4:9. இளநீலத் துப்பட்டியை எடுத்து, குத்துவிளக்குத் தண்டையும், அதின் அகல்களையும், அதின் கத்தரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும், அதற்குரிய எண்ணெய்ப் பாத்திரங்களையும் மூடி,

எண் 4:10. அதையும் அதற்கடுத்த தட்டுமுட்டுகள் யாவையும் தகசுத்தோல் மூடிக்குள்ளே போட்டு, அதை ஒரு தண்டிலே கட்டி,

எண் 4:11. பொற்பீடத்தின்மேல் இளநீலத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சி,

எண் 4:12. பரிசுத்த ஸ்தலத்தில் வழங்கும் ஆராதனைக்கேற்ற சகல தட்டுமுட்டுகளையும் எடுத்து, இளநீலத் துப்பட்டியிலே போட்டு, தகசுத்தோல் மூடியினால் மூடி, தண்டின்மேல் கட்டி,

எண் 4:13. பலிபீடத்தைச் சாம்பலற விளக்கி, அதின்மேல் இரத்தாம்பரத் துப்பட்டியை விரித்து,

எண் 4:14. அதின்மேல் ஆராதனைக்கேற்ற சகல பணிமுட்டுகளாகிய கலசங்களையும், முள் துறடுகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், கலசங்களையும், பலிபீடத்திற்கடுத்த எல்லாப் பாத்திரங்களையும், அதின் மேல் வைத்து, அதின்மேல் தகசுத்தோல் மூடியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சக்கடவர்கள்.

எண் 4:15. பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தையும் அதினுடைய சகல பணிமுட்டுகளையும் மூடித் தீர்ந்தபின்பு, கோகாத் புத்திரர் அதை எடுத்துக்கொண்டுபோகிறதற்கு வரக்கடவர்கள்; அவர்கள் சாகாதபடிக்கு பரிசுத்தமானதைத் தொடாதிருக்கக்கடவர்கள்; ஆசரிப்புக் கூடாரத்திலே கோகாத் புத்திரர் சுமக்கும் சுமை இதுவே.

எண் 4:16. ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார், விளக்குக்கு எண்ணெயையும், சுகந்த தூபவர்க்கத்தையும், தினந்தோறும் இடும் போஜனபலியையும், அபிஷேக தைலத்தையும், வாசஸ்தலம் முழுவதையும், அதிலுள்ள யாவையும், பரிசுத்தஸ்தலத்தையும் அதின் பணிமுட்டுகளையும், விசாரிக்கக்கடவன் என்றார்.

எண் 4:17. கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

எண் 4:18. லேவியருக்குள்ளே கோகாத் வம்சமாகிய கோத்திரத்தார் அழிந்துபோகாதபடி பாருங்கள்.

எண் 4:19. அவர்கள் மகா பரிசுத்தமானவைகளைக் கிட்டுகையில், சாகாமல் உயிரோடிருக்கும்படிக்கு, நீங்கள் அவர்களுக்காகச் செய்யவேண்டியதாவது:

எண் 4:20. ஆரோனும் அவன் குமாரரும் வந்து, அவர்களில் அவனவனை அவனவன் செய்யும் வேலைக்கும் அவனவன் சுமக்கும் சுமைக்கும் நியமிக்கக்கடவர்கள்; அவர்களோ சாகதபடிக்குப் பரிசுத்தமானவைகள் மூடப்படும்போது பார்க்கிறதற்கு உட்பிரவேசியாமல் இருப்பார்களாக என்றார்.

லேவி கோத்திரத்தார் மறுபடியுமாய் எண்ணப்படுகிறார்கள். கர்த்தர் லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து தமக்கு விசேஷித்த ஜனமாக தெரிந்துகொள்கிறார். இவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்யவேண்டும். லேவி கோத்திரத்தார் முதன் முறையாக எண்ணப்பட்டபோது, அவர்கள் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டார்கள். இப்போதோ அவர்களில் ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்யும் சேனைக்குட்படத்தக்கவர்கள் மாத்திரம் எண்ணப்படுகிறார்கள். அவர்களுடைய வயது முப்பது முதல் ஐம்பது வயதிற்குள் இருக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "லேவியின் புத்திரருக்குள்ளே இருக்கிற கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில், ஆசரிப்புக் கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகையிடுவாயாக" (எண் 4:1-3) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஆசாரியருக்கும், கோகாத் புத்திரருக்கும் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. லேவியின் புத்திரருக்குள்ளே இருக்கிற கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில், ஆசரிப்புக் கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகையிடவேண்டும் (எண் 4:2-3).

2. மகா பரிசுத்தமானவைகளைக் காவல் காப்பது, பராமரிப்பது, தூக்கிச் சுமப்பது ஆகியவை கோகாத் புத்திரரின் பணிவிடையாகும். (எண் 4:4).

3. பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் வந்து, மறைவின் திரைச்சீலையை இறக்கி, அதினாலே சாட்சியின் பெட்டியை மூடவேண்டும் (எண் 4:5).

4. சாட்சியின் பெட்டியின் மல் தகசுத்தோல் மூடியைப் போட்டு, அதின்மேல் முற்றிலும் நீலமான துப்பட்டியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சவேண்டும் (எண் 4:6).

5. சமுகத்தப்ப மேஜையின்மேல் நீலத் துப்பட்டியை விரித்து, தட்டுகளையும் தூபக்கரண்டிகளையும் கிண்ணங்களையும் மூடுகிற தட்டுகளையும் அதின்மேல் வைப்பார்களாக; நித்திய அப்பமும் அதின்மேல் இருக்கக்கடவது (எண் 4:7); அவைகளின்மேல் அவர்கள் சிவப்புத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சவேண்டும் (எண் 4:8).

6. இளநீலத் துப்பட்டியை எடுத்து, குத்துவிளக்குத்தண்டையும், அதின் அகல்களையும், அதின் கத்தரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும், அதற்குரிய எண்ணெய்ப் பாத்திரங்களையும் மூடி, அதையும் அதற்கடுத்த தட்டுமுட்டுகள் யாவையும் தகசுத்தோல் மூடிக்குள்ளே போட்டு, அதை ஒரு தண்டிலே கட்டவேண்டும் (எண் 4:9-10).

7. பொற்பீடத்தின்மேல் இளநீலத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சவேண்டும் (எண் 4:11).

8. பரிசுத்த ஸ்தலத்தில் வழங்கும் ஆராதனைக்கேற்ற சகல தட்டுமுட்டுகளையும் எடுத்து, இளநீலத் துப்பட்டியிலே போட்டு, தகசுத்தோல் மூடியினால் மூடி, தண்டின்மேல் கட்டவேண்டும் (எண் 4:12).

9. பலிபீடத்தைச் சாம்பலற விளக்கி, அதின்மேல் இரத்தாம்பரத் துப்பட்டியை விரித்து, அதின்மேல் ஆராதனைக்கேற்ற சகல பணிமுட்டுகளாகிய கலசங்களையும், முள் துறடுகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், கலசங்களையும், பலிபீடத்திற்கடுத்த எல்லாப் பாத்திரங்களையும், அதின் மேல் வைத்து, அதின்மேல் தகசுத்தோல் மூடியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சக் கடவர்கள் (எண் 4:13-14).

10. பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தையும் அதினுடைய சகல பணிமுட்டுகளையும் மூடித் தீர்ந்தபின்பு, கோகாத் புத்திரர் அதை எடுத்துக்கொண்டுபோகிறதற்கு வரக்கடவர்கள்; அவர்கள் சாகாதபடிக்கு பரிசுத்தமானதைத் தொடாதிருக்கக் கடவர்கள் (எண் 4:15; எண் 7:9).

ஆசரிப்புக் கூடாரத்தில் வேலை செய்கிறவர்கள் முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். இருபது வருஷ காலம் ஊழியம் செய்துவிட்டு பின்பு ஓய்வுபெற வேண்டும்(எண் 4:3,23,30). போர்வீரர்கள் 20 வயதில் தங்கள் சேவையை ஆரம்பித்து தங்களால் யுத்தம் பண்ண முடியும் வரையிலும் யுத்தவீரர்களாக இருக்கலாம் (எண் 1:18-45).

ஆசாரிய ஊழியம் செய்வதற்கு முப்பது வயது என்று நியமிக்கப்பட்டது பின்பு 25 வயது என்று மாற்றி நிர்ணயிக்கப்படுகிறது. ஒருவேளை ஆசாரிய ஊழியம் செய்வதற்கும், ஆசரிப்புக் கூடாரத்தைக் கழற்றி, சுமந்து ஸ்தாபனம் பண்ணுவதற்கும் அதிக ஆட்கள் தேவைப்பட்டிருக்கலாம். (எண் 8:24-25). தாவீதின் காலத்தில் ஆசாரிய ஊழியம் செய்வதற்கு 20 வயது நிரம்பியிருக்க வேண்டுமென்று மறுபடியும் மாற்றி நிர்ணயம் பண்ணப்படுகிறது (1நாளா 23:2; 2நாளா 31:17).

நாம் நல்ல ஆரோக்கியத்தோடும், சரீர பெலத்தோடும், வாலிப வயதிலும் இருக்கும்போது, நாம் கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் தங்கள் முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும், முழுபெலத்தோடும் ஊழியம் செய்யவேண்டும். ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் முதியோர்களாகயிருப்பார்கள். அவர்களுடைய சரீர பெலன் குறைந்துபோயிருக்கும்.

வயது முதிர்ந்த லேவியர்களால் ஆசரிப்புக்கூடாரத்திலே கடினமான பணிவிடைகளை செய்யமுடியாது. அவர்களால் பரிசுத்த பணிமுட்டுக்களை சுமந்து செல்ல முடியாது. ஆகையினால் கர்த்தர் லேவியரை மறுபடியுமாய் எண்ணச் சொல்லும்போது, அவர்களில் ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்யும் சேனைக்குட்படத்தக்க முப்பது வயது முதல் ஐம்பது வயது வரைக்குமுள்ளவர்களை மாத்திரம் எண்ணச்சொல்லுகிறார்.

லேவியர்கள் முப்பது வயது ஆகும் வரையிலும், ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்வதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு இருபத்தைந்து வயதாகும்போது, மற்ற லேவியர்களுக்கு உதவிக்காரராக பணிவிடை செய்யலாம்.

“லேவியருக்குரிய கட்டளை என்னவென்றால் : இருபத்தைந்து வயதுமுதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள யாவரும் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்யும் சேனையிலே சேவிக்க வரவேண்டும்” (எண் 8:24).

தாவீதின் காலத்திலே, ஆசரிப்புக்கூடாரத்தில் அதிகமான வேலைகள் செய்யவேண்டியதாகயிருந்தது. ஆகையினால் இருபது வயது நிரம்பிய லேவியர்களும் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்ய ஆரம்பித்தார்கள்.

“தங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே, பிதாக்களில் தலைமையாயிருந்த லேவி புத்திரரின் பேர்டாப்பின்படியே, தலைதலையாக எண்ணப்பட்ட இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட இவர்களுடைய சந்ததியார் கர்த்தருடைய ஆலயத்துப் பணிவிடையைச் செய்தார்கள்” (1நாளா 23:24).

தாவீதின் காலத்தைப்போலவே, எஸ்றாவின் காலத்திலும் இருபது வயது நிரம்பிய லேவியர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை செய்வதற்கு நியமிக்கப்பட்டார்கள்.

“அவர்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்திற்கு வந்த இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதத்திலே, செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும், மற்றுமுள்ள அவர்கள் சகோதரராகிய ஆசாரியரும் லேவியரும், சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு வந்த அனைவரும், ஆரம்பஞ்செய்து, இருபதுவயதுமுதல் அதற்கு மேற்பட்ட லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை நடத்தும்படி வைத்தார்கள்” (எஸ்றா 3:8).

லேவியர்கள் இருபது வயதிலேயே ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்வதற்கு நியமிக்கப்பட்டாலும், அவர்கள் தங்கள் பணிவிடைகளை செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பாக, ஐந்து வருஷங்களுக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளை கற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் தங்களுடைய ஊழியத்தை செய்வதற்காக காத்திருக்கவேண்டும். லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைகளுக்கு, இந்த ஐந்து வருஷகாலத்தில், தங்களை தகுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

தாவீதின் காலத்தில், லேவியர் பத்து வருஷங்களாக, ஆசரிப்புக்கூடாரத்தின் வேலையை செய்வதற்கு பயிற்சி பெற்றார்கள். லேவியருக்கு இருபது வயது முதல் முப்பது வயது வரையிலுமுள்ள காலம் ஆசரிப்புக்கூடார வேலைகளை செய்வதற்கு பயிற்சி பெறும் காலமாகும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் யோவான்ஸ்நானன் முப்பதாவது வயதில் ஊழியத்தை ஆரம்பித்தார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய முப்பதாவது வயதிலேயே ஊழியம் செய்ய ஆரம்பிக்கிறார்.

இளவயதிலேயே ஊழியம் செய்ய ஆரம்பிக்கிறவர்கள் தங்கள் இருதயத்தில் இறுமாப்படைந்துவிடக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கவேண்டும். அவர்கள் எல்லாவற்றையும் நிதானித்து அறியும் பக்குவமுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவசரப்பட்டு ஊழியம் செய்வதைவிட, பொறுமையாயும், நிதானமாயும் ஊழியம் செய்வது நல்லது. அப்படிப்பட்ட ஊழியமே நிலைத்து நிற்கும்.

"அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது" (1தீமோ 3:6).

கர்த்தருடைய வார்த்தைகளை உபதேசம்பண்ணுகிறவர்கள், முதலாவதாக சத்தியத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

"மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும்; குற்றஞ் சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம்" (1தீமோ 3:10).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பிரயாணப்பட்டுப்போகும்போது, லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தையும் அதிலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களையும் சுமந்து செல்லவேண்டும். ஐம்பது வயதிற்கு மேற்பட்ட லேவியர்களால் இதுபோன்ற கடினமான வேலைகளை செய்ய முடியாது. ஆகையினால் ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்வதற்கு, ஐம்பது வயதிற்கு மேற்பட்ட லேவியர்கள் யாரும் எண்ணப்படவில்லை.

கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளைப்பற்றிச் சொல்லும்போது, "ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்யும் சேனை" என்று சொல்லுகிறார். லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்தாலும், அவர்கள் கர்த்தருடைய சேனையிலே வேலை செய்கிறார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்ய பிரவேசிக்கிறவர்கள், ஒரு சேனையிலே பணிபுரியும் யுத்தவீரர்களைப்போல பிரவேசிக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்கள், அவருடைய சேனையிலே யுத்தம்பண்ணுகிற யுத்தவீரர்களாக தங்களை பாவித்துக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருக்கு நல்ல போர்ச்சேவகராக சேவை செய்யவேண்டும். "நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி" (2தீமோ 2:3).

கர்த்தர் லேவியரை எண்ணித்தொகையேற்றச் செல்லும்போது, முதலாவதாக கோகாத் புத்திரரைப்பற்றிச் சொல்லுகிறார். "ஆசரிப்புக் கூடாரத்திலே கோகாத் புத்திரரின் பணிவிடை மகா பரிசுத்தமானவைகளுக்குரியது" (எண் 4:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

உடன்படிக்கைப் பெட்டி, சமுகத்தப்ப மேஜை, விளக்குத்தண்டு, பொன்பலிபீடமும், வெண்கல பலிபீடமும், பணிமுட்டுகள் ஆகியவை அனைத்தும் மகா பரிசுத்தமானவை. இதற்கான எபிரெய வார்த்தை "கோடேஷ்" என்பதாகும்.

இஸ்ரவேல் புத்திரர் பிரயாணமாய்ப் புறப்பட்டுப்போகும்போது, கோகாத் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தை பிரித்தெடுக்கவேண்டும். அவர்கள் பிரயாணம் முடிந்து பாளயமிறங்கும்போது, கோகாத் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தைப் போடவேண்டும். ஆசரிப்புக்கூடாரத்தைப் பிரிப்பதும், அதை மறுபடியுன்யாய்ப் போடுவதும், ஒரே நாளில் செய்து முடிக்கவேண்டிய வேலை.

ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களையெல்லாம் கோகாத் புத்திரரே சுமந்து செல்லவேண்டும். பரிசுத்த பணிமுட்டுக்களெல்லாம் மூடப்பட்டிருக்கவேண்டும். உடன்படிக்கைப் பெட்டிக்கும், சமுகத்தப்ப மேஜைக்கும் மூன்று மூடிகள் போடப்படுகிறது. மற்ற பணிமுட்டுக்கள் அனைத்திற்கும் இரண்டு மூடிகள் மாத்திரம் போடப்படுகிறது.

பலிபீடத்திலுள்ள சாம்பல் எல்லாம் அகற்றப்படுகிறது. பலிபீடம் சாம்பலற விளக்கப்படுகிறது. பலிபீடத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சுமந்து செல்லும்போது அது சாம்பலற விளக்கப்பட்டு, சுத்தமான பலிபீடமாயிருக்கிறது.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் வந்து, மறைவின் திரைச்சீலையை இறக்கி, அதினாலே சாட்சியின் பெட்டியை மூடவேண்டும் (எண் 4:5) என்றும்,

அதின்மேல் தகசுத்தோல் மூடியைப் போட்டு, அதின்மேல் முற்றிலும் நீலமான துப்பட்டியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சி, சமுகத்தப்ப மேஜையின்மேல் நீலத்துப்பட்டியை விரித்து, தட்டுகளையும் தூபக்கரண்டிகளையும் கிண்ணங்களையும் மூடுகிற தட்டுகளையும் அதின்மேல் வைப்பார்களாக; நித்திய அப்பமும் அதின்மேல் இருக்கக்கடவது (எண் 4:6,7) என்றும் சொல்லுகிறார்.

பாளயம் புறப்படும்போது ஆசாரியர் மட்டுமே ஆசரிப்புக் கூடாரத்தைப் பிரிப்பது, சுமப்பது, ஸ்தாபனம் பண்ணுவது ஆகிய வேலைகளைச் செய்யவேண்டும். சாட்சிப்பெட்டியை மறைவின் திரைச்சீலையினால் மூடவேண்டும். பரிசுத்தமானவைகளைச் சாதாரண லேவியனோ, ஆசாரிய ஊழியம் செய்யாதவனோ தொடக்கூடாது. சாட்சியின் பெட்டி திரைச்சீலையினால் மூடப்பட்ட பிறகே, அதை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சுமந்து செல்ல வேண்டும் (எண் 4:15). ஆசாரியர் தவிர இந்த வேலையை வேறுயாரும் செய்யக்கூடாது. செய்தால் அவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்படும். (எண் 1:51; எண் 3:10; எண் 18:4-7).

பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் நடுவே இந்தத் திரைச்சீலை இருக்கிறது. (யாத் 26:31). இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது இந்தத் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது (மத் 27:51).

மகாபரிசுத்தமானவைகளை மூடுவதற்கு துப்பட்டிகள் பயன்படுத்தப்படுகிறது. அவை மூன்று வர்ணங்களில் உள்ளது. அதன் விவரம் வருமாறு :

1. நீலத்துப்பட்டி - பெட்டி (எண் 4:5-6), சமுகத்தப்ப மேஜை (எண் 4:7), விளக்குத்தண்டு (எண் 4:9), பொன்பலிபீடம் (எண் 4:11) ஆகியவற்றின் மூடி.

2. சிவப்பு துப்பட்டி - சமுகத்தப்ப மேஜையின் மீது நீலத்துப்பட்டி விரிக்கப்பட்ட பின்பு அதன்மீது பணிமுட்டுகளும், சமுகத்தப்பமும் வைக்கப்படும். அதன் பின்பு அது சிவப்பு துப்பட்டியினால் மூடப்படும். (எண் 4:7-8)

3. இளநீலத்துப்பட்டி - வெண்கலப் பலிபீடத்தை மூடுவதற்குப் பயன்படும். (எண் 4:13)

துப்பட்டிகள் தவிர, ஆசரிப்புக் கூடாரத்தின் எல்லா பணிமுட்டுகளும் பிரயாணம் பண்ணும் போது தகசுத்தோல்களால் மூடப்படும் (எண் 4:6,8,10,12,14). மழை, வெயில் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்காக இவற்றை இவ்வாறு மூடுவது வழக்கம். இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணாமல், பாளயமிறங்கியிருக்கும் போது இந்த மூடிகளெல்லாம் வாசஸ்தலத்தின் ஒரு பகுதியில் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும். ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள எல்லா பணிமுட்டுகளும் பிரயாணம் பண்ணுவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். உடன்படிக்கைப் பெட்டியிலுள்ள தண்டுகளும், கழற்றப்படாமல் பெட்டியிலேயே இருக்கவேண்டும் (யாத் 25:15).

அவைகளின்மேல் அவர்கள் சிவப்புத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சி, இளநீலத் துப்பட்டியை எடுத்து, குத்துவிளக்குத்தண்டையும், அதின் அகல்களையும், அதின் கத்தரிகளையும், சாம்பல் பாத்திரங்களையும், அதற்குரிய எண்ணெய்ப் பாத்திரங்களையும் மூடவேண்டும் (எண் 4:8,9) என்றும்,

அதையும் அதற்கடுத்த தட்டுமுட்டுகள் யாவையும் தகசுத்தோல் மூடிக்குள்ளே போட்டு, அதை ஒரு தண்டிலே கட்டி, பொற்பீடத்தின்மேல் இளநீலத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியால் மூடி, அதின் தண்டுகளைப் பாய்ச்சவேண்டும் (எண் 4:10,11) என்றும்,

பரிசுத்த ஸ்தலத்தில் வழங்கும் ஆராதனைக்கேற்ற சகல தட்டுமுட்டுகளையும் எடுத்து, இளநீலத் துப்பட்டியிலே போட்டு, தகசுத்தோல் மூடியினால் மூடி, தண்டின்மேல் கட்டி, பலிபீடத்தைச் சாம்பலற விளக்கி, அதின்மேல் இரத்தாம்பரத் துப்பட்டியை விரித்து, அதின்மேல் ஆராதனைக்கேற்ற சகல பணிமுட்டுகளாகிய கலசங்களையும், முள் துறடுகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், கலசங்களையும், பலிபீடத்திற்கடுத்த எல்லாப் பாத்திரங்களையும், அதின் மேல் வைத்து, அதின்மேல் தகசுத்தோல் மூடியை விரித்து, அதின் தண்டுகளைப் பாய்ச்சக்கடவர்கள் (எண் 4:12-14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பாளயம் புறப்படும்போது, ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்தையும் அதினுடைய சகல பணிமுட்டுகளையும் மூடித் தீர்ந்தபின்பு, கோகாத் புத்திரர் அதை எடுத்துக்கொண்டுபோகிறதற்கு வரக்கடவர்கள்; அவர்கள் சாகாதபடிக்கு பரிசுத்தமானதைத் தொடாதிருக்கக்கடவர்கள்; ஆசரிப்புக் கூடாரத்திலே கோகாத் புத்திரர் சுமக்கும் சுமை இதுவே (எண் 4:15) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

சில பொருட்களை வண்டிகளிலும், மிருகஜீவன்களிலும் ஏற்றிச் செல்கிறார்கள். ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகள் அனைத்தையும் மனுஷர் சுமந்து செல்கிறார்கள் (எண் 7:1-9).

ஆசாரியர்கள் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். ஆனாலும் சகல பணிமுட்டுகளையும் மூடி தீர்ந்தபின்பே, அவர்கள் அதைத் தொடவேண்டும். இல்லையெனில், அவர்களுக்கு மரணம் நிச்சயம். (எண் 4:5-14).

பரிசுத்த பணிமுட்டுக்களெல்லாம் மூடப்பட்டிருக்கிறது. அவை வெளியே தெரியாமல் மூடி மறைக்கப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலம், சத்தியம் வெளிப்படுத்தப்படாமல் மூடி மறைக்கப்பட்டிருந்த காலம். அதற்கு அடையாளமாகவே பணிமுட்டுக்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலமோ வெளிச்சத்தின் காலம். இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் வெளிச்சத்தினால், மறைவாயிருந்த சத்தியங்களெல்லாம் வெளிப்படுத்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்திலே ஞானிகளுக்கும் மறைவாயிருந்த சத்தியங்கள், புதிய ஏற்பாட்டுக்காலத்திலே சாதாரண ஜனங்களுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் மூடிகளை மாத்திரமே பார்த்தார்கள். அந்த மூடிகளுக்குள்ளே இருந்த பரிசுத்த பணிமுட்டுக்களை அவர்களால் பார்க்க முடியவில்லை.

"இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலி களினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது" (எபி 10:1).

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சத்தியத்தை மூடியிருக்கிற சகல மூடல்களையும் முற்றிலுமாய் அகற்றிப்போடுவார்.

"சகல ஜனங்கள்மேலுமுள்ள முக்காட்டையும், சகல ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலையும், இந்த மலையிலே அகற்றிப்போடுவார்" (ஏசா 25:7).

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களையெல்லாம் மூடவேண்டும். அவற்றை மூடுவது இவர்களுடைய ஊழியம் (எண் 4:4,5). ஆரோனும் அவருடைய குமாரரும், பரிசுத்த ஸ்தலத்தையும், அதினுடைய சகல பணிமுட்டுக்களையும் மூடி தீர்ந்த பின்பு கோகாத் புத்திரர் அதை எடுத்துக்கொண்டு போகிறதற்கு வரவேண்டும்.

கோகாத் புத்திரர் சாகாதபடிக்கு பரிசுத்தமானது எதையும் தொடக்கூடாது. பரிசுத்த பணிமுட்டுக்களை அவர்கள் சுமக்கும்போது, அவற்றை மூடியிருக்கும் மூடிகளை மாத்திரமே தொட்டு தூக்குகிறார்கள். அவர்கள் பரிசுத்த பணிமுட்டுக்களை தொடுவதில்லை. இதுவே ஆசரிப்புக்கூடாரத்திலே கோகாத் புத்திரர் சுமப்பதற்கு நியமிக்கப்பட்டிருக்கிற சுமை ஆகும்.

ஆரோனின் மூத்த குமாரனாகிய எலெயாசார் கோகாத்தியர்மீது விசாரிப்புக்காரராக நியமிக்கப்படுகிறார். "ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார், விளக்குக்கு எண்ணெயையும், சுகந்த தூபவர்க்கத்தையும், தினந்தோறும் இடும் போஜனபலியையும், அபிஷேக தைலத்தையும், வாசஸ்தலம் முழுவதையும், அதிலுள்ள யாவையும், பரிசுத்தஸ்தலத்தையும் அதின் பணிமுட்டுகளையும், விசாரிக்கக்கடவன்" (எண் 4:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசரிப்புக்கூடாரத்திலே ஊழியம் செய்கிற லேவியர்கள் மிகுந்த பரிசுத்தத்தோடிருக்கவேண்டும். அவர்கள் தங்கள் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். வாசஸ்தலத்தில் சேருகிற அந்நியன் கொலைசெய்யப்படக்கடவன் (எண் 3:38) என்று கர்த்தர் ஏற்கெனவே எச்சரிப்பாய்ச் சொல்லியிருக்கிறார்.

லேவியர்கள் பரிசுத்த பணிமுட்டுக்களை தங்கள் கைகளால் தொடவும் கூடாது. அவற்றை தங்கள் கண்களால் பார்க்கவும் கூடாது. ஆசாரியர்கள் சகல பணிமுட்டுக்களையும் மூடவேண்டும். அவர்கள் மூடி தீர்த்த பின்பு கோகாத்தியர் அதை எடுத்துக்கொண்டுபோகிறதற்கு வரவேண்டும்.

"அவர்கள் சாகாதபடிக்கு பரிசுத்தமானதை தொடாதிருக்கக்கடவர்கள்" (எண் 4:14) என்று கர்த்தர் எச்சரிப்பாய்ச் சொல்லியிருக்கிறார். இப்போது அந்த எச்சரிப்பை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார், விளக்குக்கு எண்ணெயையும், சுகந்த தூபவர்க்கத்தையும், தினந்தோறும் இடும் போஜனபலியையும், அபிஷேக தைலத்தையும், வாசஸ்தலம் முழுவதையும், அதிலுள்ள யாவையும், பரிசுத்தஸ்தலத்தையும் அதின் பணிமுட்டுகளையும், விசாரிக்கக்கடவன் (எண் 4:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பிரதான ஆசாரியனுடைய காவல்விசாரிப்புக்களின் விவரம் வருமாறு:

1. விளக்குகளை எரியவைக்க வேண்டும்.
2. சுகந்த தூபவர்க்கத்தை ஆயத்தம்பண்ண வேண்டும்.
3. தினந்தோறும் போஜனபலியிடவேண்டும்.
4. எல்லா அபிஷேக வேலைகளையும் செய்ய வேண்டும்.
5. வாசஸ்தலம் முழுவதையும், அதிலுள்ள யாவையும், பரிசுத்தஸ்தலத்தையும் அதின் பணிமுட்டுகளையும், விசாரிக்க வேண்டும்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "லேவியருக்குள்ளே கோகாத் வம்சமாகிய கோத்திரத்தார் அழிந்துபோகாதபடி பாருங்கள்" (எண் 4:17,18) என்று சொல்லுகிறார்.

கோகாத் வம்சமாகிய கோத்திரத்தார் சாகாமல் உயிரோடிருக்கும்படிக்கு அவர்கள் என்ன செய்யவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கோகாத் வம்சமாகிய கோத்திரத்தார் மகா பரிசுத்தமானவைகளைக் கிட்டுகையில், சாகாமல் உயிரோடிருக்கும்படிக்கு, நீங்கள் அவர்களுக்காகச் செய்யவேண்டியதாவது: ஆரோனும் அவன் குமாரரும் வந்து, அவர்களில் அவனவனை அவனவன் செய்யும் வேலைக்கும் அவனவன் சுமக்கும் சுமைக்கும் நியமிக்கக்கடவர்கள்; அவர்களோ சாகதபடிக்குப் பரிசுத்தமானவைகள் மூடப்படும்போது பார்க்கிறதற்கு உட்பிரவேசியாமல் இருப்பார்களாக (எண் 4:19,20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் கோகாத் புத்திரரைப்பற்றி மூன்று கட்டளைகளை சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. லேவியருக்குள்ளே கோகாத் வம்சமாகிய கோத்திரத்தார் அழிந்துபோகாதபடி பாருங்கள்.

2. ஆரோனும் அவன் குமாரரும் வந்து, அவர்களில் அவனவனை அவனவன் செய்யும் வேலைக்கும் அவனவன் சுமக்கும் சுமைக்கும் நியமிக்கக்கடவர்கள் (எண் 4:20).

3. கோகாத் புத்திரர் சாகாதபடிக்குப் பரிசுத்தமானவைகள் மூடப்படும்போது பார்க்கிறதற்கு உட்பிரவேசியாமல் இருப்பார்களாக (எண் 4:20).

இந்த வசனத்தில் பரிசுத்தமானவைகள் என்பது கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியைக் குறிக்கும் என்றும், அது மூடப்படும்போது, அதைப் பார்க்கிறதற்கு லேவியர்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கக்கூடாது என்றும், அவர்கள் அங்கே உட்பிரவேசித்தால் செத்துப்போவார்கள் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுவார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருக்கு ஊழியம் செய்த ஊழியக்காரர்கள் பயத்தோடும், திகிலோடும், நடுக்கத்தோடும் ஊழியம் செய்தார்கள். அது இருளின் காலம். புதிய ஏற்பாட்டுக்காலத்திலே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இருளை அகற்றி வெளிச்சத்தைக் கொடுத்திருக்கிறார். நாம் கிருபாசனத்திற்கு முன்பாக தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை கண்களால் காண்பதற்கும், அவரை நோக்கிப் பார்ப்பதற்கும், அவரை கைகளால் தொடுவதற்கும் அப்போஸ்தலர்களுக்கு சிலாக்கியம் கிடைத்திருக்கிறது.

“ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்” (1யோவா 1:1).

கெர்சோன் புத்திரர்
எண் 4:21-28

எண் 4:21. பின்னும், கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 4:22. கெர்சோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க,

எண் 4:23. முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகை ஏற்றுவாயாக.

எண் 4:24. பணிவிடை செய்கிறதிலும் சுமக்கிறதிலும் கெர்சோன் வம்சத்தாரின் வேலையாவது:

எண் 4:25. அவர்கள் வாசஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் உரிய தொங்குதிரையையும், மூடியையும், அவைகளின் மேல் இருக்கிற தகசுத்தோல் மூடியையும், ஆசரிப்புக் கூடாரவாசல் மறைவையும்,

எண் 4:26. பிரகாரத்தின் தொங்குதிரைகளையும், வாசஸ்தலத்தண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தினுடைய வாசல் தொங்குதிரையையும், அவைகளின் கயிறுகளையும், அவைகளின் வேலைக்கடுத்த கருவிகள் யாவையும் சுமந்து, அவைகளுக்காகச் செய்யவேண்டிய யாவையும் செய்யக்கடவர்கள்.

எண் 4:27. கெர்சோன் புத்திரர் சுமக்கவேண்டிய சுமைகளும் செய்யவேண்டிய பணிவிடைகளாகிய சகல வேலைகளும் ஆரோனும் அவன் குமாரரும் சொல்லுகிறபடியே செய்யவேண்டும்; அவர்கள் சுமக்கவேண்டிய சகல சுமைகளையும் நீங்கள் நியமித்து, அவர்களிடத்தில் ஒப்புவியுங்கள்.

எண் 4:28. கெர்சோன் புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடை இதுதான்; அவர்களை வேலைகொள்ளும் விசாரணை, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத்தாமருடைய கைக்குள் இருக்கவேண்டும்.

லேவியின் மூன்று குமாரரில், கோகாத் வம்சமாகிய கோத்திரத்தாருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு கோத்திரத்தாருக்கு அதுபோல முக்கியத்துவம் கொடுக்கப்படாவிட்டாலும், அவர்களும் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்கிறார்கள்.

கெர்சோன் புத்திரரையும் எண்ணித் தொகையேற்றுமாறு கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "கெர்சோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகை ஏற்றுவாயாக" (எண் 4:21-23) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் கெர்சோன் வம்சத்தாருக்கு ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடைகளையும் நியமிக்கிறார். பணிவிடை செய்கிறதிலும் சுமக்கிறதிலும் கெர்சோன் வம்சத்தாரின் வேலையாவது: அவர்கள் வாசஸ்தலத்துக்கும் ஆசரிப்புக்கூடாரத்துக்கும் உரிய தொங்குதிரையையும், மூடியையும், அவைகளின் மேல் இருக்கிற தகசுத்தோல் மூடியையும், ஆசரிப்புக் கூடாரவாசல் மறைவையும், பிரகாரத்தின் தொங்குதிரைகளையும், வாசஸ்தலத்தண்டையிலும் பலி பீடத்தண்டையிலும் சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தினுடைய வாசல் தொங்குதிரையையும், அவைகளின் கயிறுகளையும், அவைகளின் வேலைக்கடுத்த கருவிகள் யாவையும் சுமந்து, அவைகளுக்காகச் செய்யவேண்டிய யாவையும் செய்யக்கடவர்கள் (எண் 4:24-26).

கெர்சோன் புத்திரர் சுமக்கவேண்டிய சுமைகளும் செய்யவேண்டிய பணிவிடைகளாகிய சகல வேலைகளும் ஆரோனும் அவன் குமாரரும் சொல்லுகிறபடியே செய்யவேண்டும்; அவர்கள் சுமக்கவேண்டிய சகல சுமைகளையும் நீங்கள் நியமித்து, அவர்களிடத்தில் ஒப்புவியுங்கள் (எண் 4:27).

கெர்சோன் புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடை இதுதான்; அவர்களை வேலைகொள்ளும் விசாரணை, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத்தாமருடைய கைக்குள் இருக்கவேண்டும் (எண் 4:28).

கெர்சோன் புத்திரரைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. கெர்சோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகை ஏற்றுவாயாக (எண் 4:22-23).

2. அவர்கள் வாசஸ்தலத்துக்கும் ஆசரிப்புக் கூடாரத்துக்கும் உரிய தொங்கு திரையையும், மூடியையும், அவைகளின் மேல் இருக்கிற தகசுத்தோல் மூடியையும், ஆசரிப்புக் கூடாரவாசல் மறைவையும், பிரகாரத்தின் தொங்குதிரைகளையும், வாசஸ்தலத் தண்டையிலும் பலி பீடத்தண்டையிலும் சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தினுடைய வாசல் தொங்குதிரையையும், அவைகளின் கயிறுகளையும், அவைகளின் வேலைக்கடுத்த கருவிகள் யாவையும் சுமந்து, அவைகளுக்காகச் செய்ய வேண்டிய யாவையும் செய்யக்கடவர்கள் (எண் 4:24-26).

3. கெர்சோன் புத்திரர் சுமக்கவேண்டிய சுமைகளும் செய்யவேண்டிய பணிவிடைகளாகிய சகல வேலைகளும் ஆரோனும் அவன் குமாரரும் சொல்லுகிறபடியே செய்யவேண்டும் (எண் 4:27).

4. அவர்களை வேலைகொள்ளும் விசாரணை, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத்தாமருடைய கைக்குள் இருக்கவேண்டும் (எண் 4:28).

மெராரி புத்திரர் எண் 4:29-33

எண் 4:29. மெராரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க,

எண் 4:30. முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணக்கடவாய்.

எண் 4:31. ஆசரிப்புக் கூடாரத்தில் அவர்கள் செய்யும் எல்லாப் பணிவிடைக்கும் அடுத்த காவல் விசாரிப்பாவது: வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்பாள்களும், தூண்களும், பாதங்களும்,

எண் 4:32. சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் தூண்களும், அவைகளின் பாதங்களும், முளைகளும், கயிறுகளும், அவைகளின் சகல கருவிகளும், அவற்றிற்கு அடுத்த மற்றெல்லா வேலையும்தானே; அவர்கள் சுமந்து காவல்காக்கும்படி ஒப்புவிக்கப்படுகிறவைகளைப் பேர்பேராக எண்ணக்கடவீர்கள்.

எண் 4:33. ஆசாரியனாகிய ஆரோனுடைய குமாரனான இத்தாமாருடைய கைக்குள்ளாக மெராரி புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு அடுத்த எல்லா வேலையும் இதுவே என்றார்.

கர்த்தர் மெராரி புத்திரரையும் எண்ணித்தொகையேற்றுமாறு சொல்லுகிறார். அவர் மோசேயை நோக்கி, "மெராரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணக்கடவாய்" (எண் 4:29,30) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மெராரி புத்திரருக்கு ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடைகளை நியமனம்பண்ணுகிறார். ஆசரிப்புக் கூடாரத்தில் அவர்கள் செய்யும் எல்லாப் பணிவிடைக்கும் அடுத்த காவல் விசாரிப்பாவது: வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்பாள்களும், தூண்களும், பாதங்களும், சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் தூண்களும், அவைகளின் பாதங்களும், முளைகளும், கயிறுகளும், அவைகளின் சகல கருவிகளும், அவற்றிற்கு அடுத்த மற்றெல்லா வேலையும்தானே; அவர்கள் சுமந்து காவல்காக்கும்படி ஒப்புவிக்கப்படுகிறவைகளைப் பேர்பேராக எண்ணக்கடவீர்கள் (எண் 4:31,32) என்றும்,

ஆசாரியனாகிய ஆரோனுடைய குமாரனான இத்தாமாருடைய கைக்குள்ளாக மெராரி புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு அடுத்த எல்லா வேலையும் இதுவே (எண் 4:33) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

மெராரி புத்திரரைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. மெராரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணக்கடவாய் (எண் 4:29-30).

2. வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்பாள்களும், தூண்களும், பாதங்களும், சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின்தூண்களும், அவைகளின் பாதங்களும், முளைகளும், கயிறுகளும், அவைகளின் சகல கருவிகளும், அவற்றிற்கு அடுத்த மற்றெல்லா வேலைகளையும் அவர்கள் செய்யவேண்டும் (எண் 4:31-32).

3. ஆசாரியனாகிய ஆரோனுடைய குமாரனான இத்தாமாருடைய கைக்குள்ளாக மெராரி புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு அடுத்த எல்லா வேலையும் இது (எண் 4:33).

லேவி புத்திரரின் எண்ணிக்கை எண் 4:34-49

எண் 4:34. அப்படியே மோசேயும் ஆரோனும் சபையின் பிரபுக்களும் கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களின்படி, ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க,

எண் 4:35. முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணினார்கள்.

எண் 4:36. அவர்கள் வம்சங்களில் எண்ணப்பட்டவர்கள் இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பதுபேர்.

எண் 4:37. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, மோசேயினாலும் ஆரோனாலும் கோகாத் வம்சத்தாரில் ஆசரிப்புக் கூடாரத்தில் வேலை செய்கிறதற்காக எண்ணித் தொகையிடப்பட்டவர்கள் எல்லாரும் இவர்களே.

எண் 4:38. கெர்சோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க,

எண் 4:39. முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரும் எண்ணப்பட்டார்கள்.

எண் 4:40. அவர்களில் எண்ணப்பட்டவர்கள் அவரவர் குடும்பத்தின்படிக்கும், பிதாக்களுடைய வம்சத்தின்படிக்கும் இரண்டாயிரத்து அறுநூற்று முப்பதுபேர்.

எண் 4:41. மோசேயினாலும் ஆரோனாலும் கர்த்தர் கட்டளையிட்டபடியே கெர்சோன் புத்திரரின் வம்சத்தாரில் ஆசரிப்புக் கூடாரத்தில் வேலைசெய்ய எண்ணித் தொகையிடப்பட்டவர்கள் எல்லாரும் இவர்களே.

எண் 4:42. மெராரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க,

எண் 4:43. முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுள்ளவர்கள் எல்லாரும் எண்ணப்பட்டார்கள்.

எண் 4:44. அவர்களில் எண்ணப்பட்டவர்கள் தங்கள் குடும்பங்களின்படியே மூவாயிரத்து இருநூறுபேர்.

எண் 4:45. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே மோசேயினாலும் ஆரோனாலும் மெராரி புத்திரரின் குடும்பத்தாரில் எண்ணித் தொகையிடப்பட்டவர்கள் எல்லாரும் இவர்களே.

எண் 4:46. லேவியருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில் முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ளவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடை வேலைக்கும் சுமையின் வேலைக்கும் உட்படத்தக்கவர்களும்,

எண் 4:47. மோசேயினாலும் ஆரோனாலும் இஸ்ரவேலின் பிரபுக்களாலும் எண்ணப்பட்டவர்களும் ஆகிய எல்லாரும்,

எண் 4:48. எண்ணாயிரத்து ஐந்நூற்று எண்பது பேராயிருந்தார்கள்.

எண் 4:49. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, அவர்கள் தங்கள் தங்கள் பணிவிடைக்கென்றும் தங்கள் தங்கள் சுமைக்கென்றும் மோசேயினால் எண்ணப்பட்டார்கள்; இவ்விதமாய், கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் அவனால் எண்ணப்பட்டார்கள்.

லேவி கோத்திரத்தாரின் மூன்று வீட்டு வம்சத்தாரும் எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள். அவர்கள் அனைவரும் ஆசரிப்புக்கூடாரத்திலே வேலை செய்யும் சேனைக்குட்படத்தக்க முப்பது வயது முதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள ஆண்மக்கள்.

லேவியருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில் முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ளவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடை வேலைக்கும் சுமையின் வேலைக்கும் உட்படத்தக்கவர்களும், மோசேயினாலும் ஆரோனாலும் இஸ்ரவேலின் பிரபுக்களாலும் எண்ணப்பட்டவர்களும் ஆகிய எல்லாரும், எண்ணாயிரத்து ஐந்நூற்று எண்பது பேராயிருக்கிறார்கள் (எண் 4:46-48).

இஸ்ரவேலின் பிரபுக்கள் என்பது இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பன்னிரண்டு தலைவர்களைக்குறிக்கும். இஸ்ரவேல் புத்திரரை எண்ணிக் கணக்கிடுவதற்கு இவர்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் உதவி புரிகிறார்கள். (எண் 1:4-16).

இஸ்ரவேல் புத்திரரை எண்ணும்போது, கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய வயதில் வேறுபாடுகள் உள்ளது. அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரிடம் பொதுவாக 20 வயதும், அதற்குமேற்பட்ட புருஷரும் (எண் 1:3-46)

2. லேவியரில் ஒரு மாதமும், அதற்கு மேற்பட்ட ஆண்களும் (எண் 3:15,22, 28,34)

3. லேவியரில் 30 வயது முதல் 50 வயது வரையிலுள்ள ஆண்கள் (எண் 4:23, 30,43,47)

லேவியரில் 30 வயது முதல் 50 வயது வரையிலும் இருந்தவர்களின் எண்ணிக்கை 8,580 பேராகும். இவர்களில் கோகாத், கெர்சோன், மெராரி ஆகியோரின் புத்திரர் அடங்கியிருக்கிறார்கள். (எண் 3:39).

லேவி கோத்திரத்தில் ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்யும் சேனைக்குட்படத்தக்கவர்கள் 8,580 பேர் மாத்திரமே. மற்ற கோத்திரங்கள் எல்லாருமாக சேர்ந்து, இஸ்ரவேல் புத்திரரில் யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்களின் எண்ணிக்கை திரளாயிருக்கிறது.

இஸ்ரவேல் கோத்திரத்தாரில் மிகவும் சொற்ப எண்ணிக்கையுள்ள கோத்திரத்தாரில்கூட, லேவிகோத்திரத்தாரின் சேனையில் இருப்பவர்களைவிட நான்கு மடங்கு அதிகமாயிருக்கிறார்கள். ஒரு சில கோத்திரங்களில் எட்டு மடங்கு அதிகமாயிருக்கிறார்கள்.

இந்தப் பிரபஞ்சத்திலும் இப்படிப்பட்ட நிலமையே காணப்படுகிறது. இந்த உலகத்திற்காக வேலை செய்கிறவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருக்கிறது. கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்களின் எண்ணிக்கையோ மிகவும் குறைவாயிருக்கிறது.

மாம்சப்பிரகாரமாக யுத்தம்பண்ணுகிறவர்களின் எண்ணிக்கை அதிகம். கர்த்தருக்கு பயந்து விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுகிறவர்களின் எண்ணிக்கையோ மிகவும் குறைவு.

இந்த வசனப்பகுதியில் லேவிகோத்திரத்தாரின் மூன்று வீட்டு வம்சங்களில் உள்ளவர்களின் எண்ணிக்கை சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. கோகாத் புத்திரர் : மோசேயும் ஆரோனும் சபையின் பிரபுக்களும் கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களின்படி ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணுகிறார்கள் (எண் 4:34,35).

மோசேயும், ஆரோனும் சமஸ்த இஸ்ரவேல் புத்திரருக்கும் தலைவர்களாக இருந்தார்கள். மோசேக்கு எதிராகக் கலகம் பண்ணுவதற்கு ஆரோன் மிரியாமிற்கு ஏன் துணை போனான் என்று தெரியவில்லை. (எண் 12:1-16).

அவர்கள் வம்சங்களில் எண்ணப்பட்டவர்கள் இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பதுபேர். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, மோசேயினாலும் ஆரோனாலும் கோகாத் வம்சத்தாரில் ஆசரிப்புக் கூடாரத்தில் வேலை செய்கிறதற்காக எண்ணித் தொகையிடப்பட்டவர்கள் எல்லாரும் இவர்களே (எண் 4:36,37).

கோகாத் புத்திரரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்டவர்களுடைய எண்ணிக்கை 8,600 பேர் ஆகும். (எண் 3:28) அவர்களில் ஆசாரிய ஊழியம் செய்யக்கூடியவர்கள் 2,750 பேர் மட்டுமே (எண் 4:36-37).

2. கெர்சோன் புத்திரர் : கெர்சோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக் கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள எல்லாரும் எண்ணப்படுகிறார்கள் (எண் 4:38,39).

கெர்சோன் புத்திரரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்டவர்களுடைய எண்ணிக்கை 7,500 பேர் ஆகும். (எண் 3:22) அவர்களில் ஆசாரிய ஊழியம் செய்யக் கூடியவர்கள் 2,630 பேர் மட்டுமே. (எண் 4:40).

அவர்களில் எண்ணப்பட்டவர்கள் அவரவர் குடும்பத்தின்படிக்கும், பிதாக்களுடைய வம்சத்தின்படிக்கும் இரண்டாயிரத்து அறுநூற்று முப்பதுபேர். மோசேயினாலும் ஆரோனாலும் கர்த்தர் கட்டளையிட்டபடியே கெர்சோன் புத்திரரின் வம்சத்தாரில் ஆசரிப்புக் கூடாரத்தில் வேலைசெய்ய எண்ணித் தொகையிடப்பட்டவர்கள் எல்லாரும் இவர்களே (எண் 4:40,41).

3. மெராரி புத்திரர் : மெராரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேனைக்கு உட்படத்தக்க, முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுள்ளவர்கள் எல்லாரும் எண்ணப்படுகிறார்கள் (எண் 4:42,43).

மெராரி புத்திரரில் ஒரு மாதம் முதல் அதற்கு மேற்பட்டவர்களுடைய எண்ணிக்கை 6,200 பேர் ஆகும். (எண் 3:34) அவர்களில் ஆசாரிய ஊழியம் செய்யக் கூடியவர்கள் 3,200 பேர் மட்டுமே. (எண் 4:44).

அவர்களில் எண்ணப்பட்டவர்கள் தங்கள் குடும்பங்களின்படியே மூவாயிரத்து இருநூறுபேர். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே மோசேயினாலும் ஆரோனாலும் மெராரி புத்திரரின் குடும்பத்தாரில் எண்ணித் தொகையிடப்பட்டவர்கள் எல்லாரும் இவர்களே (எண் 4:44,45).

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, அவர்கள் தங்கள் தங்கள் பணிவிடைக்கென்றும் தங்கள் தங்கள் சுமைக்கென்றும் மோசேயினால் எண்ணப்பட்டார்கள்; இவ்விதமாய், கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் அவனால் எண்ணப்பட்டார்கள் (எண் 4:49).

லேவியரின் மூன்று வம்சத்தாரில், முப்பது வயது முதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள புருஷர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :

1. கெர்சோன் - மொத்த புருஷர் 7,500 (எண் 3:22) 30-50 வயது 2630பேர் (எண் 4:40)

2. கோகாத் - மொத்த 8,600 (எண் 3:28) 30-50 வயது 2,750பேர் (எண் 4:36)

3. மெராரி - மொத்த புருஷர் 6,200 (எண் 3:34) 30-50வயது 3,200பேர் (எண் 4:44)

மொத்த புருஷர் 22,300பேர் (எண் 3:39) 30-50வயது (எண் 4:48)

5 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு கோத்திரமாக எந்தெந்த இடங்களில் பாளயமிறங்கவேண்டுமென்று கர்த்தர் இதுவரையிலும் சொன்னார். இப்போது தீட்டுப்பட்டவர்கள் யாவரையும் பாளயத்திலிருந்து விலக்கிவிடவேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார் (எண் 5:1-4).

ஒருவன் பாவம் செய்து குற்றவாளியாகும்போது, அவன் தன் பாவத்தை அறிக்கையிடவேண்டும். தான் செய்த குற்றத்தினிமித்தம் அவன், குற்றம் செய்யப்பட்டவனுக்கு பாவநிவாரண கிரயத்தை செலுத்தவேண்டும். அசலோடு அபதாரமும் சேர்த்து செலுத்தப்படவேண்டும். இந்தப் பிரமாணம் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. இது இங்கு மறுபடியுமாய்ச் சொல்லப்படுகிறது (எண் 5:5-8). பரிசுத்தமான படைப்புக்களெல்லாம் ஆசாரியருக்குரியது (எண் 5:9,10).

ஒரு ஸ்திரீயானவள் தனக்கு துரோகம் செய்து விட்டாள் என்னும் சந்தேகம் அவளுடைய புருஷனின் மனதிலே ஏற்படும்போது, அவளை விசாரிக்கவேண்டியது சம்பந்தமான பிரமாணம் (எண் 5:11-31).

தீட்டு
எண் 5:1-4

எண் 5:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 5:2. குஷ்டரோகிகள் யாவரையும், பிரமியமுள்ளவர்கள் யாவரையும், சவத்தினால் தீட்டுப்பட்டவர்கள் யாவரையும் பாளயத்திலிருந்து விலக்கிவிட இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடு.

எண் 5:3. ஆண்பிள்ளையானாலும் பெண்பிள்ளையானாலும் அப்படிப்பட்டவர்களை நீங்கள் விலக்கி, நான் வாசம்பண்ணுகிற தங்கள் பாளயங்களை அவர்கள் தீட்டுப்படுத்தாதபடிக்கு, நீங்கள் அவர்களைப் பாளயத்திற்குப் புறம்பாக்கிவிடக்கடவீர்கள் என்றார்.

எண் 5:4. கர்த்தர் மோசேக்குச் சொன்னபடியே, இஸ்ரவேல் புத்திரர் செய்து, அவர்களைப் பாளயத்திற்குப் புறம்பாக்கிவிட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாளயத்திலிருந்து தீட்டுப்பட்டவர்கள் யாவரையும் விலக்கிவிடவேண்டுமென்று கர்த்தர் கட்டளைகொடுக்கிறார். சடங்காச்சார பிரகாரமாக அசுத்தமாயிருக்கிறவர்கள், பிரமியமுள்ளவர்கள், குஷ்டரோகமுள்ளவர்கள், சவத்தினால் தீட்டுப்பட்டவர்கள் ஆகியோர் எல்லாம் பாளயத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டும். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தின்படி சுத்திகரிக்கப்பட்ட பின்பே, மறுபடியும் பாளயத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "குஷ்டரோகிகள் யாவரையும், பிரமியமுள்ளவர்கள் யாவரையும், சவத்தினால் தீட்டுப்பட்டவர்கள் யாவரையும் பாளயத்திலிருந்து விலக்கிவிட இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடு" (எண் 5:1,2) என்றும்,

"ஆண்பிள்ளையானாலும் பெண்பிள்ளையானாலும் அப்படிப்பட்டவர்களை நீங்கள் விலக்கி, நான் வாசம்பண்ணுகிற தங்கள் பாளயங்களை அவர்கள் தீட்டுப்படுத்தாதபடிக்கு, நீங்கள் அவர்களைப் பாளயத்திற்குப் புறம்பாக்கிவிடக்கடவீர்கள்" (எண் 5:3) என்றும் சொல்லுகிறார்.

செத்துப்போன சரீரத்தைத் தொட்டவன் ஏழு நாட்களுக்குத் தீட்டாயிருப்பான் (எண் 19:11). செத்துப்போன மிருகஜீவன்களின் உடலைத் தொடுகிறவர்கள் சாயங்காலமட்டும் தீட்டாயிருப்பார்கள். (லேவி 11:24,39-40). ஆத்துமாவைத் தொடமுடியாது. சரீரத்தை மட்டுமே தொடமுடியும். "சவம்" என்பதற்கான எபிரெய வார்த்தை "நேபேஷ்" என்பதாகும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைக்கு உடனே கீழ்ப்படிகிறார்கள். கர்த்தர் மோசேக்குச் சொன்னபடியே, இஸ்ரவேல் புத்திரர் செய்து, அவர்களைப் பாளயத்திற்குப் புறம்பாக்கிவிடுகிறார்கள் (எண் 5:4).

குஷ்டரோகமுள்ளவர்கள், பிரமியமுள்ளவர்கள் ஆகிய தொற்று வியாதியுடையவர்களை முதன் முறையாகப் பாளயத்திலிருந்து புறம்பாக்குகிறார்கள். அவர்களுக்கென்று பாளயத்திற்கு வெளியே தங்குவதற்குத் தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வியாதியஸ்தராக இருந்தாலும் அவர்களை மனிதாபிமான முறையிலேயே நடத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பாளயமிறங்கவேண்டிய பிரமாணத்தை கர்த்தர் இப்போதுதான் நியமனம் செய்திருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய திட்டத்தின் பிரகாரமாகவும், தங்களுக்கு நியமித்திருக்கிற இடங்களிலே, பாளயமிறங்கியிருக்கிறார்கள். சகலமும் ஒழுங்காகவும் கிரமமாகவும் இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்றும், அதை சுத்திகரிக்கவேண்டும் என்றும் சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரம் இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திற்கு நடுவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆசரிப்புக்கூடாரம் பரிசுத்தமானது. இஸ்ரவேல் ஜனத்தார் ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். இதற்காக அசுத்தமானவர்கள், தீட்டானவர்கள் எல்லோரையும் பாளயத்திலிருந்து விலக்கிவிடவேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரி 3:16,17).

அசுத்தமானவர்கள் அனைவரும் பாளயத்திலிருந்து விலக்கிவிடப்படுகிறார்கள். கர்த்தர் சுத்தத்திற்கும் அசுத்தத்திற்கும் வித்தியாசம் ஏற்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்திலே ஆசரிப்புக்கூடாரமும் பாளயமும் சுத்தமாயிருக்கவேண்டுமென்று கர்த்தர் சித்தமாயிருந்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே சபையும், சபையிலுள்ள விசுவாசிகளும் பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்று கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

இஸ்ரவேலின் பாளயத்திலிருந்து அசுத்தமானவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இதனால் புதிய எருசலேமிலே அசுத்தமானது எதுவும் பிரவேசிப்பதில்லை.

"தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" (வெளி 21:27).

பாளயத்தை சுத்திகரிப்பது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. குஷ்டரோகிகள் யாவரையும், பிரமியமுள்ளவர்கள் யாவரையும், சவத்தினால் தீட்டுப்பட்டவர்கள் யாவரையும் பாளயத்திலிருந்து விலக்கிவிட இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிட வேண்டும். (எண் 5:2)

2. ஆண்பிள்ளையானாலும் பெண்பிள்ளையானாலும் அப்படிப்பட்டவர்களை நீங்கள் விலக்கி, நான் வாசம்பண்ணுகிற தங்கள் பாளயங்களை அவர்கள் தீட்டுப்படுத்தாதபடிக்கு, நீங்கள் அவர்களைப் பாளயத்திற்குப் புறம்பாக்கி விடக்கடவீர்கள் (எண் 5:3).

பாவநிவாரணம்
எண் 5:5-10

எண் 5:5. மேலும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 5:6. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: ஒரு புருஷனானாலும் ஸ்திரீயானாலும், கர்த்தருடைய கட்டளையை மீறி மனிதர் செய்யும் பாவங்களில் யாதொரு பாவத்தைச் செய்து குற்றவாளியானால்,

எண் 5:7. அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை அறிக்கையிடக்கடவர்கள்; அப்படிப்பட்டவன் தான் செய்த குற்றத்தினிமித்தம் அபராதத்தின் முதலோடே ஐந்தில் ஒரு பங்கை அதிகமாய்க் கூட்டி, தான் குற்றஞ் செய்தவனுக்குச் செலுத்தக்கடவன்.

எண் 5:8. அதைக் கேட்டு வாங்குகிறதற்கு இனத்தான் ஒருவனும் இல்லாதிருந்தால், அப்பொழுது அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படி ஆட்டுக்கடா செலுத்தப்படுவதுமல்லாமல், கர்த்தருக்கு அந்த அபராதம் செலுத்தப்பட்டு, அது ஆசாரியனைச் சேரவேண்டும்.

எண் 5:9. இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்துப் படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொண்டுவருகிற எல்லாப் பரிசுத்தமான படைப்பும் அவனுடையதாயிருக்கும்.

எண் 5:10. ஒவ்வொருவரும் படைக்கும் பரிசுத்தமான வஸ்துக்கள் அவனுடையதாயிருக்கும்; ஒருவன் ஆசாரியனுக்குக் கொடுக்கிறது எதுவும் அவனுக்கே உரியது என்று சொல் என்றார்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவர் பாவம் செய்யும்போது, அவர் கர்த்தருக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் குற்றவாளியாயிருக்கிறார். அவர் கர்த்தருடைய கட்டளையை மீறுகிறார். அவர் மனுஷருக்கு விரோதமாக பாவம் செய்கிறார். பாவம் செய்து குற்றவாளியானவன் தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்யவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

குற்றவாளியானவன் தன்னுடைய பாவத்தை கர்த்தரிடத்திலும் அறிக்கை செய்யவேண்டும், தான் யாருக்கு விரோதமாக பாவம் செய்தானோ அவனிடத்திலும் அறிக்கை செய்யவேண்டும். தன்னுடைய பாவத்தினிமித்தமாக வரும் நிந்தையையும் அவமானத்தையும் அவன் தன்மீது சுமத்திக்கொள்ள ஆயத்தமாயிருக்க வேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: ஒரு புருஷனானாலும் ஸ்திரீயானாலும், கர்த்தருடைய கட்டளையை மீறி மனிதர் செய்யும் பாவங்களில் யாதொரு பாவத்தைச் செய்து குற்றவாளியானால், அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை அறிக்கையிடக்கடவர்கள்" (எண் 5:5-7) என்று சொல்லுகிறார்.

குற்றம் செய்தவன் தனக்காக பாவநிவிர்த்தி செய்யும்படி ஆட்டுக்கடாவை பாவநிவாரண பலியாக செலுத்தவேண்டும். குற்றம் செய்தவன் தனக்காக பாவநிவிர்த்தி செய்யும்படி ஆட்டுக்கடா செலுத்தப்படுவதுமல்லாமல், கர்த்தருக்கு அந்த அபராதம் செலுத்தப்பட்டு, அது ஆசாரியனைச் சேரவேண்டும் (எண் 5:8) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பாவம் செய்து குற்றவாளியானவன் கர்த்தருடைய கட்டளையை மீறுகிறான். ஆகையினால் அவன் தன்னுடைய குற்றத்தினிமித்தமாக கர்த்தருக்கு அபராதம் செலுத்தவேண்டும். குற்றம் செய்தவன் மனுஷனுக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறான். அவனுடைய பாவத்தினால் மனுஷனுக்கு சேதமும் நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. குற்றம் செய்தவன் அந்த நஷ்டத்திற்கு ஈடு செய்யவேண்டும்.

பாவம் செய்தவன் தன்னுடைய பாவத்தை அறிக்கை செய்யவேண்டும். தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும். கர்த்தர் தன்னுடைய பாவத்தை மன்னிப்பார் என்று அவருடைய மன்னிப்பின் கிருபையின்மீது நம்பிக்கை வைக்கவேண்டும். இதோடு தனக்காக பாவநிவிர்த்தி செய்யும்படி ஆட்டுக்கடாவை பாவநிவாரண பலியாக செலுத்தவேண்டும். கர்த்தருக்கு அந்த அபதாரம் செலுத்தப்படவேண்டும்.

இதுபோக தான் செய்த குற்றத்தினிமித்தம் அபராதத்தின் முதலோடே ஐந்தில் ஒரு பங்கை அதிகமாய்க் கூட்டி, தான் குற்றஞ் செய்தவனுக்குச் செலுத்தவேண்டும் (எண் 5:7) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தான் குற்றம் செய்தவனுக்கு அபதாரத்தின் முதலோடே ஐந்தில் ஒரு பங்கு அதிகமாய்க் கூட்டி, அவனுக்கு செலுத்தவில்லையென்றால், அவன் பாவநிவாரண பலியாக செலுத்திய ஆட்டுக்குட்டியை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார். அவனுக்கு பாவநிவிர்த்தி ஏற்படாது. குற்றம் செய்தவன் தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்பி, அதை கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை செய்வதோடு, அவன் மனுஷரிடத்திலும் ஒப்புரவாகவேண்டும்.

குற்றம் செய்தவன் அபராதத்தின் முதலோடே ஐந்தில் ஒரு பங்கை அதிகமாய் கூட்டிச் செலுத்துவதை, அவன் யாருக்கு விரோதமாக குற்றம் செய்தானோ, அவன் குற்றம் செய்தவனிடத்தில் கேட்டு வாங்கவேண்டும். அல்லது அவனுக்கு பதிலாக அவனுடைய இனத்தான் ஒருவன் அதைக் கேட்டு வாங்கவேண்டும். அதைக் கேட்டு வாங்குகிறதற்கு இனத்தான் ஒருவன் இல்லாதிருந்தால், அது ஆசாரியனை சேரவேண்டும் (எண் 5:8).

குற்றம் செய்தவன் கர்த்தருடைய கட்டளையை மீறி குற்றம் செய்திருக்கிறான். ஆகையினால் அவன் கர்த்தரோடு ஒப்புரவாகவேண்டும். அவன் மனுஷனுக்கு விரோதமாக குற்றம் செய்திருக்கிறான். ஆகையினால் குற்றம் செய்தவன் யாருக்கு விரோதமாகக் குற்றம் செய்தானோ அவனோடும் ஒப்புரவாகவேண்டும். குற்றம் செய்தவனுடைய பாவம் மன்னிக்கப்படும்போது, அவனுடைய மனச்சாட்சியும் சுத்திகரிக்கப்படவேண்டும்.

ஒப்புரவாகுதலின் பிரமாணத்தைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஒரு புருஷனானாலும் ஸ்திரீயானாலும், கர்த்தருடைய கட்டளையை மீறி மனிதர் செய்யும் பாவங்களில் யாதொரு பாவத்தைச் செய்து குற்றவாளியானால், அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை அறிக்கையிடக்கடவர்கள்; அப்படிப்பட்டவன் தான் செய்த குற்றத்தினிமித்தம் அபராதத்தின் முதலோடே ஐந்தில் ஒரு பங்கை அதிகமாய்க் கூட்டி, தான் குற்றஞ் செய்தவனுக்குச் செலுத்தக்கடவன் (எண் 5:6-7).

2. அபராதத்தைக் கேட்டு வாங்குகிறதற்கு இனத்தான் ஒருவனும் இல்லாதிருந்தால், அப்பொழுது அவனுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படி கர்த்தருக்கு அந்த அபராதம் செலுத்தப்பட்டு, அது ஆசாரியனைச் சேரவேண்டும் (எண் 5:8).

3. பாவநிவிர்த்தி செய்யும்படி ஆட்டுக்கடா செலுத்தப்படவேண்டும். அது ஆசாரியனைச் சேரவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்துப் படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொண்டுவருகிற எல்லாப் பரிசுத்தமான படைப்பும் ஆசாரியனுடையதாயிருக்கும். ஒவ்வொருவரும் படைக்கும் பரிசுத்தமான வஸ்துக்கள் ஆசாரியனுடையதாயிருக்கும்; ஒருவன் ஆசாரியனுக்குக் கொடுக்கிறது எதுவும் அவனுக்கே உரியது என்று (எண் 5:9,10) கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரியனுக்கு கொடுக்கிறது எதுவும் அவனுக்கே உரியது என்பது கர்த்தருடைய பொதுவான பிரமாணம்.

பரிசுத்தமான படைப்பு என்பது போஜனபலிகள், பலிகளில் ஒருசில பகுதிகள் ஆகிய பரிசுத்தமான வஸ்துக்களைக் குறிக்கும் (லேவி 2:10) பரிசுத்தமான வஸ்துக்கள் என்பது விசேஷித்த பொருத்தனையின் பிரகாரம் தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்பட்ட வஸ்துக்கள் ஆகும் (லேவி 27)

பரிசுத்தமான படைப்பின் பிரமாணத்தைப்பற்றிய விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்துப் படைக்கும்படி ஆசாரியனிடத்தில் கொண்டுவருகிற எல்லாப் பரிசுத்தமான படைப்பும் ஆசாரியனுடையதாயிருக்கும்.

2. ஒவ்வொருவரும் படைக்கும் பரிசுத்தமான வஸ்துக்கள் ஆசாரியனுடையதாயிருக்கும் (எண் 5:10).

3. ஒருவன் ஆசாரியனுக்குக் கொடுக்கிறது எதுவும் அவனுக்கே உரியது.

ஸ்திரீயின் துரோகம் எண் 5:11-31

எண் 5:11. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 5:12. நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: ஒருவனுடைய மனைவி பிறர்முகம் பார்த்து, புருஷனுக்குத் துரோகம்பண்ணி,

எண் 5:13. ஒருவனோடே சம்யோகமாய்ச் சயனித்திருந்த விஷயத்தில் அவள் தீட்டுப்பட்டவளாயிருந்தும், அவளுடைய புருஷன் கண்களுக்கு அது மறைக்கப்பட்டு வெளிக்கு வராமல் இருக்கிறபோதும், சாட்சியில்லாமலும் அவள் கையும் களவுமாகப் பிடிக்கப்படாமலும் இருக்கிற போதும்,

எண் 5:14. எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து, அவன் அவனுடைய மனைவி தீட்டுப்படுத்தப்பட்டிருக்க, தீட்டுப்படுத்தப்பட்ட தன் மனைவியின்மேல் குரோதங் கொண்டிருந்தாலும், அல்லது அவன் மனைவி தீட்டுப்படுத்தப்படாதிருக்க, எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து, அவன் அவள்மேல் குரோதங்கொண்டிருந்தாலும்,

எண் 5:15. அந்தப் புருஷன் தன் மனைவியை ஆசாரியனிடத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அவள் நிமித்தம் ஒரு எப்பா அளவான வாற்கோதுமை மாவிலே பத்தில் ஒரு பங்கைப் படைப்பாகக் கொடுக்கக் கடவன்; அது எரிச்சலின் காணிக்கையும் அக்கிரமத்தை நினைப்பூட்டும் காணிக்கையுமாய் இருப்பதினால், அதின்மேல் எண்ணெய் வார்க்காமலும் தூபவர்க்கம் போடாமலும் இருப்பானாக.

எண் 5:16. ஆசாரியன் அவளைச் சமீபத்தில் அழைத்து, கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி,

எண் 5:17. ஒரு மண்பாண்டத்திலே பரிசுத்த ஜலம் வார்த்து, வாசஸ்தலத்தின் தரையிலிருக்கும் புழுதியிலே கொஞ்சம் எடுத்து, அந்த ஜலத்திலே போட்டு,

எண் 5:18. ஸ்திரீயைக் கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி, அவள் முக்காட்டை நீக்கி, எரிச்சலின் காணிக்கையாகிய நினைப்பூட்டுதலின் காணிக்கையை அவள் உள்ளங்கையிலே வைப்பானாக; சாபகாரணமான கசப்பான ஜலம் ஆசாரியன் கையில் இருக்கவேண்டும்.

எண் 5:19. பின்பு ஆசாரியன் அவளை ஆணையிடுவித்து: ஒருவனும் உன்னோடே சயனியாமலும், உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ தீட்டுப்படத்தக்கதாய்ப் பிறர்முகம் பாராமலும் இருந்தால், சாபகாரணமான இந்தக் கசப்பான ஜலத்தின் தோஷத்துக்கு நீங்கலாயிருப்பாய்.

எண் 5:20. உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ பிறர்முகம் பார்த்து, உன் புருஷனோடேயன்றி அந்நியனோடே சம்யோகமாய் சயனித்து தீட்டுப்பட்டிருப்பாயானால்,

எண் 5:21. கர்த்தர் உன் இடுப்பு சூம்பவும், உன் வயிறு வீங்கவும்பண்ணி, உன்னை உன் ஜனங்களுக்குள்ளே சாபமும் ஆணையிடுங்குறியுமாக வைப்பாராக.

எண் 5:22. சாபகாரணமான இந்த ஜலம் உன் வயிறு வீங்கவும் இடுப்பு சூம்பவும் பண்ணும்படி, உன் குடலுக்குள் பிரவேசிக்கக்கடவது என்கிற சாபவார்த்தையாலே ஸ்திரீயை ஆணையிடுவித்துச் சொல்வானாக. அதற்கு அந்த ஸ்திரீ: ஆமென், ஆமென், என்று சொல்லக்கடவள்.

எண் 5:23. பின்பு ஆசாரியன் இந்தச் சாபவார்த்தைகளை ஒரு சீட்டில் எழுதி, அவைகளைச் கசப்பான ஜலத்தினால் கழுவிப்போட்டு,

எண் 5:24. சாபகாரணமான அந்தக் கசப்பான ஜலத்தை அவள் குடிக்கும்படி பண்ணுவான்; அப்பொழுது சாபகாரணமான அந்த ஜலம் அவளுக்குள் இறங்கிக் கசப்பாகும்.

எண் 5:25. பின்பு ஆசாரியன் எரிச்சலின் காணிக்கையை அந்த ஸ்திரீயின் கையிலிருந்து வாங்கி, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டி, பீடத்தின்மேல் செலுத்தி,

எண் 5:26. ஞாபகக்குறியாக அதிலே ஒரு கைப்பிடி நிறைய எடுத்து, பீடத்தின்மேல் தகனித்து, பின்பு ஸ்திரீக்கு அந்த ஜலத்தைக் குடிக்கும்படி கொடுக்கக்கடவன்.

எண் 5:27. அந்த ஜலத்தைக் குடிக்கச் செய்த பின்பு சம்பவிப்பதாவது: அவள் தீட்டுப்பட்டு, தன் புருஷனுக்குத் துரோகம் பண்ணியிருந்தால், சாபகாரணமான அந்த ஜலம் அவளுக்குள் பிரவேசித்துக் கசப்புண்டானதினால், அவள் வயிறுவீங்கி, அவள் இடுப்பு சூம்பும்; இப்படியே அந்த ஸ்திரீ தன் ஜனங்களுக்குள்ளே சாபமாக இருப்பாள்.

எண் 5:28. அந்த ஸ்திரீ தீட்டுப்படாமல் சுத்தமாயிருந்தால், அவள் அதற்கு நீங்கலாகி, கர்ப்பந்தரிக்கத்தக்கவளாயிருப்பாள்.

எண் 5:29. ஒரு ஸ்திரீ தன் புருஷனோடேயன்றி அந்நிய புருஷனோடே சேர்ந்து தீட்டுப் பட்டதினால் உண்டான எரிச்சலுக்கும்,

எண் 5:30. புருஷன்மேல் எரிச்சலின் ஆவி வருகிறதினால், அவன் தன் மனைவியின்மேல் அடைந்த சமுசயத்துக்கும் அடுத்த பிரமாணம் இதுவே. அவன் கர்த்தருடைய சந்நிதியில் தன் மனைவியை நிறுத்துவானாக; ஆசாரியன் இந்தப் பிரமாணத்தின்படியெல்லாம் அவளுக்குச் செய்யக்கடவன்.

எண் 5:31. புருஷனானவன் அக்கிரமத்திற்கு நீங்கலாயிருப்பான்; அப்படிப்பட்ட ஸ்திரீயோ, தன் அக்கிரமத்தைச் சுமப்பாள் என்று சொல் என்றார்.

புருஷனுக்கு தன் மனைவியின்மீது சந்தேகம் வரும்போது, அவனுடைய சந்தேகம் தெளிவுபடுத்தப்படவேண்டும். அவன்மீது எரிச்சலின் ஆவி வரும்போது, அவன் தன் மனைவியின்மீது குரோதம் கொண்டிருப்பான். தன் மனைவி தீட்டுப்பட்டவளா அல்லது சுத்தமுள்ளவளா என்னும் சந்தேகம் புருஷனுக்கு வரும்போது, அவனுக்கு அவள்மீது எரிச்சலும் வரும்.

சில சமயங்களில் ஒருவனுடைய மனைவி அவனுக்கு துரோகம் செய்திருக்கலாம். அவள் செய்த துரோகம் அவளுடைய புருஷனுக்கு மறைக்கப்பட்டிருக்கலாம். அவள் செய்த தப்புக்கு சாட்சியில்லாமல் போகலாம்.

வேறு சில சமயங்களில் ஒருவனுடைய மனைவி அவனுக்கு துரோகம் செய்திருக்கமாட்டாள். ஆனாலும் அவளுடைய புருஷன் அவள்மீது சந்தேகப்படுவான். அவன்மீது எரிச்சலின் ஆவி வரும். அவன் அவள்மீது குரோதம் கொண்டிருப்பான். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

புருஷனுக்கு தன் மனைவியின்மீது சந்தேகப்படுவதற்கு முகாந்தரமான காரணம் ஏதாவது இருக்கும். தன் மனைவி தனக்கு துரோகம்பண்ணி வேறொருவனோடே சம்யோகமாய் சயனித்திருப்பாளோ என்னும் சந்தேகம் அவனுடைய மனதில் ஏற்பட்டிருக்கும். அவனுடைய சந்தேகம் உண்மையானதாகவும் இருக்கலாம்.

ஒருவனுடைய மனைவி பிறர்முகம் பார்த்து, தன் புருஷனுக்குத் துரோகம்பண்ணியிருப்பாள். அவள் ஒருவனோடே சம்யோகமாய்ச் சயனித்திருந்த விஷயத்தில் அவள் தீட்டுப்பட்டவளாயிருந்தும், அவளுடைய புருஷன் கண்களுக்கு அது மறைக்கப்பட்டு வெளிக்கு வராமல் இருக்கலாம். அவளுடைய துரோகம் சாட்சியில்லாமலும் அவள் கையும் களவுமாகப் பிடிக்கப்படாமலும் இருக்கலாம் (எண் 5:12,13).

தன் புருஷனுக்கு துரோகம்பண்ணின மனுஷன்மேல் எரிச்சலின் ஆவி வந்திருக்கலாம். அவனுடைய மனைவி தீட்டுப்படுத்தப்பட்டிருக்கலாம். தீட்டுப்படுத்தப்பட்ட தன் மனைவியின்மேல் அவன் குரோதங்கொண்டிருக்கலாம். அல்லது அவன் மனைவி தீட்டுப்படுத்தப்படாதிருக்கலாம். ஆனாலும் எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து, அவன் அவள்மேல் குரோதங்கொண்டிருக்கலாம் (எண் 5:14).

எரிச்சலின் ஆவி பிசாசின் கிரியையினாலோ, அல்லது தேவையில்லாத கற்பனையினாலோ வருகிறது. புருஷனுடைய எரிச்சல் நியாயமானதா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காக ஸ்திரீ விசாரிக்கப்படுகிறாள்.

ஒரு புருஷன் தன் மனைவியின்மேல் குரோதம் கொண்டிருந்தால் என்ன செய்ய வேண்டுமென்று இந்த வேதவசனப் பகுதி கூறுகிறது. அதே சமயத்தில் ஒரு மனைவி தன் புருஷன்மேல் குரோதம் கொண்டிருந்தால் என்ன செய்ய வேண்டுமென்று இந்த வசனப்பகுதி எதுவும் கூறவில்லை.

வேசித்தனமும் விபசாரமும் மிகவும் மோசமான பாவங்கள். வேசித்தனம் பண்ணுகிறவள் தன் புருஷனுக்கு துரோகம்பண்ணுகிறாள். அவள் தன் புருஷனோடு செய்துகொண்ட விவாக உடன்படிக்கையை மீறி, அவனை அவமானப்படுத்துகிறாள். வேசித்தனம் பண்ணுகிறவர்கள் தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்வதோடு, தங்களுடைய சமுதாயத்தையும் அசுத்தப்படுத்துகிறார்கள்.

புருஷனும் மனைவியும் சேர்ந்து குடும்பம் நடத்தும்போது, தன்னுடைய மனைவியின் நடத்தையைக் குறித்து புருஷனுக்கு சந்தேகம் வரக்கூடாது. சந்தேகம் வரும்போது அவன்மேல் எரிச்சலின் ஆவி வரும். அவன் தன் மனைவியின்மேல் குரோதம் கொண்டிருப்பான். புருஷனுடைய சந்தேகம் தீர்த்து வைக்கப்படவேண்டும். அவனுடைய மனைவி மெய்யாகவே தப்பு செய்திருந்தால் அவள் தண்டிக்கப்படவேண்டும்.

ஒருவனுடைய மனைவி தவறு செய்யாமலிருக்கும்போது, அவளுடைய புருஷன் அவள்மேல் சந்தேகப்பட்டால், அவனுடைய சந்தேகம் அவனை விட்டு நீங்கவேண்டும். மனைவியின் நல்ல நடத்தை உறுதிபண்ணப்படவேண்டும். குடும்பத்தின் சந்தேகத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது. சந்தேகம் குடும்பத்தின் அமைதியையும் ஒற்றுமையையும் கெடுத்துப்போடும்.

ஒருவனுடைய மனைவி தப்பு செய்யாமலிருக்கும்போது அவளுடைய புருஷன் அவள்மேல் அநியாயமாய் சந்தேகப்படக்கூடாது. புருஷனும் மனைவியும் ஒரே சரீரமாயிருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் அன்பாயிருந்து, தங்களுடைய தாம்பத்திய வாழ்க்கையை அனுபவிக்கவேண்டும்.

"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்" (1கொரி 13:4-7).

எரிச்சல், குரோதம் ஆகியவற்றைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஒருவனுடைய மனைவி பிறர்முகம் பார்த்து, புருஷனுக்குத் துரோகம்பண்ணி, ஒருவனோடே சம்யோகமாய்ச் சயனித்திருந்த விஷயத்தில் அவள் தீட்டுப்பட்டவளாயிருந்தும், அவள் கையும் களவுமாகப் பிடிக்கப்படாமலும் இருக்கிற போதும், எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து, அந்தப் புருஷன் தன் மனைவியை ஆசாரியனிடத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அவள் நிமித்தம் ஒரு எப்பா அளவான வாற்கோதுமை மாவிலே பத்தில் ஒரு பங்கைப் படைப்பாகக் கொடுக்கக்கடவன் (எண் 5:12-15).

2. ஆசாரியன் அவளைச் சமீபத்தில் அழைத்து, கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தவேண்டும் (எண் 5:16).

3. ஒரு மண்பாண்டத்திலே பரிசுத்த ஜலம் வார்த்து, வாசஸ்தலத்தின் தரையிலிருக்கும் புழுதியிலே கொஞ்சம் எடுத்து, அந்த ஜலத்திலே போடவேண்டும் (எண் 5:17).

4. ஸ்திரீயைக் கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி, அவள் முக்காட்டை நீக்கி, எரிச்சலின் காணிக்கையாகிய நினைப்பூட்டுதலின் காணிக்கையை அவள் உள்ளங்கையிலே வைப்பானாக; சாபகாரணமான கசப்பான ஜலம் ஆசாரியன் கையில் இருக்கவேண்டும் (எண் 5:18).

5. ஆசாரியன் அவளை ஆணையிடுவித்து: ஒருவனும் உன்னோடே சயனியாமலும், உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ தீட்டுப் படத்தக்கதாய்ப் பிறர்முகம் பாராமலும் இருந்தால், சாபகாரணமான இந்தக் கசப்பான ஜலத்தின் தோஷத்துக்கு நீங்கலாயிருப்பாய். உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ பிறர்முகம் பார்த்து, உன் புருஷனோடேயன்றி அந்நியனோடே சம்யோகமாய் சயனித்து தீட்டுப் பட்டிருப்பாயானால், சாபகாரணமான இந்த ஜலம் உன் வயிறு வீங்கவும் இடுப்பு சூம்பவும் பண்ணும்படி, உன் குடலுக்குள் பிரவேசிக்கக்கடவது (எண் 5:19-22).

6. அந்த ஸ்திரீ: ஆமென், ஆமென், என்று சொல்லக்கடவள் (எண் 5:22).

7. பின்பு ஆசாரியன் இந்தச் சாப வார்த்தைகளை ஒரு சீட்டில் எழுதி, அவைகளைச் கசப்பான ஜலத்தினால் கழுவிப்போடவேண்டும் (எண் 5:23).

8. சாபகாரணமான அந்தக் கசப்பான ஜலத்தை அவள் குடிக்கும்படி பண்ணுவான்; அப்பொழுது சாபகாரணமான அந்த ஜலம் அவளுக்குள் இறங்கிச் கசப்பாகும் (எண் 5:24; எண் 5:26).

9. ஆசாரியன் எரிச்சலின் காணிக்கையை அந்த ஸ்திரீயின் கையிலிருந்து வாங்கி, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டி, பீடத்தின்மேல் செலுத்த வேண்டும் (எண் 5:25).

10. ஞாபகக்குறியாக அதிலே ஒரு கைப்பிடி நிறைய எடுத்து, பீடத்தின்மேல் தகனித்து, பின்பு ஸ்திரீக்கு அந்த ஜலத்தைக் குடிக்கும்படி கொடுக்கக்கடவன் (எண் 5:26).

11. அந்த ஸ்திரீ தன் ஜனங்களுக்குள்ளே சாபமாக இருப்பாள் (எண் 5:27).

12. அந்த ஸ்திரீ தீட்டுப்படாமல் சுத்தமாயிருந்தால், அவள் அதற்கு நீங்கலாகி, கர்ப்பந்தரிக்கத் தக்கவளாயிருப்பாள் (எண் 5:28).

13. ஒரு ஸ்திரீ தன் புருஷனோடேயன்றி அந்நிய புருஷனோடே சேர்ந்து தீட்டுப் பட்டதினால் உண்டான எரிச்சலுக்கும், புருஷன்மேல் எரிச்சலின் ஆவி வருகிறதினால், அவன் தன் மனைவியின்மேல் அடைந்த சமுசயத்துக்கும் அடுத்த பிரமாணம் இதுவே (எண் 5:29-30).

14. புருஷனானவன் அக்கிரமத்திற்கு நீங்கலாயிருப்பான் (எண் 5:31).

15. தீட்டுப்பட்டு அசுத்தமான ஸ்திரீயோ, தன் அக்கிரமத்தைச் சுமப்பாள்.

ஒரு புருஷனுக்கு தன் மனைவியினுடைய நடத்தையின்மீது சந்தேகம் வரும்போது, அவன் தன் மனைவியை ஆசாரியனிடத்தில் அழைத்துக்கொண்டு வரவேண்டும். அவன் அவள் நிமித்தம் ஒரு எப்பா அளவான வாற்கோதுமை மாவிலே பத்தில் ஒரு பங்கைப் படைப்பாக ஆசாரியனிடத்தில் கொடுக்கக்கடவன்; அது எரிச்சலின் காணிக்கையும் அக்கிரமத்தை நினைப்பூட்டும் காணிக்கையுமாய் இருக்கிறது. ஆகையினால், ஆசாரியன் அதின்மேல் எண்ணெய் வார்க்காமலும் தூபவர்க்கம் போடாமலும் இருக்கவேண்டும் (எண் 5:15).

தன் மனைவியின்மீது குரோதம் கொண்டிருக்கும் புருஷன் இந்தக் காணிக்கையை செலுத்த வேண்டும். இது மிகவும் குறைந்த செலவில் செலுத்தப்படும் காணிக்கையாகும் (2இராஜா 7:1,16,18). தரித்திரர் மட்டுமே வாற்கோதுமையைக் காணிக்கையாகச் செலுத்துவார்கள் (நியா 7:13; 2இராஜா 4:42; எசே 4:12; யோவான் 6:9-13) செல்வந்தர்கள் வாற்கோதுமையை மிருகஜீவன்களுக்கு ஆகாரமாகக் கொடுப்பார்கள் (1இராஜா 4:7). வெளி 6:6 ஆவது வசனத்தில் வாற்கோதுமையின் கிரயம் கோதுமையின் கிரயத்தில் மூன்றிலொருபங்காக இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

எண்ணெயும், தூபவர்க்கமும் கிருபையையும், அன்பையும் வெளிப்படுத்துகிறது. இங்கு ஸ்திரீ குற்றம் சுமத்தப்படுகிறவளாக இருப்பதினால் அந்தக் காணிக்கையின்மீது எண்ணெய் வார்க்கப்படவில்லை. தூபவர்க்கம் போடப்படவில்லை. அவள் தன்னுடைய தலையின் முக்காட்டை நீக்கிவிட வேண்டும். இது அவமானப்படுவதற்கு ஓர் அடையாளம். (எண் 5:18).

"எரிச்சலின் காணிக்கையும் அக்கிரமத்தை நினைப்பூட்டும் காணிக்கையும்" என்பது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிற மனைவியின் உண்மையான குணத்தை வெளிப்படுத்துவதற்காக செலுத்தப்படும் காணிக்கையை குறிக்கிறது. இந்தக் காணிக்கை இதற்காகவே செலுத்தப்படுவதினால் இதற்கு இந்தப் பெயர் வழங்கலப்படலாயிற்று.

ஆசாரியன் அவளைச் சமீபத்தில் அழைத்து, கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தவேண்டும். ஒரு மண்பாண்டத்திலே பரிசுத்த ஜலம் வார்த்து, வாசஸ்தலத்தின் தரையிலிருக்கும் புழுதியிலே கொஞ்சம் எடுத்து, அந்த ஜலத்திலே போடவேண்டும் (எண் 5:16,17).

வெண்கலத் தொட்டியில் வார்க்கப்பட்டிருக்கும் ஜலம் பரிசுத்தமானது. அதைப் பரிசுத்தமான காரியங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். இந்த ஜலம் மண்பாண்டத்தில் வார்க்கப்படுகிறது. இந்த ஜலத்தைப் பயன்படுத்திய பின்பு, மண்பாண்டத்தை உடைத்துப் போடவேண்டும். (லேவி 11:33).

ஆசரிப்புக் கூடாரத்திலிருக்கும் புழுதி துக்கம், குரோதம், ஆக்கினை ஆகியவற்றிற்கு அடையாளமாகும். (ஆதி 3:14; சங் 72:9; ஏசா 49:23; ஏசா 65:25; மீகா 7:17).

ஆசாரியன் அந்த ஸ்திரீயைக் கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி, அவள் முக்காட்டை நீக்கவேண்டும். ஆசாரியன் எரிச்சலின் காணிக்கையாகிய நினைப்பூட்டுதலின் காணிக்கையை அவள் உள்ளங்கையிலே வைக்கவேண்டும். சாபகாரணமான கசப்பான ஜலம் ஆசாரியன் கையில் இருக்கவேண்டும் (எண் 5:18).

ஒரு ஸ்திரீ முக்காடிடுவது அவள் தன் கணவனுடைய பாதுகாப்பில் இருக்கிறாள் என்பதற்கு அடையாளம். (2கொரி 11:1-16) அவளுடைய முக்காடு நீக்கப்படும்போது அவளுக்கு அவளுடைய கணவனின் பாதுகாப்பு இல்லை என்பது பொருள். இங்கு அவளுடைய கணவனே அவள்மீது குற்றம்சுமத்துவதினால் அவளுடைய முக்காடு நீக்கப்படுகிறது (எண் 5:14-15).

பின்பு ஆசாரியன் அவளை ஆணையிடுவித்து, அவளை நோக்கி, "ஒருவனும் உன்னோடே சயனியாமலும், உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ தீட்டுப்படத்தக்கதாய்ப் பிறர்முகம் பாராமலும் இருந்தால், சாபகாரணமான இந்தக் கசப்பான ஜலத்தின் தோஷத்துக்கு நீங்கலாயிருப்பாய்" (எண் 5:19) என்றும்,

"உன் புருஷனுக்கு உட்பட்டிருக்கிற நீ பிறர்முகம் பார்த்து, உன் புருஷனோடேயன்றி அந்நியனோடே சம்யோகமாய் சயனித்து தீட்டுப்பட்டிருப்பாயானால், கர்த்தர் உன் இடுப்பு சூம்பவும், உன் வயிறு வீங்கவும்பண்ணி, உன்னை உன் ஜனங்களுக்குள்ளே சாபமும் ஆணையிடுங்குறியுமாக வைப்பாராக" (எண் 5:20,21) என்றும்,

"சாபகாரணமான இந்த ஜலம் உன் வயிறு வீங்கவும் இடுப்பு சூம்பவும் பண்ணும்படி, உன் குடலுக்குள் பிரவேசிக்கக்கடவது" (எண் 5:22) என்றும் சாபவார்த்தையாலே ஸ்திரீயை ஆணையிடுவித்துச் சொல்லவேண்டும். அதற்கு அந்த ஸ்திரீ: "ஆமென், ஆமென்," என்று சொல்லவேண்டும் (எண் 5:22).

பின்பு ஆசாரியன் இந்தச் சாபவார்த்தைகளை ஒரு சீட்டில் எழுதி, அவைகளைச் கசப்பான ஜலத்தினால் கழுவிப்போட்டு,சாபகாரணமான அந்தக் கசப்பான ஜலத்தை அவள் குடிக்கும்படி பண்ணவேண்டும்; அப்பொழுது சாபகாரணமான அந்த ஜலம் அவளுக்குள் இறங்கிச் கசப்பாகும் (எண் 5:23,24).

மோசேயைப்போலவே சாதாரண ஆசாரியர்களுக்கும் எழுதத் தெரிந்திருக்கிறது. அக்காலத்தில் படிப்பறிவு நன்றாக இருந்திருக்கிறது. (யாத் 17:14).

சாபவார்த்தைகளை மையினால் ஒரு சீட்டில் எழுதுவார்கள். கசப்பான ஜலத்தில் அந்த மையைக் கரைத்து விடுவார்கள். சாபகாரணமான அந்தக் கசப்பான ஜலத்தை அவள் குடிக்க வேண்டும். அதில் சாபவார்த்தைகள் கரைந்திருக்கிறது.

ஜலத்தைக் குடிக்கும் ஸ்திரீ குற்றமுள்ளவளாக இருந்தால், அவளுக்குப் பல பிரச்சனைகள் உண்டாகும். ஜலத்தைக் குடிப்பது அந்தப் பரீட்சையை அவள் அங்கிகரிப்பதற்கு அடையாளம். (எண் 5:24,26-27).

பின்பு ஆசாரியன் எரிச்சலின் காணிக்கையை அந்த ஸ்திரீயின் கையிலிருந்து வாங்கி, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டி, பீடத்தின்மேல் செலுத்தவேண்டும். ஞாபகக்குறியாக அதிலே ஒரு கைப்பிடி நிறைய எடுத்து, பீடத்தின்மேல் தகனித்து, பின்பு ஸ்திரீக்கு அந்த ஜலத்தைக் குடிக்கும்படி கொடுக்கவேண்டும் (எண் 5:25,26).

ஆசாரியன் அந்த ஸ்திரீகயை அந்த ஜலத்தைக் குடிக்கச் செய்த பின்பு சம்பவிப்பதாவது: அவள் தீட்டுப்பட்டு, தன் புருஷனுக்குத் துரோகம் பண்ணியிருந்தால், சாபகாரணமான அந்த ஜலம் அவளுக்குள் பிரவேசித்துக் கசப்புண்டானதினால், அவள் வயிறுவீங்கி, அவள் இடுப்பு சூம்பும்; இப்படியே அந்த ஸ்திரீ தன் ஜனங்களுக்குள்ளே சாபமாக இருப்பாள் அந்த ஸ்திரீ தீட்டுப்படாமல் சுத்தமாயிருந்தால், அவள் அதற்கு நீங்கலாகி, கர்ப்பந்தரிக்கத்தக்கவளாயிருப்பாள் (எண் 5:27,28).

ஜலத்தைக் குடிப்பதினால் ஏற்படும் விளைவு தெய்வீகக் கிரியையினால் உண்டாகிறது. அவள் தீட்டுப்பட்டு, தன் புருஷனுக்குத் துரோகம் பண்ணியிருந்தால் அவளுடைய வயிறு வீங்கும். அவள் இடுப்பு சூம்பும்.

தீட்டுப்படாமல் சுத்தமாயிருக்கிற ஸ்திரீக்கு வரும் ஆசீர்வாதங்களின் விவரம் வருமாறு:

1. அவளுடைய கற்புத்தன்மை உறுதியாகும்.
2. அவள்மீது இனிமேல் குற்றம்சுமத்த முடியாது.
3. அவள் கர்ப்பந்தரிக்கத்தக்கவளாயிருப்பாள்.

ஒரு ஸ்திரீ தன் புருஷனோடேயன்றி அந்நிய புருஷனோடே சேர்ந்து தீட்டுப்பட்டதினால் உண்டான எரிச்சலுக்கும், புருஷன்மேல் எரிச்சலின் ஆவி வருகிறதினால், அவன் தன் மனைவியின்மேல் அடைந்த சமுசயத்துக்கும் அடுத்த பிரமாணம் இதுவே (எண் 5:29,30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தன் மனைவியின்மீது சந்தேகப்பட்ட புருஷன், அவளை கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தவேண்டும். ஆசாரியன் இந்தப் பிரமாணத்தின்படியெல்லாம் அவளுக்குச் செய்யவேண்டும். அப்பொழுது புருஷனானவன் அக்கிரமத்திற்கு நீங்கலாயிருப்பான்; தன் புருஷனுக்கு துரோகம்பண்ணின ஸ்திரீயோ அப்படிப்பட்ட ஸ்திரீயோ, தன் அக்கிரமத்தைச் சுமப்பாள் (எண் 5:30,31).

ஸ்திரீ சுத்தமானவள் என்று நிரூபிக்கப்பட்டாலும் அவள்மீது குற்றம் சுமத்திய புருஷனுக்கு எந்தத் தண்டனையும் கூறப்படவில்லை. தேவையில்லாத பொறாமை கொடூரமானது. அது ஒரு பாவம். (சங் 8:6) தேவனும் தம்முடைய பிள்ளைகளோடு வைராக்கியமுள்ளவராக இருக்கிறார். தம்முடைய மகிமையை மற்ற தெய்வங்களோடு பகிர்ந்து கொள்வதற்கு அவர் சம்மதிக்கவே மாட்டார்.

எரிச்சலை சோதித்துப் பார்ப்பதற்காக ஆசாரியர் செய்யவேண்டிய நடபடிகளின் விவரம் வருமாறு :

1. ஆசாரியன் அவளைச் சமீபத்தில் அழைக்க வேண்டும் (எண் 5:16)

2. அவளை கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தவேண்டும் (எண் 5:16,18)

3. ஒரு மண்பாண்டத்திலே பரிசுத்த ஜலம் வார்க்கவேண்டும் (எண் 5:17)

4. வாசஸ்தலத்தின் தரையிலிருக்கும் புழுதியிலே கொஞ்சம் எடுத்து, அந்த ஜலத்திலே போடவேண்டும்.

5. ஸ்திரீயினுடைய முக்காட்டை நீக்க வேண்டும் (எண் 5:18)

6. காணிக்கையை அவள் உள்ளங்கையிலே வைக்கவேண்டும்.

7. சாபகாரணமான கசப்பான ஜலம் ஆசாரியன் கையில் இருக்கவேண்டும்.

8. ஆசாரியன் அவளை ஆணையிடுவிக்க வேண்டும் (எண் 5:19-20)

9. சாபவார்த்தையாலே ஸ்திரீயை ஆணையிடுவித்துச் சொல்லவேண்டும் (எண் 5:21-22)

10. சாபவார்த்தைகளை ஒரு சீட்டில் எழுதவேண்டும் (எண் 5:23)

11. சீட்டில் எழுதினதை கசப்பான ஜலத்தினால் கழுவிப்போடவேண்டும்.

12. சாபகாரணமான அந்தக் கசப்பான ஜலத்தை அவள் குடிக்கும்படி பண்ண வேண்டும் (எண் 5:24,26-27)

13. ஆசாரியன் எரிச்சலின் காணிக்கையை அந்த ஸ்திரீயின் கையிலிருந்து வாங்கி, அதைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டி, பீடத்தின்மேல் செலுத்த வேண்டும் (எண் 5:25)

14. ஞாபகக்குறியாக காணிக்கையிலே ஒரு கைப்பிடி நிறைய எடுத்து, பீடத்தின்மேல் தகனிக்கவேண்டும் (எண் 5:25-26).

கர்த்தர் இந்தப் பிரமாணத்தை மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன இந்த வார்த்தைகளையெல்லாம் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும்.

6 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் நசரேய விரதத்தைப்பற்றிய பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது. நசரேய விரதமாகிய விசேஷித்த பொருத்தனை பண்ணிக்கொண்டவர்கள் செய்ய வேண்டிய காரியங்களும், செய்யக்கூடாத காரியங்களும் (எண் 6:1-8).

நசரேய விரதம் இருக்கிறவன் தன்னைத் தீட்டுப்படுத்திக்கொண்டால், அவனுக்கு சுத்திகரிப்பு செய்யவேண்டிய பிரமாணம் (எண் 6:9-12). நசரேய விரதம் காக்கும் நாட்கள் நிறைவேறும்போது, கர்த்தருக்கு செலுத்தவேண்டிய பலிகள் (எண் 6:13-21).

ஆசாரியர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்ல வேண்டிய ஆசீர்வாதத்தின் விவரம் (எண் 6:22-27).

நசரேய விரதம் எண் 6:1-8

எண் 6:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 6:2. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொண்டவர்களாயிருக்கும்படி நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணினால்,

எண் 6:3. அப்படிப்பட்டவன் திராட்சரசத்தையும் மதுபானத்தையும் விலக்கக்கடவன்; அவன் திராட்சரசத்தின் காடியையும் மற்ற மதுபானத்தின் காடியையும், திராட்சரசத்தினால் செய்த எவ்விதமான பானத்தையும் குடியாமலும், திராட்சப்பழங்களையாவது திராட்ச வற்றல்களையாவது புசியாமலும்,

எண் 6:4. தான் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் திராட்சச்செடி விதைமுதல் தோல் வரையிலுள்ளவைகளினால் செய்யப்பட்ட யாதொன்றையும் புசியாமலும் இருக்கக்கடவன்.

எண் 6:5. அவன் நசரேய விரதங்காக்கும் நாளெல்லாம் சவரகன் கத்தி அவன் தலையின்மேல் படலாகாது; அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் காலம் நிறைவேறுமளவும் பரிசுத்தமாயிருந்து, தன் தலைமயிரை வளரவிடக்கடவன்.

எண் 6:6. அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போகக்கூடாது.

எண் 6:7. அவன் தன் தேவனுக்கென்று செய்த நசரேய விரதம் அவன் தலைமேல் இருக்கிறபடியால், மரணமடைந்த தன் தகப்பனாலாகிலும், தாயினாலாகிலும் சகோதரனாலாகிலும் சகோதரியினாலாகிலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது.

எண் 6:8. அவன் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருப்பான்.

இதற்கு முந்தின அதிகாரத்தில் பாவம் செய்தவர்களுக்கு தண்டனை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் பரிசுத்தமாய் ஜீவிக்கிறவர்களுக்கு ஆசீர்வாதம் சொல்லப்பட்டிருக்கிறது. தம்மிடத்தில் பயபக்தியாயிருக்கிறவர்களையும், தம்மீது தியானமாயிருக்கிறவர்களையும் கர்த்தர் ஆசீர்வதித்து உற்சாகப்படுத்துகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரரில் சிலர் நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனை பண்ணி, கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொண்டார்கள். அவர்கள் நசரேய விரத பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, மிகுந்த ஒழுக்கத்தோடும் கட்டுப்பாடோடும் ஜீவித்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் சாதாரண ஜனங்களுக்கும், நசரேய விரத பொருத்தனை பண்ணிக்கொண்ட ஜனங்களுக்கும் அதிகமான வித்தியாசம் இருக்கும். யோசேப்பு தன்னுடைய சகோதரர் மத்தியில் ஒரு நசரேயர் என்று அழைக்கப்பட்டார்.

"உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதாயிருந்து, நித்தியபர்வதங்களின் முடிவுமட்டும் எட்டுகின்றன; அவைகள் யோசேப்புடைய சிரசின் மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக" (ஆதி 49:26).

நசரேயர்கள் கர்த்தருக்கென்று விரதம்பண்ணிக்கொண்டவர்கள். அவர்கள் கர்த்தருக்காக தங்களை வேறுபிரித்து பரிசுத்தமாய் ஜீவிக்கிறவர்கள். ஒரு சிலர் தங்கள் ஜீவியகாலம் முழுவதும் நசரேய விரதத்தைக் காத்துக்கொள்வார்கள். இவர்களுக்கு தேவனுடயை தெய்வீக வெளிப்பாடு கிடைத்திருக்கலாம்.

சிம்சோன், யோவான்ஸ்நானன் ஆகியோர், தெய்வீக வெளிப்பாட்டின் பிரகாரம், தங்கள் ஜீவியகாலமெல்லாம் கர்த்தருக்கென்று நசரேய விரதம் பண்ணிக்கொண்டவர்கள்.

"நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்றார்" (நியா 13:5).

"அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்பான்" (லூக் 1:15).

சில சமயங்களில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காக நசரேய விரதமாகிய விசேஷித்த பொருத்தனை பண்ணிக்கொள்வதும் உண்டு. சாமுவேலை இதற்கு எடுத்துக்காட்டாக சொல்லலாம். சாமுவேலின் தாயார், தனக்கு பிறக்கப்போகும் மகனுக்காக, நசரேய விரதப்பொருத்தனை பண்ணினாள்.

"சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்திபடுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்" (1சாமு 1:11).

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் தாங்களாகவே கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கென்று நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையை பண்ணுகிறார்கள். இவ்வாறு தாங்களாகவே நசரேய விரதப்பொருத்தனை பண்ணுவதுபற்றி, கர்த்தர் இந்த அதிகாரத்தில் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொண்டவர்களாயிருக்கும்படி நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணினால்" (எண் 6:1,2) என்று சொல்லுகிறார்.

ஒரு புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனை பண்ணலாம். தமக்கென்று பொருத்தனை பண்ணுகிறவர்களைப்பற்றியும், அந்தப் பொருத்தனையை யார், எவ்வாறு நிறைவேற்றவேண்டும் என்பது பற்றியும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார்.

"ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டாலும், அவன் சொல்தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன். தன் தகப்பன் வீட்டிலிருக்கிற ஒரு பெண்பிள்ளை தன் சிறுவயதிலே கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணி யாதொரு காரியத்தைச் செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்டால், அவள் செய்த பொருத்தனையையும், அவள் பண்ணிக்கொண்ட நிபந்தனையையும் அவளுடைய தகப்பன் கேட்டும் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருப்பானானால், அவள் செய்த எல்லாப் பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்ட நிபந்தனையும் நிறைவேற வேண்டும்" *(எண் 30:2-4).*

நசரேய விரதமாகிய பொருத்தனைபண்ணினவர்கள், தங்களுடைய நசரேய விரதகாலத்தில், அவர்கள் கர்த்தருக்கென்று விரதம்பண்ணிக்கொண்டவர்கள். அவர்கள் தங்களுடைய நசரேய விரத காலத்தின் பெரும்பகுதியை, நியாயப்பிரமாணத்தை வாசித்து அதைத் தியானம்பண்ணுவதிலும், கர்த்தர்மீது பக்தியாயிருப்பதிலும், கர்த்தருடைய வார்த்தைகளை மற்றவர்களுக்கு உபதேசம்பண்ணுவதிலும் செலவு பண்ணவேண்டும்.

நசரேயர்கள் உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்தும், உலகப்பிரகாரமான ஜனங்களிலிருந்தும் தங்களை வேறுபிரித்துக்கொள்ளவேண்டும். அவர்களைவிட்டு விலகி பிரிந்து ஜீவிக்கவேண்டும்.

நசரேயர்கள் பொருத்தனைபண்ணி, மற்ற ஜனங்களிடமிருந்து வேறுபிரிந்திருக்கவேண்டும். ஒவ்வொரு இஸ்ரவேல் புத்திரரும், தேவனுடைய தெய்வீக பிரமாணத்தின்படி, தன்னுடைய முழுஇருதயத்தோடு கர்த்தர்மீது அன்பாயிருக்கவேண்டும்.

நசரேய விரதம் இருக்கிறவர்களோ, தங்களுடைய விசேஷித்த பொருத்தனையின் பிரகாரமாக, தங்களுடைய கிரியைகளில் கர்த்தர் மீதுள்ள தங்களுடைய பக்தியை வெளிப்படுத்தவேண்டும். தங்கள் ஜீவியத்தில் ஆவியின் கனிகளைக் கொடுக்கவேண்டும். சாதாரண இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லப்படாத விசேஷித்த பிரமாணங்கள், நசரேய விரத பொருத்தனை பண்ணினவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும், அவரைப் பின்பற்றுகிறவர்களையும் நசரேயர்கள் என்று சொல்லி, சத்துருக்கள் அவரை பரியாசம்பண்ணினார்கள். இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின்படி ஒரு நசரேயரல்ல. அவர் திராட்சரசம் பானம்பண்ணினார். மரித்தோரின் சரீரத்தைத் தொட்டார். ஆனாலும் இயேசுகிறிஸ்து பரிசுத்தமானவர். அவருடைய பரிசுத்தம் பரிபூரணமானது.

விசுவாசிகள் எல்லோருமே ஆவிக்குரிய நசரேயர்களாயிருக்கவேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொள்ளவேண்டும். உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்து வேறுபிரிந்து ஜீவிக்கவேண்டும்.

நசரேய விரதமாகிய விசேஷித்த பொருத்தனையை பண்ணிக்கொண்டவர்கள் என்னென்ன காரியங்களை விட்டு விலகியிருக்கவேண்டும் என்று கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

நசரேய விரதப்பொருத்தனை பண்ணினவர்கள் திராட்சரசத்தையும் மதுபானத்தையும் விலக்கவேண்டும்; அவர்கள் திராட்சரசத்தின் காடியையும் மற்ற மதுபானத்தின் காடியையும், திராட்சரசத்தினால் செய்த எவ்விதமான பானத்தையும் குடிக்கக்கூடாது. திராட்சப்பழங்களையாவது திராட்ச வற்றல்களையாவது புசிக்கக்கூடாது *(எண் 6:3).*

அவர்கள் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் திராட்சச்செடி விதைமுதல் தோல் வரையிலுள்ளவைகளினால் செய்யப்பட்ட யாதொன்றையும் புசிக்கக்கூடாது *(எண் 6:4).*

நசரேயனுக்கு திராட்சரசம் பருக கொடுக்கிறவன், சோதனைக்காரனுடைய வேலையை செய்கிறான். "நீங்களோ நசரேயருக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடுத்து, தீர்க்கதரிசிகளை நோக்கி: நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லவேண்டாம் என்று கற்பித்தீர்கள்" (ஆமோ 2:12).

நசரேயருக்கு திராட்சரம் குடிக்க கொடுக்கிறவர்கள், நசரேயருடைய விரதப்பொருத்தனையை பலவீனப்படுத்த முயற்சிபண்ணுகிறார்கள். அவர்களுக்கு தடைபண்ணப்பட்டிருக்கும் பழங்களையும், வற்றல்களையும், ரசத்தையும் பருகுமாறு அவர்களை சோதித்துப் பார்க்கிறார்கள்.

நசரேய விரதம் இருக்கிறவர்கள் மதுபானத்தின்மீது பிரியப்படாமல், கர்த்தர்மீதே பிரியமாயிருக்கிறார்கள். ரேகாபியர்கள் மதுபானம் பருகுவதில்லை.

"அதற்கு அவர்கள்: நாங்கள் திராட்சரசம்குடிக்கிறதில்லை; ஏனென்றால், ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாப், நீங்கள் பரதேசிகளாய்த் தங்குகிற தேசத்தில் நீடித்திருக்கும்படிக்கு, நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் திராட்சரசம் குடியாமலும், வீட்டைக் கட்டாமலும், விதையை விதையாமலும், திராட்சத்தோட்டத்தை நாட்டாமலும், அதைக் கையாளாமலும், உங்களுடைய எல்லா நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருப்பீர்களாக என்று எங்களுக்குக் கட்டளையிட்டார்" (எரே 35:6,7).

நசரேய விரதம் இருக்கிறவர்கள் நீடிய பொறுமையுள்ளவர்களுக்கும், தங்கள் சுயத்தை வெறுத்து ஜீவிக்கிறவர்களுக்கும் எடுத்துக்காட்டாயிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், அப்போஸ்தலர் பவுல் சிறிதளவு திராட்சரம் பானம்பண்ணுவதை அனுமதிக்கிறார்.

"நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" (1தீமோ 5:23).

ஆனாலும் அளவுக்கு அதிகமாக திராட்சரசம் பானம்பண்ணுவது, மதுபான வெறிகொள்ளுவது ஆகியவையெல்லாமே பாவமான காரியங்கள். மதுபானம்பண்ணுகிறவர்கள் அதற்கு அடிமைகளாயிருப்பார்கள்.

நசரேய விரதம் இருக்கிறவர்கள் கர்த்தருடைய ஆராதனையிலே தங்களை அதிகமாய் ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். அவர்கள் மதுபானம் பண்ணக்கூடாது. மதுவைக் குடிக்கிறவர்கள் நியாயப்பிரமாணத்தை மறந்துவிடுவார்கள்.

"மதுபானம்பண்ணினால் அவர்கள் நியாயப்பிரமாணத்தை மறந்து, சிறுமைப்படுகிறவர்களுடைய நியாயத்தையும் புரட்டுவார்கள்" (நீதி 31:5).

மதுபானம்பண்ணுகிறவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, வழிதப்பிப்போவார்கள்.

"ஆனாலும் இவர்களும் திராட்சரசத்தால் மயங்கி, மதுபானத்தால் வழிதப்பிப்போகிறார்கள்; ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி, திராட்சரசத்தால் விழுங்கப்பட்டு, சாராயத்தினால் வழிதப்பி, தீர்க்கதரிசனத்தில் மோசம்போய், நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள்" (ஏசா 28:7).

திராட்சரசத்தையும் மதுபானத்தையும் விலக்கவேண்டுமென்று நசரேயருக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணம் தங்களுக்கும் சொல்லப்பட்டிருப்பதாக ஒவ்வொரு விசுவாசியும், தங்களுடைய மனதிலே நினைத்துக்கொள்ளவேண்டும். விசுவாசிகள் திராட்சரத்தையும் மதுபானத்தையும் விலக்கவேண்டும். மதுபானத்திற்கு அடிமைகளாயிருக்கிறவர்கள் சாத்தானுக்கும் அடிமைகளாகிவிடுவார்கள்.

நசரேய விரதப்பொருத்தனை பண்ணியவர்கள் தங்கள் தலைமயிரை சிரைக்கக்கூடாது. நசரேய விரதங்காக்கும் நாளெல்லாம் சவரகன் கத்தி அவர்கள் தலையின்மேல் படலாகாது; அவர்கள் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் காலம் நிறைவேறுமளவும் பரிசுத்தமாயிருந்து, தங்கள் தலைமயிரை வளரவிடவேண்டும் (எண் 6:5). நசரேயர்கள் தங்களுடைய தலைமயிரை மாத்திரமல்ல, தாடி மயிரையும் சிரைக்கக்கூடாது.

சிம்சோன் ஒரு நசரேயன். அவன் தன் தலைமயிரையும், தாடி மயிரையும் சிரையாமலிருந்து, கர்த்தருடைய விசேஷித்த பெலத்தைப்பெற்றுக்கொண்டான்.

தலைமயிர், மனுஷருடைய அழகுக்கும் அலங்காரத்திற்கும் அடையாளம். புருஷர்களும் ஸ்திரீகளும், தங்களுடைய தலைமுடியை தங்கள் இஷ்டம்போல வளர்த்து, அதை வாரி அழகுபடுத்துகிறார்கள். இது தங்களுக்கு அலங்காரமாயிருக்கும் என்று நினைக்கிறார்கள். தலையின்மீதும் சவரகன் கத்தி படவில்லையென்றால், தலைமயிர் சிம்சோன் ஒரு நசரேயன். அவன் தன் தலைமயிரையும், தாடி மயிரையும் சிரையாமலிருந்து, கர்த்தருடைய விசேஷித்த பெலத்தைப்பெற்றுக்கொண்டான்.

தலைமயிர், மனுஷருடைய அழகுக்கும் அலங்காரத்திற்கும் அடையாளம். புருஷர்களும் ஸ்திரீகளும், தங்களுடைய தலைமுடியை தங்கள் இஷ்டம்போல வளர்த்து, அதை வாரி அழகுபடுத்துகிறார்கள். இது தங்களுக்கு அலங்காரமாயிருக்கும் என்று நினைக்கிறார்கள். தலையின்மீதும் சவரகன் கத்தி படவில்லையென்றால், தலைமயிர் அழகாயும் அலங்காரமாயும் இல்லாமல், அது அலங்கோலமாயிருக்கும்.

நசரேய விரதம் இருக்கிறவர்கள் தங்கள் சரீரத்தை வெறுக்கிறவர்கள். அவர்கள் அதன் அழகிலும் அலங்காரத்திலும் கவனம் செலுத்தாதவர்கள். அவர்கள் கர்த்தருக்கென்று விரதம்பண்ணிக்கொண்டவர்கள். கர்த்தருக்காக வேறுபிரிந்து ஜீவிக்கிறவர்கள். நசரேய விரதம் இருக்கிறவர்கள் தங்கள் ஆத்துமாக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்களேயல்லாமல், தங்கள் சரீரத்தின் அலங்காரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

தங்களுடைய ஆத்துமா கர்த்தருக்கு பிரியமானதாயிருக்கவேண்டும் என்பதே நசரேயரின் விருப்பம். ஆத்துமாவின் அலங்காரமே தங்களுக்கு மெய்யான அலங்காரம் என்று நசரேயர் நினைக்கிறார்கள். தலைமயிரை அழகுபடுத்துவதைவிட, கர்த்தரோடு சமாதானமாய் ஜீவிப்பதே நசரேயருக்கு முக்கியமானதாயிருக்கிறது.

யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம், நீளமான தலைமயிரானது மனத்தாழ்மைக்கும், கீழ்ப்படிதலுக்கும் அடையாளம். நசரேயரின் தலையில் சவரகன் கத்தி படுவதில்லை. அவர்கள் தங்கள் தலைமயிரை நீளமாய் வளரவிடுவார்கள். அவர்களுடைய நீளமான தலைமயிர், அவர்கள் கர்த்தருக்கும், கர்த்தருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள் என்பதற்கு அடையாளம். அவர்கள் கர்த்தருடைய ஆளுகைக்கு தங்களை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.

"ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக் கொண்டிருக்கிற எந்த புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள். புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ளவேண்டுவதில்லை; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்" (1கொரி 9:4-7).

நசரேய விரதமாகிய பொருத்தனை பண்ணியிருக்கிறவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போகக்கூடாது. அவன் தன் தேவனுக்கென்று செய்த நசரேய விரதம் அவன் தலைமேல் இருக்கிறபடியால், மரணமடைந்த தன் தகப்பனாலாகிலும், தாயினாலாகிலும் சகோதரனாலாகிலும் சகோதரியினாலாகிலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது (எண் 6:6,7).

புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொண்டவர்களாயிருக்கும்போது, அவர்கள் நசரேயராயிருக்கும் நாளெல்லாம் கர்த்தருக்கு பரிசுத்தமாயிருக்கவேண்டும் (எண் 6:8).அழசிம்சோன் ஒரு நசரேயன். அவன் தன் தலைமயிரையும், தாடி மயிரையும் சிரையாமலிருந்து, கர்த்தருடைய விசேஷித்த பெலத்தைப்பெற்றுக்கொண்டான்.

தலைமயிர், மனுஷருடைய அழகுக்கும் அலங்காரத்திற்கும் அடையாளம். புருஷர்களும் ஸ்திரீகளும், தங்களுடைய தலைமுடியை தங்கள் இஷ்டம்போல வளர்த்து, அதை வாரி அழகுபடுத்துகிறார்கள். இது தங்களுக்கு அலங்காரமாயிருக்கும் என்று நினைக்கிறார்கள். தலையின்மீதும் சவரகன் கத்தி படவில்லையென்றால், தலைமயிர் அழகாயும் அலங்காரமாயும் இல்லாமல், அது அலங்கோலமாயிருக்கும்.

நசரேய விரதம் இருக்கிறவர்கள் தங்கள் சரீரத்தை வெறுக்கிறவர்கள். அவர்கள் அதன் அழகிலும் அலங்காரத்திலும் கவனம் செலுத்தாதவர்கள். அவர்கள் கர்த்தருக்கென்று விரதம்பண்ணிக்கொண்டவர்கள். கர்த்தருக்காக வேறுபிரிந்து ஜீவிக்கிறவர்கள். நசரேய விரதம் இருக்கிறவர்கள் தங்கள் ஆத்துமாக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்களேயல்லாமல், தங்கள் சரீரத்தின் அலங்காரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

தங்களுடைய ஆத்துமா கர்த்தருக்கு பிரியமானதாயிருக்கவேண்டும் என்பதே நசரேயரின் விருப்பம். ஆத்துமாவின் அலங்காரமே தங்களுக்கு மெய்யான அலங்காரம் என்று நசரேயர் நினைக்கிறார்கள். தலைமயிரை அழகுபடுத்துவதைவிட, கர்த்தரோடு சமாதானமாய் ஜீவிப்பதே நசரேயருக்கு முக்கியமானதாயிருக்கிறது.

யூதருடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம், நீளமான தலைமயிரானது மனத்தாழ்மைக்கும், கீழ்ப்படிதலுக்கும் அடையாளம். நசரேயரின் தலையில் சவரகன் கத்தி படுவதில்லை. அவர்கள் தங்கள் தலைமயிரை நீளமாய் வளரவிடுவார்கள்.

அவர்களுடைய நீளமான தலைமயிர், அவர்கள் கர்த்தருக்கும், கர்த்தருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள் என்பதற்கு அடையாளம். அவர்கள் கர்த்தருடைய ஆளுகைக்கு தங்களை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.

"ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக் கொண்டிருக்கிற எந்த புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள். புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ளவேண்டுவதில்லை; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்" (1கொரி 9:4-7).

நசரேய விரதமாகிய பொருத்தனை பண்ணியிருக்கிறவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போகக்கூடாது. அவன் தன் தேவனுக்கென்று செய்த நசரேய விரதம் அவன் தலைமேல் இருக்கிறபடியால், மரணமடைந்த தன் தகப்பனாலாகிலும், தாயினாலாகிலும் சகோதரனாலாகிலும் சகோதரியினாலாகிலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது (எண் 6:6,7).

புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொண்டவர்களாயிருக்கும்போது, அவர்கள் நசரேயராயிருக்கும் நாளெல்லாம் கர்த்தருக்கு பரிசுத்தமாயிருக்கவேண்டும் (எண் 6:8).ாயு அலங்காரமாயும் இல்லாமல், அது அலங்கோலமாயிருக்கும்.

புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக்கொண்டவர்களாயிருக்கும்போது, அவர்கள் நசரேயராயிருக்கும் நாளெல்லாம் கர்த்தருக்கு பரிசுத்தமாயிருக்கவேண்டும் (எண் 6:8).

நசரேயர் என்பதற்கான எபிரெய வார்த்தை "நாஜிர்" என்பதாகும். இந்த வார்த்தை "நாஜர்" என்னும் வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. பழைய ஏற்பாட்டில் "நசரேயர்" என்னும் வார்த்தையைக் குறிப்பதற்கு நாஜிர் என்னும் எபிரெய வார்த்தை மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு வேறுபிரிக்கப்பட்டவர், பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறவர் என்று பொருள்.

பழைய ஏற்பாட்டு "நாஜர்" என்னும் எபிரெய வார்த்தை "விரதங்காத்தல்" என்னும் பொருளை தருமாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ரேகாபியர் என்னும் வார்த்தை நசரேயர் என்னும் கருத்தை ஒட்டியே வந்திருக்க வேண்டும். (எரே 35) என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

மத் 2:23 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்து "நசரேயன் என்னப்படுவார்" என்னும் வார்த்தைக்கும், நசரேய விரதத்திற்கும் தொடர்பில்லை. இதற்கு நாசரேத்தில் வாசம்பண்ணுகிறவர் என்று பொருள். (யோவான் 1:46). இயேசு கிறிஸ்து திராட்சரசத்தைப் பானம் பண்ணியிருக்கிறார். மரித்தவர்களுடைய சரீரத்தைத் தொட்டிருக்கிறார். இவை நசரேய விரதத்திற்கு முரணான காரியங்கள். ஆகையினால் இயேசு கிறிஸ்து நசரேய விரதமுள்ளவர் என்று கூறமுடியாது என்பது வேதபண்டிதர்களுடைய கருத்தாகும். (மத் 9:25; மத் 11:19; மத் 26:29; மாற்கு 14:25; லூக்கா 7:14,34; லூக்கா 22:18).

இயேசு கிறிஸ்து நசரேய விரதத்தைக் காத்துக் கொள்ளாவிட்டாலும் தேவனிடத்தில் அவர் தம்மைப் பிரதிஷ்டை பண்ணியிருப்பது அதைவிட பரிசுத்தமானது. (யோவான் 10:36) பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தின் பிரகாரம், அவர் ஊழியம் செய்து வந்தார். (யோவான் 3:2,34; யோவான் 14:12).

"நசரேயருடைய மதபேதம்" என்னும் வாக்கியமும், நாசரேத்து ஊர்க்காரராகிய இயேசு கிறிஸ்துவினுடைய மதபேதம் என்றே பொருள்படும். (அப் 24:5)

நசரேய விரதத்தின் பிரமாணத்தைப்பற்றிய விவரம் வருமாறு :

1. திராட்சரசத்தையும் மதுபானத்தையும் விலக்கக்கடவன் (எண் 6:3).

2. அவன் திராட்சரசத்தின் காடியைக் குடிக்கக்கூடாது.

3. அவன் மற்ற மதுபானத்தின் காடியைக் குடிக்கக்கூடாது.

4. திராட்சரசத்தினால் செய்த எவ்விதமான பானத்தையும் குடிக்கக்கூடாது.

5. திராட்சப்பழங்களைப் புசிக்கக்கூடாது.

6. திராட்ச வற்றல்களைப் புசிக்கக்கூடாது.

7. திராட்சச்செடி விதைமுதல் தோல் வரையிலுள்ளவைகளினால் செய்யப்பட்ட யாதொன்றையும் புசிக்கக்கூடாது.

8. அவன் நசரேய விரதங்காக்கும் நாளெல்லாம் சவரகன் கத்தி அவன் தலையின்மேல் படலாகாது. (எண் 6:5)

9. அவன் பரிசுத்தமாயிருக்க வேண்டும்.

10. அவன் கர்த்தருக்கென்று விரதங்காக்கும் நாளெல்லாம் யாதொரு பிரேதத்தண்டையில் போகக்கூடாது. (எண் 6:6 - 8)

நசரேய விரதத்தில் நான்கு விதமான தெய்வீக உறவுகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன :

1. வேறுபிரிக்கப்படுதல் (எண் 6:1 - 12)

2. ஆராதனை (எண் 6:13 - 21)

3. ஆசீர்வாதம் (எண் 6:22 - 27)

4. சேவித்தல் (எண் 7:1 - 89)

"மதுபானம்" என்னும் வார்த்தையை குறிப்பதற்கு இரண்டு எபிரெய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை "அஜ்" என்னும் வார்த்தையும், "சேகர்"என்னும் வார்த்தையும் ஆகும்.

புளிப்பான காடி என்பதைக் குறிப்பதற்கான எபிரெய வார்த்தை "கோமெட்ஸ்" என்பதாகும். "கோமெட்ஸ்" என்னும் வார்த்தை "காமெட்ஸ்" என்னும் வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. இதற்கு புளிப்பு, ஊறல் என்று பொருள்.

திராட்சைக் காய்களிலிருந்தும், அதன் தோல்களிலிருந்தும் செய்யப்படும் ஒரு வகையான மதுபானம். "திராட்சைத்தோல்" என்பதற்கு எபிரெய மொழியில் "ஜாக்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

யூதருக்கு மத்தியில் நீளமான தலைமுடியை வைத்திருப்பவன் பலமுள்ளவனாகக் கருதப் பட்டான். வழுக்கைத்தலை பலவீனத்திற்கு அடையாளம். (லேவி 21:20; 2இராஜா 2:23; ஏசா 3:24). நசரேயர் தங்களுடைய தலைமயிரை நீளமாக வளரவிட்டு, தங்களுடைய பெலனையெல்லாம் தேவனுக்கு அர்ப்பணிப்பதாகப் பொருத்தனை பண்ணுகிறார்கள்.

நசரேய விரதம் காக்கிறவன் பிரேதத்தைத் தொடக்கூடாது. தொட்டால் அவன் தீட்டுப்பட்டவன். தன் தீட்டைக் கழிப்பதற்குத் தன் தலைமயிரைச் சிரைத்து அதற்குரிய பலிசெலுத்த வேண்டும் (எண் 6:9லி12).

நசரேய விரதம் அவன் தலைமேல் இருக்கிறது. நசரேய விரதம் காக்கிறவனுடைய தலைமுடி அவனுடைய பிரதிஷ்டையாய் இருக்கிறது. (எண் 6:5-8). ஒய்வு வருஷத்தில் கிளைகழிக்கப்படாத திராட்சைச்செடிகூட நசரேயச் செடி என்று அழைக்கப்படுகிறது.

நசரேயன் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாது. பிரதான ஆசாரியனைப்போல நசரேய விரதம் காக்கிறவனும் தன்னைத் தீட்டுப்படுத்தக் கூடாது. தன்னுடைய தந்தை, தாய், சகோதர, சகோதரிகள் ஆகியோர் மரணமடைந்தாலும் இவன் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது. (லேவி 21:10-15).

நசரேயனுடைய சுத்திகரிப்பு எண் 6:9-12

எண் 6:9. அவனண்டையிலே ஒருவன் சடுதியில் மரணமடைந்ததினால், நசரேய விரதமுள்ள அவனுடைய தலை தீட்டுப்பட்டதேயாகில், அவன் தன் சுத்திகரிப்பின் நாளாகிய ஏழாம் நாளில் தன் தலைமயிரைச் சிரைத்துக்கொண்டு,

எண் 6:10. எட்டாம் நாளில் இரண்டு காட்டுப் புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டவரக்கடவன்.

எண் 6:11. அப்பொழுது ஆசாரியன் ஒன்றைப் பாவநிவாரண பலியாகவும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தி, பிணத்தினால் அவனுக்கு உண்டான தீட்டை நிவிர்த்திசெய்து, அவன் தலையை அந்நாளில் பரிசுத்தப்படுத்துவானாக.

எண் 6:12. அவன் திரும்பவும் தன் விரதநாட்களைக் கர்த்தருக்கென்று காத்து, ஒரு வருஷத்து ஆட்டுக்குட்டியைக் குற்றநிவாரணபலியாகக் கொண்டுவரக்கடவன்; அவனுடைய நசரேய விரதம் தீட்டுப்பட்டதினால் சென்ற நாட்கள் விருதாவாகும்.

நசரேயன் தீட்டுப்படும்போது, அவனை சுத்திகரிப்பது சம்பந்தமாகவும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை சொல்லுகிறார். அவன் மனப்பூர்வமாக வேண்டுமென்றே தன்னை தீட்டுப்படுத்திக்கொள்ளாமல், எதிர்பாராத விதமாக, எதேச்சையாக அவன் தீட்டுப்படும்போது, அவன் சுத்திகரிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. செத்துப்போனவனுடைய சரீரத்தைத் தொடுவது சடங்காச்சார பிரகாரமான தீட்டு.

நசரேயன் அண்டையிலே ஒருவன் சடுதியில் மரணமடைந்ததினால், நசரேய விரதமுள்ள அவனுடைய தலை தீட்டுப்பட்டதேயாகில், அவன் தன் சுத்திகரிப்பின் நாளாகிய ஏழாம் நாளில் தன் தலைமயிரைச் சிரைத்துக்கொள்ளவேண்டும். அவன் எட்டாம் நாளில் இரண்டு காட்டுப் புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும் (எண் 6:9,10).

மரணமடைந்த சரீரத்தைத் தொட்டவன் ஏழுநாளும் தீட்டுப்பட்டிருப்பான். எட்டாம் நாளிலே அவன் தன்னை சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் புத்திரரில் சாதாரணமான ஜனங்கள், செத்துப்போனவர்களுடைய சரீரத்தைத் தொட்டாலும் அவர்களும் தீட்டுப்பட்டிருப்பார்கள். ஆனாலும் அவர்களை சுத்திகரிப்பதற்கும், நசரேயனை சுத்திகரிப்பதற்கும் கர்த்தர் வெவ்வேறுவிதமான பிரமாணங்களை சொல்லுகிறார்.

நசரேயன் தன்னை சுத்திகரிப்பதற்கு பாவநிவாரண பலியையும், சர்வாங்க தகனபலியையும் கொண்டு வரவேண்டும். அவனுக்காக பாவநிவிர்த்தி பண்ணப்படவேண்டும்.

தீட்டுப்பட்ட நசரேயன் ஆசரிப்புக்கூடார வாசலில், ஆசாரியனிடத்தில் இரண்டு காட்டுப்புறாக்களையாவது, இரண்டு புறாக்குஞ்சுகளையாவது கொண்டு வரவேண்டும். அப்பொழுது ஆசாரியன் ஒன்றைப் பாவநிவாரண பலியாகவும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியாகவும் செலுத்துவான். பிணத்தினால் அவனுக்கு உண்டான தீட்டை நிவிர்த்திசெய்வான். ஆசாரியன் நசரேயனுடைய தலையை அந்நாளில் பரிசுத்தப்படுத்துவான் (எண் 6:11).

அவன் தேவனுக்கென்று செய்த நசரேய விரதம் அவன் தலையின்மேல் இருக்கிறது. மரணமடைந்தவனுடைய சரீரத்தைத் தொட்டதினால், நசரேய விரதமுள்ள அவனுடைய தலை தீட்டுப்படுகிறது. அவனுடைய சுத்திகரிப்பின் ஏழாம் நாளில் அவன் தலைமயிர் சிரைக்கப்படுகிறது. எட்டாம் நாளில் ஆசாரியன் அவன் தலையை பரிசுத்தப்படுத்துகிறான். அவனுக்காக பாவநிவிர்த்தி செய்யப்பட்ட பின்பு, அவன் சுத்திகரிக்கப்படுகிறான்.

விசுவாசிகளாகிய நாமும் சில சமயங்களில் துணிகரமாய்ப் பாவம் செய்யாமல், எதேச்சையாக பாவம் செய்துவிடுவோம். நாம் மனமறிந்து செய்கிற பாவமாகயிருந்தாலும், மனமறியாமல் செய்கிற பாவமாயிருந்தாலும், பாவம் பாவமாகவே இருக்கும். நம்முடைய பாவம் மன்னிக்கப்படவேண்டும். நாம் அறியாமல் செய்த பாவமாகயிருந்தாலும் அந்தப் பாவத்தையும் கர்த்தருடைய சமுகத்திலே உடனே அறிக்கை செய்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். இயேசுகிறிஸ்துவின் மன்னிக்கும் கிருபைக்காக நாம் ஒவ்வொரு நாளும் அவருடைய சமுகத்திலே விண்ணப்பம்பண்ணவேண்டும். ஒவ்வொரு நாளும் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நாம் சுத்தமாகவேண்டும்.

"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1யோவா 2:1,2).

நசரேய விரதத்தில் தீட்டுப்படுவது பற்றிய பிரமாணத்தின் விவரம் :

1. நசரேய விரதமுள்ள ஒருவனுடைய தலை தீட்டுப்பட்டதேயாகில், ஏழாம் நாள் சுத்திகரிப்புக்குபின் எட்டாம் நாளில் ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவன் (எண் 6:9-10).

2. தன் சுத்திகரிப்பின் நாளாகிய ஏழாம் நாளில் தன் தலைமயிரைச் சிரைத்துக் கொள்ளவேண்டும் (எண் 6:9).

3. எட்டாம் நாளில் இரண்டு காட்டுப் புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது ஆசரிப்புக் கூடாரவாசலில் ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும் (எண் 6:10).

4. ஆசாரியன் ஒன்றைப் பாவநிவாரண பலியாகவும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தவேண்டும் (எண் 6:11).

5. பிணத்தினால் அவனுக்கு உண்டான தீட்டை நிவிர்த்திசெய்து, அவன் தலையை அந்நாளில் பரிசுத்தப் படுத்துவானாக.

6. அவன் திரும்பவும் தன் விரதநாட்களைக் கர்த்தருக்கென்று காத்து, ஒரு வருஷத்து ஆட்டுக்குட்டியைக் குற்றநிவாரண பலியாகக் கொண்டுவரக்கடவன் (எண் 6:12).

7. அவனுடைய நசரேய விரதம் தீட்டுப்பட்டதினால் சென்ற நாட்கள் விருதாவாகும். அவனுடைய தலை தீட்டுப்பட்டதினால் அவன் மறுபடியுமாக நசரேய விரதம் அநுசரிக்கவேண்டும்.

மரித்த சடலத்தைத் தொட்டதின் மூலமாக அவன் நீதிநெறியாக எந்தப் பாவமும் செய்யவில்லை. ஆனாலும் இதனால் தீட்டு உண்டாகிறது. இந்தத் தீட்டை நிவிர்த்தி செய்வதற்கு அவன் பாவநிவாரண பலி செலுத்தவேண்டும்.

நசரேயனுக்குரிய பிரமாணம் எண் 6:13-21

எண் 6:13. நசரேயனுக்குரிய பிரமாணமாவது: அவன் விரதங்காக்கும் நாட்கள் நிறைவேறின அன்றே, அவன் ஆசரிப்புக் கூடாரவாசலிலே வந்து,

எண் 6:14. சர்வாங்க தகனபலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும், பாவநிவாரணபலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக்குட்டியையும், சமாதானபலியாக பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும்,

எண் 6:15. ஒரு கூடையில் எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும், எண்ணெய் தடவப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும், அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் கர்த்தருக்குத் தன் காணிக்கையாகச் செலுத்தக்கடவன்.

எண் 6:16. அவைகளை ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, அவனுடைய பாவநிவாரண பலியையும் அவனுடைய சர்வாங்க தகனபலியையும் செலுத்தி,

எண் 6:17. ஆட்டுக்கடாவைக் கூடையிலிருக்கும் புளிப்பில்லாத அப்பங்களோடுங்கூடக் கர்த்தருக்குச் சமாதான பலியாகச் செலுத்தி, அவனுடைய போஜனபலியையும் பானபலியையும் படைப்பானாக.

எண் 6:18. அப்பொழுது நசரேயன் ஆசரிப்புக் கூடாரவாசலிலே, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலையைச் சிரைத்து, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரை எடுத்து, சமாதானபலியின்கீழ் எரிகிற அக்கினியில் போடக்கடவன்.

எண் 6:19. நசரேயன் பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரைச் சிரைத்துக் கொண்டபின்பு, ஆசாரியன் ஆட்டுக்கடாவினுடைய வேவிக்கப்பட்ட ஒரு முன்னந்தொடையையும், கூடையில் இருக்கிறவைகளிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் புளிப்பில்லாத ஒரு அடையையும் எடுத்து, அவனுடைய உள்ளங்கைகளில் வைத்து,

எண் 6:20. அவைகளைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டக்கடவன்; அது அசைவாட்டப்பட்ட மார்க்கண்டத்தோடும், ஏறெடுத்துப் படைக்கப்பட்ட முன்னந்தொடையோடும், ஆசாரியனைச் சேரும்; அது பரிசுத்தமானது. பின்பு நசரேயன் திராட்சரசம் குடிக்கலாம்.

எண் 6:21. பொருத்தனைபண்ணின நசரேயனுக்கும், அவன் தன் கைக்கு உதவுகிறதையல்லாமல், தன் நசரேய விரதத்தினிமித்தம் கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கைக்கும் அடுத்த பிரமாணம் இதுவே. அவன் செய்த பொருத்தனையின்படியே தன் பொருத்தனையின் பிரமாணத்துக்கேற்க செய்து தீரவேண்டும் என்று சொல் என்றார்.

ஒருவன் கர்த்தருக்கென்று நசரேய விரதப்பொருத்தனை பண்ணும்போது, ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் என்றோ அல்லது தன்னுடைய ஜீவியகாலம் முழுவதற்கும் என்றோ விசேஷித்த பொருத்தனை பண்ணிக்கொள்ளலாம். அவன் நியமித்த நசரேய பொருத்தனையின் காலம் முடிவு பெறும்போது, அவன் நசரேய விரத பிரமாணத்திற்கு விடுதலையாயிருக்கிறான்.

யூதர்கள் குறைந்த பட்சம் முப்பது நாட்களுக்காவது கர்த்தருக்கென்று நசரேய விரதம் காத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார்கள். யூதர்களில் ஒருவன், "நான் இரண்டு நாட்களுக்கு மாத்திரம் நசரேய விரதப்பொருத்தனை பண்ணியிருக்கிறேன்" என்று சொன்னாலும், அவனும் முப்பது நாட்களுக்கு நசரேய விரதப்பொருத்தனையைக் காத்துக்கொள்ளவேண்டும். அவன் முப்பது நாட்களும் நசரேய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அப்போஸ்தலர் பவுல் ஏழுநாட்களுக்கு மாத்திரமே பொருத்தனை பண்ணினார்.

"அந்த ஏழுநாட்களும் நிறைவேறி வருகையில், ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனை தேவாலயத்திலே கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு, அவன்மேல் கைபோட்டு" (அப் 21:27).

நசரேய விரதப்பொருத்தனையின் காலம் முடிவு பெறும்போது, அவன் நசரேய பிரமாணத்திற்கு விடுதலையாயிருக்கிறான். அதன் பின்பு அவன் நசரேய பொருத்தனைக்கு கட்டுப்பட்டவனல்ல. அவன் நசரேய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் அவசியமுமில்லை.

ஒருவன் நசரேய விரதக்காலத்திலிருக்கும்போது தீட்டுப்பட்டுவிட்டால், அவன் அதுவரையிலும் விரத்திலிருந்த காலம், நசரேய விரதகாலமாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. அவனுடைய நசரேய விரதம் தீட்டுப்பட்டதினால், சென்ற நாட்களெல்லாம் வீணாகும். அவன் திரும்பவும் தன் விரதநாட்களைக் கர்த்தருக்கென்று காத்து, ஒரு வருஷத்து ஆட்டுக்குட்டியைக் குற்றநிவாரணபலியாகக் கொண்டுவரவேண்டும் (எண் 6:12).

நசரேயன் விரதங்காக்கும் நாட்கள் நிறைவேறின அன்றே, அவன் ஆசரிப்புக் கூடாரவாசலிலே வந்து, சர்வாங்க தகனபலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு ஆட்டுகுட்டியையும், பாவநிவாரணபலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக்குட்டியையும், சமாதானபலியாக பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு கூடையில் எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களையும், எண்ணெய் தடவப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும், அவைகளுக்கு அடுத்த போஜனபலியையும், பானபலிகளையும் கர்த்தருக்குத் தன் காணிக்கையாகச் செலுத்தவேண்டும் (எண் 6:13-15).

நசரேய விரதம் காக்கிறவன் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக ஆசரிப்புக்கூடார வாசலிலே வந்து கர்த்தருக்கு தன் காணிக்கையை செலுத்தவேண்டும். அவன் கர்த்தருக்கு தகனபலியையும், பாவநிவாரண பலியையும், சமாதானபலியையும், போஜனபலியையும், பானபலியையும் செலுத்தவேண்டும்.

தன்னுடைய நசரேய விரதம் காக்கும் நாட்களை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் உதவிசெய்திருக்கிறார் என்பதை அங்கீகரித்து, அவன் கர்த்தருக்கு சமாதானபலியாக பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை செலுத்துகிறான். சமாதானபலியோடு போஜனபலியையும் பானபலியையும் செலுத்துகிறான்.

சமாதானபலியோடு செலுத்தப்பட்ட அதிரசங்களும், அடைகளும் அசைவாட்டும் பலியாக அசைவாட்டப்படுகிறது. நசரேயன் பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரைச் சிரைத்துக் கொண்டபின்பு, ஆசாரியன் ஆட்டுக்கடாவினுடைய வேவிக்கப்பட்ட ஒரு முன்னந்தொடையையும், கூடையில் இருக்கிறவைகளிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் புளிப்பில்லாத ஒரு அடையையும் எடுத்து, அவனுடைய உள்ளங்கைகளில் வைத்து, அவைகளைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட வேண்டும் (எண் 6:19).

அது அசைவாட்டப்பட்ட மார்க்கண்டத்தோடும், ஏறெடுத்துப் படைக்கப்பட்ட முன்னந்தொடையோடும், ஆசாரியனைச் சேரும்; அது பரிசுத்தமானது. பின்பு நசரேயன் திராட்சரசம் குடிக்கலாம் (எண் 6:20).

அசைவாட்டப்பட்ட மார்க்கண்டமும், ஏறெடுத்து படைக்கப்பட்ட முன்னந்தொடையும் ஆசாரியனை சேரும். அது பரிசுத்தமானது என்று கர்த்தர் சொல்லுகிறார். நசரேயன் தன்னுடைய விரதம் காக்கும் நாட்களை நிறைவேற்றும்போது, அவன் ஆசரிப்புக்கூடார வாசலிலே வந்து கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறான். அந்த பலிகளில் ஆசாரியருக்கும் ஒரு பங்கு கொடுக்கப்படுகிறது.

ஒருவன் நசரேய விரதத்தை ஆரம்பிக்கும்போது, ஆசாரியனே அவனை நசரேய விரதத்திற்காக கர்த்தருடைய சமுகத்திலே பிரதிஷ்டைபண்ணியவன். அவனுடைய நசரேய விரதம் முடியும்போதும் ஆசாரியனே அவனுக்காக பலிகளை செலுத்துகிறான். ஆசாரியரின் ஊழியத்திற்காக, அந்தப் பலிகளில், ஆசாரியருக்கு ஒரு பங்கு கொடுக்கப்படுகிறது.

நசரேயன் தன்னுடைய விரதம் காக்கும் நாட்கள் நிறைவேறினபோது, நசரேயனுக்குரிய பிரமாணத்தில் சொல்லப்பட்ட பலிகளையெல்லாம் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே கொண்டு வரவேண்டும். இந்தப் பலிகள் தவிர அவன் மனப்பூர்வமான காணிக்கைகளையும் கர்த்தருக்கு செலுத்தலாம்.

"பொருத்தனைபண்ணின நசரேயனுக்கும், அவன் தன் கைக்கு உதவுகிறதையல்லாமல், தன் நசரேய விரதத்தினிமித்தம் கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கைக்கும் அடுத்த பிரமாணம் இதுவே. அவன் செய்த பொருத்தனையின்படியே தன் பொருத்தனையின் பிரமாணத்துக்கேற்க செய்து தீரவேண்டும்" (எண் 6:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நசரேயர்கள் தங்களுடைய விரதம் காக்கும் நாட்களை நிறைவேற்றும்போது, ஆசரிப்புக்கூடார வாசலிலே பலிகளை கொண்டு வருவார்கள். அப்போது அவர்கள் தங்களுடைய சிநேகிதரையும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு அழைத்துக்கொண்டு வருவது வழக்கம்.

"அவர்களை நீர் சேர்த்துக்கொண்டு, அவர்களுடனேகூடச் சுத்திகரிப்பு செய்து கொண்டு, அவர்கள் தலைச்சவரம்பண்ணிக் கொள்வதற்குச் செல்லுமானதைச் செலவு செய்யும்; அப்படிச் செய்தால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்ட காரியங்கள் அபத்தமென்றும், நீரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்றும் எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" (அப் 21:24).

நசரேயன் தன்னுடைய விரதம் காக்கும் நாட்களை நிறைவேற்றும் வரையிலும் அவனுடைய தலையில் சவரகன் கத்தி படவில்லை. அவனுடைய விரதம் காக்கும் நாட்கள் நிறைவேறின அன்று, அவன் ஆசரிப்புக்கூடார வாசலிலே கர்த்தருக்கு பலிகளை கொண்டு வருகிறான். அவனுடைய தலையில் இதுவரையிலும் சவரகன் கத்தி படாமலிருக்கிறது. அவனுடைய தலைமயிர் வளரவிடப்பட்டிருக்கிறது. இது நசரேய விரதத்திற்கு அடையாளம்.

இப்பொழுது நசரேயனுடைய விரதம் காக்கும் நாட்கள் நிறைவேறிற்று. இனிமேல் அவனுடைய தலையிலே சவரகன் கத்தி படுவதற்கு தடையேதுமில்லை. அவன் தன் தலைமயிரை வளரவிடவேண்டும் என்னும் கட்டாயமுமில்லை. நசரேயனுக்குரிய பிரமாணத்தின்படி பலிகளை செலுத்திய பின்பு, அவன் தன் தலைமயிரை சிரைத்துக்கொள்ளலாம்.

அப்பொழுது நசரேயன் ஆசரிப்புக் கூடாரவாசலிலே, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலையைச் சிரைத்து, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரை எடுத்து, சமாதானபலியின்கீழ் எரிகிற அக்கினியில் போடவேண்டும் (எண் 6:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விரதங்காக்கும் நாட்கள் வேறுபடுகிறது. தன் வாழ்நாள் முழுவதும் நசரேய விரதம் காத்தவர்களைப் பற்றிய வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. சிம்சோன் (நியா 13:5,7; நியா 16:17), சாமுவேல் (1சாமு 11:11), யோவான் ஸ்நானன் (லூக்கா 1:15). வேதாகமத்தில் சிம்சோன் மட்டுமே நசரேயன் என்று அழைக்கப்பட்டிருக்கிறான். சாமுவேலும், யோவான் ஸ்நானனும் நசரேயன் என்று அழைக்கப்படவில்லை. ஆனாலும் இவர்கள் இருவரும் நசரேய விரதம் காத்தவர்களே. பவுல் சிறிது காலம் நசரேய விதம் காத்திருந்தார். (அப் 21:23லி27)

நசரேய விரதம் காக்கும் நாட்கள் நிறைவேறுதல் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. அவன் விரதங்காக்கும் நாட்கள் நிறைவேறின அன்றே, அவன் ஆசரிப்புக் கூடாரவாசலிலே வரவேண்டும் (எண் 6:13)

2. தேவனுக்குத் தன்னுடைய காணிக்கையைச் செலுத்த வேண்டும்.

    (1) சர்வாங்க தகனபலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு ஆட்டுகுட்டியைச் செலுத்த வேண்டும். (எண் 6:14)

    (2) பாவநிவாரணபலியாக ஒரு வருஷத்து பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக் குட்டியைச் செலுத்த வேண்டும்.

    (3) சமாதானபலியாக பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவைச் செலுத்த வேண்டும்.

    (4) ஒரு கூடையில் பிசைந்த புளிப்பில்லாத மெல்லிய மாவினால் செய்த அதிரசங்களைச் செலுத்த வேண்டும். (எண் 6:15)

    (5) எண்ணெய் தடவப்பட்ட புளிப்பில்லாத அதிரசங்களைச் செலுத்த வேண்டும்.

    (6) எண்ணெய் தடவப்பட்ட புளிப்பில்லாத அடைகளைச் செலுத்த வேண்டும். (எண் 6:15)

    (7) போஜனபலி

    (8) பானபலி

3. ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து, அவனுடைய பாவநிவாரண பலியையும் அவனுடைய சர்வாங்க தகனபலியையும் செலுத்த வேண்டும் (எண் 6:16லி17).

4. நசரேயன் ஆசரிப்புக் கூடாரவாசலிலே, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலையைச் சிரைத்து, பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரை எடுத்து, சமாதானபலியின்கீழ் எரிகிற அக்கினியில் போடக்கடவன் (எண் 6:18).

5. நசரேயன் பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரைச் சிரைத்துக் கொண்டபின்பு, ஆசாரியன் ஆட்டுக்கடாவினுடைய வேவிக்கப் பட்ட ஒரு முன்னந் தொடையையும், கூடையில் இருக்கிறவைகளிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் புளிப்பில்லா ஒரு அடையையும் எடுத்து, அவனுடைய உள்ளங்கைகளில் வைக்கவேண்டும் (எண் 6:19).

6. ஆசாரியன் பலிகளை கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டக்கடவன் (எண் 6:20).

7. அசைவாட்டப்பட்ட மார்க்கண்டத்தோடும், ஏறெடுத்துப் படைக்கப்பட்ட முன்னந் தொடையோடும், ஆசாரியனைச் சேரும்.

8. அது பரிசுத்தமானது. பின்பு நசரேயன் திராட்சரசம் குடிக்கலாம். பொருத்தனை பண்ணின நசரேயனுக்கும், அவன் தன் கைக்கு உதவுகிறதையல்லாமல், தன் நசரேய விரதத்தினிமித்தம் கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கைக்கும் அடுத்த பிரமாணம் இதுவே (எண் 6:20-21).

நசரேய விரதத்தைப் புருஷரும், ஸ்திரீகளும் கடைபிடிக்கலாம். இதை தற்காலிகமாகவோ, அல்லது ஜீவிய காலம் முழுவதற்குமாகவோ கடைபிடிக்கலாம்.

நசரேயன் பொருத்தனை செய்யப்பட்ட தன் தலைமயிரை எடுத்து, சமாதானபலியின்கீழ் எரிகிற அக்கினியில் போடவேண்டும். நசரேய விரதம் காக்கிறவனுடைய தலையில் சவரகன் கத்தி படக்கூடாது. தேவனுக்கு அவன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதற்கு அவனுடைய நீளமான தலைமுடி ஒரு அடையாளமாகும். (எண் 6:5) அவனுடைய பொருத்தனை நிறைவுபெறும்போது அவன் தன் தலைமயிரை எடுத்து, சமாதானபலியின்கீழ் எரிகிற அக்கினியில் போடவேண்டும். இது ஒரு சமாதான பலியாகச் செலுத்தப்படுகிறது. சமாதானபலி தேவனோடு ஐக்கியமாக இருப்பதற்கு ஓர் அடையாளம்.

அசைவாட்டப்படுகிற பலிகள் ஆசாரியருக்குரியது. நசரேயன் தன்னுடைய பொருத்தனைகளை நிறைவேற்றிய பின்பு, அசைவாட்டும் பலிகளை ஆசாரியனிடத்தில் செலுத்தவேண்டும். ஆசாரியன் அவைகளைக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டவேண்டும்.

ஆசீர்வாதமான வார்த்தை எண் 6:22-27

எண் 6:22. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 6:23. நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, அவர்களைப் பார்த்துச் சொல்லவேண்டியதாவது:

எண் 6:24. கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்.

எண் 6:25. கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்.

எண் 6:26. கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே.

எண் 6:27. இவ்விதமாய் அவர்கள் என் நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறக்கடவர்கள்; அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல் என்றார்.

கர்த்தர் ஆசாரியருக்கு ஆசரிப்புக்கூடாரத்திலே விசேஷித்த ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு பணிவிடை செய்வதோடு கர்த்தருடைய நாமத்தினாலே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, அவர்களைப் பார்த்துச் சொல்லவேண்டியதாவது" (எண் 6:22,23) என்று சொல்லுகிறார்.

ஆசாரியரால் இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய ஆசீர்வாதத்தை சொல்ல மாத்திரமே முடியும். அவர்களால் ஜனங்களை ஆசீர்வதிக்க முடியாது. கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை ஆசீர்வதிக்கிறவர். ஆனாலும் ஆசாரியர் இஸ்ரவேல் புத்திரரை, கர்த்தருடைய நாமத்தினாலே ஆசீர்வதிக்கவேண்டும்.

கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள், இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசுகிற ஊழியத்தையும் செய்கிறார்கள். கர்த்தரே தம்முடைய நாமத்தினால் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்குமாறு ஆசாரியருக்கு கட்டளை கொடுக்கிறார். ஆசாரியர் கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லும்போது, அவர்கள் அந்த வார்த்தைகளை பயபக்தியோடும், ஜெபத்தோடும் சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கும் அதிகாரத்தை கர்த்தர் ஆசாரியருக்கு கொடுத்திருக்கிறார். தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தெய்வீக அதிகாரத்தை, ஆசாரியர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து பயன்படுத்தவேண்டும். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, அவர்களைப் பார்த்து ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லவேண்டும். ஆசாரியர் இஸ்ரவேல் புத்திரரை கண்ணோக்கிப் பார்த்து, அவர்களை ஆசீர்வதிக்கவேண்டும்.

நம்மை ஆசீர்வதிப்பதே இயேசுகிறிஸ்துவின் ஊழியம். கிறிஸ்துவானவர் நம்முடைய மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். அவர் பிதாவின் சமுகத்திலே நமக்காக எப்போதும் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் ஊழியம் நம்மை ஆசீர்வதிக்கிற ஊழியமாயிருக்கிறது.

"அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார்" (அப் 3:26).

புதிய ஏற்பாட்டுக்காலத்து ஊழியக்காரர்கள் விசுவாசிகளை ஆசீர்வதிக்கவேண்டும். சபை ஆராதனை முடிந்த பின்பு, போதகர்கள் விசுவாசிகளை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதித்து அனுப்பவேண்டும்.

ஊழியக்காரர்கள் கர்த்தருடைய வார்த்தைகளையும், சத்தியங்களையும், கட்டளைகளையும் ஜனங்களுக்கு சொல்லும் வாயாக ஊழியம் செய்கிறார்கள். தங்கள் வாயினால் போதிக்கிற, உபதேசம்பண்ணுகிற ஊழியக்காரர்கள், தங்கள் வாயினால் விசுவாசிகளை ஆசீர்வதிக்கவும் வேண்டும்.

ஆசாரியர்கள் இஸ்ரவேல் புத்திரரை எவ்வாறு ஆசீர்வதிக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். ஆரோனும் அவருடைய குமாரரும் இஸ்ரவேல் புத்திரரை பார்த்து, "கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர்" (எண் 6:24-26) என்று சொல்லி ஆசீர்வதிக்கவேண்டும்.

நாம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதங்களும் நம்மிடத்தில் தங்கியிருக்கும். கர்த்தருடைய பிரமாணங்களும், வாக்குத்தத்தங்களும் நமக்காகவே சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல அவருடைய ஆசீர்வாதங்களும் நமக்காகவே சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரை எவ்வாறு ஆசீர்வதிக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லும்போது, அந்த ஆசீர்வாதமான வார்த்தைகளில், "கர்த்தர்" என்னும் நாமம் மூன்று முறை சொல்லப்படுகிறது. அவருடைய நாமம் ஒவ்வொரு முறையும் சொல்லப்படும்போதும், அது ஒவ்வொரு தொனியில் உச்சரிக்கப்படும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கிறவர். அவரே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணகர்த்தாவாக இருக்கிறார். நன்மையான எல்லா ஈவுகளும் கர்த்தரிடமிருந்தே நமக்கு வருகிறது. அவரே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாகவும், ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறவர்.

ஆசாரியர் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, "கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கக்கடவர்" என்றும், "கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணக்கடவர்" என்றும் சொல்லவேண்டும்.

பூமியின்மேல் சூரியன் உதிக்கும்போது, பூமிக்கு பிரகாசமான வெளிச்சம் கிடைக்கும். கர்த்தர் தம்முடைய முகத்தை நம்மேல் பிரகாசிக்கப்பண்ணும்போது, நமக்கு ஆறுதலும், தெளிவும் உண்டாகும். நம்முடைய இருதயம் கர்த்தருடைய வார்த்தையினால் புதுப்பிக்கப்படும்.

"கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கக்கடவர்" என்று ஆசாரியர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லவேண்டும். ஒரு தகப்பன் தன்னுடைய சந்தோஷமான முகத்தை தன்னுடைய பிள்ளைகளுக்கு காண்பிப்பதுபோல, கர்த்தர் தம்முடைய முகத்தை இஸ்ரவேல் புத்திரர் மேல் பிரசன்னமாக்கக்கடவர் என்று ஆசாரியர்கள் ஜனங்களை ஆசீர்வதிக்கிறார்கள். தன்னுடைய பிள்ளைகளை பார்க்கும்போது தகப்பனுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும். அதுபோலவே இஸ்ரவேல் புத்திரரைப் பார்க்கும்போது கர்த்தருக்கும் மிகுந்த சந்தோஷமுண்டாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிப்பது மாத்திரமல்ல அவர்களை தீங்குக்கு விலக்கி காத்துக்கொள்ளவும் செய்கிறார். அவர்கள்மேல் கிருபையாயிருந்து அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதமான வார்த்தைகளில், இஸ்ரவேல் புத்திரருக்கு பாதுகாப்பும், பாவமன்னிப்பும், சமாதானமும் சொல்லப்படுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மேல் கிருபையாயிருந்து அவர்களுக்கு சமாதானத்தைக் கட்டளையிடுவார். இங்கு சொல்லப்பட்டிருக்கிற காரியங்களெல்லாம் மொத்தமாக கிடைப்பதே மெய்யான ஆசீர்வாதம். அதுவே பூரண சந்தோஷத்தைக் கொடுக்கும்.

இவ்விதமாய் அவர்கள் என் நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறக்கடவர்கள்; அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன் (எண் 6:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது ஆசாரியர் கூறவேண்டியவை :

1. கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கக்கடவர்.
2. கர்த்தர் உன்னைக் காக்கக்கடவர்.
3. கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணக்கடவர் (எண் 6:25).
4. கர்த்தர் உன்மேல் கிருபையாயிருக்கக் கடவர்.
5. கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கக்கடவர். (எண் 6:26).
6. கர்த்தர் உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர்.

தேவனுக்குத் தம்முடைய ஜனத்தாரோடுள்ள உறவின் விவரம் :

1. ஆசீர்வதிக்கிறவர்
2. காக்கிறவர்
3. பராமரிக்கிறவர் (எண் 6:25)
4. நேசிக்கிறவர்
5. தம்முடைய முகத்தை பிரசன்னமாக்குகிறவர் (எண் 6:26)
6. சமாதானம் தருகிறவர்

எண்ணாகமம் 6:24-26 ஆகிய மூன்று வசனங்களிலும் கர்த்தர் என்னும் வார்த்தை மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் ஆசீர்வாதத்தையும், கர்த்தத்துவத்தின் திரித்துவத்தையும், இந்த வாக்கியம் வெளிப்படுத்துகிறது (2கொரி 13:14; மத் 28:19; 1யோவான் 5:7, ஆதி 19:24)

"என் நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறக்கடவர்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது கர்த்தருடைய நாமத்தைக் கூறி ஆசீர்வதிக்கவேண்டும். இதற்குக் கர்த்தருடைய அதிகாரத்தினால் அவர்களை ஆசீர்வதிப்பது என்று பொருள்.

7 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திற்கு நடுவே ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அப்போது பிதாக்களுடைய வம்சத்தலைவர்களும் கோத்திரப்பிரபுக்களுமாகிய இஸ்ரவேலின் பிரபுக்கள், காணிக்கைகளை செலுத்த ஆசரிப்புக்கூடாரத்திற்கு வருகிறார்கள்.

அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்காக காணிக்கைகளை செலுத்துகிறார்கள் (எண் 7:1-9).

இஸ்ரவேலின் பிரபுக்கள் பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்ட நாளிலே, அதின் பிரதிஷ்டைக்காக காணிக்கைகளை செலுத்துகிறார்கள். அவர்கள் பலிபீடத்திற்கு முன்பாக தங்கள் காணிக்கைகளை கொண்டு வருகிறார்கள் (எண் 7:10-88).

இஸ்ரவேலின் பிரபுக்கள் செலுத்தின காணிக்கைகளை கர்த்தர் தமது கிருபையினால் அங்கீகரிக்கிறார். அதற்கு அடையாளமாக கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்தில் மோசேயோடு பேசுகிறார் (எண் 7:89).

இதற்கு முந்தின இரண்டு அதிகாரங்களிலும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களை கூடுதலாக சொன்னார். இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்காக செலுத்தும் காணிக்கைகளின் விவரம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்காக காணிக்கைகள் எண் 7:1-9

எண் 7:1. மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணி, அதையும் அதின் எல்லாப் பணிமுட்டுகளையும், பலி பீடத்தையும் அதின் எல்லாப் பணிமுட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்தி முடித்த நாளில்,

எண் 7:2. தங்கள் பிதாக்களுடைய வம்சத்தலைவரும், எண்ணப்பட்டவர்களின் விசாரிப்புக்கு வைக்கப்பட்ட கோத்திரப் பிரபுக்களுமாகிய இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளைச் செலுத்தினார்கள்.

எண் 7:3. தங்கள் காணிக்கையாக, ஆறு கூண்டு வண்டில்களையும், பன்னிரண்டு மாடுகளையும், இரண்டிரண்டு பிரபுக்களுக்கு ஒவ்வொரு வண்டிலும், ஒவ்வொரு பிரபுக்கு ஒவ்வொரு மாடுமாக, கர்த்தருக்குச் செலுத்த வாசஸ்தலத்திற்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

எண் 7:4. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 7:5. நீ அவர்களிடத்தில் ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்காக அவைகளை வாங்கி, லேவியருக்கு அவரவர் வேலைக்குத் தக்கவைகளாகப் பங்கிட்டுக் கொடு என்றார்.

எண் 7:6. அப்பொழுது மோசே அந்த வண்டில்களையும் மாடுகளையும் வாங்கி, லேவியருக்குக் கொடுத்தான்.

எண் 7:7. இரண்டு வண்டில்களையும் நான்கு மாடுகளையும் கெர்சோன் புத்திரருக்கு அவர்கள் வேலைக்குத்தக்க பங்காகக் கொடுத்தான்.

எண் 7:8. நான்கு வண்டில்களையும் எட்டு மாடுகளையும் மெராரியின் புத்திரருக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் இத்தாமாருடைய கையின் கீழிருக்கிற அவர்களுடைய வேலைக்குத்தக்க பங்காகக் கொடுத்தான்.

எண் 7:9. கோகாத்தின் புத்திரருக்கோ ஒன்றும் கொடுக்கவில்லை; தோள்மேல் சுமப்பதே அவர்களுக்குரிய பரிசுத்த ஸ்தலத்தின் வேலையாயிருந்தது.

ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்காக பிரபுக்கள் காணிக்கைகளை கொண்டு வருகிறார்கள். அவர்கள் அந்தக் காணிக்கைகளை கர்த்தருக்கு செலுத்துவதற்காக வாசஸ்தலத்திற்கு முன்பாக கொண்டு வருகிறார்கள்.

மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணுகிறார். மோசே அதையும் அதின் எல்லாப் பணிமுட்டுகளையும், பலிபீடத்தையும் அதின் எல்லாப் பணிமுட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்தி முடிக்கிறார் (எண் 7:1). அந்த நாளிலே இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளை செலுத்துகிறார்கள்.

முதலாம் மாதம் முதல் தேதியில், எகிப்தை விட்டுப் புறப்பட்டு பதினொன்றரை மாதங்களுக்குப் பிறகு, வாசஸ்தலமும், பலிபீடமும், அதிலுள்ள எல்லா பணிமுட்டுக்களும் அபிஷேகம்பண்ணி பரிசுத்தப்படுத்தப்படுகிறது (யாத் 40:2; எண் 33:3).

மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபித்தபோது அவர் செய்த காரியங்களின் விவரம் வருமாறு :

1. வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணினார்.
2. வாசஸ்தலத்தை அபிஷேகம் பண்ணினார்.
3. வாசஸ்தலத்தைப் பரிசுத்தப்படுத்தினார்.
4. பணிமுட்டுகளை அபிஷேகம் பண்ணினார்.
5. பணிமுட்டுகளைப் பரிசுத்தப்படுத்தினார்.

பணிமுட்டுகள் என்பது ஆசரிப்புக் கூடாரத்தின் எல்லா பணிமுட்டுகளையும் குறிக்கும். இதில் உடன்படிக்கைப்பெட்டி, கிருபாசனம், பொற்பீடம், வெண்கலப்பீடம், அவற்றின் பாத்திரங்கள், சமுகத்தப்ப மேஜை, விளக்குத்தண்டு, தொட்டி, ஆகியவை அனைத்தும் அடங்கும் (யாத் 40).

மோசே வாசஸ்தலத்தை ஸ்தாபம்பண்ணி முடிக்கும் வரையிலும், இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளை செலுத்தவில்லை. கர்த்தருடைய வாசஸ்தலம் ஸ்தாபனம்பண்ணப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட இடங்களில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் தங்கள் கூடாரங்களைப் போட்டிருக்கிறார்கள்.

மோசே வாசஸ்தலத்தையும், அதின் எல்லா பணிமுட்டுக்களையும், பலிபீடத்தையும் அபிஷேகம்பண்ணி பரிசுத்தப்படுத்தி முடித்திருக்கிறார். அந்த நாளில் இஸ்ரவேல் புத்திரரின் பிதாக்களுடைய வம்சத்தலைவரும், எண்ணப்பட்டவர்களின் விசாரிப்புக்கு வைக்கப்பட்ட கோத்திரப் பிரபுக்களுமாகிய இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளைச் செலுத்துகிறார்கள் (எண் 7:2).

இஸ்ரவேலின் பிரபுக்கள் என்பவர்கள் எண் 1:5-16 ஆகிய வசனங்களில் அட்டவணையிடப்பட்டிருக்கும் பன்னிரண்டு பிரபுக்கள் ஆவார்கள்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் கர்த்தருக்கு கொண்டு வந்த காணிக்கைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் காணிக்கையாக, ஆறு கூண்டு வண்டில்களையும், பன்னிரண்டு மாடுகளையும், இரண்டிரண்டு பிரபுக்களுக்கு ஒவ்வொரு வண்டிலும், ஒவ்வொரு பிரபுக்கு ஒவ்வொரு மாடுமாக, கர்த்தருக்குச் செலுத்த வாசஸ்தலத்திற்கு முன்பாகக் கொண்டுவருகிறார்கள் (எண் 7:3).

இஸ்ரவேலின் பிரபுக்கள் கூண்டு வண்டில்களையும், மாடுகளையும் காணிக்கையாக கொண்டு வருகிறார்கள். மோசே அவர்களிடத்திலிருந்து ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்காக அவைகளை வாங்கவேண்டும். அந்தக் காணிக்கைகளை மோசே லேவியருக்கு அவரவர் வேலைக்குத்தக்கவைகளாக பங்கிட்டு கொடுக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ அவர்களிடத்தில் ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்காக அவைகளை வாங்கி, லேவியருக்கு அவரவர் வேலைக்குத் தக்கவைகளாகப் பங்கிட்டுக் கொடு" (எண் 7:4,5) என்று சொல்லுகிறார். அப்பொழுது மோசே அந்த வண்டில்களையும் மாடுகளையும் வாங்கி, லேவியருக்குக் கொடுக்கிறார் (எண் 7:6).

பிரபுக்களின் காணிக்கையை பங்கிட்டு கொடுக்க வேண்டிய விதமாவது :

1. அவைகளை வாங்கி, லேவியருக்கு அவரவர் வேலைக்குத் தக்கவைகளாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

2. பிரபுக்களின் காணிக்கையை ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகளைப் பிரயாணத்தில் எடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்துவதற்காக லேவியருக்குக் கொடுக்கவேண்டும்.

வண்டில்கள் லேவியரில் இரண்டு பிரிவினருக்குக் கொடுக்கப்படுகிறது. கெர்சோம் புத்திரருக்கு இரண்டு வண்டில்களும், மெராரி புத்திரருக்கு நான்கு வண்டில்களும் கொடுக்கப்படுகின்றன. அவர்களுடைய சுமை அதிகக் கனமுள்ளதாக இருக்கிறபடியினால், அவர்கள் தங்கள் தோள்களில் அவற்றைச் சுமக்காமல், வண்டில்களில் ஏற்றிச் செல்லலாம். (எண் 7:7-9=எண் 3:25-26,31-32,36-37 ; எண் 4:4-15,21-33).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பிரயாணப்பட்டுப்போகும்போது, லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தையும், அதிலுள்ள பணிமுட்டுகளையும் தங்களோடு எடுத்து செல்லவேண்டும். அவற்றைக் கொண்டு போவதற்கு இந்த கூண்டு வண்டில்கள் உபயோகமாயிருக்கும். மாடுகள் கூண்டு வண்டில்களை இழுத்துச் செல்லும்.

லேவியர்கள் தங்களுடைய பிதாக்களுடைய வம்சத்தின் பிரகாரம், மூன்று வம்சமாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலின் பிரபுக்கள் கொண்டு வந்த காணிக்கைகளை, மோசே லேவியருக்கு, அவர்களுடைய வம்சத்தின் பிரகாரம் பங்கிட்டு கொடுக்கிறார். கர்த்தர் லேவியரின் ஒவ்வொரு வம்சத்திற்கும் ஒவ்வொரு பணிவிடைகளை நியமித்திருக்கிறார். மோசே அவரவர்களுடைய வேலைக்குத்தக்கவைகளாக, கூண்டுவண்டில்களையும், மாடுகளையும் பங்கிட்டு கொடுக்கிறார்.

கெர்சோன் புத்திரருக்கு இரண்டு வண்டில்களும், மெராரியின் புத்திரருக்கு நான்கு வண்டில்களும் கொடுக்கப்படுகிறது. கோகாத்தின் புத்திரருக்கு ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

மோசே இரண்டு வண்டில்களையும் நான்கு மாடுகளையும் கெர்சோன் புத்திரருக்கு அவர்கள் வேலைக்குத்தக்க பங்காகக் கொடுக்கிறார் (எண் 7:7).

மோசே நான்கு வண்டில்களையும் எட்டு மாடுகளையும் மெராரியின் புத்திரருக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் இத்தாமாருடைய கையின் கீழிருக்கிற அவர்களுடைய வேலைக்குத்தக்க பங்காகக் கொடுக்கிறார் (எண் 7:8).

மோசே கோகாத்தின் புத்திரருக்கோ ஒன்றும் கொடுக்கவில்லை; தோள்மேல் சுமப்பதே அவர்களுக்குரிய பரிசுத்த ஸ்தலத்தின் வேலையாயிருக்கிறது (எண் 7:9).

கோகாத்தின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகளைத் தங்களுடைய தோள்மேல் சுமக்க வேண்டும். அவர்களுக்கு எந்த வண்டில்களும் கொடுக்கப்படவில்லை.

கர்த்தர் யாருக்கு அதிகமான வேலைப்பளுவைக் கொடுத்திருக்கிறாரோ, அவர்களுக்கு அதிகமான கூண்டு வண்டில்களையும், அதிகமான மாடுகளையும் கொடுக்கிறார். மெராரி புத்திரர் அதிகமான பாரங்களை கொண்டு செல்லவேண்டும். இதற்காக அவர்களுக்கு நான்கு வண்டில்களும் எட்டு மாடுகளும் கொடுக்கப்படுகிறது. லேவியருக்கு அவரவர் வேலைக்குத்தக்கவைகளாக வண்டில்களும் மாடுகளும் பங்கிட்டு கொடுக்கப்படுகிறது.

கோகாத்தின் புத்திரர் பரிசுத்தமான வஸ்துக்களை சுமந்து செல்கிறார்கள். அவர்கள் அந்த சுமைகளை தங்கள் தோள்கள்மேல் சுமக்கவேண்டும். மிகவும் கவனமாகவும், பயபக்தியோடும் அவர்கள் பரிசுத்த வஸ்துக்கள் சுமந்து செல்லவேண்டும். ஆகையினால் அவர்களுக்கு கூண்டு வண்டில்களோ மாடுகளோ கொடுக்கப்படவில்லை. தோள்மேல் சுமப்பதே அவர்களுக்குரிய பரிசுத்த ஸ்தலத்தின் வேலை என்று கர்த்தர் நியமனம் செய்திருக்கிறார்.

பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காகக் காணிக்கைகள் எண் 7:10-88

எண் 7:10. பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்ட நாளிலே, பிரபுக்கள் அதின் பிரதிஷ்டைக்காகக் காணிக்கைகளைச் செலுத்தி, பலி பீடத்துக்கு முன்பாகத் தங்கள் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள்.

எண் 7:11. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக ஒவ்வொரு பிரபுவும் தன்தன் நாளில் தன் தன் காணிக்கையைச் செலுத்தக்கடவன் என்றார்.

எண் 7:12. அப்படியே முதலாம் நாளில் தன் காணிக்கையைச் செலுத்தினவன் யூதா கோத்திரத்தானாகிய அம்மினதாபின் குமாரன் நகசோன்.

எண் 7:13. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:14. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:15. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:16. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:17. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது அம்மினதாபின் குமாரனாகிய நகசோனின் காணிக்கை.

எண் 7:18. இரண்டாம் நாளில் இசக்காரின் பிரபுவாகிய சூவாரின் குமாரன் நெதனெயேல் காணிக்கை செலுத்தினான்.

எண் 7:19. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:20. தூபவர்க்கம் நிறைந்த பத்துசேக்கல்நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:21. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:22. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:23. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது சூவாரின் குமாரனாகிய நெதனெயேலின் காணிக்கை.

எண் 7:24. மூன்றாம் நாளில் ஏலோனின் குமாரனாகிய எலியாப் என்னும் செபுலோன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:25. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:26. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:27. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:28. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:29. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது ஏலோனின் குமாரனாகிய எலியாவின் காணிக்கை.

எண் 7:30. நான்காம் நாளில் சேதேயூரின் குமாரனாகிய எலிசூர் என்னும் ரூபன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:31. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:32. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:33. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:34. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:35. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது சேதேயூரின் குமாரனாகிய எலிசூரின் காணிக்கை.

எண் 7:36. ஐந்தாம் நாளில் சூரிஷதாயின் குமாரனாகிய செலுமியேல் என்னும் சிமியோன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:37. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:38. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:39. சர்வாங்கதகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:40. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:41. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது சூரிஷதாயின் குமாரனாகிய செலூமியேலின் காணிக்கை.

எண் 7:42. ஆறாம் நாளில் தேகுவேலின் குமாரனாகிய எலியாசாப் என்னும் காத் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:43. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:44. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:45. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:46. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:47. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது தேகுவேலின் குமாரனாகிய எலியாசாபின் காணிக்கை.

எண் 7:48. ஏழாம் நாளில் அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமா என்னும் எப்பிராயீம் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:49. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:50. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:51. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:52. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:53. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமாவின் காணிக்கை.

எண் 7:54. எட்டாம்நாளில் பெதாசூரின் குமாரனாகிய கமாலியேல் என்னும் மனாசே புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:55. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:56. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:57. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:58. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:59. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது பெதாசூரின் குமாரனாகிய கமாலியேலின் காணிக்கை.

எண் 7:60. ஒன்பதாம் நாளில் கீதெயோனின் குமாரனாகிய அபீதான் என்னும் பென்யமீன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:61. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:62. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:63. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:64. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:65. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது கீதெயோனின் குமாரனாகிய அபீதானின் காணிக்கை.

எண் 7:66. பத்தாம் நாளில் அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேர் என்னும் தாண் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:67. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:68. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:69. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:70. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:71. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேரின் காணிக்கை.

எண் 7:72. பதினோராம் நாளில் ஒகிரானின் குமாரனாகிய பாகியேல் என்னும் ஆசேர் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:73. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:74. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:75. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:76. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:77. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது ஒகிரானின் குமாரனாகிய பாகியேலின் காணிக்கை.

எண் 7:78. பன்னிரண்டாம் நாளில் ஏனானின் குமாரனாகிய அகீரா என்னும் நப்தலி புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான்.

எண் 7:79. அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும்,

எண் 7:80. தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும்,

எண் 7:81. சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எண் 7:82. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எண் 7:83. சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும் ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது ஏனானின் குமாரனாகிய அகீராவின் காணிக்கை.

எண் 7:84. பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்டபோது, இஸ்ரவேல் பிரபுக்களால் செய்யப்பட்ட பிரதிஷ்டையாவது: வெள்ளித்தாலங்கள் பன்னிரண்டு, வெள்ளிக்கலங்கள் பன்னிரண்டு, பொன் தூபகரண்டிகள் பன்னிரண்டு.

எண் 7:85. ஒவ்வொரு வெள்ளித்தாலம் நூற்று முப்பது சேக்கல் நிறையும், ஒவ்வொரு கலம் எழுபது சேக்கல் நிறையுமாக, இந்தப் பாத்திரங்களின் வெள்ளியெல்லாம் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி இரண்டாயிரத்து நானூறு சேக்கல் நிறையாயிருந்தது.

எண் 7:86. தூபவர்க்கம் நிறைந்த பொன் தூபகரண்டிகள் பன்னிரண்டு, ஒவ்வொன்று பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி பத்துச்சேக்கல் நிறையாக, தூபகரண்டிகளின் பொன்னெல்லாம் நூற்றிருபது சேக்கல் நிறையாயிருந்தது.

எண் 7:87. சர்வாங்க தகனபலியாகச் செலுத்தப்பட்ட காளைகளெல்லாம் பன்னிரண்டு, ஆட்டுக்கடாக்கள் பன்னிரண்டு, ஒரு வயதான ஆட்டுக்குட்டிகள் பன்னிரண்டு, அவைகளுக்கடுத்த போஜனபலிகளும் கூடச் செலுத்தப்பட்டது; பாவநிவாரணபலியாகச் செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாக்கள் பன்னிரண்டு

எண் 7:88. சமாதான பலியாகச் செலுத்தப்பட்ட காளைகளெல்லாம் இருபத்துநான்கு; ஆட்டுக்கடாக்கள் அறுபது, வெள்ளாட்டுக்கடாக்கள் அறுபது, ஒரு வயதான ஆட்டுக்குட்டிகள் அறுபது; பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்ட பின்பு செய்யப்பட்ட அதின் பிரதிஷ்டை இதுவே.

மோசே பலிபீடத்தை அபிஷேகம்பண்ணி, அதைப் பிரதிஷ்டைபண்ண வேண்டும். அப்போது சர்வாங்க தகனபலிகளும் தூபபலிகளும் செலுத்தப்படவேண்டும். பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்டபோது அது ஏற்கெனவே பரிசுத்தம்பண்ணப்பட்டிருக்கிறது.

"பின்பு மோசே, அபிஷேகதைலத்தை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தப்படுத்தி, அதில் கொஞ்சம் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் சகல பணிமுட்டுகளையும், தொட்டியையும் அதின் பாதத்தையும் பரிசுத்தப்படுத்தும்படிக்கு அபிஷேகம் பண்ணி, அபிஷேகதைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவரைப் பரிசுத்தப்படுத்தும்படி அபிஷேகம்பண்ணினார்" (லேவி 8:10-12).

வெண்கலப் பலிபீடம் பன்னிரண்டு நாட்களாக பிரதிஷ்டை பண்ணப்படுகிறது. ஒவ்வொரு பிரபுவும் தன்தன் நாளிலே பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக தன்தன் காணிக்கையைச் செலுத்துகிறார்கள் (எண் 7:11-78).

பன்னிரண்டு பிரபுக்களும் செலுத்திய காணிக்கைகள் ஒன்றுபோல் இருக்கிறது. தங்களுடைய கோத்திரத்தின் சார்பாகப் பிரபுக்கள் காணிக்கைகளைச் செலுத்துகிறார்கள். எல்லாக் கோத்திரமும் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்த நியமிக்கப்பட்டிருக்கிறது.

எல்லாக் கோத்திரத்தாரும் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். காணிக்கைகள் ஒன்றுபோல் செலுத்தப்பட்டதினால் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் போட்டி பொறாமை ஏற்பட வாய்ப்பில்லை. பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், பொறாமைகள் ஆகியவை ஏற்படாதவாறு எல்லாக் கோத்திரத்தின் பிரபுக்களும் ஒன்றுபோல காணிக்கை செலுத்துகிறார்கள் (கலா 5:20).

எல்லா மிருகஜீவன்களும் பழுதில்லாமல் சுத்தமாக இருக்கிறது. அவர்களுடைய காணிக்கைகளைக் கர்த்தர் அங்கிகரிக்கிறார்.

இப்போது பலிபீடம் கர்த்தருடைய ஊழியத்திற்காக பிரதிஷ்டைபண்ணப்படுகிறது. பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்ட நாளிலே, பிரபுக்கள் அதின் பிரதிஷ்டைக்காகக் காணிக்கைகளைச் செலுத்தி, பலிபீடத்துக்கு முன்பாகத் தங்கள் காணிக்கைகளைக் கொண்டுவருகிறார்கள் (எண் 7:10).

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, "பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக ஒவ்வொரு பிரபுவும் தன்தன் நாளில் தன் தன் காணிக்கையைச் செலுத்தக்கடவன்" (எண் 7:11) என்று சொல்லுகிறார்.

பிரபுக்கள் பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக தங்களுடைய உதாரத்துவமான காணிக்கைகளை மனப்பூர்வமாய்க் கொண்டு வருகிறார்கள். கர்த்தருடைய பிரச்சன்னம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே வாசம்பண்ணுகிறது. இதன் நிமித்தமாக இஸ்ரவேல் புத்திரர் மிகுந்த சந்தோஷமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருகிறார்கள்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் தங்களுடைய சந்தோஷத்தையும், பக்தியையும், மரியாதையையும் வெளிப்படுத்தும் வண்ணமாக கர்த்தருக்கு காணிக்கைகளை கொண்டு வருகிறார்கள்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் தங்கள் வம்சத்திற்கு தலைவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோத்திரத்திற்கு பிரபுக்கள். இஸ்வேலில் மொத்தம் பன்னிரண்டு கோத்திரத்தார் இருக்கிறார்கள். அவர்களுக்கு பன்னிரண்டு கோத்திரப்பிரபுக்களும் இருக்கிறார்கள். கர்த்தருக்கு காணிக்கைகளை கொண்டு வருவதில், பிரபுக்கள் முதன்மையானவர்களாகவும், முன்னோடிகளாகவும், மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டுக்களாகவும் இருக்கிறார்கள்.

கர்த்தர் யாரை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறாரோ, அவர்கள் கர்த்தருக்கு அதிகமாய் ஊழியம் செய்யவேண்டும். யாருக்கு அதிகமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்களிடத்திலிருந்து அதிகமாய் எதிர்பார்க்கப்படும்.

விசுவாசிகள் எல்லோருமே கர்த்தருக்கு உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாயிருக்க வேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற பொருளாதார ஆசீர்வாதங்கள், தாலந்துகள் ஆகியவற்றிற்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் அளவுக்குதக்கதாக, கர்த்தருடைய ஊழியத்தில் உண்மையாய் பங்குபெறவேண்டும். கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கும்போது நம்முடைய இருதயத்தில் சந்தோஷம் இருக்கவேண்டும். உண்மையுள்ள உக்கிராணக்காரருடைய மனதில் மாத்திரமே சந்தோஷம் இருக்கும்.

கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் தாலந்துகளை, அவருடைய நாமமகிமைக்காகவும், கர்த்தருடைய பிள்ளைகளின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவில்லையென்றால், நம்மிடத்தில் உண்மையில்லை என்று பொருள். உண்மையில்லாதவர்கள், உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாயிருக்கமாட்டார்கள்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் ஒவ்வொருவரும், பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக தங்களுடைய காணிக்கைகளை கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய காணிக்கை பெரிதாயும், ஐசுவரியமுள்ளதாயும், அதிக மதிப்புள்ளதாயும், தாராளமாயும் இருக்கிறது.

இஸ்ரவேலின் பிரபுக்கள் பலிபீடத்தின் பிரதிஷ்டைக்கு பயன்படுத்தப்படும் பரிசுத்த பணிமுட்டுக்களை காணிக்கையாக கொண்டு வருகிறார்கள். இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களும் ஒவ்வொருவரும் ஒரு வெள்ளித்தாலம் வீதமாக, பன்னிரண்டு வெள்ளித்தாலங்களை கொண்டு வருகிறார்கள். இவை ஒவ்வொன்றும் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளது.

இஸ்ரவேலின் ஒவ்வொரு பிரபுவும் ஒரு வெள்ளிக்கலத்தை பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக காணிக்கையாக கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு வெள்ளித்தாலமும் எழுபது சேக்கல் நிறையுள்ளது.

இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களும் மொத்தம் பன்னிரண்டு வெள்ளித்தாலங்களையும், பன்னிரண்டு வெள்ளிக்கலங்களையும் பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக காணிக்கையாக கொண்டுவருகிறார்கள். வெள்ளித்தாலம் போஜனபலிகளை செலுத்துவதற்கும், வெள்ளிக்கலம் பானபலிகளை செலுத்துவதற்கும் பயன்படுத்தப்படும்.

வெள்ளித்தாலங்களில் எண்ணெயில் பிசைந்த மெல்லிய மாவு நிறைவாய் வைக்கப்பட்டிருக்கும். அந்தத் தாலங்களில் பலியாக செலுத்தப்படும் மிருகங்களின் மாம்சங்களும் வைக்கப்பட்டிருக்கும். இவை கர்த்தருக்கு போஜனபலியாக செலுத்தப்படும்.

கர்த்தருக்கு பலிசெலுத்தப்படும் மிருகங்களின் இரத்தம் வெள்ளிக்கலங்களில் சேகரிக்கப்பட்டிருக்கும். இது கர்த்தருக்கு பானபலியாக செலுத்தப்படும்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் ஒவ்வொருவரும் தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியையும் பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக காணிக்கையாக கொண்டு வருகிறார்கள். தூபகரண்டி பொன்பலிபீடத்தில் பயன்படுத்தப்படுகிறது. வெண்கல பலிபீடமும், பொன்பலிபீடமும் ஒரே நாளில் பிரதிஷ்டைபண்ணப்படுகிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் பலிபீடத்தின் பிரதிஷ்டைகாக தங்கள் காணிக்கைகளை கொண்டு வருகிறார்கள். அந்தக் காணிக்கைகளில் சில, பலிபீடத்திலே உடனே பயன்படுத்தப்படுகிறது. கர்த்தர் மோசேயின் மூலமாக பலிகள் சம்பந்தமான தம்முடைய பிரமாணத்தை சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணத்திற்கு சந்தோஷமாய்க் கீழ்ப்படிகிறார்கள். கர்த்தருடைய ஆள்தத்துவத்தை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை நன்றியுள்ள இருதயங்களோடு பெற்றுக்கொள்கிறார்கள்.

கர்த்தர் சொன்ன பிரகாரம் பலிபீடத்திலே பலிகளை செலுத்துவதற்கு காளைகளையும் ஆட்டுக்குட்டிகளையும், வெள்ளாட்டுக்கடாக்களையும், மாடுகளையும், ஆட்டுக்கடாக்களையும் கொண்டு வருகிறார்கள். இந்தப் பலிகளை பலிபீடத்தின்மேல் உடனே பலியாக செலுத்தலாம்.

பலிபீடம் பிரதிஷ்டைபண்ணப்படுவது இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் மிகுந்த சந்தோஷமாயிருக்கிறது. இது அவர்களுக்கு மகிழ்ந்து களிகூரும் காலம். தங்கள் சந்தோஷத்திற்கு மத்தியிலும் இஸ்ரவேலின் கோத்திரத்தார் பாவநிவாரண பலிகளையும் செலுத்துகிறார்கள்.

ஒவ்வொரு கோத்திரத்தின் பிரபுவும் ஒவ்வொரு நாளிலே, தங்கள் தங்கள் காணிக்கைகளை கொண்டு வருகிறார்கள். அவர்கள் எந்த வரிசையின் பிரகாரமாக காணிக்கைகளை கொண்டு வரவேண்டுமென்று கர்த்தர் நியமனம் செய்திருக்கிறாரோ, அதன் பிரகாரமாகவே அவர்கள் காணிக்கைகளை கொண்டு வருகிறார்கள். இதனால் பலிபீடத்தின் பிரதிஷ்டை பன்னிரண்டு நாட்களுக்கு நடைபெறுகிறது.

ஒவ்வொரு கோத்திரத்தின் பிரபுவும் பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக கொண்டு வரும் காணிக்கையைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லோருமே ஒரே விதமான காணிக்கைகளை கொண்டு வருகிறார்கள். எல்லா பிரபுக்களும் கொண்டு வரும் காணிக்கைகளின் அளவும் ஒன்றுபோலுள்ளது.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும், அவர்களுடைய பன்னிரண்டு பிரபுக்களும் தங்கள் ஐசுவரியத்தில் ஒன்று போலிருப்பதில்லை. அவர்களிடத்தில் பொருளாதார ஏற்ற தாழ்வுகள் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் கொண்டு வரும் காணிக்கைகளை பொருத்தவரையில், அவை அனைத்தும் ஒரே அளவிலும், ஒரே மதிப்பிலும் இருக்கிறது.

இஸ்ரவேல் கோத்திரத்தாரின் பிரபுக்கள் கொண்டு வரும் காணிக்கை ஒரே அளவிலும், ஒரே மதிப்பிலும் இருப்பதினால் அவர்கள் எல்லோருக்கும் பலிபீடத்திலே சமபங்குள்ளது. பலிகளை செலுத்துவதில் அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாயிருக்கிறார்கள். பலிபீடத்தின் மூலமாக வரும் ஆசீர்வாதங்களை, இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோரும் சமமாக பகிர்ந்துகொள்கிறார்கள்.

முதலாம் நாளிலே யூதாகோத்திரத்தானாகிய நகசோன் தன் காணிக்கை செலுத்துகிறான். கர்த்தர் யூதாகோத்திரத்தாருக்கு விசேஷித்த மேன்மையையும் கனத்தையும் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேலின் பாளயத்திலே அவர்கள் முதலாவதாக கூடாரம் போட்டவர்கள். மற்ற கோத்திரத்தார் தங்களுக்கு நியமிக்கப்பட்ட இடங்களில், யூதாகோத்திரத்திற்கு பின்னால் வந்து பாளயம் போடுகிறார்கள்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரின் பிரபுக்கள் செலுத்துகிற காணிக்கைகள் ஒரே அளவுள்ளதாகவும், ஒரே மதிப்புள்ளதாகவும் இருந்தாலும், அவர்கள் ஒவ்வொருவரும் செலுத்தும் காணிக்கையைப்பற்றி இந்த வசனப்பகுதியில் தனித்தனியாக சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கோத்திரத்தின் பிரபு செலுத்தும் காணிக்கையை விவரிப்பதற்கு என்னென்ன வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ, அதே வார்த்தைகளே மற்ற கோத்திரத்தின் பிரபுவுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பிரபுக்களும் செலுத்தின காணிக்கைகளின் விவரம் வருமாறு :

1. தாலங்கள் - 12
2. கலங்கள் - 12
3. கரண்டிகள் - 12
4. இளங்காளைகள் - 36
5. ஆட்டுக்கடாக்கள் - 72
6. ஆட்டுக்குட்டிகள் - 72
7. வெள்ளாட்டுக்கடாக்கள் - 72

8. மெல்லிய மாவு - 198 சேக்கல்

9. எண்ணெய் - 468 சேக்கல்

10. திராட்சரசம் - 468 சேக்கல்

ஒவ்வொரு கோத்திரத்தாரும் சர்வாங்க தகனபலியாக இளங்காளையையும், சமாதான பலியாக இரண்டு மாடுகளையும் பலிசெலுத்தினார்கள். (எண் 7:15,17). எண் 7:87-88 ஆகிய வசனங்களில் சர்வாங்க தகனபலிக்கு மாடுகளும், சமாதான பலிக்கு காளையையும் பலியிடப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

யூதாவின் பிரபு செலுத்தின காணிக்கையின் விவரம் :

முதலாம் நாளில் தன் காணிக்கையைச் செலுத்தினவன் யூதா கோத்திரத்தானாகிய அம்மினதாபின் குமாரன் நகசோன். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும் செலுத்துகிறான் (எண் 7:12-14).

அவன் சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது அம்மினதாபின் குமாரனாகிய நகசோனின் காணிக்கை (எண் 7:15-17).

இரண்டாம் நாளில் இசக்காரின் பிரபுவாகிய சூவாரின் குமாரன் நெதனெயேல் காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துசேக்கல்நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது சூவாரின் குமாரனாகிய நெதனெயேலின் காணிக்கை (எண் 7:18-23).

ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலும் இஸ்ரவேல் கோத்திரத்தார் எந்த வரிசையின் பிரகாரம் பாளயமிறங்கியிருக்கிறார்களோ அந்த வரிசையின் பிரகாரமாகவே தங்களுடைய பலிகளைச் செலுத்துகிறார்கள். (எண் 2:1-34; எண் 10:13-28).

மூன்றாம் நாளில் ஏலோனின் குமாரனாகிய எலியாப் என்னும் செபுலோன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது ஏலோனின் குமாரனாகிய எலியாவின் காணிக்கை (எண் 7:24-29).

யூதா, இசக்கார், செபுலோன் ஆகியோர் ஆசரிப்புக் கூடாரத்தின் கிழக்கு திசையில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். (எண் 2:1-9).

போஜனபலியில் பொதுவாக மாவு, எண்ணெய், திராட்சரசம் ஆகியவை மட்டுமே இருக்கும். அதில் மிருகஜீவன்களின் மாம்சம் இராது. (லேவி 2:1)

நான்காம் நாளில் சேதேயூரின் குமாரனாகிய எலிசூர் என்னும் ரூபன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது சேதேயூரின் குமாரனாகிய எலிசூரின் காணிக்கை (எண் 7:30-35).

ரூபன், சிமியோன், காத் ஆகிய கோத்திரத்தார் ஆசரிப்புக் கூடாரத்தின் தென்பகுதியில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். (எண் 2:10-16).

ஐந்தாம் நாளில் சூரிஷதாயின் குமாரனாகிய செலூமியேல் என்னும் சிமியோன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்கதகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது சூரிஷதாயின் குமாரனாகிய செலூமியேலின் காணிக்கை (எண் 7:36-41).

ஆறாம் நாளில் தேகுவேலின் குமாரனாகிய எலியாசாப் என்னும் காத் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது தேகுவேலின் குமாரனாகிய எலியாசாபின் காணிக்கை (எண் 7:42-47).

ரூபன், சிமியோன், காத் ஆகிய மூன்று கோத்திரத்தாரில் காத் கோத்திரத்தார் ஆசரிப்புக் கூடாரத்தின் தென்பகுதியில் முதலாவதாக பாளயமிறங்கியிருக்கிறார்கள். (எண் 2:10-16).

ஏழாம் நாளில் அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமா என்னும் எப்பிராயீம் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமாவின் காணிக்கை (எண் 7:48-53).

ஏழாம் நாள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓய்வுநாளாகயிருக்கிறது. ஓய்வுநாளாக இருந்தாலும், வேலைநாளாக இருந்தாலும் பலிசெலுத்தும் வேலை நடைபெறுகிறது. ஓய்வுநாளில் அவசியமான வேலைகளைச் செய்து கொள்ளலாம் என்பது கிறிஸ்துவின் பிரமாணமாகும். (மாற்கு 2:24-3:7).

எட்டாம்நாளில் பெதாசூரின் குமாரனாகிய கமாலியேல் என்னும் மனாசே புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாகஇரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது பெதாசூரின் குமாரனாகிய கமாலியேலின் காணிக்கை (எண் 7:54-59).

ஒன்பதாம் நாளில் கீதெயோனின் குமாரனாகிய அபீதான் என்னும் பென்யமீன் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது கீதெயோனின் குமாரனாகிய அபீதானின் காணிக்கை (எண் 7:60-65).

ஆசரிப்புக் கூடாரத்தின் மேற்கு பகுதியில் பென்யமீன் கோத்திரத்தார் பாளயமிறங்கியிருக்கிறார்கள் (எண் 2:18-24).

பத்தாம் நாளில் அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேர் என்னும் தாண் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேரின் காணிக்கை (எண் 7:66-71).

பதினோராம் நாளில் ஒகிரானின் குமாரனாகிய பாகியேல் என்னும் ஆசேர் புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது ஒகிரானின் குமாரனாகிய பாகியேலின் காணிக்கை (எண் 7:72-77).

பன்னிரண்டாம் நாளில் ஏனானின் குமாரனாகிய அகீரா என்னும் நப்தலி புத்திரரின் பிரபு காணிக்கை செலுத்தினான். அவன் காணிக்கையாவது: போஜனபலியாகப் படைக்கும்பொருட்டு எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்ததும், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையுள்ளதுமான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையுள்ள ஒரு வெள்ளிக்கலமும் ஆகிய இவ்விரண்டும், தூபவர்க்கம் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னினால் செய்த ஒரு தூபகரண்டியும், சர்வாங்க தகனபலியாக ஒரு காளையும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும், சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும் ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளுமே; இது ஏனானின் குமாரனாகிய அகீராவின் காணிக்கை (எண் 7:78-83).

நப்தலி கோத்திரத்தார் ஆசரிப்புக் கூடாரத்தின் வடக்குப் பகுதியில் பாளயமிறங்கியிருக்கிறார்கள்(எண் 2:25-34).

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தேவாலயத்திலுள்ள காணிக்கைப்பெட்டியிலே போடப்படும் காணிக்கைகளை கவனித்துப் பார்க்கிறார்.

“இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்; ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய் போட்டார்கள்” (மாற் 12:41).

நாம் கர்த்தருக்கு குறைவான காணிக்கையைக் கொடுத்தாலும், நாம் கொடுக்கும் காணிக்கை நம்முடைய திராணிக்குத்தக்கபடி இருக்கவேண்டும்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் அனைவரும் பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக, செலுத்தின மொத்த காணிக்கையைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் காணிக்கைகளை உற்சாகமாகவும், மனப்பூர்வமாகவும் கர்த்தருக்கு செலுத்தியிருக்கிறார்கள். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களும், பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்டபோது செய்யப்பட்ட பிரதிஷ்டையின் விவரம் வருமாறு :

வெள்ளித்தாலங்கள் பன்னிரண்டு, வெள்ளிக்கலங்கள் பன்னிரண்டு, பொன் தூபகரண்டிகள் பன்னிரண்டு. ஒவ்வொரு வெள்ளித்தாலம் நூற்று முப்பது சேக்கல் நிறையும், ஒவ்வொரு கலம் எழுபது சேக்கல் நிறையுமாக, இந்தப் பாத்திரங்களின் வெள்ளியெல்லாம் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி இரண்டாயிரத்து நானூறு சேக்கல் நிறையாயிருக்கிறது (எண் 7:84,85).

தூபவர்க்கம் நிறைந்த பொன் தூபகரண்டிகள் பன்னிரண்டு, ஒவ்வொன்று பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி பத்துச்சேக்கல் நிறையாக, தூபகரண்டிகளின் பொன்னெல்லாம் நூற்றிருபது சேக்கல் நிறையாயிருக்கிறது (எண் 7:86).

இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களும், பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்டபோது, பலிகளாக செலுத்துவதற்கு கொண்டு வந்த மிருகங்களின் விவரம் வருமாறு :

சர்வாங்க தகனபலியாகச் செலுத்தப்பட்ட காளைகளெல்லாம் பன்னிரண்டு, ஆட்டுக்கடாக்கள் பன்னிரண்டு, ஒரு வயதான ஆட்டுக்குட்டிகள் பன்னிரண்டு, அவைகளுக்கடுத்த போஜனபலிகளும் கூடச் செலுத்தப்பட்டது; பாவநிவாரணபலியாகச் செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாக்கள் பன்னிரண்டு (எண் 7:87).

சமாதான பலியாகச் செலுத்தப்பட்ட காளைகளெல்லாம் இருபத்துநான்கு; ஆட்டுக்கடாக்கள் அறுபது, வெள்ளாட்டுக்கடாக்கள் அறுபது, ஒரு வயதான ஆட்டுக்குட்டிகள் அறுபது (எண் 7:88). பலிபீடம் அபிஷேகம்பண்ணப்பட்ட பின்பு செய்யப்பட்ட அதின் பிரதிஷ்டை இதுவே.

ஒவ்வொரு பிரபுவும், பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காக கொண்டு வரும் காணிக்கைகளை மொத்தமாய்க் கூட்டிச் சேர்க்கும்போது, அது திரளாயிருக்கிறது. இஸ்ரவேல் கோத்திரத்தார் கர்த்தரை அதிகமாய் நேசிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு அதிகமாய்க் காணிக்கை கொண்டு வருகிறார்கள்.

செலுத்தப்பட்ட பலிகளின் விவரம் வருமாறு :

1. பொன், வெள்ளியிலான பாத்திரங்கள் (எண் 7:13-14,19-20,25-26,31-32,37-38,43-44,49-50,55-56,61-62,67-68,73-74,79-80,84-86)

2. போஜனபலி - எண்ணெயில் பிசைந்த மாவு (எண் 7:13,19,25,31,37,43,49,55,61,67, 73,79,87)

3. தகனபலி - காளைகள், ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்டிகள் (எண் 7:15,21,27,33,39,45,51,57,63,69,75,81,87)

4. பாவநிவாரண பலி - வெள்ளாட்டுக் கடாக்கள் (எண் 7:16,22,28,34,40,46,52, 58,64,70,76,82,87)

5. சமாதான பலிகள் - காளைகள், ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்டிகள், வெள்ளாட்டுக்கடாக்கள் (எண் 7:17,23, 29,35,41,47,53,59,65,71,77, 83, 88)

தேவன் மோசேயோடே பேசுகிறார்
எண் 7:89

எண் 7:89. மோசே தேவனோடே பேசும்படி ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கும் போது, தன்னோடே பேசுகிறவரின் சத்தம் சாட்சிப்பெட்டியின்மேலுள்ள கிருபாசனமான இரண்டு கேருபீன்களின் நடுவிலிருந்துண்டாகக் கேட்பான்; அங்கே இருந்து அவனோடே பேசுவார்.

இஸ்ரவேல் தேசத்தின் பிரபுக்கள் செலுத்துகிற காணிக்கைகளை கர்த்தர் அங்கீகரிக்கிறார். இதற்கு அடையாளமாக கர்த்தர் மோசேயோடே பேசுகிறார். ஒரு மனுஷன் தன்னுடைய சிநேகிதனிடத்தில் பேசுவதுபோல, கர்த்தர் மோசேயோடே பேசுகிறார்.

"என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன" (எண் 12:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் சாட்சிப்பெட்டியின் மேலுள்ள கிருபாசனமான இரண்டு கேருபீன்களின் நடுவிலிருந்து பேசுகிறார். கர்த்தர் மோசேயோடு பேசும்போது, அவர் தம்முடைய கிரியைகளை இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் தெரியப்பண்ணுகிறார்.

"அவர் தமது வழிகளை மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப்பண்ணினார்" (சங் 103:7).

8 அதிகாரம்

ஆசரிப்புக்கூடாரத்தில் ஏற்றப்படும் விளக்குகளைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழுவிளக்குகள் விளக்குத்தண்டிற்கு நேரே எரியவேண்டும். ஆசாரியர் அந்த விளக்குகளை விளக்குத்தண்டிற்கு நேரே ஒழுங்காக ஏற்றவேண்டும் (எண் 8:1-4).

லேவியர்கள் ஜீவனுள்ள விளக்குகளாக இருக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எரிகிற விளக்காகவும், பிரகாசமான வெளிச்சத்தைக் கொடுக்கிற விளக்காகவும் இருக்கிறார்கள்.

இதற்கு முந்தின அதிகாரத்தில், ஆசாரியரின் பிரதிஷ்டையை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில், ஆசாரியருக்கு கீழே பணிவிடை செய்கிற லேவியரின் பிரதிஷ்டையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

லேவியர் சுத்திகரிக்கப்படுகிறார்கள் (எண் 8:5-8). இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர் மேல் வைக்கிறார்கள் (எண் 8:9,10). லேவியர் கர்த்தருக்கு முன்பாக காணிக்கையாக நிறுத்தப்படுகிறார்கள் (எண் 8:11-18).

கர்த்தர் லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து எடுத்து அவர்களை ஆரோனுக்கும், அவருடைய குமாரருக்கும் தத்தமாகக் கொடுக்கிறார் (எண் 8:19).

மோசேயும் ஆரோனும், இஸ்ரவேல் புத்திரரின் சபையார் யாவரும், கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் லேவியருக்கு செய்கிறார்கள் (எண் 8:20-22).

ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையை செய்யும் சேனையிலே சேவிக்க வரவேண்டிய லேவியர். ஐம்பது வயதிற்கு மேற்பட்ட லேவியருக்குரிய கட்டளை (எண் 8:23-26).

எரிகிற விளக்குகள்
எண் 8:1-4

எண் 8:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 8:2. நீ ஆரோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீ விளக்குகளை ஏற்றும் போது ஏழு விளக்குகளும் விளக்குத்தண்டிற்கு நேரே எரியவேண்டும் என்று சொல் என்றார்.

எண் 8:3. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்ட பிரகாரம் ஆரோன் செய்து, விளக்குத்தண்டிற்கு நேரே ஒழுங்காக அதின் விளக்குகளை ஏற்றினான்.

எண் 8:4. இந்தக் குத்துவிளக்கு, அதின் பாதமுதல் பூக்கள்வரைக்கும் பொன்னினால் அடிப்புவேலையாய்ச் செய்யப்பட்டிருந்தது; கர்த்தர் மோசேக்குக் காண்பித்த மாதிரியின்படியே அவன் குத்துவிளக்கை உண்டாக்கினான்.

பொன்குத்துவிளக்குகளை செய்வது பற்றி கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"பசும்பொன்னினால் ஒரு குத்துவிளக்கையும் உண்டாக்குவாயாக; அது பொன்னினால் அடிப்புவேலையாய்ச் செய்யப்படவேண்டும்; அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்படவேண்டும்" (யாத் 25:31).

கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு சொன்ன பிரகாரமாக பொன்குத்துவிளக்கு செய்யப்படுகிறது.

"குத்துவிளக்கையும் பசும்பொன்னினால் அடிப்புவேலையாய் உண்டாக்கினான்; அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்பட்டிருந்தது" (யாத் 37:17).

கர்த்தர் இப்போது முதல் முறையாக, அந்த விளக்குகளை ஏற்றுமாறு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீ விளக்குகளை ஏற்றும் போது ஏழுவிளக்குகளும் விளக்குத்தண்டிற்கு நேரே எரியவேண்டும் என்று சொல்" (எண் 8:1,2) என்று சொல்லுகிறார்.

ஆரோன் விளக்குகளை ஏற்ற வேண்டும். (எண் 8:2-4). எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளம். இந்த விளக்கு இப்பொழுது முதல் முறையாக ஏற்றப்படுகிறது.

ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களெல்லாம் ஆராதனையிலே பயன்படுத்தப்படும்போது, விளக்குகளும் ஏற்றப்படுகிறது. கர்த்தருடைய கட்டளையின்பிரகாரம் ஆரோனே இந்த விளக்குகளை ஏற்றவேண்டும்.

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்ட பிரகாரம் ஆரோன் செய்து, விளக்குத்தண்டிற்கு நேரே ஒழுங்காக அதின் விளக்குகளை ஏற்றுகிறார் (எண் 8:3).

ஆரோன் கர்த்தருடைய சமுகத்திலே, இஸ்ரவேல் புத்திரரின் பிரதிநிதியாக ஊழியம் செய்கிறார். அவர் தேவனுடைய வாசஸ்தலத்திலே, கர்த்தருடைய விளக்கை ஏற்றி பணிவிடை செய்கிறார். வேலையாள் தன் எஜமானருடைய வீட்டிலே, விளக்கை ஏற்றுவதுபோல, ஆரோன் கர்த்தருடைய வீட்டிலே விளக்கை ஏற்றுகிறார்.

வேதவசனங்கள் பிரகாசமான விளக்காயிருக்கிறது. "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" (2 பேது 1:19).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் வேதவசனமாகிய விளக்குகளை ஏற்றவேண்டும். அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு அர்த்தமும் விளக்கமும் சொல்லவேண்டும். ஊழியக்காரர்கள் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தி ஜனங்களுக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணவேண்டும்.

ஆசாரியன் பலிபீடத்திலுள்ள அக்கினியை எடுத்து, விளக்குத்தண்டிலுள்ள ஏழுவிளக்குகளில், நடுவிலுள்ள விளக்கை ஏற்றுவார். மற்ற ஆறு விளக்குகளையும் ஏற்றுவதற்கு, எரியும் விளக்கிலுள்ள அக்கினி பயன்படுத்தப்படும். ஒரு விளக்கு மற்றொரு விளக்கை ஏற்றுவதற்கு உதவியாயிருக்கும்.

எல்லா வெளிச்சத்திற்கும், ஞானத்திற்கும், அறிவுக்கும் இயேசுகிறிஸ்துவே ஆதாரமாகவும், ஊற்றாகவும், ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறார். எல்லா வெளிச்சமும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்திலிருந்தே வெளிப்படுகிறது. அவர் ஏழுஅக்கினி தீபங்களுக்கு அடையாளமாயிருக்கிறார்.

"அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன; தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன" (வெளி 4:5).

சத்திய வசனத்தை விளக்கி வியாக்கியானம்பண்ணும்போது, ஒரு வசனத்தின் விளக்கத்தையும் வியாக்கியானத்தையும், மற்றொரு வசனத்தை விளக்கி வியாக்கியானம்பண்ணுவதற்கு பயன்படுத்தவேண்டும். ஒரு விளக்கின் அக்கினியினால் மற்றொரு விளக்கை ஏற்றுவதுபோல, ஒரு வசனத்தின் விளக்கத்தினால் மற்ற வசனத்திற்கு விளக்கம் சொல்லவேண்டும்.

விளக்குகளை ஏற்றும்போது, ஏழு விளக்குகளும் விளக்கு தண்டிற்கு நேரே எரியவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏழு என்னும் எண் பரிபூரணத்திற்கு அடையாளம். விளக்குத்தண்டிலுள்ள ஏழு கிளைகளும், பரிசுத்த வேதாகமத்தின் பரிபூரணத்திற்கு அடையாளமாயிருக்கிறது. வேதவசனம் நம்மை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துவதற்கு போதுமானதாயிருக்கிறது.

ஆசாரியன் விளக்குகளை ஏற்றும்போது, அவற்றை தனக்கு இஷ்டமான பிரகாரம் ஏற்றக்கூடாது. அவற்றை எவ்வாறு ஏற்றவேண்டும் என்று கர்த்தர் கட்டளை கொடுத்திருக்கிறாரோ, அதன் பிரகாரமாகவே, அந்த விளக்குகளை ஏற்றவேண்டும்.

ஏழுவிளக்குகளும் விளக்குத்தண்டிற்கு நேரே எரியவேண்டும் என்றும், அந்த விளக்குகளை விளக்குத்தண்டிற்கு நேரே ஒழுங்காக ஏற்றவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். விளக்குகள் தங்களுக்குத் தாங்களே வெளிச்சம் கொடுத்து கொள்வதற்காக ஏற்றப்படவில்லை. அந்த விளக்குகள் ஆசரிப்புக்கூடாரத்தின் மற்ற பகுதிக்கு வெளிச்சம் கொடுக்கவேண்டும்.

"விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்" (மத் 5:15).

மற்றவர்களுக்கு வெளிச்சம் கொடுப்பதற்காகவே, நம்மிடத்தில் வெளிச்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத் 5:16).

குத்துவிளக்கு எவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது என்னும் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குத்துவிளக்கு, அதின் பாதமுதல் பூக்கள்வரைக்கும் பொன்னினால் அடிப்புவேலையாய்ச் செய்யப்பட்டிருக்கிறது; கர்த்தர் மோசேக்குக் காண்பித்த மாதிரியின்படியே ஆரோன் குத்துவிளக்கை உண்டாக்குகிறார் (யாத் 25:31-40; எண் 8:4).

லேவியரின் சுத்திகரிப்பு எண் 8:5-22

எண் 8:5. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 8:6. நீ இஸ்ரவேல் சந்ததியாரினின்று லேவியரைப் பிரித்தெடுத்து, அவர்களைச் சுத்திகரிப்பாயாக.

எண் 8:7. அவர்களைச் சுத்திகரிக்கும்படி அவர்களுக்குச் செய்யவேண்டியதாவது: அவர்கள்மேல் சுத்திகரிக்கும் ஜலத்தைத் தெளிப்பாயாக; பின்பு அவர்கள் சர்வாங்க சவரம்பண்ணி, தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, தங்களைச் சுத்திகரிக்கக்கடவர்கள்.

எண் 8:8. அப்பொழுது ஒரு காளையையும், அதற்கேற்ற எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவாகிய போஜனபலியையும் கொண்டுவரக்கடவர்கள்; பாவநிவாரணபலியாக வேறொரு காளையையும் நீ வாங்கி,

எண் 8:9. லேவியரை ஆசரிப்புக்கூடாரத்துக்கு முன் வரச்செய்து, இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரையும் கூடிவரப்பண்ணுவாயாக.

எண் 8:10. நீ லேவியரைக் கர்த்தருடைய சந்நிதியில் வரப்பண்ணினபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர்மேல் வைக்கக்கடவர்கள்.

எண் 8:11. லேவியர் கர்த்தருக்குரிய பணிவிடை செய்யும்பொருட்டு, ஆரோன் அவர்களை இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கையாகக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாய் நிறுத்தக்கடவன்.

எண் 8:12. அதன்பின் லேவியர் தங்கள் கைகளைக் காளைகளுடைய தலையின்மேல் வைப்பார்களாக; பின்பு நீ லேவியருக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு, கர்த்தருக்கு அவைகளில் ஒன்றைப் பாவநிவாரண பலியாகவும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தி,

எண் 8:13. லேவியரை ஆரோனுக்கும் அவன் குமாரனுக்கும் முன்பாக நிறுத்தி, அவர்களைக் கர்த்தருக்கு அசைவாட்டப்படும் காணிக்கையாக்கி,

எண் 8:14. இப்படி நீ லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்தெடுக்கக்கடவாய்; லேவியர் என்னுடையவர்களாயிருப்பார்கள்.

எண் 8:15. இப்படி அவர்களைச் சுத்திகரித்து, அவர்களை அசைவாட்டும் காணிக்கையாக்கக்கடவாய்; அதன்பின்பு லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடை செய்யப் பிரவேசிக்கக்கடவர்கள்.

எண் 8:16. இஸ்ரவேல் புத்திரரிலிருந்து அவர்கள் எனக்கு முற்றிலும் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற சகல முதற்பேறுக்கும் பதிலாக அவர்களை எனக்கு எடுத்துக்கொண்டேன்.

எண் 8:17. இஸ்ரவேல் புத்திரரில் மனிதரிலும் மிருகஜீவன்களிலும் முதற்பேறானதெல்லாம் என்னுடையது; நான் எகிப்துதேசத்திலே முதற்பேறான யாவையும் சங்கரித்த நாளிலே அவைகளை எனக்கென்று பரிசுத்தப்படுத்தி,

எண் 8:18. பின்பு லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறு சகலத்திற்கும் பதிலாக எடுத்துக்கொண்டு,

எண் 8:19. லேவியர் இஸ்ரவேல் புத்திரருடைய பணிவிடையை ஆசரிப்புக்கூடாரத்தில் செய்யும்படிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கும், இஸ்ரவேல் புத்திரர் தாங்களே பரிசுத்தஸ்தலத்தில் சேருகிறதினால் இஸ்ரவேல் புத்திரரில் வாதையுண்டாகாதபடிக்கும் லேவியரை அவர்களிலிருந்து எடுத்து, ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் தத்தமாகக் கொடுத்தேன் என்றார்.

எண் 8:20. அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையார் யாவரும் கர்த்தர் லேவியரைக்குறித்து மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் லேவியருக்குச் செய்தார்கள்.

எண் 8:21. லேவியர் சுத்திகரிக்கப்பட்டு, தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்தார்கள்; பின்பு ஆரோன் அவர்களைக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாக நிறுத்தி, அவர்களைச் சுத்திகரிக்க அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்தான்.

எண் 8:22. அதற்குபின்பு லேவியர் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் முன்பாக ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கள் பணிவிடையைச் செய்யும்படி பிரவேசித்தார்கள்; கர்த்தர் லேவியரைக்குறித்து மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்களுக்குச் செய்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்பட்டபோது, லேவியர் அவர்களோடு கூட எண்ணப்படவில்லை. அதன் பின்பு லேவியர் மாத்திரம் தனியாக எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள்.

"கர்த்தர் மோசேயை நோக்கி: நீ லேவிகோத்திரத்தாரைச் சேர்த்து, அவர்கள் ஆசாரியனாகிய ஆரோனுக்குப் பணிவிடை செய்யும்படி அவர்களை நிறுத்து. அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக அவனுடைய காவலையும் எல்லாச் சபையின் காவலையும் காத்து, வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைகளைச் செய்யக்கடவர்கள்" (எண் 3:5-7) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் முதற்பேறுகளுக்குப் பதிலாக லேவியர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் (எண் 3:44-51) கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்கு லேவியர் பிரித்தெடுக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறார்கள். (எண் 8:5-14).

"பின்னும் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி: லேவிபுத்திரரை அவர்கள் பிதாக்களின் வம்சங்களின்படியே எண்ணுவாயாக; அவர்களில் ஒருமாதம்முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளையெல்லாம் எண்ணுவாயாக என்றார்" (எண் 3:14,15) என்று சொல்லுகிறார்.

லேவியர் ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருக்கு பணிவிடை செய்யவேண்டும். இதற்காக அவர்கள் பிரதிஷ்டைபண்ணப்படுகிறார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் சந்ததியாரினின்று லேவியரைப் பிரித்தெடுத்து, அவர்களைச் சுத்திகரிப்பாயாக" (எண் 8:5,6) என்று சொல்லுகிறார்.

மோசேயும், ஆரோனும், இஸ்ரவேல் புத்திரரின் சபையார் யாவரும் கர்த்தர் லேவியரைக்குறித்து மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் லேவியருக்குச் செய்கிறார்கள் (எண் 8:20). கர்த்தர் சொன்ன பிரகாரம் லேவியர் பிரித்தெடுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்படுகிறார்கள்.

லேவியர் தங்களைத் தாங்களே ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளுக்கு நியமித்துக்கொள்ளவில்லை. கர்த்தரே அவர்களை தம்முடைய ஊழியத்திற்காக இஸ்ரவேல் சந்ததியாரிலிருந்து பிரித்தெடுக்கிறார். ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளை செய்வதற்காக கர்த்தரே லேவியரை சுத்திகரிக்குமாறு சொல்லுகிறார்.

லேவியர் இஸ்ரவேலின் மற்ற புத்திரரிலிருந்து தனியான பிரிந்திருந்தால் மாத்திரம் போதாது. லேவியருக்கும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கும் இடையே வித்தியாசம் இருந்தால் மாத்திரம் போதாது. லேவியர் கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்படவேண்டும். அவர்கள் சுத்திகரிக்கப்படவேண்டும். ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளை செய்வதற்கு லேவியர்கள் பிரதிஷ்டைபண்ணப்படவேண்டும்.

கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள் எல்லோருமே, அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும். விசுவாசிகள் தண்ணீரிலே ஞானஸ்நானம் பெறவேண்டும். ஊழியக்காரர்கள் ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்பட வேண்டும். நாம் முதலாவதாக கர்த்தருக்கு நம்மை ஒப்புக்கொடுத்த அர்ப்பணிக்கவேண்டும். அதன்பின்பு கர்த்தருக்கு சேவை செய்யவும், அவருடைய ஊழியத்திலே பணிவிடை செய்யவும் நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இந்த வசனப்பகுதியில் லேவியர் பிரித்தெடுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, கர்த்தருடைய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்படுகிற சம்பவம் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

லேவியரை சுத்திகரிக்கும்படி அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். மோசே லேவியர்மேல் சுத்திகரிக்கும் ஜலத்தைத் தெளிக்கவேண்டும்; பின்பு அவர்கள் சர்வாங்க சவரம்பண்ணி, தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, தங்களைச் சுத்திகரிக்க வேண்டும் (எண் 8:7).

லேவியரை சுத்திகரிக்கும்படி அவர்களுக்கு செய்யவேண்டியதாவது :

1. அவர்கள்மேல் சுத்திகரிக்கும் ஜலத்தைத் தெளிக்க வேண்டும்.

2. அவர்கள் சர்வாங்க சவரம்பண்ண வேண்டும்.

3. தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்க வேண்டும்.

சுத்திகரிக்கும் ஜலம் வெண்கலத் தொட்டியிலிருந்து எடுக்கப்படுகிறது. எண் 19:1-22 ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற பிரகாரம் இந்த ஜலம் ஆயத்தமாக்கப்படுகிறது. சுத்திகரிப்பின் ஜலத்தைப் பாவநிவாரண ஜலம் என்றும் அழைக்கலாம். சிவப்புக்கிடாரியின் சாம்பல் தண்ணீரில் கலக்கப்பட்டு அந்தத் தண்ணீர் ஜனங்கள்மீது தெளிக்கப்படுகிறது (எபி 9:12-14).

அப்பொழுது லேவியர் ஒரு காளையையும், அதற்கேற்ற எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவாகிய போஜனபலியையும் கொண்டுவரவேண்டும். பாவநிவாரணபலியாக வேறொரு காளையையும் மோசே அவர்களிடத்திலிருந்து வாங்கவேண்டும். மோசே லேவியரை ஆசரிப்புக்கூடாரத்துக்கு முன் வரச்செய்து, இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரையும் கூடிவரப்பண்ணவேண்டும் (எண் 8:8,9).

லேவியர் சுத்திகரிக்கப்பட்ட பின்பு, தங்களைப் பாவநிவிர்த்தி செய்வதற்கு அவர்கள் இரண்டு காளைகளைச் செலுத்த வேண்டும். ஒரு காளையைச் சர்வாங்க தகனபலியாகவும், மற்றொரு காளையைப் பாவநிவாரண பலியாகவும் செலுத்த வேண்டும் (எண் 8:8-12).

மோசே லேவியரைக் கர்த்தருடைய சந்நிதியில் வரப்பண்ணினபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர்மேல் வைக்கவேண்டும். லேவியர் கர்த்தருக்குரிய பணிவிடை செய்யும்பொருட்டு, ஆரோன் அவர்களை இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கையாகக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாய் நிறுத்தவேண்டும் (எண் 8:10,11).

லேவியரைச் சுத்திகரிக்கும்போது லேவியரோடு சேர்ந்து, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கூடிவரவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் தங்கள் கைகளை லேவியர்மேல் வைக்கவேண்டும். இஸ்ரவேலர்கள் லேவியரைத் தேவனிடம் அவருடைய ஊழியக்காரர்களாக அர்ப்பணிக்கிறார்கள். லேவியர் இனிமேல் உலகப்பிரகாரமான வேலைகளைச் செய்யாமல், தேவனுக்குரிய வேலைகளை மட்டுமே செய்ய வேண்டும். தேசத்தின் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பதற்கு லேவியர் தங்களைப் பிரதிஷ்டை பண்ணிக் கொள்ள வேண்டும்.

லேவியர்மீது ஆரோனும், இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் தங்கள் கைகளைவைத்து, ஜெபித்து அவர்களைத் தேவனிடத்தில் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள். கைகளை வைப்பது சபையாரின் ஆசீர்வாதத்தைஅவர்களுக்குக் கொடுப்பதற்கு அடையாளமாகும். இஸ்ரவேல் புத்திரர் இனிமேல் லேவியருக்கு ஆதரவாக இருந்து, அவர்களோடு ஒத்துழைப்பார்கள்.

லேவியரை சுத்திகரிக்கும்போது, மோசே அவர்கள்மேல் சுத்திகரிக்கும் ஜலத்தை தெளிக்கிறார். பின்பு லேவியரே சர்வாங்க சவரம் பண்ணி, தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, தங்களை சுத்திகரித்துக் கொள்கிறார்கள். கர்த்தருடைய பாத்திரங்களை சுமக்கிறவர்கள் சுத்தமாயிருக்கவேண்டும். மோசே லேவியர்மேல் தெளிக்கும் சுத்திகரிக்கும் ஜலம், கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் கலக்கப்பட்டிருக்கிறது.

நம்மை நாமே சுத்தம்பண்ணுவது நம்முடைய கடமை. அப்போது கர்த்தர் நம்மை சுத்திகரிப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

மோசே சுத்திகரிக்கப்பட்ட லேவியரை கர்த்தருடைய சந்நிதியில் வரப்பண்ணுகிறார். அப்போது இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர்மேல் வைக்கிறார்கள் (எண் 8:10). லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளுக்காக அர்ப்பணிக்கப்படும்போது, இஸ்ரவேல் சபையார் எல்லோரும் லேவியரின் ஊழியத்தை அங்கீகரிக்கும் வண்ணமாக தங்களுடைய கைகளை அவர்கள்மேல் வைக்கிறார்கள்.

லேவியர் கர்த்தருக்கும், ஆசரிப்புக்கூடாரத்திற்கும் பணிவிடை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர்மீது வைப்பதினால், லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளை செய்வதற்கு தகுதி பெறமுடியாது. இஸ்ரவேல் புத்திரர் லேவியர்மேல் தங்கள் கைகளை வைப்பதினால், அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியர்களாக ஆவதில்லை.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர்மேல் வைக்கும்போது, லேவியருடைய ஊழியத்திற்கு தாங்கள் ஆதரவாகயிருப்போம் என்பதை அறிக்கை பண்ணுகிறார்கள். இஸ்ரவேலின் பிரபுக்களும், அவர்களுடைய சேனையும் லேவியருக்கு ஆதரவாகயிருக்கும். லேவியர் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் முன்பாக ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கள் பணிவிடைகளை செய்யும்போது, இஸ்ரவேல் சபையார் எல்லோரும் லேவியரின் ஊழியத்திற்கு ஆதரவாயிருப்பார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளுக்காக லேவியரை சுத்திகரிக்கும்போது, அவர்கள் ஒரு காளையையும், அதற்கேற்ற எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவாகிய போஜனபலியையும் கொண்டுவர வேண்டும்; பாவநிவாரணபலியாக வேறொரு காளையையும் அவர்கள் கொண்டு வரவேண்டும் (எண் 8:8).

லேவியருக்காக பாவநிவிர்த்தி செய்யப்படவேண்டும். அதற்காக பாவநிவாரணபலி செலுத்தப்படவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். மோசே லேவியருடைய கையிலே பாவநிவாரணபலியாக ஒரு காளையை வாங்கவேண்டும். லேவியர் தங்கள் கைகளைக் காளைகளுடைய தலையின்மேல் வைக்கவேண்டும். பின்பு மோசே லேவியருக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு, அந்தக் காளையை கர்த்தருக்கு பாவநிவாரண பலியாக செலுத்தவேண்டும் (எண் 8:12).

லேவியர் தங்களைப் பாவநிவிர்த்தி செய்யவேண்டும். அவர்கள் காளைகளின் தலைகளின்மீது தங்கள் கைகளை வைத்து, தங்களுடைய பாவங்களை அவற்றின்மீது சுமத்துகிறார்கள்.

நம்முடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படும் வரையிலும், நாம் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு தகுதியற்றவர்களாயிருக்கிறோம். நம்முடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படவில்லையென்றால், கர்த்தருடைய சமுகத்திலே பிரவேசிப்பதற்கும் நாம் தகுதியில்லாதவர்களாகவே இருப்போம்.

நம்முடைய பாவங்கள் நிவிர்த்திபண்ணப்படும் பொருட்டு, நமக்காக பாவநிவாரண பலி செலுத்தப்பட்ட பின்பே, நாம் தேவனோடு ஒப்புரவாகி, அவரோடு சமாதானமாயிருப்போம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நம்முடைய பாவங்களை நிவிர்த்திபண்ணுவதற்காக செலுத்தப்பட்ட பாவநிவாரண பலியாக இருக்கிறார். இயேசுகிறிஸ்துவினுடைய பாவநிவாரண பலி மரணத்தின் மூலமாகவே நாம் தேவனோடு ஒப்புரவாகிறோம். அதன் பின்பே கர்த்தரிடத்தில் நம்மை ஒப்புக்கொடுக்க நாம் தகுதியுள்ளவர்களாகிறோம்.

இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நாம் சுத்திகரிக்கப்படுகிறோம். அவர் மூலமாகவே கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் தகுதியையும், சிலாக்கியத்தையும் நாம் பெற்றிருக்கிறோம். இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை நிவிர்த்திபண்ணுவதற்காக, பாவநிவாரணபலியாக மரித்ததினாலேயே, கர்த்தருடைய ஊழியக்காரர்கள், கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் தகுதியையும் சிலாக்கியத்தையும் பெற்றிருக்கிறார்கள்.

லேவியர்கள் இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கையாக கர்த்தருக்கு முன்பாக நிறுத்தப்படுகிறார்கள். லேவியர் கர்த்தருக்குரிய பணிவிடை செய்யும்பொருட்டு, ஆரோன் அவர்களை இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கையாகக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாய் நிறுத்துகிறார் (எண் 8:11).

எண் 8:9-10 ஆகிய வசனங்களில் லேவியரைப் பிரதிஷ்டை பண்ணுவதில் இஸ்ரவேல் ஜனங்களின் பங்கும், எண் 8:11 ஆவது வசனத்தில் ஆரோனுடைய பங்கும், எண் 8:13 ஆவது வசனத்தில் ஆசாரியருடைய பங்கும் கூறப்பட்டிருக்கிறது.

லேவியர்கள் முதலாவதாக தங்களையே கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். அவர்கள் சர்வாங்க தகனம்பண்ணி, தங்கள் வஸ்திரங்களை தோய்த்து தங்களை சுத்திகரித்துக்கொள்கிறார்கள் (எண் 8:7). அதன்பின்பு இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர் மேல் வைக்கிறார்கள். இதன் மூலமாக இஸ்ரவேல் சபையார் லேவியரை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். அதன்பின்பு ஆரோன் லேவியரை இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கையாக கர்த்தருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிறார்.

லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளை செய்யவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. மோசேயும், ஆரோனும், இஸ்ரவேல் புத்திரரும் லேவியரை கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புக்கொடுக்கும்போது, கர்த்தரும் லேவியரை அங்கீகரிக்கிறார். "லேவியர் என்னுடையவர்களாயிருப்பார்கள்" (எண் 8:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

லேவியர்கள் சுத்திகரிக்கப்பட்டு, தங்களைப் பிரதிஷ்டை பண்ணிய பின்பு, அவர்கள் கர்த்தருக்குரியவர்கள் (எண் 8:14-26).

கர்த்தர் யாரை தம்முடையவர்களாக தெரிந்துகொள்கிறாரோ, அவர்களை கர்த்தர் தம்முடைய ஊழியத்திலே பயன்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய ஊழியத்தில் தேவதூதர்களையும் பயன்படுத்துகிறார். ஆரோன் லேவியரை இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கையாக, கர்த்தருக்கு முன்பாக நிறுத்தவேண்டும். அதன்பின் மோசே லேவியருக்காக ஒரு காளையை பாவநிவாரண பலியாகவும், மற்றொரு காளையை சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தவேண்டும்.

அதன்பின்பு மோசே லேவியரை ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் முன்பாக நிறுத்தி, அவர்களைக் கர்த்தருக்கு அசைவாட்டப்படும் காணிக்கையாக்கையாக்க வேண்டும். இவ்வாறாக மோசே லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்தெடுக்க வேண்டும்; லேவியர் கர்த்தருடையவர்களாயிருக்கிறார்கள்.

மோசே இப்படி லேவியரைச் சுத்திகரித்து, அவர்களை அசைவாட்டும் காணிக்கையாக்கவேண்டும்; அதன்பின்பு லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடை செய்யப் பிரவேசிக்கக்கடவர்கள் (எண் 8:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் முதற்பேறுகளுக்குப் பதிலாக லேவியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு (எண் 3:44-51; எண் 8:15-19), அதன்பின்பு, அவர்கள் சுத்திகரிக்கப்பட்டு தேவனுடைய ஊழியத்திற்காகப் பிரதிஷ்டை பண்ணப் படுகிறார்கள். (எண் 8:6-14). இதன்பின்பே, லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடை செய்யப் பிரவேசிக்க வேண்டும்.

லேவியர் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் தத்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் (எண் 8:19). இதன் மூலமாக லேவியர் மூலமாய் நடைபெறும் பணிவிடைகளும் ஊழியங்களும், இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் ஆசீர்வாதமாயிருக்கும்.

ஆரோனும், அவருடைய குமாரரும் ஆசரிப்புக் கூடாரத்தில் ஆசாரிய ஊழியம் செய்து வருகிறார்கள். ஆசரிப்புக் கூடாரத்து பணிவிடைகளில் அவர்களுக்கு உதவி புரிவதற்காக லேவியர்களைக் கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கிறார்.

லேவியரின் பணிவிடைகள் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஆசரிப்புக்கூடாரத்தைப் பிரிப்பது, சுமப்பது, ஸ்தாபிப்பது. (எண் 1:50-51)

2. ஆசரிப்புக்கூடாரத்தைக் காவல்காப்பது. (எண் 1:53)

3. ஆசரிப்புக்கூடார ஆராதனை பணிவிடைகளில் ஆசாரியராக பணிவிடை செய்வது. (எண் 3:9; எண் 8:15,22; எண் 18:21-23; 1நாளா 6:48; 2நாளா 35:3-18)

4. தேவனுடைய ஊழியக்காரராக ஊழியம் செய்வது. (எண் 3:12,39-49; 2நாளா 13:9-10; 2நாளா 23:6; 2நாளா 30:27; 2நாளா 31:2)

5. ஆராதனையில் இசைக்கருவிகளை வாசிப்பது. (2நாளா 5:12; 2நாளா 7:6; 2நாளா 29:30; 2நாளா 30:15-27)

6. தேவனைத் துதிப்பது. (2நாளா 8:14)

7. உபதேசம் பண்ணுவது (2நாளா 35:3; நெகே 8:9)

லேவியர் ஆசரிப்புக் கூடார பணிவிடைகளைச் செய்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரை பாவம், வியாதி, நரகம் ஆகியவற்றிலிருந்து விலக்கி பாதுகாப்பதற்காக லேவியர் ஆசரிப்புக் கூடாரத்தில் பணிவிடை செய்கிறார்கள். தேவன் அவர்கள் நடுவில் இருக்க வேண்டுமென்பதற்காக இஸ்ரவேல் புத்திரர் பாவநிவிர்த்தி செய்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசம் முழுமைக்கும், தனிநபர்களுக்கும், ஆசாரியர் பாவநிவிர்த்தி செய்கிறார்கள். வியாதியும், வாதையும் பாவத்தோடும், தேவனுக்குக் கீழ்ப்படியாமல் கலகம்பண்ணுவதோடும் தொடர்புடையது. வாதைகளிலிருந்து விலகியிருக்க வேண்டுமானால், பாவநிவாரணம் செய்ய வேண்டும். (எண் 8:19).

பாவநிவிர்த்தி செய்தபோது சில வாதைகள் நின்றுபோயிற்று. (எண் 16:46-47; எண் 25:13; 2சாமு 24:18-25). ஜனங்கள் ஜெபித்தபோது, வாதைகளில் சில நின்றுபோயிற்று. (எண் 11:2; எண் 12:13; ஆதி 20).

இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளும் போது கர்த்தர் அவர்களுடைய வியாதியைச் சுகமாக்குவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர்கள் கர்த்தருக்குத் தொடர்ந்து கீழ்ப்படிந்திருந்தால், அவர்களுக்குப் பூரண ஆரோக்கியம் உண்டாகும். (யாத் 15:26; லேவி 26; உபா 28). கர்த்தர் எல்லோரையும் குணப்படுத்துவார். இஸ்ரவேல் மத்தியில் முடமானவர் யாரும் இருக்கமாட்டார்கள். (சங் 105:37; சங் 107:20).

மோசேயின் உடன்படிக்கையிலும், மேலும் சில விசேஷித்த உடன்படிக்கையிலும் சரீர ஆரோக்கியமும், சுகமாதலும் இடம் பெற்றிருக்கிறது. (யாத் 15:26). தீர்க்கதரிசிகள் எல்லோரும் இஸ்ரவேல் புத்திரரின் சரீர ஆரோக்கியங்களைத் தீர்க்கதரிசனமாகக் கூறியிருக்கிறார்கள். (சங் 91; சங் 103:1-4; ஏசா 53, ஏசா 58).

தேவன் இயேசு கிறிஸ்துவை இஸ்ரவேல் புத்திரருக்கு முதலாவதாகவும், புறஜாதியாருக்கு அடுத்ததாகவும் அனுப்பினார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையைக் இயேசுகிறிஸ்துவின் மூலமாக உறுதிபண்ணி, நிறைவேற்றினார். அதற்குப்பின்பு, அப்போஸ்தலர்களும், தேவனுடைய உடன்படிக்கையை உறுதிபண்ணி நிறைவேற்றினார்கள்.

லேவியர்கள் ஆசாரியருக்கு கீழே ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடை செய்கிறார்கள். அவர்கள் ஆசாரியர்களுக்கு ஊழியத்தில் உதவிசெய்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆரோன் லேவியரை கர்த்தருக்கு முன்பாக காணிக்கையாக நிறுத்துகிறார் (எண் 8:11). அதன் பின்பு கர்த்தர் லேவியரை ஆரோனுக்கும், அவருடைய குமாரருக்கும் தத்தமாகக் கொடுக்கிறார் (எண் 8:19). ஆரோன் லேவியரை கர்த்தருக்கு கொடுக்கிறார். கர்த்தரோ அவர்களை ஆரோனுக்கே திரும்ப கொடுத்து விடுகிறார்.

நம்முடைய இருதயங்களையும், நம்முடைய பிள்ளைகளையும், நம்முடைய சம்பத்துக்களையும் நாம் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். அவை நமக்கு சொந்தமானதல்ல. அவை கர்த்தருக்கே சொந்தமானது. நம்மிடத்தில் இருக்கும் இவைகளை, கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும்போது, கர்த்தர் அவைகளை நமக்கு திரும்பக்கொடுப்பார். அப்போது அவை நம்முடைய ஆளுகையின் கீழிருக்கும். கர்த்தருடைய பிரமாணத்திற்கும், வார்த்தைக்கும், ஆளுகைக்கும் கீழ்ப்படிந்து, நம்முடைய இருதயங்களையும், நம்முடைய பிள்ளைகளையும், நம்முடைய சம்பத்துக்களையும் நாம் ஆளுகை செய்யவேண்டும்.

லேவியர் ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருக்கு பணிவிடை செய்கிறார்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள், ஜனங்களுக்கும் ஊழியம் செய்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய ஊழிய ஸ்தானத்திலிருந்து, கர்த்தருக்கு பிரியமானதையும், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பிரயோஜனமானதையும் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கவேண்டும். இதுவே அவர்களுடைய ஊழியம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பிரயோஜனமுள்ள ஊழியக்காரர்களாயிருக்க வேண்டும்.

"லேவியர் என்னுடையவர்களாயிருப்பார்கள்" (எண் 8:14) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரில் முதல் பேறானதெல்லாம் கர்த்தருக்குரியதாயிருக்கிறது. கர்த்தரோ முதற்பேறுகளுக்கு பதிலாக லேவியரைத் தெரிந்துகொள்கிறார். கர்த்தர் இஸ்ரவேலின் முதல் பேறானவர்களை லேவியர் மூலமாய் மீட்டுக்கொள்கிறார். ஆகையினால் லேவியர் கர்த்தருக்குரியவர்களாயிருக்கிறார்கள்.

கர்த்தர் லேவியரை தமக்கு எவ்வாறு சொந்தமாக்கிக்கொண்டார் என்னும் விவரத்தை, அவர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

"இஸ்ரவேல் புத்திரரிலிருந்து அவர்கள் எனக்கு முற்றிலும் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற சகல முதற்பேறுக்கும் பதிலாக அவர்களை எனக்கு எடுத்துக்கொண்டேன்" (எண் 8:16) என்றும்,

"இஸ்ரவேல் புத்திரரில் மனிதரிலும் மிருகஜீவன்களிலும் முதற்பேறானதெல்லாம் என்னுடையது; நான் எகிப்துதேசத்திலே முதற்பேறான யாவையும் சங்கரித்த நாளிலே அவைகளை எனக்கென்று பரிசுத்தப்படுத்தி, பின்பு லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதற்பேறு சகலத்திற்கும் பதிலாக எடுத்துக்கொண்டேன்" (எண் 8:17,18) என்றும்,

"லேவியர் இஸ்ரவேல் புத்திரருடைய பணிவிடையை ஆசரிப்புக்கூடாரத்தில் செய்யும்படிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கும், இஸ்ரவேல் புத்திரர் தாங்களே பரிசுத்தஸ்தலத்தில் சேருகிறதினால் இஸ்ரவேல் புத்திரரில் வாதையுண்டாகாதபடிக்கும் லேவியரை அவர்களிலிருந்து எடுத்து, ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் தத்தமாகக் கொடுத்தேன்" (எண் 8:19) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் சந்ததியாரினின்று லேவியரைப் பிரித்தெடுத்து, அவர்களைச் சுத்திகரிப்பாயாக" (எண் 8:5,6) என்று சொன்னார். அவர்களை எவ்வாறு பிரித்தெடுத்து சுத்திகரிக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொன்னார்.

கர்த்தர் லேவியரைக்குறித்து மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம், மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையார் யாவரும் லேவியருக்குச் செய்கிறார்கள் (எண் 8:20).

லேவியர் சுத்திகரிக்கப்பட்டு, தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கிறார்கள்; பின்பு ஆரோன் அவர்களைக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாக நிறுத்தி, அவர்களைச் சுத்திகரிக்க அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்கிறார் (எண் 8:21).

அதற்குபின்பு லேவியர் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் முன்பாக ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கள் பணிவிடையைச் செய்யும்படி பிரவேசிக்கிறார்கள்; கர்த்தர் லேவியரைக்குறித்து மோசேக்குக் கட்டளையிட்டபடியே லேவியர் அவர்களுக்குச் செய்கிறார்கள் (எண் 8:22).

லேவியர் சுத்திகரிக்கப்பட்டபோது அவர்கள் செய்ததும், அவர்களுக்காக செய்யப்பட்டதும் பற்றிய விவரம் வருமாறு :

1. லேவியர் சுத்திகரிக்கப்பட்டார்கள்.
2. தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்தார்கள்.
3. ஆரோன் அவர்களைக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாக நிறுத்தினான்.
4. ஆரோன் அவர்களைச் சுத்திகரிக்க அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்தான்.

லேவியர் சுத்திகரிக்கப்படாமல் ஆசரிப்புக் கூடாரத்தில் பிரவேசித்திருந்தால் நாதாபும், அபியூவும் போல மரித்துப்போயிருப்பார்கள் (லேவி 10:1-10).

லேவியரை சுத்திகரிப்பது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் சந்ததியாரினின்று லேவியரைப் பிரித்தெடுத்து, அவர்களைச் சுத்திகரிக்க வேண்டும்.
2. அவர்கள்மேல் சுத்திகரிக்கும் ஜலத்தைத் தெளிப்பாயாக; பின்பு அவர்கள் சர்வாங்க சவரம்பண்ணி, தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, தங்களைச் சுத்திகரிக்கக்கடவர்கள் (எண் 8:7).
3. ஒரு காளையையும், அதற்கேற்ற எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவாகிய போஜனபலியையும் பாவநிவாரணபலியாக வேறொரு காளையையும் கொண்டுவரவேண்டும் (எண் 8:8,12).

4. லேவியரை ஆசரிப்புக்கூடாரத்துக்கு முன் வரச்செய்து, இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரையும் கூடிவரப்பண்ண வேண்டும் (எண் 8:9).

5. லேவியரைக் கர்த்தருடைய சந்நிதியில் வரப்பண்ணினபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை லேவியர்மேல் வைக்கக்கடவர்கள் (எண் 8:10).

6. லேவியர் கர்த்தருக்குரிய பணிவிடை செய்யும்பொருட்டு, ஆரோன் அவர்களை இஸ்ரவேல் புத்திரரின் காணிக்கையாகக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாய் நிறுத்தக்கடவன் (எண் 8:11).

7. லேவியர் தங்கள் கைகளைக் காளைகளுடைய தலையின்மேல் வைத்து, பின்பு பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு, கர்த்தருக்கு அவைகளில் ஒன்றைப் பாவநிவாரண பலியாகவும், மற்றொன்றைச் சர்வாங்க தகனபலியாகவும் செலுத்தவேண்டும் (எண் 8:12).

8. லேவியரை ஆரோனுக்கும் அவன் குமாரனுக்கும் முன்பாக நிறுத்தி, அவர்களைக் கர்த்தருக்கு அசைவாட்டப் படும் காணிக்கையாக்கவேண்டும் (எண் 8:13).

9. இப்படி நீ லேவியரை இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்தெடுக்கக்கடவாய்; லேவியர் என்னுடையவர்களாயிருப்பார்கள் (எண் 8:14).

லேவியருக்குரிய கட்டளை எண் 8:23-26

எண் 8:23. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 8:24. லேவியருக்குரிய கட்டளை என்னவென்றால்: இருபத்தைந்து வயதுமுதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள யாவரும் ஆசரிப்புக் கூடாரத்தின்பணிவிடையைச் செய்யும் சேனையிலே சேவிக்க வரவேண்டும்.

எண் 8:25. ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலைசெய்யாமல் திருப்பணி சேனையை விட்டு,

எண் 8:26. ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கிறதற்குத் தங்கள் சகோதரரோடேகூட ஊழியஞ் செய்வதேயன்றி, வேறொரு சேவகமும் செய்யவேண்டியதில்லை; இப்படி லேவியர் செய்யவேண்டிய வேலைகளைக்குறித்துத் திட்டம்பண்ணக்கடவாய் என்றார்.

லேவியர் எத்தனை வயதிலிருந்து எத்தனை வயது வரையிலும் ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடை செய்யவேண்டும் என்பதை கர்த்தர் நிர்ணயம் பண்ணுகிறார். இருபத்தைந்து வயதுமுதல் ஐம்பது வயது வரைக்குமுள்ள லேவியர் யாவரும் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்யும் சேனையிலே சேவிக்க வரவேண்டும். இதுவே லேவியருக்குரிய கட்டளை.

லேவியர்கள் தங்களுடைய வாலிப காலத்திலே ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளை செய்ய ஆரம்பிக்கிறார்கள். அவர்களுக்கு ஐம்பது வயதிற்குமேல் ஆகும்போது, ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையிலிருந்து ஓய்வு கொடுக்கப்படுகிறது. அவர்கள் வேலை செய்யாமல் திருப்பணி சேனையைவிட்டு விலகவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இராணுவத்தில் பணிபுரிகிற போர்ச்சேவகர்கள், தங்கள் சேனையைவிட்டு விலகி ஓய்வுபெறுவதுபோல, லேவியர்கள் தங்கள் திருப்பணியைவிட்டு விலகி ஓய்வுபெறுகிறார்கள்.

இராணுவத்தின் சேனையைப்போலவே, ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையும், ஒரு சேனையின் வேலையைப்போலவே இருக்கிறது.

ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலைசெய்யாமல் திருப்பணி சேனையை விட்டு, ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கிறதற்குத் தங்கள் சகோதரரோடேகூட ஊழியஞ்செய்வதேயன்றி, வேறொரு சேவகமும் செய்யவேண்டியதில்லை (எண் 8:25,26).

ஐம்பது வயதிற்கு மேற்பட்ட லேவியருக்கு மிகவும் எளிதான பணிவிடைகள் கொடுக்கப்படுகிறது. அவர்கள் பரிசுத்த வஸ்துக்களின் சுமைகளை சுமக்கவேண்டியதில்லை. வயது முதிர்ந்த லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காத்தாலே போதுமானது. அவர்கள் வேறொரு சேவகமும் செய்யவேண்டியதில்லை. அவர்கள் இதுவரையிலும் ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களையெல்லாம் சுமந்தவர்கள். இப்போதோ அவர்கள் பாரமான சுமைகளை சுமக்காமல் மிகவும் இலகுவான பணிவிடைகளைசெய்கிறார்கள்.

லேவியர் ஆசரிப்புக்கூடாரத்து பணிவிடைகளை செய்யவேண்டிய வயது விவரம் வருமாறு :

1. லேவியரில் இருபத்தைந்து வயதுமுதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள யாவரும் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்யும் சேனையிலே சேவிக்க வரவேண்டும்.

2. ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலைசெய்யாமல் திருப்பணி சேனையை விட்டு ஓய்வுபெறவேண்டும். (எண் 8:25)

3. ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கிறதற்குத் தங்கள் சகோதரரோடே கூட ஊழியஞ்செய்வதேயன்றி, வேறொரு சேவகமும் செய்யவேண்டியதில்லை. (எண் 8:26)

லேவியரில் 25 வயது முதல் 50 வயது வரையிலுமுள்ள அனைவரும் யுத்த வீரர்களைப்போல ஆசரிப்புக்கூடார பணிவிடைகளைச் செய்வதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். எல்லா லேவியரும் ஒரே நேரத்தில் ஆசரிப்புக் கூடாரத்து பணிவிடைகளைச் செய்ய முடியாது. ஆகையினால், அவர்களுக்கு நியமிக்கப்பட்ட பிரகாரம் நியமிக்கப்பட்ட காலங்களில் ஆசரிப்புக் கூடாரத்து பணிவிடைகளைச் செய்ய வேண்டும்.

எஜமான்கள் தங்களுக்கு கீழே வேலை செய்கிறவர்களுக்கு மிகவும் கடினமான வேலைகளை கொடுக்கக்கூடாது. அவர்களால் சுமக்க முடியாத பாரங்களை அவர்கள்மீது சுமத்தக்கூடாது. மூத்த ஊழியக்காரர்களும், தங்களுக்கு கீழே பணிபுரிகிற உதவி ஊழியர்களை மிகவும் கவனமாய் நடத்தவேண்டும். அவர்களால் எவ்வளவு ஊழியம் செய்ய முடியும் என்பதை நிதானித்து அறிந்து, அதற்கேற்ற பிரகாரம் அவர்களுக்கு ஊழியப்பொறுப்புக்களை கொடுக்கவேண்டும்.

வயது முதிர்ந்த லேவியரிடம் சரீர பெலம் குறைவாகயிருந்தாலும், அவர்களிடத்தில் ஆவிக்குரிய அனுபவம் அதிகமாயிருக்கும். முதியவர்களுக்கு எப்படிப்பட்ட பொறுப்புக்களை கொடுக்க வேண்டுமோ அப்படிப்பட்ட பொறுப்புக்களைக் கொடுத்து, அவர்களை ஆதரிக்கவேண்டும். அதே வேளையில் வாலிபர்களுக்கு எப்படிப்பட்ட பொறுப்புக்களை கொடுக்க வேண்டுமோ அப்படிப்பட்ட பொறுப்புக்களை கொடுத்து அவர்களை ஊழியத்தில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இப்படி லேவியர் செய்யவேண்டிய வேலைகளைக் குறித்துத் திட்டம்பண்ணக்கடவாய்" (எண் 8:26) என்று சொல்லுகிறார்.

9 அதிகாரம்

பஸ்காவை ஆசரிப்பது பற்றி கர்த்தர் இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்தில், குறித்த காலத்தில் பஸ்காவை ஆசரிக்கவேண்டும் (எண் 9:1-5).

இஸ்ரவேல் புத்திரரில் சிலர் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டபடியினால் பஸ்காவை ஆசரிக்க தகாதவர்களாயிருக்கிறார்கள். அவர்களும் கர்த்தருக்கு பஸ்காவை ஆசரிக்கவேண்டும். கர்த்தர் அவர்களுக்காக விசேஷித்த காலத்தை நியமனம்பண்ணுகிறார் (எண் 9:6-14).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போது, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான அக்கினிஸ்தம்பமும், மேகஸ்தம்பமும் அவர்களை வழிநடத்துகிறது (எண் 9:15-23).

பஸ்கா
எண் 9:1-14

எண் 9:1. அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி:

எண் 9:2. குறித்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்கக்கடவர்கள்.

எண் 9:3. இந்த மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான வேளையாகிய குறித்த காலத்தில் அதை ஆசரிக்கக்கடவீர்கள்; அதற்குரிய எல்லாக் கட்டளையின் படியேயும் முறைமைகளின்படியேயும் அதை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார்.

எண் 9:4. அப்படியே பஸ்காவை ஆசரிக்கும்படி மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிட்டான்.

எண் 9:5. அதினால் முதலாம் மாதம் பதினான்காம் தேதி அந்திநேரமான வேளையில், சீனாய் வனாந்தரத்தில் பஸ்காவை ஆசரித்தார்கள்; கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்.

எண் 9:6. அந்நாளில் சிலர் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டபடியினால் பஸ்காவை ஆசரிக்கத்தகாதவர்களாயிருந்தார்கள்; அவர்கள் அந்நாளிலே மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக வந்து:

எண் 9:7. நாங்கள் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள்; குறித்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரரோடேகூடக் கர்த்தருக்குக் காணிக்கையைச் செலுத்தாதபடிக்கு, நாங்கள் விலக்கப்பட்டிருக்கவேண்டியது என்ன என்றார்கள்.

எண் 9:8. மோசே அவர்களை நோக்கி: பொறுங்கள்; கர்த்தர் உங்களைக்குறித்துக் கட்டளையிடுவது என்ன என்று கேட்பேன் என்றான்.

எண் 9:9. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 9:10. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்களிலாகிலும் உங்கள் சந்ததியாரிலாகிலும் ஒருவன் பிரேதத்தினால் தீட்டுப்பட்டாலும், பிரயாணமாய்த் தூரம்போயிருந்தாலும், கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கவேண்டும்.

எண் 9:11. அவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான வேளையில் ஆசரித்து, அதைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசித்து,

எண் 9:12. விடியற்காலமட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும், அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும் அதை ஆசரிக்கக்கடவர்கள்.

எண் 9:13. ஒருவன் சுத்தமுள்ளவனுமாய்ப் பிரயாணம் போகாதவனுமாயிருந்தும், பஸ்காவைஆசரிக்காதேபோனால், அந்த ஆத்துமா குறித்த காலத்தில் கர்த்தரின் பலியைச் செலுத்தாதபடியினால் தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டுபோவான்; அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான்.

எண் 9:14. ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமானால், அவன் அதைப் பஸ்காவின் கட்டளைப்படியும் அதின் முறைமையின்படியும் ஆசரிக்கக்கடவன்; பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருக்க வேண்டும் என்று சொல் என்றார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு பன்னிரண்டு மாதங்களாயிற்று. இது அவர்களுக்கு, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் ஆகும். இந்த மாதம் பதினாலாம் தேதி இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தர் சீனாய் வனாந்தரத்தில் மோசேயை நோக்கி, "குறித்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்கக்கடவர்கள். இந்த மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான வேளையாகிய குறித்த காலத்தில் அதை ஆசரிக்கக்கடவீர்கள்; அதற்குரிய எல்லாக் கட்டளையின்படியேயும் முறைமைகளின்படியேயும் அதை ஆசரிக்கக்கடவீர்கள்" (எண் 9:1-3) என்று சொல்லுகிறார்.

முதலாம் மாதத்தில் எந்தத் தேதியில் கர்த்தர் மோசேயிடம் பேசினார் என்று கூறப்படவில்லை. இந்த மாதத்தின் முதலாம் நாளில் ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபனம் பண்ணப்பட்டது. பலிபீடம் பன்னிரண்டு நாட்களாகப் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. (எண் 7:1,11-84). இந்தக் காலத்தில் கர்த்தர் மோசேயோடு பேசியிருக்கலாம். இந்த மாதத்தின் பதினான்காம் தேதிக்கு முன்பாக கர்த்தர் மோசேயோடு பேசியிருக்க வேண்டும். ஏனெனில் அந்நாளில் பஸ்கா ஆட்டுக்குட்டிகள் அடிக்கப்படும். (யாத் 12:3-6). இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்டு ஒரு வருஷத்திற்குப் பின்பு கர்த்தர் மோசேயிடம் இந்த வார்த்தைகளைப் பேசுகிறார் (எண் 33:3).

இஸ்ரவேல் புத்திரர் இரண்டாம் வருஷம், இரண்டாம் மாதத்தின் ஆரம்பத்தில் எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள். அவர்கள் எண்ணப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு, அவர்கள் பஸ்காவை ஆசரிக்கவேண்டிய காலத்தை கர்த்தர் குறித்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த பஸ்கா மிகவும் விசேஷமானது. அவர்கள் இந்தப் பஸ்காவை ஆசரித்த பின்பு, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் வரையிலும், வேறு பஸ்கா எதையும் ஆசரிக்கவில்லை.

"இஸ்ரவேல் புத்திரர் கில்காலில் பாளயமிறங்கியிருந்து, மாதத்தின் பதினாலாம் தேதி அந்திநேரத்திலே எரிகோவின் சமனான வெளிகளிலே பஸ்காவை ஆசரித்தார்கள்" (யோசு 5:10).

சடங்காச்சாரமான பிரமாணங்களும், அது சம்பந்தமான நியமங்களும் நிலைத்திருக்காது. அவை சீக்கிரத்தில் ஒழிந்துபோகும். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பல வருஷங்களாக பஸ்காவை ஆசரியாமலிருந்தது சடங்காச்சார பிரமாணம் ஒழிந்துபோகும் என்பதற்கு அடையாளமாகும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் பஸ்காவுக்கு பதிலாக, கர்த்தருடைய பந்தி நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. கர்த்தர் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பஸ்கா பந்தியை ஆசரிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட காலத்தை நியமித்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தருடைய பந்தியை ஆசரிப்பதற்கு, எந்த ஒரு குறிப்பிட்ட காலத்தையும் நியமிக்கவில்லை.

புதிய ஏற்பாட்டுக்காலத்து சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் கர்த்தருடைய பந்தி நியமனம் செய்யப்பட்டது என்று உறுதியாக சொல்ல முடியாது. சபை ஸ்தாபிக்கப்பட்ட காலம் புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளுக்கு மிகுந்த உபத்திரவத்தின் காலமாகும். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் அனுபவித்த துன்பங்களையும் வேதனைகளையும்விட, புதிய ஏற்பாட்டுக்காலத்தில், சபையின் ஆரம்பகால விசுவாசிகள் மிகுந்த வேதனைகளை அனுபவித்தார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, அவர்கள் கர்த்தருடைய பந்தியை அடிக்கடி ஆசரித்திருக்கிறார்கள். வீடுகள்தோறும் அப்பம் பிட்டார்கள் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சம்பவத்தை மறந்துபோகமாட்டார்கள். அது எளிதில் மறக்கக்கூடிய அனுபவமுமல்ல. கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, சீனாய் வனாந்தரத்திற்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் வரையிலும் பல்வேறுவிதமான பாடுகளையும், வேதனைகளையும், ஆபத்துக்களையும் சந்தித்து வந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் இருந்தபோது கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய பிரமாணத்தை சொல்லியிருக்கிறார். அவர்களும் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து ஜீவிப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட காலத்தில் அவர்கள் பஸ்காவை ஆசரிக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் பஸ்காவை ஆசரிக்க வேண்டிய காலத்தையும் கர்த்தரே நியமனம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணிய காலத்தில், அவர்கள் பலமுறை பஸ்காவை ஆசரித்திருக்கவேண்டும். அதன் மூலமாக அவர்களுடைய பிள்ளைகளும் பஸ்காவின் அர்த்தத்தையும், தாற்பரியத்தையும் புரிந்துகொள்வார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால், தங்கள் பெற்றோரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார் என்பதை அந்தப் பிள்ளைகளும் அறிந்துகொள்வார்கள்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ இப்போது பஸ்காவை ஆசரித்த பின்பு, வனாந்தரத்திலே வேறு எந்த இடத்திலும், எந்த நாளிலும் பஸ்காவை ஆசரிக்கவில்லை. அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசித்த பின்பே மறுபடியும் பஸ்காவை ஆசரிக்கிறார்கள்.

பஸ்காவை ஆசரிக்கும் கட்டளையை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். அப்படியே பஸ்காவை ஆசரிக்கும்படி மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுகிறார் (எண் 9:4).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்குப் புதிய கட்டளைகளைக் கூறுகிறார். இரண்டாவது பஸ்கா சீனாய் வனாந்தரத்தில் நியமிக்கப்பட்ட வேளையில் ஆசரிக்கப்படுகிறது. (எண் 9:4-5). கானான் தேசத்திற்குள் வரும் வரையிலும் வேறு பஸ்கா ஆசரிக்கப்பட்டதாக வேதாகமத்தில் குறிப்பு எதுவுமில்லை. (யோசு 5:10-11).

கர்த்தர் மோசேயின் மூலமாக தங்களுக்கு கட்டளையிட்ட படியே பஸ்காவை ஆசரிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் முதலாம் மாதம் பதினான்காம் தேதி அந்திநேரமான வேளையில், சீனாய் வனாந்தரத்தில் பஸ்காவை ஆசரிக்கிறார்கள்; கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்கிறார்கள் (எண் 9:5).

எகிப்தில் பஸ்கா ஆசரித்ததற்கும், இங்கு பஸ்கா ஆசரிப்பதற்கும் சில வித்தியாசங்கள் உள்ளன. இஸ்ரவேல் புத்திரர் இப்பொழுது கூடாரங்களில் வாசம்பண்ணுகிறார்கள். ஆகையினால் இங்கு இரத்தத்தைத் தெளிப்பதற்கு நிலைக்கால்களோ, நிலைச்சட்டங்களோ இல்லை.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பஸ்காவை ஆசரிக்கிறார்கள். அவர்கள் வனாந்தரத்திலே இருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், வனாந்தரத்திலும் அவர்களை பாதுகாத்து பராமரிக்கிறார். கர்த்தர் சொன்ன கட்டளையின்படியும், முறைமையின்படியும் பஸ்காவை ஆசரிப்பதற்கு தேவையானவையெல்லாம், அவர்களுக்கு வனாந்தரத்தில் கிடைக்கிறது. இது கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பு ஆகும்.

பஸ்காவை ஆசரிக்கிறவர்கள், தீட்டுப்பட்டவர்களாயிருக்கக்கூடாது. அவர்கள் பரிசுத்தத்தோடு பஸ்காவை புசிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே பஸ்காவை புசிக்கவேண்டுமென்று கர்த்தருடைய பிரமாணம் சொல்லுகிறது. கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் அவர்கள் எல்லோரும் தங்களை கழுவி சுத்தம்பண்ணி, கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக கூடிவரவேண்டும். ஆனால் அந்நாளில் சிலர் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக வராமல் மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக வருகிறார்கள்.

அந்நாளில் சிலர் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டபடியினால் பஸ்காவை ஆசரிக்கத்தகாதவர்களாயிருக்கிறார்கள்; அவர்கள் அந்நாளிலே மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக வருகிறார்கள் (எண் 9:6).

இவர்கள் யாரென்று கூறப்படவில்லை. இவர்கள் மீசவேலும், எல்சாபானும் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். இவர்கள் இருவரும் நாதாபையும், அபியூவையும் அடக்கம் பண்ணியவர்கள். (லேவி 10:4). ஆனாலும் மனிதப் பிரேதம் என்று ஒருமையில் கூறப்பட்டிருக்கிறது. (எண் 9:6-7). இதனால் பஸ்கா ஆசரிப்பது பற்றி புதிய கட்டளைகள் கூறப்படுகின்றன (எண் 9:9-14).

மனிதபிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள் ஏழுநாட்களுக்கு தீட்டாயிருப்பார்கள். "செத்துப்போனவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான்" (எண் 19:11).

இஸ்ரவேல் புத்திரர் தீட்டாயிருக்கும் நாட்களில் பரிசுத்தமானதை புசிக்கக்கூடாது. "ஒருவன் தீட்டுள்ளவனாயிருக்கையில் கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்தைப் புசித்தால், அவன் தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்" (லேவி 7:20).

மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள் மற்ற இஸ்ரவேல் புத்திரரிலிருந்து விலகப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தீட்டாயிருக்கும் காலத்தில், இஸ்ரவேல் புத்திரரோடேகூட கர்த்தருக்கு காணிக்கையை செலுத்தக்கூடாது. அவர்கள் பஸ்காவை புசிக்கக்கூடாதபடிக்கும் விலக்கப்பட்டிக்கிறார்கள்.

பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்களோ, தாங்கள் விலக்கி வைக்கப்படாமல், மற்ற இஸ்ரவேல் புத்திரரோடுகூட கர்த்தருக்கு காணிக்கையை செலுத்தவேண்டும் என்றும், பஸ்காவை புசிக்கவேண்டும் என்றும் விரும்புகிறார்கள். இதுபற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் முன்பாக வருகிறார்கள்.

பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள், மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நாங்கள் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள்; குறித்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரரோடேகூடக் கர்த்தருக்குக் காணிக்கையைச் செலுத்தாதபடிக்கு, நாங்கள் விலக்கப்பட்டிருக்கவேண்டியது என்ன" (எண் 9:7) என்று கேட்கிறார்கள்.

மோசே அவர்களுடைய கேள்விக்கு தன்னுடைய சொந்த பதிலைச் சொல்லவில்லை. அவர் இதுபற்றி கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டும் என்று விரும்புகிறார். மோசே அவர்களை நோக்கி, "பொறுங்கள்; கர்த்தர் உங்களைக்குறித்துக் கட்டளையிடுவது என்ன என்று கேட்பேன்" (எண் 9:8) என்று சொல்லுகிறார்.

மோசேயின் மூலமாகத் தேவனிடத்திலிருந்து பதிலைப் பெறுவது மிகவும் எளிதான காரியமாக இருக்கிறது. (எண் 7:89).

கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன பஸ்காவின் பிரமாணத்திற்கு மோசே கர்த்தரிடத்தில் விளக்கம் கேட்க விரும்புகிறார். தீட்டுப்பட்டவர்கள் மனித பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்கள். இது அவர்களுடைய துணிகரமான பாவமல்ல.

இரண்டாம் வருஷம் முதலாம் மாதத்தில், பதினாலாம் தேதியிலே, இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிக்கவேண்டும் என்று கர்த்தர் ஒருவேளையை குறித்திருக்கிறார். ஆனால் பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்களோ, ஏழுநாட்களுக்கு தீட்டாயிருப்பார்கள். முதலாம் மாதம் பதினாலாம் தேதியில், தீட்டுப்பட்டவர்கள் சுத்திகரிக்கப்படவில்லையென்றால், அவர்களால் பஸ்காவை ஆசரிக்க முடியாது.

சடங்காச்சார பிரகாரமாக தீட்டுப்பட்டவர்களும் பஸ்காவை புசிக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் தீட்டோடே பஸ்காவை ஆசரிக்க முடியாது. ஆனாலும் அவர்கள் தீட்டுப்பட்ட காலம் முடிந்து, சுத்திகரிக்கப்பட்ட பின்பு, அவர்கள் பஸ்காவை ஆசரிக்கலாம்.

பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்களைப்போலவே, பிரயாணமாய்த் தூரம்போனவர்களாலும், குறித்த காலத்தில் பஸ்காவை ஆசரிக்க முடியாது. கர்த்தரோ அவர்களும் பஸ்காவை ஆசரிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்களிலாகிலும் உங்கள் சந்ததியாரிலாகிலும் ஒருவன் பிரேதத்தினால் தீட்டுப்பட்டாலும், பிரயாணமாய்த் தூரம்போயிருந்தாலும், கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கவேண்டும்" (எண் 9:9,10) என்று சொல்லுகிறார்.

பிரயாணம் பண்ணி, திரும்பி வந்தவன் பஸ்காவை ஆசரிக்க வேண்டும். பஸ்காவைத் தேசத்திற்கு வெளியே ஆசரிக்கக் கூடாது. பவுலும், மற்றவர்களும் பஸ்காவையும், மற்ற பண்டிகைகளையும் ஆசரிப்பதற்காக எருசலேமிற்கு வந்தார்கள். (அப் 2:1-14; அப் 20:16; 2கொரி 16:8). பலிசெலுத்துவதற்கு ஒரே ஒரு இடம் மட்டுமே நியமிக்கப்பட்டிருக்கிறது. (லேவி 17; உபா 12:3-26; உபா 14:23-25; உபா 16:2-16; உபா 18:6; உபா 26:2-9).

தீட்டுப்பட்டவர்களும், பிரயாணமாய்த் தூரம்போனவர்களும் இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் பதினாலாம் தேதியில் பஸ்காவை ஆசரிப்பதற்கு பதிலாக, அவர்கள் அதே வருஷம் இரண்டாம் மாதம், பதினாலாம் தேதியில் பஸ்காவை ஆசரிக்கலாம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான வேளையில் ஆசரிக்கவேண்டும் என்றும், அதைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசிக்கவேண்டும் (எண் 9:11) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பஸ்காவை ஆசரிக்கிறவர்கள் விடியற்காலமட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும், அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும் அதை ஆசரிக்க வேண்டும் (எண் 9:12) என்பது கர்த்தருடைய பிரமாணம்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே பஸ்காவை ஆசரிக்கவேண்டும். தீட்டானவர்கள், தங்களுடைய தீட்டுக்காலம் முடிந்து, சுத்திகரிப்பு செய்த பின்பு, அவர்களும் பஸ்காவை ஆசரிக்கவேண்டும். பிரயாணமாய்த் தூரம்போனவர்களும், தங்கள் பிரயாணக்காலம் முடிந்த பின்பு, கர்த்தர் நியமித்திருக்கிற நாளிலே பஸ்காவை ஆசரிக்கவேண்டும். பஸ்காவை ஆசரியாதவனுக்கு கர்த்தர் தண்டனை சொல்லுகிறார்.

ஒருவன் சுத்தமுள்ளவனுமாய்ப் பிரயாணம் போகாதவனுமாயிருந்தும், பஸ்காவைஆசரிக்காதேபோனால், அந்த ஆத்துமா குறித்த காலத்தில் கர்த்தரின் பலியைச் செலுத்தாதபடியினால் தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டுபோவான்; அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான் (எண் 9:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரில் சுதேசி பஸ்காவை ஆசரிப்பதுபோல, அவர்களிடத்திலே தங்கியிருக்கிற பரதேசியும் பஸ்காவை ஆசரிக்கவேண்டும். பஸ்காவை ஆசரிப்பதற்கு பரதேசிக்கு விசேஷித்த பிரமாணம் எதுவும் சொல்லப்படவில்லை. மற்ற இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை எப்படி ஆசரிக்கிறார்களோ, அப்படியே அவர்கள் மத்தியிலே தங்கியிருக்கிற பரதேசியும் பஸ்காவை ஆசரிக்கவேண்டும்.

ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமானால், அவன் அதைப் பஸ்காவின் கட்டளைப்படியும் அதின் முறைமையின்படியும் ஆசரிக்கக்கடவன்; பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருக்க வேண்டும் (எண் 9:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பஸ்காவைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்களிலாகிலும் உங்கள் சந்ததியாரிலாகிலும் ஒருவன் பிரேதத்தினால் தீட்டுப்பட்டாலும், பிரயாணமாய்த் தூரம்போயிருந்தாலும், கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டும்.
2. அவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான வேளையில் ஆசரிக்கவேண்டும் (எண் 9:11).
3. புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசிக்கவேண்டும்.
4. விடியற்காலமட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும், அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும் ஆசரிக்க வேண்டும் (எண் 9:12).
5. பஸ்காவினுடைய சகல முறைமைகளின் படியும் அதை ஆசரிக்கவேண்டும்.
6. ஒருவன் சுத்தமுள்ளவனுமாய்ப் பிரயாணம் போகாதவனுமாயிருந்தும், பஸ்காவை ஆசரிக்காதேபோனால் தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டுபோவான் (எண் 9:13).
7. ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க வேண்டுமானால், அவன் அதைப் பஸ்காவின் கட்டளைப்படியும் அதின் முறைமையின்படியும் ஆசரிக்கக்கடவன் (எண் 9:14).
8. பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருக்க வேண்டும்.

ஸ்தம்பங்கள்
எண் 9:15-23

எண் 9:15. வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட நாளிலே, மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று; சாயங்காலமானபோது, வாசஸ்தலத்தின் மேல் அக்கினிமயமான ஒரு தோற்றம் உண்டாயிற்று; அது விடியற்காலமட்டும் இருந்தது.

எண் 9:16. இப்படி நித்தமும் இருந்தது; பகலில் மேகமும், இரவில் அக்கினித்தோற்றமும் அதை மூடிக்கொண்டிருந்தது.

எண் 9:17. மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும்போது இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணுவார்கள்; மேகம் தங்குமிடத்தில் இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்குவார்கள்.

எண் 9:18. கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; மேகம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள்.

எண் 9:19. மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படாமல் கர்த்தரின் காவலைக் காத்துக்கொண்டிருப்பார்கள்.

எண் 9:20. மேகம் சிலநாள் மாத்திரம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்கியிருந்து, கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணப்படுவார்கள்.

எண் 9:21. மேகம் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் இருந்து, விடியற்காலத்தில் உயர எழும்பும்போது, உடனே பிரயாணப்படுவார்கள்; பகலிலாகிலும் இரவிலாகிலும் மேகம் எழும்பும்போது பிரயாணப்படுவார்கள்.

எண் 9:22. மேகமானது இரண்டுநாளாவது ஒரு மாதமாவது ஒரு வருஷமாவது வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணாமல் பாளயமிறங்கியிருப்பார்கள்; அது உயர எழும்பும்போதோ பிரயாணப்படுவார்கள்.

எண் 9:23. கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணம்பண்ணுவார்கள்; கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிடுகிறபடியே கர்த்தருடைய காவலைக் காத்துக்கொள்வார்கள்.

இந்த வசனப்பகுதியில் மேகஸ்தம்பத்தைப்பற்றியும், அக்கினி ஸ்தம்பத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இது இயற்கையான மேகமோ அல்லது இயற்கையான அக்கினியோ அல்ல. இது தெய்வீக மேகமும், தெய்வீக அக்கினியும் ஆகும். இவை கர்த்தருடைய தெய்வீக பிரசன்னத்திற்கு அடையாளம்.

தேவனுடைய தெய்வீக பிரசன்னம் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கிறது என்பதற்கு மேகஸ்தம்பமும் அக்கினி ஸ்தம்பமும் பிரத்தியட்சமான அடையாளமாயிருக்கிறது.

வாசஸ்தலம் ஸ்தாபனம் செய்யப்பட்ட நாளிலே, மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடுகிறது. அந்த மேகம் ஒரு ஸ்தம்பம்போல, இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திற்கு மேலாக தொங்கிக்கொண்டிருக்கிறது. மேகம் சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடியிருக்கிறது. தம்முடைய பிரசன்னம், தம்முடைய ஜனங்கள் மத்தியிலே இருப்பதை, கர்த்தர் மேகஸ்தம்பத்தின் மூலமாக உறுதிபண்ணுகிறார்.

கர்த்தருடைய பிரமாணங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய ஒவ்வொரு பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணத்தின் மூலமாக தம்மை வெளிப்படுத்துகிறார்.

பகலிலே மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று; சாயங்காலமானபோது, வாசஸ்தலத்தின் மேல் அக்கினிமயமான ஒரு தோற்றம் உண்டாயிற்று; அது விடியற்காலமட்டும் இருக்கிறது. இப்படி நித்தமும் இருக்கிறது; பகலில் மேகமும், இரவில் அக்கினித்தோற்றமும் அதை மூடிக்கொண்டிருக்கிறது (எண் 9:15,16).

"வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட நாளிலே" என்பது முதலாம் மாதம் முதல் நாளிலே, எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு பதினொன்றரை மாதங்களுக்குப் பின்பு என்பதைக்குறிக்கும் (எண் 33:3; யாத் 40:2).

தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகம் யாத்திராகமம் புஸ்தகத்தில் முதலாவது தோன்றிற்று (யாத் 13:21-22; யாத் 14:19-24). அந்த மேகம் எகிப்திலிருந்து சீனாய் வரையிலும் அவர்களைப் பின்தொடர்கிறது. (யாத் 16:10; யாத் 19:9,16; யாத் 24:15-18; யாத் 34:5; யாத் 40:34-38; லேவி 16:2,13) இப்போது மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடி, தங்கியிருக்கிறது.

நமக்கு முன்பாக நாம் எப்போதும் கர்த்தரை நிறுத்தவேண்டும். கர்த்தருடைய வார்த்தையும், அவருடைய கட்டளைகளும் நமக்கு முன்பாக எப்போதும் நிறுத்தப்பட்டிருக்கவேண்டும். இரவு வேளையிலும், பகல் வேளையிலும் கர்த்தர் நமக்கு அருகாமையிலிருக்கிறார் என்பதை நாம் காணவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, பகல் வேளையிலே மேகஸ்தம்பமும், இரவு வேளையிலே அக்கினி ஸ்தம்பமும் இருந்தது. இவை தேவனுடைய பரிசுத்தமான பிரசன்னத்திற்கு அடையாளம். கர்த்தர் தமது கிருபையினால், பழைய ஏற்பாட்டுக்காலத்திலே, இப்படிப்பட்ட தெய்வீக வெளிப்பாட்டை இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்திருக்கிறார்.

மேகஸ்தம்பமும் அக்கினிஸ்தம்பமும் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு பிரத்தியட்சமான அடையாளங்களாயிருக்கிறது. மேகம் இருளைக் குறிக்கிறது. அக்கினியோ பயங்கரத்தைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலம் இருளும், பயங்கரமும் நிரம்பிய காலம். புதிய ஏற்பாட்டுக்காலத்தோடு ஒப்பிடும்போது, பழைய ஏற்பாட்டுக்காலத்திலே, கர்த்தரைப்பற்றிய சத்தியம் வெளிச்சமாயில்லாமல் இருளாயிருந்தது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கிருபாசனத்தண்டையில் தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியை பார்க்கிறவர்களும், தொட்டவர்களும் செத்துப்போனார்கள். அவர்கள் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வருவதற்கே பயப்பட்டார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தருடைய பிரசன்னம், மேகஸ்தம்பமாகவும், அக்கினி ஸ்தம்பமாகவும், இஸ்ரவேல் புத்திரருக்கு பிரத்தியட்சமாக வெளிப்பட்டது. அவர்கள் இருளிலும் பயங்கரத்திலும் இருந்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒளியாகயிருக்கிறார். அவர் மூலமாக நாம் இருளிலே நடவாமல், வெளிச்சத்திலே நடக்கிறோம்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தருடைய மகிமை இயேசுகிறிஸ்துவின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நமக்கு தேவனைப்பற்றிய தெளிவான சத்தியமும், ஆறுதலான வார்த்தைகளும் சொல்லப்பட்டிருக்கிறது. விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தர்மீது பயபக்தியிருக்கிறது. ஆனாலும், கர்த்தருடைய சமுகத்திலே, இயேசுகிறிஸ்துவின் மூலமாக, பயமில்லாமல், தைரியமாய்க் கிட்டிச்சேருகிற சிலாக்கியமும் நமக்கு கிடைத்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே எப்போது பாளயமிறங்கவேண்டும், அவர்கள் எப்போது பிரயாணப்படவேண்டும் என்பதை அக்கினி ஸ்தம்பமும் மேகஸ்தம்பமும் அவர்களுக்கு வழிநடத்திற்று.

மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும்போது இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணுவார்கள்; மேகம் தங்குமிடத்தில் இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்குவார்கள். கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; மேகம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள் (எண் 9:17,18).

இஸ்ரவேல் புத்திரர் எப்போதும் கூடாரத்திற்குள் இருக்கவில்லை. அவர்கள் பாளயமிறங்கியிருந்த பகுதியில் இருந்தார்கள் (எண் 9:20,22).

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மை வழிநடத்துவதற்கு, பிரத்தியட்சமான மேகஸ்தம்பமோ அல்லது அக்கினி ஸ்தம்பமோ கொடுக்கப்படவில்லை. நாம் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுகிறோம். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்மை வழிநடத்துவதற்கு, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான அக்கினி ஸ்தம்பமும் மேகஸ்தம்பமும், நமக்கு முன்பாக பிரத்தியட்சமாய் வரவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. நம்மை வழிநடத்துவதற்கு கர்த்தருடைய வார்த்தைகளும், அவருடைய நிச்சயமான வாக்குத்தத்தங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறோம். இக்காலத்தில் கர்த்தர் நம்மை மேகஸ்தம்பத்தினாலும் அக்கினி ஸ்தம்பத்தினாலும் வழிநடத்தாமல், தம்முடைய தெய்வீக ஆலோசனையினால் வழிநடத்துகிறார்.

"உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" (சங் 73:24). கர்த்தர் நம்மை மரணபரியந்தம் நடத்துவதற்கு போதுமானவராயிருக்கிறார். "இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்" (சங் 48:14).

தேவனுடைய பிள்ளைகள் எல்லோருமே தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படவேண்டும். "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோம 8:14).

நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும், நம்முடைய வார்த்தையிலும் கிரியையிலும், நாம் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலை பின்பற்றவேண்டும். சத்திய வசனம் நம்மை வழிநடத்தவேண்டும். தேவனுடைய தெய்வீக சித்தத்திற்கு நம்முடைய ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் கீழ்ப்படியவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே வனாந்தரத்தில் தங்கியிருந்த இஸ்ரவேல் புத்திரர், கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகஸ்தம்பத்தையும் அக்கினி ஸ்தம்பத்தையும் பின்பற்றினார்கள்.

மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படாமல் கர்த்தரின் காவலைக் காத்துக்கொண்டிருப்பார்கள் (எண் 9:19).

மேகம் சிலநாள் மாத்திரம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்கியிருந்து, கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணப்படுவார்கள் (எண் 9:20).

மேகம் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் இருந்து, விடியற்காலத்தில் உயர எழும்பும்போது, உடனே பிரயாணப்படுவார்கள்; பகலிலாகிலும் இரவிலாகிலும் மேகம் எழும்பும்போது பிரயாணப்படுவார்கள் (எண் 9:21).

சில சமயங்களில் இஸ்ரவேல் புத்திரர்கள் இரவில் பிரயாணம் பண்ணுகிறார்கள். அக்கினிஸ்தம்பம் அவர்களுடைய பிரயாணத்திற்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது. அந்த வெளிச்சத்தில் நல்ல ஸ்தலமாகப் பார்த்து அவர்கள் பாளயமிறங்குகிறார்கள்.

மேகமானது இரண்டுநாளவது ஒரு மாதமாவது ஒரு வருஷமாவது வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணாமல் பாளயமிறங்கியிருப்பார்கள்; அது உயர எழும்பும்போதோ பிரயாணப்படுவார்கள் (எண் 9:22).

பாளயமிறங்கியிருக்கும் இடங்களில் அவர்கள் ஒரே சீரான காலளவில் எங்கும் தங்கியிருக்க வில்லை. பகலில் மட்டும் பிரயாணம் செய்து விட்டு, இரவில் தங்கிக்கொள்ளலாம் என்னும் நிச்சயமும் இல்லை. கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களுடைய பிரயாணத்தை அமைத்துக் கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பிரயாணம்பண்ணுவார்கள்; கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிடுகிறபடியே கர்த்தருடைய காவலைக் காத்துக்கொள்வார்கள் (எண் 9:23).

இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்கு எதிராகப் பல முறை கலகம் பண்ணியவர்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவதும், கர்த்தருடைய கட்டளையின் படியே பிரயாணம்பண்ணுவதும், ஒரு மிகப்பெரிய அற்புதமாகும். பகலில் மேகஸ்தம்பமும், இரவில் அக்கினி ஸ்தம்பமும் அவர்களோடு எப்போதும் கூட இருக்கிறது. அதைக் கண்டு அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறார்கள். கர்த்தரையே சார்ந்திருக்கிறார்கள். கர்த்தருடைய சித்தத்திற்குத் தங்களை உட்படுத்திக் கொண்டு, கர்த்தருக்குக் கீழ்ப்படிவதை இஸ்ரவேல் புத்திரர்கள் வனாந்தரத்தில் கற்றுக்கொள்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மை அக்கினி ஸ்தம்பமும், மேகஸ்தம்பமும் வழிநடத்தவில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய இருதயங்களை ஆளுகை செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மை வழிநடத்துகிறார். நாம் தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும்போது, ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்.

10 அதிகாரம்

இரண்டு வெள்ளிப்பூரிகைகள் செய்வது சம்பந்தமான பிரமாணம் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிறது. கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு பல பிரமாணங்களை சொல்லியிருக்கிறார். அந்தப் பிரமாணங்களில், இரண்டு வெள்ளிப்பூரிகைகளை செய்வது சம்பந்தமான பிரமாணமே கடைசிப்பிரமாணமாகும். இந்தப் பிரமாணம் கடைசியில் சொல்லப்பட்டாலும், இதுவும் முக்கியத்துவம் மிகுந்த பிரமாணமாயிருக்கிறது (எண் 10:1-10).

இஸ்ரவேல் புத்திரரின் பாளயம் சீனாய் மலையிலிருந்து அணியணியாகப் புறப்பட்டுப்போகிறது. கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கிற வரிசையின் பிரகாரம் அவர்கள் பாரான் வனாந்தரத்திற்கு பிரயாணமாய்ப் போகிறார்கள் (எண் 10:11-28).

மோசே ரெகுவேலின் குமாரனாகிய ஒபாவோடு உடன்படிக்கை செய்துகொள்கிறார். ரெகுவேல் மோசேயின் மாமனார். ஒபா மோசேயின் மைத்துனன் (எண் 10:29-32).

இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணும்போதும் தங்கும் போதும் மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் (எண் 10:33-36).

வெள்ளிப் பூரிகைகள்
எண் 10:1-10

எண் 10:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 10:2. சபையைக் கூடிவரவழைப்பதற்கும் பாளயங்களைப் பிரயாணப்படுத்துவதற்கும் உபயோகமாக இரண்டு வெள்ளிப் பூரிகைகளைச் செய்துகொள்வாயாக; அவைகள் ஒரே வெள்ளித் தகட்டால் செய்யப்படவேண்டும்.

எண் 10:3. அவைகளை ஊதும்போது, சபையார் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரவாசலில் உன்னிடத்தில் கூடிவர வேண்டும்.

எண் 10:4. ஒன்றை மாத்திரம் ஊதினால் இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவராகிய பிரபுக்கள் உன்னிடத்தில் கூடிவரக் கடவர்கள்.

எண் 10:5. நீங்கள் அவைகளைப் பெருந்தொனியாய் முழக்கும்போது, கிழக்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படக் கடவது.

எண் 10:6. அவைகளை நீங்கள் இரண்டாந்தரம் பெருந்தொனியாய் முழக்கும்போது, தெற்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படக்கடவது; அவர்களைப் பிரயாணப்படுத்துவதற்குப் பெருந்தொனியாய் முழக்க வேண்டும்.

எண் 10:7. சபையைக் கூட்டுகிறதற்கு நீங்கள் ஊதவேண்டியதேயன்றி பெருந்தொனியாய் முழக்க வேண்டாம்.

எண் 10:8. ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக் கடவர்கள்; உங்கள் தலைமுறைதோறும் இது உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக் கடவது.

எண் 10:9. உங்கள் தேசத்தில் உங்களைத் துன்பப்படுத்துகிற சத்துருவுக்கு விரோதமாக யுத்தத்துக்குப் போகும்போது, பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கக்கடவீர்கள்; அப்பொழுது உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நீங்கள் நினைவுகூரப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவீர்கள்.

எண் 10:10. உங்கள் மகிழ்ச்சியின் நாளிலும், உங்கள் பண்டிகைகளிலும், மாதப்பிறப்புகளிலும், உங்கள் சர்வாங்க தகனபலிகளும் சமாதானபலிகளும் செலுத்தப்படும் போது பூரிகைகளை ஊதவேண்டும்; அப்பொழுது அவைகள் உங்கள் தேவனுடைய சமுகத்தில் உங்களுக்கு ஞாபகக் குறியாயிருக்கும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றார்.

இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் பொதுவான செய்தியை சொல்லும்போது, வெள்ளிப்பூரிகைகள் ஊதப்படவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "சபையைக் கூடிவரவழைப்பதற்கும் பாளயங்களைப் பிரயாணப்படுத்துவதற்கும் உபயோகமாக இரண்டுவெள்ளிப் பூரிகைகளைச் செய்துகொள்வாயாக; அவைகள் ஒரே வெள்ளித் தகட்டால் செய்யப்படவேண்டும்" (எண் 10:1,2) என்று சொல்லுகிறார்.

ஆரோனின் இரண்டு குமாரர்கள் மட்டுமே ஆசாரிய ஊழியம் செய்கிறார்கள். ஆகையினால் இரண்டு பூரிகைகள் மட்டுமே செய்யப்படுகிறது. (எண் 10:2; எண் 3:1-4). யோசுவாவின் நாட்களில் ஆட்டுக்கடாவின் கொம்புகளிலிருந்து ஏழு பூரிகைகளைச் செய்து, அவற்றை விசேஷித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தினார்கள். (யோசு 6:4). சாலொமோனின் காலத்தில் 120 ஆசாரியர்கள் பூரிகைகளோடு ஊழியம் செய்தார்கள் (2நாளா 5:12).

இஸ்ரவேல் சபையாரை கூடிவரச்செய்வதற்காக அவர்கள் சீயோனிலே எக்காளம் ஊதவேண்டும். பரிசுத்தமான உபவாச நாளை நியமிப்பதற்கும் எக்காளம் ஊதப்படவேண்டும்.

"சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்" (யோவே 2:15).

இந்த எக்காளம் இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திலே ஊதப்படுகிறது. அவைகளை ஊதும்போது, சபையார் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரவாசலில் கூடிவரவேண்டும் (எண் 10:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வெள்ளிப்பூரிகைகளை ஒரே தொனியாய் ஊதாமல், வெவ்வேறு தொனியாக ஊதவேண்டும். ஒவ்வொரு தொனிக்கும் ஒரு அர்த்தம் உண்டு.

இரண்டு வெள்ளிப்பூரிகைகளில் ஒன்றை மாத்திரம் ஊதினால் இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவராகிய பிரபுக்கள் மோசேயினிடத்தில் கூடிவருவார்கள் (எண் 10:4).

இரண்டு வெள்ளிப்பூரிகைகளையும் பெருந்தொனியாய் முழக்கும்போது, கிழக்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படவேண்டும் (எண் 10:5).

இஸ்ரவேல் புத்திரரின் எல்லா பாளயங்களும் பிரயாணப்பட வேண்டும். (எண் 10:3). ஒன்றை மாத்திரம் ஊதினால் இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவராகிய பிரபுக்கள் கூடிவரவேண்டும். (எண் 10:4). அவைகளை இரண்டாந்தரம் பெருந்தொனியாய் முழக்கும்போது, தெற்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படவேண்டும்; அவர்களைப் பிரயாணப்படுத்துவதற்குப் பெருந்தொனியாய் முழக்க வேண்டும். (1கொரி 14:8, எண் 10:6);

மூன்றாந்தரம், நான்காந்தரம் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கும்போது வடக்கிலும், மேற்கிலும் இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்பட வேண்டும். மற்ற இரண்டு பாளயங்களைப் பற்றி இங்கு கூறப்படவில்லை. செப்துவஜிந்த் பதிப்பில் அவற்றைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலரின் பாளயத்திலும், அவர்களுடைய பிரயாணத்திலும் ஒரு ஒழுங்குமுறை கடைபிடிக்கப்படுகிறது.

மோசே எகிப்து தேசத்தில் இராணுவத்தின் தலைவனாக இருந்தபடியினால், அவர் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு நல்ல பயிற்சியைக் கொடுத்திருக்கிறார் (யாத் 2:10).

இரண்டு வெள்ளிப்பூரிகைகளையும் இரண்டாந்தரம் பெருந்தொனியாய் முழக்கும்போது, தெற்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படவேண்டும்; அவர்களைப் பிரயாணப்படுத்துவதற்குப் பெருந்தொனியாய் முழக்க வேண்டும் (எண் 10:6).

வெள்ளிப்பூரிகைகளை சபையைக் கூட்டுகிறதற்கு ஊதவேண்டியதேயன்றி, வேறு எதற்கும் பெருந்தொனியாய் முழக்கக்கூடாது (எண் 10:7).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணும்போது, ஆசரிப்புக்கூடாரத்தின் ஒவ்வொரு திசையிலும் பாளயமிறங்கியிருக்கிறவர்கள், தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற வரிசையின் பிரகாரம், அணியணியாக பிரயாணப்படவேண்டும். ஒவ்வொரு திசையிலும் பாளயமிறங்கியிருக்கிறவர்களை, பிரயாணப்படப்பண்ணுவதற்கு, பூரிகைகள் அதற்கேற்ற தொனியின் பிரகாரம் ஊதப்படுகிறது.

பூரிகைகள் இடைவெளி இல்லாமல் பெருந்தொனியாய் ஊதப்படும்போது, அதைக் கேட்கிறவர்களின் மனதிலே உற்சாகம் பிறக்கும். அவர்கள் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வீரத்தோடும் நம்பிக்கையோடும் அணிவகுத்து செல்வார்கள். இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரைக் கூட்டுகிறவழ்ற்கு பூரிகையானது ஒரு தொனியிலும், அவர்கள் பிரயாணப்பட்டுப்போவதற்கு, பூரிகையானது வேறொரு தொனியிலும், அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண போகும்போது, பூரிகையானது வேறொரு தொனியிலும் ஊதப்படுகிறது. கர்த்தரே இந்தத் தொனிகளை நியமனம் செய்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே எக்காளம் ஊதுவது, அவர்களுக்கு எச்சரிப்பின் சத்தமாகவும் இருக்கிறது. "சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்; தேசத்தின் குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது" (யோவே 2:1).

பூரிகைகளை முதலாவதாக ஊதும்போது யூதாகோத்திரத்தார் பிரயாணப்படவேண்டும். அதை இரண்டாம்தரம் ஊதும்போதும், ரூபன் கோத்திரத்தாரும், மூன்றாம் தரம் ஊதும்போது எப்பிராயீம் கோத்திரத்தாரும், அதை நான்காம் தரம் ஊதும்போது தாண் கோத்திரத்தாரும் பிரயாணப்படவேண்டும்.

ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக்கடவர்கள்; உங்கள் தலைமுறைதோறும் இது உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது (எண் 10:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, அவர்கள் இரண்டு பூரிகைகளையும் பெருந்தொனியாய் முழக்கவேண்டும்.

"உங்கள் தேசத்தில் உங்களைத் துன்பப்படுத்துகிற சத்துருவுக்கு விரோதமாக யுத்தத்துக்குப் போகும்போது, பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கக் கடவீர்கள்; அப்பொழுது உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமுகத்திலே நீங்கள் நினைவுகூரப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவீர்கள்" (எண் 10:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பண்டிகைகளை ஆசரிக்கும்போதும், அவர்கள் பலிகளை செலுத்தும்போதும் பூரிகைகளை ஊதவேண்டும். "உங்கள் மகிழ்ச்சியின் நாளிலும், உங்கள் பண்டிகைகளிலும், மாதப்பிறப்புகளிலும், உங்கள் சர்வாங்க தகனபலிகளும் சமாதானபலிகளும் செலுத்தப்படும் போது பூரிகைகளை ஊதவேண்டும்; அப்பொழுது அவைகள் உங்கள் தேவனுடைய சமுகத்தில் உங்களுக்கு ஞாபகக் குறியாயிருக்கும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (எண் 10:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் பண்டிகைகளில் ஒன்று எக்காள சத்தத்தால் ஞாபககுறியாக கொண்டாடுகிற பண்டிகை என்று அழைக்கப்படுகிறது.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: உங்களுக்கு ஏழாம் மாதம் முதலாந்தேதி எக்காளச் சத்தத்தால் ஞாபகக்குறியாகக் கொண்டாடுகிற பண்டிகை என்கிற சபை கூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக. அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யாமல், கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும் என்று சொல்" (லேவி 23:23-25) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தமான காரியங்களை பரிசுத்தமான சந்தோஷத்தோடு செய்யவேண்டும். பூரிகைகளின் சத்தம் இஸ்ரவேல் புத்திரரின் சந்தோஷத்திற்கு அடையாளம். சில சமயங்களில் அந்த சத்தம் அவர்களுக்கு எச்சரிப்பின் அடையாளமாகவும் இருக்கிறது.

பூரிகைகளை ஊதுவது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இரண்டுவெள்ளிப் பூரிகைகளைச் செய்து கொள்வாயாக; அவைகள் ஒரே வெள்ளித் தகட்டால் செய்யப்படவேண்டும்.

2. சபையைக் கூடிவரவழைப்பதற்கும் பாளயங்களைப் பிரயாணப்படுத்துவதற்கும் பூரிகைகளை உபயோகப்படுத்த வேண்டும் (எண் 10:2-10).

3. பூரிகைகளை ஊதும்போது, சபையார் எல்லாரும் ஆசரிப்புக் கூடாரவாசலில் மோசேயினிடத்தில் கூடிவர வேண்டும் (எண் 10:3).

4. ஒன்றை மாத்திரம் ஊதினால் இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவராகிய பிரபுக்கள் மோசேயினிடத்தில் கூடிவரக்கடவர்கள் (எண் 10:4).

5. பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கும்போது, கிழக்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படக்கடவது (எண் 10:5; எண் 2:3-9).

6. பூரிகைகளை இரண்டாந்தரம் பெருந்தொனியாய் முழக்கும்போது, தெற்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படக்கடவது (எண் 10:6; எண் 2:10-16).

7. சபையைக் கூட்டுகிறதற்கு நீங்கள் ஊத வேண்டியதேயன்றி பெருந்தொனியாய் முழக்க வேண்டாம் (எண் 10:7).

8. ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக்கடவர்கள் (எண் 10:8).

9. உங்கள் தலைமுறைதோறும் இது உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக் கடவது.

10. யுத்தத்துக்குப் போகும்போது, பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்கக் கடவீர்கள் (எண் 10:9).

11. உங்கள் மகிழ்ச்சியின் நாளிலும், உங்கள் பண்டிகைகளிலும், மாதப்பிறப்புகளிலும், உங்கள் சர்வாங்க தகனபலிகளும் சமாதானபலிகளும் செலுத்தப்படும் போது பூரிகைகளை ஊதவேண்டும்; அப்பொழுது அவைகள் உங்கள் தேவனுடைய சமுகத்தில் உங்களுக்கு ஞாபகக் குறியாயிருக்கும் (எண் 10:10).

பிரயாணம்
எண் 10:11-28

எண் 10:11. இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதியில் மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதிலிருந்து உயர எழும்பிற்று.

எண் 10:12. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய்ப் புறப்பட்டார்கள்; மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று.

எண் 10:13. இப்படியே கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளையிட்டபடி முதல் பிரயாணம் பண்ணினார்கள்.

எண் 10:14. யூதா சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே முதல் புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மினதாபின் குமாரன் நகசோன் தலைவனாயிருந்தான்.

எண் 10:15. இசக்கார் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குச் சூவாரின் குமாரன் நெதனெயேல் தலைவனாயிருந்தான்.

எண் 10:16. செபுலோன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏலோனின் குமாரன் எலியாப் தலைவனாயிருந்தான்.

எண் 10:17. அப்பொழுது வாசஸ்தலம் இறக்கி வைக்கப்பட்டது; அதைக் கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் சுமந்து கொண்டு புறப்பட்டார்கள்.

எண் 10:18. அதற்குப் பின்பு ரூபன் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது; அவனுடைய சேனைக்குச் சேதேயூரின் குமாரன் எலிசூர் தலைவனாயிருந்தான்.

எண் 10:19. சிமியோன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குச் சூரிஷதாயின் குமாரன் செலூமியேல் தலைவனாயிருந்தான்.

எண் 10:20. காத் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குத் தேகுவேலின் குமாரன் எலியாசாப் தலைவனாயிருந்தான்.

எண் 10:21. கோகாத்தியர் பரிசுத்தமானவைகளைச் சுமந்துகொண்டு புறப்பட்டார்கள்; இவர்கள் வந்து சேருமுன் மற்றவர்கள் வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணுவார்கள்.

எண் 10:22. அதற்குப்பின்பு, எப்பிராயீம் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மியூதின் குமாரன் எலிஷாமா தலைவனாயிருந்தான்.

எண் 10:23. மனாசே சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குப் பெதாசூரின் குமாரன் கமாலியேல் தலைவனாயிருந்தான்.

எண் 10:24. பென்யமீன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குக் கீதெயோனின் குமாரன் அபீதான் தலைவனாயிருந்தான்.

எண் 10:25. அதற்குப்பின்பு, தாண் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி சகல பாளயங்களுக்கும் பின்னாக அவர்கள் சேனைகளோடே புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர் தலைவனாயிருந்தான்.

எண் 10:26. ஆசேர் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஓகிரானின் குமாரன் பாகியேல் தலைவனாயிருந்தான்.

எண் 10:27. நப்தலி சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏனானின் குமாரன் அகீரா தலைவனாயிருந்தான்.

எண் 10:28. இஸ்ரவேல் புத்திரர் புறப்பட்டபோது, இவ்விதமாய்த் தங்கள் தங்கள் சேனைகளின்படியே பிரயாணம்பண்ணினார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய் புறப்பட்டுப்போகிற சம்பவம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த வனாந்தர பகுதியில் சுமார் ஒரு வருஷகாலமாக பாளயமிறங்கியிருக்கிறார்கள். கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களை சொல்லியிருக்கிறார்.

இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதியில் மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதிலிருந்து உயர எழும்பிற்று (எண் 10:11).

எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்டு, பதினான்கு மாதங்களும், ஐந்து நாட்களும் ஆயிற்று. (எண் 33:3). யாத் 18 ஆவது அதிகாரத்தில் எத்திரோவைப் பற்றி கூறப்பட்டிருக்கும் செய்திகள் எண் 10:10, எண் 10:11 ஆகிய வசனங்களுக்கு இடையில் வரவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்பட்ட பின்பே, வழக்குகளை விசாரிப்பதற்கு மூப்பர்கள் நியமிக்கப்படுகிறார்கள். (உபா 1:7-14) ஆனால் இந்த நிகழ்ச்சி அவர்கள் சீனாய் வனாந்தரத்தை விட்டுப் பிரயாணப்படுவதற்கு முன்பாக யாத் 18 ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம்பண்ணுவார்கள். மேகம் தங்குமிடத்தில் இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்குவார்கள் (எண் 9:17). மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதிலிருந்து உயர எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய்ப் புறப்படுகிறார்கள் (எண் 10:12).

பாரான் வனாந்தரம் மிகப்பெரிய வனாந்தரமாகும். வடக்கில் பாலஸ்தீன தேசமும், கிழக்கில் அரபா பள்ளத்தாக்கும், தெற்கில் சீனாய் மலைகளும், மேற்கில் மத்தியதரைக் கடலும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. இந்த வசனத்தைப் பார்க்கும் போது, பாரான் வனாந்தரம் சீனாய்க்கு அருகில் உள்ளது போன்று தோன்றுகிறது. ஆனால் எண் 10:33; எண் 11:3,34-35 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் புத்திரர் நான்கு நாள் பிரயாணம் செய்து, ஆசரோத்திற்குச் சென்று அதன்பின்பு, பாரான் வனாந்தரத்திற்குச் சென்றார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. (எண் 12:16).

கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிட்டபடி இஸ்ரவேல் புத்திரர் முதல் பிரயாணம்பண்ணுகிறார்கள். "கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படுவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள்; மேகம் வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருக்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள். மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படாமல் கர்த்தரின் காவலைக் காத்துக்கொண்டிருப்பார்கள்" (எண் 9:18,19).

இந்த அதிகாரத்திலும், இதற்கு முந்திய அதிகாரங்களிலும் கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையிட்ட சம்பவங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாணங்களில் கர்த்தரே அவர்களை வழிநடத்துகிறார். கர்த்தருடைய கட்டளை அவர்களை ஆளுகை செய்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலே ஒரு வருஷகாலமாக பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு வனாந்தரத்தில் பாதை தெரியவில்லை. தங்கள் சொந்த முயற்சியினால் பிரயாணம்பண்ணவேண்டுமென்று அவர்கள் நினைத்தாலும், அவர்களால் எங்கும் போகமுடியவில்லை. அவர்கள் முயற்சி செய்தும், ஒன்றும் அநுகூலமாக நடைபெறாததினால், கர்த்தருடைய கட்டளைக்காக காத்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்.

சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதிலிருந்து உயர எழும்பின மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று. அவர்கள் மூன்று நாட்களாக பிரயாணம்பண்ணுகிறார்கள். மூன்று நாள் பிரயாணத்திற்கு பின்பு அவர்கள் பாரான் வனாந்தரத்திலே தங்குகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய் புறப்படுகிறார்கள். அவர்களுடைய பிரயாண வரிசைகளைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

யூதா சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே முதல் புறப்படுகிறது; அவனுடைய சேனைக்கு அம்மினதாபின் குமாரன் நகசோன் தலைவனாயிருக்கிறான் (எண் 10:14).

இசக்கார் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குச் சூவாரின் குமாரன் நெதனெயேல் தலைவனாயிருக்கிறான் (எண் 9:15). செபுலோன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏலோனின் குமாரன் எலியாப் தலைவனாயிருக்கிறான் (எண் 10:16).

யூதாகோத்திரத்தாருக்கு பின்பு, லேவிகோத்திரத்தாரின் இரண்டு வம்சத்தார், ஆசரிப்புக்கூடாரத்தை சுமந்து கொண்டு வருகிறார்கள். அதைக் கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் சுமந்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் பாரான் வனாந்தரத்திற்கு வந்தபோது வாசஸ்தலம் இறக்கி வைக்கப்படுகிறது (எண் 10:17).

யூதா, இசக்கார், செபுலோன் ஆகியோர் முன்னால் செல்கிறார்கள். அவர்களுக்குப் பின்பு கெர்சோன் புத்திரரும், மெராரி புத்திரரும் வாசஸ்தலத்தைச் சுமந்து செல்கிறார்கள். (எண் 10:14-17; எண் 2:3-9). கோகாத்தியர் பரிசுத்த பணிமுட்டுகளோடு வருவார்கள். இவர்கள் வருவதற்கு முன்பாக ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபனம் பண்ணப்பட்டிருக்க வேண்டும். (எண் 10:21). கோகாத்தியர் பரிசுத்தமானவைகளைச் சுமந்து கொண்டு ரூபன், சிமியோன், காத் ஆகிய சேனைகளுக்குப் பின்னால் வருவார்கள். (எண் 10:18-21; எண் 2:10-16).

யூதாகோத்திரத்தாருக்கு பின்பு ரூபன் சந்ததியார் புறப்பட்டு வருகிறார்கள். ரூபன் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே புறப்படுகிறது; அவனுடைய சேனைக்குச் சேதேயூரின் குமாரன் எலிசூர் தலைவனாயிருக்கிறான் (எண் 10:18).

சிமியோன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குச் சூரிஷதாயின் குமாரன் செலூமியேல் தலைவனாயிருக்கிறான் (எண் 10:19). காத் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குத் தேகுவேலின் குமாரன் எலியாசாப் தலைவனாயிருக்கிறான் (எண் 10:20).

ரூபன் கோத்திரத்தாருக்கு பின்பு, கோகாத்தியர் பரிசுத்தமானவைகளைச் சுமந்துகொண்டு புறப்படுகிறார்கள்; இவர்கள் வந்து சேருமுன் மற்றவர்கள் வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணுவர்கள் (எண் 10:21).

பன்னிரண்டு கோத்திரங்களுக்கு நடுவில் கோகாத் புத்திரர் பிரயாணம் பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணிய வரிசைக்கிரமம். யூதா (எண் 10:14), இசக்கார் (எண் 10:15), செபுலோன்(எண் 10:16), கெர்சோன் புத்திரரும், மெராரி புத்திரரும் (எண் 10:17), ரூபன் (எண் 10:18), சிமியோன் (எண் 10:19), காத் (எண் 10:20). இவர்களுக்குப் பின்பு எப்பிராயீம் (எண் 10:22), மனாசே (எண் 10:23), பென்யமீன் (எண் 10:24), தாண் (எண் 10:25), ஆசேர் (எண் 10:26), நப்தலி (எண் 10:27).

உடன்படிக்கைப் பெட்டிக்கு பின்பு எப்பிராயீம் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே புறப்படுகிறது; அவனுடைய சேனைக்கு அம்மியூதின் குமாரன் எலிஷாமா தலைவனாயிருக்கிறான் (எண் 10:22).

மனாசே சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குப் பெதாசூரின் குமாரன் கமாலியேல் தலைவனாயிருக்கிறான் (எண் 10:23). பென்யமீன் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்குக் கீதெயோனின் குமாரன் அபீதான் தலைவனாயிருக்கிறான் (எண் 10:24).

அதற்குப்பின்பு, தாண் சந்ததியாருடைய பாளயத்தின் கொடி சகல பாளயங்களுக்கும் பின்னாக அவர்கள் சேனைகளோடே புறப்படுகிறது; அவனுடைய சேனைக்கு அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர் தலைவனாயிருக்கிறான் (எண் 10:25).

ஆசேர் சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஓகிரானின் குமாரன் பாகியேல் தலைவனாயிருக்கிறான். நப்தலி சந்ததியாருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏனானின் குமாரன் அகீரா தலைவனாயிருக்கிறான் (எண் 10:26,27).

சகல பாளயங்களுக்கும் பின்னாக, அசுத்தமானவர்களும், தீட்டுப்பட்டிருக்கிறவர்களும், இஸ்ரவேலரோடு கலந்துகொண்ட புறஜாதியாரும், பலவீனமாயிருக்கிறவர்களும் புறப்பட்டு வருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பிரயாண வரிசைகளாய் புறப்பட்டுப்போனதைப்பற்றிச் சொல்லும்போது, "இவ்விதமாய் தங்கள் தங்கள் சேனைகளின்படியே பிரயாணம்பண்ணினார்கள்" (எண் 10:28) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கானான் தேசத்திற்கு இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணிய வரிசைக்கிரமமும் சந்ததியாரின் தலைவர்களும் பற்றிய விவரம் வருமாறு :

1. யூதா சந்ததியாருடைய சேனைக்கு நகசோன் தலைவனாயிருந்தான். (எண் 10:14; எண் 2:3)

2. இசக்கார் சந்ததியாருடைய சேனைக்கு நெதனெயேல் தலைவனாயிருந்தான். (எண் 10:15; எண் 2:5)

3. செபுலோன் சந்ததியாருடைய சேனைக்கு எலியாப் தலைவனாயிருந்தான். (எண் 10:16; எண் 2:7)

4. வாசஸ்தலத்திற்குள் கெர்சோன் புத்திரரும், மெராரி புத்திரரும் (எண் 10:17; எண் 4:24-28,31-33)

5. ரூபன் சந்ததியாருடைய சேனைக்கு எலிசூர் தலைவனாயிருந்தான். (எண் 10:18; எண் 2:10)

6. சிமியோன் சந்ததியாருடைய சேனைக்கு செலூமியேல் தலைவனாயிருந்தான். (எண் 10:19; எண் 2:12)

7. காத் சந்ததியாருடைய சேனைக்கு எலியாசாப் தலைவனாயிருந்தான். (எண் 10:20; எண் 2:14)

8. கோகாத்தியர் பரிசுத்தமானவைகளைச் சுமந்து கொண்டு புறப்பட்டார்கள். (எண் 10:21; எண் 4:4-15)

9. எப்பிராயீம் சந்ததியாருடைய சேனைக்கு எலிஷாமா தலைவனாயிருந்தான். (எண் 10:22; எண் 2:18)

10. மனாசே சந்ததியாருடைய சேனைக்கு கமாலியேல் தலைவனாயிருந்தான். (எண் 10:23; எண் 2:20)

11. பென்யமீன் சந்ததியாருடைய சேனைக்கு அபீதான் தலைவனாயிருந்தான். (எண் 10:24; எண் 2:22)

12. தாண் சந்ததியாருடைய சேனைக்கு அகியேசேர் தலைவனாயிருந்தான். (எண் 10:25; எண் 2:25)

13. ஆசேர் சந்ததியாருடைய சேனைக்கு பாகியேல் தலைவனாயிருந்தான். (எண் 10:26; எண் 2:27)

14. நப்தலி சந்ததியாருடைய சேனைக்கு அகீரா தலைவனாயிருந்தான். (எண் 10:27; எண் 2:29)

மோசேயும் ஓபாவும்
எண் 10:29-32

எண் 10:29. அப்பொழுது மோசே தன் மாமனாகிய ரெகுவேல் என்னும் மீதியானனுடைய குமாரனான ஓபாவை நோக்கி: உங்களுக்குத் தருவேன் என்று கர்த்தர் சொன்ன ஸ்தலத்துக்கு நாங்கள் பிரயாணம்போகிறோம்; நீயும் எங்களோடே கூட வா, உனக்கு நன்மைசெய்வோம்; கர்த்தர் இஸ்ரவேலுக்கு நல்ல வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்றான்.

எண் 10:30. அதற்கு அவன்: நான் வரக்கூடாது; என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போகவேண்டும் என்றான்.

எண் 10:31. அப்பொழுது மோசே: நீ எங்களைவிட்டுப் போகவேண்டாம்; வனாந்தரத்திலே நாங்கள் பாளயமிறங்கும் இடங்களை நீ அறிந்திருக்கிறபடியினால், எங்களுக்குக் கண்களைப் போல இருப்பாய்.

எண் 10:32. நீ எங்களோடே கூட வந்தால், கர்த்தர் எங்களுக்குச் செய்தருளும் நன்மையின்படியே உனக்கும் நன்மைசெய்வோம் என்றான்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை நோக்கி தங்கள் பிரயாண வரிசையாய்ப் புறப்பட்டுப்போகிறார்கள். இந்தப் பிரயாணத்திலே மோசேயும் ஓபாவும் இருக்கிறார்கள். மோசேயின் மாமனாராகிய எத்திரோவின் மறுபெயரே ஒபா என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள் இந்த வசனப்பகுதியோடு யாத் 18-ஆவது அதிகாரம் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்பது இவர்களுடைய கருத்து.

ஒபா எத்திரோவின் குமாரன் என்றும், எத்திரோவுக்கு முதிர்ந்த வயதானபோது, அவர் தன்னுடைய தேசத்திற்கு திரும்பிப்போய்விட்டார் என்றும், அவர் போகும்போது தன் குமாரன் ஒபாவை மோசேயினிடத்தில் விட்டுச் சென்றார் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"பின்பு மோசே தன் மாமனை அனுப்பிவிட்டான்; அவன் திரும்பத் தன் தேசத்துக்குப் போய்விட்டான்" (யாத் 18:27).

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருந்தபோது ஒபாவும் அவர்களோடேகூட தங்கியிருந்தான். அவனுடைய தேசம் சீனாய் வனாந்தரத்திற்கு அருகாமையிலுள்ளது. இப்போது இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசையாய் புறப்பட்டுப்போகிறார்கள். அப்போது ஒபா, இஸ்ரவேல் புத்திரரோடு பிரயாணம்பண்ணாமல், தன்னுடைய சொந்த தேசத்திற்கு திரும்பிப்போக ஆயத்தம்பண்ணுகிறார். அந்த தேசத்தில், ஒபாவின் தகப்பனாராகிய எத்திரோவும், அவருடைய தகப்பன் வீட்டாரும், அவருடைய உற்றார் உறவினரும் இருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில் தங்களோடுகூட பிரயாணம்பண்ணுமாறு மோசே ஒபாவை அழைக்கிறார். அப்பொழுது மோசே தன் மாமனாகிய ரெகுவேல் என்னும் மீதியானனுடைய குமாரனான ஒபாவை நோக்கி, "உங்களுக்குத் தருவேன் என்று கர்த்தர் சொன்ன ஸ்தலத்துக்கு நாங்கள் பிரயாணம்போகிறோம்; நீயும் எங்களோடே கூட வா, உனக்கு நன்மைசெய்வோம்; கர்த்தர் இஸ்ரவேலுக்கு நல்ல வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்" (எண் 10:29) என்று சொல்லுகிறார்.

ஒபா மோசேயின் மாமனாகிய எத்திரோவின் மகன். (யாத் 3:1; யாத் 4:18) எத்திரோவின் மறுபெயர் ரெகுவேல் (எண் 10:29), ரெகுவேல் (யாத் 2:18), ஒபா (நியா 4:11). இந்த ஒபாவும், நியா 4:11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஒபாவும் ஒரே நபர் என்றால், அவன் மாமன் என்று குறிப்பிடப்படாமல் மைத்துனன் என்று குறிப்பிடப்படவேண்டும். (நியா 1:16; நியா 4:11)

மோசே கானானை நோக்கி பிரயாணம்பண்ணுகிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ, பரமகானானை நோக்கி பிரயாணம் பண்ணுகிறோம். மோசே ஒபாவை தங்களோடுகூட வருமாறு அழைத்தது போல, நாமும் நம்முடைய சிநேகிதர்களையும், உற்றார் உறவினர்களையும், நமக்கு அறிமுகமானவர்களையும் பரமகானானுக்கு வருமாறு அழைக்கவேண்டும். அவர்களும் நம்மோடு கூட வருமாறு அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும்.

ஒபாவோ மோசேயோடு கூடப்போகாமல், தன் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போக விரும்புகிறான். ஒபா மோசேயை நோக்கி, "நான் வரக்கூடாது; என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போகவேண்டும்" (எண் 10:30) என்று சொல்லுகிறான்.

ஒபா மீதியான் தேசத்தைச் சேர்ந்தவன். மீதியானியரும் ஆபிரகாமின் சந்ததியில் வந்தவர்கள். அவர்கள் கெத்தூராள் மூலமாக ஆபிரகாமின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். ஆனாலும் மீதியானியர்கள் ஆபிரகாமுடைய விசுவாசத்தின் சந்ததியை சேர்ந்தவர்களல்ல.

"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்" (எபி 11:8).

ஒபா விசுவாசத்தினால் ஆபிரகாமின் சந்ததியை சேர்ந்தவனாகயிருந்திருந்தால், தன்னோடு கூட வருமாறு மோசே அழைத்தபோது, ஒபா அவருடைய அழைப்பை மறுத்திருக்கமாட்டார். ஒபா இஸ்ரவேல் புத்திரரோடு பிரயாணம் பண்ண மறுத்தாலும், மோசே அவனை மறுபடியும் வருந்தி அழைக்கிறார்.

மோசே ஒபாவை நோக்கி, "நீ எங்களைவிட்டுப் போகவேண்டாம்; வனாந்தரத்திலே நாங்கள் பாளயமிறங்கும் இடங்களை நீ அறிந்திருக்கிறபடியினால், எங்களுக்குக் கண்களைப் போல இருப்பாய். நீ எங்களோடே கூட வந்தால், கர்த்தர் எங்களுக்குச் செய்தருளும் நன்மையின்படியே உனக்கும் நன்மைசெய்வோம்" (எண் 10:31,32) என்று சொல்லுகிறார்.

"எங்களுக்குக் கண்களைப் போல இருப்பாய்" என்பது கிழக்கு தேசத்தில் பயன்படுத்தப்படும் வழக்குச் சொல். வனாந்தரத்தில் தண்ணீர், விளைச்சல் நிலம் ஆகியவை எங்குக் கிடைக்கும் என்பதும் வனாந்தரத்தில் எந்த வழியாகப் பிரயாணம் பண்ண வேண்டும் என்பதும் ஒபாவிற்கு நன்றாகத் தெரிந்திருக்கும். எத்திரோவின் பிள்ளைகளில் சிலர் இஸ்ரவேல் புத்திரரோடு பிரயாணம் பண்ணுகிறார்கள். (நியா 1:16; நியா 4:11, 1சாமு 15:6) ஒபாவிற்கு வனாந்தரத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆகையினால் தங்களுக்கு உதவி புரிய வருமாறு மோசே தன் மைத்துனனை அழைக்கிறார்.

ஒபா இஸ்ரவேல் புத்திரரோடு பிரயாணம் செய்திருந்தால், அவன் அவர்களுக்கு பிரயோஜனமாகயிருப்பான். அவன் வனாந்தரத்தின் பாதையை நன்றாய் அறிந்திருக்கிறவன். இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கும் இடங்களையும் ஒபா நன்றாய் அறிந்தவன்.

மோசே ஒபாவை மறுபடியும் அழைத்தபோது, ஒபா மோசேயின் அழைப்பை ஏற்றுக்கொண்டானா என்பது தெரியவில்லை. ஒபா மோசேக்கு என்ன பிரதியுத்தரம் சொன்னான் என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை. அவன் அமைதியாயிருக்கிறான் என்றும், அமைதி சம்மதத்திற்கு அடையாளம் என்றும், ஒபா இஸ்ரவேல் புத்திரரோடு கூடப்போனான் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஒபா இஸ்ரவேல் புத்திரரோடே கூடப்போனான் என்றும், அதனால் அவனுடைய இனத்தாருக்கோ, குடும்பத்தாருக்கோ ஒரு இழப்பும் ஏற்படவில்லை என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். தங்கள் கருத்துக்கு கீழே சொல்லப்பட்டிருக்கும் இரண்டு வசனங்களை அவர்கள் ஆதாரமாக சொல்லுகிறார்கள்.

"மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும் யூதாவின் புத்திரரோடேகூடப் பேரீச்சமரங்களின் பட்டணத்திலிருந்து ஆராத்திற்குத்தெற்கேயிருக்கிற யூதாவின் வனாந்தரத்திற்கு வந்துஜனங்களோடே குடியேறினார்கள்" (நியா 1:16).

"சவுல் கேனியரை நோக்கி: நான் அமலேக்கியரோடேகூட உங்களையும் வாரிக்கொள்ளாதபடிக்கு, நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு விலகிப்போங்கள்; இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தபோது, நீங்கள் அவர்கள் எல்லாருக்கும் தயவுசெய்தீர்கள் என்றான்; அப்படியே கேனியர் அமலேக்கியரின் நடுவிலிருந்து விலகிப்போனார்கள்" (1சாமு 15:6).

மோசேயின் ஜெபம் எண் 10:33-36

எண் 10:33. அவர்கள் கர்த்தருடைய பர்வதத்தைவிட்டு, மூன்றுநாள் பிரயாணம் போனார்கள்; மூன்று நாள் பிரயாணத்திலும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி அவர்களுக்கு இளைப்பாறும் ஸ்தலத்தைத் தேடிக் காட்டும்படிக்கு அவர்கள் முன் சென்றது.

எண் 10:34. அவர்கள் பாளயத்திலிருந்து பிரயாணம் போகிறபோது, கர்த்தருடைய மேகம் பகலில் அவர்கள்மேல் தங்கியிருந்தது.

எண் 10:35. பெட்டியானது புறப்படும்போது, மோசே: கர்த்தாவே, எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக; உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக என்பான்.

எண் 10:36. அது தங்கும்போது: கர்த்தாவே, அநேக ஆயிரவர்களாகிய இஸ்ரவேலரிடத்தில் திரும்புவீராக என்று சொல்லுவான்.

சீனாய் வனாந்தரம் கர்த்தருடைய பர்வதம் என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பர்வதத்தைவிட்டு, மூன்றுநாள் பிரயாணம் போகிறார்கள்; மூன்று நாள் பிரயாணத்திலும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி அவர்களுக்கு இளைப்பாறும் ஸ்தலத்தைத் தேடிக் காட்டும்படிக்கு அவர்கள் முன் செல்கிறது (எண் 10:33).

இஸ்ரவேல் புத்திரருடைய அநேக கிரியைகள் இந்த உடன்படிக்கைப் பெட்டியை மையமாக வைத்தே நடைபெறுகிறது (எண் 10:33,35; யோசு 3:3-17; யோசு 4:5-18; யோசு 6:4-13; யோசு 7:6; யோசு 8:33; 1சாமு 4).

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையில் கர்த்தருடைய மகிமையைக் கண்டார்கள். அவருடைய சத்தத்தைக் கேட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய பர்வதத்தை விட்டு புறப்பட்டுப்போகும்போது, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை தங்களோடு சுமந்து செல்கிறார்கள். உடன்படிக்கைப்பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். இஸ்ரவேல் புத்திரரின் பிரயாணத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் அவர்களோடு கூடப்போவதினால், அவர்கள் தாங்கள் போகும் எல்லா இடங்களிலும் கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இஸ்ரவேல் புத்திரருக்கு இளைப்பாறும் ஸ்தலத்தை தேடி காண்பிக்கிறது. உடன்படிக்கைப் பெட்டி அவர்களுக்கு முன்னால் போகிறது. கர்த்தருடைய பிரசன்னம் தங்களோடு கூடயிருப்பதை அவர்கள் உணருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பாளயத்திலிருந்து பிரயாணம் போகிறபோது, கர்த்தருடைய மேகம் பகலில் அவர்கள்மேல் தங்கியிருக்கிறது (எண் 10:34).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு வாயாகயிருந்து ஊழியம் செய்கிறார். அவர்கள் உடன்படிக்கைப் பெட்டியை தூக்கும்போதும், அவர்கள் அதை கீழே இறக்கி வைக்கும்போதும் மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியானது புறப்படும்போது, மோசே, "கர்த்தாவே, எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக; உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக" (எண் 10:35) என்று ஜெம்பண்ணுவார்.

மோசே கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணும்போது, "உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக" என்று ஜெபம்பண்ணுகிறார். இந்தப் பிரபஞ்சத்தில் கர்த்தருக்கும் சத்துருக்கள் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தரை பகைக்கிறவர்கள். "உம்மை பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக" என்று மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய சத்துருக்களும், அவரைப் பகைக்கிறவர்களும், வெளிப்படையாகவோ அல்லது இரகசியமாகவோ கர்த்தருக்கு சத்துருக்களாகவும், அவரைப் பகைக்கிறவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய சத்தியத்திற்கும், அவருடைய பிரமாணங்களுக்கும், அவருடைய நியமங்களுக்கும், அவருடைய ஜனங்களுக்கும் சத்துருக்களாயிருப்பார்கள்.

கர்த்தருடைய சத்துருக்களும், அவரைப் பகைக்கிறவர்களும் சிதறடிக்கப்படவேண்டும் என்றும், அவர்கள் கர்த்தருக்கு முன்பாக ஓடிப்போகவேண்டும் என்றும் மோசே ஜெபம்பண்ணுகிறார். இது மோசேயின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும். இது மோசேயின் விருப்பம் மாத்திரமல்ல கர்த்தருடைய ஜனம் எல்லோருமே, அவருடைய சத்துருக்களும், அவரைப் பகைக்கிறவர்களும் சிதறடிக்கப்படவேண்டும் என்றும், அவர்கள் கர்த்தருக்கு முன்பாக ஓடிப்போகவேண்டும் என்றும் விரும்புகிறார்கள், அதையே எதிர்பார்க்கிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியானது தங்கும்போது, மோசே, "கர்த்தாவே, அநேக ஆயிரவர்களாகிய இஸ்ரவேலரிடத்தில் திரும்புவீராக" (எண் 10:36) என்று ஜெபம்பண்ணுவார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஓய்வைக் கட்டளையிடுவார். "கர்த்தாவே இஸ்ரவேலரிடத்தில் திரும்புவீராக" என்னும் வாக்கியத்திற்கு, "இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஓய்வைக் கட்டளையிடுவீராக" என்று பொருள். இஸ்ரவேல் ஜனத்தார் பிரயாணம் செய்து களைப்படைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வு தேவைப்படுகிறது.

கர்த்தர் தாமே தம்முடைய ஜனத்திற்கு ஓய்வைக் கொடுக்க, அவர்களிடத்திற்கு திரும்ப வேண்டும் என்று மோசே ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிரசன்னம் இஸ்ரவேல் புத்திரரோடு தொடர்ந்து தங்கியிருக்கவேண்டும். அதுவே அவர்களுக்கு மெய்யான சந்தோஷமும், மெய்யான ஆறுதலும், மெய்யான இளைப்பாறுதலுமாயிருக்கும்.

11 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் கர்த்தருடைய பிரமாணத்திற்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள். அவர்கள் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து ஆராதித்தது போன்ற ஒரு சில சம்பவங்களை தவிர, மற்ற எல்லா சம்பவங்களிலும் அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்களாகவே இருக்கிறார்கள்.

கர்த்தருடைய பிரமாணமும், அவருடைய சத்தியமும் ஜனங்களுக்கு சொல்லப்படும்போது, அவர்கள் கவனமாய் செவிகொடுத்து கேட்கிறார்கள். அவர்களுக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணுவது எளிதாயிருக்கிறது. அவர்கள் சத்தியத்தையும் பிரமாணத்தையும் கற்றுக்கொள்ள ஆர்வமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் அவர்கள் தங்கள் பாளயங்களை சுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தர் சொன்ன பிரகாரமே அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் தங்கள் கூடாரங்களைப் போடுகிறார்கள். பலிபீடம் பிரதிஷ்டைபண்ணப்படும்போது இஸ்ரவேலின் கோத்திரப்பிரபுக்கள் கர்த்தருக்கு மனப்பூர்வமான காணிக்கைகளை தாராளமாய்க் கொண்டு வருகிறார்கள். கர்த்தர் தங்களை சீக்கிரத்திலே கானான் தேசத்திற்கு கொண்டு போய்ச் சேர்ப்பார் என்னும் நம்பிக்கை இஸ்ரவேல் புத்திரர் மனதில் பதிந்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே சகலமும் ஒழுங்கும் கிரமமுமாய் நடைபெறுகிறது. ஆனாலும் இந்த அதிகாரத்தில் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து முறையிடுகிற சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜனங்கள் கர்த்தரிடத்தில் முறையிடும்போது, கர்த்தருக்கு கோபம் மூளுகிறது. கர்த்தருடைய அக்கினி பற்றியெரிந்து பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரை பட்சிக்கிறது. மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். உடனே அக்கினி அவிந்துபோயிற்று (எண் 11:1-3).

கர்த்தருடைய கோபத்தின் அக்கினி அவிந்துபோனாலும், இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தின் வேகம் குறையவில்லை. அவர்கள் மறுபடியுமாய் பாவம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் இறைச்சியைப் புசிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள் (எண் 11:4-9).

இஸ்ரவேல் ஜனங்களை தான் ஒருவனால் தாங்கக்கூடாது என்று மோசே கர்த்தரிடத்தில் முறையிடுகிறார் (எண் 11:10-15). கர்த்தர் மோசேக்கு உதவி செய்வதாக வாக்குப்பண்ணுகிறார் (எண் 11:16,17). இஸ்ரவேல் ஜனங்களுக்கு இறைச்சி கொடுக்கப்படும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (எண் 11:18-23).

கர்த்தருடைய ஆவியானவர் இஸ்ரவேல் ஜனங்களின் மூப்பரில் எழுபது பேரை அபிஷேகம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரை ஆளுகை செய்வதற்கு கர்த்தர் அவர்களையும் தகுதிப்படுத்துகிறார் (எண் 11:24-30). கர்த்தருடைய வல்லமையினால் இஸ்ரவேல் ஜனங்களுக்கு காடைகள் கொடுக்கப்படுகிறது (எண் 11:31-32). கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் ஜனங்களை வாதிக்கிறது (எண் 11:33-35).

ஜனங்களின் முறையிடு
எண் 11:1-3

எண் 11:1. பின்பு, ஜனங்கள் முறையிட்டுக் கொண்டிருந்தார்கள்; அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருந்தது; கர்த்தர் அதைக் கேட்டபோது, அவருடைய கோபம் மூண்டது; கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெறிந்து, பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரைப் பட்சித்தது.

எண் 11:2. அப்பொழுது ஜனங்கள் மோசேயை நோக்கிக் கூப்பிட்டார்கள்; மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்; உடனே அக்கினி அவிந்துபோயிற்று.

எண் 11:3. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெறிந்ததினால், அவ்விடத்துக்குத் தபேரா என்று பேரிட்டான்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக முறையிட்டு பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். நியாயப்பிரமாணத்தினால் பாவத்தைக் கண்டு பிடிக்க முடியும். எது பாவம் என்று நியாயப்பிரமாணம் சொல்லும். ஆனாலும் பாவத்தை அழிக்கும் வல்லமை நியாயப்பிரமாணத்திற்கு இல்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் பாவம் செய்யும்போது, அவர்கள் செய்வது பாவம் என்று நியாயப்பிரமாணம் சொல்லும். ஆனாலும் பாவத்தை மேற்கொள்ளும் வல்லமை நியாயப்பிரமாணத்தின் மூலமாக வராது. இஸ்ரவேல் ஜனங்கள் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது அவர்களுடைய பாவம்.

கர்த்தர் அவர்களுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளையெல்லாம் நினைத்து, அவர்கள் கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரை துதியாமல், தங்களிடத்தில் காணப்படுகிற ஒரு சில குறைவுகளை நினைத்துப் பார்த்து, கர்த்தருக்கு விரோதமாக முறையிடுகிறார்கள். துதியின் வார்த்தைகள் வரவேண்டிய அவர்களுடைய வாய்களில், முறையிடும் வார்த்தைகள் வருகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் முறையிடும் அளவுக்கு, அவர்களிடத்தில் ஒரு குறைவும் காணப்படவில்லை. அவர்களுக்கு சகலமும் நிறைவாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கிறது. அவர்களுக்கு ஒரு குறைவும் இல்லாதிருந்தும், அவர்கள் கர்த்தரிடத்தில் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் முறையிடுவதை கர்த்தர் செவிகொடுத்து கேட்கிறார். அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய முறையிடுகளை கேட்கும்போது, அவருடைய கோபம் மூளுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக முறையிடும்போது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள்.

பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் ஜனத்தார் பாவம் செய்யும்போது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு விரோதமாக வருகிறது. அவர்களுடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவர்களை தண்டிக்கவேண்டும் என்று தீர்மானம் பண்ணுகிறார். இது கர்த்தருடைய நீதி.

கர்த்தர் அவர்களுடைய முறையீடுகளை கேட்டு, அவர்கள் மீது கோபப்படுகிறார். அப்போது கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிகிறது. அது அவருடைய நியாயத்தீர்ப்பின் அக்கினி. அந்த அக்கினி பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரை பட்சிக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இதற்கு முன்பாக பல சமயங்களில் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்திருக்கிறார்கள். எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட ஆரம்ப நாட்களிலேயே அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவர்களுடைய முறுமுறுப்பைப்பற்றி யாத் 15;16;17 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தரிடத்தில் முறையிடுவதும், அவருக்கு விரோதமாக முறுமுறுப்பதும் இஸ்ரவேல் புத்திரரின் பொதுவான சுபாவம். அவர்கள் தமக்கு விரோதமாக முறையிட்டாலும் கர்த்தர் உடனே அவர்கள்மீது கோபப்படவில்லை. அவர்களுடைய பாவங்களினிமித்தமாக அவர்களை வாதிக்க வேண்டும் என்றும் கர்த்தர் தீர்மானம்பண்ணவில்லை.

ஆனால் இப்போதோ இஸ்ரவேல் புத்திரருடைய முறையிடு கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் பல அனுபவங்களை கடந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தர் தங்களுக்கு செய்த அநேக நன்மைகளை அனுபவித்திருக்கிறார்கள். அவர்கள் தம்முடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவர்களிடத்தில் ஆவிக்குரிய வளர்ச்சியும் முதிர்ச்சியும் காணப்படவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் இன்னும் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருந்தும், அவர்கள் தங்கள் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி பெறவில்லை. கர்த்தர் இதுவரையிலும் அவர்களைக் கைவிடாமல், அவர்களுக்கு நன்மை செய்து வந்திருக்கிறார். அவர் இனிமேலும் தங்களை கைவிடமாட்டார் என்றும், தங்களுக்கு இன்னும் தொடர்ந்து நன்மை செய்வார் என்றும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தர்மீது நம்பிக்கை வைக்காமல் அவரிடத்தில் முறையிடுகிறார்கள். அவர் தங்களுக்கு செய்த நன்மைகளை நினைத்துப் பார்த்து, அவரை நன்றியோடு துதிப்பதற்கு பதிலாக, அவருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்களுடைய முறையிடுகள் கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய முறையிடுகளை கேட்டபோது, அவர்களுக்கு விரோதமாக அவருடைய கோபம் மூளுகிறது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் புத்திரர்மேல் வருகிறது. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிகிறது. அந்த அக்கினி அவர்களுடைய பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரை பட்சிக்கிறது (எண் 11:1).

இது தேவனுக்கு எதிராகக் கூறப்படும் முறையீடாகும் (சங் 78:19). கர்த்தர் கலகக்காரர்களைச் சகித்துக் கொள்வதில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எதிராக முறையிட்ட படியினால், அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கிறது; கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெறிந்து, பாளயத்தின் கடைசியிலிருந்த சிலரைப் பட்சிக்கிறது (எண் 11:1).

அவர்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பாகவும் அவர்கள் தேவனுக்கு எதிராக முறையிட்டார்கள். (யாத் 14:11-15; யாத் 15:24-26; யாத் 16:2-4,9,20,27,28; யாத் 17:2-4) ஆனாலும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட பின்பு அவர்கள் தண்டிக்கப்பட்டதுபோல, அப்போது தண்டிக்கப்படவில்லை.

அப்பொழுது ஜனங்கள் மோசேயை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்; மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறார்; உடனே அக்கினி அவிந்துபோயிற்று (எண் 11:2).

நியாயத்தீர்ப்பின் மூலமாக மனந்திரும்புதல் வருகிறது. மோசே ஜனங்களுக்காக ஜெபிக்கிறார். வாதை நிறுத்தப்படுகிறது (எண் 11:2-3).

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறவர். தங்களுக்குள்ளே கர்த்தருடைய அக்கினி பற்றியெரியும்போது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிடாமல் மோசேயை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். மோசே தங்களுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும் என்று இஸ்ரவேல் ஜனத்தார் எதிர்பார்க்கிறார்கள்.

மோசே கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவிலே மத்தியஸ்தராக யிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் தன்னை நோக்கிக் கூப்பிட்டபோது, மோசே கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் தம்மிடத்தில் முறையிட்ட முறுமுறுப்பான வார்த்தைகளுக்கு செவிகொடுத்த கர்த்தர், இப்போது மோசேயின் விண்ணப்பத்திற்கும் செவிகொடுக்கிறார்.

மோசே கர்த்தரிடத்தில் தங்களுக்காக பரிந்து பேசுவார் என்றும், கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுப்பார் என்றும் இஸ்ரவேல் ஜனத்தார் நம்புகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமூண்டாவராகயிருந்தாலும், மோசேயின்மீது பிரியமாயிருந்து அவருடைய விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். உடனே இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே பற்றியெரிந்த கர்த்தருடைய அக்கினி அவிந்துபோயிற்று. இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக மூண்ட கர்த்தருடைய கோபமும் தணிந்துபோயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்த அந்த ஸ்தலத்திற்கு புதிய பெயர் கொடுக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்களுடைய முறுமுறுப்பின் நிமித்தமாக அவர்களுக்கு வெட்கமும் அவமானமும் ஏற்படவேண்டும்.

கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெறிந்ததினால், மோசே அவ்விடத்துக்குத் தபேரா என்று பேரிடுகிறார் (எண் 11:3).

தபேரா என்னும் பெயருக்கு "பற்றியெறிவது" என்று பொருள். இந்த ஸ்தலத்தின் பெயரை மற்ற ஜனங்களும் கேள்விப்படுவார்கள். அவர்களுக்கு தபேரா என்னும் பெயருக்கு அர்த்தம் தெரியும். இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளே கர்த்தருடைய அக்கினி பற்றியெரிந்தது என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள். அவர்களுடைய மனதிலே கர்த்தருக்கு ஏற்படும் பயம் உண்டாகும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து பாவம் செய்ததுபோல, தாங்கள் பாவம் செய்யக்கூடாது என்னும் எச்சரிப்பைப் பெற்றுக்கொள்வார்கள். இதன் நிமித்தமாகவே மோசே அவ்விடத்திற்கு தபேரா என்று பேரிடுகிறார்.

எண்ணாகமத்தில் கூறப்பட்டிருக்கும் வாதைகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. அக்கினி - அவர்களின் நாவின் பொல்லாப்பின்நிமித்தம். (எண் 11:1-3)
2. வியாதி - நாவின் பொல்லாப்பும், மாம்சத்தின் இச்சையும் (எண் 11:4-35)
3. குஷ்டம் - நாவின் பொல்லாப்பும், பொறாமையும் (எண் 12:1-16)
4. மரணம் - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 14:28-35)
5. வியாதி - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 13:31-33; எண் 14:37)
6. பூமியதிர்ச்சி - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 16:1-3,29-33)
7. அக்கினி - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 16:1-3,34-35)
8. வியாதி - நாவின் பொல்லாப்பும், கலகமும் (எண் 16:41-50)
9. கொள்ளிவாய் சர்ப்பங்கள் - நாவின் பொல்லாப்பு (எண் 21:5-9)
10. வியாதி - வேசித்தனமும், விக்கிரகாராதனையும் (எண் 25:1-9)

இறைச்சியின்மீது இச்சை
எண் 11:4-10

எண் 11:4. பின்பு அவர்களுக்குள் இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார்?

எண் 11:5. நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம்.

எண் 11:6. இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத் தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள்.

எண் 11:7. அந்த மன்னா கொத்துமல்லி விதையம்மாத்திரமும், அதின் நிறம் முத்துப் போலவும் இருந்தது.

எண் 11:8. ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக் கொண்டுவந்து, ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள்; அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள்; அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருந்தது.

எண் 11:9. இரவிலே பாளையத்தின்மேல் பனிபெய்யும்போது, மன்னாவும் அதின்மேல் விழும்.

எண் 11:10. அந்தந்த வம்சங்களைச் சேர்ந்த ஜனங்கள் தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டான்; கர்த்தருக்கு மிகவும் கோபம் மூண்டது; மோசேயின் பார்வைக்கும் அது பொல்லாப்பாயிருந்தது.

இஸ்ரவேல் ஜனத்தார் மறுபடியும் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து முறையிடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரில் சாதாரண ஜனங்கள் முறுமுறுப்பதுபோல, அவர்களுடைய கோத்திரப்பிதாக்களும் பிரபுக்களும் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமான முறுமுறுப்பு இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்களிலிருந்து ஆரம்பமாயிற்று. அவர்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள் (எண் 11:4).

எண் 11:4, யாத் 12:38 ஆகிய வசனங்களில் பல ஜாதியான அந்நிய ஜனங்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடைய வேலைக்காரர்களாக இருக்கலாம். மேலும் ஒருசில இஸ்ரவேல் புத்திரர் எகிப்திய ஜாதியில் விவாகம் செய்து கொண்டார்கள். அந்நிய ஜனங்கள் என்பது அவர்களுடைய சந்ததியாகவும் இருக்கலாம். (லேவி 24:10) மேலும் கேனானியரும், எகிப்திலிருந்து இஸ்ரவேலரோடு புறப்பட்டுப்போனார்கள். (எண் 11:31; யாத் 12:37). சிறையிருப்பிற்கு பின்பு, அந்நிய ஜாதியார் "பலஜாதி" (நெகே 13:3) எனவும், "கலந்துபோனவர்கள்" (எஸ்றா 9:2; எரே 25:20,24; எரே 50:37; எசே 30:5) எனவும் அழைக்கப்பட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரரும், பல ஜாதியான அந்நிய ஜனங்களும் வெவ்வேறாகவே ஜீவிக்கிறார்கள். ஒருசில சமயங்களில் மட்டுமே இஸ்ரவேல் புத்திரர் பலஜாதியான அந்நிய ஜனங்களை விவாகம் செய்ததற்கான குறிப்புக்கள் உள்ளன. யூதா (ஆதி 38), மோசே (யாத் 2-3; எண் 12), போவாஸ் (ரூத் 4). பலஜாதியான அந்நிய ஜனங்களை விவாகம் பண்ணுவது தேவனுடைய பிரமாணத்திற்கு எதிரானது. (எண் 23:9; உபா 7:1-6).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அந்த தேசத்தை விட்டு வெளியேறி வந்தபோது, அவர்களோடேகூட, அவர்களுக்குள் இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்களும் எகிப்து தேசத்தை விட்டு வெளியேறி வருகிறார்கள்.

அந்நிய ஜாதியாருக்கோ வாக்குத்தத்த தேசமாகிய கானான் தேசத்திற்கு போகவேண்டும் என்னும் ஆசை மாத்திரமே இருக்கிறது. அந்த தேசத்திற்கு போகும்போது, கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிய அவர்கள் ஆயத்தமாயில்லை. அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து ஆவிக்குரிய பயிற்சிகளையும் பெற்றுக்கொள்ள முன்வரவில்லை. ஆசீர்வாதங்களை மாத்திரமே எதிர்பார்த்து அவர்களும் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே இருக்கிறார்கள்.

அந்நிய ஜனங்கள் புளிப்பில்லாத மாவுக்கு நடுவிலிருக்கும் புளிப்பான மாவைப்போல இருக்கிறார்கள். கொஞ்சம் புளித்த மா, புளிப்பில்லாத எல்லா மாவையும் புளிப்பாக்கிப்போடும். பல ஜாதியான அந்நிய ஜனங்கள் சொற்ப எண்ணிக்கையுள்ளவர்களாகயிருந்தாலும், அவர்கள் திரளான எண்ணிக்கையுள்ள இஸ்ரவேல் ஜனங்களுக்கு மத்தியில் கறைகளாகவும், அசுத்தமாகவும், தீட்டுகளாகவும் இருக்கிறார்கள். அந்நிய ஜாதியார், இஸ்ரவேல் ஜனங்களை அசுத்தப்படுத்தி, தீட்டுப்படுத்தி, கறைபடுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள்; அப்போது இஸ்ரவேல் புத்திரரும் அவர்களோடு சேர்ந்து இச்சையுள்ளவர்களாகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் அழுது, "நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார்?" (எண் 11:4) என்று கேட்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் புசித்த போஜனங்களை மேன்மைப்படுத்துகிறார்கள். கர்த்தர் தங்களை வனாந்தரத்திற்கு அழைத்து வந்து, தங்களுக்கு புசிக்க போஜனம் கொடுக்காமல், தங்களை பட்டினியாக போட்டுவிட்டதுபோல அவர்கள் அழுகிறார்கள்.

நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம் (எண் 11:5) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்த தேசத்தில் பட்ட கஷ்டங்களை நினைக்கவில்லை. அவர்கள் எகிப்து தேசத்திலுள்ள இறுப்பு காளவாய்களையும், செங்கல் சூளைகளையும், தங்களை அடித்து துன்பப்படுத்தின ஆளோட்டிகளையும் நினைத்துப் பார்க்கவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கீரைகளையும், வெண்காயங்களையும், வெள்ளைப்பூண்டுகளையும் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களை ஒடுக்கின ஆளோட்டிகளின் அடிகளை நினைக்கவில்லை. தாங்கள் கர்த்தருடைய சமுகத்திலே அழுது புலம்பியதை நினைக்கவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலிருக்கும்போது, கர்த்தர் அவர்களுக்கு மன்னாவை போஜனமாக கொடுத்திருக்கிறார். இது தேவனுடைய விசேஷித்த அப்பம். அவர்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும்போது மன்னா அவர்களுடைய சரீரத்திற்கு தெம்பையும், பெலத்தையும், ஆரோக்கியத்தையும் தரும். ஆனால் அவர்களோ மன்னாவின்மீது பிரியப்படவில்லை.

"இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத் தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே" (எண் 11:6) என்று இஸ்ரவேல் புத்திரர் மனவருத்தத்தோடு சொல்லுகிறார்கள். அவர்களுக்கு மன்னாவினால் திருப்தி உண்டாகவில்லை. கர்த்தர் அவர்களுக்கு வனாந்தரத்திலே மன்னாவை புசிக்கக்கொடுத்தாலும், அவர்கள் இன்னும் எகிப்து தேசத்திலே சாப்பிட்ட மச்சங்களையும், காய்களையும், பூண்டுகளையும் நினைத்துப் பார்த்து அவைகளின்மேல் ஆசைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திற்குப் பிரயாணமாய்ப் போனபோது தேவன் அவர்களுக்கு மன்னாவைப் புசிக்கக் கொடுத்தார். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் வரைக்கும், இடைப்பட்ட நாற்பது வருஷகாலத்தில் அவர்களுக்கு அதுவே நிரந்தர உணவாயிற்று. (யாத் 16; உபா 8:3,16; யோசு 5:12).

தங்களுடைய பின்மாற்றத்திற்கும், பாவத்திற்கும் ஜனங்கள் ஒருசில சாக்குப்போக்கான காரணங்களை சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை. (ஆதி 3:6; 1யோவான் 2:15-17)
2. பொறாமை (ஆதி 4:4-5; ஆதி 37:3-11, 18-36; நியா 8; நியா 12; 1சாமு 18:8-26:2)
3. மனுஷ பயம் (ஆதி 12:12-15; ஆதி 20:2,11; ஆதி 26:7)
4. காமவிகாரம் (ஆதி 19; ரோமர் 1:18-32)
5. பிள்ளைகள்மீது அளவுக்கு அதிகமான பாசம். (ஆதி 19:31-38)
6. பேராசை (ஆதி 25:27-34; ஆதி 27:1-33; எண் 22; 2பேதுரு 2:15; யூதா 1:11; யோசு 7)
7. தாகம் (யாத் 15:23-26; யாத் 17:1-7)
8. பசி (யாத் 16:2-13)
9. தலைவர் இல்லாமை (யாத் 32)
10. குடித்து வெறிப்பது (லேவி 10:1-10)
11. முறையிடுதல் (எண் 11:1-3)
12. புசிப்பதற்கான மாம்ச இச்சை (எண் 11:4-35)

13. கணவனின் சகோதரியினிடத்தில் அன்புகூராமை. (எண் 12)

14. அவிசுவாசம் (எண் 13:26-14:44; எபி 4:1-8; யூதா 1:5)

15. பெருமையும், தன்னை உயர்த்துவதும் (எண் 16; யூதா 1:11)

16. ஸ்திரீகளின் அழகு (எண் 25; நியா 16; 2சாமு 11; 2சாமு 13; 1இராஜா 11)

17. இறுமாப்பு (நியா 2:7-19)

18. மற்ற தேசங்களைப்போல ஆகவேண்டும் என்னும் ஆசை (1சாமு 8:5,20)

19. சுயசித்தமும், அதிகார மோகமும் (1சாமு 13; 2சாமு 15)

20. சுயவிருப்பம் (1இராஜா 12:25-33)

21. மனைவியைச் சந்தோஷப்படுத்துவது (1இராஜா 11:4-8; 1இராஜா 16:31; 1இராஜா 21:25)

22. தேவனுடைய சத்தத்தைக் கேட்க மறுப்பது (2இராஜா 17:13-18)

23. வாலிபரின் ஆலோசனையைப் பின்பற்றுவது (1இராஜா 12:1-15; 2நாளா 10:1-11)

24. கள்ளத்தீர்க்கதரிசிகளுக்குச் செவி கொடுப்பது (1இராஜா 22; 2நாளா 18)

25. புகழ்ச்சியை விரும்புவது (யோவான் 12:43)

இந்த வசனப்பகுதியில் மன்னாவைப்பற்றி விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மன்னா கொத்துமல்லி விதையம்மாத்திரமும், அதின் நிறம் முத்துப் போலவும் இருக்கிறது. ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக் கொண்டுவந்து, ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள்; அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள்; அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருக்கிறது. இரவிலே பாளையத்தின்மேல் பனிபெய்யும்போது, மன்னாவும் அதின்மேல் விழும் (எண் 11:7-9).

மன்னா வானத்தின் அப்பம். அது தேவதூதரின் போஜனம். இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் மன்னாவை புசித்து ஜீவனம்பண்ணியபோது, அவர்கள் சாபத்திற்கு விலகி ஜீவித்தார்கள். ஆதிப்பெற்றோரின் பாவத்தினால், மனுக்குலத்திற்கு சாபம் வந்தது. அவர்கள் தங்கள் முகத்தின் வேர்வையினால் அப்பத்தைப் புசிக்கவேண்டும் என்று கர்த்தர் மனுக்குலத்தை சபித்திருந்தார்.

மன்னாவை புசிப்பதற்கு இஸ்ரவேல் புத்திரர் தங்கள் முகத்தின் வேர்வையை சிந்தவேண்டியதில்லை. ஜனங்கள் போய் அதைப் பொறிக்கிகொண்டு வந்து புசிக்கலாம். அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருக்கும். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ மன்னாவில் திருப்தியடையவில்லை, அவர்கள் மன்னாவைப் புசித்தும், தங்கள் உள்ளம் வாடிப்போவதாக சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இறைச்சியைப் புசிக்கவேண்டும் என்னும் ஆசை உண்டாயிற்று. அவர்கள் தங்கள் மாம்சத்தின் இச்சைகளுக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். தேவனுடைய வல்லமையும் நன்மையும் அவர்களுக்கு பெரியதாய் தெரியவில்லை. கர்த்தர் தமது கிருபையினாலும் வல்லமையினாலும் தங்களை குறைவில்லாமல் போஷிப்பார் என்னும் நம்பிக்கை அவர்களிடத்தில் இல்லை.

"நமக்கு இறைச்சியைப் புசிக்கக் கொடுப்பவர் யார்" என்று இஸ்ரவேல் புத்திரர் அழுதுகொண்டே கேட்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு போஜனம் கொடுப்பார் என்னும் நம்பிக்கை அவர்களிடத்தில் இல்லாமல் போயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் இறைச்சியின்மீது மிகுந்த இச்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இந்த மன்னாவை தவிர தங்களுடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று நினைத்து மனது வாடிப்போயிருக்கிறார்கள். இறைச்சி நல்ல போஜனம்தான். இறைச்சியைப் புசிப்பது பாவமல்ல. கர்த்தர் அனுமதித்திருக்கிற மாம்சத்தை இஸ்ரவேல் புத்திரர் புசிக்கலாம். அவர்கள் அசுத்தமான மிருகங்களையும், அசுத்தமான பறவைகளையும் புசிக்காமல் விலக்கவேண்டும்.

ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் இறைச்சியைப் புசிக்கவேண்டும் என்று இச்சித்து பாவம் செய்கிறார்கள். நியாயமான காரியம்கூட, அதை இச்சிக்கும்போது, அது நமக்கு பாவமாகிவிடும். கர்த்தர் நமக்கு போஜனம் கொடுக்கிறார். அந்தப் போஜனத்திற்காக கர்த்தரை ஸ்தோத்திரம்பண்ணி, நன்றியுள்ள இருதயத்தோடு அதைப் புசிக்கவேண்டும். போஜனத்தை இச்சையோடு புசிப்பது பாவம். பெருந்தீனி உண்பது நம்முடைய சரீர ஆரோக்கியத்தைக் கெடுத்துப்போடும்.

ஒரு காரியம் நமக்கு நன்மையானதாகயிருந்தாலும், அதன் மீது இச்சை வைக்கும்போது, அது நமக்கு தீமையாகிவிடும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகிவிடும். ஒரு காரியம் நியாயமானதாகயிருந்தாலும், அது அளவுக்கு அதிகமாகும்போது அல்லது அதை நாம் இச்சிக்கும்போது, அது நமக்கு பாவமாகயிருக்கும்.

கர்த்தர் நமக்கு எதை அனுமதிக்கிறாரோ அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தர் நமக்கு எதைக்கொடுக்கிறாரோ அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதே வேளையில் கர்த்தர் நமக்கு எவ்வளவு கொடுக்கிறாரோ, அதிலே நாம் திருப்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்கள் இச்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய இச்சைகளைப் பார்த்து, இஸ்ரவேல் புத்திரரும் இறைச்சியின்மீது இச்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள் தங்களுக்கு மன்னாவைத் தவிர வேறொன்றும் இல்லையே என்றும், தங்களுக்கு இறைச்சியை புசிக்கக்கொடுப்பவர் யார் என்றும் சொல்லி இஸ்ரவேல் புத்திரர் அழுகிறார்கள்.

அந்தந்த வம்சங்களைச் சேர்ந்த இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்கிறார்; கர்த்தருக்கு மிகவும் கோபம் மூளுகிறது; மோசேயின் பார்வைக்கும் அது பொல்லாப்பாயிருக்கிறது (எண் 11:10).

எல்லா ஜனங்களும் அழுகிறதைக் கேட்கும்போது, அது கேட்போரின் மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். மோசேயின் பார்வைக்கும் அது பொல்லாப்பாயிருக்கிறது. கர்த்தருக்கு மிகவும் கோபம் மூளுகிறது (எண் 11:1,10).

மோசேயின் விண்ணப்பம் எண் 11:11-15

எண் 11:11. அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: நீர் இந்த ஜனங்கள் எல்லாருடைய பாரத்தையும் என்மேல் சுமத்தினதினால், உமது அடியானுக்கு உபத்திரவம் வரப்பண்ணினதென்ன? உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாதே போனதென்ன?

எண் 11:12. இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனைத் தகப்பன் சுமந்துகொண்டுபோவதுபோல, உன் மார்பிலே அணைத்துக்கொண்டுபோ என்று நீர் என்னோடே சொல்லும்படி இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ?

எண் 11:13. இந்த ஜனங்கள் எல்லாருக்கும் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும்? எனக்கு இறைச்சி கொடு என்று என்னைப் பார்த்து அழுகிறார்களே.

எண் 11:14. இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது.

எண் 11:15. உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்குச் செய்யாமல், என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னைக் கொன்றுபோடும் என்று வேண்டிக்கொண்டான்.

மோசே இயல்பாகவே சாந்தகுணமுள்ளவர். அவரிடத்தில் எல்லா நற்குணமும் இருக்கிறது. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் இறைச்சிக்காக இச்சித்து, அதன் நிமித்தமாக அழும்போது, மோசேயின் பார்வைக்கு அது பொல்லாப்பாயிருக்கிறது. அவர்களுடைய அழுகையின் குரலைக் கேட்டு கர்த்தருக்கு மிகவும் கோபம் மூளுகிறது. மோசேயும் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்படுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இறைச்சியின்மீது இச்சித்து, அழுது புலம்பும்போது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய அழுகை கர்த்தரைக் கோபப்படுத்துகிறது. கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பிலே அவர்களுக்கு நம்பிக்கையில்லை என்பதற்கு, அவர்களுடைய அழுகை அடையாளமாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் முறுமுறுப்புக்கள் மூலமாக கர்த்தரை கனவீனம் பண்ணுகிறார்கள். கர்த்தருக்கு தங்கள்மீது பிரியமில்லை என்றும், இந்த வனாந்தரத்திலே தங்களைப் போஷிப்பதற்கு கர்த்தருக்கு வல்லமையில்லை என்றும் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் அழுகையின் மூலமாக வெளிப்படுத்துகிறார்கள். அவர்களுடைய அழுகை மோசேயின் பார்வைக்கும் பொல்லாப்பாயிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கும் கர்த்தருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். அவர் கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் ஜனத்திற்காக பரிந்து பேசுகிற ஊழியம் செய்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து இறைச்சியை இச்சித்து, தங்கள் கூடார வாசலிலே அழும்போது, மோசேயின் நிலமை மிகவும் பரிதாபமாயிருக்கிறது. அவர் கர்த்தருக்கு செய்ய வேண்டிய ஊழியமும் உள்ளது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அவர் செய்ய வேண்டிய கடமைகளும் உள்ளது. மோசேயால் தன்னுடைய கடமைகளை நேர்த்தியாய்ச் செய்ய முடியவில்லை.

மோசே எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரை கனம்பண்ணவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை கனம் பண்ணாவிட்டாலும், மோசே அவரை கனம்பண்ணவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நம்பாதே போனாலும், மோசே அவரை நம்பவேண்டும். ஆனால் இந்த சூழ்நிலையில் கர்த்தரைக் கனம்பண்ணுவதும், தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்வதும் மோசேக்கு மிகப்பெரிய சோதனையாயிருக்கிறது.

மோசேயின் செவிகளில் இஸ்ரவேல் புத்திரருடைய முறையீடுகளும், அழுகையின் கூக்குரலும் அதிகமாய்க் கேட்கிறது. மோசே மாத்திரம் கர்த்தரைத் துதித்தால் போதாது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தரைத் துதிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து, அவரை நிந்திக்கும்போது, மோசேயும் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்க ஆரம்பிக்கிறார்.

அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி, "நீர் இந்த ஜனங்கள் எல்லாருடைய பாரத்தையும் என்மேல் சுமத்தினதினால், உமது அடியானுக்கு உபத்திரவம் வரப்பண்ணினதென்ன? உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாதே போனதென்ன?" (எண் 11:11) என்று கேட்கிறார்.

தனக்கு வந்த உபத்திரவங்களையெல்லாம் கர்த்தர் அனுமதித்திருக்கிறார் என்று மோசே கர்த்தரிடத்தில் குறைகூறுகிறார். இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு வழிநடத்திச் செல்லும் பொறுப்பைக் கர்த்தர் மோசேயிடம் கொடுத்திருக்கிறார். அவருடைய கண்களில் தனக்கு கிருபை கிடைக்காமல் போயிற்றோ என்று மோசே வருத்தமடைகிறார் (எண் 11:11-15).

மோசே தன்னுடைய மனதிலிருக்கும் உணர்வுகளை கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். அவர் எதையும் மறைக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புக்களையும், அழுகை குரலையும் கேட்டு மோசேயின் இருதயம் சோர்ந்துபோயிருக்கிறது. இந்த சூழ்நிலையில் மோசே கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தனக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்.

மோசே கர்த்தருடைய மகிமையை குறைத்து மதிப்பிட்டு, தன்னுடைய மகிமையையும் மதிப்பையும் கூட்டுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருடைய பாரமும் தன்மேல் சுமத்தப்பட்டிருப்பதாக மோசே கர்த்தரிடத்தில் முறுமுறுக்கிறார். தேவனுடைய தெய்வீக கட்டளையின் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும், மோசே இஸ்ரவேல் ஜனத்தாரை வனாந்தரத்திலே வழிநடத்திக்கொண்டு வருகிறார். இது மோசேயின் சொந்த முயற்சியல்ல. கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும், அநுக்கிரகமும் இல்லையென்றால் மோசேயால் ஒன்றும் செய்ய முடியாது.

மோசே தன்னுடைய உண்மையான நிலமையை அறிந்துகொள்ள தவறிவிடுகிறார். கர்த்தரே எல்லா பாரங்களையும் சுமக்கிறவர். ஆனால் மோசேயோ, எல்லா பாரங்களும் தன்மேல் சுமத்தப்பட்டிருப்பதாக நினைத்து வேதனைப்படுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் மோசேயை ஒரு கருவியாக பயன்படுத்துகிறார். ஆனால் மோசேயோ, தன்னுடைய சொந்த முயற்சியினாலும், சொந்த பலத்தினாலும், சொந்த பராக்கிரமத்தினாலும், இஸ்ரவேல் ஜனங்களை இந்த வனாந்தரத்திலே வழிநடத்துவதாக நினைக்கிறார்.

கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை இந்த வனாந்தரத்திலே வழிநடத்திக்கொண்டு வருகிறார் என்பதை மோசே மறந்துவிட்டு, தானே அவர்களை வழிநடத்திக்கொண்டு வருவதாக நினைத்து, இந்த பாரம் தன்னால் தாங்கமுடியாத பாரமாயிருக்கிறது என்று கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனைத் தகப்பன் சுமந்துகொண்டுபோவதுபோல, உன் மார்பிலே அணைத்துக்கொண்டுபோ என்று நீர் என்னோடே சொல்லும்படி இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ?" (எண் 11:12) என்று கேட்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரை போஷித்து பராமரிப்பது கர்த்தருடைய காரியம். மோசேயால் அவர்களை போஷிக்க முடியாது. அவர்களை மாத்திரமல்ல, கர்த்தரே மோசேயையும் போஷிக்கவேண்டும். கர்த்தர் மோசேயை போஷிக்கவில்லையென்றால், மோசேக்கு போஜனமில்லை. மோசே கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பை மறந்துவிட்டு, தானே இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரையும் போஷித்து பராமரிப்பதாக நினைக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் இறைச்சியை இச்சிக்கும்போது, தன்னால் அவர்களுக்கு இறைச்சியைக் கொடுக்க முடியாது என்று மோசே நினைக்கிறார். மோசேயால் முடியாத காரியங்களை கர்த்தரால் செய்ய முடியும். கர்த்தரால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமே இல்லை.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தங்கள் தங்கள் கூடார வாசலிலே இறைச்சிக்காக அழுகிறார்கள். அவர்களுடைய அழுகையின் சத்தத்தைக் கேட்டு, மோசே அவர்கள்மீது கோபப்படுகிறார். அவர் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், இஸ்ரவேல் புத்திரரையும், தன்னையும் நோக்கிப் பார்க்கிறார். மோசே கர்த்தருடைய வல்லமையை தியானிக்காமல், தன்னுடைய சொந்த பலவீனத்தை நினைத்துப்பார்க்கிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "இந்த ஜனங்கள் எல்லாருக்கும் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும்? எனக்கு இறைச்சி கொடு என்று என்னைப் பார்த்து அழுகிறார்களே" (எண் 11:13) என்று சொல்லுகிறார். கர்த்தரே அவர்களை போஷிக்கிறார் என்பதை மறந்துவிட்டு, தான் அவர்களை போஷிப்பதாக நினைத்து, மோசே கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்.

தேவனுடைய கிருபை மோசேயின்மீது இருக்கிறது. கர்த்தருடைய கிருபையினாலேயே மோசே இஸ்ரவேல் ஜனங்களை இதுவரையிலும் வழிநடத்திக்கொண்டு வந்திருக்கிறார். இதுவரையிலும் மோசே கர்த்தருடைய பெரிதான கிருபையையும், அவருடைய பெலத்தையும் நம்பினார். ஆனால் இப்போது மோசேயின் விசுவாசம் பலவீனமாயிருக்கிறது. மோசே கர்த்தருடைய பலத்தை நம்பி உற்சாகமடைவதற்கு பதிலாக, தன்னுடைய சொந்த பலவீனத்தைப் பார்த்து சோர்ந்துபோகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது" (எண் 11:14) என்று சொல்லுகிறார்.

மோசேயின் மனதில் பொறுமையில்லை. அவருடைய உள்ளத்தில் சோதனைகளை தாங்கிக்கொள்ளும் தெம்பும் பெலமுமில்லை. தன்னுடைய கவலைகள், பாரங்கள் எல்லாவற்றையும் கர்த்தருடைய பாதபடியில் வைத்துவிடவேண்டும் என்னும் எண்ணமும் மோசேயினிடத்தில் இல்லை. தனக்கு வந்திருக்கும் பிரச்சனைகளிலிருந்து தப்பிக்க, தான் செத்துப்போகவேண்டும் என்று மோசே விரும்புகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்குச் செய்யாமல், என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னைக் கொன்றுபோடும்" (எண் 11:15) என்று வேண்டிக்கொள்கிறார்.

கர்த்தர் மோசேயை இஸ்ரவேல் புத்திரருக்கெல்லாம் தலைவராக தெரிந்தெடுத்திருக்கிறார். ஆனால் மோசேயோ இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா மனுஷர்களைவிட மிகப்பெரிய கோழையாயிருக்கிறார். மோசேயைப்போலவே இக்காலத்திலும் கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர், தங்களுக்கு வந்திருக்கும் சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கிக்கொள்ள முடியாமல், கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். மோசேயைப்போலவே இவர்களும் மனமும் சோர்வடைந்து, பலவீனமாயிருக்கிறார்கள். மோசேயைப்போல அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள்.

கர்த்தருடைய பிரதியுத்தரம் எண் 11:16-23

எண் 11:16. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடே கூட வந்து நிற்கும்படி செய்.

எண் 11:17. அப்பொழுது நான் இறங்கிவந்து, அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடே கூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்.

எண் 11:18. நீ ஜனங்களை நோக்கி: நாளைக்காக உங்களைப் பரிசுத்தம் பண்ணுங்கள்; நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள்; எங்களுக்கு இறைச்சி சாப்பிடக் கொடுப்பவர் யார் என்றும், எகிப்திலே எங்களுக்குச் சௌக்கியமாயிருந்தது என்றும், கர்த்தருடைய செவிகள் கேட்க அழுதீர்களே; ஆகையால், நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார்.

எண் 11:19. நீங்கள் ஒருநாள், இரண்டுநாள், ஐந்துநாள், பத்துநாள், இருபதுநாள் மாத்திரமல்ல,

எண் 11:20. ஒரு மாதம்வரைக்கும் புசிப்பீர்கள்; அது உங்கள் மூக்காலே புறப்பட்டு, உங்களுக்குத் தெவிட்டிப்போகுமட்டும் புசிப்பீர்கள்; உங்களுக்குள்ளே இருக்கிற கர்த்தரை அசட்டைபண்ணி, நாங்கள் ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோம் என்று அவருக்கு முன்பாக அழுதீர்களே என்று சொல் என்றார்.

எண் 11:21. அதற்கு மோசே: என்னோடிருக்கிற காலாட்கள் ஆறுலட்சம் பேர்; ஒரு மாதம் முழுவதும் புசிக்கும்படி அவர்களுக்கு இறைச்சி கொடுப்பேன் என்று சொன்னீரே.

எண் 11:22. ஆடுமாடுகளை அவர்களுக்காக அடித்தாலும் அவர்களுக்குப் போதுமா? சமுத்திரத்து மச்சங்களையெல்லாம் அவர்களுக்காகச் சேர்த்தாலும் அவர்களுக்குப் போதுமா என்றான்.

எண் 11:23. அதற்குக் கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று, நீ இப்பொழுது காண்பாய் என்றார்.

கர்த்தர் தமது கிருபையினால் மோசேயின் விண்ணப்பத்திற்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார். "இந்த ஜனங்கள் எல்லோரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது. எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது" (எண் 11:14) என்று மோசே சொன்னார். மோசே நிதானமில்லாமல் அவசரப்பட்டு கர்த்தருடைய சமுகத்திலே இவ்வாறு விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் யார்மீதும் சுமக்க முடியாத பாரத்தை சுமத்துகிறவரல்ல.

இஸ்ரவேல் ஜனங்களை தான் ஒருவனாய்த் தாங்குவது தனக்கு மிஞ்சின பாரமாயிருக்கிறது என்று மோசே விண்ணப்பம்பண்ணினபடியினால், கர்த்தர் அந்தப் பாரத்தை குறைப்பதற்கு சித்தங்கொள்கிறார். ஜனங்களின் பாரத்தை இனிமேல் மோசே மாத்திரம் சுமக்க வேண்டியதில்லை. மோசேயோடுகூட அந்தப் பாரத்தை சுமப்பதற்கு கர்த்தர் வேறு சிலரையும் நியமிக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடே கூட வந்து நிற்கும்படிசெய். அப்பொழுது நான் இறங்கிவந்து, அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடே கூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்" (எண் 11:16,17) என்று சொல்லுகிறார்.

எழுபது மூப்பர்கள் எப்பொழுது தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களைத் தெரிந்தெடுத்தது யார் என்னும் விவரம் இங்கு அறிவிக்கப்படவில்லை. இந்த நிகழ்ச்சிக்கு ஒரு வருஷத்திற்கு முன்பாகவே அவர்கள் மூப்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். (யாத் 3:16; யாத் 24:1-11). இப்பொழுது மோசேயோடுகூட அவர்களும் ஜனங்களின் பாரத்தைச் சுமப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் அவர்களை அபிஷேகம் பண்ணுகிறார் (எண் 11:16,24-25). இதுவே ஆலோசனைச் சங்கத்தின் ஆரம்பமென்று ரபீமார்கள் கூறுகிறார்கள். எழுபது மூப்பர்களில் எந்தெந்த கோத்திரத்தில் எத்தனை மூப்பர்கள் இருந்தார்கள் என்பது தெரியவில்லை. கோத்திரத்திற்கு ஆறு மூப்பர்களைத் தேர்ந்தெடுத்தாலும் மொத்தம் 72 மூப்பர்கள் இருந்திருப்பார்கள்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமாயிருக்கிறவர்களை கூட்டிச் சேர்க்கவேண்டும். அவர்களை ஆசரிப்புக்கூடாரத்திலே தன்னோடுகூட நிற்கும்படி செய்யவேண்டும். எகிப்து தேசத்திற்கு முதல் முதல் போன யாக்கோபின் சந்ததியார் எழுபது பேராயிருக்கிறார்கள். அவர்கள் இப்போது இஸ்ரவேல் புத்திரராக திரளாய்ப் பலுகிப் பெருகியிருக்கிறார்கள்.

எகிப்து தேசத்திற்குப்போன எழுபது பேருக்கு அடையாளமாக, மோசே எழுபது பேரைக் கூட்டிச்சேர்க்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் மோசேயோடுகூட ஜனங்களின் பாரத்தை சுமப்பார்கள். கர்த்தர் மோசேயின்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைத்து, ஜனங்களின் பாரத்தை சுமப்பதற்கு அவர்களையும் தகுதிப்படுத்துவார்.

இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் பாரத்தைக் குறித்து சிறிதும் கவலைப்படவில்லை. அவர்கள் இறைச்சியைக் குறித்து இச்சையுள்ளவர்களாயிருக்கிறார்கள். தாங்கள் எகிப்து தேசத்தில் புசித்த இறைச்சிகளையும், காய்களையும், பூண்டுகளையும் நினைத்து அவர்களுடைய உள்ளம் வாடிப்போயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இறைச்சியைக் குறித்து மாத்திரமே கரிசனையோடிருக்கிறார்கள். மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, இஸ்ரவேல் ஜனங்களுடைய இச்சையைப்பற்றியும் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஜனங்களை நோக்கி: நாளைக்காக உங்களைப் பரிசுத்தம் பண்ணுங்கள்; நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள்; எங்களுக்கு இறைச்சி சாப்பிடக் கொடுப்பவர் யார் என்றும், எகிப்திலே எங்களுக்குச் சௌக்கியமாயிருந்தது என்றும், கர்த்தருடைய செவிகள்கேட்க அழுதீர்களே; ஆகையால், நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார்" (எண் 11:18) என்று சொல்லச்சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார்.

மெய்யான தீர்க்கதரிசனம் ஏற்ற சமயத்தில் நிச்சயமாய் நிறைவேறும். அதில் தேவனுடைய சித்தமும் விளங்கும். தீர்க்கதரிசனங்களைத் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் நியாயந்தீர்க்க வேண்டும். இங்கு கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் உடனடியாக நிறைவேறிற்று. ஆகையினால் இது தெய்வீக தீர்க்கதரிசனமாகும். இந்தத் தீர்க்கதரிசனத்தில் காணப்படும் விசேஷித்த அம்சங்கள்

1. இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் காலம் நாளைக்கு என்று துல்லியமாகக் கூறப்பட்டிருக்கிறது. (எண் 11:18).

2. இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் மாம்சம் புசிப்பார்கள் என்று நடைபெறப்போகும் காரியம் இந்தத் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

3. கர்த்தர் சாப்பிடும்படி இறைச்சியைக் கொடுப்பார் என்று கொடுக்கிறவரைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

4. இதுபோன்ற தீர்க்கதரிசனத்தை மனுஷ ஞானத்தினால் யாரும் கூறமுடியாது. லட்சணக்கணக்கான ஜனங்களுக்கு இறைச்சியைப் புசிக்கக் கொடுப்பது என்பது ஒரு தெய்வீகக் காரியம். (எண் 11:19-20).

5. ஒருமாதக்காலம் வரைக்கும் இறைச்சியைத் தெவிட்டிப்போகுமட்டும் புசிப்பார்கள் என்று ஒரு காலஅளவும் நிர்ணயம் பண்ணப்பட்டிருக்கிறது.

6. இறைச்சியைச் சாப்பிட்ட பின்பு, அவர்களுக்கு வரும் வாதையைப் பற்றியும் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

7. கர்த்தர் வாக்குத்தத்தத்தைக் காப்பாற்ற மாட்டார் என்று இஸ்ரவேலர்கள் கர்த்தரை அசட்டைபண்ணியதின் நிமித்தமாக அவர்களுக்கு மாம்சம் சாப்பிடக் கொடுக்கப்பட்டது என்று இதற்கான காரணமும் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. (எண் 11:20).

இஸ்ரவேல் புத்திரர் தங்களை பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய இரக்கமும் நியாயத்தீர்ப்பும் வெளிப்படப்போகிறது. அதை சந்திப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தார் தங்களை ஆயத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். தேவனுடைய வல்லமைக்கு அடையாளமான காரியங்கள் ஜனங்கள் மத்தியிலே நடைபெறப்போகிறது. அதை எதிர்கொள்வதற்கு இஸ்ரவேல் புத்திரர், தங்களை பரிசுத்தம்பண்ணிக்கொண்டு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குத்தத்தத்தையும் சொல்லுகிறார். அந்த வாக்குத்தத்தத்தின் மூலமாக கர்த்தர் அவர்களை எச்சரிக்கவும் செய்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பசியில்லாவிட்டாலும் அவர்கள் இறைச்சிக்காக இச்சையோடிருக்கிறார்கள். அவர்கள் இச்சிக்கிற இறைச்சியை அவர்களுக்கு கொடுப்பதாக கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். "நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார்" என்று மோசேயை ஜனங்களுக்கு சொல்லச்சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு இறைச்சி தாராளமாய்க் கிடைக்கும். அவர்கள் இச்சித்ததைவிட அவர்களுக்கு அதிகமாய்க் கொடுக்கப்படும்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, "நீங்கள் ஒருநாள், இரண்டுநாள், ஐந்துநாள், பத்துநாள், இருபதுநாள் மாத்திரமல்ல, ஒரு மாதம்வரைக்கும் புசிப்பீர்கள்; அது உங்கள் மூக்காலே புறப்பட்டு, உங்களுக்குத் தெவிட்டிப்போகுமட்டும் புசிப்பீர்கள்; உங்களுக்குள்ளே இருக்கிற கர்த்தரை அசட்டைபண்ணி, நாங்கள் ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோம் என்று அவருக்கு முன்பாக அழுதீர்களே" (எண் 11:19,20) என்று கர்த்தருடைய வார்த்தையை சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய செவிகள் கேட்க அழுகிறார்கள். எண் 11:1 ஆவது வசனத்தில் இஸ்ரவேல் புத்திரர் முறையிடுவதைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் கலகம் பண்ணுவதற்கு இதுவே காரணம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களின் விவரம் வருமாறு :

1. முறையிடுதல் (எண் 11:1,18-20)
2. மாம்சத்தின் இச்சை (எண் 11:4)
3. தேவனுக்கு எதிராக அழுவதும், துக்கமாயிருப்பதும் (எண் 11:4,10,18,20)
4. கடந்தகாலத்தை நினைத்து, எகிப்தை விட்டுப் புறப்பட்டதற்காக வருத்தப்படுதல் (எண் 11:5,20)
5. கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தல் (எண் 11:5-6)
6. அன்றாடத்தேவைகளைக் கர்த்தர் சந்திப்பதில் அதிருப்தியடைதல். (எண் 11:6,18-20)
7. தேவனுக்குக் கோபமூட்டுதல் (எண் 11:1,10)
8. தங்கள் தலைவருக்குக் கோபமூட்டி, தேவனுக்கு எதிராக அவரையும் பாவம் செய்ய வைப்பது. (எண் 11:10-15)
9. தேவனுடைய வல்லமையில் அவிசுவாசத்தை வெளிப்படுத்துதல் (எண் 11:4,6,18-23)
10. கர்த்தரை அசட்டைபண்ணுதல் (எண் 11:20)

கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுமா என்னும் சந்தேகம் மோசேக்கு வந்திருக்கிறது. அவர் கர்த்தருடைய வல்லமையின் கரத்தை நோக்கிப் பார்க்காமல், திரளான இஸ்ரவேல் ஜனங்களின் தலைகளையும் வாய்களையும் பார்க்கிறார். அவர்கள் ஒரு மாதம் வரைக்கும் இறைச்சியைப் புசிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரோ, காலாட்கள் மாத்திரம் ஆறுலட்சம் பேராயிருக்கிறார்கள். அவ்வளவு பேருக்கும், ஒரு மாதம் வரைக்கும் இறைச்சியைக் கொடுக்கவேண்டுமென்றால், ஏராளமான இறைச்சி தேவைப்படும். இஸ்ரவேல் புத்திரரின் பாளயத்திலே அவ்வளவு இறைச்சி இல்லை. கர்த்தர் அவ்வளவு இறைச்சியை எவ்வாறு கொடுப்பார் என்பதும் மோசேக்கு தெரியவில்லை.

மோசே தன் மனதிலுள்ள சந்தேகத்தை தனக்குள்ளே வைத்துக்கொள்ளாமல், அதைக் கர்த்தரிடத்தில் கேட்கிறார். மோசே கர்த்தரை நோக்கி, "என்னோடிருக்கிற காலாட்கள் ஆறுலட்சம் பேர்; ஒரு மாதம் முழுவதும் புசிக்கும்படி அவர்களுக்கு இறைச்சி கொடுப்பேன் என்று சொன்னீரே. ஆடுமாடுகளை அவர்களுக்காக அடித்தாலும் அவர்களுக்குப் போதுமா? சமுத்திரத்து மச்சங்களையெல்லாம் அவர்களுக்காகச் சேர்த்தாலும் அவர்களுக்குப் போதுமா" (எண் 11:21,22) என்று கேட்கிறார்.

தேவனுடைய வல்லமையினால் பல அற்புதங்கள் நடைபெறுகின்றன. லட்சணக்கணக்கான ஜனங்களுக்கு ஒருமாதக் காலத்திற்கு இறைச்சியைக் கொடுப்பது மிகப்பெரிய காரியம். மோசே மனுஷரீதியாக இதைச் சிந்தித்துப் பார்க்கிறார். ஆடுமாடுகளும், சமுத்திரத்து மச்சங்களும் அவர்களுக்குப் போதாது என்று மனுஷரீதியாகத் தேவனிடத்தில் முறையிடுகிறார் (எண் 11:21-22).

கர்த்தருடைய கை குறுகியிருக்கவில்லை. ஆனால் மோசேயின் விசுவாசமோ குறுகியிருக்கிறது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள், மோசேயைப்போலவே, சந்தேகத்தோடு கேட்டார்கள்.

"அந்த நாட்களிலே திரளான ஜனங்கள் கூடிவந்திருக்கையில், அவர்கள் சாப்பிடுகிறதற்கு ஒன்றுமில்லாதபோது, இயேசு தம்முடைய சீஷரை அழைத்து: ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்த மூன்றுநாளாய்ச் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால், நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்துபோவார்களே என்றார். அதற்கு அவருடைய சீஷர்கள்: இந்த வனாந்தரத்திலே ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டுவந்து இத்தனை பேர்களைத் திருப்தியாக்கக்கூடும் என்றார்கள்" (மாற் 8:1-4).

மோசேயோடு கூடயிருக்கிற காலாட்களின் எண்ணிக்கை ஆறு லட்சம் பேர் என்பது உண்மைதான். அதே வேளையில் அத்தனைபேருக்கும், ஒரு மாதம் வரைக்கும் இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பதற்கு கர்த்தருடைய கை குறுகியிருக்கவில்லை என்பதும் உண்மையான சத்தியம். கர்த்தருடைய வல்லமை பெரியது. அவர் சர்வவல்லமையுள்ளவர்.

நம்முடைய விசுவாசம் குறைவுள்ளதாகயிருக்கிறது. நமது குறைவான விசுவாசத்தின் பிரகாரமாக, கர்த்தருடைய வல்லமையை மட்டுப்படுத்த முயற்சிபண்ணுகிறோம். நம்முடைய விசுவாசத்தின் அளவுக்குத்தக்கதாக கர்த்தருடைய கை ஒருபோதும் குறுகிப்போகாது. அவருடைய வல்லமை எப்போதுமே சர்வவல்லமையாகவே இருக்கும். விசுவாசிகளாகிய நாம், நம்முடைய விசுவாசத்தின் அளவை அதிகரித்துக்கொள்ளவேண்டும். நம்முடைய விசுவாசம் குறைவாகயிருக்குமென்றால், அதை வர்த்திக்கப்பண்ணுமாறு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சாப்பிடும்படிக்கு இறைச்சியை கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அவர் எப்படிப்பட்ட இறைச்சியைக் கொடுப்பார் என்பது மோசேக்கு தெரியாது. அவர் ஆடுமாடுகளையும், சமுத்திரத்து மச்சங்களையும் நினைத்துப் பார்க்கிறார். மோசேயால் பறவைகளை நினைத்துப் பார்க்க முடியவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் பறவைகளை புசிக்கக்கொடுப்பார் என்னும் எண்ணம் மோசேயின் மனதில் உண்டாகவில்லை.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு புசிக்கும்படி இறைச்சியைக் கொடுக்க தங்களிடத்திலுள்ள ஆடுமாடுகள் போதாது என்று மோசே நினைக்கிறார். சமுத்திரத்தின் மச்சங்களும் அவர்களுக்கு போதுமானதாயிராது என்று மோசே அவிசுவாசத்தோடு சொல்லுகிறார். மோசே கர்த்தருடைய பரிபூரணமான வல்லமையை இன்னும் அறிந்துகொள்ளவில்லை.

கர்த்தர் மோசேயை நோக்கி, "கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று, நீ இப்பொழுது காண்பாய்" (எண் 11:23) என்று சொல்லுகிறார்.

"கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ?" என்று கர்த்தர் மோசேயிடம் கேள்வி கேட்கிறார். தேவன் கேள்விகேட்கக்கூடியவர். தேவன் கூறும் பதில்கள் பல சமயங்களில் கேள்வி வடிவங்களிலேயே இருக்கும்.

"என் வார்த்தையின்படி நடக்குமோ நடவாதோ என்று, நீ இப்பொழுது காண்பாய்" என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். தேவனால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. பொய்கூறுவதற்கு அவர் ஒரு மனுபுத்திரரும் அல்ல. அவருடைய வாயின் ஒவ்வொரு வார்த்தையும் நிறைவேறும்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். ஆரம்பகாலத்திலேயே கர்த்தர் தம்மை மோசேக்கு, சர்வவல்லமையுள்ள தேவனாகவே வெளிப்படுத்தினார். ஆனால் மோசே கர்த்தரைப்பற்றிய சத்தியத்தை இன்னும் சரியாக புரிந்துகொள்ளவில்லை. கர்த்தர் இப்போது தம்முடைய சர்வவல்லமையை மோசேக்கு வெளிப்படுத்த சித்தமுள்ளவராயிருக்கிறார்.

அற்புதம் செய்வதற்கு கர்த்தருடைய கை குறுகியிருக்கவில்லை என்பதையும், அவர் நேற்றும் இன்றும் என்றும் சர்வவல்லமையுள்ள தேவனாகவே இருக்கிறார் என்பதையும் கர்த்தர் மோசேக்கு தெளிவுபடுத்துகிறார். மோசே கர்த்தருடைய ஊழியக்காரர். அவர் கர்த்தரைப்பற்றி அறிந்திருக்கவேண்டும். நாம் ஆராதிக்கிறவர் இன்னார் என்பதை அறிந்திருந்தால் மாத்திரமே, நம்மால் கர்த்தரைப்பற்றி மற்றவர்களுக்கு பகிர்ந்து சொல்ல முடியும்.

எழுபது மூப்பர்
எண் 11:24-30

எண் 11:24. அப்பொழுது மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரைச் கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தினான்.

எண் 11:25. கர்த்தர் மேகத்தில் இறங்கி, அவனோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர் மேலும் வைத்தார்; அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கினமாத்திரத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்; சொல்லி, பின்பு ஓய்ந்தார்கள்.

எண் 11:26. அப்பொழுது இரண்டுபேர் பாளையத்தில் இருந்துவிட்டார்கள்; ஒருவன்பேர் எல்தாத், மற்றவன் பேர் மேதாத்; அவர்களும் பேர்வழியில் எழுதப்பட்டிருந்தும், கூடாரத்துக்குப் போகப் புறப்படாதிருந்தார்கள்; அவர்கள்மேலும் ஆவி வந்து தங்கினதினால், பாளையத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

எண் 11:27. ஒரு பிள்ளையாண்டான் ஓடிவந்து, எல்தாதும் மேதாதும் பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள் என்று மோசேக்கு அறிவித்தான்.

எண் 11:28. உடனே மோசேயினிடத்திலுள்ள வாலிபரில் ஒருவனும் அவனுடைய ஊழியக்காரனும் நூனின் குமாரனாகிய யோசுவா பிரதியுத்தரமாக: என் ஆண்டவனாகிய மோசேயே, அவர்களைத் தடைபண்ணும் என்றான்.

எண் 11:29. அதற்கு மோசே: நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே என்றான்.

எண் 11:30. பின்பு, மோசேயும் இஸ்ரவேலின் மூப்பரும் பாளயத்திலே வந்து சேர்ந்தார்கள்.

“இந்த ஜனங்களெல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது” (எண் 11:14) என்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணினார்.

கர்த்தர் மோசேக்கு பிரதியுத்தரமாக, இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடே கூட வந்து நிற்கும்படி செய் (எண் 11:16) என்று சொன்னார்.

அப்பொழுது மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரைச் கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்துகிறார் (எண் 11:24).

இந்த எழுபது பேரும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பர்களாகவும், தலைவர்களாகவும் இருக்கிறார்கள். மோசே சிறிது நேரம் கர்த்தரிடத்தில் அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசினாலும், இப்போது மறுபடியுமாய் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் தனக்கு சொன்ன பிரகாரம் ஒவ்வொரு காரியமாகச் செய்கிறார்.

மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் ஜனங்களுக்கு சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மோசே இப்போது முழுவதுமாய் விசுவாசிக்கிறார். கர்த்தர் சொன்ன பிரகாரம், இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு மாதம் முழுவதும் புசிக்கும்படி இறைச்சி கொடுப்பார் என்பதை மோசே நம்புகிறார். அந்த வார்த்தைகளை மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் சொன்ன பிரகாரம் மோசே எழுபது மூப்பர்களையும் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் நிறுத்துகிறார். இதுவே மோசேயால் செய்ய முடிகிற வேலை. கர்த்தர் தனக்கு சொல்லுகிற வேலையை மோசே ஒழுங்காய்ச் செய்கிறார். கர்த்தருடைய பிரசன்னம் ஆசரிப்புக்கூடாரத்தில் வெளிப்படுகிறது. அங்கே அவருடைய கிருபையும் இரக்கமும் வெளிப்படுகிறது. கர்த்தர் உடன்படிக்கைப் பெட்டிக்கு நடுவிலிருந்து மோசேயோடு பேசுவார்.

கர்த்தர் மேகத்தில் இறங்கி, மோசேயோடே பேசி, மோசேயின் மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர் மேலும் வைக்கிறார்; அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கினமாத்திரத்தில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள்; சொல்லி, பின்பு ஓய்கிறார்கள் (எண் 11:25).

கர்த்தர் மேகத்தில் இறங்கி, மோசேயோடே பேசி, அவர்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர் மேலும் வைக்கிறார். எண் 11:17 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் இங்கு நிறைவேறுகிறது. மோசேக்கு இப்போதுள்ள அபிஷேகம் அளவுக்கு அதிகமாக இருக்கிறது. அவ்வளவு அபிஷேகமும் மோசேக்குத் தேவையில்லை. மோசேயினிடத்திலுள்ள ஆவியானவரின் அபிஷேகத்தை மற்ற தலைவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டும்.

மோசேயின் மாமனாகிய எத்திரோ ஜனங்களை நியாயம் விசாரிப்பதற்கு தலைவர்களை நியமிக்குமாறு மோசேயிடம் கூறினார். மோசே தன் மாமனுடைய ஆலோசனையை ஏற்று, பத்துபேர், ஐம்பதுபேர், நூறுபேர், ஆயிரம்பேர் ஆகியோருக்குத் தலைவர்களை நியமித்தார். இவர்கள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் உண்டாகும் வழக்குகளை விசாரித்தார்கள் (எண் 11:25-29; யாத் 18:14-27; உபா 1:12-16).

அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கினமாத்திரத்தில் அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் ஒருவர்மீது வந்து அவரை அபிஷேகம் பண்ணும் போது, அவரிடத்தில் ஆவியானவருடைய கிரியைகள் வெளிப்படும். (2கொரி 12:1-11).

அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்ன பின்பு ஓய்ந்தார்கள். அவர்கள் குறிப்பிட்ட சமயத்தில் மட்டும் தீர்க்கதரிசனம் கூறினார்கள். அதன்பின்பு, அவர்கள் தீர்க்கதரிசனம் கூறவில்லை. மூப்பர்களுக்கு கொடுக்கப்பட்ட அபிஷேகம் தீர்க்கதரிசனம் கூறுவதற்காக அல்ல. நியாயம் விசாரிப்பதற்காகவும், ஆளுகை செய்வதற்காகவும் அவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். மற்றவர்கள் ஓய்ந்த பின்பு, இரண்டுபேர் மட்டும் பாளயத்தில் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

இந்த வசனப்பகுதியில் மூப்பர்களில் இரண்டு பேராகிய எல்தாத், மேதாத் ஆகியோரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் பாளையத்தில் இருந்துவிடுகிறார்கள்; அவர்களும் பேர்வழியில் எழுதப்பட்டிருந்தும், கூடாரத்துக்குப் போகப் புறப்படாதிருக்கிறார்கள்; அவர்கள்மேலும் ஆவி வந்து தங்கினதினால், பாளையத்தில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள் (எண் 11:26).

எல்தாத்தும், மேதாத்தும் ஆசரிப்புக் கூடாரத்திற்குப் போவதற்குப் பதிலாகப் பாளயத்திலேயே தங்கியிருக்கிறார்கள். ஆசரிப்புக் கூடாரத்தில்தான் தீர்க்கதரிசனம் கூறவேண்டுமென்று யோசுவா நினைக்கிறான். ஆனால் மோசேயோ தீர்க்கதரிசனம் சொன்னவர்களைத் தடைபண்ணாமல், கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப் பண்ணினால் நலமாயிருக்குமே என்று கூறுகிறார் (எண் 11:27-29).

இஸ்ரவேலின் மூப்பர்கள் எல்லோரும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வந்திருக்கும்போது, இவர்கள் இருவர் மாத்திரம், ஆசரிப்புக்கூடாரத்திற்கு வராமல் தங்கள் கூடாரத்திலே இருந்துவிடுகிறார்கள். மோசே கூட்டிச்சேர்க்க தீர்மானித்திருந்த எழுபது மூப்பர்களில், இவர்கள் இருவரும் அடங்குவார்கள். ஆனால் இவர்கள் இருவரும் தங்கள் கூடாரங்களிலேயே இருந்துவிடுகிறார்கள்.

மோசே இவர்களை கவனிக்கவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் இவர்களை கவனிக்கிறார். இவர்கள் இருவரும் கூடாரத்திற்கு வராமல், தங்கள் பாளயத்திலேயே இருந்துவிட்டதை பரிசுத்த ஆவியானவர் கண்டுபிடிக்கிறார். மூப்பர்கள் இருவரும் மற்ற மூப்பர்களோடுகூட ஆசரிப்புக்கூடாரத்திற்கு வராமல், பாளயத்திலுள்ள தளவாடங்கள் மத்தியிலே இருக்கிறார்கள்.

அவர்கள் மேலும் ஆவியானவர் வந்து தங்குகிறார். அவர்கள் இருவரும் தாங்கள் இருக்கும் பாளயத்தில் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். மூப்பர்கள் இருவரும் பாளயத்திலுள்ள தளவாடங்கள் மத்தியிலே தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். கர்த்தர் அவர்களுக்கு ஜெபிக்கும் வரத்தையும், தீர்க்கதரிசனம் சொல்லும் வரத்தையும், தேவனைத் துதிக்கும் வரத்தையும் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற வரங்களை, இரண்டு மூப்பரும் பாளயத்திலே பயன்படுத்துகிறார்கள்.

இவ்விரண்டு மூப்பர்களும் மற்ற மூப்பர்களோடு சேர்ந்து ஆசரிப்புக்கூடாரத்திற்கு வராமலிருப்பது தேவனுடைய தெய்வீக சித்தமாகவும், அவருடைய தெய்வீக வழிநடத்துதலாகவும் இருக்கிறது. ஆசரிப்புக்கூடாரத்தில் கூடிவந்திருக்கிற மூப்பர்களை, மோசே தன்னுடைய ஆவியினால் அபிஷேகம்பண்ணவில்லை. கர்த்தரே மேகத்திலிருந்து இறங்கி மோசேயின் மேலிருந்த ஆவியை, ஆசரிப்புக்கூடாரத்தில் கூடிவந்திருக்கிற மூப்பர்கள்மேல் வைக்கிறார்.

தம்முடைய பரிசுத்த ஆவியினால் அபிஷேகம்பண்ணுகிறவர் கர்த்தரே என்னும் சத்தியத்தை தெளிவுபடுத்துவதற்காகவும், உறுதிபடுத்துவதற்காகவும், மூப்பர்களில் இரண்டுபேர் பாளயத்திலேயே தங்கியிருக்கிறார்கள். மோசே அவர்களோடு பாளயத்தில் இல்லை. ஆனாலும் கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் வந்து தங்கின மாத்திரத்தில், அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

பாளயத்தில் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களைப்பற்றிய செய்தி மோசேக்கு உடனே அறிவிக்கப்படுகிறது. ஒரு பிள்ளையாண்டான் ஓடிவந்து, எல்தாதும் மேதாதும் பாளயத்தில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள் என்று மோசேக்கு அறிவிக்கிறான் (எண் 11:27).

இந்தப் பிள்ளையாண்டான் யார் என்பது தெரியவில்லை. ஆனாலும் பாளயத்தில் எல்தாதும் மேதாதும் தீர்க்கதரிசனம் சொல்லுவது, அவனுடைய பார்வையில் ஒழுங்கும் கிரமமுமாகயில்லை. அவர்கள் இருவரும் ஆசரிப்புக்கூடாரத்திலே மற்ற மூப்பர்களோடு சேர்ந்திருக்காமல், பாளயத்தில் தனியாயிருந்து தீர்க்கதரிசனம் சொல்லுவது தாறுமாறான காரியம் என்று அந்தப் பிள்ளையாண்டான் நினைக்கிறான். ஆகையினால் அவன், அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவதைப் பார்த்தவுடன் ஓடி வந்து, மோசேயினிடத்தில் அதைப்பற்றி அறிவிக்கிறான்.

அந்தப் பிள்ளையாண்டான் மோசேயினிடத்தில் இந்தச் செய்தியைச் சொல்லும்போது, மோசேயோடுகூட யோசுவா இருக்கிறார். ஆசரிப்புக்கூடாரத்தில் கூடிவந்திருக்கிற எழுபது மூப்பர்களில் யோசுவாவும் ஒருவராகயிருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

உடனே மோசேயினிடத்திலுள்ள வாலிபரில் ஒருவனும், அவருடைய ஊழியக்காரனும் நூனின் குமாரனாகிய யோசுவா பிரதியுத்தரமாக, "என் ஆண்டவனாகிய மோசேயே, அவர்களைத் தடைபண்ணும்" (எண் 11:28) என்று சொல்லுகிறார்.

பாளயத்தில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற இரண்டு மூப்பர்களும் தண்டிக்கப்படவேண்டும் என்று யோசுவா சொல்லவில்லை. அவர்கள் வரும் காலத்தில் இதுபோல தனிமையாக தீர்க்கதரிசனம் சொல்லக்கூடாது. அவர்களை தடைபண்ணவேண்டும் என்று மாத்திரமே யோசுவா சொல்லுகிறார்.

ஆனால் மோசே யோசுவாவின் யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை. மோசே யோசுவாவை நோக்கி, "நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே" (எண் 11:29) என்று சொல்லுகிறார்.

யோசுவா மோசேயின் நெருங்கிய சிநேகிதர். அவர் மோசேயின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர். யோசுவா மோசேயின்மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார். மோசேயும் யோசுவாவின்மீது அன்பாயிருக்கிறார். ஆனாலும் யோசுவாவின் யோசனையை மோசே நிராகரித்துவிடுகிறார். யோசுவா கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாகப் பேசும்போது, மோசே அவரைத் தடைபண்ண தயங்கவில்லை.

"அப்பொழுது யோவான் அவரை நோக்கி: போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு: அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்குசொல்லமாட்டான். நமக்கு விரோதமாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான்" (மாற் 9:38-40) என்றார்.

கர்த்தர் அங்கீகரிக்கிறவர்களை நாமும் அங்கீகரிக்கவேண்டும். அவர்களை ஒதுக்கி தள்ளிவிடக்கூடாது. அதுபோலவே கர்த்தர் அங்கீகரிக்கும் காரியங்களை நாமும் அங்கீகரிக்கவேண்டும். அந்தக் காரியங்கள் கர்த்தருக்கு சித்தமானவை. கர்த்தருக்கு சித்தமான காரியங்களை நாம் தடைபண்ண நினைக்கக்கூடாது.

பாளயத்திலே இரண்டு மூப்பரும் தீர்க்கதரிசனம் சொல்லுகிற விஷயத்தில், யோசுவாவும் மோசேயும் வெவ்வேறாக சிந்திக்கிறார்கள். அவர்களை தடைபண்ணவேண்டுமென்று யோசுவா விரும்புகிறார். அவர்களை தடைபண்ணக்கூடாது என்று மோசே சொல்லுகிறார். அது மாத்திரமல்ல "கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே" (எண் 11:29) என்றும் மோசே சொல்லுகிறார்.

மோசே இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் ஒருவராய்த் தாங்கினார். அது அவருக்கு மிஞ்சின பாரமாயிருந்தது. மோசே மாத்திரம் இஸ்ரவேல் ஜனங்களின் பாரத்தை சுமக்காமல், இஸ்ரவேலின் மூப்பர்கள்மேல் கர்த்தர் அந்தப் பாரத்தை வைக்கிறார். இப்போது இஸ்ரவேலின் மூப்பர்கள் எல்லோருமாக சேர்ந்து, ஜனங்களின் பாரத்தை சுமக்கிறார்கள்.

கர்த்தருடைய ஆவியானவர் மூப்பர்கள்மேல் தங்கியிருக்கிறார் என்பதற்கு அடையாளமாக, அவர்கள் எல்லோரும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். பின்பு, மோசேயும் இஸ்ரவேலின் மூப்பரும் பாளயத்திலே வந்து சேருகிறார்கள் (எண் 11:30). மோசேயோடுகூட மூப்பரும் சேர்ந்து இஸ்ரவேல் ஜனங்களின் பாரங்களை சுமக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை வனாந்தரத்திலே வழிநடத்துவதற்கு, மோசேக்கு உதவி செய்கிறார்கள்.

காடைகள்
எண் 11:31-35

எண் 11:31. அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக்கொண்டு வந்து, பாளயத்திலும் பாளயத்தைச் சுற்றிலும், இந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணமட்டும் அந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணமட்டும், தரையின்மேல் இரண்டு முழ உயரம் விழுந்துகிடக்கச் செய்தது.

எண் 11:32. அப்பொழுது ஜனங்கள் எழும்பி, அன்று பகல்முழுவதும், இராமுழுவதும், மறுநாள் முழுவதும் காடைகளைச் சேர்த்தார்கள்; கொஞ்சமாய்ச் சேர்த்தவன் பத்து ஓமர் அளவு சேர்த்தான்; அவைகளைப் பாளையத்தைச் சுற்றிலும் தங்களுக்காகக் குவித்துவைத்தார்கள்.

எண் 11:33. தங்கள் பற்கள் நடுவே இருக்கும் இறைச்சியை அவர்கள் மென்று தின்னுமுன்னே கர்த்தருடைய கோபம் ஜனங்களுக்குள்ளே மூண்டது; கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதித்தார்.

எண் 11:34. இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம்பண்ணினதினால், அந்த ஸ்தலத்துக்குக் கிப்ரோத் அத்தாவா என்று பேரிட்டான்.

எண் 11:35. பின்பு, ஜனங்கள் கிப்ரோத் அத்தாவா என்னும் இடத்தைவிட்டு, ஆஸரோத்துக்குப் பிரயாணம் பண்ணி, ஆஸரோத்திலே தங்கினார்கள்.

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களின் பாரங்களை சுமப்பதற்கு, கர்த்தர் மூப்பர்களை நியமனம் செய்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இறைச்சி சாப்பிடவேண்டும் என்று இச்சித்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய வார்த்தையின் பிரகாரம் இறைச்சியைப் புசிக்கக் கொடுக்கிறார்.

அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு காற்று சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக்கொண்டு வந்து, பாளையத்திலும் பாளையத்தைச் சுற்றிலும், இந்தப்பக்கம் ஒருநாள் பிராயணமட்டும் அந்தப்பக்கம் ஒருநாள் பிரயாணமட்டும், தரையின்மேல் இரண்டு முழ உயரம் விழுந்துகிடக்கச் செய்கிறது (எண் 11:31).

இந்தக் காற்று கர்த்தரிடத்திலிருந்து வந்த காற்றாகும். இஸ்ரவேலரின் பாளயத்தைச் சுற்றிலும் இந்தக் காற்று காடைகளை அடித்துக் கொண்டு வருகிறது. லட்சக்கணக்கான காடைகள் ஒரே நேரத்தில் வந்து சேர்ந்ததும் மிகப்பெரிய அற்புதமாகும். அப்பொழுது ஜனங்கள் எழும்பி, அன்று பகல்முழுவதும், இராமுழுவதும், மறுநாள் முழுவதும் காடைகளைச் சேர்க்கிறார்கள். கொஞ்சமாய் சேர்த்தவன்கூட பத்து கூடைகள் நிறையச்சேர்க்கிறான். அவைகளைப் பாளயத்தைச் சுற்றிலும் தங்களுக்காகக் குவித்துவைக்கிறார்கள். ஒருவேளை காடைகளின் இறகுகளைப் பிரித்து அவைகளைப் பாளயத்தைச் சுற்றிலும் குவித்து வைத்திருக்கலாம்.

கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட காற்று என்பது, கீழ்க்காற்றாக இருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"ஆகாசத்திலே கீழ்காற்றை வரப்பண்ணி, தம்முடைய வல்லமையினால் தென்றலையும் வீசச்செய்து, மாம்சத்தைத் தூளத்தனையாயும், சிறகுள்ள பறவைகளைக் கடற்கரை மணலத்தனையாயும் வருஷிக்கப்பண்ணி, அவைகளை அவர்கள் பாளயத்தின் நடுவிலும், அவர்கள் கூடாரங்களைச் சுற்றிலும் இறங்கப்பண்ணினார்" *(சங் 78:26-28).*

காடைகள் என்பது எப்படிப்பட்ட பறவைகள் என்று தெளிவாக தெரியவில்லை. இவை சிறகுள்ள பறவைகள் என்று சங்கீதக்காரர் சொல்லுகிறார். காடைகள் என்பது வெட்டுக்கிளிகளை குறிக்கலாம் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். பாலஸ்தீன தேசத்தில் வெட்டுக்கிளிகளானது சுவை மிகுந்த போஜனமாக கருத்தப்பட்டது. இவை காற்றில் குவியல் குவியலாக அடித்துக் கொண்டு வரப்படும். சூரிய உஷ்ணத்திலே இவை எல்லாம் உலர்ந்துபோகும். இவற்றைப் புசிப்பதற்கு சுவையாகயிருக்கும்.

காடைகள் என்பது எப்படிப்பட்ட பறவைகளாகயிருந்தாலும், அவை இஸ்ரவேல் புத்திரர் புசிப்பதற்கு இறைச்சியைக் கொடுக்கிறது. அவர்கள் ஒரு மாதம் வரைக்கும் புசிப்பதற்குத் தேவையான காடைகளை சேகரிக்கிறார்கள்.

அப்பொழுது ஜனங்கள் எழும்பி, அன்று பகல்முழுவதும், இராமுழுவதும், மறுநாள் முழுவதும் காடைகளைச் சேர்க்கிறார்கள்; கொஞ்சமாய்ச் சேர்த்தவன் பத்து ஓமர் அளவு சேர்க்கிறான்; அவைகளைப் பாளையத்தைச் சுற்றிலும் தங்களுக்காகக் குவித்துவைக்கிறார்கள் *(எண் 11:32).*

இஸ்ரவேல் புத்திரர் இறைச்சியை இச்சிக்கிறார்கள். மாம்சத்தின் இச்சைக்கு கீழ்ப்படிவது கர்த்தருக்கு விரோதமான பாவம். இதன் நிமித்தமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது.

தங்கள் பற்கள் நடுவே இருக்கும் இறைச்சியை அவர்கள் மென்று தின்னுமுன்னே கர்த்தருடைய கோபம் ஜனங்களுக்குள்ளே மூளுகிறது; கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதிக்கிறார் (எண் 11:33). இந்த வாதையில் இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் செத்துப்போகிறார்கள்.

பல மாதங்களாக இஸ்ரவேல் புத்திரர்கள் மன்னாவை மட்டுமே போஜனமாகப் புசித்து வருகிறார்கள். அவர்களுடைய கலகக்குணத்தின் காரணமாகக் கர்த்தர் ஜனங்களை மகா பெரிய வாதையால் வாதிக்கிறார். ஏராளமான ஜனங்கள் வாதையினால் மாண்டுபோகிறார்கள் (எண் 11:33-34).

இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம்பண்ணுகிறார்கள். ஆகையினால் மோசே அந்த ஸ்தலத்துக்குக் கிப்ரோத் அத்தாவா என்று பேரிடுகிறார் (எண் 11:34). கிப்ரோத் அத்தாவா என்னும் பெயருக்கு இச்சையின் பிரேதக்குழிகள் அல்லது இச்சித்தவர்களின் பிரேதக்குழிகள் என்று பொருள்.

பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் கிப்ரோத் அத்தாவா என்னும் இடத்தைவிட்டு, ஆஸரோத்துக்குப் பிரயாணம் பண்ணி, ஆஸரோத்திலே தங்குகிறார்கள் (எண் 11:35).

சீனாய் வனாந்தரத்திற்குப் பின்பு இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கிய இடம் ஆஸரோத்தாகும். இது சீனாயிலிருந்து வடகிழக்காக நாற்பது மைல் தூரத்திலுள்ளது. இது காதேசிற்குப் போகும் பாதையிலுள்ளது.

12 அதிகாரம்

இதற்கு முந்தின அதிகாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் முறுமுறுத்த சம்பவம் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் மோசே அவர்கள்மீது எரிச்சலடைந்தார். இந்த அதிகாரத்திலோ மோசேயோடு கூட பிறந்த ஆரோனும் மிரியாமும், அவருக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். இதனால் மோசேக்கு தன் குடும்பத்தினர் மூலமாக பிரச்சனை வருகிறது.

மிரியாமும் ஆரோனும், மோசேயினுடைய மனைவியினிமித்தம் அவருக்கு விரோதமாகப் பேசுகிறார்கள் (எண் 12:1-3). கர்த்தர் மோசேயையும் ஆரோனையும், மிரியாமையும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு புறப்பட்டு வருமாறு சொல்லுகிறார் (எண் 12:6-9).

கர்த்தர் மிரியாமுக்கு தண்டனை கொடுக்கிறார். அவள் குஷ்டரோகியாகிறாள் (எண் 12:10). ஆரோன் மிரியாமுக்காக மோசேயினிடத்தில் பரிந்து பேசுகிறார் (எண் 12:14-16).

ஊழியக்காரர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகயிருந்தாலும், அவர்களிடத்திலும் போட்டி, பொறாமை, மனக்கசப்பு போன்ற மாம்சத்தின் சுபாவங்கள் வெளிப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

மிரியாமும் ஆரோனும் எண் 12:1-3

எண் 12:1. எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி:

எண் 12:2. கர்த்தர் மோசேயைக் கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையா என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்.

எண் 12:3. மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்.

மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் ஜனங்களுக்கு மூப்பரும் தலைவருமானவர்கள் இன்னார் என்று நீ அறிந்திருக்கிறாயே, அந்த மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தினிடத்தில் அங்கே உன்னோடே கூட வந்து நிற்கும்படி செய். அப்பொழுது நான் இறங்கிவந்து, அங்கே உன்னோடே பேசி, நீ ஒருவன் மாத்திரம் ஜனங்களின் பாரத்தைச் சுமக்காமல், உன்னோடே கூட அவர்களும் அதைச் சுமப்பதற்காக உன்மேல் இருக்கிற ஆவியை அவர்கள்மேலும் வைப்பேன்" (எண் 11:16,17) என்று சொன்னார்.

மோசே கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரைச் கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்துகிறார் (எண் 11:24).

மோசே ஜனங்களின் மூப்பரில் எழுபது பேரை தேர்ந்தெடுக்கும்போது, அது பற்றி ஆரோனையும் மிரியாமையும் கலந்து பேசவில்லையென்றும், மூப்பர்களை தெரிந்தெடுக்கும் விஷயத்தில் மோசே இவர்கள் இருவரையும் பயன்படுத்தவில்லை என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இதன் நிமித்தமாக மிரியாமுக்கும் ஆரோனுக்கும் மோசேயின்மீது பொறாமையும் கோபமும் உண்டாயிற்று என்பது வேதபண்டிதர்களின் விளக்கம்.

மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாக இரண்டு காரியங்களை பேசுகிறார்கள். அவையாவன : 1. மோசே எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை விவாகம்பண்ணியிருக்கிறார். 2. கர்த்தர் மோசேயைக்கொண்டு மாத்திரம் பேசாமல், தங்களைக் கொண்டும் பேசுகிறார்.

மோசேயினுடைய மனைவியின் பெயர் சிப்போராள். மிரியாமும் ஆரோனும் மோசேயின்மீது கோபமாயிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் தங்களுடைய கோபத்தை வெளிப்படுத்துவதற்காக, மோசேயின் மனைவியாகிய சிப்போராளை எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீ என்று ஏளனமாய்ச் சொல்லுகிறார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராயிருக்கிறார். மோசேயின் ஆளுகையில் அவருடைய மனைவியாகிய சிப்போராள் அதிகமாக தலையிடுகிறாள். ஆகையினால் மோசே ஜனங்களின் மூப்பரில் எழுபது பேரை தேர்ந்தெடுக்கும்போது, அவர் மிரியாம் ஆரோன் ஆகியோரின் ஆலோசனையையும், உதவியையும் நாடவில்லை. மோசே தன் மனைவியாகிய சிப்போராளின் ஆலோசனைபடி, ஜனங்களின் மூப்பரில் எழுபது பேரை தேர்ந்தெடுத்தார். இதனால் மிரியாமுக்கும் ஆரோனுக்கும் மோசேயின் மனைவியாகிய சிப்போராள்மீது கோபமுண்டாயிற்று. ஆகையினால் அவர்கள் மோசேயின் மனைவியை, "எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீ" என்று ஏளனமாகவும் கோபமாகவும் பேசுகிறார்கள். இவர்கள் இருவரும் மோசேக்கு விரோதமாக பேசினதற்கு இதுவே காரணம் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசினதற்கு வேறொரு காரணமும் உண்டு என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். மோசே, தன்னுடைய ஜீவியகாலத்தின் பின்பகுதியில், சிப்போராளை தவிர, எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீ ஒருத்தியையும் விவாகம்பண்ணியிருந்தார் என்றும் ஒரு கருத்துள்ளது. இவள் அரபு தேசத்து ஸ்திரீயாகவும் இருக்கலாம். இந்த ஸ்திரீ, மிரியாமையும் ஆரோனையும் மோசேக்கு அருகில் வரவிடவில்லை என்றும், இதனால் அந்த ஸ்திரீயின் நிமித்தம், இவர்கள் இருவரும் மோசேக்கு விரோதமாகப் பேசினார்கள் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் கருத்து சொல்லுகிறார்கள்.

மிரியாமும் ஆரோனும் மோசேயின் ஆளுகையையும், அவருடைய தலைமைத்துவத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. "கர்த்தர் மோசேயைக் கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையா" (எண் 12:2) என்று இருவரும் சொல்லுகிறார்கள். மோசே இஸ்ரவேல் புத்திரரை தன்னிச்சையாக ஆளுகை செய்கிறார் என்றும், ஜனங்களை ஆளுகை செய்யும் விஷயத்தில் தங்களுக்கு முக்கியத்துவமோ, பொறுப்புக்களோ கொடுக்கப்படவில்லை என்றும் இவர்கள் இருவரும் மோசேயின்மீது கோபப்படுகிறார்கள்.

மோசேக்கு எதிராகப் பேசியவர்களில் மிரியாமின் பெயர் முதலாவதாகக் கூறப்பட்டிருக்கிறது (ஆதி 3:2-6). ஆரோனும் தன் சகோதரியாகிய மிரியாமுடன் சேர்ந்துகொண்டு மோசேக்கு விரோதமாகத் தன்னுடைய வெறுப்பை இரகசியமாக வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

மோசேயின் மனைவி எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீ. மோசேக்கு எதிராக ஆரோனும், மிரியாமும் விரோதமாகப் பேசியதற்கு மோசேயின் மனைவி உண்மையிலேயே காரணமல்ல. தங்களுடைய இளைய சகோதரனின் வெற்றியை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மிரியாம் இஸ்ரவேலின் தீர்க்கதரிசினியாக இருந்தவள். இஸ்ரவேலின் ஸ்திரீகள் மத்தியில் அவளுக்கு மேன்மையான ஸ்தானம் இருந்தது. (யாத் 15:20-21) மோசே, ஆரோன் ஆகியோரின் சகோதரி என்னும் செல்வாக்கும் அவளுக்கு இருந்தது.

ஆனாலும், தன்னுடைய குடும்பத்தில் எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீ வந்ததினால், தனக்கு முக்கியத்துவம் குறைந்துபோயிற்று என்று மிரியாம் நினைக்கிறாள். எத்திரோ மோசேயின் மனைவியையும், அவன் குமாரரையும் மீதியான் தேசத்திலிருந்து சீனாய் வனாந்தரத்திற்கு அழைத்துவந்து மோசேயின் குடும்பத்தோடு சேர்த்து வைக்கிறார். அதோடு மோசேக்கு உதவி புரிவதற்காகத் தலைவர்களை நியமிக்குமாறும், மோசேக்கு ஆலோசனை சொல்லுகிறார் (யாத் 18:14-26).

மோசே தன்னுடைய மாமனையும், தன்னுடைய மாமன் மகனையும் தன்னோடு பிரயாணத்தில் கலந்து கொண்டு தங்களுக்கு உதவி புரியுமாறு அழைக்கிறார். (எண் 10:29-33). புதிதாக வந்தவர்களுக்கு மோசே முக்கியத்துவம் கொடுப்பது மிரியாமிற்குப் பிடிக்கவில்லை. தன்னுடைய மனக்கசப்பை ஆரோனோடு பகிர்ந்து கொள்கிறார். ஆரோனும், மிரியாமும் மோசேக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.

மோசேக்கு விரோதமாகப் பேசியதில் மிரியாம் முக்கியபங்கு வகித்ததினால், அவளுக்கு மட்டும் கர்த்தர் தண்டனையைக் கொடுக்கிறார். (எண் 12:10-15). ஆரோன் தன் சகோதரியின் சொல்லைக்கேட்டு, மோசேக்கு விரோதமாக பேசுகிறார். ஆரோன் எப்பொழுதுமே பிறர் சொல்லைக் கேட்கிறவர். அவர் ஏற்கெனவே இஸ்ரவேல் புத்திரரின் சொல்லைக்கேட்டு, பொன்கன்றுக்குட்டியைச் செய்தவர் (யாத் 32). இது அவருடைய பலவீனம். மோசேக்குப்பின்பு, ஆரோனால் அவருடைய ஸ்தானத்திற்கு வரமுடியவில்லை.

எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீ என்னும் இந்த வாக்கியத்திற்கு எபிரெய மொழியில் "கூஷித்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கூஷின் சந்ததியார் என்பது இதன் பொருள். கூஷ் காமின் குமாரன். (ஆதி 10:6-8; 1நாளா 1:8-10; ஏசா 11:11). வேறுசில வசனங்களில் இந்த வாக்கியம் கூஷி (2சாமு 18:21-32; எரே 36:14; செப் 1:1) என்றும், எத்தியோப்பியன் (எண் 12:1; 2நாளா 12:3; 2நாளா 14:9-13; 2நாளா 16:8; 2நாளா 21:16; ஏசா 20:4; எரே 13:23; எரே 38:7-12; எரே 39:16; எரே 46:9; எசே 30:9; தானி 11:43; ஆமோஸ் 9:7; செப் 2:12) என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

மோசே மீதியான் தேசத்து ஸ்திரீயை விவாகம் பண்ணியிருக்கிறார். இவள் மீதியான் தேசத்து ஆசாரியருடைய மகள். (யாத் 2:15-25; யாத் 3:1; யாத் 4:18-26; யாத் 18:1-27; எண் 10:29-36; நியா 1:16; நியா 4:11; 1சாமு 15:6). மீதியான் தேசம் அரபாவில் உள்ளது. இந்தத் தேசம் கூஷ், எத்தியோப்பியா ஆகியோருடைய தேசமாகும். கூஷின் ஒரு பிரிவினர் பழங்காலத்தில் இந்தப் பகுதியில் குடியேறினார்கள். மீதியான் ஆபிரகாமின் குமாரன், கெத்தூராள் பெற்றெடுத்த பிள்ளை. (ஆதி 25:1-4). மோசே ஆபிரகாமின் சந்ததியில் விவாகம் பண்ணியிருக்கிறார். கூஷ் தேசத்தில் இருந்தபடியினால் மோசேயின் மனைவி கூஷ் தேசத்தாள் என்று அழைக்கப்படுகிறாள்.

கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. எபிரெய நிருபத்தின் ஆசிரியர் கர்த்தரைப் பற்றி இவ்வாறு எழுதியிருக்கிறார். "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது" (எபி 4:12-13).

மோசே இஸ்ரவேல் ஜனங்களுடைய பாரத்தின் நிமித்தமாக ஒடுக்கப்பட்டிருந்தார். ஆகையினால் அவரிடத்தில் தாழ்மையும், சாந்தமும் நிரம்பியிருக்கிறது. தன்மீது குற்றம் சுமத்தப்படும் போதெல்லாம் மோசே தன்னுடைய சாந்தக்குணத்தையே வெளிப்படுத்துகிறார். ஆகையினால்தான், கர்த்தர் உடனடியாக அங்கு இடைப்பட்டு, மோசேக்குச் சாதகமான காரியங்களைச் செய்கிறார் (எண் 12:4). பரிசுத்த ஆவியானவர் மனுஷருடைய பெலனையும், பெலவீனத்தையும் அறிந்து வைத்திருக்கிறார். (எண் 20:12; யாத் 4:24; உபா 1:37)

மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசுவதை கர்த்தர் கேட்கிறார். மோசேயானவர் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவராயிருக்கிறார் (எண் 12:3).

மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசினாலும், மோசே அவர்களுக்கு விரோதமாகப் பேசவில்லை. மோசே அவர்களோடு சண்டைபோடவில்லை. மோசே காது கேளாதவர்போல அமைதியாகயிருக்கிறார். மோசே மிகுந்த சாந்தகுணமுள்ளவர் என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் சாந்தகுணமுள்ளவராகயிருந்தாலும், கர்த்தரிடத்தில் பக்திவைராக்கிய முள்ளவராகவும் இருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே ஒரு பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அந்த விக்கிரகத்தை ஆராதித்தபோது மோசே சாந்தமாகவோ அல்லது அமைதியாகவோ இருக்கவில்லை. விக்கிரகாராதனைக்கு விரோதமாக மோசே தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்தினார். அந்த சூழ்நிலையில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும்விட, மோசேயே கர்த்தர் மீதுள்ள தன்னுடைய பக்தி வைராக்கியத்தை அதிகமாய் வெளிப்படுத்தினவர்.

கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படுவதையும் மோசேயால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக்குட்டியை செய்து, அந்த விக்கிரகத்தை கர்த்தருக்கு ஒப்பான விக்கிரகம் என்று சொல்லி, கர்த்தரை கனவீனம்பண்ணினபோது, மோசேயால் கர்த்தருடைய நாமம் கனவீனம் பண்ணப்படுவதை சகித்துக்கொள்ள முடியவில்லை.

இப்போது மோசேயின் நற்பெயர் களங்கப்படுத்தப்படுகிறது. அவருடைய நாமம் கனவீனம்பண்ணப்படுகிறது. ஆனால் மோசேயோ யார்மீதும் கோபப்படாமல், அமைதியாகவும், சாந்தகுணமுள்ளவராகவும் இருக்கிறார். கர்த்தருடைய காரியம் என்று வரும்போது மோசே சிங்கம்போல சீறுகிறார். தன்னுடைய சொந்தக்காரியம் என்று வரும்போதோ அவர் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல அமைதியாயிருக்கிறார்.

பல சமயங்களில் சத்துருக்கள் நமக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். அவர்கள் நமக்கு அதிகமான தீங்குகளையும் செய்கிறார்கள். அதே வேளையில் நம்முடைய சிநேகிதர்களும், நம்முடைய உற்றார் உறவினர்களும், சில சமயங்களில் நமக்கு விரோதமாகப் பேசி நமக்கு தீங்கு செய்கிறார்கள்.

சத்துருக்களின் கோபமான வார்த்தைகளைவிட, நம்முடைய சிநேகிதர்களின் கோபமான வார்த்தைகள் நம்மை அதிகமாய்ப் பாதிக்கும். அந்நியர்கள் நமக்கு விரோதமாக எழும்புவதைவிட, நம்முடைய உற்றார் உறவினர் நமக்கு விரோதமாக எழும்பும்போது நமக்கு அதிக சேதம் ஏற்படும்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நம்முடைய சாந்தகுணத்தையும், இதர நற்குணங்களையும் காத்துக்கொள்வதற்கு, மிகவும் கடினமாயிருக்கும்.

பரிசுத்த வேதாகமத்தில் மோசேக்கு விரோதமாகப் பேசப்பட்ட ஒரு சில முறுமுறுப்புக்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தண்ணீருக்காக இஸ்ரவேல் (யாத் 15:24-26)
2. உணவுக்காக இஸ்ரவேல் (யாத் 16:2-8)
3. தண்ணீருக்காக இஸ்ரவேல் (யாத் 17:3-7)
4. மிரியாமும், ஆரோனும் - பொறாமை (எண் 12:1-16)
5. இஸ்ரவேல் - பயமும், கோழைத்தனமும் (எண் 14:2-38)
6. கோராகுவும், அவனுடைய கூட்டத்தாரும் - பொறாமை (எண் 16:1-35)
7. இஸ்ரவேல் - கசப்புணர்வு (எண் 16:41-50)
8. இஸ்ரவேல் - பொறாமை (எண் 17:1-13)
9. தண்ணீருக்காக இஸ்ரவேல் (எண் 20:1-13)
10. உணவுக்காக இஸ்ரவேல் (எண் 21:4-9)

இஸ்ரவேல் புத்திரர் தண்ணீருக்காகவும், உணவிற்காகவும் மோசேக்கு எதிராக அதிகமாக முறுமுறுத்திருக்கிறார்கள். பொறாமை, கோழைத்தனம், கசப்புணர்வு ஆகியவையும் அவர்களுடைய முறுமுறுப்புக்களுக்குக் காரணமாகும்.

கர்த்தருடைய கோபம் எண் 12:4-9

எண் 12:4. சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி: நீங்கள் மூன்று பேரும் ஆசரிப்புக் கூடாரத்துக்குப் புறப்பட்டுவாருங்கள் என்றார்; மூன்றுபேரும் போனார்கள்.

எண் 12:5. கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார்; அவர்கள் இருவரும் போனார்கள்.

எண் 12:6. அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்.

எண் 12:7. என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்.

எண் 12:8. நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார்.

எண் 12:9. கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் மூண்டது; அவர் போய்விட்டார்.

மிரியாமும் ஆரோனும் தனக்கு விரோதமாக பேசும்போது, மோசே அவர்களுக்கு விரோதமாகப் பேசவில்லை. அவர்களுடைய பேச்சினால் மோசேயின் மனதில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. மோசேக்கு அவர்கள்மீது கோபம் வரவில்லை. மோசே கர்த்தருடைய சமுகத்தில் அவர்களுக்கு விரோதமாக ஜெபம்பண்ணவுமில்லை. மோசே எப்போதும்போலவே, மிகுந்த சாந்தகுணமுள்ளவராயிருக்கிறார்.

மிரியாமும் ஆரோனும் தனக்கு விரோதமாகப் பேசியதை மோசே செவிகொடுத்து கேட்கவில்லை. ஆனால் கர்த்தர் அவர்களுடைய வார்த்தைகளை செவிகொடுத்து கேட்கிறார். மோசே அவர்களைப்பற்றி கர்த்தரிடத்தில் முறையிடாவிட்டாலும், அவர்கள் பேசின ஒவ்வொரு வார்த்தையையும் கர்த்தர் கேட்கிறார்.

மற்றவர்கள் நமக்கு விரோதமாகப் பேசும்போதும், அவர்கள் நமக்கு விரோதமான காரியங்களை செய்யும்போதும், நாம் எந்த அளவுக்கு அமைதியாகவும், சாந்தமாகவும் இருக்கிறோமோ, அந்த அளவுக்கு நமக்கு நன்மை உண்டாகும். நாம் அமைதியாகயிருந்தாலும், நமக்கு விரோதமாகப் பேசுகிறவர்களின் வார்த்தைகளை கர்த்தர் கேட்பார். நாம் மற்றவர்களுக்கு விரோதமாக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டிய அவசியமில்லை. கர்த்தர் சர்வகாரியங்களையும் அறிந்திருக்கிற சர்வஞானமுள்ளவராயிருக்கிறார்.

பிறர் நம்மீது குற்றம் சுமத்தும்போது, நாம் குற்றமில்லாத நிரபராதியாகயிருப்போமென்றால், நாம் மற்றவர்களுடைய குற்றச்சாட்டுக்களினிமித்தம் மனவேதனைப்படவேண்டியதில்லை. கர்த்தரே நம்முடைய நியாயாதிபதி. அவர் நீதியும் உண்மையுமுள்ளவர். அவர் நம்முடைய நியாயாதிபதி மாத்திரமல்ல, அவர் நமக்காக பரிந்து பேசுகிறவராகவும் இருக்கிறார். அவர் நம்மைப்பற்றிய சகல உண்மைகளையும் அறிந்திருக்கிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து அறிந்திருக்கிறார்.

மற்றவர்கள் நமக்கு விரோதமாக பொய்யான தூஷண வார்த்தைகளைப் பேசினாலும், எது உண்மை என்பது கர்த்தருக்கு தெரியும். நம்முடைய காலங்களும், நம்முடைய காரியங்களும் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. நாம் கர்த்தருடைய இரக்கத்திற்காகவும், அவருடைய கிருபைக்காகவும், கர்த்தருடைய நீதி வெளிப்படவேண்டும் என்பதற்காகவும், அவருடைய சமுகத்தில் பொறுமையோடும், பயபக்தியோடும், அமைதியோடும் காத்திருக்கவேண்டும். இதுவே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள விண்ணப்பம்.

மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசுவதை கர்த்தர் கேட்டு சும்மாயிருந்துவிடவில்லை.

சடுதியிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் மிரியாமையும் நோக்கி, "நீங்கள் மூன்று பேரும் ஆசரிப்புக் கூடாரத்துக்குப் புறப்பட்டுவாருங்கள்" என்று கூப்பிடுகிறார்; மூன்றுபேரும் ஆசரிப்புக்கூடாரத்திற்குப் போகிறார்கள் (எண் 13:4).

கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்தில் கேருபீன்கள் நடுவிலுள்ள கிருபாசனத்தில் தம்மை வெளிப்படுத்துகிறார். இதற்காகவே கர்த்தர் மூன்றுபேரையும் ஆசரிப்புக் கூடாரத்திற்கு வருமாறு அழைக்கிறார் (எண் 11:16,24).

கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிடுகிறார்; அவர்கள் இருவரும் கூடார வாசலுக்குப் போகிறார்கள் (எண் 13:5).

ஜனங்களைப் போலவே கர்த்தரும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பிரயாணம் பண்ணக்கூடியவர் (ஆதி 11:5-9; ஆதி 18:33).

மிரியாமும் ஆரோனும் தங்களை மோசேக்கு சமமாக பாவித்துக்கொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே மோசே முக்கியமானவராகயிருப்பதுபோல, தாங்களும் முக்கியமானவர்கள் என்று அவர்கள் இருவரும் தப்பிதமாக நினைக்கிறார்கள். மோசேயைவிட தாங்கள் எந்த விதத்திலும் குறைந்துபோனவர்களல்ல என்பது அவர்களுடைய மனதின் எண்ணம்.

ஆகையினால்தான் மிரியாமும் ஆரோனும், "கர்த்தர் மோசேயைக் கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையா" (எண் 12:2) என்று சொன்னார்கள். தாங்கள் இருவரும் மோசேக்கு சமமானவர்கள் என்று நினைப்பதோடு, அவர்கள் மோசேயோடு போட்டி போடவும் செய்கிறார்கள். தங்களைக் கொண்டு பேசுகிற கர்த்தர், தங்கள் மூலமாகவும் கிரியை செய்வார் என்பது இவர்களுடைய விவாதம்.

கர்த்தரோ மோசேயை இஸ்ரவேல் புத்திரர் எல்லாரிலும் உயர்த்தியிருக்கிறார். கர்த்தர் மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, தம்முடைய தீர்க்கதரிசியைப்பற்றி பொதுவான விளக்கம் சொல்லுகிறார். கர்த்தர் மிரியாமையும் ஆரோனையும் நோக்கி, "என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்" (எண் 12:6) என்று சொல்லுகிறார்.

மெய்யான தீர்க்கதரிசிகளுக்குத் தேவனுடைய வெளிப்பாடு கிடைக்கும் (அப் 3:21; எபி 1:1-3) தரிசனத்திலோ, சொப்பனத்திலோ கர்த்தர் தம்முடைய பிள்ளைகளோடு பேசுகிறார்.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை கனம்பண்ணுகிறார் என்பது மெய்யான சத்தியம். கர்த்தர் தீர்க்கதரிசிகளுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். அவர்கள் நித்திரையாயிருக்கும்போது சொப்பனத்தின் மூலமாகவோ அல்லது அவர்கள் விழித்திருக்கும்போது தரிசனத்தின் மூலமாகவோ கர்த்தர் தம்மை தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக, தம்மைப்பற்றி, மற்ற ஜனங்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

ஆனால் கர்த்தரோ தம்மைப்பற்றி மோசேக்கு, தரிசனத்தின் மூலமாகவோ அல்லது சொப்பனத்தின் மூலமாகவோ வெளிப்படுத்தாமல் பிரத்தியட்சமாக வெளிப்படுத்துகிறார். கர்த்தர் ஒரு தீர்க்கதரிசிக்கு தம்மைப்பற்றி சொப்பனத்தின் மூலமாகவும், தரிசனத்தின் மூலமாகவும் வெளிப்படுத்தும்போது, தம்மை மறைபொருளாகவே வெளிப்படுத்துகிறார். ஆனால் கர்த்தரோ மோசேக்கு தம்மைப்பற்றி மறைபொருளாக வெளிப்படுத்தாமல் பிரத்தியட்சமாக வெளிப்படுத்துகிறார். கர்த்தர் மோசேயோடு சொப்பனத்தின் மூலமாகவோ, தரிசனத்தின் மூலமாகவோ பேசாமல் முகம் முகமாகப் பேசுகிறார்.

கர்த்தர் மிரியாமையும் ஆரோனையும் நோக்கி, "என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்" (எண் 12:7,8) என்று சொல்லுகிறார்.

தம்முடைய வீட்டில் மோசே எங்கும் உண்மையுள்ளவர் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வசனப்பகுதியில் மோசேயின் குணாதிசயங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மோசே கர்த்தருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள ஊழியக்காரர்.

   (எண் 12:7; எபி 3:1-6) இஸ்ரவேல் தேசம் கர்த்தருடைய வீடு என்று அழைக்கப் படுகிறது. புதிய ஏற்பாட்டில் சபை தேவனுடைய ஆலயம் என்றழைக்கப்படுகிறது. (கலா 6:10; எபே 2:19; 1தீமோ 3:15; எபி 3:6; எபி 10:21; 1பேதுரு 2:5; 1பேதுரு 4:17).

2. கர்த்தர் மோசேயோடு மறைபொருளாகப் பேசாமல் முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறார். (எண் 12:8, யாத் 33:11; எண் 14:14; உபா 5:4; உபா 34:10; யோசு 6:22; 2யோவான் 1:12).

3. மோசே கர்த்தருடைய ஆவிக்குரிய சரீரத்தைப் பிரத்தியட்சமாகத் தரிசித்திருக்கிறார். (எண் 12:8; யாத் 24:9-11; யாத் 33:11,18-23)

கர்த்தர் மோசேயிடம் சொப்பனங்கள் மூலமாகவோ, தரிசனங்கள் மூலமாகவோ, மறைபொருளாகவோ பேசுவதற்குப் பதிலாகத் தெளிவான வார்த்தைகளில் பேசுகிறார்.

கர்த்தர் மோசேயோடு பேசும்போது தரிசனத்தின் மூலமாகவோ, சொப்பனத்தின் மூலமாகவோ தம்மை வெளிப்படுத்தாமல், ஞானத்தின் ஆவியானவர் மூலமாகவும், வெளிப்பாட்டின் ஆவியானவர் மூலமாகவும் தம்மை வெளிப்படுத்துகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தர் தம்மை வெளிப்படுத்தும்போது, தரிசனங்கள் மூலமாகவும், சொப்பனங்கள் மூலமாகவும் அதிகமாய் வெளிப்படுத்துவதில்லை. அதற்கு பதிலாக கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியானவர் மூலமாக, நமக்கு தம்மைப்பற்றி அதிகமாய் வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் மோசேக்கு தம்மை தரிசனங்கள் மூலமாகவும் சொப்பனங்கள் மூலமாகவும் வெளிப்படுத்தாவிட்டாலும், மோசே கர்த்தருடைய பார்வையில் விசேஷித்த தீர்க்கதரிசியாயிருக்கிறார். "என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்ட தீர்க்கதரிசியல்ல" என்று சொல்லுகிறார். மோசே சொப்பனங்களையும் தரிசனங்களையும் பார்த்து, கர்த்தருடைய வெளிப்பாடுகளை பெற்றுக்கொள்கிறவரல்ல. அவர் மற்ற தீர்க்கதரிசிகளை விட உயர்ந்தவர், மேன்மையானவர்.

மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசும்போது, மோசே அவர்களுக்கு விரோதமாக ஒன்றும் பேசவில்லை. மோசே அவர்கள்மீது கோபப்படவில்லை.

"கர்த்தர் மோசேயைக் கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையா" என்று சொன்னபோது, மோசே தன்னிடத்திலுள்ள நியாயத்தை அவர்களுக்கு எடுத்து சொல்லவில்லை.

மிரியாமும் ஆரோனும் தனக்கு விரோதமாகப் பேசும்போது, மோசே அவர்களுடைய பேச்சுக்களை அமைதியாகவும், பொறுமையாகவும், சாந்தமாகவும் கேட்டுக்கொண்டிருக்கிறார். மோசே அவர்களுக்கு மத்தியில் தன்னை உயர்த்தவில்லை. ஆனால் கர்த்தர் மோசேயை, அவர்களுக்கு மேலாக உயர்த்துகிறார். "என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்" (எண் 12:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயின் உண்மையான சுபாவத்தை ஏற்கெனவே சோதித்து அறிந்திருக்கிறார். மோசேயினிடத்தில் குற்றமில்லை, மாய்மாலம் இல்லை. பொய் இல்லை. அவர் கர்த்தருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர். கர்த்தர் மோசேயைப்பற்றிச் சொல்லும்போது, மோசே மிகப்பெரிய தீர்க்கதரிசி என்று சொல்லுவதற்கு பதிலாக, "அவர் என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர்" என்று சொல்லுகிறார். இதுவே மோசேயின் பிரதான நற்குணம். மோசே சாந்தகுணமுள்ளவர் மாத்திரமல்ல, அவர் உண்மையுள்ளவர்.

கர்த்தருடைய கிருபை எல்லா வரங்களையும்விட மேலானது. நம்மிடத்திலுள்ள அன்பு, நமக்கு இருக்கும் எல்லா அறிவையும், புத்தியையும், ஞானத்தையும் விட மேலானது. கர்த்தருடைய ஊழியத்தில் உண்மையாயிருப்பதே அதிக மேன்மையானது.

கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் வரங்களை ஊழியக்காரர்கள் எப்படித்தான் பயன்படுத்தினாலும், அவர்கள் ஆவியிலே எவ்வளவுதான் அனலாயிருந்தாலும், அவர்கள் மூலமாக அற்புதங்களும் அடையாளங்களும் எவ்வளவுதான் வெளிப்பட்டாலும், அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். தம்முடைய ஊழியக்காரர்கள் தம்முடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதே கர்த்தர் அவர்களிடத்தில் எதிர்பார்க்கும் பிரதான காரியமாயிருக்கிறது.

விசுவாசமில்லாமல் கர்த்தரை ஆராதிப்பதும், உண்மையில்லாமல் கர்த்தருக்கு ஊழியம் செய்வதும், கர்த்தருக்கு பிரியமானதல்ல.

மோசே கர்த்தருடைய பார்வையில் கனமுள்ளவராயிருக்கிறார். ஆகையினால் கர்த்தர் மோசேயோடு மறைபொருளாக பேசாமல், முகமுகமாகவும், பிரத்தியட்சமாகவும் பேசுகிறார். மோசே கர்த்தரின் சாயலைக் காண்கிறார். கர்த்தர் மோசேயை உயர்த்தியிருக்கிறார். ஆனால் மிரியாமும் ஆரோனுமோ தங்களைத் தாங்களை உயர்த்துகிறார்கள். அவர்கள் மோசேக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். அவர்கள் மோசேயை தூஷித்து நிந்திக்கிறார்கள்.

கர்த்தர் மிரியாமையும் ஆரோனையும் பார்த்து, "இப்படியிருக்க, நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன" (எண் 12:8) என்று கேட்கிறார்.

காலாகாலமாக ஜனங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாகப் பயமில்லாமல் தைரியமாகப் பேசிவருகிறார்கள். தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள்,லேவியர்கள், அப்போஸ்தலர்கள், மிஷினெரிகள் ஆகியோரில் அநேகர் இரத்தச்சாட்சியாக மரித்திருக்கிறார்கள். உலகப்பிரகாரமான ஜனங்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்களைப் பயமுறுத்துகிறார்கள். (மத் 23:35; அப் 4; அப் 8; அப் 9; அப் 16; அப் 22; 2கொரி 11; எபி 11). ஊழியக்காரர்களில் இன்னும் ஏராளமானோர் இரத்தச்சாட்சியாக மரிக்கப் போகிறார்கள் என்று வேதாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது (வெளி 6:9-11; வெளி 12:1-5,17; வெளி 15:2-4; வெளி 17:6-7; வெளி 20:4-6)

மிரியாம் ஆரோன் ஆகியோருடைய மதியீனத்தையும், தப்பிதத்தையும் கர்த்தர் அவர்களுக்கு உணர்த்துகிறார். அவர்களுடைய பாவத்தினிமித்தமாக கர்த்தருடைய கோபம் அவர்களுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறது. கர்த்தர் தம்முடைய கோபத்தை மறைக்காமல், அதையும் அவர்களுக்கு முன்பாக வெளிப்படுத்துகிறார். "கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் மூளுகிறது" (எண் 12:9).

எண் 12:10 ஆவது வசனத்தில் கர்த்தருடைய கோபத்தினால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

கர்த்தர் மிரியாமோடும் ஆரோனோடும் இதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. கர்த்தர் அந்த இடத்தை விட்டே போய்விடுகிறார். அவர்கள் சொல்லுகிற சாக்குபோக்குகளை கேட்க கர்த்தர் ஆயத்தமாயில்லை. கர்த்தர் அங்கே இருந்திருந்தால், மிரியாமும் ஆரோனும், அவரிடத்தில் ஏதாவது சொல்லியிருப்பார்கள். கர்த்தரோ அவர்கள்மீது கோபப்படுகிறார். கர்த்தருடைய கோபத்திற்கு அடையாளமாக, அவருடைய பிரசன்னம், அந்த இடத்தைவிட்டு புறப்பட்டுப்போய்விடுகிறது.

கர்த்தருடைய பிரசன்னம் நம்மை விட்டுப்போவது கர்த்தர் நம்மீது பிரியமாயில்லை என்பதற்கும், அவர் நம்மீது கோபமாயிருக்கிறார் என்பதற்கும் அடையாளம். கர்த்தருடைய பிரசன்னம் நம்மைவிட்டு விலகிப்போய்விடும் அளவுக்கு, நாம் கர்த்தருக்கு விரோதமான பாவங்களை செய்யக்கூடாது. நம்முடைய பாவங்களே கர்த்தருடைய பிரசன்னத்தை நம்மைவிட்டு வெளியேறப்பண்ணுகிறது. அதுவரையிலும் கர்த்தர் நம்மைவிட்டு வெளியேறமாட்டார்.

மிரியாமின் குஷ்டரோகம் எண் 12:10-16

எண் 12:10. மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப் போயிற்று; மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியானாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தபோது, அவள் குஷ்டரோகியாயிருக்கக் கண்டான்.

எண் 12:11. அப்பொழுது ஆரோன் மோசேயை நோக்கி: ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள் மேல் சுமத்தாதிரும்.

எண் 12:12. தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகிச் செத்துவிழுந்த பிள்ளையைப் போல அவள் ஆகாதிருப்பாளாக என்றான்.

எண் 12:13. அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்.

எண் 12:14. கர்த்தர் மோசேயை நோக்கி: அவள் தகப்பன் அவள் முகத்திலே காறித் துப்பினதுண்டானால், அவள் ஏழுநாள் வெட்கப்படவேண்டாமோ, அதுபோலவே அவள் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்து, பின்பு சேர்த்துக்கொள்ளப்படக்கடவள் என்றார்.

எண் 12:15. அப்படியே மிரியாம் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்தாள்; மிரியாம் சேர்த்துக்கொள்ளப்படு மட்டும் ஜனங்கள் பிரயாணம் பண்ணாதிருந்தார்கள்.

எண் 12:16. பின்பு, ஜனங்கள் ஆஸரோத்திலிருந்து புறப்பட்டு, பாரான் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மிரியாமின்மீது வருகிறது. மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப்போயிற்று. கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நிற்கிறார். மேகத்தூண் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். மேகம் கூடாரத்தைவிட்டு நீங்கிப்போனது, கர்த்தருடைய கோபத்திற்கும், அவருடைய பிரசன்னம் அவர்களைவிட்டு நீங்கிப்போனதற்கும் அடையாளம்.

மிரியாம் உறைந்த மழையின் வெண்மைபோன்ற குஷ்டரோகியாகிறாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தபோது, அவள் குஷ்டரோகியாயிருக்கக் காண்கிறார் (எண் 12:10).

மிரியாமின் நாவு மோசேக்கு விரோதமாக தூஷணமான வார்த்தைகளைப் பேசிற்று. கர்த்தர் தம்முடைய நீதியினால் மிரியாமைத் தண்டிக்கிறார். அவளுடைய முகம் தூஷணமாய்ப் போயிற்று.

மோசே கர்த்தருடைய பிரசன்னத்தைப் பார்த்தபோது, மோசேயின் முகம் பிரகாசமாயிருந்தது. தன்னுடைய முகத்தின் பிரகாசத்தை மறைப்பதற்காக, மோசே தன் தலையின்மேல் முக்காட்டிடுக்கொண்டார். இப்போதோ மிரியாம் குஷ்டரோகத்தினால் ஏற்பட்ட தன்னுடைய அவமானத்தை மூடி மறைப்பதற்காக தன் முகத்தின்மீது முக்காட்டிக்கொள்கிறாள்.

மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசினார்கள். ஆனாலும் கர்த்தர் மிரியாமை மாத்திரம் குஷ்டரோகத்தினால் வாதிக்கிறார். ஆரோனுக்கு குஷ்டரோகம் வரவில்லை. மோசேக்கு விரோதமாகப் பேசினவர்களில், மிரியாமே முதலாவதாக பேசினவள். ஆரோன் தன் சகோதரி மிரியாம் பேசுவதைப் பார்த்து, அவளுக்கு துணை போனார். ஆரோன் மிரியாமின் பாவத்திற்கு பங்காளியானார்.

ஜனங்களை பாவத்திலே வழிநடத்துகிறவர்களுக்கும், அவர்களால் பாவத்தில் வழிநடத்தப்படுகிறவர்களுக்கும் கர்த்தர் வித்தியாசம் காண்பிக்கிறார். ஆரோன் பிரதான ஆசாரியன். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் யாருக்கு குஷ்டரோகம் வந்தாலும், ஆரோனே அந்தக் குஷ்டரோகத்தைப் பார்த்து, அது குஷ்டமா என்பதை தீர்மானம்பண்ணவேண்டும்.

ஆரோன் தன் சகோதரி மிரியாமைப் பார்க்கிறார். அவள் குஷ்டரோகியாயிருக்க காண்கிறார். மிரியாமுக்கு வந்த குஷ்டரோகம் கர்த்தருடைய கோபத்தினாலும், அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பினாலும் வந்திருக்கிறது. மிரியாமைப் பார்க்கும்போது ஆரோனுடைய மனதில் பயமும், திகிலும், நடுக்கமும் உண்டாயிற்று. மிரியாமுக்கு வந்ததுபோல, தனக்கும் குஷ்டரோகம் வர வாய்ப்புள்ளது என்பதை ஆரோன் உணர்ந்துகொள்கிறார். மிரியாமினிடத்தில் காணப்படுகிற குற்றவுணர்வு, ஆரோனிடத்திலும் காணப்படுகிறது.

ஆரோன் குஷ்டரோகத்தினால் தண்டிக்கப்படவில்லை. அவருடைய சரீரத்திலே குஷ்டப் பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் ஆரோனுடைய மனதிலே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குஷ்டரோகியின் மனதிலே எவ்வளவு திகிலும் நடுக்கமும், பயமும் இருக்குமோ, அவ்வளவு நடுக்கமும் பயமும், திகிலும் ஆரோனுடைய இருதயத்திலும் ஏற்படுகிறது. ஆரோனுக்கு சரீரத்தில் தண்டனை கொடுக்கப்படாவிட்டாலும், அவருடைய மனதிலே தண்டனை கொடுக்கப்படுகிறது.

ஆரோன் மோசேயின் ஆளுகைக்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறார். தன்னுடைய குற்றத்தையும், மிரியாமின் குற்றத்தையும் ஆரோன் மோசேயினிடத்தில் அறிக்கை செய்கிறார். ஆரோன் இதுவரையிலும் தன் சகோதரி மிரியாமோடு சேர்ந்து, மோசேக்கு விரோதமாகப் பேசினார். இப்போதோ ஆரோன் மோசேயினிடத்தில், மிரியாமுக்காக பரிந்து பேசுகிறார்.

ஆரோன் மோசேயை நோக்கி, "ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள் மேல் சுமத்தாதிரும். தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகிச் செத்துவிழுந்த பிள்ளையைப் போல அவள் ஆகாதிருப்பாளாக" (எண் 12:11,12) என்று சொல்லுகிறார்.

நியாயத்தீர்ப்பு வரும்போது கலகம் நின்றுபோகிறது. தங்களுக்கு இரக்கம் தேவைப்படுகிறது என்பதைப் பிரச்சனை காலத்தில்தான் ஜனங்கள் உணருகிறார்கள். (எண் 12:11-12).

ஆரோன் தன்னுடைய பாவத்தையும், தன் சகோதரியினுடைய பாவத்தையும் அறிக்கை செய்கிறார். தாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை, மோசே தயவாய் மன்னித்தருள வேண்டுமென்று, ஆரோன் அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். "இந்தப் பாவத்தை எங்கள்மேல் சுமத்தாதிரும்" என்று ஆரோன் மோசேயினிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

மிரியாம் உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகியாயிருக்கிறாள். அவள் தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகி செத்து விழுந்த பிள்ளையைப்போல இருக்கிறாள். மிரியாம் அநேகமாக செத்தவளைப்போலவே இருக்கிறாள். ஆரோன் தன் சகோதரி மிரியாமுக்காக மோசேயினிடத்தில் பரிந்து பேசுகிறார். மிரியாம் ஆரோனுக்கு சகோதரியாயிருப்பதுபோல மோசேக்கும் சகோதரியாயிருக்கிறாள். மோசே தங்கள்மேல் கிருபையாய் இரக்கம் காண்பிக்கவேண்டுமென்று ஆரோன் தனக்காகவும், மிரியாமுக்காகவும் அவரிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

அப்பொழுது மோசே மிரியாமுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். அவர் கர்த்தரை நோக்கி, "என் தேவனே, அவளைக் குணமாக்கும்" (எண் 12:13) என்று கெஞ்சுகிறார்.

மேகம் கூடாரத்தைவிட்டு நீங்கிப் போயிருக்கிறது. அது கர்த்தருடைய பிரசன்னம், அவர்களை விட்டு விலகிப் போனதற்கு அடையாளம். கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டிருக்கிறது. கர்த்தர் அவர்களை விட்டுப்போய்விடுகிறார். மோசே இதைப் பார்த்து கர்த்தரிடத்தில் கெஞ்சி ஜெபம்பண்ணுகிறார். மோசே தம்மிடத்தில் கெஞ்சி ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் செவிகொடுத்து, மிரியாமை குணமாக்குகிறார்.

மிரியாம் மோசேக்கு விரோதமாகப் பேசினாள். மோசேயோ மிரியாமுக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசி, கெஞ்சி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர். கர்த்தருடைய நீதியினால் மிரியாம் தண்டிக்கப்பட்டிருக்கிறாள். அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பினாலே மிரியாம் இப்போது குஷ்டரோகியா யிருக்கிறாள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மிரியாமின்மீது வெளிப்பட்டிருந்தாலும், அவருடைய கிருபை மிரியாமுக்கு கிடைக்கவேண்டும் என்று, மோசே கர்த்தரிடத்தில் கெஞ்சி ஜெபம்பண்ணுகிறார்.

ஆரோன் மோசேயை நோக்கி, "ஆ என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள்மேல் சுமத்தாதிரும்" (எண் 12:11). என்று கேட்டுக் கொண்டார். மோசே அவர்களுடைய பாவத்தை மன்னிக்கிறார். மோசே அவர்களுடைய பாவத்தை மன்னிக்கும்போது, கர்த்தரும் அவர்களுடைய பாவத்தை மன்னிக்கிறார்.

"எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ, அதை உங்கள்நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன்" (2கொரி 2:10).

கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில், கர்த்தருடைய கிருபையும், அவருடைய நீதியும் வெளிப் படுகிறது. மிரியாம் தன்னை இன்னும் அதிகமாய்த் தாழ்த்தவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். தங்களுடைய பாவங்களை மன்னிக்குமாறு ஆரோன் மாத்திரமே மோசேயினிடத்தில் விண்ணப்பம்பண்ணினார். ஆரோன் மாத்திரமே மிரியாமுக்காகவும் மோசேயினிடத்தில் பரிந்து பேசினார். தன்னுடைய பாவத்தை மன்னிக்குமாறு மிரியாம் இன்னும் மோசேயினிடத்தில் கேட்கவில்லை. ஆகையினால் கர்த்தர் மிரியாமை இன்னும் தாழ்த்தவேண்டும் என்று சித்தங்கொள்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அவள் தகப்பன் அவள் முகத்திலே காறித் துப்பினதுண்டானால், அவள் ஏழுநாள் வெட்கப்படவேண்டாமோ, அதுபோலவே அவள் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்து, பின்பு சேர்த்துக்கொள்ளப்படக்கடவள்" (எண் 12:14) என்று சொல்லுகிறார்.

முகத்தில் துப்புவது அவமரியாதைக்கு ஓர் அடையாளம். (யோபு 30:10; ஏசா 50:6; மாற்கு 14:65).

தனக்கு எதிராகச் செய்யப்பட்ட தீங்குகளை மனுஷன் எளிதில் மன்னிக்க மாட்டான். ஆனால் கர்த்தரோ கிருபையும், இரக்கமும் நிறைந்தவர். கர்த்தரிடத்தில் மன்னிப்பைக் கேட்கிறவர்களுக்கு அந்த மன்னிப்பு கொடுக்கப்படுகிறது.

மிரியாமை குணமாக்க கர்த்தர் சித்தமாயிருக்கிறார். ஆனாலும் கர்த்தர் அவளை உடனே குணப்படுத்தாமல், அவளை ஏழுநாள் குஷ்டரோகத்தினால் தண்டிக்க சித்தங்கொள்கிறார். மிரியாமை குணமாக்குவது கர்த்தருடைய கிருபை. அவளை ஏழுநாட்களுக்கு குஷ்டத்தினால் தண்டிப்பது கர்த்தருடைய நீதி.

மிரியாம் ஏழுநாட்களாக குஷ்டரோகியாகவே இருக்கிறாள். அப்படியே மிரியாம் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருக்கிறாள்; மிரியாம் சேர்த்துக்கொள்ளப்படுமட்டும் ஜனங்கள் பிரயாணம் பண்ணாதிருக்கிறார்கள் (எண் 12:15).

பாளயத்திற்கு வெளியே குஷ்டரோகிகளுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்ட இடத்தில் மிரியாம் ஏழுநாட்களுக்கு ஜீவிக்கிறாள். (லேவி 13:4,5,21,26). இக்காலத்தில் அவளுக்குச் சுமார் 85 முதல் 90 வயது ஆயிருக்கலாம். வயதான காலத்தில் இப்படிப்பட்ட தண்டனை அவள்மீது வருவது அவளுக்கு மிகுந்த அவமானமாக இருந்திருக்கும்.

சீனாய் வனாந்தரத்திலிருந்து பிரயாணம் பண்ணிய பின்பு, இந்தப் பகுதியில் அதிக நாள் பாளயமிறங்கியிருக்கிறார்கள். மிரியாமின் பாவம் இஸ்ரவேல் புத்திரரைப் பிரயாணம் பண்ணவிடாமல் தடுத்து விடுகிறது.

மிரியாம் குஷ்டரோகியாயிருக்கும் ஏழு நாட்களில், இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணாதிருக்கிறார்கள். மிரியாமின் குஷ்டரோகத்தினால், ஜனங்களுடைய பிரயாணம் தடைபடுகிறது. மேகம் கூடாரத்தைவிட்டு நீங்கிப்போயிற்று. ஆகையினால் ஜனங்கள் பிரயாணம்பண்ணாதிருக்கிறார்கள். மேகம் எழும்பும்போது மாத்திரமே, இஸ்ரவேல் ஜனத்தார் பிரயாணம்பண்ணுவார்கள்.

மேகம் கூடாரத்தைவிட்டு நீங்கிப்போனது, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் எச்சரிக்கும்படியான சம்பவம். மிரியாமைப்போல அவர்களும் பல சமயங்களில் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்திருக்கிறார்கள். மிரியாம் செய்த பாவத்தை அவர்களும் செய்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய கிருபையினால் தண்டனைக்கு தப்பித்திருக்கிறார்கள். தம்முடைய பிரசன்னத்திற்கு அடையாளமான மேகத்தை, கூடாரத்தைவிட்டு நீங்கிப்போகச்செய்து, கர்த்தர் தம்முடைய ஜனங்களை கடிந்துகொள்கிறார். தம்முடைய கோபம் அவர்கள்மேலும் இருக்கிறது என்பதை கர்த்தர் இதன் மூலமாக வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் மிரியாமை தம்முடைய நீதியினால் தண்டித்தாலும், அவர் அவளுக்கு தம்முடைய கிருபையையும் வெளிப் படுத்துகிறார். மிரியாம் குஷ்டரோகத்தினால் ஏழுநாள் பாளயத்திற்கு புறம்பே விலக்கப்பட்டிருக்கிறாள். இது அவளுடைய மனதிலே மிகுந்த வேதனையாகவும், அவமானமாகவும் இருக்கிறது.

மிரியாம் பாளயத்திற்கு புறம்பே விலக்கப்பட்டிருந்த அந்த ஏழுநாட்களில், இஸ்ரவேல் ஜனங்கள் பிரயாணம் பண்ணியிருந்தால், மிரியாமின் மனவேதனை இன்னும் அதிகரித்திருக்கும். அவளுக்கு இன்னும் அதிகமான அவமானம் ஏற்பட்டிருக்கும். கர்த்தர் மிரியாமைத் தண்டித்தாலும், அவளுக்கு தம்முடைய கிருபையையும் வெளிப்படுத்துகிறார்.

நாம் மற்றவர்களை அவர்களுடைய பாவங்களினிமித்தமாக கடிந்துகொள்ளும்போது, அவர்களை அளவுக்கு அதிகமாக கடிந்துகொள்ளக் கூடாது. அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதற்கு கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார் என்பதையும் அவர்களுக்கு அன்பான வார்த்தைகளினால் விளக்கிச் சொல்லவேண்டும். பாவிகளை சத்துருக்களாக பாவிக்கக்கூடாது. அவர்களையும் சிநேகிதர்களாக பாவித்து அவர்களுக்கு புத்திசொல்லவேண்டும்.

"ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்" (2தெச 3:15).

"ஆதலால் அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடிக்கு, நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல்செய்யவேண்டும்" (2கொரி 2:7).

பின்பு, ஜனங்கள் ஆஸரோத்திலிருந்து புறப்பட்டு, பாரான் வனாந்தரத்திலே பாளயமிறங்குகிறார்கள் (எண் 12:16).

மிரியாம் குஷ்டரோகத்திலிருந்து சுகமான பின்பு, பாளயத்திற்குள் சேர்த்துக் கொள்ளப்படுகிறாள். அதன்பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் பிரயாணம் செய்து, பாரான் வனாந்தரத்திலே பாளயமிறங்குகிறார்கள். (எண் 12:10-16).

13 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே, கானான் தேசத்தின் எல்லை வரைக்கும் போய்ச்சேருகிறார்கள். கானான் தேசத்தில் பிரவேசிக்க அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தமாகவும், முறுமுறுப்புக்களின் நிமித்தமாகவும், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசியாமல் வனாந்தரத்திலே திரும்பி வந்து அலைந்து திரிகிறார்கள்.

இந்த சம்பவம் சங்கீதப்புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்" (சங் 95:8-11).

எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியரும் இந்த சம்பவத்தை விசுவாசிகளாகிய நமக்கு எச்சரிப்பாக எழுதியிருக்கிறார்.

"ஆகையால், பரிசுத்தஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, நாற்பது வருஷகாலம் என் கிரியைகளைக் கண்டார்கள். ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி; என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்" (எபி 3:7-11).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபு வீதமாக பன்னிரண்டு புருஷர்கள் அனுப்பப்படுகிறார்கள் (எண் 13:1-16).

மோசே அந்தப் பன்னிரண்டு வேவுகாரருக்கும் கட்டளைகளைக் கொடுக்கிறார் (எண் 13:17-20). மோசே தங்களுக்கு சொன்ன பிரகாரம் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, திரும்பி வருகிறார்கள் (எண் 13:21-25). பன்னிரண்டு வேவுகாரரும் தாங்கள் கொண்டு வந்த செய்தியை இஸ்ரவேலின் பாளயத்திலிருக்கிறவர்களுக்கு சொல்லுகிறார்கள் (எண் 13:26-33).

வேவுகாரர்
எண் 13:1-16

எண் 13:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 13:2. நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்ப வேண்டும் என்றார்.

எண் 13:3. மோசே கர்த்தருடைய வாக்கின் படியே அவர்களைப் பாரான் வனாந்தரத்திலிருந்து அனுப்பினான்; அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள்.

எண் 13:4. அவர்களுடைய நாமங்களாவன. ரூபன் கோத்திரத்தில் சக்கூரின் குமாரன் சம்முவா.

எண் 13:5. சிமியோன் கோத்திரத்தில் ஓரியின் குமாரன் சாப்பாத்.

எண் 13:6. யூதா கோத்திரத்தில் எப்புன்னேயின் குமாரன் காலேப்.

எண் 13:7. இசக்கார் கோத்திரத்தில் யோசேப்பின் குமாரன் ஈகால்.

எண் 13:8. எப்பிராயீம் கோத்திரத்தில் நூனின் குமாரன் ஓசேயா.

எண் 13:9. பென்யமீன் கோத்திரத்தில் ரப்பூவின் குமாரன் பல்த்தி.

எண் 13:10. செபுலோன் கோத்திரத்தில் சோதியின் குமாரன் காதியேல்.

எண் 13:11. யோசேப்பின் கோத்திரத்தைச் சேர்ந்த மனாசே கோத்திரத்தில் சூசின் குமாரன் காதி.

எண் 13:12. தாண் கோத்திரத்தில் கெமல்லியின் குமாரன் அம்மியேல்.

எண் 13:13. ஆசேர் கோத்திரத்தில் மிகாவேலின் குமாரன் சேத்தூர்.

எண் 13:14. நப்தலி கோத்திரத்தில் ஒப்பேசியின் குமாரன் நாகபி.

எண் 13:15. காத் கோத்திரத்தில் மாகியின் குமாரன் கூவேல்.

எண் 13:16. தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மோசே அனுப்பின மனிதரின் நாமங்கள் இவைகளே; நூனின் குமாரனாகிய ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டிருந்தான்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு; ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திலும் ஒவ்வொரு பிரபுவாகிய புருஷனை அனுப்ப வேண்டும்" (எண் 13:1,2) என்று சொல்லுகிறார்.

இந்தச் சம்பவம் இஸ்ரவேல் புத்திரர் பாரான் வனாந்தரத்தில் தங்கியிருந்தபோது நிகழ்ந்ததாகும். (எண் 13:2-3)

அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் எண் 13:4-15 ஆகிய வசனங்களில் இவர்களுடைய பெயர்கள் கூறப்பட்டிருக்கிறது. இந்த அட்டவணையும், எண் 1:5-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அட்டவணையும் ஒன்றல்ல. இவர்கள் பிதாக்களின் வம்சத்து தலைவர்கள். (எண் 1:4) இவர்கள் இஸ்ரவேலில் ஆயிரவர்களுக்குத் தலைவர்கள் (எண் 1:16), சேனைத்தலைவர்கள் (எண் 2:3-32), இஸ்ரவேலின் தலைவர்கள் (எண் 13:3).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி பன்னிரண்டு வேவுகாரர் அனுப்பப்படுகிறார்கள். இவர்களை அனுப்புமாறு கர்த்தரே மோசேயினிடத்தில் சொன்னதுபோல இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் உபாகமம் புஸ்தகத்தில் இந்த சம்பவம் வேறு விதமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஜனங்கள் மோசேயினிடத்தில் வந்து, கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மனுஷரை அனுப்பவேண்டுமென்று சொன்னதாக உபாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

"அப்பொழுது நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வந்து: நமக்காக அந்த தேசத்தைச் சோதித்துப்பார்க்கவும், நாம் இன்னவழியாக அதில் சென்று, இன்ன பட்டணங்களுக்குப் போகலாம் என்று நமக்கு மறுசெய்தி கொண்டுவரவும், நமக்கு முன்னாக மனிதரை அனுப்புவோம் என்றீர்கள்" (உபா 1:22).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற நலமான தேசம். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய வார்த்தையை நம்பவில்லை. அவர்கள் கானான் தேசத்தை சோதித்துப் பார்க்க விரும்புகிறார்கள். கர்த்தர் சொன்னது மெய்யான வார்த்தைதானா என்பதை அவர்கள் சோதித்தறிய ஆசைப்படுகிறார்கள்.

கர்த்தர் ஏற்கெனவே கானான் தேசத்தை சோதித்துப் பார்த்து, அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்பதை உறுதி செய்து, அதன் பின்பே அந்த தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தர் சோதித்துப் பார்த்ததையும் நம்பவில்லை, கானான் தேசத்தைப்பற்றி கர்த்தர் தங்களுக்கு சொன்ன வார்த்தையையும் நம்பவில்லை. அவர்கள் அந்த தேசத்தை சோதித்துப் பார்க்க தங்களுக்கு முன்னாக வேவுகாரரை அனுப்புகிறார்கள்.

கர்த்தருடைய ஜனம் அவருடைய வார்த்தையை நம்பவேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது. கர்த்தர் நமக்கு நன்மையான ஈவுகளை மாத்திரமே கொடுப்பார் என்னும் நிச்சயம் நம்முடைய மனதில் இருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும், அவருடைய தெய்வீக வழிநடத்துதலையும் நம்பாமல், நம்முடைய சுயபுத்தியையும், சுயவல்லமையையும் நம்பினால், நாம் சீக்கிரத்தில் அழிந்துபோவோம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நம்முடைய சுயபுத்திக்கு முக்கியத்துவம் கொடுத்தால், நமக்கு சமாதானம் கிடைக்காது. நம்முடைய காரியங்கள் எல்லமே குழப்பமாகிவிடும். விசுவாசிகளாகிய நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கவேண்டியவர்கள்.

கானான் தேசத்தை சோதித்து அறியும்படி தங்களுக்கு முன்னாக ஜனங்களை அனுப்பவேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் மோசேயிடம் சொல்லுகிறார்கள். மோசேயும் அவர்களுக்கு மறுப்பு சொல்லவில்லை. அவர்களுடைய விருப்பத்தை மோசே கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். கர்த்தரும் ஜனங்களுடைய மனவிருப்பத்தின்படியே அவர்களை விட்டுவிடுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய தெய்வீக ஆலோசனையின் பிரகாரம் முன்செல்லாமல், தங்களுடைய சுயஆலோசனையின் பிரகாரமாக முன்செல்கிறார்கள். கர்த்தருடைய ஆலோசனை அவர்களை வழிநடத்தாமல், அவர்களுடைய மாம்சத்தின் விருப்பங்களும், ஆசைகளும், ஆலோசனைகளும் அவர்களை வழிநடத்துகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் தம்முடைய வார்த்தையை நம்பாமல், கானான் தேசத்தை சோதித்தறிய, தங்களுக்கு முன்பாக ஆட்களை அனுப்பவேண்டும் என்று சொன்னபோது, கர்த்தரும் அவர்களுடைய விருப்பத்திற்கு அவர்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறார். "நான் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு நீ மனிதரை அனுப்பு" (எண் 13:2) என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய வாக்கின் படியே அவர்களைப் பாரான் வனாந்தரத்திலிருந்து அனுப்புகிறார்; அந்த மனிதர் யாவரும் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்கள் (எண் 13:3).

இந்த வசனப்பகுதியில் அவர்களுடைய பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு பிதாக்களின் கோத்திரத்திற்கு பிரபுவாகயிருக்கிறார்கள். கோத்திரத்திற்கு ஒருவர் வீதமாக, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் பன்னிரண்டு பிரபுக்கள் அனுப்பப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கோத்திரத்திற்கு பிரதிநிதியாகயிருக்கிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட கோத்திரப்பிரபுக்களின் பெயர்கள் வருமாறு :

ரூபன் கோத்திரத்தில் சக்கூரின் குமாரன் சம்முவா. சிமியோன் கோத்திரத்தில் ஓரியின் குமாரன் சாப்பாத். யூதா கோத்திரத்தில் எப்புன்னேயின் குமாரன் காலேப் (எண் 13:4-6).

காலேப் யூதா கோத்திரத்தையும், யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தையும் சேர்ந்தவர்கள். (எண் 13:8,16) இவர்கள் இருவரும் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, நற்செய்தியைக் கொண்டு வந்தார்கள். (எண் 13:30; எண் 14:24,30,38). மோசேக்குப் பின்பு யோசுவா இஸ்ரவேலின் தலைவனானார் (உபா 34:9-12; ஒசி 1:1-18; ஒசி 3:7-8).

இசக்கார் கோத்திரத்தில் யோசேப்பின் குமாரன் ஈகால். எப்பிராயீம் கோத்திரத்தில் நூனின் குமாரன் ஓசேயா. பென்யமீன் கோத்திரத்தில் ரப்பூவின் குமாரன் பல்த்தி. செபுலோன் கோத்திரத்தில் சோதியின் குமாரன் காதியேல் (எண் 13:7-10).

மனாசேக்குப் பதிலாக யோசேப்பின் பெயரும், லேவிக்குப் பதிலாக எப்பிராயீமின் பெயரும் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (எண் 13:8).

யோசேப்பின் கோத்திரத்தைச் சேர்ந்த மனாசே கோத்திரத்தில் சூசின் குமாரன் காதி. தாண் கோத்திரத்தில் கெமல்லியின் குமாரன் அம்மியேல். ஆசேர் கோத்திரத்தில் மிகாவேலின் குமாரன் சேத்தூர். நப்தலி கோத்திரத்தில் ஒப்பேசியின் குமாரன் நாகபி. காத் கோத்திரத்தில் மாகியின் குமாரன் கூவேல் (எண் 13:11-15).

சேத்தூர் என்னும் எபிரெய பெயருக்கு, "தேவனால் உறுதிபண்ணப்பட்டவர்" என்று பொருள். எபிரெய மொழியில் எழுத்துக்களே எண்களாகவும் பயன்படுகிறது. சேத்தூர் என்னும் எபிரெய பெயரின் கூட்டு எண்ணிக்கை 666 ஆகும். இந்த எண்ணிக்கை அந்திக் கிறிஸ்துவின் அடையாளம் என்று ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள் (வெளி 13).

இந்த அட்டவணை பிறப்பின் பிரகாரமாகவோ, (ஆதி 29:32-35; ஆதி 35:16-18) அல்லது ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கும் வரிசைப்பிரகாரமாகவோ கூறப்படவில்லை. (எண் 2:3-32).

ஜனங்களைத் திருப்திப்படுத்துவதற்காக மோசே வேவுகாரரை அனுப்புகிறார். (உபா 1:19-22). வாக்குத்தத்த கானான் தேசத்தைப் பற்றி தேவன் அவர்களுக்கு ஏற்கெனவே அறிவித்திருக்கிறார். (உபா 8:7-9). இஸ்ரவேல் புத்திரர் அதை நம்பியிருந்தால், கானான் தேசத்திற்குள் விசுவாசத்தோடு சென்று அதைச் சுதந்தரித்திருப்பார்கள். வனாந்தரத்தில் அவர்கள் நாற்பது வருஷங்கள் அலைந்து திரிந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டிருக்கிறார். ஓசேயா என்னும் பெயருக்கு இரட்சகர் அல்லது இரட்சிப்பு என்று பொருள். மோசே ஓசேயா என்னும் பெயரை யோசுவா என்று மாற்றுகிறார் (யாத் 17:9) யோசுவா என்னும் பெயருக்கு இரட்சிப்பார் அல்லது தேவனுடைய இரட்சிப்பு என்று பொருள். தேவனுடைய பெயரிலுள்ள ஒரு எழுத்து யோசுவாவின் பெயரில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மோசே அனுப்பின மனிதரின் நாமங்கள் இவைகளே; நூனின் குமாரனாகிய ஓசேயாவுக்கு யோசுவா என்று மோசே பேரிட்டிருக்கிறார் (எண் 13:16).

ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு பிரபு வீதமாக பன்னிரண்டு பிரபுக்கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இது மிகவும் நல்ல திட்டம். எந்தக் கோத்திரமும் ஒதுக்கி வைக்கப்படவில்லை. கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு எல்லா கோத்திரத்தாருக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இந்த திட்டம் நல்லதாகயிருந்தாலும், இதன் மூலமாக நல்ல விளைவு ஏற்படவில்லை.

கானான் தேசத்தைச் சுற்றிப்பாப்பதற்காக அனுப்பப்பட்ட கோத்திரப்பிதாக்களின் குணாதிசயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒவ்வொரு பிரபு அனுப்பப்படுகிறார். ஆனால் அனுப்பப்படுகிற அந்த பிரபுக்கு எப்படிப்பட்ட நற்குணம் இருக்கவேண்டும் என்பதில் யாரும் கவனம் செலுத்தவில்லை.

கோத்திரப்பிதாக்கள் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, தாங்கள் புறப்பட்ட இடத்திற்கு திரும்பி வருகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் பாளயத்திலுள்ளவர்களுக்கு சொல்லும் செய்திகள் அவர்களுடைய மனம் போலவே இருக்கிறது. தீயசுபாவமுள்ளவர்கள் தீயசெய்திகளை சொல்லுகிறார்கள். நல்ல சுபாவமுள்ளவர்கள் நல்ல செய்திகளைச் சொல்லுகிறார்கள்.

கானான் தேசத்திற்கு அனுப்பப்பட்டவர்களில் பத்துபேர் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய வல்லமைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்பவில்லை. அவர்கள் கர்த்தருடைய பலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய சொந்த பலத்துக்கும், கானான் தேசத்திலிருக்கிற கானானியரின் பலத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் கானானியரை தங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப் பார்க்க போனவர்களில் இருவர் மாத்திரம் கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும் நம்புகிறார்கள். அவர்கள் கானானியரின் பலத்தை கர்த்தருடைய பலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன்.

யோசுவாவின் பழைய பெயர் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய பழைய பெயர் ஓசேயா என்பதாகும். மோசே ஓசேயா என்னும் பெயரை, யோசுவா என்று மாற்றியிருக்கிறார். ஓசேயா என்னும் பெயருக்கு, இரட்சிப்புக்காக ஜெபம்பண்ணுவது என்று பொருள். ஓசேயா என்னும் பெயருக்கு "நீர் இரட்சிப்பீர்" என்று பொருள் சொல்லலாம். யோசுவா என்னும் பெயர் இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தைக் குறிப்பிடுகிறது. யோசுவா என்னும் பெயருக்கு "அவர் இரட்சிப்பார்" என்று பொருள் சொல்லலாம்.

ஓசேயா என்னும் பெயரும், யோசுவா என்னும் பெயரும் இரண்டு வெவ்வேறு பெயர்களாகயிருந்தாலும், இவ்விரண்டிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. ஒரு பெயர் ஜெபத்திற்கு அடையாளம். மற்றொரு பெயர் வாக்குத்தத்தத்திற்கு அடையாளம். ஜெபத்தின் மூலமாக வாக்குத்தத்தம் நிறைவேறுகிறது. வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டும் என்பதற்காக நாம் ஜெபம்பண்ணுகிறோம்.

இயேசு என்னும் பெயரும், யோசுவா என்னும் பெயரும் ஒரே பொருளை உடையது. நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு இயேசு என்பதே பெயர். மோசேக்கு பின்பு யோசுவா இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தினார். அவரே இஸ்ரவேலின் தளபதியாகவும், கானான் தேசத்தைச் சுதந்தரிக்கிறவராகவும் இருக்கிறார்.

யோசுவா கர்த்தருடைய ஜனங்களை, கானான் தேசத்தின் வல்லமைகளிலிருந்து விடுவித்து இரட்சித்தார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ தம்முடைய ஜனங்களை பாதாளத்தின் வல்லமைகளிலிருந்து மீட்டு இரட்சிக்கிறார்.

வேவுகாரருக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகள் எண் 13:17-20

எண் 13:17. அவர்களை மோசே கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்கும்படி அனுப்புகையில், அவர்களை நோக்கி: நீங்கள் இப்படித் தெற்கே போய், மலையில் ஏறி,

எண் 13:18. தேசம் எப்படிப்பட்டதென்றும், அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ, கொஞ்சம்பேரோ அநேகம் பேரோ என்றும்,

எண் 13:19. அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது, அது நல்லதோ கெட்டதோ என்றும், அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்றும், அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்றும்,

எண் 13:20. நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்றும்; அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்றும் பாருங்கள்; தைரியங்கொண்டிருந்து, தேசத்தின் கனிகளிலே சில்வற்றைக் கொண்டுவாருங்கள் என்றான். அக்காலம் திராட்சச்செடி முதற்பழம் பழுக்கிற காலமாயிருந்தது.

மோசே இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களையும் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அனுப்புகிறார். அவர்கள் கானான் தேசத்தில் எங்கெல்லாம் போகவேண்டும் என்றும், அவர்கள் எதையெல்லாம் பார்க்கவேண்டும் என்றும், அவர்கள் தன்னிடத்தில் மறுபடியும் திரும்பி வரும்போது, அவர்கள் எதைப்பற்றிய செய்திகளை கொண்டுவரவேண்டும் என்றும் மோசே அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

மோசே அவர்களுக்கு சொன்ன கட்டளையில் இரண்டு பகுதிகள் உள்ளது. அவையாவன : 1. அவர்கள் கானான் தேசத்தைப்பற்றி அறிந்து வரவேண்டும். 2. அவர்கள் கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றி அறிந்து வரவேண்டும்.

மோசே அவர்களை நோக்கி, "நீங்கள் இப்படித் தெற்கே போய், மலையில் ஏறி, தேசம் எப்படிப்பட்டதென்றும், அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ, கொஞ்சம்பேரோ அநேகம் பேரோ என்றும் (எண் 13:17,18) பாருங்கள் என்று சொல்லுகிறார்.

தெற்கு பகுதியில் நேகேப் மலை இருக்கிறது. இது கானானின் தென்பகுதியாகும். கானானின் தென்பகுதியும், மையப்பகுதியும் மலைகள் சூழ்ந்துள்ள இடம்.

அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது, அது நல்லதோ கெட்டதோ என்றும், அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்றும், அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்றும், நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்றும்; அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்றும் பாருங்கள் (எண் 13:19,20) என்று மோசே வேவுகாரரிடம் சொல்லுகிறார்.

வேவுகாரர்கள் பார்த்து வரவேண்டிய காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. தேசம் எப்படிப்பட்டது என்று
2. அங்கே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்களோ பலவீனர்களோ என்று
3. கொஞ்சம்பேரோ அநேகம் பேரோ என்று
4. அவர்கள் குடியிருக்கிற தேசம் எப்படிப்பட்டது என்று
5. அந்த தேசம் நல்லதோ கெட்டதோ என்று
6. அவர்கள் பட்டணங்கள் எப்படிப்பட்டதென்று
7. அவர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறவர்களோ கோட்டைகளில் குடியிருக்கிறவர்களோ என்று
8. நிலம் எப்படிப்பட்டது, அது வளப்பமானதோ இளப்பமானதோ என்று
9. அதில் விருட்சங்கள் உண்டோ இல்லையோ என்று

மோசே அவர்களைப் பார்த்து, "நீங்கள் தைரியங்கொண்டிருந்து, தேசத்தின் கனிகளிலே சிலவற்றைக் கொண்டுவாருங்கள்" (எண் 13:20) என்றும் சொல்லுகிறார். அக்காலம் திராட்சச்செடி முதற்பழம் பழுக்கிற காலமாயிருக்கிறது.

பாலஸ்தீன தேசத்தின் தென்பகுதியில் ஜூலை, ஆகஸ்டு, ஆகிய மாதங்கள் திராட்சைப்பழங்கள் பழுக்கும் காலமாகும். செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்கள் திராட்சைப்பழம் அறுக்கும் மாதமாகும். வடக்கு பிரதேசத்தில் திராட்சைப்பழம் பழுக்கும் காலமாக இருக்கும். இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து மே மாதம் 20 ஆம் தேதி புறப்படுகிறார்கள். (எண் 10:11).

அதன்பின்பு, கிப்ரோத்-அத்தாவாவில் ஒரு மாதம் தங்கியிருக்கிறார்கள். அங்கு அவர்களுக்குக் காடைகள் கொடுக்கப்படுகிறது (எண் 11:20, 31-35) அதன்பின்பு, ஆஸரோத்தில் ஏழு நாட்கள் தங்கியிருக்கிறார்கள். (எண் 11:35-12:16) இந்த வரலாற்றைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது வேவுகாரர்கள் ஜூலை மாதத்தின் ஆரம்பத்தில் கானான் தேசத்திற்குள் பிரவேசித்திருக்க வேண்டும் என்று தெரியவருகிறது.

மோசே பன்னிரண்டு வேவுகாரர்களையும் அனுப்பும்போது, "தைரியங்கொண்டிருங்கள்" என்று சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, அவர்கள் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும் என்றும், மனுஷரைப் பார்த்து பயப்படக்கூடாது என்றும் பொருள். மோசே அவர்களிடத்தில் பல காரியங்களை பார்த்து வருமாறு சொல்லியிருக்கிறார். அவர்கள் அந்தக் காரியங்களையெல்லாம் பார்த்து, இஸ்ரவேலின் பாளயத்திலிருக்கிற ஜனங்களுக்கு நல்ல செய்திகளை கொண்டு வரவேண்டும். அவர்களுடைய செய்தி இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்த வேண்டும்.

கானான் தேசம்
எண் 13:21-25

எண் 13:21. அவர்கள் போய், சீன் வனாந்தரந் தொடங்கி, ஆமாத்துக்குப் போகிற வழியாகிய ரேகொப் மட்டும், தேசத்தைச் சுற்றிப் பார்த்து,

எண் 13:22. தெற்கேயும் சென்று, எபிரோன்மட்டும் போனார்கள்; அங்கே ஏனாக்கின் குமாரராகிய அகீமானும் சேசாயும் தல்மாயும் இருந்தார்கள். எபிரோன் எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழுவருஷத்திற்கு முன்னே கட்டப்பட்டது.

எண் 13:23. பின்பு, அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்கு மட்டும் போய், அங்கே ஒரே குலையுள்ள ஒரு திராட்சைக் கொடியை அறுத்தார்கள்; அதை ஒரு தடியிலே இரண்டு பேர் கட்டித் தூக்கிக்கொண்டு வந்தார்கள்; மாதளம்பழங்களிலும் அத்திப்பழங்களிலும் சிலவற்றைக் கொண்டுவந்தார்கள்.

எண் 13:24. இஸ்ரவேல் புத்திரர் அங்கே அறுத்த திராட்சக்குலையினிமித்தம், அவ்விடம் எஸ்கோல் பள்ளத்தாக்கு என்னப்பட்டது.

எண் 13:25. அவர்கள் தேசத்தைச் சுற்றிப் பார்த்து, நாற்பதுநாள் சென்றபின்பு திரும்பினார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பிரபுக்கள் வாக்குத்தத்த தேசத்தைச் சுற்றிப் பார்க்கப்போகிறார்கள்.

அவர்கள் போய், சீன் வனாந்தரந் தொடங்கி, ஆமாத்துக்குப் போகிற வழியாகிய ரேகொப் மட்டும், தேசத்தைச் சுற்றிப் பார்க்கிறார்கள் *(எண் 13:21)*. இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்களும் கானான் தேசத்தை சுற்றிப் பார்க்கும்போது அவர்கள் வெவ்வேறு பிரிவுகளாக பிரிந்து செல்கிறார்கள்.

பாரானின் வடக்கு பகுதியில் சீன் வனாந்தரம் அமைந்திருக்கிது. ரேகோப் பாலஸ்தீனத்தின் வடக்கு பகுதியில் உள்ளது. *(2சாமு 8:3)*. இங்கிருந்து இவர்கள் தெற்கு பகுதியிலுள்ள எபிரோனுக்குத் திரும்புகிறார்கள். *(எண் 13:22)* அதன்பின்பு, எஸ்கோல் பள்ளத்தாக்கிற்குச் சென்று அங்கியிருந்து திராட்சைப்பழங்களையும், மாதுளம்பழங்களையும், அத்திப்பழங்களையும், சேகரித்துக் கொண்டு தங்கள் பாளயத்திற்குத் திரும்பி வருகிறார்கள்.

"உங்கள் தென்புறம் சீன்வனாந்தரம் தொடங்கி ஏதோம் தேசத்தின் ஓரமட்டும் இருக்கும்; கிழக்கே இருக்கிற உப்புக்கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென்எல்லையாயிருக்கும்" *(எண் 34:3)*.

"ஓர் என்னும் மலை தொடங்கி, ஆமாத்திற்குப் போகிற வழியைக் குறிப்பாக வைத்து, அங்கேயிருந்து அந்த எல்லை சேதாத்திற்குப் போய், அங்கேயிருந்து அது சிப்ரோனுக்குப் போய், ஆத்சார் ஏனானிலே முடியும்; அதுவே உங்களுக்கு வடபுறத்து எல்லையாயிருக்கும்" *(எண் 34:8,9)*.

இந்த வசனப்பகுதியில் எபிரோனைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. "அதன் பின்பு அவர்கள் தெற்கேயும் சென்று, எபிரோன்மட்டும் போகிறார்கள்; அங்கே ஏனாக்கின் குமாரராகிய அகீமானும் சேசாயும் தல்மாயும் இருக்கிறார்கள். எபிரோன் எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழுவருஷத்திற்கு முன்னே கட்டப்பட்டது" *(எண் 13:22)*.

ஏனோக்கியரின் கோத்திரப்பிதா அர்பா என்பவர். (யோசு 14:15; யோசு 15:13). எபிரோன் கீரியாத்-அர்பா என்று அழைக்கப்பட்டது. (ஆதி 23:2,19). அகீமான், சேசாய், தல்மாய் ஆகியோர் ஏனோக்கியரின் ராட்சத சந்ததியார் ஆவார்கள். 50 வருஷங்களுக்குப் பின்பு காலேப் இவர்களை முறியடித்தார். (யோசு 15:14; நியா 1:10).

எபிரோன் எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழுவருஷத்திற்கு முன்னே கட்டப்பட்டது. சோவான் கீழ் எகிப்து தேசத்தின் தலைநகரம். இதைவிட எபிரோன் பழமை வாய்ந்தது.

எபிரொனிலே மக்பேலா குகை இருக்கிறது. இந்தக் குகையில் இஸ்ரவேலரின் முற்பிதாக்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

"அதற்குப்பின் ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைக் கானான் தேசத்தில் எப்பெரோன் ஊர் பூமியான மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்தின் குகையிலே அடக்கம் பண்ணினான்" (ஆதி 23:19).

கானான் தேசத்தை சுற்றிப் பார்க்கப்போன இஸ்ரவேலின் கோத்திரப்பிரபுக்கள் மக்பேலாவிலுள்ள, தங்கள் முற்பிதாக்களின் கல்லறைக்குப் போகிறார்கள். அந்த பகுதிக்கு அருகாமையிலுள்ள பட்டணத்தில் ஏனாக்கின் குமாரர் குடியிருக்கிறார்கள். தங்களுடைய முற்பிதாக்களின் கல்லறைகள் எங்கே இருக்கிறாதோ, அந்த இடத்தையும், அதற்கு அருகாமையிலுள்ள இடத்தையும் ஏனாக்கின் குமாரர் கைப்பற்றியிருக்கிறார்கள்.

பின்பு, அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்கு மட்டும் போய், அங்கே ஒரே குலையுள்ள ஒரு திராட்சைக் கொடியை அறுக்கிறார்கள்; அதை ஒரு தடியிலே இரண்டு பேர் கட்டித் தூக்கிக்கொண்டு வருகிறார்கள்; மாதளம்பழங்களிலும் அத்திப்பழங்களிலும் சிலவற்றைக் கொண்டுவருகிறார்கள் (எண் 13:23). இஸ்ரவேல் புத்திரர் அங்கே அறுத்த திராட்சக்குலையினிமித்தம், அவ்விடம் எஸ்கோல் பள்ளத்தாக்கு என்னப்பட்டது (எண் 13:24).

எபிரோனின் தென்பகுதியிலுள்ள எஸ்கோல் பள்ளத்தாக்கு வளம் நிறைந்தது. எஸ்கோல் என்பதற்கு "திராட்சைக்குலை" (ஆதி 14:13) என்று பொருள். வேதாகமத்தில் நான்கு இடங்களில் எஸ்கோலைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. (எண் 13:23-24; எண் 32:9; உபா 1:24). கானான் தேசம் யோசுவாவின்கீழ் பங்குபாகம் பண்ணப்பட்டபோது, இந்தப் பள்ளத்தாக்கு யூதாவின் பங்குவீதமாகக் கிடைக்கிறது.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்பதற்கு இந்தத் திராட்சப்பழங்களும், மாதுளம் பழங்களும், அத்திப்பழங்களும் அடையாளமாயிருக்கிறது. ஆகையினால் இந்தப் பள்ளத்தாக்குக்கு எஸ்கோல் பள்ளத்தாக்குக்கு என்று பேரிடுகிறார்கள். எஸ்கோல் என்னும் பெயருக்கு திராட்சக்குலை என்று பொருள். கானான் தேசத்திலுள்ள எல்லா பழங்களுக்கும், இந்த திராட்சக்குலையானது அடையாளமாகவும் அச்சாரமாகவும் இருக்கிறது.

இஸ்ரவேல் கோத்திரத்தின் பன்னிரண்டு பிரபுக்களும் தேசத்தைச் சுற்றிப் பார்த்து, நாற்பதுநாள் சென்றபின்பு திரும்புகிறார்கள் (எண் 13:25).

இஸ்ரவேல் புத்திரரின் வேவுகாரர்கள் கானான் தேசத்தை நாற்பது நாட்களுக்குச் சுற்றி பார்த்துவிட்டு, தங்கள் பாளயத்திற்குத் திரும்பி வருகிறார்கள். நாற்பது என்னும் எண்ணில் விசேஷித்த ஆவிக்குரிய வியாக்கியானம் எதுவுமில்லை. (உபா 4:2; உபா 12:32; நீதி 30:6; வெளி 22:18-19).

வேவுகாரரின் வார்த்தைகள் எண் 13:26-33

எண் 13:26. அவர்கள் பாரான் வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்கு வந்து, மோசே ஆரோன் என்பவர்களிடத்திலும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாசாரத்தை அறிவித்து, தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பித்தார்கள்.

எண் 13:27. அவர்கள் மோசேயை நோக்கி: நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி.

எண் 13:28. ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம்.

எண் 13:29. அமலேக்கியர் தென்புறமான தேசத்தில் குடியிருக்கிறார்கள்; ஏத்தியரும், எபூசியரும், எமோரியரும் மலைநாட்டில் குடியிருக்கிறார்கள்; கானானியர் கடல் அருகேயும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் என்றார்கள்.

எண் 13:30. அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் என்றான்.

எண் 13:31. அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ: நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள்.

எண் 13:32. நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்; நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள்.

எண் 13:33. அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும், அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள்.

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கப் போன பன்னிரண்டு பிரபுக்களும் திரும்பி வருகிறார்கள். அவர்கள் ஒரே குலையுள்ள ஒரு திராட்சக்கொடியையும், மாதளம்பழங்களிலும், அத்திப்பழங்களிலும் சிலவற்றையும் கொண்டு வருகிறார்கள். இவை கானான் தேசம் செழிப்பான தேசம் என்பதற்கு அடையாளமாயும் அச்சாரமாயும் இருக்கிறது. இதில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு எதுவுமில்லை.

மோசே அவர்களிடத்தில் கானான் தேசத்தைப்பற்றியும், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களையும் பற்றி செய்தி கொண்டு வருமாறு சொன்னார். பன்னிரண்டு பிரபுக்களும் கானான் தேசம் செழிப்பான தேசம் என்று ஒன்றுபோல் ஒரே செய்தியை சொல்லுகிறார்கள். அவர்களுடைய செய்திக்கு, அவர்கள் கொண்டு வரும் பழம் அடையாளமாயிருக்கிறது.

ஆனால் அவர்கள் கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றி வெவ்வேறு செய்திகளை சொல்லுகிறார்கள். பன்னிரண்டு பிரபுக்களில் பத்து பிரபுக்கள் கானான் தேசத்திற்கு போகவேண்டாம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் செய்தியினால் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தைக் கஷ்டப் பண்ணுகிறார்கள். மீதமுள்ள இரண்டு பிரபுக்களும், கர்த்தருடைய துணையினால், கானான் தேசத்தை சுதந்தரிக்கலாம் என்று விசுவாச வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

கானான் தேசம் செழிப்பான தேசம் என்பதிலும், கனிகொடுக்கும் விருட்சங்கள் அங்கு திரளாயிருக்கிறது என்பதிலும், கனிகளும் பெரிதாயிருக்கிறது என்பதிலும் பிரபுக்கள் மத்தியிலே கருத்து வேறுபாடு எதுவுமில்லை.

இஸ்ரவேலின் கோத்திரப்பிரபுக்கள் பன்னிரண்டு பேரும் கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்து, நாற்பதுநாள் சென்றபின்பு திரும்பி வருகிறார்கள். அவர்கள் பாரான் வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்கு வந்து, மோசே ஆரோன் என்பவர்களிடத்திலும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரிடத்திலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபையார் அனைவருக்கும் சமாசாரத்தை அறிவித்து, தேசத்தின் கனிகளை அவர்களுக்குக் காண்பிக்கிறார்கள் *(எண் 13:25,26)*.

காதேஸ்பர்னேயாவில் இஸ்ரவேல் புத்திரர் நாற்பது நாட்களுக்குப் பாளயமிறங்கியிருந்தார்கள். (உபா 1:19). இது என்-மிஸ்பாத் (ஆதி 14:7) என்று அழைக்கப்பட்டது. எபிரோனிலிருந்து தென்பகுதியில் 24 மைல் தூரத்திலுள்ளது. எபிரோன் கானான் தேசத்தின் தென்பகுதியின் எல்லையாகும். இங்கு மிரியாம் மரித்தார். ஜனங்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக இங்கு கூட்டம் கூடினார்கள். (எண் 20:1-3).

வேவுகாரர் கானான் தேசத்து திராட்சைக்குலையை ஒரு தடியில் இரண்டுபேர் கட்டி, தூக்கிக் கொண்டு வருகிறார்கள் (எண் 13:23). கானான் தேசத்து திராட்சைப்பழங்களும், மாதுளம் பழங்களும், அத்திப்பழங்களும் அளவில் பெரியவை. வளப்பமானவை (எண் 13:23).

அவர்கள் மோசேயை நோக்கி, "நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி" (எண் 13:27) என்று சொல்லுகிறார்கள்.

அவர்கள் கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லிய பின்பு கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றியும் சொல்லுகிறார்கள். ஜனங்களைப்பற்றிச் சொல்லும்போது, பிரபுக்கள் மத்தியிலே கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

கோத்திரப்பிரபுக்களில் பத்துபேர், கானான் தேசத்தைப்பற்றிச் சொல்லும்போது, அது பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்று சொல்லிவிட்டு, அதன் பின்பு, "நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்" (எண் 13:32) என்றும் சொல்லுகிறார்கள். அவர்களுடைய வார்த்தையில் உறுதியும், நிச்சயமும் இல்லை. நடுக்கமும், பயமும், தடுமாற்றமும் இருக்கிறது.

கோத்திரப்பிரபுக்கள் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்தபோது, அந்த தேசத்திலே மிகப்பெரிய வாதை இருந்திருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய பார்வையில் கானான் தேசம் தன் குடிகளை பட்சிக்கிற தேசமாக அவர்களுக்கு தெரிந்திருக்கிறது.

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்து வந்த பிரபுக்கள், அந்த தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றியும் சொல்லுகிறார்கள்.

ஆனாலும், அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம் (எண் 13:28) என்றும்,

அமலேக்கியர் தென்புறமான தேசத்தில் குடியிருக்கிறார்கள்; ஏத்தியரும், எபூசியரும், எமோரியரும் மலைநாட்டில் குடியிருக்கிறார்கள்; கானானியர் கடல் அருகேயும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் (எண் 13:29) என்றும் சொல்லுகிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்ப்பதற்காக அனுப்பப்பட்டவர்கள் திரும்பி வந்த போது, அவர்களில் அநேகர் சொன்ன பொதுவான செய்தியின் விவரம் வருமாறு :

1. நீர் எங்களை அனுப்பின தேசத்துக்கு நாங்கள் போய்வந்தோம்; அது பாலும் தேனும் ஓடுகிற தேசந்தான்; இது அதினுடைய கனி. (எண் 13:26-27).
2. அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள். (எண் 13:28).
3. பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது.
4. அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம். (எண் 13:28-29,32-33).
5. நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் (எண் 13:31).

கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு திரும்பி வந்திருக்கிற பன்னிரண்டு பிரபுக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. அவர்களில் பத்துபேர் ஒரே மாதிரியாகவும், மீதமுள்ள காலேப், யோசுவா ஆகிய இரண்டுபேரும் வேறுமாதிரியாகவும், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பற்றியும், அந்த தேசத்தை சுதந்தரிப்பது பற்றியும் தங்களுடைய செய்தியை சொல்லுகிறார்கள்.

வேவுகாரர் கண்டதைப் பற்றி எண் 13:28,32,33 ஆகிய வசனங்களில் கூறுகிறார்கள். இறுதியில் தங்களுடைய அவிசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கு "ஆனாலும்" என்று கூறிவிடுகிறார்கள். விசுவாசித்து நடக்காமல் தரிசித்து நடந்தால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரத்தான் செய்யும். (2கொரி 5:7). காலேபும், யோசுவாவும் விசுவாசத்தில் நடந்தார்கள். கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்கிறவர் நம்பிக்கையோடு இருப்பார். பயப்படமாட்டார். (எண் 13:30; எண் 14:7-9).

தேசத்தை சுற்றிப்பார்த்து விட்டு வந்த பிரபுக்களில் பத்துபேர், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைப்பார்த்து பயப்படுகிறார்கள்.

நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது; அவர்கள் நம்மைப்பார்க்கிலும் பலவான்கள் (எண் 13:31) என்றும், நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள் (எண் 13:32) என்றும் சொல்லுகிறார்கள்.

கானான் தேசத்தில் குடியிருக்கிறவர்கள் தங்களுக்குள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எல்லோரும் வாதையினால் அழிவார்கள்.

வேவுக்காரருடைய பார்வையில் கானான் தேசத்தார் இராட்சதரைப் போலவும், தாங்கள் வெட்டுக்கிளிகளைப் போலவும் இருக்கிறார்கள். (எண் 13:32-33).

இராட்சதர் இராட்சதரைப் பெற்றெடுப்பார்கள் (2சாமு 21:16-22, 1நாளா 20:4-8). இவர்கள் ஏனோக்கின் புத்திரர். ஏனோக்கியர் எல்லோருமே இராட்சதர்கள். (உபா 2:11).

கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகும் முன்பாகவே, அந்த தேசத்தை தங்களால் சுதந்தரிக்க முடியாது என்று பத்து பிரபுக்களும் அவிசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

பத்து பிரபுக்களும் மோசேயை நோக்கி, "அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும், அப்படியே இருந்தோம்" (எண் 13:33) என்று சொல்லுகிறார்கள். இவ்வாறாக அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்கிறார்கள்.

வேவுகாரர்களில் பத்து பேர் துர்ச்செய்தியைப் பரப்புகிறார்கள். இது கர்த்தருக்கு விசனமாக இருக்கிறது. துர்ச்செய்தியைப் பரப்பியவர்கள் நியாயந்தீர்க்கப்படுகிறார்கள் (எண் 14:37).

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட பன்னிரண்டு பிரபுக்களில் பத்துபேர், மாம்சப்பிரகாரமாக சிந்திக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பலத்தையும் அவருடைய வல்லமையையும் நோக்கிப் பார்ப்பதற்கு பதிலாக தங்களுடைய மாம்ச பலத்தை நோக்கிப் பார்க்கிறார்கள். கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களோடு ஒப்பிடும்போது, இஸ்ரவேல் புத்திரரின் மாம்ச பலமும் அதிகமாகவே இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கானானியரை விட திரளான எண்ணிக்கை உள்ளவர்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவேண்டும் என்னும் ஒரே நோக்கத்தோடிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையிலும், செயலிலும் ஒற்றுமையிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், ஒவ்வொரு கோத்திரமாக அணியணியாக புறப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்கிறது. மோசே அவர்களுக்கு தலைவராகயிருக்கிறார். அவர் ஞானமும் தைரியமுமுள்ளவர். மெய்யாகவே இஸ்ரவேல் புத்திரரின் மாம்ச பலம், கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்களைவிட அதிகமாகவே இருக்கிறது.

கானான் தேசத்தை வேவுபார்க்கும்படி அனுப்பப்பட்டவர்கள், மாம்சப்பிரகாரமாக சிந்தித்துப் பார்த்தாலும், இவ்வளவு கோழையாகயிருக்கவேண்டிய அவசியமில்லை. "நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது" என்றோ, "அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள்" என்றோ கோழைத்தனமாக பேசவேண்டிய அவசியமில்லை. வேவுகாரரின் பத்துபேர் மனம் தளர்ந்துபோயிருக்கிறார்கள்.

வேவுகாரர் சொன்ன பிரகாரம், கானானியர் இஸ்ரவேல் புத்திரரைவிட பலவான்களாகயிருந்தாலும், அவர்களால் கர்த்தரைவிட பெரிய பலவான்களாயிருக்க முடியாது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம் இஸ்ரவேல் புத்திரருக்கு மத்தியிலே இருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கும்போது, அவர்களுக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்கமுடியாது.

கானானியரின் பட்டணங்கள் அரணிப்பானவைகளாகவும், மிகவும் பெரியவைகளாகவும் இருக்கிறது என்று வேவுகாரர் சொல்லுகிறார்கள். ஆனாலும் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எந்த ஜனத்தாலும், பரலோகத்திற்கு விரோதமாக அரண்களை கட்ட முடியாது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், பரலோகத்தின் தேவனாகவும் இருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய புயத்தின் வல்லமையை பல சந்தர்ப்பங்களில் அனுபவித்திருக்கிறார்கள். கர்த்தருடைய புயம் குறுகிப்போகாத நீண்ட புயம். அவருடைய புயம் சத்துருக்களுக்கு விரோதமாக நீட்டப்பட்டிருக்கிற புயம். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் இஸ்ரவேல் புத்திரரை பாதுகாக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் 430 வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால், இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். கானானியரைப்போலவே எகிப்தியரும் பலமுள்ளவர்கள். கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணியதுபோல, கானானியரையும் அதம்பண்ணுவார். ஆனால் வேவுபார்க்கப்போன கோத்திரப்பிரபுக்களுக்கோ, கர்த்தர்மீது போதுமான அளவு நம்பிக்கையில்லை.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தைப் பயன்படுத்தாமலேயே, எகிப்தியரின் குதிரை வீரர்களையும் இரதங்களையும் செங்கடலிலே மூழ்கச் செய்தார். எகிப்தியர்கள் மொத்தமாய் அழிந்துபோனார்கள். அமலேக்கியர்கள் சிதறிப்போனார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தையை நம்பி, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக கானானியர்மீது யுத்தம்பண்ணுவார். கானானியரால் கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியாது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கானானியருக்கு விரோதமாக மேற்கொள்ளும் எல்லா யுத்தங்களிலும், இஸ்ரவேல் புத்திரருக்கு கானானியர்மீது ஜெயம் கிடைக்கும் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம்.

ஆபிரகாமின் சந்ததியார் கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று கர்த்தர் ஏற்கெனவே வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிச்சயம் நிறைவேறும்.

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" (ஆதி 15:18-21)

"நீ பரதேசியாய்த் தங்கிவருகிறகானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார்" (ஆதி 17:8).

கர்த்தர் கானானியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக துரத்திவிடுவார். இது கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன வாக்குத்தத்தம்.

"நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, கானானியனையும் எமோரியனையும் ஏத்தியனையும் பெரிசியனையும் ஏவியனையும் எபூசியனையும் துரத்திவிடுவேன்" *(யாத் 33:2)*.

கர்த்தர் கானியரை ஒரே வேளையில் மொத்தமாக துரத்திவிடாமல், அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரம், கொஞ்சம் கொஞ்சமாக துரத்துவார்.

"நீ விருத்தியடைந்து, தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்வரைக்கும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உன் முன்னின்று துரத்திவிடுவேன்" *(யாத் 23:30)*.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி அனுப்பப்பட்ட பிரபுக்களில் பத்துபேர் கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நம்பாமல், "நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது" என்று அவிசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார்கள். அவர்கள் இவ்வாறு பேசுவது, "கர்த்தரால் தம்முடைய வார்த்தையை நிறைவேற்ற முடியுமோ அல்லது முடியாதோ என்று தெரியவில்லையே" என்று சந்தேகத்தோடு கேட்பதற்கு சமம்.

பன்னிரண்டு வேவுகாரரில் ஒருவராகிய காலேபு இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் விசுவாசமான வார்த்தைகளை சொல்லுகிறார். காலேபு சொல்லுகிற வார்த்தைகளை யோசுவாவும் அங்கீகரிக்கிறார். காலேபு மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்துகிறார். தான் சொல்லுவதை இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் செவிகொடுத்து கேட்கவேண்டும் என்பது காலேபின் விருப்பம். காலேபு என்னும் பெயருக்கு "முழுஇருதயம்" என்று பொருள் இஸ்ரவேல் புத்திரர் காலேபின் வார்த்தைக்கு செவிகொடுத்தால் அவர்களும் முழுஇருதயத்தோடு கர்த்தருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நம்புவார்கள்.

காலேபு இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்" *(எண் 13:30)* என்று சொல்லுகிறார்.

காலேபின் வார்த்தையில் உறுதியிருக்கிறது. "நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம்" என்று காலேபு சொல்லுகிறார். கானானியர் பலவான்களாகயிருந்தாலும், இஸ்ரவேல் புத்திரரும் பலவான்களாகவே இருக்கிறார்கள். காலேபு இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்துகிறார். "நான் உடனே போய் அதை சுதந்தரித்துக்கொள்வோம்" என்று காலேபு ஆர்வத்தோடு சொல்லுகிறார். அவர் இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணும்போது, முன்னணியில் புறப்பட்டுப்போகிறவர். காலேபு யூதா கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஆகையினால் காலேபு அவர்களுக்கு உற்சாகத்தையும், தைரியத்தையும், தெம்பையும், நம்பிக்கையையும் கொடுத்து, அவர்களை வழிநடத்துகிறார்.

கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும் என்பதே இஸ்ரவேல் புத்திரரின் விருப்பம். தங்கள் விருப்பத்தை காலதாமதம்பண்ணாமல், உடனே நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று காலேபு விரும்புகிறார்.

14 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை நம்பாமல் அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இதனால் கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் இடையே வாக்குவாதமுண்டாயிற்று. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்படுகிறார். அவர்கள் கானான் தேசத்தின் இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று கர்த்தர் தம்முடைய கோபத்திலே சொல்லுகிறார்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்த்து வந்தவர்களில் பத்துபேர் அந்த தேசத்தைக் குறித்து, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே துர்ச்செய்தி பரம்பச்செய்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள் (எண் 14:1-4).

மோசேயும் ஆரோனும், காலேபும் யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரருடைய கலகத்தை அடக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி பிரயோஜனமில்லாமல் போயிற்று (எண் 14:5-10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களை அழித்துப்போடப்போவதாக, அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார் (எண் 14:11,12). மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தருடைய சமுகத்திலே பணிவாய் விண்ணப்பம்பண்ணுகிறார் (எண் 14:13-19).

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். அவர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் அழித்துப்போடவில்லை. தம்மை பரீட்சை பார்த்த மனிதரில் ஒருவரும் கானான் தேசத்தைக் காணமாட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். காலேபும் யோசுவாவும், அவர்களுடைய சந்ததியாரும் கானான் தேசத்தை சுதந்தரிப்பார்கள் (எண் 14:20-35).

கானான் தேசத்தை சுற்றிப்பார்த்துவிட்டு, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே துர்ச்செய்தியை சொன்னவர்கள், கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள் (எண் 14:36-39). இஸ்ரவேல் புத்திரரில் அநேகர், கர்த்தருடைய அனுமதியில்லாமல், கானான் தேசத்திற்குப்போவோம் என்று சொல்லி மலையின்மேல் ஏறித்துணிகிறார்கள் (எண் 14:40-45). அமலேக்கியரும் கானானியரும் இஸ்ரவேல் புத்திரரை முறியடித்து துரத்துகிறார்கள்.

சபையாரின் புலம்பல்
எண் 14:1-4

எண் 14:1. அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருந்தார்கள்.

எண் 14:2. இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம்.

எண் 14:3. நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக்கொண்டு வந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ என்றார்கள்.

எண் 14:4. பின்பு அவர்கள்: நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கு திரும்பிப்போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கும்படி போனவர்களில் பத்துபேர், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கானான் தேசத்தைக் குறித்து துர்ச்செய்தியை சொல்லுகிறார்கள். அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்புகிறார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருக்கிறார்கள் (எண் 14:1).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்கள் மத்தியில் துர்ச்செய்தியைப் பரம்பச்செய்கிற வேவுகாரரின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இஸ்ரவேலின் பாளயத்திலிருக்கிறவர்களுக்கு இப்போது ஒரு ஆபத்தும் வரவில்லை. ஆனாலும் அவர்கள் தங்களுக்கு ஆபத்துக்கள் வந்ததுபோல பாவித்து, சபையார் எல்லாரும் கூக்குரலிட்டு புலம்புகிறார்கள். அவர்கள் அழுவதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. ஆனாலும் அவர்கள் அன்று இராமுழுவதும் அழுதுகொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாக முறுமுறுப்பதினால், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும் பேசுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய கூக்குரலுக்கும் புலம்பலுக்கும், அவர்களுடைய கோத்திரப்பிதாக்களின் பிரபுக்களே காரணம். அவர்கள் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் துர்ச்செய்தியைப் பரம்பச்செய்கிறார்கள். அந்தச் செய்தி உண்மையான செய்தியல்ல. அவர்கள் சொன்ன செய்திக்கு ஆதாரம் எதுவுமில்லை. ஆனாலும் அவர்கள் சொன்ன பொய்யான செய்தியை சபையார் எல்லாரும் கேட்டு கூக்குரலிட்டு புலம்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், மோசேயையும், ஆரோனையும் நோக்கி, "எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம். நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன? எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ" (எண் 14:2,3) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் எல்லா வார்த்தைகளையும் சீர்தூக்கிப் பார்த்தால் யாரும் தப்பமுடியாது. (மத் 12:36) துர்மார்க்கருடைய ஜெபம் கர்த்தருக்கு அருவருப்பானது என்று சாலொமோன் கூறுகிறார். (நீதி 15:8). வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரருடைய இந்த ஜெபத்திற்குக் கர்த்தர் அவர்கள் கேட்டுக் கொண்ட பிரகாரமாகவே பதில் கொடுத்துவிடுகிறார். நாற்பது வருஷக் காலத்தில் யோசுவாவையும், காலேபையும் தவிர பழைய சந்ததியார் எல்லோரும் வனாந்தரத்தில் செத்துப்போகிறார்கள். மரணம் உடனடியாக ஆரம்பித்துவிடுகிறது. (எண் 14:23-37).

எகிப்து தேசத்தில் செத்துப்போனால் நலமாயிருக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள். அவர்கள் எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டு வந்து பல மாதங்களாயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் இதுவரையிலும் பிரயாணம் செய்தார்கள். கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு கூடயிருந்தது. கர்த்தர் அவர்களை இதுவரையிலும் போஷித்து, பராமரித்து பாதுகாத்து வந்திருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய நன்மைகளை அனுபவித்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் இப்போதோ, எகிப்து தேசத்திலே செத்துப்போனால் நலமாயிருக்கும் என்று சொல்லுகிறார்கள். வனாந்தரத்திலே செத்துப்போவதற்கு பதிலாக, எகிப்து தேசத்திலே செத்துப்போவதை விரும்புகிறார்கள். "எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம்" (எண் 14:2) என்று இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணி அழைத்து வந்திருக்கிறார். அவர்களை கானான் தேசத்திற்கு வழிநடத்திக்கொண்டு போகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ, "நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன?" (எண் 14:3) என்று கேட்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பெண்ஜாதிகளும், பிள்ளைகளும் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. கர்த்தர் அவர்களை பாதுகாத்து பராமரிக்கிறார். ஆனால் அவர்கள் கொள்ளையாவார்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குப்போகவேண்டியவர்கள். ஆனால் அவர்கள் இப்போது எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று விரும்புகிறார்கள். "எகிப்துக்குத் திரும்பிப்போகிறதே எங்களுக்கு உத்தமம் அல்லவோ" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு மோசே தலைவராயிருக்கிறார். மோசே அவர்களை கானான் தேசத்திற்கு நடத்திக்கொண்டு போகிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் ஆளுகையை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து கானான் தேசத்திற்குப்போக விரும்பவில்லை. அவர்கள் மோசேக்கு பதிலாக ஒரு புதிய தலைவனை தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கு திரும்பிப்போவோம் வாருங்கள்" (எண் 14:4) என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவதே தங்களுக்கு நலமாயிருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தை அனுபவித்தவர்கள். எகிப்தியர்கள் மூலமாக பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தவர்கள். ஆனால் அவர்களுக்கு கானான் தேசத்தைவிட எகிப்து தேசம் நலமான தேசமாய்த் தெரிகிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வனாந்தரத்தின் வழியாக, கானான் தேசத்தின் எல்லைப்பகுதிக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இப்போது இதே வனாந்தரத்தின் வழியாக, இங்கே இருந்து எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இது அவர்களுடைய மதியீனம்.

கானான் தேசம் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிற தேசம். அவர்களுடைய பங்குவீதம் கானான் தேசத்திலே இருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசம் பிடிக்கவில்லை. அவர்களுக்கு எகிப்து தேசமே பிடித்திருக்கிறது. எகிப்து தேசம் இஸ்ரவேல் புத்திரருடைய சுதந்தர தேசமல்ல. அங்கே அவர்களுக்கு பங்குவீதம் இல்லை. ஆனாலும் அவர்கள் எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போகவிரும்புகிறார்கள்.

கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஸ்தலத்தில் நாம் திருப்தியாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியத்தை உண்மையோடு செய்யவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களில் நாம் திருப்தியடையவில்லையென்றால், நமக்கு ஒருபோதும் திருப்தி ஏற்படாது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஸ்தானத்தில் திருப்தியடையவேண்டும். அந்த ஸ்தானத்தில் நாம் திருப்தியடையாமல், இந்தப் பிரபஞ்சத்தில் எந்த இடத்திற்கு சுற்றி அலைந்தாலும், அங்கே நமக்கு திருப்தி ஏற்படப்போவதில்லை.

கர்த்தர் நம்மை எந்த சூழ்நிலையில் வைத்திருந்தாலும், நாம் அந்த சூழ்நிலையில் கர்த்தருக்குள் சந்தோஷமாயும், திருப்தியாயும் இருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர், "எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவது நலமாயிருக்கும்" என்று சொல்லுவதற்கு பதிலாக, "கர்த்தர் தங்களை எந்த ஸ்தலத்தில் வைத்திருக்கிறாரோ அந்த ஸ்தலத்திலே திருப்தியாயிருப்பது தங்களுக்கு நலமாயிருக்கும்" என்று சொல்லவேண்டும்.

துர்ச்செய்தியினால் ஏற்பட்ட விளைவுகளின் விவரம் வருமாறு :

1. சபையார் எல்லாரும் கூக்குரலிட்டுப் புலம்பினார்கள்; ஜனங்கள் அன்று இராமுழுதும் அழுதுகொண்டிருந்தார்கள். (எண் 14:1)

2. இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். (எண் 14:2).

3. எகிப்துதேசத்திலே செத்துப் போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம் என்று சபையாரெல்லாரும் முறுமுறுத்தார்கள்.

4. கர்த்தர் தங்களை ஏமாற்றிவிட்டதாக அவரைத் தூஷித்தார்கள். (எண் 14:3).

5. நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக் கொண்டு எகிப்துக்கு திரும்பிப் போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். (எண் 14:3-4,9).

6. இவர்களுடைய துர்ச்செய்தியினால் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் பயமும், கோழைத்தனமும் உண்டாயிற்று. (எண் 14:3,9).

7. இந்தத் துர்ச்செய்தியின்நிமித்தமாக இது வரையிலும் அவர்கள் நம்பிக்கை வைத்திருந்த மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராகக் கலகம் பண்ணினார்கள். (எண் 14:10).

சமாதான வார்த்தைகள் எண் 14:5-10

எண் 14:5. அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுந்தார்கள்.

எண் 14:6. தேசத்தைச் சுற்றிப்பார்த்தவர்களில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

எண் 14:7. இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும்நோக்கி: நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம்.

எண் 14:8. கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார்.

எண் 14:9. கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை என்றார்கள்.

எண் 14:10. அப்பொழுது அவர்கள்மேல் கல்லெறியவேண்டும் என்று சபையார் எல்லாரும் சொன்னார்கள்; உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்பட்டது.

தங்களுடைய அவிசுவாசமான வார்த்தைகளினால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். அவர்களை அழிவிலிருந்து தப்பிக்க வைப்பதற்காக, அவர்களுடைய சிநேகிதர்கள் முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் அந்த முயற்சி வீணாய்ப்போயிற்று. இஸ்ரவேல் புத்திரர் இன்னும் கலககுணமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கு திரும்பிப்போவோம் வாருங்கள்" என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுகிறார்கள் (எண் 13:5).

இதற்கு முன்பாக ஆரோனும், மோசேயும் இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தருக்குக் கீழ்ப்படிய செய்ய முயற்சி மேற்கொண்டார்கள் (எண் 13:30; உபா 1:29). ஆனால் அவர்கள் முயற்சி தோல்வியுற்றது. வேறுவழியில்லாமல், இப்போது கர்த்தருடைய சமுகத்தில் முகங்குப்புற விழுகிறார்கள்.

கலகக்காரரின் எண்ணிக்கை ஏராளமாயிருக்கிறது. அவர்களுடைய சத்தமும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் மத்தியிலே மோசேயும் ஆரோனும் பேசுகிறார்கள். ஆனால் திரளான ஜனங்களுக்கு மத்தியில் இவர்களுடைய பேச்சு கேட்கவில்லை. இவர்களுடைய பேச்சைக் கேட்க கலகக்காரர் யாரும் ஆயத்தமாயில்லை.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பேசுவதற்கு பதிலாக வேறொரு உபாயத்தைக் கையாளுகிறார்கள். அவர்கள் இருவரும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணிக்கொண்டிருக்கும்போது, மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சமுகத்திலே தங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுத்து ஜெபம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். தங்களுக்கு வேறொரு தலைவனை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்கிறார்கள். இதனால் மோசேயின் ஆவியும், ஆரோனின் ஆவியும் கலக்கமடைந்திருக்கிறது. அவர்களுடைய மனதிலே குழப்பமுண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்குப்போக மனதில்லாமல், எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவோம் என்று சொல்லுகிறார்கள். அதைக் கேட்டபோது மோசேக்கு அதிர்ச்சி உண்டாயிற்று. அவர்கள் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் விட்டு விலகிப்போவதைப் பார்த்து, மோசேயும் ஆரோனும் அதிர்ச்சியடைந்தவர்களாக, தரையிலே முகங்குப்புற விழுகிறார்கள்.

இந்த சம்பவம் உபாகமம் புஸ்தகத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொன்ன வார்த்தைகள், அந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது நான் உங்களை நோக்கி: நீங்கள் கலங்காமலும் அவர்களுக்குப் பயப்படாமலும் இருங்கள். உங்களுக்கு முன் செல்லும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தாமே எகிப்தில் உங்களோடிருந்து, உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்ததெல்லாவற்றைப்போலவும், வனாந்தரத்தில் செய்துவந்ததுபோலவும், உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்" *(உபா 1:29,30)* என்று சொன்னேன் என்று மோசே சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லா கூட்டத்தாருக்கும் முன்பாக முகங்குப்புற விழுந்து கிடக்கும்போது, காலேபும் யோசுவாவும் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் பேசுவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்கள் இருவரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள். ஜனங்களுடைய பாவத்தினிமித்தமாக அவர்கள் இருவரும் மிகுந்த துக்கப்பட்டு தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள்.

தேவனுடைய கோபம் இஸ்ரவேல் புத்திரர்மீது வந்திருக்கிறது. கர்த்தருடைய கோபம் இப்போதே வெளிப்படப்போவதை யோசுவாவும் காலேபும் காண்கிறார்கள். அந்த வேதனையை அவர்களால் தாங்க முடியவில்லை. அவர்களுடைய வேதனை அதிகரிப்பதினால், அவர்கள் இருவரும் தங்கள் வஸ்திரங்களை கிழித்துக்கொள்கிறார்கள்.

தேசத்தைச் சுற்றிப்பார்த்தவர்களில் நூனின்குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையையும் நோக்கி பேசுகிறார்கள். யோசுவாவும் காலேபும் அதிகாரத்தோடு பேசுகிறார்கள்.

கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கப்போன பிரபுக்களோடு காலேபும் யோசுவாவும் போயிருந்தார்கள். அது பாலும் தேனும் ஒடுகிற செழிப்பான தேசம் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. அது நல்ல தேசம். அந்த தேசத்தைச் சுதந்தரிக்கும்போது தங்களுக்கு அநேக நன்மைகள் கிடைக்கும் என்று காலேபும் யோசுவாவும் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சொல்லுகிறார்கள்.

அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து சோதித்த தேசம் மகா நல்ல தேசம். கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டுபோய், பாலும் தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார்" (எண் 14:7,8) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதன் இரகசியம் இதுதான். கர்த்தரிடத்தில் நாம் பிரியமாயிருந்தால் அவரும் நம்மிடத்தில் பிரியமாயிருப்பார். தமக்குப் பிரியமானவனைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் இராட்சதராகயிருந்தாலும், அந்த தேசத்தின் ஜனங்களுக்கு இஸ்ரவேல் ஜனத்தார் பயப்படவேண்டிய அவசியமில்லை. யோசுவாவும் காலேபும் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுத்து பேசுகிறார்கள்.

யோசுவாவும் காலேபும், இஸ்ரவேல் ஜனத்தாரை நோக்கி, "கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை" (எண் 14:9) என்று சொல்லுகிறார்கள்.

"அவர்கள் நமக்கு இரையாவார்கள்" என்பது எபிரெயரின் வழக்குச்சொல்லாகும். அவர்களை முறியடித்துவிடலாம் என்பது இதன் பொருள். அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று. நிழல் இல்லையென்றால், அங்கு வெயில் அதிகமாக இருக்கும். வெயிலில் மன்னா உருகிப்போகும். (யாத் 16:21). அதுபோன்று, கானான் தேசத்தாரும், காணாமற்போய்விடுவார்கள். (யாத் 15:15; யோசு 2:9,11; ஏசா 13:7; ஏசா 19:1; எசே 21:7).

கானான் தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் அரணிப்பான பட்டணங்களில் இருந்தாலும், அவர்களுக்கு மெய்யான பாதுகாப்பு எதுவுமில்லை. அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று. அவர்களுடைய அரண்கள் அவர்களுக்கு பாதுகாப்பை தராது.

மற்ற வேவுகாரர்கள் கானான் தேசத்தாரின் உருவத்தையும், பலத்தையும் பார்த்தார்கள். ஆனால் யோசுவாவும் காலேபுமோ, கானானியரின் துன்மார்க்கத்தைப் பார்க்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாகவும், அக்கிரமத்தினிமித்தமாகவும், அவர்களைக் காத்த நிழல் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று என்று, யோசுவாவும் காலேபும் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய பாதுகாப்பு பாவிகளுக்கு கிடைக்காது.

கானானியர் கர்த்தருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாக, கர்த்தர் அவர்களை அழித்துப்போட சித்தமுள்ளவராயிருக்கிறார். கானானியர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவதுபோல, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணக்கூடாது. கலகம்பண்ணினால் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கும் சத்துருவாயிருப்பார். ஆகையினால், "கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்" என்று யோசுவாவும் காலேபும் இஸ்ரவேல் புத்திரிடத்தில் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரோ, யோசுவாவின் வார்த்தைக்கும், காலேபின் வார்த்தைக்கும் செவிகொடுக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரருடைய கோபம் காலேபின்மீதும் யோசுவாவின்மீதும் திரும்புகிறது. அவர்களுடைய கோபம் அதிகரிக்கிறது. இஸ்ரவேல் சபையார் எல்லாருமாய்ச் சேர்ந்து, காலேபின்மேலும் யோசுவாவின் மேலும் கல்லெறியவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

தாங்கள் இருவரும் கர்த்தருடைய சார்பாக பேசுவதை காலேபும் யோசுவாவும் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தங்கள் பட்சத்திலிருப்பார் என்றும், அவர் தங்களை பாதுகாத்துக்கொள்வார் என்றும் காலேபும் யோசுவாவும் நம்பிக்கையோடிருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீணாய்ப்போகவில்லை. கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. அவர்கள் கர்த்தரை நம்பினதினால் ஏமாற்றமடையவில்லை.

அவர்கள்மேல் கல்லெறிய வேண்டுமென்று இஸ்ரவேல் சபையார் எல்லாரும் சொன்னபோது, உடனே கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்படுகிறது (எண் 14:10). இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய மகிமையைக் காண்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள்மேல் கல்லெறிய வேண்டுமென்று சொன்னவர்களுக்கு குழப்பமும், திகிலும், பயமும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் புத்திரரின் கலகம் உச்சநிலையை அடைகிறது. கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் உடனடியாகக் காணப்படாமல் போயிருக்குமானால், அவர்கள் தங்கள் தலைவர்களைக் கல்லெறிந்து கொன்று போட்டிருப்பார்கள்.

கர்த்தருடைய கோபம்
எண் 14:11-12

எண் 14:11. கர்த்தர் மோசேயை நோக்கி: எது வரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்?

எண் 14:12. நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்கும் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன் என்றார்.

கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்படுகிறது. கர்த்தர் மோசேயை ஆசரிப்புக்கூடாரத்திற்கு அழைக்கிறார் என்பதற்கு கர்த்தருடைய மகிமை காணப்பட்டது அடையாளமாகும். மோசே உடனே ஆசரிப்புக்கூடாரத்திற்கு புறப்பட்டுப்போகிறார். கர்த்தர் மோசேயோடு பேசுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எது வரைக்கும் இந்த ஜனங்கள் எனக்குக் கோபம் உண்டாக்குவார்கள்? தங்களுக்குள்ளே நான் காட்டின சகல அடையாளங்களையும் அவர்கள் கண்டும், எதுவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்? நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்கும் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்" (எண் 14:11,12) என்று சொல்லுகிறார்.

தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவாரா என்று ஜனங்கள் இன்றும் அவிசுவாசத்தோடு கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும், அவருடைய அற்புதங்களையும், அடையாளங்களையும் தங்கள் கண்களால் கண்டவர்கள். ஆயினும் அவர்களிடத்திலும் அவிசுவாசமும், இருதயக் கடினமும் காணப்பட்டது (மாற்கு 16:14; லூக்கா 24:25).

"அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்" என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். யாத் 32:10-14 ஆகிய வசனங்களில் கர்த்தர் செய்ததுபோல, தேவன் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் அழிக்கப்போவதாக எச்சரிக்கிறார். இஸ்ரவேலரின் புதிய ஜாதிக்கு மோசே முற்பிதாவாக ஆவதற்கு வாய்ப்பு வருகிறது. ஆனாலும் மோசே தன் ஜனங்கள்மீது வைத்திருக்கும் அன்பினாலும், பிரியத்தினாலும் தேவன் தனக்குக் கொடுக்க விரும்பும் சிலாக்கியத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. தேவனுடைய நாமம் தூஷிக்கப்படக்கூடாது என்பதில் மோசே அக்கறையோடு இருக்கிறார் (எண் 14:12-20).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி மோசேயினிடத்தில் முறையிடுகிறார். கர்த்தருடைய வார்த்தைகள் நீதியானது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி மோசேயினிடத்தில் இரண்டு காரியங்களை சொல்லுகிறார். அவையாவன : 1. இஸ்ரவேல் புத்திரரின் பாவம். 2. இஸ்ரவேல் புத்திரர் பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தினால் கர்த்தருக்கு கோபமுண்டாக்குகிறார்கள். அவர்கள் கர்த்தரை மறுதலித்துவிட்டு, அவரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரின் அவிசுவாசமே, வனாந்தரத்தில் கர்த்தருக்கு அவர்கள்மீது கோபத்தை உண்டுபண்ணுகிறது. "எது வரைக்கும் இந்த ஜனங்கள் எனக்கு கோபமுண்டாக்குவார்கள்" என்றும், "எது வரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பார்கள்" என்றும் கர்த்தர் கேட்கிறார்.

"வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபி 3:8).

இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவத்தை விட்டு விலகிவராமல், பாவத்திலே தொடர்ந்து ஜீவிக்கிறார்கள். "அவர்கள் எதுவரைக்கும் பாவம் செய்வார்கள்" என்று கர்த்தர் கேட்கிறார். கர்த்தர் அவர்களுக்குள்ளே ஏராளமான அடையாளங்களைக் காண்பித்திருக்கிறார். அவர்களும் அந்த அடையாளங்களை தங்கள் கண்களால் கண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தரை விசுவாசியாதிருக்கிறார்கள்.

கர்த்தர் நமக்காக அதிகமான காரியங்களை செய்யும்போது, நாம் கர்த்தர்மீது அதிகமாய் நம்பிக்கை வைக்கவேண்டும். கர்த்தர் நமக்கு அதிகமான நன்மைகளை செய்திருந்தும், நாம் கர்த்தரை விசுவாசியாதிருப்போமென்றால், கர்த்தருடைய கோபம் நமக்கு விரோதமாக அதிகமாயிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரருடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், அவர்களுடைய கலகக்குணத்தினிமித்தமாகவும் கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய நீதியான தண்டனையைக் கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் அவர்களைக் கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்துக்கும் புறம்பாக்கிப்போட்டு, அவர்களைப்பார்க்கிலும் உன்னைப் பெரிதும் பலத்ததுமான ஜாதியாக்குவேன்" (எண் 14:12) என்று சொல்லுகிறார்.

அவர்கள் வனாந்தரத்தில் செத்துப்போவோம் என்று சொன்னார்கள். கர்த்தர் அவர்களை செத்துப்போக அனுமதிக்கிறார். அவர்களுடைய வேரோ அல்லது கிளையோ மீதமாயிராதபடிக்கு, அவர்களை முற்றிலுமாய் அழித்துப்போட கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் அவர்களை கொள்ளைநோயினால் வாதித்து, அவர்களுக்கு பூரண முடிவை உண்டுபண்ணப்போகிறார். கர்த்தருடைய வாதை அவர்கள்மீது வரும்போது, இப்போது மீதியாயிருப்பவையெல்லாம் முற்றிலுமாய் அழிந்துபோகும்.

மோசேயின் பரிந்து பேசும் ஜெபம் எண் 14:13-19

எண் 14:13. மோசே கர்த்தரை நோக்கி: எகிப்தியர் இதைக் கேட்பார்கள், அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களைக் கொண்டுவந்தீரே.

எண் 14:14. கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர்முகமுகமாய்த் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள்; இந்த தேசத்தின் குடிகளுக்கும் சொல்லுவார்கள்.

எண் 14:15. ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார்:

எண் 14:16. கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விடக்கூடாதே போனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே.

எண் 14:17. ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும், குற்றமுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்றும், நீர் சொல்லியிருக்கிறபடியே,

எண் 14:18. என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக.

எண் 14:19. உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியும், எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்து வந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும் என்றான்.

கர்த்தர் மோசேயினிடத்தில் இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பேசுகிறார். கர்த்தருடைய வார்த்தையில் அவருடைய கோபம் வெளிப்படுகிறது. மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார். "இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும்" (எண் 14:19) என்பதே மோசேயின் சுருக்கமான ஜெபமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தினிமித்தமாக அழிவுக்கு பாத்திரமாகயிருக்கிறார்கள். அவர்கள்மீது நீதியான நியாயத்தீர்ப்பும், அவர்களுக்கு நீதியான தண்டனையும் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் தண்டிக்கப்படுவதற்கு பாத்திரராயிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தமது கிருபையினால், இஸ்ரவேல் புத்திரரின் அக்கிரமத்தை மன்னித்தருளவேண்டுமென்று, மோசே அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காக கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் பரிந்து பேசினார். "பிதாவே, அவர்களுக்கு மன்னியும்" என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காக பிதாவினிடத்தில் ஜெபித்தார்.

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசும்போது, அவர் பல விண்ணப்பங்களை ஏறெடுக்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினுடைய மகத்துவத்தின்படி, இஸ்ரவேல் புத்திரர்மீது கிருபையும் இரக்கமும் காண்பிக்கவேண்டும் என்று மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்காக விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "எகிப்தியர் இதைக் கேட்பார்கள், அவர்கள் நடுவிலிருந்து உம்முடைய வல்லமையினாலே இந்த ஜனங்களைக் கொண்டுவந்தீரே" (எண் 14:13) என்று மோசே கர்த்தருடைய வல்லமையை உயர்த்திப்பேசுகிறார்.

இதற்கு முன்பு இதுபோன்று ஒரு சூழ்நிலை வந்தபோது, மோசே எப்படி ஜெபித்தாரோ அப்படியே இப்போதும் ஜெபிக்கிறார். மற்ற தேசங்களுக்கு முன்பாக தேவன் இஸ்ரவேல் தேசத்திற்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுமாறு மோசே விண்ணப்பம்பண்ணுகிறார். (எண் 14:13-20 =யாத் 32:10-14). வாக்குத்தத்தம் நிறைவேறவில்லையென்றால், மற்ற தேசத்தார் கர்த்தரைத் தூஷிப்பார்களே என்று தேவனிடத்தில் கெஞ்சிப் பிரார்த்தனை பண்ணுகிறார்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களும், ஆசீர்வாதங்களும், உடன்படிக்கைகளையும், நிறைவேற வேண்டுமானால் அவர் நியமித்து வைத்திருக்கும் நிபந்தனைகளை மனுஷன் நிறைவேற்ற வேண்டும். தமக்குக் கீழ்ப்படிபவருக்கு ஆசீர்வாதத்தையும், கீழ்ப்படியாதோருக்குச் சாபத்தையும் கர்த்தர் தமக்கு முன் வைத்திருக்கிறார். மற்றவர்கள் தம்மைப் பற்றி எப்படி நினைப்பார்கள் என்பதில் கர்த்தர் கவனம் செலுத்துவதற்குப் பதிலாகத், தாம் பட்சபாதம் இல்லாத நியாயாதிபதி என்பதை நிரூபிக்க விரும்புகிறார்.

புறஜாதியார் கர்த்தரைப்பற்றியும், கர்த்தருடைய ஜனத்தைப்பற்றியும் கேட்டிருக்கும் காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களின் நடுவில் இருக்கிறார்.

2. கர்த்தராகிய நீர்முகமுகமாய்த் தரிசனமாகிறீர்.

3. உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறது.

4. பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறீர்.

புறஜாதியார் கர்த்தருடைய மகிமையைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தாருக்குக் கர்த்தர் நன்மை செய்ய விரும்புகிறார் என்பதும் புறஜாதியாருக்குத் தெரிந்திருக்கிறது. ஆகையினால், புறஜாதியார் இஸ்ரவேல் தேசத்தாரோடு யுத்தம் பண்ண விரும்புவதில்லை (எண் 14:9).

கர்த்தருடைய மகிமையைப்பற்றி புறஜாதி ஜனங்களும் கேள்விப்பட்டிருக்கிறார்கள். கர்த்தருடைய நாமம் சகல ஜாதியார் மத்தியிலும் உயர்ந்த நாமமாயிருக்கிறது.

மோசே கர்த்தரை நோக்கி, "கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர்முகமுகமாய்த் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், பகலில் மேகத்தூணிலும், இரவில் அக்கினித்தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கிறார்கள்; இந்த தேசத்தின் குடிகளுக்கும் சொல்லுவார்கள்" (எண் 14:14) என்று சொல்லுகிறார்.

கர்த்தரோ இப்போது இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கிறார். அவர்களை கொள்ளை நோயினால் வாதித்து, அவர்களை சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போட ஆயத்தமாயிருக்கிறார். இந்த சூழ்நிலையில் மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார்: கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விடக்கூடாதே போனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே" (எண் 14:15,16) என்று சொல்லி பரிந்து பேசுகிறார்.

புறஜாதியார் கர்த்தருடைய கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனங்களை இதுபோல கொன்றுபோட்டால், புறஜாதியார் மத்தியில் கர்த்தரைப் பற்றிய மதிப்பும், கர்த்தருடைய ஜனங்களைப் பற்றிய பயமும் குறைந்து போகும். (எண் 14:13-20). கர்த்தர் மோசேயின் ஜெபத்தைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரரை ஒரே சமயத்தில் அழித்துப் போடுவதை நிறுத்திக் கொள்கிறார். ஆயினும், கலகம் பண்ணிய இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷகாலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துப்போட வேண்டும் என்பது தேவனுடைய திட்டம். (எண் 14:23-35).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மையான காரியங்களையெல்லாம் மறந்துவிட்டு, அவர்கள் அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். கலகக்காரர்களையெல்லாம் கொள்ளைநோயினால் வாதிக்கவேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு விரோதமாக கலகம்பண்ண முடியாது. அவர்கள்மீது கொள்ளைநோய் வரும்போது அவர்கள் எல்லோரும் மொத்தமாய் அழிந்துபோவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் அழிந்துபோவதை எகிப்து தேசத்திலுள்ள ஜனங்களும் கேள்விப்படுவார்கள். காத் ஊரிலுள்ள ஜனங்கள், இஸ்ரவேல் ஜனங்கள் அழிந்துபோனதைப்பற்றி சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆஸ்கலோன் பட்டணத்து வீதிகளிலே இஸ்ரவேல் புத்திரரின் அழிவைப்பற்றி கதை கதையாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். கர்த்தருடைய ஜனம் அழிந்துபோவதைப் பார்க்கும்போது புறஜாதி ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும். புறஜாதியார் தங்கள் இருதயத்தில் பெருமைப்படுவார்கள்.

புறஜாதியாருக்கு இஸ்ரவேல் புத்திரரின் பாவமும் தெரியாது. அவர்களுக்கு கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பும் புரியாது. அவர்கள் கர்த்தரைப்பற்றி தப்பிதமாய்ப் புரிந்துகொள்வார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் அழிந்துபோவதைப் பார்க்கும்போது, கர்த்தருடைய வல்லமை குறைந்துபோயிற்று என்று ஏளனமாய்ப் பேசுவார்கள்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசும்போது, "என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக" (எண் 14:18) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய நாமம் ஓரேபிலே மகிமையுள்ளதாக அறிவிக்கப்பட வேண்டும். கர்த்தரே தம்முடைய நாமத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்" (யாத் 34:6,7).

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசும்போது, அவருடைய நாமத்தை தன்னுடைய விண்ணப்பத்தில் சொல்லி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும் என்பது மோசேயின் விண்ணப்பமாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தண்டித்து திருத்துவதற்கு விரோதமாக மோசே ஒன்றும் சொல்லவில்லை. மோசே கர்த்தருடைய தண்டனைக்கு விரோதமாக ஜெபம்பண்ணவுமில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கொள்ளை நோயினால் வாதித்து, அவர்களை சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போடுவதாக சொன்னார் (எண் 14:12).

கர்த்தர் தம்முடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் மன்னித்தருளவேண்டும் என்றும், அவர்களை தம்முடைய சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போடாமல், தம்முடைய ஜனமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்துபேசும்போது, "ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும், குற்றமுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்றும், நீர் சொல்லியிருக்கிறபடியே, என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக" (எண் 14:17,18) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

பாவம் செய்தவர்கள் தங்கள் பாவத்திற்காக மனந்திருந்தி, தேவனிடத்தில் பாவ அறிக்கை செய்து, பாவநிவாரண பலி செலுத்தும்போது கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். அதேவேளையில், ஜனங்கள் மனந்திருந்தாமல், பாவத்தில் தொடர்ந்து ஜீவித்து, தேவனுக்கு எதிராகத் தொடர்ந்து கலகம் பண்ணும்போது, கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவராக இருந்தபோதிலும், அவர் நீதிபரராக இருக்கிறபடியினால், பாவிகளை ஆசீர்வதிக்கமாட்டார். (1யோவான் 1:9).

"எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவேன்" (யாத் 32:33) என்று கர்த்தர் ஏற்கெனவே கூறியிருக்கிறார். குற்றமுள்ளவன் தன் குற்றத்தைத் தேவனிடத்தில் அறிக்கை செய்து, பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அவன் மனந்திருந்தவில்லையென்றால் அவனுக்கு மன்னிப்பில்லை. கர்த்தர் அவனைக் குற்றமற்றவனாகப் பாவிக்கமாட்டார். அவனுடைய பாவத்திற்குத் தகுந்தபடி கர்த்தர் அவனைத் தண்டித்துப்போடுவார்.

மோசே கர்த்தருடைய அன்புக்காகவும், கிருபைக்காகவும், வாக்குத்தத்தங்களுக்காகவும் ஜெபிக்கிறார். (எண் 14:17-20). தேவனுடைய குணாதிசயத்தைக் கூறி நாம் ஜெபம் பண்ணும்போது, அந்த ஜெபத்திற்கு விரைவில் பதில் கிடைக்கிறது. அதே சமயத்தில் நாம் தேவனுடைய சித்தம் நிறைவேற வேண்டுமென்றும் ஜெபிக்க வேண்டும்.

கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர். கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களையும் மீறுதல்களையும் மன்னித்திருக்கிறார். கர்த்தர் கடந்த காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தாரை தமது கிருபையினால் மன்னித்ததுபோல, இப்போதும் மன்னித்தருளவேண்டுமென்று, மோசே கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "உமது கிருபையினுடைய மகத்துவத்தின்படியும், எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்து வந்ததின்படியேயும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும்" (எண் 14:19) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பாவிகள் ஜெபிக்கும்போது, "எகிப்தை விட்டதுமுதல் இந்நாள்வரைக்கும் இந்த ஜனங்களுக்கு மன்னித்துவந்ததின்படியே என் அக்கிரமத்தை மன்னித்தருளும்" என்று ஜெபிப்பது வழக்கம். லூக்கா 18:13 ஆவது வசனத்தில் ஆயக்காரன் ஜெபித்தது இந்த ஜெபத்தைப் போன்றிருக்கிறது. எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்ட போது கர்த்தர் தங்களை மன்னித்ததுபோல மறுபடியும் மன்னிக்க வேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமத்தை மன்னிப்பதினால், அவருடைய நீதிக்கு களங்கம் ஏற்படாது. கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் நிந்தை உண்டாகாது. கர்த்தர் ஏற்கெனவே தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்களை மன்னித்திருக்கிறார். அதே கிருபையினால் அவர் இப்போதும், இந்த ஜனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளவேண்டும் என்றும், இதன் மூலமாக கர்த்தருடைய வல்லமை பெரிதாய் விளங்கும் என்றும் மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய கோபமான வார்த்தைகள் எண் 14:20-35

எண் 14:20. அப்பொழுது கர்த்தர்: உன் வார்த்தையின்படியே மன்னித்தேன்.

எண் 14:21. பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்.

எண் 14:22. என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்குச் செவிகொடாமல், இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சைபார்த்த மனிதரில் ஒருவரும்.

எண் 14:23. அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்.

எண் 14:24. என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

எண் 14:25. அமலேக்கியரும் கானானியரும் பள்ளத்தாக்கிலே குடியிருக்கிறபடியினால், நாளைக்கு நீங்கள் திரும்பி சிவந்த சமுத்திரத்துக்குப் போகிறவழியாய் வனாந்தரத்துக்குப் பிரயாணம்பண்ணுங்கள் என்றார்.

எண் 14:26. பின்னும் கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

எண் 14:27. எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன்.

எண் 14:28. நீ அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.

எண் 14:29. இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்.

எண் 14:30. எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை.

எண் 14:31. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள்.

எண் 14:32. உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும்.

எண் 14:33. அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள்.

எண் 14:34. நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்.

எண் 14:35. கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்; எனக்கு விரோதமாய் கூட்டங் கூடின இந்தப் பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வேன்; இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கே சாவார்கள் என்று சொல் என்றார்.

மோசேயின் விண்ணப்பத்திற்கு கர்த்தர் பிரதியுத்தரம் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தையில் அவருடைய இரக்கமும் நியாயத்தீர்ப்பும் இடம் பெற்றிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய அவிசுவாசத்தினிமித்தமாக, அவர்களை கொள்ளைநோயினால் வாதித்து, சுதந்தரத்திற்கு புறம்பாக்கிப்போடவேண்டும் (எண் 14:12) என்று தீர்மானித்திருந்தார்.

மோசே கர்த்தருடைய சமுகத்தில் இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணினார். மோசேயினுடைய பணிவான ஜெபத்தினிமித்தமாக, கர்த்தருடைய கோபம் தணிகிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் வார்த்தையின்படியே இஸ்ரவேல் புத்திரரை மன்னித்தேன்" (எண் 14:20) என்று சொல்லுகிறார்.

மோசேயின் விண்ணப்பத்திற்குக் கர்த்தர் உடனடியாகப் பதில் தருகிறார். ஒரு பாவி மனந்திருந்தி, தேவனிடத்தில் விசுவாசத்தோடு வரும்போது, கர்த்தர் அவன் பாவங்களை உடனடியாக மன்னிக்கிறார். (ஏசா 55:7; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9).

மோசேயைப்போலவே நாமும் மற்றவர்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ண வேண்டும். பரிந்து பேசும் ஜெபம் மிகுந்த வல்லமையுள்ளது. நமக்கு மற்றவர்கள்மீது அன்பும், கரிசனையும் இருந்தால் மாத்திரமே, நாம் அவர்களுக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுவோம். நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்க வேண்டும் என்றும், நமக்கு விரோதமாக தூஷணவார்த்தைகளை பேசுகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ண வேண்டும் என்றும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு உபதேசம்பண்ணுகிறார்.

மோசேயினுடைய பரிந்து பேசும் ஜெபத்தினால், இஸ்ரவேல் தேசம் முழுவதும் அழிவுக்கு தப்பித்துக்கொள்கிறார்கள். ஒரு நீதிமானுடைய ஊக்கமான ஜெபத்தின் மூலமாக, ஏராளமான பாவிகள் தண்டனைக்கு தப்பிக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணுவதோடு, தம்முடைய மகிமையையும் விளங்கப்பண்ணுகிறார். "பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (எண் 14:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும்......" என்பது தீர்க்கதரிசன வாக்கியம். இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. இது ஆயிரம் வருஷ அரசாட்சியில் நிறைவேறும். (ஏசா 4:4-5; ஏசா 11:9; ஏசா 35:2; ஏசா 66:18-19). எண் 14:22-24 ஆகிய வசனங்களில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இந்தத் தீர்க்கதரிசனம் நிபந்தனையற்றது என்று சிலர் கருதுகிறார்கள். மனுஷர் பாவம் செய்யும்போது அங்கு சாபம் வரும். பாவத்தின் சம்பளம் மரணம். கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சியில் சாபம் இராது. ஆகையினால் அப்போது பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும். (2கொரி 15:24-28; எபே 1:10; வெளி 20).

மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணியபோது, கர்த்தருடைய மகிமைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். கர்த்தருடைய மகிமை தூஷிக்கப்படக்கூடாது என்பதில் மோசே மிகுந்த கவனத்தோடிருந்தார். "என் ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்குவதாக" (எண் 14:18) என்பதே மோசேயின் அடிப்படை ஜெபமாகும்.

கர்த்தர் பாவத்தை வெறுக்கிறவர். தம்முடைய சொந்த ஜனத்தாரிடத்தில் பாவம் காணப்பட்டாலும், கர்த்தர் அவர்களுடைய பாவங்களையும் வெறுக்கிறவர். அவர் குற்றமுள்ளவர்களை குற்றமற்றவர்களாக விடமாட்டார். பிதாக்கள் செய்த அக்கிரமத்தை, மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்.

கர்த்தர் நீதியுள்ளவர். அவர் பாவத்தை வெறுக்கிறவர். அதே வேளையில் கர்த்தர் கிருபையுள்ளவராகவும், பாவிகள்மீது இரக்கம் காண்பிக்கிறவராகவும் இருக்கிறார். கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். இந்த சுபாவங்களெல்லாம் கர்த்தருடைய நாமமாயிருக்கிறது. இதுவே அவருடைய வல்லமையாயிருக்கிறது. ஆண்டவருடைய வல்லமை பெரிதாய் விளங்கவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணியபோது, "பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்று ஜெபம்பண்ணினார். அப்பொழுது வானத்திலிருந்து பிதாவின் வார்த்தை உண்டாயிற்று. பிதாவானவர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவதோடு, இன்னும் மகிமைப்படுத்துவேன் என்று வாக்குப்பண்ணவும் செய்கிறார்.

"பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று" (யோவா 12:28).

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாக கர்த்தருக்கு கோபமூட்டுகிறார்கள். அவர்களுடைய கலகக்குணம் கர்த்தருக்கு விசனமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருடைய மகிமையையும், அவர் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த அவருடைய அடையாளங்களையும் கண்டிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடாமல் போகிறார்கள்.

"இஸ்ரவேல் புத்திரர், தன்னோடே பத்துமுறை என்னைப் பரீட்சை பார்த்தார்கள்" (எண் 14:22) என்று கர்த்தர் சொல்லுகிறார். "எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன்" (எண் 14:27). என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும்", இஸ்ரவேல் புத்திரர் தம்முடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தக் காரணத்திற்காகத் தான் கர்த்தர் வனாந்தரத்தில் தமக்கு எதிராகக் கலகம் பண்ணிய இஸ்ரவேல் புத்திரரின் பழைய சந்ததியாரை அழித்துப் போடுகிறார் (எண் 14:22-23).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை பத்துமுறை பரீட்சை பார்த்த சம்பவங்களின் விவரம் வருமாறு :

1. கர்த்தர் தங்களை ஏமாற்றிவிட்டார் என்றும், எகிப்தியர் தங்களைக் கொன்று போடுவதற்காக தங்களை ஒரு கண்ணியில் சிக்கவைத்துவிட்டார் என்றும் கர்த்தருக்கு எதிராக முறையிட்ட சம்பவம். (யாத் 14:11-12).

2. தண்ணீருக்காக மாராவில் முறுமுறுத்தது. (யாத் 15:23-26).

3. சீனாய் வனாந்தரத்திற்குப் போய் சேருவதற்கு முன்பாக இறைச்சிக்காகவும், அப்பத்திற்காகவும் முறுமுறுத்தது. யாத் 16:1-18).

4. மன்னாவை விடியற்காலமட்டும் கொஞ்சம் மீதியாக வைத்து, கீழ்ப்படியாமல் போனது. (யாத் 16:19-22).

5. ரெவிதீமில் தண்ணீருக்காக முறுமுறுத்தது. (யாத் 17:1-7).

6. பொன்கன்றுக்குட்டியைச் செய்து விக்கிரகாராதனை செய்தது. (யாத் 32).

7. தபேராவில் முறுமுறுத்தது. (எண் 11:1-3).

8. இறைச்சிக்காக முறுமுறுத்தது. (எண் 11:4-35).

9. கர்த்தரையும், அவருடைய வார்த்தையும் விசுவாசிக்காமல், வேவுகாரரைக் கானான் தேசத்திற்கு அனுப்பியது. (எண் 13:1-25=உபா 1:20-25).

10. காதேசில் கர்த்தருக்கு எதிரான கலகம். (எண் 13:26-14:37 ; உபா 1:26-46).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள். அவருடைய வல்லமையை பரீட்சை பார்க்கிறார்கள். அவர்கள் தேவனுடைய நீதியையும், நியாயத்தையும் பரீட்சை பார்க்கிறார்கள். தங்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், கலகக்குணத்தினிமித்தமாகவும் கர்த்தர் தங்களை தண்டிப்பாரா அல்லது தண்டியாமல் மன்னித்து விட்டுவிடுவாரா என்று இஸ்ரவேல் புத்திரர் பத்துமுறை கர்த்தரை பரீட்சை பார்த்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பொல்லாத ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தமக்கு விரோதமாக முறுமுறுக்கிறதை கர்த்தர் கேட்கிறார். அவர் நீடிய சாந்தமும், நீடிய பொறுமையுள்ளவராகயிருந்தாலும், "எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்த பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்" (எண் 14:27) என்று கர்த்தர் கேட்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய மகிமையையும் அவருடைய அடையாளங்களையும், வல்லமையையும் எகிப்து தேசத்திலும் வனாந்தரத்திலும் கண்டிருக்கிறார்கள். அதன் பின்பும் அவர்கள் கர்த்தரை பரீட்சை பார்க்கிறார்கள் (எண் 14:22).

"இஸ்ரவேல் புத்திரர் இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சை பார்த்தார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். "பத்துமுறை" என்னும் வார்த்தைக்கு "அநேகந்தரம்" என்று பொருள். கர்த்தரை பரீட்சை பார்ப்பது இஸ்ரவேல் புத்திரரின் சுபாவமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றிருந்தாலும், தங்கள் பாவசுபாவத்திலிருந்து அவர்கள் இன்னும் விடுதலை பெறவில்லை.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறார். "அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்" (எண் 14:23) என்பதே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் தண்டனையாயிருக்கிறது.

கர்த்தர் அவர்களை கானான் தேசத்திலே குடியேற்றுவேன் என்று ஆணையிட்டார். ஆனால் கர்த்தர் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர் பிரவேசிக்கமாட்டார்கள் (எண் 14:30). இதுவும் கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும் தண்டனையாயிருக்கிறது.

கர்த்தருடைய வாக்குத்தத்தம், அவருக்கு விரோதமாக கலகம்பண்ணி, முறுமுறுக்கிற ஜனங்களுக்கு நிறைவேறாது. அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிக்கமாட்டார்கள். ஆனாலும் அவர்களுடைய பின்சந்ததியாராகிய பிள்ளைகளை கர்த்தர் கானான் தேசத்தில் பிரவேசிக்கச் செய்வார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தின் எல்லையிலே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களை வனாந்தரத்திற்கு திரும்பிப்போகுமாறு கட்டளையிடுகிறார். தங்கள் அவிசுவாசத்தினிமித்தமாக அவர்கள் கானான் தேசத்திற்குள்ளே பிரவேசிப்பதற்கு ஆயத்தமாயில்லை. கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணின தேசத்தை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகையினால் அவர்கள் மறுபடியும் வனாந்தரத்திற்கு பின்னிட்டு திரும்பிப்போக வேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "அமலேக்கியரும் கானானியரும் பள்ளத்தாக்கிலே குடியிருக்கிறபடியினால், நாளைக்கு நீங்கள் திரும்பி சிவந்த சமுத்திரத்துக்குப் போகிறவழியாய் வனாந்தரத்துக்குப் பிரயாணம்பண்ணுங்கள்" (எண் 14:25) என்று சொல்லுகிறார்.

இவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராக யுத்தம் பண்ண ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ தம்முடைய ஜனங்களை யுத்தம் பண்ணாமல் சிவந்த சமுத்திரத்துக்குப் போகிறவழியாய் வனாந்தரத்துக்குப் பிரயாணம் பண்ணுங்கள் என்று கூறிவிடுகிறார். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிய வேண்டும். ஆகையினால் அவர்கள் யுத்தம் பண்ணுவதைக் கர்த்தர் அனுமதிக்கவில்லை (எண் 14:25,33,42-45).

தமக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணுகிற ஜனங்களுக்கு கர்த்தர் தம்முடைய நீதியினால் மரணதண்டனையை கொடுக்கிறார். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் வனாந்தரத்திலே செத்துப்போவார்கள். அவர்கள் ஒரே வேளையில், ஒரே இடத்தில் செத்துப்போவதற்கு பதிலாக, வனாந்தரத்தின் பல்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில் செத்துப்போவார்கள்.

"இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்" (எண் 14:29) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்துதேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்; இந்த வனாந்தரத்திலே நாங்கள் செத்தாலும் நலம் என்று சொன்னார்கள் (எண் 14:2).

தங்களுக்கு எது நலமாயிருக்கும் என்று இஸ்ரவேல் புத்திரர் சொன்னார்களோ, அந்தக் காரியத்தை அவர்களுக்கு செய்யவேண்டுமென்று கர்த்தர் தீர்மானம்பண்ணுகிறார். அவர்களுடைய விருப்பத்திற்கு கர்த்தர் "ஆமென்" என்று சொல்லுகிறார். அவர்களுடைய விருப்பத்தின் பிரகாரம் வனாந்தரத்தில் அவர்கள் பிரேதங்கள் விழும் என்பது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திலே கொன்றுபோடவேண்டும் என்பது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. ஆனாலும் அவர்கள் செத்துப்போவதற்கு முன்பாக வனாந்தரத்திலே அலைந்து திரிவார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். பாதைதெரியாத பயணக்காரர்கள் அங்கும் இங்கும் அலைந்து திரிவதுபோல, இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்கள் அலைந்து திரிவார்கள்.

"உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும். அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள்" (எண் 14:32,33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலைந்து திரியும்போது அவர்கள்தம்முடைய முகத்தை தேடவேண்டும் என்பதும், அவர்கள் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் வாஞ்சித்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதும், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தம்முடைய சமுகத்திலிருந்து பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதும் கர்த்தருடைய விருப்பமாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இந்த வனாந்தரத்திலே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து பாவம் செய்து, இங்கேயே செத்துப்போனாலும், அவர்கள் மறுமையிலே தம்மோடு கூடயிருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். பாவங்கள் மன்னிக்கப்பட்டால் மாத்திரமே பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். அவர்கள் பூமிக்குரிய கானானில் பிரவேசிக்காவிட்டாலும், பரமகானானில் பிரவேசிக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாயிருக்கிறது.

கர்த்தர் அதற்காக அவர்களை நாற்பது வருஷங்களாக வனாந்தரத்திலே அலைந்து திரியப்பண்ணுகிறார். இந்தக் காலத்தில் அவர்கள் தங்களுடைய பாவங்களை உணரவேண்டும். கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய மகிமையையும், அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் புரிந்துகொண்டு, அவருடைய சமுகத்திலே தங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு உடன்படிக்கையின் ஜனங்களாகயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும், வாக்குத்தத்திலும், உடன்படிக்கையிலும் உண்மையுள்ளவர். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை காத்துக்கொள்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி, அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, முறுமுறுத்து, பாவம் செய்கிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கையை மீறுவது பாவம். இதனால் தங்களுக்கு சாபமும், தீங்குகளும், ஆபத்துக்களும் வரும் என்பதை இஸ்ரவேல் புத்திரர் உணரவேண்டும். இதை இஸ்ரவேல் புத்திரர் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் அவர்களை வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலைந்து திரியப்பண்ணுகிறார்.

கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிடுகிற தேவனல்ல. நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிறவர். அவர் உண்மையுள்ள தேவன். அவர் நம்மை முற்றும் முடிய கரம்பிடித்து வழிநடத்துவார். ஆனாலும் நாம் கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி, கர்த்தரை விட்டு விலகிப்போகும்போது, கர்த்தரும் நம்மை விட்டு விலகிப்போய்விடுவார். நாம் அவரை விட்டு விலகும் வரையிலும் அவர் நம்மோடு கூடவே இருப்பார். கர்த்தர் ஒருபோதும் நம்மைவிட்டு முதலில் விலகிப்போகமாட்டார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலையும்போது அவர்களுடைய புதிய சந்ததியார் பிறப்பார்கள். கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களை அவர்களுடைய பிள்ளைகளுக்கு உடனே கொடுத்துவிடமாட்டார். பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் பாதகத்தை வனாந்தரத்திலே சுமப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பிரேதங்கள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், அவர்களுடைய பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, அவர்களுடைய சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள் (எண் 14:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் பின்மாற்றத்தின் நிமித்தம் அவர்களுடைய பிள்ளைகள் வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிந்து பாடுகளை அனுபவிப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பிள்ளைகள் வனாந்தரத்தில் பிறந்து வளரும்போது, அவர்கள் கர்த்தருடைய கோபத்தை அனுபவிப்பார்கள். தங்கள் பெற்றோருடைய பாதகத்தினிமித்தமாக, அவர்களுடைய பிள்ளைகளுக்கு வேதனைகளும், பாடுகளும் உண்டாகும். இந்த வேதனைகளையெல்லாம் தங்கள் பெற்றோரின் கீழ்ப்படியாமையினால் தங்களுக்கு வந்திருக்கிறது என்பதை பிள்ளைகளும் உணர்ந்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, தங்கள் பெற்றோரின் சோரம்போன பாதகத்தை சுமக்கும்போது, பாவத்திற்கு விரோதமாக எச்சரிக்கப்படுவார்கள். தங்கள் பெற்றோரைப்போல தாங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போய்விடக்கூடாது என்று, பிள்ளைகள் மிகுந்த கவனமாயும், எச்சரிப்பாயும் ஜீவிப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பையும், கடினமான தண்டனையையும் சொல்லுகிறார். கர்த்தருடைய கோபத்திற்கு மத்தியில், அவருடைய கிருபையும் வெளிப்படுகிறது.

தமக்கு விரோதமாக கலகம்பண்ணின இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லும்போது, "என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்குச் செவிகொடாமல், இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சைபார்த்த மனிதரில் ஒருவரும். அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள்" (எண் 14:22,23) என்று சொல்லுகிறார்.

ஆனாலும் தம்மை உத்தமமாய்ப் பின்பற்றின காலேபுக்கு கர்த்தர் ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லுகிறார். "என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (எண் 14:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என்னுடைய தாசனாகிய காலேப்" என்று கர்த்தர் இந்த வசனத்தில் காலேபைப்பற்றிச் சொல்லுகிறார். எண் 14:30 ஆவது வசனத்தில் யோசுவாவையும் பற்றியும், யோசு 14:1; யோசு 22:13 ஆகிய வசனங்களில் ஆசாரியரைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இவர்களும் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருந்து, அவரை உத்தமமாய் பின்பற்றினார்கள்.

தமக்கு விரோதமாக முறுமுறுத்த இஸ்ரவேல் சபையாரை வனாந்தரத்திலே கொன்றுபோடுவதாக கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன். நீ அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச்சொன்னபிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்" (எண் 14:27,28) என்றும்,

"இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்" (எண் 14:29) என்றும் சொல்லுகிறார்.

"உங்கள் தொகைக்கு உட்பட்டவர்கள்" என்பது இஸ்ரவேல் புத்திரரின் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்கள் வரைக்கும் எண்ணித்தொகையேற்றப்பட்டவர்களைக் குறிக்கிறது. இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டவர்கள் வனாந்தரத்தில் மரித்துப் போவார்கள். (எண் 14:29-35) இருபது வயதுக்கு உட்பட்ட தங்களுடைய பிள்ளைகள் மரித்துப் போகும் என்று இஸ்ரவேல் புத்திரர் பயந்தார்கள். ஆனால் அவர்களோ கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (எண் 14:31). மனுஷருடைய பயத்திற்கு ஆதாரமே இல்லை. கர்த்தர் நம்பட்சத்தில் இருக்கும்போது நமக்கு எதிராக யாரும் நிற்கமுடியாது. கர்த்தர் பெரியவர். அவர் பெரிய காரியங்களைச் செய்வார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சாபமான வார்த்தைகளை சொல்லும்போது, தம்மை உத்தமமாய் பின்பற்றின காலேபுக்கும் யோசுவாவும் ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள்" (எண் 14:30,31) என்று சொல்லுகிறார்.

காலேபும் யோசுவாவும் வேறே ஆவியையுடையவர்களாயிருக்கிறார்கள். இவர்களுடைய ஆவிக்கும், கானான் தேசத்தை வேவுபார்ப்பதற்காகப்போன மற்ற பிரபுக்களின் ஆவிக்கும் வித்தியாசம் இருக்கிறது. இவர்கள் இருவரும் கர்த்தரை முழுவதுமாய்ப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கும் விருப்பத்திற்கும், திட்டத்திற்கும் கீழ்ப்படிகிறார்கள்.

கர்த்தர் இவர்கள் இருவருடைய கீழ்ப்படிதலையும் கனம்பண்ணுகிறார். கர்த்தர் இவர்களையும், இவர்களுடைய சந்ததியாரையும் கானான் தேசத்தில் பிரவேசிக்கப்பண்ணுகிறார். அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிப்பார்கள்.

கர்த்தர் காலேபுக்கு தம்முடைய ஆசீர்வாதத்தை முதலாவதாக சொன்னபோது, அங்கே யோசுவாவைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை (எண் 14:24). கர்த்தர் காலேபுக்கு மறுபடியும் ஆசீர்வாதமான வார்த்தையைச் சொல்லும்போது, அவர் யோசுவாவுக்கும் தம்முடைய ஆசீர்வாதத்தை சேர்த்து சொல்லுகிறார் (எண் 14:30,31).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியபோது, தங்கள் பிள்ளைகளும் செத்துப்போவார்கள் என்று ஒரு காரணத்தை சொன்னார்கள், "நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களை இந்த தேசத்துக்குக் கொண்டு வந்தது என்ன?" (எண் 14:3) என்று இஸ்ரவேல் புத்திரர் சொன்னார்கள்.

ஆனால் கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகளைக் குறித்து வேறொரு திட்டம் வைத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தவர்கள். அவர்களுடைய பிள்ளைகள் ஒருவேளை சிறுவர்களாகவோ அல்லது இனிமேல் அவர்களுக்கு பிறக்கப்போகிறவர்களாகவோ இருக்கலாம். கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளை உயிரோடு காப்பாற்றுகிறார். இது கர்த்தருடைய கிருபை.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டைப்பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள்" (எண் 14:31) என்று சொல்லுகிறார்.

கானான் தேசத்தில் பிரவேசிப்பதற்கு கர்த்தர் ஒரு சந்ததியை மீதமாய் வைத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கலகக்குணமுள்ளவர்களாயிருந்தாலும், கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளை தண்டியாமல், கானான் தேசத்தை அவர்களுக்கு சுதந்தரமாகக் கொடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரிக்கவேண்டியவர்கள். ஆனால் அவர்களோ தேசத்தை சுதந்தரியாமல் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், கலகக்குணத்தினிமித்தமாகவும் அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதை கர்த்தரும் தடைபண்ணுகிறார். அவர்கள் மறுபடியும் வனாந்தரத்திற்கு திரும்பிப்போகுமாறு கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். அவர்கள் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலைவார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள். அவர்கள் வனாந்தரத்திலே செத்துப்போவார்கள்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்குகு வந்த மாறுதலை உணருவீர்கள்" (எண் 14:34) என்றும்,

"கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்; எனக்கு விரோதமாய் கூட்டங் கூடின இந்தப் பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வேன்; இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கே சாவார்கள் என்று சொல்" (எண் 14:35) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு ஒரு நாள் என்பது ஒரு வருஷம் போன்றது என்பதை விளக்குவதற்காக ஒருசிலர் இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இதை ஒரு வேதாகமக் கோட்பாடாகக் கூறமுடியாது. ஒருநாள் என்பது ஒரு நாள்தான். ஒரு வருஷம் என்பது ஒரு வருஷம் தான்.

"என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதல்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஆனாலும் கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, தம்முடைய உடன்படிக்கையில் மாறுதலை உண்டுபண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரரைக் கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். இது அவருடைய உடன்படிக்கை. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளைக் காத்துக்கொள்ளவில்லை. கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையைக் கர்த்தர் மாற்றிப்போடுகிறார் (எண் 14:22,27-35).

ஜனங்களின் துக்கமும் தோல்வியும் எண் 14:36-45

எண் 14:36. அந்த தேசத்தைச் சோதித்துப் பார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்டுத் திரும்பி, அந்த தேசத்தைக்குறித்துத் துர்ச்செய்தி கொண்டுவந்து,

எண் 14:37. சபையார் எல்லாரும் அவனுக்கு விரோமாய் முறுமுறுக்கும்படி அந்தத் துர்ச்செய்தியைச் சொன்னவர்களாகிய அந்த மனிதர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்தார்கள்.

எண் 14:38. தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்மாத்திரம் உயிரோடிருந்தார்கள்.

எண் 14:39. மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னபோது, ஜனங்கள் மிகவும் துக்கித்தார்கள்.

எண் 14:40. அதிகாலமே அவர்கள் எழுந்திருந்து; நாங்கள் பாவஞ்செய்தோம், கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம் என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத்துணிந்தார்கள்.

எண் 14:41. மோசே அவர்களை நோக்கி: நீங்கள் இப்படி கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது.

எண் 14:42. நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறிப்போகாதிருங்கள்; கர்த்தர் உங்கள் நடுவில் இரார்.

எண் 14:43. அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்குமுன்னே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள்; நீங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கினபடியால், கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார் என்றான்.

எண் 14:44. ஆனாலும் அவர்கள் மலையின் உச்சியில் ஏறத் துணிந்தார்கள்; கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டியும் மோசேயும் பாளயத்தை விட்டுப் போகவில்லை.

எண் 14:45. அப்பொழுது அமலேக்கியரும் கானானியரும் அந்த மலையிலே இருந்து இறங்கி வந்து, அவர்களை முறிய அடித்து, அவர்களை ஓர்மாமட்டும் துரத்தினார்கள்.

கானான் தேசத்தை வேவுபார்க்கப் போனவர்களில் பத்து பிரபுக்கள் திடீரென்று செத்துப்போகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். ஜனங்கள்மீது நியாயத்தீர்ப்பு வருவதற்கு முன்பாக, ஜனங்கள் மத்தியிலே துர்ச்செய்தியை பரம்பச்செய்த, பத்து வேவுகாரர்மீது உடனடியாக நியாயத்தீர்ப்பு வருகிறது. அந்த பத்து மனிதரும் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள்.

கானான் தேசத்தைச் சோதித்துப் பார்க்கும்படி மோசேயால் அனுப்பப்பட்டுத் திரும்பி, அந்த தேசத்தைக்குறித்துத் துர்ச்செய்தி கொண்டுவந்து, சபையார் எல்லாரும் அவருக்கு விரோதமாய் முறுமுறுக்கும்படி அந்தத் துர்ச்செய்தியைச் சொன்னவர்களாகிய அந்த மனிதர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள் (எண் 14:36,37).

பத்துவேவுகாரரும், கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தைக் குறித்து துர்ச்செய்தியைக் கொண்டு வந்தவர்கள். கர்த்தர் அந்த தேசத்தை பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம் என்று சொல்லுகிறார். ஆனால் இவர்களோ கர்த்தருடைய வார்த்தையை நம்பாமல், அந்த தேசத்தைக் குறித்து நல்ல செய்தியை சொல்லாமல் துர்ச்செய்தியை சொல்லுகிறார்கள்.

தம்முடைய வார்த்தைக்கு விரோதமாகப் பேசுகிறவர்கள்மீதும், தம்முடைய வார்த்தையை தப்பிதமாக வியாக்கியானம் பண்ணுகிறவர்கள்மீதும் கர்த்தருடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் வரும். சத்தியத்தைப் புரட்டுகிறவர்கள் மனுஷர் மத்தியிலே துர்ச்செய்தியை பரம்பச்செய்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சாதுரிய வார்த்தைகளினாலும் பொய்புரட்டுக்களினாலும் மனுஷருடைய சிந்தையையும், இருதயத்தையும் களங்கப்படுத்துகிறார்கள்.

கள்ளப்போதகர்கள் சத்தியத்தைப் போதியாமல், கள்ளஉபதேசங்களைப் போதிக்கிறார்கள். இதனால் மனுஷரால் கர்த்தருடைய மகிமையையும், வல்லமையையும் தியானிக்க முடியவில்லை. கள்ளப்போதகர்கள் மனுஷரை சத்தியத்தைவிட்டு தவறான பாதையில் வழிநடத்தி செல்கிறார்கள். கர்த்தர் தம்முடைய பாதையைவிட்டு தவறான பாதையில் போகிறவர்களையும் தண்டிக்கிறார். அந்த தப்பிதமான பாதையில் போகுமாறு அவர்களை வழிநடத்துகிற கள்ளப்போதகர்களையும், கர்த்தர் முதலாவதாக தண்டிக்கிறார்.

வேவுகாரரில் பத்துபேர் இஸ்ரவேல் புத்திரரை பாவம் செய்யப்பண்ணினவர்கள். சபையார் எல்லாரும் தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கும்படி இந்தப் பத்துபேரும் அவர்களிடத்தில் துர்ச்செய்தி சொன்னவர்கள்.

கானான் தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி பன்னிரண்டு பிரபுக்கள் போனார்கள். அவர்களில் பத்து பேர் கர்த்தருடைய சந்நிதியில் வாதையினால் செத்துப்போகிறார்கள். மீதி இரண்டுபேர் மாத்திரம் வாதைக்கு தப்பித்து உயிரோடிருக்கிறார்கள்.

தேசத்தைச் சுற்றிப்பார்க்கப்போன அந்த மனிதரில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்மாத்திரம் உயிரோடிருக்கிறார்கள் (எண் 14:38).

நற்செய்தியை விசுவாசத்தோடு சொன்னதினால், இவர்கள் இருவரும் வாதையினால் செத்துப்போகவில்லை. உயிரோடிருக்கிறார்கள்.

தங்களுக்கு துர்ச்செய்தியை கொண்டு வந்தவர்களின் வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் நம்பினார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசிப்பதில்லையென்றும், அவர்கள் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிவார்கள் என்றும், அவர்களுடைய பிரேதங்கள் வனாந்தரத்திலே விழும் என்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

கர்த்தர் கானான் தேசத்தை அவர்களுடைய பிள்ளைகளுக்கு சுதந்தரமாகக் கொடுக்கிறார். மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தர் சொன்ன வார்த்தைகளை சொல்லுகிறார். மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னபோது, ஜனங்கள் மிகவும் துக்கிக்கிறார்கள் (எண் 14:39).

கானான் தேசத்திற்குள் உடனடியாகப் பிரவேசிக்க முடியாது. இன்னும் நாற்பது வருஷங்களாகும். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் வனாந்தரத்தில் மடிந்துபோவார்கள் என்று தேவனுடைய நியாயத்தீர்ப்பை மோசே ஜனங்களோடு கூறுகிறார். இதைக் கேட்டபோது, ஜனங்கள் மிகவும் துக்கிக்கிறார்கள். (எண் 14:39-45).

அவர்கள் அழுது புலம்பியும், துக்கித்தும் அவர்களுக்கு ஒரு நன்மையும் ஏற்படவில்லை. தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து, கர்த்தரைச் சார்ந்திருந்தால் ஒருவேளை அவர்கள் மன்னிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் தங்கள் சொந்த பலத்தின்மீது நம்பிக்கை வைத்து, கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம் என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத் துணிகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு துர்ச்செய்தி சொன்ன பத்துவேவுகாரரின் வார்த்தைகளைக் கேட்டு கானான் தேசத்திற்குள் போகக்கூடாது என்று சொன்னார்கள். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள். அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்கப்போகாமல், எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போக வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதோ அவர்கள் தங்களுடைய பாவத்தை உணருகிறார்கள்.

கர்த்தர் அவர்களை வனாந்தரத்திற்கு திரும்பிப்போகுமாறு சொல்லுகிறார். ஆனால் அவர்களோ கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போக துணிகிறார்கள். அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, "நாங்கள் பாவஞ்செய்தோம், கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின இடத்துக்கு நாங்கள் போவோம்" என்று சொல்லி மலையின் உச்சியில் ஏறத்துணிகிறார்கள் (எண் 14:40).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியபோது, "நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்திற்கு திரும்பிப்போவோம் வாருங்கள்" (எண் 14:4) என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் "கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணின இடத்திற்கு நாங்கள் போவோம்" என்று சொல்லுகிறார்கள். தங்களை கானான் தேசத்திற்கு வழிநடத்துமாறு மோசேயை கேட்டுக்கொள்கிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணின இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது தங்கள் பாவத்தை உணர்ந்திருக்கிறார்கள். "நாங்கள் பாவம் செய்தோம்" என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய மனந்திரும்புதலினால் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது. ஆனாலும் அதனால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. அவர்கள் காலம் கடந்து தங்களுடைய பாவங்களை உணருகிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை.

கானான் தேசத்திற்குப்போவோம் என்று இஸ்ரவேல் புத்திரர் சொல்லும்போது, மோசே அவர்களுக்கு ஆதரவாகப் பேசவில்லை. அவர்கள் கானான் தேசத்திற்குப்போகக்கூடாது என்றும், வனாந்தரத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார். மோசே தன்னுடைய சொந்த வார்த்தையை பேசவில்லை. அவர் கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சொல்லுகிறார்.

மோசே அவர்களை நோக்கி, "நீங்கள் இப்படி கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது. நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறிப்போகாதிருங்கள்; கர்த்தர் உங்கள் நடுவில் இரார். அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்குமுன்னே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள்; நீங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கினபடியால், கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார்" (எண் 14:41-43) என்று சொல்லுகிறார்.

"கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார்" என்று மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். அவர்கள் தோல்வியடைந்ததற்கு இதுதான் காரணம். மோசேயும், கர்த்தருடைய பெட்டியும் தங்களோடு வராமல், அவர்கள் தாங்களாகவே யுத்தம் பண்ண புறப்பட்டு போகிறார்கள். (எண் 14:44). மோசே முன்னறிவித்ததுபோலவே, இஸ்ரவேல் புத்திரர் யுத்தத்தில் தோல்வியடைகிறார்கள். (எண் 14:45).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளையை மீறி, கானான் தேசத்திற்கு புறப்பட்டுப்போனால், அவர்களுக்கு வரப்போகும் ஆபத்துக்களைக் குறித்து மோசே அவர்களை எச்சரிக்கிறார். "அமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்கு முன்னே இருக்கிறார்கள்" என்றும், "கர்த்தர் உங்களோடே இருக்கமாட்டார்" என்றும் மோசே சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரோடு கர்த்தர் கூடயிருக்கவில்லையென்றால், அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அவர்கள் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறியடிக்கப்படுவார்கள். இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களின் பட்டயத்தினால் விழுவார்கள்.

கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற பாதையில் நாம் செல்லவில்லையென்றால், கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் நமக்கு கிடைக்காது. கர்த்தருக்கு விரோதமான பாதை, நம்மை அழிவுக்கு நேராக கொண்டு போய்விடும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை செய்யவேண்டும். அந்த ஊழியத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருக்கும்.

கர்த்தருடைய சித்தமும் விருப்பமும் நம்முடைய விருப்பமாகயிருக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய சொந்த விருப்பத்தை நிறைவேற்றவேண்டும் என்று எதிர்பார்க்காமல், கர்த்தருடைய விருப்பத்தை நிறைவேற்ற, நாம் நம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் காலதாமதம்பண்ணாமல், உடனே கீழ்ப்படிந்து விடவேண்டும். நமக்கு இஷ்டமான நேரத்தில் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியலாம் என்று அசட்டையாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு நாம் காலதாமதம்பண்ணக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போய்விட்டார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களைவிட்டு விலகிவிட்டார். இப்போது அவர்கள் தாங்கள் செய்த பாவத்தை உணர்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கிறார்கள். தங்களுடைய விருப்பமும், ஆசையும் நிறைவேறவேண்டும் என்பதற்காகவே அவர்கள் கர்த்தரிடத்தில் வந்திருக்கிறார்கள். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் தீர்மானம் அவர்களிடத்தில் இல்லை.

அவர்கள் வனாந்தரத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்பதே கர்த்தருடைய கட்டளை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய தங்களை ஒப்புக்கொடுத்திருந்தால், அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க துணியமாட்டார்கள். கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம், அவர்கள் வனாந்தரத்திற்கு திரும்பிப்போயிருப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் துணிகரமான செயலுக்கு மோசே ஒத்துப்போகவில்லை. அவர்களை எச்சரிக்கிறார். ஆனால் அவர்களோ மோசேயின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. தங்கள் சுயவிருப்பத்தின் பிரகாரமாகவும், சுயதீர்மானத்தின் பிரகாரமாகவும் அவர்கள் மலையின் உச்சியில் ஏறத்துணிகிறார்கள்.

மோசே அவர்களோடு கூடப்போகவில்லை. கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டியும் மோசேயும் பாளயத்தை விட்டுப் போகவில்லை (எண் 14:44). இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய கட்டளையை மீறி, கர்த்தருக்கு விரோதமாக செயல்பட துணிகிறார்கள்.

உடன்படிக்கைப் பெட்டி எப்போதும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதில்லை. இஸ்ரவேல் புத்திரர் ஒரு முக்கியமான காரியமாகப் பிரயாணம் பண்ணும்போது, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும், தங்களோடு எடுத்துச் செல்வது வழக்கம். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு இது அடையாளம். ஆனால் இங்கு உடன்படிக்கைப்பெட்டி அவர்களோடு செல்லவில்லை.

மோசே இஸ்ரவேல் புத்திரரை எச்சரித்து சொன்ன பிரகாரம், சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக வருகிறார்கள். அப்பொழுது அமலேக்கியரும் கானானியரும் அந்த மலையிலே இருந்து இறங்கி வந்து, அவர்களை முறிய அடித்து, அவர்களை ஓர்மாமட்டும் துரத்துகிறார்கள் (எண் 14:45).

இஸ்ரவேல் ஜனத்தார் மலையின் உச்சியில் ஏறத்துணியும்போது, அமலேக்கியரும் கானானியரும் ஏற்கெனவே அந்த மலையின்மீது இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்காக வேவுகாரரை அனுப்பினார்கள். கானானியரிடத்திலும் வேவுகாரர் இருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரின் ஒவ்வொரு அசைவையும் வேவுபார்க்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மலையின்மேல் ஏறுவதற்கு முன்பாகவே, சத்துருக்கள் மலையிலிருந்து இறங்கி வருகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாத ஜனத்திற்கு, ஆபத்து தேடி வரும். அது சீக்கிரத்தில் வரும். அமலேக்கியரும் கானானியரும் இஸ்ரவேல் புத்திரரை முறியடித்து துரத்தியபோது, இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் செத்துப்போயிருப்பார்கள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

15 அதிகாரம்

எண் 14; 16 ஆகிய அதிகாரங்களில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணியது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்திலோ அவர்கள் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய பலிகளையும், காணிக்கைகளைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கலகக்காரராயிருந்தாலும் கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய ஆராதனையின் பிரமாணத்தை சொல்லுகிறார்.

துரோகிகளாகிய மனுஷருக்கும் வரங்கள் கொடுக்கப்படுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே அந்த வரங்களுக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் பாவிகளை இரட்சிக்க இந்த உலகத்திற்கு வந்தார்.

"தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்; தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்" (சங் 68:18).

இஸ்ரவேல் புத்திரர் தமக்கு விரோதமாக கலகம்பண்ணியபோது, கர்த்தர் அவர்களை அழித்துப்போடவேண்டமென்று தீர்மானம்பண்ணினார். அவர்கள் தங்களுடைய அவிசுவாசத்தினாலும், அக்கிரமத்தினாலும், மீறுதலினாலும் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணினார்கள். கர்த்தரோ தம்முடைய நீதியான கோபத்தினால் இஸ்ரவேல் ஜனத்தாரை வனாந்தரத்திலே அழித்துப்போடவேண்டுமென்று சித்தங்கொண்டார்.

மோசே இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணியதினால், கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். அவர்களுக்கு மறுபடியுன்றாய் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். தம்முடைய இரக்கத்திற்கு அடையாளமாக, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பலிகளைப்பற்றிய பிரமாணங்களையும், காணிக்கைகளைப்பற்றிய பிரமாணங்களையும் மறுபடியுமாய்ச் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு ஒப்புரவாகியிருக்கிறார். அவர்கள் தம்மை ஆராதிக்கவேண்டுமென்று கர்த்தர் சித்தங்கொள்கிறார். ஆகையினால் கர்த்தர் அவர்களுக்கு ஆராதனையின் பிரமாணத்தை மறுபடியுமாய் விளக்கிச் சொல்லுகிறார். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னித்ததினாலும், அவர்களோடு ஒப்புரவானதினாலும், அவர்களுடைய ஆராதனையை அங்கீகரிக்கிறார். நாம் கர்த்தரோடு ஒப்புரவாகாவிட்டால், கர்த்தர் நம்முடைய ஆராதனையை அங்கீகரிக்கமாட்டார்.

போஜனபலிகளையும், பானபலிகளையும் பற்றிய பிரமாணம் (எண் 15:1-12). தேசத்தில் பிறந்தவனுக்கும் அந்நியனுக்கும் ஒரே பிரமாணம் (எண் 15:13-16). கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கை (எண் 15:17-21).

அறியாமையினால் செய்த பாவத்திற்கு செலுத்தப்படும் காணிக்கை (எண் 15:22-29). துணிகரமாய் செய்த பாவத்திற்கு தண்டனை (எண் 15:30,31).

ஒய்வு நாளை மீறியவனுக்கு கொடுக்கப்படும் தண்டனை (எண் 15:32-36). வஸ்திரத்தின் ஓரத்தில் தொங்கல்கள் (எண் 15:37-41).

போஜனபலியும் பானபலியும் எண் 15:1-12

எண் 15:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 15:2. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் குடியிருக்கும்படி நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச் சேர்ந்த பின்பு,

எண் 15:3. விசேஷித்த பொருத்தனையாயாவது, உற்சாக பலியாயாவது, உங்கள் பண்டிகைகளில் செலுத்தும் பலியாயாவது, கர்த்தருக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் சர்வாங்க தகனபலியையாவது மற்ற யாதொரு பலியையாவது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனமாகப் பலியிடும்போது,

எண் 15:4. தன் படைப்பைக் கர்த்தருக்குச் செலுத்துகிறவன் சர்வாங்க தகனபலிக்காகிலும் மற்றப் பலிக்காகிலும் ஒரு ஆட்டுக்குட்டியுடனே, ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கும் காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியைச் செலுத்தக்கடவன்.

எண் 15:5. பானபலியாக காற்படி திராட்சரசத்தையும் படைக்க வேண்டும்.

எண் 15:6. ஆட்டுக்கடாவாயிருந்ததேயாகில், பத்தில் இரண்டு பங்கானதும், ஒரு படியில் மூன்றில் ஒரு பங்காகிய எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியையும்,

எண் 15:7. பானபலியாக ஒரு படியில் மூன்றில் ஒரு பங்கு திராட்சரசத்தையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான படைப்பாகப் படைக்க வேண்டும்.

எண் 15:8. நீ சர்வாங்க தகனபலிக்காகிலும், விசேஷித்த பொருத்தனை பலிக்காகிலும், சமாதான பலிக்காகிலும், ஒரு காளையைக் கர்த்தருக்குச் செலுத்த ஆயத்தப்படுத்தும்போது,

எண் 15:9. அதனோடே பத்தில் மூன்றுபங்கானதும், அரைப்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியையும்,

எண் 15:10. பானபலியாக அரைப்படி திராட்சரசத்தையும், கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகப் படைக்க வேண்டும்.

எண் 15:11. இந்தப் பிரகாரமாகவே ஒவ்வொரு மாட்டுக்காகிலும், ஆட்டுக்கடாவுக்காகிலும், செம்மறியாட்டுக் குட்டிக்காகிலும், வெள்ளாட்டுக் குட்டிக்காகிலும் செய்து படைக்க வேண்டும்.

எண் 15:12. நீங்கள் படைக்கிறவைகளின் இலக்கத்திற்குத்தக்கதாய் ஒவ்வொன்றிற்காகவும் இந்தப் பிரகாரம் செய்ய வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தமக்கு செலுத்தவேண்டிய போஜனபலியையும், பானபலியையும் பற்றி கர்த்தர் இங்கு சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருக்கு ஒரு மிருகத்தை பலியிடும்போது, அதோடு சேர்ந்து அவர்கள் கர்த்தருக்கு போஜனபலியையும், பானபலியையும் செலுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் இந்தப் பலிகளை தமக்கு எப்போது செலுத்த ஆரம்பிக்கவேண்டும் என்றும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் குடியிருக்கும்படி நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச் சேர்ந்த பின்பு" (எண் 15:1,2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் நாற்பது வருஷம் தாமதம் பண்ணுகிறார். அவர் உடன்படிக்கையை முறித்துப்போடவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்குப் போவார்கள் என்பது கர்த்தருடைய சித்தம் (எண் 14:25-35).

அடுத்து வரும் 19 அதிகாரங்களில் இஸ்ரவேல் புத்திரர் நாற்பது வருஷங்களாக வனாந்தரத்தில் அலைந்துதிரிந்த நிகழ்ச்சிகளைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் இவர்கள் காதேஸ் பர்னேயாவிலிருந்து மோவாபின் சமவெளிகளுக்குப் பிரயாணம் பண்ணுகிறார்கள். மோவாபின் சமவெளி யோர்தானுக்குக் கிழக்கில் எரிகோவிற்கு அருகிலுள்ளது. (எண் 33:50).

வாக்குத்தத்த தேசத்திற்குப் போகப்போவதைப் பற்றிய செய்தி இளம் தலைமுறையினரை உற்சாகப்படுத்துவதற்காகக் கூறப்பட்டிருக்கும் செய்தியாகும். (எண் 15:2,18-19)

இங்கு பலியிடுவதைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பலியிடுவதற்குத் தேவையான மிருகஜீவன்களும், மெல்லிய மாவும், திராட்சைரசம் போதுமான அளவு இருந்திருக்காது. ஆகையினால், நாற்பது வருஷக்கால வனாந்தர பிரயாணத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் அதிகமான பலிகளைச் செலுத்தியிருப்பதற்கு வாய்ப்பில்லை. இங்கு கூறப்பட்டிருக்கும் பலிகளெல்லாம் அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்து, அதைச்சுதந்தரித்த பின்பு, செலுத்த வேண்டிய பலிகளாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கும் தேசத்திலே அவர்கள் நிச்சயமாய்ப் போய்ச்சேருவார்கள். கர்த்தர் அவர்களோடு ஒப்புரவாகியிருக்கிறார் என்பதற்கு இந்த வாக்கியம் அடையாளமாகயிருக்கிறது. வனாந்தரத்தில் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணின இஸ்ரவேல் புத்திரர் வாக்குத்தத்த தேசத்திற்கு போகமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் வனாந்தரத்திலே மரித்துப்போவார்கள்.

ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகள் கானான் தேசத்திற்கு போவார்கள். கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிற பிரமாணம், கானான் தேசத்திற்கு போகப்போகிற இஸ்ரவேல் புத்திரரின் பிள்ளைகளுக்கு சொல்லப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் போய்ச் சேர்ந்த பின்பு, அவர்கள் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் மற்ற பலிகளோடு போஜனபலியையும், பானபலியையும் செலுத்தவேண்டும். இந்தப் பலிகளின் அளவு எவ்வளவு இருக்கவேண்டும் என்று கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் போய்ச் சேர்ந்த பின்பு, "விசேஷித்த பொருத்தனையாயாவது, உற்சாக பலி யாயாவது, உங்கள் பண்டிகைகளில் செலுத்தும் பலியாயாவது, கர்த்தருக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் சர்வாங்க தகனபலியையாவது மற்ற யாதொரு பலியையாவது" (எண் 15:3) கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனமாகப் பலியிடுவார்கள்.

தன் படைப்பைக் கர்த்தருக்குச் செலுத்துகிறவன் சர்வாங்க தகனபலிக்காகிலும் மற்றப் பலிக்காகிலும் ஒரு ஆட்டுக்குட்டியுடனே, ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கும் காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியைச் செலுத்தக்கடவன். பானபலியாக காற்படி திராட்சரசத்தையும் படைக்க வேண்டும் (எண் 15:4,5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு செலுத்தவேண்டிய நான்கு விதமான பலிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. விசேஷித்த பொருத்தனை
2. உற்சாக பலி
3. பண்டிகைகளில் செலுத்தும் பலி
4. சர்வாங்க தகனபலி

கர்த்தருக்கு பலியாக செலுத்தப்பட வேண்டியவைகளைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

1. பசுக்கள், காளை, எருதுகள், கன்றுக்குட்டிகள், கிடாரிகள் (எண் 15:3, 8,11; லேவி 1-9; லேவி 3:1-17)
2. கடாக்கள், ஆட்டுக்குட்டிகள், வெள்ளாட்டுக்கடாக்கள் (எண் 15:3, 5,6,11; லேவி 1:10-13)
3. புறாக்களும், காட்டுப்புறாக்களும் (லேவி 1:14-17)

4. மெல்லிய மாவு, ஒலிவ எண்ணெய், திராட்சரசம் (எண் 15:4-10; லேவி 2)

போஜனபலியின் அளவும், பானபலியின் அளவும் எவ்வளவு இருக்கவேண்டுமென்று கர்த்தரே தீர்மானம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஆட்டுக்கடாவை பலியிடும்போது, அவர்கள் செலுத்தவேண்டிய போஜனபலி, பானபலி ஆகியவற்றின் அளவு விவரம் வருமாறு :

ஆட்டுக்கடாவாயிருந்ததேயாகில், பத்தில் இரண்டு பங்கானதும், ஒரு படியில் மூன்றில் ஒரு பங்காகிய எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியையும், பானபலியாக ஒரு படியில் மூன்றில் ஒரு பங்கு திராட்சரசத்தையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான படைப்பாகப் படைக்க வேண்டும் (எண் 15:6,7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஒரு காளையை பலிசெலுத்தும்போது, அதோடு செலுத்த வேண்டிய போஜனபலி, பானபலி ஆகியவற்றின் அளவை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் தீர்மானம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சர்வாங்க தகனபலிக்காகிலும், விசேஷித்த பொருத்தனை பலிக்காகிலும், சமாதான பலிக்காகிலும், ஒரு காளையைக் கர்த்தருக்குச் செலுத்த ஆயத்தப்படுத்தும்போது, அதனோடே பத்தில் மூன்றுபங்கானதும், அரைப்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியையும், பானபலியாக அரைப்படி திராட்சரசத்தையும், கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகப் படைக்க வேண்டும் (எண் 15:8-10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்தப் பிரகாரமாகவே ஒவ்வொரு மாட்டுக்காகிலும், ஆட்டுக்கடாவுக்காகிலும், செம்மறியாட்டுக் குட்டிக்காகிலும், வெள்ளாட்டுக் குட்டிக்காகிலும் செய்து படைக்க வேண்டும் (எண் 15:11) என்றும்,

நீங்கள் படைக்கிறவைகளின் இலக்கத்திற்குத்தக்கதாய் ஒவ்வொன்றிற்காகவும் இந்தப் பிரகாரம் செய்ய வேண்டும் (எண் 15:12) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஒவ்வொரு மாடும் பலியாகச் செலுத்தப்படும்போது, அதோடு சேர்த்து செலுத்தப்பட வேண்டிய படைப்புக்களின் விவரம் வருமாறு : அதனோடே பத்தில் மூன்றுபங்கானதும், அரைப்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியையும், பானபலியாக அரைப்படி திராட்சரசத்தையும், கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகப் படைக்க வேண்டும். (எண் 15:8-12).

ஒவ்வொரு ஆட்டுக்கடாவும் பலியாகச் செலுத்தப்படும்போது, அதோடு சேர்த்து செலுத்தப்பட வேண்டிய படைப்புக்களின் விவரம் வருமாறு : ஆட்டுக்கடாவாயிருந்ததேயாகில், பத்தில் இரண்டு பங்கானதும், ஒரு படியில் மூன்றில் ஒரு பங்காகிய எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியையும், பானபலியாக ஒரு படியில் மூன்றில் ஒரு பங்கு திராட்ச ரசத்தையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான படைப்பாகப் படைக்க வேண்டும் (எண் 15:6-7,11-12).

ஒவ்வொரு செம்மறியாட்டுக் குட்டியும், வெள்ளாட்டுக் குட்டியும் பலியாகச் செலுத்தப்படும்போது, அதோடு சேர்த்து செலுத்தப்பட வேண்டிய படைப்புக்களின் விவரம் வருமாறு: தன் படைப்பைக் கர்த்தருக்குச் செலுத்துகிறவன் சர்வாங்க தகனபலிக்காகிலும் மற்றப் பலிக்காகிலும் ஒரு ஆட்டுக்குட்டியுடனே, ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கும் காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவின் போஜனபலியைச் செலுத்தக்கடவன். பானபலியாக காற்படி திராட்சரசத்தையும் படைக்க வேண்டும். (எண் 15:2-5,11-12).

தேசத்தில் பிறந்தவனுக்கும் அந்நியனுக்கும் ஒரே பிரமாணம் எண் 15:13-16

எண் 15:13. சுதேசத்தில் பிறந்தவர்கள் யாவரும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியைச் செலுத்தும்போது இவ்விதமாகவே செய்யவேண்டும்.

எண் 15:14. உங்களிடத்தில் தங்கியிருக்கிற அந்நியனாவது, உங்கள் நடுவிலே உங்கள் தலைமுறைதோறும் குடியிருக்கிறவனாவது, கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி செலுத்தவேண்டுமானால், நீங்கள் செய்கிறபடியே அவனும் செய்ய வேண்டும்.

எண் 15:15. சபையாராகிய உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணம் இருக்க வேண்டும் என்பது உங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாயிருக்கக் கடவது; கர்த்தருக்கு முன்பாக அந்நியனும் உங்களைப்போலவே இருக்க வேண்டும்.

எண் 15:16. உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணமும் ஒரே முறைமையும் இருக்கக் கடவது என்று சொல் என்றார்.

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கானான் தேசத்தில் பிறந்தவர்களுக்கும், அவர்கள் மத்தியில் தங்கியிருக்கிறவர்களுக்கும் கர்த்தர் வித்தியாசம் பார்க்காமல், ஒரே பிரமாணத்தை சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "சபையாராகிய உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணம் இருக்க வேண்டும் என்பது உங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாயிருக்கக் கடவது; கர்த்தருக்கு முன்பாக அந்நியனும் உங்களைப்போலவே இருக்க வேண்டும்" (எண் 15:15) என்றும்,

"உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணமும் ஒரே முறைமையும் இருக்கக் கடவது என்று சொல்" (எண் 15:16) என்றும் சொல்லுகிறார்.

அந்நியரும் கானான் தேசத்தில் குடியிருக்க வரவேற்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய புறஜாதி மார்க்க வழிபாடுகளையும், விக்கிரகாராதனைகளையும், புறஜாதியாரின் பாவப்பழக்க வழக்கங்களையும் விட்டு விட்டு, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை தங்களுடைய தேவனாக ஏற்றுக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் புத்திரரைப்போலவே அந்நியரும் கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்கவேண்டும்.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். அந்நியர்கள் கானான் தேசத்தில் வந்து, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே தங்கியிருக்கும்போது, அவர்களும் ஆவியோடும் உண்மையோடும் கர்த்தரை ஆராதிப்பதற்கு வரவேற்கப்படுகிறார்கள்.

புறஜாதியார் யூதருடைய மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அவர்கள் யூதமார்க்கத்தமைந்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். கானான் தேசத்தின் அரசாங்க சட்டத்திலே, கானான் தேசத்தில் பிறந்த இஸ்ரவேல் புத்திரருக்கும், அவர்கள் மத்தியிலே வந்து தங்கியிருக்கிற அந்நியருக்கும் வித்தியாசமுள்ளது. ஆனால் கர்த்தருடைய பிரமாணத்தில் அவர்கள் இருவருக்கும் வித்தியாசமில்லை. தமக்கு முன்பாக அந்நியர்களும் இஸ்ரவேல் புத்திரரைப்போலவே இருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய நித்திய கட்டளை.

யூதர்கள் அந்நியர்களையும் நேசிக்கவேண்டும். அவர்கள்மீதும் அன்பாயும் கரிசனையாயும் இருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் அந்நியரை ஒடுக்கக்கூடாது. கர்த்தர் தமது கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரை ஏற்றுக்கொண்டதுபோல, இஸ்ரவேல் புத்திரரும் அந்நியர்மீது அன்புகூர்ந்து, அவர்களையும் தங்கள் மத்தியிலே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கானான் தேசத்தில் பிறந்த இஸ்ரவேல் புத்திரரும், அவர்கள் மத்தியிலே தங்கியிருக்கிற அந்நியரும், ஒரே தேவனை ஆராதிக்கும்போது, அவர்களுக்குள்ளே அன்பும் ஐக்கியமும் அதிகரிக்கும். கர்த்தருக்குள் ஏற்படும் ஐக்கியம், மாம்சப்பிரகாரமான பகைகளை அழிக்கும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, கர்த்தருடைய சபையில் புறஜாதியாரும் வரவேற்கப்படுகிறார்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தர் இங்கு சொல்லுகிற பிரமாணம், புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையிலே, புறஜாதியாரும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்து நியாயப்பிரமாணத்திலேயே இஸ்ரவேல் புத்திரருக்கும், அந்நியருக்கும் வித்தியாசமில்லாதிருக்கும்போது, புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷத்தில், அவர்களுக்கிடையே வித்தியாசம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பிரிவினையாகிய நடுச்சுவரை இடித்துப்போட்டார்.

கிறிஸ்துவானவர் யூதருக்காகவும், புறஜாதியாருக்காகவும் ஒரே தரம் மாத்திரம் சிலுவையில் மரித்தார். இயேசுகிறிஸ்துவின் ஒப்புரவாகும் ஊழியம், யூதருக்கும் புறஜாதியாருக்கும், ஒன்றுபோலவே நடைபெறுகிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஜனங்கள் கர்த்தருக்கு பலிகளை செலுத்தும்போது, கானான் தேசத்தில் பிறந்த இஸ்ரவேல் புத்திரரும், அவர்கள் மத்தியிலே தங்கியிருக்கிற அந்நியரும் ஒரே விதமாகவே பலிகளை செலுத்தவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

சுதேசத்தில் பிறந்தவர்கள் யாவரும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியைச் செலுத்தும்போது இவ்விதமாகவே செய்யவேண்டும் (எண் 15:13) என்றும்,

உங்களிடத்தில் தங்கியிருக்கிற அந்நியனாவது, உங்கள் நடுவிலே உங்கள் தலைமுறைதோறும் குடியிருக்கிறவனாவது, கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி செலுத்தவேண்டுமானால், நீங்கள் செய்கிறபடியே அவனும் செய்ய வேண்டும் (எண் 15:14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கும், அவர்களிடத்தில் தங்கியிருக்கும் அந்நியருக்கும் வித்தியாசம் காண்பிப்பதற்காக இந்த வாக்கியம் இங்கு கூறப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய பிரமாணம் எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் குடியேறப்போவதை முன்நிறுத்திக் கூறப்பட்டவையாகும் (எண் 15:13-16).

கர்த்தர் சுதேசிக்கும் அந்நியருக்கும் சொல்லுகிற பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. சுதேசத்தில் பிறந்தவர்கள் யாவரும் கர்த்தருக்குச் செலுத்தும் எல்லா பலிகளிலும் அதற்குரிய பிரமாணங்களைப் பின்பற்ற வேண்டும். (எண் 15:13)

2. இஸ்ரவேலரிடத்தில் தங்கியிருக்கிற அந்நியனும், அவர்கள் நடுவிலே தலைமுறைதோறும் குடியிருக்கிறவனும், கர்த்தருக்குச் செலுத்தும் எல்லா பலிகளிலும் அதற்குரிய பிரமாணங்களைப் பின்பற்ற வேண்டும். (எண் 15:14).

3. இஸ்ரவேலருக்கும், அவர்களிடத்தில் தங்குகிற அந்நியனுக்கும் ஒரே பிரமாணமும் ஒரே முறைமையும் இருக்கக் கடவது (எண் 15:15-16).

ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கை
எண் 15:17-21

எண் 15:17. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 15:18. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களை அழைத்துக் கொண்டுபோகிற தேசத்தில் நீங்கள் சேர்ந்து,

எண் 15:19. தேசத்தின் ஆகாரத்தைப் புசிக்கும்போது, கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையைச் செலுத்தக்கடவீர்கள்.

எண் 15:20. உங்கள் பிசைந்த மாவினால் செய்த முதற்பலனாகிய அதிரசத்தை ஏறெடுத்துப் படைப்பீர்களாக; போரடிக்கிற களத்தின் படைப்பை ஏறெடுத்துப் படைக்கிறது போல அதையும் ஏறெடுத்துப் படைக்க வேண்டும்.

எண் 15:21. இப்படி உங்கள் தலைமுறைதோறும் உங்கள் பிசைந்த மாவின் முதற்பலனிலே கர்த்தருக்குப் படைப்பை ஏறெடுத்துப் படைக்கக் கடவீர்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் போய்ச் சேர்ந்த பின்பு, தங்கள் அறுப்பின் முதற்பலனை கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கும் காணிக்கையாக செலுத்தவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் போஜனபலிகளையும், பானபலிகளையும், கானான் தேசத்திலே வந்து சேர்ந்த பின்பு செலுத்துவதுபோல, ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையையும், கானான் தேசத்தில் வந்து சேர்ந்த பின்பு செலுத்தினால் போதுமானது.

கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வருகிறார். கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு கூடயிருக்கிறது. கர்த்தர் அவர்களை கரம்பிடித்து வழிநடத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி கானான் தேசத்திற்கு வந்து சேருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் வந்து சேர்ந்த பின்பு தங்களுடைய வயலில் விளைந்த விளைச்சலின் முதல் பலனை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தினால் மாத்திரம் போதாது. அவர்கள் தங்கள் வீடுகளில் போஜனபதார்த்தங்களை ஆயத்தம்பண்ணும்போது, அதைப் புசிப்பதற்கு முன்பாக, தங்கள் போஜனத்தின் ஒரு பகுதியை கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையாக செலுத்தவேண்டும்.

போரடிக்கிற களத்தின் படைப்பை ஏறெடுத்து படைக்கிறதுபோல, தங்கள் வீடுகளில், ஆகாரத்தைப் புசிக்கும்போது, தங்கள் பிசைந்த மாவின் முதற்பலனிலே கர்த்தருக்கு படைப்பை ஏறெடுத்து படைக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்தில் தங்கள் வீடுகளில் போஜனத்தை ஆயத்தம்பண்ணுகிறார்கள். போஜனபதார்த்தங்கள் மேஜையின்மீது வைக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரரும் போஜனம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். அப்போது அவர்கள் தங்கள் போஜனத்தில் ஒரு பகுதியை கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கவேண்டும். அவர்கள் ஏற்கெனவே தங்கள் போராடிக்கிற களத்தின் படைப்பை ஏறெடுத்து படைத்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் தங்கள் வீடுகளில் போஜனம்பண்ணும்போது, தங்கள் போஜனத்தையும் கர்த்தருக்கு ஏறெடுத்து படைக்கிறார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களை அழைத்துக் கொண்டுபோகிற தேசத்தில் நீங்கள் சேர்ந்து, தேசத்தின் ஆகாரத்தைப் புசிக்கும்போது, கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையைச் செலுத்தக்கடவீர்கள்" (எண் 15:17-19) என்று சொல்லுகிறார்.

உங்கள் பிசைந்த மாவினால் செய்த முதற்பலனாகிய அதிரசத்தை ஏறெடுத்துப் படைப்பீர்களாக; போரடிக்கிற களத்தின் படைப்பை ஏறெடுத்துப் படைக்கிறது போல அதையும் ஏறெடுத்துப் படைக்க வேண்டும் (எண் 15:20) என்றும்,

இப்படி உங்கள் தலைமுறைதோறும் உங்கள் பிசைந்த மாவின் முதற்பலனிலே கர்த்தருக்குப் படைப்பை ஏறெடுத்துப் படைக்கக் கடவீர்கள் (எண் 15:21) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வீடுகளில் தேசத்தின் ஆகாரத்தைப் புசிக்கும்போது, கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கை, ஆசாரியருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் போஜனமாயிருக்கும். இஸ்ரவேல் ஜனத்தார் போஜனம்பண்ணுவதுபோல, கர்த்தருக்கு ஊழியம் செய்கிற ஆசாரியரும் லேவியரும், அவர்களுடைய குடும்பத்தாரும் போஜனம்பண்ண வேண்டும்.

கர்த்தர் லேவியருக்கு கானான் தேசத்தில் சுதந்தரம் கொடுக்கவில்லை. கர்த்தரே அவர்களுக்கு சுதந்தரமாக இருக்கிறார். லேவியருக்கு சுதந்தரம் இல்லாவிட்டாலும் கர்த்தர் அவர்களையும் போஷிக்கிறார். கர்த்தருடைய பிரமாணத்தின் மூலமாக கர்த்தருடைய ஊழியக்காரருக்கும் அன்றன்றுள்ள அப்பம் கொடுக்கப்படுகிறது.

கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் தங்களுடைய அன்றாட அப்பத்திற்காக கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும். நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "இந்த வருஷத்தின் அறுவடையை எங்களுக்கு தாரும்" என்று ஜெபம்பண்ணுவதற்கு பதிலாக, "அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு தாரும்" என்று ஜெபம்பண்ணவேண்டும். நம்முடைய அன்றாட தேவைகளுக்கு கர்த்தரையே சார்ந்து ஜீவிக்கவேண்டும்.

ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையைச் செலுத்துவது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. கானான் தேசத்தில் அந்த தேசத்தின் ஆகாரத்தைப் புசிக்கும்போது, கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையைச் செலுத்தக்கடவீர்கள். (எண் 15:18-19).

2. உங்கள் பிசைந்த மாவினால் செய்த முதற்பலனாகிய அதிரசத்தை ஏறெடுத்துப் படைப்பீர்களாக (எண் 15:20).

3. உங்கள் தலைமுறைதோறும் உங்கள் பிசைந்த மாவின் முதற்பலனிலே கர்த்தருக்குப் படைப்பை ஏறெடுத்துப் படைக்கக்கடவீர்கள். (எண் 15:21).

அறியாமையினால் செய்த பாவம் எண் 15:22-29

எண் 15:22. கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்ன இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படியும்,

எண் 15:23. கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளைகொடுத்த நான்முதற்கொண்டு அவர் உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் நியமித்த எல்லாவற்றின்படியேயும் நீங்கள் செய்யாமல்,

எண் 15:24. அறியாமல் தவறி நடந்தாலும், சபையாருக்குத் தெரியாமல் யாதொரு தப்பிதம் செய்தாலும், சபையார் எல்லாரும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு காளையையும், முறைமைப்படி அதற்கேற்ற போஜனபலியையும், பானபலியையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும்.

எண் 15:25. அதினால் ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் சபையனைத்திற்காகவும் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அது அறியாமையினால் செய்யப்பட்டபடியாலும், அதினிமித்தம் அவர்கள் கர்த்தருக்குத் தகன பலியையும் பாவநிவாரணபலியையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்ததினாலும், அது அவர்களுக்கு மன்னிக்கப்படும்.

எண் 15:26. அது அறியாமையினாலே ஜனங்கள் யாவருக்கும் வந்தபடியால், அது இஸ்ரவேல் புத்திரரின் சபையனைத்திற்கும் அவர்களுக்குள்ளே தங்குகிற அந்நியனுக்கும் மன்னிக்கப்படும்.

எண் 15:27. ஒருவன் அறியாமையினால் பாவஞ்செய்தானாகில், ஒரு வயதான வெள்ளாட்டைப் பாவநிவாரணபலியாகச் செலுத்தக்கடவன்.

எண் 15:28. அப்பொழுது அறியாமையினால் பாவஞ்செய்தவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யும்படி கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

எண் 15:29. இஸ்ரவேல் புத்திரராகிய உங்களில் பிறந்தவனுக்கும் உங்களுக்குள்ளே தங்கும் அந்நியனுக்கும், அறியாமையினால் பாவஞ்செய்தவனிமித்தம், ஒரே பிரமாணம் இருக்கவேண்டும்.

அறியாமையினால் செய்யப்பட்ட பாவத்திற்கும் நிவிர்த்தி பண்ணப்படவேண்டும். அதற்காக செலுத்தப்படவேண்டிய பாவநிவாரண பலிகளைப்பற்றி, கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். யூதருக்கு விக்கிரகாராதனை ஒரு பாவம் என்பது நன்றாய்த் தெரியும். கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் பொய்யையும் மாயையையும் ஆராதனை செய்கிறார்கள்.

யூதருக்கு மார்க்க உபதேசம்பண்ணுகிறவர்கள் விக்கிராராதனைக்கு விரோதமாக அவர்களுக்கு உபதேசம் செய்கிறார்கள். யூதமார்க்கத்து ரபிமார்கள் மூலமாக, யூதர்கள் யூதமார்க்கத்து ஆராதனை முறைமைகளைக் கற்றுக்கொள்கிறார்கள்.

கர்த்தரை ஆராதிப்பது, கர்த்தருக்கு காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துவது ஆகிய பிரமாணங்களையும் யூதர்கள் பொதுவாக அறிந்து வைத்திருப்பார்கள். ஆனாலும் சில சமயங்களில் யூதர்கள் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை செய்ய தவறிவிடுவார்கள். மறதியினாலேயோ அல்லது அறியாமையினாலேயோ இப்படிப்பட்ட தப்பிதங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. அறியாமையினால் செய்யப்பட்ட பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு பலிகள் செலுத்தப்படவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அறியாமையினால் செய்யப்படும் பாவங்களில் சில இஸ்ரவேல் தேசத்தாரின் பொதுவான பாவமாக கருதப்படுகிறது.

கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளைகொடுத்த நாள்முதற்கொண்டு அவர் இஸ்ரவேல் புத்திரருக்கும், அவர்கள் சந்ததிகளுக்கும் நியமித்த எல்லாவற்றின்படியேயும் அவர்கள் செய்ய வேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளையும், நியமங்களையும் சில சமயங்களில் செய்யாமல் மறந்துவிடுவார்கள் (எண் 15:23).

இஸ்ரவேல் புத்திரர் அறியாமல் தவறி நடந்தாலும், சபையாருக்குத் தெரியாமல் யாதொரு தப்பிதம் செய்தாலும், சபையார் எல்லாரும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு காளையையும், முறைமைப்படி அதற்கேற்ற போஜனபலியையும், பானபலியையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 15:24).

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் தாங்கள் அறியாமல் செய்த பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு, கர்த்தருக்கு சுகந்த வாசனையாக தகனபலியையும், போஜனபலியையும், பாவநிவாரண பலியையும் செலுத்தவேண்டும்.

ஆசாரியன் அந்த பலிகளினால் இஸ்ரவேல் புத்திரரின் சபையனைத்திற்காகவும் பாவநிவிர்த்தி செய்யவேண்டும்; அது அறியாமையினால் செய்யப்பட்டபடியாலும், அதினிமித்தம் அவர்கள் கர்த்தருக்குத் தகன பலியையும் பாவநிவாரணபலியையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்ததினாலும், அது அவர்களுக்கு மன்னிக்கப்படும் (எண் 15:25).

அது அறியாமையினாலே ஜனங்கள் யாவருக்கும் வந்தபடியால், அது இஸ்ரவேல் புத்திரரின் சபையனைத்திற்கும் அவர்களுக்குள்ளே தங்குகிற அந்நியனுக்கும் மன்னிக்கப்படும் (எண் 15:26).

இஸ்ரவேல் சபையார் அறியாமலும், தெரியாமலும் செய்யும் தவறுகளுக்கும் தப்பிதங்களுக்கும் செலுத்த வேண்டிய பலிகள் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்ன இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் நீங்கள் செய்யாமல், அறியாமல் தவறி நடந்தாலும், சபையாருக்குத் தெரியாமல் யாதொரு தப்பிதம் செய்தாலும், சபையார் எல்லாரும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு காளையையும், முறைமைப்படி அதற்கேற்ற போஜனபலியையும், பானபலியையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 15:22-24).

2. ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் சபையனைத்திற்காகவும் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அறியாமையினாலே ஜனங்கள் யாவருக்கும் வந்தபடியால், அது இஸ்ரவேல் புத்திரரின் சபையனைத்திற்கும் அவர்களுக்குள்ளே தங்குகிற அந்நியனுக்கும் மன்னிக்கப்படும் (எண் 15:25-26).

3. ஒருவன் அறியாமையினால் பாவஞ் செய்தானாகில், ஒரு வயதான வெள்ளாட்டைப் பாவநிவாரணபலியாகச் செலுத்தவேண்டும் (எண் 15:1-5,27).

4. அறியாமையினால் பாவஞ்செய்தவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யும்படி கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும் (எண் 15:28).

5. இஸ்ரவேல் புத்திரராகிய உங்களில் பிறந்தவனுக்கும் உங்களுக்குள்ளே தங்கும் அந்நியனுக்கும், அறியாமையினால் பாவஞ் செய்தவனிமித்தம், ஒரே பிரமாணம் இருக்கவேண்டும் (எண் 15:29).

இஸ்ரவேல் சபையார் அறியாமையினால் செய்யப்படும் பாவங்களுக்கு பாவநிவாரண பலியாகச் செலுத்தப்படவேண்டியவை பற்றிய விவரம் வருமாறு :

1. தகனபலி - ஒரு காளையையும், முறைமைப் படி அதற்கேற்ற போஜனபலியையும், பானபலியையும் செலுத்த வேண்டும் (எண் 15:8-12,24).

2. பாவநிவாரண பலி - ஆட்டுக்குட்டியையும் முறைமைப்படி அதற்கேற்ற போஜனபலியையும், பானபலியையும் செலுத்த வேண்டும். (எண் 15:1-5,24).

3. பாவநிவாரணபலி - ஒரு வயதான வெள்ளாட்டை முறைமைப்படி அதற்கேற்ற போஜனபலியையும், பானபலியையும் செலுத்த வேண்டும்.

இஸ்ரவேல் சபையார் அனைவரும் அறியாமல் பாவம் செய்ததுபோல, இஸ்ரவேல் புத்திரரில் ஒரு தனிமனிதன், அறியாமையினால் பாவம் செய்வதற்கு வாய்ப்புள்ளது.

ஒருவன் அறியாமையினால் பாவஞ்செய்தானாகில், ஒரு வயதான வெள்ளாட்டைப் பாவநிவாரணபலியாகச் செலுத்தவேண்டும் (எண் 15:27). அப்பொழுது அறியாமையினால் பாவஞ்செய்தவனுக்காக ஆசாரியன் பாவநிவிர்த்தி செய்யும்படி கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்ய வேண்டும் அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும் (எண் 15:28).

இஸ்ரவேல் புத்திரர் சபையாராக அறியாமையினால் பாவம் செய்தாலும், தனிநபராக அறியாமையினால் பாவம் செய்தாலும், அந்தப் பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்கு, கர்த்தருடைய சமுகத்திலே, கர்த்தர் நியமித்திருக்கிற பலிகளை செலுத்தவேண்டும். பாவம் செய்த சபையாரோ அல்லது தனிமனிதரோ, நியமிக்கப்பட்ட பலிகளை ஆசாரியனிடத்தில் கொண்டு வரவேண்டும். ஆசாரியன் அந்தப் பலிகளை கர்த்தருடைய சந்நிதியில் செலுத்தி பாவநிவிர்த்தி செய்யவேண்டும். அப்பொழுது அந்தப் பாவம் இஸ்ரவேல் சபையாருக்கோ அல்லது பாவம் செய்த தனிநபர் ஆத்துமாவுக்கோ மன்னிக்கப்படும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே பிரதான பலியாகயிருக்கிறார். நாம் அறியாமையினால் செய்த பாவங்களெல்லாம், இயேசுகிறிஸ்துவினுடைய பலிமரணத்தின் மூலமாக மன்னிக்கப்படும். கிறிஸ்துவானவர் தம்மையே பாவநிவாரண பலியாக, கல்வாரி சிலுவையில், ஒரே தரம் தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் மரிக்கும்போது, "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று இவர்கள் அறியாதிருக்கிறார்களே" என்று சொல்லி ஜெபம்பண்ணினார். நாம் அறியாமையினால் செய்த பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்பதற்காக, கிறிஸ்துவானவர் பிதாவின் சமுகத்திலே நமக்காக பரிந்து பேசினார்.

அப்போஸ்தலர் பவுலும் அறியாமையினால் பாவங்களை செய்திருக்கிறார். கிறிஸ்துவினுடைய கிருபாதார மரணத்தினால் பவுலின் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது.

"முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்" (1தீமோ 1:13).

இஸ்ரவேல் புத்திரர் அறியாமையினால் பாவம் செய்யும்போது, அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதுபோல, அவர்கள் மத்தியிலே தங்கியிருக்கிற அந்நியருடைய பாவங்களும், அதே பிரமாணத்தினாலேயே மன்னிக்கப்படுகிறது.

"இஸ்ரவேல் புத்திரராகிய உங்களில் பிறந்தவனுக்கும் உங்களுக்குள்ளே தங்கும் அந்நியனுக்கும், அறியாமையினால் பாவஞ்செய்தவனிமித்தம், ஒரே பிரமாணம் இருக்கவேண்டும்" (எண் 15:29) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. பாவங்களை மன்னிக்கும் விஷயத்தில் கர்த்தர் இஸ்ரவேலின் காணியாட்சிக்குட்பட்டவர்களுக்கும், அதன் காணியாட்சிக்கு புறம்பானவர்களுக்கும் ஒரே பிரமாணத்தையே நியமித்திருக்கிறார். இதன் மூலமாக புறஜாதியாரும் ஆபிரகாமின் ஆசீர்வாதங்களுக்கு சுதந்தரவாளிகளாயிருக்கிறார்கள்.

துணிகரமாய் செய்த பாவம் எண் 15:30,31

எண் 15:30. அன்றியும் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் அந்நியர்களிலாகிலும் எவனாவது துணிகரமாய் யாதொன்றைச் செய்தால், அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகவேண்டும்.

எண் 15:31. அவன் கர்த்தரின் வார்த்தையை அசட்டைபண்ணி, அவர் கற்பனையை மீறினபடியால், அந்த ஆத்துமா அறுப்புண்டுபோகவேண்டும்; அவன் அக்கிரமம் அவன்மேல் இருக்கும் என்று சொல் என்றார்.

அறியாமையினால் செய்த பாவம் மன்னிக்கப்படுகிறது. ஆனால் துணிகரமாய் செய்த பாவத்திற்கு மன்னிப்பு இல்லை. அவர்களுக்கு கர்த்தர் தண்டனை கொடுக்கிறார்.

அன்றியும் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் அந்நியர்களிலாகிலும் எவனாவது துணிகரமாய் யாதொன்றைச் செய்தால், அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். தேசத்தில் தேசத்திலே பிறந்தவர்களாகயிருந்தாலும், அவர்கள் அந்நியர்களாகயிருந்தாலும், துணிகரமாய்ப் பாவம் செய்தவர்கள் அறுப்புண்டு போகவேண்டும் என்பதே கர்த்தருடைய பிரமாணம் (எண் 15:30).

"எவனாவது துணிகரமாய் யாதொன்றைச் செய்தால்" என்னும் வாக்கியத்திற்கு ஒரு காரியத்தைச் செய்யும்போது அது பாவம் என்று தெரிந்திருந்தும், அதை துணிந்து செய்வது என்று பொருள். (எண் 15:30-31= எண் 15:22-29; லேவி 4).

துணிகரமாய்ப் பாவம் செய்த அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அறியாமல் செய்யும் பாவங்களுக்கும், துணிகரமாகச் செய்யும் பாவங்களுக்கும் வித்தியாசம் உண்டு. (எண் 15:22-29; லேவி 4) ஒருவர் துணிகரமாகப் பாவம் செய்யும் போது, அந்தத் தனிநபரும் (எண் 15:27-29), ஒரு தேசம் துணிகரமாகப் பாவத்தைச் செய்யும்போது அந்தத் தேசம் முழுவதும் (எண் 15:22-27) அதற்கு பொறுப்பேற்க வேண்டும். துணிகரமாகச் செய்யும் பாவத்திற்கு மரணமே தண்டனை. (எண் 15:30-31) அறியாமையினால் செய்யப்படும் பாவங்களுக்குப் பாவநிவாரண பலியின் மூலமாக மன்னிப்பு கிடைக்கிறது (எண் 15:22-29).

துணிகரமாய்ப் பாவம் செய்கிறவன் கர்த்தரின் வார்த்தையை அசட்டை பண்ணுகிறான். அவன் கர்த்தருடைய கற்பனையை மீறுகிறான் ஆகையினால் துணிகரமாய்ப் பாவம் செய்த ஆத்துமா அறுப்புண்டுபோகவேண்டும் என்றும், அவன் அக்கிரமம் அவன்மேல் இருக்கும் என்றும் (எண் 15:31) கர்த்தர் சொல்லுகிறார்.

"அவன் தேவனுக்கு விரோதமாகக் கைநீட்டி, சர்வவல்லவருக்கு விரோதமாகப் பராக்கிரமம் பாராட்டுகிறான்" (யோபு 15:25).

துணிகரமாய்ப் பாவம் செய்தவனுக்கு கர்த்தருடைய பிரமாணத்தில் பாவநிவாரண பலி எதுவும் சொல்லப்படவில்லை. அவனுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. கர்த்தர் வானத்திற்கும் பூமிக்கும் நீதியுள்ள நியாயாதிபதியாயிருக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு சத்தியமும் நீதியுமுள்ளது. அவர் தம்முடைய சர்வஞானத்தினால், துணிகரமாய்ப் பாவம் செய்தவனுக்கு, தண்டனையை மாத்திரமே நியமித்திருக்கிறார். அவனுடைய பாவம் மன்னிக்கப்படுவதற்கு, பாவநிவாரண பலிமுறைகள் எதுவும் நியமிக்கப்படவில்லை.

ஓய்வுநாளை மீறின பாவம் எண் 15:32-36

எண் 15:32. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் இருக்கையில், ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்கிக்கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார்கள்.

எண் 15:33. விறகுகளைப் பொறுக்கின அந்த மனிதனைக் கண்டுபிடித்தவர்கள், அவனை மோசே ஆரோன் என்பவர்களிடத்துக்கும் சபையார் அனைவரிடத்துக்கும் கொண்டுவந்தார்கள்.

எண் 15:34. அவனுக்குச் செய்ய வேண்டியது இன்னதென்று தீர்க்கமான உத்தரவு இல்லாதபடியினால், அவனைக் காவலில் வைத்தார்கள்.

எண் 15:35. கர்த்தர் மோசேயை நோக்கி: அந்த மனிதன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படவேண்டும்; சபையார் எல்லாரும் அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கல்லெறியக்கடவர்கள் என்றார்.

எண் 15:36. அப்பொழுது சபையார் எல்லாரும் கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய்க் கல்லெறிந்தார்கள்; அவன் செத்தான்.

கர்த்தர் ஓய்வுநாளை பரிசுத்தம்பண்ணியிருக்கிறார். ஓய்வுநாளை பரிசுத்தக்குலைச்சலாக்குவது கர்த்தருக்கு விரோதமான பாவம். ஓய்வுநாள் பிரமாணத்தை மீறின ஒரு மனுஷனைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் இருக்கையில், ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்கிக்கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டுபிடிக்கிறார்கள். விறகுகளைப் பொறுக்கின அந்த மனிதனைக் கண்டுபிடித்தவர்கள், அவனை மோசே ஆரோன் என்பவர்களிடத்துக்கும் சபையார் அனைவரிடத்துக்கும் கொண்டுவருகிறார்கள் (எண் 15:32,33)

ஓய்வுநாளில் தேவையில்லாத வேலைகளைச் செய்கிறவனுக்கு மரண தண்டனை கொடுக்கப்படுகிறது (எண் 15:32-36; யாத் 20:8-11)

ஓய்வுநாளில் விறகு பொறுக்கின மனிதன், ஒருவேளை, தன் வீட்டில் அப்பம் சுடுவதற்காக, இந்த விறகுகளை பொறுக்கியிருக்கலாம். ஆனால் ஓய்வுநாளில் விறகு பொறுக்க அனுமதியில்லை. ஓய்வுநாளுக்கு முந்தின நாளிலே அந்த மனிதன் தனக்கு தேவையான விறகுகளை பொறுக்கிக்கொள்ளவேண்டும்.

"அவன் அவர்களை நோக்கி: கர்த்தர் சொன்னது இதுதான்; நாளைக்குக் கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு; நீங்கள் சுடவேண்டியதைச் சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்கள் என்றான்" (யாத் 16:23).

இந்த மனிதனுக்கு ஒய்வுநாள் பிரமாணத்தைப்பற்றி தெரிந்திருந்தும், அந்தப் பிரமாணத்தை மீறி, துணிகரமாய்ப் பாவம்செய்கிறான். இவன் ஒய்வுநாள் பிரமாணத்திற்கு விரோதமாகவும், ஒய்வுநாள் பிரமாணத்தை நியமனம் செய்த கர்த்தருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறான்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலிருந்த காலத்தில் ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுகிற சம்பவங்கள் பல சமயங்களில் நடைபெற்றிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் ஒய்வுநாள் பிரமாணத்தை மாத்திரமல்ல, கர்த்தர் சொன்ன பல பிரமாணங்களை மீறியிருக்கிறார்கள். ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவர்களுக்கு கர்த்தர் தண்டனையும் சொல்லியிருக்கிறார்.

"ஆகையால், ஒய்வுநாளை ஆசரிப்பீர்களாக: அது உங்களுக்குப் பரிசுத்தமானது; அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறவன் கொலையுண்ணக் கடவன்; அதிலே வேலைசெய்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தின் நடுவில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்" *(யாத் 31:14).*

"நீங்கள் ஆறுநாள் வேலைசெய்ய வேண்டும், ஏழாம் நாளோ உங்களுக்குப் பரிசுத்த நாளாய் இருப்பதாக; அது கர்த்தருக்கென்று ஒய்ந்திருக்கும் ஒய்வு நாள்; அதிலே வேலைசெய்கிறவன் எவனும் கொலைசெய்யப்படக்கடவன்" *(யாத் 35:2).*

ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவனுக்கு கர்த்தர் மரணதண்டனை நியமித்திருக்கிறார். ஆனால் மோசேயோ இதுவரையிலும், ஒய்வுநாள் பிரமாணத்தை மீறின ஒருவனுக்கும் மரணதண்டனை கொடுக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரர், ஒய்வுநாள் பிரமாணத்தை மீறி விறகுகளை பொறுக்கினவனை, மோசே ஆரோன் என்பவர்களிடத்திற்கும், சபையார் அனைவரிடத்திற்கும் கொண்டு வருகிறார்கள். ஆனால் அவனுக்கு என்ன தண்டனை கொடுக்கவேண்டும் என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

அவனுக்குச் செய்யவேண்டியது இன்னதென்றுதீர்க்கமான உத்தரவு இல்லாதபடியினால், அவனைக் காவலில் வைக்கிறார்கள் *(எண் 14:34).* அவன் செய்த பாவம் மரணதண்டனைக்கு பாத்திரமான பாவமா என்பது இஸ்ரவேல் சபையாருக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை.

ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவன் கொல்லப்படவேண்டும் என்று கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். ஆனால் அவன் எவ்வாறு கொல்லப்படவேண்டும் என்று கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் தெளிவுபடுத்தவில்லை. மோசே இதுபற்றி கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். கர்த்தரிடத்திலிருந்து தெளிவான உத்தரவு வரும் வரையிலும், ஒய்வுநாளிலே விறகுகளை பொறுக்கிக்கொண்டிருந்தவனை காவலில் வைக்கிறார்கள்.

மோசே கர்த்தரிடத்தில் அவன் செய்த பாவத்தைப்பற்றியும், அவனுக்கு கொடுக்கப்படவேண்டிய தண்டனை பற்றியும் விசாரிக்கிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "அந்த மனிதன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படவேண்டும்; சபையார் எல்லாரும் அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கல்லெறியக்கடவர்கள்" *(எண் 15:35)* என்று சொல்லுகிறார்.

இது துணிகரமான பாவத்திற்குக் கொடுக்கப்படும் தண்டனை *(எண் 15:30-31,35).* இது தெரிந்திருந்தும் பிரமாணத்தை மீறுதல் ஆகும் *(எபி 10:28).* வேதாகமத்தில் கல்லெறியும் சம்பவங்களைப் பற்றி ஒன்பது இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. *(யாத் 17:4)*

கர்த்தர் ஒய்வுநாளை பரிசுத்தம்பண்ணியிருக்கிறார். ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவர்களுக்கு, கர்த்தர் ஏற்கெனவே சொன்ன தண்டனையில் மாற்றம் எதுவுமில்லை. ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவர்கள் கர்த்தருடைய பார்வையிலே துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்கள். ஒய்வுநாளிலே விறகுகளை பொறுக்கின மனிதனை நிச்சயமாகவே கொலைசெய்யவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். அவனை யாருக்கும் தெரியாமல், ஒரு இரகசியமான இடத்தில், யாராவது ஒருவர் கொன்றுபோடவேண்டும் என்பது கர்த்தருடைய திட்டமல்ல.

ஒய்வுநாள் பிரமாணத்தை மீறினவனை இஸ்ரவேல் சபையார் எல்லோரும் மொத்தமாய்ச் சேர்ந்து கொல்லவேண்டும். அவனை இரகசியமான இடத்தில் கொல்லாமல், பாளயத்திற்கு புறம்பே, பொதுவான இடத்தில், எல்லோரும் பார்க்கும் வண்ணமாக கொல்லவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கல்லெறிந்து கொல்லப்படுதல் என்பது ஒருவனுக்கு கொடுக்கப்படும் மிகவும் கடுமையான தண்டனையாகும். ஒரு கல்லை எறிந்தவுடன் அவன் செத்துப்போகமாட்டான். அவன்மீது ஒவ்வொரு கல்லாக எறியப்படும்போது, அவன் உயிர் கொஞ்சம் கொஞ்சமாகப்போகும். அவன் மிகுந்த வேதனைகளை அனுபவித்து செத்துப்போவான். ஒய்வுநாள் பிரமாணத்தை மீறினவன் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அவன்மேல் கல்லெறியவேண்டும் என்பது கர்த்தருடைய நீதியான தீர்ப்பாயிருக்கிறது.

ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவன் அனுபவிக்கும் தண்டனைகளைப் பார்த்து இஸ்ரவேல் சபையாருடைய மனதில் பயமும் நடுக்கமும் உண்டாகும். அவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்ய துணிய மாட்டார்கள். தேவனுக்கு விரோதமான காரியங்களை செய்யப் பயப்படுவார்கள். ஆகையினால் கர்த்தர் அந்த மனிதனுக்கு கடினமான தண்டனை கொடுக்கிறார். அந்த மனிதன் நிச்சயமாய் கொலை செய்யப்படவேண்டும் என்றும், எல்லாரும் அவனை பாளயத்திற்கு புறம்பே கல்லெறியவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஒய்வுநாளை பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். அவர் எரிச்சலுள்ள தேவன். ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவர்களை கர்த்தர் தண்டியாமல் விடமாட்டார். ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறவர்கள், எப்படிப்பட்ட வேலைகளை செய்தாலும், அது கர்த்தருடைய பார்வையில், துணிகரமான பாவமாகவே இருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தைக்கு இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கீழ்ப்படிகிறார்கள். அப்பொழுது சபையார் எல்லாரும் கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய்க் கல்லெறிகிறார்கள்; அவன் செத்துப்போகிறான் (எண் 15:36).

அந்த மனிதன் மீது எத்தனை பேர் கல்லெறிந்தார்கள் என்று சொல்லப்படவில்லை. இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அவன்மேல் கல்லெறிந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன்மீது எத்தனைபேர் கல்லெறிந்தாலும், அத்தனை பேரும் கர்த்தருடைய ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுவதற்கு பயப்படுவார்கள்.

இஸ்ரவேல் சபையார் மத்தியிலே, ஒய்வுநாள் பிரமாணத்தை துணிகரமாய் மீறுகிறவர்களுக்கு, தேசத்தின் நியாயாதிபதிகளே தண்டனை கொடுக்கிறார்கள்.

"ஆகையால் நான் யூதாவின் பெரியவர்களைக் கடிந்துகொண்டு: நீங்கள் ஒய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன?" (நெகே 13:17).

ஒய்வுநாளில் விறகுகளை பொறுக்கிக்கொண்டிருந்த மனிதனை சபையார் எல்லாரும் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். இது மிகவும் கடுமையான தண்டனை என்றும், சாதாரண தப்பிதத்திற்கு இப்படிப்பட்ட மரணதண்டனை மிகவும் அதிகமானது என்றும், அது நியாயமற்றது என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விவாதம் பண்ணுகிறார்கள்.

கர்த்தரோ தம்முடைய நீதியினாலும், தெய்வீக ஞானத்தினாலும் ஒய்வுநாள் பிரமாணத்தை மீறின மனிதனுக்கு மரணதண்டனை கொடுத்திருக்கிறார். இந்தத் தண்டனை அதிகமாகயிருந்தாலும், மற்றவர்களுக்கு எச்சரிப்பு உண்டாகவேண்டும் என்பதற்காக கர்த்தர் இந்தத் தண்டனையைக் கொடுத்திருக்கலாம். ஒய்வுநாள் பிரமாணத்தை மீறுவது கர்த்தருக்கு விரோதமான துணிகரமான பாவம் என்பதை இஸ்ரவேல் சபையார் எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டும். அதற்காகவே கர்த்தர் இவ்வளவு பெரிய தண்டனையை அந்த மனிதனுக்கு கொடுத்திருக்கிறார்.

வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்கள் எண் 15:37-41

எண் 15:37. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 15:38. நீ இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பேசி, அவர்கள் தங்கள் தலைமுறைதோறும் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவைக் கட்டவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்.

எண் 15:39. நீங்கள் பின்பற்றிச் சோரம்போகிற உங்கள் இருதயத்துக்கும் உங்கள் கண்களுக்கும் ஏற்கநடவாமல், அதைப்பார்த்து, கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்யும்படிக்கு, அது உங்களுக்குத் தொங்கலாய் இருக்கவேண்டும்.

எண் 15:40. நீங்கள் என் கற்பனைகளையெல்லாம் நினைத்து, அவைகளின்படியே செய்து, உங்கள் தேவனுக்குப் பரிசுத்தராயிருக்கும்படி அதைப் பார்ப்பீர்களாக.

எண் 15:41. நான் உங்களுக்கு தேவனாயிருக்கும்படி, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்; நானே உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்.

அறியாமல் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக செலுத்தவேண்டிய பாவநிவாரண பலிகளைப்பற்றி கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார். ஒருவன் அறியாமல் பாவம் செய்யாதிருக்கவேண்டுமென்றால், அவன் கர்த்தருடைய பிரமாணங்களையும் கட்டளைகளையும் மறவாமல் நினைவில் வைத்திருக்கவேண்டும். தம்முடைய பிரமாணங்களை எப்போதும் நினைவில் வைத்திருப்பதற்கு கர்த்தர் ஒரு சில உபாயங்களை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவைக் கட்டவேண்டும் (எண் 15:38). அவர்கள் அந்த தொங்கல்களைப்பார்த்து, கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்யும்படிக்கு, அது அவர்களுக்குத் தொங்கலாய் இருக்கவேண்டும் (எண் 15:39).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளை நினைவுகூராமல் மறந்துவிட்டால் அவர்கள் தங்கள் இருதயத்திற்கும், தங்கள் கண்களுக்கும் ஏற்ற பிரகாரம் நடந்து, மாயையை பின்பற்றி சோரம்போய்விடுவார்கள். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளை எப்போதும் நினைவுகூரும் வண்ணமாக, தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கவேண்டும். அந்த தொங்கல்களின் ஓரத்திலே இளநீல நாடாவைக் கட்டவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் இந்த நாடாவைப் பார்க்கும்போதெல்லாம் கர்த்தருடைய கற்பனைகளை நினைவுகூரவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் அந்த தொங்கல்களைப் பார்க்கும்போதெல்லாம், கர்த்தருடைய கற்பனைகளையெல்லாம் நினைத்து, அவைகளின்படியே செய்து, தங்கள் தேவனுக்கு பரிசுத்தராயிருக்கவேண்டும் (எண் 15:40) என்பது கர்த்தருடைய திட்டமாகும்.

இஸ்ரவேல் புத்திரருடைய வஸ்திரங்களின் ஓரங்களிலே உண்டாக்கப்பட்டிருக்கும் தொங்கல்கள் அவர்களுக்கு ஞாபகக்குறியாகயிருக்கும். இந்தத் தொங்கல்களில் அவர்கள் இளநீல நாடாவை கட்டியிருப்பார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், இந்தப் பிரமாணத்தைக் கைக்கொண்டு, தம்முடைய வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கியிருந்தார்.

"அப்பொழுது, பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ: நான் அவருடைய வஸ்திரத்தை யாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்" (மத் 9:20,21).

பரிசேயர்கள் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே இளநீல நாடாவைக் கட்டும்போது, அந்த நாடாவின் அகலத்தை அதிகமாக்குகிறார்கள். நாடா எவ்வளவு அதிகமாகயிருக்கிறதோ அந்த அளவுக்கு அவர்கள் பரிசுத்தமானவர்கள் என்றும், கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்கள் என்றும் மற்ற ஜனங்களுக்கு முன்பாக தங்களைக் காண்பித்துக்கொள்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் வஸ்திரங்களின் ஓரங்களில் கட்டப்பட்டிருந்த இளநீல நாடாக்கள் பெருமைக்கு அடையாளமாயிற்று. நாடாக்களை கட்டியிருக்கிறவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களை நினைத்துப் பார்க்காமல், மனுஷர் மத்தியிலே தங்களுக்கு அதிகமான பெருமையும், மதிப்பும் ஏற்படவேண்டும் என்பதையே நினைத்துப் பார்த்தார்கள்.

தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களையும், அதில் கட்டப்பட்டிருக்கும் இளநீல நாடாக்களையும் பார்க்கும்போது, இஸ்ரவேல் புத்திரருடைய மனச்சாட்சி உயிர்ப்பிக்கப்படவேண்டும். அவர்கள் அந்தத் தொங்கல்களையும், நாடாக்களையும் பார்க்கும் போதெல்லாம், கர்த்தரைப்பற்றியும், அவருடைய பிரமாணங்களைப்பற்றியும், அவருடைய கட்டளைகளைப்பற்றியும் நினைவுகூர்ந்து, கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். அவர்கள் பாவங்களுக்கு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே உண்டாக்கப்பட்டிருக்கிற தொங்கல்களையும், அதில் கட்டப்பட்டிருக்கிற இளநீல நாடாக்களையும் பார்க்கும்போதெல்லாம், அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளையெல்லாம் நினைக்கவேண்டும். அவருடைய கற்பனைகளின்படியே செய்யவேண்டும். தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்தராயிருக்கும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வஸ்திரங்களின் ஓரத்திலுள்ள தொங்கல்களையும் நாடாக்களையும் பார்க்கவேண்டும். இதுவே தொங்கல்களையும், நாடாக்களையும் குறித்த கர்த்தருடைய திட்டமாகும்.

இளநீலநாடாவைக் கட்டுவது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்க வேண்டும்.

2. ஓரத்தின் தொங்கலிலே இளநீல நாடாவைக் கட்டவேண்டும்.

3. கர்த்தருடைய கற்பனைகளை நினைத்துப் பார்ப்பதற்கும், அதற்குக் கீழ்ப்படிவதற்கும் இது இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாக இருக்கும். (எண் 15:39-40).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வஸ்திரங்களின் நாடாக்களைக் காணும்போது, கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்குத் தாங்கள் கீழ்ப்படிய வேண்டுமென்பதையும், கர்த்தருக்காக தாங்கள் பரிசுத்த ஜாதியாக அழைக்கப் பட்டிருக்கிறவர்கள் என்பதையும் நினைவுகூர வேண்டும். (எண் 15:38-40).

ஜெபாலயங்களில் இன்றும் இதுபோன்ற நாடாக்களை அணியும் பழக்கம் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பரிசேயர்களுடைய நாடாக்களைப் பற்றி வேதாகமத்தில் குறிப்பு உள்ளது. (மத் 23:5).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்தராயிருக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம். இதற்காகவே கர்த்தர் தம்முடைய பிரமாணங்களை அவர்களுக்கு திரும்ப திரும்ப சொல்லுகிறார். இதன்பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் உங்களுக்கு தேவனாயிருக்கும்படி, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்; நானே உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்" (எண் 15:41) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் இன்னும் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவில்லை. அவர்கள் கானான் தேசத்தில் போய்ச்சேர்ந்த பின்பு, அவர்கள் கைக்கொள்ளவேண்டிய பிரமாணங்களைப்பற்றி கர்த்தர் இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய அவிசுவாசத்தினிமித்தமாகவும், கலகக்குணத்தினிமித்தமாகவும், கர்த்தர் அவர்களை வனாந்தரத்திற்கு திரும்பவும் அனுப்புகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி "நீங்கள் தேசத்தைச் சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்" (எண் 14:34) என்று சொன்னார்.

கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலைகிறார்கள். அந்த நாற்பது வருஷங்கள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் நடைபெற்ற முக்கியமான சம்பவங்களின் விவரம் வருமாறு :

1. புதிய பிரமாணங்கள் கொடுக்கப்பட்டது. (எண் 15:1-31)
2. ஓய்வுநாளை மீறுகிறவன் கொலைசெய்யப்பட்டான் (எண் 15:32-36)
3. வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கல்களை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே இளநீலநாடாவைக் கட்ட வேண்டும் என்னும் பிரமாணம் கொடுக்கப்பட்டது. (எண் 15:37-41)
4. கோராகுவின் கலகம். (எண் 16:1-33)
5. கலகக்காரரின் அழிவு (எண் 16:34-40)
6. இஸ்ரவேல்மீது வாதை (எண் 16:41-50)
7. ஆரோனுடைய கோல் தளிர்த்தது (எண் 17:1-13)
8. ஆசாரியர், லேவியர் ஆகியோரின் பிரதிஷ்டையும், லேவியருடைய பிரமாணங்கள் உறுதிபண்ணப்படுவதும். (எண் 18:1-32)
9. சிவப்பு கிடாரியைப் பற்றிய பிரமாணம் கொடுக்கப்பட்டது. (எண் 19:1-22)
10. மிரியாமின் மரணம் (எண் 20:1)
11. மோசே, இஸ்ரவேல் புத்திரர் ஆகியோரின் பாவம் (எண் 20:2-13)
12. ஏதோமின் பாவம் (எண் 20:14-22)
13. ஆரோனின் மரணம்(எண் 20:23-29)
14. கானானியரோடு யுத்தம்(எண் 21:1-4)
15. வெண்கலச்சர்ப்பம் நிறுவப்பட்டது. (எண் 21:5-9)
16. பல்வேறு பிரயாணங்கள் (எண் 21:10-20)
17. சீகோன், ஓக் ஆகியோரின்மீது வெற்றி (எண் 21:21-35; உபா 2:24-3:11)
18. பிலேயாமோடு ஏற்பட்ட அனுபவங்கள் (எண் 22:1-24:25)
19. விக்கிரகாராதனையும், வேசித்தனமும் (எண் 25:1-9)
20. பினெகாசின் நித்திய ஆசாரியத்துவ பட்டம் (எண் 25:10-15)
21. மீதியானியரோடு யுத்தம் (எண் 25:16-18)
22. இஸ்ரவேல் புத்திரர் இரண்டாம் முறையாக எண்ணித் தொகையேற்றப்படுதல் (எண் 26:1-65)

23. சுதந்தரவீதங்கள் (எண் 27:1-11; எண் 36:1-13), காணிக்கைகள் (எண் 28:1-31), பண்டிகைகள் (எண் 29:1-40), பொருத்தனைகள் (எண் 30:1-16) ஆகியவற்றைப் பற்றி புதிய பிரமாணங்கள் கொடுக்கப்பட்டன.

24. மீதியான்மீது நியாயத்தீர்ப்பு (எண் 31:1-54)

25. ரூபன், காத், மனாசேயின் பாதிக் கோத்திரத்தார் ஆகியோரின் சுதந்தர வீதம் (எண் 32:1-42; உபா 3:12-22)

26. புதிய பிரமாணங்கள் கொடுக்கப்பட்டு, வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு ஆயத்தங்கள் (எண் 33:51-35:34)

27. சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட பிரமாணங்களை புதிய சந்ததியாருக்குக் கற்பிக்கப்பட்டது. அத்துடன் மேலும் பல பிரமாணங்களும், எச்சரிப்புகளும், தேசத்தில் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளும் கற்பிக்கப்பட்டது. (உபா 4:1-28:68)

28. பாலஸ்தீன உடன்படிக்கை (உபா 29:1-30:20)

29. மோசேயின் இறுதி ஆலோசனைகள் (உபா 31)

30. மோசேயின் பாடல் (உபா 32:1-44)

31. மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கூறிய கடைசி வார்த்தைகள் (உபா 32:44-52)

32. இஸ்ரவேலின் கோத்திரத்தார்மீது மோசேயின் ஆசீர்வாதம் (உபா 33)

33. மோசேயின் தரிசனமும், மரணமும் (எண் 27:12-14; உபா 3:23-29; உபா 34:1-8)

34. மோசேக்குப் பின்பு யோசுவா (எண் 27:15-23; உபா 34:9-12; யோசு 1)

16 அதிகாரம்

இந்த அதிகாரம் எந்த சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டது என்று உறுதியாக தெரியவில்லை. இது எழுதப்பட்ட சரித்திர காலத்தைப்பற்றி, வேதாகம சரித்திர ஆசிரியர்கள் வெவ்வேறு விதமான கருத்துக்களை சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் காதேஸ்பர்னேயாவிலிருந்து திரும்பி வந்தபின்பு, அவர்கள் கர்த்தருக்கும் மோசேக்கும் விரோதமாக மூன்று முறை கலகம்பண்ணியிருக்கிறார்கள்.

கர்த்தர் இதற்கு முந்தின அதிகாரத்தில், இஸ்ரவேல் புத்திரருக்கு புதிய பிரமாணங்களை சொன்னார். அதன் பின்பு இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற கலகம் நடைபெறுகிறது.

கோராகு தாத்தான், அபிராம் ஆகியோர் மோசேக்கு விரோதமாகவும் ஆரோனுக்கு விரோதமாகவும் எழும்பி நின்று, துணிகரமாய்க் கலகம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய கலகம் மிகவும் ஆபத்தானது (எண் 16:1-15).

கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் ஆரோனுடைய ஆசாரிய ஊழியத்திற்கு விரோதமாக எதிர்த்து பேசுகிறார்கள் (எண் 16:3). தன்னை எதிர்த்து பேசுகிற மோசே கலகக்காரரோடு சமாதானமாகப் பேசுகிறார். தங்களுக்கு மத்தியில் ஏற்பட்டிருக்கிற பிரச்சனைகளை கர்த்தர் தாமே தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம் தீர்த்து வைக்கவேண்டும் என்று மோசே சொல்லுகிறார் (எண் 16:4-11).

தாத்தானும், அபிராமும் மோசேக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். மோசே அவர்களை தன்னிடத்தில் வருமாறு அழைத்தனுப்பியபோது, அவர்கள் மோசேயினிடத்திற்கு வர மறுத்துவிடுகிறார்கள். இதனால் மோசேக்கு மிகுந்த மனவேதனையும் துக்கமும் உண்டாயிற்று (எண் 16:12-15).

கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்படுகிறது. கோராகின் கூட்டத்தார் ஒவ்வொருவரும் தங்கள் தூபகலசங்களை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய சந்நிதியில் வருகிறார்கள். கோராகும், ஆரோனும் தன் தன் தூபகலசத்தை எடுத்துக்கொண்டு அங்கே வருகிறார்கள்.

கர்த்தருடைய கோபம் கோராகின்மீதும் அவனுடைய கூட்டத்தார்மீதும் வருகிறது. பூமி தன் வாயைத்திறந்து அவர்கள் எல்லோரையும் விழுங்கிப்போடுகிறது. இவ்வாறாக அவர்கள் சபையின் நடுவிலிருந்து அழிந்துபோகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லோரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுக்கிறார்கள். புதிய கலகம் ஆரம்பமாகிறது (எண் 16:41-43). கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடும் கோபம் புறப்படுகிறது (எண் 16:44-46). ஆரோன் தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின்மேல் தூபவர்க்கம் இட்டு, இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவிர்த்தி செய்கிறார் (எண் 16:46-50). வாதை நிறுத்தப்படுகிறது.

கலகக்காரர்
எண் 16:1-11

எண் 16:1. லேவிக்குப் பிறந்த கோகாத்தின் குமாரனாகிய இத்சேயாரின் மகன் கோராகு என்பவன் ரூபன் வம்சத்திலுள்ள எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் பேலேத்தின் குமாரனாகிய ஓனையும் கூட்டிக்கொண்டு,

எண் 16:2. இஸ்ரவேல் புத்திரரில் சபைக்குத் தலைவர்களும் சங்கத்துக்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களுமாகிய இருநூற்று ஐம்பது பேர்களோடும் கூட மோசேக்கு முன்பாக எழும்பி,

எண் 16:3. மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி: நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்.

எண் 16:4. மோசே அதைக் கேட்டபொழுது, முகங்குப்புற விழுந்தான்.

எண் 16:5. பின்பு அவன் கோராகையும் அவனுடைய எல்லாக் கூட்டத்தையும் நோக்கி: நாளைக்குக் கர்த்தர் தம்முடையவன் இன்னான் என்றும், தம்மண்டையிலே சேரத்தாம் கட்டளையிட்ட பரிசுத்தவான் இன்னான் என்றும் காண்பிப்பார்; அப்பொழுது எவனைத் தெரிந்துகொள்வாரோ, அவனைத் தம்மிடத்தில் சேரக் கட்டளையிடுவார்.

எண் 16:6. ஒன்று செய்யுங்கள்; கோராகே, கோராகின் கூட்டத்தார்களே, நீங்கள் எல்லாரும் தூபகலசங்களை எடுத்துக்கொண்டு,

எண் 16:7. நாளைக்கு அவைகளில் அக்கினி போட்டு, கர்த்தருடைய சந்நிதியில் தூபவர்க்கம் இடுங்கள்; அப்பொழுது கர்த்தர் எவனைத் தெரிந்துகொள்வாரோ, அவன் பரிசுத்தவானாயிருப்பான்; லேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்கள் என்றான்.

எண் 16:8. பின்னும் மோசே கோராகை நோக்கி: லேவியின் புத்திரரே, கேளுங்கள்;

எண் 16:9. கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவும், சபையாரின் முன்நின்று அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யவும், உங்களைத் தம்மண்டையிலே சேரப்பண்ணும்படி இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து உங்களைப் பிரித்தெடுத்ததும்,

எண் 16:10. அவர் உன்னையும் உன்னோடேகூட லேவியின் புத்திரராகிய உன்னுடைய எல்லாச் சகோதரரையும் சேரப்பண்ணினதும், உங்களுக்கு அற்பகாரியமோ? இப்பொழுது ஆசாரியப்பட்டத்தையும் தேடுகிறீர்களோ?

எண் 16:11. இதற்காக நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகவே கூட்டங்கூடினீர்கள்; ஆரோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் எம்மாத்திரம் என்றான்.

இஸ்ரவேல் புத்திரரில் சிலர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இந்தக் கலகக்காரர்களைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கலகக்கூட்டத்தாருக்கு கோராகு என்பவன் தலைவனாயிருக்கிறான். இவன் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவன்.

லேவிக்குப் பிறந்த கோகாத்தின் குமாரனாகிய இத்சேயாரின் மகன் கோராகு என்பவன் ரூபன் வம்சத்திலுள்ள எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் பேலேத்தின் குமாரனாகிய ஓனையும் கூட்டிக்கொள்கிறான் (எண் 16:1). இவனுடைய கூட்டத்தில் இருநூற்று ஐம்பது பேர் இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் சபைக்குத் தலைவர்களும், சங்கத்துக்கு அழைக்கப்பட்டவர்களும், பிரபலமானவர்களுமாகிய இருநூற்று ஐம்பது பேர்களோடும் கூட, கோராகு மோசேக்கு முன்பாக எழும்புகிறான் (எண் 16:2).

கோராகு தன்னுடைய கூட்டத்தில் தாத்தானையும், அபிராமையும் கூட்டிக்கொள்கிறான். இவர்கள் இருவரும் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். ரூபன் யாக்கோபின் மூத்த குமாரன். இஸ்ரவேல் புத்திரருக்கு ஆரோன் பிரதான ஆசாரியரின் ஸ்தானத்தில் ஊழியம் செய்கிறான். ஆரோனுடைய ஊழியத்தில் கோராகுக்கு திருப்தி ஏற்படவில்லை. ஆகையினால் கோராகு தன்னோடு 250 பேரை கூட்டிக்கொண்டு, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கலகம்பண்ணுகிறான்.

கோராகுக்கு ஆரோன் ஆசாரிய ஊழியம் செய்வதும் பிடிக்கவில்லை. கோகாத்தின் வம்சத்திற்கு எலிசாப்பான் தலைவனாகயிருப்பதும் பிடிக்கவில்லை. தன்னுடைய வம்சத்திற்கு தானே தலைவனாயிருக்கவேண்டுமென்று கோராகு ஆசைப்படுகிறான்.

"கோகாத் புத்திரரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் தென்புறமான பக்கத்திலே பாளயமிறங்கவேண்டும். அவர்களின் தலைவன், ஊசியேலின் குமாரனாகிய எல்சாபான். அவர்களுடைய காவலாவது: பெட்டியும், மேஜையும், குத்துவிளக்கும், பீடங்களும் ஆராதனைக்கேற்ற பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகளும், தொங்குதிரையும், அதினுடைய எல்லா வேலைகளுக்கும் ஏற்றவைகளுமே" (எண் 3:29-31).

ரூபன் கோத்திரத்தார் யூதாகோத்திரத்தார்மீது கோபமாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் அணியணியாகப் புறப்பட்டு பிரயாணம்பண்ணும்போது, யூதாகோத்திரத்தார் முன்னணியில் போகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே யூதாகோத்திரத்தாருக்கு அதிக முக்கியத்துவமும், மேன்மையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் ரூபன் கோத்திரத்தார் யூதாகோத்திரத்தார்மீது பொறாமைப்படுகிறார்கள். தங்கள் கோத்திரத்திற்கு அதிக முக்கியத்துவமும், கனமும் வேண்டுமென்று ரூபன் கோத்திரத்தார் எதிர்பார்க்கிறார்கள்.

கோராகின் கூட்டத்தாரும், ரூபன் கோத்திரத்தின் தலைவர்களாகிய தாத்தானும், அபிராமும் மோசேயின்மீது கோபமாயிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே அணியில் சேர்ந்து, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்புகிறார்கள். இவர்களுடைய கூட்டத்தில் 250 பேர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இஸ்ரவேல் புத்திரரின் சபைக்கு தலைவர்களாகவும், சங்கத்திற்கு அழைக்கப்பட்டவர்களாகவும், பிரபல்யமானவர்களாகவும் இருக்கிறார்கள்.

கலகக்காரர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி, "நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள்" (எண் 16:3) என்று சொல்லுகிறார்கள்.

கோராகு மோசேக்கு எதிராக ஒரு கலகத்தை ஆரம்பிக்கிறான். தாத்தானும், அபிராமும் கோராகுவோடு சேர்ந்து கொள்கிறார்கள். சபையாரின் மத்தியில் தங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள். மோசேக்கும், ஆரோனுக்கும் அளவுக்கு அதிகமாக அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாக முறுமுறுக்கிறார்கள். இஸ்ரவேலின் 250 பிரபுக்கள் இவர்களோடு சேர்ந்து கொண்டு, மோசேக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள். (எண் 16:1-3) இந்தக் கலகத்தில் மொத்தம் 14700 பேர் மரித்துப் போகிறார்கள். (எண் 16:49) இவர்கள் தவிர, ஆரம்பத்தில் கலகம் பண்ணியவர்களும், அவர்களுடைய குடும்பத்தாரும் (எண் 16:29-34), 250 பிரபுக்களும் (எண் 16:35) மரித்துப் போகிறார்கள்.

கோகாத் புத்திரரில் எல்சாபான் என்பவன் அவர்களுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டான். (எண் 3:27,30). இவன் கோகாத்தியரில் ஒரு சிறிய பிரிவைச் சேர்ந்தவன். ஆகையினால் கோராகுவின் மனதில் கலக்கமும், பொறாமையும் உண்டாயிற்று. ஆசரிப்புக் கூடாரத்தின் தெற்கு பகுதியில் ரூபன் கோத்திரத்தாருக்கு அருகில் கோகாத்தியர் பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

ரூபன் புத்திரருடைய பிறப்புரிமை ஏற்கெனவே பறிக்கப்பட்டுப் போயிற்று. கோத்திரத்தார் மத்தியில் தங்களுக்குரிய ஸ்தானம் கொடுக்கப்படவில்லை என்னும் குறை ரூபன் புத்திரருக்கு உண்டாயிற்று. ஆகையினால், இவ்விரண்டு கோத்திரத்தாரும் தங்களுக்கு மத்தியில் ஏற்பட்டிருக்கும் மனக்குறைகளை ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதற்கு வசதியாயிற்று.

லேவியருக்கும், ஜனங்களுக்கும் மத்தியிலுள்ள வித்தியாசத்தை அகற்ற வேண்டுமென்பது கோராகுவின் நோக்கமல்ல. ஆசாரியத்துவம் தனக்கும், தன்னுடைய பிரிவினருக்கும் வரவேண்டும் என்பதே கோராகுவின் நோக்கமாகும்.

எல்லா ஜனங்களுமே பரிசுத்தமானவர்கள் என்றும், ஆகையினால் எல்லா ஜனங்களையும் ஒன்றுபோல் நடத்த வேண்டும் என்றும் கூறி கோராகு மோசேக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறான்.

மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களின் விவரம் வருமாறு :

1. நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள்.
2. சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்.
3. கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை உயர்த்துகிறீர்கள்.
4. இந்த வனாந்தரத்தில் எங்களைக் கொன்றுபோடும்படி எகிப்து தேசத்திலிருந்து எங்களைக் கொண்டு வந்தீர்கள். (எண் 16:13).
5. எங்கள்மேல் துரைத்தனம் பண்ணப் பார்க்கிறீர்கள்.
6. நீ எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குக் கொண்டுவந்ததில்லை. (எண் 16:14).
7. எங்களுக்கு வயல்களையும் திராட்சத் தோட்டங்களையும் சுதந்தரமாகக் கொடுத்ததில்லை.
8. இந்த மனிதருடைய கண்களைப் பிடுங்கப்பார்க்கிறீர்கள்

ஆசாரிய ஊழியம் ஆரோனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசாரிய பட்டம் ஆரோனின் குடும்பத்தாருக்கு கொடுக்கப்பட்டதை கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆசாரிய பட்டம் தனக்கும் தன்னுடைய குடும்பத்திற்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கோராகு ஆசைப்படுகிறான். இதன் நிமித்தமாக கோராகின் கூட்டத்தார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள் என்று கோராகின் கூட்டத்தார் சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்கள் நடுவிலிருக்கிறார். ஆகையினால் அவர்கள் எல்லோரும் பரிசுத்தமானவர்கள் என்பது இவர்களுடைய விவாதம். கர்த்தர் தமது கிருபையினால் அவர்கள் நடுவிலிருக்கிறார். கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு இஸ்ரவேல் சபையாரிடத்தில் பரிசுத்தம் எதுவுமில்லை. ஆனால் கோராகின் கூட்டத்தாரோ, இஸ்ரவேல் சபையாரின் பரிசுத்தத்தை பெருமையாய்ப் பேசுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பல சமயங்களில் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி பாவம் செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்களை பாவத்தினாலும், அசுத்தத்தினாலும், அக்கிரமத்தினாலும் தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கர்த்தர் எதிர்பார்க்கிற பரிசுத்தம் இல்லை. ஆனாலும் கர்த்தர் தமது கிருபையினால் அவர்கள் நடுவிலிருக்கிறார். கோராகின் கூட்டத்தாரோ, கர்த்தருடைய கிருபைக்கு இஸ்ரவேல் சபையாரின் பரிசுத்தமே காரணம் என்று சொல்லி, சபையாரைப் புகழ்ந்து பேசுகிறார்கள்.

கோராகின் கூட்டத்தார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டங்கூடியிருக்கிறார்கள். அவர்களுக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். "கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள்" என்று கலகக்காரர்கள், மோசேயினிடத்திலும் ஆரோனிடத்திலும் நியாயமில்லாமல் கேட்கிறார்கள். அவர்களுடைய குற்றச்சாட்டில் உண்மையோ, நீதியோ இல்லை. மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சபைக்கு மேலாக தங்களை உயர்த்தவில்லை. கர்த்தரே அவர்களை உயர்த்தியிருக்கிறார். கர்த்தரே அவர்களை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தவர். கர்த்தரே அவர்களை கனம்பண்ணியிருக்கிறவர்.

"மேலும், ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை" (எபி 5:4).

கோராகின் கூட்டத்தார் பெருமைக்காரராயிருக்கிறார்கள். தங்களுக்கு மேலான அதிகாரம் வேண்டும் என்றும், கர்த்தருடைய சபைக்கு மேலாக தாங்களே உயர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்றும், இஸ்ரவேல் சபையாரை தங்கள் இஷ்டப்பிரகாரம் அடக்கி ஆளுகை செய்யவேண்டும் என்றும் கோராகின் கூட்டத்தார் விரும்புகிறார்கள்.

கோராகின் கூட்டத்தார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கலகம்பண்ணுவதோடு, அவர்கள் கர்த்தருக்கும் விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய தெய்வீக சித்தத்திற்கும், அவருடைய தெய்வீக வல்லமைக்கும், கர்த்தருடைய தெய்வீக ஆளுகைக்கும் விரோதமாக எதிர்த்து நின்று கலகம்பண்ணுகிறார்கள்.

கர்த்தரே மோசேயையும் ஆரோனையும், கோராகின் கூட்டத்தாருக்கு மேலாக உயர்த்தியிருக்கிறார். அது கர்த்தருடைய சித்தம். கோராகின் கூட்டத்தார் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் தெரிந்துகொள்கிற ஊழியக்காரர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய ஆளுகைக்கு கீழ்ப்படியவேண்டும்.

ஆனால் கோராகின் கூட்டத்தாரோ துன்மார்க்கராகவும், பேராசை பிடித்தவர்களாகவும், கலககுணமுள்ளவர்களாகவும் பொறாமை குணமுள்ளவர்களாகவும், தெளிவாக சிந்தியாமல் அவசரப்பட்டு சிந்திக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

கோராகின் கூட்டத்தாருடைய வார்த்தையிலும் சுத்தமில்லை. அவர்கள் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள்" என்று கேட்கிறார்கள். மோசே அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டபோது முகங்குப்புற விழுகிறார் (எண் 16:4).

தனக்கு எப்பொழுதெல்லாம் பிரச்சனை வருகிறதோ, தன்னுடைய இருதயம் எப்பொழுதெல்லாம் அமைதியில்லாமல் கலக்கத்திலிருக்கிறதோ, அப்பொழுதெல்லாம் மோசே கர்த்தருடைய சமுகத்திலே முகங்குப்புற விழுந்து, தன்னைத் தாழ்த்தி, தன்னுடைய பிரச்சனைகளையும், பாடுகளையும், மனவேதனைகளையும் கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுப்பது வழக்கம்.

"பின்பு அவர்கள்: நாம் ஒரு தலைவனை ஏற்படுத்திக்கொண்டு எகிப்துக்கு திரும்பிப்போவோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாராகிய எல்லாக் கூட்டத்தாருக்கு முன்பாகவும் முகங்குப்புற விழுந்தார்கள்" (எண் 14:4,5).

மோசே முகங்குப்புற விழுந்த சம்பவங்களின் விவரம் வருமாறு :

1. விக்கிரகாராதனையின் நிமித்தமாக சீனாய் வனாந்தரத்தில் தேவன் ஜனங்களை அழிக்க வேண்டுமென்று சித்தம் கொண்டிருந்தபோது (உபா 9:18= யாத் 32)

2. காதேஸ்பர்னேயாவில் ஜனங்கள் கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணிய போது. (உபா 9:25=எண் 14:5)

3. கோராகுவும், அவனுடைய கூட்டத்தாரும் கலகம்பண்ணி மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராகக் குற்றம் சுமத்தியபோது. (எண் 16:4)

4. கோராகுவின் கலகத்தின் நிமித்தம் கர்த்தர் ஜனங்களை அழிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணிய போது. (எண் 16:22)

5. 250 பிரபுக்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கள் வந்ததின் நிமித்தம் கலகம் பண்ணிய ஜனங்களைக் கர்த்தர் அழிக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணியபோது. (எண் 16:45)

6. தண்ணீர் இல்லாமற்போனதற்காக இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கு எதிராகக் கலகம் பண்ணியபோது. (எண் 20:6)

தனக்கு விரோதமாகப் பேசுகிற கோராகின் கூட்டத்தாருக்கு எப்படிப்பட்ட பிரதிரயுத்தரம் சொல்லவேண்டும், இந்தப் பிரச்சனையில் தான் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்னும் காரியங்களில் மோசேக்கு கர்த்தருடைய ஆலோசனையும், அவருடைய வழிநடத்துதலும் தேவைப்படுகிறது. மோசே கர்த்தருடைய சித்தத்தையும், திட்டத்தையும் அறிந்துகொள்வதற்காக, அவருடைய சமுகத்தில் முகங்குப்புற விழுந்து, ஜெபம்பண்ணுகிறார்.

கோராகின் கூட்டத்தார் தனக்கு விரோதமாகக் கலகம்பண்ணும்போது, மோசே அந்தப் பிரச்சனையை கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுக்கிறார். அவர்கள் பேசுகிற வார்த்தைகளை கர்த்தர் செவிகொடுத்து கேட்டு, அவரே அவர்களை நியாயந்தீர்க்கவேண்டும் என்று மோசே எதிர்பார்க்கிறார். கர்த்தரே மோசேயையும் ஆரோனையும் தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தவர். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே, மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஊழியம் செய்கிறார்கள்.

மோசே, ஆரோன் ஆகியோரின் ஊழியத்தில் கர்த்தருக்கு திருப்தியில்லையென்றால், கர்த்தர் அவர்களை அந்த ஊழியத்திலிருந்து விலக்கிப்போடுவார். மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய திட்டத்திற்கு எதிர்த்து நிற்கமாட்டார்கள். இப்போது கோராகின் கூட்டத்தார் மோசேக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். மோசே, ஆரோன் ஆகியோரின் ஊழியத்திற்கு விரோதமாக அவர்கள் குற்றம் சொல்லுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டு அவர்களுடைய சொந்தக் குற்றச்சாட்டு. அவர்களுடைய குற்றச்சாட்டை கர்த்தர் அங்கீகரிக்கவில்லை.

ஆனாலும், கோராகின் கூட்டத்தார் தனக்கு விரோதமாகக் குற்றம் சொல்லும்போது, அந்தக் குற்றச்சாட்டைக் குறித்து, கர்த்தரே தீர்மானம் செய்யவேண்டும் என்று விரும்புகிறார். இதற்காக மோசே அவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுக்களை கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுக்கிறார். தன்னையும், தன்னுடைய ஊழியத்தையும் குறித்து கர்த்தரே தீர்மானம்பண்ணவேண்டும் என்று, மோசே கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புவிக்கிறார். கர்த்தர் விரும்பினால் தன்னையும் ஆரோனையும் இந்த ஊழியத்திலிருந்து நீக்கிப்போட்டு, தமக்கு பிரியமான வேறுநபர்களை, இந்த ஊழியத்திற்கு தெரிந்துகொள்ளட்டும் என்று மோசே நினைக்கிறார். மோசே இந்தப் பிரச்சனைகளை கர்த்தருடைய சமுகத்திலே சொல்லுகிறார்.

மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, இந்தப் பிரச்சனைகளைக் குறித்து அவர் கோராகிடத்திலும், அவனுடைய கூட்டத்தாரிடத்திலும் நிதானமாகப் பேசுகிறார்.

மோசே கோராகையும் அவனுடைய எல்லாக் கூட்டத்தையும் நோக்கி, "நாளைக்குக் கர்த்தர் தம்முடையவன் இன்னான் என்றும், தம்மண்டையிலே சேரத் தாம் கட்டளையிட்ட பரிசுத்தவான் இன்னான் என்றும் காண்பிப்பார்; அப்பொழுது எவனைத்தெரிந்துகொள்வாரோ, அவனைத் தம்மிடத்தில் சேரக் கட்டளையிடுவார்" (எண் 16:5) என்றும்,

"ஒன்று செய்யுங்கள்; கோராகே, கோராகின் கூட்டத்தார்களே, நீங்கள் எல்லாரும் தூபகலசங்களை எடுத்துக்கொண்டு, நாளைக்கு அவைகளில் அக்கினி போட்டு, கர்த்தருடைய சந்நிதியில் தூபவர்க்கம் இடுங்கள்; அப்பொழுது கர்த்தர் எவனைத் தெரிந்துகொள்வாரோ, அவன் பரிசுத்தவானாயிருப்பான்; லேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்கள்" (எண் 16:6,7) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தெரிந்தெடுப்பை நிரூபிப்பதற்கு மோசே ஒரு பரீட்சையை நியமிக்கிறார். (எண் 16:6-19). சபையார் எல்லாரும் தன் பக்கம் இருப்பதினால் கோராகு இந்தப் பரீட்சையை ஏற்றுக் கொள்கிறான். ஜனங்களுடைய தெரிந்தெடுப்பைக் கர்த்தர் அங்கிகரிப்பார் என்பது கோராகுவின் எண்ணம் (எண் 16:19). ஆனால் கோராகுவின் எண்ணம் தவறானது. கர்த்தர் மனுஷருடைய சித்தத்தின் பிரகாரம் கிரியை செய்யமாட்டார். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகவும், தமது அநாதி தீர்மானத்தின் பிரகாரமாகவுமே கிரியை செய்வார்.

கோராகும், அவன் கூட்டத்தாரும் செய்ய வேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. நாளைக்கு எல்லாரும் தூபகலசங்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.
2. அவைகளில் அக்கினி போடவேண்டும். (எண் 16:7).
3. கர்த்தருடைய சந்நிதியில் தூபவர்க்கம் இடவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஊழியத்தைக் குறித்தும், ஊழியக்காரர்களைக் குறித்தும் வாக்குவாதங்களும் பிரச்சனைகளும் ஏற்படும்போது, கர்த்தரே அந்தப் பிரச்சனைகளை தீர்த்து வைக்கவேண்டும். வாக்குவாதங்களையும் பிரச்சனைகளையும் கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் எல்லோரும் கீழ்ப்படியவேண்டும்.

கோராகின் கூட்டத்தார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கலகம்பண்ணும்போது, மோசே அந்தப் பிரச்சனையை கர்த்தருடைய சமுகத்தில், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் தீர்த்து வைக்கவேண்டுமென்று விரும்புகிறார். அவர் கோராகின் கூட்டத்தாரை அழைக்கும்போது, "லேவியின் புத்திரராகிய நீங்களே" (எண் 16:7) என்றும், மறுபடியுமாக, "லேவியின் புத்திரரே" (எண் 16:8) என்றும் சொல்லுகிறார்.

கோராகின் கூட்டத்தார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி, "கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள்" என்று கேட்கிறார்கள். மோசேயோ அவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுக்களை, அவர்கள்மீதே சுமத்துகிறார். மோசே அவர்களை நோக்கி, "லேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்கள்" (எண் 16:7) என்று சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய திட்டத்தையும் சித்தத்தையும் நிறைவேற்றுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு சொன்னதைவிட அதிகமாகவோ அல்லது கர்த்தர் தங்களுக்கு சொல்லாததையோ மோசேயும் ஆரோனும் செய்யவில்லை. லேவியின் புத்திரராகிய கோராகும் அவனுடைய கூட்டத்தாருமே, கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல் மிஞ்சிப்போகிறார்கள்.

கர்த்தர் லேவியரை தமக்காக பிரித்தெடுத்திருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய வாசஸ்தலத்தில் பணிவிடை செய்யும் ஊழியத்தை செய்யவேண்டும். இது மேன்மையான ஊழியம். கர்த்தர் லேவியருக்கு கொடுத்திருக்கும் மேன்மையையும், கனத்தையும் மோசே கோராகின் கூட்டத்தாருக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லுகிறார்.

மோசே கோராகை நோக்கி, "லேவியின் புத்திரரே, கேளுங்கள்; கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவும், சபையாரின் முன்நின்று அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யவும், உங்களைத் தம்மண்டையிலே சேரப்பண்ணும்படி இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து உங்களைப் பிரித்தெடுத்ததும், அவர் உன்னையும் உன்னோடேகூட லேவியின் புத்திரராகிய உன்னுடைய எல்லாச் சகோதரரையும் சேரப்பண்ணினதும், உங்களுக்கு அற்பகாரியமோ? இப்பொழுது ஆசாரியப்பட்டத்தையும் தேடுகிறீர்களோ?" (எண் 16:8-10) என்று கேட்கிறார்.

கோராகின் கூட்டத்தார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி, "கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள்" என்று கேட்கிறார்கள். மோசேயோ அவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுக்களை, அவர்கள்மீதே சுமத்துகிறார். மோசே அவர்களை நோக்கி, "லேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்கள்" (எண் 16:7) என்று சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய திட்டத்தையும் சித்தத்தையும் நிறைவேற்றுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு சொன்னதைவிட அதிகமாகவோ அல்லது கர்த்தர் தங்களுக்கு சொல்லாததையோ மோசேயும் ஆரோனும் செய்யவில்லை. லேவியின் புத்திரராகிய கோராகும் அவனுடைய கூட்டத்தாருமே, கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல் மிஞ்சிப்போகிறார்கள்.

கர்த்தர் லேவியரை தமக்காக பிரித்தெடுத்திருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய வாசஸ்தலத்தில் பணிவிடை செய்யும் ஊழியத்தை செய்யவேண்டும். இது மேன்மையான ஊழியம். கர்த்தர் லேவியருக்கு கொடுத்திருக்கும் மேன்மையையும், கனத்தையும் மோசே கோராகின் கூட்டத்தாருக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லுகிறார்.

மோசே கோராகை நோக்கி, "லேவியின் புத்திரரே, கேளுங்கள்; கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவும், சபையாரின் முன்நின்று அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யவும், உங்களைத் தம்மண்டையிலே சேரப்பண்ணும்படி இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து உங்களைப் பிரித்தெடுத்ததும், அவர் உன்னையும் உன்னோடேகூட லேவியின் புத்திரராகிய உன்னுடைய எல்லாச் சகோதரரையும் சேரப்பண்ணினதும், உங்களுக்கு அற்பகாரியமோ? இப்பொழுது ஆசாரியப்பட்டத்தையும் தேடுகிறீர்களோ?" (எண் 16:8-10) என்று கேட்கிறார்.

மோசேக்கு எதிராகக் கலகம் பண்ணிய மூன்று முக்கியமான தலைவர்களில் கோராகு மட்டுமே லேவியன். மோசே இங்கு லேவியின் புத்திரரே என்று கூறியிருப்பது கோராகுவின் பிள்ளைகளையும், அவனுடைய நெருங்கிய உறவினர்களையும் குறிக்கலாம் (எண் 16:8,32).

தேவன் லேவியரைத் தெரிந்தெடுத்தற்கான நோக்கங்களின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரிலிருந்து லேவியரைப் பிரித்தெடுக்க வேண்டும்.
2. லேவியர்கள் கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்ய வேண்டும்.
3. சபையாரின் முன்நின்று லேவியர்கள் தாங்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யவேண்டும்.

கர்த்தர் லேவியருக்கு ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடைகளை செய்யும் ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். இது ஒரு கனமுள்ள ஊழியம். கர்த்தர் ஆரோனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் ஆசாரிய ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். அதுவும் கனமுள்ள ஊழியம்.

"இப்பொழுது ஆசாரியப்பட்டத்தையும் தேடுகிறீர்களோ" என்று மோசே கோராகிடம் கேட்கிறார். கோராகு கலகம் பண்ணியதற்கு உண்மையான நோக்கம் இதுதான். அவன் ஆசாரியப் பட்டத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பினான். ஜனங்களுடைய ஆதரவு மட்டும் ஆசாரியப் பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் போதுமானதல்ல. கர்த்தருடைய அங்கிகாரமும் வேண்டும். கோராகுவிற்கு ஜனங்களுடைய ஆதரவு இருக்கிறது. ஆனால் கர்த்தருடைய அங்கிகாரம் இல்லை. (எண் 16:2, 11,16,19).

"ஆரோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் எம்மாத்திரம்" என்று மோசே கோராகினிடத்தில் சொல்லுகிறார். கோராகு ஆரோனின் ஆசாரியப் பட்டத்தைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறான். ஆகையினால் அவன் ஆரோனையே அதிகமாக எதிர்த்து, அவனுக்கு எதிராக முறுமுறுக்கிறான். (எண் 16:10-11).

கோராகும் அவனுடைய கூட்டத்தாரும், கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் வாசஸ்தலத்தின் பணிவிடை ஊழியங்களில் திருப்தியடையவில்லை. அவர்களுக்கு தங்களுடைய ஊழியத்தின் மேன்மையும், கனமும், மகத்துவமும் புரியவில்லை. தாங்கள் செய்யும் பணிவிடை ஊழியங்களுக்கு பதிலாக, ஆசாரியர்கள் செய்கிற ஆசாரிய ஊழியத்தை செய்யவேண்டுமென்று, கோராகின் கூட்டத்தார் ஆசைப்படுகிறார்கள்.

கோராகின் கூட்டத்தாருக்கு, கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளை செய்கிற ஊழியம் அற்பகாரியமாக தெரிகிறது. மோசே அவர்களை நோக்கி, "லேவியரின் ஊழியம் உங்களுக்கு அற்பகாரியமோ" என்றும், "இப்பொழுது ஆசாரியப்பட்டத்தையும் தேடுகிறீர்களோ" என்றும் கேட்கிறார்.

கோராகின் கூட்டத்தார் மோசேக்கு விரோதமாகவும், ஆரோனுக்கு விரோதமாகவும் கூட்டங்கூடி கலகம்பண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் மெய்யாகவே கர்த்தருக்கு விரோதமாகவே கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் நியமித்திருக்கிற ஆசாரிய ஊழியத்திற்கும், வாசஸ்தலத்தின் பணிவிடை ஊழியங்களுக்கும் விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள்.

தம்முடைய வாசஸ்தலத்தில் பணிவிடை ஊழியங்களை செய்வதற்காக கர்த்தர் லேவியரை மற்ற இஸ்ரவேல் புத்திரரிலிருந்து வேறுபிரித்து அவர்களை பரிசுத்தம்பண்ணியிருக்கிறார். தம்முடைய ஊழியத்தை செய்யுமாறு கர்த்தர் லேவியரின் கைகளை சுத்திகரித்திருக்கிறார். அவர்கள் தங்களுடைய பரிசுத்தமான கைகளினால், கர்த்தருடைய வாசஸ்தலத்தில் பணிவிடைகளை செய்யவேண்டும். ஆனால் அவர்களோ மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, வாசஸ்தலத்தில் பணிவிடை செய்யவேண்டிய தங்கள் கைகளை, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக நீட்டுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் பரிசுத்தத்தையும், பணிவிடை ஊழியத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய வாசஸ்தலத்தில் தாங்கள் செய்து வரும் பணிவிடைகளை அற்பகாரியமாக நினைத்து, அதை அசட்டைசெய்து, இப்போது ஆசாரிய பட்டத்தைத் தேடுகிறார்கள். இதற்காகவே கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் மோசேக்கு விரோதமாகவும், ஆரோனுக்கு விரோதமாகவும் கூட்டங்கூடி இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு விரோதமாகக் கூட்டங்கூடியிருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கூட்டங்கூடி இருக்கிறார்கள் என்று மோசே சொல்லுகிறார். "ஆரோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் எம்மாத்திரம்" (எண் 16:11) என்று மோசே கோராகின் கூட்டத்தாரிடம் கேட்கிறார்.

கலகமும் ஜெபமும்
எண் 16:12-22

எண் 16:12. பின்பு மோசே எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் அழைத்தனுப்பினான். அவர்கள்: நாங்கள் வருகிறதில்லை;

எண் 16:13. இந்த வனாந்தரத்தில் எங்களைக் கொன்றுபோடும்படி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து எங்களைக் கொண்டு வந்தது அற்பகாரியமோ, எங்கள்மேல் துரைத்தனமும் பண்ணப்பார்க்கிறாயோ?

எண் 16:14. மேலும் நீ எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குக் கொண்டுவந்ததும் இல்லை, எங்களுக்கு வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் சுதந்தரமாகக் கொடுத்ததும் இல்லை; இந்த மனிதருடைய கண்களைப் பிடுங்கப்பார்க்கிறாயோ? நாங்கள் வருகிறதில்லை என்றார்கள்.

எண் 16:15. அப்பொழுது மோசேக்குக் கடுங்கோபம் மூண்டது; அவன் கர்த்தரை நோக்கி: அவர்கள் செலுத்துங் காணிக்கையை அங்கிகரியாதிருப்பீராக; நான் அவர்களிடத்தில் ஒரு கழுதையை முதலாய் எடுத்துக்கொள்ளவில்லை; அவர்களில் ஒருவனுக்கும் யாதொரு பொல்லாப்பு செய்யவும் இல்லை என்றான்.

எண் 16:16. பின்பு மோசே கோராகை நோக்கி: நீயும் உன் கூட்டத்தார் யாவரும் நாளைக்குக் கர்த்தருடைய சந்நிதியில் வாருங்கள்; நீயும் அவர்களும் ஆரோனும் வந்திருங்கள்.

எண் 16:17. உங்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் தூபவர்க்கத்தைப் போட்டு, தங்கள் தங்கள் தூபகலசங்களாகிய இருநூற்று ஐம்பது தூபகலசங்களையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரவேண்டும்; நீயும் ஆரோனும் தன் தன் தூபகலசத்தைக் கொண்டுவாருங்கள் என்றான்.

எண் 16:18. அப்படியே அவரவர் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும் போட்டு,ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக வந்து நின்றார்கள்; மோசேயும் ஆரோனும் அங்கே நின்றார்கள்.

எண் 16:19. அவர்களுக்கு விரோதமாகக் கோராகு சபையையெல்லாம் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாகக் கூடிவரும்படி செய்தான்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்பட்டது.

எண் 16:20. கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி:

எண் 16:21. இந்தச் சபையை விட்டுப் பிரிந்து போங்கள்; ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார்.

எண் 16:22. அப்பொழுது அவர்கள் முகங்குப்புற விழுந்து: தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ என்றார்கள்.

இதுவரையிலும் கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். மோசே அவர்களுக்காக கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணிவிட்டு, அவர்களுடைய பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு ஆலோசனைகளை சொல்லுகிறார். அவர்களோடுகூட ரூபன் வம்சத்தாராகிய தாத்தானும், அபிராமும் இருக்கிறார்கள்.

கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் லேவியர்கள். அவர்கள் ஆரோனைப்போல ஆசாரிய ஊழியம் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். தாத்தானும் அபிராமும் லேவியர்களல்ல. அவர்கள் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ஆரோன்மீது பிரச்சனை எதுவுமில்லை. இவர்களால் ஆசாரிய ஊழியத்திற்கு வரவும் முடியாது.

தாத்தான், அபிராம் ஆகியோர் யூதாகோத்திரத்தாருக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள். இவர்கள் கோராகோடும், அவனுடைய கூட்டத்தாரோடும் சேர்ந்துகொண்டு மோசேக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். மோசே இப்போது தாத்தான், அபிராம் ஆகியோரின் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு முயற்சி பண்ணுகிறார்.

மோசே எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் அழைத்தனுப்புகிறார். அவர்கள் தன்னிடத்தில் வந்து, தங்களுடைய பிரச்சனைகளை எடுத்துச் சொல்லவேண்டுமென்று மோசே எதிர்பார்க்கிறார். ஆனால் அவர்களோ மோசேயின் வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. "நாங்கள் வருகிறதில்லை" என்று மோசேக்கு மறுப்பு செய்தி சொல்லியனுப்புகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாமல் போனதற்கு அவர்களுடைய அவிசுவாசமே காரணம். தங்களுடைய அவிசுவாசத்தினால் அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் வாசல்களை மூடிப்போடுகிறார்கள். ஆனாலும் தாங்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்க முடியாமல் போனதற்கு மோசேயே காரணம் என்று, அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

மோசே தாத்தானையும் அபிராமையும் தன்னிடத்தில் வருமாறு அழைத்தனுப்புகிறார். ஆனால் அவர்களோ மோசேக்கு விரோதமாக பொய்யான குற்றச்சாட்டுக்களை சொல்லி, "நாங்கள் வருகிறதில்லை" என்று மோசேயினிடத்தில் போக மறுத்துவிடுகிறார்கள். மோசே இஸ்ரவேல் புத்திரருடைய கண்களை பிடுங்கப் பார்க்கிறார் என்றும் அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

தாத்தான் அபிராம் ஆகியோரின் வார்த்தைகளை கேட்கும்போது, மோசேக்கு கடுங்கோபம் மூளுகிறது. மோசே அவர்களைப்பற்றி கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். மோசே கர்த்தரை நோக்கி, "அவர்கள் செலுத்துங் காணிக்கையை அங்கிகரியாதிருப்பீராக; நான் அவர்களிடத்தில் ஒரு கழுதையை முதலாய் எடுத்துக்கொள்ளவில்லை; அவர்களில் ஒருவனுக்கும் யாதொரு பொல்லாப்பு செய்யவும் இல்லை" (எண் 16:15) என்று சொல்லுகிறார்.

"அவர்கள் செலுத்துங் காணிக்கையை அங்கிகரியாதிருப்பீராக" என்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். மோசே தன்னுடைய கோபத்தில் கர்த்தரிடம் இவ்வாறு விண்ணப்பம் பண்ணுகிறார். கர்த்தர் தன்னோடும், ஆரோனோடும் இருக்க வேண்டுமென்றும், வெகுஜனங்களுடைய எண்ணத்திற்குச் செவிகொடுக்கக்கூடாது என்றும் மோசே கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணுகிறார் (எண் 16:15,19).

மோசே கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளவராயிருக்கிறார். மோசேயின் உண்மைக்கும், நேர்மைக்கும், கர்த்தரே சாட்சியாயிருக்கிறார்.

மோசே அவர்களிடத்திலிருந்து அநியாயமாக எதையும் எடுத்துக்கொள்ளவில்லை. அவர் இஸ்ரவேல் புத்திரரில் யாருக்கும் எந்தப் பொல்லாப்பும் செய்யவில்லை. ஆனால் மோசே இஸ்ரவேல் ஜனத்தாருடைய கண்களைப் பிடுங்கப் பார்க்கிறார் என்று தாத்தானும் அபிராமும் அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காக இதுவரையிலும் உண்மையாய் ஊழியம் செய்து வந்திருக்கிறார். அவருடைய நல்ல ஊழியத்திற்கு இஸ்ரவேல் புத்திரர் யாரும், இதுவரையிலும் சம்பளம் எதுவும் கொடுக்கவில்லை. மோசே எத்திரோவின் ஆடுகளை மேய்த்தபோது, அவருக்கு அதிகமாய் சம்பளம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது மோசே, இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராயிருக்கிறார். ஒரு ராஜாவைப்போல மோசே அவர்களை ஆளுகை செய்கிறார். ஆனால் எத்திரோவின் ஆடுகளை மேய்த்தபோது மோசேக்கு கிடைத்த வருமானத்தைவிட, இஸ்ரவேல் புத்திரரை இந்த வனாந்தரத்திலே வழிநடத்துவதினால் கிடைக்கிற வருமானம் மிகவும் குறைவாயிருக்கிறது.

தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு அதிக பணம் வேண்டும் என்று ஆசைப்பட்டு மோசே யாரிடத்திலும் ஒரு கழுதையைக்கூட எடுத்துக்கொள்ளவில்லை. தன்னுடைய சுயநலத்திற்காக மோசே யாருக்கும் யாதொரு பொல்லாப்பும் செய்யவில்லை. தாத்தானும் அபிராமும் தனக்கு விரோதமாகக் குற்றம் சொன்னாலும், கர்த்தர் தன்னைப்பற்றி நன்றாய் அறிந்திருக்கிறார் என்று மோசே முழுநிச்சயமாய் நம்புகிறார்.

தாத்தானும் அபிராமும் தனக்கு விரோதமாகக் குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது மோசேக்கு அவர்கள்மீது கடுங்கோபம் மூளுகிறது. மோசே தன்னுடைய மனவேதனையையும், கோபத்தையும் கர்த்தரிடத்தில் மறைக்காமல் சொல்லுகிறார். கர்த்தர் தாமே, தனக்கு விரோதமாகக் குற்றம் சொல்லுகிறவர்களை தண்டிக்கவேண்டுமென்று மோசே எதிர்பார்க்கிறார். "அவர்கள் செலுத்தும் காணிக்கையை அங்கீகரியாதிருப்பீராக" என்று மோசே கர்த்தருடைய சமுகத்தில் தாத்தானுக்கும் அபிராமுக்கும் விரோதமாக விண்ணப்பம்பண்ணுகிறார்.

மோசே தாத்தானையும் அபிராமையும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு, இப்போது கோராகின் பிரச்சனையை தீர்த்து வைக்க வருகிறார்.

மோசே கோராகை நோக்கி, "நீயும் உன் கூட்டத்தார் யாவரும் நாளைக்குக் கர்த்தருடைய சந்நிதியில் வாருங்கள்; நீயும் அவர்களும் ஆரோனும் வந்திருங்கள். உங்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் தூபவர்க்கத்தைப் போட்டு, தங்கள் தங்கள் தூபகலசங்களாகிய இருநூற்று ஐம்பது தூபகலசங்களையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரவேண்டும்; நீயும் ஆரோனும் தன் தன் தூபகலசத்தைக் கொண்டுவாருங்கள்" (எண் 16:16,17) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய சந்நிதியில் அதிகாலை வேளையில், கர்த்தருக்கு தூபபலிகள் செலுத்தப்படும். கர்த்தருக்கு தூபம் காட்டுவதற்காக கோராகும், அவனுடைய கூட்டத்தாரும், ஆரோனும் கர்த்தருடைய சந்நிதிக்கு வரவேண்டும் என்று மோசே சொல்லுகிறார். அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய சந்நிதியில் தங்கள் தூபகலசங்களை எடுத்து வரவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு தூபம் காட்டவேண்டும். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, கோராகையும் அவனுடைய கூட்டத்தாரையும், ஆரோனையும் நியாயந்தீர்ப்பார்.

மோசேயின் வார்த்தைகளை கோராகு ஏற்றுக்கொள்கிறான். மோசே சொன்ன பிரகாரமாக தானும் தன்னுடைய கூட்டத்தார் யாவரும், மறுநாள் காலையில் கர்த்தருடைய சந்நிதியில் வருவதற்கு சம்மதிக்கிறான். மோசே சொன்ன பிரகாரமாகவே, கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் தங்கள் தூபகலசங்களை எடுத்துக்கொண்டு அவைகளில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும் போட்டு, மறுநாள் காலையில் கர்த்தருடைய சந்நிதியில் வருவதற்கு ஆயத்தமாகிறார்கள். கோராகு தன்னுடைய தூபகலசத்தை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரும்போது, ஆரோனும் தன்னுடைய தூபகலசத்தை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வரவேண்டும்.

அவரவர் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும் போட்டு, ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக வந்து நிற்கிறார்கள்; மோசேயும் ஆரோனும் அங்கே நிற்கிறார்கள் (எண் 16:18).

மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராகக் கலகம் பண்ணியவர்கள் எல்லோரும் அவரவர் தங்கள் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும் போட்டு,ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக வந்து நிற்கிறார்கள். மிகவும் தைரியமாக இருக்கிறார்கள். சபையார் எல்லோரும் ஒருமனப்பட்டு இருப்பதினால் தங்கள் பக்கத்தில் நியாயம் இருப்பதாகக் கருதுகிறார்கள் (எண் 16:18,19).

தாங்கள் வெகுஜனமாக இருப்பதினால் கர்த்தர் தங்களை அங்கிகரிப்பார். தங்களுக்கு விரோதமாக ஒன்றும் செய்ய மாட்டார் என்பது அவர்களுடைய எண்ணம். ஆனால் கர்த்தரோ அவர்களுக்கு மறுபடியும் ஒரு பாடத்தைக் கற்றுத்தர சித்தம் கொள்கிறார். வெகுஜனம் என்பது கர்த்தருடைய பார்வைக்கு ஒன்றுமல்ல. மனுஷருடைய பிரபல்யம் கர்த்தருக்கு அற்பமான காரியம். கர்த்தருடைய கற்பனைகளுக்கு ஜனங்கள் கீழ்ப்படிய வேண்டும். அவருடைய சித்தம் நிறைவேற வேண்டும். இதற்கு எதிராக இருக்கிறவர்கள் எத்தனை பேராக இருந்தாலும், கர்த்தர் அதைப் பற்றிக் கவலை கொள்ளப்போவதில்லை. கர்த்தருடைய சித்தத்திற்கு எதிர்த்து நின்றதால் கோராகுவின் கூட்டத்தார் மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. அது இஸ்ரவேல் ஜனத்தாரின் நன்மைக்காகவும், இனிமேல் வரப்போகும் சந்ததியாரின் நன்மைக்காகவுமே வருகிறது.

கோராகின் கூட்டத்திலே இருநூற்று ஐம்பது பேர் இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் சபைக்கு தலைவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்திற்கு தலைவராயிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்தில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குடும்ப பலிபீடம் இருந்திருக்கும் என்றும், அதில் தூபம் காட்டுவதற்காக, குடும்பத்தின் தலைவர்களிடத்தில் தூபகலசங்கள் இருந்திருக்கும் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

அவர்கள் எல்லோரும் மோசே சொன்ன பிரகாரம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக வந்து நிற்கிறார்கள். அவர்களுடைய தூபகலசங்களில் அக்கினியும், தூபவர்க்கமும் போடப்பட்டிருக்கிறது. கர்த்தரே அவர்களை நியாயந்தீர்க்கிற நியாயாதிபதியாயிருக்கிறார்.

கர்த்தர் ஆரோனையும் அவருடைய குடும்பத்தாரையும் ஆசாரிய ஊழியத்திற்கு நியமித்திருக்கிறார். கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தில் பணிவிடை வேலைகளை செய்யவேண்டும். ஆனால் அவர்களோ ஆரோனைப்போல தாங்களும் ஆசாரிய ஊழியம் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இந்தப் பிரச்சனையை கர்த்தர் தீர்த்து வைக்கப்போகிறார்.

கர்த்தருடைய பரிசுத்த சந்நிதியில் கோராகும், அவனுடைய கூட்டத்தார் 250 பேரும், ஆரோனும் தங்கள் தூபகலசங்களோடு நிற்கிறார்கள். கர்த்தர் ஆரோனுடைய தூபகலசத்தை மாத்திரம் அங்கீகரித்தால், அவரும் அவருடைய குடும்பத்தாரும் மாத்திரம் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யவேண்டும். கர்த்தர் எல்லோருடைய தூபகலசங்களையும் அங்கீகரித்தால், அவர்கள் எல்லோரும் ஆரோனைப்போல ஆசாரிய ஊழியம் செய்யலாம்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எதுவாயிருக்கும் என்று ஒருவருக்கும் தெரியவில்லை. அவர்கள் எல்லோரும் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக வந்து நிற்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் தூபகலசங்கள் இருக்கிறது. அந்தக் கலசங்களில் அக்கினியும், தூபவர்க்கமும் போடப்பட்டிருக்கிறது.

மோசே கோராகை நோக்கி, "நீயும் உன் கூட்டத்தார் யாவரும் நாளைக்கு கர்த்தருடைய சந்நிதியில் வாருங்கள்" என்று சொல்லியிருந்தார். கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் மாத்திரம் கர்த்தருடைய சந்நிதிக்கு வந்தால் போதுமானது. ஆனால் கோராகோ இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக கூடிவரும்படி செய்திருக்கிறான்.

அவர்கள் எல்லோரும், கோராகையும் அவனுடைய கூட்டத்தாரையும்போல, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூடிவந்திருக்கிறார்கள். அப்பொழுது கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்படுகிறது (எண் 16:19).

வனாந்தரத்தில் கர்த்தருடைய மகிமை காணப்பட்ட சம்பவங்களின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் போஜனத்திற்காக முறுமுறுத்தபோது. (யாத் 16:10)
2. பலிபீடம் பிரதிஷ்டை பண்ணப்பட்ட போது. (லேவி 9:23)
3. இஸ்ரவேல் புத்திரர் காதேசில் கலகம் பண்ணிய போது. (எண் 14:10)
4. இஸ்ரவேல் புத்திரர் கோராகோடு சேர்ந்து கலகம் பண்ணிய போது. (எண் 16:19)
5. 250 பிரபுக்கள் அழிக்கப்பட்டதினால் ஜனங்கள் கலகம் பண்ணியபோது. (எண் 16:42)
6. தண்ணீருக்காக ஜனங்கள் கலகம் பண்ணிய போது. (எண் 20:6)
7. மோசே மரிப்பதற்கு ஆயத்தமாக இருந்தபோது. (உபா 31:15)

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. நியாயாதிபதி தம்முடைய நியாயாசனத்தில் அமர்ந்திருக்கிறார். கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்படுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் விரோதமாக தம்முடைய நீதியான தீர்ப்பைச் சொல்லப்போகிறார். அதற்கு அடையாளமாக கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்படுகிறது.

ஆரோனை ஆசாரிய ஊழியத்திற்காக முதன்முதலாக பிரதிஷ்டைபண்ணியபோது, கர்த்தருடைய மகிமை இதுபோல சபைக்கெல்லாம் காணப்பட்டது.

"பின்பு மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடாரத்துக்குள் பிரவேசித்து, வெளியே வந்து, ஜனங்களை ஆசீர்வதித்தார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை சகல ஜனங்களுக்கும் காணப்பட்டது" (லேவி 9:23).

ஆரோனுடைய ஆசாரிய பட்டத்தை உறுதிபண்ணுவதற்காக, ஏற்கெனவே காணப்பட்டதுபோல, கர்த்தருடைய மகிமை, மறுபடியுமாக இப்போது காணப்படுகிறது. ஆரோனுடைய ஆசாரிய பட்டத்திற்கு விரோதமாக கலகம்பண்ணுகிறவர்களை எச்சரிப்பதற்காகவும், ஏற்கெனவே காணப்பட்ட கர்த்தருடைய மகிமை இப்போது மறுபடியுமாக காணப்படுகிறது.

கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்படும்போது, கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசுகிறார். "இந்தச் சபையை விட்டுப் பிரிந்து போங்கள்; ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன்" (எண் 16:20,21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோசேயும், ஆரோனும் சபையாரை விட்டுப் பிரிந்துபோவதற்குப் பதிலாகக் கர்த்தருடைய சமுகத்தில் முகங்குப்புற விழுந்து, இஸ்ரவேல் புத்திரர் எல்லோர்மீதும் இரக்கம் காண்பிக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுகிறார்கள் (எண் 16:22). கொஞ்ச நேரத்திற்கு முன்பு, மோசே இஸ்ரவேல் புத்திரர்மீது கடுங்கோபம் கொண்டிருந்தார். (எண் 16:15) தேவனுடைய கோபாக்கினை இஸ்ரவேல் புத்திரர்மீது வந்தபோதோ மோசே தன் கோபத்தையெல்லாம் மறந்துவிட்டு, தன்னுடைய ஜனங்களைக் கர்த்தருடைய கோபாக்கினையிலிருந்து இரட்சிப்பதற்குத் தரையில் முகங்குப்புற விழுந்து, கெஞ்சிப் பிரார்த்திக்கிறார் (எண் 16:22).

மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூடியிருக்கிற எல்லா ஜனங்களையும் ஒரு நிமிஷத்தில் அதம்பண்ணவேண்டும் என்பது கர்த்தருடைய தீர்மானமாயிருக்கிறது. மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசுகிறார்கள்.

மோசேயும் ஆரோனும் முகங்குப்புற விழுந்து, "தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ" (எண் 16:22) என்று மிகுந்த பணிவோடு கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்கள். அவர்கள் இருவரும் கர்த்தருக்கு முன்பாக சாஷ்டாங்கமாய் விழுந்து, கர்த்தரைப் பணிந்துகொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் கெஞ்சி பிரார்த்தனை பண்ணுகிறார்கள்.

"மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே" என்னும் வாக்கியம் இரண்டு முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எண் 16:22; எண் 27:16). எல்லா ஜனங்களும் தங்களுடைய ஜீவியத்தின் நடத்தைக்காகக் கர்த்தருக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். (யோபு 12:10; 2பேதுரு 2:9). நாம் எல்லோருமே கர்த்தருடைய கரங்களில் இருக்கிறோம். நாம் செய்த நன்மை தீமைகளுக்குக் கர்த்தரிடத்தில் கணக்கொப்புவிக்கவேண்டும். நீதிமான் மரிக்கும்போது, பரலோகத்திற்குப் போவான். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11) துன்மார்க்கன் மரிக்கும்போது நரகத்திற்குப் போவான். (ஏசா 14:9; லூக்கா 16:19-31; வெளி 20:11-15).

"சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங் கொள்வீரோ" என்று மோசே கர்த்தரிடத்தில் கேட்கிறார். மோசே ஒருசில குறிப்பிட்ட ஜனங்கள்மீது மட்டுமே கோபமாக இருக்கிறார். (எண் 16:5) ஆனால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோர் மேலும் கோபமாக இருக்கிறார். (எண் 16:21-22).

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கலகம்பண்ணினார்கள். அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, மோசேயையும் ஆரோனையும் தனியாகப் பிரித்து, அவர்கள் இருவருக்கும் விரோதமாக கூட்டங்கூடினார்கள். இஸ்ரவேல் சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் ஆதரவாயிராமல், அவர்களுக்கு விரோதமாக தீங்கு நினைக்கிறார்கள்.

ஆனாலும் மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் சபையாருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்கள். இது கர்த்தர் அவர்களுக்கு கொடுத்திருக்கிற ஊழியம். அவர்கள் இருவரும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நல்ல மேய்ப்பர்களாக ஊழியம் செய்கிறார்கள். மோசேயும் ஆரோனும் திறப்பின் வாசலிலே நின்று இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் சபையாராகிய மந்தை மிகப்பெரிய ஆபத்திலிருக்கிறது என்பதை மேய்ப்பர்களாகிய மோசேயும் ஆரோனும் புரிந்துகொண்டு, அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் கீழ்ப்படியவில்லை. அவர்களுக்கு விரோதமாகக் கூட்டங்கூடி கலகம்பண்ணினார்கள். மோசே தாத்தானையும் அபிராமையும் அழைத்தனுப்பியபோது, அவர்கள் இருவரும் மோசேயினிடத்தில் வருவதற்கு மறுத்துவிட்டார்கள். ஆனாலும் மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் சபையாருக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசுகிறார்கள். இவர்கள் இருவரும் நல்ல ஊழியக்காரர்களுக்கு முன்மாதிரியாகவும், எடுத்துக்காட்டாகவும் இருக்கிறார்கள்.

மற்றவர்கள் நமக்கு செய்யவேண்டிய கடமைகளை செய்யத்தவறினாலும், நாம் அவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளை தவறாமல் செய்யவேண்டும். மற்றவர்கள் நமக்கு நன்மை செய்யாவிட்டாலும், நாம் அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். மற்றவர்கள் நமக்காக ஜெபம்பண்ணா விட்டாலும் நாம் அவர்களுக்காக ஜெபம்பண்ணவேண்டும். மற்றவர்கள் நம்மீது அன்புகூராவிட்டாலும், நாம் மற்றவர்கள்மீது அன்புகூரவேண்டும். மற்றவர்கள் நம்முடைய நன்மையை நாடாவிட்டாலும், நாம் மற்றவர்களுடைய நன்மையை நாடவேண்டும்.

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்கள். "ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ" என்று அவர்கள் இருவரும் கர்த்தரிடத்தில் கேட்கிறார்கள்.

இவர்கள் இருவரும் பரிந்து பேசுவது, ஆபிரகாம் சோதோமுக்காக பரிந்து பேசுவதுபோல இருக்கிறது. "அப்பொழுது ஆபிரகாம் சமீபமாய்ச் சேர்ந்து: துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ?" (ஆதி 18:23) என்று ஜெபம்பண்ணினார்.

ஆபிரகாம் "துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ" என்று ஜெபம்பண்ணியதுபோல, மோசேயும் ஆரோனும் இங்கு, "ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ" என்று ஜெபம்பண்ணுகிறார்கள்.

கலகக்காரரின் அழிவு எண் 16:23-34

எண் 16:23. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 16:24. கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போங்கள் என்று சபையாருக்குச் சொல் என்றார்.

எண் 16:25. உடனே மோசே எழுந்திருந்து, தாத்தான் அபிராம் என்பவர்களிடத்தில் போனான்; இஸ்ரவேலின் மூப்பரும் அவனைப் பின்சென்று போனார்கள்.

எண் 16:26. அவன் சபையாரை நோக்கி: இந்தத் துஷ்டமனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களை விட்டு விலகி, அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள் என்றான்.

எண் 16:27. அப்படியே அவர்கள் கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போனார்கள்; தாத்தானும் அபிராமும் வெளியே வந்து, தங்கள் பெண்ஜாதிகள் பிள்ளைகள் குழந்தைகளோடும் தங்கள் கூடாரவாசலிலே நின்றார்கள்.

எண் 16:28. அப்பொழுது மோசே: இந்தக் கிரியைகளையெல்லாம் செய்கிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினார் என்றும், அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லை என்றும், நீங்கள் எதினாலே அறிவீர்களென்றால்,

எண் 16:29. சகல மனிதரும் சாகிறபடி இவர்கள் செத்து, சகல மனிதருக்கும் நேரிடுகிறதுபோல இவர்களுக்கும் நேரிட்டால், கர்த்தர் என்னை அனுப்பவில்லை என்று அறிவீர்கள்.

எண் 16:30. கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிடச்செய்வதால், பூமி தன் வாயைத் திறந்து, இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப் போட்டதேயானால், இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் என்றான்.

எண் 16:31. அவன் இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லி முடித்தவுடனே, அவர்கள் நின்றிருந்த நிலம் பிளந்தது;

எண் 16:32. பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது.

எண் 16:33. அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள்; பூமி அவர்களை மூடிக்கொண்டது; இப்படிச் சபையின் நடுவிலிருந்து அழிந்துபோனார்கள்.

எண் 16:34. அவர்களை சுற்றிலும் இருந்த இஸ்ரவேலர் யாவரும் அவர்கள் கூக்குரலைக் கேட்டு, பூமி நம்மையும் விழுங்கிப்போடும் என்று சொல்லி ஓடினார்கள்.

தாத்தானும் அபிராமும் மோசேக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் ஆரோனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இவர்கள் எல்லோரும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் அழிந்துபோகிறார்கள். அத்தோடு கலகமும் முடிந்து போகிறது.

தாத்தானும் அபிராமும் தங்களுடைய குடும்பத்தார் மத்தியிலே மிகவும் விஸ்தாரமான கூடாரங்களைப் போட்டிருக்கிறார்கள் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அவர்கள் தங்களுடைய கூடாரங்களில், தங்கள் கோத்திரப்பிதாக்களையும், பிரபுக்களையும் கூடிவரச்செய்து ஆலோசனை செய்வது வழக்கம். இவர்களுடைய கூடாரத்தில் மோசேக்கு விரோதமான கொடி ஏற்றப்பட்டிருக்கும்.

இந்தக் கூடாரம் "தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலம்" என்று அழைக்கப்படுகிறது (எண் 16:24,27).

கலகக்காரருடைய வாசஸ்தலத்தைவிட்டு விலகிப்போகுமாறு இஸ்ரவேல் சபையாருக்கு பொதுவான எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது. கர்த்தர் மோசேயை நோக்கி, "கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போங்கள் என்று சபையாருக்குச் சொல்" (எண் 16:23,24) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சபையாரை எச்சரிக்குமாறு கர்த்தரே மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். மோசே கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் புத்திரருக்காக பரிந்து பேசினார். மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சமுகத்திலே, "ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார்மேலும் கடுங்கோபங்கொள்வீரோ" (எண் 16:22) என்று ஜெபம்பண்ணினார்கள்.

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். மோசேயும் ஆரோனும் கேட்டுக்கொண்ட பிரகாரமாக, பாவம் செய்யாதிருக்கிற சபையாரை கர்த்தர் அழிவுக்கு தப்பப்பண்ணுகிறார். இஸ்ரவேல் சபையார் எல்லோரையும், கர்த்தர் தம்முடைய கோபத்தினால் அழித்துப்போடக்கூடாது என்பது மோசேயின் பணிவான விண்ணப்பம். கர்த்தரும் இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் அழிக்கவில்லை.

கர்த்தர் பாவம் செய்யாதிருக்கிற இஸ்ரவேல் சபையாரை இரட்சிக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தி, நம்முடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தர் அற்புதங்களையும் அதிசயங்களையும் நடப்பித்து நம்மை இரட்சிப்பதாக எங்கும் வாக்குப்பண்ணவில்லை. நம்முடைய ஜீவியத்தில் கர்த்தர் நடத்தும் பொதுவான காரியங்களை, நம்முடைய இரட்சிப்புக்கு ஏதுவாக நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பாவம் செய்யாதிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கவேண்டுமென்று கர்த்தர் தீர்மானம்பண்ணுகிறார். ஆனால் அவர்களை இரட்சிப்பதற்கு கர்த்தர் அற்புதம் எதையும் செய்யவில்லை. அவர்கள் கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தைவிட்டு விலகிப்போகவேண்டும். துன்மார்க்கரை விட்டு விலகிப்போனால், துன்மார்க்கருக்கு வரும் அழிவிலிருந்து இவர்கள் தப்பித்துக்கொள்வார்கள். பாவம் செய்யாதிருக்கிறவர்கள் துன்மார்க்கரைவிட்டு விலகிப்போகாமல், தப்பித்துக்கொள்வதற்கு வேறு உபாயம் எதுவும் சொல்லப்படவில்லை.

மோசே இஸ்ரவேல் சபையாருக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசி ஜெபம்பண்ணினார். சபையாருக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணின மோசே, கர்த்தர் அவர்களுக்கு சொல்லுகிற செய்தியையும் பிரசங்கம்பண்ணவேண்டும். மோசே அவர்களுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையையும் சொல்லவேண்டும். அவர்கள் அழிவிலிருந்து தப்பிப்பதற்காக, கர்த்தர் நியமித்திருக்கிற உபாயத்தையும் மோசே அவர்களுக்கு அறிவிக்கவேண்டும்.

மோசே எழுந்திருந்து, தாத்தான் அபிராம் என்பவர்களிடத்தில் போகிறார்; இஸ்ரவேலின் மூப்பரும் மோசேயைப் பின்சென்று போகிறார்கள் (எண் 16:25).

பரிசுத்த ஆவியானவர் வந்து தங்கியிருந்த இஸ்ரவேலின் மூப்பர்கள் கலகம் பண்ணாமல், மோசேயோடு கூடவே இருக்கிறார்கள். (எண் 11:16-17,25)

இம்மூவருடைய வாசஸ்தலங்களும் அருகருகே இருந்திருக்க வேண்டும். கோகாத் புத்திரரும், ரூபன் புத்திரரும் ஆசரிப்புக் கூடாரத்தின் தென் திசையில் பாளயமிறங்கியிருக்கிறார்கள் (எண் 2:10; எண் 3:29). இவர்கள் தங்கள் பெண்ஜாதிகள் பிள்ளைகள் குழந்தைகளோடும் தங்கள் கூடாரவாசலிலே நின்றபோது, அவர்கள் நின்றிருந்த நிலம் பிளந்தது. பூமி தன் வாயைத் திறந்து அவர்களையும், அவர்களுக்கு உண்டான சகல பொருட்களையும் விழுங்கிப்போடுகிறது. (எண் 16:27-34).

மோசே ஏற்கெனவே தாத்தானையும் அபிராமையும் தன்னிடத்தில் வருமாறு அழைத்தனுப்பினார். ஆனால் அவர்களோ "நாங்கள் வருகிறதில்லை" (எண் 16:12) என்று சொல்லி, மோசேயின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார்கள்.

மோசே ஆரோனை ஆசரிப்புக்கூடாரத்திலே விட்டுவிட்டு, தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்திற்குப்போகிறார். அவர்கள் தன்னிடத்திற்கு வராவிட்டாலும், மோசே அவர்களைத் தேடிப்போகிறார். இது மோசேயின் பணிவான குணமாகும். தான் இஸ்ரவேல் சபையாருக்கு தலைவராகயிருப்பதினால், ஜனங்கள் தன்னை வந்து பார்க்கவேண்டும் என்றும், தான் அவர்கள் இருக்கும் இடத்திற்குப்போய் அவர்களை பார்க்கமாட்டேன் என்றும், மோசே இறுமாப்பாகவோ, ஆணவத்தோடோ இருக்கவில்லை. மோசே ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து உடனே எழுந்திருந்து கலகக்காரருடைய கூடாரத்திற்குப் புறப்பட்டுப்போகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பிக்கவேண்டுமென்றால், அவர்கள் கலகக்காரருடைய வாசஸ்தலத்தைவிட்டு விலகிப்போகவேண்டும். கலகக்காரர்மீது இன்னும் அழிவு வரவில்லை. ஆகையினால் அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு இன்னும் வாய்ப்புள்ளது. மோசே அந்த வாய்ப்பை பயன்படுத்தி, அவர்களையும் இரட்சிப்புக்குள் வழிநடத்த விரும்புகிறார். மோசே கலகக்காரருடைய கூடாரத்திற்குப்போகிறார். அவர்களும் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பிக்கவேண்டுமானால், அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தைவிட்டு விலகிப்போய்விட வேண்டுமென்று, அவர்களையும் எச்சரிக்கப்போகிறார்.

கர்த்தருடைய இரட்சிப்பின் நற்செய்தி இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் அறிவிக்கப்படுகிறது. கலகக்காரருடைய வாசஸ்தலத்தைவிட்டு விலகிப்போனால், அவர்கள் அழிவுக்கு தப்பிப்பார்கள் என்பது கர்த்தருடைய செய்தி. கர்த்தர் சொல்லுகிற விடுதலையின் நற்செய்தியை மோசே இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் சொல்ல விரும்புகிறார். மனுஷருடைய சுபாவங்கள் எப்படிப்பட்டதாகயிருந்தாலும், இரட்சிப்பின் நற்செய்தி எல்லோருக்கும் அறிவிக்கப்படவேண்டும்.

மோசேயால் கர்த்தர் சொன்ன விடுதலையின் செய்தியை இஸ்ரவேல் சபையாருக்கு அறிவிக்க மாத்திரமே முடியும். இஸ்ரவேல் புத்திரர் அழிவுக்கு தப்பிக்கவேண்டுமென்றால், அவர்கள்தான் கலகக்காரரின் வாசஸ்தலத்தைவிட்டு விலகிப்போகவேண்டும். தங்களுடைய இரட்சிப்புக்கு என்ன செய்யவேண்டுமோ அதை ஜனங்களே செய்துகொள்ளவேண்டும்.

மோசே சபையாரை நோக்கி, "இந்தத் துஷ்டமனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களை விட்டு விலகி, அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள்" (எண் 16:26) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சபையார், மோசே சொன்ன பிரகாரம், கோராகு தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போகிறார்கள்; கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோரோடு கலகம் பண்ணிய தாத்தானும் அபிராமும் வெளியே வந்து, தங்கள் பெண்ஜாதிகள் பிள்ளைகள் குழந்தைகளோடும் தங்கள் கூடாரவாசலிலே நிற்கிறார்கள் (எண் 16:27). இவர்கள் தங்கள் வாசஸ்தலத்தைவிட்டு விலகிப்போகவில்லை.

பெண்ஜாதிகளும், பிள்ளைகளும் மட்டுமே அழிந்து போனார்கள். கோராகுவின் புத்திரர்கள் தங்கள் தகப்பனோடு சேர்ந்து கலகம் பண்ணவில்லை. ஆகையினால் அவர்கள் மரித்துப் போகவில்லை (எண் 26:11) என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கலகக்காரர்கள் மோசேயின் வார்த்தைக்கு கீழ்ப்படியக்கூடாது என்று தீர்மானமாயிருக்கிறார்கள். மோசே தங்களுக்கு இரட்சிப்பின் செய்தியை சொன்னாலும், அந்தச்செய்தி மோசேயின் மூலமாக அறிவிக்கப்பட்டதினால், கலகக்காரர்கள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுத்து, தங்கள் கூடார வாசலிலே நிற்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார். கலகக்காரருடைய வாசஸ்தலத்தைவிட்டு விலகிப்போகவேண்டும் என்பதே கர்த்தர் நமக்கு சொல்லும் கிருபையின் செய்தி. கர்த்தர் நம்மீது கிருபையும் இரக்கமும் உள்ளவராக யிருப்பதினால், நமக்கு தம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய நீதியினால் கலகக்காரர்களை, அவர்களுடைய இருதயங்களின் கடினத்திற்கும், கலகக்குணத்திற்கும் ஒப்புக் கொடுத்துவிடுகிறார். மோசே அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை எச்சரித்து சொன்ன பின்பு, கலகக்காரர்கள் தங்கள் குடும்பத்தாரோடு தங்கள் கூடார வாசலிலே நிற்கிறார்கள். தங்களால் கர்த்தருக்கு எதிர்த்து நிற்க முடியும் என்று இவர்கள் துணிகரமாய் நிற்கிறார்கள். தங்களை அழிப்பதற்கு கர்த்தருக்கு வல்லமையில்லை என்றும், கர்த்தருடைய கோபத்தை சந்திப்பதற்கு தங்களிடத்தில் அதிக வல்லமையுள்ளது என்றும் இவர்கள் தங்களைப்பற்றிபெருமையாய்நினைக்கிறார்கள். கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். எந்த மனுஷனாலும் கர்த்தருடைய வல்லமைக்கு விரோதமாக எதிர்த்து நிற்கமுடியாது.

மோசே கர்த்தருடைய நாமத்தினால் கலகக்காரருக்கு நியாயத்தீர்ப்பை அறிவிக்கிறார். கர்த்தருடைய சர்வவல்லமையினால் கலகக்காரருக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. மோசே தன்னுடைய சொந்த வல்லமையினால் எதையும் செய்யவில்லை. கலகக்காரருக்கு எப்படிப்பட்ட அழிவு வரும் என்பதையும் மோசே இங்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் சபையாரை நோக்கி, "இந்தக் கிரியைகளையெல்லாம் செய்கிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினார் என்றும், அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லை என்றும், நீங்கள் எதினாலே அறிவீர்களென்றால், சகல மனிதரும் சாகிறபடி இவர்கள் செத்து, சகல மனிதருக்கும் நேரிடுகிறதுபோல இவர்களுக்கும் நேரிட்டால், கர்த்தர் என்னை அனுப்பவில்லை என்று அறிவீர்கள்" (எண் 16:28,29) என்றும்,

"கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிடச்செய்வதால், பூமி தன் வாயைத் திறந்து, இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப் போட்டதேயானால், இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள்" (எண் 16:30) என்றும் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் கர்த்தர் அடையாளங்களையும், அற்புதங்களையும் நடப்பித்து தம்முடைய ஊழியக்காரர்களின் வார்த்தைகளை உறுதி செய்திருக்கிறார்.

"பூமி தன் வாயைத் திறந்து, இவர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக" என்ற இப்படிப்பட்ட வார்த்தையை ஒருவர் பேசவேண்டுமென்றால், அவர் தேவனுடைய நேரடியான ஏவுதல் இல்லாமல் பேசமுடியாது. (எண் 16:29-30).

கர்த்தரை அவமதிப்பது மிகப்பெரிய பாவம். இஸ்ரவேலரின் வரலாற்றில் அவர்கள் கர்த்தரைப் பலமுறை அவமதித்து, அவருக்குக் கோபம் உண்டாக்கியிருக்கிறார்கள்.

கலகக்காரர்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு உடனே வருகிறது. கர்த்தரும், கர்த்தருடைய தாசனாகிய மோசேயும் ஒருவரையொருவர் நன்றாய் அறிந்து வைத்திருக்கிறார்கள். மோசே சொல்லுகிறார். கர்த்தர் செய்கிறார். மோசே இஸ்ரவேல் சபையாருக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார். அவர் இந்த வார்த்தைகளை சொல்லி முடித்த உடனே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு கலகக்காரர்மீது வருகிறது.

மோசே இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லி முடித்தவுடனே, அவர்கள் நின்றிருந்த நிலம் பிளக்கிறது. பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போடுகிறது (எண் 16:31,32).

மோசே தீர்க்கதரிசனத்தைக் கூறி முடித்தவுடன் கர்த்தர் ஒரு பூகம்பத்தை அனுமதிக்கிறார். (எண் 16:21). பூமி அவர்களை விழுங்கியதும், அவர்கள் பாதாளத்திற்கு உயிரோடே போய்விடுகிறார்கள். பூமியின் மையப்பகுதியில் பாதாளம் இருக்கிறது. பூமியின் மேற்பகுதிக்கும் மையப்பகுதிக்கும் நடுவே ஒரு திறப்பு உண்டாயிற்று (எண் 16:33; மத் 12:40; எபே 4:8-10).

இதுபோன்ற நியாயத்தீர்ப்பு கலகக்காரர்மீது இதுவரையிலும் வந்ததில்லை. இதற்கு ஒப்பான நியாயத்தீர்ப்பும் கலகக்காரர்மீது இதுவரையிலும் சொல்லப்படவில்லை. கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பில் ஒரு புதிய காரியத்தை நேரிடச்செய்கிறார். சகல மனிதருக்கும் நேரிடுகிறதுபோல, கலகக்காரருக்கு நேரிடவில்லை.

மோசேக்கும், ஆரோனுக்கும், கர்த்தருக்கும் விரோதமாக கலகம்பண்ணின பாவிகள் உயிரோடே பாதாளத்தில் இறங்குகிறார்கள். தங்களுடைய சொந்த பிரேதக்குழிகளுக்குள் உயிரோடே இறங்குவது இவர்களுக்கு மிகவும் பயங்கரமான தண்டனையாகயிருக்கிறது.

கர்த்தர் கலகம்பண்ணியவர்களை மாத்திரம் தண்டியாமல், அவர்கள் வீடுகளையும், அவர்களுக்கு உண்டான யாவையும் தண்டிக்கிறார். கலகக்காரர்கள் உயிரோடே பாதாளத்தில் இறங்கும்போது அவர்களுக்கு உண்டான யாவையும் பாதாளம் விழுங்கிப்போடுகிறது. பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போடுகிறது.

கலக்காரர்கள் தங்கள் கூடாரவாசலிலே நின்றபோது அவர்களோடுகூட அவர்களுடைய பெண்ஜாதிகளும், பிள்ளைகளும், குழந்தைகளும் நின்றார்கள். பூமி தன் வாயைத் திறந்து கலகக்காரரை விழுங்கியபோது, அவர்களுடைய குழந்தைகளையும், பிள்ளைகளையும் பெண்ஜாதிகளையும் பூமி விழுங்கிப்போடுகிறது.

கலகக்காரர் உயிரோடே பாதாளத்தில் இறங்கும்போது, அவர்களோடுகூட அவர்களுடைய பிள்ளைகளும் பாதாளத்தில் இறங்குவதற்கு, அவர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று சொல்லப்படவில்லை. கர்த்தர் தம்முடைய நீதியினால் கலகக்காரருடைய பிள்ளைகளை ஏன் தண்டித்தார் என்பதும் தெரியவில்லை. ஆனாலும் கர்த்தர் நீதியுள்ளவர் என்பது நிச்சயம். அவருடைய நியாயத்தீர்ப்புகளெல்லாம், நீதியும் நியாயமும் உள்ளதாகவே இருக்கும். அவர் ஒருபோதும் தவறு செய்கிறவரல்ல. கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவர் தம்முடைய செய்கைகள் எல்லாவற்றையும் அறிந்து வைத்திருக்கிறவர். கர்த்தருக்கு ஆலோசனை சொல்லத்தக்க மனிதன் இந்தப் பூமியில் ஒருவனுமில்லை.

பூமி தன் வாயைத் திறந்து, கலக்காரர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போடுகிறது. அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்குகிறார்கள்; பூமி அவர்களை மூடிக்கொள்கிறது; கலகக்காரர்கள் இப்படிச் சபையின் நடுவிலிருந்து அழிந்துபோகிறார்கள் (எண் 16:33).

கலகக்காரர்களை சுற்றிலும் இருந்த இஸ்ரவேலர் யாவரும் அவர்கள் கூக்குரலைக் கேட்டு, பூமி நம்மையும் விழுங்கிப்போடும் என்று சொல்லி ஓடுகிறார்கள் (எண் 16:34). மற்றவர்களுடைய அழிவு நமக்கு எச்சரிப்புக்களாக இருக்கவேண்டும்.

தூபங்காட்டின கலகக்காரர் எண் 16:35-40

எண் 16:35. அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப்போட்டது.

எண் 16:36. பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 16:37. அக்கினிக்குள் அகப்பட்ட தூபகலசங்களை எடுத்து, அவைகளிலிருக்கிற அக்கினியை அப்பாலே கொட்டிப்போடும்படி ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசாருக்குச் சொல்; அந்தத் தூபகலசங்கள் பரிசுத்தமாயின.

எண் 16:38. தங்கள் ஆத்துமாக்களுக்கே கேடுண்டாக்கின அந்தப் பாவிகளின் தூபகலசங்களைப் பலிபீடத்தை மூடத்தக்க தட்டையான தகடுகளாய் அடிக்கக்கடவர்கள்; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அவைகளைக் கொண்டுவந்ததினால் அவைகள் பரிசுத்தமாயின; அவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு அடையாளமாயிருக்கும் என்றார்.

எண் 16:39. அப்படியே ஆசாரியனாகிய எலெயாசார் சுட்டெரிக்கப்பட்டவர்கள் கொண்டு வந்திருந்த வெண்கலத் தூபகலசங்களை எடுத்து,

எண் 16:40. ஆரோனின் புத்திரராய் இராத அந்நியன் ஒருவனும் கர்த்தருடைய சந்நிதியில் தூபங்காட்ட வராதபடிக்கும், கோராகைப்போலும் அவன் கூட்டத்தாரைப்போலும் இராதபடிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக்குறியாயிருக்கும் பொருட்டு, கர்த்தர் மோசேயைக்கொண்டு தனக்குச் சொன்னபடியே அவைகளைப் பலிபீடத்தை மூடும் தகடுகளாக அடிப்பித்தான்.

கர்த்தருடைய ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக கோராகின் கூட்டத்தார் 450 பேர், தங்கள் தூபகலசங்களோடு நிற்கிறார்கள். அவைகளில் அக்கினியும் தூபவர்க்கமும் போடப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு தூபம் காட்டுவது ஆசாரியருடைய ஊழியம். கோராகின் கூட்டத்தாரோ லேவியர்கள். இவர்களுக்கு கர்த்தருடைய சந்நிதியில் தூபம் காட்டும் ஊழியம் நியமிக்கப்படவில்லை. கர்த்தருடைய வாசஸ்தலத்தில் பணிவிடை செய்வதே இவர்கள் வேலை. ஆனாலும் கோராகின் கூட்டத்தார், தங்களை ஆசாரியர்களைப்போல பாவித்து, அவர்களும் தங்களுடைய தூபகலசங்களை எடுத்துக்கொண்டு, ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக நிற்கிறார்கள். அவர்களுடைய தூபகலசங்களில் அக்கினியும் தூபவர்க்கமும் போடப்பட்டிருக்கிறது. கோராகின் கூட்டத்தார் கர்த்தருக்கு தூபம் காட்ட ஆயத்தமாயிருக்கிறார்கள்.

அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப்போடுகிறது (எண் 16:35). கர்த்தருடைய கோபத்தினால் கோராகின் கூட்டத்தார் செத்துப்போகிறார்கள்.

இருநூற்று ஐம்பதுபேர், தூபங்காட்டுகிறார்கள். இவர்களைப் பூமி விழுங்கிப் போடவில்லை. அதற்குப் பதிலாக கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினி இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப்போடுகிறது. (எண் 16:28-33) மூன்றாம் முறையாகக் கர்த்தர் தம்முடைய அக்கினியை அனுப்பிக் கலக்காரர்களை அழித்துப் போடுகிறார். (எண் 16:35; எண் 11:1-3; லேவி 10:1-9). கர்த்தருக்கு அந்நிய அக்கினியால் தூபங்காட்டின ஆரோனின் குமாரரில் இருவரை கர்த்தருடைய அக்கினி ஏற்கெனவே பட்சித்துப்போட்டிருக்கிறது. (லேவி 10).

இஸ்ரவேல் புத்திரருக்கு இந்தத் தண்டனை புதுமையானதல்ல. ஏனென்றால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார். நமக்கு நியமிக்கப்படாத ஊழியத்தை நாம் செய்வதற்கு முயற்சி பண்ணக்கூடாது. நமக்கு சம்பந்தமில்லாத விஷயங்களில் நாம் தலையிடக்கூடாது. கர்த்தர் பரிசுத்தர். அவர் எரிச்சலுள்ள தேவன். கர்த்தருடைய நியமனங்கள் அனைத்தும் பரிசுத்தமானவை. கர்த்தருடைய நியமங்களை மாற்றுவதற்கோ, அதை நீக்குவதற்கோ நமக்கு அதிகாரமில்லை. கர்த்தருடைய காரியங்களில் தலையிடுவதற்கு நமக்கு உரிமையுமில்லை.

கர்த்தர் கோராகுக்கும், அவனுடைய கூட்டத்தாருக்கும் தம்முடைய வாசஸ்தலத்தில் பணிவிடை செய்யும் ஊழியங்களைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் எல்லோரும் லேவியர்கள். லேவியரின் ஊழியம் கனமுள்ளது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து, லேவியரை தமக்காக வேறுபிரித்து, அவர்களை கனம்பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற பணிவிடைகளில் லேவியர்கள் திருப்தியோடிருக்கவேண்டும். தாங்கள் செய்ய வேண்டிய பணிவிடை ஊழியங்களை அவர்கள் சந்தோஷமாய்ச் செய்யவேண்டும். கர்த்தருடைய வாசஸ்தலத்திலே பணிவிடை ஊழியங்களை செய்ய லேவியருக்கு எந்தத் தகுதியுமில்லை. ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களுக்கு பணிவிடை ஊழியங்களைக் கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை லேவியர்கள் சந்தோஷமாய்ச் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை செய்து அவர்கள் ஜீவனம் பண்ணவேண்டும். இந்த ஊழியத்தில் கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தை ஓடி முடித்து கர்த்தருக்குள் நித்திரையடையவேண்டும். இதுவே அவர்களுக்கு மேன்மையும் பாக்கியமுமானது.

கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினி, தூபம் காட்டின 250 பேரையும் பட்சித்துப்போடுகிறது. கர்த்தருடைய கோபாக்கினை இங்கு வெளிப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கோபத்தையும், அவருடைய நியாயத்தீர்ப்பையும் மறந்துவிடக்கூடாது. அந்தத் தூபகலசங்கள் பரிசுத்தமானவை. கர்த்தர் அந்தத் தூபகலசங்களைப்பற்றி தம்முடைய தீர்மானத்தை சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "அக்கினிக்குள் அகப்பட்ட தூபகலசங்களை எடுத்து, அவைகளிலிருக்கிற அக்கினியை அப்பாலே கொட்டிப்போடும்படி ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசாருக்குச் சொல்; அந்தத் தூபகலசங்கள் பரிசுத்தமாயின" (எண் 16:36,37) என்று சொல்லுகிறார். தூபகலசங்களை சேகரிக்கும் வேலை ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

எலெயாசார் தூபகலசங்களிலிருக்கிற அக்கினியை அப்பாலே கொட்டிப்போட வேண்டும். அந்தத் தூபகலசங்களில் அக்கினியோடு தூபவர்க்கமும் இருக்கிறது. இவை இரண்டும் கலந்து தூபகலசங்களில் போடப்பட்டிருக்கிறது. இந்த அக்கினியையும், அதிலுள்ள தூபவர்க்கத்தையும் பாளயத்திற்கு அப்பாலே, அசுத்தமான இடத்திலே கொட்டவேண்டும். கர்த்தர் அசுத்தமான காணிக்கையை அங்கீகரிப்பதில்லை. கர்த்தர் அசுத்தத்தை அருவெறுக்கிறவர். துன்மார்க்கருடைய பலிகளும் காணிக்கைகளும் கர்த்தருக்கு அருவருப்பானது.

எலெயாசார் தூபகலசங்களிலுள்ள அக்கினியை பாளயத்திற்கு அப்பாலே கொட்டவேண்டும். ஆனாலும் அவர் தூபகலசங்களை சேகரிக்கவேண்டும். இவை அக்கினிக்குள் அகப்பட்டிருக்கிறது. அந்த தூபகலசங்கள் பரிசுத்தமாயிருக்கிறது. கோராகின் கூட்டத்தார் தங்கள் தூபகலசங்களை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்ததினால் அவைகள் பரிசுத்தமாயின என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய அக்கினியினால் தூபகலசங்கள் பரிசுத்தமாயிற்று.

தூபகலசங்களை பரிசுத்த ஸ்தலத்து ஊழியத்தில் பயன்படுத்தவேண்டும். அந்த தூபகலசகங்களை பலிபீடத்தை மூடத்தக்க தட்டையான தகடுகளாய் அடிக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "தங்கள் ஆத்துமாக்களுக்கே கேடுண்டாக்கின அந்தப் பாவிகளின் தூபகலசங்களைப் பலிபீடத்தை மூடத்தக்க தட்டையான தகடுகளாய் அடிக்கக்கடவர்கள்; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அவைகளைக் கொண்டுவந்ததினால் அவைகள் பரிசுத்தமாயின; அவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு அடையாளமாயிருக்கும்" (எண் 16:38) என்று சொல்லுகிறார்.

மோசே கர்த்தருடைய வார்த்தையை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசாருக்கு சொல்லுகிறார். அப்படியே ஆசாரியனாகிய எலெயாசார் சுட்டெரிக்கப்பட்டவர்கள் கொண்டு வந்திருந்த வெண்கலத் தூபகலசங்களை எடுக்கிறார். ஆரோனின் புத்திரராய் இராத அந்நியன் ஒருவனும் கர்த்தருடைய சந்நிதியில் தூபங்காட்ட வராதபடிக்கும், கோராகைப்போலும் அவன் கூட்டத்தாரைப்போலும் இராதபடிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக்குறியாயிருக்கும் பொருட்டு, கர்த்தர் மோசேயைக்கொண்டு தனக்குச் சொன்னபடியே எலெயாசார் அவைகளைப் பலிபீடத்தை மூடும் தகடுகளாக அடிப்பிக்கிறார் (எண் 16:39,40).

கர்த்தருடைய சந்நிதியில் ஆசாரியர் தூபங்காட்டுவதுபோல தாங்களும் தூபம்காட்டலாம் என்று லேவியரான கோராகின் கூட்டத்தார் நினைத்தார்கள். தங்களுடைய செய்கையின் மூலமாக ஆசாரிய ஊழியத்தை லேவியர் எல்லோருக்கும் பொதுவானதாக மாற்றலாம் என்று நினைத்தார்கள். ஆனால் கர்த்தரோ ஆசாரிய பட்டத்தை ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

ஆரோனின் புத்திரராயிராத அந்நியன் ஒருவனும் கர்த்தருடைய சந்நிதியில் தூபம் காட்ட வரக்கூடாது என்பது கர்த்தருடைய நியமமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனும் கோராகைப்போலும், அவனுடைய கூட்டத்தாரைப்போலும், கர்த்தருடைய நியமத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணக்கூடாது.

கோராகின் கூட்டத்தார் பலிபீடத்தின் பரிசுத்தத்தை அழித்துப்போடலாம் என்று நினைத்தார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களுடைய தூபகலசங்களை தகடுகளாக அடித்து, பலிபீடத்தை மூடச்சொல்லி, அதை அலங்கரிக்கிறார். வெண்கல தகடுகளால் மூடப்பட்ட பலிபீடம் இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாயிருக்கிறது. ஆரோனும் அவருடைய புத்திரரும் மாத்திரமே கர்த்தருடைய சந்நிதியில் தூபம் காட்ட வரவேண்டும் என்பதை இந்த அடையாளம் உறுதிபண்ணுகிறது.

இஸ்ரவேல் சபையாரின் கலகம் எண் 16:41-50

எண் 16:41. மறுநாளில் இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் கர்த்தரின் ஜனங்களைக் கொன்று போட்டீர்கள் என்றார்கள்.

எண் 16:42. சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடி ஆசரிப்புக் கூடாரத்துக்கு நேரே பார்க்கிறபோது, மேகம் அதை மூடினது, கர்த்தரின் மகிமை காணப்பட்டது.

எண் 16:43. மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடாரத்துக்கு முன்பாக வந்தார்கள்.

எண் 16:44. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 16:45. இந்தச் சபையாரை விட்டு விலகிப் போங்கள்; ஒரு நிமிஷத்தில் அவர்களை அதமாக்குவேன் என்றார். அவர்கள் முகங்குப்புற விழுந்தார்கள்.

எண் 16:46. மோசே ஆரோனை நோக்கி: நீ தூப கலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின்மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய்ச் சபையினிடத்தில் போய், அவர்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்; கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது, வாதை தொடங்கிற்று என்றான்.

எண் 16:47. மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்துக்கொண்டு சபையின் நடுவில் ஓடினான்; ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது; அவன் தூபவர்க்கம் போட்டு, ஜனங்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்து,

எண் 16:48. செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது.

எண் 16:49. கோராகின் காரியத்தினிமித்தம் செத்தவர்கள் தவிர, அந்த வாதையினால் செத்துப்போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறுபேர்.

எண் 16:50. வாதை நிறுத்தப்பட்டது; அப்பொழுது ஆரோன் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு மோசேயினிடத்தில் திரும்பி வந்தான்.

இஸ்ரவேல் புத்திரர் மறுநாளிலே மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். ஏற்கெனவே கர்த்தருடைய சந்நிதியில் தூபம் காட்டின 450 பேரையும் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்ட அக்கினி பட்சித்துப்போட்டது (எண் 16:35). கர்த்தர் கலகக்காரரை கொன்றுபோட்டதைப் பார்த்து இஸ்ரவேல் சபையார் எல்லோரும் பயத்தோடும், நடுக்கத்தோடும், திகிலோடும் இருக்கிறார்கள்.

ஆனாலும் பயம் சீக்கிரத்தில் நீங்கிப் போயிற்று. இஸ்ரவேல் சபையார் தங்கள் இருதயத்தில் இறுமாப்பும் துணிகரமும் கொண்டு, கலகக்காரர்கள் என்ன பாவம் செய்தார்களோ அதே பாவத்தை, இவர்களும் செய்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணினவர்கள் செத்துப்போனார்கள். ஆனாலும் இஸ்ரவேல் சபையார் மனதிலே பாவத்தைக் குறித்து பயம் ஏற்படவில்லை. கர்த்தருடைய கோபத்தையும் அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பையும் இஸ்ரவேல்புத்திரர் அசட்டைபண்ணுகிறார்கள்.

கோராகும் அவனுடைய கூட்டத்தாரும், தாத்தானும், அபிராமும் மோசேக்கு விரோதமாகவும்,ஆரோனுக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோமாகவும் கலகம்ப க்ஷக்ஷண்ணினார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் அழித்துப்போட வேண்டுமென்று தீர்மானம்பண்ணினார். ஆனாலும் மோசே, ஆரோன் ஆகியோர் கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் சபையாருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணியதினால், கலகக்காரர் மாத்திரம் அழிந்துபோகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரில் அநேகர், கர்த்தருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அழிவுக்கு தப்பித்துக்கொள்கிறார்கள்.

ஆனாலும் உயிரோடிருக்கிற இஸ்ரவேல் சபையாருக்கு கர்த்தரைக் குறித்த பயமும், அவருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்த பயமும் ஒரே நாளில் குறைந்துபோயிற்று.

மறுநாளில் இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து, "நீங்கள் கர்த்தரின் ஜனங்களைக் கொன்றுபோட்டீர்கள்" (எண் 16:41) என்று சொல்லுகிறார்கள்.

மாம்ச சுபாவமுள்ள மனுஷன் கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணிக் கொண்டேயிருப்பான். இப்பொழுதுதான் கலகம் பண்ணிய இஸ்ரவேல் புத்திரரைப் பூமி விழுங்கிற்று. ஜனங்கள் மறுநாளில் மறுபடியும் கலகம் பண்ணுகிறார்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்தவர்களை மோசேயும், ஆரோனும் கொன்றுபோட்டார்கள் என்று கூறுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு வந்த வாதைகளை மோசே அனுப்பவில்லை. கர்த்தரே அனுப்பினார். இதை அவர்கள் மறந்துவிட்டு, தங்கள் தலைவர்களுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறார்கள்.

மோசே இவர்களை வழிநடத்தவில்லையென்றால், இவர்களுடைய நிலமை பரிதாபமாக இருந்திருக்கும். இதற்கு முன்பு ஒரு முறை, இவர்கள் தங்கள் தலைவர்களைக் கொன்றுபோட்டு எகிப்து தேசத்திற்குத் திரும்பிப் போய்விடவேண்டுமென்று விரும்பினார்கள். (எண் 14:10; எண் 15:35-36).

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக ஆயிரக்கணக்கான கலகக்காரர்களை அழித்துப் போடுகிறார். (எண் 16:42-50).

கலகக்காரரின் மரணத்திற்கு மோசேயும் ஆரோனும் காரணமல்ல. மோசே கர்த்தருடைய ஊழியக்காரர். இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுமாறு கர்த்தர் தனக்கு சொல்லுகிற வார்த்தைகளை, மோசே ஜனங்களுக்கு அறிவிக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார் மீது கோபமாயிருக்கும்போது, மோசே கர்த்தருடைய சமுகத்தில் அவர்களுக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ, செத்துப்போன ஜனங்களுக்கு மோசேயும், ஆரோனுமே காரணம் என்று அவர்கள்மீது நியாயமில்லாமல், அநியாயமாக குற்றம் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் குற்றம் சொல்லும்போது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவே குற்றம் சொல்லுகிறார்கள். கர்த்தரே கலகக்காரர்களை கொன்றுபோட்டவர். அவர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் அவர்களைக் கொன்றுபோட்டார். இஸ்ரவேல் சபையாரோ, ஜனங்கள் செத்துப்போனதற்கு, மோசேயும் ஆரோனும் காரணம் என்று சொல்லி, அவர்களுக்கு விரோதமாக முறுமுறுக்கிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் செத்துப்போன கலகக்காரர்களை "கர்த்தரின் ஜனங்கள்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் பெயரளவில் கர்த்தருடைய ஜனமாகயிருந்தாலும், தங்கள் நடத்தையிலும் சுபாவத்திலும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்களாகவே இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய கீழ்ப்படியாமையினாலேயே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்தது. இப்போது உயிரோடிருக்கிறவர்கள் கர்த்தருடைய கோபத்திற்கு தப்பித்துக் கொண்டவர்கள். இவர்கள் கீழ்ப்படியாத ஜனமாயிருந்தாலும், கர்த்தர் தமது கிருபையினால் இவர்களை அழிவுக்கு தப்பிக்கச் செய்திருக்கிறார். தாங்கள் ஜீவனோடிருப்பதற்காக இவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். தங்களிடத்தில் காணப்படுகிற அவிசுவாசத்தையும், கீழ்ப்படியாமையையும் தங்களை விட்டு நீக்கிப்போடவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் சபையாரோ கர்த்தருடைய கோபத்தையும், அவருடைய நியாயத்தீர்ப்பையும் பார்த்து பயப்படவில்லை. அவர்கள் மறுநாளிலேயே மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்களிலும் ஜீவியங்களிலும் இன்னும் மாற்றம் ஏற்படவில்லை. பயத்தினாலும் தண்டனையினாலும் ஒருவருடைய இருதயத்தை மாற்ற முடியாது. அதை அன்பினால் மாத்திரமே மாற்ற முடியும். பயமுறுத்தி செய்ய முடியாத காரியங்களை, அன்பு செலுத்தி செய்ய முடியும்.

இஸ்ரவேல் சபையார் மனந்திரும்ப வேண்டுமென்றால், அவர்களுடைய இருதயத்திலும், மனதிலும், ஜீவியத்திலும் நல்ல மாற்றம் ஏற்படவேண்டுமென்றால், அவர்களுக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், அன்பும் இன்னும் அதிகமாய்த் தேவைப்படுகிறது. மோசே இந்த சத்தியத்தை நன்றாய் அறிந்திருக்கிறார். ஆகையினால் கர்த்தர் எப்போதெல்லாம் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக தம்முடைய கோபமான வார்த்தைகளை சொல்லுகிறாரோ, அப்போதெல்லாம் மோசே கர்த்தருடைய சமுகத்திலே முகங்குப்புற விழுந்து, அவருடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் கெஞ்சி பிரார்த்தனைபண்ணுகிறார்.

சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடி ஆசரிப்புக் கூடாரத்துக்கு நேரே பார்க்கிறபோது, மேகம் அதை மூடுகிறது, கர்த்தரின் மகிமை காணப்படுகிறது. மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக வருகிறார்கள் (எண் 16:42,43).

கர்த்தருடைய மகிமை காணப்படுவது தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளமாகும். (எண் 16:42,19; எண் 14:10; எண் 16:19; எண் 20:6) கர்த்தருடைய மகிமை பல சமயங்களில் காணப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறியபோதெல்லாம், அவர்களைத் திருத்துவதற்காகக் கர்த்தருடைய மகிமை காணப்பட்டிருக்கிறது.

கர்த்தர் ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர். (1தீமோ 6:16).

தம்முடைய முகத்தை ஜனங்கள் கண்டு, மரித்துப் போய்விடாதவாறு கர்த்தர் பலசமயங்களில் தமது மகிமையின் பிரகாசத்தை மறைத்திருக்கிறார். புதிய பூமியில் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள். தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார் (வெளி 21:3; வெளி 22:4-5).

இஸ்ரவேல் சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணும்போது, கர்த்தருடைய பிரசன்னம் தாமதமில்லாமல் அந்த இடத்தில் உடனே வெளிப்படுகிறது. இஸ்ரவேல் சபையார் மோசேயையும் ஆரோனையும் கொன்றுபோடவேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கலாம். கர்த்தர் அவர்களுடைய மனதை அறிந்திருக்கிறார். கலகம்பண்ணுகிற சபையார் ஆசரிப்புக்கூடாரத்திற்கு நேரே பார்க்கிறார்கள்.

மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுப்பது பாவம் என்பதும், அவர்களைக் கொன்றுபோடுவது கர்த்தருக்கு விரோதமான காரியம் என்பதும் இஸ்ரவேல் சபையாருக்கும் தெரிந்திருக்கிறது. தங்களுடைய மனதின் விருப்பப்படி செய்தால், கர்த்தர் தங்களைத் தண்டிப்பாரோ என்னும் பயமும் இஸ்ரவேல் சபையாரின் மனதிலே ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தப் பயத்தோடு ஆசரிப்புக்கூடாரத்திற்கு நேரே பார்க்கிறார்கள். தாங்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடியிருக்கும்போது, கர்த்தர் தங்களுக்கு விரோதமாக வருகிறாரா என்பதை அறிந்துகொள்ள, அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு நேரே பார்க்கிறார்கள்.

மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள். இஸ்ரவேல் சபையார் அவர்களுக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை பாதுகாத்துக்கொள்வார் என்பதை இஸ்ரவேல் சபையார் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூடியிருக்கும்போது, கர்த்தரைக் குறித்த பயமும் அவர்களுடைய மனதில் இருக்கிறது. அவர்கள் பயத்தோடே ஆசரிப்புக்கூடாரத்திற்கு நேராக பார்க்கிறார்கள். அப்போது மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடுகிறது. அங்கே கர்த்தரின் மகிமை காணப்படுகிறது.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை பாதுகாக்கிறார். தமக்கு விரோதமாகவும், தம்முடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாகவும் கூட்டங்கூடியிருக்கிற கலகக்காரர்களை கலங்கப் பண்ணுவதற்காகவும், அவர்களைத் தண்டிப்பதற்காகவும், கர்த்தரின் மகிமை அங்கு காணப்படுகிறது. மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாக வருகிறார்கள். அவர்கள் இருவரும் கர்த்தருடைய சமுகத்திலே முகங்குப்புற விழுந்து, இஸ்ரவேல் சபையாருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார்கள்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, "இந்தச் சபையாரை விட்டு விலகிப் போங்கள்; ஒரு நிமிஷத்தில் அவர்களை அதமாக்குவேன்" என்று சொல்லுகிறார். மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, அவருடைய சமுகத்திலே முகங்குப்புற விழுகிறார்கள் (எண் 16:44,45).

மறுபடியுமாகக் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது தமது கோபாக்கினையை வெளிப்படுத்துகிறார். மோசேயும், ஆரோனும் மறுபடியுமாகக் கர்த்தருடைய சமுகத்தில் முகங்குப்புற விழுந்து இஸ்ரவேல் புத்திரரை அதமாக்கவேண்டாமென்று கெஞ்சி விண்ணப்பம் பண்ணுகிறார்கள் (எண் 16:45; எண் 16:21-22; எண் 14:5-20; யாத் 32).

மோசேயும் ஆரோனும், இதுபோல பல சமயங்களில், இஸ்ரவேல் சபையாருக்காக, கர்த்தருடைய சமுகத்தில் முகங்குப்புற விழுந்து, பரிந்து பேசி ஜெபம்பண்ணியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினாலும், இவர்கள் இருவரும் இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசி விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் தமது கோபத்தினாலும், நீதியினாலும் இஸ்ரவேல் சபையாரை தண்டிக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணும் போதெல்லாம், மோசேயும் ஆரோனும் அவர்களுக்காக பரிந்து பேசி விண்ணப்பம்பண்ணுவதைக் கேட்டு, கர்த்தர் இஸ்ரவேல் சபையாரை தண்டியாமல், அவர்கள்மீது தமது கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கர்த்தர் என்றும் மாறாதவர். அவருடைய கிருபை என்றுமுள்ளது. மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சமுகத்தில், அவருடைய கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் ஜெபம்பண்ணியதுபோல, நாமும் ஜெபம்பண்ணவேண்டும். துதி பெருகும்போது கர்த்தருடைய கிருபையும் பெருகும். நாம் கர்த்தருடைய சமுகத்தில் சோர்ந்துபோகாமல் எப்போதும் ஜெபம்பண்ணவேண்டும்.

தாம் சொன்ன பிரகாரமாக, கர்த்தர் கலகக்காரர்களை அதமாக்க ஆரம்பிக்கிறார். கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டதையும், இஸ்ரவேல் சபையார் மத்தியிலே வாதை தொடங்கிற்று என்பதையும் மோசே உணருகிறார். ஆரோன் இஸ்ரவேல் சபையாருக்கு ஆசாரியராயிருக்கிறார். அவர் கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் சபையாரின் பாவத்தை நிவிர்த்தி பண்ணுகிற ஊழியத்தை செய்யவேண்டும்.

கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்படுகிறது. இஸ்ரவேல் சபையார் மத்தியிலே வாதை தொடங்கிற்று. மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சந்நிதியில் முகங்குப்புற விழுந்து கிடக்கிறார்கள். ஆரோன் இப்போது தன்னுடைய ஆசாரிய ஊழியத்தை செய்யவேண்டும். அவர் கர்த்தருடைய சந்நிதியில், இஸ்ரவேல் புத்திரருக்காக பாவநிவிர்த்தி செய்யவேண்டும். தான் கர்த்தருடைய சந்நிதியில் இஸ்ரவேல் சபையாருக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணும்போது, ஆரோன் இஸ்ரவேல் சபையாரின் பாவங்களை நிவிர்த்தி பண்ணுகிற ஊழியத்தை செய்யவேண்டும் என்று மோசே தீர்மானிக்கிறார். அதற்காக மோசே ஆரோனை அனுப்புகிறார்.

மோசே ஆரோனை நோக்கி, "நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின்மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய்ச் சபையினிடத்தில் போய், அவர்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்; கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது, வாதை தொடங்கிற்று" (எண் 16:46) என்று சொல்லுகிறார்.

மோசே சொன்னபடி ஆரோன் தூபகலசத்தை எடுத்துக்கொண்டு சபையின் நடுவில் ஓடுகிறார்; ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருக்கிறது; ஆரோன் தூபவர்க்கம் போட்டு, ஜனங்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்கிறார். ஆரோன் செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நிற்கிறார் (எண் 16:47,48).

ஆரோன் நற்குணமுள்ளவர். அவர் மோசேயின் வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிகிறார். அவர் மெய்யாகவே இஸ்ரவேல் சபையார்மீது அன்பாயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தனக்கு விரோதமாகக் கலகம்பண்ணினாலும், அவர்கள் தன்மீதும், தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஆசாரிய ஊழியத்தின் மீதும் பொறாமைப்பட்டாலும், ஆரோன் அவர்கள்மீது அன்பாகவே இருக்கிறார். கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்படும்போது, இஸ்ரவேல் சபையார் அழிந்துபோகக்கூடாது என்று ஆரோன் அவர்கள்மீது கரிசனையோடிருக்கிறார்.

இஸ்ரவேல் சபையார் மத்தியில் வாதை தொடங்கிற்று. கர்த்தருடைய கோபத்தினால் சபையாரில் அநேகர் செத்துப்போனார்கள். இன்னும் எல்லோரும் சாகவில்லை. அங்கே செத்தவர்களும் உயிரோடிருக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆரோன் மனதைரியமுள்ளவர். அவர் செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே இருக்கிறார்.

ஜனங்கள் மத்தியிலே வாதை தொடங்கிற்று. ஜனங்கள் எல்லோரும் அந்த வாதையினால் செத்துப்போவதற்கு வாய்ப்புள்ளது. அவர்கள் மத்தியிலே ஆரோன் நிற்கும்போது அவரும் செத்துப்போவதற்கு வாய்ப்புள்ளது. ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்களுடைய ஜீவனை பாதுகாக்கவேண்டும் என்பதற்காக, ஆரோன் தன்னுடைய ஜீவனை கர்த்தருடைய கரத்திலே ஒப்புக்கொடுத்துவிட்டு செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களும் நடுவில் நிற்கிறார்.

ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருக்கிறது. கர்த்தருடைய சந்நிதியில் அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய்யவேண்டும். இது ஆரோனுக்கு நியமிக்கப்பட்ட ஊழியம். ஆரோன் தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின்மேல் தூபவர்க்கமிட்டு, சீக்கிரமாய் சபையினிடத்தில் போகிறார்.

ஆரோன் தூபகசலத்தை எடுத்துக்கொண்டு, இஸ்ரவேல் சபையாருக்கு பாவநிவிர்த்தி செய்ய, அவர் சபையின் நடுவிலே ஓடுகிறார். ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருப்பதினால், ஜனங்களில் அநேகர் ஏற்கெனவே செத்துப்போனார்கள். இன்னும் சிலர் செத்துப்போகாமல் உயிரோடிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மரணத்திற்கு அருகாமையிலிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆரோன் செத்தவர்களுக்கும், உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்று, ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்கிறார்.

சபையார் செத்துப்போகும்போது, தானும் செத்துப்போவதற்கு வாய்ப்பு இருந்தாலும், ஆரோன் அவர்கள் நடுவில் நின்று, அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை செய்து முடிக்க வேண்டும் என்பது ஆரோனுடைய விருப்பம். ஆரோன் தன்னுடைய ஆசாரிய ஊழியத்தில் வைராக்கியமாயிருக்கிறார். இதற்காக அவர் தன்னுடைய ஜீவனையே பணயம் வைக்கிறார். தன்னுடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது என்பதை ஆரோன் நன்றாய் அறிந்திருக்கிறார். தன்னுடைய சொந்த ஜீவனைவிட, இஸ்ரவேல் சபையாரின் ஜீவனே ஆரோனுடைய பார்வையில் முக்கியமானதாயிருக்கிறது.

ஆரோன் நற்குணமுள்ளவராகவும் மனதைரியமுள்ளவராகவும் இருப்பதுபோல, அவர் தேவனுக்கு பயந்து ஜீவிக்கிற பக்தியுள்ள மனுஷனாகவும் இருக்கிறார். அவர் ஜனங்கள் மத்தியிலே கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்காக அபிஷேகம்பண்ணப்பட்டவர். ஆரோன் தேவனுக்கடுத்த காரியங்களில் ஊழியம் செய்யவேண்டும். கர்த்தர் ஆரோனை ஆசாரிய ஊழியத்திற்கு தெரிந்தெடுத்து, அந்த ஊழியத்திற்காக அவரை பிரதிஷ்டைபண்ணி, அபிஷேகம் செய்திருக்கிறார்.

கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தில் ஆரோன் உண்மையுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் சபையார் ஆரோனுக்கு விரோதமாக முறுமுறுத்தாலும், அவருடைய ஆசாரிய ஊழியத்தின்மீது பொறாமைப்பட்டு, அவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசினாலும், ஆரோன் அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய்கிறார். இந்த சம்பவத்தின் மூலமாக, ஆரோனுடைய ஆசாரிய ஊழியம் உறுதிபண்ணப்படுகிறது.

ஆரோன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் மனுக்குலத்தினுடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக இந்தப் பூமிக்கு வந்தார். ஆரோன் பழைய ஏற்பாட்டுக்காலத்தில், இஸ்ரவேல் ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்தார்.

எண்ணாகமம் புஸ்தகத்தில் பத்து வாதைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. ஜெபம் முதலாவது வாதையை நிறுத்திற்று. (எண் 11:1-3).
2. இரண்டாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 11:33).
3. மூன்றாம் வாதையில் ஜெபமும், பாவஅறிக்கையும் உதவி புரிந்தது. (எண் 12:10-16).
4. நான்காம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 14:28-35).
5. ஐந்தாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 14:36-37).
6. ஆறாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 16:29-33).
7. ஏழாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 16:35).
8. பாவநிவாரணம் எட்டாம் வாதையை நிறுத்திற்று. (எண் 16:46).
9. பாவநிவாரணத்திற்கு அடையாளமானது ஒன்பதாம் வாதையில் உதவிபுரிந்தது. (எண் 21:6-9; யோவான் 3:14).
10. பத்தாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 25:1-9).

இஸ்ரவேல் புத்திரர்மீது வாதைகள் வந்தபோது, அவர்கள் ஜெபம் பண்ணினார்கள். தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டார்கள். பல சமயங்களில் அவர்கள்மீது வந்த வாதை இதனால் நின்றுபோயிற்று. இந்த வாதைகளையெல்லாம் தேவனுடைய பிள்ளைகள் தியானித்து தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியங்களில் மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்க வேண்டும். இதற்காகவே வேதாகமத்தில் இவை எழுதப்பட்டிருக்கிறது. (2கொரி 10:1-14)

சபையார் செத்துப்போகும்போது, தானும் செத்துப்போவதற்கு வாய்ப்பு இருந்தாலும், ஆரோன் அவர்கள் நடுவில் நின்று, அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை செய்து முடிக்க வேண்டும் என்பது ஆரோனுடைய விருப்பம். ஆரோன் தன்னுடைய ஆசாரிய ஊழியத்தில் வைராக்கியமாயிருக்கிறார். இதற்காக அவர் தன்னுடைய ஜீவனையே பணயம் வைக்கிறார். தன்னுடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது என்பதை ஆரோன் நன்றாய் அறிந்திருக்கிறார். தன்னுடைய சொந்த ஜீவனைவிட, இஸ்ரவேல் சபையாரின் ஜீவனே ஆரோனுடைய பார்வையில் முக்கியமானதாயிருக்கிறது.

ஆரோன் நற்குணமுள்ளவராகவும் மனதைரியமுள்ளவராகவும் இருப்பதுபோல, அவர் தேவனுக்கு பயந்து ஜீவிக்கிற பக்தியுள்ள மனுஷனாகவும் இருக்கிறார். அவர் ஜனங்கள் மத்தியிலே கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்காக அபிஷேகம்பண்ணப்பட்டவர். ஆரோன் தேவனுக்கடுத்த காரியங்களில் ஊழியம் செய்யவேண்டும். கர்த்தர் ஆரோனை ஆசாரிய ஊழியத்திற்கு தெரிந்தெடுத்து, அந்த ஊழியத்திற்காக அவரை பிரதிஷ்டைபண்ணி, அபிஷேகம் செய்திருக்கிறார்.

கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தில் ஆரோன் உண்மையுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் சபையார் ஆரோனுக்கு விரோதமாக முறுமுறுத்தாலும், அவருடைய ஆசாரிய ஊழியத்தின்மீது பொறாமைப்பட்டு, அவருக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசினாலும், ஆரோன் அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய்கிறார். இந்த சம்பவத்தின் மூலமாக, ஆரோனுடைய ஆசாரிய ஊழியம் உறுதிபண்ணப்படுகிறது.

ஆரோன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளயமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் மனுக்குலத்தினுடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக இந்தப் பூமிக்கு வந்தார். ஆரோன் பழைய ஏற்பாட்டுக்காலத்தில், இஸ்ரவேல் ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்தார்.

எண்ணாகமம் புஸ்தகத்தில் பத்து வாதைகளைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. ஜெபம் முதலாவது வாதையை நிறுத்திற்று. (எண் 11:1-3).
2. இரண்டாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 11:33).
3. மூன்றாம் வாதையில் ஜெபமும், பாவஅறிக்கையும் உதவி புரிந்தது. (எண் 12:10-16).
4. நான்காம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 14:28-35).
5. ஐந்தாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 14:36-37).
6. ஆறாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 16:29-33).
7. ஏழாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 16:35).
8. பாவநிவாரணம் எட்டாம் வாதையை நிறுத்திற்று. (எண் 16:46).
9. பாவநிவாரணத்திற்கு அடையாளமானது ஒன்பதாம் வாதையில் உதவிபுரிந்தது. (எண் 21:6-9; யோவான் 3:14).
10. பத்தாம் வாதையில் நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டது. (எண் 25:1-9).

இஸ்ரவேல் புத்திரர்மீது வாதைகள் வந்தபோது, அவர்கள் ஜெபம் பண்ணினார்கள். தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டார்கள். பல சமயங்களில் அவர்கள்மீது வந்த வாதை இதனால் நின்றுபோயிற்று. இந்த வாதைகளையெல்லாம் தேவனுடைய பிள்ளைகள் தியானித்து தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியங்களில் மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்க வேண்டும். இதற்காகவே வேதாகமத்தில் இவை எழுதப்பட்டிருக்கிறது. (2கொரி 10:1-14)

ஆரோன் தூபவர்க்கம் போட்டு ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்த பொழுது, வாதை நிறுத்தப்படுகிறது. கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது. இஸ்ரவேல் சபையார் மத்தியில் வாதை தொடங்கிற்று. அந்த வாதையில் கோராகின் காரியத்தினிமித்தம் செத்தவர்கள் தவிர, அந்த வாதையினால் செத்துப்போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறுபேர் (எண் 16:49).

கோராகின் காரியத்தினிமித்தம் செத்தவர்கள் 253 பேர். மேலும் 14,700 பேர் இந்த வாதையில் மரித்துப் போனார்கள். ஆக மொத்தம் 14,953பேர் மரித்துப் போயிருக்க வேண்டுமென்று வேதபண்டிதர்கள் கணக்கிடுகிறார்கள் (எண் 16:27-35,49).

ஆரோன் தூபவர்க்கம்போட்டு ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்வதற்கு முன்பாகவே, இஸ்ரவேல் சபையாரில் அநேகர் செத்துப்போகிறார்கள். "ஒரு நிமிஷத்தில் அவர்களை அதமாக்குவேன்" (எண் 16:45) என்று கர்த்தர் சொன்னார். ஆரோனும் தூபகலசத்தை எடுத்துக்கொண்டு, ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்ய, ஜனங்கள் நடுவில் ஓடினார். ஆனாலும் அதற்குள்ளாக இத்தனைபேர் செத்துப்போனார்கள்.

வாதை நிறுத்தப்பட்ட பின்பு, ஆரோன் ஆசரிப்புக்கூடாரவாசலுக்கு மோசேயினிடத்தில் திரும்பி வருகிறார் (எண் 16:50).

வாதையை நிறுத்துவதற்காக இரத்தமும், தூபவர்க்கமும் பலிசெலுத்தப்பட்ட பரிசுத்த ஸ்தலத்திலிருந்து ஆரோன் திரும்பி வருகிறார் (எண் 16:46,50).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒருபோதும் அசதியாயிருக்கக்கூடாது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியங்களை உற்சாகமாயும், சுறுசுறுப்பாயும், பயபக்தியோடும் செய்யவேண்டும். நாம் காலதாமதம்பண்ணுகிற ஒவ்வொரு நிமிஷத்திலும், ஜனங்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேள்விப்படாமல் மரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு ஊழியக்காரரும் நினைவுகூரவேண்டும்.

கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டபோது, இஸ்ரவேல் சபையார் மத்தியிலே வாதை தொடங்கிற்று. கர்த்தருடைய கோபத்தினால் இஸ்ரவேல் ஜனங்களில் அநேகர் செத்துப்போனார்கள். ஆரோன் ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்தபோது, வாதை நிறுத்தப்படுகிறது. கர்த்தர் தம்முடைய வல்லமையினால் ஜனங்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதையும், தம்முடைய நீதியினாலும் கோபத்தினாலும் ஜனங்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதையும், தம்முடைய அன்பினாலும் இரக்கத்தினாலும் ஜனங்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதையும் இந்த சம்பவத்தின் மூலமாக தெளிவுபடுத்துகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது கோபப்பட்டாலும், அவர்கள் தவறு செய்யும்போது அவர்களை தம்முடைய நீதியினால் நியாயந்தீர்த்து தண்டித்தாலும், கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தமக்கு சொந்த ஜனமாக பாதுகாத்துக்கொள்கிறார். கர்த்தருடைய கோபத்திற்கு மத்தியிலும் அவருடைய அன்பும் இரக்கமும் வெளிப்படுகிறது. கர்த்தருடைய கோபம் வெளிப்படும்போதெல்லாம், மோசே இஸ்ரவேல் சபையாருக்காக கர்த்தருடைய சமுகத்தில் பரிந்து பேசி விண்ணப்பம்பண்ணுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தருடைய ஜனங்களுக்கு, மோசே மத்தியஸ்தராக கிடைத்திருப்பது, அவர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய சிலாக்கியம். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, மத்தியஸ்தராக ஊழியம் செய்வது நமக்கு கிடைத்திருக்கிற பாக்கியம்.

17 அதிகாரம்

லேவி கோத்திரத்தைச் சேர்ந்த கோராகும் அவனுடைய கூட்டத்தாரும், ஆரோனுக்கும் அவருடைய ஆசாரிய ஊழியத்திற்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். கர்த்தர் அவர்களுடைய முறுமுறுப்புக்களையும், கலகத்தையும் அடக்குகிறார். அதன் பின்பு இஸ்ரவேலின் மற்ற கோத்திரங்களைச் சேர்ந்த பிரபுக்கள், ஆரோனுக்கு விரோதமாகவும், அவருடைய ஆசாரிய ஊழியத்திற்கு விரோதமாகவும் முறுமுறுக்கிறார்கள்

லேவி கோத்திரத்தின் பிரபு ஆசாரிய ஊழியம் செய்யும்போது, மற்ற கோத்திரங்களின் பிரபுக்கள் ஏன் ஆசாரிய ஊழியம் செய்யக்கூடாது என்பது அவர்களுடைய விவாதமாகும். கர்த்தர் மனுஷருடைய இருதயங்களையும், அவர்களுடைய எண்ணங்களையும் அறிந்திருக்கிறார். கோத்திரப்பிரபுக்களின் முறுமுறுப்பும் கலகமும் அதிகரிப்பதற்கு முன்பாகவே, கர்த்தர் இந்தப் பிரச்சனையை தீர்த்து வைக்கிறார்.

ஆசாரிய ஊழியம் செய்யும் விஷயத்தில், லேவி கோத்திரத்தாருக்கும், மற்ற கோத்திரத்தாருக்கும் இடையே பிரச்சனைகளும், போட்டிகளும், பொறாமைகளும், வாக்குவாதங்களும், சண்டைகளும் வருவதற்கு வாய்ப்புள்ளது என்பதை கர்த்தர் முன்னறிகிறார். பிரச்சனைகள் அதிகமானால் இஸ்ரவேல் சபையார் மத்தியிலே இரத்தம் சிந்துதல் ஏற்படும். பிரச்சனைகள் வருவதற்கு முன்பாகவே கர்த்தர் இஸ்ரவேல் கோத்திரத்தார் மத்தியிலே ஒரு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இதற்கு முன்பு, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தபோது, கர்த்தர் அவர்கள்மீது கோபப்பட்டு, அவர்களுக்கு தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைச் சொன்னார். கர்த்தர் அனுப்பின வாதையினால் கலகக்காரர்களில் அநேகர் செத்துப்போனார்கள். அப்போது கர்த்தர் தம்முடைய கோபத்தினால் அற்புதத்தை செய்தார். இப்போதோ கர்த்தர் தம்முடைய கிருபையினாலே அற்புதத்தை செய்கிறார்.

கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக, இஸ்ரவேலின் பன்னிரண்டு வம்சத்து பிரபுக்களும், ஒவ்வொரு கோல் வீதமாக, பன்னிரண்டு கோல்களை கொண்டு வரவேண்டும் (எண் 17:1-7). பன்னிரண்டு கோல்களில் ஆரோனின் கோல் துளிர்த்திருக்கிறது. கர்த்தர் ஆரோனின் ஆசாரிய ஊழியத்தை அங்கீகரித்திருக்கிறார் என்பதற்கு இது அடையாளம் (எண் 17:8,9).

கர்த்தர் ஆரோனுடைய கோலை துளிர்க்கச்செய்து, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே முறுமுறுப்பு ஏற்படுவதை தடுத்து நிறுத்துகிறார் (எண் 17:10,11). கர்த்தருடைய வாசஸ்தலத்தின் கிட்டே வருகிற எவனும் சாகிறான் என்று இஸ்ரவேல் புத்திரர் மோசேயினிடத்தில் முறையிடுகிறார்கள் (எண் 17:12,13).

பன்னிரண்டு கோல்கள்
எண் 17:1-7

எண் 17:1. பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 17:2. நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுவினிடத்தில், ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோலை வாங்கி, அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதுவாயாக.

எண் 17:3. லேவியினுடைய கோல்மேல் ஆரோனின் பேரை எழுதக்கடவாய்; அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு வம்சத்தலைவனுக்காகவும் ஒவ்வொரு கோல் இருக்கவேண்டும்.

எண் 17:4. அவைகளை ஆசரிப்புக் கூடாரத்திலே நான் உங்களைச் சந்திக்கும் ஸ்தானமாகிய சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைக்கக் கடவாய்.

எண் 17:5. அப்பொழுது நான் தெரிந்துகொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும்; இப்படி இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்பை என்னைவிட்டு ஒழியப்பண்ணுவேன் என்றார்.

எண் 17:6. இதை மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்; அப்பொழுது அவர்களுடைய பிரபுக்கள் எல்லாரும் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படி ஒவ்வொரு பிரபுவுக்கு ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோல்களை அவனிடத்தில் கொடுத்தார்கள்; ஆரோனின் கோலும் அவர்களுடைய கோல்களுடனே இருந்தது.

எண் 17:7. அந்தக் கோல்களை மோசே சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் வைத்தான்.

கர்த்தர் ஆரோனையும் அவருடைய குடும்பத்தாரையும் தமக்கு ஆசாரிய ஊழியம் செய்யுமாறு நியமித்திருக்கிறார். ஆரோனுடைய ஆசாரிய பட்டத்தை, ஒரு அற்புதத்தின் மூலமாக, கர்த்தர் உறுதிபண்ண விரும்புகிறார். ஆசாரிய ஊழியம் கனமுள்ளது. இந்தக் கனமும் மேன்மையும் தங்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரும் ஆசைப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

ஆசாரிய ஊழியம் ஆரோனுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கர்த்தர் உறுதிபண்ணுகிறார். இதனால் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் ஆரோனுக்கு விரோதமாக முறுமுறுக்காமல் அமைதியா இருக்கிறார்கள்.

ஆரோனுக்கும் அவருடைய ஆசாரிய ஊழியத்திற்கும் விரோதமாக முறுமுறுக்கிறவர்கள், கர்த்தருக்கும் அவருடைய நியமத்திற்கும் விரோதமாக முறுமுறுக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்கள் அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் கலகக்காரரை தண்டிப்பார். இஸ்ரவேல் சபையார், கர்த்தருடைய நியமத்தை ஏற்றுக்கொண்டு, கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்காமல் தண்டனைக்கு தப்பித்துக்கொள்கிறார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுவினிடத்தில், ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோலை வாங்கி, அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதுவாயாக" (எண் 17:1,2) என்று சொல்லுகிறார்.

மொத்தம் 13 கோல்கள் இருந்தன என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு பன்னிரண்டு கோல்களும், லேவியின் கோத்திரத்திற்கு ஆரோனுடைய கோலுமாகச் சேர்ந்து, மொத்தம் 13 கோல்கள் (எண் 17:2-3,6). கோல்களில் கோத்திரத்துப் பிரபுவின் பேரை எழுதும்போது, அதை அவர்களுடைய பிறப்பின் வரிசைப் பிரகாரமாக எழுதவில்லை (ஆதி 29:32-30:24; ஆதி 35:16-20) ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலும் இஸ்ரவேல் புத்திரர்கள் பாளயமிறங்கியிருந்த வரிசைப் பிரகாரம் அவர்களுடைய பெயர்கள் கோல்களில் எழுதப்படுகிறது. (எண் 2:3-34)

"லேவியினுடைய கோலின்மேல் ஆரோனின் பேரை எழுதக்கடவாய்; அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு வம்சத் தலைவனுக்காகவும் ஒவ்வொரு கோல் இருக்கவேண்டும்" (எண் 17:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கோல்களில் யாருடைய பேரை எழுதவேண்டும் என்னும் குழப்பமில்லாமல் அது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது (எண் 17:6).

லேவி கோத்திரத்தாரில் ஒருசிலர் கோராகோடு சேர்ந்து கொண்டு, கலகம் பண்ணினார்கள். தேவன் ஆரோனைத் தமது ஊழியத்திற்காகத் தெரிந்தெடுத்திருப்பதை மறுபடியும் உறுதிபண்ணுவது அவசியமாயிருக்கிறது. கோராகுவைப் போல வேறு யாராவது எழும்பி, ஆரோனுக்கு எதிராகக் கலகம் பண்ணக்கூடாது. ஆரோன் செய்த பாவநிவிர்த்தியின் மூலமாக இஸ்ரவேல் புத்திரர்களுக்கு வந்த வாதை நின்றுபோயிற்று. (எண் 16:45-50) தேவன் ஆரோனைத் தெரிந்தெடுத்திருப்பதற்கு இது ஓர் அடையாளமாகும். தன்னுடைய தெரிந்தெடுப்பைத் தேவன் மறுபடியுமாக உறுதிபண்ணுகிறார். கோலை துளிர்க்க வைத்து,உறுதிபண்ணுகிறார். (எண் 17:1-11).

ஆசாரிய ஊழியம் கனமுள்ள ஊழியமாயிருப்பதினால், இஸ்ரவேல் கோத்திரத்தாரின் பிரபுக்கள் எல்லோருமே, ஆசாரிய ஊழியத்தை செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இந்த ஆசையினால் அவர்கள் மத்தியிலே போட்டிகளும் பொறாமைகளும் ஏற்படுகிறது.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, ஆரோனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும், ஆசாரிய ஊழியத்தை ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஆசாரிய ஊழியம் கர்த்தருடைய பரிசுத்த நியமனம். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தருடைய நியமத்திற்கு கீழ்ப்படியவேண்டும். ஆரோனைப்போல அல்லது ஆரோனுக்கு பதிலாக தாங்களும் ஆசாரிய ஊழியம் செய்யவேண்டுமென்று ஆசைப்படுவது, கர்த்தருடைய தெய்வீக நியமத்திற்கு எதிர்த்து நிற்கும் காரியமாகும்.

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தின் மூலமாக இஸ்ரவேல் சபையாரை ஆளுகை செய்கிறார். ஆனால் இஸ்ரவேல் சபையாரோ கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் நீதியுள்ளவர். அவர் கிருபையுள்ளவராகவும் இருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து கலகம்பண்ணும்போது, கர்த்தர் வர்களைத் தண்டிப்பார். இது கர்த்தருடைய நீதி. இஸ்ரவேல் சபையார் தமக்கு விரோதமாக முறுமுறுப்பதற்கு முன்பாகவே, கர்த்தர் தம்முடைய கிருபையினால், அவர்களுடைய முறுமுறுப்புக்களை தடைபண்ணுகிறார். அவர்கள் தண்டிக்கப்படாமல் அவர்களை பாதுகாக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய வம்சங்களின் பிரபுக்களிடத்திலிருந்து கோல்களை வாங்கவேண்டும். ஒவ்வொரு பிரபுவுக்கும் ஒரு கோல் வீதமாக பன்னிரண்டு கோல்களை வாங்கவேண்டும். இந்தக் கோல்கள் வாதுமை மரத்தின் கோல்கள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஆரோன் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர். இஸ்ரவேல் சபையாரில் லேவி கோத்திரத்தார் ஒரு தனி கோத்திரமாக எண்ணப்படும்போது, எப்பிராயீம், மனாசே ஆகிய இரண்டு வம்சத்தாரும் ஒரே கோத்திரமாக எண்ணப்படுவார்கள். இவர்கள் இருவரும் யோசேப்பின் குமாரர்.

மோசே இஸ்ரவேல் வம்சத்தாரிடத்தின் பிரபுக்களிடத்தில் பன்னிரண்டு கோல்களை வாங்குகிறார். இந்தக் கோல்களில் ஆரோனுடைய கோலும் ஒன்று என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். ஆரோனுடைய கோலைச் சேர்த்து மொத்தம் பதிமூன்று கோல்கள் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு கோலிலும், ஒவ்வொரு பிரபுவின் பெயர் எழுதப்படுகிறது. லேவியினுடைய கோலின்மேல் ஆரோனுடைய பெயர் எழுதப்படுகிறது.

மோசே இந்தப் பன்னிரண்டு கோல்களையும் வாங்கி, அவைகளை ஆசரிப்புக் கூடாரத்திலே கர்த்தர் அவர்களைச் சந்திக்கும் ஸ்தானமாகிய சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைக்கவேண்டும் (எண் *17:4*). பன்னிரண்டு கோல்களும் மகாபரிசுத்த ஸ்தலத்திலுள்ள சாட்சிப்பெட்டிக்கு முன்பாக ஒரு நாள் இரவு முழுவதும் வைக்கப்பட்டிருக்கும்.

"கர்த்தர் அவர்களைச் சந்திக்கும் ஸ்தானம்" என்பது ஆசரிப்புக் கூடாரத்தில் உடன்படிக்கைப் பெட்டி இருக்கும் ஸ்தலம். இது தேவன் மோசேயோடு பேசிய இடம் (எண் *17:4,7-10;* யாத் *29:42-43;* யாத் *30:6,36*).

சாட்சிப்பெட்டியில் கிருபாசனம் உள்ளது. தேவனுடைய பிரசன்னம் அங்கே இருக்கிறது என்பதற்கு கர்த்தருடைய சாட்சிப்பெட்டி அடையாளமாகவும், சாட்சியாகவும் இருக்கிறது.

கர்த்தர் எந்தக் கோத்திரத்தின் பிரபுவை தமக்கு ஆசாரிய ஊழியம் செய்யுமாறு தெரிந்துகொள்கிறாரோ, அந்தப் பிரபுவினுடைய கோல் துளிர்க்கும். கர்த்தர் அந்தப் பிரபுவை ஆசாரிய ஊழியத்திற்கு தெரிந்தெடுத்திருக்கிறார் என்பதற்கு அந்தக் கோல் துளிர்ப்பது ஒரு அடையாளம். கர்த்தர் இந்தத் திட்டத்தை மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் தெரிந்துகொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும்; இப்படி இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்பை என்னைவிட்டு ஒழியப்பண்ணுவேன்" (எண் 17:5) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தனக்கு சொன்னதை மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். அப்பொழுது அவர்களுடைய பிரபுக்கள் எல்லாரும் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படி ஒவ்வொரு பிரபுவுக்கு ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோல்களை மோசேயினிடத்தில் கொண்டு வருகிறார்கள்; ஆரோனின் கோலும் அவர்களுடைய கோல்களுடனே இருக்கிறது. அந்தக் கோல்களை மோசே சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் வைக்கிறார் (எண் 17:6,7).

ஆசாரிய பட்டம் உறுதிபண்ணப்பட்ட விதம் வருமாறு :

1. நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் பிதாக்களின் வம்சங்களாகிய ஒவ்வொரு வம்சத்தினுடைய பிரபுவினிடத்தில், ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோலை வாங்கி, அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதுவாயாக. (எண் 17:2-3,6).
2. லேவியினுடைய கோலின்மேல் ஆரோனின் பேரை எழுதக்கடவாய். (எண் 17:3).
3. அவைகளை ஆசரிப்புக் கூடாரத்திலே நான்உங்களைச் சந்திக்கும் ஸ்தானமாகிய சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைக்கக் கடவாய் (எண் 17:4).
4. அப்பொழுது நான் தெரிந்து கொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும். (எண் 17:5).

ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது
எண் 17:8-13

எண் 17:8. மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்தபோது, இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது.

எண் 17:9. அப்பொழுது மோசே கர்த்தருடைய சமுகத்திலிருந்த அந்தக் கோல்களையெல்லாம் எடுத்து, இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் காண வெளியே கொண்டுவந்தான்; அவர்கள் கண்டு, அவரவர் தங்கள் தங்கள் கோல்களை வாங்கிக்கொண்டார்கள்.

எண் 17:10. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: ஆரோனின் கோல் அந்தக் கலகக்காரருக்கு விரோதமான அடையாளமாகும்பொருட்டு, அதைத் திரும்பவும் சாட்சிப்பெட்டிக்கு முன்னே கொண்டு போய் வை. இப்படி அவர்கள் எனக்கு விரோதமாய் முறுமுறுப்பதை ஒழியப்பண்ணுவாய், அப்பொழுது அவர்கள் சாகமாட்டார்கள் என்றார்.

எண் 17:11. கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே மோசே செய்தான்.

எண் 17:12. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் மோசேயை நோக்கி: இதோ, செத்து அழிந்துபோகிறோம்; நாங்கள் எல்லாரும் அழிந்துபோகிறோம்.

எண் 17:13. கர்த்தரின் வாசஸ்தலத்தின் கிட்டே வருகிற எவனும் சாகிறான்; நாங்கள் எல்லாரும் செத்துத்தான் தீருமோ என்றார்கள்.

ஆசாரிய ஊழியத்தைக் குறித்து இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே விவாதம் உண்டாயிற்று. கர்த்தர் இந்த விவாதத்தை ஒரு அற்புதத்தின் மூலமாக தீர்த்து வைக்கிறார். கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக, பன்னிரண்டு கோல்களும், சாட்சியின் கூடாரத்திலே, கர்த்தருடைய சமுகத்தில் வைக்கப்படுகிறது. அவை இரவு முழுவதும் அங்கேயே வைக்கப்பட்டிருக்கிறது.

மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிறார். அப்போது, "இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்க்கிறது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுக்கிறது" (எண் 17:8).

மோசே கோல்களை ஆசரிப்புக்கூடாரத்தில் எங்கு வைத்தார் என்று கூறப்படவில்லை. சோதிக்கப்பட்ட பின்பு, ஆரோனுடைய கோல் உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்படுகிறது. (எண் 17:10; எபி 9:4). சாலொமோனின் நாட்களில் உடன்படிக்கைப் பெட்டிக்குள் ஆரோனின் கோல் காணப்படவில்லை. (1இராஜா 8:9) பெலிஸ்தியர் உடன்படிக்கைப் பெட்டியை அபகரித்துச் சென்றபோது, ஆரோனின் கோல் காணாமற்போயிருக்கலாம் (1சாமு 4-7).

ஆசரிப்புக் கூடாரத்திற்குச் சாட்சியின் கூடாரம் என்னும் பெயரும் உண்டு. சாட்சி என்பது பத்துக் கட்டளைகளடங்கிய கற்பலகைகளைக் குறிக்கும்.

ஆரோனின் கோலில் காணப்பட்ட காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது.
2. அது பூப்பூத்தது.
3. அது வாதுமைப் பழங்களைக் கொடுத்தது.

ஆரோனின் கோலில் காணப்படும் ஒவ்வொரு காரியமும் தேவனுடைய அற்புதமாகும். உலர்ந்து போன கோல் ஒரே நாளில் துளிர்க்கிறது. ஆரோனின் கோல் என்னும் வாக்கியம் வேதாகமத்தில் இரண்டு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எண் 17:17; எபி 9:4).

அப்பொழுது மோசே கர்த்தருடைய சமுகத்திலிருந்த அந்தக் கோல்களையெல்லாம் எடுத்து, இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் காண வெளியே கொண்டுவருகிறார்; அவர்கள் கண்டு, அவரவர் தங்கள் தங்கள் கோல்களை வாங்கிக்கொள்கிறார்கள் (எண் 17:9).

ஒரே நாள் இரவில் ஆரோனின் உலர்ந்தகோல் துளிர்த்தது. பூப்பூத்தது. வாதுமைப் பழங்களைக் கொடுத்தது. இந்த அற்புதத்தை இஸ்ரவேல் புத்திரர்கள் எல்லோரும் காண்கிறார்கள் (எண் 17:8-9).

ஆரோனுடைய கோல் மாத்திரமே துளிர்த்திருக்கிறது. மற்ற கோல்கள் துளிர்க்கவில்லை. அவையெல்லாம் எப்படி வைக்கப்பட்டதோ அப்படியே இருக்கிறது. ஆரோனுடைய கோல் துளிர்த்தது மாத்திரமல்ல, அது பூப்பூத்து வாதுமை பழங்களையும் கொடுத்திருக்கிறது. ஒரே நாள் இரவில் ஆரோனுடைய கோலில் இவ்வளவு அற்புதங்கள் நடைபெற்றிருக்கிறது.

மோசே சாட்சி கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் வைக்கப்பட்டிருந்த பன்னிரண்டு கோல்களையும் எடுத்துக்கொண்டு வெளியே வருகிறார். அந்தக் கோல்களைக் காண்பதற்காக இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் வெளியே காத்திருக்கிறார்கள். கோத்திரப்பிரபுக்களெல்லாம் அங்கே அவர்களோடு கூடயிருக்கிறார்கள். மோசே பன்னிரண்டு கோல்களையும் வெளியே கொண்டு வந்த போது, அவரவர் தங்கள் தங்கள் கோல்களை மோசேயினிடத்திலிருந்து வாங்கிக்கொள்கிறார்கள்.

ஆரோனும் தன்னுடைய கோலை வாங்கிக்கொள்கிறார். ஆரோனுடைய கோல் மாத்திரம் துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமை பழங்களை கொடுத்திருக்கிறது. மற்ற கோல்கள் உயிரில்லாமல், காய்ந்த நிலமையிலிருக்கிறது. இது கர்த்தருடைய அற்புதம். கர்த்தரே ஆரோனின் கோலை துளிர்விடச் செய்கிறவர். அவரே மற்ற கோல்களை துளிர்விடாமலிருக்கச் செய்கிறவர்.

ஆரோனுடைய துளிர்த்த கோல், அவருக்கு விரோதமாகக் கலகம் செய்கிற கோத்திரப்பிரபுக்களுக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் ஆரோனையும் அவருடைய குடும்பத்தாரையும் மாத்திரம் ஆசாரிய ஊழியத்திற்கு நியமனம் செய்திருக்கிறார் என்பதற்கு இது அடையாளம். மற்ற கோத்திரத்தின் பிரபுக்கள் தமக்கு ஆசாரிய ஊழியம் செய்ய நியமிக்கப்படவில்லை என்பதற்கும் இது அடையாளம்.

பொதுவாக ஒரே நாள் இரவில் ஒரு கோல் துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமை பழங்களை கொடுக்காது. இது கர்த்தருடைய அற்புதமான கிரியையாகயிருப்பதினால், இந்தக் கோல் ஒரே நாள் இரவில் துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமை பழங்களை கொடுத்திருக்கிறது.

இந்த விஷயத்தில் மோசே யாரையும் ஏமாற்றவில்லை. அவர் பன்னிரண்டு கோல்களையும் சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் வைத்துவிட்டு, இரவு வேளையிலே யாருக்கும் தெரியாமல், ஆரோனுடைய கோலுக்கு பதிலாக, துளிர்விட்ட வேறொரு கோலை வைத்திருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆரோனுடைய கோலோ துளிர்விட்டது மாத்திரமல்ல, அது பூப்பூத்து, வாதுமை பழங்களை கொடுத்திருக்கிறது. இவையெல்லாமே ஒரே நாள் இரவில் நடைபெற்றிருக்கிறது.

ஆசாரிய ஊழியத்திற்கு கர்த்தர் ஆரோனை தெரிந்தெடுத்திருக்கிறார் என்பதற்கு இது அடையாளம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கனிகொடுக்கிறவர்களாக இருக்கவேண்டும். கர்த்தர் நம்மை ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார் என்பதற்கு இதுவே அடையாளம். நம்முடைய ஊழியத்தில் நாம் கனிகொடுக்கவில்லையென்றால், கர்த்தர் நம்மை ஊழியத்திற்கு அழைத்திருக்கிறாரா என்பது சந்தேகமாகவே இருக்கும்.

"நீதிமான் பனையைப்போல் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்" (சங் 92:12-15).

கர்த்தருடைய விருட்சங்கள் உலர்ந்துபோன விருட்சங்களைப்போல இருந்தாலும், அவை சாரமுள்ள விருட்சங்களாயிருக்கும். அவை ஏற்ற காலத்தில் துளிர்விட்டு, பூப்பூத்து, கனிதரும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனின் கோல் அந்தக் கலகக்காரருக்கு விரோதமான அடையாளமாகும்பொருட்டு, அதைத் திரும்பவும் சாட்சிப்பெட்டிக்கு முன்னே கொண்டு போய் வை. இப்படி அவர்கள் எனக்கு விரோதமாய் முறுமுறுப்பதை ஒழியப்பண்ணுவாய், அப்பொழுது அவர்கள் சாகமாட்டார்கள்" (எண் 17:10) என்று சொல்லுகிறார்.

"அதைத் திரும்பவும் சாட்சிப்பெட்டிக்கு முன்னே கொண்டு வை" என்னும் இந்த வாக்கியத்தில் "திரும்பவும்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பது, இதற்கு முன்பே அந்தக் கோல் சாட்சிப் பெட்டிக்கு முன்னே இருந்ததைக் குறிப்பிடுகிறது. ஆரோனின் கோலோடு மற்ற பன்னிரண்டு கோல்களும் சாட்சிப் பெட்டிக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தது. மறுநாளில் துளிர்த்து, பூப்பூத்து, கனிகொடுத்த அந்த கோல் சாட்சிப் பெட்டிக்குள்ளே ஒரு அடையாளமாக வைக்கப்படுகிறது. (எபி 9:4). தேவன் ஆரோனைத் தமது ஆசாரிய ஊழியத்தைச் செய்வதற்காகத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்பதற்கு இது அடையாளமாகும்.

கர்த்தர் தம்முடைய ஆசாரிய ஊழியத்தைக் கனம்பண்ணுகிறார். ஆசாரிய பட்டம் ஆரோனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கர்த்தர் உறுதிபண்ணுகிறார். ஆரோனுடைய கோல் துளிர்விட்டு, பூப்பூத்து, கனிகொடுத்தது, கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய திட்டத்திற்கும், அவருடைய தீர்மானத்திற்கும் அடையாளம்.

ஆசாரிய ஊழியம் கனிகொடுக்கும் ஊழியமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கர்த்தருக்கு பிரியமானவர்களாகவும், கர்த்தருடைய சபையாருக்கு பிரயோஜனமானவர்களாகவும் இருக்கவேண்டும்.

ஆரோன் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்போது, ஆரோனுடைய குமாரரும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம் செய்வார்கள் என்பது கர்த்தருடைய திட்டம். இந்த திட்டத்திற்கு அடையாளமாக, ஆரோனுடைய கோல் வாதுமை பழங்களை கொடுப்பது மாத்திரமல்ல, அது துளிர்விட்டு பூப்பூக்கவும் செய்கிறது. பூ காயாகி, அது கனியாகும். ஆரோன் இப்போது பழமாகயிருக்கிறார். ஆரோனுடைய குமாரர் இப்போது பூத்த பூக்களைப்போல இருக்கிறார்கள். அவர்களும் இனிமேல் கனிகளாவார்கள். ஆரோனுக்கு பின்பு, அவருடைய குமாரரும் ஆசாரிய ஊழியத்தை செய்வார்கள் என்பதற்கு இது அடையாளம்.

ஆசாரிய ஊழியம் ஆரோனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் நித்திய ஊழியமாக நியமிக்கப்படவில்லை. கர்த்தர் நியமித்திருக்கிற காலம் வரையிலும் ஆரோனுடைய குடும்பத்தார் ஆசாரிய ஊழியம் செய்வார்கள். ஒரு விருட்சத்தின் கிளை இப்போது துளிர்த்திருந்தாலும், அது இனிமேல் வாடிப்போவதற்கும், பட்டுப்போவதற்கும், உதிர்ந்துபோவதற்கும் வாய்ப்புள்ளது. ஒரு விருட்சத்தின் துளிர்களும், பூக்களும் காய்ந்து உதிர்ந்துபோவதுபோல, இப்போது ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள், இனிமேல் அந்த ஊழியத்தை செய்ய முடியாமல் போவதற்கும் வாய்ப்புள்ளது.

ஆரோனுடைய கோல் துளிர்விட்டு, பூப்பூத்து கனிகொடுப்பது இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய ஆசாரியத்துவத்திற்கும் அடையாளம்.

ஆரோனுடைய கோல் சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் துளிர்விட்டு வளர்ந்ததுபோல, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தம்முடைய பிதாவின் சமுகத்திலே, துளிர்விட்டு வளருகிறார்.

"இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது" (ஏசா 53:2).

மோசே கர்த்தருடைய வார்த்தையின்படி, கர்த்தருடைய சமுகத்திலிருந்த அந்தக் கோல்களையெல்லாம் எடுத்து, இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் காண வெளியே கொண்டுவருகிறார்; அவர்கள் கண்டு, அவரவர் தங்கள் தங்கள் கோல்களை வாங்கிக்கொள்கிறார்கள் (எண் 17:9).

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆரோனின் கோல் அந்தக் கலகக்காரருக்கு விரோதமான அடையாளமாகும்பொருட்டு, அதைத் திரும்பவும் சாட்சிப்பெட்டிக்கு முன்னே கொண்டு போய் வை" (எண் 17:11) என்று சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே மோசே செய்கிறார். அவர் ஆரோனுடைய துளிர்த்த கோலை, திரும்பவும் சாட்சிப்பெட்டிக்கு முன்னே கொண்டு போய் வைக்கிறார்.

மனுக்குலத்தினுடைய பாவத்தை நீக்குவதும், மனுபுத்திரர் பாவத்தில் விழுந்துவிடாதவாறு அவர்களை பாதுகாப்பதும் கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு ஒழியப்பண்ணுகிறார். இதனால் நாம் மரணத்திற்கு தப்பிக்கிறோம்.

கர்த்தர் ஆரோனுடைய ஆசாரிய ஊழியத்தை உறுதிபண்ணுகிறார். இதனால் இஸ்ரவேல் சபையார் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுப்பதை நிறுத்திக்கொள்வார்கள். அவர்கள் பாவம் செய்யாமல் தப்பித்துக்கொள்வார்கள். அவர்கள் பாவத்தின் சம்பளமாகிய மரணத்திற்கு தப்பித்துக்கொள்வார்கள்.

கர்த்தர் நம்மை திருத்துவதற்கு பல்வேறு உபாயங்களைக் கையாளுகிறார். பல சமயங்களில் கர்த்தர் நம்மோடு அன்பாய்ப் பேசுகிறார். சில சமயங்களில் அவர் நம்மோடு கோபமாய்ப் பேசுகிறார். நம்மைத் தண்டிக்கிறார். கர்த்தர் நமக்காக எதை செய்தாலும், நாம் சாகாமல் பிழைக்கவேண்டும் என்பதே அவருடைய சித்தமாயிருக்கிறது.

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் மோசேயை நோக்கி, "இதோ, செத்து அழிந்துபோகிறோம்; நாங்கள் எல்லாரும் அழிந்துபோகிறோம். கர்த்தரின் வாசஸ்தலத்தின் கிட்டே வருகிற எவனும் சாகிறான்; நாங்கள் எல்லாரும் செத்துத்தான் தீருமோ" (எண் 17:12,13) என்று சொல்லுகிறார்கள்.

கோராகுவினுடைய கலகத்தின் நிமித்தம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் வாதை வந்தது. தேவன் மேலும் பல வாதைகளை அவர்களுக்கு அனுப்பினார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்கு அருகில் வருவதற்கே பயப்படுகிறார்கள். (எண் 17:12-13).

தேவன் லேவியரோடு தமது ஆசீர்வாதங்களை மறுபடியும் புதுப்பிக்கிறார். ஆசரிப்புக் கூடாரத்து ஆசாரியப் பணிவிடைகள் பற்றிய பிரமாணங்களைக் கொடுக்கிறார். (எண் 18:1-32) சிவப்புக் கிடாரியின் பிரமாணம், இஸ்ரவேல் ஜனங்கள் வேறுபிரிந்து ஜீவிக்க வேண்டிய பிரமாணம், ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக தங்களைச் சுத்திகரிக்க வேண்டிய பிரமாணம் போன்ற பல பிரமாணங்களைக் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார். (எண் 19:1-22).

இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயினிடத்தில் ஏன் இவ்வாறு சொன்னார்கள் என்பதற்கு வேதபண்டிதர்கள் இரண்டு விதமான காரணங்களை சொல்லுகிறார்கள். அவற்றின் விவரம் வருமாறு : 1. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தையில் திருப்தியடையவில்லை. அவர்கள் கர்த்தருக்குவிரோதமாக குறை கூறுகிறார்கள்.

2. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். அவர்கள் தேவனுடைய தெய்வீக சித்தத்திற்கும், அவருடைய திட்டத்திற்கும், நியமத்திற்கும் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணியபோது, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்தது. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது என்பதையும், தாங்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பதையும் அங்கீகரிப்பார்கள்.

அவர்களுடைய மனதிலே பெருமையும், இருதயத்திலே கடினமும் இருக்குமென்றால், அவர்கள் தாங்கள் செய்ததை பாவம் என்று அங்கீகரிக்கமாட்டார்கள். தங்களுடைய வார்த்தைகளும் செய்கைகளும் நீதியானது என்று சொல்லி கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுப்பார்கள். இஸ்ரவேல் புத்திரர் இங்கு பேசுவது, கர்த்தருக்கு விரோதமாய் முறுமுறுக்கும் வார்த்தையாகயிருக்கலாம் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

வேதபண்டிதர்களில் வேறு சிலரோ, இந்த வசனங்களுக்கு வேறுவிதமாக விளக்கம் சொல்லுகிறார்கள். கர்த்தர் ஆரோனை ஆசாரிய பட்டத்திற்கு நியமித்திருக்கிறார். இது கர்த்தருடைய தெய்வீக நியமனம். இஸ்ரவேல் சபையார் கர்த்தருடைய தெய்வீக சித்தத்திற்கும், அவருடைய தெய்வீக நியமத்திற்கும் கீழ்ப்படிகிறார்கள். தாங்கள் இனிமேல் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக கலகம்பண்ணமாட்டோம் என்றும், அவ்வாறு இனிமேல் கலகம்பண்ணினால் தங்களுக்கு அழிவு நிச்சயமாய் வரும் என்றும் இஸ்ரவேல் புத்திரர் சொல்லுவதாக, வேதபண்டிதர்கள் இந்த வசனத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

18 அதிகாரம்

ஆரோனுக்கு ஆசாரிய ஊழியப்பட்டம் பரிபூரணமாக உறுதிபண்ணப்படுகிறது. கர்த்தர் ஆரோனுடைய ஊழியத்தைக் குறித்து இந்த அதிகாரத்தில் சொல்லுகிறார். இங்கு சொல்லப்பட்டிருக்கிற சம்பவம் ஏற்கெனவே சொல்லப்பட்டிருந்தாலும், அவை இந்த அதிகாரத்திலும் மறுபடியுமாய்ச் சொல்லப்படுகிறது.

ஆரோனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியங்களைப்பற்றிய விவரம். லேவியர் மூலமாக ஆரோனுக்கு கிடைக்கும் உதவிகள் (எண் 18:1-7).

ஆரோனும் லேவியரும் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது அவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம். ஆசாரியருக்கு கொடுக்கப்படும் விசேஷித்த சம்பளம் (எண் 18:8-19). லேவியருக்கு கொடுக்கப்படும் சம்பளம் (எண் 18:25-32).

ஆசாரியரின் ஊழியம் எண் 18:1-7

எண் 18:1. பின்பு கர்த்தர் ஆரோனை நோக்கி: நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உன் தகப்பன் வம்சத்தாரும் பரிசுத்த ஸ்தலத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும்; நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உங்கள் ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும்.

எண் 18:2. உன் தகப்பனாகிய லேவியின் கோத்திரத்தாரான உன் சகோதரரையும் உன்னோடே கூடியிருக்கவும் உன்னிடத்திலே சேவிக்கவும் அவர்களைச் சேர்த்துக்கொள்; நீயும் உன் குமாரருமோ சாட்சியின் கூடாரத்துக்குமுன் ஊழியம் செய்யக்கடவீர்கள்.

எண் 18:3. அவர்கள் உன் காவலையும் கூடாரம் அனைத்தின் காவலையும் காக்கக்கடவர்கள்; ஆகிலும் அவர்களும் நீங்களும் சாகாதபடிக்கு, அவர்களும் பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகளண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சேராமல்,

எண் 18:4. உன்னோடே கூடிக்கொண்டு, கூடாரத்துக்கடுத்த எல்லாப் பணிவிடையையும் செய்ய, ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக்காக்கக்கடவர்கள்; அந்நியன் ஒருவனும் உங்களிடத்தில் சேரக்கூடாது.

எண் 18:5. இஸ்ரவேல் புத்திரர்மேல் இனிக் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தின் காவலையும் பலிபீடத்தின் காவலையும் காக்கக்கடவீர்கள்.

எண் 18:6. ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்ய, கர்த்தருக்குக் கொடுக்கப்பட்ட உங்கள் சகோதரராகிய லேவியரை நான் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உங்களுக்கு தத்தமாகக் கொடுத்தேன்.

எண் 18:7. ஆகையால் நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் பலிபீடத்துக்கும் திரைக்கு உட்புறத்துக்கும் அடுத்த எல்லாவற்றையும் செய்யும்பொருட்டு, உங்கள் ஆசாரிய ஊழியத்தைக் காத்துச் சேவிக்கக்கடவீர்கள்; உங்கள் ஆசாரிய ஊழியத்தை உங்களுக்கு தத்தமாக அருளினேன்; அதைச் செய்யும்படி சேருகிற அந்நியன் கொலை செய்யப்படக்கடவன் என்றார்.

இதற்கு முந்தின அதிகாரத்தின் கடைசிப்பகுதியில், இஸ்ரவேல் புத்திரர் மோசேயை நோக்கி, "இதோ, செத்து அழிந்துபோகிறோம்; நாங்கள் எல்லாரும் அழிந்துபோகிறோம். கர்த்தரின் வாசஸ்தலத்தின் கிட்டே வருகிற எவனும் சாகிறான்; நாங்கள் எல்லாரும் செத்துத்தான் தீருமோ" (எண் 17:12,13) என்று சொன்னார்கள். அவர்களால் கர்த்தரின் வாசஸ்தலத்தின் கிட்டே போகமுடியவில்லை.

தம்முடைய வாசஸ்தலத்தின் கிட்டே ஆசாரியர் வரவேண்டும் என்பது கர்த்தருடைய திட்டம். தங்களால் வாசஸ்தலத்தின் கிட்டே வரமுடியவில்லை என்று இஸ்ரவேல் புத்திரர் முறையிடுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய முறையீடுகளுக்கு இந்த அதிகாரத்தில் பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

ஆசாரியர்கள் மாத்திரமே கர்த்தருடைய வாசஸ்தலத்தின் கிட்டே வந்து அவருக்கு ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தில் ஆசாரியர்கள் இஸ்ரவேல் புத்திரரின் பிரதிநிதிகளாயிருக்கிறார்கள். கர்த்தர் ஆரோனையும், அவருடைய ஆசாரிய ஊழியத்தையும் கனம்பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் இந்த அதிகாரத்தில், ஆரோனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியப்பொறுப்புக்களைப்பற்றி சொல்லுகிறார். ஆரோன் ஒரு ஆசாரியராகயிருந்து, அவர் கர்த்தருக்கு செய்யவேண்டிய ஊழியங்களெல்லாம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசாரிய ஊழியம் கனமுள்ள ஊழியமாகயிருந்தாலும், ஆரோன் அந்த ஊழியத்தை மிகுந்த கவனத்தோடும், பயபக்தியோடும், பரிசுத்தமான நடுக்கத்தோடும் செய்யவேண்டும். ஆரோனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியம் மிகவும் விசேஷமானது. அது அதிக பரிசுத்தமானது. கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கும் ஆசாரிய ஊழியத்தை ஆரோன் மிகுந்த பரிசுத்தத்தோடு நிறைவேற்றவேண்டும்.

கர்த்தர் ஆரோனை நோக்கி: நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உன் தகப்பன் வம்சத்தாரும் பரிசுத்த ஸ்தலத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும்; நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உங்கள் ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும் (எண் 18:1) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் அக்கிரமங்களுக்கு ஆரோனும், அவனுடைய குமாரரும் பொறுப்பேற்க வேண்டும். பாவநிவிர்த்திக்காக செய்யவேண்டிய பாவநிவாரண பலிகளையெல்லாம் இவர்கள் செலுத்த வேண்டும். பரிசுத்த ஸ்தலத்தில் இவர்கள் செய்யும் ஆசாரிய ஊழியத்தின் மூலமாக இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை இவர்கள் சுமந்து அவற்றிற்குப் பாவநிவாரணம் செய்ய வேண்டும்.

அக்கிரமம் என்பது பாவம் செய்வது, பாவம் செய்ய வேண்டுமென்று நினைப்பது ஆகிய இரண்டையுமே குறிக்கும். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் பிசாசானவன் கிரியை செய்து, அவர்களை அக்கிரமக்காரரின் கிரியைகளைச் செய்ய வைக்கிறான் (யோவான் 8:44; எபே 2:1-3; 1யோவான் 3:8; வெளி 12:9).

கர்த்தர் பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்தையும், ஆசாரிய ஊழியத்தையும் பற்றிச் சொல்லும்போது, ஆரோனும் அவருடைய குமாரரும், அவருடைய தகப்பன் வம்சத்தாரும் "பரிசுத்த ஸ்தலத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும்" என்றும், ஆரோனும் அவருடைய குமாரரும் "ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும்" என்றும் சொல்லுகிறார்.

பரிசுத்த ஸ்தலத்தைப்பற்றிய அக்கிரத்தைச் சுமக்கவேண்டிய பொறுப்பு ஆரோனுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், லேவியருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய அக்கிரமத்தை சுமக்க வேண்டிய பொறுப்பு ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய வாசஸ்தலம் பரிசுத்தமானது. வாசஸ்தலத்தின் பரிசுத்தத்திற்கு ஆரோனும் அவருடைய குமாரரும், லேவியரும் காவலாயிருக்கவேண்டும். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே இவர்களை தவிர அந்நியர்கள் யாரும் பிரவேசிக்கக்கூடாது. அந்நியர்கள் என்னும் வார்த்தை பரிசுத்தமில்லாமல் தீட்டாயிருக்கிறவர்களையும் குறிக்கும். இவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே இருக்கவேண்டியவர்கள்.

பரிசுத்த ஸ்தலத்திலே ஆசாரியரைத் தவிர அந்நியர்களோ அல்லது அசுத்தமானவர்களோ பிரவேசிக்கும்போது பரிசுத்த ஸ்தலம் தீட்டுப்படும். கர்த்தர் எரிச்சலுள்ள தேவன். தம்முடைய பரிசுத்த ஸ்தலம் சுத்தமாயிருக்கவேண்டும் என்றும், பரிசுத்த ஸ்தலத்தைப்பற்றிய காவலை ஆரோனும் அவருடைய குமாரரும், லேவியரும் காக்கவேண்டும் என்றும் கர்த்தர் தீர்மானித்திருக்கிறார்.

ஆசாரியர், லேவியர் ஆகியோருடைய காவலையும் மீறி அந்நியர் யாராவது பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்தால், அதற்கு ஆசாரியரும், லேவியரும் பொறுப்பேற்கவேண்டும். தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை தீட்டுப்படுத்தின குற்றத்திற்காக கர்த்தர் ஆசாரியரையும், லேவியரையும் தண்டிப்பார். ஆகையினால் ஆசாரியரும் லேவியரும் "பரிசுத்த ஸ்தலத்தைப்பற்றிய அக்கிரமத்தை சுமக்கவேண்டும்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியத்திலே, லேவியர்கள் ஆசாரியருக்கு உதவி செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பரிசுத்த ஸ்தலம் தீட்டுப்படும்போது ஆசாரியர் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும் ஆசாரியரோடு சேர்ந்து லேவியரும் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். பரிசுத்தஸ்தலத்தை காவல் காக்கவேண்டிய பொறுப்பு ஆசாரியரையும் லேவியரையும் சேரும். பரிசுத்த ஸ்தலம் அசுத்தமாகும்போது, கர்த்தர் ஆசாரியரையும் லேவியரையும் விசாரிப்பார். அவர்கள் இருவருக்கும் தண்டனை கொடுப்பார். ஆகையினால் ஆசாரியரும் லேவியரும் பரிசுத்த வாசஸ்தலத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கும் பொறுப்பை, கர்த்தர் ஆரோனுக்கும் அவரோடேகூட அவருடைய குமாரருக்கும் ஒப்புக்கொடுக்கிறார். ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கும் பொறுப்பு லேவியருக்கு கொடுக்கப்படவில்லை. இந்தப் பொறுப்பு ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் ஆசாரியருக்கு நியமித்திருக்கிற வேலைகளை அவர்கள் சரியாக செய்யவேண்டும். ஆசாரியர் தங்களுடைய பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றவில்லையென்றால் அவர்கள்மீது அக்கிரமம் சுமத்தப்படும். கர்த்தர் ஆசாரியருக்கு நியமித்திருக்கும் ஊழியங்களை ஆசாரியர் மாத்திரமே செய்யவேண்டும். ஆசாரியருடைய ஊழியத்தை, ஆசாரியரைத்தவிர, வேறு யாராவது செய்தால், அந்த அக்கிரமத்தையும் ஆசாரியரே சுமக்கவேண்டும்.

ஆசாரியருடைய ஊழியத்தை, ஆசாரியரைத் தவிர மற்றவர் செய்வது, கர்த்தருடைய பார்வையில் மிகப்பெரிய அக்கிரமமாகயிருக்கிறது. ஆசாரியர் அல்லாத அந்நியர் யாரும், ஆசாரிய ஊழியத்தை தங்கள் கையிலிருந்து அபகரித்துக்கொள்ளாதவாறு, ஆசாரியர்கள் தங்கள் ஊழியத்தைக் காவல் காக்கவேண்டும். ஆசாரிய ஊழியம் கர்த்தர் நியமித்த பிரகாரமே நடைபெறவேண்டும். ஆசாரிய ஊழியத்தில் குறைவு காணப்பட்டாலும், இந்த ஊழியம் கர்த்தர் நியமித்த பிரகாரம் நடைபெறாவிட்டாலும், இதற்கு ஆரோனும் அவருடைய குமாரருமே பொறுப்பேற்க வேண்டும். கர்த்தர் இவர்களுடைய அக்கிரமத்தினிமித்தமாக இவர்களைத் தண்டிப்பார்.

கர்த்தர் ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் ஊழியப்பொறுப்புக்களைக் கொடுக்கிறார். "நீயும் உன் குமாரருமோ சாட்சியின் கூடாரத்துக்குமுன் ஊழியம் செய்யக்கடவீர்கள்" (எண் 18:2) என்று கர்த்தர் ஆரோனுக்கு சொல்லுகிறார். "சாட்சியின் கூடாரத்திற்கு முன்" என்னும் வார்த்தைக்கு, "மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு முன்" என்று பொருள். சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

லேவியர்கள் சாட்சியின் கூடாரத்திற்குள் ஊழியம் செய்யக்கூடாது. கூடாரத்திற்குள் ஆசாரியர்கள் மட்டுமே பணிவிடை செய்ய வேண்டும். லேவியர்கள் கூடாரத்துக்கு வெளியே பணிவிடை செய்ய வேண்டியவர்கள் (எண் 18:3,5,7).

லேவியர்கள் ஆரோனுக்குக்கீழ் பணிவிடை செய்கிறார்கள். ஆரோனுக்குப் பின்பு, ஆரோனுடைய ஆசாரியப் பட்டத்திற்கு வரும் பிரதான ஆசாரியனுக்குக்கீழ் அவர்கள் பணிவிடை செய்ய வேண்டும் (எண் 18:3-6). லேவியருக்கென்று ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்திலும், வெண்கல பலிபீடத்திலும், சில பணிவிடைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுக்கள் அருகிலோ, பொற்பலிபீடத்தின் அருகிலோ லேவியர்கள் வரக்கூடாது. இந்தப் பிரமாணத்தை மீறுகிற லேவியருக்கும், மற்ற ஜனங்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படும்.

வெண்கல பலிபீடத்தில் பலிகளைச் செலுத்தும் பணிவிடைகளும், பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் செய்ய வேண்டிய பணிவிடைகளும் ஆசாரியரின் ஊழியமாகும். (எண் 18:3,7).

ஆரோனும் அவருடைய குமாரரும் ஆசரிப்புக்கூடாரத்திலே, திரைக்கு வெளிப்புறத்தில் ஊழியம் செய்யவேண்டும். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் கதவுக்கு உட்புறத்தில் ஊழியம் செய்யவேண்டும். ஆசாரியர்கள் பொற்பலிபீடம், சமுகத்தப்ப மேஜை, பொன்விளக்குத்தண்டு ஆகியவற்றில் ஊழியம் செய்யவேண்டும். இது ஆசாரியர் மாத்திரமே செய்ய வேண்டிய ஊழியம். இந்தப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் லேவியர்கள் யாரும் பிரவேசிக்க அனுமதியில்லை.

"ஆகையால் நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் பலிபீடத்துக்கும் திரைக்கு உட்புறத்துக்கும் அடுத்த எல்லாவற்றையும் செய்யும்பொருட்டு, உங்கள் ஆசாரிய ஊழியத்தைக் காத்துச் சேவிக்கக்கடவீர்கள்; உங்கள் ஆசாரிய ஊழியத்தை உங்களுக்கு தத்தமாக அருளினேன்; அதைச் செய்யும்படி சேருகிற அந்நியன் கொலை செய்யப்படக்கடவன்" (எண் 18:7) என்று கர்த்தர் ஆரோனுக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் ஆசாரியருக்கு நியமித்திருக்கிற ஊழியத்தைச் சொல்லும்போது, "உங்கள் ஆசாரிய ஊழியத்தைக் காத்து சேவிக்கக்கடவீர்கள்" என்று சொல்லுகிறார். கர்த்தர் அவர்களுக்கு, "உங்கள் ஆசாரிய ஊழியத்தைக் காத்து ஆளுகை செய்யக்கடவீர்கள்" என்று சொல்லவில்லை.

ஊழியக்காரர்கள் தங்களைப்பற்றி நினைக்கும்போது, தங்களை கர்த்தருடைய ஊழியக்காரர்களாகவே நினைக்கவேண்டும். அவர்கள் ஊழியம் கொள்ளுவதற்காக நியமிக்கப்படவில்லை. கர்த்தர் அவர்களை ஊழியம் செய்வதற்காகவே நியமித்திருக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மற்றவர்களை ஆளுகை செய்கிறவர்களாக இருக்கக்கூடாது. அவர்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்கிறவர்களாக இருக்கவேண்டும். அவர்களிடத்தில் மனத்தாழ்மையும், நேர்மையும், உண்மையும் இருக்கவேண்டும்.

லேவியர்கள் ஆசாரியருடைய ஊழியத்தில் உதவிசெய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் ஆரோனை நோக்கி, "உன் தகப்பனாகிய லேவியின் கோத்திரத்தாரான உன் சகோதரரையும் உன்னோடே கூடியிருக்கவும் உன்னிடத்திலே சேவிக்கவும் அவர்களைச் சேர்த்துக்கொள். அவர்கள் உன் காவலையும் கூடாரம் அனைத்தின் காவலையும் காக்கக்கடவர்கள்; ஆகிலும் அவர்களும் நீங்களும் சாகாதபடிக்கு, அவர்களும் பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகளண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சேராமல், உன்னோடே கூடிக்கொண்டு, கூடாரத்துக்கடுத்த எல்லாப் பணிவிடையையும் செய்ய, ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக்காக்கக்கடவர்கள்; அந்நியன் ஒருவனும் உங்களிடத்தில் சேரக்கூடாது" (எண் 18:2-4) என்று சொல்லுகிறார்.

லேவியர்கள் ஆசாரியருக்கு உதவிசெய்வதற்காக நியமிக்கப்பட்டாலும், அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுக்கள் அண்டையிலும், பலிபீடத்தண்டையிலும் சேரக்கூடாது என்று கர்த்தர் தெளிவாகச் சொல்லுகிறார்.

லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கவேண்டும். பரிசுத்தமான காரியங்களை யாரும் தீட்டுப்படுத்திவிடாதவாறு, லேவியர் மிகுந்த கவனத்தோடும், எச்சரிப்போடும் ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கவேண்டும்.

லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கும்போது, ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்தின் காவலையும், பலிபீடத்தின் காவலையும் காக்கவேண்டும்.

கர்த்தர் ஆரோனை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரர்மேல் இனிக் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தின் காவலையும் பலிபீடத்தின் காவலையும் காக்கக்கடவீர்கள்" (எண் 18:5) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுக்களிலிருந்து எவ்வளவு தூரம் விலகியிருக்கவேண்டும் என்றும், அவர்கள் பலிபீடத்தண்டையில் சேராமல் அதிலிருந்து எவ்வளவு தூரம் விலகியிருக்கவேண்டும் என்றும் ஆசாரியர் ஜனங்களுக்கு போதிக்கவேண்டும். அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையையும், பிரமாணங்களையும், நியமங்களையும், கட்டளைகளையும் போதிக்கவேண்டும்.

கர்த்தர் ஆசாரிய ஊழியத்தை ஆரோனுக்கும் அவருடைய குமாரருக்கும் தத்தமாக அருளியிருக்கிறார். கர்த்தர் ஆரோனை நோக்கி, "நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் பலிபீடத்துக்கும் திரைக்கு உட்புறத்துக்கும் அடுத்த எல்லாவற்றையும் செய்யும்பொருட்டு, உங்கள் ஆசாரிய ஊழியத்தைக் காத்துச் சேவிக்கக்கடவீர்கள்; உங்கள் ஆசாரிய ஊழியத்தை உங்களுக்கு தத்தமாக அருளினேன்; அதைச் செய்யும்படி சேருகிற அந்நியன் கொலை செய்யப்படக்கடவன்" (எண் 18:7) என்று சொல்லுகிறார்.

பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் இந்தத் திரை பிரிக்கிறது. பிரதான ஆசாரியர் மட்டுமே வருஷத்திற்கு ஒருமுறை பாவநிவாரண பலி செலுத்துவதற்காக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும் (எபி 9:7).

ஆசாரியர், லேவியர் ஆகியோரின் ஊழியத்தைப்பற்றி கர்த்தர் கொடுத்திருக்கும் கட்டளைகளின் விவரம் வருமாறு :

1. ஆரோனும் அவனோடேகூட அவன் குமாரரும் அவன் தகப்பன் வம்சத்தாரும் பரிசுத்த ஸ்தலத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும். (எண் 18:1)

2. ஆரோனும் அவனோடேகூட அவன் குமாரரும் அவர்கள் ஆசாரிய ஊழியத்தைப்பற்றிய அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும் (எண் 18:1)

3. ஆரோனின் தகப்பனாகிய லேவியின் கோத்திரத்தாரான அவன் சகோதரரையும் தன்னோடே கூடியிருக்கவும் தன்னிடத்திலே சேவிக்கவும் அவர்களைச் சேர்த்துக்கொள்; அவனும், அவன் குமாரருமோ சாட்சியின் கூடாரத்துக்கு முன் ஊழியம் செய்யவேண்டும். (எண் 18:2).

4. லேவியர்கள் உன் காவலையும் கூடாரம் அனைத்தின் காவலையும் காக்கக் கடவர்கள், கூடாரத்துக்கடுத்த எல்லாப் பணிவிடையையும் செய்யக்கடவர்கள் (எண் 18:3).

5. நீங்களும் சாகாதபடிக்கு, அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகளண்டையிலும் பலி பீடத்தண்டையிலும் சேராமல் இருக்கவேண்டும்.

6. லேவியர்கள் கூடாரத்துக்கடுத்த எல்லாப் பணிவிடையையும் செய்ய, ஆசரிப்புக் கூடாரத்தின் காவலைக்காக்கக்கடவர்கள்; அந்நியன் ஒருவனும் உங்களிடத்தில் சேரக்கூடாது (எண் 18:4).

7. இஸ்ரவேல் புத்திரர்மேல் இனிக் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் பரிசுத்த ஸ்தலத்தின் காவலையும் பலிபீடத்தின் காவலையும் காக்கக்கடவீர்கள் (எண் 18:5).

8. ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்ய, கர்த்தருக்குக் கொடுக்கப்பட்ட உங்கள் சகோதராகிய லேவியரை நான் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து, உங்களுக்கு தத்தமாகக் கொடுத்தேன் (எண் 18:6).

9. நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் பலிபீடத்துக்கும் திரைக்கு உட்புறத்துக்கும் அடுத்த எல்லாவற்றையும் செய்யும் பொருட்டு, உங்கள் ஆசாரிய ஊழியத்தைக் காத்துச் சேவிக்கக் கடவீர்கள்; உங்கள் ஆசாரிய ஊழியத்தை உங்களுக்கு தத்தமாக அருளினேன்; அதைச் செய்யும்படி சேருகிற அந்நியன் கொலை செய்யப்படக்கடவன் (எண் 18:7).

10. இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தப் படுத்துகிறவைகளிலெல்லாம் எனக்கு ஏறெடுத்துப் படைக்கப்படும் படைப்புகளைக் காத்துக் கொண்டிருக்கிறீர்களே, அவைகளை உனக்குக் கொடுத்தேன்; அபிஷேகத்தினிமித்தம் அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன் (எண் 18:8).

ஆசாரியரின் பங்கு எண் 18:8-19

எண் 18:8. பின்னும் கர்த்தர் ஆரோனை நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தப்படுத்துகிறவைகளிலெல்லாம் எனக்கு ஏறெடுத்துப் படைக்கப்படும் படைப்புகளைக் காத்துக்கொண்டிருக்கிறீர்களே, அவைகளை உனக்குக் கொடுத்தேன்; அபிஷேகத்தினிமித்தம் அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன்.

எண் 18:9. மகா பரிசுத்தமானவைகளிலே, அக்கினிக்கு உட்படுத்தப்படாமல் உன்னுடையதாயிருப்பது எவையெனில், அவர்கள் எனக்குப் படைக்கும் எல்லாப் படைப்பும், எல்லாப் போஜனபலியும், எல்லாப் பாவநிவாரணபலியும், எல்லாக் குற்ற நிவாரணபலியும், உனக்கும் உன் குமாரருக்கும் பரிசுத்தமாயிருக்கும்.

எண் 18:10. பரிசுத்த ஸ்தலத்திலே அவைகளைப் புசிக்கவேண்டும்; ஆண்மக்கள் யாவரும் அவைகளைப் புசிக்கலாம்; அவைகள் உனக்குப் பரிசுத்தமாயிருப்பதாக.

எண் 18:11. இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்துப் படைக்கிறதும் அசைவாட்டுகிறதுமான அவர்களுடைய எல்லாக் காணிக்கைகளின் படைப்பும் உன்னுடையவைகளாயிருக்கும்; அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும் நித்திய நியமமாகக் கொடுத்தேன்; உன் வீட்டிலே சுத்தமானவர்கள் எல்லாரும் அவைகளைப் புசிக்கலாம்.

எண் 18:12. அவர்கள் கர்த்தருக்குக் கொடுக்கும் அவர்களுடைய முதற்பலன்களாகிய உச்சிதமான எண்ணெயையும், உச்சிதமான திராட்சரசத்தையும், தானியத்தையும் உனக்கு உரியதாகக் கொடுத்தேன்.

எண் 18:13. தங்கள் தேசத்தில் முதற்பழுத்த பலனில் அவர்கள் கர்த்தருக்குக் கொண்டு வருவதெல்லாம் உனக்கு உரியதாகும்; உன் வீட்டிலே சுத்தமாயிருப்பவர்கள் யாவரும் அவைகளைப் புசிக்கலாம்.

எண் 18:14. இஸ்ரவேலிலே சாபத்தீடாக நேர்ந்துகொள்ளப்பட்டதெல்லாம் உனக்கு உரியதாயிருக்கும்.

எண் 18:15. மனிதரிலும் மிருகங்களிலும் அவர்கள் கர்த்தருக்குச் செலுத்தும் சமஸ்த பிராணிகளுக்குள்ளே கர்ப்பந்திறந்து பிறக்கும் யாவும் உனக்கு உரியதாயிருக்கும்; ஆனாலும் மனிதரின் முதற்பேற்றை அகத்தியமாய் மீட்கவேண்டும்; தீட்டான மிருகஜீவனின் தலையீற்றையும் மீட்க வேண்டும்.

எண் 18:16. மீட்கவேண்டியவைகள் ஒரு மாதத்திற்கு மேற்பட்டதானால், உன் மதிப்புக்கு இசைய பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி ஐந்து சேக்கல் பணத்தாலே அவைகளை மீட்கவேண்டும்; ஒரு சேக்கல் இருபது கேரா.

எண் 18:17. மாட்டின் தலையீற்றும், செம்மறியாட்டின் தலையீற்றும் வெள்ளாட்டின் தலையீற்றுமோ மீட்கப்படவேண்டாம்; அவைகள் பரிசுத்தமானவைகள்; அவைகளின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து, அவைகளின் கொழுப்பைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனமாகத் தகனிக்கவேண்டும்.

எண் 18:18. அசைவாட்டும் மார்க்கண்டத்தைப் போலும் வலது முன்னந்தொடையைப் போலும் அவைகளின் மாம்சமும் உன்னுடையதாகும்.

எண் 18:19. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கிற பரிசுத்த படைப்புகளையெல்லாம் உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன்; கர்த்தருடைய சந்நிதியில் இது உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் செல்லும் மாறாத உடன்படிக்கை என்றார்.

ஆசாரிய ஊழியம் தண்டில் சேவகம் பண்ணுகிற ஊழியத்திற்கு ஒப்பானது. தன்னுடைய சொந்த செலவில் யாரும் தண்டில் சேவகம் பண்ணமாட்டார்கள். அவர்களுக்கு உரிய சம்பளம் கொடுக்கப்படவேண்டும். ஆசாரியருடைய ஊழியம் அதிக கனமுள்ளது. அது மிகவும் விசேஷமானது. ஆகையினால் ஆசாரியருக்கு விசேஷமான சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

ஆசாரியரின் தனிப்பட்ட தேவைகளும் அவர்களுடைய குடும்பத்தின் தேவைகளும் குறைவில்லாமல் சந்திக்கப்படவேண்டுமென்று கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை போஷித்து பராமரிக்கிறார். பலிபீடத்தில் ஊழியம் செய்கிறவர்களுக்கு, பலிபீடத்தில் செலுத்தப்படும் காணிக்கைகளில் பங்கு கொடுக்கப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

"ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலி பீடத்திலுள்ளவைகளில் பங்குஉண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1கொரி 9:13,14).

கர்த்தர் ஆரோனை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தப்படுத்துகிறவைகளிலெல்லாம் எனக்கு ஏறெடுத்துப் படைக்கப்படும் படைப்புகளைக் காத்துக்கொண்டிருக்கிறீர்களே, அவைகளை உனக்குக் கொடுத்தேன்; அபிஷேகத்தினிமித்தம் அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன்" (எண் 18:8) என்று சொல்லுகிறார்.

ஏறெடுத்துப் படைக்கப்படும் படைப்புகளும், அசைவாட்டப்படும் படைப்புகளும், சமாதான பலிகளின் ஒரு பகுதியாகும். இவை ஆசாரியரின் பணிவிடைகளுக்காக அவர்களுக்கு நித்திய கட்டளையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலின் பரிசுத்த காரியங்கள் எல்லாவற்றிற்கும் பிரதான ஆசாரியர் பொறுப்பு வகிக்கிறார். தேவனுடைய அபிஷேகத்தின் மூலமாக ஆரோன் பிரதான ஆசாரியராக பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறார் ஆனார். இந்த அபிஷேகத்தின் நிமித்தம் சமாதான பலிகளில் ஒரு பகுதி ஆரோனுக்கும், அவன் குமாரருக்கும் நித்திய கட்டளையாகக் கொடுக்கப்படுகிறது.

ஜனங்கள் கர்த்தருக்கு காணிக்கைகளை கொண்டு வரும்போது, அவைகளை ஆசாரியருடைய கைகளில் கொடுக்கிறார்கள். ஆசாரியர்கள் அவைகளை கர்த்தருக்கு காணிக்கைகளாக செலுத்துகிறார்கள். தமக்கு படைக்கப்படும் பரிசுத்தமான காணிக்கைகளில், கர்த்தர் தமக்கு ஊழியம் செய்கிற ஆசாரியருக்கும் ஒரு பங்கை நியமனம் பண்ணுகிறார்.

அந்தப்பங்கை ஆசாரியரும் அவருடைய குமாரரும், குமாரத்திகளும் போஜனம்பண்ண வேண்டும். ஆசாரியருடைய வீட்டிலே சுத்தமானவர்கள் எல்லோரும், பரிசுத்தமானவைகளை புசிக்கலாம். அவை ஆசாரியருக்கு பரிசுத்தமாயிருக்கும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஆரோனை நோக்கி, "மகா பரிசுத்தமானவைகளிலே, அக்கினிக்கு உட்படுத்தப்படாமல் உன்னுடையதாயிருப்பது எவையெனில், அவர்கள் எனக்குப் படைக்கும் எல்லாப் படைப்பும், எல்லாப் போஜனபலியும், எல்லாப் பாவநிவாரணபலியும், எல்லாக் குற்ற நிவாரணபலியும், உனக்கும் உன் குமாரருக்கும் பரிசுத்தமாயிருக்கும்" (எண் 18:9) என்றும்,

பரிசுத்த ஸ்தலத்திலே அவைகளைப் புசிக்கவேண்டும்; ஆண்மக்கள் யாவரும் அவைகளைப் புசிக்கலாம்; அவைகள் உனக்குப் பரிசுத்தமாயிருப்பதாக (எண் 18:10) என்றும்,

இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்துப் படைக்கிறதும் அசைவாட்டுகிறதுமான அவர்களுடைய எல்லாக் காணிக்கைகளின் படைப்பும் உன்னுடையவைகளாயிருக்கும்; அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும் நித்திய நியமமாகக் கொடுத்தேன்; உன் வீட்டிலே சுத்தமானவர்கள் எல்லாரும் அவைகளைப் புசிக்கலாம் (எண் 18:11) என்றும்,

அவர்கள் கர்த்தருக்குக் கொடுக்கும் அவர்களுடைய முதற்பலன்களாகிய உச்சிதமான எண்ணெயையும், உச்சிதமான திராட்சரசத்தையும், தானியத்தையும் உனக்கு உரியதாகக் கொடுத்தேன் (எண் 18:12) என்றும்,.

தங்கள் தேசத்தில் முதற்பழுத்த பலனில் அவர்கள் கர்த்தருக்குக் கொண்டு வருவதெல்லாம் உனக்கு உரியதாகும்; உன் வீட்டிலே சுத்தமாயிருப்பவர்கள் யாவரும் அவைகளைப் புசிக்கலாம் (எண் 18:13) என்றும்,

இஸ்ரவேலிலே சாபத்தீடாக நேர்ந்துகொள்ளப்பட்டதெல்லாம் உனக்கு உரியதாயிருக்கும் (எண் 18:14) என்றும்,

மனிதரிலும் மிருகங்களிலும் அவர்கள் கர்த்தருக்குச் செலுத்தும் சமஸ்த பிராணிகளுக்குள்ளே கர்ப்பந்திறந்து பிறக்கும் யாவும் உனக்கு உரியதாயிருக்கும்; ஆனாலும் மனிதரின் முதற்பேற்றை அகத்தியமாய் மீட்கவேண்டும்; தீட்டான மிருகஜீவனின் தலையீற்றையும் மீட்க வேண்டும் (எண் 18:15) என்றும்,

மீட்கவேண்டியவைகள் ஒரு மாதத்திற்கு மேற்பட்டதானால், உன் மதிப்புக்கு இசைய பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்கின்படி ஐந்து சேக்கல் பணத்தாலே அவைகளை மீட்கவேண்டும்; ஒரு சேக்கல் இருபது கேரா (எண் 18:16) என்றும்,

மாட்டின் தலையீற்றும், செம்மறியாட்டின் தலையீற்றும் வெள்ளாட்டின் தலையீற்றுமோ மீட்கப்படவேண்டாம்; அவைகள் பரிசுத்தமானவைகள்; அவைகளின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து, அவைகளின் கொழுப்பைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனமாகத் தகனிக்கவேண்டும் (எண் 18:17) என்றும்,

அசைவாட்டும் மார்க்கண்டத்தைப் போலும் வலது முன்னந்தொடையைப் போலும் அவைகளின் மாம்சமும் உன்னுடையதாகும் (எண் 18:18) என்றும்,

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கிற பரிசுத்த படைப்புகளையெல்லாம் உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன்; கர்த்தருடைய சந்நிதியில் இது உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் செல்லும் மாறாத உடன்படிக்கை (எண் 18:19) என்றும் சொல்லுகிறார்.

ஆசாரியருக்குப் பரிசுத்தமாக இருக்கும் காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. இஸ்ரவேலின் படைப்புக்கள்
2. போஜனபலி
3. பாவநிவாரணபலி
4. குற்ற நிவாரணபலி
5. ஏறெடுத்துப் படைக்கிற காணிக்கைகள் (எண் 18:11)
6. அசைவாட்டுகிற காணிக்கைகள்
7. உச்சித்தமான எண்ணெய் (எண் 18:12)
8. உச்சிதமான திராட்சரசம்
9. உச்சிதமான தானியம்
10. தேசத்தில் முதற்பழுத்த பலன்.

ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பரிசுத்தமானவைகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. திரைக்கு உள்ளே உடன்படிக்கைப் பெட்டியிருக்கும் மகா பரிசுத்த ஸ்தலம். (யாத் 26:33)
2. பொற்பலிபீடம், விளக்குத்தண்டு, சமுகத்தப்ப மேஜை ஆகியவை இருக்கும் பரிசுத்த ஸ்தலம். (யாத் 26:33)

3. வெளிப்பிரகாரம் (லேவி 6:16,26,29).

"ஆண்மக்கள் யாவரும் அவைகளைப் புசிக்கலாம்" (எண் 18:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். பரிசுத்தமானவைகளில் ஏறெடுத்துப் படைக்கிற காணிக்கைகளை மட்டும் இது குறிப்பிடுகிறது. இதில் ஒரு பகுதி ஆசாரியருக்குக் கட்டளையாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆசாரியரின் குடும்பத்திலுள்ள ஆண்மக்கள் மட்டுமே இவற்றைப் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்கலாம். (எண் 18:8-10). இது தவிர, பொதுவான ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கைகளையும், அசைவாட்டப்படுகிற காணிக்கைகளையும் ஆசாரியரின் குடும்பத்திலுள்ள சுத்தமானவர்கள் அனைவரும் புசிக்கலாம் (எண் 18:11,13,19; லேவி 22:3-16).

கர்த்தர் ஆசாரியருக்கு உரியவைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லியிருக்கிறார். அவற்றின் விவரம் வருமாறு :

1. பாவநிவாரண பலிகள் (லேவி 6:25-26)
2. குற்றநிவாரண பலிகள் (லேவி 7:1-6)
3. சமாதான பலிகள் (லேவி 7:31-34; லேவி 23:19-20)
4. அறுப்பின் முதற்பலனாகிய கதிர்க்கட்டின் ஒரு பகுதி. (லேவி 23:10)
5. போஜனபலிகளின் ஒரு பகுதி. (லேவி 2:10)
6. இரண்டு அப்பங்கள் (லேவி 23:17)
7. சமுகத்தப்பம் (லேவி 24:9)
8. எண்ணெயில் ஒரு பகுதி (லேவி 14:10)
9. ஏறெடுக்கப்படும் காணிக்கைகள் (எண் 18:11; லேவி 7:12-14)
10. அசைவாட்டப்படும் காணிக்கைகள் (எண் 18:11; லேவி 7:34)
11. நசரேய விரதத்து ஆட்டுக்குட்டிகளின் ஒரு பகுதி. (எண் 6:17-20)
12. சுத்தமான மிருகஜீவன்களின் தலையீற்று. (எண் 18:15; உபா 15:19-20)
13. முதற்பலன்கள். (லேவி 23:10; உபா 18:4)
14. தசமபாகங்கள் (எண் 18:21,24,28)
15. அதிரசங்கள் (எண் 15:20)
16. தலைப்பிள்ளைகளின் மீட்பின் கிரயம் (எண் 18:15)
17. அசுத்தமான மிருகஜீவன்களின் தலையீற்றுகளை மீட்பதற்குச் செலுத்தப் படும் ஆட்டுக்குட்டிகள். (யாத் 12:2, 12-13; யாத் 34:20)
18. கேட்டு வாங்குகிறதற்கு இனத்தான் ஒருவனும் இல்லாதிருக்கும் பொருட்கள் (எண் 5:8)
19. சில பலிகளின் தோல்கள் (லேவி 7:8)
20. லேவியரின் பட்டணங்களும், அதைச் சுற்றிலுமுள்ள நிலங்களும் (யோசு 21)

கர்த்தர் இவற்றை லேவியருக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். ஏனெனில் வாக்குப் பண்ணப்பட்ட தேசத்தில் லேவியருக்கு சுதந்தரவீதம் பிரித்துக் கொடுக்கப்படவில்லை. (எண் 18:20-28; உபா 18:1-8).

சுத்தமான மிருகங்களின் தலையீற்று ஆசாரியருக்கும், லேவியருக்கும் உரியது. இதை மீட்கப்படவேண்டியதில்லை. சுத்தமல்லாத மிருகங்களின் தலையீற்றைச் சுத்தமுள்ள மிருகத்தினாலோ அல்லது மீட்பின் கிரயத்தினாலோ மீட்க வேண்டும். மீட்பின் கிரயம் ஆசாரியரைச் சேரும் (யாத் 12:13).

இதை "என்றைக்கும் செல்லும் மாறாத உடன்படிக்கை" (எண் 18:19) என்று கர்த்தர் சொல்லுகிறார். இதற்கு உப்பின் உடன்படிக்கை என்னும் மறுபெயரும் உள்ளது. உப்பு பரிசுத்தமானதாகக் கருதப்படுகிறது. எல்லாப் பலிகளிலும் உப்பைப் பயன்படுத்துகிறார்கள் (லேவி 2:13). தேவனுடைய உடன்படிக்கை மாறாதது என்பதற்கு அடையாளமாக உப்பைப் பயன்படுத்துகிறார்கள்.

தசமபாகம்
எண் 18:20-32

எண் 18:20. பின்னும் கர்த்தர் ஆரோனை நோக்கி: அவர்களுடைய தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்துக்கொள்ளவேண்டாம், அவர்கள் நடுவே உனக்குப் பங்கு உண்டாயிருக்கவும் வேண்டாம்; இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமாய் இருக்கிறேன்.

எண் 18:21. இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்.

எண் 18:22. இஸ்ரவேல் புத்திரர் குற்றஞ்சுமந்து சாகாதபடிக்கு, இனி ஆசரிப்புக் கூடாரத்தைக் கிட்டாதிருக்கக்கடவர்கள்.

எண் 18:23. லேவியர்மாத்திரம் ஆசரிப்புக் கூடாரத்துக்கடுத்த வேலைகளைச் செய்யவேண்டும்; அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்; இஸ்ரவேல் புத்திரர் நடுவே அவர்களுக்குச் சுதந்தரம் இல்லை என்பது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும்.

எண் 18:24. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்; ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரமில்லையென்று அவர்களுக்குச் சொன்னேன் என்றார்.

எண் 18:25. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 18:26. நீ லேவியரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கிக்கொள்ளும்படி நான் உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தசமபாகத்தை நீங்கள் அவர்கள் கையில் வாங்கும்போது, தசமபாகத்தில் பத்தில் ஒரு பங்கைக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும்.

எண் 18:27. நீங்கள் ஏறெடுத்துப் படைக்கும் இந்தப் படைப்பு களத்தின் தானியத்தைப் போலும், ஆலையின் இரசத்தைப்போலும் உங்களுக்கு எண்ணப்படும்.

எண் 18:28. இப்படியே நீங்கள் இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கும் தசமபாகமாகிய உங்கள் பங்குகளிலெல்லாம் நீங்களும் கர்த்தருக்கு என்று ஒரு படைப்பை ஏறெடுத்துப் படைத்து, அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்குக் கொடுக்க வேண்டும்.

எண் 18:29. உங்களுக்குக் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு காணிக்கையிலுமுள்ள உச்சிதமான பரிசுத்த பங்கையெல்லாம் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும்.

எண் 18:30. ஆதலால் நீ அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: அதில் உச்சிதமானதை நீங்கள் ஏறெடுத்துப் படைக்கும்போது, அது களத்தின் வரத்திலும் ஆலையின் வரத்திலும் இருந்து எடுத்துச் செலுத்துகிறதுபோல் லேவியருக்கு எண்ணப்படும்.

எண் 18:31. அதை நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் எவ்விடத்திலும் புசிக்கலாம்; அது நீங்கள் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு ஈடான உங்கள் சம்பளம்.

எண் 18:32. இப்படி அதில் உச்சிதமானதை ஏறெடுத்துப் படைத்தீர்களானால், நீங்கள் அதினிமித்தம் பாவம் சுமக்கமாட்டீர்கள்; நீங்கள் சாகாதிருக்கும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரரின் பரிசுத்தமானவைகளைத் தீட்டுப்படுத்தலாகாது என்று சொல் என்றார்.

தமக்கு ஊழியம் செய்கிற ஆசாரியரையும் லேவியரையும் கர்த்தர் போஷித்து பராமரிக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு தேசத்தின் விளைச்சலிலிருந்து போஜனம் கொடுக்கப்படுகிறது. கானான் தேசத்தில் ஆசாரியருக்கும் லேவியருக்கும் சுதந்தர பாகம் கொடுக்கப்படவில்லை. ஆனாலும் இஸ்ரவேலுக்குள்ளவை எல்லாவற்றிலும் கர்த்தர் ஆசாரியருக்கும் லேவியருக்கும் தசமபாகமாக கொடுக்கிறார்.

தாங்கள் குடியிருக்கிற பட்டணங்களில், லேவியர்கள் தங்கள் வீடுகளை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ளலாம். ஆனாலும் அவர்களுக்கு விளைச்சல் நிலம் சுதந்தரமாகக் கொடுக்கப்படவில்லை.

கர்த்தர் ஆரோனை நோக்கி, "அவர்களுடைய தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்துக்கொள்ளவேண்டாம், அவர்கள் நடுவே உனக்குப் பங்கு உண்டாயிருக்கவும் வேண்டாம்; இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமாய் இருக்கிறேன்" (எண் 18:20) என்றும்,

இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன் (எண் 18:21) என்றும்,

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசமபாகத்தை லேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்; ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரமில்லையென்று அவர்களுக்குச் சொன்னேன் (எண் 18:24) என்றும் சொல்லுகிறார்.

கானான் தேசத்து சுதந்தரத்தில் ஆசாரியருக்கும், லேவியருக்கும் பங்குவீதம் எதுவும் கொடுக்கப்படவில்லை. கர்த்தருக்குப் படைக்கப்படும் ஒரு பகுதி இவர்களுடைய ஊழியங்களுக்கு ஆதரவாகக் கொடுக்கப்படுகிறது. கர்த்தரே இவர்களுடைய சுதந்தரமாக இருக்கிறார். (எண் 18:20-21).

லேவியருக்கு ஆதரவாக இருக்கும் பங்குவீதத்தைப்பற்றி கர்த்தர் இந்த வசனத்தில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. அவர்களுடைய தேசத்தில் நீ (ஆரோனும், எல்லா ஆசாரியரும், எல்லா லேவியரும்) ஒன்றையும் சுதந்தரித்துக் கொள்ள வேண்டாம். அவர்கள் நடுவே உனக்குப் பங்கு உண்டாயிருக்கவும் வேண்டாம்; இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமாய் இருக்கிறேன்.

2. இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன் (எண் 18:21,24)

3. இஸ்ரவேல் புத்திரர் குற்றஞ்சுமந்து சாகாதபடிக்கு, இனி ஆசரிப்புக் கூடாரத்தைக் கிட்டாதிருக்கக்கடவர்கள் (எண் 18:22)

4. லேவியர்மாத்திரம் ஆசரிப்புக் கூடாரத்துக்கடுத்த வேலைகளைச் செய்யவேண்டும். (எண் 18:23)

கர்த்தர் ஆசாரியருக்கு விசேஷித்த சிலாக்கியத்தைக் கொடுத்திருக்கிறார். லேவியின் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையை செய்கிறார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ ஆசரிப்புக்கூடாரத்தை கிட்டாதிருக்கவேண்டும். லேவியருக்கு மாத்திரமே ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையை செய்யும் சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் ஆரோனை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரர் குற்றஞ்சுமந்து சாகாதபடிக்கு, இனி ஆசரிப்புக் கூடாரத்தைக் கிட்டாதிருக்கக்கடவர்கள். லேவியர்மாத்திரம் ஆசரிப்புக் கூடாரத்துக்கடுத்த வேலைகளைச் செய்யவேண்டும்; அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்; இஸ்ரவேல் புத்திரர் நடுவே அவர்களுக்குச் சுதந்தரம் இல்லை என்பது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும்" (எண் 18:22,23) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். லேவியருக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையை செய்யும் ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. இந்த ஆசீர்வாதம் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தரிக்கும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. இந்த ஆசீர்வாதம் லேவியருக்கு கொடுக்கப்படவில்லை.

தேசத்தின் விளைச்சலில் தசமபாகம் ஆசாரியருக்கும் லேவியருக்கும் கொடுக்கப்படுகிறது. விளைச்சலில் முதற்பலன்கள் ஆசாரியருக்கு மாத்திரம் கொடுக்கப்படுகிறது.

கர்த்தர் கானான் தேசத்து நிலத்தின் விளைச்சல் எல்லாவற்றிலும் தசமபாகத்தை லேவியருக்கு கொடுக்கிறார். கர்த்தர் ஆரோனை நோக்கி, "இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்" (எண் 18:21) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில், லேவி கோத்திரத்தார் சொற்ப எண்ணிக்கையுள்ள கோத்திரமாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்போது, கர்த்தர் அவர்களை விசேஷித்த ஆசீர்வாதங்களினால் ஆசீர்வதிக்கிறார். லேவியர்கள் நிலத்தைப் பண்படுத்த வேண்டியதில்லை. அவர்கள் நிலத்தை உழுது பயிரிட்டு விவசாயம் பண்ணவேண்டியதில்லை. ஆனாலும் வருஷமும், இஸ்ரவேல் புத்திரரின் விளைச்சலில் பத்தில் ஒரு பாகம் லேவியருக்கு கொடுக்கப்படுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை லேவியருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார் (எண் 18:21). தங்களுக்கு கிடைக்கும் தசமபாகத்தில், பத்தில் ஒரு பங்கை லேவியர்கள் ஆசாரியருக்கு கொடுக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரரும் தசமபாகம் செலுத்தவேண்டும். லேவியரும் தசமபாகம் செலுத்தவேண்டும்.

லேவியருக்கு சொல்லவேண்டிய கட்டளையை கர்த்தர் மோசேயின் மூலமாக சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ லேவியரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கிக்கொள்ளும்படி நான் உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தசமபாகத்தை நீங்கள் அவர்கள் கையில் வாங்கும்போது, தசமபாகத்தில் பத்தில் ஒரு பங்கைக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும்" (எண் 18:26) என்றும்,

நீங்கள் ஏறெடுத்துப் படைக்கும் இந்தப் படைப்பு களத்தின் தானியத்தைப் போலும், ஆலையின் இரசத்தைப்போலும் உங்களுக்கு எண்ணப்படும் (எண் 18:27) என்றும்,

இப்படியே நீங்கள் இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கும் தசமபாகமாகிய உங்கள் பங்குகளிலெல்லாம் நீங்களும் கர்த்தருக்கு என்று ஒரு படைப்பை ஏறெடுத்துப் படைத்து, அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்குக் கொடுக்க வேண்டும் (எண் 18:28) என்றும்,

உங்களுக்குக் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு காணிக்கையிலுமுள்ள உச்சிதமான பரிசுத்த பங்கையெல்லாம் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும் (எண் 18:29) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருடைய சமுகத்திலே நாம் ஜெபங்களையும், துதிகளையும் ஏறெடுப்பதுபோல, நம்முடைய இருதயங்களையும் கர்த்தருக்கு நேராக உயர்த்தவேண்டும். நம்முடைய துதிகளோடு நம்முடைய காணிக்கைகளையும் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாக செலுத்தவேண்டும்.

லேவியர் இஸ்ரவேல் புத்திரர் கையிலே தசமபாகம் வாங்குகிறார்கள். தாங்கள் வாங்கும் தசமபாகத்தில் பத்தில் ஒரு பங்கை, கர்த்தருக்கென்று ஒரு படைப்பை ஏறெடுத்துப் படைக்கிறார்கள். லேவியர்கள் அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்கு கொடுக்கிறார்கள். ஆரோன் லேவியரிடமிருந்து தசமபாகத்தை வாங்கி, அதை தன்னுடைய பராமரிப்புக்கும், தனக்கு கீழே ஆசாரிய ஊழியம் செய்கிற ஆசாரியர்களின் பராமரிப்புக்கும் பிரித்துக்கொடுக்கிறார்.

மோசே லேவியருக்கு சொல்லவேண்டிய பிரமாணங்களில் மேலும் சிலவற்றை கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். மோசே லேவியரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: அதில் உச்சிதமானதை நீங்கள் ஏறெடுத்துப் படைக்கும்போது, அது களத்தின் வரத்திலும் ஆலையின் வரத்திலும் இருந்து எடுத்துச் செலுத்துகிறதுபோல லேவியருக்கு எண்ணப்படும் (எண் 18:30).

அதை நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் எவ்விடத்திலும் புசிக்கலாம்; அது நீங்கள் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு ஈடான உங்கள் சம்பளம் (எண் 18:31).

இப்படி அதில் உச்சிதமானதை ஏறெடுத்துப் படைத்தீர்களானால், நீங்கள் அதினிமித்தம் பாவம் சுமக்கமாட்டீர்கள்; நீங்கள் சாகாதிருக்கும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரரின் பரிசுத்தமானவைகளைத் தீட்டுப்படுத்தலாகாது (எண் 18:32) கர்த்தர் இதை மோசேக்கு சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொன்னதை மோசே லேவியருக்கு சொல்லவேண்டும்.

லேவியருக்கு ஆதரவாய் இருக்கும் பங்குவீதத்தைப்பற்றி கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. ஒவ்வொரு காணிக்கையிலுமுள்ள உச்சிதமான பரிசுத்த பங்கையெல்லாம் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்தவேண்டும்.

2. உச்சிதமானதை நீங்கள் ஏறெடுத்துப் படைக்கும்போது, அது களத்தின் வரத்திலும் ஆலையின் வரத்திலும் இருந்து எடுத்துச் செலுத்துகிறதுபோல லேவியருக்கு எண்ணப்படும் (எண் 18:30).

3. அது நீங்கள் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு ஈடான உங்கள் சம்பளம் (எண் 18:31).

4. நீங்கள் சாகாதிருக்கும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரரின் பரிசுத்தமானவைகளைத் தீட்டுப் படுத்தலாகாது (எண் 18:32).

இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்குப் படைப்பது உச்சிதமானதாக இருக்க வேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்கு ஸ்தோத்திரம் செலுத்தும் விதமாக இவை படைக்கப்படுவதினால், ஜனங்கள் உச்சிதமானவற்றையே கர்த்தருக்குப் படைக்கவேண்டும். (நீதி 3:9-10; மத் 22:37).

19 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தயாரிப்பது சம்பந்தமாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆட்டுக்கடாரியின் சாம்பலோடு ஊற்று ஜலத்தை வார்த்து தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தயாரிக்கவேண்டும்.

எண்ணாகமம் 17-ஆவது அதிகாரத்தின் கடைசிப்பகுதியில் இஸ்ரவேல் புத்திரர், மோசேயினிடத்தில் வந்து, "கர்த்தரின் வாசஸ்தலத்தின் கிட்டே வருகிற எவனும் சாகிறான்; நாங்கள் எல்லாரும் செத்துத்தான் தீருமோ" (எண் 17:13) என்று சொன்னார்கள். அவர்களுடைய கேள்விக்கு பிரதியுத்தரம் சொல்லும் வண்ணமாக இந்த அதிகாரம் எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் தங்களை சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் அவர்களால், ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கமுடியும். அவர்கள் எதுவரையிலும் வருவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதுவரையிலும் அவர்கள் வரலாம். அவர்கள் அசுத்தத்தோடும் தீட்டோடும் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசித்தால், அவர்கள் ஜனங்கள் மத்தியில் இராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள்.

சிவப்பான ஒரு கிடாரியை, பாளயத்திற்கு வெளியே கொல்லவேண்டும். அதன் இரத்தத்தை ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக ஏழுதரம் தெளிக்கவேண்டும். கொல்லப்பட்ட கிடாரி எரிக்கப்படவேண்டும். கிடாரியின் சாம்பல் பாளயத்திற்கு புறம்பே சுத்தமான ஒரு இடத்தில் கொட்டி வைக்கப்படவேண்டும். கிடாரியின் சாம்பலில் ஊற்று ஜலம் வார்த்து, தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தயாரிக்கவேண்டும் (எண் 19:1-11).

இஸ்ரவேல் புத்திரர் எப்போதெல்லாம் தீட்டுப்பட்டிருப்பார்கள் என்று கர்த்தர் இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லுகிறார் (எண் 19:11-16). தீட்டுக்கழிக்கும் ஜலம் பற்றியும், தீட்டுப்பட்ட மனுஷரை தீட்டுக்கழிக்கும் ஜலத்தினால் சுத்தம்பண்ணுவது பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (எண் 19:17-22).

பழைய ஏற்பாட்டுக்காலத்து சுத்திகரிப்பு முறைகள் எல்லாமே சடங்காச்சாரமான சுத்திகரிப்புக்களாகும். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நம்முடைய பாவங்கள் நீக்கப்பட்டு, நம்முடைய மனச்சாட்சி சுத்திகரிக்கப்படுவதற்கு, பழைய ஏற்பாட்டுக்காலத்து சடங்காச்சாரமான சுத்திகரிப்பு அடையாளமாயிருக்கிறது.

"அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபி 9:13,14).

சிவப்பான கிடாரி
எண் 19:1-10

எண் 19:1. கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

எண் 19:2. கர்த்தர் கற்பித்த நியமப்பிரமாணவது: பழுதற்றதும் ஊனமில்லாததும் நுகத்தடிக்கு உட்படாததுமாகிய சிவப்பான ஒரு கிடாரியை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லுங்கள்.

எண் 19:3. அதை எலெயாசார் என்னும் ஆசாரியனிடத்தில் ஒப்புக்கொடுங்கள்; அவன் அதைப் பாளயத்துக்கு வெளியே கொண்டுபோகக்கடவன்; அங்கே அது அவனுக்கு முன்பாகக் கொல்லப்படக்கடவது.

எண் 19:4. அப்பொழுது ஆசாரியனாகிய எலெயாசார் தன் விரலினால் அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்துக்கு எதிராக ஏழுதரம் தெளிக்கக்கடவன்.

எண் 19:5. பின்பு கிடாரியை அவன் கண்களுக்கு முன்பாக ஒருவன் சுட்டெரிக்கவேண்டும்; அதன் தோலும் அதின் மாம்சமும் அதின் இரத்தமும் அதின் சாணியும் சுட்டெரிக்கப்படவேண்டும்.

எண் 19:6. அப்பொழுது ஆசாரியன் கேதுருக்கட்டையையும் ஈசோப்பையும் சிவப்பு நூலையும் எடுத்து, கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவிலே போடக்கடவன்.

எண் 19:7. பின்பு ஆசாரியன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, அதின்பின்பு பாளயத்தில் பிரவேசிக்கக்கடவன்; ஆசாரியன் சாயங்கால மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

எண் 19:8. அதைச் சுட்டெரித்தவனும் தன் வஸ்திரங்களை ஜலத்தில் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

எண் 19:9. சுத்தமாயிருக்கிற ஒருவன் அந்தக் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு, பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டிவைக்கக்கடவன்; அது இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காகத் தீட்டுக்கழிக்கும் ஜலத்துக்கென்று காத்து வைக்கப்படவேண்டும்; அது பாவத்தைப் பரிகரிக்கும்.

எண் 19:10. கிடாரியின் சாம்பலை வாரினவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; இது இஸ்ரவேல் புத்திரருக்கும் அவர்கள் நடுவிலே தங்குகிற அந்நியனுக்கும் நித்திய கட்டளையாயிருப்பதாக.

சிவப்பான ஒரு கிடாரியைக் கொன்று, அதை சுட்டெரித்து, அதன் சாம்பலை சேகரித்து, தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தயாரிப்பதுபற்றி கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் சொல்லுகிறார். தீட்டுக்கழிக்கும் ஜலம் அழகுக்காகவோ, அலங்காரத்திற்காகவோ, ஆடம்பரத்திற்காகவோ செய்யப்படவில்லை. அது தீட்டுப்பட்டவர்களை சுத்திகரிப்பதற்காக செய்யப்படுகிறது. தீட்டுக்கழிக்கும் ஜலம் பாவத்தை பரிகரிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீட்டுக்கழிக்கும் ஜலத்தை செய்வதற்காக கொல்லப்படும் சிவப்பான கிடாரியை எவ்வாறு தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுகிற நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்து, சிவப்பான கிடாரியை தெரிந்தெடுக்கவேண்டும்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "கர்த்தர் கற்பித்த நியமப்பிரமாணவது: பழுதற்றதும் ஊனமில்லாததும் நுகத்தடிக்கு உட்படாததுமாகிய சிவப்பான ஒரு கிடாரியை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லுங்கள்" (எண் 19:1,2) என்று சொல்லுகிறார்.

கொல்லப்படவேண்டிய சிவப்பு நிறமான கிடாரி பழுதற்றதும் ஊனமில்லாததுமாயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாவமில்லாமல், கறை திரை எதுவுமில்லாமல், பரிபூரணமான பரிசுத்தராயிருக்கிறார் என்பதற்கு, பழுதற்றதும் ஊனமில்லாததுமான கிடாரி அடையாளமாயிருக்கிறது.

இந்தக் கிடாரி சிவப்பு நிறமானதாக இருக்கவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். பொதுவாக கிடாரியின் நிறம் சிவப்பாக இருக்காது. பல கிடாரிகளை தேடிப்பார்த்து, அவற்றில் சிவப்பு நிற கிடாரியை கண்டுபிடிக்கவேண்டும். சிவப்பான கிடாரி மிகவும் விசேஷமானது. கர்த்தருக்கு செலுத்தப்படும் காணிக்கை விசேஷமானதாகயிருக்கவேண்டும் என்பதற்கு சிவப்பான கிடாரி அடையாளமாயிருக்கிறது.

அந்தக் கிடாரி நுகத்தடிக்கு உட்படாததுமாயிருக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தக் கிடாரியை வேறு எந்த வேலைக்கும் பயன்படுத்தியிருக்கக்கூடாது. வேறு எந்த விதமான பலிகளையும் செலுத்துவதற்காக, இந்தக் கிடாரி நியமிக்கப்பட்டிருக்கக்கூடாது. சிவப்பான கிடாரி, தீட்டுக்கழிக்கும் ஜலத்தை செய்வதற்காக, விசேஷமாய் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை கல்வாரி சிலுவையில் மரிக்குமாறு யாரும் கட்டாயம்பண்ணவில்லை. அவர் தாமாகவே மனமுவந்து, மனப்பூர்வமாக, தம்மைத்தாமே, கல்வாரி சிலுவையில் ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். நுகத்தடிக்கு உட்படாத கிடாரி, இயேசுகிறிஸ்துவின் மனப்பூர்வமான பலிமரணத்திற்கு அடையாளம்.

சிவப்பான கிடாரியை ஆசாரியனிடத்தில் கொண்டு வரும்போது, அதன்மீது நுகத்தடியை போட்டோ, அதை கயிறுகளினால் கட்டியோ கொண்டு வரமாட்டார்கள். அது நுகத்தடிக்கு உட்படாத கிடாரி. அது தானாகவே ஆசாரியனிடத்தில் கொண்டு வரப்படவேண்டும். இயேசுகிறிஸ்துவும் கல்வாரி சிலுவையில் மரிக்கும்போது, அவர் அன்பின் நேசக்கயிறுகளினால் கட்டப்பட்டிருந்தாரேயல்லாமல், வேறு எந்தக் கயிறுகளாலும் கட்டப்படவில்லை.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "அதை எலெயாசார் என்னும் ஆசாரியனிடத்தில் ஒப்புக்கொடுங்கள்; அவன் அதைப் பாளயத்துக்கு வெளியே கொண்டுபோகக்கடவன்; அங்கே அது அவனுக்கு முன்பாகக் கொல்லப்படக்கடவது" (எண் 19:3) என்று சொல்லுகிறார்.

முதல் முறையாக இஸ்ரவேல் புத்திரர் எண்ணித் தொகையேற்றப்படும்போது எலெயாசார், லேவி கோத்திரத்தாருக்குத் தலைவனாக இருந்தார். (எண் 3:32; எண் 4:16). ஆரோன் மரிக்கக்கூடிய சமயம் வந்துவிட்டது. ஆகையினால் ஆரோனுடைய ஆசாரிய ஊழியத்தின் பணிவிடைகளில் சில காரியங்கள் எலெயாசாரிடம் பொறுப்பாக ஒப்படைக்கப்படுகிறது. (எண் 16:37,39; எண் 19:3,4) எலெயாசாரைப் பற்றிய அடுத்த குறிப்பு ஆரோனுடைய மரணத்திற்குப் பின்பு, அவர் பிரதான ஆசாரியனாக நியமிக்கப்பட்ட பின்பு வருகிறது (எண் 20:23-29).

ஆரோனுக்கு அடுத்தபடியாக எலெயாசார் இஸ்ரவேல் சபையாருக்கு பிரதான ஆசாரியராக ஊழியம் செய்யப்போகிறார். ஆரோனுக்கு கொடுக்கப்படுகிற கனமும் மேன்மையும், முக்கியத்துவமும் இனிமேல் எலெயாசாருக்கு கொடுக்கப்படும். ஆகையினால் சிவப்பான கிடாரியை எலெயாசார் என்னும் ஆசாரியனிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சிவப்பான கிடாரி பாளயத்திற்கு வெளியே கொல்லப்படவேண்டும். அசுத்தமான மிருகங்கள் பாளயத்திற்கு வெளியே கொல்லப்படவேண்டும். இஸ்ரவேல் புத்திரரில் கல்லெறிந்து கொல்லப்படவேண்டியவர்களை, பாளயத்திற்கு புறம்பே கொல்லுவது வழக்கம். தீட்டான பொருட்களையும், அசுத்தமான பொருட்களையும் பாளயத்திற்கு புறம்பே கொண்டுபோய் கொட்டுவது வழக்கம்.

சிவப்பான கிடாரியானது பாளயத்திற்கு வெளியே கொண்டு போகப்பட்டு, அங்கே அது ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக கொல்லப்படுகிறது. நம்முடைய பாவங்களை நீக்குவதற்கு சடங்காச்சார ரீதியான பிரமாணங்கள் போதுமானவையல்ல என்பதற்கு இது அடையாளம்.

பாளயத்திற்கு வெளியே சிவப்பான கிடாரி கொல்லப்படும்போது, ஆசாரியனாகிய எலெயாசார் தன் விரலினால் அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்துக்கு எதிராக ஏழுதரம் தெளிக்கவேண்டும் (எண் 19:4). இது பாவநிவாரணத்திற்கு அடையாளம். ஆசரிப்புக்கூடாரத்தில் பாவநிவாரண பலிகள் செலுத்தப்படும்போது, பலிசெலுத்தப்படும் மிருகத்தின் இரத்தம், கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக தெளிக்கப்படும்.

சிவப்பான கிடாரியை பலிசெலுத்துவதில் பங்கு வகிப்பவர்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரர் - சிவப்பு கிடாரியைக் கொண்டுவரவேண்டும். (எண் 19:2)
2. எலெயாசார் - சிவப்பு கிடாரியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் (எண் 19:3)
3. மற்றொரு மனுஷன் - சிவப்பு கிடாரியை அடித்து, அதை அக்கினியில் தகிக்க வேண்டும். (எண் 19:3,5,8)
4. மற்றொரு மனுஷன் - சிவப்பு கிடாரியின் சாம்பலை வாரி, அதைப் பரிசுத்தமான இடத்தில் பாதுகாத்து வைக்க வேண்டும். (எண் 19:9-10)
5. மற்றொரு மனுஷன் - தீட்டுக் கழிக்கும் ஜலத்தைத் தெளிக்க வேண்டும். (எண் 19:17-21)

கொல்லப்பட்ட சிவப்பான கிடாரியின் இரத்தம், ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக தெளிக்கப்பட்ட பின்பு, அந்த கிடாரியை ஆசாரியனாகிய எலெயாசாரின் கண்களுக்கு முன்பாக ஒருவன் சுட்டெரிக்கவேண்டும்; அதன் தோலும் அதின் மாம்சமும் அதின் இரத்தமும் அதின் சாணியும் சுட்டெரிக்கப்படவேண்டும் (எண் 19:5).

சிவப்பான கிடாரி சுட்டெரிக்கப்படும்போது, ஆசாரியன் கேதுருக்கட்டையையும் ஈசோப்பையும் சிவப்பு நூலையும் எடுத்து, கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவிலே போடவேண்டும் (எண் 19:6).

இவை குஷ்டரோகிகளை சுத்திகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருட்களாகும்

"உயிருள்ள குருவியையும், கேதுருக்கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் எடுத்து, இவைகளையும் உயிருள்ள குருவியையும் ஊற்றுநீர்மேல் கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்த்து, குஷ்டம் நீங்கச் சுத்திகரிக்கப்படுகிறவன்மேல் ஏழுதரம் தெளித்து, அவனைச் சுத்தம்பண்ணி, உயிருள்ள குருவியை வெளியிலே விட்டுவிடக்கடவன்" (லேவி 14:6,7).

சிவப்பான கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பிலே, கேதுரு கட்டையும், ஈசோப்பும் சிவப்பு நூலும் எரியும். அப்போது சிவப்பான கிடாரியின் சாம்பலும், கேதுரு கட்டை, ஈசோப்பு, சிவப்பு நூல் ஆகியவற்றின் சாம்பலும் ஒன்றாய்க் கலக்கும். இந்த சாம்பல் சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது.

சிவப்பான கிடாரி நெருப்பின் நடுவிலே எரியும்போது, கிடாரியின் சாம்பலோடு, விறகுகளின் சாம்பலும் கலந்திருக்கும். சுத்தமாயிருக்கிற ஒருவன், கிடாரியின் சாம்பலையும், அந்தக் கிடாரியை எரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட விறகுகளின் சாம்பலையும் தனித்தனியாக பிரித்து, அந்தக் கிடாரியின் சாம்பலை மட்டும் தனியாக சேகரிக்கவேண்டும். அந்த சாம்பலை பாளயத்திற்கு புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டி வைக்கவேண்டும் (எண் 19:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீட்டுக்கழிக்கும் ஜலமானது எண் 8:7 ஆவது வசனத்தில் சுத்திகரிக்கும் ஜலம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு வேறுபிரிக்கும் ஜலம் என்னும் மறுபெயரும் உண்டு. தீட்டான காரியங்களிலிருந்து தங்களை வேறுபிரித்துக் கொள்ள விரும்புகிறவர்கள்மீது இந்த ஜலம் தெளிக்கப்படுகிறது. தீட்டானவர்கள் மீது இந்த ஜலம் தெளிக்கப்படும் போது அவர்களுடைய தீட்டு கழிந்துபோகும்.

கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு, அதை சுத்தமான இடத்திலே கொட்டி வைக்கிறவன், சுத்தமுள்ளவனாயிருக்க வேண்டும். கிடாரியின் சாம்பல் இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காகத் தீட்டுக்கழிக்கும் ஜலத்துக்கென்று காத்து வைக்கப்படவேண்டும்; அது பாவத்தைப் பரிகரிக்கும் (எண் 19:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சிவப்பான கிடாரியை கொல்லுவது, அதன் இரத்தத்தை ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக தெளிப்பது, பின்பு அந்தக் கிடாரியை சுட்டெரிப்பது, கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவில் கேதுரு கட்டை, ஈசோப்பு, சிவப்பு நூல் ஆகியவற்றைப்போடுவது, அதன் பின்பு அந்தக் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு, அதை பாளயத்திற்கு புறம்பே சுத்தமான இடத்தில் போடுவது ஆகிய வேலைகளை செய்கிறவர்கள் எல்லோருமே, சடங்காச்சார ரீதியாக தீட்டானவர்களாயிருக்கிறார்கள். கிடாரியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனாகிய எலெயாசாரும் தீட்டுப்பட்டிருக்கிறார்.

தீட்டுப்பட்டிருக்கிறவர்கள் அனைவரும் சடங்காச்சார பிரகாரமாக தீட்டுப்பட்டிருப்பதினால், அவர்கள் எல்லோரும் சடங்காச்சார பிரகாரமாக சுத்திகரிக்கப்படவேண்டும். அவர்கள் சுத்திகரிக்கப்படவேண்டிய விதத்தையும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "ஆசாரியன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, அதின்பின்பு பாளயத்தில் பிரவேசிக்கக்கடவன்; ஆசாரியன் சாயங்கால மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்" (எண் 19:7) என்றும்,

"அதைச் சுட்டெரித்தவனும் தன் வஸ்திரங்களை ஜலத்தில் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்" (எண் 19:8) என்றும்,

"கிடாரியின் சாம்பலை வாரினவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்" (எண் 19:10) என்றும், சொல்லுகிறார்.

பாவத்தை பரிகரிப்பதற்காக சிவப்பான கிடாரி கொல்லப்படுகிறது. அதன் இரத்தம் தெளிக்கப்படுகிறது. கிடாரி எரிக்கப்படுகிறது. அதன் சாம்பல் சேகரிக்கப்படுகிறது. இவை அனைத்தும் பாவத்தை பரிகரிப்பதற்காக செலுத்தப்படும் பலிகளாக இருப்பதினால், இவையெல்லாம் தீட்டானவையாக கருதப்படுகிறது. மனுஷருடைய பாவம் இந்தக் கிடாரியின்மீது சுமத்தப்படுகிறது. இதனால் இந்தக் கிடாரியும் பாவமாயிற்று.

நம்முடைய பாவம், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மீது சுமத்தப்பட்டதினால், அவர் நமக்காக பாவமானார். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2கொரி 5:21).

சிவப்பு கிடாரியை பற்றிய பிரமாணம், இஸ்ரவேல் புத்திரருக்கும் அவர்கள் நடுவிலே தங்குகிற அந்நியனுக்கும் நித்திய கட்டளையாயிருப்பதாக (எண் 19:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீட்டுக் கழிக்கும் ஜலம் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. பழுதற்றதும் ஊனமில்லாததும் நுகத்தடிக்கு உட்படாததுமாகிய சிவப்பான ஒரு கிடாரியை உன்னிடத்தில் (மோசே, ஆரோன் ஆகியோரிடத்தில்) கொண்டு வரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லுங்கள். (எண் 19:2)

2. சிவப்பான ஒரு கிடாரியை, எலெயாசார் என்னும் ஆசாரியனிடத்தில் ஒப்புக் கொடுங்கள் (எண் 19:3).

3. எலெயாசார் கிடாரியைப் பாளயத்துக்கு வெளியே கொண்டுபோகக்கடவன்.

4. எலெயாசாருக்கு முன்பாக அது கொல்லப்படக்கடவது (எண் 19:4).

5. ஆசாரியனாகிய எலெயாசார் தன் விரலினால் அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக் கூடாரத்துக்கு எதிராக ஏழுதரம் தெளிக்கக்கடவன்.

6. கிடாரியை அவன் கண்களுக்கு முன்பாக ஒருவன் சுட்டெரிக்கவேண்டும்; அதன் தோலும் அதின் மாம்சமும் அதின் இரத்தமும் அதின் சாணியும் சுட்டெரிக்கப்படவேண்டும் (எண் 19:5).

7. ஆசாரியன் கேதுருக்கட்டையையும் ஈசோப்பையும் சிவப்பு நூலையும் எடுத்து, கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவிலே போடக்கடவன் (எண் 19:6).

8. ஆசாரியன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, அதின்பின்பு பாளயத்தில் பிரவேசிக்கக் கடவன்; ஆசாரியன் சாயங்கால மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (எண் 19:7).

9. கிடாரியைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களை ஜலத்தில் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, சாயங்கால மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (எண் 19:8).

10. சுத்தமாயிருக்கிற ஒருவன் அந்தக் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு, பாளத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டிவைக்கக்கடவன் (எண் 19:9).

11. கிடாரியின் சாம்பல், இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காகத் தீட்டுக்கழிக்கும் ஜலத்துக்கென்று காத்து வைக்கப்பட வேண்டும்; அது பாவத்தைப் பரிகரிக்கும்.

12. கிடாரியின் சாம்பலை வாரினவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; அவன் சாயங்காலமட்டும் தீட்டுப் பட்டிருப்பான் (எண் 19:10).

13. இது இஸ்ரவேல் புத்திரருக்கும் அவர்கள் நடுவிலே தங்குகிற அந்நியனுக்கும் நித்திய கட்டளை.

14. செத்துப்போனவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான் (எண் 19:11).

15. அவன் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தீட்டுக்கழிக்கும் ஜலத்தினால் தன்னைச் சுத்திகரிக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாவான் (எண் 19:12).

16. மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தன்னைச் சுத்திகரிக்காமலிருப்பானாகில் சுத்தமாகான்.

17. செத்தவனுடைய பிரேதத்தைத் தொட்டும், தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாதவன் கர்த்தரின் வாசஸ்தலத்தைத் தீட்டுப் படுத்துகிறான்; அந்த ஆத்துமா இஸ்ரவேலில் இராமல் அறுப்புண்டு போவான் (எண் 19:13).

18. கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால், அந்தக் கூடாரத்தில் பிரவேசிக்கிற யாவரும் கூடாரத்தில் இருக்கிற யாவரும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பார்கள் (எண் 19:14).

19. மூடிக் கட்டப்படாமல் திறந்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும் (எண் 19:15).

20. வெளியிலே பட்டயத்தால் வெட்டுண்டவனையாவது, செத்தவனையாவது, மனித எலும்பையாவது, பிரேதக்குழியையாவது, தொட்டவன் எவனும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான் (எண் 19:16).

21. தீட்டுப்பட்டவனுக்காக, பாவத்தைப் பரிகரிக்கும் கிடாரியின் சாம்பலிலே கொஞ்சம் எடுத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதின்மேல் ஊற்று ஜலம் வார்க்கவேண்டும் (எண் 19:17).

22. சுத்தமான ஒருவன் ஈசோப்பை எடுத்து, அந்த ஜலத்திலே தோய்த்து, கூடாரத்தின் மேலும் அதிலுள்ள சகல பணிமுட்டுகளின் மேலும் அங்கேயிருக்கிற ஜனங்களின் மேலும் தெளிக்கிறதுமல்லாமல், எலும்பையாகிலும் வெட்டுண்டவனையாகிலும் செத்தவனையாகிலும் பிரேதக் குழியையாகிலும் தொட்டவன்மேலும் தெளிக்கக்கடவன் (எண் 19:18).

23. சுத்தமாயிருக்கிறவன் தீட்டுப்பட்டவன் மேல் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தெளிக்கவேண்டும் (எண் 19:19).

24. ஏழாம் நாளில் இவன் தன்னைச் சுத்திகரித்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, சாயங்காலத்திலே சுத்தமாயிருப்பான்.

25. தீட்டுப்பட்டிருக்கிறவன் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாதிருந்தால், அவன் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்; அவன் கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான்; தீட்டுக்கழிக்கும் ஜலம் அவன்மேல் தெளிக்கப்படாததினால் அவன் தீட்டுப்பட்டிருக்கிறான் (எண் 19:20).

26. தீட்டுக்கழிக்கும் ஜலத்தைத் தெளிக்கிறவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; தீட்டுக்கழிக்கும் ஜலத்தைத் தொட்டவனும் சாயங்கால மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (எண் 19:21).

27. தீட்டுக்கழிக்கும் ஜலத்தைத் தொட்டவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (எண் 19:21,22).

28. தீட்டுப்பட்டிருக்கிறவன் தொடுகிறவைகளெல்லாம் தீட்டுப்படும் (எண் 19:22).

தீட்டுக்கழிக்கும் ஜலம் எண் 19:11-22

எண் 19:11. செத்துப்போனவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான்.

எண் 19:12. அவன் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தீட்டுக்கழிக்கும் ஜலத்தினால் தன்னைச் சுத்திகரிக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாவான்; மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தன்னைச் சுத்திகரிக்காமலிருப்பானாகில் சுத்தமாகான்.

எண் 19:14. கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால், அதற்கடுத்த நியமமாவது: அந்தக் கூடாரத்தில் பிரவேசிக்கிற யாவரும் கூடாரத்தில் இருக்கிற யாவரும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பார்கள்.

எண் 19:15. மூடிக் கட்டப்படாமல் திறந்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும்.

எண் 19:16. வெளியிலே பட்டயத்தால் வெட்டுண்டவனையாவது, செத்தவனையாவது, மனித எலும்பையாவது, பிரேதக்குழியையாவது, தொட்டவன் எவனும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான்.

எண் 19:17. ஆகையால் தீட்டுப்பட்டவனுக்காக, பாவத்தைப் பரிகரிக்கும் கிடாரியின் சாம்பலிலே கொஞ்சம் எடுத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதின்மேல் ஊற்று ஜலம் வார்க்கவேண்டும்.

எண் 19:18. சுத்தமான ஒருவன் ஈசோப்பை எடுத்து, அந்த ஜலத்திலே தோய்த்து, கூடாரத்தின்மேலும் அதிலுள்ள சகல பணிமுட்டுகளின்மேலும் அங்கேயிருக்கிற ஜனங்களின்மேலும் தெளிக்கிறதுமல்லாமல், எலும்பையாகிலும் வெட்டுண்டவனையாகிலும் செத்தவனையாகிலும் பிரேதக்குழியையாகிலும் தொட்டவன்மேலும் தெளிக்கக்கடவன்.

எண் 19:19. சுத்தமாயிருக்கிறவன் தீட்டுப்பட்டவன்மேல் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தெளிக்கவேண்டும்; ஏழாம் நாளில் இவன் தன்னைச் சுத்திகரித்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, சாயங்காலத்திலே சுத்தமாயிருப்பான்.

எண் 19:20. தீட்டுப்பட்டிருக்கிறவன் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளாதிருந்தால், அவன் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்; அவன் கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான்; தீட்டுக்கழிக்கும் ஜலம் அவன்மேல் தெளிக்கப்படாததினால் அவன் தீட்டுப்பட்டிருக்கிறான்.

எண் 19:21. தீட்டுக்கழிக்கும் ஜலத்தைத் தெளிக்கிறவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன்; தீட்டுக்கழிக்கும் ஜலத்தைத் தொட்டவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

எண் 19:22. தீட்டுப்பட்டிருக்கிறவன் தொடுகிறவைகளெல்லாம் தீட்டுப்படும், அவைகளைத் தொடுகிறவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; இது உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்.

சிவப்பான கிடாரியின் சாம்பல் பாளயத்திற்கு புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டி வைக்கப்படுகிறது. இது இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காக தீட்டுக்கழிக்கும் ஜலத்திற்கென்று காத்து வைக்கப்படுகிறது. தீட்டுக்கழிக்கும் ஜலம் பாவத்தை பரிகரிக்கும். தீட்டுக்கழிக்கும் ஜலத்தை எவ்வாறு தயாரிக்கவேண்டும் என்றும், இந்த ஜலம் தீட்டுப்பட்டவன்மேல் தெளிக்கப்படும்போது அவன் எவ்வாறு சுத்தமாயிருப்பான் என்றும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் தெளிவுபடுத்துகிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் பலவிதமான தீட்டுக்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தீட்டுப்பட்டவன் சுத்திகரிக்கப்படவேண்டும். இது கர்த்தருடைய பிரமாணம். தீட்டுப்பட்டவன் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாமல் கர்த்தரின் வாசஸ்தலத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. தன்னைச் சுத்தம்பண்ணாமல், தன்னுடைய தீட்டோடும் அசுத்தத்தோடும் ஒருவன் கர்த்தரின் வாசஸ்தலத்திற்குள் பிரவேசித்தால், அவன் இஸ்ரவேலில் இராமல் அறுப்புண்டு போகவேண்டும். இது தீட்டுப்பட்டவனைக் குறித்து கர்த்தர் சொல்லியிருக்கிற பிரமாணம்.

இஸ்ரவேல் ஜனத்தார் சடங்காச்சார ரீதியாக பல்வேறு காரணங்களினால் தீட்டுப்படுகிறார்கள். இந்த அதிகாரத்தில் செத்தவனுடைய பிரேதத்தை தொட்டத்தினால் உண்டாகும் தீட்டைப்பற்றி மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. செத்தவனுடைய பிரேதத்தைத் தொடுகிறவன் மாத்திரமல்ல எலும்பையாகிலும், வெட்டுண்டவனையாகிலும், பிரேதக்குழியையாகிலும் தொட்டவனும் தீட்டுப்பட்டிருப்பான்.

செத்துப்போனவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான். அவன் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தீட்டுக்கழிக்கும் ஜலத்தினால் தன்னைச் சுத்திகரிக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாவான்; மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தன்னைச் சுத்திகரிக்காமலிருப்பானாகில் சுத்தமாகான் (எண் 19:11,12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மனுஷ பிரேதத்தின் மூலமாக வரக்கூடிய தீட்டு ஏழுநாட்களுக்கு இருக்கும். (எண் 19:11-12,14-16), சிவப்புக் கிடாரியின் மூலமாக வரக்கூடிய தீட்டு (எண் 19:7-10), தீட்டுக் கழிக்கும் ஜலத்தைத் தெளிப்பதினால் வரக்கூடிய தீட்டு (எண் 19:19), தீட்டுக் கழிக்கும் ஜலத்தைத் தொடுவதினால் வரக்கூடிய தீட்டு (எண் 19:21) ஆகியவை ஒரு நாளுக்கு மட்டுமே இருக்கும்.

செத்தவனுடைய பிரேதத்தைத் தொட்டும், தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாதவன் கர்த்தரின் வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்துகிறான்; அந்த ஆத்துமா இஸ்ரவேலில் இராமல் அறுப்புண்டு போவான்; தீட்டுக்கழிக்கும் ஜலம் அவன் மேல் தெளிக்கப்படாததினால், அவன் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் தீட்டு இன்னும் அவன்மேல் இருக்கும் (எண் 19:13).

"அந்த ஆத்துமா இஸ்ரவேலில் இராமல் அறுப்புண்டு போவான்" என்னும் வாக்கியத்திற்கு நியாயப் பிரமாணத்தைப் பற்றித் தெரிந்திருந்தும், அதற்குக் கீழ்ப்படியாமல் துணிகரமாக பாவம் செய்ததினால், அவனுக்கு மரணதண்டனை கொடுக்கப்படும் என்று பொருள் (எண் 19:13; எண் 15:30-31; யாக் 4:17).

கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால், அதற்கடுத்த நியமத்தையும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு : அந்தக் கூடாரத்தில் பிரவேசிக்கிற யாவரும் கூடாரத்தில் இருக்கிற யாவரும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பார்கள். மூடிக் கட்டப்படாமல் திறந்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும் (எண் 19:14,15).

வெளியிலே பட்டயத்தால் வெட்டுண்டவனையாவது, செத்தவனையாவது, மனித எலும்பையாவது, பிரேதக்குழியையாவது, தொட்டவன் எவனும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான் (எண் 19:16).

மனுஷனைத் தீட்டுப்பட வைக்கும் காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. சிவப்பு கிடாரியைப் பலியிடுதல். (எண் 19:3-7)
2. சிவப்பு கிடாரியை அக்கினியில் சுட்டெரித்தல் (எண் 19:8)
3. கிடாரியின் சாம்பலை வாருதல் (எண் 19:9-10)
4. செத்தப் பிரேதத்தைத் தொடுதல் (எண் 19:11-16)
5. செத்துப்போன மனுஷன் இருக்கும் கூடாரத்திற்குள் பிரவேசித்தல். (எண் 19:14)
6. ஒருவன் செத்துப்போகும்போது அவனோடு இருத்தல்.
7. பட்டயத்தால் வெட்டுண்டவனைத் தொடுதல். (எண் 19:16)
8. செத்துப்போனவனுடைய மனித எலும்பைத் தொடுதல்.
9. பிரேதக்குழியைத் தொடுதல்.
10. தீட்டுக் கழிக்கும் ஜலத்தைத் தீட்டானவன்மீது தெளித்தல். (எண் 19:18-21)

மரித்தோரின் சரீரம் தீட்டாயிருக்கிறது. ஆகையினால் அந்த சரீரத்தைத் தொடுகிறவர்களும் தீட்டுப்பட்டவர்களாயிருக்கிறார்கள். நியாயப்பிரமாணத்தினால் மரணத்தை ஜெயிக்க முடியாது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமோ மரணத்தையும், அதின் சாபத்தையும், கோரத்தையும் ஜெயித்திருக்கிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணத்தினால் தீட்டுப்பட்டதை சுத்தம்பண்ண மாத்திரமே முடியும். மரித்துப்போன சரீரம், மரித்துப்போனதாகவே இருக்கும். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமோ நமக்கு ஜீவனைக் கொடுக்கிறது. அது நமக்கு நித்திய ஜீவனாயிருக்கும். இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் மூலமாய், மரித்தோர்களுக்கும் ஒரு நல்ல நம்பிக்கை வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே மரித்தார். அவரை கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். ஆனாலும் மரணத்தால் அவரை மேற்கொள்ள முடியவில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மரணத்தினால் அழிக்க முடியவில்லை. கிறிஸ்துவானவர் மரித்து மூன்றாம் நாளிலே உயிரோடு எழும்பினார். அவர் மரணத்தை ஜெயித்தார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மை மரித்தோரின் சரீரம் தீட்டுப்படுத்தாது. ஒருவர் மரித்துப்போகும்போது, அவரைப்பற்றிய நினைவுகளும், அவருடைய பிரிவும் நமக்கு வருத்தமாகயிருக்கும். ஆனாலும் விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்குள் தைரியமாயிருந்து, நம்முடைய கவலைகளையும் வருத்தங்களையும் மேற்கொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களை விசுவாசிகளாகிய நாம் மறுபடியும் பார்ப்போம் என்னும் ஆனந்த பாக்கிய நம்பிக்கை நமக்குள்ளது.

செத்தவனுடைய பிரேதத்தினால் தீட்டுப்பட்டவர்களை சுத்திகரிப்பது சம்பந்தமான பிரமாணம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. தீட்டுப்பட்டவனை சுத்தம்பண்ணுவதற்காக அவன்மீது தீட்டுக்கழிக்கும் ஜலம் தெளிக்கப்படுகிறது.

தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தயாரிக்க வேண்டிய விவரம் வருமாறு: தீட்டுப்பட்டவனுக்காக, பாவத்தைப் பரிகரிக்கும் கிடாரியின் சாம்பலிலே கொஞ்சம் எடுத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு, அதின்மேல் ஊற்று ஜலம் வார்க்கவேண்டும் (எண் 19:17).

தீட்டுப்பட்டவன்மேல், தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தெளிக்க வேண்டிய விவரம் வருமாறு: சுத்தமான ஒருவன் ஈசோப்பை எடுத்து, அந்த ஜலத்திலே தோய்த்து, கூடாரத்தின் மேலும் அதிலுள்ள சகல பணிமுட்டுகளின்மேலும் அங்கேயிருக்கிற ஜனங்களின் மேலும் தெளிக்கவேண்டும். மேலும் எலும்பையாகிலும் வெட்டுண்டவனையாகிலும் செத்தவனையாகிலும் பிரேதக்குழியையாகிலும் தொட்டவன்மேலும் தீட்டுக்கழிக்கும் ஜலத்தை தெளிக்கவேண்டும் (எண் 19:18).

சுத்தமான ஒருவன் என்பது தீட்டுப்படாமல் சுத்தமாயிருக்கும் ஒருவனைக் குறிக்கும். ஆசாரியன் மட்டுமே தீட்டுக் கழிக்கும் ஜலத்தைத் தெளிக்க வேண்டும் என்னும் நியதி எதுவுமில்லை. சுத்தமான யாரும் தீட்டுக் கழிக்கும் ஜலத்தைத் தெளிக்கலாம். (எண் 19:17-21).

செத்தவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான் என்றும், அவன் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தீட்டுக்கழிக்கும் ஜலத்தினால் தன்னைச் சுத்திகரிக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாவான்; மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தன்னைச் சுத்திகரிக்காமலிருப்பானாகில் சுத்தமாகான் (எண் 19:11,12) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தீட்டுப்பட்டவன்மேல் தீட்டுக்கழிக்கும் ஜலம் தெளிக்கப்படுவது பற்றியும், தீட்டுப்பட்டவன் சுத்தமாவது பற்றியும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு:

சுத்தமாயிருக்கிறவன் தீட்டுப்பட்டவன்மேல் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தெளிக்கவேண்டும்; ஏழாம் நாளில் இவன் தன்னைச் சுத்திகரித்து, தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்தில் ஸ்நானம்பண்ணி, சாயங்காலத்திலே சுத்தமாயிருப்பான் (எண் 19:19).

தீட்டுப்பட்டிருக்கிறவன் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாதிருந்தால், அவன் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்; அவன் கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான்; தீட்டுக்கழிக்கும் ஜலம் அவன்மேல் தெளிக்கப்படாததினால் அவன் தீட்டுப்பட்டிருக்கிறான் (எண் 19:20).

கர்த்தர் சுத்திகரிப்பை விரும்புகிறார். சுத்திகரிக்கும் சடங்குகளும் கர்த்தருக்கு முக்கியமானவை. தீட்டுப்பட்டிருக்கிறவன் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளாதிருந்தால், அவன் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான். ஆகையினால், நமது பாவங்களிலிருந்து நாம் இயேசு கிறிஸ்துவின் திருஇரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுவது மிகவும் அவசியம்.

சுத்தமாயிருக்கிறவனே தீட்டுப்பட்டவன்மேல் தீட்டுக்கழிக்கும் ஜலம் தெளிக்கிறான். அவன் அந்த ஜலத்தை தொட்டதினால் அவனும் தீட்டுப்பட்டிருக்கிறான். ஆகையினால் தீட்டுக்கழிக்கும் ஜலத்தைத் தெளிக்கிறவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்க வேண்டும்; தீட்டுக்கழிக்கும் ஜலத்தைத் தொட்டவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான். தீட்டுப்பட்டிருக்கிறவன் தொடுகிறவைகளெல்லாம் தீட்டுப்படும், அவைகளைத் தொடுகிறவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான் (எண் 19:21,22).

தீட்டுப்பட்டவனை சுத்திகரிப்பதற்காக கர்த்தர் இந்த அதிகாரத்தில் தம்முடைய பிரமாணத்தை சொல்லியிருக்கிறார். இது இஸ்ரவேல் புத்திரருக்கு நித்திய கட்டளையாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எண் 19:22).

சரீரத்தில் உண்டான தீட்டுக்களைச் சுத்திகரிப்பதற்காகச் சிவப்பு கிடாரியின் பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பொதுவான பணத்திலிருந்து சிவப்பு கிடாரியை வாங்கித் தரவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் தீட்டுக்கழிக்கும் ஜலம் செய்வதற்காக சிவப்பு கிடாரியின் இரத்தம் பயன்படுத்தப்படும்.

கிடாரி சிவப்பு நிறத்தில் இருக்கும். இது இரத்தத்திற்கு அடையாளம். கர்த்தருடைய சமூகத்தில் பலவிதமான மிருகஜீவன்கள் பலியிடப்பட்டாலும், இந்தப் பலியில் மட்டுமே கிடாரி சிவப்பு நிறத்தில் இருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

சிவப்புக் கிடாரியைப் பிரதான ஆசாரியரிடத்தில் கொடுக்கக்கூடாது. அதை எலெயாசாரிடம் கொடுக்க வேண்டும். சிவப்பு கிடாரியை அடிப்பதினால் தீட்டு வரும். பிரதான ஆசாரியனுக்கு எந்தவிதமான தீட்டும் ஏற்படக்கூடாது (எண் 19:6-7= லேவி 21:10-12).

சிவப்புக் கிடாரியைப் பாளயத்திற்குப் புறம்பே அடிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து ஊருக்கு வெளியில் சிலுவையில் அறையப்பட்டதற்கு இது அடையாளமாகும். (எண் 19:3= எபி 13:12; லேவி 24:14).

சிவப்புக் கிடாரியின் இரத்தத்தை ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராக ஏழு தரம் தெளிக்க வேண்டும். (எண் 19:4) கர்த்தர் இந்தப் பலியை அங்கிகரித்திருக்கிறார் என்பதற்கு இது அடையாளம். தீட்டுக் கழிக்கும் ஜலத்தைத் தெளித்து, ஒருவரைச் சுத்திகரிக்கலாம் (எண் 19:12-15,17-21). தீட்டுப்பட்டிருக்கும் நபர் சுத்தமாவதற்கு ஏழு நாட்களாகும். இரண்டு முறை அவர்மீது தீட்டுக்கழிக்கும் ஜலத்தைத் தெளிக்க வேண்டும். (எண் 19:17-21).

எகிப்தியரும் இதுபோன்று வருஷத்திற்கு ஒரு முறை தைப்போன் என்னும் தெய்வத்திற்குப் பலியிடுவது வழக்கம். சிவப்புக் கிடாரிக்குப் பதிலாகச் சிவப்புக் காளையை எகிப்தியர் பலியிடுகிறார்கள்.

ஒரு குடும்பத்தில் ஒருவர் மரித்துப் போனால், அந்தக் குடும்பத்தார் அனைவரும் தீட்டுப்பட்டிருப்பார்கள். அந்த வீட்டிற்கு வரும் அனைவரும் தீட்டுப்பட்டிருப்பார்கள். செத்த பிரேதத்தைத் தொடுவது, மரித்துப்போனவரின் எலும்பைத் தொடுவது, பிரேதக் குழியைத் தொடுவது ஒரு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் காரியங்களாகும். சிவப்புக் கிடாரியை அடிக்கும் போதும், தீட்டுக் கழிக்கும் ஜலத்தை உண்டாக்கும் போதும் தீட்டு உண்டாகிறது.

ஒரு வீட்டில் ஒரு மனுஷன் மரித்துப் போனால், அந்த வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் தீட்டுப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே சுத்திகரிக்கப்பட வேண்டும். தீட்டுக் கழிக்கும் ஜலத்தை இவர்கள்மீது தெளிக்க வேண்டும் (எண் 19:14).

இஸ்ரவேலரின் ஜனத்தொகை மிகவும் அதிகம். தீட்டுக் கழிக்கும் ஜலம் அன்றாடம் அதிகமாகத் தேவைப்படும். ஆகையினால், அவ்வப்போது, சிவப்புக் கிடாரிகள் அடிக்கப்பட்டு, தீட்டுக்கழிக்கும் ஜலம் தொடர்ந்து தயாரிக்கப்பட்டிருக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

சிவப்புக் கிடாரியின் சாம்பல் வருஷத்திற்கு ஒரு முறை தயாரிக்கப்படும் என்றும், அதில் சேர்க்க வேண்டிய பொருட்கள் சேர்க்கப்பட்டு, தீட்டுக் கழிக்கும் ஜலம் உண்டாக்கப்படும் என்றும் யூதமார்க்கத்து வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இவற்றை இஸ்ரவேலின் எல்லா பட்டணங்களுக்கும், சிறிய ஊர்களுக்கும் அனுப்புவார்களாம்.

ஆனால் எண் 19:9, எண் 19:17 ஆகிய வசனங்களில் தீட்டுக் கழிக்கும் ஜலம் வேறுவிதமாகத் தயாரிக்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. தேவைப்படும் போதெல்லாம் சிவப்புக் கிடாரியின் சாம்பல் உண்டாக்கப்படும். பாவத்தைப் பரிகரிக்கும் சிவப்புக் கிடாரியின் சாம்பல் ஒரு பாத்திரத்தில் போடப்பட வேண்டும். அதின்மேல் ஊற்று ஜலம் வார்க்கப்பட வேண்டும் என்று வேதவசனம் கூறுகிறது.

எகிப்தியர்கள் மரித்துப் போனவர்களின் சடலங்களைப் பாடம்பண்ணி, பல நாட்களுக்கு வைத்திருப்பார்கள். இதனால் ஜனங்களுக்கு பலவியாதிகள் வருவதற்கு வாய்ப்புண்டு. இந்தப் பழக்கத்தை இஸ்ரவேலரும் கடைபிடிக்கக்கூடாது என்பதற்காக தீட்டுக்கழிக்கும் ஜலத்தைப் பற்றிய பிரமாணம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம். இஸ்ரவேலின் கூடாரத்தில் ஒருவர் மரித்துப் போகும்போது அங்கு தீட்டுண்டவதினால், மரித்துப் போன சரீரத்தை உடனடியாக அடக்கம் பண்ணுவதற்கு ஆவன செய்வார்கள் (எண் 19:16).

20 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களாக சுற்றி அலைகிறார்கள். நாற்பதாவது வருஷம், அவர்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிகிற கடைசி வருஷமாகும். இஸ்ரவேல் சபையார் நாற்பதாவது வருஷத்தின் முதல் மாதத்தில் சீன் வனாந்தரத்தில் வந்து சேருகிறார்கள். இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் புத்திரருடைய நாற்பதாவது வருஷ பிரயாணத்தின் ஆரம்பத்தில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் சபையார் தங்களுடைய பிரயாணத்தின், இரண்டாம் வருஷத்தின் ஆரம்பத்தின்போது, கானான் தேசத்தின் எல்லை வரைக்கும் வந்தார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாக கர்த்தர் அவர்களை அங்கே தண்டித்தார். அவர்கள் நாற்பது வருஷங்களுக்கு வனாந்தரத்தில் அலைந்து திரியவேண்டுமென்று கர்த்தர் சொன்னார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக இஸ்ரவேல் சபையார் நாற்பது வருஷங்களாக வனாந்தரத்தில் அலைந்து திரிகிறார்கள். அவர்கள் தங்களுடைய வனாந்தர பிரயாணத்தில் பல கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு பல்வேறு விதமான அனுபவங்கள் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் பரிசுத்த வேதாகமத்தில், இஸ்ரவேல் சபையாரின் வனாந்தர பிரயாணத்தில், முதல் வருஷ பிரயாண அனுபவத்தையும், கடைசி வருஷ பிரயாண அனுபவத்தையும் பற்றி அதிகமாக சொல்லப்பட்டிருக்கிறது. இடைப்பட்ட வருஷங்களில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் அதிகமாய்ச் சொல்லப்படவில்லை.

இஸ்ரவேல் சபையார் நாற்பதாவது வருஷத்தின், முதல் மாதத்தில், மறுபடியுமாய் கானான் தேசத்தின் எல்லைக்கு வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் முதல் மாதத்திலே சீன் வனாந்தரத்திலே சேருகிறார்கள் (எண் 20:1). இந்த வசனத்தில் முதல் மாதத்திலே என்று சொல்லப்பட்டிருப்பது, நாற்பதாவது வருஷம் முதல் மாதத்திலே என்று பொருள்படும்.

இஸ்ரவேல் புத்திரரின் முதல் வருஷ அனுபவம் விரிவாக சொல்லப்பட்டிருப்பதுபோல, அவர்களுடைய கடைசி வருஷ வனாந்தரப்பிரயாண அனுபவமும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

மிரியாமின் மரணம் (எண் 20:1). கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வருகிறது. இஸ்ரவேல் சபையாருக்கு தண்ணீர் இல்லாமல் போனபோது, அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டங்கூடுகிறார்கள் (எண் 20:2). அவர்கள் மோசேயோடே வாக்குவாதம்பண்ணுகிறார்கள் (எண் 20:3-5). கர்த்தர் தம்முடைய வல்லமையினால் இஸ்ரவேல் புத்திரருக்கு கன்மலையிலிருந்து தண்ணீரைப் புறப்படப்பண்ணுகிறார் (எண் 20:6-9).

மோசேயும் ஆரோனும் கன்மலையைப் பார்த்து பேசுவதற்கு பதிலாக, மோசே தன் கோலினால் கன்மலையை ஓங்கி அடிக்கிறார். மோசே கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை (எண் 20:10,11). மோசேயும் ஆரோனும் கர்த்தரை விசுவாசியாமல் போனபடியினால், அவர்கள்மீது கர்த்தருடைய கோபம் வருகிறது (எண் 20:12,13).

ஏதோம் தேசத்தின் வழியாக கடந்துபோகும்படி உத்தரவு பெறுவதற்காக மோசே ஏதோமின் ராஜாவினிடத்திற்கு தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்புகிறார் (எண் 20:14-17). இஸ்ரவேல் புத்திரர் தன்னுடைய தேசத்தின் வழியாய்க் கடந்துபோவதற்கு ஏதோமின் ராஜா அனுமதி கொடுக்கவில்லை (எண் 20:18-21).

ஓர் மலையில் ஆரோன் உடுத்தியிருந்த வஸ்திரங்களை மோசே கழற்றி, அவைகளை ஆரோனின் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துகிறார். ஆரோனின் மரணம். இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும் ஆரோனுக்காக துக்கங்கொண்டாடுகிறார்கள் (எண் 20:22-29).

மிரியாமின் மரணம் எண் 20:1

எண் 20:1. இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் முதலாம் மாதத்தில் சீன்வனாந்தரத்திலே சேர்ந்து, ஜனங்கள் காதேசிலே தங்கியிருக்கையில், மிரியாம் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்பட்டாள்.

இஸ்ரவேல் சபையார் தங்களுடைய வனாந்தர பிரயாணத்தின் இரண்டாம் வருஷ ஆரம்பத்தில், கானான் தேசத்தின் எல்லை வரைக்கும் வருகிறார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாக கர்த்தர் அவர்களை வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரியுமாறு அனுப்பிவிடுகிறார். அவர்கள் மறுபடியும் செங்கடலை நோக்கி திரும்பிப்போகிறார்கள். அவர்கள் வனாந்தரத்திலே முப்பத்தொன்பது வருஷங்களாக பிரயாணம்பண்ணியிருக்கிறார்கள். இப்போது தங்களுடைய பிரயாணத்தின் நாற்பதாவது வருஷ ஆரம்பத்தில், அவர்கள் மறுபடியுமாய் கானான் தேசத்தின் எல்லைக்கு வந்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லோரும் நாற்பதாவது வருஷத்தின் முதலாம் மாதத்தில் சீன் வனாந்தரத்திலே வந்து சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் முப்பத்தெட்டு வருஷங்களுக்கு முன்பு, கானான் தேசத்தின் எல்லைக்கு அருகாமையில் வந்தபோது, கர்த்தர் அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தமாக அவர்களை நியாயந்தீர்த்தார். அவர்கள் நியாயந்தீர்க்கப்பட்ட இடமும், இப்போது அவர்கள் வந்து சேர்ந்திருக்கிற இடமும் சமீபமாயிருக்கிறது.

கர்த்தருடைய தெய்வீக நியாயத்தீர்ப்பினாலே இஸ்ரவேல் சபையார் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக அலைந்து திரிகிறார்கள். இப்போது அவர்கள் சீன் வனாந்தரத்தில் காதேசிலே வந்து பாளயமிறங்குகிறார்கள்.

இந்த சம்பவம் எண் 14:28-35 ஆகிய வசனங்களுக்குப் பின்பு, இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களுக்குச் சுற்றி அலைந்து திரிந்த பின்பு, இஸ்ரவேல் புத்திரரின் வரலாற்றில் நடைபெறும் சம்பவம் ஆகும். இந்த வாக்கியத்தில் முதலாம் மாதம் என்று கூறப்பட்டிருப்பது எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாற்பதாவது வருஷத்தின் முதலாவது மாதம் என்று பொருள்படும் (எண் 20:1= எண் 33:38; உபா 1:3).

இஸ்ரவேல் ஜனங்கள் காதேசிலே தங்கியிருக்கையில், மிரியாம் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுகிறாள் (எண் 20:1). மிரியாம் மோசே ஆரோன் ஆகியோரின் மூத்த சகோதரி. மோசே சிறுபிள்ளையாயிருந்தபோது, அவரை ஒரு பேழையில் வைத்து நைல் நதியில் அனுப்பினார்கள். அப்போது மிரியாமும் அங்கே கூடயிருந்தவள்.

"அவள் அதை அப்புறம் ஒளித்துவைக்கக்கூடாமல், ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். அதற்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள்" (யாத் 2:3,4).

மிரியாம் ஒரு தீர்க்கதரிசினி. அவள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நன்மையான காரியங்கள் வருவதற்கு காரணமாயிருந்தவள்.

"நான் உன்னை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக்கொண்டு, மோசே ஆரோன் மீரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்" (மீகா 6:4).

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் சபையாருக்கு முன்பாக நடந்துபோனார்கள். அவர்கள் அற்புதங்களை செய்யும் வண்ணமாக, தங்கள் கையில் கோலைப் பிடித்திருந்தார்கள். மிரியாமோ தன்னுடைய கையில் தம்புரை எடுத்துக்கொண்டு கர்த்தரைத் துதித்து, இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக புறப்பட்டுப்போனாள்.

"ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டாள்; சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப் போனார்கள்" (யாத் 15:20).

மிரியாம் ஒரு தீர்க்கதரிசினியாகயிருந்தாலும், அவள் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தாள். இதனால் மிரியாமால் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை.

"எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம் பண்ணியிருந்தபடியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி: கர்த்தர் மோசேயைக் கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையா என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்" (எண் 12:1,2).

இஸ்ரவேல் புத்திரரின் சபையார் இப்போது காதேசிலே தங்கியிருக்கிறார்கள். இங்கு மிரியாம் மரணமடைகிறாள். இஸ்ரவேல் ஜனங்கள் அவளை காதேசிலே அடக்கம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பழைய சந்ததியாரில் மோசே கடைசியாக மரிக்கிறார். யோசுவாவும், காலேபும் கானானில் மரிக்கிறார்கள். மரித்துப் போன மற்றவர்களில் மிரியாமும், ஆரோனும் கடைசியானவர்கள் (எண் 20:28-29).

இஸ்ரவேல் புத்திரர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரியாமல், கலகம் பண்ணியதினால், அவர்களால் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கக் கூடாமற் போயிற்று. வனாந்தரத்தில் மேலும் நாற்பது வருஷங்களுக்கு அலைந்து திரிய கர்த்தர் அவர்களை அனுமதித்து விடுகிறார் (எண் 14:28-35).

மிரியாம் காதேசிலும், ஆரோன் ஓர் மலையிலும், மோசே பிஸ்கா மலையிலும், மரித்துப் போகிறார்கள். 38 வருஷங்களுக்கு முன்பாக இதே காதேசில்தான் இஸ்ரவேல் புத்திரர்கள் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள்.

மேரிபாவின் தண்ணீர்
எண் 20:2-13

எண் 20:2. ஜனங்களுக்குத் தண்ணீர் இல்லாதிருந்தது; அப்பொழுது அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடினார்கள்.

எண் 20:3. ஜனங்கள் மோசேயோடே வாக்குவாதம்பண்ணி: எங்கள் சகோதரர் கர்த்தருடைய சந்நிதியில் மாண்டபோது நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலமாயிருக்கும்.

எண் 20:4. நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டு வந்தது என்ன;

எண் 20:5. விதைப்பும், அத்திமரமும், திராட்சச்செடியும், மாதளஞ்செடியும், குடிக்கத் தண்ணீரும் இல்லாத இந்தக் கெட்ட இடத்தில் எங்களைக் கொண்டுவரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன என்றார்கள்.

எண் 20:6. அப்பொழுது மோசேயும் ஆரோனும் சபையாரைவிட்டு, ஆசரிப்புக் கூடாரவாசலில் போய், முகங்குப்புற விழுந்தார்கள்; கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது.

எண் 20:7. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 20:8. நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்குமுன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார்.

எண் 20:9. அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான்.

எண் 20:10. மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி,

எண் 20:11. தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது.

எண் 20:12. பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்.

எண் 20:13. இங்கே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடே வாக்குவாதம்பண்ணினதினாலும், அவர்களுக்குள்ளே அவருடைய பரிசுத்தம் விளங்கினதினாலும் இது மேரிபாவின் தண்ணீர் என்னப்பட்டது.

இஸ்ரவேல் ஜனத்தார் சீன் வனாந்தரத்தில் வந்து சேர்ந்து, காதேசிலே தங்கியிருக்கிறார்கள். இங்கு ஜனங்களுக்குத் தண்ணீர் இல்லாதிருக்கிறது. இதற்கு முன்பு அவர்கள் தண்ணீர் உள்ள தேசத்தில் தங்கியிருந்தார்கள். இயற்கையான பராமரிப்பினால் அவர்களுக்கு தண்ணீர் கிடைத்தது.

கர்த்தருடைய ஜனங்களுக்கு இயற்கையான பராமரிப்பு கிடைக்கும்போது, பொதுவாக அவருடைய விசேஷித்த அற்புதங்கள் நடைபெறுவதில்லை. இயற்கையான பராமரிப்புக்களையும் கர்த்தருடைய ஜனத்தார் நன்றியுள்ள இருதயத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் இயற்கையான பராமரிப்புக்களுக்காக, அவருக்கு துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் காதேசிலே தங்கியிருக்கையில் அவர்களுக்கு தண்ணீர் இல்லாதிருக்கிறது (எண் 20:2). ஒரு வேளை இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும், அவர்களுடைய கால்நடைகளுக்கும் தேவையான தண்ணீர் இங்கே இல்லாமல் போயிருக்கலாம். தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கலாம்.

பரிசுத்த வேதாகமத்தில், இஸ்ரவேல் சபையாருக்கு தண்ணீர் இல்லாதிருந்த மூன்று ஸ்தலங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன :

1. மாரா (யாத் 15:22)
2. ரெவிதீம் (யாத் 17:1)
3. காதேஸ் (எண் 20:1-2)

இந்த சூழ்நிலையில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் முறையிடுவதற்கு பதிலாக, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடுகிறார்கள். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக ஆயுதங்களை எடுத்துக்கொள்கிறார்கள்.

தேவனுடைய தெய்வீக இரக்கமும் கிருபையும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இப்போது போதுமான அளவு கிடைக்கவில்லை. கர்த்தர் தமது இரக்கத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தாமல் போனதினால், ஜனங்களுக்கு தண்ணீர் இல்லாமல் போயிற்று. தேவனுடைய நீதியான கரம் அவர்களுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி அவருடைய சந்நிதியில் மாண்டுபோனார்கள். மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டங்கூடியிருக்கிற ஜனங்களும், "எங்கள் சகோதரர் கர்த்தருடைய சந்நிதியில் மாண்டபோது, நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலமாயிருக்கும்" (எண் 20:3) என்று சொல்லுகிறார்கள்.

மனுஷனுக்குத் தோல்வியும், சோர்வும் வரும்போது அவன் இதுபோன்று, புலம்புவது வழக்கம். (எண் 14:2; யாத் 16:3; யோசு 7:7; 2சாமு 18:33).

இஸ்ரவேல் புத்திரர் தண்ணீரில்லாமல் செத்துப்போவதைவிட, கர்த்தருடைய தெய்வீக நியாயத்தீர்ப்பினால் செத்துப்போக விரும்புகிறார்கள். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் இல்லாமல் அவர்களால் ஜீவிக்க முடியாது. காதேசிலே தண்ணீர் இல்லாமல் போனதற்கு மோசேயும் ஆரோனும் காரணமல்ல. கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை, மேகஸ்தம்பத்தினாலும், அக்கினி ஸ்தம்பத்தினாலும் சீன் வனாந்தரத்திற்கு அழைத்து வந்திருக்கிறார்.

ஆனால் இந்த வனாந்தரத்திலே, ஜனங்களுக்கு தண்ணீர் இல்லாமல் போனபோது, அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடுகிறார்கள். அவர்கள் மோசேயோடே வாக்குவாதம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயை நோக்கி, "நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டு வந்தது என்ன; விதைப்பும், அத்திமரமும், திராட்சச்செடியும், மாதளஞ்செடியும், குடிக்கத் தண்ணீரும் இல்லாத இந்தக் கெட்ட இடத்தில் எங்களைக் கொண்டுவரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன" (எண் 20:4,5) என்று கேட்கிறார்கள்.

கர்த்தருக்கு எதிராக மனுஷன் முறையிடுவது அர்த்தமற்றது. 38 வருஷங்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருந்தால், இப்பொழுது பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்தில் சுகித்திருப்பார்கள். அவர்கள் அலைந்து திரியும் வனாந்தரத்தில் விதைப்பும், அத்திமரமும், திராட்சச்செடியும், மாதளஞ் செடியும், குடிக்கத் தண்ணீரும் இருக்குமென்று வாக்குப்பண்ணப்படவே இல்லை. இவையெல்லாம் கானான் தேசத்தில்தான் இருக்கும். தங்களுடைய பாவத்தின் நிமித்தமாக கர்த்தர் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த அற்புதமான தேசத்தை அவர்கள் அனுபவிக்காமல் இப்போது அவதிப்படுகிறார்கள்.

மோசே தங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, வனாந்தரத்தின் வழியாக அழைத்து வந்ததற்காக, இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின்மீது கோபப்படுகிறார்கள். சீன் வனாந்தரத்திலே அவர்களுக்கு தண்ணீர் இல்லை. ஆனால் அவர்களோ தண்ணீரை மாத்திரம் நினைத்துப்பார்க்காமல், இந்த வனாந்தரத்தில் தங்களுக்கு விதைப்பும், அத்திமரமும், திராட்சச்செடியும், மாதளஞ்செடியும் இல்லை என்கிறார்கள்.

தாங்கள் தங்கியிருக்கும் வனாந்தரத்தை, "கெட்ட இடம்" என்று சொல்லுகிறார்கள். மோசேக்கு விரோதமாக குற்றம் சொல்லுகிறவர்கள், குற்றங்களையும் குறைகளையும் தேடிக் கண்டுபிடிக்கிறார்கள். இந்த இடத்தில் தண்ணீர் மட்டுமே இல்லாதிருக்கிறது. ஆனால் அவர்களோ அத்திமரமும், திராட்சச்செடியும், மாதளஞ்செடியும் இங்கே இல்லை என்று சொல்லுகிறார்கள்.

ஜனங்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டங்கூடி, அவர்களோடே வாக்குவாதம்பண்ணும்போது, மோசேயும் ஆரோனும் அவர்களுக்கு பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் தங்களுடைய பிரச்சனைகளையும், இஸ்ரவேல் புத்திரருடைய முறுமுறுப்புக்களையும், வாக்குவாதங்களையும் கர்த்தருடைய சந்நிதியில் போய்ச் சொல்லுகிறார்கள்.

மோசேயும் ஆரோனும் சபையாரைவிட்டு, ஆசரிப்புக் கூடாரவாசலில் போய், முகங்குப்புற விழுகிறார்கள்; கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்படுகிறது (எண் 20:6). இஸ்ரவேல் ஜனத்தாரின் வாக்குவாதத்திற்கு பதில் சொல்ல தங்களால் முடியவில்லை என்றும், ஆனால் கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றும் நம்பி, மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சமுகத்திலே முகங்குப்புற விழுந்துகிடக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஆசரிப்புக்கூடாரத்தில் கிருபையுள்ள தேவனாகவும் இருக்கிறார். அவர் நீதியுள்ள நியாயாதிபதியாகவும் இருக்கிறார். மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்கூடார வாசலில் போய் முகங்குப்புற விழுகிறார்கள். அங்கே நியாயாதிபதியாகிய கர்த்தர், தமக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறவர்களை தண்டிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். கலகக்காரருக்கு விரோதமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுகிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களோடே வாக்குவாதம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய மகிமை அவர்களுக்கு காணப்படுகிறது. கலகக்காரரின் முறுமுறுப்புக்களையும், அவர்களுடைய வாக்குவாதங்களையும் அடக்குவதற்காக கர்த்தருடைய மகிமை அங்கே காணப்படுகிறது.

நம்முடைய மனதையும் இருதயத்தையும் பேராசைகளும், மாம்சத்தின் இச்சைகளும் ஆளுகை செய்யும்போது, நாம் கர்த்தருடைய மகிமையை நோக்கிப் பார்க்கவேண்டும். அவருடைய மகிமையை நாம் விசுவாசத்தோடு தரிசிக்கவேண்டும். கர்த்தருடைய மகிமையைப்பற்றிய தரிசனம் நமது இருதயத்தில் பதிந்திருக்கும்போது, நம்முடைய பேராசைகளும், மாம்சத்தின் இச்சைகளும் அடங்கும்.

இஸ்ரவேல் புத்திரர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கூட்டங்கூடி வாக்குவாதம்பண்ணும்போது, கர்த்தருடைய மகிமை அவர்களுக்கு காணப்படுகிறது. அந்த மகிமை அவர்களுடைய வாய்களை கடிவாளம்போட்டு அடக்குகிறது. நாம் கர்த்தருடைய மகிமையை தியானிக்கும்போது, பாவம் நம்மை மேற்கொள்ளாது. கர்த்தருடைய மகிமை பாவசிந்தனைகளையும் மாம்சத்தின் இச்சைகளையும் கடிவாளம்போட்டு அடக்கும்.

கர்த்தர் தம்முடைய ஆசரிப்புக்கூடாரத்தில், கிருபையின் சிங்காசனத்தின்மீது அமர்ந்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருடைய நீதியான தேவைகளை கர்த்தர் சந்திப்பார். அவர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்துகொடுப்பார். கர்த்தரே அவர்களை பராமரிக்கிறவர். இஸ்ரவேல் ஜனங்களுக்கு தண்ணீர் வேண்டும் என்பது கர்த்தருக்கும் தெரியும். இது அவர்களுடைய அடிப்படை தேவை. கர்த்தர் இஸ்ரவேல் சபையாருக்கும், அவர்களுடைய மிருகங்களுக்கும் குடிப்பதற்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்குமுன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய்" (எண் 20:7,8) என்று சொல்லுகிறார்.

கன்மலை மேசியாவிற்கு அடையாளம். (2கொரி 10:14) கன்மலையிடம் பேசமட்டுமே செய்ய வேண்டும். ஏற்கெனவே கன்மலை ஒருதடவை அடிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து ஒருமுறை சிலுவையில் அறையப்பட்டு விட்டார். உலகத்தாரின் பாவங்களை நீக்குவதற்கு இயேசு கிறிஸ்து ஒரேதரம் சிலுவையில் மரித்தது போதுமானது (யாத் 17:6; ரோமர் 10; எபி 9:25-28).

இதற்கு முன்பு கன்மலையை அடித்ததினால் உண்டான ஆசீர்வாதம், இப்போது கன்மலையைப் பார்த்து பேசினாலே கிடைத்துவிடும். இயேசு கிறிஸ்துவிடமும் இதே பிரமாணம் மெய்யாயிருக்கிறது. கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று இயேசு கூறியிருக்கிறார். (மத் 7:7-11; மத் 21:22; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16; யோவான் 16:23-26).

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் சபையாருடைய கண்களுக்கு முன்னே கன்மலையைப் பார்த்து பேசவேண்டும். அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும் என்பது கர்த்தருடைய வார்த்தை. கன்மலையில் தண்ணீர் மறைத்து வைக்கப்பட்டதுபோல இருக்கிறது. மோசேயும் ஆரோனும் அந்தக் கன்மலையைப் பார்த்து பேசும்போது, அது தன்னிடத்தில் மறைவாய் வைக்கப்பட்டிருக்கிற தண்ணீரை வெளியே கொடுக்கிறது.

மோசேயும் ஆரோனும் கேட்கும்போது தண்ணீர் புறப்பட்டு வரும். இஸ்ரவேல் சபையார் தங்களுக்கு குறைவு வரும்போதெல்லாம், மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். அவர்கள் மோசேயோடே வாக்குவாதம்பண்ணுகிறார்கள். கர்த்தர் கலகக்காரரை அவமானப்படுத்த சித்தங்கொள்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. ஆனால் அந்த வனாந்தரத்திலுள்ள கன்மலை மோசேயின் வார்த்தைக்கு கீழ்ப்படியும் என்பதை கர்த்தர் அவர்களுக்கு காண்பிக்கிறார்.

கன்மலை தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொன்ன பிரகாரம் அந்தக் கன்மலையிலிருந்து தண்ணீர் ஏராளமாய்ப் புறப்படுகிறது. அந்தத் தண்ணீரை சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்று கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்னார். அதன் பிரகாரமாகவே கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீரை இஸ்ரவேல் சபையாரும் குடிக்கிறார்கள். அவர்களுடைய மிருகங்களும் குடிக்கிறது (எண் 20:11).

மோசேயின் நான்கு செயல்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்ட படியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுக்கிறார். (எண் 20:9)

2. மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்கிறார்கள். (எண் 20:10)

3. கன்மலையைப் பார்த்துப் பேசுவதற்குப் பதிலாக இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து பேசுகிறார்கள்.

4. கன்மலையைப் பார்த்துப் பேசாமல் அதைத் தன் கோலினால் மோசே இரண்டுதரம் அடிக்கிறார். கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை (எண் 20:11).

கர்த்தர் சொன்ன பிரகாரம் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வருகிறது. கர்த்தருடைய சித்தத்திற்கு கன்மலை கீழ்ப்படிகிறது. ஆனால் மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவில்லை.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ கோலை எடுத்துக்கொள்" என்று சொன்னார். அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுக்கிறார் (எண் 20:9).

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்குமுன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்" (எண் 20:8) என்று சொல்லுகிறார்.

மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்கிறார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி, "கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ" என்று சொல்லி,தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடிக்கிறார். உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்படுகிறது, சபையார் குடிக்கிறார்கள்; அவர்கள் மிருகங்களும் குடிக்கிறது (எண் 20:10,11).

மோசே தன்னுடைய அவிசுவாசத்தினால் கன்மலையைப் பார்த்துப் பேசாமல், இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்துப் பேசுகிறார். (எண் 20:12). கர்த்தர் மோசேயிடத்தில் மிகப்பெரிய ஊழியத்தை ஒப்புக் கொடுத்திருக்கிறார். மோசே தன்னுடைய ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கர்த்தரைப் பரிசுத்தப்படுத்த வேண்டும். ஆனால் மோசே கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை, மோசே கன்மலையைப் பார்த்துப் பேசுவதற்குப் பதிலாகக் கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்து விடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக மோசே கர்த்தரைப் பரிசுத்தம் பண்ண வேண்டும். (எண் 20:12) மோசே இந்தத் தவற்றைச் செய்யும்போது, ஆரோன் மோசேயோடு பேசி அதைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். கர்த்தர் மோசேயோடு என்ன சொன்னார் என்பது ஆரோனுக்குத் தெரியும். (எண் 20:6-8) ஆனால் ஆரோன் மோசேயைத் தடுத்து நிறுத்தவில்லை. ஆகையினால் இவ்விரண்டுபேருமே கானான் தேசத்திற்குள் பிரவேசிக்காமலேயே மரித்துப் போகிறார்கள். (எண் 20:12-13).

மோசே கன்மலையைத் தன் கோலினால் இரண்டு தரம் அடிக்கிறார். கன்மலை இஸ்ரவேலின் ஆவிக்குரிய காரியமாகும். இது மேசியாவிற்கு அடையாளம். கன்மலையை அடிப்பது கிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு அடையாளம். இரண்டுதரம் கன்மலையை அடிப்பது இயேசு கிறிஸ்துவை மறுபடியும் சிலுவையில் அறைவதற்கு அடையாளம். மோசே சிலுவையில் அறையப்படுவதற்கு அடையாளமான பாவத்தைச் செய்தார். கர்த்தர் அதற்காக மோசேயைத் தண்டித்தார். அதுபோலவே, இயேசு கிறிஸ்துவை நாம் மறுபடியும் சிலுவையில் அறைகிறவர்களாக இருப்போமானால், கர்த்தர் நம்மையும் தப்பிக்க விடாமல் தண்டிப்பது நிச்சயம். இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தவர்களைத் தேவன் நிச்சயமாகவே தண்டிப்பார் (எபி 6:4-9; எபி 10:26-29).

கன்மலையிலிருந்து தண்ணீர் ஏராளமாய்ப் புறப்படுகிறது. முதல் முறையாக மோசே கன்மலையை அடித்தபோது தண்ணீர் வந்தது. (யாத் 17:6; 2கொரி 10:4) அதுபோலவே, இப்போது இரண்டுதரம் அடித்தபோதும் தண்ணீர் ஏராளமாய் புறப்பட்டு வருகிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதினால் உண்டான ஆசீர்வாதம் எல்லா ஜனங்களுக்கும் உரியது. தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தி, தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணியவர்கள்கூட இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப் படுவதற்கு வாய்ப்புள்ளது. இயேசு கிறிஸ்து அருளும் மன்னிப்பை ஜனங்கள் விசுவாசத்தோடு பெற்றுக் கொள்ள வேண்டும். விசுவாசியாதவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் ஒரு ஆசீர்வாதமும் உண்டாகாது.

ஜனங்களுடைய கண்களுக்கு முன்னே கன்மலையைப் பார்த்து பேசுங்கள் என்று, கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கட்டளை கொடுத்தார். ஆனால் அவர்களோ கன்மலையைப் பார்த்து பேசுவதற்கு பதிலாக, இஸ்ரவேல் சபையாரைப் பார்த்து பேசுகிறார்கள். மோசே கன்மலையைப் பார்த் பேசுவதற்கு பதிலாக, தன் கையை ஓங்கி,

தன் கோலினால் இரண்டுதரம் அடிக்கிறார். கர்த்தர் கன்மலையை அடிக்க சொல்லவில்லை. அந்த மலையைப் பார்த்து பேசுமாறு சொன்னார். ஆனால் மோசேயோ கர்த்தர் தனக்கு சொன்னதை செய்யாமல், தனக்கு சொல்லாததை செய்கிறார். இதனால் கர்த்தருடைய கோபம் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக எழும்புகிறது.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை" (எண் 20:12) என்று சொல்லுகிறார்.

மோசேயும், ஆரோனும் வாக்குத்தத்த தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாமற்போனதற்கு அவர்களுடைய அவிசுவாசமே காரணமாகும் (எண் 20:12,24; உபா 3:18-29). இது மோசேயின் ஜீவியத்தில் நடைபெற்ற வருந்தத்தக்க சம்பவம். இதைக் குறித்து, மோசே பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து விடுவித்து, வனாந்தரத்தில் நாற்பது வருஷ காலமாக வழிநடத்தி வந்த மோசேயினால் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை. இது கர்த்தர் மோசேக்குக் கொடுத்த தண்டனையாகும். மோசே தன் ஆவிக்குரிய ஜீவனை இழந்துபோய், ஆத்துமாவை நஷ்டப்படுத்திக் கொள்ளவில்லை. மோசே பரலோகத்தில்தான் இருக்கிறார். ஆனாலும் தான் வாஞ்சையோடு பல வருஷங்களாக எதிர்பார்த்த கானான் தேசத்திற்குள் மோசேயினால் பிரவேசிக்க இயலவில்லை. மோசேக்கு ஏற்பட்ட அனுபவம் தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு எச்சரிப்பாகும். நாம் தேவனுக்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிய வேண்டும். (எபே 2:7; எபே 3:10-11).

மோசே கன்மலையைப் பார்த்து பேசுவதற்கு பதிலாக, அதை அடித்த சம்பவத்தில் மிகப்பெரிய பாவம் இருப்பதாக தெரியவில்லை. ஆனால் கர்த்தரோ, மோசேயும் ஆரோனும் தம்மை விசுவாசிக்கவில்லை என்றும், தம்மைப் பரிசுத்தம்பண்ணவில்லை என்றும் அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார். இதனால் கர்த்தருக்கு அவர்கள்மீது கோபமுண்டாயிற்று.

கன்மலையைப் பார்த்து பேசினால், அதிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வராது என்று மோசே நினைத்திருக்கலாம். அந்த மலையைப் பார்த்து பேசினால் மாத்திரம் போதாது என்றும், அந்தக் கன்மலையை தன் கோலினால் அடித்தால் மாத்திரமே அதிலிருந்து தண்ணீர் புறப்பட்டுவரும் என்றும் மோசே நினைத்திருக்கலாம். அந்தக் கன்மலையை ஒருதரம் அடித்தால் போதாது, அதை இரண்டு தரம் அடிக்கவேண்டும் என்றும், அப்போதுதான் இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும், அவர்களுடைய மிருகங்களுக்கும் தேவையான தண்ணீர் அந்தக் கன்மலையிலிருந்து புறப்பட்டு வரும் என்றும் மோசே நினைத்திருக்கலாம்.

கர்த்தருடைய வார்த்தைக்கு வல்லமையுள்ளது என்பதை மோசே நம்பவில்லை. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் தடைபடாது என்பதையும் மோசே விசுவாசிக்கவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு வல்லமையில்லை என்றும், கர்த்தர் சொன்ன வார்த்தையோடு, தன்னுடைய சொந்த தீர்மானத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்றும், அப்போதுதான் கர்த்தர் சொன்ன காரியம் நிறைவேறும் என்றும் மோசே நினைக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர், தாங்கள் பாளயமிறங்கியிருக்கும் இடத்தைப்பற்றிச் சொல்லும்போது, "குடிக்க தண்ணீரும் இல்லாத இந்தக் கெட்ட இடம்" (எண் 20:5) என்று சொல்லுகிறார்கள். கர்த்தரோ இந்த இடத்திலுள்ள கன்மலையில், அவர்களுக்கு தேவையான தண்ணீரை சேமித்து வைத்திருக்கிறார்.

கர்த்தருடைய மகிமையும் வல்லமையும் வெளிப்படவேண்டுமென்றால், கர்த்தர் சொன்ன வார்த்தை மாத்திரம் போதாது என்றும், கர்த்தருடைய வார்த்தைக்கு பரிபூரணமான வல்லமையில்லை என்றும் மோசே நினைக்கிறார். கர்த்தருடைய வார்த்தையோடு, தன்னுடைய சொந்த வல்லமையும் சேர்ந்தால் மாத்திரமே, கர்த்தருடைய மகிமை வெளிப்படும் என்பது மோசேயின் தீர்மானம். தன்னுடைய கைகளின் கிரியைகளுக்கும் வல்லமை உண்டு என்றும், தன்னுடைய சுயகிரியைகள் நடைபெறாவிட்டால், கர்த்தர் சொன்ன காரியம் நடைபெறாது என்றும் மோசே நினைக்கிறார்.

மோசே கர்த்தருடைய வார்த்தையை பூரணமாக விசுவாசிக்கவில்லை. கர்த்தரை விசுவாசியாமலிருப்பதே, அவருக்கு விரோதமாக செய்யப்படும் மிகப்பெரிய கலகமும், மீறுதலும் ஆகும். கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் பார்த்து, "நீங்கள் என்னை விசுவாசியாமற்போனபடியால்" (எண் 20:12) என்று சொல்லுகிறார்.

மோசே, ஆரோன் ஆகியோருடைய மனதிலே பலவிதமான அவிசுவாசம் காணப்படுகிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் சபையார் எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டு வந்து நாற்பது வருஷங்களாயிற்று. அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவேண்டும். ஆனால் இஸ்ரவேல் சபையாரோ கர்த்தருக்கு விரோதமாக இன்னும் முறுமுறுக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய கலகக்குணத்தைப் பார்த்து, அவர்களை கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கமாட்டார் என்றும், அவர்களை மறுபடியுமாக வனாந்தரத்திற்கு திரும்ப அனுப்பிவிடுவார் என்றும் மோசேயும் ஆரோனும் சந்தேகப்படுகிறார்கள்.

கர்த்தர் இப்போது ஒரு புதிய கன்மலையிலிருந்து தண்ணீரைப் புறப்படச்செய்திருக்கிறார். இந்தக் கன்மலையிலிருந்து ஏராளமாய்த் தண்ணீர் புறப்படுகிறது. இந்தத் தண்ணீர் இஸ்ரவேல் சபையாருக்கும், அவர்களுடைய மிருகங்களுக்கும் போதுமானதாயிருக்கிறது. தண்ணீர் நிற்காமல் வந்துகொண்டேயிருக்கிறது. ஜனங்களுடைய தண்ணீர்த் தேவை சந்திக்கப்படுகிறது. ஆகையினால் கர்த்தர் இஸ்ரவேல் சபையாரை, இந்த வனாந்தரத்தில், நீண்டகாலத்திற்கு தங்க வைத்து விடுவாரோ என்னும் சந்தேகம் மோசே ஆரோன் ஆகியோரின் மனதில் உண்டாயிற்று.

மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய வார்த்தையின்படி இஸ்ரவேல் சபையாரை கூடிவரச்செய்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் செய்த ஒவ்வொரு காரியமும், அன்பினாலும், பயபக்தியினாலும், சாந்தகுணத்தினாலும், கீழ்ப்படிதலினாலும் செய்யப்பட்ட காரியமாக தெரியவில்லை. அவர்களுடைய பேச்சும், செய்கையும், கோபமும், அவசரமும், ஆத்திரமும் நிரம்பியதாகயிருக்கிறது.

மோசே அவர்களை நோக்கி, "கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ" என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடிக்கிறார் (எண் 20:10,11).

மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் சபையாரை வழிநடத்துகிற தலைவர்களாகயிருக்கிறார்கள். தங்களைப் பின்பற்றுகிறவர்களுக்கு தலைவர்கள் முன்மாதிரிகளாகவும் எடுத்துக்காட்டுக்களாகவும் இருக்கவேண்டும். விசுவாசத்திலும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதிலும், கர்த்தர்மீது நம்பிக்கை வைப்பதிலும், மனத்தாழ்மையிலும், சாந்தகுணத்திலும் மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் சபையாருக்கு முன்மாதிரியாகவும், எடுத்துக்கட்டாகவும் இருக்கவேண்டும். ஆனால் அவர்களோ இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் கூடிவரச்செய்து, அவர்களுக்கு முன்பு கோபமாகவும், எரிச்சலாகவும் பேசுகிறார்கள். மோசே தன் கோபத்தினால் கன்மலையை இரண்டு தரம் அடிக்கிறார்.

கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதியாயிருக்கிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் சபையாருக்கு தலைவர்களாகயிருந்தாலும், அவர்கள் இருவரும் பாவம் செய்யும்போது, கர்த்தர் அவர்களையும் தண்டிக்கிறார்.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை" *(எண் 20:12)* என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. இந்த சம்பவத்திலிருந்து கர்த்தர் நமக்கு இரண்டு சத்தியங்களைக் கற்றுக்கொடுக்கிறார். அவையாவன :

1. ஒருவர் மிகப்பெரிய தலைவராகயிருந்தாலும், அவரும் தவறு செய்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் தன்னை நிற்கிறேன் என்று நினைக்கிறவன் எவனும், கீழே விழாதிருக்கும்படி மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும்.

2. பாவங்களைக் குறித்து மனுஷன் நியாயந்தீர்ப்பதுபோல கர்த்தர் நியாயந்தீர்ப்பதில்லை. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எப்போதுமே நீதியானது. அவரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணின இந்த இடத்திற்கு புதிய பெயர் கொடுக்கப்படுகிறது. இங்கே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடே வாக்குவாதம்பண்ணினதினாலும், அவர்களுக்குள்ளே அவருடைய பரிசுத்தம் விளங்கினதினாலும் இது மேரிபாவின் தண்ணீர் என்னப்படுகிறது *(எண் 20:13)*.

பரிசுத்த வேதாகமத்தில் ஏற்கெனவே ஒரு மேரிபாவை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மேரிபாவுக்கும், காதேசில் உள்ள மேரிபாவுக்கும் வித்தியாசம் காண்பிப்பதற்காக, இந்த இடம் "காதேசிலே மேரிபா" *(உபா 32:50)* என்று அழைக்கப்படுகிறது.

"நீங்கள் சீன் வனாந்தரத்திலுள்ள காதேசிலே மேரிபாவின் தண்ணீர் சமீபத்தில் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே என்னைப் பரிசுத்தம்பண்ணாமல், அவர்கள் நடுவே என் கட்டளைகளை மீறினதினாலே, உன் சகோதரனாகிய ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரித்து, தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்பட்டதுபோல நீயும் ஏறப்போகிற மலையிலே மரித்து, உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்" *(உபா 32:50,51)*.

மேரிபாவின் தண்ணீர் வாக்குவாதத்தின் தண்ணீராகும். இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய பாவங்களையும், மோசேயின் பாவங்களையும் நினைவுகூரவேண்டும் என்பதற்காக, இந்த ஸ்தலமானது மேரிபாவின் தண்ணீர் என்று அழைக்கப்படுகிறது. ஜனங்கள் கர்த்தரோடே வாக்குவாதம்பண்ணினாலும், கர்த்தர் தமது கிருபையினாலே அவர்களுக்கு தண்ணீரைக் குடிக்கக்கொடுக்கிறார்.

மோசே தம்மை விசுவாசியாமல் பாவம் செய்தாலும், கர்த்தர் அவரை ஒதுக்கி தள்ளிவிடாமல், தம்மோடுகூட சேர்த்துக்கொண்டு, அவரைக் கனம்பண்ணுகிறார். மேரிபாவின் தண்ணீர் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கும், அவருடைய கிருபைக்கும் அடையாளமாயிருக்கிறது.

மேரிபா என்னும் எபிரெய வார்த்தைக்கு "வாக்குவாதம்" என்று பொருள். மேரிபாவின் தண்ணீர் என்பதற்கு "வாக்குவாதத்தின் தண்ணீர்" என்று பொருள் கூறலாம் *(எண் 27:14; உபா 32:51; சங் 106:32; யாத் 17:2)*.

மேரிபாவின் தண்ணீரைப் பற்றிய காரியத்தில் மோசேயின் பாவங்களாவன :

1. மோசே தன் ஜனங்களைக் கோபத்தோடு "கலக்காரரே" என்று அழைக்கிறார்.

2. தேவனை மகிமைப்படுத்துவதற்குப் பதிலாக தான் செய்யப்போவதை வலியுறுத்துகிறார்.

3. தேவனுடைய தெய்வீகக் கற்பனைக்குக் கீழ்ப்படியாமல், கன்மலையைப் பார்த்துப் பேசுவதற்குப் பதிலாக இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்துப் பேசுகிறார். (எண் 20:8)

4. கன்மலையைப் பார்த்துப் பேசாமல், தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறார்.

5. மோசே தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடிக்கிறார். (எண் 20:11; சங் 106:32-33)

6. கர்த்தரை விசுவாசியாமற் போனார். (எண் 20:12)

7. இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாகக் கர்த்தரைப் பரிசுத்தம் பண்ணாமல் போனார் (எண் 20:12; உபா 32:51).

ஏதோமின் ராஜா
எண் 20:14-21

எண் 20:14. பின்பு மோசே காதேசிலிருந்து ஏதோமின் ராஜாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி:

எண் 20:15. எங்கள் பிதாக்கள் எகிப்துக்குப் போனதும், நாங்கள் எகிப்திலே நெடுநாள் வாசம்பண்ணினதும், எகிப்தியர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவப்படுத்தினதும், இவைகளினால் எங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தமும் உமக்குத் தெரிந்திருக்கிறது.

எண் 20:16. கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம்; அவர் எங்களுக்குச் செவிகொடுத்து, ஒரு தூதனை அனுப்பி, எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; இப்பொழுது நாங்கள் உமது எல்லைக்கு உட்பட்ட காதேஸ் ஊரில் வந்திருக்கிறோம்.

எண் 20:17. நாங்கள் உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு கொடுக்கவேண்டும்; வயல்வெளிகள் வழியாகவும், திராட்சத்தோட்டங்கள் வழியாகவும் நாங்கள் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், ராஜ பாதையாகவே நடந்து, உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும், வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்போம் என்று, உமது சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி அனுப்புகிறான் என்று சொல்லச்சொன்னான்.

எண் 20:18. அதற்கு ஏதோம்: நீ என் தேசத்தின் வழியாய்க் கடந்துபோகக்கூடாது; போனால் பட்டயத்தோடே உன்னை எதிர்க்கப் புறப்படுவேன் என்று அவனுக்குச் சொல்லச்சொன்னான்.

எண் 20:19. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் அவனை நோக்கி: நடப்பான பாதையின் வழியாய்ப் போவோம்; நாங்களும் எங்கள் மிருகங்களும் உன் தண்ணீரைக் குடித்தால், அதற்குக் கிரயங்கொடுப்போம்; வேறொன்றும் செய்யாமல், கால்நடையாய் மாத்திரம் கடந்துபோவோம் என்றார்கள்.

எண் 20:20. அதற்கு அவன்: நீ கடந்துபோகக் கூடாது என்று சொல்லி, வெகு ஜனங்களோடும் பலத்த கையோடும் அவர்களை எதிர்க்கப் புறப்பட்டான்.

எண் 20:21. இப்படி ஏதோம் தன் எல்லைவழியாய்க் கடந்துபோகும்படி இஸ்ரவேலுக்கு உத்தரவு கொடுக்கவில்லை; ஆகையால் இஸ்ரவேலர் அவனை விட்டு விலகிப் போனார்கள்.

இஸ்ரவேல் சபையார் சீன் வனாந்தரத்திலே, காதேசில் தங்கியிருக்கிறார்கள். இந்த வனாந்தரத்திலிருந்து கானான் தேசத்திற்கு போக வேண்டுமானால், ஏதோம் தேசத்தின் வழியாகப்போவது சமீபமான பாதையாகயிருக்கும். ஏதோம் தேசத்தின் வழியாக பிரயாணம்பண்ணுவதற்கு, அந்த தேசத்தினுடைய ராஜாவின் அனுமதி பெறவேண்டும். இதற்காக மோசே காதேசிலிருந்து ஏதோமின் ராஜாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்புகிறார் (எண் 20:14).

இஸ்ரவேல் புத்திரர் இப்போது காதேசில் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குத் தங்கியிருக்கிறார்கள் (எண் 20:1= எண் 33:38). யோர்தான் நதிக்கரைக்கு போக வேண்டுமானால், காதேசின் கிழக்கு பகுதி வழியாகப் போக வேண்டும். அந்த வழி தூரம் குறைவாக இருக்கும். இதற்காக இவர்கள் ஏதோமின் மலைகள் வழியாகப் பிரயாணம் பண்ண வேண்டும். இதற்காக எண் 20:14-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற வேண்டுகோள்களை ஏதோமின் ராஜாவினிடத்தில் மோசே கேட்கிறார். இதுபோன்ற, வேறொரு விண்ணப்பம் மோவாபின் ராஜாவினிடத்தில் கேட்கப்படுகிறது. (நியா 11:17).

ஏதோமியர் ஏசாவின் சந்ததியார் ஆவர். யாக்கோபு, ஆரானிலிருந்து வந்தபோது ஏசாவிடம் ஏற்கெனவே நூற்றுக்கணக்கான யுத்த வீரர்கள் இருந்தார்கள். (ஆதி 32:6) இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் இருந்த வருஷங்களில் ஏதோமியருடைய யுத்த வீரர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. தங்கள் தேசத்தின் வழியாக யாக்கோபின் புத்திரர் கடந்துசெல்வதை ஏதோமியர் தடைபண்ணுகிறார்கள் (எண் 20:18,21). ஏதோமியரோடு யுத்தம் பண்ண வேண்டாம் என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார் (உபா 2:4-9).

இஸ்ரவேல் சபையாரும், ஏதோமியரும் ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோரின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். இவ்விரண்டு ஜனத்தாருக்கும் ஆபிரகாமும் ஈசாக்கும் பொதுவான முற்பிதாக்களாகயிருக்கிறார்கள். மோசே தங்களைப்பற்றிச் சொல்லும்போது, தாங்கள் எகிப்து தேசத்தில் வாசம்பண்ணியதுபற்றியும், எகிப்து தேசத்திலே தாங்கள் அனுபவித்த உபத்திரவங்களைப்பற்றியும் ஏதோமின் ராஜாவுக்கு சொல்லச்சொல்லுகிறார்.

இஸ்ரவேல் சபையாருக்கும் ஏதோமியருக்கும் ஒரே முற்பிதாக்கள் இருந்தாலும், இவ்விரு ஜனத்தாருக்கும் வெவ்வேறு சரித்திரம் இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் அலைந்து திரிகிறார்கள். ஏதோமியரோ தங்கள் சொந்த தேசத்தில் வாசம்பண்ணுகிறார்கள்.

எகிப்தியர்கள் தங்களை உபத்திரவப்படுத்தின சம்பவம் ஏதோமின் ராஜாவுக்கும் தெரிந்திருக்கும் என்று மோசே நினைக்கிறார். அவர்கள் எல்லோரும் ஒரே இனத்தாராகயிருப்பதினால், ஏதோமியர் தங்களுக்கு பரிவும், கரிசனையும், இரக்கமும் காண்பிப்பார்கள் என்று மோசே எதிர்பார்க்கிறார்.

மோசே ஏதோமின் ராஜாவுக்கு தங்களுடைய சரித்திரத்தை சுருக்கமாக சொல்லியனுப்புகிறார்.

மோசே காதேசிலிருந்து ஏதோமின் ராஜாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி, "எங்கள் பிதாக்கள் எகிப்துக்குப் போனதும், நாங்கள் எகிப்திலே நெடுநாள் வாசம்பண்ணினதும், எகிப்தியர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவப்படுத்தினதும், இவைகளினால் எங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தமும் உமக்குத் தெரிந்திருக்கிறது" (எண் 20:15) என்றும்,

"கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம்; அவர் எங்களுக்குச் செவி கொடுத்து, ஒரு தூதனை அனுப்பி, எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; இப்பொழுது நாங்கள் உமது எல்லைக்கு உட்பட்ட காதேஸ் ஊரில் வந்திருக்கிறோம்" (எண் 20:16) என்றும் சொல்லச் சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் வரலாற்று சம்பவங்களை இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. எங்கள் பிதாக்கள் எகிப்துக்குப் போனார்கள்.

2. நாங்கள் எகிப்திலே நெடுநாள் வாசம்பண்ணினோம். (215 வருஷங்கள்)

3. எகிப்தியர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவப் படுத்தினார்கள். (எண் 20:15; யாத் 1:1-12:42).

4. கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம்; அவர் எங்களுக்குச் செவி கொடுத்தார். (எண் 20:16; யாத் 3:7-12).

5. அவர் எங்களுக்கு ஒரு தூதனை அனுப்பினார். (எண் 20:16; யாத் 3:2; யாத் 12:29; யாத் 14:19; யாத் 23:20-23; யாத் 32:34; யாத் 33:2).

6. எங்களை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினார். (எண 20:16; யாத் 12:40-19:2; எண் 10:11-20:1).

7. இப்பொழுது நாங்கள் காதேஸ் ஊரில் வந்திருக்கிறோம். (எண் 20:1= எண் 33:38).

நடைபெற்ற சுமார் 253 வருஷங்களில் இஸ்ரவேலரின் வரலாற்று நிகழ்ச்சிகள் இங்கு மிகவும் சுருக்கமாக கூறப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் சபையார் காதேசிலிருந்து கானான் தேசத்திற்குப் போவதற்கு, ஏதோம் தேசத்தின் வழியாகப் போகவேண்டுமென்று மோசே திட்டமிடுகிறார். இதற்காக அவர் ஏதோமினுடைய ராஜாவின் அனுமதியைக் கேட்கிறார். தங்களுக்கு பொதுவான முற்பிதாக்கள் இருப்பதினால், ஏதோமின் ராஜா தன்னுடைய விண்ணப்பத்திற்கு அனுமதி கொடுப்பார் என்று மோசே எதிர்பார்க்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஏதோம் தேசத்தின் வழியாகப்போகும்போது, அந்த தேசத்தின் ஜனங்களுக்கோ அல்லது அந்த தேசத்திலுள்ள வயல்வெளிகளுக்கோ அல்லது தேசத்தின் தோட்டங்களுக்கோ இடையூறு செய்யாமல் போவதாக மோசே வாக்குப்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஏதோம் தேசத்தினுடைய துரவுகளின் தண்ணீரைக்கூட குடிக்கமாட்டார்கள் என்று மோசே உத்திரவாதம் பண்ணுகிறார்.

மோசே ஏதோமின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி, "நாங்கள் உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு கொடுக்கவேண்டும்; வயல்வெளிகள் வழியாகவும், திராட்சத்தோட்டங்கள் வழியாகவும் நாங்கள் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், ராஜ பாதையாகவே நடந்து, உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும், வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்போம் என்று, உமது சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி அனுப்புகிறான்" (எண் 20:17) என்று சொல்லச்சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லும்போது, தங்களை ஏதோமியருடைய சகோதரர் என்று சொல்லுகிறார். ஆனால் ஏதோமோ, மோசேயின் விண்ணப்பத்திற்கு அனுமதி கொடுக்கவில்லை. ஏதோம், மோசே அனுப்பின ஸ்தானாபதிகளை நோக்கி, "நீ என் தேசத்தின் வழியாய்க் கடந்துபோகக்கூடாது; போனால் பட்டயத்தோடே உன்னை எதிர்க்கப் புறப்படுவேன்" (எண் 20:18) என்று மோசேக்குச் சொல்லச்சொல்லுகிறான்.

ஏதோமின் ராஜா, தன் தேசத்தின் வழியாய்க் கடந்துபோக இஸ்ரவேல் புத்திரருக்கு அனுமதி கொடுக்கவில்லை. அவர்கள் தன்னுடைய அனுமதியில்லாமல், தன் தேசத்தின் வழியாய்க் கடந்துபோனால், அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போவதாகவும் ஏதோமின் ராஜா சொல்லுகிறான்.

ஏதோமியர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயும் பொறாமையாயும் இருக்கிறார்கள். அவர்களுக்குள் பழைய பகை இருக்கிறது. ஏதோமியர் ஏசாவின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். இஸ்ரவேலும் ஏசாவும் சகோதரர்களாகயிருந்தாலும், அவர்கள் மத்தியிலே பழைய பகை இருப்பதினால், ஏதோமின் ராஜா இஸ்ரவேல் புத்திரருக்கு உதவி செய்ய விரும்பவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் மூலமாக ஏதோம் தேசத்திற்கு ஒரு சேதாரமும் ஏற்படாது. இஸ்ரவேல் புத்திரர் ஏதோமின் ராஜாவை நோக்கி, "நடப்பான பாதையின் வழியாய்ப் போவோம்; நாங்களும் எங்கள் மிருகங்களும் உன் தண்ணீரைக் குடித்தால், அதற்குக் கிரயங்கொடுப்போம்; வேறொன்றும் செய்யாமல், கால்நடையாய் மாத்திரம் கடந்துபோவோம்" (எண் 20:19) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் விண்ணப்பங்களைப்பற்றியும், அவர்கள் ஏதோமிற்குக் கூறிய வாக்குத்தத்தங்களைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நாங்கள் உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு கொடுக்க வேண்டும்.

2. வயல்வெளிகள் வழியாகவும், திராட்சத் தோட்டங்கள் வழியாகவும் நாங்கள் போகமாட்டோம்.

3. உங்கள் துரவுகளின் தண்ணீரைக் குடிக்கமாட்டோம்.

4. ராஜ பாதையாகவே நடந்து போவோம்.

5. உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும், வலதுபுறம் இடதுபுறம் சாயாதிருப்போம்.

6. நாங்களும் எங்கள் மிருகங்களும் உன் தண்ணீரைக் குடித்தால், அதற்குக் கிரயங்கொடுப்போம். (எண் 20:19).

7. வேறொன்றும் செய்யாமல், கால்நடையாய் மாத்திரம் கடந்துபோவோம்

ஏதோம் தேசத்திற்கு தங்கள் மூலமாக எந்தப் பாதிப்பும் வராது என்று இஸ்ரவேல் சபையார், உத்திரவாதம் கொடுப்பதோடு, ஒருவேளை ஏதாவது பாதிப்பு வந்தாலும், அதற்கு ஈடாக கிரயம் கொடுப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் ஏதோமியரின் தயவையும் பரிவையும், கரிசனையையும் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் ஏதோமின் ராஜாவோ, இஸ்ரவேல் புத்திரருக்கு உதவி செய்யக்கூடாது என்பதில் தீர்மானமாயிருக்கிறான். ஏதோமின் ராஜா இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீ கடந்துபோகக் கூடாது" (எண் 20:20) என்று சொல்லி, வெகு ஜனங்களோடும் பலத்த கையோடும் அவர்களை எதிர்க்கப் புறப்படுகிறான்.

இஸ்ரவேல் புத்திரருக்கு, ஏதோம் தேசத்தின் வழியாகப் போவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. ஏதோம் தன் எல்லைவழியாய்க் கடந்துபோகும்படி இஸ்ரவேலருக்கு உத்தரவு கொடுக்கவில்லை; ஆகையால் இஸ்ரவேலர் ஏதோமை விட்டு விலகிப் போகிறார்கள் (எண் 20:21).

ஆரோனின் மரணம்
எண் 20:22-29

எண் 20:22. இஸ்ரவேல் புத்திரரான சபையார் எல்லாரும் காதேசை விட்டுப் பிரயாணப்பட்டு, ஓர் என்னும் மலைக்குப் போனார்கள்.

எண் 20:23. ஏதோம் தேசத்தின் எல்லைக்கு அருகான ஓர் என்னும் மலையிலே கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

எண் 20:24. ஆரோன் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான். மேரிபாவின் தண்ணீரைப்பற்றிய காரியத்தில் நீங்கள் என் வாக்குக்குக் கீழ்ப்படியாமற்போனபடியினால், நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கிற தேசத்தில் அவன் பிரவேசிப்பதில்லை.

எண் 20:25. நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் கூட்டிக்கொண்டு, அவர்களை ஓர் என்னும் மலையில் ஏறப்பண்ணி,

எண் 20:26. ஆரோன் உடுத்தியிருக்கிற வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசருக்கு உடுத்துவாயாக; ஆரோன் அங்கே மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான் என்றார்.

எண் 20:27. கர்த்தர் கட்டளையிட்டபடியே மோசே செய்தான்; சபையார் எல்லாரும் பார்க்க, அவர்கள் ஓர் என்னும் மலையில் ஏறினார்கள்.

எண் 20:28. அங்கே ஆரோன் உடுத்திருந்த வஸ்திரங்களை மோசே கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தினான்; அப்பொழுது ஆரோன் அங்கே மலையின் உச்சியிலே மரித்தான்; பின்பு மோசேயும் எலெயாசாரும் மலையிலிருந்து இறங்கினார்கள்.

எண் 20:29. ஆரோன் ஜீவித்துப்போனான் என்பதைச் சபையார் எல்லாரும் கண்டபோது, இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் ஆரோனுக்காக முப்பது நாள் துக்கங்கொண்டாடினார்கள்.

இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் மிரியாமின் மரணத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தின் முடிவிலோ ஆரோனின் மரணத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரோன் மரித்துப்போவதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கிறார்.

இஸ்ரவேல் சபையார் காதேசிலிருந்து, ஏதோம் எல்லை வழியாகப் போகாமல், அந்த தேசத்தைவிட்டு விலகி பிரயாணப்பட்டு, ஓர் என்னும் மலைக்குப்போகிறார்கள் (எண் 20:22). இந்த மலை ஏதோம் தேசத்தின் எல்லைக்கு அருகாமையிலிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர்கள் வனாந்தரத்தின் இறுதி பிரயாணத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் யோர்தானின் கிழக்குப் பகுதியிலிருந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்காக மோவாபையும், ஏதோமையும் சுற்றி வருகிறார்கள்.

கர்த்தர் ஓர் என்னும் மலையிலே மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "ஆரோன் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான். மேரிபாவின் தண்ணீரைப்பற்றிய காரியத்தில் நீங்கள் என் வாக்குக்குக் கீழ்ப்படியாமற்போனபடியினால், நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கிற தேசத்தில் அவன் பிரவேசிப்பதில்லை" (எண் 20:24) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் ஏற்கெனவே, மோசேயையும் ஆரோனையும் நோக்கி, "நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை" (எண் 20:12) என்று சொன்னார்.

கர்த்தர் வாக்குமாறாதவர் என்பதும், அவருடைய நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதாயிருக்கும் என்பதும் மோசேக்கு தெரியும். இஸ்ரவேல் புத்திரருக்கு தாம் கொடுக்கும் தேசத்தில், ஆரோன் பிரவேசிப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். மேரிபாவின் தண்ணீரைப்பற்றிய காரியத்தில் மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய வாக்குக்கு கீழ்ப்படியவில்லை.

கர்த்தர் ஆரோனைப்பற்றிச் சொல்லுகிற வார்த்தைகள் மோசேயின் இருதயத்தைத் தொடுகிறது. ஏனெனில், ஆரோனோடு சேர்ந்து மோசேயும் கர்த்தருடைய வாக்குக்கு கீழ்ப்படியவில்லை. மோசேயே தன் கையை ஓங்கி, கன்மலையை தன் கோலினால் இரண்டுதரம் அடித்தவர். ஆரோன் கானான் தேசத்திற்குப் போகமுடியாமல் போனதற்கு, தன்னுடைய கீழ்ப்படியாமையே பிரதான காரணம் என்று மோசே நினைக்கிறார். ஆரோனும் மோசேயின் பாவத்தில் பங்காளியாயிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய கோபத்தினால் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொன்னாலும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு கிடைக்கிறது. ஆரோன் தன்னுடைய கீழ்ப்படியாமையினால் மரித்துப்போனாலும், ஒரு துன்மார்க்கன் மரித்துப்போவதுபோல ஆரோன் மரிக்கவில்லை. ஒரு வாதையினாலோ அல்லது, வானத்திலிருந்து வந்த அக்கினியினாலோ ஆரோன் செத்துப்போகவில்லை. ஆரோனுடைய மரணம் சமாதானமாயும், கனமுள்ளதாயும் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருடைய கீழ்ப்படியாமையினிமித்தமாகவும், அவர்களுடைய மீறுதல்களினிமித்தமாகவும், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கும்போது, "அவர்கள் தம்முடைய ஜனத்தில் இல்லாதவாறு அறுப்புண்டு போவார்கள்" என்று சொல்லுவார். ஆரோனுக்கு அதுபோன்ற மரணம் ஏற்படவில்லை. ஆரோன் தன்னுடைய ஜனத்தில் இல்லாதவாறு அறுப்புண்டுபோகவில்லை. கர்த்தர் ஆரோனுடைய மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "ஆரோன் அங்கே மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான்" (எண் 20:26) என்று சொல்லுகிறார். தேவனுடைய தெய்வீக கிருபையின் கரங்களிலே ஆரோன் மரித்துப்போவார்.

பிரதான ஆசாரியப்பட்டம் மாறுகிற விதத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் கூட்டிக்கொண்டு, அவர்களை ஓர் என்னும் மலையில் ஏறப்பண்ணு.

2. ஆரோன் உடுத்தியிருக்கிற வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசருக்கு உடுத்துவாயாக (எண் 20:26)

பிரதான ஆசாரியர் மாற்றப்படுவதை ஜனங்கள் எல்லோரும் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆரோனுக்குப் பின்பு, எலெயாசார் பிரதான ஆசாரியப் பட்டத்தைப் பெறுகிறார். கர்த்தர் இதை அங்கிகரிக்கிறார். சபையார் எல்லாரும் இதைப் பார்த்த படியினால், பிரதான ஆசாரியனுக்கு எதிராக ஏற்கெனவே கலகம் பண்ணியது போன்று (எண் 16) இனிமேல் கலகம் பண்ணமாட்டார்கள்.

ஆரோனுடைய மரணத்தில் ஆவிக்குரிய முக்கியதத்துவமும், ஆவிக்குரிய வியாக்கியானமும், ஆவிக்குரிய அடையாளமும் இடம் பெற்றிருக்கிறது. ஆரோன் கானான் தேசத்தில் பிரவேசிக்கமாட்டார். "நான் இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுக்கிற தேசத்தில் ஆரோன் பிரவேசிப்பதில்லை" (எண் 20:24) என்று கர்த்தர் சொல்லுகிறார். லேவியருடைய ஆசாரியத்துவம் பரிபூரணமானதல்ல என்பதற்கு இது அடையாளம்.

கர்த்தர் தன்மீது சொல்லும் நியாயத்தீர்ப்புக்கு ஆரோன் கீழ்ப்படிகிறார். கர்த்தர் தனக்கு எப்படிப்பட்ட மரணத்தை நியமித்திருக்கிறாரோ, அந்த மரணத்தை ஏற்றுக்கொள்ள ஆரோனும் ஆயத்தமாயிருக்கிறார். ஆரோனுடைய மரணம் அவருக்கு சமாதானமாயும், சந்தோஷமாயும் இருக்கிறது. ஒருநாள் வேலையை முடித்துவிட்டு, படுக்கையில் ஆறுதலாக இளைப்பாறப்போவதுபோல், ஆரோன் தன்னுடைய ஓட்டத்தை முடித்துவிட்டு, ஆறுதலாக மரித்துப்போக ஆயத்தமாயிருக்கிறார்.

கர்த்தர் ஆரோனுடைய மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர் உடுத்தியிருக்கிற ஆசாரிய வஸ்திரத்தைப்பற்றியும் மோசேக்கு ஒரு சில காரியங்களை சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் கூட்டிக்கொண்டு, அவர்களை ஓர் என்னும் மலையில் ஏறப்பண்ணி, ஆரோன் உடுத்தியிருக்கிற வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசருக்கு உடுத்துவாயாக; ஆரோன் அங்கே மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்படுவான்" (எண் 20:25,26) என்று சொல்லுகிறார்.

ஆரோன் மரிக்கும்போது, அவர் உடுத்தியிருக்கிற ஆசாரிய வஸ்திரத்தோடு மரிக்கக்கூடாது. ஆரோன் மரிக்கும் முன்பாகவே, அவர் உடுத்தியிருக்கிற ஆசாரிய வஸ்திரத்தைக் கழற்றி, அந்த வஸ்திரங்களை, ஆரோனுடைய குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தவேண்டும். தன்னுடைய சரீரத்திலிருந்து ஆசாரிய வஸ்திரங்கள் கழற்றப்பட்ட பின்பே, ஆரோன் மரித்துப்போகிறார்.

எலெயாசாருக்கு ஆசாரிய வஸ்திரம் உடுத்தப்படும்போது, அதை மோசேயும், ஆரோனும் தன் கண்களால் பார்க்கிறார்கள். மோசேயே ஆரோனுடைய ஆசாரிய வஸ்திரங்களை எலெயாசாருக்கு உடுத்துகிறார். அவர்கள் ஓர் மலையிலே ஏறியபோது அவர்களோடுகூட, இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர்களும் அங்கே ஏறிப்போயிருந்திருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஆரோன் சமபூமியில் மரிக்காமல் ஓர் என்னும் மலையில் ஏறி அங்கே மரிக்கிறார். பரிசுத்தவான்களின் மரணத்தில், அவர்கள் பரமேறிப்போவதும் ஓர் அங்கமாகயிருக்கிறது. பாவிகளும் துன்மார்க்கரும் மரித்த பின்பு பாதாளத்திற்கு இறங்கிப்போகிறார்கள். பரிசுத்தவான்களோ, தாங்கள் மரிக்கும்போது, பரலோகத்திற்கு ஏறிப்போகிறார்கள். சபையார் எல்லாரும் பார்க்க, அவர்கள் ஓர் என்னும் மலையில் ஏறுகிறார்கள் (எண் 20:27).

ஆரோனை ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணியபோது, மோசேயே அவருக்கு ஆசாரிய வஸ்திரங்களை உடுத்துவித்தார். இப்போது அதே மோசேயின் கரங்களே, ஆரோன் உடுத்தியிருந்த வஸ்திரங்களைக் கழற்றுகிறது. கர்த்தர் ஆசாரிய ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதைக் கனப்படுத்துகிறார். ஆரோன் ஆசாரிய வஸ்திரங்களோடு மரித்துப்போகக்கூடாது என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

மோசே ஆரோன் உடுத்திருந்த வஸ்திரங்களை கழற்றி, அவைகளை ஆரோனுடைய குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துகிறார் (எண் 20:28).

மோசே, ஆரோன், எலெயாசார் ஆகிய மூன்று பேரும் மலைக்குமேல் ஏறிப்போனார்கள். இப்பொழுது இரண்டு பேர் மட்டுமே மலையிலிருந்து இறங்கி வருகிறார்கள். ஆரோன் ஓர் மலையில் அடக்கம் பண்ணப்பட்டிருக்க வேண்டும்.

"அந்நாளிலே இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் என் ஊழியக்காரனை நான் அழைத்து; உன் வஸ்திரத்தை அவனுக்குத் தரித்து, உன் கச்சையால் அவனை இடைக்கட்டி, உன் அதிகாரத்தை அவன் கையிலே கொடுப்பேன்; அவன் எருசலேமின் குடிகளுக்கும், யூதாவின் வம்சத்துக்கும் தகப்பனாயிருப்பான்" (ஏசா 22:20,21).

தான் உடுத்தியிருந்த ஆசாரிய வஸ்திரம் கழற்றப்பட்டு, அவை தன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தப்பட்ட பின்பு, ஆரோன் அங்கே மலையின் உச்சியிலே மரித்துப்போகிறார். ஆரோனுடைய மரணம் மோசேக்கு ஆறுதலாயிருக்கிறது. ஆரோன் மரித்துப்போனாலும், அவர் இதுவரையிலும் செய்து வந்த ஆசாரிய ஊழியம் மரித்துப்போகவில்லை. ஆரோனுக்கு பதிலாக, அவருடைய குமாரன் எலெயாசார் ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்படுகிறார்.

மனுஷருடைய மரணத்தினால் கர்த்தருடைய ஊழியம் நின்றுபோவதில்லை. கர்த்தருக்கு ஊழியம் செய்கிற ஒரு சந்ததி கடந்துபோகும்போது, கர்த்தருடைய ஊழியத்தை அடுத்த சந்ததியார் தொடர்ந்து செய்கிறார்கள். ஆரோனுக்கு பின்பு, அவருடைய குமாரன் எலெயாசார், ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணப்படுகிறார். இது மோசேயினுடைய மனதிலே சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொடுக்கிறது.

விசுவாசிகளாகிய நாமும் ஆவிக்குரிய ஆசாரியர்களாயிருக்கிறோம். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. நாம் மரித்துப்போகும்போது, நம் மூலமாக நடைபெற்ற ஊழியங்கள், நம்முடைய சந்ததியார் மூலமாக தொடர்ந்து நடைபெறவேண்டும். நாம் மரித்துப்போகும் போது, நாம் செய்து வந்த ஊழியமும் மரித்துப் போய்விடக் கூடாது. நாம் செய்து வரும் ஊழியங்களை, நம்முடைய பின்சந்ததியாரும் செய்யுமாறு, அவர்களுக்கு ஊழியப்பயிற்சிகளைக் கொடுக்கவேண்டும்.

மோசே ஆரோன் உடுத்தியிருந்த வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை எலெயாசாருக்கு உடுத்துகிறார். இந்த சம்பவத்தைப் பார்க்கும்போது ஆரோனுடைய மனதிலும் சந்தோஷம் ஏற்பட்டிருக்கும். எலெயாசார் ஆரோனுக்கு பிரியமான குமாரன். தான் இதுவரையிலும் செய்து வந்த ஆசாரிய ஊழியம், தன்னுடைய குமாரனிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படுவதைப் பார்த்து ஆரோன் மிகுந்த சந்தோஷமடைந்திருப்பார். ஆரோன் செய்து வந்த ஆசாரிய ஊழியம் நின்றுபோகவில்லை. அது அவருடைய சந்ததியிலே தொடருகிறது.

ஆரோன் மலையின் உச்சியிலே மரித்துப்போகிறார். பின்பு மோசேயும் எலெயாசாரும் மலையிலிருந்து இறங்குகிறார்கள். ஆரோன் ஜீவித்துப்போனார் என்பதைச் சபையார் எல்லாரும் கண்டபோது, இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் ஆரோனுக்காக முப்பது நாள் துக்கங்கொண்டாடுகிறார்கள் (எண் 20:29).

பரிசுத்த வேதாகமத்தில் மரித்தவர்களுக்காக துக்கங்கொண்டாடிய சம்பவங்கள் எழுதப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. யாக்கோபிற்காக - 70 நாட்கள் (ஆதி 50:3-4)
2. யாக்கோபிற்காக - கானானில் 7 நாட்கள் (ஆதி 50:10)
3. ஆரோனுக்காக - 30 நாட்கள் (எண் 20:29)
4. மோசேக்காக - 30 நாட்கள் (உபா 34:8)
5. லாசருவிற்காக - 4 நாட்கள் (யோவான் 11:17,31,39)
6. கிறிஸ்துவிற்காக - 3 நாட்கள் (மத் 12:40; யோவான் 20:11)

21 அதிகாரம்

இஸ்ரவேலின் சேனை இதுவரையிலும் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணினார்கள். இப்போது அவர்கள் வனாந்தரத்தை விட்டு வெளியேறி ஜனங்கள் வாசம்பண்ணுகிற பட்டணங்களுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வாக்குப்பண்ணியிருக்கிற கானான் தேசத்தின் எல்லைக்கருகே அவர்கள் வந்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானானியனாகிய ஆராத் ராஜாவை சங்காரம்பண்ணுகிறார்கள் (எண் 21:1-3). இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக முறுமுறுக்கிறார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டிப்பதற்கு கொள்ளிவாய்ச்சர்ப்பங்களை அவர்களுக்குள்ளே அனுப்புகிறார். கர்த்தருடைய ஆலோசனையின் பிரகாரம் மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்குகிறார். சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து பிழைக்கிறான் (எண் 21:4-9).

இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாணங்களின் வழியில் அவர்களுக்கு நடைபெற்ற ஒரு சில சம்பவங்கள் (எண் 21:10-20). இஸ்ரவேல் புத்திரர் எமோரியரின் ராஜாவாகிய சீகோனையும் (எண் 21:21-32), பாசானின் ராஜாவாகிய ஓகையும் (எண் 21:33-35) முறியடித்து அவர்களுடைய தேசத்தை கட்டிக்கொள்கிறார்கள்.

கானானியனாகிய ஆராத் ராஜா
எண் 21:1-3

எண் 21:1. வேவுகாரர் காண்பித்த வழியாக இஸ்ரவேலர் வருகிறார்கள் என்று தெற்கேவாசம்பண்ணுகிற கானானியனாகிய ஆராத் ராஜா கேள்விப்பட்டபோது, அவன் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களில் சிலரைச் சிறைபிடித்துக்கொண்டுபோனான்.

எண் 21:2. அப்பொழுது இஸ்ரவேலர் கர்த்தரை நோக்கி: தேவரீர் இந்த ஜனங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுத்தால், அவர்களுடைய பட்டணங்களைச் சங்காரம்பண்ணுவோம் என்று பிரதிக்கினை பண்ணினார்கள்.

எண் 21:3. கர்த்தர் இஸ்ரவேலின் சத்தத்துக்குச் செவிகொடுத்து, அவர்களுக்குக் கானானியரை ஒப்புக்கொடுத்தார்; அப்பொழுது அவர்களையும் அவர்கள் பட்டணங்களையும் சங்காரம்பண்ணி, அவ்விடத்துக்கு ஓர்மா என்று பேரிட்டார்கள்.

கானானியனாகிய ஆராத் ராஜா இஸ்ரவேலரின் பிரயாணத்தைக் குறித்து கேள்விப்படுகிறான். அவர்கள் வேவுகாரர் காண்பித்த வழியாக வருகிறார்கள் என்னும் செய்தியை ஆராத் ராஜா கேள்விப்படுகிறான். இவன் ஓர் என்னும் மலைக்கு தெற்கே வாசம்பண்ணுகிறவன்.

முப்பத்தெட்டு வருஷங்களுக்கு முன்பு, மோசே பன்னிரண்டு வேவுகாரர்களை இதே தேசத்தின் வழியாக அனுப்பினார். அவர்கள் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்த்து, மோசேயினிடத்தில் திரும்பி வந்தார்கள். ஆனால் அப்போது ஆராத் ராஜா இஸ்ரவேல் புத்திரருடைய வேவுகாரரை கண்டுபிடிக்கவில்லை. அப்போது இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்தின் எல்லையில், திரளான எண்ணிக்கையில் பாளயமிறங்கியிருந்ததையும், அப்போது ஆராத் ராஜாவால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இப்போது கானானியர் இஸ்ரவேலரைக் குறித்து மிகவும் எச்சரிப்பாயிருக்கிறார்கள். அவர்கள் வனாந்தரத்திலே பாளயமிறங்கியிருப்பதையும், பிரயாணம் பண்ணுவதையும் தங்கள் வேவுகாரர்கள் மூலமாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். வேவுகாரர் காண்பித்த வழியாக இஸ்ரவேலர் வருகிறார்கள் என்னும் செய்தியை ஆராத் ராஜா கேள்விப்படுகிறான்.

இஸ்ரவேலர் வருகிற செய்தியை ஆராத் ராஜா கேள்விப்பட்டவுடன், அவர்கள்மீது உடனே யுத்தம்பண்ண ஆரம்பிக்கிறான். ஆரம்பத்தில், அந்த யுத்தத்தில், ஆராத் ராஜாவுக்கு ஜெயம் கிடைக்கிறது. அவன் இஸ்ரவேலரில் சிலரை சிறைப்பிடித்து கொண்டு போகிறான் (எண் 21:1).

ஆராத் என்பது ஒரு பட்டணத்தின் பெயர். இது கானான் தேசத்தில் தென்பகுதியில் உள்ளது. இது எபிரோனிலிருந்து 20 மைல் தெற்கில் உள்ளது. ஆகையினால் ஆராத்ராஜா என்னும் வாக்கியத்திற்கு "கானானியனாகிய ஆராத்தின் ராஜா" என்று பொருள் கொள்ளவேண்டும். (யோசு 12:14).

"வேவுகாரர் காண்பித்த வழி" என்னும் வாக்கியத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற எபிரெய வார்த்தை "அதாரீம்" என்பதாகும். இது கானானின் தெற்கு பகுதியிலுள்ள ஒரு இடத்தின் பெயர். செப்துவஜிந்த் பதிப்பில் "அதாரீம் வழியாக" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

எபிரெய மொழியில் வேவுகாரர் என்பதைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொதுவான வார்த்தை "ராகால்" என்பதாகும். (ஆதி 42:9-34; யோசு 6:23; 1சாமு 26:4; 2சாமு 15:10). வேவுகாரர்கள் கானான் தேசத்திற்குப் பிரவேசித்த போது, அதாரீம் வழியாகப் போகவில்லை. அவர்கள் காதேசின் வடக்கு பகுதியிலிருந்து போனார்கள்.

இஸ்ரவேல் புத்திரர்கள் காதேசிலிருந்து தென்கிழக்கு பகுதி வழியாக ஓர் மலைக்குச் செல்கிறார்கள். ஏதோமையும், மோவாபையும் சுற்றி யோர்தானின் கிழக்குப் பகுதி வழியாகக் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கிறார்கள். (எண் 21:4-35; எண் 22:1; எண் 33:37-50) இந்த வசனத்தில் வேவுகாரர் காண்பித்த வழி என்பது வேவுகாரர் சென்ற பாதையைக் குறிக்கவில்லை. இது ஒரு இடத்தின் பெயராக இருக்க வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது ஒரு சில யுத்தங்களை நடத்துகிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. எகிப்தியர்மீது - வெற்றி(யாத் 14:1-31)
2. அமலேக்கியர்மீது - வெற்றி (யாத் 17:8-16)
3. கானானியர், மீதியானியர்மீது - தோல்வி (தேவன் இஸ்ரவேல் தேசத்தைக் கைவிட்ட போது) (எண் 14:41-45; உபா 1:44-46)
4. கானானியர்மீது - வெற்றி (எண் 21:1-4)
5. ஏமோரியர்மீது - வெற்றி (எண் 21:21-32; உபா 2:24-37)
6. பாசானியர்மீது - வெற்றி (எண் 21:33-35; உபா 3:1-21)
7. மீதியானியர்மீது - வெற்றி (எண் 25:17-18; எண் 31:1-54)

ஆராத் ராஜா இஸ்ரவேல் புத்திரரை முறியடித்து, அவர்களில் சிலரைச் சிறைப்பிடித்து கொண்டு போகிறான். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய தோல்வியை ஒப்புக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, தங்களுக்கு கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் வேண்டுமென்று விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலர் கர்த்தரை நோக்கி, "தேவரீர் இந்த ஜனங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுத்தால், அவர்களுடைய பட்டணங்களைச் சங்காரம்பண்ணுவோம்" என்று பிரதிக்கினை பண்ணுகிறார்கள் (எண் 21:2).

பிரதிக்கினை என்னும் வார்த்தைக்கு பொருத்தனை என்று பொருள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் பொருத்தனை பண்ணுகிறார்கள். (எண் 21:2-3). கர்த்தரால் மட்டுமே தங்களுக்கு ஜெயம் வரும் என்பதை இஸ்ரவேல் புத்திரர் புரிந்து கொள்கிறார்கள். தேவனுடைய தயவினால்மட்டும் இஸ்ரவேல் புத்திரர்களால் கானான் தேசத்தை ஜெயித்து, அதைச் சுதந்தரித்துக் கொள்ள முடியும்.

இஸ்ரவேல் புத்திரர் ஆராத் ராஜாவுக்கு முன்பாக தோல்வியடைந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரில் சிலர் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு இது ஒரு சோதனைக்காலம். இதற்கு முன்பு இஸ்ரவேல் புத்திரருக்கு அழிவு வரும்போதெல்லாம், அவர்களுடைய முற்பிதாக்கள் கர்த்தருக்கு முன்பாக முறுமுறுப்பது வழக்கம். ஆனால் இப்போதோ இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்காமல், அவருடைய சமுகத்திலே தங்களைத் தாழ்த்தி ஒப்புக்கொடுக்கிறார்கள்.

கர்த்தரும் இஸ்ரவேல் புத்திரரின் விசுவாசத்தைச் சோதிக்கிறார். அவர்கள் கர்த்தருடைய வழிநடத்துதலையும் அவருடைய பாதுகாப்பையும் பராமரிப்பையும் நம்புகிறார்கள். கர்த்தருடைய கிருபையினால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு வந்த சோதனைகளை மேற்கொண்டு, கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்காமல், கர்த்தருடைய சமுகத்திலே தங்களைத் தாழ்த்துகிறார்கள்.

ஆராத் ராஜா இஸ்ரவேல் புத்திரரில் சிலரை சிறைப்பிடித்து கொண்டு போயிருக்கிறான். கர்த்தர் தமது வல்லமையினால் சிறைப்பட்டுப்போனவர்களை விடுதலை பண்ணுவார் என்றும், ஆராத்தையும், அவனுடைய ஜனங்களையும் தங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர்மீது நம்பிக்கை வைக்கிறார்கள். அதற்காக அவர்கள் கர்த்தரிடத்தில் பிரதிக்கினை பண்ணுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேலின் சத்தத்துக்குச் செவிகொடுத்து.அவர்களுக்குக் கானானியரை ஒப்புக்கொடுக்கிறார்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர், கானானியரையும் அவர்கள் பட்டணங்களையும் சங்காரம்பண்ணி, அவ்விடத்துக்கு ஓர்மா என்று பேரிடுகிறார்கள் (எண் 21:3).

இஸ்ரவேல் புத்திரர்கள் கானானியரைச் சங்காரம் பண்ணுகிறார்கள். அதன்பின்பு, இஸ்ரவேலர்கள் இங்கு தங்கியிருக்கவில்லை. ஆகையினால், இந்தப் பகுதியை மற்றவர்கள் பிடித்துக் கொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரித்தபோது, இந்தப் பகுதியை மறுபடியும் ஜெயிக்கிறார்கள் (நியா 1:17).

ஓர்மா என்னும் பெயருக்கு அழிவு அல்லது தடைபண்ணுதல் என்று பொருள். கானானியர் இங்கு அழிக்கப்பட்டார்கள். அவர்கள் தேசத்திற்குள் இராதவாறு தடைபண்ணப்பட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானானியனாகிய ஆராத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போகிறார்கள். இஸ்ரவேலின் சேனைக்கு யோசுவா தலைவராகயிருக்கிறார். யோசுவாவின் கீழ் திரளான யுத்தவீரர்கள் ஆராத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போகிறார்கள். அவர்கள் கானானியரை முறியடித்தது மாத்திரமல்ல அவர்களை சங்காரம்பண்ணவும் செய்கிறார்கள். அவர்களுடைய பட்டணங்களைப் பிடித்து நிர்மூலம்பண்ணுகிறார்கள்.

கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருடைய கைகளில் கானானியரை ஒப்புக்கொடுத்திருக்கிறார். தாங்கள் கர்த்தருடைய சமுகத்திலே பிரதிக்கினை பண்ணின பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர் கானானியரையும், அவர்களுடைய பட்டணங்களையும் சங்காரம்பண்ணி, தங்கள் பாளயத்திற்கு திரும்பி வருகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஆரம்பத்தில் தோல்வி ஏற்பட்டாலும், முடிவில் அவர்களுக்கு ஜெயம் கிடைக்கிறது. ஆரம்பத்தில் இஸ்ரவேல் புத்திரரில் சிலர் சிறைப்பட்டுப்போனாலும், முடிவிலே அவர்கள் கானானியரை சங்காரம்பண்ணுகிறார்கள்.

வெண்கலச்சர்ப்பம்
எண் 21:4-9

எண் 21:4. அவர்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்போகும்படிக்கு, ஓர் என்னும் மலையை விட்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய்ப் பிரயாணம் பண்ணினார்கள்; வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள்.

எண் 21:5. ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்.

எண் 21:6. அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்.

எண் 21:7. அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ் செய்தோம்; சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள்; மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணினான்.

எண் 21:8. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார்.

எண் 21:9. அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்துப் பிழைப்பான்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏதோம் தேசத்தின் வழியாக கடந்துபோவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. ஆகையினால் அவர்கள் ஏதோம் தேசத்தை விட்டு விலகிப்போகிறார்கள். அவர்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்போகும்படிக்கு, ஓர் என்னும் மலையை விட்டு, சிவந்த சமுத்திரத்தின் வழியாய்ப் பிரயாணம் பண்ணுகிறார்கள்; வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைகிறார்கள் (எண் 21:4).

இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் வழியாய் பிரயாணம்பண்ணுகிறார்கள். ஏதோம் வழியாக மோவாபிற்குச் செல்லும் நேர்வழி இஸ்ரவேல் புத்திரருக்கு அடைக்கப்பட்டிருக்கிறது (எண் 20:18,20) ஆகையினால், அவர்கள் தென்பகுதியாகப் பிரயாணம்பண்ணி, பின்பு கிழக்கு திசையில் பிரயாணம்பண்ணி, அதன்பின்பு, வடதிசையில் பிரயாணம்பண்ணி, மோவாபிற்கு வருகிறார்கள். (உபா 2:3).

அர்பாவின் வழியாக இஸ்ரவேல் புத்திரர் பலநாட்கள் பிரயாணம் பண்ணினார்கள். பிரயாணப்பாதையும் கடினமாக இருக்கிறது. அவர்களுக்கு, தண்ணீரும் போதுமான அளவு கிடைக்கவில்லை. இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் சோர்வுற்று, தேவனுக்கு எதிராக முறுமுறுக்க ஆரம்பிக்கிறார்கள் (எண் 21:4-5).

இஸ்ரவேல் புத்திரர் ஏதோம் தேசத்தின் வழியாகப் போயிருந்தால், அவர்களால் கானான் தேசத்தின் எல்லைக்கு சீக்கிரத்தில் போயிருக்க முடியும். ஆனால் ஏதோமின் ராஜாவோ, இஸ்ரவேல் புத்திரர் தன்னுடைய தேசத்தின் வழியாக பிரயாணம்பண்ணுவதை அனுமதிக்கவில்லை. இதனால் இஸ்ரவேல் புத்திரர் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்போவதினால், பிரயாண தூரம் அதிகமாகிறது. இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கு மிகுந்த களைப்பு உண்டாயிற்று. பிரயாணக்களைப்பினிமித்தமாகவும், நீண்ட தூரபிரயாணத்தினிமித்தமாகவும், இஸ்ரவேல் மனமடிவடைகிறார்கள்.

இந்த சூழ்நிலையில் கர்த்தரே தங்களை பலப்படுத்தவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நம்பவில்லை. அவர்களுடைய இருதயத்திலே அவிசுவாசம் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் மனமடிவடைந்தபோது, அவர்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஏதோம் தேசத்தைச் சுற்றிப்போனாலும், அவர்கள் சிவந்த சமுத்திரத்தின் வழியாகப் பிரயாணம்பண்ணினாலும், கர்த்தர் தமது கிருபையினால் அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து அவர்களைப் போஷிக்கிறார். ஆனால் அவர்களோ, "இங்கே அப்பமும் தண்ணீரும் இல்லை" என்று முறுமுறுக்கிறார்கள்.

நாற்பது வருஷ காலமாக வானத்திலிருந்து பெய்யும் மன்னாவை இஸ்ரவேல் புத்திரர்கள் புசித்துக் கொண்டு வருகிறார்கள். மன்னா அவர்களுக்கு அற்பமான உணவாக இருக்கிறது. அது அவர்கள் மனதிற்கும் வெறுப்பாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னாவை புசிக்கக்கொடுக்கிறார். இது தூதர்களுடைய அப்பம். ஆனால் அவர்களுக்கு மன்னா பிடிக்கவில்லை. தூதர்களுடைய அப்பத்தை இஸ்ரவேல் புத்திரர் "அற்பமான உணவு" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி, "இந்த அற்பமான உணவு எங்கள் மனதிற்கு வெறுப்பாயிருக்கிறது" என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மன்னாவைப்பற்றிச் சொல்லும்போது, அது "அற்பமான உணவு" என்று சொல்லுகிறார்கள். இந்த உணவு சிறுபிள்ளைகளுக்கு போதுமானதாயிருக்கும் என்றும், புருஷருக்கும், யுத்தவீரருக்கும் மன்னா போதுமானதாகயிருக்காது என்றும் இஸ்ரவேல் புத்திரர் நினைக்கிறார்கள்.

மன்னா கர்த்தர் கொடுக்கிற போஜனம். இஸ்ரவேல் புத்திரர் மன்னாவில் திருப்தியடையவில்லையென்றால், அவர்கள் வேறு எந்த போஜனத்திலும் திருப்தியடையமாட்டார்கள். மன்னாவில் திருப்தியடையாதவர்கள், தங்களுக்கு மன்னாவைக் கொடுத்த கர்த்தர்மீதும் திருப்தியடையமாட்டார்கள்.

பரிசுத்த வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் நமக்கு ஆவிக்குரிய போஜனமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வசனமே கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஆவிக்குரிய மன்னா. கர்த்தருடைய வார்த்தையை, "அற்பமான உணவு" என்று அலட்சியம் பண்ணக்கூடாது. கர்த்தருடைய வசனம் நம்முடைய மனதிற்கு வெறுப்பாயிருக்கிறது என்றும் நாம் சொல்லக்கூடாது.

கர்த்தருடைய வார்த்தையே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மெய்யான போஜனம். நம்முடைய விசுவாசத்தினால், நாம் கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய ஜீவியத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும். அதுவே நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும். மற்றவர்கள் கர்த்தருடைய வார்த்தையை அற்பமான உணவு என்று சொல்லி ஏளனம்பண்ணினாலும், விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தருடைய வார்த்தையே மெய்யான போஜனமாகவும், சத்தான உணவுமாக இருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தையில் வெறுப்படையக்கூடாது. அதை வாஞ்சையோடு பெற்றுக்கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தமக்கு விரோதமாகவும், மோசேக்கு விரோதமாகவும் முறுமுறுப்பதைப் பார்த்து கர்த்தர் அவர்கள்மீது கோபப்படுகிறார். தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்புகிறார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்துப்போகிறார்கள் (எண் 21:6).

கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள் என்பதற்கு இரண்டு எபிரெய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எபிரெய மொழியில் "சாரப்" என்னும் சொல்லுக்குக் கொள்ளிவாய் என்று பொருள். "நாகாஷ்" என்னும் சொல்லுக்குச் சர்ப்பம் என்று பொருள்.

இந்தக் கொள்ளிவாய்ச் சர்ப்பம் கடிக்கும்போது கடிபட்டவனுக்குத் தாகம் உண்டாகும். இதன் கொடிய விஷத்தினால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று (எண் 21:6-9; உபா 8:15). ஏராளமானோர் மடிந்துபோவதற்குக் கொள்ளிவாய்ச் சர்ப்பம் காரணமாயிற்று. அதே வேளையில், இந்தச் சர்ப்பங்கள் கடித்ததினால் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் மனந்திரும்புதலும், பாவ அறிக்கை பண்ணுவதும் உண்டாயிற்று (எண் 21:6-7).

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் வனாந்தரத்திலே பிரயாணம் செய்திருக்கிறார்கள். அந்த வனாந்தரத்தில் ஏராளமான சர்ப்பங்கள் இருக்கிறது. ஆனாலும் இதுவரையிலும் அந்த சர்ப்பங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு தீங்கு செய்யவில்லை. கர்த்தர் தமது பெரிதான கிருபையினால் இஸ்ரவேல் புத்திரரை கொள்ளிவாய்ச்சர்ப்பங்களுக்கு விலக்கிப் பாதுகாத்திருக்கிறார்.

"உன்னுடைய பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும்பொருட்டு, உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைச் சோதித்து, கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும் தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்தரவழியாய் உன்னை அழைத்துவந்தவரும், உனக்காகப் பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினவருமான" (உபா 8:15) உன் தேவனை நினைப்பாயாக.

இப்போது இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே கர்த்தருக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். கர்த்தரோ கொள்ளிவாய்ச்சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்புகிறார். கர்த்தருடைய பாதுகாப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. கொள்ளிவாய்ச்சர்ப்பங்கள் இஸ்ரவேல் புத்திரரை கடிக்கிறது. அதினால் ஜனங்களில் அநேகர் செத்துப்போகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்காத வரையிலும், கர்த்தர் அவர்களை கொள்ளிவாய்ச்சர்ப்பங்களுக்கு விலக்கிப் பாதுகாத்துக்கொள்கிறார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்க ஆரம்பிக்கும்போதோ, அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு கிடைக்கவில்லை.

கர்த்தர் அனுப்பின சர்ப்பங்கள் "கொள்ளிவாய்ச்சர்ப்பங்கள்" என்று அழைக்கப்படுகிறது. ஒரு வேளை இந்த சர்ப்பங்களின் நிறம் அக்கினி நிறமாகயிருக்கலாம். அல்லது இவற்றின் கோபம் எரிகிற கொள்ளிக்கட்டையைப்போல இருக்கலாம். ஒருவேளை இந்த சர்ப்பங்கள் மனுஷரை கடிக்கும்போது உடனே விஷம் தலைக்கு ஏறிவிடலாம்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் இருதயக்கடினத்தினாலும், மனதின் பெருமையினாலும், ஆணவத்தினாலும், தங்கள் தலைகளை தேவனுக்கும், மோசேக்கும் விரோதமாக உயர்த்துகிறார்கள். கர்த்தரோ அவர்களை தாழ்த்துகிறார். அவர்கள் இப்போது தரையில் ஊருகிற சாதார கொள்ளிவாய்ச்சர்ப்பங்களைப் பார்ப்பதற்காக தங்கள் தலைகளைத் தாழ்த்துகிறார்கள். சர்ப்பம் உருவத்தில் சிறியதாகயிருந்தாலும், இஸ்ரவேல் புத்திரர் எண்ணிக்கையில் அதிகமானோராயிருந்தாலும், அந்த சர்ப்பம் அவர்களைக் கடிக்கிறது. இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளே அநேகர் செத்துப்போகிறார்கள்.

தங்களில் அநேகர் செத்துப்போவதைப் பார்த்து இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். தங்கள் பாவத்தை அவர்கள் மோசேயினிடத்தில் அறிக்கை செய்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய், "நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ் செய்தோம்; சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும்" (எண் 21:7) என்று சொல்லுகிறார்கள்.

தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் வாதையிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், ஜெபம் பண்ண வேண்டுமென்று, இஸ்ரவேல் புத்திரர்கள் புரிந்து கொள்கிறார்கள். (எண் 21:7-9).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவத்தை உணருகிறார்கள். "நாங்கள் பாவம் செய்தோம்" என்று சொல்லி தங்கள் பாவத்தை அறிக்கை செய்கிறார்கள். தங்கள் பாவத்தை உணராதவர்கள் அதை ஒருபோதும் அறிக்கை செய்யமாட்டார்கள். கொள்ளவாய்ச்சர்ப்பங்கள் இஸ்ரவேல் புத்திரரை கடித்ததினால் அவர்களுக்குள் வேதனையும் வாதையும் உண்டாயிற்று. அவர்கள் அனுபவித்த வேதனை, அவர்களுடைய பாவத்தை உணருவதற்கும், அதை அறிக்கை செய்வதற்கும் உதவி செய்கிறது.

மனுஷனுக்கு துன்பங்களும் கஷ்டங்களும் வரும்போது அவர்களுடைய மனநிலை மாறுகிறது. அவர்கள் இதற்கு முன்பு கர்த்தருக்கு விரோதமாகவும், கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாகவும் பேசியிருக்கலாம். ஆனாலும் அவர்களுடைய வாழ்க்கையில் துன்பம் வரும்போது, தாங்கள் இதற்கு முன்பாக கர்த்தருக்கு விரோதமாகப் பேசியது தவறு என்பதை உணருகிறார்கள்.

ஒரு சிலருக்கு பிரச்சனைகள் வருவதற்கு முன்பாக, அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணியிருக்கமாட்டார்கள். அவர்கள் ஜெபம்பண்ணுகிறவர்களையும் ஏளனம் பண்ணியிருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள்கூட தங்களுடைய வாழ்க்கையில் துன்பம் வரும்போது, ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். தங்களுக்காக ஜெபம் பண்ணுமாறு அவர்கள் மற்றவர்களையும் கெஞ்சி கேட்டுக்கொள்வார்கள்.

கர்த்தர் கொள்ளிவாய்ச்சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பியிருக்கிறார். அவைகள் ஜனங்களைக் கடித்ததினால், ஜனங்களில் அநேகர் செத்துப்போனார்கள். கொள்ளிவாய்ச்சர்ப்பங்கள் மூலமாக, ஜனங்கள் மத்தியிலே மிகப்பெரிய வாதை உண்டாயிற்று. அவர்கள் மோசேயினிடத்தில் வந்து, "சர்ப்பங்கள் எங்களை விட்டு நீங்கும்படிக்கு கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணவேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் யாருக்கு விரோதமாகப் பேசினார்களோ, அந்த மோசேயினிடத்திலேயே வந்து, தங்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கும், மோசேக்கும் விரோதமாகப் பேசினார்கள். இப்போதோ அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுமாறு மோசேயைக் கேட்டுக்கொள்கிறார்கள்.

மோசே அவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறார். தன்னை சபித்த இஸ்ரவேல் புத்திரரை மோசே ஆசீர்வதிக்க விரும்புகிறார். மோசே கர்த்தரை நோக்கி ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணுகிறார். மோசே கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறவர். கிறிஸ்துவானவர் தம்மைத் துன்பப்படுத்தியவர்களுக்காகவும், பிதாவினிடத்தில் பரிந்து பேசினார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு முன்மாதிரியாயிருக்கிறார். நம்முடைய சத்துருக்களையும் நாம் சிநேகிக்கவேண்டும் என்பதும், நம்மை சபிக்கிறவர்களையும் நாம் ஆசீர்வதிக்கவேண்டும் என்பதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உபதேசமாகும்.

மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கொள்ளிவாய்ச்சர்ப்பங்களுக்கு தப்பித்துக்கொள்ளும் உபாயத்தை கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ ஒரு கொள்ளிவாய்ச்சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான்" (எண் 21:8) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை, கொள்ளிவாய்ச்சர்ப்பத்தைப் போன்ற ஒரு சர்ப்பத்தை வெண்கலத்தினால் உண்டாக்குமாறு சொல்லுகிறார். மோசே அந்த சர்ப்பத்தை ஒரு கம்பத்தின்மேல் தூக்கி வைக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் மோசேயினிடத்தில் வந்து, "சர்ப்பங்கள் எங்களை விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

மோசேயும், இஸ்ரவேல் புத்திரர் தன்னிடத்தில் கேட்டுக்கொண்ட பிரகாரம் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணினார். ஆனால் கர்த்தரோ இஸ்ரவேல் புத்திரர் எதிர்பார்த்த பிரகாரம், அவர்களுக்கு பிரதியுத்தரம் சொல்லவில்லை. சர்ப்பங்களை அவர்களைவிட்டு நீங்கும்படி செய்வதற்கு இஸ்ரவேல் புத்திரர் அபாத்திரராயிருக்கிறார்கள் என்று கர்த்தர் தீர்மானம்பண்ணுகிறார். கர்த்தர் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றவில்லை. ஆனாலும் கர்த்தர் அவர்களுக்கு வந்திருக்கும் பிரச்சனைகளிலிருந்து, அவர்கள் விடுதலை பெறுவதற்கு, தமக்கு சித்தமான உபாயத்தை சொல்லுகிறார்.

மோசே ஒரு கொள்ளிவாய்ச்சர்ப்பத்தின் உருவத்தை செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைக்கவேண்டும். இஸ்ரவேலரின் பாளயத்திலுள்ளவர்களும் பார்க்கும் வண்ணமாக அந்தக் கம்பம் உயரமானதாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரரில் கொள்ளிவாய்ச்சர்ப்பம் யாரையெல்லாம் கடித்ததோ, அவர்கள் எல்லோரும், அந்த சர்ப்பத்தைப் பார்க்கும் வண்ணமாக, அது உயரமான கம்பத்தில் தூக்கி வைக்கப்பட்டிருக்கவேண்டும். கடிக்கப்பட்டவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கும்போது பிழைப்பான் என்பது கர்த்தருடைய வார்த்தை.

இஸ்ரவேல் ஜனங்கள் எதிர்பார்த்த பிரகாரம் கர்த்தர் கொள்ளிவாய்ச்சர்ப்பங்களை அவர்களை விட்டு நீங்கும்படி செய்யவில்லை. ஆனாலும் கொள்ளிவாய்ச்சர்ப்பங்களால் கடிக்கப்பட்டவர்கள் பிழைக்கும்படியான உபாயத்தை கர்த்தர் சொல்லுகிறார். இதுவே கர்த்தருக்கு சித்தமானதாக இருக்கிறது.

கர்த்தருடைய ஜனமாகிய நாம் பிரச்சனைகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது, கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு, நமக்கு சித்தமான பதிலை, நமக்கு சித்தமான வழியில் கொடுக்காமல் இருக்கலாம். ஆனாலும் கர்த்தர் தமக்கு சித்தமான வழியிலே, நம்முடைய பிரச்சனைகளிலிருந்தும், வேதனைகளிலிருந்தும், பாடுகளிலிருந்தும் நமக்கு விடுதலை கொடுப்பார்.

வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்னும் வார்த்தைக்கு யூதமார்க்கத்து ரபீமார்கள் ஒரு ஆவிக்குரிய விளக்கம் சொல்லுகிறார்கள். வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்ப்பதினால், சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவன் பிழைக்கமாட்டான் என்று யூதர்கள் சொல்லுகிறார்கள். வெண்கல சர்ப்பத்திற்கு, குணமாக்கும் வல்லமையில்லை. கர்த்தரே அவர்களை பிழைக்கச் செய்கிறவர். இஸ்ரவேல் புத்திரர் வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்க்கும்போது, அவர்கள் தங்களை குணமாக்குகிற தேவனாகிய கர்த்தரையே நோக்கிப் பார்க்கிறார்கள். கர்த்தரே அவர்களை குணமாக்குகிறவர் என்பது யூதமார்க்கத்து ரபீமார்களுடைய வியாக்கியானம்.

வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தவன் பிழைப்பான் என்னும் வாக்கியத்தில் சுவிசேஷச் செய்தியும் இடம்பெற்றிருக்கிறது.

"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்" *(யோவா 3:14,15).*

வனாந்தரத்தில் கொள்ளிவாய்ச்சர்ப்பங்கள் கடித்ததினால், இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்துப்போனார்கள். அவர்களுக்கு வாதையும் வேதனையும் உண்டாயிற்று. மோசே கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம், ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைக்கிறார். சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து பிழைக்கிறான் *(எண் 21:9).*

வெண்கல சர்ப்பம் கிறிஸ்துவிற்கு அடையாளம். கிறிஸ்து எல்லா ஜனங்களுடைய பாவங்களையும், வியாதிகளையும் தூக்கிச் சுமந்தார். *(மத் 8:17; யோவான் 3:14; யோவான் 10:10; 1பேதுரு 2:24; ஏசா 53).*

வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தால், கொள்ளிவாய்ச் சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவன் பிழைப்பான். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ இந்த வெண்கலச் சர்ப்பத்தையே ஒரு விக்கிரகமாக ஆக்கிவிட்டார்கள். எசேக்கியாவின் நாட்களில் இந்த வெண்கலச் சர்ப்பங்கள் அழிக்கப்பட்டது. *(2இராஜா 18:4).*

வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தவன் தன் பௌதீக சரீரத்தில் ஜீவனைப் பெற்றுக் கொள்வான். இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கிறவர்கள் ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். *(யோவான் 3:14-16).*

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்பட்ட வாதைகளுக்கும், புதிய ஏற்பாட்டுக்காலத்து ஜனங்களுடைய வாதைகளுக்கும், அவர்களுடைய வாதைகள் நீங்கியதற்கும், நம்முடைய வாதைகள் நீங்குவதற்கும், வேதபண்டிதர்கள் ஒற்றுமை இருப்பதாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அதன் விவஜம் வருமாறு :

பிசாசானவன் பழைய பாம்பாகிய சர்ப்பமாகயிருக்கிறான். அவன் கொள்ளிவாய்ச்சர்ப்பத்தைப்போல, வலுசர்ப்பமாகயிருக்கிறான்.

"அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது" (வெளி 12:3).

வலுசர்ப்பம் கடிப்பதுபோல மனுஷருடைய பாவமும் அவர்களைக் கடிக்கிறது. பாம்பு கடித்தால் சரீரத்தில் வேதனை உண்டாகும். மனுஷருடைய பாவம் அவர்களைக் கடிக்கும்போது, அவர்களுடைய மனச்சாட்சியில் வேதனையும், அவர்களுடைய இருதயத்தில் குற்றவுணர்வும் ஏற்படுகிறது.

பாவம் சர்ப்பத்தின் விஷத்தைப்போல கொடியது. அது நம்முடைய மனச்சாட்சியை மழுங்கப்பண்ணிவிடும். சாத்தானுடைய சோதனைகள் அக்கினியாஸ்திரங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்" (எபே 6:16).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் குணமடைந்ததற்கும், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நாம் குணமடைவதற்கும் ஒற்றுமையிருப்பதாக வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கொள்ளிவாய்ச்சர்ப்பத்தின் உருவத்தை செய்யுமாறும், அதை ஒரு கம்பத்தில் தூக்கிவைக்குமாறும் கர்த்தரே தம்முடைய உபாயத்தை சொன்னார். கொள்ளிவாய்ச்சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவர்கள் பிழைப்பதற்கு, கர்த்தரே இந்த உபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்கு ஆத்தும இரட்சிப்பு நியமிக்கப்பட்டிருக்கிறது. இது தேவனுடைய அனந்த ஞானத்தினால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் தாமே நம்முடைய பாவங்களுக்கு பதிலீடாக, இயேசுகிறிஸ்துவின் பலிமரணத்தை தீர்மானம் செய்திருக்கிறார்.

வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்ததினால், கொள்ளிவாய்ச்சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவன் குணமடைவானா என்னும் சந்தேகம் யூதருடைய மனதிலே உண்டாயிற்று. அதுபோலவே இயேசுகிறிஸ்துவின் மரணத்தினால் நம்முடைய ஆத்துமாவுக்கு எவ்வாறு இரட்சிப்பு கிடைக்கும் என்று ஒரு சிலர் சந்தேகப்படுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைப்பற்றிய உபதேசம் யூதருக்கு தடைக்கல்லாகவும், கிரேக்கருக்கு பைத்தியமாகவும் இருக்கிறது.

வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்களை கொள்ளிவாய்ச்சர்ப்பம் கடித்தது. கர்த்தரோ ஒரு கொள்ளிவாய்ச்சர்ப்பத்தின் உருவத்தை வெண்கலத்தினால் செய்யுமாறு சொல்லுகிறார். வெண்கல சர்ப்பத்தின் உருவம் கொள்ளிவாய்ச்சர்ப்பத்தின் உருவத்தைப்போல இருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒரு பாவமும் இல்லை. அவர் பாவம் அறியாத பரிசுத்தராகயிருக்கிறார். ஆனாலும் கிறிஸ்துவானவர் பாவமம்சத்தின் சாயலானார்.

"அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (ரோம 8:3).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை, பாவியாகிய மனுஷன் என்றே இந்த உலகத்தார் அறிந்திருந்தார்கள்.

"ஆதலால் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள்"(யோவா 9:24).

வெண்கல சர்ப்பம் ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைக்கப்பட்டது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் கல்வாரி சிலுவையின்மேல் உயர்த்தப்பட்டார்.

"தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார். ஜனங்கள் அவரை நோக்கி: கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம், அப்படியிருக்க மனுஷகுமாரன் உயர்த்தப்படவேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர்; இந்த மனுஷகுமாரன் யார் என்றார்கள்" (யோவா 12:33,34).

சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுகிறிஸ்து இந்த உலகத்தாருக்கு காட்சிப்பொருளானார். சுவிசேஷத்தை பிரசங்கம்பண்ணுவதன் மூலமாக கிறிஸ்துவானவர் உயர்த்தப்படுகிறார். சர்ப்பமானது ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைக்கப்பட்டது. கம்பம் என்பது ஒரு கொடிக்கம்பத்தைக் குறிப்பிடுகிறது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்து, அவரை நம்புகிற ஜனங்களுக்கு ஜெயக்கொடியாக இருக்கிறார்.

"அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள்; அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்" (ஏசா 11:10).

வெண்கல சர்ப்பம் கம்பத்தின்மேல் தூக்கிவைக்கப்பட்டது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பழைய பாம்பாகிய சாத்தான்மீது வெற்றி சிறந்ததற்கு அடையாளம். கிறிஸ்துவானவர் சாத்தானுடைய தலையை நசுக்கினார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்போது, சாத்தானுடைய அந்தகார வல்லமைகளையும், அவனுடைய அதிகாரங்களையும் அழித்து நிர்மூலம்பண்ணினவராக தொங்கிக்கொண்டிருந்தார்.

"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்" (கொலோ 2:14,15).

வனாந்தரத்தில் கொள்ளிவாய்ச்சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து பிழைத்தான். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பார்த்து, அழிவுக்கு தப்பித்துக்கொள்கிறோம். நாம் விசுவாசத்தினால் இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பார்க்கிறோம்.

"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி 12:1,2).

"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை" (ஏசா 45:22).

கம்பத்தின்மேல் தூக்கிவைக்கப்பட்ட வெண்கல சர்ப்பம், இஸ்ரவேல் புத்திரர் குணமாவதற்கும், அவர்கள் பிழைப்பதற்கும் அடையாளமாயிருக்கிறது. அவர்கள் பாளயத்தின் எந்தப் பகுதியிலிருந்து, வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தாலும் அவர்கள் பிழைப்பார்கள். அவர்கள் பலவீனராகயிருந்தாலும், கண்களிலே கண்ணீரோடு இருந்தாலும், அவர்கள் கம்பத்தின்மேல் தூக்கிவைக்கப்பட்ட வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தபோது பிழைக்கிறார்கள்.

அதுபோலவே இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிற யாராகயிருந்தாலும், அவர்களுடைய விசுவாசம் பலவீனமானதாகயிருந்தாலும், அவர்களும் அழிவுக்கு தப்பித்துக்கொள்வார்கள்.

வெண்கல சர்ப்பம் கிறிஸ்துவுக்கு அடையாளமாக சொல்லப்படுகிறது. அதன் விவரம் வருமாறு :

1. சர்ப்பம் பாவத்திற்கு அடையாளம். நமது பாவங்களிலிருந்து நாம் விடுவிக்கப்படும் படியாகக் கிறிஸ்து நமக்காகப் பாவமாக்கப் பட்டார். (2கொரி 5:21).

2. வெண்கலச் சர்ப்பம் ஒரு கம்பத்தின்மேல் தூக்கி வைக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து சிலுவை மரத்தின்மீது தூக்கப்பட்டார். (யோவான் 3:14-15).

3. வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்ததினால், சர்ப்பத்தினால் கடிக்கப்பட்ட இஸ்ரவேல் புத்திரர் குணமடைந்தார்கள். மற்றவர்கள் இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து, குணமடைகிறார்கள். (மத் 8:17; யோவான் 3:14-15; 1பேதுரு 2:24; ஏசா 53).

4. சர்ப்பத்தை நோக்கிப் பார்த்த இஸ்ரவேல் புத்திரர்கள் மரித்துப் போகாமல் பிழைத்தார்கள். அதுபோன்று, இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறார்கள். (யோவான் 3:14-15).

5. இஸ்ரவேலரின் வனாந்தர அனுபவத்தில் கர்த்தர் அவர்களுக்கு வேறு பரிகாரம் எதையும் கட்டளையிடவில்லை. தற்போது இரட்சிக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்துவின் நாமம் அல்லாமல் வேறு எந்த நாமமும் கட்டளையிடப் படவில்லை. (யோவான் 3:14-16; அப் 3:16; அப் 4:12; ரோமர் 10:9-10).

6. வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தால் பிழைப்போம் என்னும் நம்பிக்கை இஸ்ரவேல் புத்திரரிடத்தில் காணப்பட வேண்டும். அதுபோன்று, இன்றைய தினமும் இயேசு கிறிஸ்துவிடம் வந்தால், அவர் தரும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற விசுவாசம் மனுஷரிடத்தில் காணப்பட வேண்டும். (யோவான் 3:14-16; எபே 2:8-9).

7. வெண்கலச் சர்ப்பத்தில் தேவனுடைய வல்லமை அதரிசனமாக வெளிப்பட்டது. அதுபோன்று, இயேசு கிறிஸ்துவின் மூலமாக உண்டாகும் இரட்சிப்பிலும் தேவனுடைய வல்லமை அதரிசனமாக வெளிப்படுகிறது. (மத் 1:21; ரோமர் 1:16; கொலோ 2: 12-13).

8. கம்பத்தின்மேல் தூக்கி வைக்கப்பட்ட வெண்கலச் சர்ப்பம் மனுஷருக்குச் சமாதானத்தைக் கொடுத்தது. மனுஷரைத் தேவனோடு ஒப்புரவாக்கிற்று. அதுபோன்று கிறிஸ்துவும் மனுஷருக்குச் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் தருகிறார். (கொலோ 1:20-21).

9. வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து, குணமடைய வேண்டுமானால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களை அறிக்கை செய்து ஜெபிக்க வேண்டும். அதுபோன்று கல்வாரி சிலுவையின் மூலமாக வரும் இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து அவரிடத்தில் ஜெபிக்க வேண்டும். (யோவான் 3:14-16; ரோமர் 10:9-10; 1யோவான் 1:9).

மோவாபின் சமவெளிக்கு பிரயாணம் எண் 21:10-20

எண் 21:10. இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டுப்போய், ஓபோத்தில் பாளயமிறங்கினார்கள்.

எண் 21:11. ஓபோத்திலிருந்து பிரயாணம்பண்ணி, சூரியோதயத்திற்கு நேராய் மோவாபுக்கு எதிரான வனாந்தரத்திலுள்ள அபாரீமின் மேடுகளில் பாளயமிறங்கினார்கள்.

எண் 21:12. அங்கேயிருந்து பிரயாணப்பட்டுப் போய், சாரேத் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 21:13. அங்கேயிருந்து பிரயாணப்பட்டுப்போய், எமோரியரின் எல்லையிலிருந்து வருகிறதும் வனாந்தரத்தில் ஓடுகிறதுமான அர்னோன் ஆற்றுக்கு இப்புறம் பாளயமிறங்கினார்கள்; அந்த அர்னோன் மோவாபுக்கும் எமோரியருக்கும் நடுவே இருக்கிற மோவாபின் எல்லை.

எண் 21:14. அதினால் சூர்ப்பாவிலுள்ள வாகேபும், அர்னோனின் ஆற்றுக்கால்களும்,

எண் 21:15. ஆர் என்னும் ஸ்தலத்துக்குப் பாயும் நீரோடையும் மோவாபின் எல்லையைச் சார்ந்திருக்கிறது என்னும் வசனம் கர்த்தருடைய யுத்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

எண் 21:16. அங்கேயிருந்து பேயேருக்குப் போனார்கள்; ஜனங்களைக் கூடிவரச்செய், அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பேன் என்று கர்த்தர் மோசேக்குச் சொன்ன ஊற்று இருக்கிற இடம் அதுதான்.

எண் 21:17. அப்பொழுது இஸ்ரவேலர் பாடின பாட்டாவது: ஊற்றுத் தண்ணீரே, பொங்கிவா, அதைக்குறித்துப் பாடுவோம் வாருங்கள்.

எண் 21:18. நியாயப்பிரமாணிக்கனின் ஏவுதலால் அதிபதிகள் கிணற்றைத் தோண்டினார்கள்; ஜனத்தில் மேன்மக்கள் தங்கள் தண்டாயுதங்களைக்கொண்டு தோண்டினார்கள் என்று பாடினார்கள்.

எண் 21:19. அந்த வனாந்தரத்திலிருந்து மாத்தனாவுக்கும், மாத்தனாவிலிருந்து நகாலியேலுக்கும், நகாலியேலிலிருந்து பாமோத்துக்கும்,

எண் 21:20. பள்ளத்தாக்கிலுள்ள மோவாபின் வெளியில் இருக்கிற பாமோத்திலிருந்து எஷிமோனை நோக்கும் பிஸ்காவின் உச்சிக்கும் போனார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஓர் என்னும் மலையைவிட்டு சிவந்த சமுத்திரத்தின் வழியாய்ப் பிரயாணம்பண்ணுகிறார்கள். அங்கே கொள்ளிவாய்ச்சர்ப்பம் இஸ்ரவேல் புத்திரரை கடித்த சம்பவமும், மோசே வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கி வைத்த சம்பவமும், கொள்ளிவாய்ச்சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டவர்கள், வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து பிழைத்த சம்பவமும் நடைபெறுகிறது.

அதன் பின்பு இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமவெளிக்கு நேராக பிரயாணம்பண்ணுகிறார்கள். அந்த சமவெளிக்குப்போகும் வரையிலும், அவர்கள் வழியிலே பாளயமிறங்கின இடங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் வரிசையாக சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்பட்டுப்போய், ஓபோத்தில் பாளயமிறங்குகிறார்கள் (எண் 21:10). அவர்கள் ஓபோத்திலிருந்து பிரயாணம்பண்ணி, சூரியோதயத்திற்கு நேராய் மோவாபுக்கு எதிரான வனாந்தரத்திலுள்ள அபாரீமின் மேடுகளில் பாளயமிறங்குகிறார்கள் (எண் 21:11). இஸ்ரவேல் புத்திரர் அங்கேயிருந்து பிரயாணப்பட்டுப் போய், சாரேத் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்குகிறார்கள் (எண் 21:12).

'மோவாபின் சமவெளி கானான் தேசத்திற்கு அருகாமையில் இருக்கிறது. இந்த சமவெளியிலிருந்து யோர்தான் நதியைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கவேண்டும். யோசுவாவின் புஸ்தகத்தில் இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்த சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது வாக்குத்தத்த தேசத்திற்கு அருகாமையில் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய மனதில் கானான் தேசத்திற்குப்போகவேண்டும் என்னும் ஆர்வம் அதிகமாயிருக்கிறது. மனதிலே ஆர்வம் இருக்கும்போது காரியங்கள் எளிதாக நடைபெறும்.

இஸ்ரவேல் புத்திரர் "பிரயாணப்பட்டுப்போய்" (எண் 21:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் "பிரயாணப்பட்டுப்போகிறார்கள்" என்னும் வார்த்தைக்கு, அவர்கள் "முன்னேறிப்போகிறார்கள்" என்பது பொருளாகும்.

விசுவாசிகளாகிய நாமும் பரமகானானை நோக்கி பிரயாணம்பண்ணுகிறோம். நாம் பரலோகத்திற்கு அருகாமையில் வந்து சேரும்போது, கர்த்தருக்காக நாம் செய்ய வேண்டிய ஊழியங்களை இன்னும் அதிகமாயும், உற்சாகமாயும் செய்யவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்கு அருகாமையில் வரும்போது, அவர்களுடைய பிரயாணங்களில் வேகமும், முன்னேற்றமும் காணப்படுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அர்னோன் ஆற்றுக்கு அருகே விசேஷித்த ஆசீர்வாதங்களை கட்டளையிடுகிறார். இஸ்ரவேல் புத்திரர் சாரேத் பள்ளத்தாக்கிலிருந்து பிரயாணப்பட்டுப்போய், எமோரியரின் எல்லையிலிருந்து வருகிறதும் வனாந்தரத்தில் ஓடுகிறதுமான அர்னோன் ஆற்றுக்கு இப்புறம் பாளயமிறங்குகிறார்கள்; அந்த அர்னோன் மோவாபுக்கும் எமோரியருக்கும் நடுவே இருக்கிற மோவாபின் எல்லை (எண் 21:13).

அதினால் சூர்ப்பாவிலுள்ள வாகேபும், அர்னோனின் ஆற்றுக்கால்களும், ஆர் என்னும் ஸ்தலத்துக்குப் பாயும் நீரோடையும் மோவாபின் எல்லையைச் சார்ந்திருக்கிறது என்னும் வசனம் கர்த்தருடைய யுத்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது (எண் 21:14,15).

கர்த்தருடைய யுத்த புஸ்தகத்தைப்பற்றி இங்கு கூறப்பட்டிருப்பதைத் தவிர, வேறு எந்த விவரம் தெரியவில்லை. கர்த்தர் செங்கடலில் செய்த கிரியைகள் யாத் 14-15 ஆகிய அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிறது. அர்னோன் ஆற்றுக்கரையில் கர்த்தர் நடப்பித்த காரியங்கள் வேதாகமத்தில் எழுதப்படவில்லை. மோவாபின் சமவெளிகளில் இஸ்ரவேல் புத்திரர் பிரவேசித்ததோடு இந்த நிகழ்ச்சி தொடர்புடையதாக இருக்கலாம் (எண் 21:13-14).

இஸ்ரவேல் ஜனத்தார் ஏதோம் தேசத்தை சுற்றி வருகிறார்கள். கானான் தேசத்திற்குப் போக பல வழிகள் இருக்கிறது. இது கர்த்தருடைய கிருபை. இஸ்ரவேல் புத்திரர் ஒரு குறிப்பிட்ட வழியாகத்தான் கானான் தேசத்திற்கு போகவேண்டும் என்னும் நிர்ப்பந்தம் எதுவுமில்லை. ஒரு வழி அடைக்கப்படும்போது, கர்த்தர் அவர்களுக்கு வேறொரு வழியைத் திறந்துகொடுக்கிறார்.

கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் பகலிலே மேகஸ்தம்பத்தையும், இரவிலே அக்கினி ஸ்தம்பத்தையும் பார்த்து பிரயாணம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தங்களை எந்த திசையில் வழிநடத்துகிறாரோ, அந்த திசையிலே அவர்கள் புறப்பட்டுப்போகிறார்கள்.

கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக எப்போதுமே சத்துருக்கள் எழும்புவார்கள். நாம் போகவேண்டிய பாதையை அவர்கள் தடைபண்ண முயற்சிபண்ணுவார்கள். சத்துருக்கள் நம்மை எப்படித்தான் தடைபண்ணினாலும், கர்த்தர் நமக்கு வாக்குப்பண்ணியிருக்கிற பரமகானானுக்குள் நாம் பிரவேசிப்பதை, நம்முடைய சத்துருக்களால் தடைபண்ண முடியாது.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, அவர்களுடைய சத்துருக்கள் அவர்களுக்கு தடைகளையும், பிரச்சனைகளையும், இடையூறுகளையும் ஏற்படுத்தினார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கானான் தேசத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதை அவர்களுடைய சத்துருக்களால் தடுத்து நிறுத்த முடியாது.

இஸ்ரவேல் ஜனத்தார் கானானை நோக்கிப் பிரயாணம்பண்ணும்போது, கர்த்தருடைய வார்த்தைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். தங்களுடைய எல்லா செய்கைகளிலும் அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மோவாபியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணக்கூடாது என்பது கர்த்தருடைய கட்டளை. மோவாபியர் லோத்தின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். ஆகையினால் கர்த்தர் மோவாபியருக்கு விசேஷித்த சிலாக்கியத்தைக் காண்பிக்கிறார்.

"அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: நீ மோவாபை வருத்தப்படுத்தாமலும், அவர்களோடே போர்செய்யாமலும் இரு; அவர்கள் தேசத்தில் உனக்கு ஒன்றும் சுதந்தரமாகக் கொடேன்; ஆர் என்னும் பட்டணத்தின் சீமையை லோத் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்" (உபா 2:9).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, மோவாபை வருத்தப்படுத்தாமலும், அவர்களோடே போர்செய்யாமலும், தங்களுடைய பிரயாணத்தைத் தொடருகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் அர்னோன் ஆற்றிலிருந்து பேயேருக்குப் போகிறார்கள்; "ஜனங்களைக் கூடிவரச்செய், அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பேன்" என்று கர்த்தர் மோசேக்குச் சொன்ன ஊற்று இருக்கிற இடம் அதுதான் (எண் 21:17). கர்த்தர் இந்த பேயேரிலே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அற்புதமாக தண்ணீரைக் கொடுக்கிறார். இந்தத் தண்ணீர் மிகவும் விசேஷமானது. இது ஊற்றுத்தண்ணீர்.

இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனத்தார் தண்ணீருக்காக கர்த்தருக்கு விரோதமாக எழும்புவார்கள். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கலகம்பண்ணுவார்கள். அவர்களுடைய வேண்டுதலிலும் விண்ணப்பத்திலும் பணிவும் பக்தியும் இருக்காது. ஆனாலும் அவர்களுடைய அடிப்படை தேவை சந்திக்கப்படவேண்டும் என்பதற்காக கர்த்தர் அவர்களுக்கு தண்ணீரைக் கொடுப்பார். அது அன்போடும் சந்தோஷத்தோடும் கொடுக்கப்படும் தண்ணீரல்ல. கர்த்தர் இதுவரையிலும் அவர்களுக்கு தம்முடைய கோபத்தோடும், வெறுப்போடும் தண்ணீரைக் கொடுத்தார்.

ஆனால் பேயேரிலே வித்தியாசமான சூழ்நிலை காணப்படுகிறது. கர்த்தர் அவர்களுக்கு அன்பாயும் சந்தோஷமாயும் தண்ணீரைக் கொடுக்கிறார். ஜனங்கள் தங்களுக்கு தண்ணீர் வேண்டும் என்று கேட்பதற்கு முன்பாகவே, கர்த்தர் மோசேயை நோக்கி, ஜனங்களைக் கூடிவரச் செய், அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பேன்" (எண் 21:16) என்று வாக்குப்பண்ணுகிறார்.

"ஜனங்களைக் கூடிவரச்செய், அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பேன்" (எண் 21:16) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு அற்புதமாகத் தண்ணீர் கொடுத்த இடங்களில் பேயேரும் ஒன்றாகும். மோசேயின் கட்டளைப் பிரகாரம், தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து தண்ணீர் வருகிறது (எண் 21:16-18). மூன்று சமயங்களில் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு தண்ணீரை அற்புதமாகக் கொடுத்திருக்கிறார் (யாத் 17:6; யாத் 20:7-13; யாத் 21:16-18).

கர்த்தர் அற்புதம் நடப்பிக்கும்போது, அந்த இடத்திலே இஸ்ரவேல் புத்திரரை கூடிவரப்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தர் செய்யும் அற்புதத்திற்கு சாட்சிகளாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும், விசேஷித்த சிலாக்கியத்தையும் சந்தோஷமாய் அனுபவிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தண்ணீர் வேண்டுமென்று கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு முன்பாகவே, கர்த்தர் அவர்களுக்கு "தண்ணீர் கொடுப்பேன்" என்று வாக்குப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரும் மிகுந்த சந்தோஷத்தோடும், நன்றியுள்ள இருதயத்தோடும் கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் அனுபவிக்கிறார்கள். கர்த்தர் கொடுக்கும் தண்ணீரை, அவருடைய கிருபையோடும் இரக்கத்தோடும் பருகும்போது, அதன் ருசி மிகவும் அருமையாயிருக்கிறது. அந்தத் தண்ணீர் அவர்களுக்கு மதுரமான தண்ணீராயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தண்ணீர் கொடுக்கும்போது, அவர்கள் துதித்துப் பாடுகிறார்கள். "ஊற்றுத் தண்ணீரே, பொங்கிவா, அதைக்குறித்துப் பாடுவோம் வாருங்கள்" (எண் 21:17) என்று பாடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நாமத்தை பாட்டு பாடி மகிமைப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் துதிப்பாடலைப் பாடி, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தண்ணீர் கொடுப்பேன் என்று வாக்குப்பண்ணுகிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிச்சயம் நிறைவேறும் என்னும் நம்பிக்கை இஸ்ரவேல் புத்திரரின் இருதயத்தில் காணப்படுகிறது. ஆகையினால் அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "எங்களுக்கு குடிக்க தண்ணீர் தாரும்" என்று ஜெபம்பண்ணாமல், "ஊற்றுத்தண்ணீரே பொங்கி வா" என்று சந்தோஷமாய்ப் பாடுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்முடைய கிருபையுள்ள வாக்குத்தத்தத்தை சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தர் கொடுக்கும் கிருபைகளை நன்றியுள்ள இருதயத்தோடும், துதியின் வார்த்தைகளோடும், பயபக்தியான ஜெபத்தோடும் பெற்றுக்கொள்கிறார்கள்.

வனாந்தரத்தில் கம்பத்தின்மேல் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பம் இயேசுகிறிஸ்துவிக்கு அடையாளம். கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையில் உயர்த்தப்பட்டார். நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு கிடைக்கவேண்டும் என்பதற்காகவும், நம்முடைய சரீரத்தில் சுகமுண்டாகவேண்டும் என்பதற்காகவும் நம்முடைய இரட்சராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் உயர்த்தப்பட்டார்.

கர்த்தர் பேயோரிலே இஸ்ரவேல் புத்திரருக்கு தண்ணீர் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். இது ஊற்றுத்தண்ணீர். இந்த ஊற்றுத்தண்ணீர் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் நம்முடைய ஆறுதலுக்காக தம்முடைய ஆவியானவரை ஊற்றுகிறார். பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் நமக்கு ஓடி வரும்.

"வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" (யோவா 7:38).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இதற்கு முன்பு தம்முடைய கோபத்தினாலும், வருத்தத்தினாலும் தண்ணீரைக் கொடுத்தார். ஆகையினால் அந்தத் தண்ணீருக்கு, அந்த இடத்தின் பெயரைக் கொடுத்து அதை "மேரிபாவின் தண்ணீர்" என்று அழைத்தார். ஜனங்கள் கர்த்தரிடத்தில் தண்ணீருக்காக முறுமுறுத்தார்கள். அவர்களுக்கு கர்த்தர் வருத்தத்தின் தண்ணீரைக் கொடுத்தார்.

கர்த்தரோ பேயோரிலே அவர்களுக்கு ஊற்றுத்தண்ணீரைக் கொடுக்கிறார். இது சந்தோஷத்தின் தண்ணீர். பேயோரின் தண்ணீர் முறுமுறுப்பின் தண்ணீரல்ல. இது துதியின் தண்ணீர். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தர் கொடுக்கும் தண்ணீரை, துதியின் கீதத்தைப்பாடி சந்தோஷமாய்ப் பெற்றுக்கொள்கிறார்கள்.

"நியாயப்பிரமாணிக்கனின் ஏவுதலால் அதிபதிகள் கிணற்றைத் தோண்டினார்கள்; ஜனத்தில் மேன்மக்கள் தங்கள் தண்டாயுதங்களைக்கொண்டு தோண்டினார்கள்" (எண் 21:18) என்று இஸ்ரவேல் புத்திரர் பாடுகிறார்கள்.

இஸ்ரவேலின் எழுபது மூப்பர்களும் கிணற்றை தோண்டுகிறார்கள். தங்களுடைய தண்டாயுதங்களினால் மென்மையான மணலை தோண்டுகிறார்கள். கர்த்தர் அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீரைப் புறப்படப்பண்ணுகிறார். கர்த்தருடைய பெரிதான அற்புதத்தினால், இஸ்ரவேலின் அதிபதிகள் தோண்டின கிணற்றிலிருந்து ஊற்றுத்தண்ணீர் புறப்பட்டு வருகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தண்ணீரைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணினார். அந்தத் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு இஸ்ரவேல் புத்திரர் கிணற்றைத் தோண்ட வேண்டும். கிணறு தோண்டாமல் ஊற்றுத்தண்ணீர் வருவதற்கு வாய்ப்பில்லை. கிணற்றைத் தோண்டுவது மனுஷனுடைய வேலை. தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து ஊற்றுத்தண்ணீரைப் புறப்படச் செய்வது கர்த்தருடைய கிருபை.

கர்த்தர் நமக்கு ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும், சிலாக்கியங்களையும் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தருடைய நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு, நம்மால் செய்ய முடிகிற காரியங்களை நாம் செய்யவேண்டும். எல்லாவற்றையும் கர்த்தரே நமக்கு செய்து கொடுப்பார் என்று நினைத்து, நாம் ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறியாக சும்மாயிருக்கக்கூடாது. கர்த்தர் நமக்கு கொடுக்கும் உபாயங்களை பயன்படுத்தவேண்டும். நாம் செய்யவேண்டிய வேலைகளை நாமே செய்யவேண்டும்.

நாம் செய்யக்கூடிய வேலைகளை எவ்வளவுதான் செய்தாலும், அற்புதம் செய்கிறவர் கர்த்தரே என்னும் விசுவாசம் நமக்குள் இருக்கவேண்டும். தேவனுடைய வல்லமையே அற்புதம் செய்கிறது. கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காகவும், மகத்துவத்திற்காகவும் அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்கிறார். நாம் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்போது, இவை நம்முடைய சுயமுயற்சியினாலோ, சுயபிரயாசத்தினாலோ வந்தது என்று நினைக்கக்கூடாது. அற்புதங்கள் எல்லாமே கர்த்தருடைய வல்லமையினால் நடைபெறுகிறது. அது அவருடைய கிருபையினால் நமக்கு கிடைக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் பேயோர் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டுப்போகிறார்கள். அவர்கள் அந்த வனாந்தரத்திலிருந்து மாத்தனாவுக்கும், மாத்தனாவிலிருந்து நகாலியேலுக்கும், நகாலியேலிலிருந்து பாமோத்துக்கும், பள்ளத்தாக்கிலுள்ள மோவாபின் வெளியில் இருக்கிற பாமோத்திலிருந்து எஷிமோனை நோக்கும் பிஸ்காவின் உச்சிக்கும் போகிறார்கள் (எண் 21:19,20).

எண் 21:18-20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் இடங்களின் பெயர்கள் எண் 33 ஆவது அதிகாரத்தில் கூறப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் இந்த இடங்களிலெல்லாம் பாளயமிறங்கியிருந்திருக்க வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் காதேசிலிருந்து பிஸ்கா வரையிலும் பிரயாணம் பண்ணி பாளயமிறங்கிய ஸ்தலங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. காதேசிலிருந்து ஓர் மலை (எண் 20:1-21:4; எண் 33:37)

2. ஓர் மலையிலிருந்து சல்மோனா (எண் 21:4; எண் 33:41)

3. சல்மோனாவிலிருந்து பூனோன் (எண் 21:4; எண் 33:42)

4. பூனோனிலிருந்து ஓபோத் (எண் 21:10; எண் 33:43)

5. ஓபோத்திலிருந்து அபராமீன் மேடுகள் (எண் 21:11; எண் 33:44)

6. அபராமீன் மேடுகளிலிருந்து சாரேத் பள்ளத்தாக்கில் உள்ள தீபோத்காத் (எண் 21:12; எண் 33:45)

7. தீபோத்காத்திலிருந்து அல்மோன் திப்லத்தாயிம் (எண் 21:13; எண் 33:46)

8. அல்மோன் திப்லத்தாயிமிலிருந்து நேபோவிற்கு முன்பாக உள்ள அபாரீம் மலை (எண் 21:13-15; எண் 33:48)

9. பேயோர் (எண் 21:16-18)

10. பேயோரிலிருந்து மாத்தனா (எண் 21:18)

11. மாத்தனாவிலிருந்து நகாலியேல் (எண் 21:19)

12. நகாலியேலிருந்து பாமோத் (எண் 21:19)

13. பாமோத்திலிருந்து பிஸ்காவின் உச்சி (எண் 21:20)

சீகோன்
எண் 21:21-30

எண் 21:21. அப்பொழுது இஸ்ரவேலர் எமோரியரின் ராஜாவாகிய சீகோனிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி:

எண் 21:22. உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு கொடுக்க வேண்டும்; நாங்கள் வயல்களிலும், திராட்சத்தோட்டங்களிலும் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும் ராஜபாதையில் நடந்துபோவோம் என்று சொல்லச்சொன்னார்கள்.

எண் 21:23. சீகோன் தன் எல்லைவழியாய்க் கடந்துபோக இஸ்ரவேலுக்கு உத்தரவு கொடாமல், தன் ஜனங்களெல்லாரையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேலருக்கு விரோதமாக வனாந்தரத்திலே புறப்பட்டு, யாகாசுக்கு வந்து, இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினான்.

எண் 21:24. இஸ்ரவேலர் அவனைப் பட்டயக்கருக்கினால் வெட்டி, அர்னோன் தொடங்கி அம்மோன் புத்திரரின் தேசத்தைச்சார்ந்த யாப்போக்குவரைக்குமுள்ள அவனுடைய தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள்; அம்மோன் புத்திரரின் எல்லை அரணிப்பானதாயிருந்தது.

எண் 21:25. இஸ்ரவேலர் அந்தப் பட்டணங்கள் யாவையும் பிடித்து, எஸ்போனிலும் அதைச் சார்ந்த எல்லாக் கிராமங்களிலும் எமோரியருடைய எல்லாப் பட்டணங்களிலும் குடியிருந்தார்கள்.

எண் 21:26. எஸ்போனானது எமோரியரின் ராஜாவாகிய சீகோனின் பட்டணமாயிருந்தது; அவன் மோவாபியரின் முந்தின ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அர்னோன் வரைக்கும் இருந்த அவன் தேசத்தையெல்லாம் அவன் கையிலிருந்து பறித்துக்கொண்டான்.

எண் 21:27. அதினாலே கவிகட்டுகிறவர்கள்: எஸ்போனுக்கு வாருங்கள்; சீகோனின் பட்டணம் ஸ்திரமாய்க் கட்டப்படுவதாக.

எண் 21:28. எஸ்போனிலிருந்து அக்கினியும் சீகோனுடைய பட்டணத்திலிருந்து ஜுவாலையும் புறப்பட்டு, மோவாபுடைய ஆர் என்னும் ஊரையும், அர்னோனுடைய மேடுகளிலுள்ள ஆண்டவமார்களையும் பட்சித்தது.

எண் 21:29. ஐயோ, மோவாபே, கேமோஷ் தேவனின் ஜனமே, நீ நாசமானாய்; தப்பி ஓடின தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்குச் சிறைகளாக ஒப்புக்கொடுத்தான்.

எண் 21:30. அவர்களை எய்துபோட்டோம்; எஸ்போன் பட்டணம் தீபோன் ஊர்வரைக்கும் நாசமாயிற்று; மேதேபாவுக்குச் சமீபமான நோப்பா பட்டணபரியந்தம் அவர்களைப் பாழாக்கினோம் என்று பாடினார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு சீகோன், ஓக் ஆகியோர்மீதும் ஜெயம் கிடைக்கிறது. இது சம்பந்தமான விவரங்கள் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலர் எமோரியரின் ராஜாவாகிய சீகோனிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்புகிறார்கள் (எண் 21:21). அவர்கள் மூலமாக சீகோனுக்கு சமாதான செய்தியை சொல்லியனுப்புகிறார்கள். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சீகோனிடத்திலிருந்து சமாதானமான பிரதியுத்தரம் வரவில்லை.

இஸ்ரவேலர் எமோரியரின் ராஜாவாகிய சீகோனிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி, "உமது தேசத்தின் வழியாய்க் கடந்துபோகும்படி உத்தரவு கொடுக்க வேண்டும்; நாங்கள் வயல்களிலும், திராட்சத்தோட்டங்களிலும் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், உமது எல்லையைக் கடந்துபோகுமட்டும் ராஜபாதையில் நடந்துபோவோம்" என்று சொல்லச்சொல்லுகிறார்கள் (எண் 21:21,22).

இஸ்ரவேலர் எமோரியரின் ராஜாவாகிய சீகோனிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்புகிறார்கள். அவனுடைய தேசத்தின் வழியாகக் கடந்து போவதற்கு அனுமதி கேட்கிறார்கள். (எண் 21:21-22). ஆனால் சீகோனோ தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறான், அவன் தன் எல்லை வழியாகக் கடந்துபோக, இஸ்ரவேல் புத்திருக்கு உத்தரவு கொடுக்கவில்லை.

சீகோன் ஏதோமியரைப் பற்றியும், மோவாபியரைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கலாம். இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்கள் பாதை கொடுக்க மறுத்தபோது, இஸ்ரவேலர்கள் அவர்களோடு யுத்தம் பண்ணுவதற்குப் பதிலாக வேறு பாதை வழியாக விலகிச் சென்றார்கள். அவர்கள் அதுபோலவே தனக்கும் செய்வார்கள், தன்னுடைய தேசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்று நினைத்து, சீகோன் தன் ஜனங்களையெல்லாம் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேலருக்கு விரோதமாக வருகிறான்.

ஆனால் இந்த முறை சீகோனோடு யுத்தம் பண்ண, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அனுமதிக்கிறார். இஸ்ரவேலர்கள் சீகோனையும், அவனுடைய சேனையையும் ஜெயிக்கிறார்கள் (எண் 21:23-32).

சீகோன் தன் எல்லைவழியாய்க் கடந்துபோக இஸ்ரவேலுக்கு உத்தரவு கொடுக்கவில்லை. அவன் தன் ஜனங்களெல்லாரையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேலருக்கு விரோதமாக வனாந்தரத்திலே புறப்பட்டு, யாகாசுக்கு வந்து, இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணுகிறான் (எண் 21:23). இந்த யுத்தத்தில் சீகோனுக்கு தோல்வி உண்டாயிற்று.

இஸ்ரவேலர் சீகோனைப் பட்டயக்கருக்கினால் வெட்டுகிறார்கள். அவர்கள் அர்னோன் தொடங்கி அம்மோன் புத்திரரின் தேசத்தைச்சார்ந்த யாப்போக்கு வரைக்குமுள்ள அவனுடைய தேசத்தைக் கட்டிக்கொள்கிறார்கள்; அம்மோன் புத்திரரின் எல்லை அரணிப்பானதாயிருக்கிறது (எண் 21:24).

சீகோனின் தேசம் மலைப் பகுதி முழுவதையும், யோர்தானின் கிழக்கு பகுதியிலுள்ள சமனான பகுதி முழுவதையும் கொண்டிருக்கிறது. வடக்கில் யாப்போக்கு நதியும், தெற்கில் அர்னோன் நதியும் அதன் எல்லையாய் இருக்கிறது. சீகோன் மோவாபிடமிருந்து, இந்தத் தேசத்தைப் பெற்றிருந்தான். (எண் 21:28).

எஸ்போன் சீகோனின் தலைநகரம். யோர்தான் நதி சவக்கடலில் கலக்கும் இடத்தில் இந்தப் பட்டணம் அமைந்திருக்கிறது.

இஸ்ரவேலர் அந்தப் பட்டணங்கள் யாவையும் பிடித்து, எஸ்போனிலும் அதைச் சார்ந்த எல்லாக் கிராமங்களிலும் எமோரியருடைய எல்லாப் பட்டணங்களிலும் குடியிருக்கிறார்கள் (எண் 21:25).

இஸ்ரவேல் புத்திரர் சீகோனை பட்டயக்கருக்கினால் வெட்டியதையும், அவனுடைய தேசத்தை கட்டிக்கொண்டதையும் வேதபண்டிதர்கள் நியாயப்படுத்துகிறார்கள். எமோரியரே இஸ்ரவேல் புத்திரருக்கு கோபத்தை உண்டுபண்ணினவர்கள். அவர்களே இஸ்ரவேலரோடு யுத்தம்பண்ண முதலாவதாக புறப்பட்டு வந்தவர்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எமோரியருடைய தேசத்தைக் கட்டிக்கொண்டாலும், அந்த தேசம் ஆரம்பத்தில் மோவாபியருக்கு உரியதாயிருந்தது.

எஸ்போனானது எமோரியரின் ராஜாவாகிய சீகோனின் பட்டணமாயிருந்தது; அவன் மோவாபியரின் முந்தின ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அர்னோன் வரைக்கும் இருந்த அவன் தேசத்தையெல்லாம் அவன் கையிலிருந்து பறித்துக்கொண்டான் (எண் 21:26).

மோவாப் தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தேசத்தை இஸ்ரவேல் புத்திரர் கட்டிக்கொள்வதற்கு முன்பாக, எமோரியரின் ராஜா, அந்த தேசத்தை மோவாபியரிடமிருந்து பறித்துக்கொண்டான். இஸ்ரவேல் புத்திரர் எமோரியரின் கையிலிருந்து மோவாபியரின் தேசத்தை கட்டிக்கொள்ளும் வரையிலும், அந்த தேசம் எமோரியரின் ராஜாவாகிய சீகோனின் பாதுகாப்பிலிருக்கிறது. இப்போது இஸ்ரவேல் புத்திரர் மோவாபியரின் தேசத்தை, சீகோனிடமிருந்து கட்டிக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சீகோனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி அர்னோன் தொடங்கி அம்மோன் புத்திரரின் தேசத்தைச்சார்ந்த யாப்போக்கு வரைக்குமுள்ள அவனுடைய தேசத்தைக் கட்டிக்கொள்கிறார்கள் (எண் 21:24). இஸ்ரவேல் புத்திரர் இவ்வளவு விஸ்தாரமான தேசத்தை ஏன் கட்டிக்கொண்டார்கள் என்பதற்கான காரணம் தெரியவில்லை. தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக ஒவ்வொரு காரியமும் நடைபெறுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கட்டிக்கொண்டது எமோரியரின் தேசம் அல்ல என்றும், அந்த தேசம் மோவாபியரின் தேசம் என்றும், மோவாபியரின் தேசத்தை எமோரியரின் ராஜாவாகிய சீகோன் அவர்களிடத்திலிருந்து பறித்துக்கொண்டான் என்றும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாக இஸ்ரவேல் தேசத்தில் இந்த சம்பவம் பற்றி நாட்டுப்புற பாடல்களும் பாடப்படுகிறது.

அதினாலே கவிகட்டுகிறவர்கள்: "எஸ்போனுக்கு வாருங்கள்; சீகோனின் பட்டணம் ஸ்திரமாய்க் கட்டப்படுவதாக. எஸ்போனிலிருந்து அக்கினியும் சீகோனுடைய பட்டணத்திலிருந்து ஜுவாலையும் புறப்பட்டு, மோவாபுடைய ஆர் என்னும் ஊரையும், அர்னோனுடைய மேடுகளிலுள்ள ஆண்டவமார்களையும் பட்சித்தது" (எண் 21:27,28) என்றும்,

"ஐயோ, மோவாபே, கேமோஷ் தேவனின் ஜனமே, நீ நாசமானாய்; தப்பி ஓடின தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்குச் சிறைகளாக ஒப்புக்கொடுத்தான். அவர்களை எய்துபோட்டோம்; எஸ்போன் பட்டணம் தீபோன் ஊர்வரைக்கும் நாசமாயிற்று; மேதேபாவுக்குச் சமீபமான நோப்பா பட்டணபரியந்தம் அவர்களைப் பாழாக்கினோம்" (எண் 21:29,30) என்றும் பாடுகிறார்கள்.

"சீகோனுடைய பட்டணத்திலிருந்து ஜுவாலையும் புறப்பட்டது" என்னும் வாக்கியம் சீகோன் மோவாபை ஜெயித்ததை குறிப்பிடுகிறது (எண் 21:26).

"கேமோஷ்" மோவாபியரின் தேசிய தெய்வம். இந்தத் தெய்வம், மோவாபியரைப் பாதுகாக்காமல், அவர்களை விரோதிகளின் கைகளில் ஒப்புக் கொடுத்துவிடுகிறது.

"அவர்களை எய்துபோட்டோம்" என்பது இஸ்ரவேல் புத்திரர் சீகோனை ஜெயித்ததை குறிப்பிடுகிறது. சீகோன் வல்லமையுள்ள தேசம். இஸ்ரவேல் புத்திரர் இவர்களை ஜெயித்ததினால் சுற்றிலுமுள்ள எல்லா தேசத்தாரும் இதைக் கேள்விப்பட்டு, இஸ்ரவேல் ஜனங்களுக்கும், இஸ்ரவேலின் தேவனுக்கும் எதிராக எழும்பவில்லை.

இந்தப் பாடலில் ஒரு சில பட்டணங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை சீகோனின் பட்டணங்கள் என்று சொல்லப்பட்டாலும், ஆரம்பத்தில் இவை மோவாபியரின் பட்டணங்களாகவே இருந்தது. சீகோன் இந்தப் பட்டணங்களை மோவாபியரின் கையிலிருந்து பறித்துக்கொண்டான்.

சீகோனுக்கும் மோவாபியருக்கும் யுத்தம் நடைபெற்ற போது மோவாபியர் முற்றிலுமாய் நாசமானார்கள். கேமோஷ் என்பது மோவாபியரின் தெய்வம். எமோரியரின் ராஜாவாகிய சீகோன் கேமோஷையும் அழித்துப்போட்டான். கேமோஷ் ஒரு விக்கிரகம். சீகோனின் கையிலிருந்து மோவாபியரை பாதுகாக்க கேமோஷால் முடியவில்லை. அந்த விக்கிரகத்திற்கு வல்லமையில்லை.

பாசான் ராஜாவாகிய ஓக்
எண் 21:31-35

எண் 21:31. இஸ்ரவேலர் இப்படியே எமோரியரின் தேசத்தில் குடியிருந்தார்கள்.

எண் 21:32. பின்பு, மோசே யாசேர் பட்டணத்துக்கு வேவு பார்க்கிறவர்களை அனுப்பினான்; அவர்கள் அதைச்சேர்ந்த கிராமங்களைக் கட்டிக்கொண்டு, அங்கே இருந்த எமோரியரைத் துரத்திவிட்டார்கள்.

எண் 21:33. பின்பு பாசானுக்குப் போகிற வழியாய்த் திரும்பிவிட்டார்கள்; அப்பொழுது பாசான் ராஜாவாகிய ஓக் என்பவன் தன் சமஸ்த ஜனங்களோடும் அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ணும்படிக்கு, எத்ரேயுக்குப் புறப்பட்டு வந்தான்.

எண் 21:34. கர்த்தர் மோசேயை நோக்கி: அவனுக்குப் பயப்படவேண்டாம்; அவனையும் அவன் ஜனங்கள் எல்லாரையும், அவன் தேசத்தையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; எஸ்போனிலே வாசமாயிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்கு நீ செய்தபடியே இவனுக்கும் செய்வாய் என்றார்.

எண் 21:35. அப்படியே ஒருவரும் உயிருடன் மீதியாயிராதபடிக்கு அவனையும், அவன் குமாரரையும், அவனுடைய சகல ஜனங்களையும் வெட்டிப்போட்டு, அவன் தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள்.

இஸ்ரவேலர் இப்படியே எமோரியரின் தேசத்தில் குடியிருக்கிறார்கள். பின்பு, மோசே யாசேர் பட்டணத்துக்கு வேவு பார்க்கிறவர்களை அனுப்புகிறார்; அவர்கள் அதைச்சேர்ந்த கிராமங்களைக் கட்டிக்கொண்டு, அங்கே இருந்த எமோரியரைத் துரத்திவிடுகிறார்கள் (எண் 21:31,32).

யாசேர் என்னும் பட்டணம் எஸ்போனுக்கு வடக்கில் 10மைல் தூரத்தில் அமைந்திருக்கிறது. இந்தப் பட்டணமும், தற்போதுள்ள சீயேரும் ஒன்றாக இருக்கலாம். இஸ்ரவேல் புத்திரருக்கு இங்கு ஏற்பட்ட வெற்றி, சீகோனுடைய எமோரிய தேசத்தை முழுவதுமாக வெற்றி பெற்று முடிவுற்றது. இஸ்ரவேல் புத்திரர்கள் மற்ற யுத்தங்களுக்கு ஆயத்தமாகிறார்கள். ரூபன், காத் கோத்திரத்தார்களை விளைச்சல் நிலங்களில் குடியேற்றுவதற்கு ஆவன செய்கிறார்கள் (எண் 32).

பாசான் தேசம் எமோரியரின் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எமோரியரின் ராஜாவாகிய சீகோனை பட்டயக்கருக்கினால் வெட்டியதையும், அவனுடைய தேசத்தைக் கட்டிக்கொண்டதையும் பாசானின் ராஜாவாகிய ஓக் கவனித்துப் பார்க்கிறான். ஓக் ஞானமில்லாதவன். அவனுக்கு யுத்த தந்திரம் தெரியவில்லை. இஸ்ரவேல் புத்திரர் எமோரியரை நிர்மூலம் பண்ணியதைப் பார்த்து, பாசானின் ராஜாவாகிய ஓக் இஸ்ரவேல் புத்திரரோடு சமாதான உடன்படிக்கை செய்திருக்கவேண்டும்.

ஆனால் பாசானின் ராஜாவாகிய ஓகோ, இஸ்ரவேல் புத்திரரோடு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளாமல், அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறான் (எண் 21:33).

பாசான் ராஜாவாகிய ஓக் 60 பட்டணங்களில் ஆட்சி புரிகிறான். (எண் 21:33-35; உபா 3:1-12). எத்ரேயில் சீகோன் தோல்வியுற்றவுடன், ஓகும் தோல்வியுறுகிறான் (எண் 21:33; யோசு 12:4). ஓகும், அவனுடைய ஜனத்தாரும் முழுவதுமாகச் சங்காரம் பண்ணப்படுகிறார்கள். (உபா 3:6). இராட்சத சந்ததியாரில் இவனுடைய பெயரே கடைசியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (உபா 3:11).

வேவுகாரர்கள் இவர்களைப் பார்த்து, இவர்களுடைய பார்வையில் தாங்கள் வெட்டுக்கிளிகளைப் போன்று இருப்பதாகக் கூறினார்கள். (எண் 13:22-33). பாசானின் ராஜாவாகிய ஓக்மீது தங்களுக்குக் கிடைத்த வெற்றியை இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களுடைய வரலாற்றின் பல பகுதிகளில் குறிப்பிட்டிருக்கிறார்கள். (உபா 1:4; உபா 4:47; உபா 31:4; யோசு 2:10; யோசு 9:10; யோசு 13:12,30; சங் 135:11; சங் 136:20). இவனுடைய தேசம் ரூபன் கோத்திரத்தாருக்கும், காத் கோத்திரத்தாருக்கும், மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்கும் பிரித்துக் கொடுக்கப் படுகிறது. (எண் 32:33; உபா 3:12-13).

பாசானின் ராஜாவே யுத்தத்தை ஆரம்பிக்கிறான். பாசான் தேசம் செழிப்பான தேசம். அது ஐசுவரியம் மிகுந்த தேசம். பாசானின் கேதுரு மரங்கள் மிகவும் பிரசித்திப்பெற்றவை. அதுபோலவே பாசானின் ஆடுகளும், எருதுகளும் அதிகம் பிரசித்திப்பெற்றவை.

"பசுவின் வெண்ணெயையும், ஆட்டின் பாலையும், பாசானில் மேயும் ஆட்டுக்குட்டிகள் ஆட்டுக்கடாக்கள் வெள்ளாட்டுக்கடாக்கள் இவைகளுடைய கொழுப்பையும், கொழுமையான கோதுமையையும், இரத்தம்போன்ற சுயமான திராட்சரசத்தையும் சாப்பிட்டாய்" (உபா 32:14).

பாசானின் ராஜாவாகிய ஓக் என்பவன் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்படிக்கு புறப்பட்டு வருகிறான். அவனோடுகூட அவனுடைய சமஸ்த ஜனங்களும் புறப்பட்டு வருகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் பாசான் ராஜாவாகிய ஓகை பார்த்து பயப்படக்கூடாது. அவனுடைய சேனையைப் பார்த்து மனம் தளர்ந்துவிடக்கூடாது. அவர்கள் பார்வைக்கு இரட்சதரைப்போல இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களால் கர்த்தருடைய வல்லமைக்கு முன்பாக எதிர்த்து நிற்கமுடியாது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "பாசான் ராஜாவாகிய ஓகுக்குப் பயப்படவேண்டாம்; அவனையும் அவன் ஜனங்கள் எல்லாரையும், அவன் தேசத்தையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; எஸ்போனிலே வாசமாயிருந்த எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்கு நீ செய்தபடியே இவனுக்கும் செய்வாய்" (எண் 21:34) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். பாசானின் ஜனங்களில் ஒருவரும் உயிருடன் மீதியாயிராதபடிக்கு, இஸ்ரவேல் புத்திரர் ஓகையும், அவன் குமாரரையும், அவனுடைய சகல ஜனங்களையும் வெட்டிப்போட்டு, அவன் தேசத்தைக் கட்டிக்கொள்கிறார்கள் (எண் 21:35).

இந்த வசனத்தில் "அவன் குமாரர்" என்னும் வாக்கியம் ஓகின் குமாரரைக் குறிக்கும். இது இராட்சதருக்குப் பிள்ளைகளும் உண்டு என்பதைக் குறிக்கும் வாக்கியமாகும் (எண் 13:33; 2சாமு 21:16-22; 1நாளா 20:4-8).

பாசான் தேசம் யோர்தானுக்கு இக்கரையிலிருக்கிறது. பிற்காலத்தில் இந்த தேசம் இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தாருக்கு சுதந்தரமாயிற்று.

22 அதிகாரம்

இந்த அதிகாரத்திலிருந்து பாலாகையும் பிலேயாமையும் பற்றிய சரித்திர சம்பவம் ஆரம்பமாகிறது. அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்கு முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி தோல்வியடைகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நீதியை அறிந்திருக்கவேண்டும். அதற்காக அவர்கள் மோவாபின் ராஜாவாகிய பாலாக் பிலேயாமை விசாரித்ததையும், பேயோரின் குமாரனாகிய பிலேயாம் பாலாகுக்கு பிரதியுத்தரம் சொன்னதையும் நினைத்துக்கொள்ளவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என் ஜனமே, மோவாபின் ராஜாவாகிய பாலாக் பண்ணின யோசனை இன்னதென்றும், பேயோரின் குமாரனான பிலேயாம் அவனுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னது இன்னதென்றும், சித்தீம் தொடங்கி கில்கால்மட்டும் நடந்தது இன்னதென்றும், நீ கர்த்தருடைய நீதிகளை அறிந்து கொள்ளும்படி நினைத்துக்கொள்" (மீகா 6:5).

பாலாக் இஸ்ரவேல் புத்திரரின் நிமித்தம் மிகவும் கலக்கமடைகிறான். அவன் இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்கு சதிஆலோசனை பண்ணுகிறான் (எண் 22:1-4). இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்காக பாலாக் பிலேயாமை அழைத்தனுப்புகிறான். பாலாகின் முதல் முயற்சி தோல்வியடைகிறது (எண் 22:5-14).

பாலாக் இரண்டாம் முறையும் பிலேயாமை அழைத்தனுப்ப தன் பிரபுக்களை அனுப்புகிறான். இந்த முறை பாலாகின் முயற்சி வெற்றி பெறுகிறது. பிலேயாம் பாலாகைப் பார்க்க புறப்பட்டு வருகிறான் (எண் 22:15-21).

பிலேயாம் வரும் வழியில் அவனுக்கு தடையும் எதிர்ப்பும் ஏற்படுகிறது (எண் 22:22-35). பாலாகுக்கும் பிலேயாமுக்கும் இடையே நடைபெறும் சம்பாஷணை (எண் 22:36-41).

பாலாகும் பிலேயாமும்
எண் 22:1-14

எண் 22:1. பின்பு இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணி, எரிகோவின் கிட்ட இருக்கும் யோர்தானுக்கு இக்கரையிலே மோவாபின் சமனான வெளிகளில் பாளயமிறங்கினார்கள்.

எண் 22:2. இஸ்ரவேலர் எமோரியருக்குச் செய்த யாவையும் சிப்போரின் குமாரனாகிய பாலாக் கண்டான்.

எண் 22:3. ஜனங்கள் ஏராளமாயிருந்தபடியினால், மோவாப் மிகவும் பயந்து, இஸ்ரவேல் புத்திரரினிமித்தம் கலக்கமடைந்து,

எண் 22:4. மீதியானரின் மூப்பரை நோக்கி: மாடு வெளியின் புல்லை மேய்கிறதுபோல, இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்துபோடும் என்றான். அக்காலத்திலே சிப்போரின் குமாரனாகிய பாலாக் மோவாபியருக்கு ராஜாவாயிருந்தான்.

எண் 22:5. அவன் பேயோரின் குமாரனாகிய பிலேயாமை அழைத்துவரும்படி, தன் சந்ததியாருடைய தேசத்தில் நதியருகேயுள்ள பெத்தூருக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: எகிப்திலிருந்து ஒரு ஜனக்கூட்டம் வந்திருக்கிறது; அவர்கள் பூமியின் விசாலத்தை மூடி, எனக்கு எதிரே இறங்கியிருக்கிறார்கள்.

எண் 22:6. அவர்கள் என்னிலும் பலவான்கள்; ஆகிலும், நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன்; ஆதலால், நீர் வந்து, எனக்காக அந்த ஜனத்தைச் சபிக்கவேண்டும்; அப்பொழுது ஒருவேளை நான் அவர்களை முறிய அடித்து, அவர்களை இத்தேசத்திலிருந்து துரத்திவிடலாம் என்று சொல்லச்சொன்னான்.

எண் 22:7. அப்படியே மோவாபின் மூப்பரும் மீதியானின் மூப்பரும் குறிசொல்லுதலுக்குரிய கூலியைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டு, பிலேயாமிடத்தில் போய், பாலாகின் வார்த்தைகளை அவனுக்குச் சொன்னார்கள்.

எண் 22:8. அவன் அவர்களை நோக்கி: இராத்திரிக்கு இங்கே தங்கியிருங்கள்; கர்த்தர் எனக்குச் சொல்லுகிறபடியே உங்களுக்கு உத்தரவு கொடுப்பேன் என்றான்; அப்படியே மோவாபின் பிரபுக்கள் பிலேயாமிடத்தில் தங்கினார்கள்.

எண் 22:9. தேவன் பிலேயாமிடத்தில் வந்து: உன்னிடத்திலிருக்கிற இந்த மனிதர் யார் என்றார்.

எண் 22:10. பிலேயாம் தேவனை நோக்கி: சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்னும் மோவாபின் ராஜா அவர்களை என்னிடத்துக்கு அனுப்பி.

எண் 22:11. பூமியின் விசாலத்தை மூடுகிற ஒரு ஜனக்கூட்டம் எகிப்திலிருந்து வந்திருக்கிறது; ஆகையால், நீ வந்து எனக்காக அவர்களைச் சபிக்கவேண்டும்; அப்பொழுது நான் அவர்களோடே யுத்தம் பண்ணி, ஒருவேளை அவர்களைத் துரத்திவிடலாம் என்று சொல்லச் சொன்னான் என்றான்.

எண் 22:12. அதற்குக் தேவன் பிலேயாமை நோக்கி: நீ அவர்களோடே போகவேண்டாம்; அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம்; அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார்.

எண் 22:13. பிலேயாம் காலமே எழுந்து, பாலாகின் பிரபுக்களை நோக்கி: நீங்கள் உங்கள் தேசத்துக்குப் போய்விடுங்கள்; நான் உங்களோடேகூட வருகிறதற்குக் கர்த்தர் எனக்கு உத்தரவு கொடுக்கமாட்டோம் என்கிறார் என்று சொன்னான்.

எண் 22:14. அப்படியே மோவாபியருடைய பிரபுக்கள் எழுந்து, பாலாகினிடத்தில் போய்: பிலேயாம் எங்களோடே வரமாட்டேன் என்று சொன்னான் என்றார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே சுற்றி அலையும் பிரயாணம் முடிவு பெறுகிறது. அவர்கள் பள்ளத்தாக்கிலுள்ள மோவாபின் வெளியிலிருக்கிற பாமோத்திலிருந்து எஷிமோனை நோக்கும் பிஸ்காவின் உச்சிக்குப்போகிறார்கள் (எண் 21:20).

பின்பு இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணி, எரிகோவின் கிட்ட இருக்கும் யோர்தானுக்கு இக்கரையிலே மோவாபின் சமனான வெளிகளில் பாளயமிறங்குகிறார்கள் (எண் 22:1).

இந்த வசனத்தில் "பின்பு" என்னும் வார்த்தைக்கு எமோரியரின் ராஜாவாகிய சீகோனை ஜெயித்த பின்பு என்று பொருள். (எண் 22:2). இஸ்ரவேல் புத்திரர்கள் அர்னோன் நதியின் மேற்கு பகுதியிலுள்ள எல்லா நிலத்தையும் சுதந்தரித்துக் கொள்கிறார்கள். அர்னோன் நதி மோவாபின் வடக்கு எல்லையாகும். இப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் யோர்தானின் கிழக்கு பகுதியில் எரிகோவிற்கு எதிராகப் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள் (யோசு 2:1-6:27).

உபாகமம் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகள், இஸ்ரவேல் புத்திரருக்கு இந்த இடத்தில் வைத்து கூறப்பட்டு எழுதப்பட்டது. சீகோன், ஒக் ஆகியோரை ஜெயிப்பதற்கும், எரிகோவை ஜெயிப்பதற்கும் இடையில் உபாகமம் புஸ்தகம் எழுதப்பட்டது. (யோசு 2:1-6:27). பிலேயாமைப் பற்றிய காரியங்களும் எண் 22:1-36:13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளும், உபாகமம் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளும் இந்த இடத்தில் நடைபெற்றன.

இஸ்ரவேல் புத்திரர் இந்த சமவெளியில் நீண்டகாலம் தங்கியிருக்கிறார்கள். மோசே மரித்துப்போன பின்பு, இஸ்ரவேல் ஜனத்தார் யோசுவாவினுடைய தலைமையின்கீழ் யோர்தான் நதியை கடக்கிறார்கள். அதுவரையிலும் அவர்கள் யோர்தானுக்கு இக்கரையிலே, மோவாபின் சமனான வெளிகளில் பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

இஸ்ரவேலர் எமோரியருக்குச் செய்த யாவையும் சிப்போரின் குமாரனாகிய பாலாக் காண்கிறான். ஜனங்கள் ஏராளமாயிருந்தபடியினால், மோவாப் மிகவும் பயந்து, இஸ்ரவேல் புத்திரரினிமித்தம் கலக்கமடைகிறான் (எண் 22:2,3).

இஸ்ரவேல் புத்திரர்கள் மற்ற ராஜாக்களை எளிதாக ஜெயித்து விடுகிறார்கள். இதைப் பார்த்த பாலாகிற்கு மிகுந்த பயமும், கலக்கமும் உண்டாயிற்று. பிலேயாமை வைத்து, இஸ்ரவேல் புத்திரரைச் சபிக்க வேண்டுமென்பது பாலாகின் திட்டம். அவனுடைய திட்டம் தோல்வியடைகிறது. ஆனாலும், இஸ்ரவேலருடைய வல்லமையின் இரகசியத்தைப் பாலாக் அறிந்துகொண்டு, அவர்களைப் பலவீனப்படுத்தி விடுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர்கள் பாவத்தில் விழுவதற்குப் பாலாக் பலவிதமான தந்திரமான காரியங்களைச் செய்கிறான். இதனால் பாவம் செய்த இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தரே சபித்து விடுகிறான். எண் 25:1-9 ஆகிய வசனங்களில் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வாதையில் மட்டும் 24,000 இஸ்ரவேல் புத்திரர்கள் மரித்துப் போகிறார்கள்.

பாலாக் மீதியானரின் மூப்பரை நோக்கி, "மாடு வெளியின் புல்லை மேய்கிறதுபோல, இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்துபோடும்" (எண் 22:4) என்று சொல்லுகிறான். அக்காலத்திலே சிப்போரின் குமாரனாகிய பாலாக் மோவாபியருக்கு ராஜாவாயிருக்கிறான்.

அடுத்து வரும் நான்கு அதிகாரங்களில் மோவாப், மீதியான், பாலாக், பிலேயாம் ஆகியோர் பிரபல்யமானவர்கள் (எண் 22:1-25:18) இவர்களைப் பற்றி 116 தடவைகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மோவாப் லோத்தின் குமாரன். (ஆதி 19:37) மீதியான் ஆபிரகாமின் குமாரன். (ஆதி 25:2). பாலாக் ஒரு மோவாபியன் (எண் 22:4) பிலேயாம் ஒரு ஏதோமியன். ஏதோமியர் ஈசாக்கின் குமாரனாகிய ஏசாவின் சந்ததியார். (ஆதி 36:31-32).

ஆபிரகாமும் லோத்தும் பூர்வகாலத்து சிநேகிதர்கள். மோவாபியர் லோத்தின் சந்ததியை சேர்ந்தவர்கள். ஆனால் இக்காலத்தில் மோவாபியர் இஸ்ரவேல் புத்திரரை பகைக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தார்மீது சந்தேகப்பட்டு, அவர்களை அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறார்கள்.

மோவாபியர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக துர்ச்செய்தி பரப்புகிறார்கள். அவர்கள் மோவாபியரையும், மீதியானியரையும் அழித்துப்போடுவார்கள் என்று மோவாபியருக்கு ராஜாவாகியிருக்கிற பாலாக் மீதியானரின் மூப்பருக்கு சொல்லுகிறான்.

மோவாபியருக்கும், மீதியனருக்கும் இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து பயமுண்டாயிற்று. தங்களுடைய பயத்தை இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு, தங்களுடைய பொதுவான பாதுகாப்புக்கு திட்டமிடுகிறார்கள்.

மோவாபியரும் மீதியானரும் இஸ்ரவேல் புத்திரரை எதிர்க்க நினைப்பதற்கு பதிலாக, அவர்களோடு சநேகமாயிருக்க நினைக்கவேண்டும். இவ்விரண்டு ஜாதியாரும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உதவி செய்ய முன்வரவேண்டும்.

மோவாபியரின் முற்பிதாவாகிய லோத்துக்கு, இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாவாகிய ஆபிரகாம் ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். ஆபிரகாமும் லோத்தும் கர்த்தரையே ஆராதித்தார்கள். ஆனால் லோத்தின் சந்ததியார் இப்போது கர்த்தரை விட்டு வழிவிலகி, விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள்.

லோத்தின் சந்ததியாரான மோவாபியர் ஆபிரகாமையும், ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தரையும் மறந்துவிட்டு, கர்த்தருடைய ஜனத்தைப் பகைக்கிறார்கள். மோவாபியருக்கு இஸ்ரவேலின் தேவனைப்பற்றித் தெரியும். தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கிறார் என்பதை மோவாபியரின் ராஜாவாகிய பாலாக் நன்றாய் அறிந்திருக்கிறான்.

இஸ்ரவேல் புத்திரரை கர்த்தருடைய நாமத்தினால் சபிக்கவேண்டுமென்று மோவாபின் ராஜா திட்டமிடுகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது ஆசீர்வதிக்கப்பட்ட ஜனமாயிருக்கிறார்கள். அவர்களை சபித்துவிட்டால், அவர்கள் சபிக்கப்பட்ட ஜனமாயிருப்பார்கள். கர்த்தரும் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாயிருப்பார் என்று மோவாபின் ராஜாவாகிய பாலாக் நினைக்கிறான்.

பாலாகுக்கு தன்னுடைய சொந்த வல்லமையின்மீதோ, தன்னுடைய இராணுவத்தினுடைய வல்லமையின்மீதோ நம்பிக்கையில்லை. அவன் தன்னுடைய புத்தியை நம்புகிறான். பாலாகின் புத்தி தாறுமாறாயிருக்கிறது. அவன் மோவாபியரின் பலத்தை நம்பாமல், இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக தான் மேற்கொள்ளும் சதிஆலோசனைகளை நம்புகிறான்.

இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்காக ஒரு தீர்க்கதரிசியையோ அல்லது அவர்களை சபிக்கக்கூடிய ஒரு மனிதனையோ பாலாக் தேடிப்பார்க்கிறான். அந்த தீர்க்கதரிசிக்கு சன்னதம் பார்க்க தெரிந்திருக்கவேண்டும். அவனுக்கு மந்திரம் ஓத அறிந்திருக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரை சபிக்கவேண்டும் என்றும், அவர்கள்மீது சாபங்களை சுமத்தவேண்டும் என்றும் பாலாக் திட்டமிடுகிறான். அவன் தேடிப் பார்க்கிற தீர்க்கதரிசி, இஸ்ரவேல் புத்திரரை சபிக்கவேண்டும். அந்த தீர்க்கதரிசி பாலாகையும் அவனுடைய சேனையையும் ஆசீர்வதிக்கவேண்டும். அதே வேளையில் அந்த தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனத்தாரை சபித்து, அவர்களை பலவீனப்படுத்தவேண்டும். அப்போதுதான் தன்னால் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம் செய்து, அவர்களை மேற்கொள்ள முடியும் என்று பாலாக் நினைக்கிறான்.

மோவாபியர் மத்தியிலே கர்த்தரைக் குறித்த புத்தியும், ஞானமும், அறிவும் தெளிவாகயில்லை. அவர்கள் கர்த்தருடைய வல்லமையைப்பற்றி ஓரளவு கேள்விப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் சர்வஆளுகையுள்ளவர் என்பதையும், அவர் மனுப்புத்திரர் எல்லோரையும் தமது வல்லமையினால் ஆளுகை செய்கிறார் என்பதையும் மோவாபியர் ஓரளவு அறிந்திருக்கிறார்கள்.

முற்பிதாக்களாகிய ஆபிரகாமும் லோத்தும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே ஆராதித்தார்கள். ஆனால் மீதியானர் மத்தியிலும், மோவாபியர் மத்தியிலும் கர்த்தர் மீது உண்மையான பக்தியோ, உண்மையான விசுவாசமோ காணப்படவில்லை. இவர்கள் விக்கிரகங்களை ஆராதித்ததினால், கர்த்தரையும் ஒரு விக்கிரகம் போல பாவிக்கிறார்கள்.

தங்கள் தெய்வங்கள் சத்துருக்களை சபிக்கும் என்னும் நம்பிக்கை புறஜாதியார் மத்தியிலே, இருக்கிறது. சன்னதம் செய்வதினாலும், மந்திரம் ஓதுவதினாலும் இந்த தெய்வங்கள் தங்களுக்கு வேண்டாதவர்களை சபித்துவிடும் என்று மோவாபியர் நம்புகிறார்கள்.

தாங்கள் ஆராதிக்கும் விக்கிரகங்களை போல, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரும், தங்களுடைய விரோதிகளை சபிப்பார் என்று மோவாபியரின் ராஜாவாகிய பாலாக் நம்புகிறான். லோத்தின் சந்ததியார் கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும் விட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள். ஆகையினால் மோவாபியருக்கு கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் எவ்வாறு தொழுதுகொள்ளவேண்டும் என்பது தெரியவில்லை.

மோவாபின் ராஜாவாகிய பாலாக் இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்காக ஒரு தீர்க்கதரிசியை தேடிக்கொண்டிருக்கிறான். அவன் பேயோரின் குமாரனாகிய பிலேயாமைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறான். பிலேயாம் மந்திரம் ஓதுவதையும் பலிகளை செலுத்துவதையும், சன்னதம் பார்ப்பதையும், குறிசொல்லுவதையும் பாலாக் கேள்விப்பட்டிருக்கிறான்.

பேயோரின் குமாரனாகிய பிலேயாமை தன்னிடத்தில் அழைத்து வரவேண்டும் என்றும், அவனுக்கு அதிகமான வெகுமதிகளைக் கொடுத்து, இஸ்ரவேல் புத்திரரை சபிக்கச் சொல்லவேண்டும் என்றும் பாலாக் திட்டமிடுகிறான்.

மோவாபின் ராஜாவாகிய பாலாக் பேயோரின் குமாரனாகிய பிலேயாமை அழைத்துவரும்படி, தன் சந்ததியாருடைய தேசத்தில் நதியருகேயுள்ள பெத்தூருக்கு ஸ்தானாபதிகளை அனுப்புகிறான். பிலேயாம் பாலாகுக்கு அருகாமையிலுள்ள தேசத்தில் வாசம்பண்ணவில்லை. அவன் வெகுதூரத்தில் வாசம்பண்ணுகிறான். ஆபிரகாம் எந்த ஊரிலிருந்து வந்தாரோ அந்த ஊரில் பிலேயாம் இருக்கிறான். லாபான் எந்த தேசத்தில் வாசம் பண்ணினாரோ அந்த தேசத்தில் இப்போது பிலேயாம் வாசம்பண்ணுகிறான்.

பிலேயாம் தூரதேசத்திலிருந்தாலும், அவனை எப்படியாவது தன்னிடத்தில் வரவழைத்து, இஸ்ரவேல் புத்திரரை சபிக்கச் சொல்லவேண்டுமென்று பாலாக் தீர்மானமாயிருக்கிறான். இதற்காக பாலாக் ஒரு சில சதிஆலோசனைகளை மேற்கொள்கிறான்.

முதலாவதாக பாலாக் பிலேயாமை தன் சிநேகிதனாக்குகிறான். அதன் பின்பு அவன் பிலேயாமை தனக்கு தேவனாக்குகிறான். பிலேயாமின் வார்த்தைக்கு அதிக வல்லமையுண்டு என்று பாலாக் அவனிடத்தில் அறிக்கை பண்ணுகிறான். "நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பதை அறிவேன்" என்று பாலாக் பிலேயாமுக்கு சொல்லுகிறான்.

பிலேயாமின் வார்த்தை தேவனுடைய வார்த்தையைப் போன்றது என்றும், பிலேயாம் என்ன சொல்லுகிறானோ அது அப்படியே நிறைவேறும் என்றும் பாலாக் அவனுக்கு சொல்லுகிறான். தன்னுடைய வார்த்தைக்கு இவ்வளவு வல்லமையிருக்கிறது என்பது பிலேயாமுக்கே தெரியாது. ஆனாலும் பாலாக் தன்னுடைய சதித்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, பிலேயாமை அதிகமாய் உயர்த்துகிறான்.

பாலாகின் ஸ்தானாபதிகள் பிலேயாமைப் பார்த்து, "எகிப்திலிருந்து ஒரு ஜனக்கூட்டம் வந்திருக்கிறது; அவர்கள் பூமியின் விசாலத்தை மூடி, எனக்கு எதிரே இறங்கியிருக்கிறார்கள். அவர்கள் என்னிலும் பலவான்கள்; ஆகிலும், நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன்; ஆதலால், நீர் வந்து, எனக்காக அந்த ஜனத்தைச் சபிக்கவேண்டும்; அப்பொழுது ஒருவேளை நான் அவர்களை முறிய அடித்து, அவர்களை இத்தேசத்திலிருந்து துரத்திவிடலாம்" (எண் *22:5,6*) என்று சொல்லச்சொல்லுகிறான்.

பாலாக் "தன் சந்ததியார்" என்று சொல்லும் வாக்கியத்திற்கு ஏதோமிலிருந்து அசீரியாவிற்கு இவனோடு வந்தவர்கள் என்று பொருள் சொல்லலாம். இஸ்ரவேல் புத்திரர்கள் எமோரியரையும், பாசானியரையும் ஜெயித்து, இப்போது மறுபடியும் யுத்தத்திற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.

பிலேயாம் கூறும் தீர்க்கதரிசனம் நிறைவேறும் என்று எல்லா ஜனங்களுக்கும் தெரிந்திருக்கிறது. பாலாக் பிலேயாமின் ஊரிலிருந்து நூற்றுக்கணக்கான மைல் தூரத்தில் இருந்தாலும், அவனுக்கும் இந்தச் செய்தி தெரிந்திருக்கிறது. பிலேயாமின் தந்தை ஏதோமின் ராஜாவாக இருந்திருக்க வேண்டும். (ஆதி *36:31-32*).

பாலாகின் ஆலோசனை பிரகாரம், மோவாபின் மூப்பரும், மீதியானின் மூப்பரும் குறிசொல்லுதலுக்குரிய கூலியைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டு, பிலேயாமிடத்தில் போய், பாலாகின் வார்த்தைகளை அவனுக்குச் சொல்லுகிறார்கள் (எண் *22:7*).

"குறிசொல்லுதலுக்குரிய கூலி" என்பது 2பேதுரு *2:15* ஆவது வசனத்தில் "அநீதத்தின் கூலி" என்று கூறப்பட்டிருக்கிறது. புறஜாதி மார்க்கத்தாருக்குக் குறிசொல்லுதல், அஞ்சனம் பார்த்தல், பிசாசின் கிரியைகள் ஆகியவை மட்டுமே தெரியும். பிலேயாமும் இதுபோன்று, ஏதோ ஒரு வேலையைச் செய்யப் போகிறான் என்று பாலாகின் மூப்பர்கள் நினைத்திருக்கலாம். பிலேயாம் குறிசொல்லுகிற ஆவியினால் இஸ்ரவேலைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கவில்லை. மற்ற தீர்க்கதரிசிகளைப்போலவே, பிலேயாமும் கர்த்தரிடத்திலிருந்து அவருடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டு அதை அப்படியே கூறுகிறான்.

பாலாகின் சேனாபதிகள் தன்னை அழைத்தவுடன் பிலேயாம் அவர்களோடு புறப்பட்டுப்போய்விடவில்லை. பிலேயாம் அவர்களை நோக்கி, "இராத்திரிக்கு இங்கே தங்கியிருங்கள்; கர்த்தர் எனக்குச் சொல்லுகிறபடியே உங்களுக்கு உத்தரவு கொடுப்பேன்" (எண் 22:8) என்று சொல்லுகிறான்; அப்படியே மோவாபின் பிரபுக்கள் பிலேயாமிடத்தில் தங்குகிறார்கள்.

"கர்த்தர் எனக்குச் சொல்லுகிறபடியே உங்களுக்கு உத்தரவு கொடுப்பேன்" என்று பிலேயாம் சொல்லுகிறான். அந்த ராத்திரி வேளையில் கர்த்தர் தனக்குப் பதில் கொடுப்பார் என்று பிலேயாம் நிச்சயமாக நம்புகிறான். அவன் கர்த்தருடைய சமுகத்தில் அடிக்கடி ஜெபம்பண்ணி, அவருடைய வார்த்தையைக் கேட்டிருக்கிறவன். ஆகையினால் கர்த்தர் தன்னோடு பேசுவார் என்பதில் பிலேயாமிற்கு எந்தவித சந்தேகமும் இல்லை. (எண் 22:8-20).

தேவன் இரவு வேளையிலே பிலேயாமிடத்தில் வந்து, "உன்னிடத்திலிருக்கிற இந்த மனிதர் யார்" (எண் 22:9) என்று கேட்கிறார். கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். பிலேயாமைப் பார்க்க வந்திருக்கிற மோவாபின் மூப்பரையும், மீதியானின் மூப்பரையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். கர்த்தர் மோவாபியரின் ராஜாவாகிய பாலாகின் சதிஆலோசனையையும் அறிந்திருக்கிறார். ஆனாலும் கர்த்தர் பிலேயாமிடத்தில் வந்து, அவனிடத்திலிருக்கிற இந்த மனிதர் யார் என்று கேட்கிறார்.

பிலேயாம் தேவனைச் சந்திப்பதற்கு முயற்சி பண்ணும் போதெல்லாம் கர்த்தர் அவனிடத்தில் உடனடியாக வந்துவிடுகிறார். (எண் 22:9, 12,19-20; எண் 23:4-5,15-16; எண் 24:1-4, 15-16).

பிலேயாம் தேவனை நோக்கி, "சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்னும் மோவாபின் ராஜா அவர்களை என்னிடத்துக்கு அனுப்பி. பூமியின் விசாலத்தை மூடுகிற ஒரு ஜனக்கூட்டம் எகிப்திலிருந்து வந்திருக்கிறது; ஆகையால், நீ வந்து எனக்காக அவர்களைச் சபிக்கவேண்டும்; அப்பொழுது நான் அவர்களோடே யுத்தம் பண்ணி, ஒருவேளை அவர்களைத் துரத்தி விடலாம் என்று சொல்லச் சொன்னான்" (எண் 22:10,11) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் தேவனிடம் மட்டுமே பேசுகிறான். அவன் மந்திர சக்திகளினால் குறிசொல்லுகிற ஆவிகளிடமோ அல்லது பிசாசுகளிடமோ பேசவில்லை. 2பேதுரு 2:15-16 ஆகிய வசனங்களில் பிலேயாம் ஒரு தீர்க்கதரிசி என்று அழைக்கப்பட்டிருக்கிறான்.

இஸ்ரவேல் புத்திரரை சபிப்பது கர்த்தருக்கு பிரியமான காரியமல்ல. பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரை சபிக்க வரவேண்டுமென்று பாலாக் தன்னுடைய பிரபுக்களை அனுப்பியிருக்கிறான். கர்த்தரோ பிலேயாமை தடைபண்ணுகிறார். பிலேயாமை தடுப்பதற்காக கர்த்தர் இரவுவேளையிலே அவனிடத்தில் வருகிறார். ஒருவேளை கர்த்தர் பிலேயாமின் சொப்பனத்திலே பேசியிருக்கலாம்.

கர்த்தருக்கு மோவாபின் மூப்பரைப்பற்றியும், மீதியானின் மூப்பரைப்பற்றியும் நன்றாய்த் தெரிந்திருந்தாலும், அதை பிலேயாமின் மூலமாக அறிந்துகொள்ளவேண்டுமென்று சித்தங்கொள்கிறார். பிலேயாமும் கர்த்தரிடத்தில் உண்மையை மறைக்கவில்லை. அவர்கள் தன்னிடத்தில் எதற்காக வந்திருக்கிறார்கள் என்னும் விவரத்தை பிலேயாம் கர்த்தருக்கு சொல்லுகிறான்.

தேவன் பிலேயாமை நோக்கி, "நீ அவர்களோடே போகவேண்டாம்; அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம்;அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" (எண் 22:12) என்று சொல்லுகிறார். பிலேயாம் பாலாகைப் பார்க்க போகக்கூடாது என்பதும், அவன் இஸ்ரவேல் புத்திரரை சபிக்கக்கூடாது என்றும் கர்த்தருடைய தீர்மானமான வார்த்தையாயிருக்கிறது.

பிலேயாம் ஒருவேளை தான் இருக்கும் வீட்டிலிருந்தே, தூரத்தில் பாளயமிறங்கியிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்கு வாய்ப்புள்ளது. பிலேயாமின் வாயிலிருந்து இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமான சாபவார்த்தைகள் வரக்கூடாது என்பதில் கர்த்தர் தீர்மானமாயிருக்கிறார். பிலேயாமுக்கு இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி அதிகமாய்த் தெரியாது. கர்த்தர் அவனுக்கு இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி ஒரே வார்த்தையில் சொல்லுகிறார். "அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" என்பதே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து சொல்லும் வார்த்தையாகும். கர்த்தர் ஆசீர்வதிக்கிறவர்களை எந்த மனுஷனும் சபிக்கக்கூடாது.

பிலேயாம் காலமே எழுந்து, பாலாகின் பிரபுக்களை நோக்கி, "நீங்கள் உங்கள் தேசத்துக்குப் போய்விடுங்கள்; நான் உங்களோடேகூட வருகிறதற்குக் கர்த்தர் எனக்கு உத்தரவு கொடுக்கமாட்டோம் என்கிறார்" (எண் 22:13) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் சொன்ன வார்த்தைக்குப் பிலேயாம் கீழ்ப்படிகிறான். பாலாகின் பிரபுக்களை அவர்களுடைய தேசத்திற்கே திரும்ப அனுப்பிவிடுகிறான். (எண் 22:13-14).

கர்த்தர் தனக்கு சொன்ன எல்லா வார்த்தைகளையும், பிலேயாம் பாலாகின் பிரபுக்களுக்கு அப்படியே சொல்லவில்லை. கர்த்தர் பிலேயாமை நோக்கி, "அந்த ஜனங்களை சபிக்கவும் வேண்டாம், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" என்று சொன்னார். ஆனால் பிலேயாமோ பாலாகின் பிரபுக்களிடத்தில் இந்த வார்த்தைகளை சொல்லவில்லை. அதற்கு பதிலாக, "நான் உங்களோடே வருகிறதற்கு கர்த்தர் எனக்கு உத்தரவு கொடுக்கமாட்டோம் என்கிறார்" என்று மாத்திரமே சொல்லுகிறான்.

பிலேயாம் பாலாகின் பிரபுக்களிடத்தில், "இஸ்ரவேல் ஜனங்களை சபிக்க முடியாது என்றும், அவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றும்" சொல்லியிருக்கவேண்டும். ஆனால் பிலேயாமோ பாலாகின் பிரபுக்களிடத்தில் கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளில் ஒரு பகுதியை மாத்திரமே சொல்லுகிறான்.

மோவாபின் மூப்பரும் மீதியானின் மூப்பரும் குறிசொல்லுதற்குரிய கூலியை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பணத்தை இழப்பதற்கு பிலேயாமுக்கு இஷ்டமில்லை. பாலாக் சொன்னபடி செய்தால் மாத்திரமே, அவனுடைய பிரபுக்கள் பிலேயாமுக்கு கூலி கொடுப்பார்கள். ஆகையினால் பிலேயாம் பாலாகின் பிரபுக்களோடு கூடப்போக ஆசைப்படுகிறான். ஆனாலும் கர்த்தர் தன்னைத் தடுப்பதினால், அவனால் அவர்களோடு கூடப்போகமுடியவில்லை. பிலேயாம் பணத்தின்மீது ஆசைப்பட்டு, கர்த்தர் தனக்கு சொன்ன எல்லா வார்த்தைகளையும் பாலாகின் பிரபுக்களுக்கு சொல்லாமல், அதில் ஒரு பகுதியை மாத்திரம் சொல்லுகிறான்.

அப்படியே மோவாபியருடைய பிரபுக்கள் எழுந்து, பாலாகினிடத்தில் திரும்பப்போகிறார்கள். பிலேயாம் அவர்களோடு போகவில்லை. மோவாபியருடைய பிரபுக்கள் பாலாகை நோக்கி, "பிலேயாம் எங்களோடே வரமாட்டேன் என்று சொன்னான்" (எண் 22:14) என்று சொல்லுகிறார்கள்.

பிலேயாமைப் பற்றி வேதபண்டிதர்கள் பலவிதமாகக் கருத்து கூறுகிறார்கள். இவன் குறிசொல்லுகிறவன் என்றும், தேவன் இவனைத் தற்காலிகமாகப் பயன்படுத்தினார் என்றும் ஒருசிலர் கூறுகிறார்கள். இவன் மெய்யாகவே ஒரு தீர்க்கதரிசியாக இருந்தவன். வெகுமதிக்காக இஸ்ரவேல் புத்திரரை இறுதியாக வஞ்சித்து விடுகிறான். கர்த்தர் இவனுடைய பாவத்தின் நிமித்தமாக இவனை விட்டுப் போய்விடுகிறார். அதன் பின்பு, இவன் குறிசொல்லுகிறவன் ஆனான். அதன் பின்பு பரிசுத்த ஆவியானவர் அவனை ஏவவில்லை.

பிலேயாமைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் செய்திகளின் விவரம் வருமாறு :

1. பிலேயாம் என்னும் கிரேக்க வார்த்தைக்கு "பேரழிவு உண்டாக்குகிறவன்" என்று பொருள். இந்த எபிரெய வார்த்தைக்கு "அந்நியன்" என்று பொருள் (எண் 22:5).

2. பிலேயாம் ஏதோமின் ராஜாவாகிய பேயோரின் குமாரன் (ஆதி 36:31-32)

3. பிலேயாம் பெத்தூரில் வசித்து வந்தான். இது மெசொப்பொதோமியாவிலுள்ள ஐபிராத்து நதிக்கு அப்பால் உள்ளது. (எண் 22:5; எண் 23:7; உபா 23:4).

4. ஜனங்கள்மீது பிலேயாம் ஆசீர்வாதமாகவும், சாபமாகவும் தீர்க்கதரிசனம் கூறுவான் என்று ஜனங்கள் மத்தியில் பெயர் பெற்றிருந்தான். மோவாபின் ராஜாவாகிய பாலாக் இஸ்ரவேலைச் சபிப்பதற்காக பிலேயாமை அழைப்பதற்கு ஆள் அனுப்பினான். (எண் 22:5-6).

5. இரண்டு தேசங்களின் பிரபுக்களும், மூப்பர்களும் வெகுமதிகளோடு பிலேயாமிடம் அனுப்பப்பட்டார்கள். இஸ்ரவேலைச் சபிப்பதற்காக அவர்கள் பிலேயாமை அழைத்தார்கள். (எண் 22:7; 2பேதுரு 2:15).

6. கர்த்தர் சொல்லுகிற படியே, தான் உத்தரவு கொடுக்கப்போவதாக பிலேயாம் மூப்பர்களிடம் அறிவிக்கிறான். (எண் 22:8).

7. இஸ்ரவேலைச் சபிக்க வேண்டாம். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று தேவன் பிலேயாமிடம் கூறுகிறார். (எண் 22:9-12).

8. மோவாபின் மூப்பரோடும், மீதியானின் மூப்பரோடும் போவதற்குக் கர்த்தர் தனக்கு உத்தரவு கொடுக்கவில்லை என்பதைப் பிலேயாம் உண்மையோடு அறிவிக்கிறான். (எண் 22:13-14).

9. பாலாக் மறுபடியும் அவர்களிலும் கனவான்களான அதிக பிரபுக்களைப் பிலேயாமிடம் அனுப்பினான். இஸ்ரவேல் ஜனங்களை வந்து சபித்தால் பாலாக் பிலேயாமை அதிகமாகக் கனம் பண்ணுவதாகவும் வாக்குப் பண்ணுகிறான். (எண் 22:15-17).

10. தேவனாகிய கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது என்று பிலேயாம் பாலாக்கின் பிரபுக்களிடம் திட்டவட்டமாகக் கூறுகிறான். ஆயினும், கர்த்தர் தனக்கு என்ன சொல்லப் போகிறார் என்பதை மறுபடியும் கேட்பதற்கு ஆசைப்படுகிறான். வெகுமதிகளின்மீது பிலேயாமிற்கு ஆசை வந்துவிடுகிறது. (எண் 22:18-19).

11. பிலேயாம் வெகுமதிக்கு ஆசைப்பட்டு, பாலாகினிடத்தில் சென்றுவிடுவான் என்பது கர்த்தருக்குத் தெரியவருகிறது. ஆகையினால், தாம் சொல்லும் வார்த்தையின்படி மாத்திரம், நீ செய்ய வேண்டுமென்று கர்த்தர் பிலேயாமிடம் நிபந்தனையை விதித்து அனுப்பிவிடுகிறார். (எண் 22:20).

12. பாலாகின் பிரபுக்கள் இரவு வேளையில் பிலேயாமைக் கூப்பிட வந்திருந்தால் மட்டுமே, அவன் எழுந்து அவர்களோடேகூட போகவேண்டும். இஸ்ரவேலைச் சபிப்பதற்காக அல்ல. அவர்களை ஆசீர்வதிப்பதற்காகப் போகவேண்டும். (எண் 22:20).

13. பிலேயாம் இதற்காகக் காத்திருக்கவில்லை. பாலாகின் பிரபுக்கள் இரவில் அவனைக் கூப்பிடுவதற்கு முன்பாகவே, பிலேயாம் காலமே எழுந்து, பிரபுக்களோடேகூட போகிறான். அவன் போகிறதினாலே தேவனுக்குக் கோபம் வருகிறது. வழியில் தேவன் பிலேயாமைத் தடுக்கிறார். (எண் 22:21-33).

14. பிலேயாம் இறுதியாகக் கர்த்தருடைய தூதனானவரைக் காண்கிறான். தன்னுடைய பாவத்தை உணர்ந்து, வந்த வழியே திரும்பிப் போய்விடுவதாக வாக்குப்பண்ணுகிறான். ஆனால் கர்த்தருடைய தூதனானவர் மோவாபின் பிரபுக்களோடு போவதற்குப் பிலேயாமை அனுமதிக்கிறார். ஆனாலும், கர்த்தர் பிலேயாமோடு சொல்லும் வார்த்தையை மாத்திரம் அவன் சொல்ல வேண்டும். (எண் 22:34-35).

15. பிலேயாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாக இருக்கிறான். தேவன் தன் வாயிலே அளிக்கும் வார்த்தையை மாத்திரம் சொல்லுவேன் என்று பிலேயாம் பாலாகிடம் உறுதியாகக் கூறுகிறான். (எண் 22:36-38).

16. பாகாலுடைய மேடுகளில் ஏறிப்போய், பிலேயாம் இஸ்ரவேல் ஜனத்தின் கடைசிப் பாளயத்தைப் பார்க்கிறான். (எண் 22:39-41).

17. பிலேயாம் தேவனுக்குப் பலியிடுகிறான். பாகாலுக்குப் பலியிடவில்லை. கர்த்தரிடமிருந்தே வார்த்தையை எதிர்பார்க்கிறான். (எண் 23:1-3).

18. கர்த்தர் பிலேயாமைச் சந்திக்கிறான். தான் தேவனுக்குப் பலியிட்டதை அவரிடம் கூறுகிறான். (எண் 23:4). பிலேயாம் சுத்தமான மிருகங்களைப் பலியிடுகிறான். அவனுக்குப் பலிசெலுத்துவதின் பிரமாணம் தெரிந்திருக்கிறது.

19. கர்த்தர் பிலேயாமின் வாயிலே வாக்கு அருளுகிறான். அதை அவன் அப்படியே பாலாகிடம் எடுத்துரைக்கிறான். (எண் 23:5-10).

20. பாலாகிற்கு கோபம் வந்தாலும் கர்த்தர் தன் வாயில் அருளினதையே சொல்வது தன் கடமை என்று பிலேயாம் கூறி விடுகிறான். (எண் 23:11-12).

21. பிலேயாம் மறுபடியும் கர்த்தருக்குப் பலிசெலுத்தி, கர்த்தரைச் சந்தித்து வரப்போகிறான். (எண் 23:13-15).

22. கர்த்தர் மறுபடியும் பிலேயாமின் வாயிலே வசனத்தை அருளுகிறார். பிலேயாம் கர்த்தருடைய வார்த்தையைப் பாலாகிடம் அப்படியே கூறிவிடுகிறான். (எண் 23:16-24).

23. பிலேயாம் உண்மை பேசியதினால், பாலாகிற்கு அவன்மீது கோபம் மூளுகிறது. (எண் 23:25-26).

24. பிலேயாம் மறுபடியும் கர்த்தருக்குப் பலியிட்டு, கர்த்தருடைய வார்த்தைக்காகக் காத்திருக்கிறான். (எண் 23:27-24:1).

25. கர்த்தருடைய ஆவியானவர் பிலேயாமின் மீது வந்து இறங்கினபடியினால், அவன் இஸ்ரவேலைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கிறான். (எண் 24:2-9).

26. பாலாக் பிலேயாமின்மேல் மறுபடியும் கோபம்மூண்டவனாகிறான். மோவாபை விட்டு, வெளியேறிவிடுமாறு பாலாக் பிலேயாமிற்கு உத்தரவிடுகிறான். (எண் 24:10-13).

27. பிலேயாம் மோவாபை விட்டுப் புறப்படுவதற்கு முன்பாக, இஸ்ரவேல் புத்திரர் வரப்போகிற நாட்களில் என்ன செய்வார்கள் என்பதைக் குறித்து பாலாகிற்கு மற்றுமொரு தீர்க்க தரிசனத்தைக் கூறுகிறான். (எண் 24:14-24).

28. தனக்கு கிடைக்கப்போகிற வெகுமதியின் மீது பிலேயாம் மறுபடியும் ஆசைப் படுகிறான். இஸ்ரவேலைப் பாவத்தில் விழவைப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்னும் ஆலோசனையைப் பிலேயாம் பாலாகிற்குக் கூறுகிறான். இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்தால், பிலேயாம் அவர்களைச் சபிப்பதற்குப்பதிலாக கர்த்தரே அவர்களைச் சபித்து விடுவார். (எண் 22:7,17-18; எண் 24:11-13;எண் 25:1-18; எண் 31:16; உபா 23:4-5; யோசு 24:9-10; நெகே 13:2; மீகா 6:5; 2பேதுரு 2:13-16; யூதா 1:11; வெளி 2:14).

29. இஸ்ரவேல் புத்திரரைப் பாவத்தில் விழவைக்கும் கண்ணியைக் குறித்து பாலாகிடம் கூறியபின்பு, தன்னுடைய வெகுமதிகளை வாங்கிக் கொண்டு, பிலேயாம் தன் வீட்டிற்குத் திரும்பி வருகிறான். (எண் 24:25; 2பேதுரு 2:15; யூதா 1:11; வெளி 2:14).

30. பிலேயாம் குறிசொல்லுகிறவன் என்று அழைக்கப் பட்டிருக்கிறான். (யோசு 13:22) பிலேயாம் இஸ்ரவேல் ஜனங்களையும், தேவனையும் வஞ்சிக்கும் வரையிலும் அவன் தீர்க்கதரிசியாகவே இருந்தான். அதன்பின்பே, பிலேயாம் குறி சொல்லுகிறவன் ஆனான்.

31. இஸ்ரவேலரோடு எதிர்த்து யுத்தம் பண்ணுகிற மீதியானியரோடு பிலேயாம் சேர்ந்து கொள்கிறான். அத்துடன் அவனுடைய வாழ்வு முடிவுபெறுகிறது. (எண் 31:8; யோசு 13:22).

32. பிலேயாம் ஆரம்பத்தில் நேர்மையானவனாகவே இருந்தான். ஆனாலும் பின்பு அவன் "அநீதத்தின் கூலியை விரும்பியதினால்" கர்த்தரை விட்டு வழிவிலகிப் போகிறான். (2பேதுரு 2:15).

33. ஒருசமயத்தில் பிலேயாம் மெய்யான தீர்க்கதரிசியாக இருந்தவன். (2பேதுரு 2:15).

34. பிலேயாம் வெகுமதிக்காகத் தவறு செய்கிறான். (யூதா 1:11).

35. பிலேயாம் வெகுமதிக்காகத் தவறான சத்தியத்தை உபதேசிக்கிறான். (வெளி 2:14).

பிலேயாம் ஆரம்பத்தில் தேவனுடைய மெய்யான தீர்க்கதரிசியாகவே தன்னுடைய ஜீவியத்தை ஆரம்பிக்கிறான். தம்முடைய வார்த்தையைக் கூறுவதற்குக் கர்த்தர் அவனைப் பயன்படுத்தியிருக்கிறார். அதன்பின்பு, அவன் தவறு செய்து, குறிசொல்லுகிறவனாக மாறிப்போனான். (யோசு 13:22; யூதா 1:11)

சவுல் ராஜாவினிடத்தில் பரிசுத்த ஆவியானவர் இருந்தார். ஆவியானவர் அவனை விட்டுப் புறப்பட்டுப்போனபின்பு, அவன் அஞ்சனம்பார்க்கிறவர்களைத் தேடிப்போனான். (1சாமு 10: 9-14; 1சாமு 16:14; 1சாமு 28:1-25; 1நாளா 10:13-14)

பிலேயாமின் பேராசை
எண் 22:15-21

எண் 22:15. பாலாக் மறுபடியும் அவர்களிலும் கனவான்களான அதிக பிரபுக்களை அனுப்பினான்.

எண் 22:16. அவர்கள் பிலேயாமிடத்தில் போய், அவனை நோக்கி: சிப்போரின் குமாரனாகிய பாலாக் எங்களை அனுப்பி: நீர் என்னிடத்தில் வருகிறதற்குத் தடைபடவேண்டாம்;

எண் 22:17. உம்மை மிகவும் கனம்பண்ணுவேன்; நீர் சொல்வதையெல்லாம் செய்வேன்; நீர் வந்து எனக்காக அந்த ஜனங்களைச் சபிக்கவேண்டும் என்று சொல்லச்சொன்னார் என்றார்கள்.

எண் 22:18. பிலேயாம் பாலாகின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாக: பாலாக் எனக்குத் தன் வீடுநிறைய வெள்ளியும் பொன்னும் தந்தாலும், சிறிய காரியமானாலும் பெரிய காரியமானாலும் செய்யும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது.

எண் 22:19. ஆகிலும், கர்த்தர் இனிமேல் எனக்கு என்ன சொல்லுவார் என்பதை நான் அறியும்படிக்கு நீங்களும் இந்த இராத்திரி இங்கே தங்கியிருங்கள் என்றான்.

எண் 22:20. இரவிலே தேவன் பிலேயாமிடத்தில் வந்து: அந்த மனிதர் உன்னைக் கூப்பிட வந்திருந்தால், நீ எழுந்து அவர்களோடே கூடப்போ; ஆனாலும், நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படிமாத்திரம் நீ செய்யவேண்டும் என்றார்.

எண் 22:21. பிலேயாம் காலமே எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, மோவாபின் பிரபுக்களோடேகூடப் போனான்.

இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்காக பிலேயாமை எப்படியாவது அழைத்து வரவேண்டுமென்று மோவாபியரின் ராஜாவாகிய பாலாக் தீர்மானமாயிருக்கிறான். பிலேயாம் தன்னுடைய ஸ்தானாபதிகள் மூலமாக சொன்ன அழைப்பை முதலில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், பாலாக் மனம் தளர்ந்துபோகவில்லை. பிலேயாமிடம் அவர்களிலும் கனவான்களான அதிக பிரபுக்களை அனுப்பவேண்டுமென்று பாலாக் திட்டமிடுகிறான்.

பாலாக் ஏற்கெனவே பிலேயாமை கனம்பண்ணியதைவிட இப்போது அதிகமாய்க் கனம்பண்ணுகிறான். முகஸ்துதி மனுஷருக்கு சோதனையாயிருக்கிறது. பிலேயாமும் தனக்கு காண்பிக்கப்படுகிற கனத்தினாலும், வெகுமதியினாலும், மரியாதையினாலும் சோதிக்கப்படுகிறான்.

பிலேயாம் பேராசை குணமுள்ளவன். இப்போது அந்தப் பேராசை குணத்தோடு பெருமையும் சேர்ந்துகொள்கிறது. பாலாகும் தந்திரமுள்ளவன். பிலேயாமை எப்படி சோதித்தால் அவன் தன்னுடைய விண்ணப்பத்திற்கு சம்மதிப்பான் என்பது பாலாகுக்கு தெரிந்திருக்கிறது. பாலாக் ஒவ்வொரு காரியத்தையும் யோசித்து, திட்டமிட்டு, பிலேயாமை தன்னுடைய விண்ணப்பத்திற்கு சம்மதிக்க வைக்கிறான்.

பாலாக் இப்போது, ஏற்கெனவே அனுப்பின ஸ்தானாபதிகளைவிட கனவான்களான அதிக பிரபுக்களை பிலேயாமினிடத்தில் அனுப்புகிறான் (எண் 22:15). பிலேயாமின் உதவி பாலாகுக்கு அவசரமாய்த் தேவைப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்களை சீக்கிரத்தில் சபிக்கவேண்டும். பாலாகின் பிரபுக்களும், அவனைப்போலவே தந்திரசாலிகளாயிருக்கிறார்கள்.

பாலாக் பிலேயாமை எளிதாக விட்டுவிட விரும்பவில்லை. இதற்கு முன்பு, அனுப்பியதைவிட அவர்களிலும் கனவான்களான அதிக பிரபுக்களை அனுப்புகிறான். பிலேயாம் கேட்பதெல்லாம் அவனுக்குக் கொடுக்கப்படுகிறது. பிலேயாம் அதிகமாக கனப்படுத்தப்படுகிறான். (எண் 22:15-17).

பாலாகின் பிரபுக்கள் பிலேயாமிடத்தில் போய், அவனை நோக்கி, "சிப்போரின் குமாரனாகிய பாலாக் எங்களை அனுப்பி: நீர் என்னிடத்தில் வருகிறதற்குத் தடைபடவேண்டாம்; உம்மை மிகவும் கனம்பண்ணுவேன்; நீர் சொல்வதையெல்லாம் செய்வேன்; நீர் வந்து எனக்காக அந்த ஜனங்களைச் சபிக்கவேண்டும் என்று சொல்லச்சொன்னார்" (எண் 22:16,17) என்று சொல்லுகிறார்கள்.

"நீர் என்னிடத்தில் வருகிறதற்கு தடைபண்ண வேண்டாம்" என்று பாலாகின் பிரபுக்கள் பிலேயாமினிடத்தில் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய வார்த்தையோ, பிலேயாமின் மனச்சாட்சியோ, அல்லது வேறு ஏதாவது பாவமோ அல்லது அவமானமோ பிலேயாம் பாலாகினிடத்தில் வருவதற்கு தடையாகயிருக்கவேண்டாம் என்று பாலாகின் பிரபுக்கள் சொல்லுகிறார்கள்.

பாலாக் பிலேயாமை மிகவும் கனம்பண்ணுவதாகவும் வாக்குப்பண்ணுகிறான். மோவாபில் ஏராளமான பிரபுக்கள் இருக்கிறார்கள். பிலேயாம் பாலாக் சொன்னபடி செய்தால், அவன் பிலேயாமை தன்னுடைய பிரபுக்கள் எல்லாரிலும் உயர்ந்தவனாக வைத்திருப்பான். மோவாப் தேசத்தில் பிலேயாமுக்கு அதிக கனமும், மேன்மையும் உண்டாகும்.

பிலேயாமின் பேராசை பிடித்த மனது, பாலாகின் ஆசை வார்த்தைகளை யோசித்துப் பார்க்கிறது. பிலேயாம் சோதனையில் விழுகிறான். பிலேயாமின் மனதில் அவனுடைய மனச்சாட்சிக்கும், பாலாகின் ஆசை வார்த்தைகளுக்கும் இடையே போராட்டம் நடைபெறுகிறது. பிலேயாம் கர்த்தருக்கும் கீழ்ப்படிய விரும்புகிறான். அதே வேளையில் அவன் பாலாகின் வெகுமதிகளையும் விரும்புகிறான். பிலேயாம் இரண்டு எஜமான்களுக்கும் ஊழியம் செய்ய ஆசைப்படுகிறான். ஆனால் அது இயலாத காரியம்.

பிலேயாமின் மனச்சாட்சி தேவனுடைய வார்த்தைக்கு மீறக்கூடாது என்று சொல்லுகிறது. பிலேயாம் முதலில் தன்னுடைய மனச்சாட்சிக்கு கீழ்ப்படிந்து, பாலாகின் பிரபுக்களிடத்தில், கர்த்தருக்கு பயப்படுகிறவன்போல பேசுகிறான்.

பிலேயாம் பாலாகின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாக, "பாலாக் எனக்குத் தன் வீடுநிறைய வெள்ளியும் பொன்னும் தந்தாலும், சிறிய காரியமானாலும் பெரிய காரியமானாலும் செய்யும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது" (எண் 22:18) என்று சொல்லுகிறான்.

தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசியாகப் பிலேயாம் செயல்படுகிறான். எவ்வளவு பெரிய வெகுமதி தனக்குக் கொடுக்கப்பட்டாலும், கர்த்தரின் வார்த்தையை மீறுவதற்கு பிலேயாம் சம்மதிக்கவில்லை. ஆனாலும் இப்பொழுது பிலேயாம் பாலாகின் பிரபுக்களைத் திருப்பி அனுப்பிவிடவில்லை. கர்த்தருடைய சித்தம் என்ன என்பது தனக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தபோதிலும், கர்த்தரிடத்தில் மறுபடியுமாக விசாரிக்கப் போகிறான். வெகுமதியின்மீது பிலேயாம் கொண்ட ஆசையே இதற்குக் காரணம்.

பிலேயாமினுடைய பின்மாற்றத்தில் இது முதலாவது படி. பாலாகின் பிரபுக்கள் பிலேயாமைப் பலவீனப்படுத்தி விடுகிறார்கள். கர்த்தருடைய வார்த்தையை மட்டுமே தான் பேசப்போவதாகவும், ஆகையினால் பாலாகின் பிரபுக்களோடு கூடப்போவதினால் தவறொன்றுமில்லை என்றும் பிலேயாம் தனக்குள் தீர்மானம் பண்ணிக் கொள்கிறான். (எண் 22:18-19).

பிலேயாமின் வார்த்தைகள் மிகவும் தெளிவாகயிருக்கிறது. அவன் ஒரு ஞானியைப்போலவும், கர்த்தருக்கு பயந்தவன்போலவும், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற தீர்மானமுள்ளவன் போலவும் சாதுரியமாகப் பேசுகிறான். "என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது" என்று பிலேயாம் சொல்லுகிறான்.

பிலேயாமுடைய வாயின் வார்த்தைகள் பக்தியுள்ள வார்த்தைகளாகயிருக்கிறது. அது கர்த்தருக்கு பயந்த வார்த்தைகளாகயிருக்கிறது. ஆனால் அவனுடைய இருதயமோ பேராசையினால் கறைபடிந்திருக்கிறது. "என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது" என்று பிலேயாம் சொன்னாலும், அவனுடைய மனதிலே கர்த்தருடைய கட்டளையை மீறி, பாலாக் கொடுக்கும் வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் ஆசை இருக்கிறது.

ஆரம்பத்தில் பிலேயாம் தன்னை சோதனைக்கு ஒப்புக்கொடுக்க மறுத்தான். கர்த்தரின் கட்டளையை மீறி தான் எந்தக் காரியத்தையும் செய்ய ஆயத்தமாயில்லை என்று பிலேயாம் உறுதியாய்ச் சொன்னான்.

பிசாசானவன் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை சோதித்தான். பிசாசானவன் இந்த உலகத்தின் ராஜ்யங்களையெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்கு தருவதாக சொன்னான். ஆனால் கிறிஸ்துவானவரோ பிசாசின் சோதனைக்கு இடங்கொடுக்கவில்லை. "அப்பாலே போ சாத்தானே" என்று சொல்லி கிறிஸ்துவானவர் பிசாசைத் துரத்தினார்.

ஆரம்பத்தில் பிலேயாம் பேராசையில்லாதவனாகவும், கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவனாகவும், சோதனைக்கு எதிர்த்து நிற்கிறவனாகவும் தன்னைக் காண்பிக்கிறான். ஆனால் சீக்கிரத்தில், அவனுடைய உண்மையான சுபாவம் வெளிப்படுகிறது. அது பேராசை பிடித்த பாவசுபாவமாயிருக்கிறது.

பிலேயாம் பாலாகின் ஊழியக்காரருக்கு பிரதியுத்தரமாக, "ஆகிலும், கர்த்தர் இனிமேல் எனக்கு என்ன சொல்லுவார் என்பதை நான் அறியும்படிக்கு நீங்களும் இந்த இராத்திரி இங்கே தங்கியிருங்கள்" (எண் 22:19) என்று சொல்லுகிறான்.

தன்னுடைய சித்தத்திற்குக் கர்த்தரைச் சம்மதிக்க வைத்துவிடலாம் என்று பிலேயாம் நிச்சயத்தோடு இருக்கிறான். பாலாகின் பிரபுக்களோடு போவதில் தவறொன்றுமில்லை. கர்த்தருடைய வார்த்தையை மட்டுமே பேசவேண்டுமென்பது பிலேயாமின் எண்ணம். இது அவனுடைய உண்மையான சுபாவத்தை வெளிப்படுத்துகிறது. அவன் கர்த்தருக்கும் பயப்படுகிறான், அதேசமயத்தில் வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும் விரும்புகிறான். இதற்கு முன்பு, பிலேயாம் இவ்வளவு பெரிய தொகையைத் தன் வாழ்நாளில் பார்த்திருக்கமாட்டான். பொருளாதார ஆசீர்வாதம் வந்தவுடன், பிலேயாம் நிலைதடுமாறி விடுகிறான்.

கர்த்தர் ஆரம்பத்திலேயே பிலேயாமிடம், "நீ அவர்களோடே போகவேண்டாம்" (எண் 22:12) என்று சொல்லிவிட்டார். ஆனாலும் கர்த்தருடைய மனதை தன்னால் மாற்ற முடியும் என்று பிலேயாம் நம்புகிறான். அவனுக்கு பாலாக் கொடுக்கப்போகும் வெகுமதிகள்மீது ஆசையிருக்கிறது. தான் கர்த்தரிடத்தில் மறுபடியும் கேட்டால், கர்த்தருடைய சித்தம் மாறும் என்றும், பாலாகின் ஊழியக்காரரோடே போவதற்கு கர்த்தர் தனக்கு அனுமதி கொடுப்பார் என்றும் பிலேயாம் நினைக்கிறான். அந்த ஆசையில், பாலாகின் ஊழியக்காரரை, இந்த இராத்திரியிலே தன்னோடு தங்கியிருக்குமாறு சொல்லுகிறான்.

கர்த்தர் மனம் மாறுகிறவரல்ல. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். கர்த்தருடைய மனதை தன்னால் மாற்ற முடியும் என்று பிலேயாம் நினைப்பது அவனுடைய மதியீனம். கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தருடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் எதிர்த்து போராடி வெற்றிபெற, எந்த மனுஷனுக்கும் வல்லமையில்லை.

நம்முடைய இருதயத்தை பாவம் ஆளுகை செய்யும்போது, அங்கே கர்த்தருடைய வார்த்தைக்கு இடம் இல்லாமல் போகிறது. நாம் பாவத்திற்கு இடம் கொடுக்கும்போது, நம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறோம். தேவனுடைய வார்த்தைகளை மறந்துபோக முயற்சி பண்ணுகிறோம். கர்த்தருடைய வார்த்தை நம்முடைய மனச்சாட்சியிலே எச்சரித்து பேசினாலும், பாவம் செய்யவேண்டும் என்னும் ஆசை நமக்குள் வந்துவிடுகிறது. முடிவில், பாவத்தை விட்டு விலகி ஜீவிப்பதற்கு பதிலாக, அந்தப் பாவத்தை செய்வதற்கு அனுமதி கொடுக்குமாறு, கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறோம். பாவம் செய்யும்போது, சில சாக்குப்போக்கான காரணங்களைச் சொல்லி, நமக்கு நாமே சமாதானம் சொல்லிக் கொள்கிறோம்.

பிலேயாம் கர்த்தரிடத்தில் எப்படி ஜெபித்தான் என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தர் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து அறிந்திருக்கிறார். பிலேயாமின் இருதயத்தில் பேராசையான எண்ணம் இருப்பதை கர்த்தர் பார்க்கிறார்.

இரவிலே தேவன் பிலேயாமிடத்தில் வந்து, "அந்த மனிதர் உன்னைக் கூப்பிட வந்திருந்தால், நீ எழுந்து அவர்களோடே கூடப்போ; ஆனாலும், நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படிமாத்திரம் நீ செய்யவேண்டும்" (எண் 22:20) என்று சொல்லுகிறார்.

பிலேயாமின் உள்ளத்தில் நடைபெறும் போராட்டத்தைக் கர்த்தர் அறிகிறார். அவன் பொருளுக்கு ஆசைப்பட்டு விட்டான். எப்படியும் போய்விடுவான் என்று கர்த்தருக்குத் தெரிய வருகிறது. ஆகையினால் இரண்டு நிபந்தனைகளோடு கர்த்தர் பிலேயாமைப் பாலாகின் பிரபுக்களோடு போவதற்கு அனுமதிக்கிறார்.

1. அந்த மனிதர் உன்னைக் கூப்பிட வந்திருந்தால், நீ எழுந்து அவர்களோடே கூடப்போ. (பாலாகின் பிரபுக்கள் இரவில் வந்து, பிலேயாமைக் கூப்பிட்டால் மட்டுமே அவன் அவர்களோடு போகவேண்டும். ஆனால் பிலேயாம் அவர்கள் கூப்பிட வருவதற்கு முன்பாகவே அதிகாலையில் எழுந்திருந்து, அவர்களைக் கூட்டிக் கொண்டு போய்விட்டான்)

2. ஆனாலும், நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படிமாத்திரம் நீ செய்ய வேண்டும்.

கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை பிலேயாம் ஏற்கெனவே அறிந்திருந்த போதிலும், தன்னுடைய சுய சித்தத்திற்குக் கர்த்தரைச் சம்மதிக்க வைக்கிறான்.

பிலேயாமிடத்தில் கர்த்தர் நேரடியாகப் பேசினாரா அல்லது தம்முடைய தூதரில் ஒருவரை அனுப்பினாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. பிலேயாம் விரும்பினால் அவன் பாலாகின் ஊழியக்காரரோடே போவதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கிறார். கர்த்தர் பிலேயாமின் பேராசைக்கும், இருதயத்தின் இச்சைகளுக்கும் அவனை ஒப்புக்கொடுக்கிறார்.

பிலேயாம் காலமே எழுந்து, தன் கழுதையின்மேல் சேணங்கட்டி, மோவாபின் பிரபுக்களோடேகூடப்போகிறான் (எண் 22:21).

பெத்தூரிலிருந்து மோவாபிற்கு இடையேயுள்ள தூரம் சுமார் 500 மைல் முதல் 600 மைல் வரையிலும் உள்ளது. சுமார் 20 நாட்கள் பிரயாணம் செய்து இந்த இடத்தைக் கடந்து செல்லவேண்டும். பிலேயாமிற்கு நாற்பது நாட்கள் இடைவெளி கிடைக்கிறது. முதலாவது வந்த பிரபுக்கள் திரும்பிச் சென்று, இரண்டாவது பிரபுக்கள் வந்திருக்கிறார்கள். இந்த நாற்பது நாட்களில் பிலேயாம் நன்றாகச் சிந்தித்து, அவர்கள் தரும் வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் பண்ணி இருந்திருக்கலாம்.

இந்த சம்பவத்திலிருந்து நாம் ஒரு ஆவிக்குரிய சத்தியத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தர் சில சமயங்களில், நம்மீதுள்ள அன்பினால், நம்முடைய ஜெபவிண்ணப்பங்களுக்கு பதில் கொடுக்க மறுத்துவிடுகிறார். அதே வேளையில் கர்த்தர் தம்முடைய கோபத்தினால், நம்முடைய ஜெபவிண்ணப்பங்கள் பாவமானதாகவும், துன்மார்க்கமானதாகவும் இருந்தாலும், அதை செய்வதற்கு அனுமதி கொடுக்கிறார்.

பிலேயாமின் கழுதை
எண் 22:22-35

எண் 22:22. அவன் போகிறதினாலே தேவனுக்குக் கோபம் மூண்டது; கர்த்தருடைய தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராளியாக நின்றார். அவன் தன் கழுதையின்மேல் ஏறிப்போனான்; அவன் வேலைக்காரர் இரண்டுபேரும் அவனோடே இருந்தார்கள்.

எண் 22:23. கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக்கொண்டு வழியிலே நிற்கிறதைக் கழுதை கண்டு, வழியை விட்டு வயலிலே விலகிப்போயிற்று; கழுதையை வழியில் திருப்ப பிலேயாம் அதை அடித்தான்.

எண் 22:24. கர்த்தருடைய தூதனானவர் இருபுறத்திலும் சுவர் வைத்திருந்த திராட்சத்தோட்டங்களின் பாதையிலே போய் நின்றார்.

எண் 22:25. கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, சுவர் ஓரமாய் ஒதுங்கி, பிலேயாமின் காலைச் சுவரோடே நெருக்கிற்று; திரும்பவும் அதை அடித்தான்.

எண் 22:26. அப்பொழுது கர்த்தருடைய தூதன் அப்புறம் போய், வலதுபுறம் இடதுபுறம் விலக வழியில்லாத இடுக்கமான இடத்திலே நின்றார்.

எண் 22:27. கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, பிலேயாமின் கீழ்ப் படுத்துக்கொண்டது; பிலேயாம் கோபம் மூண்டவனாகி, கழுதையை தடியினால் அடித்தான்.

எண் 22:28. உடனே கர்த்தர் கழுதையின் வாயை திறந்தார்; அது பிலேயாமைப் பார்த்து: நீர் என்னை இப்பொழுது மூன்று தரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன் என்றது.

எண் 22:29. அப்பொழுது பிலேயாம் கழுதையைப் பார்த்து: நீ என்னைப் பரியாசம் பண்ணிக்கொண்டு வருகிறாய்; என் கையில் ஒரு பட்டயம்மாத்திரம் இருந்தால், இப்பொழுதே உன்னைக் கொன்றுபோடுவேன் என்றான்.

எண் 22:30. கழுதை பிலேயாமை நோக்கி: நீர் என்னைக் கைக்கொண்ட காலமுதல் இந்நாள்வரைக்கும் நீர் ஏறின கழுதை நான் அல்லவா? இப்படி உமக்கு எப்போதாகிலும் நான் செய்தது உண்டா என்றது. அதற்கு அவன்: இல்லை என்றான்.

எண் 22:31. அப்பொழுது கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்தார்; வழியிலே நின்று உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருக்கிற கர்த்தருடைய தூதனை அவன் கண்டு, தலைகுனிந்து முகங்குப்புற விழுந்து பணிந்தான்.

எண் 22:32. கர்த்தருடைய தூதனானவர் அவனை நோக்கி: நீ உன் கழுதையை இதனோடே மூன்றுதரம் அடித்ததென்ன? உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறதினால், நான் உனக்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தேன்.

எண் 22:33. கழுதை என்னைக் கண்டு, இந்த மூன்றுதரம் எனக்கு விலகிற்று; எனக்கு விலகாமல் இருந்ததானால், இப்பொழுது நான் உன்னைக் கொன்றுபோட்டு, கழுதையை உயிரோடே வைப்பேன் என்றார்.

எண் 22:34. அப்பொழுது பிலேயாம் கர்த்தருடைய தூதனை நோக்கி: நான் பாவஞ்செய்தேன்; வழியிலே நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன்; இப்பொழுதும் உமது பார்வைக்கு இது தகாததாயிருக்குமானால், நான் திரும்பிப் போய்விடுகிறேன் என்றான்.

எண் 22:35. கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமை நோக்கி: அந்த மனிதரோடே கூடப்போ; நான் உன்னோடே சொல்லும் வார்த்தையைமாத்திரம் நீ சொல்லக்கடவாய் என்றார்; அப்படியே பிலேயாம் பாலாகின் பிரபுக்களோடே கூடப்போனான்.

பிலேயாம் காலமே எழுந்து, தன் கழுதையின்மேல் சேணம் கட்டி, மோவாபின் பிரபுக்களோடே கூடப்போகிறான். கர்த்தரோ பிலேயாம் மோவாபுக்கு நேராகப்போவதை தடைபண்ணுகிறார். கர்த்தர் பிலேயாமுக்கு எதிர்த்து நிற்கிறார். பிலேயாம் மோவாபுக்கு நேராகப்போவது கர்த்தருக்கு பிடிக்கவில்லை. அவன் மோவாபுக்கு போகிறதினாலே தேவனுக்கு கோபம் மூளுகிறது (எண் 22:22).

தேவனுக்குக் கோபம்மூளுகிறது. அதற்கான காரணங்கள் வருமாறு :

1. பிலேயாம் தேவனுடைய வார்த்தையை மதிக்கவில்லை. (எண் 22:12-20)

2. வெகுமதியின்மீது பிலேயாமின் பேராசை. (எண் 22:7,17,37; எண் 24:11)

3. கர்த்தர் தன்னைப் பாலாகின் பிரபுக்களோடு அனுப்ப வேண்டும் என்று விண்ணப்பம் பண்ணியதில் அவனுடைய மாய்மாலம். (எண் 22:19)

4. இஸ்ரவேலைச் சபிப்பதற்கு அவன் ஆயத்தமாக இருந்தது. (எண் 22:14; உபா 23:4-5; யோசு 24:10)

5. தேவனுடைய கட்டளையையும்மீறி, பாலாகின் பிரபுக்களோடு போக வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தது. (எண் 22:19-35)

6. தேவனுடைய பரிபூரண சித்தத்தைச் செய்வதற்கு ஆர்வமற்றிருந்தது. (எண் 22:12-22)

7. பிலேயாமின் மாறுபாடு. (எண் 22:32)

8. பிலேயாமின் பிரபுக்கள் இரவில் வந்து, அவனைச் சந்திக்கும் வரையிலும் காத்திராமல் அதிகாலமே எழுந்து, இஸ்ரவேலின் விரோதிகளோடு கூடப்போனது. (எண் 22:20)

9. தேவன் தன்னோடு ஒத்துழைக்க வேண்டுமென்று எதிர்பார்த்து பிலேயாம் பல தடவை பலிகளைச் செலுத்தியது. வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வதே அவனுடைய எண்ணம். (எண் 22:19; எண் 23:1-3,14-15; எண் 24:1)

10. வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பிலேயாம் பலவிதத்திலும் முயற்சி பண்ணியது. (எண் 22:8,19; எண் 24:1; 2பேதுரு 2:15-16; யூதா 1:11; வெளி 2:14)

கர்த்தர் பாவிகளுடைய பாவங்களை அனுமதிப்பதினால், தங்கள்மீது கர்த்தருக்கு கோபமில்லை என்று பாவிகள் நினைக்கக்கூடாது. பாவம் செய்கிறவர்களுக்கு விரோதமாக கர்த்தருடைய கோபம் மூளும். கர்த்தர் பாவத்தை வெறுக்கிறவர்.

கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக தீங்கு செய்ய நினைப்பது கர்த்தருடைய பார்வையில் மிகப்பெரிய பாவமாயிருக்கிறது. கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக சத்துருக்கள் சதிஆலோசனைகளை பண்ணும்போது கர்த்தர் அவர்கள்மீது அதிகமாய்க் கோபப்படுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளை தொடுகிறவர்கள், கர்த்தருடைய கண்ணின் மணியையே தொடுகிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை, தமது உள்ளங்கையில் பாதுகாப்பாக வரைந்து வைத்திருக்கிறார்.

கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக எழும்புகிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாக எழும்புகிறார்கள். அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள்.

பிலேயாம் போகிறதினாலே தேவனுக்குக் கோபம் மூளுகிறது; கர்த்தருடைய தூதனானவர் வழியிலே பிலேயாமுக்கு எதிராளியாக நிற்கிறார். பிலேயாம் தன் கழுதையின்மேல் ஏறிப்போகிறான்; பிலேயாமின் வேலைக்காரர் இரண்டுபேரும் அவனோடே இருக்கிறார்கள் (எண் 22:22).

பிலேயாம் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல் மோவாபுக்கு போகிறான். இதனால் தேவனுடைய உதவியும், ஒத்தாசையும் அவனுக்கு கிடைக்கவில்லை. கர்த்தருடைய தூதனானவர் வழியிலே பிலேயாமுக்கு எதிராளியாக நிற்கிறார். கர்த்தர் நம்முடைய சிநேகிதராகயிருக்கவேண்டும். அவருடைய ஆதரவும் அநுக்கிரகமும் நமக்கு கிடைக்கவேண்டும். இதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம். கர்த்தர் நமக்கு எதிராளியாயிருக்கும்போது, நம்மால் அவரை எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியாது.

பிலேயாம் ஏறிப்போகிற கழுதையின் கண்கள் திறந்திருக்கிறது. அந்தக் கழுதை கர்த்தருடைய தூதனானவரை பார்க்கிறது. பிலேயாமின் மனக்கண்களோ மூடப்பட்டிருக்கிறது. அவனுடைய மனதெல்லாம் பாலாக் கொடுக்கப்போகும் வெகுமதிகளையே பார்த்துக்கொண்டிருக்கிறது. பிலேயாமின் கண்கள் தன்னுடைய வழியிலே தனக்கு எதிராளியாக நிற்கிற கர்த்தருடைய தூதனானவரைப் பார்க்கவில்லை.

கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக்கொண்டு வழியிலே நிற்கிறார். பிலேயாமின் கழுதை கர்த்தருடைய தூதனானவரைக் காண்கிறது. அந்தக் கழுதை வழியை விட்டு வயலிலே விலகிப்போயிற்று; கழுதையை வழியில் திருப்ப பிலேயாம் அதை அடிக்கிறான் (எண் 22:23).

திரித்துவத்தில் ஒரு நபரே இங்கு கர்த்தருடைய தூதனானவர் என்று அறியப்பட்டிருக்கிறார். தம்மை அவர் கர்த்தராகவே வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். (எண் 22:20 =எண் 22:35)

பிலேயாமின் கண்கள் திறக்கப்படாமல் மூடப்பட்டிருந்தாலும், அவன் தன்னைப்பற்றி பெருமையாக நினைக்கிறான். அவன் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "கண் திறக்கப்பட்டவன்" என்று சொல்லுகிறான். பிலேயாம் கர்த்தருடைய தூதனானவரைக் காணாவிட்டாலும், தான் சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்ட, கண் திறக்கப்பட்டவன் என்று தன்னைப்பற்றிப் பெருமையோடு சொல்லுகிறான்.

"அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: பேயோரின் குமாரனாகிய பிலேயாம் சொல்லுகிறதாவது, கண்திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது, தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு, சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்டு தாழ விழும்போது, கண்திறக்கப்பட்டவன் விளம்புகிறதாவது (எண் 24:3,4).

பிலேயாமின் கண்கள் குருடனுடைய கண்களைப்போலவே இருக்கிறது. அவனுடைய கண்கள் திறக்கப்பட்டிருப்பதைவிட, அவன் ஏறிப்போகிற கழுதையின் கண்கள் நன்றாய்த் திறக்கப்பட்டிருக்கிறது. பிலேயாமின் கண்களோ பேராசையினால் மூடப்பட்டிருக்கிறது.

மூன்று முறை கழுதை கர்த்தருடைய தூதனானவரைக் காண்கிறது (எண் 22:23, 25,27). ஆவிக்குரிய சரீரங்களில் இருக்கிறவர்களைச் சிலரால் தரிசிக்க முடியும். மற்றவர்களால் தரிசிக்க முடியாது. (எண் 22:31; தானி 10:7; அப் 9:7). கடைசியில் பிலேயாமின் கண்கள் திறக்கப்பட்டு அவனும் கர்த்தருடைய தூதனானவரைக் காண்கிறான் (எண் 22:31).

ஒரு கழுதைகூட கர்த்தருடைய தூதனானவரைக் காண்கிறது. கர்த்தர் தமக்கு சித்தமானவனுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். ஆகையினால் தரிசனத்தை பார்த்தது பற்றியோ அல்லது வெளிப்பாடு கிடைத்தது பற்றியோ நாம் பெருமைப்படக்கூடாது. பிலேயாமின் கழுதை கர்த்தருடைய தூதனானவரைப் பார்த்து, தன்னையும் தன்மேல் ஏறியிருக்கிற பிலேயாமையும் காப்பாற்ற நினைக்கிறது.

கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தை தம்முடைய கையிலே பிடித்துக்கொண்டு வழியிலே நிற்கிறதை கண்டு, பிலேயாமின் கழுதை வழியைவிட்டு வயலிலே இறங்கிப்போயிற்று. பிலேயாம் கழுதையினுடைய விநோதமான செய்கையைப் பார்த்து, அவனும் எச்சரிப்படைந்திருக்கவேண்டும். அவனும் கர்த்தருடைய தூதனானவரைப் பார்த்திருக்கவேண்டும். தான் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக மோவாப் தேசத்தை நோக்கி பிரயாணப்படுவதை உணரவேண்டும்.

ஆனால் பிலேயாமோ தன்னுடைய தப்பிதத்தை உணரவில்லை. தன் கழுதை தப்புசெய்கிறது என்று பிலேயாம் நினைக்கிறான். தன் கழுதை அதன் கடமையை சரியாய் செய்யவில்லை என்று பிலேயாம் அதன்மேல் கோபப்படுகிறான். பிலேயாம் தன்னுடைய தப்பிதத்தைப் பார்ப்பதற்கு பதிலாக, கழுதையைப் பார்க்கிறான். கழுதை தப்பிதம் செய்கிறது என்று நினைக்கிறான்.

இக்காலத்தில் பிலேயாமைப்போல ஒரு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தப்பு செய்தாலும், தங்களுடைய தப்பிதத்தை உணரமாட்டார்கள். அவர்கள் தங்களை நோக்கிப் பார்க்காமல் மற்றவர்களை நோக்கிப் பார்ப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய தப்பிதத்தை உணராமல், மற்றவர்கள் செய்வதெல்லாம் தப்பிதம் என்று சொல்லுவார்கள்.

பிலேயாம் தான் செய்யும் தப்பிதத்தின் நிமித்தம் தன்மீது கோபப்படவேண்டும். ஆனால் அவனோ தன்னுடைய கழுதையின்மீது கோபப்படுகிறான். கழுதை வழியைவிட்டு வயலிலே விலகிப்போனதினால், அந்தக் கழுதையை வழியில் திருப்ப, பிலேயாம் அதை அடிக்கிறான்.

துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்கள் பிலேயாமைப்போலவே இருக்கிறார்கள். பாவிகள் அழிந்துபோகக்கூடாது என்று நினைத்து, அவர்களுக்கு ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் சொன்னால் அவர்கள் நம்மீது கோபப்படுவார்கள். அவர்களை திருத்துவது கடினமான காரியம். இப்படிப்பட்ட பாவிகள் தங்கள் கண்களை திறந்துகொண்டு, குழியில் விழுவதற்கு போகிறார்கள். தங்களை தடுத்து நிறுத்துகிறவர்கள்மீதும் கோபப்படுகிறார்கள்.

பிலேயாம் கழுதையை அடித்ததினால், அந்தக் கழுதை மறுபடியும் வயலிலிருந்து ஏறி பாதைக்கு வருகிறது. சிறுதூரம் போவதற்கு முன்பாகவே அந்தக் கழுதை மறுபடியும் கர்த்தருடைய தூதனானவரைப் பார்க்கிறது.

கர்த்தருடைய தூதனானவர் இருபுறத்திலும் சுவர் வைத்திருந்த திராட்சத்தோட்டங்களின் பாதையிலே போய் நிற்கிறார் (எண் 22:24). கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, சுவர் ஓரமாய் ஒதுங்கி, பிலேயாமின் காலைச் சுவரோடே நெருக்கிற்று; பிலேயாம் திரும்பவும் தன் கழுதையை அடிக்கிறான் (எண் 22:25).

கர்த்தருடைய தூதனானவரின் பட்டயத்திற்கு, பிலேயாமை தப்புவிக்கப்பண்ணவேண்டும் என்பதற்காகவே கழுதை சுவர் ஓரமாய் ஒதுங்குகிறது. அது பிலேயாமின் காலை சுவரோடே நெருகிற்று. பிலேயாமின் காலில் வலியும் வேதனையும் ஏற்படுகிறது. பிலேயாம் ஜீவனோடிருக்க வேண்டும் என்பதும், அவன் அழிவுக்கு தப்பிக்கவேண்டும் என்பதும் கழுதையின் விருப்பம். ஆனால் பிலேயாமோ தனக்கு உதவிசெய்ய கழுதையின்மேல் கோபப்படுகிறான்.

கழுதை தனக்கு செய்த உதவி பிலேயாமுக்கு புரியவில்லை. அவனுடைய கால் சுவர் ஓரமாய் ஒதுங்கி, அந்த சுவற்றிலே நெருக்கியதினால் ஏற்பட்ட வலியும் வேதனையும் மாத்திரம் அவனுக்கு தெரிகிறது. பிலேயாம் தன்னுடைய தப்பிதத்தை உணராமல், தன் கழுதை தப்பிதம் செய்வதாக நினைத்து, அதைத் திரும்பவும் அடிக்கிறான். பிலேயாமின் கழுதை இரண்டாந்தரமும் அடி வாங்குகிறது.

அப்பொழுது கர்த்தருடைய தூதன் அப்புறம் போய், வலதுபுறம் இடதுபுறம் விலக வழியில்லாத இடுக்கமான இடத்திலே நிற்கிறார். கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, பிலேயாமின் கீழ்ப் படுத்துக்கொள்கிறது; பிலேயாம் கோபம் மூண்டவனாகி, கழுதையை தடியினால் அடிக்கிறான் (எண் 22:26,27).

பிலேயாமின் கழுதையோ அவனுக்கு நல்லது செய்கிறது. கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தை தம்முடைய கையில் பிடித்துக்கொண்டு நிற்கிறார். பிலேயாம் பட்டயத்திற்கு தப்பிக்கவேண்டும் என்பது கழுதையின் விருப்பம். கழுதை தன்னால் முடிந்த வரையிலும் பிலேயாமுக்கு நன்மை செய்கிறது. ஆனால் இப்போதோ அந்தக் கழுதை பிலேயாமின் கீழே படுத்துக்கொள்கிறது. அதைப் பார்த்து பிலேயாமின் கோபம் அதிகரிக்கிறது.

பிலேயாமை தடைபண்ணுவதற்கு கர்த்தர் முயற்சி பண்ணுகிறார். ஆனால் அவனோ கண் திறக்கப்பட்டவனாகயில்லை. தனக்கு முன்பாக உருவின பட்டயத்தோடு நிற்கிற கர்த்தருடைய தூதனானவரை அவனுடைய கண்கள் பார்க்கவில்லை. பிலேயாம் தன் கழுதையைப் பார்க்கிறான். ஆனால் அவன் கர்த்தருடைய தூதனானவரைப் பார்க்கவில்லை. பிலேயாமின் பிரயாணத்தை தடுத்து நிறுத்துவதற்காக கர்த்தர் மேற்கொண்ட முயற்சிகளெல்லாம் தோல்வியுறுகிறது.

கர்த்தர் இப்போது கழுதையின் வாயைத் திறக்கிறார். தன் வாய் திறக்கப்பட்டவுடன் அந்தக் கழுதை பேச ஆரம்பிக்கிறது. அது பிலேயாமைப் பார்த்து, "நீர் என்னை இப்பொழுது மூன்று தரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன்" (எண் 22:28) என்று கேட்கிறது.

இது ஒரு அற்புதம். பேதுரு இதைப் பற்றிக் கூறும்போது, "பேசாதமிருகம் மனுஷர் பேச்சைப் பேசிற்று" என்று குறிப்பிடுகிறார். (2பேதுரு 2:15,16).

ஒரு கழுதை தன் வாயைத் திறந்து பேசுவது மிகப்பெரிய அற்புதம். ஆனால் பிலேயாமோ இந்த அற்புதத்தை உணராமல், கழுதையோடு பேசுகிறான். பிலேயாம் கழுதையைப் பார்த்து, "நீ என்னைப் பரியாசம் பண்ணிக்கொண்டுவருகிறாய்; என் கையில் ஒரு பட்டயம்மாத்திரம் இருந்தால், இப்பொழுதே உன்னைக்கொன்றுபோடுவேன்" (எண் 22:29) என்று சொல்லுகிறான்.

ஏதேன் தோட்டத்திலே ஆதாமும் ஏவாளும் இருந்தார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யுமாறு ஒரு சர்ப்பம் அவர்களை வஞ்சித்தது. அவர்களை வஞ்சிக்க சாத்தான் சர்ப்பத்தை தன்னுடைய கருவியாகப் பயன்படுத்தினான். இங்கோ கர்த்தர் பிலேயாமைத் திருத்துவதற்கு, ஒரு கழுதையை பயன்படுத்துகிறார்.

பிலேயாமின் கழுதை அவனைப் பார்த்து, "நீர் என்னை இப்பொழுது மூன்று தரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன்" (எண் 22:28) என்று கேட்கிறது. கழுதை சாதாரணமான மிருகமாகயிருந்தாலும், அது பலவீனமான மிருகஜீவனாகயிருந்தாலும், நீதியுள்ள தேவன் அந்த மிருகத்தின்மீதும் கரிசனையோடிருக்கிறார்.

பலவீனமானவர்கள் தங்களுடைய பாதுகாப்புக்காக தாங்களே பேசுவார்கள் அல்லது அவர்களுக்காக பேசுவதற்கு கர்த்தர் வேறு யாரையாவது நியமிப்பார். கர்த்தர் பலவீனமானவர்களையும் கைவிடாமல் ஆதரிக்கிறார்.

பிலேயாம் தன்னுடைய இருதயத்தில் பெருமையுள்ளவனாகவும், மற்ற மிருகஜீவன்கள்மீது அன்பில்லாதவனாகவும் இருக்கிறான். அவனுடைய கண்களும் குருடாயிருக்கிறது. ஒரு கழுதை பேசுகிறது என்னும் அதிசயத்தைக்கூட அவனால் உணரமுடியவில்லை. அவனுக்கு கழுதையின்மீது கோபம் வருகிறது. கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் மிகவும் பொல்லாதவர்களாயிருப்பார்கள்.

பிலேயாம் கழுதையைப் பார்த்து, "நீ என்னைப் பரியாசம் பண்ணிக்கொண்டுவருகிறாய்; என் கையில் ஒரு பட்டயம்மாத்திரம் இருந்தால், இப்பொழுதே உன்னைக்கொன்றுபோடுவேன்" (எண் 22:29) என்று சொல்லுகிறான்.

ஆனால் அந்தக் கழுதையோ பிலேயாமிடம் விவாதம்பண்ணுகிறது. தன்னிடத்தில் ஒரு தப்பிதமும் இல்லையென்றும், தவிர்க்க முடியாத ஒரு காரணத்தினால்தான், தான் பிலேயாமின் கீழே படுத்துக்கொண்டதாகவும், அந்தக் கழுதை தன்னுடைய செய்கைகளை நியாயப்படுத்துகிறது.

கழுதை பிலேயாமை நோக்கி, "நீர் என்னைக் கைக்கொண்ட காலமுதல் இந்நாள்வரைக்கும் நீர் ஏறின கழுதை நான் அல்லவா? இப்படி உமக்கு எப்போதாகிலும் நான் செய்தது உண்டா" (எண் 22:30) என்று கேட்கிறது. அதற்கு பிலேயாம், "இல்லை" என்று அந்தக் கழுதைக்கு பதில் சொல்லுகிறான்.

கர்த்தர் தம்முடைய வல்லமையினால் கழுதையைப் பேச வைப்பது மாத்திரமல்ல, அதை தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லவும் பண்ணுகிறார். கழுதை எப்படித்தான் பேசினாலும் பிலேயாம் உணர்வடையவில்லை.

கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறக்கிறார்; அப்பொழுது பிலேயாம் வழியிலே நின்று உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருக்கிற கர்த்தருடைய தூதனைக் காண்கிறான். பிலேயாம் தலைகுனிந்து முகங்குப்புற விழுந்து கர்த்தருடைய தூதனைப் பணிந்துகொள்கிறான் (எண் 22:31).

பிலேயாம் கழுதைக்கு என்ன செய்ய நினைத்தானோ அதைக் கர்த்தர் அவனுக்குச் செய்யப் போகிறார். (எண் 22:29) இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராக அவன் சர்ப்பனை பண்ணினான். முடிவில் அவனே மரித்துப்போனான். (எண் 22:31-33; 1நாளா 21:16).

கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்த பிறகே, அவன் உணர்வடைகிறான். கர்த்தருடைய கோபம் தன்மீது திரும்பியிருப்பதை அவன் புரிந்துகொள்கிறான். பிலேயாமின் இருதயம் கடினமானதாகயிருந்தாலும், அவனுடைய மனது பேராசை நிரம்பியதாகயிருந்தாலும், கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தினால், அவனுடைய கண்களைத் திறக்கிறார். கடினமான அவனுடைய இருதயத்தை மென்மையாக்குகிறார். பெருமை நிரம்பிய அவனுடைய மனதை தாழ்த்துகிறார். பிலேயாம் இப்போது கர்த்தருடைய தூதனை தலைகுனிந்து முகங்குப்புற விழுந்து பணிந்துகொள்கிறான்.

கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமை நோக்கி, "நீ உன் கழுதையை இதனோடே மூன்றுதரம் அடித்ததென்ன? உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறதினால், நான் உனக்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தேன்" (எண் 22:32) என்றும்,

"கழுதை என்னைக் கண்டு, இந்த மூன்றுதரம் எனக்கு விலகிற்று; எனக்கு விலகாமல் இருந்ததானால், இப்பொழுது நான் உன்னைக் கொன்றுபோட்டு, கழுதையை உயிரோடே வைப்பேன்" (எண் 22:33) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய பிரசன்னத்தை மூன்றுமுறை வெளிப்படுத்தி அதை உறுதிபண்ணியிருக்கிறார். (எண் 22:22; யோவான் 4:24).

கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமை நோக்கி, "நீ உன் கழுதையை அடித்ததென்ன" என்று கேட்கிறார். பிலேயாம் தன்னுடைய பாவத்தை உணருகிறான். அவன் கர்த்தருடைய தூதனை நோக்கி, "நான் பாவம் செய்தேன்" என்று சொல்லுகிறான்.

பிலேயாம் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக பாலாகைப் பார்க்கப்போகிறான். கர்த்தருடைய வார்த்தையைவிட அவனுக்கு பாலாகின் ஐசுவரியமே பெரியதாய்த் தெரிகிறது.

பிலேயாம் கர்த்தருடைய தூதனை நோக்கி, "நான் பாவஞ்செய்தேன்; வழியிலே நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன்; இப்பொழுதும் உமது பார்வைக்கு இது தகாததாயிருக்குமானால், நான் திரும்பிப் போய்விடுகிறேன்" (எண் 22:34) என்று சொல்லுகிறான்.

பாலாகின் பிரபுக்களோடு போவது கர்த்தருடைய பார்வைக்கு தகாததாயிருக்குமானால் தான் திரும்பிப் போய்விட சம்மதிக்கிறான். தேவனுடைய சித்தம் என்ன என்பது அவனுக்கு ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையினால் அவன் பாலாகின் பிரபுக்களோடு பிரயாணப்பட்டிருக்கவே கூடாது. இப்பொழுது பாதி வழியில் கர்த்தருக்குப் பிடிக்கவில்லை யென்றால் தான் திரும்பிப் போக ஆயத்தமாக இருப்பதாக அரைகுறை மனதோடு கூறுகிறான். (எண் 22:12-35).

பிலேயாமின் கண்கள் இதுவரையிலும் திறக்கப்படாமலிருக்கிறது. ஆகையினால் கர்த்தருடைய தூதனானவர் தனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருக்கிறான். இப்போதோ கர்த்தர் அவனுடைய கண்களைத் திறந்திருக்கிறார். பிலேயாம் மோவாபுக்கு போகாமல், தன்னுடைய இடத்திற்கு திரும்பிப்போய்விடுவதாக சொல்லுகிறான்.

பிலேயாம் கர்த்தருடைய தூதனானவரிடத்தில் நயமான வார்த்தைகளைப் பேசினாலும், அவன் மனந்திரும்பியிருப்பதற்கான அடையாளம் எதுவும் காணப்படவில்லை. தன்னுடைய கைகள் கட்டப்பட்டிருப்பதுபோலவும், தன்னால் பாலாகை பார்க்கப்போகாமல் இருப்பதுபோலவும் பிலேயாம் பேசுகிறான். பிலேயாம் தன்னுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து, திரும்பிப்போக விரும்பவில்லை. தான் பாலாகைப் பார்க்கப்போவது கர்த்தருடைய பார்வைக்கு தகாததாகயிருப்பதினால், பிலேயாம் திரும்பிப்போவதாக சொல்லுகிறான்.

பிலேயாமைப்போலவே இக்காலத்திலும் அநேகர் தங்கள் பாவத்தை விட்டு விலகி வர மனதில்லாதவர்களாயிருக்கிறார்கள். ஒரு சிலர் வேறு வழியில்லாமல் பாவத்தை விட்டு விலகி வருகிறார்கள். தங்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் அந்தப் பாவத்திற்கு திரும்பிப்போய்விடுவார்கள். அவர்கள் தங்கள் பாவத்தில் நிலைத்திருப்பார்கள். பாவம் அவர்களை விட்டு விலகிப்போவதினால், வேறு வழியில்லாமல் அவர்கள் பாவத்தை விட்டு விலகிப்போகிறார்கள்.

பிலேயாமின் ஜீவியத்தில் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதுபோல தெரிகிறது. ஆனாலும் அவனுடைய இருதயத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இருதயத்தில் மாற்றம் ஏற்படாமல், வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுவதினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. இப்படிப்பட்டவர்கள் பக்தியின் வேஷத்தைத் தரித்திருப்பார்கள். ஆனாலும் இவர்கள் பாவத்திற்கு சிநேகிதர்களாகவும், அதற்கு பங்காளிகளாகவும் இருப்பார்கள்.

"நான் திரும்பிப்போய்விடுகிறேன்" என்று பிலேயாம் தன் வாயினால் சொன்னாலும், அவனுடைய இருதயத்தின் நினைவுகளை கர்த்தர் அறிந்திருக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமை நோக்கி, "அந்த மனிதரோடே கூடப்போ; நான் உன்னோடே சொல்லும் வார்த்தையைமாத்திரம் நீ சொல்லக்கடவாய்" (எண் 22:35) என்று சொல்லுகிறார்; அப்படியே பிலேயாம் பாலாகின் பிரபுக்களோடே கூடப்போகிறான்.

பாலாகின் பிரபுக்களோடு கூடப்போவதற்குப் பிலேயாமிற்கு அனுமதி கிடைக்கிறது. ஆனாலும் கர்த்தர் அவனுக்குச் சொல்லும் வார்த்தையை மாத்திரம் பிலேயாம் சொல்லவேண்டும்.

பிலேயாம் பாலாகுக்கு முன்பாகவும், மோவாபியரின் பிரபுக்களுக்கு முன்பாகவும் தன்னைத்தானே அவமானப்படுத்திக்கொள்வதற்காக புறப்பட்டுப்போகிறான். பிலேயாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தாலும், கீழ்ப்படியாவிட்டாலும், அவனால் கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமான வார்த்தைகளைப் பேசமுடியாது.

பிலேயாமால் இஸ்ரவேல் புத்திரரை சபிக்க முடியாது. அது மாத்திரமல்ல அவன் தன் வாயினால் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கப்போகிறான். இதுவே கர்த்தருடைய சித்தம். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

பிலேயாமும் பாலாகும்
எண் 22:36-41

எண் 22:36. பிலேயாம் வருகிறதைப் பாலாக் கேட்டமாத்திரத்தில், கடைசி எல்லையான அர்னோன் நதியின் ஓரத்திலுள்ள மோவாபின் பட்டணமட்டும் அவனுக்கு எதிர்கொண்டு போனான்.

எண் 22:37. பாலாக் பிலேயாமை நோக்கி: உம்மை அழைக்கும்படி நான் ஆவலோடே உம்மிடத்தில் ஆள் அனுப்பவில்லையா? என்னிடத்திற்கு வராமல் இருந்ததென்ன? ஏற்றபிரகாரமாக உம்மை நான் கனம் பண்ணமாட்டேனா என்றான்.

எண் 22:38. அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: இதோ, உம்மிடத்திற்கு வந்தேன்; ஆனாலும், ஏதாகிலும் சொல்லுகிறதற்கு என்னாலே ஆகுமோ? தேவன் என்வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன் என்றான்.

எண் 22:39. பிலேயாம் பாலாகுடனே கூடப்போனான்; அவர்கள் கீரியாத் ஊசோத்தில் சேர்ந்தார்கள்.

எண் 22:40. அங்கே பாலாக் ஆடுமாடுகளை அடித்து, பிலேயாமுக்கும் அவனோடிருந்த பிரபுக்களுக்கும் அனுப்பினான்.

41. மறுநாள் காலமே பாலாக் பிலேயாமைக் கூட்டிக்கொண்டு, அவனைப் பாகாலுடைய மேடுகளில் ஏறப்பண்ணினான்; அவ்விடத்திலிருந்து பிலேயாம் ஜனத்தின் கடைசிப் பாளயத்தைப் பார்த்தான்.

பிலேயாமும் பாலாகும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய இஸ்ரவேலுக்கு இவர்கள் இருவரும் கூட்டுச் சேர்ந்து சத்துருக்களாகயிருக்கிறார்கள்.

பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரை சபிப்பான் என்றும், அப்போது அவர்கள் சபிக்கப்பட்ட ஜனமாகயிருப்பார்கள் என்றும் பாலாக் நம்பிக்கையோடிருக்கிறான். பாலாக் பிலேயாமிடம் பேசும்போது, அவனுடைய வார்த்தையில் உறுதியும் நம்பிக்கையும் இருக்கிறது.

பிலேயாம் வருகிறதைப் பாலாக் கேட்டமாத்திரத்தில், கடைசி எல்லையான அர்னோன் நதியின் ஓரத்திலுள்ள மோவாபின் பட்டணமட்டும் அவனுக்கு எதிர்கொண்டு போகிறான் *(எண் 22:36)*.

"மோவாபின் பட்டணமட்டும்" என்பது அர் என்னும் பட்டணமாக இருக்கலாம். மோவாபியரின் பிரதான பட்டணங்களில் இதுவும் ஒன்று. *(எண் 21:15,28; உபா 2:9,18,29; ஏசா 15:1)*.

பாலாக் பிலேயாமை நோக்கி, "உம்மை அழைக்கும்படி நான் ஆவலோடே உம்மிடத்தில் ஆள் அனுப்பவில்லையா? என்னிடத்திற்கு வராமல் இருந்ததென்ன? ஏற்றபிரகாரமாக உம்மை நான் கனம் பண்ணமாட்டேனா" *(எண் 22:37)* என்று சொல்லுகிறான்.

பிலேயாமின் வார்த்தையில் உறுதியுமில்லை. நம்பிக்கையுமில்லை, நிச்சயமுமில்லை. தான் வந்த காரியம் நிறைவேறுமா என்னும் சந்தேகம் பிலேயாமின் மனதில் ஏற்பட்டிருக்கிறது. பாலாகோ பிலேயாமை முழுவதுமாய் நம்புகிறான். ஆனால் தன்னை நம்பி பிரயோஜனமில்லை என்றும், தன்னால் பாலாகுக்கு உதவி செய்ய முடியுமோ முடியாதோ என்றும் தனக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை என்பதுபோலவும் பிலேயாம் பேசுகிறான்.

பிலேயாம் பாலாகை நோக்கி, "இதோ, உம்மிடத்திற்கு வந்தேன்; ஆனாலும், ஏதாகிலும் சொல்லுகிறதற்கு என்னாலே ஆகுமோ? தேவன் என்வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன்" *(எண் 22:38)* என்று சொல்லுகிறான்.

தேவன் தன் வாயில் அளிக்கும் வார்த்தையை மட்டுமே பிலேயாமினால் பேசமுடியும். அவர் அவனுடைய வாயில் அளிக்காத வார்த்தையைப் பேசுவதற்குப் பிலேயாமிற்கு எந்தவித வல்லமையும் இல்லை.

"ஏதாகிலும் சொல்லுகிறதற்கு என்னால் ஆகுமோ" என்று பிலேயாம் சொல்லுகிற வார்த்தைக்கு, "ஏதாகிலும் சொல்லுகிறதற்கு தன்னிடத்தில் வல்லமையில்லை" என்பது பொருளாகும். பிலேயாம் இஸ்ரவேலை சபிக்க விரும்புகிறான். ஆனால் அவனால் இஸ்ரவேலை சபிக்க முடியாது. அதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கமாட்டார். தேவன் தன் வாயிலே அளிக்கும் வார்த்தையை மாத்திரமே பிலேயாமால் சொல்ல முடியும். அந்த வார்த்தை இஸ்ரவேலை சபிக்கும் வார்த்தையாகயிருக்காது.

பிலேயாம் தன்னிடத்தில் வந்ததினால் பாலாக் மிகுந்த சந்தோஷமாயிருக்கிறான். தன்னுடைய ஆசை நிறைவேறும் என்னும் நம்பிக்கை பாலாகுக்கு இருக்கிறது. ஆனால் பாலாகின் ஆசையை நிறைவேற்ற முடியும் என்னும் நம்பிக்கை பிலேயாமினிடத்தில் இல்லை.

பிலேயாமின் மனதில் நம்பிக்கையில்லாவிட்டாலும், தான் வந்த வேலையை தாமதமில்லாமல் செய்ய வேண்டுமென்று நினைக்கிறான்.

பிலேயாம் பாலாகுடனே கூடப்போகிறான்; அவர்கள் கீரியாத் ஊசோத்தில் சேருகிறார்கள். அங்கே பாலாக் ஆடுமாடுகளை அடித்து, பிலேயாமுக்கும் அவனோடிருந்த பிரபுக்களுக்கும் அனுப்புகிறான் (எண் 22:39,40).

"கீரியாத் ஊசோத்" என்னும் பெயருக்குத் தெருக்களின் பட்டணம் என்று பொருள்.

பாலாக் பிலேயாமுக்கு ஒரு குறைவும் வைக்கவில்லை. தன்னுடைய பிரபுக்கள் மூலமாக பிலேயாமுக்கு சொல்லியனுப்பினதுபோல, பாலாக் அவனை நன்றாய் கனம்பண்ணுகிறான். அதிகமாய் உபசரிக்கிறான். பிலேயாம் மோவாப் தேசத்திற்கு பத்திரமாக வந்து சேர்ந்திருக்கிறான்.

மோவாபியர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். தங்கள் தேசத்திற்கு பிலேயாம் பத்திரமாய் வந்து சேர்ந்திருப்பதற்காக, பாலாக் தன் தெய்வங்களுக்கு பலிகளை செலுத்தி நன்றி சொல்லுகிறான். பாலாக் தன் விக்கிரக தெய்வங்களுக்கு ஆடுமாடுகளை பலியிட்டு, அந்த மாம்சத்தினால், பிலேயாமுக்கும் அவனோடு கூடயிருப்பவர்களுக்கும் விருந்து செய்கிறான்.

பாலாக் பாகாலுடைய மேடுகளில் ஏறி, பலியிட்டிருக்க வேண்டும். பிலேயாமும், பிரபுக்களும் கீழேயிருக்கிறார்கள். பிலேயாம் பாகாலை வழிபட்டவன் என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை. ஆனாலும் பிலேயாம் பாகாலின் மேடைகளில் ஏறி, இஸ்ரவேல் ஜனத்தின் கடைசி பாளயத்தைப் பார்க்கிறான் (எண் 22:40-41).

பாலாகும் பிலேயாமும் நேரத்தை வீணாக்கவில்லை. மறுநாள் காலமே பாலாக் பிலேயாமைக் கூட்டிக்கொண்டு, அவனைப் பாகாலுடைய மேடுகளில் ஏறப்பண்ணுகிறான்; அவ்விடத்திலிருந்து பிலேயாம் இஸ்ரவேல் ஜனத்தின் கடைசிப் பாளயத்தைப் பார்க்கிறான் (எண் 22:41).

பாலாக் பிலேயாமை தன் இரதத்தில் ஏற்றி, தன்னுடைய ராஜ்யத்தின் உயர்ந்த மேடுகளில் ஏறப்பண்ணுகிறான். பிலேயாம் கர்த்தருக்கு கீழ்ப்படிவதுபோலவும், கர்த்தரைப் பிரியப்படுத்துவதுபோலவும் நடிக்கிறான். பிலேயாமின் மனதில் பாலாகை பிரியப்படுத்தவேண்டும் என்னும் எண்ணமே நிரம்பியிருக்கிறது. பாலாக் அந்த அளவுக்கு பிலேயாமை உபசரித்து கனம்பண்ணுகிறான்.

23 அதிகாரம்

பாலாகும் பிலேயாமும் இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீங்கு செய்ய முயற்சிபண்ணுகிறார்கள். அவர்களுடைய சதிஆலோசனையை மோசேயோ அல்லது இஸ்ரவேலின் மூப்பர்களோ அறியவில்லை. ஆனாலும் கர்த்தருக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை. கர்த்தர் அவர்களுடைய தீயஆலோசனையை அறிந்திருக்கிறார். மோசேயும், இஸ்ரவேலின் மூப்பரும் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக இப்போது கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபிக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக சத்துருக்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்கிறார்.

இஸ்ரவேலை சபிப்பதற்காக பாலாகும் பிலேயாமும் மேற்கொள்ளும் முதலாவது முயற்சி. அவர்கள் ஏழுபலிபீடங்களைக் கட்டி பலிகளை செலுத்துகிறார்கள் (எண் 23:1-3). கர்த்தர் பிலேயாமுக்கு சொல்லும் வார்த்தை (எண் 23:4,5). பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்கு பதிலாக, கர்த்தருடைய கட்டளையினால் அவர்களை ஆசீர்வதிக்கிறான் (எண் 23:7-10). பாலாகுக்கு மிகுந்த ஏமாற்றமுண்டாயிற்று (எண் 23:11,12).

இஸ்ரவேலை சபிப்பதற்காக பாலாகும் பிலேயாமும் மேற்கொள்ளும் இரண்டாவது முயற்சி. அவர்கள் முன்பு செய்ததுபோலவே பலிகளை செலுத்துகிறார்கள். இப்போதும் பிலேயாம் இஸ்ரவேலை சபிப்பதற்கு பதிலாக அவர்களை ஆசீர்வதிக்கிறான். பாலாகுக்கு மிகுந்த ஏமாற்றமுண்டாயிற்று (எண் 23:13-28).

இஸ்ரவேலை சபிப்பதற்காக பாலாகும் பிலேயாமும் மேற்கொள்ளும் மூன்றாவது முயற்சி (எண் 23:27-30). இதன் விவரம் அடுத்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலை சபிக்க முதலாம் முயற்சி

எண் 23:1-12

எண் 23:1. பிலேயாம் பாலாகை நோக்கி: நீர் இங்கே எனக்கு ஏழு பலிபீடங்களைக் கட்டி, ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் இங்கே எனக்கு ஆயத்தப்படுத்தும் என்றான்.

எண் 23:2. பிலேயாம் சொன்னபடியே பாலாக் செய்தான்; பாலாகும் பிலேயாமும் ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டார்கள்.

எண் 23:3. பின்பு பிலேயாம் பாலாகை நோக்கி: உம்முடைய சர்வாங்க தகனபலியண்டையில் நில்லும், நான் போய்வருகிறேன்; கர்த்தர் வந்து என்னைச் சந்திக்கிறதாயிருக்கும்; அவர் எனக்கு வெளிப்படுத்துவதை உமக்கு அறிவிப்பேன் என்று சொல்லி, ஒரு மேட்டின்மேல் ஏறினான்.

எண் 23:4. தேவன் பிலேயாமைச் சந்தித்தார்; அப்பொழுது அவன் அவரை நோக்கி: நான் ஏழு பலி பீடங்களை ஆயத்தம்பண்ணி, ஒவ்வொரு பலிபீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக் கடாவையும் பலியிட்டேன் என்றான்.

எண் 23:5. கர்த்தர் பிலேயாமின் வாயிலே வாக்கு அருளி: நீ பாலாகினிடத்தில் திரும்பிப் போய், இவ்விதமாய்ச் சொல்லக்கடவாய் என்றார்.

எண் 23:6. அவனிடத்துக்கு அவன் திரும்பிப் போனான்; பாலாக் மோவாபுடைய சகல பிரபுக்களோடுங்கூடத் தன் சர்வாங்க தகனபலியண்டையிலே நின்றுகொண்டிருந்தான்.

எண் 23:7. அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: மோவாபின் ராஜாவாகிய பாலாக் என்னைக் கிழக்கு மலைகளிலுள்ள ஆராமிலிருந்து வரவழைத்து: நீ வந்து எனக்காக யாக்கோபைச் சபிக்க வேண்டும்; நீ வந்து இஸ்ரவேலை வெறுத்து விடவேண்டும் என்று சொன்னான்.

எண் 23:8. தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி?

எண் 23:9. கன்மலையுச்சியிலிருந்து நான் அவனைக் கண்டு, குன்றுகளிலிருந்து அவனைப் பார்க்கிறேன்; அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்.

எண் 23:10. யாக்கோபின் தூளை எண்ணத்தக்கவன் யார்? இஸ்ரவேலின் காற்பங்கை எண்ணுகிறவன் யார்? நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக என்றான்.

எண் 23:11. அப்பொழுது பாலாக் பிலேயாமை நோக்கி: நீர் எனக்கு என்னசெய்தீர்; என் சத்துருக்களைச் சபிக்கும்படி உம்மை அழைப்பித்தேன், நீர் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தீர் என்றான்.

எண் 23:12. அதற்கு அவன்: கர்த்தர் என் வாயில் அருளினதையே சொல்வது என் கடமையல்லவா என்றான்.

இஸ்ரவேலை சபிப்பதற்காக பிலேயாமும் பாலாகும் மிகப்பெரிய ஆயத்த வேலைகளை செய்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் ஜனங்களை வெறுக்கவேண்டும். அவர்களை கர்த்தர் கைவிட்டு ஒதுக்கிவிடவேண்டும். கர்த்தர் மோவாபியருக்கு ஆதரவாகயிருக்கவேண்டும். அல்லது இஸ்ரவேலருக்கு ஆதரவாயிருந்து உதவி செய்யாமல் கர்த்தர் நடுநிலை வகிக்கவேண்டும். இதுவே பாலாகின் விருப்பம்.

பாலாக் பலிகளை செலுத்தி கர்த்தரைப் பிரியப்படுத்தவேண்டும் என்று நினைக்கிறான். அவன் பெரிய வெகுமதிகளைக் கொடுத்து பிலேயாமை பிரியப்படுத்தினான். பிலேயாம் பாலாகின் பக்கமாக சேர்ந்துகொள்கிறான். அதுபோலவே கர்த்தருக்கு பலிகளை செலுத்தினால், கர்த்தர் தன்மீது பிரியப்படுவார் என்றும் அவர் தனக்கு சாதகமாகயிருப்பார் என்றும் பாலாக் நினைக்கிறான்.

கர்த்தரை உலகப்பிரகாரமான காரியங்களினால் பிரியப்படுத்தி அவருடைய ஆசீர்வாதங்களையோ அல்லது கிருபைகளையோ அல்லது சிலாக்கியங்களையோ பெற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய விசுவாசத்தினாலும், நீதியினாலும், துதியினாலுமே கர்த்தரைப் பிரியப்படுத்த முடியும். கர்த்தருக்கு பலிகளைவிட நம்முடைய கீழ்ப்படிதலே உத்தமம்.

பாலாகுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியம் தெரியவில்லை. பிலேயாமுக்கோ கர்த்தரைப்பற்றி ஓரளவு மாத்திரமே தெரிகிறது. அவனும் கர்த்தரைப்பற்றி சரியாக அறியவில்லை.

பிலேயாம் பாலாகை நோக்கி, "நீர் இங்கே எனக்கு ஏழு பலிபீடங்களைக் கட்டி, ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் இங்கே எனக்கு ஆயத்தப்படுத்தும்" *(எண் 23:1)* என்று சொல்லுகிறான்.

கர்த்தருக்கு பலிசெலுத்துவதற்கு பிலேயாம் ஆயத்தம் பண்ணுகிறான். *(எண் 23:1-2).* அதன் பின்பு, பிலேயாம் கர்த்தரைச் சந்திப்பதற்காகப் போகிறான். அதுவரையிலும் பாலாகைச் சர்வாங்க தகனபலி அண்டையில் நிற்குமாறு கூறுகிறான். *(எண் 23:3).* தேவன் பிலேயாமை உயர்ந்த மேடைகளில் ஒன்றில் சந்தித்து, அவனுடைய வாயிலே வாக்கை அருளுகிறார் *(எண் 23:3-5).*

பிலேயாம் சொன்னபடியே பாலாக் செய்கிறான்; பாலாகும் பிலேயாமும் ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிடுகிறார்கள் *(எண் 23:2).*

பூமியிலுள்ள இவ்விரண்டு மனுஷரும் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள். அவர்கள் மோவாபியரின் தெய்வங்களுக்கு பலிகளை செலுத்தவில்லை. அல்லது புறஜாதியாரின் விக்கிரகங்களுக்கும் அவர்கள் பலிகளை செலுத்தவில்லை. அவர்கள் இருவரும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு, ஏழுபலிபீடங்களைக் கட்டி, ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக்கடாக்களையும் பலியிடுகிறார்கள்.

பலிகளை செலுத்திய பின்பு, பிலேயாம் பாலாகை நோக்கி, "உம்முடைய சர்வாங்க தகனபலியண்டையில் நில்லும், நான் போய்வருகிறேன்; கர்த்தர் வந்து என்னைச் சந்திக்கிறதாயிருக்கும்; அவர் எனக்கு வெளிப்படுத்துவதை உமக்கு அறிவிப்பேன்" (எண் 23:3) என்று சொல்லி, ஒரு மேட்டின்மேல் ஏறுகிறான்.

"கர்த்தர் வந்து என்னைச் சந்திக்கிறதாயிருக்கும்" என்று பிலேயாம் சொல்லுகிறான். அவன் ஏற்கெனவே கர்த்தரைச் சந்தித்திருக்கிறான். இப்பொழுதும் தன்னுடைய அனுபவத்தின் பிரகாரமாகவே இந்த வாக்கியத்தைக் கூறுகிறான்.

பிலேயாம் கர்த்தருடைய சமுகத்தில் தனிமையிலிருக்கிறான். ஒருவேளை அவன் ஒரு மேட்டின்மேல் ஏறி, அடர்ந்த தோப்புக்கு மத்தியிலே நின்றிருக்கலாம். பிலேயாமுக்கு கர்த்தரைப்பற்றி இந்த அளவுக்கு மாத்திரமே தெரிகிறது. கர்த்தரோடு தனிமையிலிருந்தால், அவரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்க முடியும் என்றும், அவரோடு சம்பாஷணை பண்ணுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் என்றும் பிலேயாம் நினைக்கிறான்.

பிலேயாமுக்கு தன்னைப்பற்றியும் ஓரளவு தெரிந்திருக்கிறது. அவன் கர்த்தருக்கு விரோதமான காரியத்தை செய்யப்போகிறான். அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது. ஆனாலும் கர்த்தர் வந்து தன்னை சந்திக்கவேண்டுமென்று பிலேயாம் எதிர்பார்க்கிறான்.

கர்த்தர் இதற்கு முன்பு பிலேயாமை சந்தித்தார். அப்போது கர்த்தர் தம்முடைய கோபத்தை அவனுக்கு வெளிப்படுத்தினார். ஆகையினால் இப்போது கர்த்தர் தன்னை சந்திப்பாரா என்னும் சந்தேகம் பிலேயாமுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் பிலேயாம் பாலாகிடத்தில் இதுபற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் வந்து என்னை சந்திக்கிறதாயிருக்கும்" என்று சொல்லுகிறான். இந்த வாக்கியத்திற்கு, "கர்த்தர் வந்து ஒரு வேளை என்னை சந்தித்தாலும் சந்திப்பார்" என்பது பொருளாகும்.

பிலேயாமினிடத்தில் நம்பிக்கையில்லாவிட்டாலும், தேவன் பிலேயாமை சந்திக்கிறார். பிலேயாமின் நோக்கம் எதுவாகயிருந்தாலும், இந்த சம்பவத்தின் மூலமாக கர்த்தர் தம்முடைய மகிமையை வெளிப்படுத்த சித்தங்கொள்கிறார். கர்த்தருக்கு பிலேயாமின்மேல் பிரியமில்லை. அவன் செலுத்தின பலிகள்மேலும் கர்த்தர் பிரியப்படவில்லை. ஆனாலும் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தை வேண்டும் என்பதற்காக கர்த்தர் பிலேயாமை சந்திக்கிறார்.

தேவன் பிலேயாமைச் சந்திக்கிறார்; அப்பொழுது பிலேயாம் கர்த்தரை நோக்கி, "நான் ஏழு பலிபீடங்களை ஆயத்தம்பண்ணி, ஒவ்வொரு பலிபீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக் கடாவையும் பலியிட்டேன்" (எண் 23:4) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் ஏழு பலிபீடங்களை ஆயத்தம் பண்ணி, ஏழுகாளைகளையும், ஏழு ஆட்டுக் கடாக்களையும் பலியிடுகிறான். இவை கர்த்தருக்காகப் பலியிடப்பட்டவை. (எண் 23:1-4). புறஜாதி தெய்வங்களுக்குப் பிலேயாம் பலியிடவில்லை. புறஜாதி தெய்வங்களுக்குப் பலியிட்டு விட்டு, கர்த்தரிடத்தில்போய், பதிலை எதிர்பார்க்க முடியாது.

பிலேயாமின் மனதிலே தெளிந்த சிந்தனையில்லை. அவனுக்குள் குழப்பம் அதிகமாயிருக்கிறது. அவன் கர்த்தருடைய ஜனத்தை சபிப்பதற்காக, கர்த்தருடைய சமுகத்திலே வந்து நிற்கிறான். கர்த்தருக்கு விரோதமான காரியத்தை செய்வதற்கு, பிலேயாம் கர்த்தருடைய உதவியை எதிர்பார்க்கிறான். கர்த்தர் தன்னை சந்திப்பாரா என்னும் சந்தேகம் அவனுக்குள் இருக்கும்போது, கர்த்தர் அவனை சந்திக்கிறார்.

கர்த்தர் தன்னை சந்திப்பது பிலேயாமுக்கு சந்தோஷமாயிருக்கிறது. பிலேயாம் பெருமை குணமுள்ளவன். அவன் கர்த்தரிடத்தில் தன்னைப்பற்றியும், தான் செய்த காரியங்களைப்பற்றியும் பெருமையாகப் பேசுகிறான். "நான் ஏழு பலிபீடங்களை ஆயத்தம்பண்ணினேன்" என்றும், "ஒவ்வொரு பலிபீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டேன்" என்றும் பிலேயாம் கர்த்தரிடத்தில் பெருமையோடு சொல்லுகிறான்.

துன்மார்க்கரின் பலிகள் கர்த்தருக்கு அருவருப்பானது. கர்த்தர் பிலேயாம் செலுத்தின பலியில் பிரியப்படவில்லை. ஆனாலும் பிலேயாம் எதிர்பார்த்த பிரகாரமாக கர்த்தர் அவனுடைய வாயிலே தம்முடைய வாக்கை அருளுகிறார் (எண் 23:5).

கர்த்தர் பிலேயாமின் வாயிலே வாக்கு அருளி, "நீ பாலாகினிடத்தில் திரும்பிப் போய், இவ்விதமாய்ச் சொல்லக்கடவாய்" என்று சொல்லுகிறார்.பிலேயாம் பாலாகினிடத்திற்கு திரும்பிப் போகிறான்; பாலாக் மோவாபுடைய சகல பிரபுக்களோடுங்கூடத் தன் சர்வாங்க தகனபலியண்டையிலே நின்றுகொண்டிருக்கிறான் (எண் 23:5,6).

இஸ்ரவேல் புத்திரரை சபிக்கவேண்டும் என்பதற்காகவே பாலாகும் பிலேயாமும் இவ்வளவு ஆயத்த வேலைகளையும் செய்திருக்கிறார்கள். கர்த்தரோ தம்முடைய வல்லமையினால் அவர்களுடைய துர்ஆலோசனைகளை அவமாக்கிப்போடுகிறார். கர்த்தர் இஸ்ரவேலை நேசிக்கிறார். அவர் இஸ்ரவேலை வெறுக்கவேண்டும் என்பது பாலாக், பிலேயாம் ஆகியோரின் விருப்பம். அதற்காகவே பாலாகும் பிலேயாமும் பலிபீடங்களைக் கட்டி, கர்த்தருக்கு பலிகளை செலுத்தியிருக்கிறார்கள்.

கர்த்தர் பிலேயாமின் வாயிலே தம்முடைய வார்த்தையை அருளுகிறார். அது பிலேயாம் எதிர்பார்த்த வார்த்தையல்ல. இந்த வார்த்தைகளை பாலாகும் எதிர்பார்க்கவில்லை. இஸ்ரவேலை சபிக்கவேண்டும் என்பது அவர்களுடைய விருப்பம். ஆனால் இஸ்ரவேலை ஆசீர்வதிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம்.

கர்த்தர் பிலேயாமின் வாயிலே இஸ்ரவேலை சபிப்பதற்கான வார்த்தைகளைப்போடாமல், அவர்களை ஆசீர்வதிப்பதற்கான வார்த்தைகளைப் போடுகிறார். கர்த்தர் இஸ்ரவேலை அழித்துப்போடாமல், அவர்களை பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறார்

"உன் தேவனாகிய கர்த்தர் பிலேயாமுக்குச் செவிகொடுக்கச் சித்தமில்லாமல், உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்பு கூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார்" (உபா 23:5).

கர்த்தர் தன் வாயில் போட்ட வாக்கை, பிலேயாம் சொல்லவேண்டும். அவன் இஸ்ரவேலை சபிப்பதற்காக வந்தவன். ஆனால் பிலேயாமோ இப்போது இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறான். கர்த்தரை மகிமைப்படுத்துகிறான். இஸ்ரவேலுக்கு சந்தோஷமும், பாதுகாப்பும், ஆசீர்வாதமும் உண்டாகும் என்று பிலேயாம் சொல்லுகிறான்.

கர்த்தர் தன் வாயில் போட்ட வாக்கியத்தை பிலேயாம் எடுத்துரைக்கிறான். கர்த்தருடைய வாக்கியத்தின் விவரம் வருமாறு :

"மோவாபின் ராஜாவாகிய பாலாக் என்னைக் கிழக்கு மலைகளிலுள்ள ஆராமிலிருந்து வரவழைத்து: நீ வந்து எனக்காக யாக்கோபைச் சபிக்க வேண்டும்; நீ வந்து இஸ்ரவேலை வெறுத்து விடவேண்டும் என்று சொன்னான்"

"தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி?"

"கன்மலையுச்சியிலிருந்து நான் அவனைக் கண்டு, குன்றுகளிலிருந்து அவனைப் பார்க்கிறேன்; அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்".

"யாக்கோபின் தூளை எண்ணத்தக்கவன் யார்? இஸ்ரவேலின் காற்பங்கை எண்ணுகிறவன் யார்? நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக" (எண் 23:7-10).

பிலேயாம் மொசொப்பொத்தோமியாவிலிருந்து வந்தவன். ஒருசிலர் இவன் எகிப்து தேசத்திலிருந்து வந்தவன் என்று கூறுகிறார்கள். "ஆராம்" மொசொப்பொத்தோமியாவில் உள்ளது (உபா 23:4).

யாக்கோபைச் சபிக்க வேண்டுமென்று பாலாகு தன்னை அழைத்து வந்ததாகப் பிலேயாம் கூறுகிறான். இதன் நிமித்தம் கர்த்தருக்குப் கோபம் உண்டாயிற்று. கர்த்தருடைய தீர்க்கதரிசி, கர்த்தருடைய ஜனங்களைச் சபிப்பதற்காக இப்படி பிரயாசப்பட்டு, பிரயாணம் பண்ணி வரக்கூடாது.

"அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்" என்று பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லுகிறான். இந்த வாக்கியம் இன்றும் நிறைவேறி வருகிறது. இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களுடைய தனித்தன்மையை இன்றும் காத்து வருகிறார்கள். புறஜாதி திருமணங்களை இஸ்ரவேல் புத்திரர்கள் ஆதரிப்பதில்லை. அவர்கள் எந்த தேசத்தில் குடியிருந்தாலும், தங்களுடைய பழக்க வழக்கங்களையும், மார்க்கக் கோட்பாடுகளையும் காத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். (ஆதி 12:1-3; ஆதி 17:6-8; ஏசா 11:10-12; எசே 48).

"தனியே வாசமாயிருப்பார்கள்" என்னும் வாக்கியம் அவர்கள் சமாதானத்தில் ஜீவிப்பார்கள் என்றும், மற்ற ஜனங்களுடைய பாவங்களிலும், கலகங்களிலும் மார்க்கங்களிலும் பங்குபெறாமல் தனியே ஜீவிப்பார்கள் என்றும் பொருள்படும் (எரே 49:31; மீகா 7:14). இஸ்ரவேல் புத்திரர் எப்போதுமே ஒரு தனி தேசமாகவும், வேறுபிரிக்கப்பட்ட ஜனமாகவும் இருக்க வேண்டும். (2கொரி 10:32)

இஸ்ரவேலை சபிக்கவேண்டும் என்பதும், அவர்களை வெறுக்கவேண்டும் என்பதும் தன்னுடைய திட்டம் என்பதை பிலேயாம் ஒத்துக்கொள்கிறான். இஸ்ரவேலை சபிப்பதற்காக பாலாக் பிலேயாமை அவனுடைய தேசத்திலிருந்து வரவழைத்திருக்கிறான். பிலேயாம் பாலாகின் நோக்கத்தையும் எடுத்து சொல்லுகிறான். பாலாகின் திட்டம் தோல்வியுற்றது என்பதையும் பிலேயாம் சொல்லுகிறான். பாலாக் விரும்புகிற பிரகாரம் தன்னால் இஸ்ரவேல் புத்திரரை சபிக்க முடியாது என்றும் பிலேயாம் சொல்லுகிறான்.

"தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி?" என்று பிலேயாம் கேட்கிறான். இஸ்ரவேலை சபிப்பதும், அவர்களை வெறுப்பதும் கர்த்தருடைய விருப்பமல்ல. கர்த்தர் விரும்பாத காரியத்தை தன்னால் செய்ய முடியாது என்று பிலேயாம் சொல்லுகிறான்.

கர்த்தர் விரும்பாத காரியத்தை தான் செய்யமாட்டேன் என்று சொல்லுவதோடு, அதைத் தன்னால் செய்ய முடியாது என்றும் பிலேயாம் சொல்லுகிறான். இஸ்ரவேலை சபிக்கவேண்டும் என்று பிலேயாம் விரும்பினாலும், அவனால் அவர்களை சபிக்கமுடியாது.

பிலேயாம் மெய்யாகவே உண்மையான காரியத்தைப் பேசுகிறான். பிலேயாமினிடத்தில் குறிசொல்லுகிற காரியம் இருந்தாலும், அவன் சன்னதம் பார்க்கிறவனாகயிருந்தாலும், அவனுடைய குறிசொல்லுதல் பலவீனமானது என்பதையும், கர்த்தருடைய வல்லமைக்கு முன்பாக அவனுடைய சன்னதம் பார்க்கும் காரியம் பிரயோஜனமற்றது என்பதையும் பிலேயாம் அறிக்கை செய்கிறான்.

பிலேயாம் தன்னுடைய பலவீனத்தை அறிக்கை செய்யும்போது, அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய சர்வவல்லமையையும், சர்வஆளுகையையும் அறிக்கை செய்கிறான். கர்த்தருடைய அனுமதியில்லாமல் தன்னால் எதையும் செய்யமுடியாது என்றும், கர்த்தர் எந்த அளவுக்கு தனக்கு அனுமதி கொடுக்கிறாரோ, அந்த அளவுக்கு மாத்திரமே தன்னால் கிரியை செய்ய முடியும் என்பதையும் பிலேயாம் அறிக்கை செய்கிறான்.

கர்த்தருடைய ஜனத்திற்கு தெய்வீக பாதுகாப்பு இருக்கிறது என்றும், கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக எழும்புகிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாக எழும்புகிறார்கள் என்றும் பிலேயாம் அறிக்கை செய்கிறான்.

பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரைப் பார்க்கும்போது, அவர்களிடத்தில் சில விசேஷித்த குணாதிசயங்களைப் பார்க்கிறான். இவையெல்லாம் பிலேயாம் எதிர்பார்த்திராத காரியங்கள். பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரை கன்மலை உச்சியிலிருந்தும், குன்றுகளிலிருந்தும் பார்க்கிறான். அவர்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜாதியார் விசேஷித்த ஜனமாயும், மற்ற ஜாதியாரிடமிருந்து வித்தியாசமான ஜனமாயும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரைப் பார்க்கும்போது பிலேயாமுக்கு மிகவும் ஆச்சரியமாகயிருக்கிறது. பாலாக் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி பிலேயாமினிடத்தில் தப்பிதமான காரியங்களை சொல்லியிருக்கிறான்.

பாலாக் மீதியானரின் மூப்பரை நோக்கி, "மாடு வெளியில் புல்லை மேய்கிறதுபோல, இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்துபோடும்" (எண் 22:4) என்று இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொன்னான். பாலாக் பிலேயாமினிடத்திலும் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி இதுபோன்ற தப்பிதமான வார்த்தையையே சொல்லியிருக்கிறான். இதனால் பிலேயாமின் மனதிலே இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி தப்பிதமான எண்ணம் உண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனத்தார் மாட்டு மந்தையைப்போல ஒழுங்கும் கிரமமும் இல்லாதிருப்பார்கள் என்றும், அவர்கள் முரட்டுக்குணமுள்ளவர்களாகவும், எதற்கும் அடங்காதவர்களாகவும், கலககுணமுள்ளவர்களாகவும் இருப்பார்கள் என்றும் பிலேயாம் எதிர்பார்க்கிறான். ஆனால் அவன் கன்மலை உச்சியிலிருந்து, இஸ்ரவேல் புத்திரரை பார்த்தபோது அவனுக்கு அதிர்ச்சி உண்டாயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய கோத்திர வரிசைப்பிரகாரம், ஒழுங்காகவும் கிரமமாகவும் பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

இஸ்ரவேலரின் பாளயத்தில் ஏராளமான ஜனங்கள் இருந்தாலும், அது அசுத்தமில்லாமல் சுத்தமாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் பயிற்சி பெற்ற சேனையைப்போல, அணியணியாக நிற்கிறார்கள். பிலேயாம் மற்ற தேசத்து ஜனங்களையும் பார்த்திருக்கிறான். இப்போது அவன் இஸ்ரவேல் புத்திரரையும் பார்க்கிறான். புறஜாதி ஜனங்களுக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் பிலேயாமினால் வித்தியாசம் காணமுடிகிறது.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு நம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்கள். நாம் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், உலகப்பிரகாரமான காரியங்களுக்கு வேறுபிரிந்து ஜீவிக்கவேண்டும். உலகத்தாருக்கும் நமக்கும் வித்தியாசம் காணப்படவேண்டும். நாம் இந்த உலகத்தில் ஜீவித்தாலும், நாம் கர்த்தருக்குப் பிரியமானவர்களாகவும், பிரயோஜனமானவர்களாகவும் ஜீவிக்கவேண்டும். இது ஒவ்வொரு விசுவாசிக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற கடமை.

விசுவாசிகளுடைய மனச்சாட்சி சுத்தமனச்சாட்சியாயிருக்கவேண்டும். கர்த்தருடைய கட்டளைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படியவேண்டும் என்னும் ஆர்வம் நம்முடைய மனதில் இருக்கவேண்டும். நாம் கர்த்தருக்கு கீழ்ப்படியும்போது, அவருடைய விசேஷித்த ஆசீர்வாதங்களும், விசேஷித்த சிலாக்கியங்களும், விசேஷித்த ஆறுதல்களும் நமக்கு கிடைக்கும். கர்த்தருடைய ஜனம் எல்லா சூழ்நிலைகளிலும், கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாகயிருப்பார்கள் என்று பிலேயாம் எதிர்பார்த்தான். ஆனால் அவன் இஸ்ரவேல் புத்திரரை குன்றுகளிலிருந்து பார்க்கும்போது, அவனுடைய மனதில் அதிர்ச்சியுண்டாயிற்று. இஸ்ரவேல் ஜனத்தார் திரளான எண்ணிக்கையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

பாலாக் இஸ்ரவேல் ஜனத்தாரைப்பற்றி பிலேயாமினிடத்தில் சொன்னபோது, அவர்கள் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனங்கள் என்று சொல்லியிருக்கிறான். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். ஜனத்திரள் பெருத்திருப்பதும் கர்த்தருடைய ஆசீர்வாதம்.

பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரின் திரளான எண்ணிக்கையைப்பற்றிச் சொல்லும்போது, "யாக்கோபின் தூளை எண்ணத்தக்கவன் யார்? இஸ்ரவேலின் காற்பங்கு எண்ணுகிறவன் யார்?" (எண் 23:10) என்று சொல்லுகிறான்.

மோவாபின் சமவெளிகளில் இஸ்ரவேல் புத்திரர்கள் கூடியிருக்கிறார்கள். தேவன் ஆபிரகாமோடும், (ஆதி 13:16) யாக்கோபோடும் (ஆதி 28:14; ஆதி 15:5; ஆதி 22:17; ஆதி 26:4) பண்ணிய உடன்படிக்கையில் இஸ்ரவேலின் ஜனங்களைத் தூள் என்று வர்ணிக்கிறார். திரளான ஜனமாக இருப்பார்கள் என்பது அதன் பொருள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏராளமாயிருப்பதைப் பார்த்து பாலாக் கலக்கமடைந்திருக்கிறான். ஆனால் அவர்களுடைய திரளான எண்ணிக்கையைப்பற்றி பாலாக் பிலேயாமினிடத்தில் ஒன்றும் சொல்லவில்லை. பாலாக் இஸ்ரவேல் ஜனத்தாரின் திரளான எண்ணிக்கையைப்பற்றி மீதியானரின் மூப்பரிடத்தில் சொன்னான்.

"ஜனங்கள் ஏராளமாயிருந்தபடியினால், மோவாப் மிகவும் பயந்து, இஸ்ரவேல் புத்திரரினிமித்தம் கலக்கமடைந்து, மீதியானரின் மூப்பரை நோக்கி: மாடு வெளியின் புல்லை மேய்கிறதுபோல, இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்துபோடும் என்றான். அக்காலத்திலே சிப்போரின் குமாரனாகிய பாலாக் மோவாபியருக்கு ராஜாவாயிருந்தான்" (எண் 22:2,3).

யாக்கோபின் சந்ததியார் திரளான எண்ணிக்கையிலிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். "உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும், பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 28:14).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருக்கும்போது, அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும், நான்கு திசைகளிலும் பாளயமிறங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேலரின் பாளயம் நான்கு காற்பங்குகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. பிலேயாம் குன்றுகளிலிருந்து இஸ்ரவேல் புத்திரரைப் பார்க்கும்போது, அவன் இஸ்ரவேலரின் மொத்த பாளயத்தையும் பார்க்கவில்லை. அவர்களுடைய ஒரு காற்பங்கை மாத்திரமே பார்க்கிறான். அதைக்கூட பிலேயாமால் எண்ண முடியவில்லை.

"இஸ்ரவேலின் காற்பங்கை எண்ணுகிறவன் யார்" (எண் 23:10) என்று பிலேயாம் சொல்லுகிறான். இஸ்ரவேலின் காற்பங்கையே எண்ண முடியாதவர்களால், அவர்களுடைய முழுப்பங்கையும் எண்ண முடியாது. அவர்கள் அத்தனை திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் பிலேயாம் இஸ்ரவேலின் காற்பங்கைப் பற்றிப் பேசுகிறான். இஸ்ரவேல் புத்திரர்கள் நான்கு பெரிய பாளயங்களாகப் பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

பிலேயாம் இஸ்ரவேல் ஜனத்தாரைப் பார்த்து, அவர்களுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறான். "நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக" (எண் 23:10) என்று பிலேயாம் சொல்லுகிறான்.

இஸ்ரவேல் ஜனத்தார் தேவனோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு உடன்படிக்கையின் ஜனமாயிருக்கிறார்கள். இந்த உலகத்தில் தன்னுடைய முடிவு எப்படியிருக்கும் என்று பிலேயாமுக்கு தெரியவில்லை. ஆனாலும் தன்னுடைய முடிவு இஸ்ரவேல் ஜனத்தாரின் முடிவு போல இருக்கவேண்டும் என்று பிலேயாம் ஆசைப்படுகிறான்.

எல்லா மனுஷருக்கும் மரணமே முடிவு. துன்மார்க்கன் மரிப்பதுபோல, நீதிமானும் மரித்துப்போகிறான். மரணம் எல்லோருக்கும் ஒன்றுபோல் சம்பவித்தாலும், மரித்த பின்பு நீதிமான் பரலோகத்திற்கும், துன்மார்க்கன் நரகத்திற்கும் போவான். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போது, பிலேயாமைப்போல நம்முடைய மரணத்தைப்பற்றியும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

பிலேயாம் தன்னுடைய மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக" என்று சொல்லுகிறான். நீதிமான் சரீரப்பிரகாரமாக மரித்த பின்பு, அவன் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வான். அவனுடைய ஆத்துமா பரலோகத்திலே கர்த்தரோடு நித்திய காலமாய் ஜீவனோடிருக்கும். நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும் ஒன்றுபோல் மரணம் வந்தாலும், மரித்த பின்பு அவர்களுடைய முடிவு வித்தியாசமாயிருக்கும்.

பிலேயாமின் விண்ணப்பம் அங்கிகரிக்கப்படவில்லை. இஸ்ரவேலின் பட்டயத்தினால் பிலேயாம் மரித்தான். இது அவனுக்கு நியாயத்தீர்ப்பாக வந்தது (எண் 31:8). அநீதத்தின் கூலியைப் பிலேயாம் விரும்பியதினால் (2பேதுரு 2:15), அவன் அநியாயமாக மரித்துப் போனான். தேவனோடு தனக்குள்ள ஐக்கியத்தைக் கனத்திற்கும், ஐசுவரியத்திற்கும் பிலேயாம் விற்றுப் போட்டான்.

புதிய ஏற்பாடு இவனைப் பற்றிக் கூறும்போது, தேவனை விட்டு விலகிப்போனவன் என்று கூறுகிறது. (2பேதுரு 2:15-16; யூதா 1:11; வெளி 2:14). பிலேயாம் தேவனுடைய கிருபையைப் பெற்றிருந்தவன். தன் பொருளாசையினால், தேவனை விட்டு விலகிப்போனான். நீதிமானாக மரிக்கக்கூடிய சிலாக்கியம் இவனுக்கு இருந்தது. ஆனாலும், இஸ்ரவேல் புத்திரரைப் பாவம் செய்வதற்கு வழிநடத்தியதினால், இவன் இஸ்ரவேலரின் பட்டயத்தினால் மரித்தான்.

நீதிமானின் மரணம் எப்படியிருக்கும் என்று பிலேயாமிற்குத் தெரிந்திருக்கிறது. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகியோரின் மரணத்தைப் பற்றி பிலேயாம் அறிந்திருக்கிறான். அவர்கள் வரப்போகிற நகரத்தை எதிர்நோக்கி ஜீவித்தார்கள். (எபி 11: 4-22). நீதிமான் மரிப்பதுபோல மரிக்க வேண்டுமானால், அவன் நீதிமானாக இருக்க வேண்டும். நீதிமானைப் போல உயிர்த்தெழவேண்டும். நீதிமானுக்குரிய நம்பிக்கை அவனிடத்திலும் காணப்படவேண்டும். (வெளி 22:11).

நம்முடைய மரணத்தை நாம் நினைக்கும்போது, பிலேயாம் நினைப்பதுபோல, "நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக" என்று நினைக்கவேண்டும். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். நாம் உயிரோடிருக்கும் நாளெல்லாம் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருக்கு பிரியமானவர்களாய் ஜீவிக்கவேண்டும். கர்த்தரை நம்புகிறவர்கள் பாக்கியவான்கள். நீதிமான்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்கள் இம்மையில் மாத்திரமல்ல, மரித்த பின்பு மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுகிறவர்கள்.

இந்தப் பிரபஞ்சத்தில் அநேகர் நீதிமான் மரிப்பதுபோலவே மரிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் நீதிமானைப்போல ஜீவிப்பதில்லை. நீதிமானைப்போல ஜீவிக்கிறவர்கள் மாத்திரமே, நீதிமான் மரிப்பதுபோல மரிக்கமுடியும். துன்மார்க்கமாய் ஜீவிக்கிறவர்கள், துன்மார்க்கன் மரிப்பதுபோலவே மரிப்பார்கள்.

பிலேயாமின் வார்த்தைகளைக்கேட்டு பாலாக் அதிர்ச்சியடைகிறான். இஸ்ரவேலை சபிப்பதற்காகவே பாலாக் பிலேயாமை அழைத்து வந்திருக்கிறான். ஆனால் பிலேயாமோ இஸ்ரவேலை சபிக்காமல் அவர்களை ஆசீர்வதிக்கிறான்.

அப்பொழுது பாலாக் பிலேயாமை நோக்கி, "நீர் எனக்கு என்னசெய்தீர்; என் சத்துருக்களைச் சபிக்கும்படி உம்மை அழைப்பித்தேன், நீர் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தீர்" (எண் 23:11) என்று சொல்லுகிறான்.

பாலாக் பிலேயாமின் தீர்க்கதரிசனத்தினால் ஏமாற்றமடைகிறான். பாலாகின் திட்டத்திற்கு எல்லாம் நேர்மாறாக நடைபெறுகிறது. தீமையைச் சிந்தித்து, சதியாலோசனை பண்ணுகிறவர்களுக்கு ஆரம்பத்தில் எல்லாம் நன்றாக நடப்பதுபோன்று இருக்கும். ஆனால் துன்மார்க்கரின் முடிவோ அழிவு (நீதி 5:4; நீதி 14:12-13; நீதி 20:21).

பாலாகும் பிலேயாமும் கர்த்தருக்கு பலிகளை செலுத்தினார்கள். தான் செலுத்தின பலியில் கர்த்தர் பிரியமாயிருப்பார் என்றும், தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவார் என்றும் பாலாக் எதிர்பார்த்தான். ஆனால் அவனுடைய விருப்பத்தின் பிரகாரமாக பிலேயாம் பேசவில்லை. பாலாக் கர்த்தரை மறந்துவிடுகிறான். அவன் பிலேயாமின்மேல் கோபப்படுகிறான்.

பிலேயாமால் பாலாகின் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை. பிலேயாம் பாலாகை நோக்கி, "கர்த்தர் என் வாயில் அருளினதையே சொல்வது என் கடமையல்லவா" (எண் 23:12) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேலை சபிக்க இரண்டாம் முயற்சி எண் 23:13-26

எண் 23:13. பின்பு பாலாக் அவனை நோக்கி: நீர் அவர்களைப் பார்க்கத்தக்க வேறொரு இடத்திற்கு என்னோடேகூட வாரும்; அங்கே அவர்கள் எல்லாரையும் பாராமல், அவர்களுடைய கடைசிப் பாளயத்தைமாத்திரம் பார்ப்பீர்; அங்கேயிருந்து எனக்காக அவர்களைச் சபிக்கவேண்டும் என்று சொல்லி,

எண் 23:14. அவனைப் பிஸ்காவின் கொடுமுடியில் இருக்கிற சோப்பீமின் வெளியிலே அழைத்துக்கொண்டு போய், ஏழு பலிபீடங்களைக் கட்டி, ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டான்.

எண் 23:15. அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: இங்கே உம்முடைய சர்வாங்க தகனபலியண்டையில் நில்லும்; நான் அங்கே போய்க் கர்த்தரைச் சந்தித்துவருகிறேன் என்றான்.

எண் 23:16. கர்த்தர் பிலேயாமைச் சந்தித்து, அவன் வாயிலே வசனத்தை அருளி: நீ பாலாகினிடத்திற்குத் திரும்பிப்போய், இவ்விதமாய்ச் சொல்லக்கடவாய் என்றார்.

எண் 23:17. அவனிடத்திற்கு அவன் வருகிறபோது, அவன் மோவாபின் பிரபுக்களோடுங்கூடத் தன்னுடைய சர்வாங்க தகனபலியண்டையிலே நின்றுகொண்டிருந்தான்; பாலாக் அவனை நோக்கி: கர்த்தர் என்ன சொன்னார் என்று கேட்டான்.

எண் 23:18. அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: பாலாகே, எழுந்திருந்து கேளும்; சிப்போரின் குமாரனே, எனக்குச் செவிகொடும்.

எண் 23:19. பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?

எண் 23:20. இதோ, ஆசிர்வதிக்கக் கட்டளைபெற்றேன்; அவர் ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்பக்கூடாது.

எண் 23:21. அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை; அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார்; ராஜாவின் ஜயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது.

எண் 23:22. தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; காண்டாமிருகத்துக்கொத்த பெலன் அவர்களுக்கு உண்டு.

எண் 23:23. யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை; தேவன் என்னென்ன செய்தார் என்று கொஞ்சக்காலத்திலே யாக்கோபையும் இஸ்ரவேலையும் குறித்துச் சொல்லப்படும்.

எண் 23:24. அந்த ஜனம் துஷ்ட சிங்கம்போல எழும்பும், பால சிங்கம்போல நிமிர்ந்து நிற்கும்; அது தான் பிடித்த இரையைப் பட்சித்து, வெட்டுண்டவர்களின் இரத்தத்தைக் குடிக்குமட்டும் படுத்துக்கொள்வதில்லை என்றான்.

எண் 23:25. அப்பொழுது பாலாக் பிலேயாமை நோக்கி: நீர் அவர்களைச் சபிக்கவும் வேண்டாம், அவர்களை ஆசீர்வதிக்கவும் வேண்டாம் என்றான்.

எண் 23:26. அதற்குப் பிலேயாம் பாலாகைப் பார்த்து: கர்த்தர் சொல்லுகிறபடியெல்லாம் செய்வேன் என்று உம்மோடே நான் சொல்லவில்லையா என்றான்.

இஸ்ரவேலை சபிப்பதற்கு இரண்டாவது முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அதற்கான ஆயத்த வேலைகளை பாலாகும் பிலேயாமும் செய்கிறார்கள். இப்பொழுது இடம் மாற்றப்படுகிறது.

பாலாக் பிலேயாமை நோக்கி, "நீர் அவர்களைப் பார்க்கத்தக்க வேறொரு இடத்திற்கு என்னோடேகூட வாரும்; அங்கே அவர்கள் எல்லாரையும் பாராமல், அவர்களுடைய கடைசிப் பாளயத்தைமாத்திரம் பார்ப்பீர்; அங்கேயிருந்து எனக்காக அவர்களைச் சபிக்கவேண்டும்" (எண் 23:13) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் ஏராளமான இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்ததினிமித்தமாக இவ்வாறு தீர்க்கதரிசனம் உரைத்தான் என்று பாலாக் தீர்மானம் பண்ணுகிறான். ஆகையினால், இஸ்ரவேலரின் பாளயத்தில் ஒருசிலரை மாத்திரம் பார்க்கக்கூடிய கடைசி பாளயத்தை பாலாக் பிலேயாமிற்குக் காண்பிக்கிறான். இதன் மூலமாக அடுத்து வரும் தீர்க்கதரிசனம் தனக்குச் சாதகமாக இருக்குமென்பது பாலாகின் நம்பிக்கை.

இஸ்ரவேலை சபிப்பதற்காக அவர்கள் மேற்கொண்ட முதலாவது முயற்சியில் என்னென்ன பலிகளை செலுத்தினார்களோ, அதே பலிகளை இப்பொழுதும் செலுத்துகிறார்கள். அதற்காக புதிய பலிபீடங்களைக் கட்டுகிறார்கள்.

பாலாக் பிலேயாமைப் பிஸ்காவின் கொடுமுடியில் இருக்கிற சோப்பீமின் வெளியிலே அழைத்துக்கொண்டு போகிறான். அங்கே அவன் ஏழு பலிபீடங்களைக் கட்டி, ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலி யிடுகிறான் (எண் 23:14). பாலாக் பலிகளை செலுத்தும்போது கூடவே இருக்கிறான்.

சோப்பீம் என்னும் இடம் முதலாவது கட்டப்பட்ட ஏழு பலிபீடங்களுக்கு வடக்கு திசையில் உள்ளது. இது இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ளது. இங்கிருந்து இஸ்ரவேலர் எல்லோரையும் பார்க்காமல், அவர்களுடைய கடைசி பாளயத்தை மட்டும் பார்க்க முடியும். இங்கு மறுபடியும் பலிகள் செலுத்தப்படுகிறது. (எண் 23:1).

அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி, "இங்கே உம்முடைய சர்வாங்க தகனபலியண்டையில் நில்லும்; நான் அங்கே போய்க் கர்த்தரைச் சந்தித்துவருகிறேன்" (எண் 23:15) என்று சொல்லி புறப்பட்டுப்போகிறான்.

பிலேயாம் மறுபடியும் கர்த்தரை சந்திக்கப் புறப்பட்டுப்போகிறான். கர்த்தர் இரண்டாம் முறையாக பிலேயாமை சந்திக்கிறார். கர்த்தர் இப்போது அவனுடைய வாயிலே வேறொரு வார்த்தையை அருளுகிறார். தாம் ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளை கர்த்தர் மாற்றவில்லை. கர்த்தர் தாம் ஏற்கெனவே சொன்னதை, இப்போது புதிய வார்த்தைகளினால் சொல்லுகிறார்.

கர்த்தர் பிலேயாமைச் சந்தித்து, அவன் வாயிலே வசனத்தை அருளுகிறார். கர்த்தர் பிலேயாமை நோக்கி, "நீ பாலாகினிடத்திற்குத் திரும்பிப்போய், இவ்விதமாய்ச் சொல்லக்கடவாய்" (எண் 23:16) என்று சொல்லுகிறார்.

பிலேயாம் பாலாகினிடத்திற்கு வருகிறான். அப்போது, பாலாக் மோவாபின் பிரபுக்களோடுங்கூடத் தன்னுடைய சர்வாங்க தகனபலியண்டையிலே நின்று கொண்டிருக்கிறான்; பாலாக் பிலேயாமை நோக்கி, "கர்த்தர் என்ன சொன்னார்" (எண் 23:17) என்று கேட்கிறான்.

பிலேயாம் இப்போது இஸ்ரவேல் புத்திரரை சபிப்பான் என்று ஆசையாய்க் காத்துக்கொண்டிருக்கிறான். பிலேயாம் தன்னிடத்தில் வந்தவுடனே, பாலாக் அவனை நோக்கி, "கர்த்தர் என்ன சொன்னார்" என்று ஆவலாயும் அவசரமாயும் கேட்கிறான். இந்த முறை கர்த்தருடைய வார்த்தை பாலாகுக்கு தனிப்பட்ட முறையில் சொன்னது போல இருக்கிறது. "பாலாகே, எழுந்திருந்து கேளும்; சிப்போரின் குமாரனே, எனக்குச் செவிகொடும்" (எண் 23:18) என்று பிலேயாம் கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான்.

பிலேயாமால் இஸ்ரவேல் புத்திரரை சபிக்க முடியவில்லை. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறது. கர்த்தருடைய வல்லமையை மீறி பிலேயாமால் ஒன்றும் பேசமுடியவில்லை. ஏற்கெனவே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளை சொன்னார். இப்போதோ, முந்தின ஆசீர்வாதத்தைவிட பிந்தின ஆசீர்வாதம் மிகவும் அதிகமாயிருக்கிறது.

அப்பொழுது பிலேயாம் தன் வாக்கியத்தை எடுத்துரைக்கிறான். பிலேயாம் சொன்ன வாக்கியத்தின் விவரம் வருமாறு:

பாலாகே, எழுந்திருந்து கேளும்; சிப்போரின் குமாரனே, எனக்குச் செவிகொடும் (எண் 23:18).

பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? (எண் 23:19).

இதோ, ஆசிர்வதிக்கக் கட்டளைபெற்றேன்; அவர் ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்பக்கூடாது. அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை; அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார்; ராஜாவின் ஜயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது (எண் 23:20,21).

தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; காண்டாமிருகத்துக்கொத்த பெலன் அவர்களுக்கு உண்டு (எண் 23:22).

யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை; தேவன் என்னென்ன செய்தார் என்று கொஞ்சக்காலத்திலே யாக்கோபையும் இஸ்ரவேலையும் குறித்துச் சொல்லப்படும் (எண் 23:23).

அந்த ஜனம் துஷ்ட சிங்கம்போல எழும்பும், பால சிங்கம்போல நிமிர்ந்து நிற்கும்; அது தான் பிடித்த இரையைப் பட்சித்து, வெட்டுண்டவர்களின் இரத்தத்தைக் குடிக்குமட்டும் படுத்துக்கொள்வதில்லை (எண் 23:24).

தேவனைப் பற்றிய சத்தியம் வேதாகமத்தில் மிகவும் எளிமையாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது சத்தியம். தேவன் ஆவியாயிருக்கிறார். அவர் ஒரு மனுஷரல்ல. (யோவான் 4:24).

பரிசுத்த வேதாகமத்தில் தேவனுடைய குணாதிசயத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. தேவன் மனுஷனைப் போல பொய்யுரைக்க மாட்டார்.
2. ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, தேவன் மனம் வருந்தமாட்டார். தம்முடைய வாக்குத்தத்தங்களை அவர் மாற்றிக் கொள்வதில்லை. ஆயினும், மனுஷனைச் சிருஷ்டித்ததற்காக தேவன் வருத்தப் பட்டார். (ஆதி 6:6) மனுஷனுடைய பாவத்தினால் தேவன் பலசமயங்களில் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றாமல் தவிர்த்திருக்கிறார். (1சாமு 15:35). பாவம் செய்த ஜனங்களுக்குச் சாபமும், அவர்கள் மனந்திருந்தி, கர்த்தரிடத்தில் வரும்போது, அவர்களுக்கு ஆசீர்வாதமும் உண்டாகும். (யாத் 32:14; நியா 2:18; சங் 106:45) ஜனங்களுக்குத் தண்டனை அதிகமாகவே கிடைத்திருக்கிற போதும் தேவன் தமது மனதை மாற்றிக் கொள்வதில்லை. (2சாமு 24:16).

3. அவர் சொன்னதைச் செய்கிறவர். அவர் வசனிப்பதை நிறைவேற்றுகிறவர். பாவம் செய்கிற ஆத்துமா சாகும். (ஆதி 2:17; யாத் 32:32-33; எசே 18:4,24-25; ரோமர் 1:18-32; 2கொரி 6:9-10; கலா 5:19-21; கலா 6:7-8). பாவம் செய்கிறவனைக் கர்த்தர் சபிப்பார். தமக்குக் கீழ்ப்படிகிறவனைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

4. கர்த்தர் தாம் சொன்னவற்றை நன்மையாக ஆக்குவார். இஸ்ரவேலைப் பற்றி கர்த்தர் ஏற்கெனவே தமது சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேலைத் தேவன் அழைத்த அழைப்பும், அவருடைய வாக்குத்தத்தங்களும், அவருடைய உடன்படிக்கைகளும் நித்தியமானவை. மாறாதவை.

இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்குமாறு தேவன் பிலேயாமிற்குக் கட்டளை கொடுக்கிறார். (எண் 23:20). தேவன் தம்முடைய இஸ்ரவேலரை ஏற்கெனவே ஆசீர்வதித்திருக்கிறார். ஆகையினால் தமது ஆசீர்வாதத்தை அவர் மாற்றிக் கொள்ளமாட்டார். அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை. ஏனெனில் இவரே அவர்களுடைய தேவனாகிய கர்த்தர். (எண் 23:21-24).

பரிசுத்த வேதாகமத்தில் இஸ்ரவேலைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை. அக்கிரமம் என்பதற்கான எபிரெய வார்த்தை "அவென்" என்பதாகும். குற்றம் என்பதற்கான எபிரெய வார்த்தை "ஆமால்" என்பதாகும். செப்துவஜிந்த் பதிப்பில் "யாக்கோபில் பிரச்சனை இருக்காது. இஸ்ரவேலில் வருத்தம் காணப்படாது" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

2. அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார். வனாந்தர பிரயாணத்தில் கர்த்தர் இந்த வாக்கியத்தை நிரூபித்திருக்கிறார். எமோரியர், பாசானியர் ஆகியோரின் இராட்சத ராஜாக்களாகிய சீகோனையும், ஓகையும் இஸ்ரவேல் புத்திரர் ஜெயித்தபோது, கர்த்தர் மறுபடியுமாக இந்த வாக்கியத்தை நிரூபித்திருக்கிறார். (எண் 21:21-25).

3. ராஜாவின் ஜயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது. யுத்தத்தில் வெற்றி பெற்றதினால் இஸ்ரவேல் புத்திரர்கள் ஜயகெம்பீரத்தோடு ஆர்ப்பரிக்கிறார்கள். கர்த்தர் அவர்களோடு இருந்ததினால் மாத்திரமே அவர்களுக்கு ஜெயம் உண்டாயிற்று.

4. தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார் (எண் 23:22, யாத் 12:19).

5. காண்டாமிருகத்துக்கொத்த பெலன் அவர்களுக்கு உண்டு. (எண் 23:22).

6. யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை. (எண் 23:23). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மத்தியில் இருந்து, எல்லாவிதமான குறிசொல்லுதல்கள், மந்திரவாதங்கள் ஆகியவற்றிலிருந்து, தமது ஜனத்தைப் பாதுகாத்துக் கொள்கிறார்.

7. இஸ்ரவேல் புத்திரரின் வருங்காலம். (எண் 23:23-24). தேவனுடைய உதவியினால் இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களுடைய சத்துருக்களை முறியடிப்பார்கள்.

"யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை" என்று பிலேயாம் சொல்லுகிறான். பிலேயாம் தீர்க்கதரிசனம் கூறாமல், குறிசொன்னான் என்று கூறுவதற்கு ஒருசிலர் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இதற்கு வேதத்தில் ஆதாரம் எதுவுமில்லை. பிலேயாம் விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை. எண் 24:1 ஆவது வசனத்தில் "அவன் முந்திச் செய்துவந்ததுபோல நிமித்தம் பார்க்கப் போகாமல்" என்னும் வாக்கியம் இருப்பதினால், அவன் குறிசொல்லியிருக்க வேண்டுமென்பது சிலருடைய விவாதமாகும். இதற்கும் வேதத்தில் ஆதாரம் எதுவுமில்லை.

இஸ்ரவேல் புத்திரர் மூன்று காரியங்களோடு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அவையாவன :

1. காண்டாமிருகம் (எண் 23:22; எண் 24:8)

2. துஷ்ட சிங்கம்

3. பாலசிங்கம்

"அது தான் பிடித்த இரையைப் பட்சித்து" என்று பிலேயாம் சொல்லுகிறான். இஸ்ரவேல் புத்திரர்கள் கானானிலுள்ள தேசங்களையெல்லாம் ஜெயித்து, கானான் தேசத்தைச் சுதந்தரித்து, அங்கு குடியேறுவார்கள் என்பதை இந்த வாக்கியம் முன்னறிவிக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்கோ அல்லது அழிப்பதற்கோ ஒரு காரணமுமில்லை. கர்த்தர் காரணமில்லாமல் எதையும் செய்கிறவரல்ல. கர்த்தருடைய செய்கைகள் எல்லாமே நீதியாயும் நியாயமாயும் இருக்கும். இஸ்ரவேல் புத்திரரை அழிக்க நினைப்பது வீணான காரியம். அது நிறைவேறப்போவதில்லை என்று பிலேயாம் பாலாக்குக்கு சொல்லுகிறான்.

கர்த்தர் மனம் மாறுகிற தேவனல்ல. அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தை சொல்லியிருக்கிறார். அவர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவார். கர்த்தர் ஒருதரம் வாக்குப்பண்ணிவிட்டு, அதன் பின்பு மனம்மாறி, தாம் ஏற்கெனவே சொன்ன வாக்குத்தத்தத்தை திரும்பப்பெற்றுக்கொள்ளமாட்டார்.

இப்போது இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஒரு அக்கிரமமும் காணப்படவில்லை. அவர்கள் மத்தியிலே விக்கிரகாராதனையில்லை. இஸ்ரவேல் ஜனத்தாருடைய விக்கிரகாராதனையே கர்த்தருடைய பார்வையில் மிகப்பெரிய அக்கிரமமாகவும் மீறுதலாகவும் காணப்படுகிறது. ஆனால் அவர்களோ இப்போது விக்கிரகங்களை ஆராதியாமல் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கிறார்கள்.

பாவம் மாத்திரமே இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தரை விட்டுப் பிரிக்கக்கூடியது. ஆனால் அவர்கள் மத்தியிலே இப்போது பாவம் காணப்படவில்லை. ஆகையினால் கர்த்தர் அவர்கள்மீது கோபப்பட்டு அவர்களை அழிப்பதற்கு இப்போது வாய்ப்பு இல்லை.

கர்த்தருடைய வல்லமையும் மாறாத வல்லமையாயிருக்கிறது. அவர் சர்வவல்லமையுள்ளவர். அவருடைய வல்லமைக்கு விரோதமாக எந்த வல்லமையாலும் எதிர்த்து நிற்கமுடியாது. கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடுகூட, அவர்களுக்கு பாதுகாப்பாயிருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். ராஜாவின் ஜெயக்கம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது.

பிலேயாம் இஸ்ரவேலருக்கு விரோதமாக குறிசொல்லுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறான். கர்த்தர் அவர்களோடு கூடயிருப்பதினால், அவர்களுக்கு விரோதமாக குறிசொல்ல வாய்ப்பே இல்லை என்பதை பிலேயாம் நன்றாய் அறிந்திருக்கிறான். பிலேயாம் இஸ்ரவேலுக்கு விரோதமாக மந்திரவாதம் பண்ணினாலும், குறிசொன்னாலும் அது சித்திக்கப்போவதில்லை என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும்.

பிலேயாம் இஸ்ரவேலைப்பற்றிச் சொல்லும்போது, "யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதமில்லை" என்றும், "இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை" (எண் 23:23). என்றும் சொல்லுகிறான். பரலோகத்தின் ஆசீர்வாதங்களுக்கு விரோதமாக நரகத்தின் சாபங்களால் எந்த கிரியையையும் நடப்பிக்க முடியாது.

இஸ்ரவேல் புத்திரரை தன்னால் சபிக்க முடியாது என்பது பிலேயாமுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரை அழிக்க முடியாது. அவர்கள் பாலாகையும் அவனுடைய ஜனத்தாரையும் அழித்துப்போடுவார்கள். பாலாக் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனால் அவனுக்கு அழிவு நிச்சயமாய் வரும். பாலாக் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டுமென்றால், இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போகாமல், விலகிப்போய்விடவேண்டும்.

பிலேயாம் இஸ்ரவேல் ஜனத்தைப்பற்றிச் சொல்லும்போது, "அந்த ஜனம் துஷ்ட சிங்கம்போல எழும்பும், பால சிங்கம்போல நிமிர்ந்து நிற்கும்; அது தான் பிடித்த இரையைப் பட்சித்து, வெட்டுண்டவர்களின் இரத்தத்தைக் குடிக்குமட்டும் படுத்துக்கொள்வதில்லை" (எண் 23:24) என்று சொல்லுகிறான்.

பிலேயாமின் வார்த்தை பாலாகுக்கு ஏமாற்றமாயிருக்கிறது. பாலாகுக்கு மாத்திரமல்ல தன் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் பிலேயாமுக்கும் ஏமாற்றமாயிருக்கிறது. தான் விரும்பியதை பிலேயாமல் பேசமுடியவில்லை. கர்த்தர் அனுமதிக்கிற வார்த்தைகளை மாத்திரமே பிலேயாமால் பேசமுடிகிறது.

அப்பொழுது பாலாக் பிலேயாமை நோக்கி, "நீர் அவர்களைச் சபிக்கவும் வேண்டாம், அவர்களை ஆசீர்வதிக்கவும் வேண்டாம்" (எண் 23:25) என்று சொல்லுகிறான். பிலேயாம் ஒரு வார்த்தையும் பேசாமல் அமைதியாகயிருந்தால், அதுவே தனக்கு ஆறுதலாகயிருக்கும் என்று பாலாக் நினைக்கிறான். ஏனென்றால் பிலேயாமின் வாயிலிருந்து, இஸ்ரவேலுக்கு விரோதமான சாபவார்த்தை ஒன்றுகூட வரவில்லை. ஆனால், அவனுடைய வாயிலிருந்து இஸ்ரவேலை ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதமான வார்த்தைகள் தாராளமாய்ப் புறப்பட்டு வருகிறது.

பிலேயாம் இஸ்ரவேலரைக் குறித்து நன்மையானவைகளையே தீர்க்கதரிசனமாகக் கூறினான். ஆகையினால் இனிமேல் ஒன்றும் கூறாமல் சமநிலையில் இருக்குமாறு பாலாக் பிலேயாமைக் கேட்டுக் கொள்கிறான்.

பிலேயாமால் இஸ்ரவேலை சபிக்க முடியாவிட்டாலும், அவன் அவர்களை ஆசீர்வதிக்காமலாவது இருக்கவேண்டும் என்று பாலாக் எதிர்பார்க்கிறான். அதற்காக பாலாக் பிலேயாமை நோக்கி , "நீ அவர்களை சபிக்கவும் வேண்டாம், அவர்களை ஆசீர்வதிக்கவும் வேண்டாம்" என்று சொல்லுகிறான்.

ஆனாலும் பிலேயாம் இன்னும் தன்னை முக்கியமானவன் போல காண்பித்துக்கொள்கிறான். பிலேயாம் பாலாகைப் பார்த்து, "கர்த்தர் சொல்லுகிறபடியெல்லாம் செய்வேன் என்று உம்மோடே நான் சொல்லவில்லையா" (எண் 23:27) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் பாலாகின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய மறுத்துவிடுகிறான். கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்வது தன்னுடைய கடமை என்று அறிவித்து விடுகிறான் (எண் 22:20,35,38; எண் 23:12, 26; எண் 24:12-13).

பிலேயாம் ஏற்கெனவே பாலாகினிடத்தில் இதுபற்றிச் சொல்லியிருக்கிறான். அதை இப்போது அவனுக்கு மறுபடியும் ஞாபகப்படுத்துகிறான். "அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: இதோ, உம்மிடத்திற்கு வந்தேன்; ஆனாலும், ஏதாகிலும் சொல்லுகிறதற்கு என்னாலே ஆகுமோ? தேவன் என்வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன் என்றான்" (எண் 22:38).

இஸ்ரவேலை சபிக்க மூன்றாம் முயற்சி
எண் 23:27-30

எண் 23:27. அப்பொழுது பாலாக் பிலேயாமை நோக்கி: வாரும், வேறொரு இடத்திற்கு உம்மை அழைத்துக்கொண்டு போகிறேன்; நீர் அங்கேயிருந்தாவது எனக்காக அவர்களைச் சபிக்கிறது தேவனுக்குப் பிரியமாயிருக்கும் என்று சொல்லி,

எண் 23:28. அவனை எஷிமோனுக்கு எதிராயிருக்கிற பேயோரின் கொடுமுடிக்கு அழைத்துக்கொண்டு போனான்.

எண் 23:29. அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: இங்கே எனக்கு ஏழு பலிபீடங்களைக் கட்டி, இங்கே எனக்கு ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக் கடாக்களையும் ஆயத்தம்பண்ணும் என்றான்.

எண் 23:30. பிலேயாம் சொன்னபடி பாலாக் செய்து, ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டான்.

பிலேயாம் இஸ்ரவேலை சபிக்காமல் அவர்களை ஆசீர்வதிக்கிறான். ஆனாலும் பாலாக் இன்னும் மனம் தளர்ந்துபோகவில்லை. அவன் தன்னுடைய நம்பிக்கையை இன்னும் இழந்துவிடவில்லை. இஸ்ரவேலை சபிப்பதற்கு இன்னும் ஒருமுறை முயற்சி பண்ணவேண்டும் என்று பாலாக் தீர்மானிக்கிறான்.

பாலாக் பிலேயாமை நோக்கி, "வாரும், வேறொரு இடத்திற்கு உம்மை அழைத்துக்கொண்டு போகிறேன்; நீர் அங்கேயிருந்தாவது எனக்காக அவர்களைச் சபிக்கிறது தேவனுக்குப் பிரியமாயிருக்கும்" (எண் 23:27) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேலைச் சபிப்பதற்காகப் பாலாக் மூன்றாம் முறையாக பிலேயாமை மற்றொரு இடத்திற்கு அழைத்துச் செல்கிறான். பல இடங்களுக்கு அழைத்துச் சென்று, பல பலிகளைச் செலுத்தினால், இஸ்ரவேலைச் சபிப்பதற்குக் கர்த்தர் பிலேயாமிற்கு அனுமதி கொடுப்பார் என்று பாலாக் நினைக்கிறான்.

பாலாக் பிலேயாமை எஷிமோனுக்கு எதிராயிருக்கிற பேயோரின் கொடுமுடிக்கு அழைத்துக்கொண்டு போகிறான் (எண் 23:28). பாலாகின் தேசத்தில் பேயோரின் கொடுமுடியே மிகவும் உயரமான மலைச்சிகரமாகும். இந்த சிகரத்தில் மோவாபியர்கள் பாகாலுக்கு விக்கிரகத்தோப்புக்களை உண்டாக்கி, அங்கே பாகாலை ஆராதிக்கிறார்கள். இந்த சிகரம் பாகால்பேயோர் என்று அழைக்கப்படுகிறது. இந்த சிகரத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை சபிப்பது தேவனுக்கு பிரியமாயிருக்கும் என்று பாலாக் நினைக்கிறான். பிலேயாமும் பாலாகின் முயற்சிகளை அங்கீகரிக்கிறான்.

பேயோரின் கொடுமுடி மோவாபின் மலையிலுள்ள சிகரம். இங்கு பாகால்-பேயோருக்கு ஒரு ஆலயம் உள்ளது. விக்கிரகாராதனைகளும், வேசித்தனங்களும் இங்கு அதிகமாகக் கடைபிடிக்கப்பட்டு வந்தது. இஸ்ரவேல் புத்திரருக்குப் பிற்காலத்தில் இதுவே கண்ணியாயிற்று. (எண் 25:1-9)

எஷிமோன் என்னும் எபிரெய வார்த்தைக்கு "வனாந்தரம்" என்று பொருள். (எண் 21:20; எண் 33:49; 1சாமு 23:19,24; 1சாமு 26:1-3).

பிலேயாம் பாலாகை நோக்கி, "இங்கே எனக்கு ஏழு பலிபீடங்களைக் கட்டி, இங்கே எனக்கு ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக் கடாக்களையும் ஆயத்தம்பண்ணும்" (எண் 23:29) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் சொன்னபடி பாலாக் செய்து, ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிடுகிறான் (எண் 23:30).

மூன்றாம் முறையாக ஏழு பலிபீடங்கள் கட்டப்பட்டு, அங்கு ஏழு காளைகளும், ஏழு ஆட்டுக்கடாக்களும் பலியிடப்படுகிறது. இஸ்ரவேலைச் சபிப்பதற்காகப் பாலாக் பல முயற்சிகளை மேற்கொள்கிறான். அவனுடைய முயற்சி அனைத்திற்கும் பிலேயாமும் உடன்படுகிறான் (எண் 23:1-3,14,29; எண் 23:1).

24 அதிகாரம்

இஸ்ரவேலை சபிப்பதற்காக பாலாகும் பிலேயாமும் மேற்கொள்ளும் முயற்சிகளெல்லாம் தோல்வியடைகிறது. இந்த தோல்வி மனுஷருடைய பலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ ஏற்படாமல், பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் ஏற்படுகிறது. சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சத்துருக்களின் சதிஆலோசனையை முறியடிக்கிறார்.

பிலேயாம் இஸ்ரவேலை சபிப்பதற்கு முயற்சி பண்ணினான். கர்த்தர் அவனுடைய சாபவார்த்தைகளை ஆசீர்வாதமான வார்த்தைகளாக மாற்றுகிறார். பிலேயாம் இஸ்ரவேலை சபிப்பதற்கு பதிலாக அவர்களை ஆசீர்வதிக்கிறான் (எண் 24:1-9).

பாலாக் பிலேயாமின்மேல் கோபங்கொள்கிறான். பிலேயாம் தான் ஏற்கெனவே சொன்னதை பாலாகுக்கு மறுபடியுமாக ஞாபகப்படுத்துகிறான் (எண் 24:10-13).

பிலேயாம் இஸ்ரவேலைக் குறித்தும், இஸ்ரவேலை சுற்றிலுமுள்ள மேலும் சில தேசங்களைக் குறித்தும் தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லுகிறான் (எண் 24:14-25).

இஸ்ரவேலை சபிக்க மூன்றாம் முயற்சி
எண் 24:1-9

எண் 24:1. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்று பிலேயாம் கண்டபோது, அவன் முந்திச் செய்துவந்தது போல நிமித்தம்பார்க்கப் போகாமல், வனாந்தரத்திற்கு நேராகத் தன் முகத்தைத் திருப்பி,

எண் 24:2. தன் கண்களை ஏறெடுத்து, இஸ்ரவேல் தன் கோத்திரங்களின்படியே பாளயமிறங்கியிருக்கிறதைப் பார்த்தான்; தேவஆவி அவன்மேல் வந்தது.

எண் 24:3. அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: பேயோரின் குமாரனாகிய பிலேயாம் சொல்லுகிறதாவது, கண் திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது,

எண் 24:4. தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு, சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்டு தாழ விழும்போது, கண் திறக்கப் பட்டவன் விளம்புகிறதாவது,

எண் 24:5. யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்!

எண் 24:6. அவைகள் பரவிப்போகிற ஆறுகளைப் போலவும், நதியோரத்திலுள்ள தோட்டங்களைப் போலவும், கர்த்தர் நாட்டின சந்தனமரங்களைப்போலவும், தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களைப் போலவும் இருக்கிறது.

எண் 24:7. அவர்களுடைய நீர்ச்சால்களிலிருந்து தண்ணீர் பாயும்; அவர்கள் வித்து திரளான தண்ணீர்களில் பரவும்; அவர்களுடைய ராஜா ஆகாகைப் பார்க்கிலும் உயருவான்; அவர்கள் ராஜ்யம் மேன்மையடையும்.

எண் 24:8. தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினார்; காண்டாமிருகத்துக்கொத்த பெலன் அவர்களுக்கு உண்டு; அவர்கள் தங்கள் சத்துருக்களாகிய ஜாதிகளைப் பட்சித்து, அவர்கள் எலும்புகளை நொறுக்கி, அவர்களைத் தங்கள் அம்புகளாலே எய்வார்கள்.

எண் 24:9. சிங்கம் போலவும் துஷ்ட சிங்கம்போலவும் மடங்கிப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களை எழுப்புகிறவன் யார்? உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், உங்களைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்றான்.

பிலேயாம் இதற்கு முன்பு இஸ்ரவேலை சபிப்பதற்கு இரண்டுமுறை முயற்சிபண்ணினான். ஆனால் அவனால் இஸ்ரவேலை சபிக்க முடியவில்லை. இஸ்ரவேலை சபிப்பதற்கு பதிலாக அவன் அவர்களை ஆசீர்வதித்தான். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம் என்பதை பிலேயாம் காண்கிறான்.

பிலேயாம் இரண்டுமுறையும் இஸ்ரவேலை சபிக்காமல் ஆசீர்வதித்தாலும், பாலாகும் பிலேயாமும் இஸ்ரவேலை சபிப்பதற்கு மூன்றாம் முறையாகவும் முயற்சி பண்ணுகிறார்கள். அதற்கான ஆயத்த வேலைகளை இரண்டு பேரும் செய்கிறார்கள். இந்த ஆயத்தங்கள், இதற்கு முன்பு செய்யப்பட்ட ஆயத்தங்களிலிருந்து வித்தியாசமாயிருக்கிறது.

பிலேயாம் இதற்கு முன்பு இஸ்ரவேலை சபிக்கப்போவதற்கு முன்பாக நிமித்தம் பார்க்கப்போனான். அவன் நிமித்தம் பார்ப்பதையும், மந்திரம் ஓதுவதையும், குறிசொல்லுவதையும் நம்பினான். அவையெல்லாம் பிசாசின் கிரியைகள். அந்தக் கிரியைகள் பிலேயாமுக்கு உதவி செய்யவில்லை.

இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம். இஸ்ரவேலை ஆசீர்வதிக்கவேண்டுமென்று கர்த்தர் தீர்மானமாயிருக்கும்போது, கர்த்தருடைய தீர்மானத்திற்கு விரோதமாக பிலேயாமால் ஒன்றும் செய்யமுடியவில்லை. கர்த்தருடைய கிரியைகளுக்கு முன்பாக பிசாசின் கிரியைகள் செயலிழந்துபோகும். கர்த்தர் இஸ்ரவேலை ஆசீர்வதிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கும்போது, பிசாசு இஸ்ரவேலை சபிக்க நினைப்பது கூடாத காரியம்.

இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் என்று பிலேயாம் கண்டபோது, அவன் முந்திச் செய்துவந்தது போல நிமித்தம்பார்க்கப் போகாமல், வனாந்தரத்திற்கு நேராகத் தன் முகத்தைத் திருப்பி, தன் கண்களை ஏறெடுத்து, இஸ்ரவேல் தன் கோத்திரங்களின்படியே பாளயமிறங்கியிருக்கிறதைப் பார்க்கிறான்; தேவஆவி அவன்மேல் வருகிறது (எண் 24:1,2).

மற்ற தீர்க்கதரிசிகளுக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் போலவே பிலேயாமின்மீதும், தேவ ஆவியானவர் வந்திறங்குகிறார். பிலேயாம் தவறு செய்வதற்கு முன்பாக அவன் தேவனுடைய மெய்யான தீர்க்கதரிசியாகவே இருந்தான்.

பிலேயாம் இதற்கு முன்பு இஸ்ரவேலை சபிக்கப்போவதற்காக, தனிமையான இடத்திற்குப்போவது வழக்கம். அவன் உயர்ந்த மலை சிகரத்தின்மேல் ஏறிப்போவான். ஆனால் இப்போதோ பிலேயாம் தனிமையான இடத்தை நாடிப்போகவில்லை. அவன் வனாந்தரத்திற்கு நேராக தன் முகத்தை திருப்பி இஸ்ரவேல் புத்திரரைப் பார்க்கிறான். வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கோத்திரங்களின் பிரகாரம் பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

பிலேயாம் இஸ்ரவேலின் கோத்திரங்களை பார்த்தபோது, தேவஆவி அவன்மேல் வருகிறது. "தேவஆவி" என்னும் வார்த்தைக்கு, "தீர்க்கதரிசனத்தின் ஆவி" என்று வேதபண்டிதர்கள் பொருள் சொல்லுகிறார்கள்.

பிலேயாம் தன் வாயைத் திறந்து கர்த்தர் தன் வாயில் போட்ட வார்த்தைகளை சொல்லுகிறான். அவன் இதற்கு முன்பு இரண்டுதரம் இஸ்ரவேல் புத்திரரைப்பார்த்து தன்னுடைய வார்த்தையை சொல்லியிருக்கிறான். அப்போது அவன் சொன்ன ஆரம்பவார்த்தைகளுக்கும், இப்போது அவன் சொல்லுகிற ஆரம்ப வார்த்தைகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

பிலேயாம் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து, "பேயோரின் குமாரனாகிய பிலேயாம் சொல்லுகிறதாவது, கண்திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது, தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு, சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்டு தாழ விழும்போது, கண்திறக்கப்பட்டவன் விளம்புகிறதாவது" (எண் 24:3,4) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் சர்வவல்லவரின் தரிசனத்தைக்கண்டு தாழவிழுகிறான். பிலேயாமைப்போலவே, கர்த்தருடைய தரிசனத்தைக் கண்டு தாழவிழுந்தவர்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பிலேயாம் (எண் 24:4,16)
2. பேதுரு (அப் 10:10; அப் 11:5)
3. பவுல் (அப் 22:17)

இந்த வாக்கியத்தில் தாழவிழுதல் என்பது தன் சூழ்நிலையைப் பற்றி சுயநினைவில்லாமல் கீழே விழுவதைக் குறிக்கும். இங்கு கண்கள் திறக்கப்பட்டிருக்கிறது (எண் 24:4,16).

பிலேயாம் ஒவ்வொரு முறை பேசும்போதும் தன்னைப்பற்றி உயர்வாகப் பேசுவது வழக்கம். அவன் சுயபெருமைக்காரன். பிலேயாம் மேட்டிமையான சிந்தனையுள்ளவன். பிலேயாம் தீர்க்கதரிசனம் சொல்லும்போதெல்லாம், தன்னை மகிமைப்படுத்துவான். பரலோகத்தில் நடைபெறும் தெய்வீக ஆலோசனைகளில் தனக்கு முக்கியமான பங்கு இருப்பதுபோல காண்பித்துக்கொள்வான்.

பிலேயாம் ஒரு பேராசைக்காரன். அவனுடைய இச்சைகள் மதியீனமானவை. பிலேயாமின் ஒவ்வொரு செய்கையும், அவனுடைய பேராசையினால் வழிநடத்தப்படுகிறது. அவன் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "கண் திறக்கப்பட்டவன்" என்று சொல்லுகிறான். அவனுடைய கண்கள் திறக்கப்பட்டிருந்தாலும், அவனுடைய இருதயம் திறக்கப்படவில்லை.

பிலேயாமைப்போல இக்காலத்திலும் அநேகர், தங்களுடைய சொந்த வார்த்தைகளை தீர்க்கதரிசன வார்த்தைகளாக சொல்லுகிறார்கள். தாங்கள் கண்திறக்கப்பட்டவர்கள் என்று இவர்கள் தங்களைப்பற்றிச் சொன்னாலும், இவர்களுடைய இருதயம் திறக்கப்படாமல் அடைக்கப்பட்டிருக்கிறது.

மாம்சப்பிரகாரமான வார்த்தைகளை தீர்க்கதரிசன வார்த்தைகளாக சொல்லுகிறவர்களின் கண்கள் திறக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய இருதயம் பரிசுத்தமாக்கப்படாமல், அசுத்தமானதாகயிருக்கும்.

பிலேயாம் தன் கண்களை ஏறெடுத்து, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கோத்திரங்களின்படியே பாளயமிறங்கியிருப்பதைப் பார்க்கிறான். அவன் உடனே இஸ்ரவேலை ஆசீர்வதிக்க ஆரம்பித்துவிடுகிறான். அவன் இதற்கு முன்பு இரண்டுமுறை இஸ்ரவேலை ஆசீர்வதித்தான். தான் ஏற்கெனவே இஸ்ரவேலை ஆசீர்வதித்ததுபோல, இப்போது மூன்றாம் முறையாகவும் இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறான்.

பிலேயாம் தன் கண்களை ஏறெடுத்து இஸ்ரவேல் புத்திரரின் பாளயங்களைப் பார்க்கும்போது அவனுக்கு பல காரியங்கள் ஆச்சரியமாயிருக்கிறது. பிலேயாமின் பார்வையில் இஸ்ரவேல் புத்திரரும், அவர்கள் பாளயமிறங்கியிருக்கிற விதமும் மிகவும் நேர்த்தியாயும், அழகாயும் இருக்கிறது. "யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்!" (எண் 24:5) என்று பிலேயாம் சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது வனாந்தரத்திலே கூடாரங்களிலே வாசம்பண்ணுகிறார்கள். அவர்களுக்கு மாடமாளிகைகளோ, அரண்மனைகளோ, விசாலமான வீடுகளோ இல்லை. ஆனாலும் அவர்கள் தங்களுடைய கோத்திரங்களின் வரிசைப்பிரகாரம், வனாந்தரத்தில் தங்கள் கூடாரங்களைப் போட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கூடாரங்கள் பார்ப்பதற்கு அழகாயிருக்கிறது.

பிலேயாம் இஸ்ரவேல் புத்திரருடைய கூடாரங்களைப்பற்றிச் சொல்லும்போது, "அவைகள் பரவிப்போகிற ஆறுகளைப் போலவும், நதியோரத்திலுள்ள தோட்டங்களைப் போலவும், கர்த்தர் நாட்டின சந்தனமரங்களைப்போலவும், தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களைப் போலவும் இருக்கிறது" (எண் 24:6) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரருடைய கூடாரம் மழையிலும், பனியிலும் நனைந்து பாழாய்க்கிடக்கிறது. அது வெயிலில் காய்ந்து உலர்ந்துபோயிருக்கிறது. ஆனாலும் அவர்களுடைய கூடாரங்களும், வாசஸ்தலங்களும் பிலேயாமின் பார்வைக்கு மிகவும் அழகானவைகளாயிருக்கிறது. இஸ்ரவேல் தன் கோத்திரங்களின்படியே பாளயமிறங்கியிருக்கிறார்கள் (எண் 24:2). இதுவே அவர்களுடைய அழகுக்கு ஆதாரம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் ஒழுங்கும் கிரமமுமாக ஜீவிக்கவேண்டும். நம்மிடத்தில் தாறுமாறான பேச்சுக்களோ, தாறுமாறான நடத்தைகளோ காணப்படக்கூடாது. பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆளுகை செய்யவேண்டும். விசுவாசிகளின் ஒற்றுமையும் ஐக்கியமுமே நமக்கு அழகு.

"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங் 133:1).

இஸ்ரவேல் புத்திரர் பலுகிப்பெருகியிருக்கிறார்கள். அவர்கள் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருப்பார்கள் என்று பிலேயாம் எதிர்பார்த்தான். இதற்கு முன்பு பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரின் காற்பங்கு பாளயத்தை மாத்திரம் பார்த்தான். அப்போதே அவர்களுடைய திரளான எண்ணிக்கையைப் பார்த்து பிலேயாம் ஆச்சரியப்பட்டான். இப்போது பிலேயாம் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் தங்கள் கோத்திரங்களின்படியே பாளயமிறங்கியிருப்பதைப் பார்க்கிறான். அவர்களுடைய முழுப்பாளயத்தையும் பார்க்கிறான்

பிலேயாம் இஸ்ரவேல் ஜனத்தாருடைய திரளான எண்ணிக்கையை விவரிப்பதற்கு, ஒரு சில வார்த்தைகளை உவமையாகச் சொல்லுகிறான். அவர்கள் பரவிப்போகிற ஆறுகளைப்போலவும், நதியோரத்திலுள்ள தோட்டங்களைப்போலவும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் திரளான எண்ணிக்கையிலும் இருக்கிறார்கள். அவர்கள் செழிப்பாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களைப்போல செழித்து வளர்ந்திருக்கிறார்கள்.

பிலேயாம் இஸ்ரவேல் புத்திரருடைய திரளான எண்ணிக்கையையும், அவர்களுடைய செழிப்பையும் பற்றிச் சொல்லும்போது, "அவைகள் பரவிப்போகிற ஆறுகளைப் போலவும், நதியோரத்திலுள்ள தோட்டங்களைப் போலவும், கர்த்தர் நாட்டின சந்தனமரங்களைப்போலவும், தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களைப் போலவும் இருக்கிறது. அவர்களுடைய நீர்ச்சால்களிலிருந்து தண்ணீர் பாயும்; அவர்கள் வித்து திரளான தண்ணீர்களில் பரவும்" (எண் 24:6,7) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரை ஒரு சில காரியங்களோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறான். அதன் விவரம் வருமாறு :

1. பரவிப்போகிற ஆறுகள்.
2. நதியோரத்திலுள்ள தோட்டங்கள். (எண் 22:5; எண் 23:7).
3. கர்த்தர் நாட்டின சந்தனமரங்கள். யோவான் 19:39).
4. தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்கள் (சங் 92:12; சங் 104:16).

"நீர்ச்சால்களிலிருந்து தண்ணீர் பாயும்" என்னும் வாக்கியத்திற்கு "வாளிகளிலிருந்து தண்ணீர் ஊற்றப்படும்" என்று பொருள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது, பரலோகத்திலிருந்து தம்முடைய ஆசீர்வாதமான மழையை பெய்யப்பண்ணுவார் என்பது இந்த வாக்கியத்தின் பொருளாகும். கர்த்தர் வானத்திலிருந்து, தம்முடைய தெய்வீக ஆசீர்வாதங்களை, இஸ்ரவேல் புத்திரர்மீது, நீர்ச்சால்களிலிருந்து தண்ணீர் பாய்வதுபோல பாயப்பண்ணுவார். அப்போது அவர்கள் வித்து திரளான தண்ணீர்களில் பரவும்.

இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையிலும் இருக்கிறார்கள். அவர்கள் கனமும், பெலமும், மேன்மையுமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் யுத்தத்தில் வல்லவர்களாகவும் இருக்கிறார்கள்.

பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொல்லும் காலத்தில் ஆகாக் என்பவன் ஜாதிகள் மத்தியில் உயர்ந்தவனாகவும், பெரியவனாகவும் இருக்கிறான். பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரை ஆகாபோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறான். "அவர்களுடைய ராஜா ஆகாகைப் பார்க்கிலும் உயருவான்; அவர்கள் ராஜ்யம் மேன்மையடையும்" (எண் 24:7) என்று பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றி உயர்வாகப் பேசுகிறான்.

அமலேக்கியரின் ராஜாக்களுக்கு ஆகாக் என்னும் பட்டப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. எகிப்தியரின் ராஜாக்கள் பார்வோன்கள் என்று அழைக்கப்பட்டது போன்று, அமலேக்கியரின் ராஜாக்கள் ஆகாக் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஆகாக் என்பதற்கு "உயர்ந்த" என்று பொருள். இஸ்ரவேலருடைய வரலாற்றின் இந்தக் காலத்தில் அமலேக்கியர் பலம் பொருந்திய தேசமாக இருந்தார்கள். (எண் 24:20; 1சாமு 15) ஆகையினால் தீர்க்கதரிசி இஸ்ரவேலின் வருங்கால ராஜாவாகிய மேசியாவை இந்தக் காலத்தில் பிரபல்யமாக இருந்த ஆகாகோடு ஒப்பிட்டுக் கூறுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் பெலமுள்ளவர்களாகவும், யுத்தத்தில் வல்லவர்களாகவும் இருக்கிறார்கள். பிலேயாம் இஸ்ரவேல் புத்திரருடைய சரித்திரத்தை நினைத்துப் பார்க்கிறான். கர்த்தர் அவர்களுக்காக செய்த காரியங்களையெல்லாம் ஒவ்வொன்றாய் நினைத்துப் பார்க்கிறான். "தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்" (எண் 24:8). இந்த சம்பவத்தை பிலேயாம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறான்.

"தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; காண்டாமிருகத்துக்கொத்த பெலன் அவர்களுக்கு உண்டு" (எண் 23:22).

இஸ்ரவேல் புத்திரர் இப்போதும் பெலமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இனிமேலும் பெலமுள்ளவர்களாயிருப்பார்கள். பிலேயாம் அவர்களை நோக்கிப் பார்க்கும்போது அவர்களிடத்தில் இப்போதிருக்கும் பெலமும், அவர்கள் இனிமேல் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொள்ளும் ஜெயமும், அவனுக்கு தெரிகிறது.

பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லும்போது, "காண்டாமிருகத்துக்கொத்த பெலன் அவர்களுக்கு உண்டு; அவர்கள் தங்கள் சத்துருக்களாகிய ஜாதிகளைப் பட்சித்து, அவர்கள் எலும்புகளை நொறுக்கி, அவர்களைத் தங்கள் அம்புகளாலே எய்வார்கள்" (எண் 24:8) என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் வீரமும் தைரியமுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த பாதுகாப்பிலிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார், "சிங்கம் போலவும் துஷ்ட சிங்கம்போலவும் மடங்கிப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களை எழுப்புகிறவன் யார்?" (எண் 24:9) என்று பிலேயாம் சொல்லுகிறான்.

சிங்கத்திற்கு வனாந்தரத்திலே தனிப்பட்ட வீடு எதுவுமில்லை. அது ஓய்வெடுப்பதற்கென்று தனியாக குகையோ அல்லது வாசஸ்தலமோ இருக்காது. அது எங்கு வேண்டுமானாலும் மடங்கி படுத்துக்கொள்ளும். இஸ்ரவேல் புத்திரர் சிங்கம்போல, வனாந்தரத்திலே படுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சிங்கம் காட்டிலே மடங்கி படுத்துக்கொண்டிருந்தாலும், தன்னை எந்த மிருகத்தாலும் எழுப்ப முடியாது என்றும், தனக்கு விரோதமாக எந்த மிருகமும் பட்சிக்க வரமுடியாது என்றும், சிங்கம் தன் பலத்தைப்பற்றி உறுதியான நம்பிக்கையோடிருக்கும். அதுபோலவே இஸ்ரவேல் புத்திரரும் தங்களுடைய பலத்தைப்பற்றி உறுதியான நம்பிக்கையோடிருந்து வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். சிங்கத்திற்கு விரோதமாக எந்த மிருகமும் சண்டை போட துணியாது. அதுபோல இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக எந்த தேசத்தாரும் யுத்தம்பண்ண துணியமாட்டார்கள்.

பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லும்போது, "உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், உங்களைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன்" (எண் 24:9) என்று சொல்லுகிறான். இஸ்ரவேல் புத்திரரின் அண்டை தேசத்தார், அவர்களோடு சிநேகமாகவும், சமாதான உடன்படிக்கையிலும் இருந்தால், அவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கும்.

இந்த வசனப்பகுதியில் இஸ்ரவேலைப்பற்றி ஒரு சில செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேலின் கூடாரங்களும், வாசஸ்தலங்களும் அழகானவைகள். (எண் 24:5).

2. இஸ்ரவேல் பரவிப்போகிற ஆறுகளைப் போலவும், நதியோரத்திலுள்ள தோட்டங்களைப் போலவும், கர்த்தர் நாட்டின சந்தனமரங்களைப் போலவும், தண்ணீர் அருகே உள்ள கேதுரு விருட்சங்களைப் போலவும் இருக்கிறது. (எண் 24:6).

3. இஸ்ரவேலின் நீர்ச்சால்களிலிருந்து தண்ணீர் பாயும்; அவர்கள் வித்து திரளான தண்ணீர்களில் பரவும். (எண் 24:7).

4. இஸ்ரவேலருடைய ராஜா ஆகாகைப் பார்க்கிலும் உயருவான்; இஸ்ரவேல் புத்திரரின் ராஜ்யம் மேன்மையடையும். (எண் 24:7).

5. தேவன் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினார். (எண் 24:8)

6. இஸ்ரவேல் புத்திரர்கள் தங்கள் சத்துருக்களாகிய ஜாதிகளைப் பட்சித்து, அவர்கள் எலும்புகளை நொறுக்கி, அவர்களைத் தங்கள் அம்புகளாலே எய்வார்கள். (எண் 24:8)

7. இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்கள் அவர்களுக்கு எதிராக எழும்ப முடியாது. (எண் 24:9)

கர்த்தருக்கு பிரியமான ஒரு சில காரியங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது (எண் 24:1)

2. இஸ்ரவேல் தமது ஜனமாக இருப்பது. (1சாமு 12:22)

3. சுயநலமில்லாமல் ஜெபிப்பது. (1இராஜா 3:10)

4. கிறிஸ்து ஜனங்களுக்காகப் பாடுபடுவது. (ஏசா 53:10)

5. கிறிஸ்து தமது ஊழியக்காரராக இருப்பது. (மத் 3:17; மத் 12:18)

6. பிரசங்கத்தினால் ஜனங்களை இரட்சிப்பது (2கொரி 1:18-24).

7. கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவங்களாக்குவது (2கொரி 12:18)

8. தேவனுடைய உயிர்த்தெழுதலின் திட்டம். (2கொரி 15:38)

9. கர்த்தத்துவத்தில் கிறிஸ்து சரீரத்தில் பரிபூரணராக இருப்பது (கொலோ 1:19)

10. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக ஊழியக்காரர்களை வேறுபிரிப்பது. (கலா 1:15)

11. ஜனங்கள் விசுவாசத்தோடு இருப்பது. (எபி 11:5-6)

12. ஜனங்கள் துதியின் பலிகளைத் தொடர்ந்து செலுத்துவது (எபி 13:15-16)

பாலாகின் கோபம்
எண் 24:10-14

எண் 24:10. அப்பொழுது பாலாக் பிலேயாமின் மேல் கோபம் மூண்டவனாகி, கையோடே கைதட்டி, பிலேயாமை நோக்கி: என் சத்துருக்களைச் சபிக்க உன்னை அழைத்தனுப்பினேன்; நீயோ இந்த மூன்றுமுறையும் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தாய்.

எண் 24:11. ஆகையால் உன் இடத்துக்கு ஓடிப்போ; உன்னை மிகவும் கனம்பண்ணுவேன் என்றேன்; நீ கனமடையாதபடிக்குக் கர்த்தர் தடுத்தார் என்றான்.

எண் 24:12. அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: பாலாக் எனக்குத் தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் கொடுத்தாலும், நான் என் மனதாய் நன்மையாகிலும் தீமையாகிலும் செய்கிறதற்குக் கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது; கர்த்தர் சொல்வதையே சொல்வேன் என்று,

எண் 24:13. நீர் என்னிடத்திற்கு அனுப்பின ஸ்தானாபதிகளிடத்தில் நான் சொல்லவில்லையா?

எண் 24:14. இதோ, நான் என் ஜனத்தாரிடத்திற்குப் போகிறேன்; பிற்காலத்திலே இந்த ஜனங்கள் உம்முடைய ஜனங்களுக்குச் செய்வது இன்னதென்று உமக்குத் தெரிவிப்பேன் வாரும் என்று சொல்லி,

இஸ்ரவேலை சபிப்பது வீணான முயற்சி என்பதை பிலேயாமும் பாலாகும் அறிந்துகொள்கிறார்கள். இத்துடன் அவர்கள் இஸ்ரவேலை சபிக்கும் தங்கள் முயற்சிகளை கைவிட்டு விடுகிறார்கள். பிலேயாம் இஸ்ரவேலை சபிக்காமல், அவர்களை ஆசீர்வதிக்கிறான். இதைப் பார்த்து பாலாக் பிலேயாமின்மேல் கோபப்படுகிறான்.

பாலாக் பிலேயாமின் மேல் கோபம் மூண்டவனாகி, கையோடே கைதட்டி, பிலேயாமை நோக்கி, "என் சத்துருக்களைச் சபிக்க உன்னை அழைத்தனுப்பினேன்; நீயோ இந்த மூன்றுமுறையும் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தாய். ஆகையால் உன் இடத்துக்கு ஓடிப்போ" (எண் 24:10) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் தன்னிடத்தில் வரவேண்டுமென்று பாலாக் அவனை விரும்பி அழைத்தான். ஆனால் இப்போதோ அவன் பிலேயாமை நோக்கி, "உன் இடத்துக்கு ஓடிப்போ" என்று கோபத்தோடும், வெறுப்போடும் சொல்லுகிறான்.

பாலாக் எதிர்பார்த்த பிரகாரமாக, பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரை சபிக்கவில்லை. ஆகையினால் பிலேயாமை தன் தேசத்தைவிட்டே துரத்திவிடவேண்டுமென்று பாலாக் நினைக்கிறான்.

பிலேயாம் இஸ்ரவேலை சபித்திருந்தால் பாலாக் அவனை மிகவும் கனம்பண்ணியிருப்பான். ஆனால் இஸ்ரவேலை சபிக்க முடியாதபடி, கர்த்தர் பிலேயாமைத் தடைபண்ணிவிடுகிறார். பிலேயாமால் இஸ்ரவேலை சபிக்க முடியவில்லை. ஆகையினால் பாலாக் பிலேயாமை கனம்பண்ணாமல், அவனை தன் தேசத்தைவிட்டே துரத்துகிறான். "நீ கனமடையாதபடிக்கு கர்த்தர் தடுத்தார்" (எண் 24:11) என்று பாலாக் சொல்லுகிறான்.

தான் கனமடையாததும், தனக்கு வெகுமதி கிடைக்காததும் பிலேயாமுக்கு வருத்தமாகயிருக்கிறது. அவன் ஒரு பேராசைக்காரன். தன்னுடைய சுயபெருமைக்காக அவன் எதையும் பேச ஆயத்தமாயிருக்கிறான். ஆனால் கர்த்தருடைய அனுமதியில்லாமல், பிலேயாமல் ஒன்றும் பேசமுடியவில்லை.

பாலாக் இப்போது பிலேயாமை தன்னுடைய தேசத்தைவிட்டே துரத்துகிறான். ஆனாலும் பிலேயாம் தன்னுடைய பெருமையை விட்டுக்கொடுக்கவில்லை. பாலாக் தன்னை கனப்படுத்தாமல் அவமானப்படுத்தினாலும், பிலேயாம் தன்னைப்பற்றி பெருமையாகவே நினைக்கிறான். தான் பாலாகை ஏமாற்றவில்லையென்றும், கர்த்தர் அனுமதிக்கும் வார்த்தையையே தன்னால் பேசமுடியும் என்றும் பிலேயாம் சொல்லுகிறான். தான் இதுபற்றி பாலாகினிடத்தில் ஏற்கெனவே அறிவித்திருப்பதாகவும் சொல்லி, தன்னுடைய வார்த்தைகளை நியாயப்படுத்துகிறான்.

பிலேயாம் பாலாகை நோக்கி, "பாலாக் எனக்குத் தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் கொடுத்தாலும், நான் என் மனதாய் நன்மையாகிலும் தீமையாகிலும் செய்கிறதற்குக் கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது; கர்த்தர் சொல்வதையே சொல்வேன் என்று, நீர் என்னிடத்திற்கு அனுப்பின ஸ்தானாபதிகளிடத்தில் நான் சொல்லவில்லையா?" (எண் 24:12,13) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் தன் வீட்டிற்குத் திரும்பிப் போவதற்கு சற்று முன்பாக இந்த வாக்கியத்தைக் கூறுகிறான். (எண் 24:25) வெகுமதிக்காகவும், புகழுக்காகவும் பிலேயாம் இன்னும் தவறுசெய்யவில்லை (எண் 24:12-13).

பிலேயாமால் பாலாகின் மனதை சந்தோஷப்படுத்த முடியவில்லை. பாலாக் விரும்பிய பிரகாரம், பிலேயாமால் இஸ்ரவேல் புத்திரரை சபிக்க முடியவில்லை. ஆனாலும் தன்னால் முடிந்த வரையிலும், பிலேயாம் பாலாகை திருப்திபடுத்த முயற்சிபண்ணுகிறான்.

பிலேயாம் பாலாகை நோக்கி, "இதோ, நான் என் ஜனத்தாரிடத்திற்குப் போகிறேன்; பிற்காலத்திலே இந்த ஜனங்கள் உம்முடைய ஜனங்களுக்குச் செய்வது இன்னதென்று உமக்குத் தெரிவிப்பேன் வாரும்" (எண் 24:14) என்று சொல்லுகிறான்.

பிலேயாமின் வாயிலே இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லுவதற்கு இன்னும் வார்த்தை இருக்கிறது. பாலாகும் இஸ்ரவேல் ஜனத்தாரைப்பற்றி அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறான். இப்போது பிலேயாமால் இஸ்ரவேல் புத்திரரை சபிக்க முடியவில்லை. கர்த்தர் அவர்களை சபிக்க அனுமதிக்கவில்லை. ஆனாலும் பிற்காலத்திலே இஸ்ரவேல் ஜனங்கள், மோவாபின் ஜனங்களுக்கு என்ன செய்வார்கள் என்பதை பிலேயாம் பாலாகுக்கு அறிவிக்கிறான்.

கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக இப்போது எழும்பவில்லை. ஆனாலும் பிற்காலத்தில், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபப்படவேண்டுமென்றால், மோவாபியர் அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பது பிலேயாமுக்கு தெரிந்திருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு மறைவாக எப்படிப்பட்ட கண்ணியை விரித்தால், அந்தக் கண்ணியில் அவர்கள் விழுவார்கள் என்றும், அதனால் கர்த்தர் அவர்கள்மீது எவ்வாறு கோபப்படுவார் என்றும் பிலேயாம் அறிந்திருக்கிறான்.

இஸ்ரவேலை அழிப்பதற்கு பாலாகும் பிலேயாமும் பலிபீடங்களைக் கட்டவேண்டியதில்லை. அவர்கள் காளைகளையும் வெள்ளாட்டுக் காடாக்களையும் பலிசெலுத்த வேண்டியதுமில்லை. அவர்கள் சன்னதம் பார்க்க வேண்டிய அவசியமுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களினிமித்தமாக, தங்களைத் தாங்களே அழித்துப்போடுவார்கள். கர்த்தர் பரிசுத்தர். அவர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பரிசுத்தத்தை எதிர்பார்க்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தர் அவர்களை விட்டு விலகிப்போய்விடுவார். கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் அவர்களுக்கு கிடைக்காது. கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பதற்கு பதிலாக, அவர்களைத் தண்டிப்பார்.

பாலாக் இஸ்ரவேலை அழிப்பதற்காக, அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வேண்டிய அவசியமில்லை. இஸ்ரவேல் புத்திரரை பாவம் செய்யப்பண்ணினால், அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துப்போடுவார்கள். தங்களுடைய அழிவுக்கு இஸ்ரவேல் புத்திரரே காரணமாயிருப்பார்கள். இந்த சம்பவம் இப்போது உடனே நடைபெறாவிட்டாலும், பிற்காலத்தில் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளது. பிலேயாம் பிற்காலத்தில் நடைபெறப்போகிற சம்பவங்களை பாலாகுக்கு எடுத்துச் சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்கு கர்த்தர் அனுமதிக்கவில்லை. கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்கு, பிலேயாமால் கர்த்தருடைய உதவியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் பிலேயாமால் இஸ்ரவேல் புத்திரரை சோதிப்பதற்கு, சாத்தானுடைய உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும். பிலேயாம் இந்த இரகசியத்தை பாலாகுக்கு சொல்லுகிறான்.

இஸ்ரவேலுக்கு ஆசீர்வாதம் எண் 24:15-25

எண் 24:15. அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: பேயோரின் குமாரன் பிலேயாம் சொல்லுகிறதாவது, கண்திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது,

எண் 24:16. தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு, உன்னதமானவர் அளித்த அறிவை அறிந்து, சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்டு, தாழவிழும்போது, கண்திறக்கப்பட்டவன் விளம்புகிறதாவது;

எண் 24:17. அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும்.

எண் 24:18. ஏதோம் சுதந்தரமாகும், சேயீர் தன் சத்துருக்களுக்குச் சுதந்தரமாகும்; இஸ்ரவேல் பராக்கிரமஞ்செய்யும்.

எண் 24:19. யாக்கோபிலிருந்து தோன்றும் ஒருவர் ஆளுகை செய்வார்; பட்டணங்களில் மீதியானவர்களை அழிப்பார் என்றான்.

எண் 24:20. மேலும், அவன் அமலேக்கைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: அமலேக்கு முந்தியெழும்பினவன்; ஆனாலும் அவன் முடிவிலே முற்றிலும் நாசமாவான் என்றான்.

எண் 24:21. அன்றியும் அவன் கேனியனைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: உன் வாசஸ்தலம் அரணிப்பானது; உன் கூட்டைக் கன்மலையில் கட்டினாய்.

எண் 24:22. ஆகிலும் கேனியன் அழிந்துபோவான்; அசூர் உன்னைச் சிறைபிடித்துக் கொண்டுபோக எத்தனைநாள் செல்லும் என்றான்.

எண் 24:23. பின்னும் அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: ஐயோ, தேவன் இதைச் செய்யும்போது யார் பிழைப்பான்;

எண் 24:24. சித்தீமின் கரைதுறையிலிருந்து கப்பல்கள் வந்து, அசூரைச் சிறுமைப்படுத்தி, ஏபேரையும் வருத்தப்படுத்தும்; அவனும் முற்றிலும் அழிந்துபோவான் என்றான்.

எண் 24:25. பின்பு பிலேயாம் எழுந்து புறப்பட்டு, தன் இடத்திற்குத் திரும்பினான்; பாலாகும் தன் வழியே போனான்.

தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் ஜனங்களை ஆசீர்வதித்து, அவர்களுக்கு தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். பிலேயாம் சர்வவல்லவரின் தரிசனத்தை கண்டிருக்கிறான். அவன் தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டிருக்கிறான். பிலேயாம் உன்னதமானவர் அளித்த அறிவை அறிந்திருக்கிறான். ஆகையினால் தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கு கர்த்தர் பிலேயாமை அனுமதித்து அவனை வழிநடத்துகிறார்.

பிலேயாம் கர்த்தருடைய அனுமதியோடு தீர்க்கதரிசனம் சொல்லுகிறான். ஆகையினால் அவனுடைய வாயிலிருந்து புறப்பட்டு வரும் தீர்க்கதரிசன வார்த்தைகள் மெய்யான வார்த்தைகளாயிருக்கிறது.

பிலேயாம் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து, "பேயோரின் குமாரன் பிலேயாம் சொல்லுகிறதாவது, கண்திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது, தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு, உன்னதமானவர் அளித்த அறிவை அறிந்து, சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்டு, தாழவிழும்போது, கண்திறக்கப்பட்டவன் விளம்புகிறதாவது" (எண் 24:15,16) என்று சொல்லுகிறான்.

பிலேயாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, அவரை உன்னதமானவர் என்றும், சர்வவல்லவர் என்றும் சொல்லுகிறான். பிலேயாமின் வார்த்தைகள் பக்தியுள்ள வார்த்தைகளாயிருக்கிறது. ஆனால் அவனுடைய மனதிலே கர்த்தர்மீது பக்தியோ, பயமோ இல்லை. அவனுக்கு கர்த்தர்மீது அன்பும் இல்லை, அவனுக்கு கர்த்தரிடத்தில் விசுவாசமுமில்லை.

இக்காலத்தில் சிலர் பிலேயாமைப்போல கர்த்தரையும், பரலோகத்தின் காரியங்களையும் அறிந்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருக்கும், பரலோகத்திற்கும் தூரமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பரலோகத்தின் காரியங்களுக்கு நேராக எவ்வளவுதான் அருகாமையில் போனாலும், அவர்கள் இன்னும் பரலோகத்திற்கு தூரமாகவே இருப்பார்கள்.

பிலேயாம் கர்த்தரைப்பற்றியும், இஸ்ரவேல் புத்திரரைப்பற்றியும் அவர்களுடைய சிங்காசனத்தையும், அதன் மகிமையைப்பற்றியும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறான்.

"அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும். ஏதோம் சுதந்தரமாகும், சேயீர் தன் சத்துருக்களுக்குச் சுதந்தரமாகும்; இஸ்ரவேல் பராக்கிரமஞ்செய்யும்" (எண் 24:17,18) என்று பிலேயாம் தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லுகிறான்.

இஸ்ரவேலிலிருந்து ஒரு செங்கோல் எழும்பும் என்பதும், யாக்கோபிலிருந்து ஒரு நட்சத்திரம் உதிக்கும் என்பதும் தாவீதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். தாவீது மோவாபியரை முறியடித்தார்.

"இதற்குப்பின்பு தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, மேத்தேக் அம்மாவைப் பிடித்துக்கொண்டான். அவன் மோவாபியரையும் முறிய அடித்து, அவர்களைத் தரைமட்டும் பணியப்பண்ணி, அவர்கள்மேல் நூல்போட்டு, இரண்டுபங்கு மனுஷரைக் கொன்றுபோட்டு, ஒரு பங்கை உயிரோடே வைத்தான்; இவ்விதமாய் மோவாபியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங்கட்டுகிறவர்களானார்கள்" (2சாமு 8:1,2).

இஸ்ரவேல் புத்திரர் ஏதோமியரையும் தங்களுக்கு கீழ்ப்படுத்தினார்கள். "பிற்காலத்திலே இந்த ஜனங்கள் உம்முடைய ஜனங்களுக்குச் செய்வது இன்னதென்று உமக்குத் தெரிவிப்பேன்" (எண் 24:14) என்று பிலேயாம் பாலாகுக்கு சொன்னான். தாவீதின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் மோவாபியருக்கு செய்யும் காரியங்களை, பிலேயாம் இங்கு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறான்.

"யாக்கோபிலிருந்து ஒரு நட்சத்திரம் உதிக்கும்" என்னும் வாக்கியமும், "இஸ்ரவேலிலிருந்து ஒரு செங்கோல் எழும்பும்" என்னும் வாக்கியமும் (எண் 24:17) நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவானவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாகவாக இருக்கிறார். இங்கு சொல்லப்பட்டிருக்கிற காரியங்களெல்லாம் கிறிஸ்துவானவருக்கும், அவருடைய கிரியைகளுக்கும் அடையாளமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் வருகையைப்பற்றி இப்போதே தீர்க்கதரிசனமாய்ச் சொல்லவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. "பிற்காலத்திலே நடைபெறப்போகும் சம்பவத்தை உமக்குத் தெரிவிப்பேன்" என்று பிலேயாம் பாலாகுக்கு சொல்லுகிறான். பிற்காலம் என்பது, சமீபத்தில் வரப்போகிற காலமல்ல. பிலேயாம் இங்கு தீர்க்கதரிசனமாகச் சொல்லும் காரியம் சுமார் 1500 வருஷங்களுக்கு பின்பு நிறைவேறுகிறது.

பிலேயாம் மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனத்தை பாலாகுக்கு சொல்லுகிறான். பாலாக் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன். அவன் ஒரு மோவாபியன். ஆனாலும் மேசியாவின் வருகையைப்பற்றிய தரிசனம், யூதர்களுக்கு மாத்திரம் என்று அறிவிக்கப்படாமல், புறஜாதியாருக்கும் அறிவிக்கப்படுகிறது. இந்த சத்தியம் பாலாகுக்கு அறிவிக்கப்படுவது இதற்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமும் அவருடைய ராஜ்யமும் இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகளுக்குட்பட்டதல்ல. கிறிஸ்துவானவர் உலகஇரட்சகராகயிருக்கிறார். அவர் இந்தப் பூமியில் வரப்போவதை பிலேயாம் இப்போதோ அறிவிக்கிறான். பிற்காலத்திலே வரப்போகிற கிறிஸ்துவை தான் காண்பேன் என்று பிலேயாம் சொல்லுகிறான். "அவரைக் காண்பேன், இப்பொழுதல்ல, அவரைத் தரிசிப்பேன், சமீபமாயல்ல" (எண் 24:17) என்று பிலேயாம் சொல்லுகிறான். சுமார் 1500 வருஷங்களுக்கு பின்பு வரப்போகிற, மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவை, பிலேயாம் இப்போதே தரிசனத்தில் காண்கிறான்.

கிறிஸ்துவானவர் யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரமாகயிருப்பார். அவர் இஸ்ரவேலிலிருந்து எழும்பும் செங்கோலாகயிருப்பார். நட்சத்திரம் என்பது இயேசுகிறிஸ்துவினுடைய மகிமைக்கு அடையாளமான வார்த்தை. அவர் பிரகாசமான விடிவெள்ளியாகயிருப்பார். செங்கோல் என்பது இயேசுகிறிஸ்துவினுடைய வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் அடையாளமான வார்த்தை. கிறிஸ்துவானவருக்கு சர்வஆளுகை கொடுக்கப்பட்டிருக்கும்.

இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் இந்த உலகம் முழுவதிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். தம்முடைய ராஜ்யத்திற்கு விரோதமாக எழும்புகிற எல்லா எதிர்ப்புகளையும், கிறிஸ்துவானவர் முறியடிப்பார் அவர் ஜெயங்கொள்ளுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஜெயக்கிறிஸ்துவாகயிருக்கிறார்.

தாவீது மோவாபின் எல்லைகளை நொறுக்கினார். அவர் சேத் புத்திரர் எல்லோரையும் நிர்மூலமாக்கினார். ஏதோமை தன்னுடைய ஆளுகைக்குட்படுத்தினார். தாவீதுக்கு கிடைத்த வெற்றிகளெல்லாம், கிறிஸ்துவானவருக்கு கிடைக்கும் வெற்றிகளுக்கு அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவானவர் ராஜாவாயிருப்பார். அவர் யாக்கோபுக்கும் இஸ்ரவேலுக்கும் மாத்திரமல்ல, இந்த உலகத்திலுள்ள எல்லா ஜாதியாருக்கும், எல்லா பாஷைக்காரருக்கும் ராஜாவாயிருப்பார். கிறிஸ்துவானவர் ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருப்பார்.

பிலேயாம் அமலேக்கைக்குறித்தும், கேனியனைக்குறித்தும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான். பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரின் பாளயங்களைப் பார்க்கும்போது, அவன் அமலேக்கு, கேனியன் ஆகியோரின் தேசத்தின் ஒரு பகுதியையும் பார்க்கிறான். அமலேக்கு இப்போது பல தேசங்களுக்கு தலைவனாயிருக்கிறான். அவன் முந்தி எழும்பினவன். ஆனாலும் அவன் முடிவிலே முற்றிலும் நாசமாவான் என்று பிலேயாம் சொல்லுகிறான் (எண் 24:20).

அமலேக்கியர் யாக்கோபின் சகோதரரான ஏசாவின் சந்ததியார் (ஆதி 36:12,16). இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தபோது, அமலேக்கியரே இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணுவதற்கு முதலாவதாக வருகிறார்கள். (யாத் 17:8-16). அமலேக்கியரை முழுவதுமாக முறியடிக்கவேண்டுமென்று, மோசே கூறிய தீர்க்கதரிசனமும், பிலேயாம் அமலேக்கியரைப் பற்றிக் கூறிய தீர்க்கதரிசனமும் ஒன்றுபோல் உள்ளது. (யாத் 17:16; உபா 25:17-19). அமலேக்கியருடைய தேசத்தைச் சவுலும் (1சாமு 15), தாவீதும் (1சாமு 27:8) அழித்துப் போட்டார்கள். அவர்களில் மீதியானவர்களைச் சிமியோனியர்கள் அழித்துப்போட்டார்கள். (1நாளா 4:42-43).

மோசே அமலேக்கின் அழிவைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். மோசே சொன்ன வார்த்தைகளை இப்போது பிலேயாமும் உறுதிபண்ணுகிறான்.

பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார். மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யேகோவாநிசி என்று பேரிட்டு, அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்தபடியால், தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்றான் (யாத் 17:14-16).

பிலேயாம் இப்போது கேனியனைக் குறித்தும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான். கேனியரின் வாசஸ்தலம் மிகவும் அரணிப்பானதாயிருக்கிறது. அவர்கள் தங்கள் கூட்டை கன்மலையில் கட்டியிருக்கிறார்கள். மற்ற தேசங்களை விட கேனியரின் தேசம் அரணானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்கிறது. உயரமான மலைகள் கேனியரின் தேசத்திற்கு இயற்கையான பாதுகாப்பைக் கொடுக்கிறது.

கழுகு மலை உச்சியில் தன் கூட்டைப் பாதுகாப்பாக கட்டுவதுபோல, கேனியரும் கன்மலையில் தங்கள் பட்டணத்தை பாதுகாப்பாக கட்டியிருக்கிறார்கள் (எண் 24:21).

கேனியர் மீதியானியரில் ஒரு பிரிவினர். ஆதி 15:18-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவர்களும், இவர்களும் ஒரே ஜனங்களல்ல. பர்வதங்கள் கேனியருக்கு அரணிப்பாய் இருக்கிறது. கன்மலையில் அவர்கள் தங்கள் வீடுகளைக் கட்டி பாதுகாப்பாகக் குடியிருக்கிறார்கள். ஆனாலும் அசூர் (அசீரியர்) அவர்களைச் சிறைப்பிடித்துக் கொண்டுபோவார்கள் என்று பிலேயாம் தீர்க்கதரிசனமாக சொல்லுகிறான். (எண் 24:21-22). மோசேயின் மாமனாகிய எத்திரோ ஒரு கேனியன்.

"ஆகிலும் கேனியன் அழிந்துபோவான்; அசூர் உன்னைச் சிறைபிடித்துக் கொண்டுபோக எத்தனைநாள் செல்லும்" (எண் 24:22) என்று பிலேயாம் சொல்லுகிறான்.

பிலேயாம் இங்கு பத்துக் கோத்திரங்களின் சிறையிருப்பைப்பற்றிச் சொல்லுகிறான் இதன்பின்பு, மீதமுள்ள யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துக் கொண்டு போகப்படுவார்கள். அப்போது பாபிலோன் அசீரியவை ஆளுகை செய்யும். (2இராஜா 17, 2இராஜா 25).

தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக கேனியர்கள் நினைக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அழிந்துபோவார்கள். அவர்கள் ஒரே நாளில், ஒரே வேளையில், மொத்தமாய் அழிந்துபோகாமல் கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்துபோவார்கள். முடிவிலே அசீரியர்கள் கேனியரை சிறைப்பிடித்து கொண்டுபோவார்கள்.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் சிறைப்பட்டுப்போனபோது, கேனியரும் சிறைப்பட்டுப்போனார்கள். அவர்கள் தங்கள்கூட்டை கன்மலையில் கட்டினாலும், அந்தக் கன்மலை அவர்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்கவில்லை. கர்த்தர் நம்மைப் பாதுகாக்கவில்லையென்றால், நமக்கு பாதுகாப்பு இல்லை.

பிலேயாம் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, அவன் கிரேக்கு தேசத்தையும், ரோமாபுரி தேசத்தையும் குறித்து தீர்க்கதரிசனம் சொல்லுகிறான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். "சித்தீமின் கரைதுறை" என்னும் வாக்கியம் கிரேக்கப் பேரரசையும், ரோமப்பேரரசையும் குறிக்கிறது.

பிலேயாம் அமலேக்கைக் குறித்தும், கேனியனைக் குறித்தும் தீர்க்கதரிசனம் சொன்ன பின்பு, அவன், தன் வாக்கியத்தை எடுத்துரைத்து, "ஐயோ, தேவன் இதைச் செய்யும்போது யார் பிழைப்பான்; சித்தீமின் கரைதுறையிலிருந்து கப்பல்கள் வந்து, அசூரைச் சிறுமைப்படுத்தி, ஏபேரையும் வருத்தப்படுத்தும்; அவனும் முற்றிலும் அழிந்துபோவான்" (எண் 24:23,24) என்று சொல்லுகிறான்.

சித்தீம் பாலஸ்தீனத்தின் மேற்கு பகுதியிலுள்ள சீப்புரு தீவு. அசூர் என்பவன் சேமின் குமாரன். இவன் அசீரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவன். (ஆதி 10:11,22; 1நாளா 1:17; எசே 27:23; எசே 32:22; ஓசி 14:3). மனாசேம், அசரியா அல்லது உசியா ஆகியோரின் நாட்களில் அசீரியர் இஸ்ரவேலரோடு முக்கிய தொடர்பு வைத்திருந்தார்கள்.

ஏபேர் என்பவன் சேமின் குமாரன். இவன் ஆபிரகாமின் முற்பிதா (ஆதி 10:21,25; ஆதி 11:10-32). ஏபேர் என்பதற்கு "மறுபக்கம்" என்று பொருள். இவர்கள் ஐபிராத்து நதியின் மறுகரையிலிருந்து வந்தவர்கள். அல்லது இவர்கள் ஆரானிலிருந்து வந்திருக்க வேண்டும். ஆபிரகாம் இங்கிருந்து கானான் தேசத்திற்குக் குடியேறிப்போனார் (ஆதி 11:31; ஆதி 12:1-7).

பிலேயாம் கிரேக்கு தேசத்திற்கும், ரோமாபுரி தேசத்திற்கும் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, தன்னுடைய தீர்க்கதரிசன வாக்கியத்தின் முன்னுரையாக, "ஐயோ, தேவன் இதைச் செய்யும்போது யார் பிழைப்பான்" (எண் 24:23) என்று சொல்லுகிறான்.

"தேவன் இதைச் செய்யும்போது யார் பிழைப்பான்" என்பது ஒரு தீர்க்கதரிசன வாக்கியம். இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்போது, இப்போது உயிரோடு இருக்கும் சந்ததியார் யாரும் பிழைத்திருக்க மாட்டார்கள். இது வருங்காலத்தில் நிறைவேறப்போகும் தீர்க்கதரிசனம். உபத்திரவக்காலத்திலும், அர்மகெதோன் யுத்தத்திலும் நடைபெறப்போகும் சம்பவங்கள் இங்கு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிலேயாம் இங்கு தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிற காரியம் உடனே சம்பவிக்கப்போவதில்லை. இது சம்பவிப்பதற்கு பல வருஷங்கள் ஆகும். ஆனாலும் தேவன் இதை நிச்சயமாய்ச் செய்வார். "தேவன் இதைச் செய்யும்போது யார் பிழைப்பான்" என்று பிலேயாம் கேட்கிறான். இந்த சம்பவம் நடைபெறும்போது, "யார் உயிரோடிருப்பார்கள்" என்னும் அர்த்தத்தில் பிலேயாம் சொல்லுகிறான். இந்தக் காரியம் நீண்டகாலத்திற்கு பின்பு சம்பவிக்கப்போவதினால், பிலேயாமோ அல்லது பாலாகோ அப்போது உயிரோடிருக்கமாட்டார்கள்.

கிரேக்கு தேசத்திற்கும், ரோமாபுரிக்கும் சம்பவிக்கப்போகிற அழிவு பேரழிவாகயிருக்கும். அந்த அழிவுக்கு யாரும் தப்பிக்க முடியாது. எல்லோருக்கும் சர்வசங்காரமும், சர்வநாசமும் உண்டாகும். ஆகையினால், "தேவன் இதைச் செய்யும்போது யார் பிழைப்பான்" என்று பிலேயாம் சொல்லுகிறான்.

கிரேக்கு தேசமும் இத்தாலி தேசமும் கரைதுறையிலிருக்கிறது. இவை கடற்கரையிலுள்ள தேசங்கள். இவர்களுடைய இராணுவங்கள் எல்லாம் கப்பல்களில் புறப்பட்டுப்போகும்.

பிலேயாம் சித்தீமின் கரைதுறையைக் குறித்து சொல்லுகிற தீர்க்கதரிசனத்திற்கு வேதபண்டிதர்கள் இவ்வாறு விளக்கம் சொல்லுகிறார்கள்.

கிரேக்கு தேசத்தின் சேனை அசீரியரின் சேனையை முறியடிப்பார்கள். அசீரியர்கள் பெர்சியரோடு உடன்படிக்கைபண்ணி, கூட்டுச்சேர்ந்திருப்பார்கள். மகாஅலெக்சாந்தர் அசீரிய தேசத்தின்மீது வெற்றிபெற்றபோது, இந்த தீர்க்கதரிசன சம்பவம் நிறைவேறும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கிரேக்க பேரரசின் சேனையும், ரோமப்பேரரசின் சேனையும் கூட்டாய்ச் சேர்ந்து எபிரெயர்களை ஒடுக்குவார்கள் என்றும் வேதபண்டிதர்கள் மற்றொரு விளக்கம் சொல்லுகிறார்கள். "ஏபேர்" என்பது எபிரெய பாஷை பேசும் யூதரைக் குறிக்கும் என்பது வேதபண்டிதர்களின் விளக்கம். சித்தீமின் கரைதுறையிலிருந்து கப்பல்கள் வந்து ஏபேரை வருத்தப்படுத்தும். கிரேக்க பேரரசு யூததேசத்தை சிறுமைப்படுத்தி வருத்தப்படுத்தினார்கள். அதன்பின்பு ரோமப்பேரரசார் யூததேசத்தை முற்றிலுமாய் அழித்துப்போட்டார்கள்.

சித்தீம் என்பது ரோமப்பேரரசைக் குறிக்கும் என்றும், ரோமப்பேரரசார் கிரேக்க பேரரசை முறியடித்து, அவர்களை ஜெயிப்பார்கள் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். இந்த சம்பவத்தைப்பற்றி தானியேலும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"நீர் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது" (தானி 2:34).

தானியேல் சொன்ன தீர்க்கதரிசனத்தில் கைகளால் பெயர்க்கப்படாத கல் என்பது, ரோமப்பேரரசைக் குறிக்கும் என்பது வேதபண்டிதர்களின் விளக்கம். இரும்பும் களிமண்ணுமாகிய சிலையின் பாதம் என்பது கிரேக்க பேரரசைக் குறிக்கும்.

பிலேயாம் தன்னுடைய வாக்கியத்தை எடுத்துரைக்கும்போது, அவன் இப்போதும் இஸ்ரவேல் புத்திரரை சபிக்கவில்லை. பிலேயாம் இஸ்ரவேல் புத்திரரை சபிப்பதற்கு பதிலாக, அவன் முதலாவதாக அமலேக்கையும் அதன்பின்பு ரோமப்பேரரசையும் சபிக்கிறான். அமலேக்கும் ரோமப்பேரரசும், கர்த்தருடைய ஜனத்திற்கு சத்துருக்களாயிருக்கிறவர்கள்.

கர்த்தருடைய ஜனம் எப்போதுமே ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள். அவர்களுக்கு விரோதமாக எழும்புகிறவர்களோ எப்போதும் சபிக்கப்பட்டவர்களாகயிருப்பார்கள்.

பிலேயாம் கர்த்தரைத் தரிசித்த ஒரு சில சம்பவங்களைப்பற்றி, எண்ணாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது அதன் விவரம் வருமாறு :

1. பிலேயாம் கர்த்தரிடத்தில் முதலாவது விசாரித்தபோது. (எண் 22: 8-12)
2. பிலேயாம் கர்த்தரிடத்தில் இரண்டாவது முறையாக விசாரித்தபோது. (எண் 22:19-20)
3. மோவாபிற்குச் செல்லும் வழியில் (எண் 22:22-35)
4. முதன் முறையாகப் பலிகளைச் செலுத்திய போது. (எண் 23: 4-6)
5. இரண்டாம் முறையாகப் பலிகளைச் செலுத்திய போது. (எண் 23:16-17)
6. முதன் முறையாக கர்த்தருடைய தரிசனத்தைக் கண்டு தாழவிழுந்தபோது. (எண் 24:2-4)
7. இரண்டாம் முறையாக கர்த்தருடைய தரிசனத்தைக் கண்டு தாழவிழுந்தபோது. (எண் 24:16)

பிலேயாம் மேசியாவைக் குறித்து சொன்ன தீர்க்கதரிசன வாக்கியங்களின் விவரம் வருமாறு :

1. அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல (எண் 24:17). பிலேயாமும், எல்லோரும் கர்த்தரைக் காண்பார்கள். எல்லா முழங்கால்களும் கர்த்தருக்கு முன்பாக முடங்கும். எல்லா நாவுகளும் கர்த்தரை அறிக்கை பண்ணும். (பிலி 2:9-11). கர்த்தருடைய பிரசன்னத்தில் நரகத்திலுள்ள கலக்காரர்கள் அனைவரும் வாதிக்கப் படுவார்கள். (வெளி 14:9-11; ஏசா 66:22-24).

2. ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும். (எண் 24:17). இந்த நட்சத்திரம் மேசியாவின் வருகைக்கு ஒரு அடையாளமாகும்.

3. ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும். (எண் 24:17). யாக்கோபு இதை முன்னறிவித்திருக்கிறார் (ஆதி 49:10; சங் 45:6; எபி 1:8). மேசியாவின் ஆளுகை செய்யும் அதிகாரத்தை இந்த வாக்கியம் முன்னறிவிக்கிறது. (ஏசா 9:6-7; தானி 7:13-14; லூக்கா 1:32-33; வெளி 11:15).

4. அவர் மோவாபின் எல்லைகளை நொறுக்குவார். (எண் 24:17; சங் 60:8; ஏசா 11:14; ஏசா 16:1-5; ஏசா 25:10; எரே 48:47; தானி 11:40-41).

5. அவர் சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்குவார். (எண் 24:17; 1நாளா 1:1). சேத் புத்திரர் என்பது மனுக்குலத்தார் அனைவரையும் குறிக்கும். எல்லோருமே நோவாவின் மூலமாக சேத்தின் குமாரர்களாக இருக்கிறார்கள். (ஆதி 5) ஜலப்பிரளயத்தில் சேத் புத்திரர் மட்டுமே பாதுகாக்கப்பட்டார்கள். மேசியா தம்முடைய சத்துருக்கள் எல்லோரையும் தம்முடைய பாதபடியாக்கிப்போடுவார். (2கொரி 15:24-28).

6. அவர் ஏதோமைச் சுதந்தரிப்பார். (எண் 24:18; சங் 60:8-9; ஏசா 11:14; ஏசா 63:1-5; தானி 11:40-41; ஆமோ 9:12; ஒப 11-21). ஏதோம், சேயீர், ஏசா ஆகியவை ஒரே தேசத்தைக் குறிக்கும். (ஆதி 32:3; ஆதி 36:8,21).

7. அவர் இஸ்ரவேலை பராக்கிரமஞ்செய்யப் பண்ணுவார். (எண் 24:18; ஏசா 11:14; சக 12:5-9; சக 14:14).

8. மேசியா யாக்கோபிலிருந்து தோன்றுவார். (எண் 24:17,19; ஆதி 49:10; ஏசா 9:6-9; ஏசா 49:26; ஏசா 65:9; மத் 1:1-2; லூக்கா 1:32-33).

9. மேசியா ஆளுகை செய்வார். (எண் 24:18; ஏசா 9:6-7; தானி 7:13-14; சக 9:10; சக 14:9; 2கொரி 15:24-28; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5).

10. மேசியா பட்டணங்களில் மீதியானவர்களை அழிப்பார். (எண் 24:19). அர்மகெதோன் யுத்தத்திற்குப் பின்பு இயேசு கிறிஸ்து தேசங்களைக் கூட்டிச் சேர்த்து, தம்முடைய ராஜ்யத்திற்குள் யார் பிரவேசிப்பார்கள், யார் பிரவேசிக்கமாட்டார்கள் என்பதைத் தீர்மானம்பண்ணுவார். (மத் 25:31-46).

பிலேயாம் தீர்க்கதரிசனம் சொன்ன பின்பு, எழுந்து புறப்பட்டு, தன் இடத்திற்குத் திரும்புகிறான்; பாலாகும் தன் வழியே போகிறான் (எண் 24:25).

இது பிலேயாமின் வாழ்வில் ஏற்பட்ட திருப்புமுனையாகும். பிலேயாமின் ஜீவியத்திலுள்ள எல்லாக் • காரியங்களைப் பற்றியும் வேதாகமம் விவரித்துக் கூறுகிறது. கர்த்தருடைய தீர்க்கதரிசியாக இருந்தவன். கர்த்தரை விட்டு, பின்வாங்கிக் குறிசொல்லுகிறவனானான். பிலேயாமைப் பற்றி அடுத்து கூறப்பட்டிருக்கும் வசனத்தில் இவன் இஸ்ரவேலுக்கு சத்துருவாக இருந்து மரித்துப் போகிறான். (எண் 31:8).

யோசுவா இவனைக் குறிசொல்லுகிறவன் என்று அழைக்கிறார். (யோசு 13:22). தன்னால் இஸ்ரவேலரைச் சபிக்க முடியாது என்றும், ஆனால் கர்த்தர் அவர்களைச் சபிக்க வேண்டுமானால் இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்யுமாறு வழிநடத்தவேண்டும் என்றும் பிலேயாம் பாலாகிற்கு ஆலோசனை கூறுகிறான். (எண் 25:1-9; எண் 31:16; 2பேதுரு 2:15; யூதா 1:11; வெளி 2:14).

25 அதிகாரம்

பிலேயாமால் இஸ்ரவேல் புத்திரரை சபிக்க முடியவில்லை. அவர்கள் பிலேயாமின் சாபவார்த்தைகளுக்கு தப்பித்துக்கொள்கிறார்கள். ஆனாலும் பிலேயாமின் துன்மார்க்கமான ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரருக்கு மிகப்பெரிய நிந்தையும், அதிகமான அழிவும் உண்டாயிற்று.

பிலேயாம் பாலாகைவிட்டு தன்னுடைய இடத்திற்கு திரும்பிப்போகும் முன்பாக, இஸ்ரவேல் புத்திரரை வெகுவாக பாதிக்கும் ஒரு யோசனையை அவனுக்கு சொல்லிவிட்டுப்போகிறான். கர்த்தரையும் இஸ்ரவேல் புத்திரரையும் பிரிக்கவேண்டுமென்றால், இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பாவம் காணப்படவேண்டும் என்று பிலேயாம் பாலாகுக்கு யோசனை சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளினால் சோதிக்கப்படுகிறார்கள். இதன் விளைவாக அவர்களில் அநேகர் அழிந்துபோகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் பாவம். இஸ்ரவேல் ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணுகிறார்கள். அவர்களுடைய தேவர்களை பணிந்துகொண்டு விக்கிரகாராதனை செய்கிறார்கள் (எண் 25:1-3).

இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் வேசித்தனத்தில் ஈடுபட்டவர்களையும், விக்கிரகாராதனை செய்தவர்களையும் தண்டிக்கிறார்கள் (எண் 25:4,5). பாவம் செய்தவர்களில் அநேகர் கர்த்தருடைய கரத்தினாலும் தண்டிக்கப்படுகிறார்கள் (எண் 25:9).

எலெயாசாரின் மகன் பினெகாஸ் கர்த்தரிடத்தில் பக்தி வைராக்கியமாயிருக்கிறான். அவன் வேசித்தனப்பாவத்தில் ஈடுபட்ட சிம்ரியையும், கஸ்பியையும் ஒரு ஈட்டியினால் கொன்றுபோடுகிறான் (எண் 25:6,8,14,15). பினெகாஸ் இஸ்ரவேல் புத்திரர் நடுவில் கர்த்தருடைய நாமத்தினிமித்தம் பக்தி வைராக்கியம் காண்பிக்கிறான். கர்த்தர் அவனைப் புகழ்ந்து பேசுகிறார் (எண் 25:10-13).

ஆதியிலே ஸ்திரீக்கும் சர்ப்பத்திற்கும் பகை ஏற்பட்டதுபோல, இப்போது இஸ்ரவேல் புத்திரருக்கும் அவர்களை பாவம் செய்ய தூண்டின மீதியானியருக்கும் பகை உண்டாயிருக்கிறது (எண் 25:16-18).

இஸ்ரவேல் புத்திரரின் பாவம்
எண் 25:1-5

எண் 25:1. இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத்தொடங்கினார்கள்.

எண் 25:2. அவர்கள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி ஜனங்களை அழைத்தார்கள்; ஜனங்கள் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்துகொண்டார்கள்.

எண் 25:3. இப்படி இஸ்ரவேலர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டார்கள்; அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது.

எண் 25:4. கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலை விட்டு நீங்கும்படி, நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டிக்கொண்டு, அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போடும்படி செய் என்றார்.

எண் 25:5. அப்படியே மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளை நோக்கி: நீங்கள் அவரவர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்ட உங்கள் மனிதரைக் கொன்றுபோடுங்கள் என்றான்.

இஸ்ரவேல் புத்திரர் சித்தீமிலே தங்கியிருக்கிறார்கள். அப்போது அவர்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத்தொடங்குகிறார்கள் (எண் 25:1). அவர்கள் மீதியான் தேசத்து ஸ்திரீகளோடும் வேசித்தனம்பண்ணுகிறார்கள். மோவாபியரும் மீதியானியரும் இஸ்ரவேல் புத்திரருக்கு சர்ப்பனைகளை செய்து அவர்களை மோசம்போக்குகிறார்கள்.

சித்தீம் என்னும் இடம் எண் 33:49 ஆவது வசனத்தில் ஆபேல்-சித்தீம் என்று எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் பாகாலின் வேசியோடு வேசித்தனம் பண்ணுகிறார்கள். பாகாலுக்கு ஏராளமான பக்தர்களை வரவழைப்பதற்காக அவர்கள் வேசிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் மோவாபின் குமாரத்திகளோடு வேசித்தனம்பண்ணுவதோடு, அவர்களுடைய விக்கிரகங்களையும் ஆராதிக்கிறார்கள். மோவாபிய ஸ்திரீகள் தங்கள் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்ணும்படி இஸ்ரவேல் ஜனங்களை அழைக்கிறார்கள்; இஸ்ரவேல் ஜனங்களும் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்துகொள்கிறார்கள் (எண் 25:2).

அந்த நாட்களில் மோவாபின் வேசிகளும், மீதியானின் வேசிகளும் மிகவும் அழகான ஸ்திரீகளாக இருப்பார்களாம். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை விக்கிரகாராதனையிலும், வேசித்தனத்திலும் விழவைத்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகங்களுக்குபலியிட்ட பலிகளை போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்துகொள்கிறார்கள். எண் 25:4,9, 1கொரி 10:8 ஆகிய வசனங்களின் பிரகாரம் இஸ்ரவேலருடைய ஜனங்களின் தலைவர்களில் 1,000 பேர்களும், மேலும் 23,000 பேர்களும் அந்நிய தேவர்களைப் பணிந்து கொண்டார்கள் என்று தெரியவருகிறது. பத்துக் கற்பனைகளில் இவர்கள் ஆறு கற்பனைகளை மீறிவிடுகிறார்கள். இவர்களுக்கு அதற்காக மரண தண்டனை கொடுக்கப்படுகிறது. (எண் 25:4, 7-9,18)

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கற்பனைகளை மீறுகிறார்கள். அவர்கள் மீறிய கற்பனைகளின் விவரம் வருமாறு :

1. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். (யாத் 20:3).
2. நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் (யாத் 20:4-5).
3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக (யாத் 20:7).
4. உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. (யாத் 20:12).
5. விபசாரம் செய்யாதிருப்பாயாக. (யாத் 20:14).
6. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக. (யாத் 20:17)

இப்படி இஸ்ரவேலர் பாகால்பேயோரைப் பற்றிக்கொள்கிறார்கள்; அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூளுகிறது (எண் 25:3). இஸ்ரவேல் ஜனங்கள் சரீரப்பிரகாரமாக வேசித்தனம்பண்ணுவதோடு, பாகால்பேயோரை பற்றிக்கொண்டு, ஆவிக்குரிய வேசித்தனமும்பண்ணுகிறார்கள்.

மோவாபியரின் விக்கிரக தெய்வத்திற்குப் பாகால் என்று பெயர். இந்த விக்கிரகத்தை அவர்கள் வைத்து, வழிபட்ட ஸ்தலத்தின் பெயர் பேயோர். (எண் 25:18; எண் 23:28; யோசு 22:17; ஓசி 9:10).

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணவில்லை. ஆனாலும் அவர்களில் அநேகர் மோவாபியரோடு வேசித்தனம் பண்ணி தங்களைக் கெடுத்துப்போடுகிறார்கள். மீதியான் தேசத்து குமாரத்திகள் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக சர்ப்பனைகளைப்பண்ணி, அவர்களை மோசம்போக்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் மோசம்போகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் வேசித்தனத்தையும், விக்கிரகாராதனையையும் பண்ணுகிறார்கள். இவ்விரண்டுமே கர்த்தருக்கு விரோதமான பாவம். வேசித்தனம்பண்ணுகிறவர்கள் தங்களுடைய சரீரங்களை கெடுத்துப்போடுகிறார்கள். அவர்கள் தங்களுடைய ஆத்துமாவையும் தீட்டுப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித்தனம்பண்ணி, தங்களுடைய மோகஇச்சைகளினால் அவர்களுக்கு அடிமைகளாகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் குமாரத்திகளோடும் மீதியானியரின் குமாரத்திகளோடும் வேசித்தனம்பண்ணி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூளுகிறது. அவர்களோ தங்கள் மதியீனத்தினால், கர்த்தருடைய கோபத்திலிருந்து தப்பிப்பதற்காக, கர்த்தரைப் பணிந்துகொள்ளாமல், அந்நிய தேசத்தாரின் தேவர்களைப் பணிந்துகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் குமாரத்திகளோடு வேசித்தனத்தில் ஐக்கியமாகயிருப்பதினால், இஸ்ரவேல் புத்திரருக்கு சர்ப்பனைகளை செய்து, அவர்களை மோசம்போக்குவது மோவாபின் குமாரத்திகளுக்கு மிகவும் எளிதாகயிருக்கிறது.

பாகால் பேயோரைப்பற்றிக் கொள்கிறவர்கள் வேசித்தனமும் பண்ணுவார்கள். பாகால் பேயோருடைய விக்கிரகாராதனையில், வேசித்தனமும் ஒரு பகுதியாகயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் சித்தீமிலே தங்கியிருக்கிறார்கள். இந்த தேசத்திலிருந்து அவர்களால் கானான் தேசத்தை நோக்கிப் பார்க்க முடியும். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்து அதை சுதந்தரிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, சித்தீமிலே தங்கியிருக்கையில், மோவாபின் குமாரத்திகளோடு வேசித்தனம்பண்ணி, பாகால்பேயோரைப் பற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தின் நிமித்தமாக கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூளுகிறது. பிலேயாம் சன்னதம்பார்த்தும் அவனால் இஸ்ரவேல் புத்திரரை சபிக்க முடியவில்லை. பிலேயாமும் பாலாகும் ஏழு பலிபீடங்களைக் கட்டியும், காளைகளையும் ஆட்டுக்கடாக்களையும் கர்த்தருக்கு பலியாக செலுத்தியும், பிலேயாமால் இஸ்ரவேல் புத்திரரை சபிக்க முடியவில்லை. கர்த்தரை இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக பிலேயாமால் திருப்ப முடியவில்லை.

பிலேயாமால் செய்ய முடியாத காரியத்தை, இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தினால் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி பாகால்பேயோரை பற்றிக்கொள்கிறார்கள். கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலர் மேல் மூளுகிறது.

அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மேல் வாதையை அனுப்புகிறார். அந்த வாதையினால் செத்தவர்கள் இருபத்து நாலாயிரம்பேர் (*எண் 25:9*). பிலேயாமாலும், பாலாகாலும் இஸ்ரவேல் புத்திரரை அழிக்க முடியவில்லை. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தங்களுடைய வேசித்தனத்தினாலும், விக்கிரகாராதனையினாலும் தங்களைத் தாங்களே அழித்துப்போடுகிறார்கள்.

கர்த்தருடைய கோபத்தினால் இஸ்ரவேல் புத்திரர்மேல் வாதை உண்டாயிற்று. ஜனங்கள் மத்தியிலே வேசித்தனமும் விக்கிரகாராதனையும் வேகமாக பரவுவதுபோல, கர்த்தரால் உண்டான வாதையும் வேகமாக பரவுகிறது. பாவம் தொற்றுநோயைப்போல பரவும். பாவத்திற்கு தண்டனையான வாதையும் தொற்றுநோயைப்போலவே பரவுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலை விட்டு நீங்கும்படி நீ ஜனங்களின் தலைவர் எல்லாரையும் கூட்டிக்கொண்டு, அப்படிச் செய்தவர்களைச் சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போடும்படி செய்" (எண் 25:4) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. விக்கிரகாராதனை செய்கிறவர்களைக் கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப் போடவேண்டும்.

2. பாகால்பேயோரைப் பற்றிக்கொண்ட மனிதரைக் கொன்றுபோடவேண்டும். (எண் 25:5).

இந்த வாக்கியத்தில் "தலைவர்" என்பதற்கான எபிரெய வார்த்தை "ரோஷ்" என்பதாகும். ஆயிரம் தலைவர்கள் இந்த வாதையில் மரித்துப் போனார்கள். எண் 25:9 ஆவது வசனத்தின் பிரகாரம் மொத்தம் 24,000 பேர் செத்துப்போனார்கள் (1கொரி 10:8) ஒரே நாளில் 23,000பேர் மரித்துப்போனார்கள். இவர்களோடு ஆயிரம் தலைவர்களும் சேர்த்து மொத்தம் 24,000பேர் மரித்துப் போனார்கள்.

தூக்கிப்போடுதல் என்னும் வார்த்தைக்கு எபிரெய பாஷையில் "யாக்கா" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு, ஒரு கட்டையில் சிலுவையில் அறைவதுபோல ஆணியில் அறைந்து ஒருவரைத் தூக்கிப்போடுவது என்று பொருள். இது அக்காலத்து வழக்கம். ஜனங்களின் தலைவர்களை இவ்வாறு தூக்கிப் போடுகிறார்கள்.

அப்படியே மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளை நோக்கி, "நீங்கள் அவரவர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்ட உங்கள் மனிதரைக் கொன்றுபோடுங்கள்" (எண் 25:5) என்று சொல்லுகிறார். இஸ்ரவேலில் மொத்தம் 70 நியாயாதிபதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (எண் 11:16,17, 25-29).

ஒவ்வொரு நியாயாதிபதியும் 14 அல்லது 15 தலைவர்களைத் தூக்கிப்போட்டு, மொத்தம் 1000 தலைவர்களையும் தூக்கிப் போட்டுவிடுகிறார்கள்.

இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் பாவம் செய்தவர்களை பட்டயத்தினால் கொன்றுபோடவேண்டும். அதன் பின்பு அவர்களுடைய சரீரங்களை சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போட்டுவிடவேண்டும். அவர்களுடைய செத்த சரீரங்களைப் பார்க்கும்போது, உயிரோடிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு பாவத்தைக் குறித்த வெறுப்பும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்த பயமும் உண்டாகும். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவத்தின் உக்கிரத்தைப் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக, கர்த்தர் அவர்களுக்கு கடுமையான தண்டனையைக் கொடுக்கச் சொல்லுகிறார்.

எலெயாசாரின் மகன் பினெகாஸ்
எண் 25:6-15

எண் 25:6. அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் அனைவரும் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக அழுதுகொண்டு நிற்கையில், அவர்கள் கண்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு மீதியானிய ஸ்திரீயைத் தன் சகோதரரிடத்திலே அழைத்துக்கொண்டுவந்தான்.

எண் 25:7. அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டபோது, அவன் நடுச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன்கையிலே பிடித்து,

எண் 25:8. இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம் பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்றுபோயிற்று.

எண் 25:9. அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்துநாலாயிரம் பேர்.

எண் 25:10. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 25:11. நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான்.

எண் 25:12. ஆகையால், இதோ அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன்.

எண் 25:13. அவன் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்.

எண் 25:14. மீதியானிய ஸ்திரீயோடே குத்துண்டு செத்த இஸ்ரவேல் மனிதனுடைய பேர் சிம்ரி; அவன் சல்லூவின் குமாரனும், சிமியோனியரின் தகப்பன் வம்சத்தில் ஒரு பிரபுவுமாயிருந்தான்.

எண் 25:15. குத்துண்ட மீதியானிய ஸ்திரீயின் பேர் கஸ்பி, அவள் சூரின் குமாரத்தி, அவன் மீதியானியருடைய தகப்பன் வம்சத்தாரான ஜனங்களுக்குத் தலைவனாயிருந்தான்.

இஸ்ரவேல் புத்திரரின் நடுவே துன்மார்க்கத்திற்கும் நீதிக்கும் இடையே ஒரு போராட்டம் ஏற்படுகிறது. இந்தப் போராட்டத்தில் நீதி ஜெயம்பெறுகிறது. சத்தியம் ஒருபோதும் தோற்றுப்போகாது. கர்த்தருடைய நீதி எக்காலத்திலும் நிலைத்து நிற்கும்.

சிமியோனின் கோத்திரத்தைச் சேர்ந்த சிம்ரி என்பவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். இவன் தன் தகப்பன் வம்சத்தில் ஒரு பிரபுவாகயிருக்கிறான். சிம்ரி சல்லூவின் குமாரன். இவன் மீதியான ஸ்திரீயோடு வேசித்தனம்பண்ணுகிறான். அந்த ஸ்திரீயின் பெயர் கஸ்பி. அவள் சூரின் குமாரத்தி. அவளுடைய தகப்பனும் மீதியானிய ஜனங்களுக்கு தலைவனாகயிருக்கிறான்.

வேசித்தனம்பண்ணுகிற இவ்விரண்டுபேருமே தங்களுடைய தகப்பன் வம்சத்தில் பிரதானமானவர்கள். சிம்ரி எல்லோருடைய கண்களுக்கு முன்பாக, மீதியான் தேசத்து ஸ்திரீயை வேசித்தனம்பண்ணுவதற்காக அழைத்துக்கொண்டு போகிறான்.

அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் அனைவரும் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக அழுதுகொண்டு நிற்கிறார்கள். அவர்கள் கண்களுக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரில் ஒருவனாகிய சிம்ரி என்பவன் மீதியானிய ஸ்திரீயாகிய கஸ்பி என்பவளை தன்கூடாரத்திற்கு அழைக்கொண்டு போகிறான் (எண் 25:6).

மோசேயும் இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் யாவரும் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாக அழுதுகொண்டு நிற்கிறார்கள். எண் 25:9 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் வாதை பாளயத்தில் ஏற்கெனவே ஆரம்பமாயிருக்கிறது. பக்தியுள்ளவர்கள் எல்லோரும், சிம்ரி இந்தப் பாவத்தைத் துணிகரமாகச் செய்தபோது, ஆசரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக அழுது கொண்டு நிற்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருசிலர் துணிகரமாகப் பாவம் செய்கிறார்கள். சிம்ரி இஸ்ரவேலின் பிரபுக்களில் ஒருவன். இவனோடு வேசித்தனம் பண்ணியவள் மீதியானியரில் முக்கியமான ஸ்திரீ. அவள் பெயர் கஸ்பி. மீதியானியரும், மோவாபியரும் திட்டமிட்டு, இஸ்ரவேலின் தலைவர்களை விக்கிரகாராதனையிலும், வேசித்தனத்திலும் விழவைத்துவிடுகிறார்கள். தலைவர்களைப் பின்பற்றி, சாதாரண ஜனங்களும் இந்தப் பாவங்களைச் செய்கிறார்கள்.

ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக மோசேயும், இஸ்ரவேலின் நியாயாதிபதிகளும், இன்னும் கர்த்தர்மீது பக்தியுள்ள அநேகரும் இருக்கிறார்கள். ஆனால் தேசத்தில் பாவம் பெருகியிருக்கிறது. வேசித்தன பாவமும், விக்கிரகாராதனை பாவமும் ஒளிவு மறைவாக நடைபெறாமல், எல்லோருடைய கண்களுக்கு முன்பாக பிரத்தியட்சமாகவும், வெளிப்படையாகவும் நடைபெறுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. நீதியின் மேல் தாகமும் குறைந்துபோயிற்று. இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும் தங்களுடைய மனதிற்கு பிடித்த காரியத்தை பயப்படாமலும், தயங்காமலும், தாராளமாயும் செய்கிறார்கள்.

ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக மோசேயும், இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் யாவரும் அழுதுகொண்டு நிற்கையில், அவர்களோடேகூட பினெகாசும் நிற்கிறான். இவன் ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன். தங்களுடைய கண்களுக்கு முன்பாக சிம்ரி, மீதியான் தேசத்து ஸ்திரீயாகிய கஸ்பியை அழைத்துக்கொண்டு தன்னுடைய கூடாரத்திற்குப்போவதை எல்லோரும் பார்ப்பதுபோல பினெகாசும் பார்க்கிறான் (எண் 25:7).

சிம்ரியின் துணிகரமான பாவத்தை எலெயாசாரின் மகனான பினெகாஸ் காண்கிறான். பினெகாஸ் ஒரு ஈட்டியை எடுத்து, சிம்ரியையும், அவனோடு விபசாரம் செய்த மீதியானிய ஸ்திரீயையும் குத்திப்போடுகிறான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்றுபோயிற்று (எண் 25:7-8).

கர்த்தருடைய நாமத்தினிமித்தம், இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே பினெகாஸ் பக்தி வைராக்கியமாயிருக்கிறான். இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினிமித்தமாக கர்த்தர் அவர்கள்மேல் உக்கிரகோபத்தோடிருக்கிறார். எல்லோருடைய கண்களுக்கு முன்பாக சிம்ரி மீதியானிய ஸ்திரீயாகிய கஸ்பியை அழைத்துக்கொண்டு போவதை, பினெகாஸ் கண்டபோது, அவன் நடுச்சபையிலிருந்து எழுந்து ஒரு ஈட்டியை தன் கையில் பிடித்துக்கொண்டு சிம்ரியின் கூடாரத்திற்குப்போகிறான்.

பினெகாஸ், இஸ்ரவேலனாகிய அந்த மனிதன் வேசித்தனம் பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரீயுமாகிய இருவருடைய வயிற்றிலும் ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போடுகிறான் (எண் 25:8).

பினெகாஸ் செய்த காரியத்தை வேதபண்டிதர்கள் நியாயப்படுத்துகிறார்கள். பினெகாசின் தகப்பனார் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பிரதான ஆசாரியனாயிருக்கிற எலெயாசார். எலெயாசாருக்கு பின்பு அவனுடைய குமாரனாகிய பினெகாசே பிரதான ஆசாரிய பட்டத்தை ஏற்கவேண்டும். பினெகாஸ் இஸ்ரவேலின் நியாயாதிபதிகளில் ஒருவனாகவும் இருக்கிறான்.

சிம்ரியும் கஸ்பியும் வேசித்தனம்பண்ணும்போது பினெகாஸ் தன்னுடைய சுயதீர்மானத்தின் பிரகாரமாக, அவர்களுடைய அறைக்குப்போய் அவர்களை கொன்றுபோடவில்லை என்றும், மோசேயின் கட்டளை பிரகாரமாகவே, பினெகாஸ் அங்கே போய் அவர்களைக் கொன்றுபோட்டான் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

மோசேயும் தெய்வீக ஏவுதலினாலேயே இப்படிப்பட்ட தீர்மானம் எடுத்தார் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். பாகால்பேயோரை பற்றிக்கொண்ட இஸ்ரவேல் புத்திரரை கொன்றுபோடவேண்டும் என்பதும், அவர்களுடைய சரீரங்களை சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கிப்போடவேண்டும் என்பதும் கர்த்தருடைய கட்டளையாக இருக்கிறது. மோசேயும் பினெகாசும் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள்.

பினெகாஸ் சிம்ரியையும் கஸ்பியையும் ஈட்டியினால் உருவக்குத்திப்போட்டதை கர்த்தரும் அங்கீகரிக்கிறார். பினெகாஸ் கர்த்தருடைய நாமத்தினிமித்தமாக, சிம்ரி கஸ்பி ஆகியோர் நடுவிலே பக்தி வைராக்கியம் காண்பித்தான் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதன் மூலமாக பினெகாஸ் இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான கர்த்தருடைய உக்கிரத்தைத் திருப்புகிறான்.

கர்த்தர் பினெகாசின் செய்கையை அங்கீகரிக்கிறார். பினெகாஸ் இஸ்ரவேலில் ஒரு நியாயாதிபதியாயிருந்து, தன்னுடைய கடமையை நிறைவேற்றுகிறான். ஆனால் கர்த்தரோ பினெகாசை தன் கடமையை நிறைவேற்றியவனாகவும் பார்க்கிறார், தம்முடைய நாமத்தினிமித்தம் பக்தி வைராக்கியம் காண்பித்தவனாகவும் அவனைப் பார்க்கிறார்.

இஸ்ரவேலிலே பினெகாசைப்போல இன்னும் அநேக நியாயாதிபதிகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக அழுதுகொண்டு நிற்கையில், சிம்ரி கஸ்பியைக் கூட்டிக்கொண்டு போவதை தங்கள் கண்களால் பார்க்கிறார்கள். ஆனாலும் அந்த நியாயாதிபதிகளில் ஒருவரும், பினெகாசைப்போல துணிந்து, அவர்கள் வேசித்தனம்பண்ணும் அறைக்கேபோய், அவர்களை ஈட்டியினால் கொன்றுபோட முன்வரவில்லை.

மீதியானிய ஸ்திரீயோடு வேசித்தனம்பண்ணின சிம்ரி ஒரு பிரபுவாகயிருக்கிறான். அவன் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஒரு தலைவன். இஸ்ரவேலின் நியாயாதிபதிகள் தங்கள் பிரபுவாகிய சிம்ரிக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள். அவர்கள் சிம்ரிக்கும் பயப்படுகிறார்கள். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். ஆனால் இஸ்ரவேலின் நியாயாதிபதிகளோ கர்த்தருக்கும் பயப்படுகிறார்கள், தங்கள் பிரபுவாகிய சிம்ரிக்கும் பயப்படுகிறார்கள்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் மத்தியிலே, எலெயாசாரின் மகன் பினெகாஸ் கர்த்தருக்கு பக்தி வைராக்கியம் காண்பிக்கிறான். அவன் கர்த்தருக்கு மாத்திரமே பயப்படுகிறான். அவன் தங்களுடைய பிரபுவாகிய சிம்ரிக்கு பயப்படவில்லை. சிம்ரி சிமியோனின் கோத்திரத்தைச் சேர்ந்த பிரபு. அவனுடைய கோத்திரம் முக்கியமான கோத்திரமாகயிருந்தாலும், அவனுடைய கோத்திரத்தார் மத்தியிலே சிம்ரிக்கு பேரும் புகழும் இருந்தாலும், பினெகாஸ் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் கர்த்தர்மீது பக்தி வைராக்கியமாயிருக்கிறான். இதனால் கர்த்தர் பினெகாசின்மீது பிரியமாயிருக்கிறார்.

"அப்பொழுது பினெகாஸ் எழுந்து நின்று நியாயஞ்செய்தான்; அதினால் வாதை நிறுத்தப்பட்டது. அது தலைமுறை தலைமுறையாக என்றைக்கும் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (சங் 106:30,31).

இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினிமித்தமாக கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டிருக்கிறது. அவர்கள் மத்தியிலே வாதை புறப்பட்டு வந்திருக்கிறது. அந்த வாதையினால் இதுவரையிலும் இருபத்து நாலாயிரம் பேர் செத்துப்போயிருக்கிறார்கள். பினெகாஸ், வேசித்தனம்பண்ணின சிம்ரியையும் கஸ்பியையும் ஈட்டியினால் குத்தி கொன்றுபோட்டவுடன், இஸ்ரவேல் புத்திரரில் உண்டான வாதை நின்றுபோயிற்று (எண் 25:8,9).

கர்த்தர் மோசேயை நோக்கி, "நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான்" (எண் 25:11) என்றும்,

"ஆகையால், இதோ அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன். அவன் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல்" (எண் 25:12,13) என்றும் சொல்லுகிறார்.

பினெகாஸ் இஸ்ரவேலின் மூன்றாவது பிரதான ஆசாரியனாகிறான். (எண் 25:12-13; எண் 31:6; யோசு 22:30; நியா 20:27-28). துணிகரமாகப் பாவம் செய்து, தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணியவர்கள்மீது நீதியின் வைராக்கியத்தை இவன் காண்பித்ததினால், கர்த்தர் பினெகாசிற்கு நித்திய ஆசாரியத்துவப் பட்டத்தைக் கொடுக்கிறார். (எண் 25:6-8, சங் 106:30). மீட்கப்பட்டவர்கள் அனைவருமே ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இந்தப் பூமியை ஆளுகை செய்வார்கள். இவர்களைப் போன்று, பினெகாசும் இருப்பான் (வெளி 1:5; வெளி 5:10; வெளி 20:4-6; வெளி 22:4-5).

பினெகாசின் ஈட்டியினால் செத்துப்போன இஸ்ரவேல் புத்திரனை பற்றிய விவரமும், மீதியானிய ஸ்திரீயைப்பற்றிய விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

மீதியானிய ஸ்திரீயோடே குத்துண்டு செத்த இஸ்ரவேல் மனிதனுடைய பேர் சிம்ரி; அவன் சல்லூவின் குமாரனும், சிமியோனியரின் தகப்பன் வம்சத்தில் ஒரு பிரபுவுமாயிருக்கிறான் (எண் 25:14).

குத்துண்ட மீதியானிய ஸ்திரீயின் பேர் கஸ்பி, அவள் சூரின் குமாரத்தி, அவன் மீதியானியருடைய தகப்பன் வம்சத்தாரான ஜனங்களுக்குத் தலைவனாயிருக்கிறான் (எண் 25:15).

இந்த சம்பவத்தின் மூலமாக கர்த்தர் எலெயாசாரின் மகன் பினெகாசுக்கு தம்முடைய சமாதானத்தின் உடன்படிக்கையை கட்டளையிடுகிறார். எலெயாசாருக்கு பின்பு பினெகாஸ் பிரதான ஆசாரியனாயிருப்பான். பினெகாசுக்கும், அவனுக்கு பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டயத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். தம்மை கனம்பண்ணுகிறவர்களை கர்த்தரும் கனம்பண்ணுகிறார்.

மீதியானியருக்கு தண்டனை எண் 25:16-18

எண் 25:16. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 25:17. மீதியானியரை நெருக்கி அவர்களை வெட்டிப்போடுங்கள்.

எண் 25:18. பேயோரின் சங்கதியிலும் பேயோரின் நிமித்தம் வாதையுண்டான நாளிலே குத்துண்ட அவர்கள் சகோதரியாகிய கஸ்பி என்னும் மீதியான் பிரபுவினுடைய குமாரத்தியின் சங்கதியிலும், அவர்கள் உங்களுக்குச் செய்த சர்ப்பனைகளினால் உங்களை மோசம்போக்கி நெருக்கினார்களே.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாக கர்த்தர் அவர்களை வாதையினால் தண்டிக்கிறார். ஒரு தகப்பன் தன்னுடைய சொந்த பிள்ளைகளை கோலினால் கண்டித்து திருத்துவதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை திருத்துகிறார்.

மீதியானியரோ இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக சர்ப்பனைகளை செய்கிறார்கள். அவர்களை வேசித்தனம் என்னும் கண்ணியிலும், விக்கிரகாராதனை என்னும் பாவத்திலும் விழவைக்கிறார்கள். தம்முடைய ஜனத்தை மோசம் போக்கின மீதியானியருக்கு கர்த்தர் கடினமான தண்டனை கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "மீதியானியரை நெருக்கி அவர்களை வெட்டிப்போடுங்கள்" (எண் 25:16,17) என்று சொல்லுகிறார்.

"பேயோரின் சங்கதியிலும் பேயோரின் நிமித்தம் வாதையுண்டான நாளிலே குத்துண்ட அவர்கள் சகோதரியாகிய கஸ்பி என்னும் மீதியான் பிரபுவினுடைய குமாரத்தியின் சங்கதியிலும், அவர்கள் உங்களுக்குச் செய்த சர்ப்பனைகளினால் உங்களை மோசம்போக்கி நெருக்கினார்களே" (எண் 25:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

1கொரி 10:8 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் நாள் இதுதான். மீதியானியரோடு இஸ்ரவேல் புத்திரர் யுத்தம் பண்ணுவதற்கு இதுதான் காரணம். எண் 31 ஆவது அதிகாரத்தில் மீதியானியர்மீது இஸ்ரவேலுக்குக் கிடைத்த வெற்றியைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தபோது அமலேக்கியர் அவர்களுக்கு தீங்கு செய்தார்கள். கர்த்தர் அமலேக்கியரை கடினமான தண்டித்தார். அதுபோலவே இப்போது கர்த்தர் மீதியானியரை தண்டிக்கிறார்.

"பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார்" (யாத் 17:14).

26 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்படுவது சம்பந்தமான காரியங்கள் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பதினால், இந்தப் புஸ்தகம் "எண்ணாகமம்" என்று அழைக்கப்படுகிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரரை ஏற்கெனவே சீனாய் மலையில் எண்ணித்தொகையேற்றினார். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறி, ஒரு வருஷத்திற்கு பின்பு, அவர்கள் முதல் முறையாக எண்ணித்தொகையேற்றப்பட்டார்கள். இந்த சம்பவம் எண் 1,2 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது இஸ்ரவேல் புத்திரர் இரண்டாம் முறையாக எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள். இவர்கள் மோவாபின் சமவெளியில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரை இரண்டாம் முறையாக, மோவாபின் சமவெளியில் எண்ணித்தொகையேற்றும் சம்பவம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு கர்த்தர் மோசேக்கும், ஆரோனின் குமாரனாகிய எலெயாசாருக்கும் கட்டளை கொடுக்கிறார் (எண் 26:1-4).

இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தாரும், அவர்களுடைய ஒவ்வொரு குடும்பத்தாரும் எண்ணித்தொகையேற்றப்படுகிறார்கள் (எண் 26:5-50). அவர்களுடைய மொத்த எண்ணிக்கையின் விவரம் (எண் 26:51).

கானான் தேசம் இஸ்ரவேல் புத்திரரின் இலக்கத்திற்கு தக்கதாக பங்கிடப்படுகிறது (எண் 26:52-56).

லேவியரின் குடும்பங்களும் எண்ணப்படுகிறது. அவர்களுடைய எண்ணிக்கையின் விவரம் (எண் 26:57-62). மோசேயும் ஆரோனும் சீனாய் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரை எண்ணும்போது இருந்தவர்களில், இப்போது ஒருவருமில்லை என்பதை கர்த்தர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார் (எண் 26:63-65).

இஸ்ரவேலரை எண்ணுங்கள் எண் 26:1-4

எண் 26:1. அந்த வாதை தீர்ந்தபின்பு, கர்த்தர் மோசேயையும் ஆரோனின் குமாரனும் ஆசாரியனுமாகிய எலெயாசாரையும் நோக்கி:

எண் 26:2. இஸ்ரவேல் புத்திரரின் சமஸ்த சபையாரையும் அவர்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படி இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட இஸ்ரவேலிலே யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்கள் எல்லாரையும் எண்ணுங்கள் என்றார்.

எண் 26:3. அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவின் அருகே இருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனான வெளிகளிலே அவர்களோடே பேசி:

எண் 26:4. கர்த்தர் மோசேக்கும் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரருக்கும் கட்டளையிட்டிருக்கிறபடியே, இருபது வயதுமுதற்கொண்டிருக்கிறவர்களை எண்ணுங்கள் என்றார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், சீனாய் மலையில் ஏற்கெனவே எண்ணித்தொகையேற்றப்பட்டார்கள். யாரையெல்லாம் எண்ணித்தொகையேற்ற வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டாரோ, அவர்கள் மாத்திரமே அப்போது எண்ணப்பட்டார்கள். கர்த்தர் இப்போதும் அதே கட்டளையைக் கொடுக்கிறார். இருபது வயது முதல் அதற்குமேற்பட்ட, இஸ்ரவேலிலே யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்கள் எல்லோரையும் எண்ணுமாறு கர்த்தர் சொல்லுகிறார் (எண் 26:1,2).

மீதியானியரோடு யுத்தம் பண்ணுவதற்கு ஆயத்தமாக இங்கு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க இஸ்ரவேல் புத்திரர்கள் எண்ணித் தொகையேற்றப்படுகிறார்கள். (எண் 31) அத்துடன் இதை அடுத்து இஸ்ரவேல் புத்திரர் கானானையும் சுதந்தரித்துக் கொள்வார்கள். அந்தத் தேசத்தில் கோத்திரத்தின் ஜனத்தொகைப் பிரகாரம் பங்குவீதம் பிரிப்பதற்கும் இந்த ஜனத்தொகை கணக்கெடுப்பு உதவி புரியும்.

மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் இஸ்ரவேல் புத்திரரை இரண்டுமுறையும் எண்ணித்தொகையேற்றுகிறார். தாவீதும் இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றினார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரை எண்ணுமாறு கர்த்தர் தாவீதுக்கு கட்டளை கொடுக்கவில்லை.

கர்த்தருடைய அனுமதியில்லாமலேயே தாவீது இஸ்ரவேல் புத்திரரை எண்ணினார். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்மேல் வந்தது. தான் செய்த தப்பிதத்திற்காக தாவீது மிகப்பெரிய கிரயம் செலுத்தினார்.

மோசே சீனாய் மலையில், முதல் முறையாக இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றியபோது, ஆரோன் அவரோடு கூடயிருந்தார். ஜனங்களை எண்ணுவதற்கு ஆரோன் மோசேக்கு உதவிசெய்தார். இப்போது ஆரோன் உயிரோடில்லை. ஆரோனுக்கு பதிலாக அவருடைய குமாரன் எலெயாசார் மோசேயோடு கூடயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு கர்த்தர் கொடுக்கும் இரண்டாவது கட்டளை, மோசேக்கும், ஆரோனின் குமாரனாகிய எலெயாசாருக்கும் கொடுக்கப்படுகிறது. ஆரோனுக்கு பின்பு எலெயாசார் பிரதான ஆசாரிய பட்டத்திற்கு வந்திருக்கிறார் என்பதை கர்த்தர் இதன் மூலமாக உறுதிபண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை முதல் முறையாக எண்ணித்தொகையேற்றுவதற்கு, மோசேயும் ஆரோனும் என்னென்ன நியமங்களைப் பின்பற்றினார்களோ, அதே நியமங்களை மோசேயும் எலெயாசாரும் இப்போது பின்பற்றி, இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றவேண்டும். இஸ்ரவேல் புத்திரரில் யுத்தத்திற்கு புறப்படத்தக்கவர்களை மாத்திரம் எண்ணித்தொகையேற்றவேண்டும். அவர்கள் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கப்போகிறார்கள். அந்த தேசத்தில் அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், யோர்தானுக்கு இப்புறத்திலே, மோவாபின் சமவெளியில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரை எண்ணித்தொகையேற்றுவது, அவர்களை யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தப்படுத்துகிற சம்பவமாயிருக்கிறது.

இஸ்ரவேலை எண்ணித்தொகையேற்றுமாறு கர்த்தர் மோசேக்கும் எலெயாசாருக்கும் கட்டளை கொடுக்கிறார். அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவின் அருகே இருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனான வெளிகளிலே இஸ்ரவேல் ஜனங்களோடே பேசுகிறார்கள் (எண் 26:3). அவர்கள் ஜனங்களை நோக்கி, "கர்த்தர் மோசேக்கும் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரருக்கும் கட்டளையிட்டிருக்கிறபடியே, இருபது வயதுமுதற்கொண்டிருக்கிறவர்களை எண்ணுங்கள்" (எண் 26:4) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் கோத்திரங்களின் எண்ணிக்கை எண் 26:5-51

எண் 26:5. ரூபன் இஸ்ரவேலின் மூத்த குமாரன்; ரூபனுடைய குமாரர், ஆனோக்கியர் குடும்பத்துக்குத் தகப்பனான ஆனோக்கும், பல்லூவியர் குடும்பத்துக்குத் தகப்பனான பல்லூவும்,

எண் 26:6. எஸ்ரோனியர் குடும்பத்துக்குத் தகப்பனான எஸ்ரோனும், கர்மீயர் குடும்பத்துக்குத் தகப்பனான கர்மீயுமே.

எண் 26:7. இவைகளே ரூபனியரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்து மூவாயிரத்து எழுநூற்று முப்பதுபேர்.

எண் 26:8. பல்லூவின் குமாரன் எலியாப்.

எண் 26:9. எலியாபின் குமாரர் நேமுவேல், தாத்தான், அபிராம் என்பவர்கள்; இந்தத் தாத்தன் அபிராம் என்பவர்களே சபையில் பேர்பெற்றவர்களாயிருந்து, கர்த்தருக்கு விரோதமாகப் போராட்டம் பண்ணி, கோராகின் கூட்டாளிகளாகி, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக விவாதம் பண்ணினவர்கள்.

எண் 26:10. பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் கோராகையும் விழுங்கினதினாலும், அக்கினி இருநூற்று ஐம்பது பேரைப் பட்சித்ததினாலும், அந்தக் கூட்டத்தார் செத்து, ஒரு அடையாளமானார்கள்.

எண் 26:11. கோராகின் குமாரரோ சாகவில்லை.

எண் 26:12. சிமியோனுடைய குமாரரின் குடும்பங்களாவன: நேமுவேலின் சந்ததியான நேமுவேலரின் குடும்பமும், யாமினின் சந்ததியான யாமினியரின் குடும்பமும், யாகீனின் சந்ததியான யாகீனியரின் குடும்பமும்,

எண் 26:13. சேராகின் சந்ததியான சேராகியாரின் குடும்பமும், சவுலின் சந்ததியான சவுலியரின் குடும்பமுமே.

எண் 26:14. இவைகளே சிமியோனியரின் குடும்பங்கள்; அவர்கள் இருபத்தீராயிரத்து இருநூறுபேர்.

எண் 26:15. காத்துவுடைய குமாரரின் குடும்பங்களாவன: சிப்போனின் சந்ததியான சிப்போனியரின் குடும்பமும், ஆகியின் சந்ததியான ஆகியரின் குடும்பமும், சூனியின் சந்ததியான சூனியரின் குடும்பமும்,

எண் 26:16. ஒஸ்னியின் சந்ததியான ஒஸ்னியரின் .குடும்பமும், ஏரியின் சந்ததியான ஏரியரின் குடும்பமும்,

எண் 26:17. ஆரோதின் சந்ததியான ஆரோதியரின் குடும்பமும், அரேலியின் சந்ததியான அரேலியரின் குடும்பமுமே.

எண் 26:18. இவைகளே காத் புத்திரரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.

எண் 26:19. யூதாவின் குமாரர் ஏர் ஓனான் என்பவர்கள்; ஏரும் ஓனானும் கானான் தேசத்தில் செத்தார்கள்.

எண் 26:20 யூதாவுடைய மற்றக் குமாரரின் குடும்பங்களாவன: சேலாவின் சந்ததியான சேலாவியரின் குடும்பமும், பாரேசின் சந்ததியான பாரேசியரின் குடும்பமும், சேராவின் சந்ததியான சேராவியரின் குடும்பமுமே.

எண் 26:21 பாரேசுடைய குமாரரின் குடும்பங்களாவன: எஸ்ரோனின் சந்ததியான எஸ்ரோனியரின் குடும்பமும், ஆமூலின் சந்ததியான ஆமூலியரின் குடும்பமுமே.

எண் 26:22. இவைகளே யூதாவின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் எழுபத்தாறாயிரத்து ஐந்நூறுபேர்.

எண் 26:23. இசக்காருடைய குமாரரின் குடும்பங்களாவன: தோலாவின் சந்ததியான தோலாவியரின் குடும்பமும், பூவாவின் சந்ததியான பூவாவியரின் குடும்பமும்,

எண் 26:24. யாசூபின் சந்ததியான யாசூபியரின் குடும்பமும், சிம்ரோனின் சந்ததியான சிம்ரோனியரின் குடும்பமுமே.

எண் 26:25. இவைகளே இசக்காரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் அறுபத்துநாலாயிரத்து முந்நூறுபேர்.

எண் 26:26. செபுலோனுடைய குமாரரின் குடும்பங்களாவன: சேரேத்தின் சந்ததியான சேரேத்தியரின் குடும்பமும், ஏலோனின் சந்ததியான ஏலோனியரின் குடும்பமும், யாலேயேலின் சந்ததியான யாலேயேலியரின் குடும்பமுமே.

எண் 26:27. இவைகளே செபுலோனியரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் அறுபதினாயிரத்து ஐந்நூறுபேர்.

எண் 26:28. யோசேப்புடைய குமாரரான மனாசே எப்பிராயீம் என்பவர்களின் குடும்பங்களாவன.

எண் 26:29. மனாசேயினுடைய குமாரரின் குடும்பங்கள்; மாகீரின் சந்ததியான மாகீரியரின் குடும்பமும், மாகீர் பெற்ற கிலெயாத்தின் சந்ததியான கிலெயாதியரின் குடும்பமும்,

எண் 26:30. கிலெயாத் பெற்ற ஈயேசேரின் சந்ததியான ஈயேசேயரின் குடும்பமும், ஏலேக்கின் சந்ததியான ஏலேக்கியரின் குடும்பமும்,

எண் 26:31. அஸ்ரியேலின் சந்ததியான அஸ்ரியேலரின் குடும்பமும், சேகேமின் சந்ததியான சேகேமியரின் குடும்பமும்,

எண் 26:32. செமீதாவின் சந்ததியான செமீதாவியரின் குடும்பமும், ஏப்பேரின் சந்ததியான ஏப்பேரியரின் குடும்பமுமே.

எண் 26:33. ஏப்பேரின் குமாரனான செலொப்பியாத்திற்குக் குமாரர் இல்லாமல், குமாரத்திகள் மாத்திரம் இருந்தார்கள்; இவர்கள் நாமங்கள் மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவைகள்.

எண் 26:34. இவைகளே மனாசேயின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்தீராயிரத்து எழுநூறுபேர்.

எண் 26:35. எப்பிராயீமுடைய குமாரரின் குடும்பங்களாவன: சூத்தெலாகின் சந்ததியான சூத்தெலாகியரின் குடும்பமும், பெகேரின் சந்ததியான பெகேரியரின் குடும்பமும், தாகானின் சந்ததியான தாகானியரின் குடும்பமும்,

எண் 26:36. சூத்தெலாக் பெற்ற ஏரானின் சந்ததியான ஏரானியரின் குடும்பமுமே.

எண் 26:37. இவைகளே எப்பிராயீம் புத்திரரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் முப்பத்தீராயிரத்து ஐந்நூறுபேர்; இவர்களே யோசேப்பு புத்திரரின் குடும்பங்கள்.

எண் 26:38. பென்யமீனுடைய குமாரரின் குடும்பங்களாவன: பேலாவின் சந்ததியான பேலாவியரின் குடும்பமும், அஸ்பேலின் சந்ததியான அஸ்பேலியரின் குடும்பமும், அகிராமின் சந்ததியான அகிராமியரின் குடும்பமும்,

எண் 26:39. சுப்பாமின் சந்ததியான சுப்பாமியரின் குடும்பமும், உப்பாமின் சந்ததியான உப்பாமியரின் குடும்பமும்,

எண் 26:40. பேலா பெற்ற ஆரோதின் சந்ததியான ஆரோதியரின் குடும்பமும், நாகமானின் சந்ததியான நாகமானியரின் குடும்பமுமே.

எண் 26:41. இவைகளே பென்யமீன் புத்திரரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து அறுநூறு பேர்.

எண் 26:42. தாணுடைய குமாரரின் குடும்பங்களாவன: சூகாமின் சந்ததியான சூகாமியரின் குடும்பமே; இவைகள் தாணின் குடும்பம்.

எண் 26:43. சூகாமியரின் வம்சங்களில் எண்ணப்பட்டவர்கள் எல்லாரும் அறுபத்துநாலாயிரத்து நானூறுபேர்.

எண் 26:44. ஆசேருடைய குமாரரின் குடும்பங்களாவன: இம்னாவின் சந்ததியான இம்னாவியரின் குடும்பமும், இஸ்வியின் சந்ததியான இஸ்வியரின் குடும்பமும், பெரீயாவின் சந்ததியான பெரீயாவியரின் குடும்பமும்,

எண் 26:45. பெரீயா பெற்ற ஏபேரின் சந்ததியான ஏபேரியரின் குடும்பமும், மல்கியேலின் சந்ததியான மல்கியேலியரின் குடும்பமுமே.

எண் 26:46. ஆசேருடைய குமாரத்தியின் பேர் சாராள்.

எண் 26:47. இவைகளே ஆசேர் புத்திரரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்து மூவாயிரத்து நானூறு பேர்.

எண் 26:48. நப்தலியினுடைய குமாரரின் குடும்பங்களாவன: யாத்சியேலின் சந்ததியான யாத்சியேலியரின் குடும்பமும், கூனியின் சந்ததியான கூனியரின் குடும்பமும்,

எண் 26:49. எத்செரின் சந்ததியான எத்செரியரின் குடும்பமும், சில்லேமின் சந்ததியான சில்லேமியரின் குடும்பமுமே.

எண் 26:50. இவைகளே நப்தலியின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து நானூறுபேர்.

எண் 26:51. இஸ்ரவேல் புத்திரரில் எண்ணப்பட்டவர்கள் ஆறுலட்சத்தோராயிரத்து எழுநூற்று முப்பதுபேராயிருந்தார்கள்.

கர்த்தர் மோசேக்கும் எலெயாசாருக்கும் கட்டளை கொடுத்தது போலவே, இஸ்ரவேல் புத்திரர் கோத்திரம் கோத்திரமாகவும், அவர்களுடைய குடும்பம் குடும்பமாகவும் எண்ணப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையில் எந்த வரிசைப்பிரகாரம் எண்ணப்பட்டார்களோ, அதே வரிசைப்பிரகாரமாகவே இப்போது மோவாபின் சமவெளியிலும் எண்ணப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் கோத்திரங்கள் குடும்பங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. குடும்பங்கள் என்று சொல்லும்போது, அருகருகே கூடாரங்களில் தங்கியிருக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொருள் சொல்ல முடியாது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், தங்கள் கோத்திரத்தார் பாளயமிறங்கியிருக்கிற எந்தப் பகுதியிலும் கூடாரம் போட்டிருக்கலாம். ஆனாலும் ஒவ்வொரு கோத்திரத்தாரும் தங்களுடைய முற்பிதாக்களின் குமாரருடைய சந்ததியின் பிரகாரம் தனித்தனி குடும்பங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரின் குடும்பங்களும் எண்ணப்படுகிறது. தாண் கோத்திரத்தாரில் ஒரே ஒரு குடும்பத்தார் மாத்திரமே இருக்கிறார்கள். தாணுக்கு ஒரே ஒரு புத்திரன் மாத்திரமே இருந்தார். ஆனாலும் தாண் கோத்திரத்தார் திரளான எண்ணிக்கையுள்ள கோத்திரமாயிருக்கிறார்கள்.

தாணுடைய குமாரரின் குடும்பங்களாவன: சூகாமின் சந்ததியான சூகாமியரின் குடும்பமே; இவைகள் தாணின் குடும்பம். சூகாமியரின் வம்சங்களில் எண்ணப்பட்டவர்கள் எல்லாரும் அறுபத்துநாலாயிரத்து நானூறுபேர் *(எண் 26:42,43).*

செபுலோன் கோத்திரத்தார் மூன்று குடும்பங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். எப்பிராயீம், இசக்கார், நப்தலி, ரூபன் ஆகிய நான்கு கோத்திரத்தாரும், ஒவ்வொரு கோத்திரத்திலும் நான்கு குடும்பங்கள் வீதமாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

யூதா, சிமியோன், ஆசேப் ஆகிய மூன்று கோத்திரத்தாரும், ஒவ்வொரு கோத்திரத்திலும் ஐந்து குடும்பங்கள் வீதமாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். காத், பென்யமீன் ஆகிய இரண்டு கோத்திரங்களிலும், ஒவ்வொரு கோத்திரத்திலும் இரண்டு குடும்பங்கள் இருக்கிறார்கள். மனாசே கோத்திரத்தில் எட்டு குடும்பங்கள் இருக்கிறார்கள். பென்யமீன் எகிப்து தேசத்திற்கு புறப்பட்டுப்போகும்போது அவரோடுகூட அவருடைய பத்து குமாரர்கள் அங்கே புறப்பட்டுப்போனார்கள்.

"பென்யமீனுடைய குமாரர், பேலா பெகேர், அஸ்பேல், கேரா, நாகமான், எகி, ரோஷ், முப்பிம், உப்பிம் ஆர்து என்பவர்கள்" (ஆதி 46:21).

ஆனால் இப்போது பென்யமீன் கோத்திரத்தார் எண்ணித்தொகையேற்றப்படும்போது, அந்தக் கோத்திரத்தில் ஏழு குடும்பத்தார் மாத்திரமே இருக்கிறார்கள். பென்யமீனின் மற்ற மூன்று புத்திரரும் சந்ததியில்லாமல் மரித்துப்போனார்களா அல்லது அவர்களுடைய குடும்பத்தார் எல்லோரும் அழிந்துபோனார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மோசேயும் எலெயாசாரும் மோவாபின் சமவெளியிலே இஸ்ரவேல் புத்திரரை கோத்திரம் கோத்திரமாகவும், அவர்களுடைய குடும்பம் குடும்பமாகவும் எண்ணித்தொகையேற்றுகிறார். ஒவ்வொரு கோத்திரத்திலும் உள்ளவர்களின் எண்ணிக்கை இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் சீனாய் வனாந்தரத்தில் முதன் முறையாக எண்ணப்பட்டபோது, ஒவ்வொரு கோத்திரத்திலும் இருந்த ஜனங்களின் எண்ணிக்கைக்கும், இப்போது இரண்டாம் முறையாக அவர்கள் எண்ணப்படும்போது, அவர்களுடைய எண்ணிக்கைக்கும் வித்தியாசமுள்ளது. ஒரு சில கோத்திரங்களில் ஜனங்கள் இப்போது அதிகமாயிருக்கிறார்கள். வேறு சில கோத்திரங்களில் ஜனங்கள் இப்போது முந்தியிருந்ததை விட குறைவாகயிருக்கிறார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முன்னோர்கள் யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். மோவாபின் சமவெளியிலே, யூதாவின் குடியின்கீழ் பாளயமிறங்கியிருந்த மூன்று கோத்திரத்தாரின் எண்ணிக்கை இப்போது அதிகரித்திருக்கிறது.

முதலாவது கணக்கெடுப்பின்போது மனாசே கோத்திரத்தார் மற்ற கோத்திரத்தார்களை விட சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாகயிருந்தார்கள். அப்போது மனாசே கோத்திரத்தில் 32,200 பேர் மாத்திரமே இருந்தார்கள். ஆனால் இரண்டாவது கணக்கெடுப்பின்போதோ, மனாசே கோத்திரத்தாரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்திருக்கிறது.

முதலாவது கணக்கெடுப்பின்போது சிமியோன் கோத்திரத்திரத்தில் 59,300 பேர் இருந்தார்கள். இரண்டாவது கணக்கெடுப்பின்போதோ, சிமியோன் கோத்திரத்திலே 22,000 பேர் மாத்திரமே இருக்கிறார்கள். சிமியோன் கோத்திரத்தின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்காக குறைந்துபோகிறது.

பேயோரின் அக்கிரமத்தினிமித்தமாக, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே வாதை உண்டாயிற்று. பேயோர் சிமியோன் கோத்திரத்தைச் சேர்ந்தவன். இந்த வாதையினால் சிமியோன் கோத்திரத்தைச் சேர்ந்த சுமார் 24,000 பேர் செத்துப்போனார்கள்.

சிம்ரி சிமியோன் கோத்திரத்து பிரபுவாகயிருந்தவன். அவனும் மோவாபிய ஸ்திரீயோடு வேசித்தனம்பண்ணி செத்துப்போனான். சிமியோன் கோத்திரத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், அந்தக் கோத்திரம் விருத்தியடையவில்லை.

தாத்தானும் அபிராமும் ரூபன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக, கோராகோடு கூட்டுச் சேர்ந்து, கலகம்பண்ணின சம்பவம் இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

பல்லூவின் குமாரன் எலியாப். எலியாபின் குமாரர் நேமுவேல், தாத்தான், அபிராம் என்பவர்கள்; இந்தத் தாத்தன் அபிராம் என்பவர்களே சபையில் பேர்பெற்றவர்களாயிருந்து, கர்த்தருக்கு விரோதமாகப் போராட்டம் பண்ணி, கோராகின் கூட்டாளிகளாகி, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக விவாதம் பண்ணினவர்கள் (எண் 26:8,9).

பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் கோராகையும் விழுங்கினதினாலும், அக்கினி இருநூற்று ஐம்பது பேரைப் பட்சித்ததினாலும், அந்தக் கூட்டத்தார் செத்து, ஒரு அடையாளமானார்கள். கோராகின் குமாரரோ சாகவில்லை (எண் 26:10,11).

ரூபனுடைய குமாரரின் குடும்பங்களாவன - ரூபனின் நான்கு குடும்பங்கள் = 43,730 பேர்.

1. ஆனோக்கியர் குடும்பத்துக்குத் தகப்பனான ஆனோக்கு.

2. பல்லூவியர் குடும்பத்துக்குத் தகப்பனான பல்லூ

3. எஸ்ரோனியர் குடும்பத்துக்குத் தகப்பனான எஸ்ரோன் (எண் 26:6)

4. கர்மீயர் குடும்பத்துக்குத் தகப்பனான கர்மீ

அவர்களில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்து மூவாயிரத்து எழுநூற்று முப்பதுபேர் - 43,730 பேர். முதலாவது எண்ணிக்கையில் ரூபனியரின் குடும்பத்தில் இருந்தவர்களைவிட இப்பொழுது 2,779 பேர் குறைந்து போயிருக்கிறார்கள் (எண் 1:20-21)

பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் கோராகையும் விழுங்கினது. கோராகும், தாத்தானும், அபிராமும் பூமியால் விழுங்கப்பட்டார்கள். அக்கினி பட்சித்ததினால் மரித்துப்போன 250 பேரில் இவர்கள் சேர்க்கப்படவில்லை. 250பேரும் பிரபுக்கள். (எண் 26:9-10; எண் 16:27-35). கோராகுவின் புத்திரரும் இந்த வாதையில் மரிக்கவில்லை. அவர்கள் தங்கள் தகப்பனோடு சேர்ந்து கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணவில்லை. (எண் 26:11). பாடகனாகிய ஏமான் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவன் (1நாளா 6:22-38; 1நாளா 25:5). கோராகுவின் குமாரருக்குப் பத்து சங்கீதங்கள் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது (சங் 42-49, சங் 84-88).

மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் மோவாபின் சமவெளியிலே, கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்ட பிரகாரம், இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுகிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்தின் எண்ணிக்கையும், அவர்களுடைய குடும்பங்களின் எண்ணிக்கைப் பிரகாரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

ரூபன் இஸ்ரவேலின் மூத்த குமாரன்; ரூபனுடைய குமாரர், ஆனோக்கியர் குடும்பத்துக்குத் தகப்பனான ஆனோக்கும், பல்லூவியர் குடும்பத்துக்குத் தகப்பனான பல்லூவும், எஸ்ரோனியர் குடும்பத்துக்குத் தகப்பனான எஸ்ரோனும், கர்மீயர் குடும்பத்துக்குத் தகப்பனான கர்மீயுமே. இவைகளே ரூபனியரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்து மூவாயிரத்து எழுநூற்று முப்பதுபேர் (எண் 26:5-7).

சிமியோனுடைய குமாரரின் குடும்பங்களாவன: நேமுவேலின் சந்ததியான நேமுவேலரின் குடும்பமும், யாமினின் சந்ததியான யாமினியரின் குடும்பமும், யாகீனின் சந்ததியான யாகீனியரின் குடும்பமும், சேராகின் சந்ததியான சேராகியாரின் குடும்பமும், சவுலின் சந்ததியான சவுலியரின் குடும்பமுமே. இவைகளே சிமியோனியரின் குடும்பங்கள்; அவர்கள் இருபத்தீராயிரத்து இருநூறுபேர் (எண் 26:12-14).

சிமியோனுடைய குமாரரின் குடும்பங்களாவன - சிமியோனின் ஐந்து குடும்பங்கள் = 22,200 பேர்.

1. நேமுவேலின் சந்ததியான நேமுவேலின் குடும்பம் (எண் 26:12)

2. யாமினின் சந்ததியான யாமினியரின் குடும்பம்

3. யாகீனின் சந்ததியான யாகீனியரின் குடும்பம்

4. சேராகின் சந்ததியான சேராகியாரின் குடும்பம் (எண் 26:13)

5. சவுலின் சந்ததியான சவுலியரின் குடும்பமுமே. (எண் 26:13)

இந்த அட்டவணையில் ஒகாத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆதி 46:10 ஆவது வசனத்தில் ஒகாத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அவர்கள் இருபத்திராயிரத்து இருநூறுபேர் - 22,200பேர். சிமியோனின் குடும்பத்தார் இரண்டாவது எண்ணிக்கையின்போது, 37,100 பேரை இழந்திருக்கிறார்கள். (எண் 1:22-23, எண் 26:14). இவ்விரண்டு எண்ணிக்கைகளும் இடையில் சிமியோனியரின் குடும்பத்தாரில்தான் அதிகமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இவர்களுடைய குடும்பத்தலைவர்களில் ஒருவரான சிம்ரி பாகாலை ஆராதித்ததிலும், வேசித்தனம் பண்ணியதிலும், பிரபல்யமானவன். அவன் சிமியோனின் குடும்பத்தைச் சேர்ந்தவன். (எண் 25: 6-14). சிம்ரி குடும்பத்தலைவனாக இருந்தபடியினால், தன்னுடைய கோத்திரத்தில் ஏராளமானபேரைப் பாகாலை ஆராதிப்பதற்கும், வேசித்தனம் பண்ணுவதற்கும் வழிநடத்தியிருக்க வேண்டும். இந்தத் துணிகரமான பாவத்தினால் உண்டான வாதையில் 24,000 பேர் மரித்துப் போனார்கள். (எண் 25:9) சிமியோனுடைய கோத்திரத்தாரின் எண்ணிக்கை குறைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

காத்துவுடைய குமாரரின் குடும்பங்களாவன: சிப்போனின் சந்ததியான சிப்போனியரின் குடும்பமும், ஆகியின் சந்ததியான ஆகியரின் குடும்பமும், சூனியின் சந்ததியான சூனியரின் குடும்பமும், ஒஸ்னியின் சந்ததியான ஒஸ்னியரின் குடும்பமும், ஏரியின் சந்ததியான ஏரியரின் குடும்பமும், ஆரோதின் சந்ததியான ஆரோதியரின் குடும்பமும், அரேலியின் சந்ததியான அரேலியரின் குடும்பமுமே. இவைகளே காத் புத்திரரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர் (எண் 26:15-18).

காத்துவுடைய குமாரரின் குடும்பங்களாவன - காத்தின் ஏழு குடும்பங்கள் = 40,500பேர்.

1. சிப்போனின் சந்ததியான சிப்போனியரின் குடும்பம் (எண் 26:15)

2. ஆகியின் சந்ததியான ஆகியரின் குடும்பம்

3. சூனியின் சந்ததியான சூனியரின் குடும்பம்

4. ஒஸ்னியின் சந்ததியான ஒஸ்னியரின் குடும்பம் (எண் 26:16)

5. ஏரியின் சந்ததியான ஏரியரின் குடும்பம்

6. ஆரோதின் சந்ததியான ஆரோதியரின் குடும்பம் (எண் 26:17)

7. அரேலியின் சந்ததியான அரேலியரின் குடும்பம்.

இவர்களுடைய எண்ணிக்கை நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர் - 40,500பேர். இரண்டாவது எண்ணிக்கையில் காத்துடைய குமாரரின் குடும்பங்களில் 5,150 பேர் குறைந்து போகிறார்கள். (எண் 1:24-25)

யூதாவின் குமாரர் ஏர் ஓனான் என்பவர்கள்; ஏரும் ஓனானும் கானான் தேசத்தில் செத்தார்கள். யூதாவுடைய மற்றக் குமாரரின் குடும்பங்களாவன: சேலாவின் சந்ததியான சேலாவியரின் குடும்பமும், பாரேசின் சந்ததியான பாரேசியரின் குடும்பமும், சேராவின் சந்ததியான சேராவியரின் குடும்பமுமே. பாரேசுடைய குமாரரின் குடும்பங்களாவன: எஸ்ரோனின் சந்ததியான எஸ்ரோனியரின் குடும்பமும், ஆமூலின் சந்ததியான ஆமூலியரின் குடும்பமுமே. இவைகளே யூதாவின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் எழுபத்தாறாயிரத்து ஐந்நூறுபேர் (எண் 26:19-22).

ஏரும் ஓனானும் கானான் தேசத்தில் செத்தார்கள். இவர்களுடைய வரலாறு ஆதி 38 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"யூதாவுடைய மற்றக் குமாரரின் குடும்பங்களாவன" - யூதாவின் ஐந்து குடும்பங்கள் = 76,500பேர்.

1. சேலாவின் சந்ததியான சேலாவியான் குடும்பம் (எண் 26:20)

2. பாரேசின் சந்ததியான பாரேசியரின் குடும்பம்

3. சேராவின் சந்ததியான சேராவியரின் குடும்பம்.

4. எஸ்ரோனின் சந்ததியான எஸ்ரோனியரின் குடும்பம் (எண் 26:21)

5. ஆமூலின் சந்ததியான ஆமூலியரின் குடும்பம்.

இந்த அட்டவணையில் முதலாவதாகக் கூறப்பட்டிருக்கும் மூன்று பேர்களும் யூதாவின் குமாரர்களாவார்கள். மற்றவர்களான எஸ்ரோன், ஆமூல் ஆகியோர் யூதாவின் பேரப்பிள்ளைகள். யூதாவின் துன்மார்க்கமான குமாரர்களான ஏரையும், ஓனானையும் கர்த்தர் தண்டித்தார். (ஆதி 38:3,9) அவர்களுக்குப் பதிலாக இவ்விரண்டு பேரப்பிள்ளைகளும் இந்த எண்ணிக்கையில் அங்கிகரிக்கப்படுகிறார்கள். எஸ்ரோனும், ஆமூலும், பாரேசின் புத்திரர்கள். இவர்கள் தாமாருக்குப் பிறந்தவர்கள். தாமார் ஏருக்கும், ஓனானுக்கும் மனைவியாக இருந்தவள்.

இவர்களுடைய எண்ணிக்கை எழுபத்தாறாயிரத்து ஐந்நூறுபேர் - 76,500பேர். இரண்டாவது எண்ணிக்கையில் யூதாவின் குடும்பங்களில் 1,900 பேர் அதிகரிக்கிறார்கள். (எண் 1:26-27)

இசக்காருடைய குமாரரின் குடும்பங்களாவன: தோலாவின் சந்ததியான தோலாவியரின் குடும்பமும், பூவாவின் சந்ததியான பூவாவியரின் குடும்பமும், யாசூபின் சந்ததியான யாசூபியரின் குடும்பமும், சிம்ரோனின் சந்ததியான சிம்ரோனியரின் குடும்பமுமே. இவைகளே இசக்காரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் அறுபத்துநாலாயிரத்து முந்நூறுபேர் (எண் 26:23-25).

"இசக்காருடைய குமாரரின் குடும்பங்களாவன" - இசக்காரின் நான்கு குடும்பங்கள் = 64,300பேர்

1. தோலாவின் சந்ததியான தோலாவியரின் குடும்பம் (எண் 26:23)

2. பூவாவின் சந்ததியான பூவாவியரின் குடும்பம்

3. யாசூபின் சந்ததியான யாசூபியரின் குடும்பம் (எண் 26:24) இவன் யோபுவின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் யோபுவாக இருக்க வேண்டும். (ஆதி 46:13)

4. சிம்ரோனின் சந்ததியான சிம்ரோனியரின் குடும்பம்.

இவர்களுடைய எண்ணிக்கை அறுபத்துநாலாயிரத்து முந்நூறுபேர் - 64,300பேர். இரண்டாவது எண்ணிக்கையில் இசக்காருடைய குடும்பத்தாரின் எண்ணிக்கையில் 9,900 பேர் அதிகரிக்கிறார்கள். (எண் 1:28-29)

செபுலோனுடைய குமாரரின் குடும்பங்களாவன: சேரேத்தின் சந்ததியான சேரேத்தியரின் குடும்பமும், ஏலோனின் சந்ததியான ஏலோனியரின் குடும்பமும், யாலேயேலின் சந்ததியான யாலேயேலியரின் குடும்பமுமே. இவைகளே செபுலோனியரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் அறுபதினாயிரத்து ஐந்நூறுபேர் (எண் 26:26,27).

செபுலோனுடைய குமாரரின் குடும்பங்களாவன - செபுலோனின் மூன்று குடும்பங்கள் = 60,500 பேர்

1. சேரேத்தின் சந்ததியான சேரேத்தியரின் குடும்பம் (எண் 26:26)

2. ஏலோனின் சந்ததியான ஏலோனியரின் குடும்பம்

3. யாலேயேலின் சந்ததியான யாலேயேலியரின் குடும்பம்.

இவர்களுடைய எண்ணிக்கை "அறுபதினாயிரத்து ஐந்நூறுபேர்" - 60,500பேர். இரண்டாவது எண்ணிக்கையில் செபுலோனின் குடும்பத்தாரின் எண்ணிக்கையில் 3,100 பேர் அதிகரிக்கிறார்கள். (எண் 1:30-31)

யோசேப்புடைய குமாரரான மனாசே எப்பிராயீம் என்பவர்களின் குடும்பங்களாவன. மனாசேயினுடைய குமாரரின் குடும்பங்கள்; மாகீரின் சந்ததியான மாகீரியரின் குடும்பமும், மாகீர் பெற்ற கிலெயாத்தின் சந்ததியான கிலெயாதியரின் குடும்பமும், கிலெயாத் பெற்ற ஈயேசேரின் சந்ததியான ஈயேசேயரின் குடும்பமும், ஏலேக்கின் சந்ததியான ஏலேக்கியரின் குடும்பமும், அஸ்ரியேலின் சந்ததியான அஸ்ரியேலரின் குடும்பமும், சேகேமின் சந்ததியான சேகேமியரின் குடும்பமும், செமீதாவின் சந்ததியான செமீதாவியரின் குடும்பமும், ஏப்பேரின் சந்ததியான ஏப்பேரியரின் குடும்பமுமே. ஏப்பேரின் குமாரனான செலொப்பியாத்திற்குக் குமாரர் இல்லாமல், குமாரத்திகள் மாத்திரம் இருந்தார்கள்; இவர்கள் நாமங்கள் மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவைகள். இவைகளே மனாசேயின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்திராயிரத்து எழுநூறுபேர் (எண் 26:28-34).

யோசேப்புடைய குமாரரான மனாசேயும், எப்பிராயீமும் யோசேப்பு, லேவி ஆகியோரின் இடங்களைப் பிடித்துக் கொள்கிறார்கள். இவர்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் அங்கம் வகிக்கிறார்கள்.

ஏப்பேரின் குமாரனான செலொப்பியாத்திற்குக் குமாரத்திகள் மாத்திரம் இருக்கிறார்கள். குமாரர்கள் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையைப் பற்றி இந்த வசனத்திலும், எண் 27:1-11 ஆகிய வசனங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. இவர்களைப் பற்றி கூறப்பட்டிருப்பதற்குக் காரணங்கள்

1. சிலகுடும்பங்களில் குமாரர்கள் இல்லை.

2. யுத்தம் பண்ணக்கூடியவர்களை மாத்திரம் கணக்கில் எடுத்துக் கொண்டு இஸ்ரவேலரின் மொத்த எண்ணிக்கையைக் கணக்கிட முடியாது.

3. குமாரத்திகளுக்கும் கொடுக்கப்பட வேண்டிய சுதந்தர வீதங்களைப் பற்றி பிரமாணங்கள் கூறப்படுகிறது. (எண் 27:1-11; எண் 36:1-13)

நோவாள் என்பதற்கும், நோவா என்பதற்கும் ஆங்கிலத்தில் "Noah" என்றே எழுதப்பட்டிருக்கிறது. இவ்விருவரும் வெவ்வேறு நபர்கள்.

மனாசேயின் குடும்பங்கள் - மனாசேயின் குடும்பங்கள் எட்டு குடும்பங்கள் = 52,700 பேர்.

1. மாகீரின் சந்ததியான மாகீரியரின் குடும்பம் (எண் 26:29)

2. மாகீர் பெற்ற கிலேயாதின் சந்ததியான கிலெயாதியரின் குடும்பம்

3. கிலெயாத் பெற்ற ஈயேசேரின் சந்ததியான ஈயேசேயரின் குடும்பம் (எண் 26:30)

4. ஏலேக்கின் சந்ததியான ஏலேக்கியரின் குடும்பம்

5. அஸ்ரியேலின் சந்ததியான அஸ்ரியேலரின் குடும்பம் (எண் 26:31)

6. சேகேமின் சந்ததியான சேகேமியரின் குடும்பம்

7. செமீதாவின் சந்ததியான செமீதாவியரின் குடும்பம் (எண் 26:32)

8. ஏப்பேரின் சந்ததியான ஏப்பேரியரின் குடும்பம்.

இவர்களில் சிலர் பேரப்பிள்ளைகளின் பிள்ளைகள். அவர்கள் இப்பொழுது குடும்பத் தலைவர்களாகிவிடுகிறார்கள்.

இவர்களுடைய எண்ணிக்கை ஐம்பத்தீராயிரத்து எழுநூறுபேர் - 52,700பேர். இரண்டாவது எண்ணிக்கையில் மனாசேயின் குடும்பத்தாரின் எண்ணிக்கையில் 20,500 பேர் அதிகரிக்கிறார்கள். (எண் 1:34-35) 38 வருஷங்களுக்குப் பின்பு எடுக்கப்பட்ட இரண்டாவது கணக்கெடுப்பில் இந்தக் கோத்திரத்தாரின் எண்ணிக்கையே மிகவும் அதிகரித்திருக்கிறது. இந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் எப்பிராயீமின் குடும்பத்திற்கு முன்பாக மனாசேயின் குடும்பம் கூறப்பட்டிருப்பதற்கு இதுவே காரணமாக இருக்கலாம். ஆயினும் எண் 1ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் அட்டவணையில் இந்த முறைமை பின்பற்றப்படவில்லை.

எப்பிராயீமுடைய குமாரரின் குடும்பங்களாவன: சுத்தெலாகின் சந்ததியான சுத்தெலாகியரின் குடும்பமும், பெகேரின் சந்ததியான பெகேரியரின் குடும்பமும், தாகானின் சந்ததியான தாகானியரின் குடும்பமும், சுத்தெலாக் பெற்ற ஏரானின் சந்ததியான ஏரானியரின் குடும்பமுமே. இவைகளே எப்பிராயீம் புத்திரரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் முப்பத்தீராயிரத்து ஐந்நூறுபேர்; இவர்களே யோசேப்பு புத்திரரின் குடும்பங்கள் (எண் 26:35-37).

எப்பிராயீமுடைய குமாரரின் குடும்பங்களாவன - எப்பிராயீமின் நான்கு குடும்பங்கள் = 32,500பேர்.

1. சுத்தெலாகின் சந்ததியான சுத்தெலாகியரின் குடும்பம் (எண் 26:35)

2. பெகேரின் சந்ததியான பெகேரியரின் குடும்பம்

3. தாகானின் சந்ததியான தாகானியரின் குடும்பம்

4. சுத்தெலாக் பெற்ற ஏரானின் சந்ததியான ஏரானியரின் குடும்பம். (எண் 26:36)

இவர்களில் ஒருவன் எப்பிராயீமின் பேரன். எப்பிராயீமின் கோத்திரத்தில் அவன் பிரபல்யமானான். (எண் 26:36).

இவர்களுடைய எண்ணிக்கை முப்பத்தீராயிரத்து ஐந்நூறுபேர் - 32,500பேர். இரண்டாவது எண்ணிக்கையில் எப்பிராயீமின் குடும்பத்தாரின் எண்ணிக்கையில் 8,000 பேர் குறைந்து போகிறார்கள். (எண் 1:32-33) நப்தலியின் கோத்திரத்தாரைப் போலவே இவர்களுக்கும் குறைவு ஏற்படுகிறது. (எண் 26:48-50) சிமியோனின் கோத்திரத்தாரை விட இந்தக் கோத்திரத்தில் இழப்பு அதிகம். (எண் 26:12-14).

பென்யமீனுடைய குமாரரின் குடும்பங்களாவன: பேலாவின் சந்ததியான பேலாவியரின் குடும்பமும், அஸ்பேலின் சந்ததியான அஸ்பேலியரின் குடும்பமும், அகிராமின் சந்ததியான அகிராமியரின் குடும்பமும், சுப்பாமின் சந்ததியான சுப்பாமியரின் குடும்பமும், உப்பாமின் சந்ததியான உப்பாமியரின் குடும்பமும், பேலா பெற்ற ஆரோதின் சந்ததியான ஆரோதியரின் குடும்பமும், நாகமானின் சந்ததியான நாகமானியரின் குடும்பமுமே. இவைகளே பென்யமீன் புத்திரரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து அறுநூறு பேர் (எண் 26:38-41).

பென்யமீனுடைய குமாரரின் குடும்பங்களாவன - பென்யமீன் குமாரரின் ஏழு குடும்பங்கள் = 46,600 பேர்

1. பேலாவின் சந்ததியான பேலாவியரின் குடும்பம் (எண் 26:38)

2. அஸ்பேலின் சந்ததியான அஸ்பேலி யரின் குடும்பம்

3. அகிராமின் சந்ததியான அகிராமியரின் குடும்பம்.

4. சுப்பாமின் சந்ததியான சுப்பாமியரின் குடும்பம் (எண் 26:39)

5. உப்பாமின் சந்ததியான உப்பாமியரின் குடும்பம்

6. பேலா பெற்ற ஆரோதின் சந்ததியான ஆரோதியரின் குடும்பம் (எண் 26:40)

7. நாகமானின் சந்ததியான நாகமானியரின் குடும்பம்.

இவர்களில் சிலர் பேரப்பிள்ளைகள். பென்யமீன் புத்திரரின் குடும்பங்களில் இவர்கள் பிரபல்யமான தலைவர்களானார்கள். (எண் 26:40). பென்யமீன் எகிப்திற்குப் போனபோது அவனுக்கு பத்து குமாரர்கள் இருந்தார்கள். (ஆதி 46:21) இவர்கள் அனைவருமே குடும்பங்களின் தலைவர்கள் ஆகவில்லை என்பது தெளிவாகிறது.

இவர்களுடைய எண்ணிக்கை நாற்பத்தையாயிரத்து அறுநூறு பேர் - 45,600பேர். இரண்டாவது எண்ணிக்கையில் பென்யமீனின் குடும்பத்தாரின் எண்ணிக்கையில் 10,200 பேர் அதிகரிக்கிறார்கள். (எண் 1:36-37) எண்ணிக்கை அதிகரித்ததில் பென்யமீன் கோத்திரம் மூன்றாம் இடத்தைப் பிடித்திருக்கிறது.

தாணுடைய குமாரரின் குடும்பங்களாவன: சூகாமின் சந்ததியான சூகாமியரின் குடும்பமே; இவைகள் தாணின் குடும்பம். சூகாமியரின் வம்சங்களில் எண்ணப்பட்டவர்கள் எல்லாரும் அறுபத்துநாலாயிரத்து நானூறுபேர் (எண் 26:42-43).

தாணுடைய குமாரரின் குடும்பங்களாவன - தாணின் ஒரு குடும்பம் = 64,400 பேர். சூகாமின் சந்ததியான சூகாமியரின் குடும்பம் (எண் 26:42). ஒரே குடும்பத்திலிருந்து 64,400 பேர் எண்ணப்படுகிறார்கள். மற்றக் கோத்திரத்தில் பல குடும்பங்கள் இருந்தாலும், இவர்களுடைய எண்ணிக்கையே அதிகம்.

இவர்களுடைய எண்ணிக்கை அறுபத்துநாலாயிரத்து நானூறுபேர் - 64,400பேர். இரண்டாவது எண்ணிக்கையில் தாணின் குடும்பத்தாரின் எண்ணிக்கையில் 1,700 பேர் அதிகரிக்கிறார்கள் (எண் 1:38-39)

ஆசேருடைய குமாரரின் குடும்பங்களாவன: இம்னாவின் சந்ததியான இம்னாவியரின் குடும்பமும், இஸ்வியின் சந்ததியான இஸ்வியரின் குடும்பமும், பெரீயாவின் சந்ததியான பெரீயாவியரின் குடும்பமும், பெரீயா பெற்ற ஏபேரின் சந்ததியான ஏபேரியரின் குடும்பமும், மல்கியேலின் சந்ததியான மல்கியேலியரின் குடும்பமுமே. ஆசேருடைய குமாரத்தியின் பேர் சாராள். இவைகளே ஆசேர் புத்திரரின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் ஐம்பத்து மூவாயிரத்து நானூறு பேர் (எண் 26:44-47).

ஆசேருடைய குமாரரின் குடும்பங்களாவன - ஆசேரின் ஐந்து குடும்பங்கள் = 53,400

1. இம்னாவின் சந்ததியான இம்னாவியரின் குடும்பம் (எண் 26:44)

2. இஸ்வியின் சந்ததியான இஸ்வியரின் குடும்பம்

3. பெரீயாவின் சந்ததியான பெரீயாவியரின் குடும்பம்

4. பெரீயா பெற்ற ஏபேரின் சந்ததியான ஏபேரியரின் குடும்பம் (எண் 26:45)

5. மல்கியேலின் சந்ததியான மல்கியேலியரின் குடும்பம்.

எண் 26:45 ஆவது வசனத்தின் பிரகாரம் இவர்களில் சிலர் பேரப்பிள்ளைகள் என்பது தெரியவருகிறது.

இவர்களுடைய எண்ணிக்கை "ஐம்பத்து மூவாயிரத்து நானூறு பேர்" 53,400பேர். இரண்டாவது எண்ணிக்கையில் ஆசேரின் குடும்பத்தாரின் எண்ணிக்கையில் 11,900 பேர் அதிகரிக்கிறார்கள். (எண் 1:40-41) இரண்டாவது எண்ணிக்கையில் அதிகரித்தவர்களின் அட்டவணையில் இந்தக் கோத்திரம் இரண்டாம் இடத்தை வகிக்கிறது.

நப்தலியினுடைய குமாரரின் குடும்பங்களாவன: யாத்சியேலின் சந்ததியான யாத்சியேலியரின் குடும்பமும், கூனியின் சந்ததியான கூனியரின் குடும்பமும், எத்செரின் சந்ததியான எத்செரியரின் குடும்பமும், சில்லேமின் சந்ததியான சில்லேமியரின் குடும்பமுமே. இவைகளே நப்தலியின் குடும்பங்கள்; அவர்களில் எண்ணப்பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து நானூறுபேர் (எண் 26:48-50).

நப்தலியினுடைய குமாரரின் குடும்பங்களாவன - நப்தலியின் நான்கு குடும்பங்கள் = 45,400பேர்

1. யாத்சியேலின் சந்ததியான யாத்சியேலியரின் குடும்பம் (எண் 26:48)

2. கூனியின் சந்ததியான கூனியரின் குடும்பம்

3. எத்செரின் சந்ததியான எத்செரியரின் குடும்பம் (எண் 26:49)

4. சில்லேமின் சந்ததியான சில்லேமியரின் குடும்பம்.

இவர்களுடைய எண்ணிக்கை நாற்பத்தையாயிரத்து நானூறுபேர் - 45,400பேர். இரண்டாவது எண்ணிக்கையில் நப்தலியின் குடும்பத்தாரின் எண்ணிக்கையில் 8,000 பேர் குறைந்து போகிறார்கள். (எண் 1:42-43)

இஸ்ரவேல் புத்திரரில் எண்ணப்பட்டவர்கள் ஆறுலட்சத்தோராயிரத்து ஏழுநூற்று முப்பதுபேராயிருக்கிறார்கள் (எண் 26:51).

இந்த எண்ணிக்கையில் லேவி கோத்திரத்தாரின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை. 38 வருஷ கால இடைவெளியில் இஸ்ரவேல் புத்திரர்களின் மொத்த எண்ணிக்கையில் 1,820 பேர் குறைந்து போகிறார்கள்.

கோத்திரங்களின் சுதந்திரம் எண் 26:52-56

எண் 26:52. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 26:53. இவர்களுடைய பேர்களின் இலக்கத்திற்குத் தக்கதாய் தேசம் இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிடப்பட வேண்டும்.

எண் 26:54. அநேகம்பேருக்கு அதிக சுதந்தரமும் கொஞ்சம்பேருக்குக் கொஞ்ச சுதந்தரமும் கொடுப்பாயாக; அவர்களில் எண்ணப்பட்ட இலக்கத்திற்குத் தக்கதாக அவரவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கப்படவேண்டும்.

எண் 26:55. ஆனாலும் சீட்டுப்போட்டு, தேசத்தைப் பங்கிடவேண்டும்; தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களுக்குரிய நாமங்களின்படியே சுதந்தரித்துக்கொள்ளக்கடவர்கள்.

எண் 26:56. அநேகம்பேர்களாயினும் கொஞ்சம் பேர்களாயினும் சீட்டு விழுந்தபடியே அவரவர்களுடைய சுதந்தரங்கள் பங்கிடப்பட வேண்டும் என்றார்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தினால் இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றுமாறு மோசேக்கும், எலெயாசாருக்கும் கட்டளை கொடுக்கிறார். அவர்களும் கர்த்தருடைய ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, இஸ்ரவேல் புத்திரரை கோத்திரம் கோத்திரமாகவும், அவர்களுடைய குடும்பம் குடும்பமாகவும் பிரித்து, ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ளவர்களை எண்ணித்தொகையேற்றுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை இப்போது விருத்தியடைந்திருக்கிறது. அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அந்த தேசம், இவர்களுக்கு சுதந்தரமாக பங்கிடப்படவேண்டும். இவர்களுடைய பெயர்களின் இலக்கத்திற்குத்தக்கதாய், அவரவர்களுக்கு சுதந்தரம் கொடுக்கப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இவர்களுடைய பேர்களின் இலக்கத்திற்குத் தக்கதாய் தேசம் இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிடப்பட வேண்டும். அநேகம்பேருக்கு அதிக சுதந்தரமும் கொஞ்சம்பேருக்குக் கொஞ்ச சுதந்தரமும் கொடுப்பாயாக; அவர்களில் எண்ணப்பட்ட இலக்கத்திற்குத் தக்கதாக அவரவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கப்படவேண்டும்" (எண் 26:52-54) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இம்மட்டுமாக ஆசீர்வதித்து வழிநடத்தி வந்திருக்கிறார். கர்த்தருடைய கிருபையினால் அவர்கள் பலுகிப்பெருகியிருக்கிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்தாரின் இலக்கத்திற்குத்தக்கதாக அவர்களுக்கு சுதந்திரத்தில் பங்குவீதம் கொடுக்கப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்தை எவ்வாறு பங்கிடவேண்டும் என்றும் கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "சீட்டுப்போட்டு, தேசத்தைப் பங்கிடவேண்டும்; தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களுக்குரிய நாமங்களின்படியே சுதந்தரித்துக்கொள்ளக்கடவர்கள். அநேகம்பேர்களாயினும் கொஞ்சம் பேர்களாயினும் சீட்டு விழுந்தபடியே அவரவர்களுடைய சுதந்தரங்கள் பங்கிடப்பட வேண்டும்" (எண் 26:55,56) என்று சொல்லுகிறார்.

தேசம் இஸ்ரவேல் புத்திரருக்குச் சுதந்தரமாகப் பங்கிடப்பட வேண்டியது பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இவர்களுடைய பேர்களின் இலக்கத்திற்குத் தக்கதாய் தேசம் இந்த பன்னிரண்டு கோத்திரத்தாருக்குச் சுதந்தரமாகப் பங்கிடப்பட வேண்டும்.
2. அநேகம்பேருக்கு அதிக சுதந்தரமும் கொஞ்சம்பேருக்குக் கொஞ்ச சுதந்தரமும் கொடுக்கப்படவேண்டும்; அவர்களில் எண்ணப்பட்ட இலக்கத்திற்குத் தக்கதாக அவரவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கப் படவேண்டும். (எண் 26:54)
3. சீட்டுப்போட்டு, தேசத்தைப் பங்கிடவேண்டும்; தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களுக்குரிய நாமங்களின்படியே சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். (எண் 26:55-56)

ஜனங்கள் எண்ணப்பட்டதற்கான முக்கியமான காரணம், தேசம் அவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ற பிரகாரம் சுதந்தரமாகப் பங்கிடப்படவேண்டும் என்பதேயாகும். அநேகம்பேருக்கு அதிக சுதந்தரமும் கொஞ்சம்பேருக்குக் கொஞ்ச சுதந்தரமும் கொடுக்கப்பட வேண்டும். சீட்டு விழுந்தபடியே அவரவர்களுடைய சுதந்தரங்கள் பங்கிடப்பட வேண்டும். ஊரீம், தும்மீம் ஆகியவை இங்கு பயன்படுத்தப்படுவதினால் கர்த்தருடைய மேற்பார்வை இங்கு இருப்பது நிருபணமாகிறது. (எண் 26:53-56).

லேவியரின் குடும்பங்கள் எண் 26:57-62

எண் 26:57. எண்ணப்பட்ட லேவியரின் குடும்பங்களாவன: கெர்சோனின் சந்ததியான கெர்சோனியரின் குடும்பமும், கோகாத்தின் சந்ததியான கோகாத்தியரின் குடும்பமும், மெராரியின் சந்ததியான மெராரியரின் குடும்பமும்;

எண் 26:58. லேவியின் மற்றக் குடும்பங்களாகிய லிப்னீயரின் குடும்பமும், எப்ரோனியரின் குடும்பமும், மகலியரின் குடும்பமும், மூசியரின் குடும்பமும், கோராகியரின் குடும்பமுமே. கோகாத் அம்ராமைப் பெற்றான்.

எண் 26:59. அம்ராமுடைய மனைவிக்கு யோகெபேத் என்று பேர்; அவள் எகிப்திலே லேவிக்குப் பிறந்த குமாரத்தி; அவள் அம்ராமுக்கு ஆரோனையும் மோசேயையும் அவர்கள் சகோதரியான மிரியாமையும் பெற்றாள்.

எண் 26:60. ஆரோனுக்கு நாதாபும் அபியூவும் எலெயாசாரும் இத்தாமரும் பிறந்தார்கள்.

எண் 26:61. நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியைக் கொண்டுவந்தபோது, செத்துப்போனார்கள்.

எண் 26:62. அவர்களில் ஒரு மாதத்து ஆண்பிள்ளை முதலாக எண்ணப்பட்டவர்கள் இருபத்துமூவாயிரம்பேர்; இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கப்படாதபடியினால், அவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் இலக்கத்திற்கு உட்படவில்லை.

லேவி கோத்திரத்தார் கர்த்தருடைய கோத்திரத்தார். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசித்தபோது லேவி கோத்திரத்தாருக்கு சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. கர்த்தரே அவர்களுடைய சுதந்திரம்.

கானான் தேசத்தில் லேவி கோத்திரத்தாருக்கு சுதந்திரம் கொடுக்கப்படாதபடியினால், அந்தக் கோத்திரத்தார் எண்ணித்தொகையேற்றப்படவில்லை. மோசே இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரையும் எண்ணித்தொகையேற்றும்போது, அவர்களோடு சேர்ந்து லேவி கோத்திரத்தாரை எண்ணவில்லை. ஆனாலும் லேவி கோத்திரத்தார் மாத்திரம் தனியாக எண்ணப்படுகிறார்கள்.

மோசே சீனாய் வனாந்தரத்தில், லேவி கோத்திரத்தாரையும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரையும் தனித்தனியாக எண்ணினார். காலேபும் யோசுவாவும் தவிர, இஸ்ரவேல் புத்திரரிலே யாரும் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள் என்று கர்த்தர் சொன்னார். இது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. லேவி கோத்திரத்தார் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரோடு எண்ணித்தொகையேற்றப்படாததினால், அவர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பித்துக்கொள்கிறார்கள். கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று கர்த்தர் சொன்ன நியாயத்தீர்ப்பு, லேவிகோத்திரத்தாருக்கு சொல்லப்படவில்லை.

லேவி கோத்திரத்தார் யுத்தத்திற்கு புறப்படவேண்டியவர்களுமல்ல. அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டியவர்கள். கர்த்தர் லேவிகோத்திரத்தாருக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளை ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள் என்னும் நியாயத்தீர்ப்பைச் சொன்னபோது, ஆரோனின் குமாரராகிய எலெயாசார், இத்தாமார் ஆகியோர் இருபது வயதிற்கு மேற்பட்டவர்களாகயிருந்திருக்கவேண்டும். ஆனாலும் இவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கிறார்கள்.

"ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார், விளக்குக்கு எண்ணெயையும், சுகந்த தூபவர்க்கத்தையும், தினந்தோறும் இடும் போஜனபலியையும், அபிஷேக தைலத்தையும், வாசஸ்தலம் முழுவதையும், அதிலுள்ள யாவையும், பரிசுத்தஸ்தலத்தையும் அதின் பணிமுட்டுகளையும், விசாரிக்கக்கடவன் என்றார்" (எண் 4:16).

"கெர்சோன் புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடை இதுதான்; அவர்களை வேலைகொள்ளும் விசாரணை, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத்தாமருடைய கைக்குள் இருக்கவேண்டும்" (எண் 4:28).

லேவி கோத்திரத்தாரை, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்கள் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாகயிருக்கிறார்கள். ஆனாலும் முதலாவது கணக்கெடுப்பின்போது இருந்த லேவியரைவிட, இரண்டாவது கணக்கெடுப்பின்போது இருக்கிற லேவியரின் எண்ணிக்கை அதிகமாயிருக்கிறது. லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள், இரண்டாவது கணக்கெடுப்பின்போது சுமார் ஆயிரம்பேர் அதிகமாயிருக்கிறார்கள்.

மோசே லேவி கோத்திரத்தாரை அவர்களுடைய குடும்பங்களின் பிரகாரமாக எண்ணுகிறார். எண்ணப்பட்ட லேவியரின் குடும்பங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

எண்ணப்பட்ட லேவியரின் குடும்பங்களாவன: கெர்சோனின் சந்ததியான கெர்சோனியரின் குடும்பமும், கோகாத்தின் சந்ததியான கோகாத்தியரின் குடும்பமும், மெராரியின் சந்ததியான மெராரியரின் குடும்பமும்; லேவியின் மற்றக் குடும்பங்களாகிய லிப்னீயரின் குடும்பமும், எப்ரோனியரின் குடும்பமும், மகலியரின் குடும்பமும், மூசியரின் குடும்பமும், கோராகியரின் குடும்பமுமே. கோகாத் அம்ராமைப் பெற்றான் (எண் 26:57,58).

அம்ராமுடைய மனைவிக்கு யோகெபேத் என்று பேர்; அவள் எகிப்திலே லேவிக்குப் பிறந்த குமாரத்தி; அவள் அம்ராமுக்கு ஆரோனையும் மோசேயையும் அவர்கள் சகோதரியான மிரியாமையும் பெற்றாள் (எண் 26:59).

ஆரோனுக்கு நாதாபும் அபியூவும் எலெயாசாரும் இத்தாமரும் பிறந்தார்கள். நாதாபும் அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியைக் கொண்டுவந்தபோது, செத்துப்போனார்கள் (எண் 26:60,61).

அவர்களில் ஒரு மாதத்து ஆண்பிள்ளை முதலாக எண்ணப்பட்டவர்கள் இருபத்துமூவாயிரம்பேர்; இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கப்படாதபடியினால், அவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் இலக்கத்திற்கு உட்படவில்லை (எண் 26:62).

லேவியரின் பொதுவான மூன்று குடும்பங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. கெர்சோனின் சந்ததியான கெர்சோனியரின் குடும்பம்

2. கோகாத்தின் சந்ததியான கோகாத்தியரின் குடும்பம்

3. மெராயின் சந்ததியான மெராரியரின் குடும்பம்.

லேவியின் மற்ற ஐந்து குடும்பங்களைப்பற்றிய விவரம் வருமாறு:

1. லிப்னீயரின் குடும்பம் (எண் 3:18)

2. எப்ரோனியரின் குடும்பம் (எண் 3:19)

3. மகலியரின் குடும்பம் (எண் 3:20)

4. மூசியரின் குடும்பம் (எண் 3:20)

5. கோராகியரின் குடும்பம் (எண் 3:19; எண் 16:1)

இங்கு கூறப்பட்டிருக்கும் அட்டவணையில் லேவியரின் இந்தக் குடும்பத்தார் மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறார்கள். எண் 3:18-20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் லேவியரின் மற்ற குடும்பத்தாரைப் பற்றி இங்கு எதுவும் கூறப்படவில்லை. இதற்கு காரணமும் அறியப்படவில்லை. இந்த அட்டவணையில் கோகாத்தின் குடும்பத்தில் அம்ராமைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஆரோன், மோசே, மிரியாம் ஆகியோரும் ஆசாரியத்துவ பட்டமும் இந்தக் கோத்திரத்திலிருந்தே வருகிறது. (எண் 26:58-61).

அம்ராம் கோகாத்தின் குமாரன். கோகாத் லேவியின் குமாரன். இவன் யோகெபேத்தைத் திருமணம் செய்து கொண்டான். யோகெபேத் லேவியின் குமாரத்தி. தன்னுடைய நெருங்கிய இனத்தாளை அம்ராம் திருமணம் செய்து கொள்கிறான். (எண் 26:59; எண் 3:17). ஆரோன், மோசே, மிரியாம் ஆகியோர் இவர்களுக்குப் பிறந்தவர்கள். ஆரோனின் குமாரராகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் ஆகியோர் ஆசாரியராக அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். (எண் 26:60). நாதாபும், அபியூவும் மதுபானம் அருந்தி கர்த்தருடைய சந்நிதியில் அந்நிய அக்கினியைக் கொண்டு வந்ததினால் மரித்துப் போனார்கள். (எண் 26:61; லேவி 10:1-10).

லேவியர்களில் ஒரு மாதத்து ஆண்பிள்ளை முதலாக எண்ணப்பட்டவர்கள் இருபத்து மூவாயிரம்பேர்" - லேவி கோத்திரத்தாரில் புதிய எண்ணிக்கையின் பிரகாரம் 23,000 பேர் இருக்கிறார்கள். இவர்கள் ஒரு மாதத்து ஆண்பிள்ளை முதலாக எண்ணப்பட்டவர்கள். முதலாவது எண்ணிக்கையிலிருந்து இப்பொழுது 1,000 பேர் அதிகரித்திருக்கிறார்கள். (எண் 3:39) இவர்களில் 300 தலைவர்கள் சேர்க்கப்பட வில்லை. எண் 3:22,28,34 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் எண்ணிக்கையில் இவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதைக் கணக்கில் எடுத்தால் லேவியின் கோத்திரத்தில் 700பேர் மட்டுமே அதிகரித்திருக்கிறார்கள். (எண் 3:39)

வனாந்தரத்தில் செத்தவர்கள் எண் 26:63-65

எண் 26:63. மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவின் அருகேயிருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனான வெளிகளில் இஸ்ரவேல் புத்திரரை எண்ணுகிறபோது இருந்தவர்கள் இவர்களே.

எண் 26:64. முன்பு மோசேயும் ஆசாரியனாகிய ஆரோனும் சீனாய் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரை எண்ணும்போது இருந்தவர்களில் ஒருவரும் இவர்களுக்குள் இல்லை.

எண் 26:65. வனாந்தரத்தில் சாகவே சாவார்கள் என்று கர்த்தர் அவர்களைக் குறித்துச் சொல்லியிருந்தார்; எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும் நூனின் குமாரனாகிய யோசுவாவும் தவிர, வேறொருவரும் அவர்களில் மீதியாயிருக்கவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்திலே கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். வனாந்தரத்தில் சாகவே சாவார்கள் என்று கர்த்தர் அவர்களைக் குறித்துச் சொல்லியிருந்தார்; கர்த்தர் சொன்ன பிரகாரமே கலகக்காரர்கள் எல்லோரும் செத்துப்போனார்கள்.

"இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்" (எண் 14:29).

முன்பு மோசேயும் ஆசாரியனாகிய ஆரோனும் சீனாய் வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரரை எண்ணும்போது இருந்தவர்களில் ஒருவரும் இவர்களுக்குள் இல்லை (எண் 26:64).

எண் 14:21-35 ஆகிய வசனங்களில் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் அப்படியே நிறைவேறிற்று. இருபது வயதிற்கு மேற்பட்ட பழைய சந்ததியாரில் காலேபையும், யோசுவாவையும் தவிர, எல்லோரும் மரித்துப் போனார்கள். (எண் 26:64-65). யோசுவாவையும், காலேபையும் தவிர கானானுக்குள் பிரவேசித்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஒருவரும் இல்லை. (எண் 14:24,30,38).

மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவின் அருகேயிருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனான வெளிகளில் இஸ்ரவேல் புத்திரரை எண்ணுகிறபோது இருந்தவர்கள் இவர்களே (எண் 26:63).

எலெயாசார் இரண்டாவது பிரதான ஆசாரியன். (எண் 20:23-29) இவனுடைய குமாரன் பினெகாஸ் மூன்றாவது பிரதான ஆசாரியன் (எண் 25:11).

எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும் நூனின் குமாரனாகிய யோசுவாவும் தவிர, வேறொருவரும் அவர்களில் மீதியாயிருக்கவில்லை (எண் 26:65).

கர்த்தர் நீதியுள்ள தேவன். அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாகச் சொன்ன நியாயத்தீர்ப்பு, வனாந்தரத்திலே நிறைவேறுகிறது. கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும், செய்கையிலும் உண்மையுள்ளவர்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தாலும், அவர்கள் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணினாலும், கர்த்தர் தம்முடைய கிருபைகளையும், இரக்கங்களையும், நன்மைகளையும் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

சீனாய் மலையில் எண்ணப்பட்ட இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கையைவிட, மோவாபின் சமவெளியில் அவர்கள் எண்ணப்படும்போது, அவர்களுடைய எண்ணிக்கை முன்பு இருந்ததைவிட இப்போது குறைந்திருக்கிறது. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரின் ஆசீர்வாதத்திற்காகவே, கர்த்தர் அவர்களை எண்ணுமாறு சொல்லுகிறார்.

மோவாபின் சமவெளியில் எண்ணப்படுகிற இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் இருபது வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், அறுபது வயதிற்குட்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் யுத்தத்திற்கு புறப்பட்டுப்போகக்கூடியவர்கள். இவர்களுடைய சரீர ஆரோக்கியம் நன்றாயிருக்கிறது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் இஸ்ரவேல் புத்திரர் முப்பத்தெட்டு வருஷங்களாய் வனாந்தரத்திலே சுற்றி அலைந்தார்கள். அவர்களுடைய நாட்களெல்லாம் வனாந்தரத்தில் வீணாய்க் கழிந்துபோயிற்று. ஆனாலும் இந்தக் காலத்தில் அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியமங்களையும், பிரமாணங்களையும் கற்றுக்கொள்கிறார்கள்.

"வனாந்தரத்தில் சாகவே சாவார்கள்" (எண் 26:65) என்று கர்த்தர் அவர்களைக் குறித்து நாற்பது வருஷங்களுக்கு முன்பு, இந்த வாக்கியத்தைச் சொன்னார். அது அப்படியே நிறைவேறி விடுகிறது (எண் 14:21-35).

27 அதிகாரம்

செலோபியாத்தின் குமாரத்திகளுடைய வழக்கு தீர்த்து வைக்கப்படுகிறது (எண் 27:1-11). மோசேயின் மரணம் சமீபித்திருக்கிறது என்பது அவருக்கு அறிவிக்கப்படுகிறது (எண் 27:12-14).

மோசேக்கு பின்பு இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்த யோசுவா தலைவராக தெரிந்தெடுக்கப்படுகிறார். மோசேயின் ஜெபம் (எண் 27:15-17). கர்த்தருடைய நியமனம் (எண் 27:18-23).

செலோப்பியாத்தின் குமாரத்தி எண் 27:1-11

எண் 27:1. யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் குடும்பங்களில், மனாசேயின் குமாரனாகிய மாகீரின் மகனான கிலெயாத்துக்குப் பிறந்த ஏபேருக்குப் புத்திரனாயிருந்த செலோப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவர்கள் வந்து,

எண் 27:2. ஆசரிப்புக் கூடாரவாசலிலே மோசேக்கும், ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், பிரபுக்களுக்கும், சபையனைத்திற்கும் முன்பாக நின்று:

எண் 27:3. எங்கள் தகப்பன் வனாந்தரத்தில் மரணமடைந்தார்; அவர் கர்த்தருக்கு விரோதமாகக் கூடின கோராகின் கூட்டத்தாரில் சேர்ந்தவர் அல்ல, தம்முடைய பாவத்தினாலே மரித்தார்; அவருக்குக் குமாரர் இல்லை.

எண் 27:4. எங்கள் தகப்பனுக்குக் குமாரன் இல்லாததினாலே, அவருடைய பேர் அவருடைய வம்சத்தில் இல்லாமல் அற்றுப்போகலாமா? எங்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே எங்களுக்குக் காணியாட்சி கொடுக்க வேண்டும் என்றார்கள்.

எண் 27:5. மோசே அவர்களுடைய நியாயத்தைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுபோனான்.

எண் 27:6. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 27:7. செலோப்பியாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது சரிதான்; அவர்களுக்கு அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே சுதந்தரம் கொடுக்க வேண்டும்; அவர்கள் தகப்பன் பின்வைத்த சுதந்தரத்தை அவர்களுக்கு கிடைக்கும்படி செய்வாயாக.

எண் 27:8. மேலும் நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: ஒருவன் குமாரன் இல்லாமல் மரித்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் குமாரத்திக்குக் கொடுக்க வேண்டும்.

எண் 27:9. அவனுக்குக் குமாரத்தியும் இல்லாதிருந்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் சகோதரருக்குக் கொடுக்க வேண்டும்,

எண் 27:10. அவனுக்குச் சகோதரரும் இல்லாதிருந்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் தகப்பனுடைய சகோதரருக்குக் கொடுக்க வேண்டும்.

எண் 27:11. அவன் தகப்பனுக்குச் சகோதரர் இல்லாதிருந்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் வம்சத்திலே அவனுக்குக் கிட்டின உறவின்முறையானுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கவேண்டும்; இது, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயவிதிப்பிரமாணமாய் இருக்கக் கடவது என்று சொல் என்றார்.

செலோப்பியாத்தின் குமாரத்திகளைப்பற்றி இதற்கு முந்தின அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "ஏப்பேரின் குமாரனான செலொப்பியாத்திற்குக் குமாரர் இல்லாமல், குமாரத்திகள் மாத்திரம் இருந்தார்கள்; இவர்கள் நாமங்கள் மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவைகள் (எண் 26:33).

இவர்களுடைய பிரச்சனையைப்போல, இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் பிரச்சனைகள் வரவில்லை. இந்தப் பிரச்சனை இவர்களுக்கு மாத்திரம் விசேஷமாய் வந்திருக்கிறது. செலோப்பியாத்திற்கு ஆண்பிள்ளைகள் பிறக்கவில்லை. அவருக்கு ஐந்து பிள்ளைகள் பிறக்கிறார்கள். ஐந்து பேருமே பெண்பிள்ளைகள்.

செலோப்பியாத்தின் காணியாட்சி அவருக்கு பிறக்கும் ஆண்பிள்ளைகளுக்கு போய்ச்சேரவேண்டும். ஆனால் அவருக்கு ஆண்பிள்ளைகள் பிறக்காததினால், அவருக்கு பெண்பிள்ளைகள் மாத்திரமே பிறந்ததினால், அவருடைய காணியாட்சி தங்களுக்கு கொடுக்கப்படவேண்டுமென்று செலோப்பியாத்தின் குமாரத்திகள் தங்களுடைய வழக்கை முறையிடுகிறார்கள்.

இவர்களுடைய வழக்கு எண் 36-ஆவது அதிகாரத்தில் மறுபடியுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் குடும்பங்களில், மனாசேயின் குமாரனாகிய மாகீரின் மகனான கிலெயாத்துக்குப் பிறந்த ஏபேருக்குப் புத்திரனாயிருந்த செலோப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவர்கள் வந்து, ஆசரிப்புக் கூடாரவாசலிலே மோசேக்கும், ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், பிரபுக்களுக்கும், சபையனைத்திற்கும் முன்பாக நிற்கிறார்கள் (எண் 27:1,2).

இஸ்ரவேல் புத்திரர்கள் இன்னும் மோவாபின் சமவெளிகளில் தங்கியிருக்கிறார்கள். கோத்திரத்தாரின் எண்ணிக்கை தொகையேற்றப்படுகிறது. ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் சுதந்தரவீதத்தைப் பங்கு பிரித்துக் கொடுப்பதற்காக இஸ்ரவேல் புத்திரர்கள் எண்ணித் தொகையேற்றப் படுகிறார்கள்.

செலோப்பியாத்திற்கு ஐந்து குமாரத்திகள் இருக்கிறார்கள். அவர்களுடைய தகப்பனுக்கு ஆண் பிள்ளைகள் யாரும் பிறக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பெண் பிள்ளைகளாகிய தங்களுக்குக் குடும்பத்தின் சுதந்தரவீதங்களைப் பங்கு பிரித்து தரவேண்டுமென்று இந்த ஸ்திரீகள் மோசேயிடம் விண்ணப்பம் பண்ணுகிறார்கள்.

(எண் 27:1-5). மோசே அவர்களுடைய நியாயத்தைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போகிறார் (எண் 27:6-11).

மோசே இவர்களுடைய வழக்கை விசாரித்து தீர்ப்பு சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை சுதந்தரித்த பின்பு, தேசத்தின் சுதந்தரம் ஜனங்களுக்குள்ளே பங்கிட்டு கொடுக்கப்படுகிறது. அப்போது மோசே இங்கு செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு சொல்லுகிற தீர்ப்பின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரருக்கு சுதந்தரம் பிரித்துக்கொடுக்கப்படுகிறது.

மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குப் பிறந்த கிலெயாத்தின் குமாரனாகிய எப்பேரின் மகன் செலொப்பியாத்துக்கு குமாரத்திகள் தவிர குமாரர் இல்லை; அவன் குமாரத்திகளின் நாமங்கள், மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்பவைகள் (யோசு 17:3).

அவர்கள் ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் நூனின் குமாரனாகிய யோசுவாவுக்கும் பிரபுக்களுக்கும் முன்பாகச் சேர்ந்துவந்து: எங்கள் சகோதரர் நடுவே எங்களுக்குச் சுதந்தரம் கொடுக்கும்படி கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டார் என்றார்கள்; ஆகையால் அவர்கள் தகப்பனுடைய சகோதரரின் நடுவே, கர்த்தருடைய வாக்கின்படி, அவர்களுக்குச் சுதந்தரம் கொடுத்தான் (யோசு 17:4).

செலோப்பியாத்தின் குமாரத்திகள் நற்குணசாலிகளாகவும், கற்புள்ள ஸ்திரீகளாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய வழக்கு விசாரிக்கப்படும்போது, அந்த ஸ்திரீகளின் நற்குணமும் முக்கியத்துவம் பெறுகிறது.

மோசே, எலெயாசார், இஸ்ரவேல் சபையார் ஆகியோருக்கு முன்பாக செலோப்பியாத்தின் குமாரத்திகள் நின்று, "எங்கள் தகப்பன் வனாந்தரத்தில் மரணமடைந்தார்; அவர் கர்த்தருக்கு விரோதமாகக் கூடின கோராகின் கூட்டத்தாரில் சேர்ந்தவர் அல்ல, தம்முடைய பாவத்தினாலே மரித்தார்; அவருக்குக் குமாரர் இல்லை" (எண் 27:3) என்றும்,

"எங்கள் தகப்பனுக்குக் குமாரன் இல்லாததினாலே, அவருடைய பேர் அவருடைய வம்சத்தில் இல்லாமல் அற்றுப்போகலாமா? எங்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே எங்களுக்குக் காணியாட்சி கொடுக்க வேண்டும்" (எண் 27:4) என்றும் சொல்லுகிறார்கள்.

எண் 14:21-35 ஆகிய வசனங்களில் அழிவுக்கு நியமிக்கப்பட்டவர்களில் செலோப்பியாத்தும் ஒருவன். இவன் கோராகோடு சேர்ந்து கலகம் பண்ணவில்லை. ஆயினும் தனக்கு குமாரர்கள் பிறப்பதற்கு முன்பாகவே செலோப்பியாத் மரித்துப் போகிறான். (யோசு 17:3; 1நாளா 7:15).

"எங்களுக்குக் காணியாட்சி கொடுக்க வேண்டும்" என்று செலோப்பியாத்தின் குமாரத்திகள் கேட்கிறார்கள். நியாயாதிபதிகளுக்கு முன்பாகவும், ஒரு தேசத்தின் தலைவர்களுக்கு முன்பாகவும் ஸ்திரீகள் தங்கள் உரிமையைக் குறித்து விண்ணப்பம் பண்ணுகிறார்கள். ஸ்திரீகளின் உரிமைப் பிரச்சனை வேதாகமத்தில் முதன்முறையாக இங்கு கூறப்பட்டிருக்கிறது. (எண் 27:4-5, எண் 27:1)

செலோப்பியாத்தின் குமாரத்திகள் தங்களுடைய பிரச்சனைகளை தாங்களே முன் வந்து சொல்லுகிறார்கள். அவர்களுக்காக வழக்காட வேறு யாரும் நியமிக்கப்படவில்லை. மோசேயும் எலெயாசாரும், பிரபுக்களும், இஸ்ரவேல் சபையாரும் ஆசரிப்புக்கூடார வாசலிலே இருக்கிறார்கள். அக்காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இதுவே பிரதான நீதிமன்றம்.

செலோப்பியாத்தின் குமாரத்திகள் தங்களுடைய வழக்கை நியாயாதிபதிகளிடத்தில் தாங்களே எடுத்துச் சொல்லும் ஞானமும் திறமையுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சனைகள் மிகவும் தெளிவாகயிருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகளும் நியாயமுள்ளதாயிருக்கிறது.

தங்கள் தகப்பனுக்குக் குமாரன் இல்லாததினாலே, அவருடைய பேர் அவருடைய வம்சத்தில் இல்லாமல் அற்றுப்போகலாமா? தங்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே தங்களுக்குக் காணியாட்சி கொடுக்க வேண்டும் என்று செலோப்பியாத்தின் குமாரத்திகள் இஸ்ரவேலின் நீதிமன்றத்திலே முறையிடுகிறார்கள். இவர்கள் கானான் தேசத்தில் தங்களுக்கு சுதந்தரம் கேட்கிறார்கள்.

"கர்த்தர் மோசேயை நோக்கி: இவர்களுடைய பேர்களின் இலக்கத்திற்குத் தக்கதாய் தேசம் இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிடப்பட வேண்டும்" (எண் 26:52,53) என்று சொல்லியிருக்கிறார்.

மோசேயும் எலெயாசாரும் இஸ்ரவேல் புத்திரரை எண்ணித்தொகையேற்றியபோது, அவர்கள்செலோப்பியாத்தின் குமாரத்திகளை எண்ணித்தொகையேற்றவில்லை. ஆகையினால் கர்த்தர் மோசேக்கு சொல்லியிருக்கிற பிரகாரம் கானான் தேசத்திலே இவர்களுக்கு சுதந்தரம் பங்கிட்டு கொடுக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை.

செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு ஒரு சகோதரன் இருந்திருந்தால், அவர்கள் தங்கள் வழக்கை மோசேயினிடத்தில் வந்து சொல்லியிருக்கமாட்டார்கள். தங்கள் தகப்பனுடைய சுதந்தரம், தங்கள் சகோதரனுக்கு கொடுக்கப்படும் என்பது செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு தெரியும். ஆனாலும் இவர்களுக்கோ சகோதரன் யாருமில்லை.

செலோப்பியாத்தின் குமாரத்திகள் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோரைப்பற்றி மறந்துவிடாமல், அவர்களை நினைவுகூருகிறார்கள். அவர்களுக்கு குடும்பத்தின் எல்லா காரியங்களும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும். "உன் தாயையும் தகப்பனையும் கனம்பண்ணுவாயாக" என்பது கர்த்தருடைய கட்டளை. பெற்றோரைக் கனம்பண்ணுவது பிள்ளைகளின் கடமை.

செலோப்பியாத் எவ்வாறு மரித்தார் என்பதும் அவருடைய குமாரத்திகளுக்கு தெரிந்திருக்கிறது. தங்களுடைய தகப்பனார் உயிரோடிருந்த காலத்தில் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று அவருடைய குமாரத்திகள் சொல்லுகிறார்கள்.

செலோப்பியாத்தின் குமாரத்திகள், மோசேயினிடத்திலும், சபையாரிடத்திலும், "எங்கள் தகப்பன் வனாந்தரத்தில் மரணமடைந்தார்; அவர் கர்த்தருக்கு விரோதமாகக் கூடின கோராகின் கூட்டத்தாரில் சேர்ந்தவர் அல்ல, தம்முடைய பாவத்தினாலே மரித்தார்" (எண் 27:3) என்று சொல்லுகிறார்கள்.

தங்கள் தகப்பனார்மீது குற்ற வழக்குகள் எதுவுமில்லை என்றும், அவர் மரணதண்டனைக்கு பாத்திரமானவரல்ல என்றும், அவருக்கு இயற்கையான மரணமே உண்டாயிற்று என்றும் செலோப்பியாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறார்கள். ஆகையினால் செலோப்பியாத்தின் சுதந்தரத்தை வேறு யாரும் அபகரித்துக்கொள்ளக்கூடாது என்று அவருடைய குமாரத்திகள் விவாதம்பண்ணுகிறார்கள்.

மோசே அவர்களுடைய நியாயத்தைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுபோகிறார் (எண் 27:5). செலோப்பியாத்தின் குமாரத்திகள் திக்கற்ற பிள்ளைகளைப்போல இருக்கிறார்கள். கர்த்தர் விதவைகளையும், திக்கற்ற பிள்ளைகளையும் கைவிடாமல், அவர்களை ஆதரித்து, அவர்களுக்கு உதவிசெய்கிறார்.

செலோப்பியாத்தின் குமாரத்திகள் தங்களுடைய பிரச்சனைகளைச் சொல்லும்போது, மோசேயும் மிகுந்த கரிசனையோடு அவர்கள் சொல்லுவதைக் கேட்கிறார். மோசே அவர்களுடைய நியாயத்தை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போகிறார். கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுத்து, செலோப்பியாத்தின் குமாரத்திகளுடைய நியாயத்திலே தம்முடைய வார்த்தைகளை மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "செலோப்பியாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது சரிதான்; அவர்களுக்கு அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே சுதந்தரம் கொடுக்க வேண்டும்; அவர்கள் தகப்பன் பின்வைத்த சுதந்தரத்தை அவர்களுக்கு கிடைக்கும்படி செய்வாயாக" (எண் 27:6,7) என்று சொல்லுகிறார்.

தேவனுடைய தெய்வீக வாக்கினாலே, செலோப்பியாத்தின் குமாரத்திகளுடைய வழக்கு தீர்த்து வைக்கப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தையினால் அவர்களுக்கு நியாயம் செய்யப்படுகிறது. பிற்காலத்தில், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, இதுபோன்ற வழக்குகளும் பிரச்சனைகளும் வரும்போது, அவர்களுக்கு எவ்வாறு நியாயம் செய்யப்படவேண்டும் என்பதை கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாக உறுதிபண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் குமாரன் இல்லாமல் மரித்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை யாருக்கு கொடுக்க வேண்டும் என்று கர்த்தர் தெளிவுபடுத்துகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: ஒருவன் குமாரன் இல்லாமல் மரித்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் குமாரத்திக்குக் கொடுக்க வேண்டும். அவனுக்குக் குமாரத்தியும் இல்லாதிருந்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் சகோதரருக்குக் கொடுக்க வேண்டும், அவனுக்குச் சகோதரரும் இல்லாதிருந்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன்தகப்பனுடைய சகோதரருக்குக் கொடுக்க வேண்டும். அவன் தகப்பனுக்குச் சகோதரர் இல்லாதிருந்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் வம்சத்திலே அவனுக்குக் கிட்டின உறவின்முறையானுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கவேண்டும்" (எண் 27:8-11) என்று சொல்லுகிறார்.

இது, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயவிதிப்பிரமாணமாய் இருக்கிறது (எண் 27:11). கர்த்தர் இந்த வசனப்பகுதியில் உறவின் முறையானுக்கு கொடுக்கப்படவேண்டிய சுதந்தரத்தைப்பற்றியும் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரங்கள் பற்றிய தம்முடைய பிரமாணத்தை இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. அவர்களுக்கு அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே சுதந்தரம் கொடுக்க வேண்டும். (எண் 27:7)

2. ஒருவன் குமாரன் இல்லாமல் மரித்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் குமாரத்திக்குக் கொடுக்கவேண்டும் (எண் 27:8).

3. அவனுக்குக் குமாரத்தியும் இல்லாதிருந்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் சகோதரருக்குக் கொடுக்க வேண்டும் (எண் 27:9).

4. அவனுக்குச் சகோதரரும் இல்லாதிருந்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன்தகப்பனுடைய சகோதரருக்குக் கொடுக்க வேண்டும் (எண் 27:10)

5. அவன் தகப்பனுக்குச் சகோதரர் இல்லாதிருந்தால், அவனுக்குரிய சுதந்தரத்தை அவன் வம்சத்திலே அவனுக்குக் கிட்டின உறவின் முறையானுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கவேண்டும் (எண் 27:11)

6. இது, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்ட படியே, இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயவிதிப்பிரமாணமாய் இருக்கக்கடவது.

மோசேயின் மரணம் சமீபமாயிற்று எண் 27:12-14

எண் 27:12. பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார்.

எண் 27:13. நீ அதைப் பார்த்தபின்பு, உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டதுபோல, நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்;

எண் 27:14. சபையார் வாக்குவாதம்பண்ணின சீன் வனாந்தரத்தில் தண்ணீருக்கடுத்த விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணவேண்டிய நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே என்றார். இது சீன் வனாந்தரத்தில் காதேஸ் ஊர் அருகே உண்டான மேரிபாவின் தண்ணீருக்கடுத்த காரியமே.

மோசே செய்த தப்பிதத்தை கர்த்தர் அவருக்கு எடுத்து சொல்லுகிறார். அவர் சீன் வனாந்தரத்திலே, காதேஸ் ஊர் அருகே, கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் கன்மலையைப் பார்த்து பேசாமல், அந்தக் கன்மலையை இரண்டுதரம் அடித்தார். மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனதினால், அவர்கள் இரண்டுபேரும் கானான் தேசத்தில் பிரவேசிக்கமாட்டார்கள் என்று கர்த்தர் சொல்லிவிடுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "சபையார் வாக்குவாதம்பண்ணின சீன் வனாந்தரத்தில் தண்ணீருக்கடுத்த விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணவேண்டிய நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே என்றார். இது சீன் வனாந்தரத்தில் காதேஸ் ஊர் அருகே உண்டான மேரிபாவின் தண்ணீருக்கடுத்த காரியமே" (எண் 27:14) என்று சொல்லுகிறார்.

மோசே இப்போது முதிர்வயதிலிருக்கிறார். அவருக்கு சீக்கிரத்தில் மரணம் சம்பவிக்கப்போகிறது. கர்த்தர் மோசேயின் மரணத்தை அவருக்கு முன்னறிவிக்கிறார். மோசே மேரிபாவின் தண்ணீருக்கடுத்த காரியத்தில் கர்த்தருடைய கட்டளையை மீறினார். ஆனாலும் கர்த்தர் மோசேயை விட்டு விலகிவிடவில்லை. அவருடைய மரணம் சமீபத்தில் வரப்போகிறது என்பதை கர்த்தர் அவருக்கு முன்னறிவிக்கிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டதுபோல, நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்" (எண் 27:13) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயினிடத்தில், அவருக்கு வரப்போகிற மரணத்தைப்பற்றிச் சொன்னபின்பு, அவர் தம்முடைய கட்டளையை மீறி தமக்கு விரோதமாகப் பாவம் செய்ததையும் எடுத்து சொல்லுகிறார். இதனால் மோசே தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவும், கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தி, தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்து, கர்த்தரோடு ஒப்புரவாக்கவும், மோசேக்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

மோசே சீக்கிரத்தில் மரிக்கப்போகிறார். அவர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார் என்று ஏற்கெனவே கர்த்தர் சொல்லிவிட்டார். மோசே வாக்குத்தத்த தேசத்திற்குள் பிரவேசிக்காவிட்டாலும், அந்த தேசத்தை மோசே தன் கண்களால் பார்க்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார். நீ அதைப் பார்த்தபின்பு, உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டதுபோல, நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்" (எண் 27:12,13) என்று சொல்லுகிறார்.

மோசே வாக்குத்தத்த தேசத்திற்கு முன்பாக நிற்கிறார். ஆனால் மோசேயினுடைய பாவத்தின் நிமித்தமாக அந்த தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு மோசேக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மோசே மரணம் அடையும் நிலைக்கு வந்துவிடுகிறார். அதற்கு ஆயத்தமாகக் கர்த்தர் மோசேயை அபாரீம் மலைக்கு ஏறிவருமாறு கூறுகிறார். (எண் 27:12-14).

எஸ்போனின் மேற்குப் பகுதியில் அபாரீம் மலைத்தொடர் அமைந்திருக்கிறது. இதன் சிகரத்திலிருந்து யோர்தானின் பள்ளத்தாக்கையும், சவக்கடலின் பகுதியையும் காணமுடியும். மோசே அபாரீம் மலையில் ஏறிய மலை சிகரத்தின் பெயர் நேபோ (உபா 32:49). இதற்கு பிஸ்கா (உபா 34:1) என்னும் மறுபெயரும் உள்ளது.

மோசேயின் மரணம் அவருடைய ஜனத்தாரிடத்திலிருந்து, அவரைப் பிரித்துவிடவில்லை. "நீ உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்" என்று கர்த்தர் மோசேயின் மரணத்தைக் குறித்து அவருக்கு சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே, பரிசுத்தமான முற்பிதாக்கள் அநேகர் இருந்தார்கள். அவர்கள் எல்லோருமே மரித்துப்போனார்கள். மோசே மரிக்கும்போது, அவர்களோடே சேர்க்கப்படுவார். இஸ்ரவேலின் முற்பிதாக்கள் மோசேக்கு முன்பாக இளைப்பாறுதலில் பிரவேசித்தார்கள். மோசே மரிக்கும்போது, அவர்களோடுகூட இளைப்பாறுதலில் பிரவேசிப்பார்.

மோசேயின் மரணம், அவருடைய சகோதரனாகிய ஆரோன் இதற்கு முன்பு மரித்துப்போனதுபோல இருக்கும். ஆரோன் தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்பட்டதுபோல, மோசேயும் தன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவார்.

ஆரோன் மரிக்கும் முன்பாக, அவருடைய ஆசாரிய வஸ்திரம் அவருடைய சரீரத்திலிருந்து கழற்றப்பட்டது. அந்த சம்பவத்தை ஆரோன் சந்தோஷமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். ஆரோன் மரிக்கும்போது, அவருடைய ஆசாரியத்துவ ஊழியம் முதலாவதாக அவரை விட்டு எடுத்துக்கொள்ளப்படுகிறது. அதன்பின்பு அவருடைய சரீரம் மரித்துப்போகிறது.

ஆரோன் தன் சரீர மரணத்தைப் பார்த்து பயப்படவில்லை. மோசேயும் அதுபோல பயப்படாதிருக்கவேண்டும். தான் மரிக்கும்போது தன்னுடைய ஜனத்தாரோடே சேர்க்கப்படுகிறோம் என்னும் எண்ணமே மோசேயின் மனதில் ஏற்படவேண்டும்.

"என்னைப் பரிசுத்தம் பண்ணவேண்டிய நீங்கள்" என்று கர்த்தர் மோசேயைப்பற்றியும் ஆரோனைப்பற்றியும் சொல்லுகிறார். பரிசுத்தம் பண்ணுதல் என்பதற்கு தெய்வீகப் பயன்பாட்டிற்காக வேறுபிரித்தல் என்று பொருள். கர்த்தரைப் பரிசுத்தம் பண்ணுதல் என்பதற்கு ஒருவன் தன்னுடைய இருதயத்திலும், தன்னுடைய நடத்தையிலும் கர்த்தரை வேறுபிரித்துப் பரிசுத்தப்படுத்துவது என்று பொருள். மேலும் பயபக்தியோடு அவருக்குக் கீழ்ப்படிதல் என்றும் இதற்குப் பொருள் கூறலாம். (1பேதுரு 3:15).

மோசேக்கு அடுத்த தலைவர் எண் 27:15-23

எண் 27:15. அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி:

எண் 27:16. கர்த்தருடைய சபை மேய்ப்பன் இல்லாத மந்தையைப் போல் இராதபடிக்கு,

எண் 27:17. அந்தச் சபைக்கு முன்பாகப் போக்கும் வரத்துமாய் இருக்கும்படிக்கும், அவர்களைப் போகவும் வரவும் பண்ணும்படிக்கும், மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள் மேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும் என்றான்.

எண் 27:18. கர்த்தர் மோசேயை நோக்கி: ஆவியைப்பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன்மேல் உன் கையை வைத்து,

எண் 27:19. அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக் கட்டளைகொடுத்து,

எண் 27:20. இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு, உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடு.

எண் 27:21. அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்கக்கடவன்; அவனிமித்தம் அந்த ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக்கடவன்; அவருடைய கட்டளையின்படியே, அவனும் அவனோடேகூட இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் போகவும் அவருடைய கட்டளையின்படியே வரவும் வேண்டியது என்றார்.

எண் 27:22. மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே யோசுவாவை அழைத்துக்கொண்டு போய், அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி,

எண் 27:23. அவன்மேல் தன் கைகளை வைத்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே அவனுக்குக் கட்டளைகொடுத்தான்.

இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தி செல்வதற்கு, தனக்கு பின்பு ஒரு தலைவர் நியமிக்கப்படவேண்டுமென்று மோசே கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். மோசேயினிடத்தில் பொறாமை குணமில்லை. தான் மட்டுமே தலைவராகயிருக்கவேண்டும் என்றும், தனக்கு போட்டியாக யாரும் வந்துவிடக்கூடாது என்றும் மோசே ஒருபோதும் நினைக்கவில்லை. இப்படிப்பட்ட குணமுள்ளவர்கள் பொறாமைக்காரராயிருப்பார்கள். அவர்கள் தங்களுக்கு பின்பு, தங்களுடைய தலைமை ஸ்தானத்திலே ஒருவரும் வந்துவிடக்கூடாது என்றும் நினைப்பார்கள்.

மோசேயோ இஸ்ரவேல் புத்திரர்மீது மிகுந்த கரிசனையோடிருக்கிறார். அவர் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக ஊழியம் செய்கிறவர். மோசே அவர்களை ஊழியம் கொள்ளுகிறவரல்ல. "நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்" என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன உடனே, மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண ஆரம்பிக்கிறார். அவர் தனக்காக ஜெபம்பண்ணாமல், கர்த்தர் தன்னுடைய ஆயுசுகாலத்தைக் கூட்டிக்கொடுக்கவேண்டுமென்று ஜெபம்பண்ணாமல், தனக்கு பின்பு இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்த கர்த்தர் தாமே ஒரு புருஷனை அவர்கள்மேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டுமென்று ஜெபம்பண்ணுகிறார்.

மோசே கர்த்தரை நோக்கி, "கர்த்தருடைய சபை மேய்ப்பன் இல்லாத மந்தையைப் போல் இராதபடிக்கு, அந்தச் சபைக்கு முன்பாகப் போக்கும் வரத்துமாய் இருக்கும்படிக்கும், அவர்களைப் போகவும் வரவும் பண்ணும்படிக்கும், மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள் மேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும்" (எண் 27:15-17) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

இந்த வசனத்தில் கர்த்தர் என்பதற்கான எபிரெய வார்த்தை "எலோஹிம்" என்பதாகும். சிருஷ்டிப்போடு தொடர்புபடுத்தி கர்த்தருடைய நாமம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் சிருஷ்டிகராகவும், மாம்சமான யாவருடைய ஆவிகளையும் ஆளுகை செய்கிறவராயும் இருக்கிறார் (எண் 16:22).

இஸ்ரவேலின் மிகப்பெரிய தேவையைக் குறித்து மோசே தேவனிடம் விண்ணப்பம் பண்ணுகிறார். இஸ்ரவேலின் தலைவன் ஆடுகளை மேய்க்கும் ஒரு மேய்ப்பனைப் போல இருக்கவேண்டும். ஆடுகளை நல்ல விளைச்சல் நிலத்தின் வழியாக வழிநடத்தி, அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கும் நல்ல மேய்ப்பனைப்போல ஒரு அதிகாரி இஸ்ரவேல் புத்திரருக்கு வேண்டும் (எண் 27:16-17).

நாமும் மோசேயைப்போலவே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். நம்முடைய காலத்தில் நாம் ஊழியம் செய்வதுபோல, நமக்கு பின்வரும் காலத்தில் கர்த்தருடைய ஊழியம் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்றும், அந்த ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் ஒரு புதிய சந்ததியை எழுப்பவேண்டும் என்றும் நாம் ஜெபம்பண்ணவேண்டும்.

மோசே கர்த்தரிடத்தில் இஸ்ரவேல் ஜனத்தைப்பற்றிச் சொல்லும்போது, மிகுந்த கரிசனையோடு பேசுகிறார். கர்த்தருடைய சபை மேய்ப்பனில்லாத மந்தையைப்போல இருக்கக்கூடாது என்று மோசே கருத்தாய் விண்ணப்பம்பண்ணுகிறார். இப்போது மோசேயே இஸ்ரவேல் புத்திரருக்கு மேய்ப்பனாயிருக்கிறார். அவர் மரித்துப்போன பின்பு, அவருடைய ஸ்தானத்தில் ஒருவரும் நியமிக்கப்படவில்லையென்றால், இஸ்ரவேல் புத்திரர் மேய்ப்பனில்லாத மந்தையைப்போல இருப்பார்கள்.

மோசே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது அவர்மீது நம்பிக்கை வைத்து ஜெபம்பண்ணுகிறார். அவர் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் சபைகளுக்கு மேல் கர்த்தர் தாமே ஒருவரை அதிகாரியாக நியமிக்கவேண்டும் என்று மோசே விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் ஒருதேவதூதரை அனுப்பவேண்டும் என்று விண்ணப்பம்பண்ணாமல், கர்த்தர் ஒரு புருஷனை இஸ்ரவேல் புத்திரர்மேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும் என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் தாமே ஒரு புருஷனை தெரிந்தெடுக்கவேண்டும் என்பதும், அவரே அந்த புருஷனை இஸ்ரவேல் ஜனங்கள்மேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும் என்பதும் மோசேயின் விண்ணப்பமாகயிருக்கிறது. கர்த்தர் தெரிந்துகொள்ளும் மனுஷன், இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துவதற்கு தகுதியுள்ளவராகயிருப்பார். இஸ்ரவேல் ஜனத்தாரும் அந்தப் புருஷனை தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டு, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவார்கள்.

கர்த்தர் மோசேயின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கிறார். மோசே கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்ட பிரகாரம், அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராக, ஒரு புருஷனைத் தெரிந்துகொள்கிறார். நூனின் குமாரனாகிய யோசுவா என்பவர் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்படுகிற புருஷர்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "ஆவியைப்பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன்மேல் உன் கையை வை" (எண் 27:18) என்று சொல்லுகிறார்.

மோசே எழுதிய பஞ்சாகம புஸ்தகத்தில், மோசே ஜெபிக்கும் போதெல்லாம் கர்த்தர் உடனடியாகப் பதில் கொடுக்கிறார் என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு மனுஷனோடு முகமுகமாகப் பேசுவதுபோன்று, கர்த்தர் மோசேயோடு பேசுகிறார் (எண் 27:16-18). தேவனோடு ஒருவர் நல்ல உறவில் இருக்கும்போது தேவனுடைய கிருபையினால் அவரைக் கிட்டிச் சேரமுடியும் (2கொரி 3:6-18; எபி 4:14-16; எபி 8:6; எபி 10:19-23).

எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த இஸ்ரவேல் புத்திரரின் பழைய சந்ததியாரில் இப்பொழுது மோசே, யோசுவா, காலேப் ஆகியோர் மட்டுமே உயிரோடு இருக்கிறார்கள் (எண் 14:21-35; எண் 26:65). மோசே விரைவில் மரித்துப் போகப் போகிறார். யோசுவாவும், காலேபும் இஸ்ரவேலரின் புதிய சந்ததியாரைக் கானான் தேசத்திற்குள் வழிநடத்திச் சென்று அதைச் சுதந்தரிக்க வேண்டும். யோசுவா மோசேக்கு அடுத்த படியாக தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட படியினால், அவர்மீது காலேப் பொறாமை கொண்டதாக வேதத்தில் எந்த ஆதாரமுமில்லை. ஒவ்வொரு காரியத்தைச் செய்வதற்கும் சரியான நபர் யார் என்பது கர்த்தருக்குத் தெரியும்.

பழைய உடன்படிக்கையில் ஆவியைப் பெற்றிருந்த புருஷர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. யோசேப்பு (ஆதி 41:38)
2. மோசே (ஏசா 63:10-11)
3. யோசுவா (எண் 27:18)
4. தாவீது (சங் 51:10)
5. எசேக்கியேல் (எசே 2:2; எசே 3:24)
6. தானியேல் (தானி 4:8-9,18; தானி 5: 11-14; தானி 6:3)
7. சீஷர்கள் (மத் 10:20)

பழைய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசிகளும், பரிசுத்தவான்களும் பரிசுத்த ஆவியானவரின் ஒரு அளவை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பெற்றிருந்தார்கள்.

ஜனங்களுக்கு முன்பாக ஒருவர்மீது கையை வைப்பது, அவரை ஆசீர்வதிப்பதற்கும், தேவனுடைய ஊழியத்திற்காக அவரை வேறுபிரித்து பிரதிஷ்டை பண்ணுவதற்கும் அடையாளமாகும்.

யோசுவாவின் பிரதிஷ்டையைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. ஆவியைப்பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு, அவன்மேல் உன் கையை வை (எண் 27:18).

2. அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக் கட்டளை கொடு (எண் 27:19).

3. இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு, உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்குக் கொடு. (எண் 27:20).

4. அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்க வேண்டும்; அவனிமித்தம் அந்த ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்க வேண்டும் (எண் 27:21).

5. அவருடைய கட்டளையின்படியே, அவனும் அவனோடேகூட இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் போகவும் அவருடைய கட்டளையின்படியே வரவும் வேண்டும்.

யோசுவா இதுவரையிலும் மோசேயோடு கூடயிருந்தவர். அமலேக்கியருக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்தில், யோசுவா மிகுந்த தைரியத்தோடு அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியவர். யோசுவா மிகுந்த மனத்தாழ்மையுள்ளவர். அவர் இதுவரையிலும் மோசேக்கு பணிவிடை செய்து வருகிறார். அவர் கர்த்தர்மீது மிகுந்த பக்தியும் விசுவாசமுமுள்ளவர்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு பிரபுக்கள் கானான் தேசத்தைச் சுற்றிப்பார்ப்பதற்காக அனுப்பப்பட்டபோது, அவர்களில் யோசுவாவும் ஒருவராக அனுப்பப்பட்டார். அவர்களில் இரண்டுபேர் மாத்திரமே இஸ்ரவேல் ஜனத்தாரிடம் நல்ல செய்தியை சொன்னவர்கள். அவர்களில் யோசுவாவும் ஒருவர். துர்ச்செய்தியை பரப்பின வேவுகாரர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயங்களைக் கரையப்பண்ணினார்கள்.

யோசுவாவோ கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, அவர்களிடத்தில் உற்சாகமான வார்த்தைகளைப் பேசினார்.

இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துவதற்கு, மோசேக்கு அடுத்தபடியாக கர்த்தர் யோசுவாவை தெரிந்தெடுத்திருக்கிறார். அந்த ஊழியத்திற்கு அவரை எவ்வாறு பிரதிஷ்டைபண்ணவேண்டுமென்று கர்த்தர் மோசேக்கு கட்டளையிடுகிறார்.

மோசே யோசுவாவின்மேல் தன் கையை வைக்கவேண்டும். தன்னிடத்திலுள்ள ஆளுகையையும், அதிகாரத்தையும் மோசே யோசுவாவுக்கு கொடுப்பதற்கு இது அடையாளம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் பலிகளை செலுத்தும்போது, அவர்கள் பலியிடப்படும் மிருகத்தின்மீது தங்களுடைய கைகளை வைப்பார்கள். பலிசெலுத்துகிறவர் பலியிடப்படுவதற்கு பதிலாக, அந்த மிருகம் பலியிடப்படுகிறது.

ஒருவர்மீது கையை வைத்து ஜெபம்பண்ணுவது கர்த்தருடைய ஆவியானவர் அந்த நபர்மீது இறங்கி வருவதற்கு அது அடையாளம். மோசே இந்த வரத்தை ஜெபத்தினால் பெற்றிருக்கிறார்.

"மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்; இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள்" (உபா 34:9).

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஊழியக்காரர்கள் சபையிலுள்ள விசுவாசிகள்மீது தங்கள் கைகளை வைத்து ஜெபம்பண்ணுகிறார்கள். விசுவாசிகளை சுவிசேஷ ஊழியத்திற்காக பிரித்தெடுக்கும்போது, அவர்கள்மீது கைகளை வைத்து ஜெபம்பண்ணுவது வழக்கம். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்திற்காக பிரதிஷ்டைபண்ணப்படுகிறார்கள். கர்த்தர் தாமே அவர்களை தம்முடைய ஊழியக்காரர்களாக அங்கீகரிக்கவேண்டுமென்றும், தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் தாமே அவர்களை தகுதிப்படுத்தவேண்டும் என்றும் வாஞ்சித்து, அப்போஸ்தலர்கள் அவர்களுடைய தலைகள்மீது தங்கள் கைகளை வைத்து ஜெபம்பண்ணுகிறார்கள்.

அப்போஸ்தலர்கள் ஊழியக்காரர்கள்மேல் கைகளை வைத்து ஜெபம்பண்ணும்போது, அவர்களை கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்து ஜெபம்பண்ணுகிறார்கள்.

மோசே யோசுவாவின்மேல் தன் கையை வைத்து ஜெபிக்கவேண்டும். அதன்பின்பு அவர் யோசுவாவை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தவேண்டும் (எண் 27:19).

ஆசாரியனாகிய எலெயாசாரிடம் ஊரீம், தும்மீம் ஆகியவற்றைக் கொண்ட மார்ப்பதக்கம் இருக்கிறது. கர்த்தருடைய தீர்ப்பை ஊரீம், தும்மீம் ஆகியவற்றைப் பயன்படுத்தி சபையார் தெரிந்து கொள்வது வழக்கம் (யாத் 28:30).

இஸ்ரவேல் ஜனத்தாரை வழிநடத்துகிற மகாபெரிய ஊழியத்திற்கு கர்த்தர் யோசுவாவைத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்பதை எலெயாசாரும் இஸ்ரவேல் சபையாரும் அங்கீகரிக்கவேண்டும். கர்த்தரே யோசுவாவை தலைவராக நியமித்திருக்கிறார் என்பதை அவர்கள் எல்லோரும் அறிந்துகொள்ளவேண்டும். இதற்காகவே மோசே யோசுவாவை எலெயாசாருக்கும், இஸ்ரவேல் சபை அனைத்திற்கும் முன்பாக நிறுத்துகிறார்.

மோசே இஸ்ரவேல் சபையார் எல்லாருடைய கண்களுக்கும் முன்பாக யோசுவாவுக்கு கட்டளை கொடுக்கவேண்டும் (எண் 27:19).

மோசே தன்னுடைய கனத்தில் கொஞ்சம் யோசுவாவுக்கு கொடுக்கவேண்டும் (எண் 27:20). அப்போது இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும், மோசேக்கு கீழ்ப்படிந்ததுபோல, யோசுவாவுக்கும் கீழ்ப்படிவார்கள்.

மோசே தன்னுடைய கனத்திலும், அதிகாரத்திலும் கொஞ்சத்தை யோசுவாவிற்குக் கொடுக்க வேண்டும். இதன் மூலமாக யோசுவா மோசேயின் நேரடி மேற்பார்வையில் இருக்கிறார் என்பதை இஸ்ரவேல் புத்திரர்கள் புரிந்து கொள்வார்கள். மேலும் மோசேயின் மரணத்திற்குப் பின்பு, ஜனங்கள் மோசேயை தங்கள் தலைவராக அங்கிகரிப்பார்கள்.

யோசுவா ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்கவேண்டும். யோசுவாவின் நிமித்தம், அந்த ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்க வேண்டும் (எண் 27:21).

யோசுவா ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்க வேண்டும். அதிகாரத்தைப் பொறுத்தளவில், யோசுவா மோசேக்குக் கீழ்ப்பட்டு இருக்கிறார். மோசே பிரதான ஆசாரியனுக்கும் மேன்மையானவர். மோசேயே முதலாவது ஆசாரியர்.

சீனாய் மலையில் கர்த்தருடைய பிரமாணங்கள் அனைத்தையும் மோசேயே பெற்றுக் கொண்டார். தேவனோடு நேரடியாக ஐக்கியம் கொண்டிருந்த அனுபவங்கள் மோசேக்கு மட்டுமே உள்ளது. இதுபோன்ற அனுபவம் யோசுவாவிற்கோ, இஸ்ரவேலின் வேறு எந்த தலைவருக்கோ கிடைக்கவில்லை. இப்போது இஸ்ரவேலின் தலைவர் தேவனுடைய ஆலோசனையைப் பிரதான ஆசாரியர் மூலமாகக் கேட்க வேண்டும். பிரதான ஆசாரியரிடத்தில் மட்டுமே ஊரீமும், தும்மீமும் உள்ளன. கிபியோனின் குடிகளைப் பொறுத்தளவில் யோசுவா பிரதான ஆசாரியனின் ஆலோசனையைக் கேட்காமல், வஞ்சிக்கப்படுகிறார் (யோசு 9).

யோசுவா தேவஆவியினால் நிரம்பியிருக்கிறார். யோசுவாவுக்கு மோசேயின் கனத்தில் கொஞ்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் யோசுவா தேவனுடைய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளாமல் ஒன்றையும் செய்யக்கூடாது. அவர் தன்னுடைய சுயபுத்தியின்மீதோ, சுயஆலோசனையின்மீதோ சார்ந்திருக்கக் கூடாது. யோசுவா கர்த்தருடைய சந்நிதானத்தில் வந்து, ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர்மீது தேவனுடைய தெய்வீக ஆளுகை நடைபெறுகிறது. கர்த்தரே அவர்கள்மீது தலைவர்களை நியமிக்கிறார். அந்தத் தலைவர்கள் தங்களுடைய சுயசித்தத்தின்படி இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்யாமல், கர்த்தருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு, அவருடைய சித்தத்தின் பிரகாரமாக ஆளுகை செய்யவேண்டும். அவர்கள் கர்த்தருக்காக, இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்யவேண்டும்.

இஸ்ரவேலின் ராஜ்யத்திற்குக் கர்த்தரே ராஜாவாக இருக்கிறார். அவர் அதரிசனமான ராஜா. தம்முடைய ஜனங்களை வழிநடத்துவதற்கு அவர் சில தலைவர்களைத் தெரிந்தெடுக்கிறார். இஸ்ரவேலின் ராஜ்யம் தெய்வீக ராஜ்யமாக இருக்கிறது. தெய்வீக ராஜ்யத்தில் ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, நீதியாக ஜீவிப்பார்கள். அவர்களுடைய ஜீவியங்களில் கர்த்தர் அற்புதங்களையும், ஜெயங்களையும் கட்டளையிடுவார்.

இஸ்ரவேல் புத்திரர் மற்ற தேசங்களைப் போல தங்களுக்கும் ராஜா வேண்டுமென்று கேட்பார்களென்றால், இவர்களும் மற்ற தேசங்களைப்போலவே அழிந்துபோவார்கள். தேவனை மறக்கிறவர்களுக்கு அழிவு உண்டாகும். ஜனங்கள் மறுபடியும் கர்த்தரிடத்தில் வரும்போது, தெய்வீக ராஜ்யம் புதுப்பிக்கப்படும். தேவனுடைய ராஜ்யம் நித்தியமானது.

யோசுவா கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்டு, அவருடைய கட்டளையின்படியே, யோசுவாவும் யோசுவாவோடேகூட இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் போகவும் அவருடைய கட்டளையின்படியே வரவும் வேண்டும் (எண் 27:21).

மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே யோசுவாவை அழைத்துக்கொண்டு போய், அவரை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்துகிறார். மோசே யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே அவருக்குக் கட்டளைகொடுக்கிறார் (எண் 27:22,23).

மோசே யோசுவாவை மிகுந்த சந்தோஷத்தோடு பிரதிஷ்டைபண்ணுகிறார். யோசுவா இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராக பிரதிஷ்டைபண்ணப்படுவதினால், மோசேயின் முக்கியத்துவம் குறைந்துபோகும். மோசேயின் கனத்தில் கொஞ்சம் யோசுவாவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மோசே தன்னுடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டு, தன்னுடைய கடமையிலிருந்து ஓய்வுபெற்றதுபோல இனிமேல் விலகியிருக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே மோசேயின் கனமும், மேன்மையும், முக்கியத்துவம் குறைந்துபோனதுபோல இருக்கும்.

மோசே ஏற்கெனவே எலெயாசாரை பிரதான ஆசாரியராக பிரதிஷ்டைபண்ணியிருக்கிறார். இதன்பின்பு வேறொரு கோத்திரத்தைச் சேர்ந்த யோசுவாவை இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராக பிரதிஷ்டைபண்ணுகிறார். மோசேக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் மோசே தன்னுடைய சொந்தப்பிள்ளைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராக நியமிக்கவில்லை. அவர்கள் சாதாரண லேவியர்களாக, ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைகளை செய்கிறார்கள்.

மோசே கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறார். தன்னுடைய சொந்தப்பிள்ளைகள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தலைவராக வரவேண்டும் என்னும் விருப்பம் மோசேயின் மனதில் இருந்திருக்கலாம். ஆனாலும் மோசே தன்னுடைய சொந்த விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, யோசுவாவை இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராக பிரதிஷ்டைபண்ணுகிறார். தன்னுடைய சொந்தக்குடும்பம் செழித்திருக்கவேண்டும் என்னும் விருப்பத்தைவிட, இஸ்ரவேல் சபையார் செழித்திருக்கவேண்டும் என்னும் விருப்பமும், கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்னும் வாஞ்சையும், கர்த்தருடைய நாமம் உயர்ந்திருக்கவேண்டும் என்னும் விருப்பமும் மோசேயின் மனதில் அதிகமாயிருக்கிறது.

தான் மரிப்பதற்கு ஆயத்தமாகும்போது மோசே செய்த காரியங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. புதிய தலைவருக்காக ஜெபிக்கிறார். *(எண் 27:16-17)*

2. யோசுவாவைப் பிரதிஷ்டை பண்ணுகிறார். *(எண் 27: 18-23; உபா 31:7-8,14-15; உபா 34:9)*

3. இஸ்ரவேல் புத்திரருக்கு இறுதிக் கட்டளைகளைக் கொடுக்கிறார். *(எண் 28:1-30:16 ; எண் 35:1-36:13)*

4. தேவனுடைய கட்டளைப் பிரகாரம் மீதியானியரை அழிக்கிறார். *(எண் 25:16-18 ; எண் 31:1-54)*

5. யோர்தானின் கிழக்கு பகுதியில் இஸ்ரவேல் புத்திரரில் சிலரைக் குடியமர்த்துகிறார். *(எண் 32:1-42)*

6. எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசம் வரையிலும் இஸ்ரவேல் புத்திரர்கள் மேற்கொண்ட பிரயாணங்களின் வரலாற்றை எழுதுகிறார். *(எண் 33:1-50)*

7. வாக்குத்தத்த தேசத்திற்குள் மற்றவர்கள் பிரவேசிப்பதற்கு ஆயத்தம் பண்ணுகிறார். *(எண் 33:51-34:29)*

8. உபாகமம் புஸ்தகத்தை எழுதுகிறார். இந்தப் புஸ்தகத்தில் இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் 38 வருஷங்களாக அலைந்து திரிந்த சம்பவங்கள், மோசேயின் பிரமாணங்களில் மறுபடியும் கூறப்பட்ட பல சம்பவங்கள், மோசேயின் இறுதி வார்த்தைகள், ஆலோசனைகள், கட்டளைகள், தீர்க்கதரிசனங்கள், எச்சரிப்புக்கள், இஸ்ரவேலருக்கு ஆசீர்வாதங்கள், மோசேயின் கடைசிப் பாடல் ஆகியவை அடங்கியுள்ளன *(எண் 1:1-உபா 34:12).*

28 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் எண்ணித்தொகையேற்றப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்குரிய சுதந்தரத்தை அவர்களுக்கு பங்கிட்டு கொடுக்கவேண்டிய பிரமாணங்களை கர்த்தர் சொல்லியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு யோசுவா புதிய தலைவராக ஏற்படுத்தப்பட்டு, அவர் பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறார்.

இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, அவர்கள் செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றியும், அவர்கள் கர்த்தரை ஆராதிக்க வேண்டிய முறைமைகளைப்பற்றியும், அவர்கள் ஆசரிக்கவேண்டிய கர்த்தருடைய நியமங்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அவர்கள் தங்களோடு தங்களுடைய உடமைகளை எடுத்துச் செல்லும், கர்த்தருடைய உபதேசங்களையும் எடுத்துச் செல்லவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்தில் பிரவேசித்த பின்பு, கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய பிரமாணங்களையும், கட்டளைகளையும், நியமங்களையும் மறந்துவிடக்கூடாது. அவர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு அநேக யுத்தங்களை செய்யவேண்டியது வரும். அவர்கள் யுத்தத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும், கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதிலும் கவனமாயிருக்கவேண்டும் (எண் 28:1,2).

இஸ்ரவேல் புத்திரர் செலுத்தவேண்டிய பலிகளைப்பற்றிய பிரமாணம் அவர்களுக்கு ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிரமாணங்கள் இப்போது இந்த அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் செலுத்தவேண்டிய அன்றாட பலிகள் (எண் 28:3-8). ஒவ்வொரு வாரமும் செலுத்த வேண்டிய பலிகள் (எண் 28:9,10). ஒவ்வொரு மாதமும் செலுத்தவேண்டிய பலிகள் (எண் 28:11-15). இஸ்ரவேல் ஜனத்தார் ஒவ்வொரு வருஷமும் செலுத்த வேண்டிய பலிகள். பஸ்கா பண்டிகையின்போது செலுத்தவேண்டிய பலிகள் (எண் 28:16-25). பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது செலுத்தவேண்டிய பலிகள் (எண் 28:26-31).

இஸ்ரவேல் புத்திரர் ஏழாவது மாதத்தில் செலுத்தவேண்டிய பலிகளைப்பற்றி இதற்கு அடுத்தஅதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்றாட பலி
எண் 28:1-8

எண் 28:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 28:2. எனக்குச் சுகந்தவாசனையாக, தகனபலிகளுக்கு அடுத்த காணிக்கையையும், அப்பத்தையும், குறித்தகாலத்தில் எனக்குச் செலுத்தும்படிக்குக் கவனமாயிருக்கக் கடவீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடு.

எண் 28:3. மேலும் நீ அவர்களை நோக்கி: நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய தகனபலி என்னவென்றால்: நித்திய சர்வாங்கதகனபலியாக நாடோறும் ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிடவேண்டும்.

எண் 28:4. காலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் மாலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் பலியிட்டு,

எண் 28:5. போஜனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கானதும் இடித்துப்பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 28:6. இது சீனாய் மலையிலே கட்டளையிடப்பட்ட நித்திய சர்வாங்க தகனபலி; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான தகனபலி.

எண் 28:7. காற்படி திராட்சரசம் ஒரு ஆட்டுக்குட்டிக்கு அடுத்த பானபலி; பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு அந்த இரசம் பானபலியாக வார்க்கப்படக்கடவது.

எண் 28:8. காலையின் போஜனபலிக்கும் அதின் பானபலிக்கும் ஒப்பாகவே மாலையில் மற்ற ஆட்டுக்குட்டியையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகச் செலுத்தக்கடவீர்கள்.

கர்த்தருக்கு செலுத்தவேண்டிய பலிகளைப்பற்றி இந்த அதிகாரத்தில் பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு பலிகளையும் காணிக்கைகளையும் குறித்த காலத்திலே கொண்டு வரவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "எனக்குச் சுகந்தவாசனையாக, தகனபலிகளுக்கு அடுத்த காணிக்கையையும், அப்பத்தையும், குறித்தகாலத்தில் எனக்குச் செலுத்தும்படிக்குக் கவனமாயிருக்கக் கடவீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடு" (எண் 28:1,2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பலிகளைப்பற்றிய பிரமாணத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். அந்தப் பிரமாணங்களை இங்கு மறுபடியுமாய்ச் சொல்லுவது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தர் இதற்கு முன்பு பலிகள் சம்பந்தமான தம்முடைய பிரமாணத்தைப்பற்றிச் சொன்னபோது, அந்தப் பிரமாணத்தை தங்கள் செவிகளால் கேட்ட இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் இப்போது உயிரோடில்லை. இப்போது உயிரோடிருக்கிறவர்களில் அநேகர், அந்தப் பிரமாணம் இதற்கு முன்பு சொல்லப்பட்டபோது, இன்னும் பிறக்கவில்லை. இவர்கள் எல்லோரும் புதிய சந்ததியாயிருக்கிறார்கள்.

யுத்தத்திற்கு புறப்படத்தக்க இஸ்ரவேல் புத்திரர் எல்லாம் எண்ணித்தொகையேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்தை சுதந்தரிக்கப் போகிறார்கள். இதற்காக அவர்கள் யுத்தம்பண்ண வேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் யுத்தக்காரியங்களில் தீவிரமாய் ஈடுபட்டிருக்கும்போது, கர்த்தரையும், கர்த்தருடைய பிரமாணத்தையும் மறந்துவிடக்கூடாது. தாங்கள் யுத்த சம்பந்தமான காரியங்களில் மும்முரமாகயிருப்பதினால், கர்த்தருக்கு பலிகளை செலுத்த வேண்டியதில்லை என்று நினைத்துவிடக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் சமாதான காலத்திலும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். அவர்கள் யுத்த காலத்திலும் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும், கட்டளைக்கும், நியமத்திற்கும் கீழ்ப்படியவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, தங்கள் தேவனாகிய கர்த்தரோடு சமாதானமாயிருக்கவேண்டும். அப்போதுதான் சத்துருக்களுக்கு விரோதமான யுத்தத்தில், கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைக்கும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதவர்களால், அவரோடு சமாதானமாயிருக்க முடியாது.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். இந்த தேசம், கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு வாக்குப்பண்ணியிருக்கிற தேசம். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தின் நன்மைகளை அனுபவிக்கப்போகிறார்கள். அவர்கள் அந்த தேசத்தின் விளைச்சலை திருப்தியாய்ப் புசிக்கப்போகிறார்கள். அவர்கள் கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்களினால் தங்களுக்கு விருந்து போஜனம் ஆயத்தம்பண்ணப்போகிறார்கள், அப்போது தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு, அப்பத்தைப் படைக்க மறந்துவிடக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் தங்களைப் போஷித்துக்கொள்ளும்போது, கர்த்தருக்கும் போஜனபலியை செலுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றி கர்த்தர் இந்த அதிகாரத்தில் விரிவாகச் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு அன்றாட பலிகளையும் செலுத்தவேண்டும். ஒவ்வொரு வாரமும் ஓய்வுநாளின் போதும் பலிகளை செலுத்தவேண்டும். ஒவ்வொரு மாதமும் அவர்கள் பலிகளை செலுத்தவேண்டும். ஒவ்வொரு வருஷமும் அவர்கள் ஆசரிக்கும் பண்டிகை நாட்களிலும் பலிகளை செலுத்தவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் அன்றாடம் செலுத்த வேண்டிய நித்திய சர்வாங்க தகனபலியைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய தகனபலி என்னவென்றால், "நித்திய சர்வாங்கதகனபலியாக நாடோறும் ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிடவேண்டும். காலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் மாலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் பலியிடவேண்டும் (எண் 28:3,4).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு நித்திய சர்வாங்க தகனபலியை செலுத்தும்போது, அதோடு போஜனபலியையும் செலுத்தவேண்டும். "போஜனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கானதும் இடித்துப்பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும் செலுத்தக்கடவீர்கள்" (எண் 28:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்

இது சீனாய் மலையிலே கட்டளையிடப்பட்ட நித்திய சர்வாங்க தகனபலி; இது கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான தகனபலி (எண் 28:6).

நித்திய சர்வாங்க தகனபலியோடு, போஜனபலி செலுத்தப்படுகிறது. அதோடு கர்த்தருக்கு பானபலியும் செலுத்தப்படுகிறது. "காற்படி திராட்சரசம் ஒரு ஆட்டுக்குட்டிக்கு அடுத்த பானபலி; பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு அந்த இரசம் பானபலியாக வார்க்கப்படக்கடவது" (எண் 28:7) என்றும்,

"காலையின் போஜனபலிக்கும் அதின் பானபலிக்கும் ஒப்பாகவே மாலையில் மற்ற ஆட்டுக்குட்டியையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகச் செலுத்தக்கடவீர்கள்" (எண் 28:8) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பரிசுத்த ஸ்தலம் என்பது வெளிப் பிராகாரத்தைக் குறிக்கும். இரசம் அன்றாடம் பானபலியாக வார்க்கப்படுகிறது. சுகந்த வாசனைக்கான தகனபலியின்மீதும், வெண்கல பலிபீடத்தைச் சுற்றிலும் இரசம் பானபலியாக வார்க்கப்படுகிறது. இது இரத்தம் சிந்தப்படுவதற்கு ஒரு அடையாளம். முழு உலகத்தின் பாவங்களையும் நீக்குவதற்கு இரத்தம் சிந்தப்பட வேண்டும். புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய பந்தியில் பரிமாறப்படும் இரசம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கு அடையாளமாகும் (மத் 26:28; லூக்கா 22:20; 2கொரி 10:16; 2கொரி 11:23-30).

இரசம் என்பதற்கான எபிரெய வார்த்தை "சேகர்". இதற்கு மதுபானம் என்று பொருள். இந்த மதுபானம் வாற்கோதுமை, தேன், பேரீச்சம்பழம் ஆகியவற்றிலிருந்து செய்யப்படுகிறது. வனாந்தரத்தில் திராட்சப்பழங்கள் கிடைப்பதில்லை. ஆகையினால் திராட்சைப் பழரசத்திற்குப் பதிலாக இஸ்ரவேல் புத்திரர் இந்த புதிய ரசத்தைப் பானபலியாக வார்த்திருக்க வேண்டும்.

அன்றாடம் மிருகஜீவன்களைப் பலியிடும்போது அதோடு போஜனபலியும், பானபலியும் செலுத்த வேண்டும். ஜனங்கள் தங்களுடைய சம்பத்துக்களையும், தங்களுடைய உழைப்பின் கனிகளையும் கர்த்தருக்கு அர்ப்பணம் செய்வதற்கு இது அடையாளம். அத்துடன் இஸ்ரவேல் புத்திரர் தங்களையும் அர்ப்பணம் செய்கிறார்கள்.

நாடோறும் செலுத்த வேண்டிய பலிகளைப் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. கர்த்தருக்குச் சுகந்தவாசனையாக, தகனபலிகளுக்கு அடுத்த காணிக்கையையும், அப்பத்தையும், குறித்த காலத்தில் அவருக்குச் செலுத்தும்படிக்குக் கவனமாயிருக்க வேண்டும் (எண் 28:2).

2. நித்திய சர்வாங்கதகனபலியாக நாடோறும் ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிடவேண்டும் (எண் 28:3,8).

3. காலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் மாலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் பலியிடவேண்டும் (எண் 28:4,8).

4. பாஜனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கானதும் இடித்துப்பிழிந்த காற்படிஎண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும் செலுத்த வேண்டும் (எண் 28:5).

5. காற்படி திராட்சரசம் ஒரு ஆட்டுக்குட்டிக்கு அடுத்த பானபலியாகச் செலுத்த வேண்டும் (எண் 28:7).

6. பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு அந்த இரசம் பானபலியாக வார்க்கப்பட வேண்டும்.

ஓய்வுநாள் பலி
எண் 28:9,10

எண் 28:9. ஓய்வுநாளிலோ போஜனபலிக்காக ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும், பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவையும், அதின் பானபலியையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 28:10. நித்தமும் செலுத்தும் சர்வாங்க தகனபலியும் அதின் பானபலியும்அன்றி ஒவ்வொரு ஓய்வுநாளிலும் இந்தச் சர்வாங்க தகனபலியும் செலுத்தப்படவேண்டும்.

பரிசுத்த வேதாகமத்தில் ஓய்வுநாட்களும் மாதப்பிறப்புக்களும் பொதுவாக சேர்த்தே சொல்லப்படும். இவ்விரண்டுமே இஸ்ரவேல் சபையாருக்கு பரிசுத்தமான நாட்களாயிருக்கிறது. ஓய்வுநாளில் செலுத்தவேண்டிய பலிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு நாளும் செலுத்த வேண்டிய அன்றாட பலிகளோடுகூட, ஓய்வுநாளிலே விசேஷித்த பலிகளையும் செலுத்தவேண்டும். கர்த்தர் மோசேயை நோக்கி, "ஓய்வுநாளிலோ போஜனபலிக்காக ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும், பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவையும், அதின் பானபலியையும் செலுத்தக்கடவீர்கள். நித்தமும் செலுத்தும் சர்வாங்க தகனபலியும் அதின் பானபலியும்அன்றி ஒவ்வொரு ஓய்வுநாளிலும் இந்தச் சர்வாங்க தகனபலியும் செலுத்தப்படவேண்டும் (எண் 28:9,10) என்று சொல்லுகிறார்.

வார ஓய்வுநாளில் செலுத்த வேண்டிய காணிக்கைகளைப்பற்றிய விவரம் வருமாறு:

1. ஒய்வுநாளிலே போஜனபலிக்காக ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக் குட்டிகளைச் செலுத்த வேண்டும். அத்துடன் நித்தமும் செலுத்தும் சர்வாங்க தகனபலியாக இரண்டு ஆட்டுக் குட்டிகளையும் செலுத்த வேண்டும் (எண் 28:9-10).

2. பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவைச் செலுத்த வேண்டும். (எண் 28:5,9; எண் 15:4-5; எண் 29:4).

3. அதின் பானபலியையும் செலுத்த வேண்டும்.

மாதப்பிறப்புகள்
எண் 28:11-15

எண் 28:11. உங்கள் மாதப்பிறப்புகளில் நீங்கள் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 28:12. போஜனபலியாக ஒவ்வொரு காளைக்குப் பத்தில் மூன்றுபங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவையும், போஜனபலியாக ஒரு ஆட்டுக்கடாவுக்குப் பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவையும்,

எண் 28:13. போஜனபலியாக ஒவ்வொரு ஆட்டுக்குட்டிக்குப் பத்தில் ஒரு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாகச் செலுத்தக்கடவீர்கள்.

எண் 28:14. அவைகளுக்கேற்ற பானபலிகள் திராட்சரசத்தில் காளைக்கு அரைப்படியும், ஆட்டுக்கடாவுக்குப் படியில் மூன்றில் ஒரு பங்கும், ஆட்டுக்குட்டிக்குக் காற்படி ரசமுமாயிருக்க வேண்டும்; இது வருஷமுழுவதும் மாதந்தோறும் செலுத்தப்பட வேண்டிய சர்வாங்க தகனபலி.

எண் 28:15. நித்தமும் இடப்படும் சர்வாங்க தகனபலியும் அதின் பானபலியும் அன்றி, பாவநிவாரண பலியாகக் கர்த்தருக்கு ஒரு வெள்ளாட்டுக்கடாவும் செலுத்தப்படவேண்டும்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சிருஷ்டிப்பின் கிரியைகளை நினைவுகூர்ந்து ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள்.

கர்த்தர் பூமியை சிருஷ்டித்தது மாத்திரமல்ல, சர்வஜீவராசிகளுக்கும் அவர் தம்முடைய தெய்வீக பராமரிப்புக்களையும் கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்புக்களை நினைவுகூர்ந்து மாதப்பிறப்புகளை ஆசரிக்கிறார்கள்.

கர்த்தர் வானத்திலே சந்திரனையும், சூரியனையும், நட்சத்திரங்களையும் சிருஷ்டித்தார். கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக அவையெல்லாம் இயங்குகிறது. இதனால் பூமியிலே பருவகாலங்களும், சீதோஷ்ண நிலைகளும் மாற்றமடைகிறது. பூமியிலே மழை பெய்கிறது. இவையெல்லாமே கர்த்தருடைய தெய்வீக பராமரிப்புக்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பராமரிப்பை நினைவுகூர்ந்து, அவருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கும் வண்ணமாக, மாதப்பிறப்புகளிலே கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "உங்கள் மாதப்பிறப்புகளில் நீங்கள் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தக்கடவீர்கள்" (எண் 28:11) என்றும்,

போஜனபலியாக ஒவ்வொரு காளைக்குப் பத்தில் மூன்றுபங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவையும், போஜனபலியாக ஒரு ஆட்டுக்கடாவுக்குப் பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவையும், போஜனபலியாக ஒவ்வொரு ஆட்டுக்குட்டிக்குப் பத்தில் ஒரு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாகச் செலுத்தக்கடவீர்கள் (எண் 28:12,13) என்றும்,

அவைகளுக்கேற்ற பானபலிகள் திராட்சரசத்தில் காளைக்கு அரைப்படியும், ஆட்டுக்கடாவுக்குப் படியில் மூன்றில் ஒரு பங்கும், ஆட்டுக்குட்டிக்குக் காற்படி ரசமுமாயிருக்க வேண்டும்; இது வருஷமுழுவதும் மாதந்தோறும் செலுத்தப்பட வேண்டிய சர்வாங்க தகனபலி (எண் 28:14) என்றும்,

நித்தமும் இடப்படும் சர்வாங்க தகனபலியும் அதின் பானபலியும் அன்றி, பாவநிவாரண பலியாகக் கர்த்தருக்கு ஒரு வெள்ளாட்டுக்கடாவும் செலுத்தப்படவேண்டும் (எண் 28:15) என்றும் சொல்லுகிறார்.

மாதப்பிறப்புக்களில் செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றிய விவரம் வருமாறு :

1. மாதப்பிறப்புகளில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும். (எண் 28:11,14).

2. போஜனபலியாக ஒவ்வொரு காளைக்குப் பத்தில் மூன்றுபங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லிய மாவை செலுத்தவேண்டும் (எண் 28:12; எண் 15:9).

3. போஜனபலியாக ஒரு ஆட்டுக்கடாவுக்குப் பத்தில் இரண்டு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவை செலுத்தவேண்டும் (எண் 28:12; எண் 15:6).

4. போஜனபலியாக ஒவ்வொரு ஆட்டுக் குட்டிக்குப் பத்தில் ஒரு பங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவை செலுத்தவேண்டும் (எண் 28:13; எண் 15:4-5).

5. பானபலியாக திராட்சரசத்தில் காளைக்கு அரைப்படி செலுத்தவேண்டும் (எண் 28:14; எண் 15:9-10).

6. பானபலியாக ஆட்டுக்கடாவுக்குப் படியில் மூன்றில் ஒரு பங்கு செலுத்தவேண்டும் (எண் 28:14; எண் 15:6-7).

7. பானபலியாக ஆட்டுக்குட்டிக்குக் காற்படி ரசமுமாயிருக்க வேண்டும் (எண் 28:14; எண் 15:4-5).

8. போஜனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கானதும் இடித்துப்பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும், பானபலியாக காற்படி திராட்சரசத்தையும், பாவநிவாரண பலியாகக் கர்த்தருக்கு ஒரு வெள்ளாட்டுக் கடாவும் செலுத்தப்படவேண்டும் (எண் 28:5,7,15; எண் 15:4-5).

பஸ்கா பலிகள்
எண் 28:16-25

எண் 28:16. முதலாம் மாதம் பதினாலாம் தேதி கர்த்தருக்கு உரிய பஸ்கா.

எண் 28:17. அந்த மாதம் பதினைந்தாம் தேதி பண்டிகைநாள்; ஏழுநாளளவும் புளிப்பில்லாத அப்பம் புசிக்க வேண்டும்.

எண் 28:18. முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும்; அன்றைத்தினம் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

எண் 28:19. அப்பொழுது நீங்கள் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 28:20. அவைகளுக்கேற்ற போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும்,

எண் 28:21. ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும்,

எண் 28:22. உங்கள் பாவநிவிர்த்திக்கென்று பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 28:23. காலையிலே நித்தமும் செலுத்தும் சர்வாங்க தகனபலியையும் அன்றி இவைகளையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 28:24. இந்தப்பிரகாரம் ஏழுநாளளவும் நாடோறும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி செலுத்தக்கடவீர்கள்; நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இதையும் செலுத்த வேண்டும்.

எண் 28:25. ஏழாம் நாளிலே பரிசுத்த சபைகூடுதல் இருக்கவேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

கர்த்தர் பஸ்காவின்போது செலுத்த வேண்டிய பலிகளை நியமனம் பண்ணுகிறார். பஸ்கா பலிகளைப்பற்றி கர்த்தர் தம்முடைய நியமங்களை ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

முதலாம் மாதம் பதினாலாம் தேதி கர்த்தருக்கு உரிய பஸ்கா. அந்த மாதம் பதினைந்தாம் தேதி பண்டிகைநாள்; ஏழுநாளளவும் புளிப்பில்லாத அப்பம் புசிக்க வேண்டும் (எண் 28:16,17) என்பது பஸ்காவைப்பற்றிய கர்த்தருடைய நியமம் ஆகும்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஆறு பண்டிகைகளை வருஷாந்திர பண்டிகைகளாக ஆசரிக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு :

1. பஸ்கா பண்டிகை (எண் 28:16; யாத் 12:1-39; லேவி 23:5-14)

2. புளிப்பில்லா அப்பப்பண்டிகை (எண் 28:17-25; யாத் 12:8,15-20; லேவி 23:6-8)

3. பெந்தெகொஸ்தே தினத்தில் முதற் பலன்களின் பண்டிகை (எண் 28:26-31)

4. எக்காளங்களின் பண்டிகை (எண் 29:1-6; லேவி 23:23-25)

5. மகா பாவநிவாரண நாளின் பண்டிகை (எண் 29:7-11; லேவி 23:26-32)

6. கூடாரங்களின் பண்டிகை (எண் 29:12-40; லேவி 23:33-44)

பஸ்கா பண்டிகை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது. இந்த ஏழு நாட்களில் முதலாவது நாளும், கடைசி நாளும், ஓய்வுநாட்களாக பரிசுத்தம்பண்ணப்பட்டிருக்கிறது. இது பரிசுத்தமான ஓய்வுநாள். அந்த நாளில் பரிசுத்தமான சபை கூடுதல் இருக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். இது கர்த்தருடைய கிருபை. கர்த்தர் தங்களுக்கு கொடுத்த இரட்சிப்பை இஸ்ரவேல் புத்திரர் எக்காலத்திலும் நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூரவேண்டும். அதற்கு அடையாளமாக அவர்கள் பஸ்கா பண்டிகை நாளில் கர்த்தருக்கு விசேஷித்த பலிகளை செலுத்துகிறார்கள்.

பஸ்கா பண்டிகை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கப்படும்போது, இந்த ஏழுநாட்களில் முதலாவது நாளும் கடைசி நாளும், கர்த்தருக்கு ஓய்வுநாட்களாகயிருப்பதினால், அந்த நாட்களிலே விசேஷித்த பலிகள் செலுத்தப்படுகிறது. ஓய்வுநாளின்போது செலுத்தவேண்டிய பலிகளைப்பற்றி கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும்; அன்றைத்தினம் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. அப்பொழுது நீங்கள் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், அவைகளுக்கேற்ற போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும், உங்கள் பாவநிவிர்த்திக்கென்று பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்" (எண் 28:18-22) என்று சொல்லுகிறார்.

இந்தப் பலிகளெல்லாம் ஓய்வுநாளில் செலுத்தப்படவேண்டிய பலிகளாகும். இந்தப் பலிகளோடு சேர்த்து காலையிலே நித்தமும் செலுத்தும் சர்வாங்க தகனபலியையும் செலுத்தவேண்டும் (எண் 28:23).

இந்தப்பிரகாரம் ஏழுநாளளவும் நாடோறும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி செலுத்த வேண்டும்; நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இதையும் செலுத்த வேண்டும் (எண் 28:24).

ஏழாம் நாளிலே பரிசுத்த சபைகூடுதல் இருக்கவேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. முதலாம் மாதம் பதினாலாம் தேதியில் புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆரம்பமாகும். அதை ஏழுநாட்களுக்கு ஆசரிக்க வேண்டும். (எண் 28:16-17).

2. அந்த மாதம் பதினைந்தாம் தேதி பண்டிகைநாள்; ஏழுநாளளவும் புளிப்பில்லாத அப்பம் புசிக்க வேண்டும் (எண் 28:17; யாத் 12:8,15-20; லேவி 23:6-8).

3. முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும்; அன்றைத்தினம் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:18; லேவி 23:7).

4. கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 28:19).

5. போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும் செலுத்தவேண்டும் (எண் 28:20-21; எண் 15:2-12).

6. பாவநிவிர்த்திக்கென்று பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும். (எண் 28:22; எண் 28:5,7,9,14-15; எண் 15:4-5).

7. நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, போஜனபலியையும் செலுத்த வேண்டும் (எண் 28:5-8,24).

8. இந்தப்பிரகாரம் ஏழுநாளளவும் நாடோறும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி செலுத்த வேண்டும்; நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இதையும் செலுத்த வேண்டும் (எண் 28:24).

9. ஏழாம் நாளிலே பரிசுத்த சபைகூடுதல் இருக்கவேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:25).

மெல்லிய மாவு செலுத்தப்பட்ட சம்பவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. முதலாம் மாதம் பதினாலாம் தேதியில் புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆரம்பமாகும். அதை ஏழுநாட்களுக்கு ஆசரிக்க வேண்டும். (எண் 28:16-17).

2. அந்த மாதம் பதினைந்தாம் தேதி பண்டிகைநாள்; ஏழுநாளளவும் புளிப்பில்லாத அப்பம் புசிக்க வேண்டும் (எண் 28:17; யாத் 12:8,15-20; லேவி 23:6-8).

3. முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும்; அன்றைத்தினம் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:18; லேவி 23:7).

4. கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 28:19).

5. போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும் செலுத்தவேண்டும் (எண் 28:20-21; எண் 15:2-12).

6. பாவநிவிர்த்திக்கென்று பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும். (எண் 28:22; எண் 28:5,7,9,14-15; எண் 15:4-5).

7. நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, போஜனபலியையும் செலுத்த வேண்டும் (எண் 28:5-8,24).

8. இந்தப்பிரகாரம் ஏழுநாளளவும் நாடோறும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலி செலுத்த வேண்டும்; நித்தமும் செலுத்தப்படும் சர்வாங்க தகனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இதையும் செலுத்த வேண்டும் (எண் 28:24).

9. ஏழாம் நாளிலே பரிசுத்த சபைகூடுதல் இருக்கவேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:25).

மெல்லிய மாவு செலுத்தப்பட்ட சம்பவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஒவ்வொரு காளையோடு - பத்தில் மூன்று பங்கு (எண் 28:20,28; எண் 15:9; எண் 29:3,9,14)
2. ஒவ்வொரு ஆட்டுக்கடாவோடு - பத்தில் இரண்டு பங்கு (எண் 28:20,28; எண் 15:6; எண் 29:3,9,14)
3. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியோடு - பத்தில் ஒரு பங்கு (எண் 28:4-5,9,13,21,29; எண் 29:4; யாத் 29:40; லேவி 14:10,21).
4. ஒவ்வொரு வெள்ளாட்டுக்கடாவோடு - பத்தில் ஒரு பங்கு (எண் 28:22; எண் 15:3-4)

இவைதவிர, அடைகள், அதிரசங்கள் ஆகியவையும் மாவினால் செய்யப்பட்டு கர்த்தருக்குப் படைக்கப்பட்டது. (யாத் 29:2; லேவி 2:1-16; லேவி 5:11; லேவி 6:15,20; லேவி 7:12; லேவி 24:5; எண் 6:15; எண் 7:13).

பானபலி செலுத்தப்பட்ட சம்பவங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ஒவ்வொரு காளையோடு - அரைப்படி (எண் 28:14; எண் 15:9-10)
2. ஒவ்வொரு ஆட்டுக்கடாவோடு - படியில் மூன்றில் ஒரு பங்கு (எண் 28:14; எண் 15:7)
3. ஒவ்வொரு ஆட்டுக்குட்டியோடு - காற்படியில் ஒரு பங்கு (எண் 28:14; எண் 15:5; யாத் 29:40; லேவி 23:12-13)

முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை எண் 28:26-31

எண் 28:26. அந்த வாரங்களுக்குப் பின் நீங்கள் கர்த்தருக்குப் புதிய போஜனபலியாக முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகைநாளிலும் பரிசுத்த சபைகூடுதல் இருக்க வேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

எண் 28:27. அப்பொழுது நீங்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான ஏழு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 28:28. அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவில் ஒரு காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த ஒரு ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும்,

எண் 28:29. ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும்,

எண் 28:30. உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 28:31. நித்திய சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இவைகளையும் செலுத்தக்கடவீர்கள்; இவைகள் பழுதற்றவைகளாயிருக்க வேண்டும்.

கர்த்தர் பஸ்கா பண்டிகையின்போது செலுத்தவேண்டிய பலிகளை நியமனம் செய்வதோடு, பெந்தெகொஸ்தே பண்டிகையின்போதும் செலுத்த வேண்டிய பலிகளையும் நியமனம்பண்ணுகிறார். இந்த வசனத்தில் பெந்தெகொஸ்தே பண்டிகை என்பது "முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை" என்று அழைக்கப்படுகிறது.

முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகை நாள் என்பது பெந்தெகொஸ்தே நாளுடனும், கோதுமை அறுவடை நாளுடனும் தொடர்புடையது. லேவி 23:10-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் முதற் பலன்களின் நாளுக்கு ஏழு வாரங்களுக்குப் பின்பு வரும்.

"அந்த வாரங்களுக்குப் பின் நீங்கள் கர்த்தருக்குப் புதிய போஜனபலியாக முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகைநாளிலும் பரிசுத்த சபைகூடுதல் இருக்க வேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது" (எண் 28:26) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின்போது அவர்கள் தாங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்துகிறார்கள். இது அவர்களுடைய வெள்ளாண்மையை அறுக்கும் ஆரம்பகாலமாகும்.

"நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச்சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவீர்கள்" (லேவி 23:10).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் தங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தி, ஏழுவாரங்களுக்கு பின்பு, அவர்கள் கர்த்தருக்கு ஒரு புதிய போஜனபலியை படைக்கிறார்கள். இப்போது தங்கள் வெள்ளாண்மையை அறுவடை செய்யும் காலம் அவர்களுக்கு முடிவு பெறுகிறது. இந்தப் பண்டிகை நாள் இஸ்ரவேல் புத்திரருக்கு பெந்தெகொஸ்தே பண்டிகை நாள் என்று அழைக்கப்படுகிறது.

பெந்தேகொஸ்தே நாளில் முதற்கனிகளைச் செலுத்துவது பற்றிய பிராமணத்தின் விவரம் வருமாறு :

1. போஜனபலியாக முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகைநாளில் பரிசுத்த சபைகூடுதல் இருக்க வேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 28:26).

2. கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 28:27).

3. போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவில் ஒரு காளைக்காகப் பத்தில் மூன்று பங்கை செலுத்தவேண்டும் (எண் 28:28-29).

4. பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 28:30; எண் 15:5).

5. நித்திய சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இவைகளையும் செலுத்த வேண்டும். இவைகள் பழுதற்றவைகளாயிருக்க வேண்டும். (எண் 28:20,24,28,31).

பெந்தேகொஸ்தே நாளில் பலியிடப்படும் மிருகஜீவன்களைப் பற்றி லேவி 23:15-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. அந்த நாளில் ஏழு ஆட்டுக்குட்டிகள், ஒரு காளை, இரண்டு ஆட்டுக்கடாக்கள், ஒரு வெள்ளாட்டுக்கடா, சமாதான பலியாக மேலும் இரண்டு ஆட்டுக்குட்டிகள் பலியிடப்படுகிறது. இந்த பலிகளும், எண் 28:27-31 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பலிகளும் பெந்தெகொஸ்தே நாளின் முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகை நாளில் பலியாகச் செலுத்தப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி, பெந்தெகொஸ்தே நாளில், சீஷர்கள்மீது ஊற்றப்பட்டது.

"பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அப் 2:1-4).

இந்த நாளுக்கு பின்பு அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நிரம்பி, ஜனங்கள் மத்தியிலே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணினார்கள். ஆயிரக்கணக்கானோர் இரட்சிக்கப்பட்டார்கள். இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் அறுப்பின் முதற்பலன்களை கர்த்தருக்கு காணிக்கையாக படைத்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தருக்கு முன்பாக படைத்தார்கள்.

பெந்தெகொஸ்தே நாளின்போது கர்த்தருக்கு புதிய போஜனபலியாக முதற்கனிகள் செலுத்தப்படுகிறது. ஆகையினால் இந்தப் பண்டிகை முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது.

புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் முதலாம் நாளிலே பரிசுத்த சபை கூடுதல் இருக்கவேண்டும். அதுபோலவே ஏழாம் நாளிலும் பரிசுத்த சபைகூடுதல் இருக்கவேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது. அந்த வாரங்களுக்குப் பின் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குப் புதிய போஜனபலியாக முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகைநாளிலும் பரிசுத்த சபைகூடுதல் இருக்க வேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு காணிக்கைகளை செலுத்தும்போது, எண்ணெயையும் காணிக்கையாக செலுத்துகிறார்கள். அதன் விவரம் வருமாறு:

1. ஒவ்வொரு காளையோடு - அரைப்படி அல்லது பத்தில் மூன்று பங்கு (எண் 15:8-10)

2. ஒவ்வொரு ஆட்டுக்கடாவோடு - பத்தில் இரண்டு பங்கு அல்லது ஒருபடியில் மூன்றில் ஒரு பங்கு. (எண் 15:6)

3. ஒவ்வொரு ஆட்டுக்குட்டி அல்லது வெள்ளாட்டுக்கடாவோடு - கால்படி மரக்காலில் பத்தில் ஒரு பங்கு. (எண் 15:3-4; எண் 28:5; யாத் 29:40)

கர்த்தருக்கு புதிய போஜனபலியாக முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை நாளில், இஸ்ரவேல் புத்திரர் தமக்கு செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றி கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி :

"நீங்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக இரண்டு காளைகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான ஏழு ஆட்டுக்குட்டிகளையும் (எண் 28:27). அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவில் ஒரு காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த ஒரு ஆட்டுக்கடாவுக்காகப் பத்தில் இரண்டு பங்கையும், (எண் 28:28). ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும், உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்கு ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்" (எண் 28:29,30) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் நித்திய சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, இவைகளையும் செலுத்த வேண்டும்; இவைகள் பழுதற்றவைகளாயிருக்க வேண்டும் (எண் 28:31).

29 அதிகாரம்

கர்த்தருக்கு செலுத்தப்படும் சர்வாங்க தகனபலிகளைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு, ஏழாம் மாதத்தில், மூன்று நாட்கள் மிகவும் விசேஷித்த நாட்களாயிருக்கிறது.

ஏழாம் மாதம் முதல் தேதி, இஸ்ரவேல் புத்திரருக்கு எக்காளம் ஊதும் நாளாகும் (எண் 29:1-6). ஏழாம் மாதம் பத்தாந்தேதி இஸ்ரவேல் புத்திரருக்கு பாவநிவாரண பலிகளை செலுத்தும் நாளாகும் (எண் 29:7-11).

ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி, இஸ்ரவேல் புத்திரர் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கும் நாளாகும். அவர்கள் ஏழுநாள் கர்த்தருக்கு பண்டிகை ஆசரிக்கவேண்டும் (எண் 29:12-38).

கர்த்தர் இந்த அதிகாரத்தின் முடிவில் பொருத்தனைகளையும் உற்சாக பலிகளையும் பற்றிச் சொல்லுகிறார் (எண் 29:39,40).

ஏழாம் மாதம் முதல்தேதி எண் 29:1-6

எண் 29:1. ஏழாம் மாதம் முதல்தேதி பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்கக்கடவது; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; அது உங்களுக்கு எக்காளமூதும் நாளாயிருக்க வேண்டும்.

எண் 29:2. அப்பொழுது நீங்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:3. அவைகளுக்கு அடுத்த போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், ஆட்டுக்கடாவுக்காக இரண்டு பங்கையும்,

எண் 29:4. ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக ஒரு பங்கையும்,

எண் 29:5. உங்கள் பாவநிவிர்த்திக்கான பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தி,

எண் 29:6. மாதப்பிறப்பின் சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும், தினந்தோறும் இடும் சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும், அவைகளின் முறைமைக்கேற்ற பானபலிகளையும் அன்றி, இவைகளையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாகச் செலுத்தக்கடவீர்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு வருஷத்தின் மற்ற மாதங்களை தவிர, ஏழாம் மாதம் மிகவும் பரிசுத்தமான மாதமாகயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட முதலாவது மாதம், வருஷத்தின் ஏழாவது மாதமாயிருக்கிறது.

யூபிலி பற்றிய பிரமாணங்களில், வருஷத்தின் ஏழாவது மாதமே, முதலாவது மாதமாக கணக்கிடப்படுகிறது. ஏழாவது மாதத்தில் கடன்கள் மன்னிக்கப்படும். அப்போது அடிமைப்பட்டிருக்கிறவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வருஷத்தின் ஏழாவது மாதத்தில் ஓய்வாகயிருப்பார்கள். இது அவர்களுடைய அறுவடை காலத்திற்கும், விதைப்பு காலத்திற்கும் நடுவில் வருகிற மாதமாகும். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏழாவது மாதத்தில் விதைப்பு வேலையும் இருக்காது. அறுவடை வேலையும் இருக்காது. அவர்கள் ஓய்வாகயிருப்பார்கள். இந்த ஓய்வுகாலத்திலே, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திலே சபையாகக் கூடிவந்து, பண்டிகைகளை ஆசரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம் மாதம் முதல்தேதி எக்காளம் ஊதும் நாளாகயிருக்கிறது. அவர்களுக்கு இரண்டு வருஷாந்திர பண்டிகைகள் மிகவும் முக்கியமானது. இஸ்ரவேல் புத்திரர் பாவநிவாரண நாளிலே தங்கள் பாவங்களுக்காக வருத்தப்படுவார்கள். அந்நாளில் துக்கத்தோடிருப்பார்கள். அவர்கள் கூடாரப்பண்டிகை நாளின்போது மிகுந்த சந்தோஷத்தோடிருப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு பாவநிவாரண நாள் ஏழாம் மாதம் பத்தாந்தேதியிலும், கூடாரப்பண்டிகையின் நாள் ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதியிலும் வரும். இஸ்ரவேல் ஜனத்தார் இவ்விரண்டு பண்டிகைகளையும் ஆசரிப்பதற்கு முன்பாக, ஏழாம் மாதம் முதல் தேதியிலே எக்காளங்களை ஊதி, கர்த்தருக்கு பலிகளை செலுத்தி, தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள்.

"ஏழாம் மாதம் முதல்தேதி பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்கக்கடவது; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; அது உங்களுக்கு எக்காளமூதும் நாளாயிருக்க வேண்டும்" (எண் 29:1) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதம் முதல்தேதியிலே எக்காளம் ஊதும்போது, அவர்கள் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய பலிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

எக்காளம் ஊதும் நாளிலே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:2).

அவைகளுக்கு அடுத்த போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், ஆட்டுக்கடாவுக்காக இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக ஒரு பங்கையும், அவர்களுடைய பாவநிவிர்த்திக்கான பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:3-5).

இஸ்ரவேல் சபையார் மாதப்பிறப்பின் சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும், தினந்தோறும் இடும் சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும், அவைகளின் முறைமைக்கேற்ற பானபலிகளையும் அன்றி, இவைகளையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாகச் செலுத்தவேண்டும் (எண் 29:6).

எக்காளம் ஊதும் நாளைப்பற்றி கர்த்தர் சொல்லுகிற பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஏழாம் மாதம் முதல்தேதி பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்க வேண்டும்; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; அது உங்களுக்கு எக்காளமூதும் நாளாயிருக்க வேண்டும் (எண் 29:1).

2. கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக் குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:2).

3. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக் குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பான பலிகளையும், நித்திய சர்வாங்க தகன பலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவ நிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:3-4; எண் 28:24,28; எண் 15:3-10; எண் 28:5; யாத் 29:40).

4. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:24,28).

5. மாதப்பிறப்பின் சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும், தினந்தோறும் இடும் சர்வாங்க தகனபலியையும் அதின் போஜனபலியையும், அவைகளின் முறைமைக்கேற்ற பானபலிகளையும் அன்றி, இவைகளையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாகச் செலுத்தவேண்டும் (எண் 29:6).

ஏழாம் மாதம் பத்தாம் தேதி எண் 29:7-11

எண் 29:7. இந்த ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்களுக்குப் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்கக் கடவது; அதிலே நீங்கள் யாதொரு வேலையும் செய்யாமல், உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி,

எண் 29:8. கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:9. அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த ஒரு ஆட்டுக்கடாவுக்காக இரண்டு பங்கையும்,

எண் 29:10. ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும்,

எண் 29:11. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தி, பாவநிவாரணபலியையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, இவைகளையும் செலுத்தக்கடவீர்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏழாம் மாதம் பத்தாம் தேதி பாவநிவாரண நாளாக நியமிக்கப்பட்டிருக்கிறது. லேவி 16-ஆவது அதிகாரத்தில் பாவநிவாரண நாளைப்பற்றிய பிரமாணம் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதம் பத்தாம் தேதியிலே, கர்த்தருக்கு செலுத்தும் அன்றாட பலியோடு, பாவநிவாரண பலியும் செலுத்தவேண்டும்.

ஏழாம் மாதம் பத்தாம் தேதி இஸ்ரவேல் சபையாருக்குப் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்க வேண்டும்; அதிலே அவர்கள் யாதொரு வேலையும் செய்யாமல், தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தவேண்டும் (எண் 29:7).

இஸ்ரவேல் சபையார் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த ஒரு ஆட்டுக்கடாவுக்காக இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தி, பாவநிவாரணபலியையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, இவைகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:8-11).

மகாபாவநிவாரண நாளைப்பற்றி கர்த்தர் சொல்லுகிற பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்களுக்குப் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்க வேண்டும் (எண் 29:7).

2. பரிசுத்தநாளில் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தவேண்டும்.

3. நீங்கள் யாதொரு வேலையும் செய்யாமல் இருக்கவேண்டும்.

4. கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:8).

5. அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த ஒரு ஆட்டுக் கடாவுக்காக இரண்டு பங்கையும், ஏழு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் ஒரு பங்கையும் செலுத்த வேண்டும் (எண் 29:9-10; எண் 28:20; எண் 28:28; எண் 28:24).

6. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதனுடன் போஜனபலியையும் பானபலியையும் செலுத்த வேண்டும் (எண் 29:11; எண் 28:20,24,28).

7. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் செலுத்தி, பாவநிவாரணபலியையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, இவைகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:11).

ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி
எண் 29:12-38

எண் 29:12. ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி உங்களுக்குப் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்கக்கடவது; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது; ஏழுநாள் கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கக்கடவீர்கள்.

எண் 29:13. நீங்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள சர்வாங்க தகனபலியாக பதின்மூன்று காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:14. அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே அந்தப் பதின்மூன்று காளைகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த இரண்டு ஆட்டுக்கடாக்களில் ஒவ்வொன்றிற்காக இரண்டு பங்கையும்,

எண் 29:15. பதினான்கு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக ஒரு பங்கையும்,

எண் 29:16. நித்திய தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 29:17. இரண்டாம் நாளிலே பன்னிரண்டு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:18. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும்,

எண் 29:19. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக் கடவீர்கள்.

எண் 29:20. மூன்றாம் நாளிலே பதினொரு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:21. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும்,

எண் 29:22. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 29:23. நான்காம் நாளிலே பத்துக் காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:24. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும்,

எண் 29:25. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 29:26. ஐந்தாம் நாளிலே ஒன்பது காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:27. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும்,

எண் 29:28. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 29:29. ஆறாம் நாளிலே எட்டுக் காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:30. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும்,

எண் 29:31. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 29:32. ஏழாம் நாளிலே ஏழு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:33. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும்,

எண் 29:34. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்.

எண் 29:35. எட்டாம் நாள் உங்களுக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கக்கடவது; அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

எண் 29:36. அப்பொழுது நீங்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள தகனமான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும்,

எண் 29:37. காளையும் ஆட்டுக்கடாவும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும்,

எண் 29:38. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தக்கடவீர்கள்.

இஸ்ரவேல் சபையார் பாவநிவாரண நாளிலே தங்கள் ஆத்துமாக்களைத் தாழ்த்துகிறார்கள். இந்த நாளுக்கு பின்பு கூடாரங்களின் பண்டிகை நாள் வருகிறது. இந்த நாளிலே அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் மகிழ்ந்து களிகூரவேண்டும். கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுவடை செய்வார்கள்.

கூடாரங்களின் பண்டிகையைப்பற்றிய பிரமாணம் லேவி 23:34-44 ஆகிய வசனங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் சபையாருக்கு மூன்று பண்டிகைகள் மிகவும் விசேஷமானது. அந்தப் பண்டிகைகளின்போது இஸ்ரவேல் ஜனத்தாரில் ஆண்மக்கள் எல்லோரும் பங்குபெறவேண்டும் என்பது கர்த்தருடைய பிரமாணம். அப்படிப்பட்ட மூன்று பிரதான பண்டிகைகளில் கூடாரங்களின் பண்டிகையும் ஒன்று.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக" *(லேவி 23:33,34)* என்று சொல்லுகிறார்.

பஸ்கா பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஆகியவற்றைப் போலவே கூடாரங்களின் பண்டிகையும் பதினைந்தாம் தேதி ஆரம்பமாகிறது. இக்காலத்தில் எல்லாக் கனிகளும், திராட்சைப்பழங்களும், தானிய வகைகளும் அறுவடை செய்யப்பட்டிருக்கும். *(யாத் 23:16).*

பாவநிவாரண நாள் ஏழாம் மாதம் பத்தாந்தேதி ஆசரிக்கப்படுகிறது. கூடாரங்களின் பண்டிகை ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாளளவும் ஆசரிக்கப்படுகிறது. பாவநிவாரண நாளுக்கு ஐந்து நாட்களுக்கு பின்பு, கூடாரங்களின் பண்டிகை ஆரம்பமாகிறது.

பாவநிவாரண நாளின்போது, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், அந்தப் பண்டிகையை ஆசரிக்க வேண்டும் என்னும் கட்டாயமில்லை. ஆனாலும் பக்தியுள்ள யூதர்கள், பாவநிவாரண நாளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கூடாரங்களின் பண்டிகை ஆரம்பமாவதற்கு முன்பாகவே கர்த்தருடைய சந்நிதியில் வந்து தங்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்துகொள்வார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாவநிவாரண நாளின்போது தங்களுடைய ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்துவார்கள். அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்தும்போது, கூடாரங்களின் பண்டிகையை சந்தோஷமாய் ஆசரிப்பதற்கு அவர்களை ஆயத்தம்பண்ணுகிறது.

நம்முடைய பாவங்களினிமித்தமாக நாம் எந்த அளவுக்கு அதிகமாக துக்கப்படுகிறோமோ, அந்த அளவுக்கு நமக்கு பரிசுத்த ஆவியானவரின் ஆறுதல் கிடைக்கும்.

கூடாரங்களின் பண்டிகை எட்டு நாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது. ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி முதல் ஏழு நாளளவும் கூடாரப்பண்டிகை கர்த்தருக்கு ஆசரிக்கப்படுகிறது. இந்த எட்டு நாட்களில் முதல் நாளும் கடைசி நாளும் பரிசுத்த ஓய்வுநாட்களாக ஆசரிக்கப்படும். முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது *(லேவி 23:35)* என்று கர்த்தர் சொல்லுகிறார். முதலாம் நாளிலும் எட்டாம் நாளிலும் ஓய்வு *(லேவி 23:39).*

பண்டிகையின் முதலாவது நாளில் தேவையில்லாத வேலைகளைச் செய்யக்கூடாது. பண்டிகைக் காலத்தில் தங்கியிருப்பதற்காக இஸ்ரவேல் புத்திரர்கள் கூடாரங்களைப் போடவேண்டும் *(லேவி 23:39-40)* கூடாரப்பண்டிகையின்போது, இஸ்ரவேல் ஜனத்தார் கூடாரங்களைப் போட்டு அதில் தங்கியிருக்க வேண்டும். கூடாரங்களைப் போடுவதும் ஒரு வேலைதான். ஆகையினால், ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்யக்கூடாது என்று கூறும் உபதேசம் தவறானது. அத்தியாவசியமான வேலைகளை ஓய்வுநாளில் செய்துகொள்ளலாம்.

முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு. எட்டு நாட்களில் இரண்டு ஓய்வுநாட்கள் வருகிறது. ஆகையினால் எல்லா வருஷத்திலும் ஒரே கிழமையில் ஓய்வுநாள் வரும் என்று கூற இயலாது. ஒவ்வொரு வருஷமும் ஓய்வுநாளின் கிழமை மாற்றமடைந்திருக்கும் *(லேவி 23:34,36,39).*

இஸ்ரவேல் புத்திரர், கூடாரப்பண்டிகையின் முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும் *(லேவி 23:40).*

முதல் நாள் என்பது எட்டு நாட்களில் முதலாவது ஓய்வுநாளாகும். இந்த நாளில் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குக் கூடாரங்களைப் போடவேண்டும். *(லேவி 23:39-40).* முதல் நாளில் கூடாரம் போடும் வேலை நடைபெறுவதினால் இரண்டாம் நாளில்தான் கூடாரப்பண்டிகையின் காரியங்கள் நடைபெறுகின்றன. கூடாரங்களைப் போடும் முதல் ஓய்வுநாளுக்கும், கடைசி ஓய்வுநாளுக்கும் இடையில் ஆறு நாட்கள் உள்ளன *(லேவி 23:36-39; எண் 29:35; நெகே 8:18).*

தங்கும் கூடாரங்களில் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் விவரம் வருமாறு :

1. அலங்காரமான விருட்சங்களின் கனிகள்
2. பேரீச்சின் ஓலைகள்.
3. தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகள்.
4. ஆற்றலரிகள்.

இஸ்ரவேல் புத்திரர் வருஷந்தோறும் ஏழுநாள் கர்த்தருக்கு இந்தப் பண்டிகையை ஆசரிக்க வேண்டும். ஏழுநாட்கள் என்பது கூடாரப் பண்டிகையின் இரண்டாம் நாளில் ஆரம்பமாகி, எட்டாம் நாளில் முடிவு பெற்றிருக்கலாம். லேவி 23:41-42 ஆகிய வசனங்களின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர்கள் ஏழுநாட்களுக்குக் கூடாரங்களில் குடியிருக்க வேண்டும். முதல் நாள் முழுவதும் அவர்கள் கூடாரம் போடும் வேலைகளைச் செய்வதினால் மீதமுள்ள ஏழுநாட்களில் அவர்கள் கூடாரங்களில் தங்கியிருக்க வேண்டும்.

"நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினதை உங்கள் சந்ததியார் அறியும்படிக்கு, ஏழுநாள் கூடாரங்களில் குடியிருக்கக்கடவீர்கள்; இஸ்ரவேலில் பிறந்தவர்கள் எல்லாரும் கூடாரங்களில் வாசம் பண்ணவேண்டும்" *(லேவி 23:42,43)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து கர்த்தர் புறப்படப்பண்ணினபோது, அவர் அவர்களைக் கூடாரங்களில் குடியிருக்கப் பண்ணினார். இதை அவர்களுடைய சந்ததியார் அறிய வேண்டும். இஸ்ரவேல் புத்திரரின் அனுபவங்களை நினைவுகூரும் விதமாக கூடாரப்பண்டிகை ஆசரிக்கப்படுகிறது. *(சக 14:16-21).*

கூடாரப்பண்டிகையின்போது யூதர்கள் கர்த்தரைத் துதித்து கீதங்களை பாடி, சந்தோஷமாய் நடனமாடுவது வழக்கம். கூடாரப்பண்டிகை காலத்தின்போது யூதர்கள் பாரம்பரிய இசைக்கருவிகளை இசைத்து கர்த்தரை துதித்துப் பாடுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணினபோது அவர்களை கூடாரங்களில் குடியிருக்கப்பண்ணினார். தாங்கள் கூடாரங்களில் குடியிருந்ததை நினைவுகூரும் வண்ணமாக இஸ்ரவேல் ஜனத்தார் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கிறார்கள்.

கூடாரப்பண்டிகையானது சேர்ப்புக்கால பண்டிகை என்றும் அழைக்கப்படுகிறது. "நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷ முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக" *(யாத் 23:16).*

இஸ்ரவேல் புத்திரர் கூடாரங்களின் பண்டிகையை எட்டு நாட்களுக்கு ஆசரிக்கவேண்டும். முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (லேவி 23:35).

அவர்கள் ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும்; எட்டாம் நாள் அவர்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே அவர்கள் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும்; அது ஆசரிக்கப்படும் நாள்; அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது (லேவி 23:36).

பண்டிகையின் ஒவ்வொரு நாளிலும் தகனபலியாக எத்தனை மிருகஜீவன்கள் பலியிடப்பட்டன என்று கூறப்படவில்லை. எண் 29:12-40 ஆகிய வசனங்களில் ஒரு அட்டவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் 199 மிருகஜீவன்களை கூடாரப் பண்டிகையில் பலியாகச் செலுத்தினார்கள். அவற்றின் விவரமாவது:

1. காளைகள் - 71
2. ஆட்டுக்கடாக்கள் - 15
3. ஆட்டுக்குட்டிகள் - 105
4. வெள்ளாடுகளின் கடாக்கள் - 8

எட்டாம் நாள் அவர்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள் கூடாரப்பண்டிகை ஏழு நாட்களுக்கு ஆசரிக்கப்படும். இது அதோடு சேர்க்கப்படும் கூடுதலான விசேஷித்த நாள். இது ஒரு விசேஷித்த ஓய்வுநாள். சபை கூடிவரும் நாள். (லேவி 23:36,39; எண் 29:35) இந்தப் பண்டிகையும், அந்தெந்த வருஷங்களில் எல்லாப் பண்டிகைகளும் இந்த எட்டாம் நாளில் முடிவு பெறுகிறது. இந்த நாளில் ஆசாரியர்கள் விசேஷித்த பலிகளைச் செலுத்துவார்கள். (எண் 29:12-38). இயேசுகிறிஸ்து இந்த நாளில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை வாக்குப்பண்ணினார் (யோவான் 7:37-39).

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாள் என்பது பண்டிகையின் எட்டாவது நாள் ஆகும். இந்த நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காக பலிகள் செலுத்தப்படும். முதல் ஏழு நாட்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் மற்ற தேசங்களுக்காகப் பலிகளைச் செலுத்துவார்கள் (லேவி 23:34-36).

எட்டாவது நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் பலிகள் செலுத்தப் படுவதினால் தேவாலயத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஏராளமானோர் கூடி வந்திருப்பார்கள். இந்தப் பிரதான நாளில் ஆசாரியரில் ஒருவர் சீலோவாம் குளத்திலிருந்து பொற்குடத்தில் தண்ணீர் கொண்டு வருவார். காலை வேளையிலே, பலி செலுத்தப்படும் பொழுது, பலிபீடத்தின்மீது சீலோவாம் தண்ணீரைத் திராட்சரசத்தோடு கலந்து, ஊற்றுவார். அப்போது இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமாகக் கர்த்தரைப் பாடித் துதிப்பார்கள்.

இப்பேர்ப்பட்ட சமயத்தில்தான் இயேசு கிறிஸ்து "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" இந்த வாக்கியத்தைக் கூறுகிறார். இது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும் தீர்க்கதரிசனம். ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்த ஆசீர்வாதம் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறது. பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோவான் 7:37-39).

இஸ்ரவேல் புத்திரர் யாதொரு வேலையும் செய்யக்கூடாத நாட்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. வாரஓய்வுநாட்கள். (லேவி 23:3; யாத் 20:8-11)
2. விசேஷித்த ஓய்வுநாட்களும், உபவாச நாட்களும் (லேவி 23:6-8,34-36)

3. பெந்தெகொஸ்தே நாள். (லேவி 23:21)

4. எக்காளங்களின் பண்டிகை நாள். (லேவி 23:25)

5. மகா பாவநிவாரண பண்டிகை நாள் (லேவி 23:27-32)

"நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாட்களில் செலுத்துவதும் தவிர, நீங்கள் கர்த்தருக்குப் படைக்கிற உங்கள் எல்லாக் காணிக்கைகளும் பொருத்தனைகளும் உற்சாகபலிகளும் தவிர, நீங்கள் அந்தந்த நாளுக்குத்தக்கதாய்க் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலி, போஜனபலி, இரத்தபலி, பானபலி முதலானவைகளைச் செலுத்தும்படி சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகைகள் இவைகளே" (லேவி 23:37,38) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கவேண்டிய காலத்தையும் கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். "நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்துவைக்கும் ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் கர்த்தருக்குப் பண்டிகையை ஏழுநாள் ஆசரிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு" (லேவி 23:39) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் பண்டிகை நாட்களிலே கர்த்தருக்கு காணிக்கைகளையும், பொருத்தனைகளையும் உற்சாக பலிகளையும் செலுத்தவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏராளமான பண்டிகைகளை நியமனம் செய்யவில்லை. கர்த்தர் ஒரு சில குறிப்பிட்ட பண்டிகைகளை மாத்திரமே இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நியமனம் செய்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பண்டிகை நாட்களிலே உற்சாக பலிகளை தாராளமாய் செலுத்தவேண்டும்.

கர்த்தருக்கு பலிகளை செலுத்துவது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பாரமானதாகவோ, தங்களால் தாங்க முடியாத அளவுக்கு அதிக கிரயம் செலுத்தக்கூடியதாகவோ இருக்காதவாறு கர்த்தர் பார்த்துக்கொள்கிறார். கர்த்தருடைய நியமனம் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமானது.

கர்த்தருடைய பண்டிகைகள் அனைத்திற்கும் ஆவிக்குரிய முக்கியத்துவம் உள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமிக்கு மறுபடியும் வந்து தம்முடைய ஜனங்களையெல்லாம் சேர்த்துக்கொள்வார். அது கடைசியான சேர்ப்புக்கால பண்டிகையாகயிருக்கும். அந்தப் பண்டிகை நாள் விசுவாசிகள் அனைவருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நாளாகயிருக்கும்.

கூடாரங்களின் பண்டிகையைப்பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப் பண்டிகையாயிருப்பதாக (லேவி 23:34).

2. முதலாம் நாள் சபைகூடும் பரிசுத்த நாள் (லேவி 23:35).

3. அதிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது.

4. ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனபலி செலுத்தவேண்டும். (லேவி 23:36).

5. எட்டாம் நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்.

6. கர்த்தருக்குத் தகனபலி செலுத்த வேண்டும்.

7. எட்டாம் நாளாகிய பரிசுத்த நாளிலே சாதாரணமான யாதொரு வேலையும் செய்யவேனண்டாம்.

8. முதலாம் நாளிலும் ஓய்வு; எட்டாம் நாளிலும் ஓய்வு (லேவி 23:39).

9. ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் கர்த்தருக்குப் பண்டிகையை ஏழுநாள் ஆசரிக்க வேண்டும். அந்த ஏழுநாள் கூடாரங்களில் குடியிருக்கவேண்டும். (லேவி 23:40-42).

10. உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருங்கள் (லேவி 23:40-41).

11. இது உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை (லேவி 23:41-43).

கூடாரங்களின் பண்டிகை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது. இந்த நாட்களில் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிறது. ஏழுநாட்களும் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்கும்போது மகிழ்ந்து களிகூருகிறார்கள். அவர்கள் மகிழ்ந்து களிகூரும் நாட்கள், கர்த்தருக்கு பலிகளை செலுத்தும் நாட்களாகயிருக்கிறது.

இஸ்ரவேல் சபையார், கூடாரப்பண்டிகையின்போது, ஏழுநாட்களும் கூடாரங்களில் வாசம்பண்ணுவார்கள். அந்த நாட்களில் அவர்கள் அன்றாடம் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்துவார்கள். கூடாரங்களின் பண்டிகையின்போது, இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு நாளிலும் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய சர்வாங்க தகனபலிகளைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு நாளும் ஒரே விதமான பலிகளே செலுத்தப்படுகிறது. ஆனாலும் பலிசெலுத்தப்படும் காளைகளின் எண்ணிக்கை ஒவ்வொன்றாக குறைகிறது. ஒவ்வொரு நாளும் செலுத்தவேண்டிய பலிகளை கர்த்தரே நியமனம் செய்திருக்கிறார்.

முதலாம் நாளிலே அவர்கள் பதிமூன்று காளைகளை சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறார்கள். இரண்டாம் நாளிலோ பன்னிரண்டு காளைகளை சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறார்கள். இவ்வாறாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காளையாக குறைகிறது. கூடாரப்பண்டிகையின் கடைசி நாளாகிய ஏழாம் நாளிலே, இஸ்ரவேல் சபையார் ஏழு காளைகளையும் சர்வாங்க தகனபலியாக செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் கூடாரங்களின் பண்டிகையை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கிறார்கள். ஒவ்வொரு நாளிலும் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிறார்கள். சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படும் மிருகங்களில் காளையே அதிக விலைமதிப்புள்ளது.

இஸ்ரவேல் சபையார் கூடாரங்களின் பண்டிகையின்போது ஒவ்வொரு நாளும் பலிசெலுத்துகிறார்கள். ஏழு நாட்களும் பலிசெலுத்துகிறார்கள். எட்டாம் நாள் இஸ்ரவேல் சபையாருக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கிறது. அந்த நாளிலே அவர்கள் கர்த்தருக்கு சுகந்த வாசனையுள்ள தகனமான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையை மாத்திரம் செலுத்துகிறார்கள் (எண் 29:35,36).

கூடாரங்களின் பண்டிகை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது. எட்டாம் நாள் அவர்களுக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கிறது. இந்த நாளில் ஏராளமான காளைகள் சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படாமல், ஒரே ஒரு காளை மாத்திரமே சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படுகிறது. எட்டாம் நாள் பண்டிகையின் முடிவு நாள் ஆகும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே, இயேசு நின்று, சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (யோவா 7:37,38) என்று சொன்னார்.

கூடாரங்களின் பண்டிகை நாட்களில் செலுத்தவேண்டிய எல்லா பலிகளும் செலுத்தி முடிக்கப்பட்டு விடுகிறது. அப்போது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நின்று சத்தமிட்டு, "ஒருவன் இன்னும் நீதியின் மேல் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்" என்று சொல்லுகிறார்.

கூடாரங்களின் பண்டிகையின்போது ஏராளமான மிருகங்கள் சர்வாங்க தகனபலியாக செலுத்தப்பட்டது. இந்தப் பலிகள் போதுமானதல்ல என்றும், இதைவிட மகாபிரதான பலியானது செலுத்தப்படவேண்டும் என்றும் யாராவது விரும்பினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவிடம் வரவேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் செலுத்தப்பட்ட காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள் ஆகியவை மனுஷருடைய பாவங்களை போக்குவதற்கும், அவர்களை நீதிமான்களாக்குவதற்கும் போதுமானவையல்ல. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபாதார பலி மரணம் மாத்திரமே, மனுக்குலத்தை இரட்சிப்பதற்கு போதுமானதாயிருக்கிறது.

ஆகையினால் இயேசுகிறிஸ்து கூடாரங்களின் பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே, நின்று, சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்" என்று தம்முடைய மரணத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

ஒவ்வொரு நாளும் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படும்போது, அதோடு சேர்ந்து போஜனபலிகளும் பானபலிகளும் செலுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஏழுநாட்களுக்கும் கூடாரங்களின் பண்டிகையை ஆசரித்து சந்தோஷமாயிருக்கிறார்கள். அவர்கள் மகிழ்ந்து களிகூர்ந்தாலும், ஒவ்வொரு நாளும் பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்துகிறார்கள். இஸ்ரவேல் சபையார் பண்டிகையை ஆசரித்து சந்தோஷமாயிருந்தாலும், தங்களுடைய பாவங்கள் நிவிர்த்தி பண்ணப்படவேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துகிறார்கள்.

கூடாரங்களின் பண்டிகையின்போது, ஏழு நாட்களும் கர்த்தருக்கு விசேஷித்த பலிகள் செலுத்தப்படுகிறது. இவையெல்லாம் செலுத்தப்படும்போது, அன்றாடம் செலுத்தவேண்டிய நித்திய தகனபலியும், செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் சர்வாங்க தகனபலி செலுத்தப்படுகிறது. கூடாரங்களின் பண்டிகை நாட்களில், விசேஷித்த பலிகள் செலுத்தப்படுவதற்கு முன்பாக, காலையிலே நித்திய சர்வாங்க தகனபலி முதலாவதாக செலுத்தப்படுகிறது.

அதன் பின்பு, ஒவ்வொரு நாள் மாலையிலும் நித்திய சர்வாங்க பலி கடைசியாக செலுத்தப்பட்டு, பலிகள் செலுத்தப்படுவது அந்தந்த நாளில் நிறைவுபெறுகிறது.

நாம் கர்த்தருக்காக எவ்வளவுதான் அதிகமாக ஊழியம் செய்தாலும், விசேஷித்த கூட்டங்களை நடத்தினாலும், ஊழியங்களிலே புதிய புதிய திட்டங்களை வகுத்து, அதை செயல்படுத்திக்கொண்டிருந்தாலும், ஒவ்வொரு நாளும் நம்முடைய தியான நேரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கர்த்தரைப்பற்றியும் அவருடைய வார்த்தையைப்பற்றியும் நாம் அன்றாடம் தியானம்பண்ணவேண்டும். நமக்கு அதிகமான ஊழியங்கள் இருக்கிறது என்பதற்காக தியானிப்பதையும் ஜெபிப்பதையும் நிறுத்திவிடக்கூடாது.

ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்கவேண்டும்; அதில் அவர்கள் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது. இஸ்ரவேல் சபையார் ஏழுநாள் கர்த்தருக்கு கூடாரங்களின் பண்டிகையை ஆசரிக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளிலும் இஸ்ரவேல் சபையார் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய பலிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

முதலாம் நாளிலே அவர்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள சர்வாங்க தகனபலியாக பதின்மூன்று காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே அந்தப் பதின்மூன்று காளைகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த இரண்டு ஆட்டுக்கடாக்களில் ஒவ்வொன்றிற்காக இரண்டு பங்கையும், பதினான்கு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக ஒரு பங்கையும், நித்திய தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:13-16).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் முதலாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதி உங்களுக்குப் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்க வேண்டும் (எண் 29:12).

2. அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

3. ஏழுநாள் கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கவேண்டும்.

4. நீங்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள சர்வாங்க தகனபலியாக பதின்மூன்று காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக் குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:13).

5. அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே அந்தப் பதின்மூன்று காளைகளில் ஒவ்வொன்றிற்காகப் பத்தில் மூன்று பங்கையும், அந்த இரண்டு ஆட்டுக்கடாக்களில் ஒவ்வொன்றிற்காக இரண்டு பங்கையும், பதினான்கு ஆட்டுக்குட்டிகளில் ஒவ்வொன்றிற்காக ஒரு பங்கையும் செலுத்தவேண்டும் (எண் 29: 14-15; எண் 28:24,28).

6. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்த வேண்டும் (எண் 29:16; எண் 15:3-11; யாத் 29:40).

7. நித்திய தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும்.

இரண்டாம் நாளிலே அவர்கள் பன்னிரண்டு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:17-19).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் இரண்டாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. இரண்டாம் நாளிலே பன்னிரண்டு காளைகளையும், இரண்டு ஆட்டுக் கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:17).

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின் படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:18; எண் 28:20,24,28).

3. பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:19; எண் 15:3-11; யாத் 29:40).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும்.

மூன்றாம் நாளிலே அவர்கள் பதினொரு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலி களையும், நித்திய சர்வாங்க தகனபலி யையும், அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:20-22).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் மூன்றாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. மூன்றாம் நாளிலே பதினொரு காளைகளையும், இரண்டு ஆட்டுக் கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின் படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்த வேண்டும் (எண் 29:21; எண் 28:20,24,28).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும் அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும்.

நான்காம் நாளிலே அவர்கள் பத்துக் காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலி யையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:23-25).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் நான்காம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. நான்காம் நாளிலே பத்துக் காளைகளையும், இரண்டு ஆட்டுக் கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக் குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின் படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:24; எண் 28:20,24,28).

3. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்த வேண்டும். (எண் 29:25; எண் 15:3-11; யாத் 29:30).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:25).

ஐந்தாம் நாளிலே அவர்கள் ஒன்பது காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலி யையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:26-28).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் ஐந்தாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. ஐந்தாம் நாளிலே ஒன்பது காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜன பலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:27; எண் 28:20,24,28).

3. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்தவேண்டும் (எண் 29:28; எண் 15:3-11; யாத் 29:40).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும். (எண் 29:28).

ஆறாம் நாளிலே அவர்கள் எட்டுக் காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:29-31).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் ஆறாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. ஆறாம் நாளிலே எட்டுக் காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்த வேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜன பலியையும், அவைகளின் பான பலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:30; எண் 28:20,24,28).

3. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்த வேண்டும் (எண் 29:31; எண் 15:3-11; யாத் 29:40).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலிகளையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:31).

ஏழாம் நாளிலே அவர்கள் ஏழு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும், காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:32-34).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் ஏழாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

1. ஏழாம் நாளிலே ஏழு காளைகளையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், ஒரு வயதான பழுதற்ற பதினான்கு ஆட்டுக்குட்டிகளையும் செலுத்தவேண்டும்.

2. காளைகளும் ஆட்டுக்கடாக்களும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத்தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜன பலியையும், அவைகளின் பான பலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:33; எண் 28:20,24,28).

3. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்தவேண்டும் (எண் 29:34; எண் 15:3-11; யாத் 29:40).

4. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும் (எண் 29:34).

எட்டாம் நாள் இஸ்ரவேல் சபையாருக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கவேண்டும்; அதில் அவர்கள் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது (எண் 29:35).

எட்டாம் நாளில் அவர்கள் கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள தகனமான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், காளையும் ஆட்டுக்கடாவும் ஆட்டுக்குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும், நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவேண்டும் (எண் 29:36-38).

இஸ்ரவேல் சபையார் கூடாரப்பண்டிகையின் எட்டாம் நாளில் செய்யவேண்டிய காரியங்களின் விவரம் வருமாறு :

இது விசேஷித்த ஆசரிப்பு நாளாகும். சாதாரணமான பலிகள், காணிக்கைகள், ஆகியவை செலுத்தப்படுவதோடு விசேஷித்த சடங்குகளும் இந்த நாளில் செய்யப்படும். ஆசாரியர் ஒருவர் சீலோவாம் குளத்திற்குச் சென்று, அதிலிருந்து பொற்பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து, தேவாலயத்திற்குக் கொண்டு வருவார். பலிபீடத்தில் அந்திப்பலி செலுத்தப்படும் போது, இந்தச் சடங்கு நடைபெறும். அதன் பின்பு ஆசாரியர் சீலோவாம் குளத்திலிருந்து எடுத்து வரப்பட்ட தண்ணீரில் திராட்சை ரசத்தைக் கலந்து, பலியின்மீது ஊற்றுவார். அப்போது ஜனங்கள் கர்த்தருக்கு மிகுந்த சந்தோஷத்தோடு பாடலைப் பாடுவார்கள். கூடாரங்களின் பண்டிகை முடிவுற்றபின்பு, கூடாரங்களைப் பிரித்து எடுத்துவிட்டு, ஜனங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போவார்கள். இந்த நாளைக் குறித்த பிரமாணமாவது:

1. எட்டாம் நாள் உங்களுக்கு விசேஷித்த ஆசரிப்பு நாளாயிருக்கவேண்டும்.

2. அதில் சாதாரணமான யாதொரு வேலையும் செய்யலாகாது.

3. கர்த்தருக்குச் சுகந்த வாசனையுள்ள தகனமான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக் குட்டிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:36).

4. காளையும் ஆட்டுக்கடாவும் ஆட்டுக் குட்டிகளும் இருக்கிற இலக்கத்திற்குத் தக்கதாக முறைமையின்படி அவைகளின் போஜனபலியையும், அவைகளின் பானபலிகளையும் செலுத்தவேண்டும் (எண் 29:37; எண் 28:20,24,28).

5. பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக் கடாவையும் அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் செலுத்த வேண்டும். (எண் 29:38; எண் 15:3-11; யாத் 29:40).

6. நித்திய சர்வாங்க தகனபலியையும், அதின் போஜனபலியையும், அதின் பானபலியையும் அன்றி, பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும். (எண் 29:38).

7. நீங்கள் உங்கள் பண்டிகைகளிலே கர்த்தருக்குச் செலுத்த வேண்டியவைகளோடு உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாகபலிகளையும், உங்கள் சர்வாங்க தகனபலிகளையும், உங்கள் போஜனபலி களையும், உங்கள் பானபலிகளையும், உங்கள் சமாதான பலிகளையும் செலுத்த வேண்டும். (எண் 29:39).

கூடாரங்களின் பண்டிகையில் ஒவ்வொரு நாளும் செலுத்தப்பட்ட பலிகளின் விவரம் வருமாறு :

1. முதலாம் நாள் - 13 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா, இவற்றுடன் மாவு, எண்ணெய், இரசம் ஆகியவை.

2. இரண்டாம் நாள் - 12 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

3. மூன்றாம் நாள் - 11 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

4. நான்காம் நாள் - 10 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

5. ஐந்தாம் நாள் - 9 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

6. ஆறாம் நாள் - 8 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

7. ஏழாம் நாள் - 7 காளைகள், 2 ஆட்டுக்கடாக்கள், 14வெள்ளாடுகள், 1 வெள்ளாட்டுக்கடா

8. எட்டாம் நாள் - 1 காளை, 1 ஆட்டுக்கடா, 7 வெள்ளாடுகள், 1 ஆடு

கூடாரங்களின் பண்டிகை நடைபெறும் எட்டு நாட்களிலும் செலுத்தப்படும் மொத்த பலிகள். 71 காளைகள், 15 ஆட்டுக்கடா, 105 ஆட்டுக்குட்டி, 8 வெள்ளாட்டுக்கடா அல்லது ஆட்டுக்குட்டிகள் இவற்றுடன் நியமிக்கப்பட்ட போஜனபலிகளும், பானபலிகளும் (எண் 29:12-20; எண் 20:23-32)

இஸ்ரவேல் சபையாருக்காக ஒரு வருஷத்தில் செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டிகளின் விவரம் வருமாறு :

அன்றாட பலிகள் - தினமும் இரண்டு. 365 நாட்களுக்கு 730 ஆட்டுக்குட்டிகள்

வாரஓய்வுநாட்கள் - ஒவ்வொரு வார ஓய்வுநாளிலும் கூடுதலாக இரண்டு ஆட்டுக்குட்டிகள். 52 வார ஓய்வுநாட்களுக்கு 104 ஆட்டுக்குட்டிகள்.

மாதப்பிறப்பின் பண்டிகைகள் - ஒவ்வொரு மாதப்பிறப்பிலும் ஏழு ஆட்டுக்குட்டிகள். பன்னிரண்டு மாதப்பிறப்புக்களுக்கு 84 ஆட்டுக்குட்டிகள்.

புளிப்பில்லா அப்பப் பண்டிகை - ஒவ்வொரு நாளும் ஏழு ஆட்டுக்குட்டிகள் வீதம் 7 நாட்களுக்கு 49 ஆட்டுக்குட்டிகள்.

முதற்பலன்களின் பண்டிகை - பெந்தெகொஸ்தே நாளின் கோதுமை அறுப்பில் 16 ஆட்டுக்குட்டிகளும், வாற்கோதுமை அறுப்பில் ஒரு ஆட்டுக்குட்டியும். ஆக மொத்தம் 17 ஆட்டுக்குட்டிகள். (லேவி 23:12)

எக்காளங்களின் பண்டிகை - 7 ஆட்டுக்குட்டிகள்

பாவநிவாரண நாள் - 7 ஆட்டுக்குட்டிகள்

கூடாரங்களின் பண்டிகை - முதல் ஏழு நாளில் தினமும் 14 ஆட்டுக்குட்டிகள் வீதம் 98 ஆட்டுக்குட்டிகள். மேலும் எட்டாம் நாளில் 7 ஆட்டுக்குட்டிகள். ஆக மொத்தம் 105 ஆட்டுக்குட்டிகள்

பலியிடப்பட்ட ஆட்டுக்குட்டிகளின் மொத்த எண்ணிக்கை - 1,103 ஆகும். இவை அனைத்தும் ஜனங்களுடைய பொதுவான பணத்திலிருந்து செலவு பண்ணப்படுகிறது. இது தவிர, தனி நபர்களும் குடும்பத்தினரும் தங்கள் பலிகளைச் செலுத்துவது வழக்கம்.

ஒவ்வொரு வருஷத்திலும் செலுத்தப்பட்ட பலிகளின் விவரம் வருமாறு:

1. ஆட்டுக்குட்டிகள் = 1,103

2. காளைகள் = 115

3. ஆட்டுக்கடாக்கள் = 41

4. வெள்ளாட்டுக்கடாக்கள் அல்லது ஆட்டுக்குட்டிகள் = 33

பண்டிகை நாட்களிலும், அன்றாட பலிகளிலும் செலுத்தப்படும் பலிகள் தவிர, மேலும் பல பலிகளையும் இஸ்ரவேல் புத்திரர்கள் செலுத்துகிறார்கள். தீட்டுக் கழிக்கும் ஜலத்திற்காக சிவப்பு கிடாரி, அறியாமல் செய்த பாவத்திற்குப் பலிகள், ஸ்தோத்திர பலிகள், தனி நபர்களுடைய பாவநிவாரண பலிகள், புறாக்கள், காட்டுப்புறாக்கள், பிள்ளைகளும், மிருக ஜீவன்களும் பிறக்கும்போது செலுத்தும் பலிகள், குஷ்டரோகி சுத்தமானதற்காகச் சுத்திகரிக்கப்படும்போது செலுத்தப்படும் பலிகள், தீட்டுக் கழிப்பதற்காகச் செலுத்தப்படும் பலிகள், பொருத்தனை செய்யப்படும்போது செலுத்தப்படும் பலிகள் போன்று பலவிதமான பலிகளைச் செலுத்துகிறார்கள்.

நித்திய சர்வாங்க தகனபலியாக அனுதினமும் இரண்டு ஆட்டுக்குட்டிகள் பலியிடப்படுகிறது. ஒன்று காலையிலும், மற்றொன்று மாலையிலும் பலியாகச் செலுத்தப்படுகிறது. இந்த அதிகாரம் முழுவதிலும் இந்த பலி "நித்திய சர்வாங்க தகனபலி" (எண் 29:6,11,16,19,22, 25,28,31,34,38) என்று அழைக்கப்படுகிறது.

ஒவ்வொரு பலியுடனும் சேர்ந்து, அதற்குரிய போஜனபலியையும், பானபலியையும் சேர்த்து செலுத்த வேண்டும். (எண் 28:20,24,28).

இஸ்ரவேல் சபையார் கர்த்தருக்கு ஐந்து விதமான பலிகளை செலுத்துகிறார்கள். அவையாவன :

1. உற்சாக பலிகள் (எண் 15:3; எண் 29:39; லேவி 22:18-23; லேவி 23:38; உபா 12:6,17; உபா 16:10; உபா 23:23; 2நாளா 31:14; எஸ்றா 1:4; எஸ்றா 3:5; எஸ்றா 7:13,16; எஸ்றா 8:28; சங் 119:108).

2. சர்வாங்க தனபலிகள் (எண் 7:15-87; எண் 28:3-31; எண் 29:2-39; ஆதி 8:20; ஆதி 22:2-13; யாத் 40:6-29; லேவி 1:1-17; லேவி 4:7-34; லேவி 6:9-30; லேவி 7:2-37; லேவி 8:17-28; லேவி 9:1-24) இவை கர்த்தருக்குச் செலுத்தப்படும் மிருக ஜீவன்களும் போஜனங்களுமாகும்.

3. போஜனபலிகள் (எண் 15:3-10; எண் 28:5-31; எண் 29:3-39; யாத் 29:41; லேவி 2:1-15; லேவி 6:14-23) இவை கர்த்தருக்குச் செலுத்தப்படும் போஜனங்கள். (லேவி 2:1) இவை மிருகஜீவன்களின் பலிகளோடு சேர்த்துச் செலுத்தப்படுகிறது. (எண் 15:3-10)

4. பானபலிகள் (எண் 6:15-20; எண் 15:3-10,24; எண் 28:7-31; எண் 29:7-39; ஆதி 35:14; யாத் 29:40-41) ஒவ்வொரு பலியுடனும் செலுத்தப்படும் திராட்சரசம் (எண் 15:3-10).

5. சமாதானபலிகள் (எண் 6:14-26; எண் 7:17-88; எண் 10:10; எண் 15:8; எண் 30:4-14; யாத் 20:24; யாத் 24:5; யாத் 29:28; யாத் 32:6; லேவி 3:1-9; லேவி 4:10-35; லேவி 7:11-37; உபா 20:11) இவை ஸ்தோத்திரபலிகளும் கர்த்தரோடுள்ள ஐக்கியத்தை வெளிப்படுத்தும் பலிகளும் ஆகும்.

இவைதவிர குற்ற நிவாரண பலிகள், பாவநிவாரண பலிகள், சுகந்தவாசனையான பலிகள், சுகந்தவாசனையல்லாத பலிகள் ஆகிய பலிகளையும் இஸ்ரவேல் புத்திரர்கள் செலுத்துகிறார்கள். (லேவி 1:1-8:31)

பொருத்தனைகள்
எண் 29:39,40

எண் 29:39. உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாகபலிகளையும், உங்கள் சர்வாங்க தகனபலிகளையும், உங்கள் போஜனபலிகளையும், உங்கள் பானபலிகளையும், உங்கள் சமாதான பலிகளையும் அன்றி, நீங்கள் உங்கள் பண்டிகைகளிலே கர்த்தருக்குச் செலுத்த வேண்டியவைகள் இவைகளே என்று சொல் என்றார்.

எண் 29:40. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் மோசே இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னான்.

கர்த்தர் இதுவரையிலும் சொன்ன கட்டளைகள் எல்லாவற்றையும் இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் பொதுவானதாக சொல்லியிருக்கிறார். கர்த்தருக்கு செலுத்தப்படும் பலிகளில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் பங்கு பெறவேண்டும். இவை தவிர இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொருவரும், தனிநபராக கர்த்தருக்கு பொருத்தனைகளையும், உற்சானமான காணிக்கைகளையும் செலுத்தவேண்டும். இவற்றின் மூலமாக அவர்கள் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாகபலிகளையும், உங்கள் சர்வாங்க தகனபலிகளையும், உங்கள் போஜனபலிகளையும், உங்கள் பானபலிகளையும், உங்கள் சமாதான பலிகளையும் அன்றி, நீங்கள் உங்கள் பண்டிகைகளிலே கர்த்தருக்குச் செலுத்த வேண்டியவைகள் இவைகளே என்று சொல்" (எண் 29:39) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் மோசே இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லுகிறார் (எண் 29:40).

30 அதிகாரம்

இதற்கு முந்தின அதிகாரத்தில் பொருத்தனைகளைப்பற்றியும், உற்சாக பலிகளைப்பற்றியும் கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார். இந்த அதிகாரத்தில் கர்த்தர் பொருத்தனைகளைப்பற்றி தெளிவாக விளக்குகிறார் (எண் 30:1,2).

ஒரு பெண்பிள்ளை பொருத்தனைபண்ணும்போது, அந்தப் பொருத்தனையை அவளுடைய தகப்பன் அனுமதிக்கவேண்டும். தகப்பன் அனுமதிக்கவில்லையென்றால் அந்தப் பொருத்தனையை நிறைவேற்ற வேண்டியதில்லை (எண் 30:3-5).

அதுபோலவே ஒரு மனைவி பொருத்தனைபண்ணும்போது, அந்தப் பொருத்தனையை அவளுடைய புருஷன் அனுமதிக்கவேண்டும். புருஷன் அனுமதிக்கவில்லையென்றால் அந்தப் பொருத்தனையை நிறைவேற்ற வேண்டியதில்லை (எண் 30:6-16).

பொருத்தனை
எண் 30:1,2

எண் 30:1. மோசே இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் தலைவரை நோக்கி: கர்த்தர் கட்டளையிடுவது என்னவென்றால்:

எண் 30:2. ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டாலும், அவன் சொல்தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்.

கர்த்தர் பொருத்தனைகளைப்பற்றியும், உற்சாக பலிகளைப்பற்றியும் மோசேக்கு சொன்னார். கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். பொருத்தனைகளைப்பற்றி கர்த்தர் சொன்ன பிரமாணங்களை மோசே இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் தலைவரிடத்தில் சொல்லுகிறார். இந்தத் தலைவர்கள் தங்களுடைய ஆளுகையின் கீழுள்ள இஸ்ரவேல் புத்திரருக்கு, கர்த்தருடைய பிரமாணத்தைப் போதிக்கவேண்டும்.

ஒருவர் கர்த்தருக்கு பொருத்தனைபண்ணும்போது, அவர் தன்னுடைய வார்த்தையில் கர்த்தரை ஒரு பங்காளியாக நியமித்துக்கொள்கிறார். பொருத்தனைபண்ணுவதும், ஆணையிடுவதும் இஸ்ரவேல் புத்திரருடைய பிரமாணத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

மோசே இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் தலைவரை நோக்கி, "கர்த்தர் கட்டளையிடுவது என்னவென்றால்: ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டாலும், அவன் சொல்தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன்" (எண் 30:1,2) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியமத்தின் பிரகாரம் பொருத்தனைபண்ணினால் மாத்திரமே அந்தப் பொருத்தனையை நிறைவேற்ற வேண்டிய கடமை பொருத்தனை பண்ணியவருக்கு உண்டு. கர்த்தருடைய நியமத்தின் பிரகாரம் பொருத்தனை பண்ணவில்லையென்றால், அந்தப் பொருத்தனையை நிறைவேற்றவேண்டிய அவசியமில்லை.

பொருத்தனைபண்ணுகிறவர்கள் கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுகிறார்கள். பொருத்தனை பண்ணுகிறவரும், ஒரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிடுகிறவரும், தன்னுடைய ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொள்கிறார். கர்த்தர் ஆவியானவராகயிருக்கிறார். மனுஷனோ தன் ஆத்துமாவிலிருக்கிறான். பொருத்தனை பண்ணுகிறவன் தன்னுடைய ஆத்துமாவை, நிபந்தனைக்குட்படுத்திக்கொள்கிறான்.

ஒரு மனுஷன், வேறொரு மனுஷனிடத்தில் ஆணையிடும்போது, ஒரு பொருளை நிபந்தனைக்குட்படுத்துகிறான். அவன் கர்த்தருக்கு பொருத்தனைபண்ணும்போதோ, தன்னுடைய ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்துகிறான். பொருத்தனைபண்ணியவர்களும், ஆணையிட்டவர்களும், தங்கள் வாக்கின்படியெல்லாம் செய்யவேண்டும். தங்களுடைய பொருத்தனையையும், நிபந்தனைகளையும் நிறைவேற்றவேண்டியது மனுஷருடைய கடமை.

பொருத்தனைபண்ணின பெண்பிள்ளை

எண் 30:3-5

எண் 30:3. தன் தகப்பன் வீட்டிலிருக்கிற ஒரு பெண்பிள்ளை தன் சிறுவயதிலே கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணி யாதொரு காரியத்தைச் செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டால்,

எண் 30:4. அவள் செய்த பொருத்தனையையும், அவள் பண்ணிக்கொண்ட நிபந்தனையையும் அவளுடைய தகப்பன் கேட்டும் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருப்பானானால், அவள் செய்த எல்லாப் பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்ட நிபந்தனையும் நிறைவேற வேண்டும்.

எண் 30:5. அவள் செய்த பொருத்தனைகளையும், அவள் செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்தின நிபந்தனையையும் அவளுடைய தகப்பன் கேட்கிற நாளில் அவன் வேண்டாம் என்று தடுத்தால், அது நிறைவேற வேண்டியதில்லை; அவளுடைய தகப்பன் வேண்டாம் என்று தடுத்தபடியால், கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார்.

பொருத்தனைபண்ணியவர்கள் சொல்தவறாதவர்களாகயிருக்கவேண்டும். தாங்கள் செய்த எல்லா பொருத்தனைகளையும், தங்கள் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்ட எல்லா நிபந்தனைகளையும், எல்லா ஆணைகளையும் நிறைவேற்றவேண்டும்.

ஆனாலும் பெரியவர்கள் பொருத்தனைபண்ணுவதற்கும், சிறுபிள்ளைகள் பொருத்தனைபண்ணுவதற்கும் வித்தியாசமுள்ளது. சிறுபிள்ளைகள் தங்கள் பெற்றோரின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இருக்கிறார்கள். பிள்ளைகள் பொருத்தனைபண்ணும்போது, அதை நிறைவேற்றவேண்டிய கடமை, பிள்ளையின் பெற்றோருக்கு உண்டு.

ஒரு பெண்பிள்ளை தன் சிறுவயதிலே கர்த்தருக்கு பொருத்தனைபண்ணும்போது, அதை நிறைவேற்றவேண்டுமா அல்லது நிறைவேற்றாமல் இருந்துவிடலாமா என்பது பற்றியும், அந்தப் பொருத்தனையை நிறைவேற்றவேண்டுமானால், அதை யார் நிறைவேற்றவேண்டும் என்பது பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப் பெண்பிள்ளை தன் தகப்பன் வீட்டிலிருக்கிறாள். அவள் தன் சிறுவயதிலே கர்த்தருக்கு பொருத்தனை பண்ணியிருக்கிறாள். ஒரு புருஷன் பொருத்தனைபண்ணினால், அந்தப் பொருத்தனையை அவன் நிறைவேற்ற வேண்டும். சிறுவயதிலுள்ள ஒரு பெண்பிள்ளை, தன் தகப்பன் வீட்டிலிருக்கும் போது பொருத்தனைபண்ணினால், என்ன செய்யவேண்டும் என்பது பற்றி கர்த்தர் இந்த வசனத்தில் சொல்லுகிறார்.

தன் தகப்பன் வீட்டிலிருக்கிற ஒரு பெண்பிள்ளை தன் சிறுவயதிலே கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணி யாதொரு காரியத்தைச் செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டால், அவள் செய்த பொருத்தனையையும், அவள் பண்ணிக்கொண்ட நிபந்தனையையும் அவளுடைய தகப்பன் கேட்டும் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருப்பானானால், அவள் செய்த எல்லாப் பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்ட நிபந்தனையும் நிறைவேறவேண்டும் (எண் 30:3,4).

பெண்பிள்ளை தன் சிறுவயதிலே கர்த்தருக்கு பண்ணிய பொருத்தனையை அவள் தன் தகப்பனுக்கு அறிவித்திருக்கிறாள். தகப்பனோ அவள் செய்த பொருத்தனையைக் கேட்டு, அதை வேண்டாம் என்று தடுக்கவில்லை. சிறுபிள்ளையின் பொருத்தனையைக் கேட்டும், அதை வேண்டாம் என்று தடுக்காமல், அந்தப் பெண்பிள்ளையின் தகப்பன் அமைதியாயிருக்கிறார்.

தன் மகள் செய்த பொருத்தனையையும், அவள் பண்ணிக்கொண்ட நிபந்தனையையும், அவளுடைய தகப்பன் கேட்டும், அவளுக்கு ஒன்றும் சொல்லாமல் அமைதியாயிருக்கிறார். மவுனமாயிருப்பதும், அமைதியாயிருப்பதும், ஒன்றும் சொல்லாதிருப்பதும் சம்மதம் தெரிவிப்பதற்கு அடையாளம். ஆகையினால் அவள் செய்த எல்லா பொருத்தனைகளையும், அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்ட எல்லா நிபந்தனைகளையும், அவளுடைய தகப்பன் நிறைவேற்றவேண்டும்.

சில சமயங்களில் தன் மகள் செய்த பொருத்தனையை அவளுடைய தகப்பன் கேள்விப்பட்டு, அவர் உடனே வேண்டாம் என்று தடுத்துவிட்டால், அந்தப் பொருத்தனையை மகளோ அல்லது தகப்பனோ நிறைவேற்ற வேண்டியதில்லை. தகப்பன் அமைதியாயிராமல், வேண்டாம் என்று தடுத்திருக்கிறார்.

பெண்பிள்ளை செய்த பொருத்தனைகளையும், அவள் செய்யும்படி தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்தின நிபந்தனையையும் அவளுடைய தகப்பன் கேட்கிற நாளில் அவன் வேண்டாம் என்று தடுத்தால், அது நிறைவேற வேண்டியதில்லை; அவளுடைய தகப்பன் வேண்டாம் என்று தடுத்தபடியால், கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார் (எண் 30:5).

மகள் செய்த பொருத்தனையை தகப்பன் வேண்டாம் என்று தடுக்கும்போது, அந்தப் பொருத்தனை ஒன்றுமில்லாமல் போகிறது. ஒருவேளை தகப்பன் தன் குடும்பத்தின் சூழ்நிலையைக் கருதி, தன் மகள் செய்த பொருத்தனையை வேண்டாம் என்று தடுத்திருக்கலாம். அந்தப் பொருத்தனை நிறைவேறினால் தன்னுடைய குடும்பத்தில் ஏதாவது குடும்பப்பிரச்சனைகள் வரும் என்று நினைத்து, அந்தத் தகப்பன் தன் மகளின் பொருத்தனையை வேண்டாம் என்று தடுத்திருக்கலாம்.

ஒரு பெண்பிள்ளை கர்த்தருக்கு பொருத்தனைபண்ணும்போது, அதை நல்ல மனதோடும், உண்மையான நோக்கத்தோடும் பொருத்தனைபண்ணுகிறாள். கர்த்தரும் அவளுடைய பொருத்தனையை அங்கீகரிக்கிறார். ஆனாலும் சிறுபிள்ளை தன் தகப்பனுக்கு கீழ்ப்படிய வேண்டும். பலிசெலுத்துவதைவிட கீழ்ப்படிதலே உத்தமம். பெண்பிள்ளை தான் செய்த பொருத்தனையை நிறைவேற்றவேண்டும் என்று நினைப்பதைவிட, தன் தகப்பனுக்கு கீழ்ப்படியவேண்டும் என்றே நினைக்கவேண்டும்.

பொருத்தனை பண்ணின மனைவி
எண் 30:6-16

எண் 30:6. அவள் பொருத்தனை பண்ணும்போதும், தன் உதடுகளைத் திறந்து தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொள்ளும்போதும், அவளுக்குப் புருஷன் இருந்தால்,

எண் 30:7. அப்பொழுது அவளுடைய புருஷன் அதைக் கேட்டிருந்தும், அதைக் கேள்விப்படுகிற நாளில் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தால், அவளுடைய பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்தின நிபந்தனையும் நிறைவேற வேண்டும்.

எண் 30:8. அவளுடைய புருஷன் அதைக் கேட்கிற நாளில் அவன்வேண்டாம் என்று தடுத்து, அவள் செய்த பொருத்தனையும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்ட நிபந்தனையும் செல்லாதபடி செய்தானேயானால், அப்பொழுது கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார்.

என் 30:9. ஒரு விதவையாவது, தள்ளப்பட்டுப் போன ஒரு ஸ்திரீயாவது தன் ஆத்துமாவை எந்த நிபந்தனைக்குட்படுத்திக் கொள்ளுகிறாளோ அந்த நிபந்தனை நிறைவேற வேண்டும்.

என் 30:10. அவள் தன் புருஷனுடைய வீட்டில் யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டாலும்,

என் 30:11. அவளுடைய புருஷன் அதைக் கேட்டும் அவளுக்கு அதை வேண்டாமென்று தடுக்காமல் மவுனமாயிருந்தால், அவள் செய்த எல்லாப் பொருத்தனைகளும், அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்தின எல்லா நிபந்தனைகளும் நிறைவேற வேண்டும்.

என் 30:12. அவளுடைய புருஷன் அவைகளைக் கேட்ட நாளில் அவைகளைச் செல்லாதபடி பண்ணினால், அப்பொழுது அவள் செய்த பொருத்தனைகளும், அவள் தன் ஆத்துமாவையுட்படுத்தின நிபந்தனையைக் குறித்து அவள் வாயிலிருந்து புறப்பட்டதொன்றும் நிறைவேறவேண்டியதில்லை; அவளுடைய புருஷன் அவைகளைச் செல்லாதபடி பண்ணினதினாலே கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார்.

என் 30:13. எந்தப் பொருத்தனையையும், ஆத்துமாவைத் தாழ்மைப்படுத்தும்படி செய்யப்பட்ட எந்த ஆணையையும், அவளுடைய புருஷன் ஸ்திரப்படுத்தவுங்கூடும், செல்லாதபடி பண்ணவும் கூடும்.

என் 30:14. அவளுடைய புருஷன் ஒருநாளும் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தானாகில், அவன் அவளுடைய எல்லாப் பொருத்தனைகளையும், அவள் பேரிலிருக்கிற அவளுடைய எல்லா நிபந்தனைகளையும் ஸ்திரப்படுத்துகிறான்; அவன் அதைக் கேட்ட நாளிலே அவளுக்கு ஒன்றும் சொல்லாமற்போனதினால், அவைகளை ஸ்திரப்படுத்துகிறான்.

என் 30:15. அவன் அவைகளைக் கேட்டபின்பு செல்லாதபடி பண்ணினால், அவளுடைய அக்கிரமத்தை அவன் சுமப்பான் என்றார்.

என் 30:16. புருஷனையும் ஸ்திரீயையும், தகப்பனையும் தகப்பனுடைய வீட்டில் சிறுவயதில் இருக்கிற அவன் குமாரத்தியையும் குறித்து, கர்த்தர் மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே.

ஒருவனுடைய மனைவி கர்த்தருக்கு பொருத்தனை பண்ணும்போது, ஒரு பெண்பிள்ளையின் பொருத்தனைக்கு கர்த்தர் சொன்ன பிரமாணமே, இங்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒருவனுடைய மனைவி பொருத்தனை பண்ணும் போதும், தன் உதடுகளைத் திறந்து தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொள்ளும்போதும், அவளுக்குப் புருஷன் இருந்தால், அப்பொழுது அவளுடைய புருஷன் அதைக் கேட்டிருந்தும், அதைக் கேள்விப்படுகிற நாளில் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தால், அவளுடைய பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்தின நிபந்தனையும் நிறைவேற வேண்டும் *(என் 30:6,7)*.

அவளுடைய புருஷன் அதைக் கேட்கிற நாளில் அவன் வேண்டாம் என்று தடுத்து, அவள் செய்த பொருத்தனையும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்ட நிபந்தனையும் செல்லாதபடி செய்தானேயானால், அப்பொழுது கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார் *(என் 30:8)*.

விதவைக்கும், தள்ளப்பட்டுப்போன ஸ்திரீக்கும் புருஷன் இல்லை. ஆகையினால் இவர்கள் கர்த்தருக்கு பண்ணின பொருத்தனைகளை அவர்களே நிறைவேற்றவேண்டும். "ஒரு விதவையாவது, தள்ளப்பட்டுப் போன ஒரு ஸ்திரீயாவது தன் ஆத்துமாவை எந்த நிபந்தனைக்குட்படுத்திக் கொள்ளுகிறாளோ அந்த நிபந்தனை நிறைவேற வேண்டும்" *(என் 30:9)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தன் புருஷன் வீட்டிலிருக்கிற மனைவி கர்த்தருக்கு பொருத்தனைபண்ணும்போது, அவளுடைய கணவனே அதை நிறைவேற்றவேண்டும். புருஷன் தன் மனைவியின் பொருத்தனையை வேண்டாம் என்று தடுத்திருந்தால், அவன் அதை நிறைவேற்றவேண்டியதில்லை.

மனைவி தன் புருஷனுடைய வீட்டில் யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டாலும், அவளுடைய புருஷன் அதைக் கேட்டும் அவளுக்கு அதை வேண்டாமென்று தடுக்காமல் மவுனமாயிருந்தால், அவள் செய்த எல்லாப் பொருத்தனைகளும், அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்தின எல்லா நிபந்தனைகளும் நிறைவேற வேண்டும் (எண் 30:10,11).

"அவள் தன் புருஷனுடைய வீட்டில் யாதொரு பொருத்தனை பண்ணினாலும்" என்னும் வாக்கியம் விதவையின் பொருத்தனையைக் குறிக்கிறது. இது அவளுடைய கணவன் உயிரோடு இருக்கும் போது, அல்லது அவளுடைய கணவன் அவளைத் தள்ளிவிடாமல் தன் புருஷனோடு சேர்ந்திருக்கும் போது செய்து கொண்ட பொருத்தனையாகும். (எண் 30:9-12). புருஷனோடு இருக்கும் மனைவியின் பொருத்தனையைப் பற்றி எண் 30:6-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

மனைவி பண்ணின பொருத்தனைகளை, அவளுடைய புருஷன் அவைகளைக் கேட்ட நாளில் அவைகளைச் செல்லாதபடி பண்ணினால், அப்பொழுது அவள் செய்த பொருத்தனைகளும், அவள் தன் ஆத்துமாவை யுட்படுத்தின நிபந்தனையைக் குறித்து அவள் வாயிலிருந்து புறப்பட்டதொன்றும் நிறைவேறவேண்டியதில்லை; அவளுடைய புருஷன் அவைகளைச் செல்லாதபடி பண்ணினதினாலே கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார் (எண் 30:12).

குடும்பத்தில் புருஷனுக்கு விசேஷித்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மனைவி பொருத்தனைபண்ணினாலும், அதை அவளுடைய புருஷனே நிறைவேற்றவேண்டும். ஆனாலும் மனைவி பண்ணின பொருத்தனையை, ஸ்திரப்படுத்தவோ, அல்லது செல்லாதபடி பண்ணவோ அவளுடைய புருஷனுக்கு அதிகாரமுண்டு.

எந்தப் பொருத்தனையையும், ஆத்துமாவைத் தாழ்மைப்படுத்தும்படி செய்யப்பட்ட எந்த ஆணையையும், அவளுடைய புருஷன் ஸ்திரப்படுத்தவுங்கூடும், செல்லாதபடி பண்ணவும் கூடும் (எண் 30:13).

கர்த்தர் குடும்பத்தில் புருஷருக்கு ஒரு சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார். (1கொரி 11:3; 1பேதுரு 3:6). குடும்பத்தின் ஒற்றுமையை அவன் காத்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவ மார்க்கம் குடும்பத்தை உடைக்கும் மார்க்கமல்ல. குடும்பத்தை ஒற்றுமையாக வைத்திருக்க உதவும் மார்க்கம். இதற்காகவே பரிசுத்த ஆவியானவர் திருமணம், தள்ளிவிடுதல் ஆகிய காரியங்களைப் பற்றி மத் 19, 2கொரி 7 ஆகிய அதிகாரங்களில் தெளிவாகக் கட்டளையிட்டிருக்கிறார்.

தன் மனைவி பொருத்தனைபண்ணும்போது, அவளுடைய புருஷன் ஒருநாளும் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தானாகில், அவன் அவளுடைய எல்லாப் பொருத்தனைகளையும், அவள் பேரிலிருக்கிற அவளுடைய எல்லா நிபந்தனைகளையும் ஸ்திரப்படுத்துகிறான்; அவன் அதைக் கேட்ட நாளிலே அவளுக்கு ஒன்றும் சொல்லாமற்போனதினால், அவைகளை ஸ்திரப்படுத்துகிறான் (எண் 30:14).

மனைவி செய்துகொண்ட பொருத்தனையைப் புருஷன் தடைபண்ணவில்லை என்றால், அவன் அவளுடைய பொருத்தனையை ஸ்திரப்படுத்துகிறான். (எண் 30:6-8,11-14). புருஷனுக்கு அதைப் பற்றி சிந்திக்க ஒரு நாள் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மனைவியின் பொருத்தனை பற்றி கேட்டபின்பும், அதைத் தடைபண்ணாமல் போனால், அந்த பொருத்தனைக்கு அவனே உத்தரவாதம் பண்ண வேண்டும் (எண் 30:15). பிள்ளைகளின் பொருத்தனைகளைப் பற்றி பெற்றோருக்கும், மனைவியின் பொருத்தனைகளைப் பற்றி புருஷனுக்கும் பொறுப்பு இருக்கிறது.

பொருத்தனை பண்ணினால் அதை நிறைவேற்ற வேண்டும். அவசரப்பட்டு பொருத்தனை பண்ணி, தேவையில்லாத பிரச்சனைகளில் சிக்கிக் கொள்ளக்கூடாது. பொருத்தனையை விடுதலை பண்ணுவதற்கு அதற்குரிய நிவாரணம் பண்ண வேண்டும். பொருத்தனை பண்ண வேண்டுமென்று வேதாகமம் யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் பொருத்தனை பண்ணியவர்கள் அதைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று வேதவாக்கியம் வலியுறுத்துகிறது. பொருத்தனை செய்து, அதை நிறைவேற்றாமல் இருப்பதற்குப் பதிலாக பொருத்தனை செய்யாமலிருப்பதே நலம். தனக்கு கேடுண்டாக ஒருவன் பொருத்தனை பண்ணினாலும் அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அவனுக்குள்ளது (சங் 15:4).

நிபந்தனைகளும், பொருத்தனைகளும் ஒன்றல்ல. நிபந்தனைகள் ஒன்றைக் கட்டுப்படுத்துகிறது. பொருத்தனை ஒன்றைச் செய்ய வைக்கிறது. ஒருவன் தன்னையோ, தனக்குள்ள உடைமைகளையோ கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணி, அவருக்குக் கொடுக்கலாம். ஒருவன் நிபந்தனைகளை அங்கிகரிக்கும்பொழுது, தனக்குள்ள சிலாக்கியங்களையெல்லாம் அந்த நிபந்தனையின் பிரகாரம் இழந்து போகிறான். பொருத்தனை செய்ய வேண்டியவற்றைக் கூறும். நிபந்தனை செய்யக்கூடாததை வலியுறுத்தும்.

தன் மனைவி பொருத்தனைபண்ணும்போது, அதைக் கேட்ட நாளிலேயே, அவளுடைய புருஷன் அதை செல்லாமல் போகப்பண்ண முடியும். புருஷன் ஒன்றும் சொல்லாமல் அமைதியாகயிருந்துவிட்டால், அவன் தன் மனைவியின் பொருத்தனையை ஸ்திரப்படுத்துகிறான். ஒரு பொருத்தனையை புருஷன் ஸ்திரப்படுத்திய பின்பு, அதை அவனால் செல்லாதபடி பண்ண முடியாது. ஸ்திரப்படுத்தப்பட்ட பொருத்தனையை நிறைவேற்றியே ஆகவேண்டும்.

தன் மனைவி செய்த பொருத்தனையை, அவளுடைய புருஷன் ஸ்திரப்படுத்திய பின்பு, அதை நிறைவேற்றாமல் போனால், தன் மனைவியின் அக்கிரமத்தை, அவளுடைய புருஷன் சுமக்கவேண்டும். புருஷன் அவைகளைக் கேட்டபின்பு செல்லாதபடி பண்ணினால், அவளுடைய அக்கிரமத்தை அவன் சுமப்பான் (எண் 30:15).

புருஷனையும் ஸ்திரீயையும், தகப்பனையும் தகப்பனுடைய வீட்டில் சிறுவயதில் இருக்கிற அவன் குமாரத்தியையும் குறித்து, கர்த்தர் மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே (எண் 30:16).

31 அதிகாரம்

எண்ணாகமம் 31-ஆவது அதிகாரம் "கர்த்தருடைய யுத்தப்புஸ்தகத்திலிருந்து" எடுக்கப்பட்டிருப்பதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்த அதிகாரம் எண்ணாகமம் புஸ்தகத்திற்கு இடையில் இங்கே சேர்க்கப்பட்டிருக்கிறது என்பது அவர்களுடைய கருத்து.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரோடு யுத்தம்பண்ணுகிறார்கள். இது ஒரு பரிசுத்தமான யுத்தம். இந்த யுத்தத்தைப்பற்றிய சரித்திரம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மீதியானியரிடத்தில் பழிவாங்குவாயாக என்று கர்த்தர் மோசேக்கு கட்டளையிடுகிறார் (எண் 31:1,2). இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார்கள் (எண் 31:3-6). இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு மகிமையான வெற்றி கிடைக்கிறது (எண் 31:7-12).

இஸ்ரவேல் புத்திரர் யுத்தத்தில் வெற்றி பெற்று தங்கள் பாளயத்திற்கு திரும்பி வருகிறார்கள். மோசே இஸ்ரவேலின் யுத்தவீரர்களை கனம்பண்ணுகிறார் (எண் 31:13). யுத்தத்திற்குப்போனவர்கள் மீதியானியருடைய ஸ்திரீகளை அழித்துப்போடாமல் அவர்களை சிறைப்பிடித்து கொண்டு வந்திருக்கிறார்கள். இதன் நிமித்தமாக மோசே அவர்களைக் கடிந்துகொள்கிறார்.

இஸ்ரவேலின் யுத்தவீரர்கள் தங்களை சுத்திகரித்துக்கொள்ளவேண்டுமென்று மோசே கட்டளையிடுகிறார் (எண் 31:19-24). மீதியானியரோடு யுத்தத்திற்குப்போன இஸ்ரவேல் புத்திரர், அவர்களை முறியடித்து திரளான கொள்ளைப்பொருட்களை கொண்டு வந்திருக்கிறார்கள். கொள்ளைப்பொருட்கள் பங்கிடப்படுகிறது.

கொள்ளையில் பாதி யுத்தவீரர்களுக்கும், அதில் மீதி பாதி இஸ்ரவேல் சபையாருக்கும் பிரித்துக்கொடுக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் பெற்றுக்கொண்ட கொள்ளைப்பொருளில் கர்த்தருக்கும் பங்கு கொடுக்கிறார்கள் (எண் 31:25-47). சேனாபதிகள் கர்த்தருக்கு காணிக்கைகளை செலுத்துகிறார்கள் (எண் 31:48-54).

மீதியானியரிடத்தில் பழிவாங்குவாயாக எண் 31:1-6

எண் 31:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 31:2. இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மீதியானியரிடத்தில் பழிவாங்குவாயாக; அதன் பின்பு உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய் என்றார்.

எண் 31:3. அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: கர்த்தர் நிமித்தம் மீதியானியரிடத்தில் பழிவாங்கும்பொருட்டு, உங்களில் அவர்கள்மேல் யுத்தத்திற்குப் போகத்தக்கதாக மனிதரைப் பிரித்தெடுங்கள்.

எண் 31:4. இஸ்ரவேலருடைய எல்லாக் கோத்திரங்களிலும் ஒவ்வொரு கோத்திரத்தில் ஆயிரம்பேரை யுத்தத்திற்கு அனுப்ப வேண்டும் என்றான்.

எண் 31:5. அப்படியே இஸ்ரவேலராகிய அநேகம் ஆயிரங்களில், ஒவ்வொரு கோத்திரத்தில் ஆயிரமாயிரம் பேராகப் பன்னீராயிரம் பேர் யுத்தசன்னத்தராய் நிறுத்தப்பட்டார்கள்.

எண் 31:6. மோசே அவர்களையும் ஆசாரியனாகிய எலெயாசாரின் குமாரன் பினெகாசையும் யுத்தத்திற்கு அனுப்புகையில், அவன் கையிலே பரிசுத்த தட்டுமுட்டுகளையும், தொனிக்கும் பூரிகைகளையும் கொடுத்து அனுப்பினான்.

மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுமாறு கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். மீதியானியர் கேத்தூராள் மூலமாக ஆபிரகாமின் சந்ததியைச் சேர்ந்தவர்கள்.

"ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீயையும் விவாகம் பண்ணியிருந்தான். அவள் அவனுக்குச் சிம்ரானையும், யக்ஷானையும், மேதானையும், மீதியானையும், இஸ்பாக்கையும், சூவாகையும், பெற்றாள்" (ஆதி 25:1,2).

மீதியானியர் பிற்காலத்தில் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கானான் தேசத்திற்கு அருகாமையில் வாசம்பண்ணுகிறார்கள். மீதியானியரின் ஒரு பிரிவினர் கானான் தேசத்திற்கு தெற்கு பகுதியில் குடியிருக்கிறார்கள். மோசேயின் மாமனாராகிய எத்திரோ, இந்தப் பகுதியில் குடியிருந்தவர். இவர்கள் உண்மையான தேவனை ஆராதிக்கிறவர்கள். கானான் தேசத்திற்கு தென்பகுதியிலுள்ள மீதியானியர் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார்கள்.

மீதியானியரில் மற்றொரு பிரிவைச் சேர்ந்தவர்கள் கானான் தேசத்திற்கு கிழக்குப் பகுதியில் குடியிருக்கிறார்கள் இவர்கள் தங்களுக்கு அருகாமையிலுள்ள தேசத்தாரோடு உடன்படிக்கைப்பண்ணி, அவர்களுடைய விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இந்த மீதியானியர் மற்ற தேசத்தாரையும் விக்கிரகாராதனையில் ஈடுபடுத்துகிறார்கள்.

விக்கிரகங்களை ஆராதிக்கிற மீதியானியர் மிகவும் அருவருப்பான சுபாவமுள்ளவர்கள். மற்ற தேசத்து ஜனங்கள் மத்தியிலே இவர்கள் தங்கள் ஸ்திரீகளை அனுப்பி, அவர்களோடு வேசித்தனம்பண்ண வைப்பார்கள். இதன் மூலமாக அந்த தேசத்து ஜனங்களையும் விக்கிரகாரதனையில் விழவைத்து விடுவார்கள். வேசித்தனமும் விக்கிரகாராதனையும் மீதியானியருடைய பிரதான பாவங்களாயிருக்கிறது.

பிலேயாமின் ஆலோசனைப்பிரகாரம், மீதியானியரின் ஸ்திரீகள் இஸ்ரவேல் புத்திரரோடு வேசித்தனம்பண்ணி, அவர்களை விக்கிரகாராதனையில் விழவைத்து விடுகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் மீதியானியருக்கு விரோதமாக எழும்பியிருக்கிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மீதியானியரிடத்தில் பழிவாங்குவாயாக" (எண் 31:1,2) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் மீதியானியரை பழிவாங்காமல், அவர்களை வேறுவிதமாக தண்டித்திருக்கலாம். ஆனால் மீதியானியரை பழிவாங்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

அமலேக்கியர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள். ஆனாலும் கர்த்தர் அமலேக்கியரை உடனே பழிவாங்கிவிடவில்லை. நீண்ட காலத்திற்கு பின்பே கர்த்தர் அமலேக்கியரை பழிவாங்குகிறார். ஆனால் இப்போதோ மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை உடனே பழிவாங்கவேண்டுமென்று கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

மீதியானியர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மிகவும் ஆபத்தானவர்கள். அவர்களிடத்தில் வேசித்தனமும் விக்கிரகாராதனையும் அதிகமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரோ மீதியானியரோடு வேசித்தனம்பண்ணி, அவர்களுடைய விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் ஜனத்தாரில் அநேகர் கர்த்தரை விட்டு விலகி விக்கிரகங்களை பின்பற்றிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மீதியானியர் மூலமாக வரும் ஆபத்துக்களை கர்த்தர் அறிந்திருக்கிறார். ஆகையினால் "இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மீதியானியரிடத்தில் பழிவாங்குவாயாக" என்று கர்த்தர் சொல்லுகிறார். பழிவாங்குதல் காலதாமதமில்லாமல் சீக்கிரத்தில் நடைபெறவேண்டும் என்பது கர்த்தருடைய கட்டளை.

தான் உயிரோடிருக்கும் காலத்திலேயே, மோசே மீதியானியரை பழிவாங்கவேண்டும். மோசே சீக்கிரத்தில் மரிக்கப்போகிறார். கர்த்தர் மோசேயின் மரணத்தைப்பற்றிச் சொல்லும்போது, மீதியானியரை பழிவாங்குவதையும், அவருடைய மரணத்தோடு சேர்த்து சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மீதியானியரை பழிவாங்கவேண்டும். "அதன் பின்பு உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்" (எண் 31:2) என்று கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

மீதியானியர் இஸ்ரவேல் புத்திரரை வேசித்தனத்திலும் விக்கிரகாராதனையிலும் வஞ்சித்ததினால், இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே மிகப்பெரிய சேதமுண்டாயிற்று. அதைப் பார்த்து மோசேயின் மனது மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது மீதியானியரை பழிவாங்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். மீதியானியர் பழிவாங்கப்படுவதைப் பார்த்து மோசேயின் மனதில் ஆறுதல் உண்டாகும்.

மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண, மோசே இஸ்ரவேல் ஜனங்களை ஆயத்தம்பண்ணுகிறார்.

மோசே ஜனங்களை நோக்கி, "கர்த்தர் நிமித்தம் மீதியானியரிடத்தில் பழிவாங்கும்பொருட்டு, உங்களில் அவர்கள்மேல் யுத்தத்திற்குப் போகத்தக்கதாக மனிதரைப் பிரித்தெடுங்கள். இஸ்ரவேலருடைய எல்லாக் கோத்திரங்களிலும் ஒவ்வொரு கோத்திரத்தில் ஆயிரம்பேரை யுத்தத்திற்கு அனுப்ப வேண்டும்" (எண் 31:3,4) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்வதற்கு காரணமாக இருந்த மீதியானியரைப் பழிவாங்க வேண்டுமென்பதே இந்த யுத்தத்தின் நோக்கமாகும். (எண் 25).

இஸ்ரவேலில் பன்னிரண்டு கோத்திரத்தார் இருக்கிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்திலும் ஆயிரம்பேர் வீதமாக, பன்னிரண்டாயிரம் பேரை பிரித்தெடுக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் மீதியானியர்மேல் யுத்தத்திற்கு போகத்தக்கவர்கள். இஸ்ரவேல் ஜனத்தாரின் எண்ணிக்கை திரளாயிருக்கிறது. யுத்தம்பண்ணுவதற்கு அவர்களால் இன்னும் அநேக யுத்தவீரர்களை ஆயத்தம்பண்ண முடியும். ஆனால் மோசேயோ ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஆயிரம்பேரை மாத்திரமே ஆயத்தம்பண்ணுகிறார்.

இஸ்ரவேலுடைய சேனையின் எண்ணிக்கை குறைவாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கிறார். கர்த்தர் அவர்களுக்காக யுத்தம்பண்ணுவார். கொஞ்சம் பேரைக் கொண்டாகிலும், அநேகம் பேரைக்கொண்டாகிலும் கர்த்தரால் இரட்சிக்க முடியும்.

"யோனத்தான் தன் ஆயுததாரியாகிய வாலிபனை நோக்கி: விருத்தசேதனம் இல்லாதவர்களுடைய அந்தத் தாணையத்திற்குப் போவோம் வா; ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்; அநேகம்பேரைக் கொண்டாகிலும், கொஞ்சம் பேரைக்கொண்டாகிலும், ரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை என்றான்" (1சாமு 14:6).

இஸ்ரவேல் புத்திரருடைய சேனையில் குறைந்த எண்ணிக்கையில் யுத்தவீரர்கள் இருக்கிறார்கள் என்பது கர்த்தருக்கு ஒரு பிரச்சனையல்ல. இதனால் கர்த்தருடைய சித்தம் நிறைவேறாமல் நின்றுபோவதில்லை. கர்த்தர்செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

இஸ்ரவேல் ஜனத்தார் மோசேயின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். அப்படியே இஸ்ரவேலராகிய அநேகம் ஆயிரங்களில், ஒவ்வொரு கோத்திரத்தில் ஆயிரமாயிரம் பேராகப் பன்னீராயிரம் பேர் யுத்தசன்னத்தராய் நிறுத்தப்படுகிறார்கள் (எண் 31:5).

மோசே அவர்களையும் ஆசாரியனாகிய எலெயாசாரின் குமாரன் பினெகாசையும் யுத்தத்திற்கு அனுப்புகிறார். பினெகாசின் கையிலே மோசே பரிசுத்த தட்டுமுட்டுகளையும், தொனிக்கும் பூரிகைகளையும் கொடுத்து அனுப்புகிறார் (எண் 31:6).

இஸ்ரவேல் புத்திரர் யுத்தம் பண்ண புறப்பட்ட போது, ஆசாரியரும் யுத்த வீரர்களோடு உடன் செல்கிறார்கள். அவர்கள் பரிசுத்த பூரிகைகளைத் தங்களோடு எடுத்துச் செல்கிறார்கள் (எண் 25:7-15,)

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருக்கு விரோதமாக நடத்தப்போகிற யுத்தம் ஒரு பரிசுத்தமான யுத்தம். அவர்கள் கர்த்தர் நிமித்தம் மீதியானியரிடத்தில் பழிவாங்கப்போகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் சேனைக்கு ஆசாரியனாகிய பினெகாஸ் தலைவனாகயிருக்கிறான். அவன் தன் கையிலே பரிசுத்த தட்டுமுட்டுக்களையும், தொனிக்கும் பூரிகைகளையும் யுத்தக்களத்திற்குகொண்டு போகிறான்.

எலெயாசாரின் குமாரனாகிய பினெகாஸ் தன்னுடைய மார்பில் நியாயவிதி மார்ப்பதக்கமும் அணிந்திருக்கிறான். இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, அவர்கள் கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டிய அவசியமான, அவசரமான சூழ்நிலை ஏற்பட்டால், ஆசாரியனாகிய பினெகாஸ் கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்கு வசதியாக, அவனிடத்தில் நியாயவிதி மார்ப்பதக்கமும் இருக்கிறது.

மீதியானியரை பழிவங்குகிறார்கள்

எண் 31:7-12

எண் 31:7. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் மீதியானியருடன் யுத்தம் பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்றுபோட்டார்கள்.

எண் 31:8. அவர்களைக் கொன்றுபோட்டதும் அன்றி, மீதியானியரின் ஐந்து ராஜாக்களாகிய ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா என்பவர்களையும் கொன்றுபோட்டார்கள். பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்றுபோட்டார்கள்.

எண் 31:9. அன்றியும் இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் சிறைபிடித்து, அவர்களுடைய மிருக ஜீவன்களாகிய ஆடுமாடுகள் யாவையும், மற்ற ஆஸ்திகள் யாவையும் கொள்ளையிட்டு,

எண் 31:10. அவர்கள் குடியிருந்த ஊர்கள் கோட்டைகள் யாவையும் அக்கினியால் சுட்டெரித்து,

எண் 31:11. தாங்கள் கொள்ளையிட்ட பொருளையும் தாங்கள் பிடித்த நரஜீவன் மிருக ஜீவன் அனைத்தையும் சேர்த்து,

எண் 31:12. சிறைபிடிக்கப்பட்ட மனிதரையும், மிருகங்களையும், கொள்ளையிட்ட பொருள்களையும் எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இக்கரையில் மோவாபின் சமனான வெளிகளிலுள்ள பாளயத்திலிருந்த மோசேயினிடத்துக்கும், ஆசாரியனாகிய எலெயாசாரினிடத்துக்கும், இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்துக்கும் கொண்டுவந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் சேனை சொற்ப எண்ணிக்கையுள்ளதாயிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கிறார். கர்த்தர் நம் பட்சத்திலிருக்கும்போது, நமக்கு விரோதமாக யாராலும் யுத்தம்பண்ணி நம்மை ஜெயிக்க முடியாது.

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருடன் யுத்தம் பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்றுபோடுகிறார்கள் (எண் 31:7).

பழைய ஏற்பாட்டுக்காலத்திலே இஸ்ரவேல் புத்திரர் மற்ற தேசத்தாரோடு யுத்தம்பண்ணும்போது, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் யுத்தம்பண்ணுவது வழக்கம். அவர்கள் யுத்த பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவார்கள். இஸ்ரவேலரின் சேனை ஒரு தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, முதலாவதாக அந்த தேசத்தின்மீது யுத்த பிரகடனம்பண்ணுவார்கள். தாங்கள் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கான காரணத்தையும் அவர்களுக்கு அறிவிப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மற்ற தேசத்தார்மீது யுத்தம்பண்ண புறப்பட்டுப்போகும்போது, அவசரப்பட்டு உடனே யுத்தம்பண்ணி விடமாட்டார்கள். யுத்தத்திற்கான காரணத்தையும், தங்கள் பக்கத்திலிருக்கிற நியாயத்தையும், எதிரி தேசத்தார் பக்கத்திலிருக்கிற அநியாயத்தையும் எடுத்துச் சொல்லுவார்கள். எதிரி தேசத்தாரை தங்களிடத்தில் சரணடையுமாறு அறிவிப்பார்கள்.

எதிரி தேசத்தார் இஸ்ரவேல் சேனையிடம் சரணடைந்தால், யுத்தம் தவிர்க்கப்படும். இரத்த சேதாரம் ஏற்படாது. இஸ்ரவேல் புத்திரர் பொதுவாக எதிரி தேசத்தின் தலைவர்களையும், அவர்களுடைய பிரபுக்களையும், சேனாபதிகளையும் தங்களிடத்தில் சரணடையச் சொல்லுவது வழக்கம்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தப்பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரும் பிற்காலத்தில், கர்த்தருடைய யுத்தப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, அந்தப் பிரகாரமாகவே எதிரி தேசத்தாரோடு யுத்தம்பண்ணுகிறார்கள்.

"நீ ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ண நெருங்கும்போது, அந்தப் பட்டணத்தாருக்குச் சமாதானம் கூறக்கடவாய். அவர்கள் உனக்குச் சமாதானமான உத்தரவுகொடுத்து, வாசலைத் திறந்தால், அதிலுள்ள ஜனங்கள் எல்லாரும் உனக்குப் பகுதிகட்டுகிறவர்களாகி, உனக்கு ஊழியஞ்செய்யக்கடவர்கள்" (உபா 20:10,11).

"அங்கே இருந்த இஸ்ரவேலின் கோத்திரத்தார் பென்யமீன் கோத்திரமெங்கும் ஆட்களை அனுப்பி: உங்களுக்குள்ளே நடந்த இந்த அக்கிரமம் என்ன? இப்பொழுது கிபியாவில் இருக்கிற பேலியாளின் மக்களாகிய அந்த மனுஷரை நாங்கள் கொன்று, பொல்லாப்பை இஸ்ரவேலை விட்டு விலக்கும்படிக்கு, அவர்களை ஒப்புக்கொடுங்கள் என்று சொல்லச்சொன்னார்கள்; பென்யமீன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரராகிய தங்கள் சகோதரரின் சொல்லைக் கேட்க மனமில்லாமல், இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம் பண்ணப் புறப்படும்படிக்கு, பட்டணங்களிலிருந்து கிபியாவுக்கு வந்து கூடினார்கள்" (நியா 20:12-14).

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரிடம் யுத்தம்பண்ணி, அவர்களுடைய புருஷர்கள் யாவரையும் கொன்றுபோடுகிறார்கள். இஸ்ரவேலர் மீதியானியருடைய தேசத்திற்குள் எவ்வளவு தூரம் உள்ளே போகமுடியுமோ, அவ்வளவு தூரம் உள்ளே சென்று, மீதியானியருடைய புருஷர்களையெல்லாம் தங்கள் பட்டயத்தினால் கொன்றுபோடுகிறார்கள். அவர்களுக்கு தப்பிக்க இடம் கொடுக்கவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருடைய புருஷர்கள் யாவரையும் கொன்றுபோட்டதும் அன்றி, மீதியானியரின் ஐந்து ராஜாக்களாகிய ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா என்பவர்களையும் கொன்றுபோடுகிறார்கள். (எண் 31:8).

மீதியானியர்மீது இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்த வெற்றியைப்பற்றிய விவரம் வருமாறு :

1. மீதியானியருடைய புருஷர்கள் யாவரையும் கொன்றுபோட்டார்கள். (எண் 31:7)

2. மீதியானியரின் ஐந்து ராஜாக்களைக் கொன்று போட்டார்கள்.

   (1) ஏவி (யோசு 13:21)

   (2) ரேக்கேம் (யோசு 13:21)

   (3) சூர் (எண் 25:15; யோசு 13:21)

   (4) ஊர் (யோசு 13:21)

   (5) ரேபா (யோசு 13:21)

3. பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்ினாலே கொன்றுபோட்டார்கள். (எண் 31:8,16 ;எண் 22:5-24:25, யோசு 13:22; யோசு 24:9-10; நெகே 13:2; மீகா 6:5; 2பேதுரு 2:15-16; யூதா 1:11; வெளி 2:14)

4. மீதியானியரின் ஸ்திரீகளைச் சிறைபிடித்தார்கள் (எண் 31:9)

5. மீதியானியரின் குழந்தைகளைச் சிறைபிடித்தார்கள்.

6. மீதியானியருடைய மிருக ஜீவன்களாகிய ஆடுமாடுகள் யாவையும், மற்ற ஆஸ்திகள் யாவையும் கொள்ளையிட்டார்கள்.

7. மீதியானியர் குடியிருந்த ஊர்கள் யாவையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள் (எண் 31:10-11).

8. மீதியானியருடைய கோட்டைகள் யாவையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள். (எண் 31:10)

9. சிறைபிடிக்கப்பட்ட மனிதரையும், மிருகங்களையும், கொள்ளையிட்ட பொருள்களையும் மோசேயினிடத்துக்கும், ஆசாரியனாகிய எலெயாசாரினிடத்துக்கும், இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்துக்கும் கொண்டுவந்தார்கள். (எண் 31:12-13)

மீதியானியரின் இந்த ஐந்து ராஜாக்களும், மீதியானியரின் மூப்பர்கள் என்றும், சீகோனின் அதிபதிகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

"மீதியானரின் மூப்பரை நோக்கி: மாடு வெளியின் புல்லை மேய்கிறதுபோல, இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்துபோடும் என்றான். அக்காலத்திலே சிப்போரின் குமாரனாகிய பாலாக் மோவாபியருக்கு ராஜாவாயிருந்தான்" (எண் 22:4).

"சமபூமியிலுள்ள எல்லாப் பட்டணங்களும், எஸ்போனில் ஆண்டிருந்த சீகோன் என்னும் எமோரியருடைய ராஜாவின் ராஜ்யம் முழுவதும் அவர்கள் எல்லைக்குள்ளாயிற்று; அந்தச் சீகோனையும், தேசத்தில் குடியிருந்து சீகோனின் அதிபதியாயிருந்த ஏவி, ரெக்கேம், சூர், ஊர், ரேபா என்னும் மீதியானின் பிரபுக்களையும் மோசே வெட்டிப் போட்டான்" (யோசு 13:21).

இஸ்ரவேல் புத்திரர் கொன்றுபோட்ட மீதியானியரின் ஐந்து ராஜாக்களின் பெயர்கள் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களில் சூர் என்பவன் ஒருவன். இவன் கஸ்பியின் தகப்பனாகயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"குத்துண்ட மீதியானிய ஸ்திரீயின் பேர் கஸ்பி, அவள் சூரின் குமாரத்தி, அவன் மீதியானியருடைய தகப்பன் வம்சத்தாரான ஜனங்களுக்குத் தலைவனாயிருந்தான்" (எண் 25:15).

இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்றுபோடுகிறார்கள் (எண் 31:8). பிலேயாம் மீதியானியருடைய தேசத்திற்கு எதற்காக போனான் என்பது தெரியவில்லை. இஸ்ரவேல் புத்திரர் நிமித்தம் மீதியானியரை பழிவாங்கும்போது, பிலேயாமையும் பழிவாங்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக தீங்கு செய்த யாரையும் கர்த்தர் தப்பவிடவில்லை. கர்த்தருடைய வழிநடத்துதலினால் பிலேயாம் இப்போது மீதியானியருடைய தேசத்திற்கு வந்திருக்கிறான். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே, மீதியானியர் பழிவாங்கப்படும்போது, பிலேயாமும் அங்கே பழிவாங்கப்படுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் சிறைபிடித்து, இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்தில் கொண்டு வருகிறார்கள் (எண் 31:9).

மீதியானியர் குடியிருந்த ஊர்கள், கோட்டைகள் யாவையும் இஸ்ரவேல் புத்திரர் அக்கினியால் சுட்டெரித்துப்போடுகிறார்கள் (எண் 31:10).

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருடைய மிருக ஜீவன்களாகிய ஆடுமாடுகள் யாவையும், மற்ற ஆஸ்திகள் யாவையும் கொள்ளையிட்டு, இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்தில் கொண்டு வருகிறார்கள் (எண் 21:9).

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் கொள்ளையிட்ட பொருளையும் தாங்கள் பிடித்த நரஜீவன், மிருக ஜீவன் அனைத்தையும் சேர்த்து, சிறைபிடிக்கப்பட்ட மனிதரையும், மிருகங்களையும், கொள்ளையிட்ட பொருள்களையும் எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இக்கரையில் மோவாபின் சமனான வெளிகளிலுள்ள பாளயத்திலிருந்த மோசேயினிடத்துக்கும், ஆசாரியனாகிய எலெயாசாரினிடத்துக்கும், இஸ்ரவேல் புத்திரராகிய சபையாரிடத்துக்கும் கொண்டுவருகிறார்கள் (எண் 21:11,12).

சுத்திகரிப்பு
எண் 31:13-24

எண் 31:13. மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையின் பிரபுக்கள் எல்லாரும் அவர்களைச் சந்திக்கப் பாளயத்திற்கு வெளியே புறப்பட்டுப்போனார்கள்.

எண் 31:14. அப்பொழுது மோசே யுத்தத்திலிருந்து வந்த ஆயிரம்பேருக்குத் தலைவரும், நூறுபேருக்குத் தலைவருமாகிய சேனாதிபதிகள் மேல் கோபங்கொண்டு,

எண் 31:15. அவர்களை நோக்கி: ஸ்திரீகள் எல்லாரையும் உயிரோடே விட்டுவிட்டீர்களா?

எண் 31:16. பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள்தானே; அதினால் கர்த்தரின் சபையிலே வாதையும் நேரிட்டதே.

எண் 31:17. ஆகையால் குழந்தைகளில் எல்லா ஆண்பிள்ளைகளையும், புருஷசம்யோகத்தை அறிந்த எல்லா ஸ்திரீகளையும் கொன்றுபோடுங்கள்.

எண் 31:18. ஸ்திரீகளில் புருஷசம்யோகத்தை அறியாத எல்லாப் பெண்பிள்ளைகளையும் உங்களுக்காக உயிரோடே வையுங்கள்.

எண் 31:19. பின்பு நீங்கள் ஏழுநாள் பாளயத்திற்குப் புறம்பே தங்குங்கள்; நரஜீவனைக் கொன்றவர்களும், வெட்டுண்டவர்களைத் தொட்டவர்களுமாகிய நீங்கள் யாவரும் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் உங்களையும் உங்களால் சிறைபிடிக்கப்பட்டவர்களையும் சுத்திகரித்து,

எண் 31:20. அந்தப்படியே எல்லா வஸ்திரத்தையும், தோலால் செய்த கருவிகளையும், வெள்ளாட்டுமயிரினால் நெய்தவைகளையும், மரச்சாமான்களையும் சுத்திகரிக்கக்கடவீர்கள் என்றான்.

எண் 31:21. ஆசாரியனாகிய எலெயாசாரும் யுத்தத்திற்குப் போய்வந்த படைவீரரை நோக்கி: கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்ட விதிப்பிரமாணம் என்னவென்றால்:

எண் 31:22. அக்கினிக்கு நிற்கத்தக்கவைகளாகிய பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, தகரம், ஈயம் ஆகிய இவைகளெல்லாம் சுத்தமாகும்படிக்கு,

எண் 31:23. அவைகளை அக்கினியிலே போட்டெடுக்கக்கடவீர்கள்; தீட்டுக்கழிக்கும் தண்ணீராலும் அவைகள் சுத்திகரிக்கப்படவேண்டும்; அக்கினிக்கு நிற்கத்தகாதவைகளையெல்லாம் தண்ணீரினால் சுத்தம் பண்ணக்கடவீர்கள்.

எண் 31:24. ஏழாம் நாளில் உங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருப்பீர்கள்; பின்பு நீங்கள் பாளயத்திற்குள் வரலாம் என்றான்.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, தங்கள் பாளயத்திற்கு திரும்பி வருகிறார்கள். அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையின் பிரபுக்கள் எல்லாரும் அவர்களைச் சந்திக்கப் பாளயத்திற்கு வெளியே புறப்பட்டுப்போகிறார்கள் (எண் 31:13).

சிறைப்பிடிக்கப்பட்டவர்களையும், கொள்ளைப் பொருட்களையும், பாளயத்திற்குள் உடனடியாகக் கொண்டுவரக் கூடாது. அவை சுத்தமானவையா, தீட்டானவையா, என்பதைச் சோதித்துப் பார்த்த பின்பு, எதை உள்ளே அனுமதிக்கவேண்டும். எதை உள்ளே அனுமதிக்கக்கூடாது என்று ஆசாரியர் முடிவு பண்ணுவார்கள். பாளயம் எல்லாத் தீட்டுக்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டிருக்கும். (எண் 31:11-13).

மீதியானியரை பழிவாங்கின இஸ்ரவேல் புத்திரருக்கு மரியாதை காண்பிக்கும் வண்ணமாகவும், அவர்களை வரவேற்கும் வண்ணமாகவும், மோசேயும், ஆசாரியனும், பிரபுக்களும் பாளயத்திற்கு வெளியே புறப்பட்டுப்போகிறார்கள். மோசே யுத்தக்களத்திலிருந்து திரும்பி வந்திருக்கிற இஸ்ரவேல் புத்திரரையும், அவர்கள் கொள்ளையிட்டுக் கொண்டு வந்திருக்கிற மிருகஜீவன்களாகிய ஆடுமாடுகளையும், அவற்றோடுகூட அவர்கள் சிறைப்பிடித்து கொண்டு வந்திருக்கிற மீதியானியரின் ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் பார்க்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் புருஷர்களை மாத்திரம் கொன்றுபோட்டார்கள். ஆனால் அவர்களுடைய ஸ்திரீகளை கொன்றுபோடாமல் உயிரோடு விட்டுவிடுகிறார்கள். இதனால் மோசேக்கு அவர்கள்மேல் கோபம் வருகிறது.

அப்பொழுது மோசே யுத்தத்திலிருந்து வந்த ஆயிரம்பேருக்குத் தலைவரும், நூறுபேருக்குத் தலைவருமாகிய சேனாதிபதிகள் மேல் கோபங்கொண்டு, அவர்களை நோக்கி,

"ஸ்திரீகள் எல்லாரையும் உயிரோடே விட்டுவிட்டீர்களா? பேயோரின் சங்கதியிலே பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள்தானே; அதினால் கர்த்தரின் சபையிலே வாதையும் நேரிட்டதே. ஆகையால் குழந்தைகளில் எல்லா ஆண்பிள்ளைகளையும், புருஷசம்யோகத்தை அறிந்த எல்லா ஸ்திரீகளையும் கொன்றுபோடுங்கள் (எண் 31:14-17) என்று சொல்லுகிறார்.

மோசே கோபப்படுகிற குணமுடையவர் அல்ல. அவர் சாந்தகுணமுடையவர். நாற்பது வருஷ காலங்களில் மோசே பல பிரச்சனைகளைத் தாங்கிக் கொண்டவர். கன்மலையைப் பார்த்து, பேசுவதற்குப் பதிலாக மோசே அதை இரண்டுதரம் அடித்தபோது, அவர் கோபப்பட்டிருக்கலாம். ஆனால் வேதவாக்கியம் அவர் கீழ்ப்படியவில்லை என்றே கூறுகிறது. (எண் 20:8-13)

இஸ்ரவேல் புத்திரர் தொடர்ந்து பாவம் செய்து கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணி, தோல்விகளைச் சந்தித்தபோது, மோசே அமைதியைக் காத்துக் கொண்டார். மோசே கோபப்பட்ட சமயங்களிலெல்லாம் கர்த்தரும் கோபப்பட்டிருக்கிறார். இஸ்ரவேலரின் தொடர்ச்சியான பாவம் கர்த்தரைக் கோபப்பட வைத்தது. கர்த்தர் மோசேயைப் போல பொறுமையோடு இருக்க வேண்டிய அவசியமில்லை. மோசே கர்த்தருக்கும், ஜனங்களுக்கும் நடுவே மத்தியஸ்தராகவும், பரிந்து பேசுகிறவராகவும் இருக்கிறார். பல சமயங்களில் மோசே கர்த்தருடைய கோபத்தை அமைதிப்படுத்தியிருக்கிறார். மோசே பரிந்து பேசவில்லையென்றால், கர்த்தர் தமக்கு எதிராகக் கலகம்பண்ணிய ஆயிரக்கணக்கான ஜனங்களைச் சங்காரம் பண்ணியிருந்திருப்பார்.

மோசே கோபங்கொண்ட சம்பவங்களைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பார்வோனை விட்டுப் புறப்பட்ட கடைசி சம்பவத்தின் போது. (யாத் 11:8)

2. இஸ்ரவேல் புத்திரர் இறைச்சிக்காக முறுமுறுத்தபோது (யாத் 16:20)

3. இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக் குட்டியைச் செய்து பாவம்செய்த போது. (யாத் 32:19-22)

4. ஆரோனின் குமாரர் மரித்துப்போன வேளையில் ஆரோன் பாவநிவாரண பலியை ஒழுங்காகச் செலுத்தாதபோது. (லேவி 10:16)

5. இஸ்ரவேல் புத்திரர் இரண்டாம் முறையாக இறைச்சிக்காக முறுமுறுத்தபோது (எண் 11:10-15)

6. கோராகு கலகம் பண்ணிய போதும், தாத்தானும், அபிராமும் கீழ்ப்படிய மறுத்த போதும். (எண் 16:15)

7. இராணுவத்தின் தலைவர்கள் மீதியானியர் அனைவரையும் கொல்லாமல் கீழ்ப்படியாமல் போனபோது. (எண் 31:14)

கர்த்தர் கோபங்கொண்ட சம்பவங்களைப்பற்றியும் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. மோசே தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொள்ள தாமதித்தபோது. (யாத் 4:14)

2. பார்வோனை அகற்றிய சம்பவத்தில். (யாத் 15:7)

3. இஸ்ரவேல் புத்திரர் பொன்கன்றுக் குட்டியைச் செய்து பாவம் செய்த போது. (யாத் 32:10-12,22; உபா 9:8-22)

4. ஆசாரியர் மதுபானம் அருந்தி, ஆசாரிய ஊழியம் செய்தபோது. (லேவி 10:1-11)

5. இஸ்ரவேல் புத்திரர் குற்றம் சுமத்தியபோது. (எண் 11:1)

6. இஸ்ரவேல் புத்திரர் இறைச்சிக்காக முறுமுறுத்தபோது. (எண் 11:10)

7. இஸ்ரவேல் புத்திரர் பேராசைப்பட்டு பெருந்தீனியாகப் புசித்தபோது. (எண் 11:33)

8. மீரியாமும், ஆரோனும் பாவம் செய்த போது. (எண் 12:9)

9. கோராகுவிற்கும், அவனுடைய கூட்டத்தாருக்கும் தேவன் விதித்த நியாயத்தீர்ப்பிற்கு எதிராக இஸ்ரவேல் புத்திரர் கலகம் பண்ணிய போது.

10. பிலேயாமின் இறுமாப்பைக் கர்த்தர் கண்டபோது. (எண் 22:22)

11. இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனையிலும், வேசித்தனத்திலும் விழுந்தபோது. (எண் 25:3-4,11)

12. இஸ்ரவேல் புத்திரர் காதேஸ்பர்னேயாவில் கலகம் பண்ணிய போது. (எண் 14:11-35; எண் 32:11-14; உபா 1:34)

13. மோசே கற்பாறையை இரண்டு தரம் அடித்து பாவம் செய்தபோது. (உபா 1:37; உபா 3:26; உபா 4:21)

14. ஆரோன் பாவம் செய்த போது. (உபா 9:20)

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிற மற்ற சம்பவங்களில் கர்த்தர் கோபப்பட்டதாக நேரடியாகச் சொல்லப்படாவிட்டாலும், அந்த சம்பவங்களிலும் கர்த்தருடைய கோபம் வெளிப்படுகிறது. இஸ்ரவேல் மீதும், அதைச் சுற்றியுள்ள தேசங்கள்மீதும் கர்த்தர் அனுப்பிய வாதைகளும், நியாயத்தீர்ப்புக்களும் அவருடைய கோபத்தை வெளிப்படுத்துகிறது.

பிலேயாமின் ஆலோசனையின்பேரில் மீதியானியர் இஸ்ரவேல் புத்திரரை விக்கிரகாராதனைக்கும், வேசித்தனத்திற்கும் வழிநடத்தினார்கள். இதனால் அவர்களை அழித்துவிடுமாறு கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். கர்த்தர் எந்தத் தேசத்தையும் தேவையில்லாமல் வெறுக்கமாட்டார். தமக்கும், தம்முடைய பிள்ளைகளுக்கும் எதிராக மீதியானியர் பாவம் செய்த படியினால், தேவனுடைய கோபம் அவர்கள்மீது எழும்பிற்று. சிறைப்பிடிக்கப்பட்ட கன்னிகைகள் மனைவிகளாக இருக்கலாம். அடிமைகளாக இருக்கக்கூடாது (உபா 21:10-14).

மீதியானியரின் ஸ்திரீகளே இஸ்ரவேல் புத்திரரை, பாகால்பேயோரின் சங்கதியில் வஞ்சித்தவர்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மீதியானியருடைய ஸ்திரீகளோடு வேசித்தனம்பண்ணி, அவர்களுடைய விக்கிரகங்களையும் ஆராதித்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களிலே மீதியானியரின் ஸ்திரீகள் பங்காளிகளாயிருக்கிறார்கள். ஆகையினால் அவர்களை உயிரோடு விடக்கூடாது என்றும், அவர்களைக் கொன்றுபோடவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார்.

மீதியானியரின் ஸ்திரீகள் உயிரோடிருப்பது இஸ்ரவேல் புத்திரருக்கு மிகவும் ஆபத்தானது. இஸ்ரவேல் புத்திரர் அந்த ஸ்திரீகளை சிறைப்பிடித்து கொண்டு வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் அந்த ஸ்திரீகளோடு மறுபடியுமாய் வேசித்தனம்பண்ணுவதற்கும், அவர்களுடைய விக்கிரகங்களை ஆராதிப்பதற்கும் வாய்ப்புண்டாகும்.

மீதியானியரின் ஸ்திரீகள் இப்போது சிறைப்பிடிக்கப்பட்டவர்களாகயிருந்தாலும், அவர்கள் உயிரோடிருப்பதினால், பிற்காலத்தில் இஸ்ரவேல் புத்திரரை ஜெயிப்பதற்கு வாய்ப்புள்ளது. சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் ஜெயம் பெறுவார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மீதியானயரின் புருஷர்களைக் கொன்றுபோட்டாலும், பிற்காலத்தில், மீதியானியரின் ஸ்திரீகள் இஸ்ரவேல் புத்திரரை அழித்துப்போடுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் மீதியானியரின் ஸ்திரீகள் எல்லோரும் கொன்றுபோட வேண்டுமென்று மோசே சொல்லுகிறார்.

சிறைப்பிடிக்கப்பட்ட மீதியானியரில், யாரை உயிரோடு வைக்கவேண்டுமென்று, யாரை கொன்றுபோடவேண்டும் என்றும் மோசே சொல்லுகிறார். மோசே யுத்தத்திலிருந்து வந்தவர்களை நோக்கி, "குழந்தைகளில் எல்லா ஆண்பிள்ளைகளையும், புருஷசம்யோகத்தை அறிந்த எல்லா ஸ்திரீகளையும் கொன்றுபோடுங்கள். ஸ்திரீகளில் புருஷசம்யோகத்தை அறியாத எல்லாப் பெண்பிள்ளைகளையும் உங்களுக்காக உயிரோடே வையுங்கள்" (எண் 31:17,18) என்று சொல்லுகிறார்.

ஆண்பிள்ளைகள் வளர்ந்து, இஸ்ரவேல் புத்திரரைப் பழிவாங்குவதற்கு முயற்சி பண்ணக்கூடாது என்பதற்காக இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதாத்தின் வாழ்வில் நடைபெற்ற சம்பவம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும் (1இராஜா 11:14-40).

கர்த்தருடைய பிரமாணத்தின்படி இஸ்ரவேல் புத்திரர் தங்களை சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். அவர்கள் ஏழுநாட்களுக்கு பாளயத்திற்கு புறம்பே தங்கவேண்டும். அவர்கள் யாவரும், மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும், தங்களையும் தங்களால் சிறைப்பிடிக்கப்பட்டவர்களையும் சுத்திகரிக்கவேண்டும். மீதியானியரோடு யுத்தத்திற்குப்போன இஸ்ரவேல் புத்திரர், நரகஜீவன்களைக் கொன்றவர்களாகவும், வெட்டுண்டவர்களை தொட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் தங்களை மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். இது கர்த்தருடைய சுத்திகரிப்பின் பிரமாணம் (எண் 31:19).

மோசே யுத்தத்திலிருந்து வந்த இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் ஏழுநாள் பாளயத்திற்குப் புறம்பே தங்குங்கள்; நரஜீவனைக் கொன்றவர்களும், வெட்டுண்டவர்களைத் தொட்டவர்களுமாகிய நீங்கள் யாவரும் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் உங்களையும் உங்களால் சிறைபிடிக்கப்பட்டவர்களையும் சுத்திகரித்து, அந்தப்படியே எல்லா வஸ்திரத்தையும், தோலால் செய்த கருவிகளையும், வெள்ளாட்டுமயிரினால் நெய்தவைகளையும், மரச்சாமன்களையும் சுத்திகரிக்கக்கடவீர்கள்" (எண் 31:19,20) என்று சொல்லுகிறார்.

ஒவ்வொரு போர்வீரனும் ஏழு நாட்களுக்கு தன்னைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். இவர்கள் மனுஷருடைய மரித்துப்போன பிரேதங்களைத் தொட்டிருப்பார்கள். (எண் 5:2; எண் 6:6,11; எண் 9:6-10; எண் 19:11-18). அவர்களுடைய எல்லா வஸ்திரத்தையும், தோலால் செய்த கருவிகளையும், வெள்ளாட்டுமயிரினால் நெய்தவைகளையும், மரச்சாமன்களையும் சுத்திகரிக்க வேண்டும். (எண் 31:20).

சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறின பின்பு, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாளயங்களுக்குள் பிரவேசிக்கலாம். கர்த்தருடைய பிரமாணத்தின்படி அவர்கள் சுத்திகரிக்கப்படும்போது, அவர்களுடைய சரீரமும், மனதும் சுத்திகரிக்கப்படும். அவர்கள் யுத்தக்களத்திலே சத்துருக்களை பட்டயத்தினால் வெட்டினார்கள். இதனால் அவர்களுடைய சரீரம் தீட்டுப்பட்டிருக்கிறது. மேலும் சத்துருக்களை வெட்டும்போது, அவர்களுடைய மனதில் கோபமும், கொலைவெறியும் அதிகமாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் சுத்திகரிக்கப்படும்போது, அவர்களுடைய மனதிலுள்ள கோபங்களும் கொலைவெறிகளும் அவர்களை விட்டு நீங்கி, அவர்களுடைய மனதும் சுத்தமாகும்.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருடைய ஆஸ்திகளை கொள்ளையிட்டு கொண்டு வந்திருக்கிறார்கள். மீதியானியரின் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் சிறைப்பிடித்து, அவர்களுடைய ஆடுமாடுகளையும் கொள்ளையிட்டு கொண்டு வந்திருக்கிறார்கள். யுத்தத்திலிருந்து திரும்பி வந்திருக்கிற இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய கொள்ளைப்பொருட்களையெல்லாம் சுத்தம்பண்ண வேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் யாவரும், மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தங்களையும், தங்களால் சிறைப்பிடிக்கப்பட்டவர்களையும் சுத்திகரிக்கவேண்டும் (எண் 31:19). மேலும் தாங்கள் கொள்ளையிட்டு கொண்டு வந்திருக்கிற கொள்ளைப்பொருட்களையும் அவர்கள் சுத்திகரிக்கவேண்டும்.

கொள்ளைப்பொருட்களில், அக்கினியினால் சுத்திகரிக்கப்பட வேண்டியவைகளை அக்கினியினாலும், அக்கினியினால் நிற்கத்தகாதவைகளை தீட்டுக்கழிக்கும் தண்ணீரினாலும் சுத்தம்பண்ண வேண்டும்.

ஆசாரியனாகிய எலெயாசாரும் யுத்தத்திற்குப் போய்வந்த படைவீரரை நோக்கி, "கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்ட விதிப்பிரமாணம் என்னவென்றால் :

அக்கினிக்கு நிற்கத்தக்கவைகளாகிய பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, தகரம், ஈயம் ஆகிய இவைகளெல்லாம் சுத்தமாகும்படிக்கு, அவைகளை அக்கினியிலே போட்டெடுக்கக்கடவீர்கள்; தீட்டுக்கழிக்கும் தண்ணீராலும் அவைகள் சுத்திகரிக்கப்படவேண்டும்; அக்கினிக்கு நிற்கத்தகாதவைகளையெல்லாம் தண்ணீரினால் சுத்தம் பண்ணக்கடவீர்கள் (எண் 31:21-23) என்றும்,

ஏழாம் நாளில் உங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருப்பீர்கள்; பின்பு நீங்கள் பாளயத்திற்குள் வரலாம் (எண் 31:24) என்றும் சொல்லுகிறார்.

பொன், வெள்ளி ஆகியவற்றைச் சுத்திகரிக்கும் விதிப்பிரமாணமாவது :

1. பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, தகரம், ஈயம் ஆகிய இவைகளெல்லாம் சுத்தமாகும்படிக்கு, அக்கினியிலே போட்டெடுக்க வேண்டும். (எண் 31:23).

2. தீட்டுக்கழிக்கும் தண்ணீராலும் அவைகள் சுத்திகரிக்கப்படவேண்டும் (எண் 31:23; எண் 19:1-22).

3. அக்கினிக்கு நிற்கத் தகாதவைகளையெல்லாம் தண்ணீரினால் சுத்தம் பண்ணவேண்டும். (எண் 31:23).

4. ஏழாம் நாளில் யுத்தவீரர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்கவேண்டும்; அப்பொழுது சுத்தமாயிருப்பார்கள்; பின்பு அவர்கள் பாளயத்திற்குள் வரலாம் (எண் 31:24).

கொள்ளையில் பங்குவீதம் எண் 31:25-47

எண் 31:25. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 31:26. பிடித்துக்கொண்டு வரப்பட்ட மனிதரையும் மிருகங்களையும் நீயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையினுடைய பிதாக்களாகிய தலைவரும் தொகைபார்த்து,

எண் 31:27. கொள்ளையிடப்பட்டதை இரண்டு பங்காகப் பங்கிட்டு, யுத்தத்திற்குப் படையெடுத்துப் போனவர்களுக்கும் சபையனைத்திற்கும் கொடுங்கள்.

எண் 31:28. மேலும் யுத்தத்திற்குப்போன படைவீரரிடத்தில் கர்த்தருக்காக மனிதரிலும் மாடுகளிலும் கழுதைகளிலும் ஆடுகளிலும் ஐந்நூற்றிற்கு ஒரு பிராணி வீதமாக பகுதி வாங்கி,

எண் 31:29. அவர்களுடைய பாதிப்பங்கில் எடுத்து, கர்த்தருக்கு ஏறெடுத்துப்படைக்கும் படைப்பாக ஆசாரியனாகிய எலெயாசாருக்குக் கொடுக்க வேண்டும்.

எண் 31:30. இஸ்ரவேல் புத்திரரின் பாதிப்பங்கிலோ மனிதரிலும்,மாடுகள் கழுதைகள் ஆடுகளாகிய சகலவித மிருகங்களிலும், ஐம்பதிற்கு ஒன்று வீதமாய் வாங்கி, அவைகளைக் கர்த்தருடைய வாசஸ்தலத்தின் காவலைக்காக்கும் லேவியருக்குக் கொடுக்க வேண்டும் என்றார்.

எண் 31:31. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் செய்தார்கள்.

எண் 31:32. படைவீரர் கொள்ளையிட்ட பொருளில், ஆறுலட்சத்து எழுபத்தையாயிரம் ஆடுகளும்,

எண் 31:33. எழுபத்தீராயிரம் மாடுகளும்,

எண் 31:34. அறுபத்தோராயிரம் கழுதைகளும் மீதியாயிருந்தது.

எண் 31:35. புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகளில் முப்பத்தீராயிரம்பேர் இருந்தார்கள்.

எண் 31:36. யுத்தஞ்செய்யப் போனவர்களுக்குக் கிடைத்த பாதிப்பங்கின் தொகையாவது: ஆடுகள் மூன்றுலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு.

எண் 31:37. இந்த ஆடுகளிலே கர்த்தருக்குப் பகுதியாக வந்தது அறுநூற்று எழுபத்தைந்து.

எண் 31:38. மாடுகள் முப்பத்தாறாயிரம்; அவைகளில் கர்த்தருக்குப் பகுதியாக வந்தது எழுபத்திரண்டு.

எண் 31:39. கழுதைகள் முப்பதினாயிரத்து ஐந்நூறு; அவைகளில் கர்த்தருக்குப் பகுதியாக வந்தது அறுபத்தொன்று.

எண் 31:40. நரஜீவன்கள் பதினாயிரம் பேர்; அவர்களில் கர்த்தருக்குப் பகுதியாக வந்தவர்கள் முப்பத்திரண்டுபேர்.

எண் 31:41. கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் அந்தப் பகுதியை, மோசே கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, ஆசாரியனாகிய எலெயாசாரிடத்தில் கொடுத்தான்.

எண் 31:42. யுத்தம்பண்ணின பேர்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் மோசே பாதிபாதியாகப் பங்கிட்டதின்படியே சபையாருக்கு வந்த பாதிப்பங்காவது:

எண் 31:43. ஆடுகளில் மூன்றுலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு,

எண் 31:44. மாடுகளில் முப்பத்தாறாயிரம்,

எண் 31:45. கழுதைகளில் முப்பதினாயிரத்து ஐந்நூறு,

எண் 31:46. நரஜீவன்களில் பதினாயிரம்பேருமே.

எண் 31:47. இஸ்ரவேல் புத்திரரின் பாதிப்பங்குக்கு வந்த இந்த நரஜீவன்களிலும் மிருகங்களிலும் மோசே ஐம்பதுக்கு ஒன்று வீதமாக எடுத்து, அவைகளைக் கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, கர்த்தருடைய வாசஸ்தலத்தின் காவலைக் காக்கிற லேவியருக்குக் கொடுத்தான்.

யுத்தத்திலிருந்து வந்த இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருடைய ஆஸ்திகளை கொள்ளையிட்டு, திரளான கொள்ளைப்பொருட்களை கொண்டு வந்திருக்கிறார்கள். கொள்ளைப்பொருட்களை பங்கிடவேண்டிய பிரமாணத்தை கர்த்தர் மோசேக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி: பிடித்துக்கொண்டு வரப்பட்ட மனிதரையும் மிருகங்களையும் நீயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையினுடைய பிதாக்களாகிய தலைவரும் தொகைபார்த்து, கொள்ளையிடப்பட்டதை இரண்டு பங்காகப் பங்கிட்டு, யுத்தத்திற்குப் படையெடுத்துப்போனவர்களுக்கும் சபையனைத்திற்கும் கொடுங்கள் (எண் 31:25-27) என்று சொல்லுகிறார்.

மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண இஸ்ரவேல் புத்திரரில் 12,000 யுத்தவீரர்கள் புறப்பட்டுப்போனார்கள். அவர்கள் கொண்டு வந்த கொள்ளைப்பொருட்கள் இரண்டு பங்காக பிரிக்கப்படுகிறது. ஒரு பங்கு யுத்தத்திற்கு புறப்பட்டுப்போன 12,000 யுத்த வீரர்களுக்கும், மீதமுள்ள மற்றொரு பங்கு, யுத்தத்திற்குப்போகாமல் தங்கள் பாளயத்திலேயே தங்கியிருந்த இஸ்ரவேல் சபையாருக்கும் கொடுக்கப்படுகிறது.

இந்தப் பிரகாரமாக அவர்கள் பிடித்துக்கொண்டு வந்த மனிதரும் மிருகங்களும் பங்கிட்டு கொடுக்கப்படுகிறது. அவர்கள் கொள்ளையிட்டு கொண்டு வந்த பொன், வெள்ளி போன்ற கொள்ளைப்பொருட்கள் யுத்தத்திற்குப் போனவர்களுக்கு மொத்தமாய்க் கொடுக்கப்படுகிறது.

"ஆகையால், கர்த்தருடைய சந்நிதியில் எங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு, எங்களுக்குக் கிடைத்த பொற்பணிகளாகிய பாதசரங்களையும், அஸ்தகடகங்களையும், மோதிரங்களையும், காதணிகளையும், காப்புகளையும் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தோம் என்றார்கள்" (எண் 31:50).

இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகிறார்கள். அதில் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அந்த தேசத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் நிலத்தை உழுது பயிரிட்டு விவசாயம் பண்ணவேண்டும். தானியத்தை அறுவடை பண்ணவேண்டும். விவசாய வேலைகளை செய்வதற்கு ஆட்கள் தேவைப்படுவார்கள். உழவு வேலைகளை செய்வதற்கு மிருகஜீவன்களும் தேவைப்படும். யுத்தத்திலிருந்து திரும்பி வந்தவர்கள் பிடித்துக்கொண்டு வந்த மனிதரும் விவசாய வேலைகளை செய்வதற்கு பிரயோஜனமாயிருப்பார்கள். ஆகையினால் அவை இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் பிரித்துக்கொடுக்கப்படுகிறது.

யுத்தத்திற்குப்போனவர்கள் விசேஷமாய்க் கனம்பண்ணப்படுகிறார்கள். அவர்களுடைய மொத்த எண்ணிக்கை 12,000 பேராகயிருந்தாலும் கொள்ளையில் பாதிப்பங்கு அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இஸ்ரவேல் சபையாரில் மற்றவர்கள் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகாவிட்டாலும், அவர்களுக்கும் பங்கு கொடுக்கப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னமும் அவர்களோடுகூட புறப்பட்டு வந்திருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் யுத்தம்பண்ணினாலும், கர்த்தரே மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார். கர்த்தரே தம்முடைய ஜனத்திற்கு ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் கொள்ளைப்பொருளிலே கர்த்தருக்கும் ஒரு பகுதி கொடுக்கப்படுகிறது.

கர்த்தர் மோசேயை நோக்கி, "மேலும் யுத்தத்திற்குப்போன படைவீரரிடத்தில் கர்த்தருக்காக மனிதரிலும் மாடுகளிலும் கழுதைகளிலும் ஆடுகளிலும் ஐந்நூற்றிற்கு ஒரு பிராணி வீதமாக பகுதி வாங்கி, அவர்களுடைய பாதிப்பங்கில் எடுத்து, கர்த்தருக்கு ஏறெடுத்துப்படைக்கும் படைப்பாக ஆசாரியனாகிய எலெயாசாருக்குக் கொடுக்க வேண்டும்" (எண் 31:28,29) என்று சொல்லுகிறார்.

ஏறெடுத்துப் படைக்கப்படும் மற்ற பலிகளைப் போன்று கர்த்தருடைய சமுகத்தில் இது ஏறெடுக்கப்படுவதில்லை. இங்கு "ஏறெடுத்துப் படைத்தல்" என்பதற்கான எபிரெய வார்த்தை "தெரூமாவ்" என்பதாகும். இந்த வார்த்தை "ரூம்" என்னும் வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. எண் 31:28 ஆவது வசனத்தில் இந்த வார்த்தை "பங்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரின் பாதிப்பங்கிலோ மனிதரிலும்,மாடுகள் கழுதைகள் ஆடுகளாகிய சகலவித மிருகங்களிலும், ஐம்பதிற்கு ஒன்று வீதமாய் வாங்கி, அவைகளைக் கர்த்தருடைய வாசஸ்தலத்தின் காவலைக்காக்கும் லேவியருக்குக் கொடுக்க வேண்டும் (எண் 31:30) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே, மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் செய்கிறார்கள் (எண் 31:31).

படைவீரர் கொள்ளையிட்ட பொருட்களின் விவரமும், அவர்கள் கொண்டு வந்த மிருகஜீவன்களின் விவரமும், அவர்கள் சிறைப்பிடித்து கொண்டு வந்திருக்கிற புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகளின் விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

படைவீரர் கொள்ளையிட்ட பொருளில், ஆறுலட்சத்து எழுபத்தையாயிரம் ஆடுகளும், எழுபத்தீராயிரம் மாடுகளும், அறுபத்தோராயிரம் கழுதைகளும் மீதியாயிருக்கிறது. புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகளில் முப்பத்தீராயிரம்பேர் இருக்கிறார்கள் (எண் 31:32-35).

இந்தக் கொள்ளையில் யுத்தஞ்செய்யப் போனவர்களுக்குக் கிடைத்த பாதிப்பங்கின் தொகையாவது: ஆடுகள் மூன்றுலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு (எண் 31:36).

இந்தக் கொள்ளையில் கர்த்தருக்கு பகுதியாக வந்தது பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆடுகளிலே கர்த்தருக்குப் பகுதியாக வந்தது அறுநூற்று எழுபத்தைந்து. மாடுகள் முப்பத்தாறாயிரம்; அவைகளில் கர்த்தருக்குப் பகுதியாக வந்தது எழுபத்திரண்டு. கழுதைகள் முப்பதினாயிரத்து ஐந்நூறு; அவைகளில் கர்த்தருக்குப் பகுதியாக வந்தது அறுபத்தொன்று. நரஜீவன்கள் பதினாயிரம் பேர்; அவர்களில் கர்த்தருக்குப் பகுதியாக வந்தவர்கள் முப்பத்திரண்டுபேர் (எண் 31:37-40).

கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் அந்தப் பகுதியை, மோசே கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, ஆசாரியனாகிய எலெயாசாரிடத்தில் கொடுக்கிறார் (எண் 31:41). .

யுத்தம்பண்ணின பேர்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் மோசே பாதிபாதியாகப் பங்கிட்டதின்படியே சபையாருக்கு வந்த பாதிப்பங்கைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது:

ஆடுகளில் மூன்றுலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு, மாடுகளில் முப்பத்தாறாயிரம், கழுதைகளில் முப்பதினாயிரத்து ஐந்நூறு, நரஜீவன்களில் பதினாயிரம்பேருமே (எண் 31:42-46).

இஸ்ரவேல் புத்திரரின் பாதிப்பங்குக்கு வந்த இந்த நரஜீவன்களிலும் மிருகங்களிலும் மோசே ஐம்பதுக்கு ஒன்று வீதமாக எடுத்து, அவைகளைக் கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே, கர்த்தருடைய வாசஸ்தலத்தின் காவலைக் காக்கிற லேவியருக்குக் கொடுக்கிறார் (எண் 31:47).

கொள்ளையிடப்பட்ட பொருட்களைப் பங்கிடுவது பற்றிய விதிப்பிரமாணமாவது :

1. பிடித்துக்கொண்டு வரப்பட்ட மனிதரையும் மிருகங்களையும் தொகைபார்க்க வேண்டும்.

2. ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையினுடைய பிதாக்களாகிய தலைவரும் தொகைபார்க்க வேண்டும்.

3. கொள்ளையிடப்பட்டதை இரண்டு பங்காகப் பங்கிட்டு, யுத்தத்திற்குப் படையெடுத்துப் போனவர்களுக்கும் சபையனைத்திற்கும் கொடுக்க வேண்டும். (எண் 31:27).

4. யுத்தத்திற்குப்போன படைவீரரிடத்தில் கர்த்தருக்காக மனிதரிலும் மாடுகளிலும் கழுதைகளிலும் ஆடுகளிலும் ஐந்நூற்றிற்கு ஒரு பிராணி வீதமாக பகுதி வாங்கி, அவர்களுடைய பாதிப்பங்கில் எடுத்து, கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாக ஆசாரியனாகிய எலெயாசாருக்குக் கொடுக்க வேண்டும் (எண் 31:28-29).

5. இஸ்ரவேல் புத்திரரின் பாதிப்பங்கில் மனிதரிலும், மாடுகள் கழுதைகள் ஆடுகளாகிய சகலவித மிருகங்களிலும், ஐம்பதிற்கு ஒன்று வீதமாய் வாங்கி, அவைகளைக் கர்த்தருடைய வாசஸ்தலத்தின் காவலைக்காக்கும் லேவியருக்குக் கொடுக்க வேண்டும் (எண் 31:30)

கொள்ளையிடப்பட்ட பொருளில் இருந்தவை :

1. ஆடுகள் - 675,000

2. மாடுகள் - 72,000

3. கழுதைகள் - 61,000

4. புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகள் - 32,000

யுத்தஞ்செய்யப் போனவர்களுக்குக் கிடைத்த தொகை - கொள்ளையிட்ட பொருளில் பாதி :

1. ஆடுகள் - 337,500
2. மாடுகள் - 36,000
3. கழுதைகள் - 30,500
4. புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகள் - 16,000

கர்த்தருக்குப் பகுதியாக வந்த தொகை - யுத்தவீரரின் பாதிப்பங்கில் ஐநூற்றிற்கு ஒன்று வீதம் :

1. ஆடுகள் - 675
2. மாடுகள் - 72
3. கழுதைகள் - 61
4. புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகள் - 32

கர்த்தருக்குப் பகுதியாக வந்தது லேவியருக்குக் கொடுக்கப்படுகிறது. தேவன் கொடுத்த பிரமாணத்தின் பிரகாரமே கொள்ளையிடப்பட்ட பொருட்கள் பங்கிடப்படுகிறது. (எண் 31:41). யுத்த வீரர்கள் யுத்தத்தில் தங்களுடைய ஜீவனையும் பொருட்படுத்தாமல் யுத்தம் பண்ணியதினால் அவர்களுக்கு அதிக பங்குவீதம் கொடுக்கப்படுகிறது (எண் 31:28-30).

சபையாருக்கு வந்த பாதிப்பங்கு - (கொள்ளையிட்ட பொருளில் பாதி) :

1. ஆடுகள் - 337,500
2. மாடுகள் - 36,000
3. கழுதைகள் - 30,500
4. புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகள் - 16,000

வாசஸ்தலத்தின் காவலைக் காக்கிற லேவியரின் பங்கு - சபையாருக்கு வந்த பாதிப்பங்கில் ஐம்பதுக்கு ஒன்று வீதம் :

1. ஆடுகள் - 6,750
2. மாடுகள் - 720
3. கழுதைகள் - 610
4. புருஷசம்யோகத்தை அறியாத ஸ்திரீகள் - 320

இந்த எண்ணிக்கை கணக்கிடப்படும்போது மீதியானியர் முழுவதுமாகச் சங்காரம் பண்ணப் பட்டார்கள் போன்று தெரிகிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரைப் பாவம் செய்வதற்குத் தூண்டியவர்கள் மட்டுமே அழிக்கப்பட்டார்கள். மீதியானியரில் மற்றவர்கள் உயிரோடு தப்புகிறார்கள். நியாயாதிபதிகளின் நாட்களில் அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராக மறுபடியும் யுத்தம் பண்ணுகிறார்கள். (நியா 6:1-8:1).

சேனாபதிகளின் காணிக்கை எண் 31:48-54

எண் 31:48. பின்பு ஆயிரம்பேருக்குத் தலைவரும் நூறுபேருக்குத் தலைவருமான சேனாபதிகள் மோசேயினிடத்தில் வந்து,

எண் 31:49. உமது ஊழியக்காரராகிய நாங்கள் எங்கள் கையின் கீழிருக்கிற யுத்தமனிதரைத் தொகைபார்த்தோம்; அவர்களுக்குள்ளே ஒரு ஆளும் குறையவில்லை.

எண் 31:50. ஆகையால், கர்த்தருடைய சந்நிதியில் எங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு, எங்களுக்குக் கிடைத்த பொற்பணிகளாகிய பாதசரங்களையும், அஸ்தகடகங்களையும், மோதிரங்களையும், காதணிகளையும், காப்புகளையும் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தோம் என்றார்கள்.

எண் 31:51. அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சகலவித வேலைப்பாடான பணிதிகளான அந்தப் பொன்னாபரணங்களை அவர்களிடத்தில் வாங்கினார்கள்.

எண் 31:52. இப்படி ஆயிரம்பேருக்குத் தலைவரானவர்களாலும் நூறுபேருக்குத் தலைவரானவர்களாலும் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பொன் முழுவதும் பதினாறாயிரத்து எழுநூற்று ஐம்பது சேக்கல் நிறையாயிருந்தது.

எண் 31:53. யுத்தத்திற்குப்போன மனிதர் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்காகக் கொள்ளையிட்டிருந்தார்கள்.

எண் 31:54. அந்தப் பொன்னை மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் ஆயிரம் பேருக்குத் தலைவரானவர்களின் கையிலும், நூறுபேருக்குத் தலைவரானவர்களின் கையிலும் வாங்கி, இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக் குறியாக ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து வைத்தார்கள்.

யுத்த மனிதருடைய சேனாபதிகள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார்கள். தங்களுடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ யுத்தத்திலே தங்களுக்கு வெற்றி கிடைக்காது என்பதையும், கர்த்தருடைய பலத்தினாலேயே தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்பதையும் இஸ்ரவேலின் சேனாபதிகள் அறிந்திருக்கிறார்கள். சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது கர்த்தரே தங்களை பாதுகாக்கிறார் என்றும், அவரே தங்களுடைய சத்துருக்களை முறியடிக்கிறார் என்றும் சேனாபதிகள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள்.

மீதியானியரோடு நடைபெற்ற யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரரில் யாரும் மரித்துப்போகவில்லை என்று சேனாபதிகள் மோசேயிடம் கணக்கொப்புவிக்கிறார்கள். இது மிகப்பெரிய அற்புதம். (எண் 31:48-49) கானான் தேசத்தில் அவர்கள் விரைவில் யுத்தம் பண்ண வேண்டும். இந்த யுத்தத்தில் உதவிபுரிந்தது போன்று, கர்த்தர் கானான் தேசத்திலும் உதவிபுரிவார் என்னும் நம்பிக்கை இஸ்ரவேல் புத்திரருக்கு வந்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணிவிட்டு தங்கள் பாளயத்திற்கு திரும்பி வருகிறார்கள். அப்போது அவர்கள் தங்கள் கையின் கீழிருக்கிற யுத்த மனிதரை தொகைப்பார்க்கிறார்கள். அவர்களுக்குள்ளே ஒரு ஆளும் குறையவில்லை (எண் 31:49). இஸ்ரவேல் புத்திரரின் யுத்த மனிதரில் ஒருவர்கூட யுத்தக்களத்திலே செத்துப்போகவில்லை. கர்த்தர் தம்முடைய ஜனத்தைப் பாதுகாக்கிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண அனுப்பியபோது, ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஆயிரம் யுத்த மனிதர் வீதமாக, மொத்தம் 12,000 யுத்த மனிதரை அனுப்பினார். யுத்தக்களத்திலே அவர்களை வழிநடத்துவதற்கு சேனாபதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சேனாபதிகள் ஆயிரம் பேருக்கு தலைவராகவும், நூறுபேருக்கு தலைவராகவும் இருக்கிறார்கள்.

சேனாபதிகள் மோசேயினிடத்தில் வந்து, அவரை நோக்கி, "உமது ஊழியக்காரராகிய நாங்கள் எங்கள் கையின் கீழிருக்கிற யுத்தமனிதரைத் தொகைபார்த்தோம்; அவர்களுக்குள்ளே ஒரு ஆளும் குறையவில்லை. ஆகையால், கர்த்தருடைய சந்நிதியில் எங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு, எங்களுக்குக் கிடைத்த பொற்பணிகளாகிய பாதசரங்களையும், அஸ்தகடகங்களையும், மோதிரங்களையும், காதணிகளையும், காப்புகளையும் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தோம்" (எண் 31:49,50) என்று சொல்லுகிறார்கள்.

சேனாபதிகள் ஆயிரம் பேருக்கும், நூறுபேருக்கும் தலைவர்களாகயிருந்தாலும், மோசே இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் தலைவராயிருக்கிறார். அவர் சேனாபதிகளுக்கெல்லாம் தலைமை சேனாபதியாயிருக்கிறார். அவர்கள் மோசேயினிடத்தில் வந்து, தங்களைப்பற்றிச் சொல்லும்போது, "உமது ஊழியக்காரராகிய நாங்கள்" என்று சொல்லுகிறார்கள். மோசேக்கு முன்பாக சேனாபதிகள் தங்களை வெகுவாய்த் தாழ்த்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை தமது கிருபையினால் பாதுகாத்துக்கொள்கிறார். இந்த யுத்தத்திலே கர்த்தர் இஸ்ரவேலுக்கு நன்மையான ஈவுகளை கட்டளையிட்டிருக்கிறார். இஸ்ரவேலின் யுத்த மனிதர்கள், மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, மீதியானியர் மாத்திரமே செத்துப்போனார்கள். இஸ்ரவேலின் யுத்த மனிதரில் ஒருவரும் செத்துப்போகவில்லை. அவர்களுக்குள்ளே ஒரு ஆளும் குறைவில்லை. இது கர்த்தருடைய கிருபை.

மீதியானியருக்கு விரோதமான யுத்தத்திலே இஸ்ரவேலுக்கு வெற்றி கிடைத்ததற்காகவும், தங்கள் கையின் கீழிருக்கிற யுத்தமனிதரில் ஒருவரும் செத்துப்போகாமல் எல்லோரும் உயிரோடிருப்பதற்காகவும், சேனாபதிகள் மோசேயினிடத்தில் வந்து, தங்களுக்கு விசேஷித்த வெகுமதிகளையோ அல்லது பாராட்டுகளையோ கேட்கவில்லை.

இஸ்ரவேலின் சேனாபதிகள் கர்த்தர் நிமித்தம் மீதியானியரிடத்தில் பழிவாங்கும் பொருட்டு, அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள். தங்களுடைய சேவையை பாராட்டி மோசே தங்களுக்கு பெரிய வெகுமதிகளைக் கொடுக்கவேண்டும் என்று சேனாபதிகள் யாரும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய சந்நிதியிலே, தங்கள் ஆத்துமாக்களுக்காக பாவநிவர்த்தி செய்யப்படவேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

சேனாபதிகள் கர்த்தருக்கு உற்சாக காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள். யுத்தத்தில் தங்களைக் கர்த்தர் பாதுகாத்தற்காக அவருக்கு ஸ்தோத்திரக் காணிக்கைகளைச் செலுத்துகிறார்கள். தங்களுடைய ஆத்துமாக்களுக்குப் பாவநிவிர்த்தியும் செய்கிறார்கள். கர்த்தருடைய கட்டளைக்கு முழுவதுமாகக் கீழ்ப்படிந்து அவர்கள் மீதியானியர் அனைவரையும் கொன்றுபோடவில்லை. அதற்காக சேனாபதிகள் பாவநிவிர்த்தி செய்கிறார்கள். (எண் 31:14,50).

சேனாபதிகள் கர்த்தருக்கு செலுத்திய காணிக்கைகளைப்பற்றிய விவரம் வருமாறு:

1. பொற்பணிகள்

2. பாதசரங்கள் (நியா 8:26; உன் 1:10)

3. அஸ்தகடகங்கள் (ஆதி 24:22,30,47; ஆதி 38:18,25; யாத் 35:22; ஏசா 3:19; எசே 16:11; எசே 23:42).

4. மோதிரங்கள் (யாத் 35:22; ஏசா 3:21).

5. காதணிகள் (ஆதி 24:22, 30,47; ஆதி 35:4; யாத் 32:2-3; யாத் 35:22; நியா 8:24-26; யோபு 42:11; ஏசா 3:20; எசே 16:22; ஓசி 2:13).

6. காப்புகள் (யாத் 35:22)

சேனாபதிகள் காணிக்கையாகக் கொண்டுவந்தவை வெறும் உலோகங்கள் மட்டுமே ஆகும். இவை ஒரு மனுஷனுடைய பாவத்தைப் போக்காது. பொன்னோ, வெள்ளியோ ஒரு ஆத்துமாவின் பாவத்தை நிவிர்த்தி செய்யாது. கர்த்தர் யுத்தத்தில் இவர்களுடைய ஜீவனைக் காத்துக் கொண்டார். அதை அங்கிகரிக்கும் விதமாக ஸ்தோத்திர காணிக்கைளாக சேனாபதிகள் இவற்றைச் செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேலின் சேனாபதிகள், தங்கள் ஆத்துமாக்களுக்காக பாவநிவிர்த்தி செய்யும் பொருட்டு, தங்களுக்கு கிடைத்த பொற்பணிகளாகிய பாதசரங்களையும், அஸ்தகடகங்களையும், மோதிரங்களையும், காதணிகளையும், காப்புகளையும் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவருகிறார்கள்.

அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சகலவித வேலைப்பாடான பணிதிகளான அந்தப் பொன்னாபரணங்களை அவர்களிடத்தில் வாங்குகிறார்கள் (எண் 31:51).

ஆயிரம்பேருக்குத் தலைவரானவர்களாலும் நூறுபேருக்குத் தலைவரானவர்களாலும் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பொன் முழுவதும் பதினாறாயிரத்து எழுநூற்று ஐம்பது சேக்கல் நிறையாயிருக்கிறது (எண் 31:52).

யுத்தத்திற்குப் போன மனிதர் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்காகக் கொள்ளையிட்டிருந்தார்கள். அந்தப் பொன்னை மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் ஆயிரம் பேருக்குத் தலைவரானவர்களின் கையிலும், நூறுபேருக்குத் தலைவரானவர்களின் கையிலும் வாங்கி, இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக்குறியாக ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்து வைக்கிறார்கள் (எண் 31:53,54).

32 அதிகாரம்

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் யோர்தானுக்கு இப்புறத்திலே தங்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்று கேட்கிறார்கள் (எண் 32:1-5). மோசே அவர்களுடைய விண்ணப்பத்தைக் குறித்து விவாதம்பண்ணுகிறார் (எண் 32:6-15).

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் தங்களுடைய விண்ணப்பங்களை தெளிவாக விளக்கி சொல்லி, பிரச்சனைகளை தீர்த்து வைக்கிறார்கள் (எண் 32:16-19).

ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தை, மோசே ஒரு சில நிபந்தனைகளின் பேரில் அங்கீகரிக்கிறார் (எண் 32:20-42).

யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள தேசம் எண் 32:1-5

எண் 32:1. ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் ஆடுமாடுகள் மிகவும் திரளாயிருந்தது; அவர்கள் யாசேர் தேசத்தையும் கீலேயாத் தேசத்தையும் பார்த்தபோது, அது ஆடுமாடுகளுக்குத் தகுந்த இடமென்று கண்டார்கள்.

எண் 32:2. ஆகையால் ரூபன் புத்திரரும் காத்புத்திரரும் வந்து, மோசேயையும் ஆசாரியனாகிய எலெயாசாரையும் சபையின் பிரபுக்களையும் நோக்கி:

எண் 32:3. கர்த்தர் இஸ்ரவேல் சபைக்கு முன்பாக முறிய அடித்த அதரோத், தீபோன், யாசேர், நிம்ரா, எஸ்போன், எலெயாலெ, சேபாம், நேபோ, பெயோன் என்னும் பட்டணங்களைச் சேர்ந்த நாடானது ஆடுமாடுகளுக்குத் தகுந்த இடம்.

எண் 32:4. உமது அடியாருக்கு ஆடுமாடுகள் உண்டு.

எண் 32:5. உம்முடைய கண்களில் எங்களுக்குத் தயை கிடைத்ததானால், எங்களை யோர்தான் நதிக்கு அப்புறம் கடந்துபோகப் பண்ணீராக; இந்த நாட்டை உமது அடியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கவேண்டும் என்றார்கள்.

மூல எபிரெய பாஷையில் எண் 32 ஆவது அதிகாரம் "இப்பொழுது" என்று ஆரம்பமாகிறது. யோர்தானின் கிழக்கு தேசத்தை இஸ்ரவேல் புத்திரர்கள் இப்பொழுது ஜெயித்திருக்கிறார்கள். அதில் குடியேறுவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமவெளிகளில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். மீதியானியர்மீது யுத்தம் முடிவு பெறுகிறது. யுத்தத்திலே கொள்ளையிடப்பட்ட பொருட்களெல்லாம், கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரம் பங்குபிரித்து கொடுக்கப்படுகிறது. இந்தப் பிரச்சனைகளெல்லாம் முடிந்த பின்பு, இஸ்ரவேல் புத்திரர் சிறிதுகாலம் அமைதியாயும் சமாதானமாயும் இருக்கிறார்கள்.

சிறிது காலத்திற்கு பின்பு, ரூபன் புத்திரர், காத் புத்திரர் ஆகியோர் மூலமாக புதிய பிரச்சனை ஆரம்பமாகிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இப்போது மோவாபின் சமவெளியிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் தாங்கள் பாளயமிறங்கியிருக்கிற தேசத்தைப் பார்க்கிறார்கள். தாங்கள் வாசம்பண்ணுவதற்கு அதுவே நல்ல தேசமாயிருக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் ஆடுமாடுகள் மிகவும் திரளாயிருக்கிறது; அவர்கள் யாசேர் தேசத்தையும் கீலேயாத் தேசத்தையும் பார்த்தபோது, அது ஆடுமாடுகளுக்குத் தகுந்த இடமென்று காண்கிறார்கள் (எண் 32:1).

ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் ஆடுமாடுகள் மிகவும் திரளாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரில் இவ்விரண்டு கோத்திரத்தாரும் ஆடுமாடுகளை மேய்ப்பதில் சிறந்தவர்கள்.

யாசேர் தேசம் நல்ல விளைச்சல் நிலத்தைக் கொண்டிருக்கிறது. ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் ஆடுமாடுகளை மேய்க்கிறவர்கள். யாசேரைப் பார்த்தவுடன், அது தங்களுக்கு உகந்த மேய்ச்சல் நிலம் என்று தீர்மானம் பண்ணுகிறார்கள். யோர்தானுக்கு அந்தப் பக்கத்திலுள்ள கானான் தேசம் எப்படிப்பட்டது என்பதைக் காண்பதற்குக்கூட காத்திராமல், இந்த தேசம் தங்களுடைய சுதந்தரவீதமாக இருக்கவேண்டுமென்று, இவ்விரண்டு கோத்திரத்தாரும் விண்ணப்பம் பண்ணுகிறார்கள் (எண் 32:1-5).

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், தங்களுடைய விருப்பத்தை மோசேயினிடத்திலும், ஆசாரியனாகிய எலெயாசாரிடத்திலும், இஸ்ரவேலின் பிரபுக்களிடத்திலும் விண்ணப்பமாகச் சொல்லுகிறார்கள்.

ரூபன் புத்திரரும் காத்புத்திரரும் வந்து, மோசேயையும் ஆசாரியனாகிய எலெயாசாரையும் சபையின் பிரபுக்களையும் நோக்கி, "கர்த்தர் இஸ்ரவேல் சபைக்கு முன்பாக முறிய அடித்த அதரோத், தீபோன், யாசேர், நிம்ரா, எஸ்போன், எலெயாலெ, சேபாம், நேபோ, பெயோன் என்னும் பட்டணங்களைச் சேர்ந்த நாடானது ஆடுமாடுகளுக்குத் தகுந்த இடம்" (எண் 32:2,3) என்றும்,

"உமது அடியாருக்கு ஆடுமாடுகள் உண்டு. உம்முடைய கண்களில் எங்களுக்குத் தயை கிடைத்ததானால், எங்களை யோர்தான் நதிக்கு அப்புறம் கடந்துபோகப் பண்ணீராக; இந்த நாட்டை உமது அடியாருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கவேண்டும்" (எண் 32:4,5) என்றும் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் யாசேர் தேசத்தையும் கீலேயாத் தேசத்தையும் சமீபத்தில்தான் சுதந்தரித்திருக்கிறார்கள். இந்த தேசம் இப்போது இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் பொதுவான தேசமாயிருக்கிறது. ஆனால் இந்த தேசத்தை தங்களுக்கு மாத்திரம் சுதந்தரமாகக் கொடுக்கவேண்டுமென்று காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் கேட்கிறார்கள்.

யாசேர் தேசத்திலும், கீலேயாத் தேசத்திலும், அதரோத், தீபோன், யாசேர், நிம்ரா, எஸ்போன், எலெயாலெ, சேபாம், நேபோ, பெயோன் என்னும் பட்டணங்கள் இருக்கிறது. இந்த தேசம் ஆடு மாடுகளுக்கு தகுந்த இடம். இங்கே மேய்ச்சல் நிலம் செழிப்பாயும் ஏராளமாயும் இருக்கிறது.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், யாசேர் தேசத்தையும், கீலேயாத் தேசத்தையும், தங்களுக்கு சுதந்தரமாகப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவையாவன : 1. கண்களின் இச்சை. 2. ஜீவனத்தின் பெருமை.

"ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" (1யோவா 2:16).

யாசேர் தேசமும் கீலேயாத் தேசமும் கண்களின் பார்வைக்கு அழகாயிருக்கிறது. அந்தத் தேசத்தில் செழிப்பான விளைச்சல் நிலம் இருக்கிறது. ஆடுமாடுகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலமும் அங்கு அதிகமாயிருக்கிறது. ரூபன் புத்திரரிடத்திலும், காத் புத்திரரிடத்திலும், மற்ற கோத்திரத்தாரைவிட, ஆடுமாடுகள் ஏராளமாயிருக்கிறது. ஆகையினால் இந்த தேசம் தங்களுக்கு சுதந்தரமாகக் கிடைத்தால் நன்றாயிருக்குமென்று இவ்விரண்டு கோத்திரத்தாரும் ஆசைப்படுகிறார்கள்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், இப்போதே தங்களுடைய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு இன்னும் சுதந்தரவீதம் கொடுக்கப்படவில்லை. ஆனாலும் மற்ற கோத்திரத்தாருக்கு சுதந்தரவீதம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக, தங்களுக்கு சுதந்தரவீதம் இப்போதே கொடுக்கப்படவேண்டுமென்று, இவ்விரண்டு கோத்திரத்தாரும் ஆசைப்படுகிறார்கள். அவர்கள் இவ்வாறு ஆசைப்படுவதற்கு, அவர்களுடைய ஜீவனத்தின் பெருமையும், காரணமாயிருக்கிறது.

ரூபன் இஸ்ரவேலின் மூத்த குமாரன். இவனே முதலாவது பிறந்தவன். ஆனால் ரூபன் தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை இழந்துவிட்டான். தான் இழந்துபோன புத்திர பாகத்தை இப்போது மறுபடியும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ரூபன் ஆசைப்படுகிறான்.

யாசேர் தேசமும் கீலேயாத் தேசமும் யோர்தானுக்கு இப்புறத்திலே இருக்கிறது. இந்த தேசம் கானான் தேசத்திற்கு அப்பால் இருக்கிறது. இது ஆசரிப்புக்கூடாரத்திற்கும் வெகுதூரத்திலிருக்கிறது. ஆனாலும் ரூபன் புத்திரர் இந்த தேசத்திலே தங்களுக்கு முதலாவதாக சுதந்தரவீதம் கொடுக்கப்படவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இது அவர்களுடைய ஜீவனத்தின் பெருமையாகும்.

காத் சில்பாளின் மூத்த குமாரன். காத்தின் புத்திரரும் ரூபன் புத்திரரைப்போலவே, தாங்கள் இழந்துபோன சேஷ்டபுத்திர பாகத்தின் ஆசீர்வாதத்தை மறுபடியும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

மனாசேயும் யோசேப்பின் மூத்த குமாரன். ஆனாலும் எப்பிராயீமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தினால், மனாசேயின் முக்கியத்துவம் குறைந்துபோயிற்று. தான் இழந்துபோன சேஷ்டபுத்திர பாகத்தின் ஆசீர்வாதங்களை, மனாசே மறுபடியும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அதை சீக்கிரத்தில் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் ஆசைப்படுகிறான்.

மோசேயின் எதிர்ப்பு விவாதம் எண் 32:6-15

எண் 32:6. அப்பொழுது மோசே காத் புத்திரரையும் ரூபன் புத்திரரையும் நோக்கி: உங்கள் சகோதரர் யுத்தத்திற்குப் போகையில், நீங்கள் இங்கே இருப்பீர்களோ?

எண் 32:7. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்திற்கு அவர்கள் போகாதபடிக்கு, நீங்கள் அவர்கள் இருதயத்தைத் திடனற்றுப்போகப்பண்ணுகிறதென்ன?

எண் 32:8. அந்த தேசத்தைப் பார்ப்பதற்கு நான் உங்கள் பிதாக்களைக் காதேஸ்பர்னே யாவிலிருந்து அனுப்பினபோது அவர்களும் இப்படியே செய்தார்கள்.

எண் 32:9. அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்கு மட்டும்போய், அத்தேசத்தைப் பார்த்து வந்து, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த தேசத்திற்குப் போகாதபடிக்கு அவர்கள் இருதயத்தைத் திடனற்றுப்போகப்பண்ணினார்கள்.

எண் 32:10. அதினால் கர்த்தர் அந்நாளிலே கோபம் மூண்டவராகி:

எண் 32:11. உத்தமமாய் என்னைப் பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர,

எண் 32:12. எகிப்திலிருந்து வந்தவர்களில் இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட மனிதர்களில் ஒருவரும் என்னை உத்தமமாய்ப் பின்பற்றாதபடியால், அவர்கள் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காண்பதில்லை என்று ஆணையிட்டிருக்கிறார்.

எண் 32:13. அப்படியே கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின்மேல் மூண்டது; கர்த்தருடைய சமுகத்தில் பொல்லாப்புச் செய்த அந்தச் சந்ததியெல்லாம் நிர்மூலமாகுமட்டும் அவர்களை வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலையப்பண்ணினார்.

எண் 32:14. இப்பொழுதும் இதோ இஸ்ரவேலர் மேலிருக்கும் கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்தை இன்னும் அதிகரிக்கப்பண்ணும்படி, நீங்கள் உங்கள் பிதாக்களின் ஸ்தானத்திலே பாவமுள்ள பெருங்கூட்டமாய் எழும்பியிருக்கிறீர்கள்.

எண் 32:15. நீங்கள் அவரைவிட்டுப் பின்வாங்கினால், அவர் இன்னும் அவர்களை வனாந்தரத்தில் இருக்கப்பண்ணுவார்; இப்படி நீங்கள் இந்த ஜனங்களையெல்லாம் அழியப்பண்ணுவீர்கள் என்றான்.

மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராகவும், தீர்க்கதரிசியாகவும் இருக்கிறார். ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் கேட்டுக்கொண்ட விண்ணப்பத்தை மோசே அங்கீகரிக்கவில்லை. இப்படிப்பட்ட ஆசை அவர்களுடைய மனதில் ஏற்பட்டதற்காக மோசே அவர்களை கடிந்துகொள்கிறார். அவர்களுடைய விண்ணப்பம் மோசேயின் மனதிற்கு சரியானதாக படவில்லை.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், "எங்களை யோர்தான் நதிக்கு அப்புறம் கடந்துபோகப்பண்ணீராக" (எண் 32:5) என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய வார்த்தை ஆபத்தானது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே யோர்தான் நதியைக் கடந்துபோய், கானான் தேசத்தைச் சுதந்தரிக்கவேண்டும். ஆனால் இவ்விரண்டு கோத்திரத்தார்கள் மாத்திரம், யோர்தான் நதியை கடந்துபோகாமலிருப்பதற்கு விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். ஆனால் ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், வாக்குப்பண்ணப்பட்ட நல்ல தேசமாகிய கானான் தேசத்தை அசட்டைபண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்த தேசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அதை ஏளனமாய் நினைக்கிறார்கள்.

கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கும் கானான் தேசத்தைவிட, யோர்தான் நதிக்கு இப்புறத்திலிருக்கிற யாசேர் தேசமும், கீலேயாத் தேசமும் தங்களுக்கு நல்ல தேசமென்று இவ்விரண்டு கோத்திரத்தாரும் சொல்லுகிறார்கள். ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் பேராசைக்காரர்களாயிருக்கிறார்கள். யோர்தான் நதிக்கு இப்புறத்திலுள்ள தேசம், தங்கள் ஆடுமாடுகளுக்கு தகுந்த இடமாகயிருப்பதினால், தங்களுக்கு இந்தத் தேசம் வேண்டுமென்று இவ்விரண்டு கோத்திரத்தாரும் அந்த தேசத்தை இச்சிக்கிறார்கள்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் இதுவரையிலும் ஒற்றுமையாயிருக்கிறார்கள். ஆனால் இப்போதோ ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், மற்ற கோத்திரத்தாரிடத்திலிருந்து தங்களை தனியாக வேறுபிரித்து, இஸ்ரவேல் சபையாருக்குள்ளே ஒரு பிரிவினையை ஏற்படுத்துகிறார்கள். இவர்கள் தங்களுடைய சுயநலத்தை மாத்திரமே பார்க்கிறார்கள். இஸ்ரவேல் சபையாரின் பொதுவான நலத்திற்கு இவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோரும் சேர்ந்து, யாசேர் தேசத்திற்கும், கீலேயாத் தேசத்திற்கும் விரோதமாக யுத்தம்பண்ணி, அந்தத் தேசத்தை தங்களுக்கு சொந்தமாக்கியிருக்கிறார்கள். இவ்விரண்டு தேசங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் பொதுவானது. இந்த தேசங்களை சுதந்தரிப்பதில் எல்லா கோத்திரத்தாருக்கும் பங்கு இருக்கிறது. ஆனால் ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள இந்த தேசத்தை தங்களுக்கு மாத்திரம் சொந்தமாக்கிக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அவர்கள் மற்ற கோத்திரத்தாரின் முயற்சிகளுக்கும், அவர்களுடைய தேவைகளுக்கும் மதிப்பு கொடுத்ததாக தெரியவில்லை.

மோசே ரூபன் புத்திரரையும் காத் புத்திரரையும் எச்சரிக்கிறார். அவர்களுடைய விண்ணப்பம் தவறானது என்பதை மோசே அவர்களுக்கு தெளிவுபடுத்துகிறார். அவர்களுடைய விண்ணப்பத்தினால் சமஸ்த இஸ்ரவேல் சபையாருக்கும் வரப்போகிற பாதிப்புக்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார்.

மோசே காத் புத்திரரையும் ரூபன் புத்திரரையும் நோக்கி, "உங்கள் சகோதரர் யுத்தத்திற்குப் போகையில், நீங்கள் இங்கே இருப்பீர்களோ? கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்திற்கு அவர்கள் போகாதபடிக்கு, நீங்கள் அவர்கள் இருதயத்தைத் திடனற்றுப்போகப்பண்ணுகிறதென்ன? (எண் 32:6,7) என்று கேட்கிறார்.

ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் இங்கு தங்கி விடுவார்கள் என்றும், கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு மற்ற கோத்திரத்தாருக்கு உதவி புரியமாட்டார்கள் என்றும் மோசே நினைக்கிறார்.

38 வருஷத்திற்கு முன்பு, காதேஸ்பர்னேயாவில் ஏற்பட்ட கலகத்தைப் போன்று, மறுபடியும் ஒரு கலகம் வந்துவிடுமோ என்று மோசே கலக்கத்தோடிருக்கிறார் பயமடைந்திருக்கலாம் (எண் 32:8-15)

ஆனால் ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் கானான் தேசத்தை மற்ற கோத்திரத்தார் சுதந்தரிப்பதற்கு உதவி புரிவதாக வாக்குப்பண்ணுகிறார்கள். ஆகையினால், இவ்விரு கோத்திரத்தாரும் யாசேர் தேசத்திலும், கீலேயாத் தேசத்திலும் குடியேறுவதற்கு மோசே சம்மதம் தெரிவிக்கிறார். (எண் 32:16-42).

இஸ்ரவேல் கோத்திரத்தார் அனைவரும் கானான் தேசத்தில் குடியேற வேண்டுமென்பதுதான், அவர்களுடைய திட்டம். யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் இரண்டு கோத்திரத்தார் குடியேறுவதை மோசே முதலில் சம்மதிக்கவில்லை (எண் 32:6-15) ஆபிரகாமிற்குக் கானான் தேசம் மட்டுமே வாக்குத்தத்த தேசமாக வாக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (ஆதி 15:18-21).

யோர்தான் நதியின் அப்புறத்திலுள்ள கிழக்கு தேசம் வாக்குத்தத்த தேசத்தின் எல்லைக்குள் வரவில்லை. இஸ்ரவேல் புத்திரர் தன்னுடைய தேசத்தின் வழியாகப் பிரயாணம் பண்ணுவதற்கு சீகோன் அனுமதி கொடுத்திருந்தால், எல்லா கோத்திரத்தாரும், கானான் தேசத்திற்கே போயிருந்திருப்பார்கள். சீகோன் இஸ்ரவேல் புத்திரருக்கு அனுமதி மறுத்ததினால், இஸ்ரவேல் புத்திரர் அவனோடு யுத்தம் பண்ண வேண்டியதாயிற்று. யுத்தத்தில் சீகோன் அழிக்கப்பட்டான். இஸ்ரவேல் புத்திரர் அவனுடைய தேசத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

பாசானின் ராஜாவாகிய ஓகோடு இஸ்ரவேல் புத்திரர் யுத்தம் பண்ணி, அவனுடைய தேசத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆரம்பத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் ஐபிராத்து நதியிலிருந்து எகிப்தின் நதி வரையிலும் பரவியிருந்தது. ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது, வாக்குத்தத்த தேசம் பதிமூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும். வடக்கில் ஆமாத்திலிருந்து பெருங்கடல் வரையிலும் இந்தத் தேசம் பரவியிருக்கும். (எசே 48) இஸ்ரவேல் தேசம் எல்லா தேசங்களுக்கும் தலையாக இருக்கும். மேசியாவின் ராஜ்யம் பரவி விரிந்திருக்கும். (ஏசா 9:6-7; தானி 7:13-14; சக 14:9; வெளி 11:15; வெளி 22:4-5).

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், கேட்கிற விண்ணப்பம் தீமையானது. இதனால் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே மோசமான பாதிப்புக்கள் ஏற்படும். இவ்விரண்டு கோத்திரத்தாரும் மற்ற இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தை திடனற்றுப்போகப்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலின் முற்பிதாக்கள் ஏற்கெனவே கானான் தேசத்தை வேவுபார்க்கப்போனார்கள். பன்னிரண்டு பிரபுக்கள் அந்தத் தேசத்திற்குப்போனார்கள். அவர்களில் பத்துபேர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அவிசுவாசமான வார்த்தைகளை சொல்லி ஜனங்களை கலங்கப்பண்ணினார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் சபையார்மீது வந்தது. மோசே இந்த சரித்திர சம்பவத்தை, ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் நினைவுபடுத்தி சொல்லுகிறார்.

மோசே அவர்களை நோக்கி, "கானான் தேசத்தைப் பார்ப்பதற்கு நான் உங்கள் பிதாக்களைக் காதேஸ்பர்னேயாவிலிருந்து அனுப்பினபோது அவர்களும் இப்படியே செய்தார்கள். அவர்கள் எஸ்கோல் பள்ளத்தாக்கு மட்டும்போய், அத்தேசத்தைப் பார்த்து வந்து, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த தேசத்திற்குப் போகாதபடிக்கு அவர்கள் இருதயத்தைத் திடனற்றுப்போகப் பண்ணினார்கள்" (எண் 32:8,9) என்றும்,

"அதினால் கர்த்தர் அந்நாளிலே கோபம் மூண்டவராகி: உத்தமமாய் என்னைப் பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, எகிப்திலிருந்து வந்தவர்களில் இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட மனிதர்களில் ஒருவரும் என்னை உத்தமமாய்ப் பின்பற்றாதபடியால், அவர்கள் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்தைக் காண்பதில்லை என்று ஆணையிட்டிருக்கிறார்" (எண் 32:10-12) என்றும் சொல்லுகிறார்.

காலேபும், யோசுவாவும் கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினார்கள். ஆகையினால் இவர்கள் இருவரும் மரித்துப் போகாமல், கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

எகிப்திலிருந்து புறப்பட்ட பழைய சந்ததியாரில் மோசே, யோசுவா, காலேப் ஆகியோரைத் தவிர வேறு யாரும் வாக்குத்தத்த தேசத்தைக் காணமாட்டார்கள். (எண் 32:11-15; எண் 14:23-35; எண் 26:64-65). புதிய சந்ததியாரில் யாருக்கும் 58 அல்லது 60 வயதிற்கு மேல் ஆகவில்லை.

அப்படியே கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின்மேல் மூண்டது; கர்த்தருடைய சமுகத்தில் பொல்லாப்புச் செய்த அந்தச் சந்ததியெல்லாம் நிர்மூலமாகுமட்டும் அவர்களை வனாந்தரத்திலே நாற்பது வருஷம் அலையப்பண்ணினார் (எண் 32:13) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் முற்பிதாக்கள் நாற்பது வருஷங்களுக்கு முன்பு கர்த்தருக்கு கோபம் மூட்டினதுபோல, இப்போது ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் கர்த்தருக்கு கோபமூட்டுகிறார்கள் என்று மோசே சொல்லுகிறார். இவ்விரண்டு கோத்திரத்தாரும் இஸ்ரவேல் சபையாரின் பாளயத்திலிருந்து தனியாகப் பிரிந்துவிடவேண்டுமென்று விரும்புகிறார்கள். இதனால் ஒற்றுமையாயிருக்கிற இஸ்ரவேல் சபையார் மத்தியிலே பிரிவினை உண்டாகும். பிரிவினை என்பது ஒரு தொற்றுவியாதிபோல. இந்தப்பிரிவினை குணம் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரையும் தொற்றிக்கொள்ளும்.

மோசே ரூபன் புத்திரரையும் காத் புத்திரரையும் பார்த்து, "இப்பொழுதும் இதோ இஸ்ரவேலர் மேலிருக்கும் கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்தை இன்னும் அதிகரிக்கப்பண்ணும்படி, நீங்கள் உங்கள் பிதாக்களின் ஸ்தானத்திலே பாவமுள்ள பெருங்கூட்டமாய் எழும்பியிருக்கிறீர்கள்" (எண் 32:14) என்றும்,

"நீங்கள் அவரைவிட்டுப் பின்வாங்கினால், அவர் இன்னும் அவர்களை வனாந்தரத்தில் இருக்கப்பண்ணுவார்; இப்படி நீங்கள் இந்த ஜனங்களையெல்லாம் அழியப்பண்ணுவீர்கள்" (எண் 32:15) என்றும் சொல்லுகிறார்.

இரண்டாம் தலைமுறையாரும், கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணினால் அவர்களாலும் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினால், அவர் மறுபடியுமாய் இஸ்ரவேல் சபையாரை வனாந்தரத்திலே திரும்பவும் அலையப்பண்ணிவிடுவார் என்று மோசே அவர்களை எச்சரிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டுப் பின்வாங்கினால், கர்த்தர் அவர்களை இன்னும் வனாந்தரத்தில் இருக்கப்பண்ணுவார் என்று மோசே எச்சரிப்பான வார்த்தைகளை சொல்லுகிறார்.

விவாதமும் சமாதானமும்
எண் 32:16-27

எண் 32:16. அப்பொழுது அவர்கள் அவன் சமீபத்தில் வந்து: எங்கள் ஆடுமாடுகளுக்காகத் தொழுவங்களையும், எங்கள் பிள்ளைகளுக்காகப் பட்டணங்களையும் இங்கே கட்டுவோம்.

எண் 32:17. நாங்களோ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் ஸ்தானத்திலே கொண்டுபோய்ச் சேர்க்குமளவும், யுத்தசன்னத்தராய்த் தீவிரத்தோடே அவர்களுக்கு முன்பாக நடப்போம்; எங்கள் பிள்ளைகள் இத்தேசத்துக் குடிகளினிமித்தம் அரணான பட்டணங்களிலே குடியிருக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எண் 32:18. இஸ்ரவேல் புத்திரர் யாவரும் தங்கள் தங்கள் சுதந்தரத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்வரைக்கும், நாங்கள் எங்கள் வீடுகளுக்குத் திரும்புவதில்லை.

எண் 32:19. யோர்தானுக்கு இப்புறத்தில் கிழக்கே எங்களுக்குச் சுதந்தரம் உண்டானபடியினாலே, நாங்கள் அவர்களோடே கூட யோர்தானுக்கு அக்கரையிலும், அதற்கு அப்புறத்திலும் சுதந்தரம் வாங்கமாட்டோம் என்றார்கள்.

எண் 32:20. அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: நீங்கள் இந்த வார்த்தையின்படியே செய்து, கர்த்தருடைய சமுகத்தில் யுத்தசன்னத்தராகி,

எண் 32:21. கர்த்தர் தம்முடைய சத்துருக்களைத் தம்முடைய முகத்திற்கு முன்னின்று துரத்திவிடுமளவும், நீங்கள் யாவரும் அவருடைய சமுகத்தில் யுத்தசன்னத்தராய் யோர்தானைக் கடந்துபோவீர்களானால்,

எண் 32:22. அத்தேசம் கர்த்தருக்கு முன்பாக வசப்படுத்தப்பட்ட பின்பு, நீங்கள் திரும்பிவந்து, கர்த்தருக்கு முன்பாகவும் இஸ்ரவேலருக்கு முன்பாகவும், குற்றமில்லாதிருப்பீர்கள்; அதற்குப்பின்பு இந்த தேசம் கர்த்தருக்கு முன்பாக உங்களுக்குச் சுதந்தரமாகும்.

எண் 32:23. நீங்கள் இப்படிச் செய்யாமற்போனால், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களாயிருப்பீர்கள்; உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்.

எண் 32:24. உங்கள் பிள்ளைகளுக்காகப் பட்டணங்களையும், உங்கள் ஆடுமாடுகளுக்காகத் தொழுவங்களையும் கட்டி, உங்கள் வாய்மொழியின்படியே செய்யுங்கள் என்றான்.

எண் 32:25. அப்பொழுது காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் மோசேயை நோக்கி: எங்கள் ஆண்டவன் கட்டளையிட்டபடியே உமது ஊழியக்காரராகிய நாங்கள் செய்வோம்.

எண் 32:26. எங்கள் பிள்ளைகளும் எங்கள் மனைவிகளும், எங்கள் ஆடுமாடு முதலான எங்களுடைய எல்லா மிருகஜீவன்களோடும், இங்கே கீலேயாத்தின் பட்டணங்களில் இருப்பார்கள்.

எண் 32:27. உமது ஊழியக்காரராகிய நாங்களோ எங்கள் ஆண்டவன் சொன்னபடியே, ஒவ்வொருவரும் யுத்தசன்னத்தராய், கர்த்தருடைய சமுகத்தில் யுத்தத்திற்குப் போவோம் என்றார்கள்.

மோசே ரூபன் புத்திரரோடும் காத் புத்திரரோடும் விவாதம்பண்ணுகிறார். அவர்கள் எல்லோரும் இப்போது யோர்தானுக்கு இப்புறத்திலே இருக்கிறார்கள். மோசேயின் விவாத வார்த்தைகளை ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் கவனமாய்ச் செவிகொடுத்து கேட்கிறார்கள். மோசேயின் வார்த்தைகளைக் குறித்து அவ்விரண்டு கோத்திரத்தாரும் தங்களுக்குள் ஆலோசனைபண்ணிக்கொள்கிறார்கள்.

அதன் பின்பு ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மோசேக்கு சமீபத்தில் வந்து, சமாதானமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். தாங்கள் யோர்தானைக் கடந்து, யுத்தசன்னத்தாராய் தீவிரத்தோடே, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு முன்பாக நடப்போம் என்று இவ்விரண்டு கோத்திரத்தாரும் வாக்குப்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் யாவரும் தங்கள் தங்கள் சுதந்தரிப்பதற்கு தாங்களும் ஆதரவாயிருப்போம் என்று சொல்லுகிறார்கள்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், மோசேக்கு சமீபத்தில் வந்து, "எங்கள் ஆடுமாடுகளுக்காகத் தொழுவங்களையும், எங்கள் பிள்ளைகளுக்காகப் பட்டணங்களையும் இங்கே கட்டுவோம்" (எண் 32:16) என்றும்,

"நாங்களோ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் ஸ்தானத்திலே கொண்டுபோய்ச் சேர்க்குமளவும், யுத்தசன்னத்தராய்த் தீவிரத்தோடே அவர்களுக்கு முன்பாக நடப்போம்; எங்கள் பிள்ளைகள் இத்தேசத்துக் குடிகளினிமித்தம் அரணான பட்டணங்களிலே குடியிருக்கக் கேட்டுக் கொள்ளுகிறோம்" (எண் 32:17) என்றும்,

"இஸ்ரவேல் புத்திரர் யாவரும் தங்கள் தங்கள் சுதந்தரத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்வரைக்கும், நாங்கள் எங்கள் வீடுகளுக்குத் திரும்புவதில்லை" (எண் 32:18) என்றும்,

"யோர்தானுக்கு இப்புறத்தில் கிழக்கே எங்களுக்குச் சுதந்தரம் உண்டானபடியினாலே, நாங்கள் அவர்களோடே கூட யோர்தானுக்கு அக்கரையிலும், அதற்கு அப்புறத்திலும் சுதந்தரம் வாங்கமாட்டோம்" (எண் 32:19) என்றும் சொல்லுகிறார்கள்.

ரூபன் புத்திரரும், காத் புத்திரரும் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் ஸ்தானத்திலே கொண்டுபோய்ச் சேர்க்குமளவும், யுத்தசன்னத்தராய்த் தீவிரத்தோடே அவர்களுக்கு முன்பாக நடப்போம் என்று வாக்குப்பண்ணுகிறார்கள். (எண் 32:16-19). மோசே இதை அங்கிகரிக்கிறார் (எண் 32:20-24).

இவ்விரண்டு கோத்திரத்தாரின் புருஷர்கள் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்காக இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரோடு யுத்தம் பண்ண போய்விடுவார்கள். இவர்களுடைய குடும்பத்தாருக்குச் சுற்றிலுமிருக்கும் தேசத்தாரிடமிருந்து பாதுகாப்பு வேண்டும். ஆகையினால், இவர்கள் அரணான பட்டணங்களில் குடியிருக்க விரும்புகிறார்கள்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் இப்போது சொல்லுகிற விளக்கம் நியாயமானதாகயிருக்கிறது. அவர்கள் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரைக் குறித்தும் கரிசனையோடு பேசுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருடைய இருதயத்தை திடனற்று போகப்பண்ணுவதற்கு பதிலாக, இப்போது அவர்களுடைய இருதயத்தை திடப்படுத்துகிறார்கள். இவ்விரண்டு கோத்திரத்தாரும் தங்கள் கரிசனையுள்ள வார்த்தைகளினால் இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் உற்சாகப்படுத்துகிறார்கள்.

தங்கள் கோத்திரங்களில் யுத்த சன்னத்தராயிருக்கிறவர்கள் எல்லோரும், இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஆயுதம் ஏந்தி, தீவிரமாய் முன்நடப்பதாக வாக்குப்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு தங்களுடைய இரண்டு கோத்திரங்களிலுள்ள யுத்தவீரர்கள் உதவிசெய்வார்கள் என்று சொல்லுகிறார்கள்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் தங்கள் ஆடுமாடுகளையும், தங்கள் வீடுகளிலுள்ளவர்களையும் யோர்தானுக்கு இப்புறத்திலே விட்டுவிட்டு, தங்களுடைய யுத்தவீரர்கள் எல்லோரும், யுத்த சன்னத்தராக, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதாக சொல்லுகிறார்கள். இவ்விரண்டு கோத்திரத்தாரின் குடும்பத்தாரும் இவர்களோடு கூட வராமல், அவர்களுடைய வீடுகளில் தங்கிவிட்டால், இவர்களால் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு அதிகமாய் உதவி செய்யமுடியும்.

கானான் தேசத்தைச் சுதந்தரிக்கும்போது இவ்விரண்டு கோத்திரத்தாருக்கும் குடும்ப பாரங்களும், குடும்ப பொறுப்புக்களும் இருக்காது. கானான் தேசத்தை சுதந்தரிக்கவேண்டும் என்னும் ஒரே பொறுப்பும், ஒரே பாரமும் மாத்திரமே இவ்விரண்டு கோத்திரத்தாரிடத்திலும் இருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் யாவரும் தங்கள் தங்கள் சுதந்தரத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்வரைக்கும், தாங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்புவதில்லை (எண் 32:18) என்றும் ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் சொல்லுகிறார்கள். கானான் தேசத்தை முற்றிலுமாய் சுதந்தரித்து முடியும் வரையிலும், இவ்விரண்டு கோத்திரத்தாரும் தங்கள் சுதந்தரத்திற்கு திரும்பிப்போகமாட்டார்கள்.

ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் யோர்தானுக்கு இப்புறத்தில் கிழக்கில் சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு இன்னும் ஒரு சுதந்தரம் தேவையில்லை. ஆகையினால் இவ்விரண்டு கோத்திரத்தாரும், யோர்தானுக்கு அக்கரையிலும், அதற்கு அப்புறத்திலுமுள்ள கானான் தேசத்திலும் சுதந்தரம் வாங்கமாட்டோம் என்று வாக்குப்பண்ணுகிறார்கள் (எண் 32:19).

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் சொல்லுகிற விளக்கத்தை மோசே புரிந்துகொள்கிறார். அவர்கள் தங்களுடைய விண்ணப்பத்தை மிகவும் நியாயமாக எடுத்து சொல்லுகிறார்கள். மோசே ஒரு சில நிபந்தனைகளோடு, அவர்களுடைய விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்கிறார்.

மோசே அவர்களை நோக்கி, "நீங்கள் இந்த வார்த்தையின்படியே செய்து, கர்த்தருடைய சமுகத்தில் யுத்தசன்னத்தராகி, கர்த்தர் தம்முடைய சத்துருக்களைத் தம்முடைய முகத்திற்கு முன்னின்று துரத்திவிடுமளவும், நீங்கள் யாவரும் அவருடைய சமுகத்தில் யுத்தசன்னத்தராய் யோர்தானைக் கடந்துபோவீர்களானால், அத்தேசம் கர்த்தருக்கு முன்பாக வசப்படுத்தப்பட்டபின்பு, நீங்கள் திரும்பிவந்து, கர்த்தருக்கு முன்பாகவும் இஸ்ரவேலருக்கு முன்பாகவும், குற்றமில்லாதிருப்பீர்கள்; அதற்குப்பின்பு இந்த தேசம் கர்த்தருக்கு முன்பாக உங்களுக்குச் சுதந்தரமாகும்" (எண் 32:20-22) என்று சொல்லுகிறார்.

மோசே ஒரு நிபந்தனையோடு ரூபன் புத்திரர், காத் புத்திரர் ஆகியோரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறார். இவர்கள் யாவரும் யுத்தசன்னத்தராய் யோர்தானைக் கடந்து போகவேண்டும். கானான் தேசத்தை வசப்படுத்திய பின்பு, இவ்விரு கோத்திரத்தாரும் தங்கள் சுதந்தரத்துக்கு திரும்பி போகலாம். (எண் 32:20-24).

யுத்தத்தில் இவ்விரண்டு கோத்திரங்களிலிருந்தும் 40,000பேர் பங்குபெற்றார்கள். (யோசு 4:12-13) இரண்டாவது கணக்கெடுப்பின் பிரகாரம், இவர்களுடைய இரண்டரை கோத்திரங்களிலிருந்து யுத்தம் பண்ணக் கூடியவர்களின் எண்ணிக்கை 110,580 பேர் ஆகும்.(எண் 32:33) 40,000 பேர் யுத்தத்திற்குப் போனார்கள். 70,580 பேர் தங்கள் குடும்பத்தாரைப் பாதுகாப்பதற்காகத் தங்கி விடுகிறார்கள்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், யுத்த சன்னத்தராய் தீவிரத்தோடே இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக நடப்போம் என்று வாக்குப்பண்ணுகிறார்கள். மோசேயோ அவர்களிடத்தில் பேசும்போது, அவர்கள் கர்த்தருடைய சமுகத்திலே யுத்தசன்னத்தராகி கர்த்தருக்கு முன்பாக நடக்கவேண்டுமென்று சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக வாக்குப்பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றப்போகிறார்கள். யுத்தம் கர்த்தருடையது. ஆகையினால் ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக யுத்தசன்னத்தராய் புறப்பட்டுப்போகாமல், கர்த்தருக்கு முன்பாக யுத்தசன்னத்தராய் புறப்பட்டுப்போக வேண்டுமென்று மோசே சொல்லுகிறார்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், தங்களுடைய விண்ணப்பத்தை உறுதிபண்ணுவதற்கு, நல்ல வார்த்தைகளை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மோசயோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள். இரண்டு கோத்திரத்தாரும் தங்களுடைய வார்த்தையில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். உடன்படிக்கையை மீறுவது அவர்களுக்கு பாவமாயிருக்கும் என்று மோசே அவர்களை எச்சரிக்கிறார்.

மோசே ரூபன் புத்திரரையும் காத் புத்திரரையும் நோக்கி, "நீங்கள் இப்படிச் செய்யாமற்போனால், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களாயிருப்பீர்கள்; உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்" (எண் 32:23) என்று சொல்லுகிறார்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், தங்கள் வார்த்தையின்படி செய்யவில்லையென்றால், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள். அது மாத்திரமல்ல அவர்கள் தங்கள் வார்த்தையின்படி செய்யவில்லையென்றால், அவர்கள் பாவம் அவர்களை தொடர்ந்து பிடிக்கும்.

பாவம் நிச்சயமாகவே, பாவியை தொடர்ந்து பிடிக்கும். அது அவனை உடனே பிடிக்காவிட்டாலும், பின்பு எப்படியாவது பிடித்து விடும். ஆகையினால் பாவம் நம்மை பிடிப்பதற்கு முன்பாக, நாம் அந்தப் பாவத்தை கண்டுபிடிக்கவேண்டும். நம்முடைய பாவத்திற்காக மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் அந்தப் பாவத்தை அறிக்கை செய்து, நாம் கண்டுபிடித்த பாவத்தைவிட்டு விலகி வரவேண்டும். இல்லையென்றால் நம்முடைய பாவம் நம்மைப் பிடித்து, நம்மை அழித்துப்போடும்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் கேட்ட விண்ணப்பங்களை மோசே அங்கீகரிக்கிறார். மோசே அவர்களை நோக்கி, "உங்கள் பிள்ளைகளுக்காகப் பட்டணங்களையும், உங்கள் ஆடுமாடுகளுக்காகத் தொழுவங்களையும் கட்டி, உங்கள் வாய்மொழியின்படியே செய்யுங்கள்" (எண் 32:24) என்று சொல்லுகிறார்.

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மறுபடியுமாய் மோசேயின் வார்த்தைகளையும், அவர் சொல்லும் நிபந்தனைகளையும் அங்கீகரிக்கிறார்கள். "எங்கள் ஆண்டவன் கட்டளையிட்டபடியே உமது ஊழியக்காரராகிய நாங்கள் செய்வோம்" (எண் 32:25) என்று இவ்விரண்டு கோத்திரத்தாரும் மோசேயினிடத்தில் வாக்குப்பண்ணுகிறார்கள்.

காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் மோசேயை நோக்கி, "எங்கள் பிள்ளைகளும் எங்கள் மனைவிகளும், எங்கள் ஆடுமாடு முதலான எங்களுடைய எல்லா மிருகஜீவன்களோடும், இங்கே கீலேயாத்தின் பட்டணங்களில் இருப்பார்கள். உமது ஊழியக்காரராகிய நாங்களோ எங்கள் ஆண்டவன் சொன்னபடியே, ஒவ்வொருவரும் யுத்தசன்னத்தாராய், கர்த்தருடைய சமுகத்தில் யுத்தத்திற்குப் போவோம்" (எண் 32:26,27) என்று சொல்லுகிறார்கள்.

மோசேயின் கட்டளை
எண் 32:28-41

எண் 32:28. அப்பொழுது மோசே அவர்களுக்காக ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், நூனின் குமாரனாகிய யோசுவாவுக்கும், இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திர பிதாக்களாகிய தலைவர்களுக்கும் கட்டளையிட்டு:

எண் 32:29. காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் அவரவர் கர்த்தருடைய சமுகத்தில் யுத்தசன்னத்தராய் உங்களோடே கூட யோர்தானைக் கடந்துபோனால், அத்தேசம் உங்களுக்கு வசப்பட்டபின்பு, அவர்களுக்குக் கீலேயாத் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுக்கக்கடவீர்கள்.

எண் 32:30. உங்களோடேகூட யுத்தசன்னத்தராய்க் கடந்துபோகாதிருந்தார்களேயானால், அவர்கள் உங்கள் நடுவே கானான் தேசத்திலே சுதந்தரம் அடையக்கடவர்கள் என்றான்.

எண் 32:31. காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் பிரதியுத்தரமாக: உம்முடைய ஊழியக்காரராகிய நாங்கள் கர்த்தர் எங்களுக்குச் சொன்னபடியே செய்வோம்.

எண் 32:32. யோர்தானுக்கு இக்கரையிலே எங்கள் சுதந்தரத்தின் காணியாட்சி எங்களுக்கு உரியதாகும்படி நாங்கள் கர்த்தருடைய சமுகத்தில் யுத்தசன்னத்தராய் கானான்தேசத்திற்குப் போவோம் என்றார்கள்.

எண் 32:33. அப்பொழுது மோசே காத் புத்திரருக்கும், ரூபன் புத்திரருக்கும், யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருக்கும், எமோரியாருடைய ராஜாவாகிய சீகோனின் ராஜ்யத்தையும், பாசானுடைய ராஜாவாகிய ஓகின் ராஜ்யத்தையும், அவைகளைச் சேர்ந்த தேசங்களையும் அவைகளின் எல்லையைச் சுற்றிலுமுள்ள பட்டணங்களையும் கொடுத்தான்.

எண் 32:34. பின்பு காத் சந்ததியார் தீபோன், அதரோத் ஆரோவேர்.

எண் 32:35. ஆத்ரோத், சோபான், யாசேர், யொகிபேயா.

எண் 32:36. பெத்நிம்ரா, பெத்தாரன் என்னும் அரணான பட்டணங்களையும் ஆட்டுத்தொழுவங்களையும் கட்டினார்கள்.

எண் 32:37. ரூபன் சந்ததியார் எஸ்போன், எலெயாலே, கீரியாத்தாயீம்,

எண் 32:38. பேர்கள் மாற்றப்பட்ட நேபோ, பாகால்மெயோன், சீப்மா என்பவைகளைக் கட்டி, தாங்கள் கட்டின பட்டணங்களுக்கு வேறே பேர்களைக் கொடுத்தார்கள்.

எண் 32:39. மனாசேயின் குமாரனாகிய மாகீரின் புத்திரர் கீலேயாத்திற்குப் போய், அதைக் கட்டிக்கொண்டு, அதிலிருந்த எமோரியரைத் துரத்திவிட்டார்கள்.

எண் 32:40. அப்பொழுது மோசே கீலேயாத்தை மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குக் கொடுத்தான்; அவர்கள் அதிலே குடியேறினார்கள்.

எண் 32:41. மனாசேயின் குமாரனாகிய யாவீர் போய், அவர்களுடைய கிராமங்களைக் கட்டிக்கொண்டு, அவைகளுக்கு யாவீர் என்று பேரிட்டான்.

ரூபன் புத்திரர், காத் புத்திரர் ஆகியோர் மூலமாக ஏற்பட்ட பிரச்சனையை மோசே தீர்த்து வைக்கிறார். மோசே சீக்கிரத்தில் மரிக்கப்போகிறார். ரூபன் புத்திரரும் காத் புத்திரரும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரோடுகூட கானான் தேசத்திற்கு வந்து, அந்த தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு உதவி செய்வதாக வாக்குப்பண்ணுகிறார்கள். ஆனால் மோசேயோ கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கமாட்டார். அதற்கு முன்பே மரித்துப்போவார்.

ரூபன் புத்திரருக்கும், காத் புத்திரருக்கும் தான் சொன்ன வார்த்தைகளையும், அவர்கள் தன்னிடத்தில் சொன்ன உறுதிமொழிகளையும், மோசே தனக்கு பின்பு இஸ்ரவேலுக்கு தலைவர்களாக இருக்கப்போகிறவர்களிடத்தில் சொல்லுகிறார்.

மோசே அவர்களுக்காக ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், நூனின் குமாரனாகிய யோசுவாவுக்கும், இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திர பிதாக்களாகிய தலைவர்களுக்கும் கட்டளையிடுகிறார் (எண் 32:28).

ரூபன் புத்திரருக்கும் காத் புத்திரருக்கும் தான் சொன்ன வார்த்தைகளை, யோசுவாவும் எலெயாசாரும், இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரப்பிதாக்களின் தலைவர்களும் நிறைவேற்றவேண்டும். ஆகையினால் தனக்கும், ரூபன் புத்திரருக்கும், காத் புத்திரருக்கும் இடையே நடைபெற்ற சம்பாஷணைகளை, மோசே யோசுவாவுக்கும், இஸ்ரவேலின் மற்ற தலைவர்களுக்கும் சொல்லுகிறார்.

மோசே யோசுவாவையும் எலெயாசாரையும், இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரப்பிதாக்களாகிய தலைவர்களையும் நோக்கி, "காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் அவரவர் கர்த்தருடைய சமுகத்தில் யுத்தசன்னத்தராய் உங்களோடே கூட யோர்தானைக் கடந்துபோனால், அத்தேசம் உங்களுக்கு வசப்பட்டபின்பு, அவர்களுக்குக் கீலேயாத் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுக்கக்கடவீர்கள். உங்களோடேகூட யுத்தசன்னத்தராய்க் கடந்துபோகாதிருந்தார்களேயானால், அவர்கள் உங்கள் நடுவே கானான் தேசத்திலே சுதந்தரம் அடையக்கடவர்கள்" (எண் 32:29,30) என்று சொல்லுகிறார்.

யோர்தான் நதியின் அப்புறத்திலுள்ள கிழக்கு தேசத்தை ரூபன் புத்திரருக்கும், காத் புத்திரருக்கும் கொடுக்கும் பொறுப்பு பிரதான ஆசாரியனாகிய எலெயாசாரிடம் ஒப்புவிக்கப்படுகிறது. இவ்விரு கோத்திரத்தாரும் தங்களுடைய வார்த்தையைக் காத்துக் கொண்டால், அந்தத் தேசம் அவர்களுக்குரியதாக வேண்டும். இல்லையென்றால், மற்ற கோத்திரத்தாரைப் போல இவர்கள் கானான் தேசத்திலேயே தங்களுடைய சுதந்தரவீதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (எண் 32:29-30).

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மோசே சொன்ன வார்த்தைகளை அங்கீகரிக்கிறார்கள். இவ்விரண்டு கோத்திரத்தாரும், மோசே, யோசுவா, எலெயாசார், இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரப்பிதாக்களாகிய தலைவர்கள் ஆகியோருக்கு முன்பாக, தாங்கள் ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளை மறுபடியுமாய்ச் சொல்லி உறுதிபண்ணுகிறார்.

காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் பிரதியுத்தரமாக: "உம்முடைய ஊழியக்காரராகிய நாங்கள் கர்த்தர் எங்களுக்குச் சொன்னபடியே செய்வோம். யோர்தானுக்கு இக்கரையிலே எங்கள் சுதந்தரத்தின் காணியாட்சி எங்களுக்கு உரியதாகும்படி நாங்கள் கர்த்தருடைய சமுகத்தில் யுத்தசன்னத்தராய் கானான்தேசத்திற்குப் போவோம்" (எண் 32:31,32) என்று சொல்லுகிறார்கள்.

காத் புத்திரரும் ரூபன் புத்திரரும் விரும்பிய பிரகாரமாக, யோர்தான் நதிக்கு இப்புறத்திலுள்ள தேசத்தை, மோசே அவர்களுக்கு பங்குவீதமாகக் கொடுக்கிறார். இந்த வசனத்தில் முதன் முறையாக மனாசேயின் பாதிக்கோத்திரத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் இந்த தேசத்தில் பங்கு கொடுக்கப்படுகிறது.

மோசே காத் புத்திரருக்கும், ரூபன் புத்திரருக்கும், யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருக்கும், எமோரியாருடைய ராஜாவாகிய சீகோனின் ராஜ்யத்தையும், பாசானுடைய ராஜாவாகிய ஒகின் ராஜ்யத்தையும், அவைகளைச் சேர்ந்த தேசங்களையும் அவைகளின் எல்லையைச் சுற்றிலுமுள்ள பட்டணங்களையும் கொடுக்கிறார் (எண் 32:33).

சீகோன், ஒக் ஆகியோரின் பட்டணங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. அதரோத் (எண் 32:3,34)

2. தீபோன் (எண் 32:3,34; எண் 21:30; எண் 33:45; யோசு 13:9,17; ஏசா 15:2-9; எரே 48:18,22)

3. யாசேர் (எண் 32:1,3,35; எண் 21:32; யோசு 13:25). யோர்தானின் கிழக்கு பகுதியிலுள்ள அடைக்கல பட்டிணங்களில் இதுவும் ஒன்று. (யோசு 21:39, எண் 32:1-3; 2சாமு 24:5; 1நாளா 6:81; 1நாளா 26:31; ஏசா 16:8-9; எரே 48:32)

4. நிம்ரா (எண் 32:3) எண் 32:36 ஆவது வசனத்தில் பெத்-நிம்ரா எனவும், ஏசா 15:6; எரே 48:34 ஆகிய வசனங்களில் நிம்ரீம் எனவும் அழைக்கப்படுகிறது.

5. எஸ்போன் - எமோரியரின் ராஜாவாகிய சீகோனின் தலைநகரம். (எண் 32:3,37; எண் 21:25-35; உபா 1:4). ரூபன் இதைக் கட்டினான். (எண் 32:37) காத்திற்கு இது பிரித்து கொடுக்கப்பட்டது. (யோசு 21:38-39)

6. எலெயாலெ - மோவாபியரிடமிருந்து சீகோன் இந்தப் பட்டணத்தைப் பிடித்துக் கொண்டான் (எண் 21:27-30) அதன் பின்பு, இஸ்ரவேல் புத்திரர் இந்தப் பட்டணத்தைப் பிடித்தார்கள் (எண் 32:3,27; ஏசா 15:4; ஏசா 16:9)

7. சேபாம் (எண் 32:3) மறுபெயர்கள் சீப்மா (எண் 32:38) சிப்மா (யோசு 13:19; ஏசா 16:8-9; எரே 48:32)

8. நேபோ (எண் 32:3,38; 1நாளா 5:8)

9. பெயோன் (எண் 32:3). மறுபெயர் பாகால்மெயோன் (எண் 32:38).

யோர்தானின் கிழக்குப் பகுதியை ரூபன் புத்திரருக்கும், காத் புத்திரருக்கும் மட்டும் என்று பிரித்து கொடுப்பதற்குப் பதிலாக அதில் ஒரு பகுதியை மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்கும் பிரித்துக் கொடுக்குமாறு மோசே கூறுகிறார். இதற்கான காரணம் தெரியவில்லை. ஆயினும் கர்த்தர் எல்லாக் காரியங்களையும் தமது சித்தத்தின் பிரகாரமாகவே நிறைவேற்றுவார். ஊரீம், தும்மீம் ஆகியவற்றைப் பயன்படுத்தியே சுதந்தரவீதம் பங்கு பிரித்துக் கொடுக்கப்படுகிறது (எண் 26:55-56; எண் 32:39-42, 33:54; எண் 34:13; எண் 36:2-3; யோசு 13:1-21:40).

காத் சந்ததியாரும், ரூபன் சந்ததியாரும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் தங்களுக்கு பங்குவீதமாக கொடுக்கப்பட்ட தேசத்திலே பட்டணங்களைக் கட்டுகிறார்கள். பழைய பட்டணங்களை புதுப்பிக்கிறார்கள். அந்தப் பட்டணங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பழைய பெயர்களை மாற்றி, அவற்றிற்கு புதிய பெயர்களை கொடுக்கிறார்கள்.

காத் சந்ததியார் தீபோன், அதரோத் ஆரோவேர். ஆத்ரோத், சோபான், யாசேர், யொகிபேயா. பெத்நிம்ரா, பெத்தாரன் என்னும் அரணான பட்டணங்களையும் ஆட்டுத்தொழுவங்களையும் கட்டுகிறார்கள் (எண் 32:34-36).

காத் சந்ததியார் கட்டிய அரணான பட்டணங்களாவன :

1. தீபோன் (எண் 32:3)

2. அதரோத் (எண் 32:3)

3. ஆரோவேர் (உபா 2:36; உபா 3:12; உபா 4:48; நியா 11:26; 1இராஜா 10:33)

4. ஆத்ரோத் (எண் 32:35)

5. சோபான் (எண் 32:35)

6. யாசேர் (எண் 32:35; எண் 21:32) (எண் 32:1,3; யோசு 13:25; யோசு 21:39)

7. யொகிபேயா (எண் 32:35; நியா 8:11)

8. பெத்நிம்ரா (எண் 32:36; யோசு 13:27) (எண் 32:3)

9. பெத்தாரன் (எண் 32:36) (யோசு 13:27)

ரூபன் சந்ததியார் எஸ்போன், எலெயாலெ, கீரியாத்தாயீம், பேர்கள் மாற்றப்பட்ட நேபோ, பாகால்மெயோன், சீப்மா என்பவைகளைக் கட்டி, தாங்கள் கட்டின பட்டணங்களுக்கு வேறே பேர்களைக் கொடுக்கிறார்கள் (எண் 32:37,38).

ரூபன் சந்ததியார் கட்டிய அரணான பட்டணங்களாவன :

1. எஸ்போன் (எண் 32:3,-5)

2. எலெயாலெ (எண் 32:3, -6)

3. கீரியாத்தாயீம் (எண் 32:37). (யோசு 13:19) (எரே 48:1,23; எசே 25:9)

4. நேபோ (எண் 32:3, -8)

5. பாகால்மெயோன் எண் 32:3, -9)

6. சீப்மோ (எண் 32:3, -7)

இஸ்ரவேல் புத்திரர் இந்தப் பட்டணங்களை யுத்தத்தில் கைப்பற்றினார்கள். இவை ஏற்கெனவே கட்டப்பட்டவை. அவற்றை இஸ்ரவேல் புத்திரர்கள் முழுவதுமாக அழிக்கவில்லை. அவர்கள் கட்டாத பட்டணங்களை அவர்களுக்குக் கொடுப்பதாக கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார். (உபா 3:19; உபா 6:10; உபா 19:1) இஸ்ரவேல் புத்திரர்கள் அந்தப் பட்டணங்களைக் கைப்பற்றி, அவற்றைப் புதுப்பித்துக் கொள்கிறார்கள். (யோசு 13-21)

மனாசேயின் குமாரனாகிய மாகீரின் புத்திரர் கீலேயாத்திற்குப்போய், அதைக் கட்டிக்கொண்டு, அதிலிருந்த எமோரியரைத் துரத்திவிடுகிறார்கள். அப்பொழுது மோசே கீலேயாத்தை மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குக் கொடுக்கிறார்; அவர்கள் அதிலே குடியேறுகிறார்கள் (எண் 32:39,40).

சீகோன், ஓக் ஆகியோரை வெற்றி பெற்றதோடு, இஸ்ரவேல் புத்திரரின் யுத்த வெற்றி நின்றுவிடவில்லை. அவர்கள் கீலேயாத்திற்குப்போய், அதிலிருந்து எமோரியரைத் துரத்திவிடுகிறார்கள். ஆகையினால், இந்தப் பகுதி மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் (எண் 32:39-42).

மனாசேயின் குமாரனாகிய யாவீர் போய், அவர்களுடைய கிராமங்களைக் கட்டிக்கொண்டு, அவைகளுக்கு யாவீர் என்று பேரிடுகிறான் (எண் 32:41).

யாவீர் கட்டின பட்டணங்கள் ஆவோத்-யாவீர் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு "பாளயங்கள் அல்லது யாவீரின் பாளயங்கள்" என்று பொருள். யாவீருக்கு முதலில் 23 பட்டணங்கள் இருந்தன. (1நாளா 2:22) அதன் பின்பு 30 பட்டணங்களும் (நியா 10:4) இறுதியில் 60 பட்டணங்களுமாயிற்று (1நாளா 2:23).

நோபாக் போய், கேனாத்தையும் அதின் கிராமங்களையும் கட்டிக்கொண்டு, அதற்குத் தன் நாமத்தின்படியே நோபாக் என்று பேரிடுகிறான் (எண் 32:42).

நேபோ, பால் ஆகியவை புறஜாதியாருடைய தெய்வங்களின் பெயராகும். இஸ்ரவேல் புத்திரர் புறஜாதி தெய்வங்களின் பெயர்களைக்கூட உச்சரிக்க விரும்பவில்லை.

"நான் உங்களுக்குச் சொன்னவைகள் யாவற்றிலும் சாவதானமாயிருங்கள். அந்நிய தேவர்களின் பேரைச் சொல்லவேண்டாம்; அது உன் வாயிலிருந்து பிறக்கக் கேட்கப்படவும் வேண்டாம்" (யாத் 23:13).

காத் புத்திரரும், ரூபன் புத்திரரும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் புறஜாதியாரின் பட்டணங்களுக்கு புதிய பெயர்களைக் கொடுத்து, அவற்றின் பழைய பெயர்களோடு தொடர்புடைய விக்கிரகாராதனையையும், அதன் நினைவுகளையும், அந்தப் பட்டணத்தின் மண்ணில் புதைத்துவிடுகிறார்கள்.

33 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து, வெளியேறி, கடந்த நாற்பத்திரண்டு வருஷங்களாக பிரயாணம்பண்ணின விவரம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் பாளயமிறங்கியிருந்த இடங்கள், அங்கு நடைபெற்ற விசேஷித்த சம்பவங்கள் ஆகியவையெல்லாம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (எண் 33:1-49).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது அந்த தேசத்து குடிகளையெல்லாம் தங்களுக்கு முன்பாக துரத்திவிடவேண்டும். அவர்களுடைய சிலைகளையும் விக்கிரகங்களையும் அழித்து, அவர்களுடைய மேடைகளையெல்லாம் நிர்மூலமாக்கவேண்டும் (எண் 33:50-56).

இந்த அதிகாரத்தின் முன்பகுதி, வனாந்தரத்தில் இதற்கு முன்பு நடைபெற்ற சம்பவங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தின் பின்பகுதி, இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தில் பிரவேசித்த பின்பு, அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாணங்களின் விபரம் எண் 33:1-49

எண் 33:1. மோசே ஆரோன் என்பவர்களுடைய கையின்கீழ்த் தங்கள்தங்கள் சேனைகளின்படியே எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாணங்களின் விபரம்:

எண் 33:2. மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட பிரகாரமாக அவர்களுடைய பிரயாணங்களை எழுதினான்; அவர்கள் ஒவ்வொரு இடங்களிலிருந்து புறப்பட்டுப்பண்ணின பிரயாணங்களாவன:

எண் 33:3. முதலாம் மாதத்தின் பதினைந்தாம் தேதியிலே அவர்கள் ராமசேசை விட்டுப் புறப்பட்டார்கள்; பஸ்காவுக்கு மறுநாளிலே, எகிப்தியர் எல்லாரும் பார்க்க, இஸ்ரவேல் புத்திரர் பெலத்தகையுடன் புறப்பட்டார்கள்.

எண் 33:4. அப்பொழுது எகிப்தியர் கர்த்தர் தங்களுக்குள்ளே சங்கரித்த தலைச்சன்பிள்ளைகளையெல்லாம் அடக்கம்பண்ணினார்கள்; அவர்கள் தேவர்களின்பேரிலும் கர்த்தர் நீதிசெலுத்தினார்.

எண் 33:5. பின்பு இஸ்ரவேல் புத்திரர் ராமசேசிலிருந்து புறப்பட்டுப்போய், சுக்கோத்திலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:6. சுக்கோத்திலிருந்து புறப்பட்டுப்போய், வனாந்தரத்தின் எல்லையிலிருக்கிற ஏத்தாமிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:7. ஏத்தாமிலிருந்து புறப்பட்டுப்போய், பாகால்செபோனுக்கு எதிராக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடிக்குத் திரும்பி, மிக்தோலுக்கு முன்பாகப் பாளயமிறங்கினார்கள்.

எண் 33:8. ஈரோத்தை விட்டுப்புறப்பட்டு, சமுத்திரத்தை நடுவாகக் கடந்து வனாந்தரத்திற்குப்போய், ஏத்தாம் வனாந்தரத்திலே மூன்றுநாள் பிரயாணம்பண்ணி, மாராவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:9. மாராவிலிருந்து புறப்பட்டு, ஏலிமுக்குப்போனார்கள்; ஏலிமிலே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தது; அங்கே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:10. ஏலிமிலிருந்து புறப்பட்டு, சிவந்த சமுத்திரத்தின் அருகே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:11. சிவந்த சமுத்திரத்தை விட்டுப் புறப்பட்டுப்போய், சீன்வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:12. சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டுப்போய், தொப்காவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:13. தொப்காவிலிருந்து புறப்பட்டுப்போய், ஆலூசிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:14. ஆலூசிலிருந்து புறப்பட்டுப்போய், ரெவிதீமிலே பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது.

எண் 33:15. ரெவிதீமிலிருந்து புறப்பட்டுப்போய், சீனாய் வனாந்தரத்திலே பாளமிறங்கினார்கள்.

எண் 33:16. சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டுப்போய், கிப்ரோத் அத்தாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:17. கிப்ரோத் அத்தாவிலிருந்து புறப்பட்டுப்போய், ஆஸரோத்திலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:18. ஆஸரோத்திலிருந்து புறப்பட்டுப்போய், ரித்மாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:19. ரித்மாவிலிருந்து புறப்பட்டுப்போய், ரிம்மோன்பேரேசிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:20. ரிம்மோன்பேரேசிலிருந்து புறப்பட்டுப்போய், லிப்னாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:21. லிப்னாவிலிருந்து புறப்பட்டுப்போய், ரீசாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:22. ரீசாவிலிருந்து புறப்பட்டுப்போய், கேலத்தாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:23. கேலத்தாவிலிருந்து புறப்பட்டுப்போய், சாப்பேர் மலையிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:24. சாப்பேர் மலையிலிருந்து புறப்பட்டுப்போய், ஆரதாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:25. ஆரதாவிலிருந்து புறப்பட்டுப்போய், மக்கெலோத்திலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:26. மக்கெலோத்திலிருந்து புறப்பட்டுப்போய், தாகாத்திலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:27. தாகாத்திலிருந்து புறப்பட்டுப்போய், தாராகிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:28. தாராகிலிருந்து புறப்பட்டுப்போய், மித்காவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:29. மித்காவிலிருந்து புறப்பட்டுப்போய், அஸ்மோனாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:30. அஸ்மோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், மோசெரோத்திலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:31. மோசெரோத்திலிருந்து புறப்பட்டுப்போய், பெனெயாக்கானிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:32. பெனெயாக்கானிலிருந்து புறப்பட்டுப்போய், கித்காத் மலையிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:33. கித்காத் மலையிலிருந்து புறப்பட்டுப்போய், யோத்பாத்தாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:34. யோத்பாத்தாவிலிருந்து புறப்பட்டுப்போய், எப்ரோனாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:35. எப்ரோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், எசியோன் கேபேரிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:36. எசியோன் கேபேரிலிருந்து புறப்பட்டுப்போய், காதேசாகிய சீன்வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:37. காதேசிலிருந்து புறப்பட்டுப்போய், ஏதோம் தேசத்தின் எல்லையிலிருக்கிற ஓர் என்னும் மலையிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:38. அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோன் கர்த்தருடைய கட்டளையின்படியே ஓர் என்னும் மலையின்மேல் ஏறி, அங்கே இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாற்பதாம் வருஷம் ஐந்தாம் மாதம் முதல் தேதியிலே மரணமடைந்தான்.

எண் 33:39. ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரணமடைந்தபோது, நூற்றிருபத்து மூன்று வயதாயிருந்தான்.

எண் 33:40. அந்நாட்களில் கானான் தேசத்தின் தென்திசையில் குடியிருந்த கானானியனாகிய ஆராத் என்னும் ராஜா இஸ்ரவேல் புத்திரர் வருகிறதைக் கேள்விப்பட்டான்.

எண் 33:41. ஓர் என்னும் மலையை விட்டுப் புறப்பட்டுப்போய், சல்மோனாவிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:42. சல்மோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், பூனோனிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:43. பூனோனிலிருந்து புறப்பட்டுப்போய், ஓபோத்திலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:44. ஓபோத்திலிருந்து புறப்பட்டுப்போய், மோவாபின் எல்லையிலுள்ள அபாரீமின் மேடுகளிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:45. அந்த மேடுகளை விட்டுப் புறப்பட்டுப்போய், தீபோன்காத்திலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:46. தீபோன்காத்திலிருந்து புறப்பட்டுப்போய், அல்மோன் திப்லத்தாயிமிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:47. அல்மோன் திப்லத்தாயிமிலிருந்து புறப்பட்டுப்போய், நேபோவுக்கு எதிரான அபாரீம் மலைகளிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:48. அபாரீம் மலைகளிலிருந்து புறப்பட்டுப்போய், எரிகோவின் அருகே யோர்தானைச்சார்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே பாளயமிறங்கினார்கள்.

எண் 33:49. யோர்தானைச் சார்ந்த மோவாபின் சமனான வெளிகளில் அவர்கள் பெத்யெசிமோத்தைத் தொடங்கி, ஆபேல்சித்தீம்மட்டும் பாளயமிறங்கியிருந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் வனாந்தரத்தின் வழியாக பிரயாணம்பண்ணி வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரயாணங்களைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

மோசே ஆரோன் என்பவர்களுடைய கையின்கீழ்த் தங்கள்தங்கள் சேனைகளின்படியே எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாணங்களின் விபரம் (எண் 33:1) என்று இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டபிரகாரமாக அவர்களுடைய பிரயாணங்களை எழுதுகிறார் (எண் 33:2). கடந்த காலத்தில் கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளையெல்லாம் நாம் நினைவுகூரவேண்டும். நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்தில், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், நமக்கு விசேஷித்த வழியிலே வெளிப்படுத்தப்பட்டதை நாம் மறவாமல் நினைவுகூரவேண்டும். கடந்தகால நினைவுகளை மறவாமல் நினைவில் வைத்திருப்பதற்கு, அவற்றை ஞாபகப்புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கவேண்டும்.

நம்முடைய ஜீவியத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் நமக்கு திருப்பு முனையாக அமைந்திருக்கும். நம்முடைய செய்கைகளிலும், ஜீவியத்தின் பாதையிலும் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கும். இவற்றையெல்லாம் நம்முடைய ஞாபகப்புஸ்தகத்தில் எழுதி வைத்தால், அவ்வப்போது நாம் அவற்றை வாசித்து, பூர்வகாலங்களை நினைவுகூரலாம்.

மனுஷருடைய ஞாபக சக்தி மிகவும் குறைவானது. நாம் சீக்கிரத்தில் பல காரியங்களை மறந்துவிடுவோம். நம்முடைய ஜீவியத்தில் நடைபெற்ற சம்பவங்களை நாம் எழுதி வைக்கும்போது, அவற்றை நாம் ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு உதவியாயிருக்கும்.

"உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை நீ கைக்கொள்வாயோ கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து, உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக" *(உபா 8:2)*.

இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாணங்களின் விவரத்தை எழுதுமாறு கர்த்தர் மோசேக்கு கட்டளை கொடுக்கிறார். மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டபிரகாரமாக அவர்களுடைய பிரயாணங்களை எழுதுகிறார். இஸ்ரவேல் புத்திரருடைய பிரயாணம் எகிப்து தேசத்திலிருந்து ஆரம்பமாகிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு, வனாந்தரத்தின் வழியாக பிரயாணம்பண்ணி, இப்போது மோவாபின் சமவெளிகளிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு இடங்களிலிருந்து புறப்பட்டுப்பண்ணின பிரயாணங்களின் விவரத்தை மோசே இந்த அதிகாரத்தில் எழுதுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தங்கள் சேனைகளின்படியே எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டார்கள். இந்த சம்பவத்தை இஸ்ரவேல் புத்திரரும், அவர்களுடைய பின்சந்ததியாரும் அடிக்கடி நினைவுகூரவேண்டும். அவர்கள் 430 வருஷங்களாக எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தார்கள். ஆனாலும் அவர்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டுப்போகும்போதோ, யுத்தவீரர்களைப்போல, தங்கள் தங்கள் சேனைகளின்படியே, அணிவகுத்து புறப்பட்டுப்போனார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறி புறப்பட்டுப்போனபோது, திருடர்களைப்போல, யாருக்கும் தெரியாமல் மறைவாகப் போகவில்லை. அவர்கள் கோழைகளைப்போல பயந்து நடுங்கியும் பிரயாணம்பண்ணவில்லை.

"நீங்கள் தீவிரித்துப் புறப்படுவதில்லை; நீங்கள் ஓடிப்போகிறவர்கள்போல ஓடிப்போவதுமில்லை; கர்த்தர் உங்கள் முன்னே போவார்; இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார்" *(ஏசா 52:12)*.

எகிப்து தேசத்தார் இஸ்ரவேல் ஜனத்தாரை தங்கள் தேசத்தைவிட்டு சீக்கிரத்தில் புறப்பட்டுப்போகுமாறு துரிதப்படுத்தினார்கள். கர்த்தர் எகிப்தியருடைய மனதிலே இஸ்ரவேல் ஜனத்தாரைக் குறித்து, மிகப்பெரிய பாரத்தை ஏற்படுத்தினார். அந்தப் பாரத்தை எகிப்தியரால் தாங்க முடியவில்லை. ஆகையினால் எகிப்தியர்கள் இஸ்ரவேல் புத்திரரை துரிதப்படுத்தி, தங்கள் தேசத்தைவிட்டு சீக்கிரமாய்ப் புறப்படப்பண்ணினார்கள்.

முதலாம் மாதத்தின் பதினைந்தாம் தேதியிலே அவர்கள் ராமசேசை விட்டுப் புறப்பட்டார்கள்; பஸ்காவுக்கு மறுநாளிலே, எகிப்தியர் எல்லாரும் பார்க்க, இஸ்ரவேல் புத்திரர் பெலத்தகையுடன் புறப்பட்டார்கள் *(எண் 33:3)*.

முதலாம் மாதத்தின் பதினைந்தாம் தேதி என்பது இஸ்ரவேல் புத்திரரின் புதிய நாள்காட்டியில் முதலாவது மாதமாகும். ஆங்கில வருஷத்தில் இது மார்ச் மாதக்கடைசியிலும், ஏப்ரல்மாதத் துவக்கத்திலும் வரும். *(லேவி 12:2)*. இதற்கு முன்பு யூதருடைய பழைய வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஆரம்பமாயிற்று. இது குடிகளின் வருஷம் அல்லது சபையின் வருஷம் என்று அழைக்கப்பட்டது.

எகிப்து தேசத்திலுள்ள கெய்ரோ பட்டணமே அக்காலத்து ராமசேஸ் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். தேவனுடைய பெலத்த கை, இஸ்ரவேல் புத்திரருக்கு பாதுகாப்பாக வருகிறது *(லேவி 14:8)*.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து முதலாம் மாதத்தில் புறப்படுகிறார்கள். அது நிசான் அல்லது ஆபிப் மாதத்தின் பதினைந்தாம் நாளாகும். (யாத் 13:4) இது பஸ்காவிற்கு அடுத்த நாளும், ஓய்வுநாளுமாகும். (யாத் 12:37-42; லேவி 23:5-8).

அப்பொழுது எகிப்தியர் கர்த்தர் தங்களுக்குள்ளே சங்கரித்த தலைச்சன்பிள்ளைகளையெல்லாம் அடக்கம்பண்ணினார்கள்; அவர்கள் தேவர்களின்பேரிலும் கர்த்தர் நீதிசெலுத்தினார் (எண் 33:4).

எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரர் தொடர்ந்து பிரயாணம்பண்ணுகிறார்கள். இந்த பிரபஞ்சத்தில், விசுவாசிகளாகிய நாமும், இஸ்ரவேல் புத்திரரைப்போல, பரமகானானை நோக்கி தொடர்ந்து பிரயாணம்பண்ணுகிறோம். நமக்கு நிலையான நகரம் இந்தப் பூமியில் இல்லை. பரலோகமே நமக்கு நித்திய நகரம். அதுவே நம்முடைய நித்திய வாசஸ்தலம்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வனாந்தரத்தின் வழியாக பிரயாணம்பண்ணுகிறார்கள். வனாந்தரம் மனுஷசஞ்சாரமில்லாமல் இருக்கிறது. அங்கே மனுபுத்திரர் யாரும் குடியிருக்கவில்லை. வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுவதற்கு தெளிவான பாதைகளும் இல்லை. மனுஷஜீவியத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளும் வனாந்தரத்தில் காணப்படவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிறபோது, கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தினாலும், வல்லமையினாலும், அவர்களுடைய அடிப்படை ஜீவாதார தேவைகளை சந்திக்கிறார். கர்த்தரே அவர்களை போஷித்து பராமரிக்கிறார். இதனால் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது.

வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிற இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கை ஏராளமாயிருக்கிறது. அவர்கள் வனாந்தரப்பாதையின் வழியாக நாற்பது வருஷங்களாக பிரயாணம்பண்ணுகிறார்கள். இப்போது அவர்கள் மோவாபின் சமவெளியிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். இத்தனை வருஷங்களாக கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு குறைவும் வைக்கவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலுள்ள ராமசேசிலிருந்து புறப்பட்டுப்போய், சுக்கோத்திலே பாளயமிறங்குகிறார்கள். சுக்கோத்திலிருந்து புறப்பட்டுப்போய், வனாந்தரத்தின் எல்லையிலிருக்கிற ஏத்தாமிலே பாளயமிறங்குகிறார்கள் (எண் 33:5,6).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து முதலாம் மாதத்தில் புறப்படுகிறார்கள். அது நிசான் அல்லது ஆபிப் மாதத்தின் பதினைந்தாம் நாளாகும். (யாத் 13:4) இது பஸ்காவிற்கு அடுத்த நாளும், ஓய்வுநாளுமாகும். (யாத் 12:37-42; லேவி 23:5-8).

அப்பொழுது எகிப்தியர் கர்த்தர் தங்களுக்குள்ளே சங்கரித்த தலைச்சன்பிள்ளைகளையெல்லாம் அடக்கம்பண்ணினார்கள்; அவர்கள் தேவர்களின்பேரிலும் கர்த்தர் நீதிசெலுத்தினார் (எண் 33:4).

எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரர் தொடர்ந்து பிரயாணம்பண்ணுகிறார்கள். இந்த பிரபஞ்சத்தில், விசுவாசிகளாகிய நாமும், இஸ்ரவேல் புத்திரரைப்போல, பரமகானானை நோக்கி தொடர்ந்து பிரயாணம்பண்ணுகிறோம். நமக்கு நிலையான நகரம் இந்தப் பூமியில் இல்லை. பரலோகமே நமக்கு நித்திய நகரம். அதுவே நம்முடைய நித்திய வாசஸ்தலம்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வனாந்தரத்தின் வழியாக பிரயாணம்பண்ணுகிறார்கள். வனாந்தரம் மனுஷசஞ்சாரமில்லாமல் இருக்கிறது. அங்கே மனுபுத்திரர் யாரும் குடியிருக்கவில்லை. வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுவதற்கு தெளிவான பாதைகளும் இல்லை. மனுஷஜீவியத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளும் வனாந்தரத்தில் காணப்படவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிறபோது, கர்த்தர் தம்முடைய தெய்வீக ஞானத்தினாலும், வல்லமையினாலும், அவர்களுடைய அடிப்படை ஜீவாதார தேவைகளை சந்திக்கிறார். கர்த்தரே அவர்களை போஷித்து பராமரிக்கிறார். இதனால் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது.

வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிற இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கை ஏராளமாயிருக்கிறது. அவர்கள் வனாந்தரப்பாதையின் வழியாக நாற்பது வருஷங்களாக பிரயாணம்பண்ணுகிறார்கள். இப்போது அவர்கள் மோவாபின் சமவெளியிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். இத்தனை வருஷங்களாக கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு குறைவும் வைக்கவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலுள்ள ராமசேசிலிருந்து புறப்பட்டுப்போய், சுக்கோத்திலே பாளயமிறங்குகிறார்கள். சுக்கோத்திலிருந்து புறப்பட்டுப்போய், வனாந்தரத்தின் எல்லையிலிருக்கிற ஏத்தாமிலே பாளயமிறங்குகிறார்கள் (எண் 33:5,6).

இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கிய இடங்களைப் பற்றிய அட்டவணையில் ஒருசில வேறுபாடுகள் காணப்படுகிறது. ஆயினும் அதில் முரண்பாடு எதுவும் இல்லை. சுமார் 60 இலட்சம் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டார்கள். அவர்கள் பல இடங்களில் பாளயமிறங்கி தங்கியிருந்திருக்கிறார்கள்.

யாத்திராகமம் புஸ்தகத்தில் மோசே பாளயமிறங்கிய இடங்கள், மோசேயோடு உதவிபுரிந்த கோத்திரத்து தலைவர்கள், ஜனங்கள், ஆகியவற்றைப் பற்றிய விவரமெல்லாம் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த அதிகாரத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் நீண்ட நாட்களாக பாளயமிறங்கியிருந்த இடங்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பாளயங்களைச் சுற்றிலுமுள்ள மேய்ச்சல் நிலங்களில் தங்கள் மிருகஜீவன்களை மேய்த்தார்கள். சிறிதுகாலம் மட்டும் பாளயமிறங்கியிருந்த இடங்களைப் பற்றி முழுவிவரம் வெளிப்படுத்தப்படவில்லை.

ஏத்தாம் வனாந்தரத்தின் எல்லையாயிருக்கிறது. இங்கிருந்தான் வனாந்தரம் ஆரம்பமாகிறது. இஸ்ரவேல் புத்திரர் ஏத்தாமிலிருந்து வனாந்தரத்திற்கு உள்ளே பிரயாணம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏத்தாமிலிருந்து புறப்பட்டுப்போய், பாகால்செபோனுக்கு எதிராக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடிக்குத் திரும்பி, மிக்தோலுக்கு முன்பாகப் பாளயமிறங்குகிறார்கள் (எண் 33:7).

அவர்கள் ஈரோத்தை விட்டுப்புறப்பட்டு, சமுத்திரத்தை நடுவாகக் கடந்து வனாந்தரத்திற்குப்போய், ஏத்தாம் வனாந்தரத்திலே மூன்றுநாள் பிரயாணம்பண்ணி, மாராவிலே பாளயமிறங்குகிறார்கள் (எண் 33:8).

எந்தத் தேசத்தைப் பற்றியும் குறிப்பிடப்படாமல் மூன்றுநாள் பிரயாணம் பண்ணினார்கள் என்று மட்டுமே இங்கு கூறப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணினாலும் கர்த்தர் அவர்களுடைய தேவைகளை சந்திக்கிறார். அவர்களுக்கு தண்ணீரும் போஜனமும் கொடுத்து அவர்களை ஆதரிக்கிறார். வனாந்தரத்தில் தெளிவான பாதை இல்லாவிட்டாலும், கர்த்தர் அவர்களை பகலிலே மேகஸ்தம்பத்தின் மூலமாகவும், இரவிலே அக்கினி ஸ்தம்பத்தின் மூலமாகவும் வழிநடத்துகிறார்.

கர்த்தர் தமக்கு சித்தமான பிரகாரம் இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துகிறார். அவர்கள் வனாந்தரத்திலே இங்கும் அங்குமாகப் போகிறார்கள். அவர்களுடைய பிரயாணம் முன்னோக்கியும் பின்நோக்கியும் செல்கிறது. சுழன்று சுழன்று செல்லுகிற சிக்கலான பாதையிலே திகைப்படைந்து போவதுபோல, இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் திகைப்படைந்தாலும், கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக அவர்களை வழிநடத்துகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தின் கஷ்டத்தைப் பார்த்தால், அவர்களால் பிரயாணம்பண்ண முடியாது. வனாந்தரத்தில் தெளிவான பாதையில்லை. கர்த்தரே அவர்களை வழிநடத்துகிறார். அக்கினி ஸ்தம்பமும் மேகஸ்தம்பமும் இஸ்ரவேல் புத்திரரை வனாந்தரத்திலே வழிநடத்துகிறது.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை தமக்கு சித்தமான பாதையிலே வழிநடத்துகிறார். கர்த்தருடைய வழியே நமக்கு நல்ல வழி. சில சமயங்களில் கர்த்தர் காண்பிக்கும் வழியாகக்போனால், நம்முடைய இலக்கை சீக்கிரத்தில் அடைய முடியாததுபோல இருக்கலாம். ஆனாலும் கர்த்தருடைய வழியையே நாம் பின்பற்றவேண்டும். அந்த வழியே நமக்கு பாதுகாப்பான வழி.

நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்போது, நாம் ஒருபோதும் காணாமல் போகமாட்டோம். கர்த்தர் நம்மை கரம்பிடித்து வழிநடத்தி, நாம் போகவேண்டிய இலக்குக்கு நம்மைக் கொண்டு போய்ச் சேர்ப்பார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணின விவரமும், அவர்கள் பாளயமிறங்கியிருந்த இடங்களைப்பற்றிய விவரமும், அவர்களுக்கு வனாந்தரத்தில் ஏற்பட்ட முக்கியமான அனுபவங்களைப்பற்றிய விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

இஸ்ரவேல் புத்திரர் மாராவிலிருந்து புறப்பட்டு, ஏலிமுக்குப்போனார்கள்; ஏலிமிலே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தது; அங்கே பாளயமிறங்கினார்கள் (எண் 33:9).

ஏலிமிலிருந்து புறப்பட்டு, சிவந்த சமுத்திரத்தின் அருகே பாளயமிறங்கினார்கள் (எண் 33:10).

யாத் 15:23-17:1 ஆகிய வசனங்களில் இந்தச் சம்பவம் கூறப்படவில்லை. ஏலிமிற்கும், சிவந்த சமுத்திரத்திற்கும் இடையிலுள்ள தூரம் ஒன்றரை மைல் மட்டுமே ஆகும். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் ஏலிமில் பாளயமிறங்கியிருந்தபோது, அவர்களில் ஒரு பகுதியினர் சிவந்த சமுத்திரத்தின் அருகிலும், பாளயமிறங்கியிருந்திருக்கலாம்.

சிவந்த சமுத்திரத்தை விட்டுப் புறப்பட்டுப்போய், சீன்வனாந்தரத்திலே பாளமிறங்கினார்கள் (எண் 33:11).

சீன்வனாந்தரத்திலிருந்து புறப்பட்டுப்போய், தொப்காவிலே பாளயமிறங்கினார்கள். தொப்காவிலிருந்து புறப்பட்டுப்போய், ஆலூசிலே பாளயமிறங்கினார்கள். ஆலூசிலிருந்து புறப்பட்டுப்போய், ரெவிதீமிலே பாளயமிறங்கினார்கள்; அங்கே ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது. ரெவிதீமிலிருந்து புறப்பட்டுப்போய், சீனாய் வனாந்தரத்திலே பாளமிறங்கினார்கள் (எண் 33:12-15).

இஸ்ரவேல் புத்திரர் ராமசேசிலிருந்து சீனாய் வரையிலும் மேற்கொண்ட பிரயாணங்களைப்பற்றிய விவரம் வருமாறு :

1. ராமசேசிலிருந்து சுக்கோத்து வரையிலும் (யாத் 12:12-37; எண் 33:5)
2. சுக்கோத்திலிருந்து ஏத்தாம் வரையிலும் (யாத் 13:20; எண் 33:6)
3. ஏத்தாமிலிருந்து ஈரோத் பள்ளத்தாக்கு வரையிலும் (யாத் 14:2; எண் 33:7)
4. ஈரோத்தை விட்டுப்புறப்பட்டு, சமுத்திரத்தை நடுவாகக் கடந்து வனாந்தரத்திற்குப் போய், ஏத்தாம் வனாந்தரத்திலே மூன்றுநாள் பிரயாணம்பண்ணி, மாராவிலே பாளயமிறங்கினார்கள். (யாத் 15:22; எண் 33:8)
5. மாராவிலிருந்து ஏலிம் வரையிலும் (யாத் 15:23-27; எண் 33:9)
6. ஏலிமிலிருந்து சிவந்த சமுத்திரம் வரையிலும் (எண் 33:10)
7. சிவந்த சமுத்திரத்திலிருந்து சீன் வனாந்தரம் வரையிலும் (எண் 33:11)
8. சீன் வனாந்தரத்திலிருந்து தொப்கா வரையிலும் (எண் 33:12)
9. தொப்காவிலிருந்து ஆலூஸ் வரையிலும் (எண் 33:13)
10. ஆலூசிலிருந்து ரெவிதீம் வரையிலும் (யாத் 17:1; எண் 33:14)
11. ரெவிதீமிலிருந்து சீனாய் வனாந்தரம் வரையிலும் (எண் 33:15; யாத் 19:1-2)

இங்கு கூறப்பட்டிருக்கும் பாளயங்களின் அட்டவணையும், யாத் 12:37-19:1 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அட்டவணையும் ஒத்திருக்கிறது. செங்கடல் அருகில் பாளயமிறங்கிய சம்பவத்திலும், (எண் 33:10) தொப்கா, ஆலூஸ் ஆகிய இடங்களில் பாளயமிறங்கிய சம்பவத்திலும் (எண் 33:12-14), இவ்விரண்டு அட்டவணைகளிலும் வேறுபாடு காணப்படுகிறது.

சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டுப்போய், கிப்ரோத் அத்தாவிலே பாளயமிறங்கினார்கள். கிப்ரோத் அத்தாவிலிருந்து புறப்பட்டுப்போய், ஆஸரோத்திலே பாளயமிறங்கினார்கள். ஆஸரோத்திலிருந்து புறப்பட்டுப்போய், ரித்மாவிலே பாளயமிறங்கினார்கள் (எண் 33:16-18).

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து காதேஸ் வரையிலும் பிரயாணம்பண்ணிய விவரம் வருமாறு :

1. சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டுப்போய், கிப்ரோத் அத்தாவிலே பாளயமிறங்கினார்கள். (மூன்று நாள் பிரயாணம்) (எண் 10:11-11:35)
2. கிப்ரோத் அத்தாவிலிருந்து புறப்பட்டுப் போய், ஆஸரோத்திலே பாளயமிறங்கினார்கள். (எண்33:17; எண் 10:34-35)
3. ஆஸரோத்திலிருந்து புறப்பட்டுப்போய், ரித்மாவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:18; எண் 13:1-14:45). காதேசில் முதல் முறையாகப் பாளயமிறங்கியபோது, தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்பு, அவர்கள் அங்கு அநேகநாள் தங்கியிருக்கிறார்கள். (உபா 1:46-2:1, எண் 14:23-35.

ரித்மாவிலிருந்து புறப்பட்டுப்போய், ரிம்மோன்பேரேசிலே பாளயமிறங்கினார்கள். ரிம்மோன்பேரேசிலிருந்து புறப்பட்டுப்போய், லிப்னாவிலே பாளயமிறங்கினார்கள். லிப்னாவிலிருந்து புறப்பட்டுப்போய், ரீசாவிலே பாளயமிறங்கினார்கள். ரீசாவிலிருந்து புறப்பட்டுப்போய், கேலத்தாவிலே பாளயமிறங்கினார்கள். கேலத்தாவிலிருந்து புறப்பட்டுப்போய், சாப்பேர் மலையிலே பாளயமிறங்கினார்கள் (எண் 33:19-23).

சாப்பேர் மலையிலிருந்து புறப்பட்டுப்போய், ஆரதாவிலே பாளயமிறங்கினார்கள். ஆரதாவிலிருந்து புறப்பட்டுப்போய், மக்கெலோத்திலே பாளயமிறங்கினார்கள். மக்கெலோத்திலிருந்து புறப்பட்டுப்போய், தாகாத்திலே பாளயமிறங்கினார்கள். தாகாத்திலிருந்து புறப்பட்டுப்போய், தாராகிலே பாளயமிறங்கினார்கள் (எண் 33:24-27).

தாராகிலிருந்து புறப்பட்டுப்போய், மித்காவிலே பாளயமிறங்கினார்கள். மித்காவிலிருந்து புறப்பட்டுப்போய், அஸ்மோனாவிலே பாளயமிறங்கினார்கள். அஸ்மோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், மோசெரோத்திலே பாளயமிறங்கினார்கள். மோசெரோத்திலிருந்து புறப்பட்டுப்போய், பெனெயாக்கானிலே பாளயமிறங்கினார்கள். பெனெயாக்கானிலிருந்து புறப்பட்டுப்போய், கித்காத் மலையிலே பாளயமிறங்கினார்கள் (எண் 33:28-32).

உபா 10:6-7 ஆகிய வசனங்களில் மோசெரோத், பெனெயாக்கான், கித்காத் , யோத்பாத்தா ஆகிய இடங்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. ஆரோன் மோசெராவில் மரித்துப்போனார் என்று, மோசே கூறியிருக்கிறார். இது ஓர் மலையாக இருக்கலாம் (எண் 20:23-29). இஸ்ரவேல் புத்திரர் காதேசிலிருந்து ஓர் மலைக்குப் பிரயாணம் பண்ணி வந்த, நாற்பதாவது வருஷத்தைப் பற்றி, உபா 10:6-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது (எண் 20:1-29). எண் 33:19-36 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் செங் கடலிலுள்ள எசியோன் கேபேரைத் தவிர, மற்ற 17 இடங்களைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. (எண் 33:35-36; உபா 2:8; 1இராஜா 9:26; 1இராஜா 22:49).

கித்காத் மலையிலிருந்து புறப்பட்டுப்போய், யோத்பாத்தாவிலே பாளயமிறங்கினார்கள்.யோத்பாத்தாவிலிருந்து புறப்பட்டுப்போய், எப்ரோனாவிலே பாளயமிறங்கினார்கள். எப்ரோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், எசியோன் கேபேரிலே பாளயமிறங்கினார்கள். எசியோன் கேபேரிலிருந்து புறப்பட்டுப்போய், காதேசாகிய சீன்வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள் (எண் 33:33-36).

காதேசிலிருந்து மறுபடியும் காதேஸ் வரையிலும் மேற்கொண்ட பிரயாணங்களின் விவரம் வருமாறு:

1. ரித்மாவிலிருந்து புறப்பட்டுப்போய், ரிம்மோன்பேரேசிலே பாளயமிறங்கினார்கள்.
2. ரிம்மோன்பேரேசிலிருந்து புறப்பட்டுப்போய், லிப்னாவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:20)
3. லிப்னாவிலிருந்து புறப்பட்டுப்போய், ரீசாவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:21)
4. ரீசாவிலிருந்து புறப்பட்டுப்போய், கேலத்தாவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:22)
5. கேலத்தாவிலிருந்து புறப்பட்டுப்போய், சாப்பேர் மலையிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:23)
6. சாப்பேர் மலையிலிருந்து புறப்பட்டுப்போய், ஆரதாவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:24)
7. ஆரதாவிலிருந்து புறப்பட்டுப்போய், மக்கெலோத்திலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:25)
8. மக்கெலோத்திலிருந்து புறப்பட்டுப்போய், தாகாத்திலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:26)
9. தாகாத்திலிருந்து புறப்பட்டுப்போய், தாராகிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:27)
10. தாராகிலிருந்து புறப்பட்டுப்போய், மித்காவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:28)
11. மித்காவிலிருந்து புறப்பட்டுப்போய், அஸ்மோனாவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:29)
12. அஸ்மோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், மோசெரோத்திலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:30)
13. மோசெரோத்திலிருந்து புறப்பட்டுப்போய், பெனெயாக்கானிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:31)
14. பெனெயாக்கானிலிருந்து புறப்பட்டுப் போய், கித்காத் மலையிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:32)
15. கித்காத் மலையிலிருந்து புறப்பட்டுப்போய், யோத்பாத்தாவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:33)
16. யோத்பாத்தாவிலிருந்து புறப்பட்டுப்போய், எப்ரோனாவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:34)

17. எப்ரோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், எசியோன் கேபேரிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:35)

18. எசியோன் கேபேரிலிருந்து புறப்பட்டுப் போய், காதேசியாகிய சீன் வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:36)

இஸ்ரவேல் புத்திரரின் மூன்று பிரயாணங்களின் அட்டவணை இந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. பஸ்காவை ஆசரித்த பின்பு, எகிப்திலுள்ள ராமசேசிலிருந்து இரவுவேளையில் இஸ்ரவேல் புத்திரர்கள் தங்களுடைய பிரயாணத்தை ஆரம்பித்து, சீனாய் வனாந்தரத்தில் போய் தங்குகிறார்கள் (எண் 33:5)

சீனாய் வனாந்தரத்திலிருந்து புறப்பட்டுப் போய், காதேஸ்பர்னேயாவில் பாளயமிறங்குகிறார்கள். தேவனுடைய வார்த்தை உண்மையானதா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காக இங்கிருந்து கானான் தேசத்திற்கு இஸ்ரவேல் புத்திரர் வேவுகாரர்களை அனுப்புகிறார்கள் (எண் 33:16)

இதன்பின்பு, இறுதியாக காதேசிலிருந்து பிரயாணம்பண்ணி, முப்பத்தெட்டு வருஷக் காலமாக வனாந்தரத்தில் அலைந்து திரிந்துவிட்டு மறுபடியும் காதேசிற்கே திரும்பவும் வந்து சேர்கிறார்கள் (எண் 33:19).

ஏதோமையும், மோவாபையும் சுற்றிலும் மேலும் இரண்டு வருஷங்கள் தங்கியிருந்து, யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள சீகோனையும், ஓகையும் ஜெயிக்கிறார்கள். இத்துடன் இஸ்ரவேல் புத்திரரின் நாற்பது வருஷ வனாந்தர அலைச்சல் முடிவுறுகிறது. இப்பொழுது இஸ்ரவேல் புத்திரர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணாமல் இருந்திருந்தால், நாற்பது வருஷங்களுக்கு முன்பாகவே ஒரே நாளில் அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்திருக்க முடியும். கானான் தேசத்தைச் சோதிப்பதற்காக வேவுகாரரை அனுப்பியது கர்த்தர் உண்மையுள்ளவரா என்று அறிய அவரையே சோதிப்பது போல இருக்கிறது. வேவுகாரர்கள் திரும்பி வந்து, துர்ச்செய்தியைப் பரப்பினார்கள். அது கர்த்தருக்கு விசனமாய் இருந்தது (எண் 13-14).

நாற்பது வருஷக்காலத்து வனாந்தரப் பிரயாணத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் 17 இடங்களில் பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர்கள் காதேசிற்கு முதல் முறையாக வந்து மறுபடியும் இங்கு வருவதற்கு 38 வருஷமாயிற்று (எண் 13:1-14:45, எண் 33:19,36) மிரியாம் இங்கு மரித்துப் போனாள். (எண் 20:1-14).

காதேசிலிருந்து புறப்பட்டுப்போய், ஏதோம் தேசத்தின் எல்லையிலிருக்கிற ஓர் என்னும் மலையிலே பாளயமிறங்கினார்கள். அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோன் கர்த்தருடைய கட்டளையின்படியே ஓர் என்னும் மலையின்மேல் ஏறி, அங்கே இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாற்பதாம் வருஷம் ஐந்தாம் மாதம் முதல் தேதியிலே மரணமடைந்தார். ஆரோன் ஓர் என்னும் மலையிலே மரணமடைந்தபோது, நூற்றிருபத்து மூன்று வயதாயிருந்தார் (எண் 33:37-39).

ஆரோனுடைய மரணத்தைப்பற்றி இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாற்பதாம் வருஷம் ஐந்தாம் மாதம் முதல் தேதியிலே ஆரோன் மரணமடைகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சீனாய் மலையிலிருந்து புறப்பட்ட 38 அல்லது 39 ஆவது வருஷத்தில் இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. (எண் 10:11-12). எகிப்திலிருந்து புறப்பட்டு, 39 வருஷமும், நாலரை மாதமும் சென்றபின்பு ஆரோன் மரித்துப் போகிறார். (எண் 33:3,38). ஆரோன் 123 ஆவது வயதில் மரித்துப்போகிறார் (எண் 33:39).

அந்நாட்களில் கானான் தேசத்தின் தென்திசையில் குடியிருந்த கானானியனாகிய ஆராத் என்னும் ராஜா இஸ்ரவேல் புத்திரர் வருகிறதைக் கேள்விப்பட்டான். இஸ்ரவேல் புத்திரர் ஓர் என்னும் மலையை விட்டுப் புறப்பட்டுப்போய், சல்மோனாவிலே பாளயமிறங்கினார்கள். சல்மோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், பூனோனிலே பாளயமிறங்கினார்கள். பூனோனிலிருந்து புறப்பட்டுப்போய், ஓபோத்திலே பாளயமிறங்கினார்கள் (எண் 33:40-43).

ஒபோத்திலிருந்து புறப்பட்டுப்போய், மோவாபின் எல்லையிலுள்ள அபாரீமின் மேடுகளிலே பாளயமிறங்கினார்கள். அந்த மேடுகளை விட்டுப் புறப்பட்டுப்போய், தீபோன்காத்திலே பாளயமிறங்கினார்கள். தீபோன்காத்திலிருந்து புறப்பட்டுப்போய், அல்மோன் திப்லத்தாயிமிலே பாளயமிறங்கினார்கள் (எண் 33:44-46).

அல்மோன் திப்லத்தாயிமிலிருந்து புறப்பட்டுப்போய், நேபோவுக்கு எதிரான அபாரீம் மலைகளிலே பாளயமிறங்கினார்கள். அபாரீம் மலைகளிலிருந்து புறப்பட்டுப்போய், எரிகோவின் அருகே யோர்தானைச்சார்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே பாளயமிறங்கினார்கள். யோர்தானைச் சார்ந்த மோவாபின் சமனான வெளிகளில் அவர்கள் பெத்யெசிமோத்தைத் தொடங்கி, ஆபேல்சித்தீம் மட்டும் பாளயமிறங்கியிருந்தார்கள் (எண் 33:47-49).

எகிப்திலுள்ள ராமசேசிலிருந்து புறப்பட்டு, நாற்பது வருஷத்தின் இறுதியில் மோவாபின் சமனான வெளிகளில் வரும் வரையிலும் இஸ்ரவேல் புத்திரர் 43 இடங்களில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். (எண் 33:5, 16,19,37).

இஸ்ரவேல் புத்திரர் காதேசிலிருந்து மோவாப் வரையிலும் பண்ணின பிரயாணங்களின் விவரம் வருமாறு :

1. காதேசிலிருந்து புறப்பட்டுப்போய், ஓர் மலையிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:37)
2. ஓர் என்னும் மலையை விட்டுப் புறப்பட்டுப் போய், சல்மோனாவிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:41)
3. சல்மோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், பூனோனிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:42)
4. பூனோனிலிருந்து புறப்பட்டுப்போய், ஒபோத்திலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:43)
5. ஒபோத்திலிருந்து புறப்பட்டுப்போய், மோவாபின் எல்லையிலுள்ள அபாரீமின் மேடுகளிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:44)
6. அபாரீமின் மேடுகளை விட்டுப் புறப்பட்டுப்போய், தீபோன்காத்திலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:45)
7. தீபோன்காத்திலிருந்து புறப்பட்டுப்போய், அல்மோன் திப்லத்தாயிமிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:46)
8. அல்மோன் திப்லத்தாயிமிலிருந்து புறப்பட்டுப்போய், நேபோவுக்கு எதிரான அபாரீம் மலைகளிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:47)
9. அபாரீம் மலைகளிலிருந்து புறப்பட்டுப்போய், எரிகோவின் அருகே யோர்தானைச் சார்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே பாளயமிறங்கினார்கள். (எண் 33:48)
10. யோர்தானைச் சார்ந்த மோவாபின் சமனான வெளிகளில் அவர்கள் பெத்யெசிமோத்தைத் தொடங்கி, ஆபேல் சித்தீமில் பாளயமிறங்கியிருந்தார்கள் (எண் 33:49)

கானான் தேசசுதந்தரம் எண் 33:50-55

எண் 33:50. எரிகோவின் அருகே யோர்தானைச் சார்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 33:51. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் யோர்தானைக் கடந்து, கானான்தேசத்தில் போய்ச் சேரும்போது,

எண் 33:52. அத்தேசத்துக் குடிகளையெல்லாம் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிட்டு, அவர்களுடைய எல்லாச் சிலைகளையும் வார்ப்பிக்கப்பட்ட அவர்களுடைய எல்லா விக்கிரகங்களையும் அழித்து, அவர்கள் மேடைகளையெல்லாம் நிர்மூலமாக்கி,

எண் 33:53. தேசத்திலுள்ளவர்களைத் துரத்திவிட்டு, குடியிருக்கக் கடவீர்கள்; அந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி, அதை உங்களுக்குக் கொடுத்தேன்.

எண் 33:54. சீட்டுப்போட்டு, தேசத்தை உங்கள் குடும்பங்களுக்குச் சுதந்தரங்களாகப் பங்கிட்டு, அதிக ஜனங்களுக்கு அதிக சுதந்தரமும், கொஞ்ச ஜனங்களுக்குக் கொஞ்சச் சுதந்தரமும் கொடுக்கக்கடவீர்கள்; அவரவர்க்குச் சீட்டு விழும் இடம் எதுவோ, அவ்விடம் அவரவர்க்கு உரியதாகும்; உங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களின்படியே சுதந்தரம் பெற்றுக்கொள்ளக்கடவீர்கள்.

எண் 33:55. நீங்கள் தேசத்தின் குடிகளை உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடாமலிருப்பீர்களானால், அப்பொழுது அவர்களில் நீங்கள் மீதியாக வைக்கிறவர்கள் உங்கள் கண்களில் முள்ளுகளும் உங்கள் விலாக்களிலே கூர்களுமாயிருந்து, நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே உங்களை உபத்திரவப்படுத்துவார்கள்.

எண் 33:56. அன்றியும், நான் அவர்களுக்குச் செய்ய நினைத்ததை உங்களுக்குச் செய்வேன் என்று சொல் என்றார்.

எகிப்து தேசத்திலிருந்த காலத்தில், அவர்கள் எகிப்தியரின் விக்கிரகாராதனைக்கு நடுவிலே குடியிருந்தார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களை ஆராதித்தார்கள். வேறு சிலரோ கர்த்தரையும் விக்கிரகங்களையும் ஆராதித்தார்கள். ஆனாலும் மத்தியிலே இருந்த இஸ்ரவேல் ஜனத்தாரில் அநேகர், கர்த்தரை மாத்திரமே தங்கள் தேவனாக அங்கீகரித்து, அவரை மாத்திரமே ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, அவர்கள் மற்ற அந்நிய ஜாதியாரிடமிருந்து எந்த விதமான தொடர்பும் இல்லாமல் வேறுபிரிந்து ஜீவிக்கிறார்கள். இதனால் அவர்களுடைய விக்கிரகாராதனையின் பாதிப்பு இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் ஏற்படவில்லை. இஸ்ரவேல் புத்திரருக்கும் விக்கிரகங்களை ஆராதிக்கவேண்டும் என்னும் சோதனை உண்டாகவில்லை.

இப்போது இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் சமவெளிகளிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள். மோவாபின் சமவெளிக்கும் கானான் தேசத்திற்கும் நடுவே யோர்தான் நதி மாத்திரமே இருக்கிறது. அவர்கள் யோர்தானைக் கடந்தால், கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கலாம்.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அதே வேளையில் அது விக்கிரகங்களும், விக்கிரகாராதனைகளும், விக்கிரகாராதனைக்காரரும் நிரம்பின தேசம். இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அங்கே குடியிருக்கிற அந்நிய ஜாதியாரோடு சம்பந்தம்பண்ணி, அவர்களுடைய விக்கிரகங்களை ஆராதிப்பதற்கு வாய்ப்புள்ளது. இஸ்ரவேல் ஜனத்தார் மறுபடியுமாக சோதனைக்குள் விழுந்துவிடும் ஆபத்திலிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, விக்கிரகங்களோடும், விக்கிரகாராதனைக்காரரோடும் எந்தவித சம்பந்தமும் இல்லாமல் தனியாக வேறுபிரிந்து, பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருடைய இஸ்ரவேலராயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும்.

எரிகோவின் அருகே யோர்தானைச் சார்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் யோர்தானைக் கடந்து, கானான்தேசத்தில் போய்ச் சேரும்போது, அத்தேசத்துக் குடிகளையெல்லாம் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிட்டு, அவர்களுடைய எல்லாச் சிலைகளையும் வார்ப்பிக்கப்பட்ட அவர்களுடைய எல்லா விக்கிரகங்களையும் அழித்து, அவர்கள் மேடைகளையெல்லாம் நிர்மூலமாக்கவேண்டும்" (எண் 33:50-52) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் நாற்பது வருஷத்து வனாந்தர பிரயாணத்தின் முடிவில் அவர்கள் பாளயமிறங்கிய அட்டவணை எழுதப்பட்டிருக்கிறது. (எண் 33:1-49) அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாக எண் 33:50-36:13 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்து குடிகளையெல்லாம் தங்களுக்கு முன்பாக துரத்திவிடவேண்டும். அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். கானான் தேசம் கர்த்தருடைய தேசம். கர்த்தர் தம்முடைய தேசத்தை புறஜாதி ஜனங்களுக்கு சுதந்தரமாய்க் கொடுக்கவில்லை. கர்த்தர் இந்த நல்ல தேசத்தை தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கு மாத்திரமே சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலுள்ளவர்களைத் துரத்திவிட்டு, அங்கே குடியிருக்க வேண்டும்; அந்த தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளும்படி கர்த்தர் அதை இஸ்ரவேல் புத்திரருக்கு கொடுத்திருக்கிறார் (எண் 33:53).

இஸ்ரவேல் புத்திரர் சீட்டுப்போட்டு, கானான் தேசத்தை தங்கள் குடும்பங்களுக்குச் சுதந்தரங்களாகப் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். அதிக ஜனங்களுக்கு அதிக சுதந்தரமும், கொஞ்ச ஜனங்களுக்குக் கொஞ்சச் சுதந்தரமும் கொடுக்கவேண்டும்.

"அவரவர்க்குச் சீட்டு விழும் இடம் எதுவோ, அவ்விடம் அவரவர்க்கு உரியதாகும்;" என்றும், "உங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களின்படியே சுதந்தரம் பெற்றுக்கொள்ளக்கடவீர்கள்" (எண் 33:54) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வாக்குத்தத்த தேசத்தை மொத்தமாய் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். அந்த தேசத்திலுள்ள விக்கிரகங்களையும், விக்கிரகாராதனைக்காரரையும் அவர்கள் துரத்திவிடவேண்டும். இது கர்த்தருடைய கட்டளை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தர் அவர்களை தண்டிப்பதாக சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீங்கள் தேசத்தின் குடிகளை உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடாமலிருப்பீர்களானால், அப்பொழுது அவர்களில் நீங்கள் மீதியாக வைக்கிறவர்கள் உங்கள் கண்களில் முள்ளுகளும் உங்கள் விலாக்களிலே கூர்களுமாயிருந்து, நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே உங்களை உபத்திரவப்படுத்துவார்கள். அன்றியும், நான் அவர்களுக்குச் செய்ய நினைத்ததை உங்களுக்குச் செய்வேன் என்று சொல்" (எண் 33:55,56) என்றார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசித்த பின்பு, அவர்கள் பாவத்தை விட்டு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் பாவத்திற்கு பங்காளிகளாயிருந்தால், அவர்களுடைய பாவங்களே அவர்களைப் பிடிக்கும். அவர்கள் தங்களை விட்டு பாவத்தை துரத்தவில்லையென்றால், பாவம் அவர்களை கானான் தேசத்தைவிட்டு துரத்திவிடும்.

நாம் பாவத்தைக் கண்டுபிடித்து, அதை நம்மை விட்டு விலக்கவில்லையென்றால், அந்தப் பாவம் நம்மைப் பிடித்துக்கொள்ளும். நம்முடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு நாம் மரிக்கவேண்டும். இல்லையென்றால் நம்முடைய இச்சைகள் நம்முடைய ஆத்துமாவுக்கு மரணத்தைக் கொடுக்கும்.

ஆனால் தேசத்தின் குடிகளை இஸ்ரவேல் புத்திரர்கள் முற்றிலுமாகத் துரத்திவிடவில்லை. இதனால் அவர்கள் பல சமயங்களில் இஸ்ரவேல் புத்திரருக்குப் பிரச்சனையை உண்டு பண்ணினார்கள். அதுமட்டுமல்லாமல், அந்தக் குடிகளைத் துரத்தாத காரணத்திற்காக இஸ்ரவேல் புத்திரரே அந்தத் தேசத்தை விட்டு துரத்தப்பட்டார்கள். தேசத்தின் குடிகளைத் துரத்தாததினால், இஸ்ரவேல் புத்திரரிடையே விக்கிரகாராதனையும், வேசித்தனமும், கர்த்தருக்கு எதிரான கலகமும் நிறைந்திருந்தது. *(2இராஜா 17,24,25).*

இஸ்ரவேல் புத்திரர் மேசியாவை ஏற்றுக் கொள்ளாததினால், இஸ்ரவேல் தேசம் ஒரு தேசமாக இராதவாறு அழிக்கப்பட்டது. *1,900* வருஷங்களாக இஸ்ரவேல் புத்திரர் சிதறடிக்கப்பட்டவர்களாக சிதறியிருந்தார்கள். *(மத் 21:33-46; மத் 23:34-39; லூக்கா 21:20-24).*

34 அதிகாரம்

கானான் தேசத்தின் எல்லைகள் (எண் 34:1-15). இஸ்ரவேல் புத்திரருக்கு பங்கிட்டுக் கொடுக்கும் மனிதரின் நாமங்கள் (எண் 34:16-29).

கானான்தேசத்தின் எல்லைகள் எண் 34:1-15

எண் 34:1. கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 34:2. நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிட்டுச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கானான்தேசம் அதின் எல்லைகள் உட்பட உங்களுக்குச் சுதந்தரமாகக் கிடைக்கப்போகிறது; நீங்கள் கானான்தேசத்தில் சேரும்போது,

எண் 34:3. உங்கள் தென்புறம் சீன்வனாந்தரம் தொடங்கி ஏதோம் தேசத்தின் ஓரமட்டும் இருக்கும்; கிழக்கே இருக்கிற உப்புக்கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென்எல்லையாயிருக்கும்.

எண் 34:4. உங்கள் எல்லை தெற்கிலிருந்து அக்கராபீம் மேடுகளைச் சுற்றி, சீன்வனாந்தரம் வரையில் போய், தெற்கிலே காதேஸ்பர்னேயாவுக்கும், அங்கேயிருந்து ஆத்சார் அதாருக்கும், அங்கேயிருந்து அஸ்மோனாவுக்கும் போய்,

எண் 34:5. அஸ்மோனாவிலிருந்து எகிப்தின் நதிவரைக்கும் சுற்றிப்போய்க் கடலில் முடியும்.

எண் 34:6. மேற்றிசைக்குப் பெருங்கடலே உங்களுக்கு எல்லை; அதுவே உங்களுக்கு மேற்புறத்து எல்லையாயிருக்கும்.

எண் 34:7. உங்களுக்கு வடதிசை எல்லை பெருங்கடல் தொடங்கி, ஓர் என்னும் மலையை உங்களுக்குக் குறிப்பாக வைத்து,

எண் 34:8. ஓர் என்னும் மலை தொடங்கி, ஆமாத்திற்குப் போகிற வழியைக் குறிப்பாக வைத்து, அங்கேயிருந்து அந்த எல்லை சேதாத்திற்குப் போய்,

எண் 34:9. அங்கேயிருந்து அது சிப்ரோனுக்குப் போய், ஆத்சார் ஏனானிலே முடியும்; அதுவே உங்களுக்கு வடபுறத்து எல்லையாயிருக்கும்.

எண் 34:10. உங்களுக்குக் கீழ்த்திசை எல்லைக்கு ஆத்சார் ஏனானிலிருந்து சேப்பாமைக் குறிப்பாக வைத்து,

எண் 34:11. சேப்பாமிலிருந்து எல்லையானது ஆயினுக்குக் கிழக்கிலுள்ள ரிப்லாபரியந்தமும், அங்கேயிருந்து கின்னரேத் கடல்பரியந்தமும் அதின் கீழ்க்கரையோரமாய்,

எண் 34:12. அங்கேயிருந்து யோர்தான்பரியந்தமும் போய், உப்புக்கடலில் முடியும்; இந்தச் சுற்றெல்லைகளையுடைய தேசமே உங்களுக்குரிய தேசம் என்று சொல் என்றார்.

எண் 34:13. அப்பொழுது மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: ஒன்பதரைக் கோத்திரத்தாருக்குக் கொடுக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டதும், நீங்கள் சீட்டுப்போட்டுச் சுதந்தரித்துக் கொள்ளவேண்டியதுமான தேசம் இதுவே.

எண் 34:14. ரூபன் புத்திரர் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படியும், காத் புத்திரர் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படியும், தங்கள் சுதந்தரத்தைப்பெற்றுக்கொண்டதும் அல்லாமல், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

எண் 34:15. இந்த இரண்டரைக் கோத்திரத்ததாரும் சூரியோதய திசையாகிய கிழக்கே எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இப்புறத்திலே தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்றான்.

கானான் தேசத்தின் நான்கு பக்கத்து எல்லைகளையும் கர்த்தரே தீர்மானம்பண்ணுகிறார். வானமும் பூமியும் கர்த்தருக்குரியது. கானான் தேசத்தின் விஸ்தீரணம், ஒவ்வொரு திசையிலும் எவ்வளவு தூரத்திற்கு பரவியிருக்கவேண்டும் என்பதையும், அந்தத் தேசத்தின் எல்லைகள் எதுவாகயிருக்கவேண்டும் என்பதையும் கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக தீர்மானித்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தர தேசமாக வாக்குப்பண்ணியிருக்கிறார். கர்த்தரே அந்த தேசத்தின் விஸ்தீரணத்தையும், எல்லைகளையும் தீர்மானம்பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர், ஏற்ற காலத்திலே, தங்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட கானான் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால், கானான் தேசத்தை முழுவதுமாக சுதந்தரிப்பார்கள். அவர்களுடைய எல்லை ஐபிராத் நதி வரையிலும் பரவியிருக்கும்.

"உங்கள் உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுடையதாயிருக்கும்; வனாந்தரத்தையும் லீபனோனையும் தொடங்கி, ஐபிராத்து நதியையும் தொடங்கி, கடைசிச் சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்" (உபா 11:24).

தாவீதின் காலத்திலும், சாலொமோனுடைய காலத்திலும் இஸ்ரவேல் தேசமானது, விஸ்தாரமாக பரவியிருந்தது.

"நதிதுவக்கிப் பெலிஸ்தரின் தேசமட்டுக்கும் எகிப்தின் எல்லைவரைக்கும் இருக்கிற சகல ராஜாக்களையும் அவன் ஆண்டான்" (2நாளா 9:26).

கர்த்தர் இந்த அதிகாரத்தில், கானான் தேசத்தின் எல்லையாக சொல்லுவது, யோர்தான் நதிக்கு அப்புறத்திலுள்ள தேசத்தையே குறிக்கும். இந்த தேசம் இஸ்ரவேல் புத்திரரின் ஒன்பதரைக் கோத்திரத்தாருக்கு பங்குவீதமாக பிரித்துக் கொடுக்கப்படும்.

ஒன்பதரைக் கோத்திரத்தாருக்குக் கொடுக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டதும், நீங்கள் சீட்டுப்போட்டுச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டியதுமான தேசம் இதுவே (எண் 34:13).

அவர்களுடைய இரண்டரைக் கோத்திரத்தாருக்கு, யோர்தானுக்கு இப்புறத்திலே உள்ள தேசம், ஏற்கெனவே பங்குவீதமாக பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

ரூபன் புத்திரர் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படியும், காத் புத்திரர் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படியும், தங்கள் சுதந்தரத்தைப்பெற்றுக்கொண்டதும் அல்லாமல், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள் (எண் 34:14).

இந்த இரண்டரைக் கோத்திரத்ததாரும் சூரியோதய திசையாகிய கிழக்கே எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இப்புறத்திலே தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள் (எண் 34:15).

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, அந்த தேசத்திலுள்ளவர்களை துரத்திவிட்டு அதிலே குடியிருக்கவேண்டும் (எண் 33:53). இஸ்ரவேல் புத்திரருக்கு யாரை துரத்த வேண்டும் என்பதும், அவர்களை எதுவரைக்கும் துரத்தவேண்டும் என்பதும் தெரிந்திருக்கவேண்டும். கானான் தேசத்தின் எல்லை எதுவரையிலும் விஸ்தாரமாயிருக்கிறது என்பதை இஸ்ரவேல் புத்திரர் அறிந்திருந்தால் மாத்திரமே, அவர்களால் கானானியரை, கானான் தேசத்தின் எல்லைக்கு அப்பால் துரத்த முடியும்.

கானான் தேசத்தின் விஸ்தீரணம் 160 மைல் நீளமும், 50 மைல் அகலமுமாகும். இந்த தேசம் நல்ல தேசமாகயிருந்தாலும், சின்ன தேசமாகயிருக்கிறது. கர்த்தர் இந்த தேசத்தையே இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். வானமும் பூமியும் கர்த்தருக்குரியது. கர்த்தர் தமக்காக இந்த சின்ன தேசத்தையே, சொந்த தேசமாக அங்கீகரித்திருக்கிறார்.

மகாவிஸ்தாரமாக பரந்து விரிந்திருக்கும் இந்தப் பூமியிலே, கானான் தேசத்தில் மாத்திரமே, காலாகாலமாக, கர்த்தர் தேவனாக அறியப்பட்டிருக்கிறார். இந்தத் தேசத்தில் மாத்திரமே கர்த்தருடைய நாமம் காலாகாலமாக மகிமைப்பட்டிருக்கிறது.

"யூதாவில் தேவன் அறியப்பட்டவர்; இஸ்ரவேலில் அவருடைய நாமம் பெரியது" *(சங் 76:1)*.

இந்த உலகத்தில் கர்த்தர் தமக்காக தெரிந்துகொண்ட தேசமும் சிறியது. கர்த்தர் தம்முடைய சொந்த ஜனத்திற்கு கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணின தேசமும் சிறியது.

கானான் தேசம் சிறிய தேசமாகயிருந்தாலும், அது பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசமாயிருக்கிறது. அது நல்ல தேசமாகயிருக்கிறது. தானியேல் புஸ்தகத்தில், கானான் தேசம், "சிங்காரமானதேசம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"அவைகளில் ஒன்றிலிருந்து சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டு, தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும் சிங்காரமான தேசத்துக்கு நேராகவும் மிகவும் பெரியதாயிற்று" *(தானி 8:9)*.

கானான் தேசம் சிங்காரமான தேசமாகயிருந்தாலும், அந்த தேசத்தைச் சுற்றிலும் வனாந்தரமும், சமுத்திரமும் எல்லைகளாயிருக்கிறது. கானான் தேசத்தின் எல்லைக்கு அப்பாலுள்ள தேசங்களில் செழிப்பு இல்லை.

கானான் தேசத்தின் எல்லைகள், அந்த தேசத்திற்கு இயற்கையான அரண்களாக அமைந்திருக்கிறது. கர்த்தர் தம்முடைய தேசத்திற்கு இயற்கையான பாதுகாப்பைக் கொடுத்திருக்கிறார். கானான் தேசத்தின் எல்லை எகிப்தின் நதிவரைக்கும் சுற்றிப்போய் கடலில் முடியும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தின் நதியைப் பார்க்கும்போது, தாங்கள் ஒரு காலத்தில் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்ததையும், கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் தங்களை விடுவித்து, பாலும் தேனும் ஓடுகிற இந்த நலமான தேசத்திற்கு, தங்களை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார் என்பதையும் நினைவுகூரவேண்டும்.

மோசே கானான் தேசத்தின் எல்லைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு கட்டளையிட்டு சொல்லவேண்டும். அந்த தேசத்தின் எல்லை எதுவரைக்கும் இருக்கும் என்பது மோசேக்கும் தெரியாது. கர்த்தர் கானான் தேசத்தின் எல்லைகளை முதலாவதாக மோசேக்கு சொல்லுகிறார். அதன் பின்பு மோசே அந்த தேசத்தின் எல்லைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லவேண்டும்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிட்டுச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கானான்தேசம் அதின் எல்லைகள் உட்பட உங்களுக்குச் சுதந்தரமாகக் கிடைக்கப்போகிறது" *(எண் 34:1,2)* என்று சொல்லுகிறார்.

கானான் தேசத்தின் எல்லை உப்புக்கடலில் ஆரம்பமாகிறது *(எண் 34:3)*. அதன் எல்லை உப்புக்கடலில் முடிவடைகிறது *(எண் 34:12)*.

கர்த்தர் கானான் தேசத்தின் எல்லைகளை மோசேயினிடத்தில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

நீங்கள் கானான்தேசத்தில் சேரும்போது, உங்கள் தென்புறம் சீன்வனாந்தரம் தொடங்கி ஏதோம் தேசத்தின் ஓரமட்டும் இருக்கும்; கிழக்கே இருக்கிற உப்புக்கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென்எல்லையாயிருக்கும். உங்கள் எல்லை தெற்கிலிருந்து அக்கராபீம் மேடுகளைச் சுற்றி, சீன்வனாந்தரம் வரையில் போய், தெற்கிலே காதேஸ்பர்னேயாவுக்கும், அங்கேயிருந்து ஆத்சார் அதாருக்கும், அங்கேயிருந்து அஸ்மோனாவுக்கும் போய், அஸ்மோனாவிலிருந்து எகிப்தின் நதிவரைக்கும் சுற்றிப்போய்க் கடலில் முடியும் *(எண் 34:2-5)*.

மேற்றிசைக்குப் பெருங்கடலே உங்களுக்கு எல்லை; அதுவே உங்களுக்கு மேற்புறத்து எல்லையாயிருக்கும் *(எண் 34:6)*. பெருங்கடல் என்பது தற்காலத்தில் மத்தியதரைக்கடல் என்று அழைக்கப்படுகிறது.

மத்தியதரைக்கடலுக்கு வேறு சில பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

1. பெருங்கடல் (எண் 34:6-7; யோசு 1:4; யோசு 9:1; யோசு 15:12; யோசு 23:4; எசே 47:10,19-20; எசே 48:28; தானி 7:2)

2. கடைசிச் சமுத்திரம் (உபா 11:24; உபா 34:2)

3. கீழ்க்கடல் (யோவே 2:20)

4. மேற்குச் சமுத்திரம் (சக 14:8)

உங்களுக்கு வடதிசை எல்லை பெருங்கடல் தொடங்கி, ஓர் என்னும் மலையை உங்களுக்கு குறிப்பாக வைத்து, ஓர் என்னும் மலை தொடங்கி, ஆமாத்திற்குப் போகிற வழியைக் குறிப்பாக வைத்து, அங்கேயிருந்து அந்த எல்லை சேதாத்திற்குப் போய், அங்கேயிருந்து அது சிப்ரோனுக்குப் போய், ஆத்சார் ஏனானிலே முடியும்; அதுவே உங்களுக்கு வடபுறத்து எல்லையாயிருக்கும். (எண் 34:7-9).

ஆரோன் மரித்துப்போன ஓர் மலை வேறு. இந்த ஓர் மலை வேறு. (எண் 20:23-29) இது வடக்கு லீபனோன் பர்வதங்களிலுள்ள எர்மான் மலையாகும். (உபா 3:9; உபா 4:48; யோசு 13:5).

ஆமாத் மேல் சீரியாவிலுள்ள பட்டணம். (எண் 13:21; யோசு 13:5; 2சாமு 8:9-10; 1இராஜா 8:65; 2இராஜா 14:25-28; 2இராஜா 25:20-21; ஏசா 11:11; எரே 49:23; எசே 47:16; தானி 10:18). சேதாத் ஆமாத்திற்கு அருகிலுள்ள இடம். (எசே 47:15)

சிப்ரோன் வடக்கு பாலஸ்தீனத்திலுள்ள ஒரு இடம். ஆத்சார் ஏனான் அறியப்படாத ஓர் இடம். இது கானான் தேசத்தின் வடகிழக்கு எல்லை. (எண் 34:9-10; எசே 47:17; எசே 48:1).

உங்களுக்குக் கீழ்த்திசை எல்லைக்கு ஆத்சார் ஏனானிலிருந்து சேப்பாமைக் குறிப்பாக வைத்து, சேப்பாமிலிருந்து எல்லையானது ஆயினுக்குக் கிழக்கிலுள்ள ரிப்லாபரியந்தமும், அங்கேயிருந்து கின்னரேத் கடல்பரியந்தமும் அதின் கீழ்க்கரையோரமாய், அங்கேயிருந்து யோர்தான்பரியந்தமும் போய், உப்புக்கடலில் முடியும்; இந்தச் சுற்றெல்லைகளையுடைய தேசமே உங்களுக்குரிய தேசம் என்று சொல் என்றார் (எண் 34:10-12).

சேப்பாம் ஓர் அறியப்படாத இடம். இது கானான் தேசத்தின் கிழக்கு எல்லை. (எண் 34:10-11).

ரிப்லா ஆமாத்திலுள்ள ஒரு பட்டணம். இங்கு கர்த்தர் யூதாவையும், மற்றவர்களையும் நியாயந்தீர்த்தார். (எண் 34:10-11; 2இராஜா 23:23; 2இராஜா 25:6,20,21; எரே 39:5-6; எரே 52:9,26).

ஆயின் சிமியோனின் பட்டணம். (யோசு 15:32; யோசு 19:7; யோசு 21:16; 1நாளா 4:32) இதன் மறுபெயர் ஆசான் (1நாளா 6:59).

கின்னரேத் கடல் என்பது கலிலேயாக்கடல் எனவும், திபேரியாக்கடல் எனவும் (யோவான் 6:1), கெனேசரேத்து கடல் எனவும் (லூக்கா 5:1) அழைக்கப்படுகிறது.

உப்புக்கடல் என்பதற்கு சவக்கடல் என்ற மறுபெயரும் உண்டு. (ஆதி 14:3; எண் 34:3,12; உபா 3:17; யோசு 3:16; யோசு 12:3; யோசு 15:2,5,12; யோசு 18:19) இது கிழக்கு சமுத்திரம் (சக 14:8) எனவும் அழைக்கப்படுகிறது.

கானான் தேசத்து எல்லைகளின் விவரம் வருமாறு :

1. நீங்கள் கானான்தேசத்தில் சேரும்போது, உங்கள் தென்புறம் சீன்வனாந்தரம் தொடங்கி ஏதோம் தேசத்தின் ஓரமட்டும் இருக்கும்; கிழக்கே இருக்கிற உப்புக் கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென்எல்லையாயிருக்கும். உங்கள் எல்லை தெற்கிலிருந்து அக்கராபீம் மேடுகளைச் சுற்றி, சீன்வனாந்தரம் வரையில் போய், தெற்கிலே காதேஸ்பர்னேயாவுக்கும், அங்கேயிருந்து ஆத்சார் அதாருக்கும், அங்கேயிருந்து அஸ்மோனாவுக்கும் போய், அஸ்மோனாவிலிருந்து எகிப்தின் நதிவரைக்கும் சுற்றிப்போய்க் கடலில் முடியும். (சுமார் 80 மைல்) (எண் 34:2-5).

2. மேற்றிசைக்குப் பெருங்கடலே உங்களுக்கு எல்லை; அதுவே உங்களுக்கு மேற்புறத்து எல்லையாயிருக்கும் (சுமார் 300மைல்) (எண் 34:6).

3. உங்களுக்கு வடதிசை எல்லை பெருங்கடல் தொடங்கி, ஓர் என்னும் மலையை உங்களுக்கு குறிப்பாக வைத்து, ஓர் என்னும் மலை தொடங்கி, ஆமாத்திற்குப் போகிற வழியைக் குறிப்பாக வைத்து, அங்கேயிருந்து அந்த எல்லை சேதாத்திற்குப் போய், அங்கேயிருந்து அது சிப்ரோனுக்குப் போய், ஆத்சார் ஏனானிலே முடியும்; அதுவே உங்களுக்கு வடபுறத்து எல்லையாயிருக்கும் (சுமார் 70 மைல்) (எண் 34:7-9).

4. உங்களுக்குக் கீழ்த்திசை எல்லைக்கு ஆத்சார் ஏனானிலிருந்து சேப்பாமைக் குறிப்பாக வைத்து, சேப்பாமிலிருந்து எல்லையானது ஆயினுக்குக் கிழக்கிலுள்ள ரிப்லாபரியந்தமும், அங்கேயிருந்து கின்னரேத் கடல் பரியந்தமும் அதின் கீழ்க்கரையோரமாய், அங்கேயிருந்து யோர்தான்பரியந்தமும் போய், உப்புக்கடலில் முடியும்; இந்தச் சுற்றெல்லைகளையுடைய தேசமே உங்களுக்குரிய தேசம் (சுமார் 280மைல்) (எண் 34:10-12).

இந்த எல்லைக்குட்பட்ட தேசமே, இஸ்ரவேல் புத்திரரின் ஒன்பதரைக் கோத்திரத்தாருக்கு கொடுக்கும்படி, கர்த்தர் கட்டளையிட்ட தேசமாகும்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ஒன்பதரைக் கோத்திரத்தாருக்குக் கொடுக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டதும், நீங்கள் சீட்டுப்போட்டுச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டியதுமான தேசம் இதுவே" (எண் 34:13) என்று சொல்லுகிறார்.

யோர்தானின் கிழக்கு பகுதியிலுள்ள தேசத்தை இஸ்ரவேல் புத்திரரின் இரண்டரை கோத்திரத்தார் சுதந்தரமாகப் பங்கு பிரித்துக் கொண்டார்கள். (எண் 34:13-15) மீதமுள்ள ஒன்பதரை கோத்திரத்தாருக்கு கானான் தேசத்தைச் சுதந்தரமாகப் பங்கு பிரித்துக் கொடுக்க வேண்டும். அதற்காகவே கானான் தேசத்தின் எல்லை இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (எண் 34:1-12)

கானான் தேத்தின் மொத்த விஸ்தீரணம் மேற்கே மத்தியதரைக்கடல் வரையிலும், கிழக்கில் ஐபிராத்து நதி வரையிலும், வடக்கில் ஆமாத் வரையிலும், தெற்கே இந்துமகா சமுத்திரம் வரையிலும் பரவியிருக்கிறது. அரபியத் தீபகற்பம் முழுவதும் இதில் அடங்கிவிடும். (எசே 48)

யோர்தானுக்கு இப்புறத்திலே இஸ்ரவேல் புத்திரரின் இரண்டரைக் கோத்திரத்தாருக்கு ஏற்கெனவே பங்குவீதம் பிரித்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மோசே இதுபற்றியும் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "ரூபன் புத்திரர் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படியும், காத் புத்திரர் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின்படியும், தங்கள் சுதந்தரத்தைப்பெற்றுக்கொண்டதும் அல்லாமல், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள்" (எண் 34:14) என்றும்,

"இந்த இரண்டரைக் கோத்திரத்தாரும் சூரியோதய திசையாகிய கிழக்கே எரிகோவின் அருகேயுள்ள யோர்தானுக்கு இப்புறத்திலே தங்கள் சுதந்தரத்தைப் பெற்றுக்கொண்டார்கள்" (எண் 34:15) என்றும் சொல்லுகிறார்.

தேசத்தைப் பங்கிட்டுக்கொடுக்கும் தலைவர்கள் எண் 34:16-29

எண் 34:16. மேலும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 34:17. உங்களுக்கு தேசத்தைப் பங்கிட்டுக்கொடுக்கும் மனிதரின் நாமங்களாவன: ஆசாரியனாகிய எலெயாசாரும், நூனின் குமாரனாகிய யோசுவாவுமே.

எண் 34:18. அன்றியும் தேசத்தைப் பங்கிடும்படி ஒவ்வொரு கோத்திரத்தில் ஒவ்வொரு தலைவனையும் தெரிந்துகொள்ளுங்கள்.

எண் 34:19. அந்த மனிதருடைய நாமங்களாவன: யூதா கோத்திரத்துக்கு எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்,

எண் 34:20. சிமியோன் புத்திரரின் கோத்திரத்துக்கு அம்மியூதின் குமாரனாகிய சாமுவேலும்,

எண் 34:21. பென்யமீன் கோத்திரத்துக்குக் கிஸ்லோனின் குமாரனாகிய எல்தாதும்,

எண் 34:22. தாண்புத்திரரின் கோத்திரத்துக்கு யொக்லியின் குமாரனாகிய புக்கி என்னும் பிரபுவும்,

எண் 34:23. யோசேப்பின் குமாரனாகிய மனாசே புத்திரரின் கோத்திரத்துக்கு எபோதின் குமாரனாகிய அன்னியேல் என்னும் பிரபுவும்,

எண் 34:24. எப்பிராயீம் புத்திரரின் கோத்திரத்துக்குச் சிப்தானின் குமாரனாகிய கேமுவேல் என்னும் பிரபுவும்,

எண் 34:25. செபுலோன் புத்திரரின் கோத்திரத்துக்குப் பர்னாகின் குமாரனாகிய எலிசாப்பான் என்னும் பிரபுவும்,

எண் 34:26. இசக்கார் புத்திரரின் கோத்திரத்துக்கு ஆசானின் குமாரனாகிய பல்த்தியேல் என்னும் பிரபுவும்,

எண் 34:27. ஆசேர் புத்திரரின் கோத்திரத்துக்குச் செலோமியின் குமாரனாகிய அகியூத் என்னும் பிரபுவும்,

எண் 34:28. நப்தலி புத்திரரின் கோத்திரத்துக்கு அம்மியூதின் குமாரனாகிய பெதாக்கேல் என்னும் பிரபுவுமே என்றார்.

எண் 34:29. கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரருக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டுக் கொடுக்கிறதற்குக் கர்த்தர் கட்டளையிட்டவர்கள் இவர்களே.

இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் தலைவர்களின் நாமங்களையும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் இன்னும் கானான் தேசத்தை சுதந்தரிக்கவில்லை. அவர்கள் இன்னும் கானானியரை துரத்தவில்லை. ஆனாலும் கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக, இஸ்ரவேல் புத்திரர் நிச்சயமாகவே கானான் தேசத்தை சுதந்தரிப்பார்கள். அவர்கள் நிச்சயமாகவே கானானியரை அந்த தேசத்தைவிட்டு துரத்துவார்கள்.

யுத்தம் நடைபெறுவதற்கு முன்பாகவே, இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் வாக்குப்பண்ணப்படுகிறது. தேசத்தை சுதந்தரிப்பதற்கு முன்பாகவே, அந்த தேசத்தை பங்கிட்டுக் கொடுக்கிறவர்களின் பெயர்கள் சொல்லப்படுகிறது.

மேலும் கர்த்தர் மோசேயை நோக்கி, "உங்களுக்கு தேசத்தைப் பங்கிட்டுக்கொடுக்கும் மனிதரின் நாமங்களாவன: ஆசாரியனாகிய எலெயாசாரும், நூனின் குமாரனாகிய யோசுவாவுமே" (எண் 34:16,17) என்று சொல்லுகிறார்.

தேசத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் விஷயத்தில், எல்லா கோத்திரத்தின் தலைவர்களுக்கும் பங்கு இருக்கவேண்டும். இல்லையென்றால் இஸ்ரவேல் புத்திரருக்கு தங்கள் பங்குவீதத்தில் திருப்தி ஏற்படாது. யோசுவாவும் எலெயாசாரும் பட்சபாதமாக தங்களுக்கு பங்குவீதம் கொடுத்திருக்கிறார்கள் என்று, இஸ்ரவேல் புத்திரர் அவர்கள்மீது குற்றம் சொல்லுவார்கள்.

ஆகையினால் தேசத்தை பங்கிட்டு கொடுக்கும்படியாக, ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒவ்வொரு பிரபுவை கர்த்தர் நியமிக்கிறார். "தேசத்தைப் பங்கிடும்படி ஒவ்வொரு கோத்திரத்தில் ஒவ்வொரு தலைவனை தெரிந்துகொள்ளுங்கள்" (எண் 34:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்த மனிதருடைய நாமங்களாவன: யூதா கோத்திரத்துக்கு எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், சிமியோன் புத்திரரின் கோத்திரத்துக்கு அம்மியூதின் குமாரனாகிய சாமுவேலும், பென்யமீன் கோத்திரத்துக்குக் கிஸ்லோனின் குமாரனாகிய எல்தாதும், தாண்புத்திரரின் கோத்திரத்துக்கு யொக்லியின் குமாரனாகிய புக்கி என்னும் பிரபுவும், யோசேப்பின் குமாரனாகிய மனாசே புத்திரரின் கோத்திரத்துக்கு எபோதின் குமாரனாகிய அன்னியேல் என்னும் பிரபுவும், எப்பிராயீம் புத்திரரின் கோத்திரத்துக்குச் சிப்தானின் குமாரனாகிய கேமுவேல் என்னும் பிரபுவும், செபுலோன் புத்திரரின் கோத்திரத்துக்குப் பர்னாகின் குமாரனாகிய எலிசாப்பான் என்னும் பிரபுவும், இசக்கார் புத்திரரின் கோத்திரத்துக்கு ஆசானின் குமாரனாகிய பல்த்தியேல் என்னும் பிரபுவும், ஆசேர் புத்திரரின் கோத்திரத்துக்குச் செலோமியின் குமாரனாகிய அகியூத் என்னும் பிரபுவும், நப்தலி புத்திரரின் கோத்திரத்துக்கு அம்மியூதின் குமாரனாகிய பெதாக்கேல் என்னும் பிரபுவுமே'' (எண் 34:19-28).

கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரருக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டுக் கொடுக்கிறதற்குக் கர்த்தர் கட்டளையிட்டவர்கள் இவர்களே (எண் 34:29).

தேசத்தைப் பங்கிட்டுக்கொடுக்கும் மனிதரின் நாமங்களாவன :

1. ஆசாரியனாகிய எலெயாசார் (எண் 34:17)
2. நூனின் குமாரனாகிய யோசுவா
3. யூதா கோத்திரத்துக்கு எப்புன்னேயின் குமாரனாகிய காலேப் (எண் 34:19)
4. சிமியோன் புத்திரரின் கோத்திரத்துக்கு அம்மியூதின் குமாரனாகிய சாமுவேல் (எண் 34:20)
5. பென்யமீன் கோத்திரத்துக்குக் கிஸ்லோனின் குமாரனாகிய எல்தாது (எண் 34:21)
6. தாண்புத்திரரின் கோத்திரத்துக்கு யொக்லியின் குமாரனாகிய புக்கி (எண் 34:22)
7. யோசேப்பின் குமாரனாகிய மனாசே புத்திரரின் கோத்திரத்துக்கு எபோதின் குமாரனாகிய அன்னியேல் (எண் 34:23)
8. எப்பிராயீம் புத்திரரின் கோத்திரத்துக்குச் சிப்தானின் குமாரனாகிய கேமுவேல் (எண் 34:24)
9. செபுலோன் புத்திரரின் கோத்திரத்துக்குப் பர்னாகின் குமாரனாகிய எலிசாப்பான் (எண் 34:25)
10. இசக்கார் புத்திரரின் கோத்திரத்துக்கு ஆசானின் குமாரனாகிய பல்த்தியேல் (எண் 34:26)
11. ஆசேர் புத்திரரின் கோத்திரத்துக்குச் செலோமியின் குமாரனாகிய அகியூத் (எண் 34:27)
12. நப்தலி புத்திரரின் கோத்திரத்துக்கு அம்மியூதின் குமாரனாகிய பெதாக்கேல் (எண் 34:28)

தேசத்தைப் பங்கிட்டுக் கொடுப்பவர்களில் ரூபன், காத், மனாசேயின் பாதிக்கோத்திரம் ஆகியவற்றிலிருந்து யாரும் இடம்பெறவில்லை. இவர்கள் ஏற்கெனவே யோர்தானின் கிழக்கு பகுதியில் தங்கள் சுதந்தரவீதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இங்கு கூறப்பட்டிருக்கும் பெயர்களில், எலெயாசார், யோசுவா, காலேப் ஆகிய மூன்றுபேர் மட்டுமே பிரபல்யமானவர்கள். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையும் எந்த அடிப்படையில் இவ்வாறு வரிசைப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதும் தெரியவில்லை.

இந்த அட்டவணையில் இடம் பெற்றிருக்கிற கோத்திரத்தார் தெற்கு எல்லையிலிருந்து வடக்கு எல்லை வரையிலும் தங்களுடைய சுதந்தர வீதங்களை வரிசையாகப் பெற்றிருக்கிறார்கள். (யோசு 15:1-19:32) லேயாளின் குமாரராகிய யூதா, சிமியோன் ஆகிய கோத்திரத்தார் அருகருகே குடியிருக்கிறார்கள். ராகேலின் குமாரனாகிய பென்யமீனும், அவளுடைய வேலைக்காரியின் குமாரனாகிய தாணும் அருகருகே குடியிருக்கிறார்கள்.

BELLWETHER INTERNATIONAL

எண்ணாகமம் - விரிவுரை
NUMBERS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

யோசேப்பின் குமாரராகிய மனாசேயும், எப்பிராயீமும் அருகருகே குடியிருக்கிறார்கள். லேயாளின் குமாரராகிய செபுலோனும், இசக்காரும் அருகருகே குடியிருக்கிறார்கள்.

லேயாளின் வேலைக்காரியின் குமாரனாகிய ஆசேரும், ராகேலின் வேலைக்காரியின் குமாரனாகிய நப்தலியும் அருகருகே குடியிருக்கிறார்கள்.

லேயாளின் குமாரனாகிய ரூபனும், லேயாளுடைய வேலைக்காரியின் குமாரனாகிய காத்தும் யோர்தானுக்குக் கிழக்குப் பகுதியில் அருகருகே குடியிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய அநாதி ஞானத்தின்பிரகாரம் இஸ்ரவேல் புத்திரருக்குத் தேசத்தைச் சுதந்தரவீதமாகப் பங்கு பிரித்துத் தருகிறார்.

35 அதிகாரம்

இஸ்ரவேலின் கோத்திரத்தாருக்கு கானான் தேசத்தை பங்குவீதமாகப் பிரித்துக்கொடுக்கும்போது, லேவி கோத்திரத்தாருக்கு கொடுக்கவேண்டிய பங்குவீதம்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

லேவியருக்கு நாற்பத்தெட்டு பட்டணங்களையும், அவைகளை சூழ்ந்த வெளிநிலங்களையும் கொடுக்கவேண்டும் (எண் 35:1-8).

லேவியருக்கு கொடுக்கும் பட்டணங்களில் அடைக்கலத்திற்காக ஆறு பட்டணங்கள் இருக்கவேண்டும். கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோட்டவன் ஓடிப்போய் இருக்கத்தக்கமாக அடைக்கலப்பட்டணங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது (எண் 35:9-15).

கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோடாமல், ஒரு ஆயுதத்தினால் ஒருவனை கொலைசெய்தவன் கொலைபாதகனாயிருக்கிறான். கொலைபாதகன் கொலை செய்யப்படவேண்டும். அவனுக்கு அடைக்கலப்பட்டணத்தில் இடமில்லை (எண் 35:16-21).

அடைக்கலப்பட்டணத்தில் எப்படிப்பட்டவன் இருக்கலாம் என்னும் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (எண் 35:22-24). அடைக்கலப்பட்டணத்தில் வந்து தங்கியிருக்கிறவனைப்பற்றிய பிரமாணம் (எண் 35:25-34).

லேவியருக்கு பட்டணங்களும் வெளிநிலங்களும் எண் 35:1-8

எண் 35:1. எரிகோவின் அருகே யோர்தானைச் சேர்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 35:2. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணியாட்சியாகிய சுதந்தரத்திலே லேவியருக்குக் குடியிருக்கும்படி பட்டணங்களைக் கொடுக்கவேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிடு; அந்தப் பட்டணங்களைச் சூழ்ந்திருக்கிற வெளிநிலங்களையும் லேவியருக்குக் கொடுக்கவேண்டும்.

எண் 35:3. அந்தப் பட்டணங்கள் அவர்கள் குடியிருப்பதற்கும், அவைகளைச் சூழ்ந்த வெளிநிலங்கள் அவர்களுடைய ஆடுமாடுகளுக்கும், அவர்களுடைய ஆஸ்திகளுக்கும், அவர்களுடைய சகல மிருக ஜீவன்களுக்கும் குறிக்கப்படவேண்டும்.

எண் 35:4. நீங்கள் லேவியருக்குக் கொடுக்கும் பட்டணங்களைச் சூழ்ந்த வெளிநிலங்கள் பட்டணத்தின் மதில்தொடங்கி, வெளியிலே சுற்றிலும் ஆயிரமுழ தூரத்துக்கு எட்டவேண்டும்.

எண் 35:5. பட்டணம் மத்தியில் இருக்க, பட்டணத்தின் வெளிப்புறந்தொடங்கி, கிழக்கே இரண்டாயிரமுழமும், தெற்கே இரண்டாயிரமுழமும், மேற்கே இரண்டாயிரமுழமும், வடக்கே இரண்டாயிரமுழமும் அளந்துவிடக்கடவீர்கள்; இது அவர்கள் பட்டணங்களுக்கு வெளிநிலங்களாயிருப்பதாக.

எண் 35:6. நீங்கள் லேவியருக்குக் கொடுக்கும் பட்டணங்களில் அடைக்கலத்துக்காக ஆறு பட்டணங்கள் இருக்கவேண்டும்; கொலைசெய்தவன் அங்கே தப்பி ஓடிப்போகிறதற்கு அவைகளைக் குறிக்கக்கடவீர்கள்; அவைகளையல்லாமல், நாற்பத்திரண்டு பட்டணங்களை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

எண் 35:7. நீங்கள் லேவியருக்குக் கொடுக்க வேண்டிய பட்டணங்களெல்லாம் நாற்பத்தெட்டுப் பட்டணங்களும் அவைகளைச் சூழ்ந்த வெளிநிலங்களுமே.

எண் 35:8. நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரத்திலிருந்து அந்தப் பட்டணங்களைப் பிரித்துக் கொடுக்கும்போது, அதிகமுள்ளவர்களிடத்திலிருந்து அதிகமும், கொஞ்சமுள்ளவர்களிடத்திலிருந்து கொஞ்சமும் பிரித்துக் கொடுக்கவேண்டும்; அவரவர் சுதந்தரித்துக்கொண்ட சுதந்தரத்தின்படியே தங்கள் பட்டணங்களில் லேவியருக்குக் கொடுக்கக்கடவர்கள் என்றார்.

இஸ்ரவேல் சபையார் கர்த்தருடைய சந்நிதியில் தங்களுடைய காணிக்கைகளையும் தசமபாகங்களையும் கொண்டு வருகிறார்கள். இவை லேவியருக்கு ஆதரவாயிருக்கும். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் தசமபாகமும் காணிக்கைகளும் செலுத்தும்போது, ஆசாரியர்களும் லேவியர்களும், செல்வந்தர்களாகயிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஊழியக்காரர்களுடைய எல்லா தேவைகளும் சந்திக்கப்படவேண்டும். கர்த்தர் இந்த அதிகாரத்தில் லேவியருக்காக ஒரு சில விசேஷித்த பிரமாணங்களைச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தைச் சுதந்தரிக்கும்போது, லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தை சுற்றிலும் தங்கியிருப்பார்கள். அவர்கள் வனாந்தரத்தில் பாளயமிறங்கியிருந்தபோது எப்படி தங்கியிருந்தார்களோ, அது போலவே அவர்கள் கானான் தேசத்திலும், ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலும் தங்கியிருப்பார்கள்.

லேவியருக்கு தங்கும் இடம் வேண்டும். கானான் தேசத்தில் லேவியருக்கு சுதந்தர வீதம் கொடுக்கப்படவில்லை. கர்த்தரே அவர்களுக்கு சுதந்தரமாயிருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும், தங்கள் சுதந்தரவீதத்திலிருந்து, லேவியருக்கு அவர்கள் தங்கக்கூடிய வாசஸ்தலங்களை ஒதுக்கி கொடுக்கவேண்டும். லேவியர்கள் இந்தப் பட்டணங்களில் குடியிருப்பார்கள். இதன் மூலமாக லேவியருடைய வாசஸ்தல தேவைகள் சந்திக்கப்படும்.

லேவியருக்கு பட்டணங்களும், அதைச் சூழ்ந்த வெளிநிலங்களும் கொடுக்கப்படவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். வெளிநிலங்களில் லேவியர்கள் பயிரிட்டு விவசாயம்பண்ணமாட்டார்கள். அவை அவர்களுடைய ஆடுமாடுகளுக்கும், சகல மிருகஜீவன்களுக்கும் மேய்ச்சல் நிலங்களாகயிருக்கும்.

எரிகோவின் அருகே யோர்தானைச் சேர்ந்த மோவாபின் சமனான வெளிகளிலே கர்த்தர் மோசேயை நோக்கி, "இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணியாட்சியாகிய சுதந்தரத்திலே லேவியருக்குக் குடியிருக்கும்படி பட்டணங்களைக் கொடுக்கவேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிடு; அந்தப் பட்டணங்களைச் சூழ்ந்திருக்கிற வெளிநிலங்களையும் லேவியருக்குக் கொடுக்கவேண்டும்" *(எண் 35:1,2)* என்று சொல்லுகிறார்.

லேவியருக்கு குடியிருக்கும்படி பட்டணங்களைக் கொடுக்கவேண்டும். லேவியர் ஒருவருக்கொருவர் அருகாமையில் குடியிருக்கும்போது, அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களைக் குறித்து தியானம்பண்ணுவார்கள். கர்த்தருடைய பிரமாணங்களிலும், நியமங்களிலும், கட்டளைகளிலும் லேவியருக்கு சந்தேகம் வரும்போது, அவர்கள் மற்ற லேவியரிடத்திலிருந்து விளக்கம் பெற்று, தங்கள் சந்தேகங்களை தீர்த்துக்கொள்வார்கள்.

லேவியருக்கு கொடுக்கப்படும் பட்டணங்கள் அவர்கள் குடியிருப்பதற்கும், அவைகளைச் சூழ்ந்த வெளிநிலங்கள் அவர்களுடைய ஆடுமாடுகளுக்கும், அவர்களுடைய ஆஸ்திகளுக்கும், அவர்களுடைய சகல மிருக ஜீவன்களுக்கும் குறிக்கப்படவேண்டும் *(எண் 35:3)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

லேவியருக்கு கொடுக்கப்படும் வெளிநிலங்களின் விஸ்தீரணத்தைப்பற்றியும் கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். கர்த்தர் மோசேயை நோக்கி, "நீங்கள் லேவியருக்குக் கொடுக்கும் பட்டணங்களைச் சூழ்ந்த வெளிநிலங்கள் பட்டணத்தின் மதில்தொடங்கி, வெளியிலே சுற்றிலும் ஆயிரமுழ தூரத்துக்கு எட்டவேண்டும்" *(எண் 35:4)* என்றும்,

"பட்டணம் மத்தியில் இருக்க, பட்டணத்தின் வெளிப்புறந்தொடங்கி, கிழக்கே இரண்டாயிரமுழமும், தெற்கே இரண்டாயிரமுழமும், மேற்கே இரண்டாயிரமுழமும், வடக்கே இரண்டாயிரமுழமும் அளந்துவிடக்கடவீர்கள்; இது அவர்கள் பட்டணங்களுக்கு வெளிநிலங்களாயிருப்பதாக" (எண் 35:5) என்றும் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தாரும் தங்களுடைய பங்குவீதத்திலிருந்து, லேவியருக்கு பட்டணங்களைக் கொடுக்கவேண்டும்.

"நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரத்திலிருந்து அந்தப் பட்டணங்களைப் பிரித்துக் கொடுக்கும்போது, அதிகமுள்ளவர்களிடத்திலிருந்து அதிகமும், கொஞ்சமுள்ளவர்களிடத்திலிருந்து கொஞ்சமும் பிரித்துக் கொடுக்கவேண்டும்; அவரவர் சுதந்தரித்துக்கொண்ட சுதந்தரத்தின்படியே தங்கள் பட்டணங்களில் லேவியருக்குக் கொடுக்கக்கடவர்கள்" (எண் 35:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒவ்வொரு கோத்திரத்தாரும் தங்கள் பங்குவீதத்திலிருந்து, லேவியருக்கு பட்டணங்களை பிரித்துக்கொடுக்கும்போது, எல்லா கோத்திரத்தாரும் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருப்பார்கள்.

லேவியர்களின் பட்டணங்கள் எல்லா கோத்திரத்து பங்குவீதங்களிலும் இருக்கிறது. தங்கள் மத்தியில் லேவியர்கள் குடியிருப்பதினால், அந்தந்த கோத்திரத்தாருக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிடைக்கும். லேவியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை உபதேசம்பண்ணுவார்கள்.

லேவியருக்கு நாற்பத்தெட்டு பட்டணங்களும், அவைகளை சூழ்ந்த வெளிநிலங்களும் கொடுக்கப்பட வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார் (எண் 35:7). இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும், ஒவ்வொரு கோத்திரத்தாரும் நான்கு பட்டணங்கள் வீதமாக, நாற்பத்தெட்டு பட்டணங்களை லேவியருக்கு கொடுக்கிறார்கள்.

கர்த்தர் லேவியருடைய பட்டணங்களைப்பற்றிச் சொல்லும்போது, அடைக்கலப்பட்டணங்களைப்பற்றியும் சொல்லுகிறார்.

"நீங்கள் லேவியருக்குக் கொடுக்கும் பட்டணங்களில் அடைக்கலத்துக்காக ஆறு பட்டணங்கள் இருக்கவேண்டும்; கொலைசெய்தவன் அங்கே தப்பி ஓடிப்போகிறதற்கு அவைகளைக் குறிக்கக்கடவீர்கள்; அவைகளையல்லாமல், நாற்பத்திரண்டு பட்டணங்களை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்" (எண் 35:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அடைக்கலப்பட்டணங்கள் எண் 35:9-34

எண் 35:9. பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி:

எண் 35:10. நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது,

எண் 35:11. கைப்பிசகாய் ஒருவனைக் கொன்று போட்டவன் ஓடிப்போயிருக்கத்தக்க அடைக்கலப்பட்டணங்களாகச் சில பட்டணங்களைக் குறிக்கக்கடவீர்கள்.

எண் 35:12. கொலைசெய்தவன் நியாயசபையிலே நியாயம் விசாரிக்கப்படுமுன் சாகாமல், பழிவாங்குகிறவன் கைக்குத்தப்பிப்போயிருக்கும்படி, அவைகள் உங்களுக்கு அடைக்கலப்பட்டணங்களாய் இருக்கக்கடவது.

எண் 35:13. நீங்கள் கொடுக்கும் பட்டணங்களில் ஆறு பட்டணங்கள் அடைக்கலத்துக்காக இருக்கவேண்டும்.

எண் 35:14. யோர்தானுக்கு இப்புறத்தில் மூன்று பட்டணங்களையும், கானான்தேசத்தில் மூன்று பட்டணங்களையும் கொடுக்க வேண்டும்; அவைகள் அடைக்கலப்பட்டணங்களாம்.

எண் 35:15. கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் எவனோ, அவன் அங்கே ஓடிப்போயிருக்கும்படிக்கு, அந்த ஆறு பட்டணங்களும் இஸ்ரவேல் புத்திரருக்கும் உங்கள் நடுவே இருக்கும் பரதேசிக்கும் அந்நியனுக்கும் அடைக்கலப்பட்டணங்களாய் இருக்கவேண்டும்.

எண் 35:16. ஒருவன் இருப்பு ஆயுதத்தினால் ஒருவனை வெட்டினதினால் அவன் செத்துப்போனால், வெட்டினவன் கொலைபாதகனாயிருக்கிறான்; கொலைபாதகன் கொலைசெய்யப்படவேண்டும்.

எண் 35:17. ஒருவன் ஒரு கல்லை எடுத்து, சாகத்தக்கதாக ஒருவன்மேல் எறிகிறதினாலே அவன் செத்துப்போனால், கல்லெறிந்தவன் கொலைபாதகனாயிருக்கிறான், அவன் கொலைசெய்யப்படவேண்டும்.

எண் 35:18. ஒருவன் தன் கையில் ஒரு மர ஆயுதத்தை எடுத்து, சாகத்தக்கதாக ஒருவனை அடித்ததினால் அவன் செத்துப்போனால், அடித்தவன் கொலைபாதனாயிருக்கிறான்; கொலைபாதகன் கொலைசெய்யப்படவேண்டும்.

எண் 35:19. பழிவாங்கவேண்டியவனே கொலைபாதகனைக் கொல்லவேண்டும்; அவனைக் கண்டமாத்திரத்தில் அவனைக் கொன்றுபோடலாம்.

எண் 35:20. ஒருவன் பகையினால் ஒருவனை விழத்தள்ளினதினாலாயினும், பதுங்கியிருந்து அவன் சாகத்தக்கதாய் அவன்மேல் ஏதாகிலும் எறிந்ததினாலாயினும்,

எண் 35:21. அவனைப் பகைத்து, தன் கையினால் அடித்ததினாலாயினும், அவன் செத்துப்போனால், அடித்தவன் கொலைபாதகன்; அவன் கொலைசெய்யப்படவேண்டும், பழிவாங்குகிறவன் கொலைபாதகனைக் கண்ட மாத்திரத்தில் கொன்றுபோடலாம்.

எண் 35:22. ஒருவன் பகையொன்றும் இல்லாமல் சடுதியில் ஒருவனைத் தள்ளி விழப்பண்ணினதினாலாயினும், பதுங்கியிராமல் யாதொரு ஆயுதத்தை அவன்மேல் படஎறிந்ததினாலாயினும்,

எண் 35:23. அவனுக்குப் பகைஞனாயிராமலும் அவனுக்குத் தீங்கு செய்ய நினையாமலும் இருக்கையில், ஒருவனைக் கொன்று போடத்தக்க ஒரு கல்லினால் அவனைக் காணாமல் எறிய, அது அவன்மேல் பட்டதினாலாயினும், அவன் செத்துப்போனால்,

எண் 35:24. அப்பொழுது கொலைசெய்தவனையும் பழிவாங்குகிறவனையும் சபையார் இந்த நியாயப்படி விசாரித்து,

எண் 35:25. கொலைசெய்தவனைப் பழிவாங்குகிறவனுடைய கைக்குத் தப்புவித்து, அவன் ஓடிப்போயிருந்த அடைக்கலப்பட்டணத்துக்கு அவனைத் திரும்பப் போகும்படி செய்யக்கடவர்கள்; பரிசுத்ததைலத்தினால் அபிஷேகம் பெற்ற பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் அவன் அதிலே இருக்கக்கடவன்.

எண் 35:26. ஆனாலும் கொலைசெய்தவன் தான் ஓடிப்போயிருக்கிற அடைக்கலப்பட்டணத்தின் எல்லையை விட்டு வெளிப்பட்டிருக்கும்போது,

எண் 35:27. பழிவாங்குகிறவன் கொலை செய்தவனை அடைக்கலப்பட்டணத்துக்கு வெளியே கண்டுபிடித்துக் கொன்றுபோட்டால், அவன்மேல் இரத்தப்பழி இல்லை.

எண் 35:28. கொலைசெய்தவன் பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் அடைக்கலப்பட்டணத்திலிருக்க வேண்டும்; பிரதான ஆசாரியன் மரணமடைந்தபின்பு, தன் சுதந்தரமான காணியாட்சிக்குத் திரும்பிப்போகலாம்.

எண் 35:29. இவைகள் உங்கள் வாசஸ்தலங்களிலெங்கும் உங்கள் தலைமுறைதோறும் உங்களுக்கு நியாயவிதிப் பிரமாணமாயிருக்கக்கடவது.

எண் 35:30. எவனாகிலும், ஒரு மனிதனைக் கொன்றுபோட்டால், அப்பொழுது சாட்சிகளுடைய வாக்குமூலத்தின்படியே அந்தக் கொலைபாதகனைக் கொலைசெய்யக்கடவர்கள்; ஒரே சாட்சியைக்கொண்டுமாத்திரம் ஒரு மனிதன் சாகும்படி தீர்ப்புச் செய்யலாகாது.

எண் 35:31. சாகிறதற்கேற்ற குற்றஞ்சுமந்த கொலைபாதகனுடைய ஜீவனுக்காக நீங்கள் மீட்கும்பொருளை வாங்கக்கூடாது; அவன் தப்பாமல் கொலைசெய்யப்படவேண்டும்.

எண் 35:32. தன் அடைக்கலப்பட்டணத்துக்கு ஓடிப்போனவன் ஆசாரியன் மரணமடையாததற்கு முன்னே தன் நாட்டிற்குத் திரும்பிவரும்படி நீங்கள் அவனுக்காக மீட்கும்பொருளை வாங்கக்கூடாது.

எண் 35:33. நீங்கள் இருக்கும் தேசத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதிருங்கள்; இரத்தம் தேசத்தைத் தீட்டுப்படுத்தும்; இரத்தம் சிந்தினவனுடைய இரத்தத்தினாலேயொழிய, வேறொன்றினாலும் தேசத்திலே சிந்துண்ட இரத்தத்திற்காகப் பாவநிவிர்த்தியில்லை.

எண் 35:34. நீங்கள் குடியிருக்கும் என் வாசஸ்தலமாகிய தேசத்தைத் தீட்டுப்படுத்த வேண்டாம்; கர்த்தராகிய நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே வாசம்பண்ணுகிறேன் என்று சொல் என்றார்.

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் அடைக்கலப்பட்டணங்களைப்பற்றிய தம்முடைய பிரமாணத்தைச் சொல்லுகிறார். மனுஷனை கொலை செய்வது பாவம். ஆனாலும் சில சமயங்களில், ஒரு சிலர் கைப்பிசகாய் சிலரைக் கொன்றுபோடுகிறார்கள். வேறு சிலரோ கொலை செய்யவேண்டுமென்று தீர்மானம்பண்ணி, ஆயுதத்தினால் மற்றவர்களைக் கொன்றுபோடுகிறார்கள். இவ்வாறு கொல்லுவது கொலைபாதகம். கொலைபாதகன் கொலைசெய்யப்பட வேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

யாரெல்லாம் கொலைபாதகனாயிருக்கிறான் என்று கர்த்தர் இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு :

ஒருவன் இருப்பு ஆயுதத்தினால் ஒருவனை வெட்டினதினால் அவன் செத்துப்போனால், வெட்டினவன் கொலைபாதகனாயிருக்கிறான்; கொலைபாதகன் கொலைசெய்யப்படவேண்டும் (எண் 35:16).

ஒருவன் ஒரு கல்லை எடுத்து, சாகத்தக்கதாக ஒருவன்மேல் எறிகிறதினாலே அவன் செத்துப்போனால், கல்லெறிந்தவன் கொலைபாதகனாயிருக்கிறான், அவன் கொலைசெய்யப்படவேண்டும் (எண் 35:17).

ஒருவன் தன் கையில் ஒரு மர ஆயுதத்தை எடுத்து, சாகத்தக்கதாக ஒருவனை அடித்ததினால் அவன் செத்துப்போனால், அடித்தவன் கொலைபாதனாயிருக்கிறான்; கொலைபாதகன் கொலைசெய்யப்படவேண்டும் (எண் 35:18).

பழிவாங்கவேண்டியவனே கொலைபாதகனைக் கொல்லவேண்டும்; அவனைக் கண்டமாத்திரத்தில் அவனைக் கொன்று போடலாம் (எண் 35:19).

ஒருவன் பகையினால் ஒருவனை விழத்தள்ளினதினாலாயினும், பதுங்கியிருந்து அவன் சாகத்தக்கதாய் அவன்மேல் ஏதாகிலும் எறிந்ததினாலாயினும், அவனைப் பகைத்து, தன் கையினால் அடித்ததினாலாயினும், அவன் செத்துப்போனால், அடித்தவன் கொலைபாதகன்; அவன் கொலைசெய்யப்படவேண்டும், பழிவாங்குகிறவன் கொலைபாதகனைக் கண்ட மாத்திரத்தில் கொன்றுபோடலாம் (எண் 35:20,21).

பொதுவாக பாவம் செய்தவனுக்காக மீட்கும் பொருள் வாங்கப்படும். இதன் மூலமாக அவனுடைய பாவம் நிவிர்த்தி பண்ணப்படும். ஆனால் கொலைபாதகனிடத்தில் மீட்கும்பொருளை வாங்கக்கூடாது என்றும், கொலைபாதகன் கொலைசெய்யப்படவேண்டும் என்றும், பழிவாங்கவேண்டியவனே கொலைபாதகனை கொல்லவேண்டும் என்றும், அவனைக் கண்ட மாத்திரத்தில் அவனைக் கொன்றுபோடலாம் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கொலைபாதகனிடத்தில் அவனுக்காக மீட்கும் பொருளை வாங்கக்கூடாது. "நீங்கள் இருக்கும் தேசத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதிருங்கள்; இரத்தம் தேசத்தைத் தீட்டுப்படுத்தும்; இரத்தம் சிந்தினவனுடைய இரத்தத்தினாலேயொழிய, வேறொன்றினாலும் தேசத்திலே சிந்துண்ட இரத்தத்திற்காகப் பாவநிவிர்த்தியில்லை" (எண் 35:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எவனாகிலும், ஒரு மனிதனைக் கொன்றுபோட்டால், அப்பொழுது சாட்சிகளுடைய வாக்குமூலத்தின்படியே அந்தக் கொலைபாதகனைக் கொலைசெய்யவேண்டும்; ஒரே சாட்சியைக்கொண்டுமாத்திரம் ஒரு மனிதன் சாகும்படி தீர்ப்புச் செய்யக்கூடாது (எண் 35:30).

சாகிறதற்கேற்ற குற்றஞ்சுமந்த கொலைபாதகனுடைய ஜீவனுக்காக இஸ்ரவேல் புத்திரர் மீட்கும்பொருளை வாங்கக்கூடாது; அவன் தப்பாமல் கொலைசெய்யப்படவேண்டும் (எண் 35:31).

ஒருவன் கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோட்டால் அவன் கொலைபாதகனல்ல. அவனை பழிவாங்கக்கூடாது.

கொலைசெய்தவனையும் பழிவாங்குகிறவனையும் சபையார் இந்த நியாயப்படி விசாரிக்கவேண்டும். கொலைசெய்தவனைப் பழிவாங்குகிறவனுடைய கைக்குத் தப்புவித்து, அவன் ஓடிப்போயிருந்த அடைக்கலப்பட்டணத்துக்கு அவனைத் திரும்பப் போகும்படி செய்ய வேண்டும்; பரிசுத்ததைலத்தினால் அபிஷேகம் பெற்ற பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் கொலைசெய்தவன் அடைக்கலப்பட்டணத்திலே இருக்கலாம் (எண் 35:24,25).

பகை ஒன்றும் இல்லாமல், கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோடும் சம்பவம் பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

ஒருவன் பகையொன்றும் இல்லாமல் சடுதியில் ஒருவனைத் தள்ளி விழப்பண்ணினதினாலாயினும், பதுங்கியிராமல் யாதொரு ஆயுதத்தை அவன்மேல் படஎறிந்ததினாலாயினும், அவனுக்குப் பகைஞனாயிராமலும் அவனுக்குத் தீங்கு செய்ய நினையாமலும் இருக்கையில், ஒருவனைக் கொன்று போடத்தக்க ஒரு கல்லினால் அவனைக் காணாமல் எறிய, அது அவன்மேல் பட்டதினாலாயினும், அவன் செத்துப்போனால், அப்பொழுது கொலைசெய்தவனையும் பழிவாங்குகிறவனையும் சபையார் இந்த நியாயப்படி விசாரிக்கவேண்டும் (எண் 35:22-24).

கர்த்தர் அடைக்கலப்பட்டணங்களைப்பற்றிய தம்முடைய பிரமாணத்தை மோசேயினிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் மோசேயை நோக்கி, "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் யோர்தானைக் கடந்து, கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது, கைப்பிசகாய் ஒருவனைக் கொன்று போட்டவன் ஓடிப்போயிருக்கத்தக்க அடைக்கலப்பட்டணங்களாகச் சில பட்டணங்களைக் குறிக்கக்கடவீர்கள்" (எண் 35:10,11) என்று சொல்லுகிறார்

கொலைசெய்தவன் நியாயசபையிலே நியாயம் விசாரிக்கப்படுமுன் சாகாமல், பழிவாங்குகிறவன் கைக்குத்தப்பிப்போயிருக்கும்படி, அவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு உங்களுக்கு அடைக்கலப்பட்டணங்களாய் இருக்கவேண்டும் (எண் 35:12).

கர்த்தர் ஆறு அடைக்கலப்பட்டணங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லுகிறார். "நீங்கள் கொடுக்கும் பட்டணங்களில் ஆறு பட்டணங்கள் அடைக்கலத்துக்காக இருக்கவேண்டும்" (எண் 35:13) என்றும், "யோர்தானுக்கு இப்புறத்தில் மூன்று பட்டணங்களையும், கானான்தேசத்தில் மூன்று பட்டணங்களையும் கொடுக்க வேண்டும்" (எண் 35:14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவன் எவனோ, அவன் அங்கே ஓடிப்போயிருக்கும்படிக்கு, அந்த ஆறு பட்டணங்களும் இஸ்ரவேல் புத்திரருக்கும், அவர்கள் நடுவே இருக்கும் பரதேசிக்கும் அந்நியனுக்கும் அடைக்கலப்பட்டணங்களாய் இருக்கவேண்டும் (எண் 35:15).

அடைக்கலப்பட்டணத்தில் தங்கியிருக்கிறவனை, கர்த்தருடைய பிரமாணத்தின்படி நியாயம் விசாரிக்கவேண்டும். கொலைசெய்தவனைப் பழிவாங்குகிறவனுடைய கைக்குத் தப்புவித்து, அவன் ஓடிப்போயிருந்த அடைக்கலப்பட்டணத்துக்கு அவனைத் திரும்பப் போகும்படி செய்ய வேண்டும்;

பரிசுத்ததைலத்தினால் அபிஷேகம் பெற்ற பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் அவன் கொலைசெய்தவன் அடைக்கலப்பட்டணத்திலே இருக்கவேண்டும் (எண் 35:25).

ஆனாலும் கொலைசெய்தவன் தான் ஓடிப்போயிருக்கிற அடைக்கலப்பட்டணத்தின் எல்லையை விட்டு வெளிப்பட்டிருக்கும்போது, பழிவாங்குகிறவன் கொலை செய்தவனை அடைக்கலப்பட்டணத்துக்கு வெளியே கண்டுபிடித்துக் கொன்றுபோட்டால், அவன்மேல் இரத்தப்பழி இல்லை (எண் 35:26,27).

கொலைசெய்தவன் பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் அடைக்கலப்பட்டணத்திலிருக்கவேண்டும்; பிரதான ஆசாரியன் மரணமடைந்தபின்பு, தன் சுதந்தரமான காணியாட்சிக்குத் திரும்பிப்போகலாம் (எண் 35:28).

பிரதான ஆசாரியன் பரிசுத்த தைலத்தினால் அபிஷேகம் பெற்றவன். அடைக்கலப்பட்டணங்கள் எல்லாம், லேவியருடைய பட்டணங்களாயிருக்கிறது. லேவியருக்கு பிரதான ஆசாரியனே கோத்திரத்தலைவராகயிருக்கிறார். அடைக்கலப்பட்டணத்தில் தங்கியிருக்கிற கொலைசெய்தவர்கள், பிரதான ஆசாரியனுடைய நியாயவிசாரிப்பிலும், பாதுகாப்பிலும் இருக்கிறார்கள்.

கர்த்தர் அடைக்கலப்பட்டணங்களைப்பற்றி சொல்லியிருக்கிற பிரமாணங்கள் இஸ்ரவேல் சபையாருடைய வாசஸ்தலங்கள் எங்கும், அவர்களுடைய தலைமுறை தோறும், அவர்களுக்கு நியாயவிதி பிரமாணமாயிருக்கவேண்டும் (எண் 35:29).

கானான் தேசம் கர்த்தருக்கு பரிசுத்தமான தேசம். அந்த தேசத்தை இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தக்குலைச்சலாக்கக்கூடாது. இரத்தம் தேசத்தைத் தீட்டுப்படுத்தும்; இரத்தம் சிந்தினவனுடைய இரத்தத்தினாலேயொழிய, வேறொன்றினாலும் தேசத்திலே சிந்துண்ட இரத்தத்திற்காகப் பாவநிவிர்த்தியில்லை (எண் 35:33).

"நீங்கள் குடியிருக்கும் என் வாசஸ்தலமாகிய தேசத்தைத் தீட்டுப்படுத்த வேண்டாம்; கர்த்தராகிய நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே வாசம்பண்ணுகிறேன்" (எண் 35:34) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து அடைக்கலப்பட்டணங்கள், புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு அடையாளமாயிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அதன் விவரம் வருமாறு:

எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியர், இயேசுகிறிஸ்துவிலே நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற அடைக்கலத்தைப்பற்றி இவ்வாறு எழுதுகிறார்.

“நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்” (எபி 6:18).

“நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்” (பிலி 3:9) என்று அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

கானான் தேசத்திலே நாற்பத்தெட்டு பட்டணங்கள் அடைக்கலப்பட்டணங்களாக நியமிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அந்த தேசத்தின் வெவ்வேறு பகுதிகளில் அமைந்திருக்கிறது. மனுஷரைக் கொலை செய்தவன் இஸ்ரவேல் தேசத்தில் வாசம்பண்ணும்படியாக, இந்த அடைக்கலப்பட்டணங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக ஒரு அடைக்கலப்பட்டணத்திற்கும், மற்றொரு அடைக்கலப்பட்டணத்திற்கும் இடையிலுள்ள தூரம், அரைநாளில் ஓடி முடிக்கிற தூரமாயிருக்கும். இதனால் மனுஷரைக் கொலைசெய்தவன் விரைவாக ஓடி, தனக்கு அருகாமையிலிருக்கும் ஏதாவது ஒருஅடைக்கலப்பட்டணத்தில் அடைக்கலம் பெற்றுக்கொள்ளலாம்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அநேக அடைக்கலப்பட்டணங்கள் இருந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே நமக்கு அடைக்கலமாக நியமிக்கப்பட்டிருக்கிறார். கிறிஸ்துவானவர் ஒருவரே. ஆனாலும் நாம் எங்கே இருக்கிறோமோ அங்கே, நம்முடைய அடைக்கலமாகிய கிறிஸ்துவானவரும் நம்மோடு கூடயிருக்கிறார். நம்முடைய அடைக்கலம் நமக்கு அருகாமையிலேயே இருக்கிறது. நாம் அடைக்கலம் தேடி எங்கும் ஓடவேண்டிய அவசியமில்லை.

நம்முடைய அடைக்கலமாகிய இயேசுகிறிஸ்து நமக்கு உதவிசெய்ய எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார். வார்த்தை நமக்கு அருகாமையிலிருக்கிறது. கிறிஸ்துவானவரே அந்த வார்த்தையாயிருக்கிறார்.

மனுஷனைக் கொலைசெய்தவன் ஏதாவது ஒரு அடைக்கலப்பட்டணத்தில் பாதுகாப்பாயிருப்பான். அதுபோலவே விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஓடி வரும்போது, அவருக்குள் ஆறுதலாக அடைக்கலம் பெற்றிருப்பார்கள். அவர்கள் தேவனுடைய கோபத்திற்கும், நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கும் தப்பித்து, இயேசுகிறிஸ்துவின் அடைக்கலத்தில் பாதுகாப்பாயிருப்பார்கள்.

“ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை” (ரோம 8:1).

அடைக்கலப்பட்டணங்களெல்லாம் லேவியருடைய பட்டணங்களாகும். இந்தப் பட்டணங்களில் அடைக்கலம் பெற்றிருக்கிறவர்களுக்கு லேவியர்கள் ஆறுதலான வார்த்தைகளை சொல்லவேண்டும். அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை உபதேசித்து, அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். அடைக்கலம் தேடி வருகிறவர்களை, அடைக்கலப்பட்டணங்களிலுள்ள லேவியர்கள் அன்பாய் வரவேற்று, அவர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் லேவியர்கள் ஊழியம் செய்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பாவிகள் மத்தியிலே ஊழியம் செய்கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடத்தில் வருமாறு, ஊழியக்காரர்கள் பாவிகளை அன்பாய் அழைக்கிறார்கள். கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு ஊழியக்காரர்கள் பாவிகளுக்கு உதவிசெய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவில் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற கிருபைகளையும் இரக்கங்களையும், ஊழியக்காரர்கள் பாவிகளுக்கு எடுத்து சொல்லி, அவர்களை கிறிஸ்துவிடத்தில் அழைத்து வருகிறார்கள்.

கானான் தேசத்திலே கர்த்தர் நியமித்திருக்கிற அடைக்கலப்பட்டணங்கள், இஸ்ரவேல் புத்திரருக்கும், அவர்கள் நடுவே இருக்கும் பரதேசிக்கும், அந்நியனுக்கும் அடைக்கலப்பட்டணங்களாயிருக்கிறது (எண் 35:15). அந்நியரும் பரதேசிகளும் இஸ்ரவேல் தேசத்தின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாகயிருந்தாலும், அவர்களும் அடைக்கலப்பட்டணங்களின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாம்.

அதுபோலவே இயேசுகிறிஸ்துவிலும் பட்சபாதம் எதுவுமில்லை. கிறிஸ்துவுக்குள்ளே யூதர் என்றும் கிரேக்கர் என்றும் வித்தியாசமில்லை. தம்மிடத்தில் அடைக்கலம் தேடி வருகிற யாரையும் கிறிஸ்துவானவர் புறம்பே தள்ளுவதில்லை.

36 அதிகாரம்

செலோப்பியாத்தின் குமாரத்திகளைப் பற்றி இந்த அதிகாரத்தில் மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு சுதந்தர வீதம் கொடுப்பது பற்றி எண் 27:7-ஆவது வசனத்தில் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

செலோப்பியாத்தின் குமாரத்திகள் இஸ்ரவேல் புத்திரருடைய வேறொரு கோத்திரத்தின் புத்திரருக்கு மனைவிகளானால், தங்கள் பிதாக்களுடைய சுதந்தரத்தில் ஏற்படும் பிரச்சனைகளைப்பற்றி கீலேயாத்தின் வம்சபிதாக்கள் மோசேயினிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள் (எண் 36:1-4).

செலோப்பியாத்தின் குமாரத்திகள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகம் செய்யலாம். ஆனாலும் அவர்கள் தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் மாத்திரம் விவாகம் செய்யவேண்டுமென்று மோசே சொல்லுகிறார் (எண் 36:5-7).

சுதந்தரமானது ஒரு கோத்திரத்தை விட்டு வேறொரு கோத்திரத்தை சேரக்கூடாது என்பது கர்த்தருடைய கட்டளையாயிருக்கிறது (எண் 36:8,9).

கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டபடியே, செலோப்பியாத்தின் குமாரத்திகள் தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் விவாகம் செய்கிறார்கள் (எண் 36:10-12). இந்த செய்தியோடு எண்ணாகமம் புஸ்தகம் நிறைவு பெறுகிறது (எண் 36:13).

செலோப்பியாத்தின் குமாரத்திகள் எண் 36:1-4

எண் 36:1. யோசேப்பின் குமாரனுடைய வம்சத்தாரில் மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குப் பிறந்த கீலேயாத்தின் வம்ச பிதாக்களான தலைவர் சேர்ந்து, மோசேக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களில் தலைவராகிய பிரபுக்களுக்கும் முன்பாக வந்து, அவர்களை நோக்கி:

எண் 36:2. சீட்டுப்போட்டு, தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்படி எங்கள் ஆண்டவனுக்குக் கர்த்தர் கட்டளையிட்டாரே; அன்றியும், எங்கள் சகோதரனாகிய செலொப்பியாத்தின் சுதந்தரத்தை அவன் குமாரத்திகளுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் எங்கள் ஆண்டவனுக்குக் கர்த்தராலே கட்டளையிடப்பட்டதே.

எண் 36:3. இப்படியிருக்க, இவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய வேறொரு கோத்திரத்தின் புத்திரருக்கு மனைவிகளானால், அந்தக் குமாரத்திகளுடைய சுதந்தரம் எங்கள் பிதாக்களுடைய சுதந்தரத்திலிருந்து நீங்கி, அவர்கள் உட்படுகிற கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்துபோகும்; இப்படி எங்கள் சுதந்தரத்துக்குச் சீட்டினால் விழுந்த பங்கில் இராமல் அற்றுப்போகுமே.

எண் 36:4. இஸ்ரவேல் புத்திரருக்கு யூபிலி வருஷம் வந்தாலும், அவர்களுடைய சுதந்தரம் அவர்கள் உட்பட்டுப்போன கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்து போகும்; இப்படி எங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலிருந்து அது நீங்கிப்போகுமே என்றார்கள்.

மனாசே கோத்திரத்தார் மோசேயினிடத்திலும் இஸ்ரவேலின் பிரபுக்களிடத்திலும் தங்களுடைய பிரச்சனைகளை சொல்ல வருகிறார்கள். மோசே கர்த்தருடைய கட்டளைப் பிரகாரம், செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு, கானான் தேசத்திலே, அவர்களுடைய பிதாக்களின் சுதந்தரத்தைக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். இதை நிறைவேற்றும்போது, தங்கள் கோத்திரத்தின் பங்குவீதத்தில் ஒரு சில பிரச்சனைகள் வரும் என்று மனாசே கோத்திரத்தார் முறையிடுகிறார்கள்.

யோசேப்பின் குமாரனுடைய வம்சத்தாரில் மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குப் பிறந்த கீலேயாத்தின் வம்ச பிதாக்களான தலைவர் சேர்ந்து, மோசேக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களில் தலைவராகிய பிரபுக்களுக்கும் முன்பாக வந்து, அவர்களை நோக்கி முறையிடுகிறார்கள் (எண் 36:1).

மனாசே கோத்திரத்தார், செலோப்பியாத்தின் குமாரத்திகளைப் பொறுத்த விஷயத்தில், மோசே ஏற்கெனவே சொன்ன கட்டளையை மறக்கவில்லை. அதை அப்படியே நினைவுகூர்ந்து, இப்போது மறுபடியுமாய், அந்தக் கட்டளையை மோசேயினிடத்திலும், இஸ்ரவேலின் பிரபுக்களிடத்திலும் சொல்லுகிறார்கள்.

மனாசே கோத்திரத்தார் மோசேயையும், இஸ்ரவேலின் பிரபுக்களையும் நோக்கி, "சீட்டுப்போட்டு, தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்படி எங்கள் ஆண்டவனுக்குக் கர்த்தர் கட்டளையிட்டாரே; அன்றியும், எங்கள் சகோதரனாகிய செலொப்பியாத்தின் சுதந்தரத்தை அவன் குமாரத்திகளுக்குக் கொடுக்கவேண்டும் என்றும் எங்கள் ஆண்டவனுக்குக் கர்த்தராலே கட்டளையிடப்பட்டதே" (எண் 36:2) என்று சொல்லுகிறார்கள்.

செலொப்பியாத்தின் குமாரத்திகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. (எண் 27:1-11) ஆண் வாரிசு இல்லாமல் ஒருவன் மரித்துப்போனால், அவனுடைய சொத்து அவன் குமாரத்திகளைச் சேரும். இங்கு மாகீருக்குப் பிறந்த கீலேயாத்தின் வம்ச பிதாக்களான தலைவர்களைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இந்த வம்சத்தலைவர்களில் செலொப்பியாத்தும் ஒருவன்.

செலோப்பியாத்தின் குமாரத்திகளுடைய திருமண காரியங்களைக் குறித்து இங்கு கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகஞ் செய்யலாம்; ஆனாலும், தங்கள் பிதாவின் கோத்திரவம்சத்தாரில்மாத்திரம் அவர்கள் விவாகஞ்செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தான் அவர்களுடைய தகப்பனின் சுதந்தரம் அவர்களுக்குக் கொடுக்கப்படும். இல்லையெனில் கொடுக்கப்படுவதில்லை. (எண் 36:1-13).

மனாசே கோத்திரத்தார் ஏற்கெனவே சொல்லப்பட்ட கட்டளைக்கு எதிர்த்து பேசவில்லை. அந்தக் கட்டளையை மாற்ற வேண்டும் என்றும் முறையிடவில்லை. அந்தக் கட்டளையை முழுவதுமாய் அங்கீகரிக்கிறார்கள். ஆனாலும் அந்தக் கட்டளையை நிறைவேற்றும்போது, தங்களுடைய பிதாக்களின் சுதந்தரத்தில் தங்களுக்கு ஏற்படும் ஒரு சில பிரச்சனைகளைப்பற்றி அவர்கள் முறையிடுகிறார்கள்.

மனாசே கோத்திரத்தார், மோசேயையும் இஸ்ரவேலின் பிரபுக்களையும் நோக்கி, "இவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய வேறொரு கோத்திரத்தின் புத்திரருக்கு மனைவிகளானால், அந்தக் குமாரத்திகளுடைய சுதந்தரம் எங்கள் பிதாக்களுடைய சுதந்தரத்திலிருந்து நீங்கி, அவர்கள் உட்படுகிற கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்துபோகும்; இப்படி எங்கள் சுதந்தரத்துக்குச் சீட்டினால் விழுந்த பங்கில் இராமல் அற்றுப்போகுமே" (எண் 36:3) என்று சொல்லுகிறார்கள்.

அவர்கள் சொல்லுகிற பிரச்சனை தானாய் தீருகிற பிரச்சனையல்ல. அந்தப் பிரச்சனை யூபிலி வருஷத்திலும் தீராது. "இஸ்ரவேல் புத்திரருக்கு யூபிலி வருஷம் வந்தாலும், அவர்களுடைய சுதந்தரம் அவர்கள் உட்பட்டுப்போன கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்து போகும்; இப்படி எங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலிருந்து அது நீங்கிப்போகுமே" (எண் 36:4) என்றும் அவர்கள் முறையிடுகிறார்கள்.

சுதந்தரமானது ஒரு கோத்திரத்தைவிட்டு வேறொரு கோத்திரத்தை சேரக்கூடாது என்பது கர்த்தருடைய கட்டளை. கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் மனாசே கோத்திரத்தாருக்கு சுதந்தரவீதம் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. செலோப்பியாத்தின் குமாரத்திகள் மனாசே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். கர்த்தருடைய கட்டளைப் பிரகாரம் செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கும், அவர்களுடைய தகப்பனாரின் சுதந்தரம் கிடைத்திருக்கிறது.

செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அவர்கள் தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரை விவாகம்செய்தால், அவர்களுடைய சுதந்தரம், மனாசே கோத்திரத்தில் தங்கியிருக்கும். ஆனால் செலோப்பியாத்தின் குமாரத்திகள், தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரை விவாகம் செய்யாமல், வேறு கோத்திர வம்சத்தாரை விவாகம் செய்தால், அவர்களுடைய சுதந்தரம், அவர்களுடைய புருஷன்மார் வசமாகும்.

செலோப்பியாத்தின் குமாரத்திகள் இஸ்ரவேல் புத்திரருடைய வேறொரு கோத்திரத்தின் புத்திரருக்கு மனைவிகளானால், அந்தக்குமாரத்திகளுடைய சுதந்தரம் மனாசே கோத்திரத்தாரின் பிதாக்களுடைய சுதந்தரத்திலிருந்து நீங்கி, அவர்கள் உட்படுகிற கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்துபோகும்; இப்படி மனாசே கோத்திரத்தின் சுதந்தரத்துக்குச் சீட்டினால் விழுந்த பங்கில் இராமல் அற்றுப்போகும்.

மனாசே கோத்திரத்தார் மத்தியில், வேறு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் வாசம்பண்ணும்போது, அவர்களுக்குள் சண்டைகளும், போட்டிகளும் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆரம்பத்தில் சிறிய பிரச்சனைகளாகயிருப்பது, பிற்காலத்தில் பெரிய பிரச்சனைகளாக வளருவதற்கு வாய்ப்புள்ளது. மனாசே கோத்திரத்தார் இனிமேல் வரப்போகிற பிரச்சனைகளை யோசித்துப் பார்த்து, அதைப்பற்றி மோசேயினிடத்திலும், இஸ்ரவேலின் பிரபுக்களிடத்திலும் முறையிடுகிறார்கள்.

கர்த்தருடைய கட்டளை
எண் 36:5-13

எண் 36:5. அப்பொழுது மோசே கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: யோசேப்பு புத்திரரின் கோத்திரத்தார் சொல்லுகிறது சரியே.

எண் 36:6. கர்த்தர் செலொப்பியாத்தின் குமாரத்திகளைக் குறித்த காரியத்தில் கட்டளையிடுகிறதாவது: அவர்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகஞ்செய்யலாம்; ஆனாலும், தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் மாத்திரம் அவர்கள் விவாகஞ்செய்யவேண்டும்.

எண் 36:7. இப்படியே இஸ்ரவேல்புத்திரரின் சுதந்தரம் ஒரு கோத்திரத்தைவிட்டு, வேறு கோத்திரத்துக்குப் போகாதிருக்கும்; இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலே நிலைகொண்டிருக்க வேண்டும்.

எண் 36:8. இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களின் சுதந்தரத்தை அநுபவிக்கும்படி, இஸ்ரவேல் புத்திரருடைய ஒரு கோத்திரத்திலே சுதந்தரம் அடைந்திருக்கிற எந்தக் குமாரத்தியும் தன் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் ஒருவனுக்கு மனைவியாகவேண்டும்.

எண் 36:9. சுதந்தரமானது ஒரு கோத்திரத்தை விட்டு வேறொரு கோத்திரத்தைச் சேரக்கூடாது; இஸ்ரவேல் புத்திரருடைய ஒவ்வொரு கோத்திரமும் தன் தன் சுதந்தரத்திலே நிலைகொண்டிருக்கவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார் என்றான்.

எண் 36:10. கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செலொப்பியாத்தின் குமாரத்திகள் செய்தார்கள்.

எண் 36:11. செலொப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள் திர்சாள் ஒக்லாள் மில்காள் நோவாள் என்பவர்கள் தங்கள் பிதாவின் சகோதரருடைய புத்திரரை விவாகம்பண்ணினார்கள்; அவர்கள் யோசேப்பின் குமாரனாகிய மனாசே புத்திரரின் வம்சத்தாரை விவாகம்பண்ணினபடியால்,

எண் 36:12. அவர்களுடைய சுதந்தரம் அவர்கள் பிதாவின் வம்சமான கோத்திரத்தோடே இருந்தது.

எண் 36:13. எரிகோவின் அருகே யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள மோவாபின் சமனான வெளிகளில் கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்கு விதித்த கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே.

செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கும், மனாசேயின் கோத்திரத்தாருக்கும் இடையிலே ஏற்பட்டிருக்கிற பிரச்சனை கர்த்தருடைய கட்டளையினால் தீர்த்து வைக்கப்படுகிறது.

மோசே கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: "யோசேப்பு புத்திரரின் கோத்திரத்தார் சொல்லுகிறது சரியே" (எண் 36:5) என்று சொல்லுகிறார்.

மனாசே கோத்திரத்தார் சொன்ன முறையீடுகளை மோசே கவனமாய் பரிசீலனை செய்து, அவர்களுடைய பிரச்சனைகளை புரிந்துகொள்கிறார். பிற்காலத்தில் இஸ்ரவேல் கோத்திரத்தார் மத்தியிலே இப்படிப்பட்ட பிரச்சனைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக, மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் இந்தப் பிரச்சனையை தீர்த்து வைக்கிறார்.

செலோப்பியாத்தின் குமாரத்திகள் ஒரு குறிப்பிட்ட நபரைத்தான் விவாகம்பண்ணவேண்டுமென்று மோசே கட்டுப்பாடு எதுவும் விதிக்கவில்லை. அவர்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகம் செய்யலாம் என்று மோசே சொல்லுகிறார்.

விவாககாரியங்களில் பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் ஆலோசனைகளை செவிகொடுத்து கேட்கவேண்டும். பெற்றோரின் அதிகாரத்திற்கு மதிப்பு கொடுக்கவேண்டும். அதே வேளையில் பெற்றோரும் விவாக விஷயங்களில், தங்கள் பிள்ளைகளின் விருப்பத்தையும் அறிந்துகொள்ளவேண்டும். பிள்ளைகளின் விருப்பத்திற்கு விரோதமாக விவாகம் செய்து வைத்தால், அவர்களுடைய குடும்ப வாழ்க்கை சந்தோஷமாயிருக்காது.

கர்த்தர் செலோப்பியாத்தின் குமாரத்திகளை குறித்த காரியத்தில் கட்டளையிடும்போது, "அவர்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகஞ்செய்யலாம்" என்று சொல்லுகிறார். "ஆனாலும், தங்கள் பிதாவின் கோத்திரவம்சத்தாரில்மாத்திரம் அவர்கள் விவாகஞ்செய்யவேண்டும்" (எண் 36:6) என்றும் கட்டளையிடுகிறார்.

ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள், தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் மாத்திரம் விவாகம் செய்யும்போது, இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரம், ஒரு கோத்திரத்தைவிட்டு, வேறு கோத்திரத்திற்கு போகாதிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களின் சுதந்தரத்தை அநுபவிக்கும்படி, இஸ்ரவேல் புத்திரருடைய ஒரு கோத்திரத்திலே சுதந்தரம் அடைந்திருக்கிற எந்தக் குமாரத்தியும் தன் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் ஒருவனுக்கு மனைவியாகவேண்டும் (எண் 36:8) என்று கர்த்தர் கட்டளையிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலே நிலைகொண்டிருக்க வேண்டும் (எண் 36:7).

மோசே கர்த்தருடைய கட்டளையை இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார். மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "சுதந்தரமானது ஒரு கோத்திரத்தை விட்டு வேறொரு கோத்திரத்தைச் சேரக்கூடாது; இஸ்ரவேல் புத்திரருடைய ஒவ்வொரு கோத்திரமும் தன்தன் சுதந்தரத்திலே நிலைகொண்டிருக்கவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார்" (எண் 36:9) என்று சொல்லுகிறார். கர்த்தருடைய இந்தக்கட்டளை இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே நித்திய கட்டளையாயிருக்கிறது.

செலொப்பியாத்தின் குமாரத்திகளுடைய சுதந்தரங்கள் பற்றிய பிரமாணத்தின் விவரம் வருமாறு :

1. செலொப்பியாத்தின் குமாரத்திகள் தங்களுக்கு இஷ்டமானவர்களை விவாகஞ்செய்யலாம்; ஆனாலும், தங்கள் பிதாவின் கோத்திரவம்சத்தாரில் மாத்திரம் அவர்கள் விவாகஞ்செய்யவேண்டும். (எண் 36:5-7).

2. இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களின் சுதந்தரத்தை அநுபவிக்கும்படி, இஸ்ரவேல் புத்திரருடைய ஒரு கோத்திரத்திலே சுதந்தரம் அடைந்திருக்கிற எந்தக் குமாரத்தியும் தன் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் ஒருவனுக்கு மனைவியாக வேண்டும் (எண் 36:8).

3. சுதந்தரமானது ஒரு கோத்திரத்தை விட்டு வேறொரு கோத்திரத்தைச் சேரக்கூடாது; இஸ்ரவேல் புத்திரருடைய ஒவ்வொரு கோத்திரமும் தன்தன் சுதந்தரத்திலே நிலைகொண்டிருக்கவேண்டும் (எண் 36:9)

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் விவாகம் செய்கிற விஷயத்தில் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செலொப்பியாத்தின் குமாரத்திகள் செய்கிறார்கள். செலொப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள் திர்சாள் ஒக்லாள் மில்காள் நோவாள் என்பவர்கள் தங்கள் பிதாவின் சகோதரருடைய புத்திரரை விவாகம்பண்ணுகிறார்கள் (எண் 36:10,11).

எல்லாக் காரியங்களைக்குறித்து மோசே ஏற்கெனவே கர்த்தரிடத்தில் விசாரித்து வைத்திருக்கிறார். மோசே கூறுவது அவருடைய சொந்த வார்த்தையல்ல. அது கர்த்தருடைய வார்த்தை. கர்த்தருடைய பிரமாணங்களையே அவர் கூறுகிறார் என்று இஸ்ரவேல் புத்திரர்கள் மோசேயையும், அவருடைய வார்த்தையையும் நம்புகிறார்கள்.

செலொப்பியாத்திற்கு மக்லாள், திர்சாள், ஒக்லாள், மில்காள், நோவாள் என்னும் ஐந்து குமாரத்திகள் இருக்கிறார்கள். இந்தப் புதிய பிரமாணத்தின் பிரகாரம், தங்களுடைய கோத்திரத்திற்குள்ளேயே திருமணம் செய்ய வேண்டுமென்பதற்காக தங்களுடைய நெருங்கின உறவினர்களைத் திருமணம் செய்து கொள்கிறார்கள்.

செலோப்பியாத்தின் குமாரத்திகள் யோசேப்பின் குமாரனாகிய மனாசே புத்திரரின் வம்சத்தாரை விவாகம்பண்ணுகிறார்கள். ஆகையினால், அவர்களுடைய சுதந்தரம் அவர்கள் பிதாவின் வம்சமான கோத்திரத்தோடே இருக்கிறது (எண் 36:11,12).

எண்ணாகமம் புஸ்தகத்தின் முடிவுரையாக "எரிகோவின் அருகே யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள மோவாபின் சமனான வெளிகளில் கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்கு விதித்த கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே" (எண் 36:13) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், திட்டத்தின் பிரகாரமாகவும், தீர்மானத்தின் பிரகாரமாகவும் நமக்கு புதிய பிரமாணங்களையும், புதிய நிபந்தனைகளையும் சொல்லும்போது, நாம் அவற்றிற்கு முழுமனதோடும், முழுஇருதயத்தோடும் கீழ்ப்படியவேண்டும்.

தம்முடைய கட்டளைகளையும், பிரமாணங்களையும், நியமங்களையும் கர்த்தர் தாமே நமக்கு போதிக்கவேண்டுமென்று, நாம் கர்த்தருடைய சமுகத்திலே பணிவாய் விண்ணப்பம்பண்ணவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கும் கடமைகளை நாம் பயபக்தியோடு நிறைவேற்றுவதற்கு, கர்த்தர் தாமே நம்மை பெலப்படுத்த வேண்டும் என்றும் நாம் விண்ணப்பம்பண்ணவேண்டும்.

நம்முடைய அன்றாட கடமைகளை, அன்றன்று நிறைவேற்றி முடிக்கவேண்டும். ஒவ்வொரு கடமையையும் எந்த இடத்தில் செய்யவேண்டுமோ அந்த இடத்தில் அதை செய்து முடிக்கவேண்டும்.

எண்ணாகமம் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் கர்த்தருடைய கட்டளைகளும், நியாயங்களும் இத்துடன் நிறைவு பெறுகிறது. இவற்றைக் கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்திருக்கிறார்.